ஸ்ரீவில்லிப்புத்தூராரின்

மகாபாரதம்

(முழு உரைநடை)

பிரேமா பிரசுரம்





ஸ்ரீவில்லிப்புத்தூராரின்
மகாபாரதம்

தயாரிப்பு

ரவி ராமநாதன்

எழுதியவர்

குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன்

பிரேமா™

பிரசுரம்

59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

✆ :24800325, 24833180, 24811755.
E-mail : aruram@md2.vsnl.net.in.
Website: www.premapirasuram.com

பிரேமா பிரசுரம் - 301

முதற்பதிப்பு : ஏப்ரல் 2000
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2001
நான்காம் பதிப்பு : ஜூலை 2006
ஐந்தாம் பதிப்பு : செப்டம்பர் 2008
ஆறாம் பதிப்பு : ஜனவரி 2011
ஏழாம் பதிப்பு : செப்டம்பர் 2012
எட்டாம் பதிப்பு : பிப்ரவரி 2014



விலை ரூ. 160/-

(ரூபாய் நூற்று அறுபது மட்டும்)

கணிப்பொறி வடிவமைப்பு : ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : காரிஸ் ஆப்செட் பிரஸ், சென்னை - 29

அரு-திருஞானம்

முன்னுரை

இப்பூவுலகினிலே "அரிதரிது மானிடராக பிறப்பது அரிது". அப்படி பெறுதற்கரிய மானிடப் பிறவி எடுத்ததன் பயன் இம்மையில் முன்னோர்களின் தர்ம வழியை கடைப்பிடித்து மறுமையில் நற்கதி அடையவேண்டும். இதுவே வேதங்களின் பொருளாகும். வேதங்களின் உட்பொருளை எடுத்துக்காட்டு ஏதுமின்றி அனைத்து தரப்பு மக்களும் தெளிவாக அறிவது என்பது இயலாத ஒன்று. ஆகவே நம் முன்னோர் வேதங்களின் சாராம்சத்தை விளக்க இதிகாசங்கள் மற்றும் புராணங்களை இயற்றினர். மனித வாழ்க்கையில் தோன்றக் கூடிய பாதிப்புக்கள், அதை சமாளித்து வெற்றியடைவதற்கான தர்ம வழிமுறைகள், தவறான வழியில் செல்வதால் வரக்கூடிய இழப்புகள் ஆகியவற்றை நடைமுறைச் சம்பவங்கள் மூலம் எடுத்துக் காட்டுவதினால் இதிகாசங்கள் சிறப்படைந்தன.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் இறுதியில் தருமம் வெல்லும்" என்ற நியதியை தெளிவுற எடுத்துக் காட்டும் மகாபாரதம் மனித வாழ்க்கைக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் எனும் இறைவன் நல்லவனுக்குள்ளும் இருக்கின்றான் தீயவனுக்குள்ளும் இருக்கின்றான். அவரவர் பக்தியின் அளவுக்கேற்ப சக்தியும் அளிக்கின்றான். தீயோரின் சக்தி அதிகரிக்கும் பொழுது தர்மத்தை சூது கவ்வுகின்றது. இறைவனோ தீய சக்தியின் வீரியத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்றான்.

விரும்பும் பொழுது உயிர் நீக்கும் வரம் பெற்ற பீஷ்மர், யாராலும் தகர்க்க முடியாத கவசங்களைக்

கொண்ட கர்ணன், எதிரிகளை அழிக்கும் அஸ்திரங்களைக் கொண்ட துரோணர், அசுவத்தாமன் முதலியோர்கள் உடனிருக்கும் இறுமாப்பில் அதர்மங்களை புரிந்த துரியோதனன் இறுதியில் இழக்க முடியாதவர்கள் அனைவரையும் இழந்து தானும் உயிர் துறந்தான். பொறாமை, பகைமை, சூது, பெரியோரை அவமதித்தல், மாதரை மானபங்கப் படுத்துதல், உடன்பிறந்தோர் சொத்துக்களை அபகரித்தல் போன்ற பல தீய செயல்கள் இன்றைய காலகட்டத்திலும் மனித வாழ்க்கையில் நடைபெற்று வருகின்றது. இத்தீயசெயல்களின் முடிவில் அதர்மம் அழியும் என்ற நீதியை எடுத்துக் காட்டும் இந்த வில்லிபாரதக் கதையை வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.

இந்நூலில் சில சம்பவங்கள், சில வர்ணனைகள், சில வசனங்கள் இன்றைய நாகரிக காலத்தில் நம்மில் பலருக்கு ஏற்காதனவாகத் தோன்றலாம். பழம்பெருங் காப்பியங்களை எடுத்துப் பிரசுரிக்கும் போது சொந்த அபிப்ராயங்களுக்கு இடமளிக்காமலும் மாற்றல் சேர்த்தல் எதுவும் இல்லாமலும் வருங்காலத்தினரின் மனோபாவத்திற்கேற்றவாறு சம்பவங்களை நியாயப்படுத்திக் கொள்ளவும், ஆராய்ந்து விவாதிக்கவும் விட்டுச் செல்வதே நம் கடமை என்று முறைப்படுத்திய எமது தந்தையார் அமரர் திரு. அரு.ராமநாதன் அவர்களைப் பின்பற்றி இந்நூலை வெளியிடுகின்றேன்.

17.3.2000 ரவி ராமநாதன்

ஆசிரியர் உரை

பாரதநாடு பழம்பெரும் நாடு. இதிகாசங்களும், புராணங்களும் தோன்றிச் சிறப்புற்ற நாடு. வேதங்கள் திகழும் தெய்வநாடு; தியாகபூமி!

மக்கள் மனத்தை நல்வழிப்படுத்தி வாழ்வைச் செம்மைச் செய்ய வேதங்கள் தோன்றின. எனினும் கூடவே மாக்களாகச் சிலரும் தோன்றினர். அவர்களின் துஷ்ட செய்கைகள் நல்ல மக்களைத் துன்புறச் செய்தன. அதனால் மக்கள் வேதங்களின் ஆதிநாயகனை வேண்ட, எம்பெருமான் பூவுலகில் திருவவதாரம் செய்தான்! .

வாழ்க்கை நியதிகள் மக்கள் மனதில் எளிதில் விளங்க இதிகாசங்கள் தோன்றின. அப்படித் தோன்றியவையே இராமாயணம், மகாபாரதம் ஆகும்.

திருப்பாற்கடலில் துயிலும் ஆதி உலகின் கர்த்தா திருமால் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்து, பாண்டவர்கள் மூலம் மாக்களாய் விளங்கிய துரியோதனாதியர்களை அழித்தான்!

ஆம். வேதநாயகன் துஷ்டநிஷ்கரங்கம் செய்வதற்காகவே பூமியில் அவதரித்தான் என்றாலும், மக்களுக்குரிய வாழ்க்கை நெறிமுறைகளையும் அந்தந்த அவதாரங்களில் வகுத்துக் காட்டினான். அவற்றைத்தான் இராமாயணமும், மகாபாரதமும் தெளிவாக விளக்குகின்றன.

பாரதநாட்டின் பழம்பெரும் செல்வம் இந்த இதிகாசங்கள்.இவை பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. ஆதியில் இந்த இதிகாசங்கள் வடமொழியில் தோன்றின. வேதவியாச மகாமுனிவர் மகாபாரதத்தைப் பாடினார். அதனை வில்லிபுத்தூரார் தமிழில் பாடினார்.

தமிழில் பாடப்பட்டிருந்தாலும் இவ்விரண்டு இதிகாசங்களின் கதைகளைத் தமிழர்களில் அநேகர் அறிந்ததில்லை என்பது உண்மை. திரைப்படங்களின் வாயிலாகவும், பழம்பெரும் கலைகளான கூத்து, நாடகம் முதலியவைகளாலும் ஓரளவு அக்கதைகளைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். அவற்றிலும் மாறுபாடுகள் உண்டு.

அதன் காரணமாகவே பிரேமா பிரசுரத்தின் நிறுவனர் அமரர் திரு. அரு. ராமநாதன் அவர்கள் தமிழில் பாடப்பெற்ற மகாபாரதத்தை தமிழ்மக்கள் எல்லோரும் தெளிவாக அறிய வேண்டும் என்று என்னை வசனவடிவில் ஆக்கச் செய்தார். அந்த ஆசிரியப் பெருமகனாருக்கு என் நன்றி! இதனைத் தமிழ்மக்கள் போற்றிப் பாதுகாப்பார்கள் என்று நம்புகிறேன். வணக்கம்.

அன்பன்,

குறிஞ்சிப்பாடி. குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன்

17.3.2000.



அமரர் அரு. ராமநாதன்
(1924 - 1974)

உடலால் இவ்வுலகை விட்டு நீங்கி 27 வருடங்களாகி விட்டாலும் தமது எழுத்தால் தமிழ் நூல் உலகில் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் ஆசிரியர் அரு. ராமநாதன். அவரால் 1952ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட "பிரேமா பிரசுரம்" என்ற இந்த தமிழ் நூல் வெளியீட்டு நிறுவனம் அவரது மேலான ஆசியையும், தமிழ் வாசகர்களின் ஆதரவையும் தொடர்ந்து பெற்று வர விழைகின்றது. குறுகிய காலத்தில் இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. ஆசிரியர் அரு. ராமநாதனுக்கு எங்களது அஞ்சலியையும், தமிழ் வாசகர்களுக்கு எங்களது நன்றியையும் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

ரவி ராமநாதன்.

30.9.2001



ஆதி பருவம்



சபா பருவம்

ஆரணிய பருவம்



விராட பருவம்



உத்தியோக பருவம்



பீஷ்ம பருவம்



துரோண பருவம்

கர்ண பருவம்

சல்லிய பருவம்

சௌப்திக பருவம்





வில்லிபுத்தூரார் வரலாறு

பெண்ணையாறு பாயும் திருக்கோவலூர் முதலிய திருமால் திருப்பதிகளையும், திருவெண்ணெய் நல்லூர் முதலிய சிவத்திருப்பதிகளையும் கொண்டது நடுநாடு. அது திருமுனைப்பாடி நாடு எனவும் வழங்கும். அந்நாட்டிலுள்ள சனியூரில், வைஷ்ணவ சமயத்தில், அந்தணர் குலத்தில் வீரராகவாச்சாரியார் என்பவருக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு வில்லிபுத்தூரார் பிறந்தார்.

தாமே இளமையில் அவர் தக்க நல்லாசிரியரிடம் முத்தமிழையும் தெளிவுறக் கற்றுத் தேறினார். வடமொழியில் வல்லவரிடம் அம்மொழியையும் நன்குக் கற்றுத் தேர்ந்தார்.

வில்லிபுத்தூரார் நால்வகைக் கவிதைகளும் பாடுவதில் வல்லவர். அதனால் அவர் புகழ் தமிழ்நாடு எங்கும் நன்கு பரவியது. தமிழ் மூவேந்தர்களும் அவருடைய புலமையைக் கண்டு அவரைச் சிறப்பித்துப் போற்றினர்.

அப்போது வில்லிபுத்தூராரின் பெருமையை வக்கபாகை நகரத்து அரசனாகிய வரபதியாட்கொண்டான்

என்பவன் உணர்ந்தான். இதுவரை நம் நாட்டில் பிறந்த புலவரை நாம் போற்றாமல் இருந்துவிட்டோமே என்று வருந்தினான். உடனே அவன் வில்லியை வரவழைத்து, தனது அவைக்களத்துத் தலைமைப் புலவராக்கிச் சிறப்பித்தான்.

வில்லியும் அதுமுதல் வரபதியாட்கொண்டான் மனம் களிக்கும்படி தனது புலமையைக் காட்டி வந்தார்.

அதுசமயம் ஒருநாள் வரபதியாட்கொண்டான் வில்லிபுத்தூராரைப் பார்த்து, "நம் இருவரின் புகழும் பூமியில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்படி வடமொழியில் வியாச மகா முனிவர் அருளிய மகாபாரதத்தை செந்தமிழில் இனிய செய்யுட்களாகப் பாட வேண்டும்!" என்று வேண்டினான்.

மன்னனின் வேண்டுதலுக்கு இணங்கி வில்லிபுத்தூராரும் சொற்சுவையும் பொருட் சுவையும் மிகுந்து விளங்கும்படி நல்ல நடையில் பாரதத்தை பாடியருளினார்.

இந்த வரலாறு வில்லிபுத்தூராருடைய திருமகனார் வரந்தருவார் என்பவரால் வில்லிபாரத முகப்பில் பாடப்பட்டுள்ளது.

நீடாழி யுலகத்து மறைநாலா டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ.

வில்லிபுத்தூரரார் நாலாயிரத்து முந்நுாற்றுக்கு மேலான இனிய செய்யுட்களாக பாரதத்தை பாடியுள்ளார். இவர் பாடியருளியது முதற்பத்து பருவம் மட்டுமே. இறுதி எட்டு பருவங்களை தமிழில் இயற்றிட அவர் விருப்பப் படவில்லை. பத்தாவது பருவத்திலேயே "கனைகடற்பா ரளித்து அவரு மந்நகரி லறநெறியே கருதி வாழ்ந்தார்" என மங்களகரமாகப் பாடி பாரதத்தை முடித்து விட்டார்.

பின்வரும் பருவங்களில் பாண்டவர்களின் இறப்பு, ஸ்ரீகண்ணபிரானின் மறைவு ஆகியவற்றை விளக்கி பாடிட அவர் மனம் இசையாததே காரணமெனவும் நாம் கருதலாம்.

ஆதிபருவம்

1. குருகுலம்

திருமகளின் நாயகனான திருமாலின் நெஞ்சத் தாமரையிலிருந்து தோன்றியவன் சந்திரன். அவனது வம்சத்தில் தோன்றி இந்த மண்ணுலக அரசாட்சி புரிந்து பல கோடி மன்னர்கள் சிறப்படைந்தார்கள். அவர்களது கதை பழம்பெரும் நூல்களில் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

அசுவினி முதலிய இருப்பத்தேழு நட்சத்திரங்களில் முறையே எந்தந்த நட்சத்திரத்துடன் சந்திரன் தங்குகிறானோ, அந்தந்த நட்சத்திரங்களாக அத்தினம் வழங்கப்படுகிறது. அவன் தேவர்களுக்கு உண்பதற்காக அன்போடு அமுதத்தைத் தருகின்றான். அவன் சிவபெருமானின் தலைமேல் பிறைச்சந்திரனாக எப்போதும் தங்கி இருக்கின்றான். இப்படிப்பட்ட சந்திரனின் பெருமையை முழுதும் யாரால் அறிந்து சொல்ல முடியும்?

அவன், பாம்புகளின் விஷமூச்சு கலக்கப்பட்டதால் வெப்பமடைந்த இந்தப் பூமியைத் தனது குளிர்ச்சியான பார்வையால் தணிவிக்கின்றான்.

முன்பு ஒருசமயம் தேவர்கள் திருப்பாற்கடலில் மந்திரமலையை மத்தாகவும் ஆதிசேஷனை கடையும் கயிறாகவும் கொண்டு அமுதம் எடுக்கக் கடைந்தார்கள். .அப்போது சந்திரன் கடையும் மத்துக்கு அடைதூணாக அமைந்து, பிறகு அமுதத்தோடு திருப்பாற்கடலிலிருந்து வெளிவந்தான்.

சந்திரன் பதினான்கு கலைகள் கொண்டவன். சூரியனுக்குத் தினம் ஒரு கலையாகக் கொடுத்துப் பின் அப்படியே தினம் ஒரு கலையாக எடுத்துக் கொள்பவன். அவன் அத்திரி முனிவரின் கண்ணிலும், அக்கினியின் முகத்திலும் பிறந்தவன்.

இப்படிப்பட்ட புகழ்பெற்ற சந்திரனை மாலை வேளையில் அன்போடு வேதமந்திரம் சொல்லி

வணங்காதவர்கள் இந்த மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் யாருமே இல்லை. எல்லோராலும் வணங்கப்படும் சந்திரன் தாரை என்பவளை மணந்து புதன் என்னும் மகனைப் பெற்று மகிழ்ச்சியடைந்தான். அவ்வாறு சந்திரன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வரும் நாளில்...

மநு என்னும் அரசனின் மகனான இளன் என்பவன் காட்டுக்கு வேட்டையாட சிறந்த குதிரைகள் பூட்டிய தேர்மேல் ஏறிச் சென்றான். இங்கு வருபவர்கள் பெண்ணாகி விடுவார்கள் என்று பார்வதியின் சாபத்துக்கு அந்தக் காட்டின் ஒரு பகுதி ஆளாகியிருந்தது. வேட்டையாடச் சென்ற இளன் அதையறியாது அந்த இடத்துக்கு விதிவசத்தால் சென்று சேர்ந்தான். உடனே பார்வதி இட்டிருந்த சாபத்தால் அவன் பெண்ணாகி இளை என்னும் பெயர் கொண்டான்.

பிறகு இளை, மன்மதனின் வெற்றிச் சின்னமாகிய குயிலின் ஓசை அமுதமாகக் கேட்கின்ற சோலை ஒன்றுக்குச் சென்று சேர்ந்தாள். அங்கே தங்கியிருந்த புதன் இளையைக் கண்டான். மன்மத அம்புகளினால் துயரம் கொண்டான். உடனே புதன் இளையை அதிகமாக மோகித்து இறுக்கி அணைத்து , அவளுக்கு அழகு அதிகமாகக் கூடும்படி அவளைக் கூடினான்.

அதனால் புதனுக்கும் இளைக்கும் மகனாக புரூரவஸ் என்னும் தவப் புதல்வன் பிறந்தான். புரூரவஸ் 'காமனும் முருகனும் இவனே' என்று தன்னைப் பார்த்தவர்கள் சொல்லும்படி வளர்ந்து, அழகிலும் வலிமையிலும் சிறந்து விளங்கினான்.

புரூரவஸ் அவ்வாறு வளர்ந்து காளைப் பருவம் அடைந்த நாளில் ஒருநாள்....

மலைகளின் சிறகை வச்சிராயுதத்தினால் வெட்டி எறிந்த தேவேந்திரனின் அமராவதி பட்டணத்தில் வாழ்கின்ற தேவகன்னியருள், அழகிய வடிவத்தால் எல்லோராலும் போற்றப்படும் ஊர்வசி சோலையில் உலவிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த அசுரர்கள் அவளைக் கண்டு மோகித்தார்கள். உடனே அவளைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் சென்றார்கள்.

தன்னை அசுரர்கள் தூக்கிச் செல்வதால் அச்சம் அடைந்த ஊர்வசி, ''அபயம்! அபயம்!'' என்று கதறினாள். அது கேட்டுத் தேவர்கள் அவளை அசுரர்களிடமிருந்து காப்பாற்ற எண்ணினார்கள். ஆனால் அசுரர்களின் உயிரைக் கொல்லக் கூடிய கொடும் போரைச் செய்வதற்கு வலிமையில்லாது அஞ்சிப் பேசாமல் இருந்தார்கள்.

அதேசமயம் புரூரவஸ் அசுரர்களின் பிடியிலே சிக்கி வாடிக் கதறும் ஊர்வசியின் நிலையை கண்டான். வண்டுகள் மொய்க்கும் கூந்தல் கொண்ட அத்தெய்வப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று உடனே முடிவு எடுத்தான். தான் வருகின்ற வேகத்தையும் நிலையையும் பார்த்தே அசுரர்கள் அஞ்சி உடல் நடுங்கும்படி தேரில் ஏறி, அதனை அவர்கள் செல்லும் இடத்துக்கு மிக வேகமாக ஓட்டினான். அவர்களை வென்று ஊர்வசியைக் காப்பாற்றினான்.

மாயச் செயல்கள் புரியும் திருமாலின் தொடையில் இருந்து தோன்றி மான்போல் விளங்கும் ஊர்வசி, புரூரவஸ் மன்னனின் சேர்க்கையால் கருவுற்று, ஆயு என்னும் சிறந்த மகனைப் பெற்றெடுத்தாள். இந்தப் பூமியில் வாழ்ந்த பல அரசர்களிலும் ஆயுவே, அக்கினியும் மற்ற தேவர்களும் மகிழ்ந்து போற்றும்படி யாகத்தினால் சிறந்தவன்.

அப்படிப்பட்ட ஆயுவின் புதல்வன் நஹுஷன். மண்ணுலக அரசனாகிய அவன் அரசாட்சியில் பற்றற்று வாழ்ந்து, நூறு அசுவமேத யாகங்களைச் செய்தான். அதனால் தேவேந்திரப் பதவி பெற்று தேவர்களுக்கும் அரசனானான்.

ஒரு சமயம் அவன், தன்னை ஏழு முனிவர்கள் சுமந்துவரப் பல்லக்கில் சென்று கொண்டிருந்தான். அப்போது இந்திராணியை மோகித்து, அவளை அடைந்து இன்புறுவதற்காக விரைந்து போகும்படி சிவிகை தூக்கும் முனிவர்களுக்குக் கட்டளையிட்டான். ஆனால் முனிவர்களுள் குள்ளமானவரான அகத்தியரால் வேகமாகச் செல்ல முடியவில்லை. அதுகண்டு நஹுஷன் அவரை மிரட்டினான். அதனால் கோபம் கொண்ட அகத்தியர், ''நீ பாம்பாய்ப் போ!'' என்று சாபமிட்டார். உடனே நஹுஷன் பாம்பாகி தேவலோகத்திலிருந்து பூமிக்கு வந்து விழுந்தான்.

அந்த நஹுஷனின் மகன் யயாதி. அவன் வில்லேந்தி போர் செய்வதில் சிறந்தவன். வீரலட்சுமிக்கு வாழுமிடமாகத் தனது இரண்டு தோள்களையும் கொடுத்தவன். தனது பகைவர்களை எல்லா திசைகளுக்கும் புறமுதுகிட்டு ஓடும்படிச் செய்தவன். கோபமே கொள்ளாத நற்குணம் கொண்டவன்.

வியாசமகரிஷியாலேயே மிகவும் புகழப்பட்ட யயாதி சுக்கிராச்சாரியருடைய புதல்வியாகிய தேவயானையை மணந்து, யது, துருவசு என்னும் இரண்டு புத்திரர்களுக்குத் தந்தையானான்.

இப்படியிருக்கும் பொழுது சுக்கிராச்சாரியருடைய நண்பனாகிய அசுரகுலத்து மன்னன் வ்ருஷபர்வன், தனது மகளான சன்மிஷ்டையை சுக்கிராச்சாரியரின் விருப்பப்படி தேவயானைக்கு உயிர்த் தோழியாக ஆக்கினான். சன்மிஷ்டை தேவயானைக்கு உற்ற தோழியாகி, அவள் சொல்லும் வேலைகளைத் தட்டாது செய்து வந்தாள்.

யயாதி மன்னன் சன்மிஷ்டையைக் கண்டு, அவள் அழகில் மயங்கி அவளை மோகித்தான். தன் மனைவி அறியாதபடி சன்மிஷ்டையை கந்தர்வ மணம் புரிந்து, அவளோடு காமவின்பச் சுகம் கண்டான். அதனால் சன்மிஷ்டை மேருமலையைவிட வலிமையும் அழகும் கொண்ட பூரு என்னும் மகனைப் பெற்றாள். மேலும் அவள் த்ருஹ்யு, அநு என்னும் இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தாள்.

ஒருநாள் அப்புதல்வர்களைப் பார்த்த தேவயானை, அவர்கள் தன் கணவனின் சாயலோடு இருப்பதைக் கண்டு மனம் வெதும்பிச் சிந்தித்தாள். யயாதிக்கு சன்மிஷ்டையின் மேல் ஆசையிருப்பதை உணர்ந்தாள். உடனே கோபம் கொண்டு கணவனை வெறுத்து ஒதுக்கிவிட்டு, தன் தந்தை சுக்கிராச்சாரியரின் வீட்டுக்குச் சென்றாள்.

தந்தையின் வீட்டுக்குப் போனதும் தேவயானை, தந்தையை வணங்கி கணவனின் செயலைப் பற்றிக் கூறினாள். அதைக் கேட்டு சுக்கிராச்சாரியர் கோபம் கொண்டு யயாதியை முதுமையடையும்படிச் சபித்தார்.

சுக்கிராச்சாரியரின் சாபம் உடனே பலித்தது. யயாதி மன்னன் யாவரும் பார்த்து 'இவனுக்கு நூறு வயது' என்று சொல்லும்படியான கிழவனானான்!

தான் அடைந்த முதுமை எவ்வாறு வந்தது என்பதை யயாதி மன்னன் அறிந்து விரைந்து சென்று சுக்கிராச்சாரியரிடம் தனக்குச் சாபவிமோசனம் அருளுமாறு வேண்டினான். ஆச்சாரியர் மனமிரங்கி "எந்த வாலிபனிடமாவது உன் முதுமையைக் கொடுத்து அவனுடைய இளமையை நீ பெற்றுக் கொள்ளலாம்" என்று கூறினார்.

உடனே மன்னன் காமவேட்கை மிகுதியால் தன் புதல்வர்களை அழைத்து ஒவ்வொருவரிடமும் செய்தியைக் கூறி, தனது முதுமையை வாங்கிக் கொண்டு தனக்கு இளமையைக் கொடுக்குமாறு கேட்டான். பூருவைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் தந்தையின் வேண்டுதலை மறுத்துவிட்டுப் போய்விட்டார்கள். பூரு மட்டும் தன் இளமையைத் தந்தைக்குக் கொடுத்துவிட்டு, தந்தையின் முதுமையை வாங்கிக் கொண்டான்.

மீண்டும் இளமையடைந்த யயாதி மனஞ்சலிக்கக் காமவின்பத்தை அனுபவித்தான். தன் ஆசை முழுவதும் தீர்ந்த பிறகு இளமையைப் பழையபடியே மகனுக்குக் கொடுத்துவிட்டு, தன் முதுமையை வாங்கிக் கொண்டான்.

தான் கிழவனாகிவிட்டதால் அரசாட்சியை நல்ல முறையில் நடத்த முடியாது என்பதை உணர்ந்த யயாதி, மகன் பூருவை நோக்கி, "நமது சந்திரகுலத்தின் பெருமைக்குக் காரணமாக இருப்பவன் நீ! ஆதலால் உனக்கே அரசகிரீடமும், மன்னர் மாலையும், வெள்ளிமுத்துக் குடையும், பூமியும் உரிமையுடையன!" என்று கூறி, அவனுக்கு அன்போடு தன் அரசாட்சியைக் கொடுத்தான்.

நற்குணங்களைக் கொண்ட பூருவின் வம்சத்திலே பரதன் என்னும் ஒரு மன்னன் தோன்றினான். அவன் யாகத்தினாலும் கல்வியறிவாலும் சிறப்புற்றவன். தேவ மங்கையரின் தனங்களைத் தழுவித் தழுவியே மலை போன்ற தோள்களைக் கொண்டவன். சங்கீதம், நாட்டியம் ஆகியவற்றிலும் மிகுந்த அறிவுடையவன்.

ஒருசமயம் தேவாசுரப் போர் நடந்த போது, அசுரர்களுக்குப் பயந்து தேவேந்திரன் தேவர்களையும் தேவலோகத்தையும் காப்பாற்றாமல் ஓடிப் போனான். அதை பரதமன்னன் அறிந்ததும் தன்னை அனைவரும் பார்த்து முருகனோ என்று அதிசயிக்கும்படி யானையை முன்னே ஒட்டிச் சென்று, அசுரர்களைப் போரில் வென்று தேவர்களையும் தேவலோகத்தையும் காப்பாற்றினான். அத்துடன் தேவேந்திரனுக்கும் அபயம் அளித்து மீண்டும் அவனைத் தேவலோகத்திற்கு அரசனாக்கினான்.

சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூவர்களால் உருவான அரசவம்சத்தில் சந்திரகுலமே சிறந்தது என்று எந்த குலத்தில் பிறந்த அரசரும் சொல்வதுடன், சந்திரகுலத்து மன்னனின் திருவடிகளை வணங்கி எழும்படியான புதல்வன் ஒருவன் அந்தப் பரதகுலத்திலே பிறந்தான். அவன் மேகங்களிலே பொன்மழை பெய்யும் மேகம் போன்றவன். ஹஸ்தி என்பது அவன் பெயர்.

அந்த ஹஸ்திமன்னன் குபேரனும் இந்திரனும் தனக்கு நிகரில்லாத சிறப்போடு விளங்கும்படி பிரமனால் படைக்கப்பட்டவன். அப்படிப்பட்ட ஹஸ்தி தனக்கென்று ஒரு தலைநகரை கட்டினான். அதற்கு ஹஸ்தினாபுரி எனப்பெயரிட்டான். அந்த ஹஸ்தினாபுரியில் இருந்த யானைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டே சொல்ல முடியாது. அந்த நகரம் செல்வத்தினால் யட்சராஜனான குபேரனின் தலைநகரான அழகாபுரியையும், அழகினால் தேவேந்திரனின் அமராவதி பட்டணத்தையும் போல் சிறந்து விளங்கியது.

மச்சாவதாரம் எடுத்த திருமால் விநதையின் மகனான கருடன் மேல் எழுந்தருளிச் சென்று கஜேந்திரன் என்ற யானைக்கு காட்சி கொடுத்து சக்கராயுதத்தால் முதலையிடமிருந்து காப்பாற்றினார். கஜேந்திரனும், அம்முதலையும் முறையே குருகுலத்தில் இந்திரத்யுநன், அநுரு என்பவர்களாகத் தோன்றினார்கள். அத்தகைய உன்னத குலத்தில் குரு என்பவன் உதித்தான். அவன் நான்கு படைகளும் பெற்று, வீரத்தில் நிகரற்றவனாக விளங்கி வேதங்களில் முதிர்ந்த அறிவு பெற்றான்.

அந்தக் குரு, தனக்கு முன்னும் பின்னும் பிறந்தவர்கள் குருகுலத்திலே பிறந்தவர் என்று புகழும்படி அரசாட்சி செய்தான். சந்திரகுலத்திலாகட்டும், மற்ற சூரிய அக்கினி குலத்திலாகட்டும் குற்றமில்லாத புகழினால் அவனுக்கு நிகரானவர்கள் வேறு யாருமே இல்லை!

குருகுலத்திலே சந்தனு என்னும் புகழ் பெற்ற அரசன் ஒருவன் தோன்றினான். சந்தனுமன்னன் மன்மதன் போல் அழகோடு இருந்த காலத்தில் வேட்டையாடுவதற்காக ஒருநாள் காட்டுக்குச் சென்றான். பகல் முழுதும் வேட்டையாடினான். அதனால் மிக்கச் சோர்வடைந்தான். ஆகவே அவனுக்குத் தாளமுடியாத தாகம் எடுத்தது. தன் தாகத்தைப் போக்கிக் கொள்ள அருகிலிருந்த கங்கை நதிக்குச் சென்றான்.

அவன் கங்கையை அடைந்தபோது, கங்காநதி அழகிய பெண்வடிவங் கொண்டிருந்தாள். தாகத்தால் நீர்குடிக்க வந்த சந்தனு, அவளைப் பார்த்ததும் தன் தாகத்தை மறந்தான். கங்காதேவி மீது ஆசை கொண்டு கண்களால் அவளைப் பருகினான்.

கங்காதேவியை ஆசை பொங்கப் பார்த்துக் கொண்டிருந்த சந்தனுவின் உள்ளத்தில் அவள் யார் என்ற கேள்விக்குறி எழுந்தது. 'இவள் பூமகளோ? மலைமகளோ? அலைமகளோ? கலைமகளோ? இவள் யாராயிருப்பாளோ?' என்றெல்லாம் குழம்பினான்.

கடைசியாக சந்தனு கங்காதேவியின் கண்கள் இமைப்பதையும், பாதங்கள் தரையில் படுவதையும் கண்டு, அவள் மானிடப் பெண்தான் என்று முடிவுக்கு வந்தான். அதனால் மனத்தில் தெளிவும் பெற்றான். பிறகு கங்காதேவியின் அருகில்சென்று, ''நீ யார் செய்த புண்ணியத்தால் தோன்றியவள்?'' என்று கேட்டான்.

தன்னைப் புகழ்ந்து பேசிய சந்தனுராசனின் உடம்பு மயிர்க்கூச்செறியும்படி பார்வை கொண்ட கண்களும், அவனிடம் காதலால் குழைந்த நெஞ்சும்கொண்ட கங்காதேவி யோசித்தாள். திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமனின் சாபமே இப்போது நடக்கிறது

என்பதை எண்ணி, ஒருவாறு தான் கொண்டிருந்த துன்பத்தை மறந்தாள்.



அவள் தன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் நிற்பதைக்கண்டு சந்தனு, மேலும் அவளைக் கூர்ந்து நோக்கினான். அப்போது அவளது கூரிய கண்கள் களிப்புடன் தன்னை நோக்குவதையும், தாமரை மொட்டு போன்ற அவளது கொங்கைகள் பூரிப்பதையும் பார்த்தான். அதனால் அவள் தன்னிடம் மிகவும் விருப்பம் கொண்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். மறுகணம் சந்தனுவின் உள்ளத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. அவன் கங்காதேவியை காதலோடு பார்த்து, ''பெண்ணே! நீ கன்னியானால் என்னை மணந்து கொள்ள உரிமையுடையவள். இந்தப் பூமியில் என்னைவிடச் சிறந்தவர் யாரும் இல்லை. என்னை மணந்து கொள்ள

உனக்குச் சம்மதமா? உன் எண்ணத்தைச் சொல்!'' என்று கேட்டான்.

கங்காதேவி நாணங் கொண்டு தன் மார்பகங்களை நோக்கித் தலைகுனிந்தாள். சற்றுநேரம் கழித்து மெல்லத் தன் நாணத்தைவிட்டு மெல்லச் சிரித்தாள். அப்போது முத்துப் போன்ற அவளின் பற்களிலிருந்து நிலவொளி வீசியது. பிறகு அவள் சந்தனுவிடம், ''உடம்பு நடுங்கும்படி நான் என்ன செய்தாலும் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்வீர்கள் என்றால், உங்கள் தோள்களை நான் தழுவுவேன். அதற்கு மாறாக இரக்கம் கொண்டு என் செயலை மறுத்தீர்களானால், அப்படி மறுத்தவுடனேயே நான் இந்தப் பிறவியை மாற்றிக் கொண்டு உங்களைவிட்டு நீங்கிப் போய்விடுவேன். உண்மையாக இந்த விரதத்தின்படி நடப்பது சிரமம். ஒருவராலும் இந்த விரதத்தை அனுசரித்து நடக்க முடியாது. இந்த விரதப்படி நடக்கும் திறமை உங்களுக்கு உண்மையாக இருக்குமானால், என்னை நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம்'' என்றாள்.

கங்காதேவியின் மேல் மிகுந்த காதல் கொண்டுவிட்ட சந்தனு மன்னன், 'அவளது எந்த நிபந்தனைக்கும் கட்டுப்பட்டாவது அவளை மணந்து கொள்ள வேண்டும்; இல்லையேல் தன் உயிர் நிலைக்காது!' என்று நினைத்தான். அந்த எண்ணத்தோடு அவன் அவளது நிபந்தனைக்குச் சம்மதம் தெரிவித்து, அவளையும் தனக்கு மனைவியாகும் படிச் சம்மதிக்க வைத்தான்.

மேலும் சந்தனு அவளைப் பார்த்து, ''என் உயிரும், அரச செல்வமும், வாழ்வும், மற்ற. அனைத்தும் உன்னுடையவை. இனி, நீ சொல்வது போல் நான் நடப்பேன்!'' என்றான்.

சந்தனுவின் வார்த்தைகள் கங்காதேவிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ள மனப்பூர்வமாகச் சம்மதித்தாள்.

பிறகு இருவரும் அக்கினி சாட்சியாக மணம் புரிந்து கொண்டு, ரதியும் மன்மதனும் தவிர தங்களைப்போல உலகத்தில் ஒருவருமில்லை என்று சொல்லும்படி மனம் மகிழ வாழ்ந்தார்கள்.

சந்தனு மன்னனோடு இல்லற இன்பம் கண்டு கங்காதேவி கருவுற்றாள். அச்செய்தியறிந்து சந்தனு மகிழ்ந்து அவளைப் போற்றிப் பாதுகாத்தான். கங்காதேவி பத்து மாதங்கள் கழித்து ஆண்பிள்ளை ஒன்று பெற்றெடுத்தாள். அதனால் சந்தனு அளவில்லாத மகிழ்ச்சி கொண்டான். அவனுடைய மகிழ்ச்சி உடனே துன்பமாகும்படி கங்காதேவி, தான் பெற்ற அக்குழந்தையை உலகத்துப் பெண்களைப் போல் சீராட்டிப் பாராட்டி அன்பே என்று கொஞ்சி வளர்க்காமல், வெள்ளம் பெருகி ஓடுகிற கங்கையில் வீசி எறிந்தாள்.

தன் மனைவியின் கொடுமையான செயலைக் கண்டு சந்தனுமன்னன் முதலில் அவள் மேல் வெறுப்புற்று வருந்தினான். ஆனாலும் அவளைத் திருமணம் செய்து கொண்டபோது, தான் உட்பட்ட நிபந்தனையை எண்ணி மன ஆறுதல் கொண்டான். மேலும், அவன் முன்னை விட ஏழுபங்கு அதிகமாக அவளிடம் அன்பு செலுத்தினான். அதிகமான காதலோடு அவளுடன் கூடி மகிழ்ந்தான்.

சந்தனுவால் கங்காதேவி மேலும் மேலும் கருதரித்து ஆறு குழந்தைகளைப் பெற்றாள். பெற்ற அக்குழந்தைகளை யெல்லாம் முன் போலவே தாய்ப்பாசம் கொஞ்சமும் இல்லாமல், முன்னைவிட மூன்று மடங்கு மனம்மாறி கங்கை வெள்ளத்தில் அவற்றின் உயிர் போகும்படி வீசியெறிந்தாள்.

அரசியின் அக்கொடிய செயலைக் கண்டு ஹஸ்தினாபுரத்து மக்கள் எல்லோரும் உடலும் மனமும் நடுங்கினார்கள். ஆயினும் சந்தனுமகாராசன் அவளின் கொடிய செயலைக் கண்டும், அதுகுறித்து அவளிடம் கண்டித்து எதுவும் பேசவில்லை. வாய்மூடி மௌனியாகவே இருந்தான்.

சந்தனு அப்படியிருந்தாலும் குற்றமில்லாத பல பிள்ளைகளைப் பெற்ற நகரத்துப் பெண்களால் சும்மாயிருக்க முடியவில்லை. கங்காதேவியின் கொடுஞ்செயல் அவர்களின் மனத்தைப் பிழிந்தது. அவர்கள், ''குருகுலத்தில் தோன்றிய சந்தனுமகாராசனின் ஏழுபிள்ளைகளையும், பெற்ற தாயே ஆற்று வெள்ளத்தில் வீசியெறிந்து கொன்றுபோட்டாளே!'' என்று சொல்லிச் சொல்லி ஆற்று வெள்ளமாகக் கண்ணீர்ப் பெருக அழுதார்கள்.

கடைசியாக கங்காதேவி எட்டாம் முறையாகக் கருவுற்றாள். அதை அறிந்ததும் சந்தனு, ''இனி பிறக்கும் குழந்தையையும் தன் மனைவி கொன்று போடுவாள்'' என்று எண்ணினான். அந்த எண்ணத்தால் அவன் மனம் மாறுபட்டது. இதுவரை அவளிடம் அனுபவித்த இன்பம் அவனுக்குக் கசந்தது. அவன் அவள்மீது வெறுப்படைந்து தனித்திருந்தான்.

அப்போது ஒருநாள், பணிப்பெண் ஒருத்தி ஓடிவந்து கங்காதேவி எட்டாவது மைந்தனைப் பெற்றிருப்பதாகச் சொன்னாள். அதைக் கேட்டதும் மன்னன், கங்காதேவி அக்குழந்தையையும் ஆற்று வெள்ளத்தில் வீசிக் கொல்லாதபடி தடுப்பதற்காக விரைந்து சென்றான். அவளருகே சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டான். பிறகு அவளுடைய சிவந்த மலர்ப்பாதங்களை வணங்கி , ''தேவி! என் வம்சம் அழியாது நிலைத்திருக்கும்படிச் செய். இப்போது உன் செயலை எதிர்த்து இந்தக் குழந்தையை என் வம்சவிருத்திக்காக நான் காப்பாற்றியே தீர வேண்டும். அதனால் என்மீது வெறுப்பு கொண்டு நீ கோபித்தாலும், நான் இதைச் செய்தேயாக வேண்டும். உன் எண்ணப்படி



இந்தக் குழந்தையைக் கொல்லாதவாறு நான் தடுத்தேன் என்று எண்ணி, நீ மனத்தில் கொடுமை கொள்ளாதே. அன்போடு மகிழ்ந்து இந்த ஆண்பிள்ளைக்குக் கருணை காட்டு!'' என்றெல்லாம் வேண்டினான் சந்தனு.

கங்காதேவியோ, ''அரசே! நீங்கள் பேசுவது நன்றாக இருக்கிறது! இதுவரையிருந்த உறுதிகுலைந்து இன்று இப்பிள்ளையின்மேல் இரக்கம் கொண்டீர்கள். அதனால் பிள்ளையைக் காக்க வேண்டும் என்று மனவுறுதி கொண்டீர்கள். வேடிக்கைதான்! முன்பு நான் பெற்ற ஏழு பிள்ளைகளையும் ஆற்று வெள்ளத்தில் வீசி எறிந்து கொன்றேன். அப்போதெல்லாம் என்ன செய்தீர்கள்? கொடுமைக்காரர் நீங்கள்!'' என்று பழித்துப் பேசினாள்.

சந்தனு அவ்வார்த்தைகளைக் கேட்டதும் உள்ளுணர்வு பெற்றான். தான் இதுவரை அவள் யார் என்று அறிந்து கொள்ளாமல் அவளோடு உல்லாசமாக வாழ்ந்திருந்ததை எண்ணினான். அந்த எண்ணம் மனத்தில் பிறந்தவுடனே அவளைப் பார்த்து அவன், ''நீ யார்? எதனால் பெற்ற பிள்ளைகளையெல்லாம் உடனுக்குடனே ஆற்று வெள்ளத்திலே வீசி எறிந்து கொன்றாய்? இதைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டும்!'' என்று கேட்டான்.

வஞ்சிக்கொடி போன்ற கங்காதேவியும், தான் இவ்வுலகத்தில் வந்து பிறந்த கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

நிலவும் கொன்றையும், ஒளியும் நறுமணமும் வீசுகின்ற மேனி வாய்த்தவளான கங்காதேவி ஒரு காலத்தில் பிரமதேவரின் சபைக்குச் சென்றாள். அப்போது சஞ்சலப் புத்தி கொண்ட தேவர்களின் மனம் எப்படியிருக்கிறது என்பதையறிவதற்காக அவள் இடையிலே உடுத்தியிருந்த ஆடையை, அதனால் மூடப்பட்டிருந்த பாகம் தெரியும்படி வாயுதேவன் காற்றை வீசி சிறிது விலகச் செய்தான். வாயுவினால் ஆடை விலக்கப்பட்டுத் தெரிந்த கங்காதேவியின் மேனிப் பகுதியைக் கண்டு அச்சபையிலிருந்த தேவர்கள் நல்லெண்ணத்தோடு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். அவர்களில் வருணதேவன் அந்தக் காட்சியைக் காணும்படிச் செய்த வாயுதேவனை மனதிற்குள் பாராட்டி ஆசை அதிகமாவதற்குக் காரணமான

அந்த உள் அவயத்தைப் பார்ப்பது தனக்கு உரிமையானது என்று எண்ணிக் கூர்ந்து நோக்கினான். அதை உணர்ந்ததும் பிரமதேவர் அதிக கோபம் கொண்டு வருணனைப் பார்த்து, ''சபலமடைந்த நீ பூமியில் மானிடனாகப் பிறப்பாய்!'' என்று இடிபோல மிகுந்த வருத்தம் உண்டாகுமாறு சபித்தார். பிறகு கங்காதேவியைப் பார்த்து, ''பூமியில் அரசனாகப் பிறக்கும் வருணனுக்கு மனைவியாகி இல்லற இன்பத்தை அடைவாய்!'' என்று சபித்தார்.

பிரமசாபத்திற்குள்ளாகி கங்காதேவி பூமிக்கு இறங்கி வந்த போது வழியில், ஒன்றாக விழுகின்ற கொள்ளிக்கட்டை போல முகத்தில் மகிழ்ச்சியில்லாது வசுக்கள் என்னும் தேவகணங்கள் காணப்பட்டார்கள். கங்காதேவி அவர்களை நோக்கினாள். அவர்களும் அவளைப் பார்த்தார்கள். உடனே அவர்கள் அவள் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து, ''எங்கள் அன்னையே! ஆகாயத்தைவிட்டு இங்கே நீ இறங்கிய காரணம் என்ன?'' என்றார்கள். அதற்கு அவள் தனக்குப் பிரமலோகத்தில் பிரமனால் கொடுக்கப்பட்ட சாபத்தைச் சொன்னாள். அதைக் கேட்ட வசுக்கள் தங்களுக்கு நேர்ந்ததை அவளிடம் சொல்லத் தொடங்கினார்கள்.

வானத்தில் வசிக்கும் வசுக்களுள் ஒருவனான பிரபாசன் என்பவன், தன் அழகிய மனைவியின்மேல் உள்ள ஆசையினால் அவள் கூறிய தகாத செயலைச் செய்ய முற்பட்டான். மற்ற வசுக்கள் அச்செயல் செய்யத் தகாது என்று சொல்லி அவனைத் தடுக்காமல், அவனுக்கு உடந்தையாக இருந்தார்கள். பிரபாசனின் மனைவி சொன்னபடி தேவர்கள் வணங்கும் வசிஷ்ட முனிவரின் மனையில் உள்ள காமதேனு என்ற பசுவை ஒருவரும் அறியாதவாறு திருடிக் கொண்டு அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது முசு என்னும் தேவர்களைப் போன்ற உடம்பும் பெரும் தவமும் கொண்ட முனிவர்கள் அருந்ததியின் கணவரான வசிஷ்டரிடம், ''பசுவை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள்'' என்று சொன்னார்கள். அதைக் கேட்டதும் வசிஷ்டர் தம் ஞானதிருஷ்டியால் பார்த்து, ''சிறுகுழந்தைகள் போலச் சிந்திக்காமல் பசுவைக் களவாடிச் சென்றவர்கள் வசுக்கள்'' என்றார். பின் அவர், ''வசுக்களே! நீங்கள் காமதேனுவைத் திருடிய குற்றத்திற்காக வசுக்கள்

என்னும் பதவியை இழந்து, கடல் சூழ்ந்த பூமியில் உள்ள மானிடர் நிலையை அடையுங்கள்!'' என்று சபித்தார். முனிவரின் சாபத்தையறிந்த வசுக்கள் ஓடிச் சென்று அவர் பாதங்களில் விழுந்து, ''நாங்கள் எப்போது வசுக்களாக இருக்கும் பதவியை மீண்டும் பெறுவோம்?'' என்று சாபவிமோசனம் கேட்டார்கள். அதற்கு கருணாமூர்த்தியான வசிஷ்டர் கோபம் தணிந்து, ''காமதேனுவை திருடுவதற்கு உடந்தையாக இருந்த ஏழுபேரும் மனிதராகப் பிறந்தவுடனேயே மீண்டும் உங்கள் பதவிக்கு வந்துவிடுங்கள். மின்னலைப் போல ஒளிகொண்ட மனைவியின் பேச்சைக் கேட்டுப் பசுவைத் திருடிய பிரபாசன் மட்டும் பூவுலகில் பெண்ணின்பம் இல்லாதவனாக வெகுகாலம் இருந்த பிறகு தன் பதவியை அடையட்டும்!'' என்றார்.

இவ்வாறு கங்காதேவியிடம் தங்கள் கதையைச் சொன்ன வசுக்கள் மேலும் அவளைப் பார்த்து, ''தாயே! வசிஷ்டமகாமுனிவரின் சாபத்தால் நாங்கள் எட்டுப் பேரும் தேவலோகத்தையே வாங்கக் கூடிய செல்வத்தையும், போகத்தையும், பெருமையையும் இழந்து விட்டோம். இனி என்ன செய்வோம்?'' என்று கூறி வருந்தினார்கள்.

அதைக் கேட்டதும் கங்காதேவி, ''வலிய தோள்கள் கொண்ட வருணதேவன் பிரமசாபத்தினால் குருகுலத்தில் வந்து பிறப்பான். நான் அவனுக்கு மனைவியாவேன். அப்போது நாங்கள் கொண்ட இன்பத்தால் நீங்கள் என்னிடம் பிள்ளைகளாகப் பிறப்பீர்கள்! நீங்கள் பூமியில் எப்படி வசிப்பது என்று அஞ்ச வேண்டாம். நீங்கள் பிறந்து பூமியில் தவழ்வதற்குமுன் உங்களைக் கங்கை வெள்ளத்தில் எறிந்து உயிர்போகும்படிக் கொன்றுவிடுவேன். பிரபாசன் என்கிற இவனை மட்டும் பூமியில் வெகுகாலம் வாழ்ந்திருக்கும்படி அவனுடைய தந்தையிடம் ஒப்புவித்து, தீமையால் ஏற்பட்ட என் மானிடப் பிறவியிலிருந்து நீங்கி, திரும்ப வானுலகை அடைவேன்!'' என்று இராகம் போன்ற குரலில் சொன்னாள்.

எட்டு வசுக்களும் கங்காதேவியின் அமுதம் போன்ற சொற்களை இரு செவிகளிலும் நன்குக் கேட்டு மனமுருகி, அன்போடு அவள் பாதங்களைத் தங்கள் இரண்டு கைகளாலும் தொட்டு வணங்கி எழுந்தார்கள்.

பிரமசாபத்தால் சதய நட்சத்திரத்துக்குரிய கடவுளான வருணதேவன் சந்திர குலத்தில் சிறந்த வித்துப் போல வந்து பிறந்தான். கங்காதேவியும் மானிடப் பெண்ணானாள். நல்வினைப் பயனால் வருணனின் மனைவியான கங்காதேவியின் வயிற்றிலே எட்டு வசுக்களும் முறையே ஒவ்வொருவராக வந்து பிறந்தார்கள்.

கங்காதேவி, தான் யார் என்பதையும், முதலில் தனக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொன்று போட்டதற்கானக் காரணத்தையும் கூறியவள், "மன்னவனே! மகிழ்ச்சியோடு இந்தச் செய்தியை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!" என்று முடித்தாள்.

சந்தனு அவளை அன்போடு பார்த்தான். பிறகு அவளிடம், "தருமத்தின் பயன் என்று சொல்லும்படி நீ வந்து எனக்குப் புத்திரப் பேற்றைக் கொடுத்தாய். எங்களின் பிறப்புணர்வையும் தெரிய வைத்தாய். ஏழு வசுக்களும் தங்கள் பதவியை அடைந்துவிட்டார்கள். அவர்களோடு தன் பதவியையும் அடைந்திருக்க வேண்டிய பிரபாசன் மட்டும் வசிஷ்டரின் சாபத்தால் இன்னும் மானிடக் குழந்தையாகவே இருக்கிறான். இனி இந்தப் பிள்ளை செய்ய வேண்டியது என்ன?" என்று கேட்டான்.

அதற்கு கங்காதேவி, "சூரிய சந்திர அக்கினியர் குலங்களில் சிறந்ததாகிய இந்தச் சந்திர குலத்தில் பிறந்த இவனைப் போன்ற பெருமை பெற்ற புதல்வர் வேறு யாரும் இல்லை. ஆனால், இவன் வசிஷ்டரின் சாபத்தால் சந்திரகுலத்தில் தந்தையாவதற்கு ஆசையுடையவனாக இருக்கமாட்டான். ஆம், இவன் பெண்ணின்பத்தை ஒதுக்கி வாழ்வான்!" என்றாள்.

அதைக் கேட்டதும் சந்தனு இடிந்து போனான். பெண் விருப்பமில்லாத மகனால் தன் குலம் விருத்தியாகாது என்பதை எண்ணி வருந்தினான். பின் அவன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். பிறகு அவளை நோக்கி, "தேவி! நமக்குப் பிறந்த எட்டுப் பிள்ளைகளில் ஏழுபேர்கள் இறந்து போனார்கள். இந்த எட்டாவது மகனோ பிரமசாபத்தால் பெண்ணாசையற்றவனாவான். அதனால் இச்சந்திர குலம் வம்ச விருத்தியில்லாது அழிந்து போகும். அப்படி ஆகக்கூடாது. எனவே, நாம் இருவரும் கூடி இன்னொரு

மகனைப் பெறுவோம். அதன்பிறகு இருவருமே ஒன்றாகத் தேவலோகத்திற்குச் செல்வோம்!'' என்றான்.

உடனே அவள், ''மன்னவா! இப்போதே நீங்கள் தேவலோகம் சென்று என்ன பயனை அடையப் போகிறீர்கள்? ஒன்றுமில்லையே! அதனால் இன்னும் இந்தப் பூமியில் வாழ்ந்திருந்து எல்லா இன்பங்களையும் நன்றாக அனுபவித்த பிறகு, இந்த அரசாட்சியை நிலைநிறுத்திவிட்டு தேவலோகத்திற்குத் திரும்பி வாருங்கள். மற்றும் ஒன்று. நான் இந்த மகனை இப்போது என்னுடன் கொண்டு போகிறேன். இவன் காளைப் பருவம் அடைந்தபின் உங்களிடம் வந்து சேரச் செய்வேன்!'' என்றாள்.

சந்தனு கங்காதேவியின் மனத்தை மாற்ற முடியாமல், அவள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நின்றான்.

கங்காதேவி அவன் நிலையைக் கண்டாள். அதனால் சற்றே மனம் நெகிழ்ந்து அவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள். சிறிது நேரம்தான் அப்படி! மறுகணமே அவள் உள்ளம் தெளிவு பெற்றது. உடனே அவள் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு மகனோடு சென்று மறைந்தாள்!

சந்தனு மன்னன் கங்காதேவியின் பிரிவுத் துயரைப் பொறுக்க முடியாமல் வருந்தினான். அன்றுமுதல் அவன் பூங்கொடி போன்ற கங்காதேவியின் ஓவியத்தை வரைந்து தன்முன் வைத்து எந்நேரமும் பார்த்துக் கொண்டிருந்தான். தன்தேவியின் ஒவ்வொரு அங்கத்தையும் நினைவையும் எழுப்பக் கூடிய உவமைப் பொருள்களைக் கண்டும் ஒருவாறு சிலசமயம் மனந்தெளிந்தான். சில வேளைகளில் முன்பு அவள் பேசிய பேச்சுக்களைத் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு திருப்தியடைந்தான். இவ்வாறு கங்காதேவிக்கு முன்பே மணந்த பெண்களையும் கண்ணெடுத்தும் பார்க்காது, ''இனி அவளுடைய தரிசனம் எப்போது கிடைக்குமோ?'' என்று மனம் வருந்தியபடியே சந்தனுமன்னன், ஹஸ்தினாபுரியில் அரசுபுரிந்து வந்தான்.

முன்பு காட்டுக்கு வேட்டையாடச் சென்றதுபோல, ஒருநாள் சந்தனு அமைச்சர்களும், படைத்தலைவர்களும் மற்றவர்களும் தன்னைச் சூழ்ந்துவர காட்டுக்குச் சென்று வேட்டையாடினான். மிருகவேட்டை முடிந்தபின் அவன்

தன் மனைவியையும், குமாரன் இப்போது எப்படி வளர்ந்திருக்கிறான் என்பதையும் காண்பதற்கு எண்ணி கங்கை கரைக்குச் சென்றான்.

அங்கே சென்ற சந்தனு முன்பு கங்காதேவியைச் சந்தித்த பொன்போல் அருமையான பூங்கொடிப் பந்தலின் நிழலையும், வண்டுகள் வசிக்கும் வாசனையுள்ள பூஞ் சோலையையும், கங்கைக் கரையையும், பக்கத்திலே வீசுகிற தென்றல் காற்றையும், தாமரையும் செந்நிறக் காவியும் நறுமணம் வீசும் மணற்குன்றையும், பறவைக் கூட்டங்கள் தங்குகிற மென்மையான நீர்த்துறையையும் பார்த்து, கங்காதேவியை இப்பிறப்பில் இன்னும் ஒரு தரமாவது காண்போமோ என்று மனமுருகினான்.

கங்காதேவி தன்னைவிட்டுப் பிரிந்த நாளைக் கணக்கிட்டுப் பார்த்தபடி சந்தனு தீய்ந்த மரமாகக் கலக்கத்தோடு வாடி நின்றான். அப்போது அவன் முன்னே வில்லும் அம்பும் ஏந்தி மார்பில் பூணூல் தரித்து இளவீரன் ஒருவன் வந்தான். ஆம், கங்காதேவியின் மைந்தனே அவன்!

எதிரே வந்த தன்மகனை சந்தனு யார் என்று அறியவில்லை. ஆயினும் அவனின் அழகையும், உடல் அமைப்பையும், வீரம் பொருந்திய முகக் களையையும் பார்த்து சந்தனு, ''இவன் காளைவாகனமுடைய சிவ பெருமானின் குமரன்தானோ? வசந்தகாலத்தில் உலவுகிற காமன்தானோ? இந்திரகுமாரன் தானோ? வில் தொழிலில் இவனை மிஞ்சக் கூடியவர் இவ்வுலகில் யாரும் இல்லை!'' என்று எண்ணியெண்ணிக் குழம்பினான்.

சந்தனு அவ்வாறான நிலையில் இருக்கும்போது, அங்கு வந்த கங்காதேவியின் மகன் மோகனாஸ்திரத்தை எடுத்து வில்லில் தொடுத்து மோக மந்திரத்தை உச்சரித்து, தன் தந்தைதான் சந்தனு என்பதை அறியாமல் அவன்மேல் எய்தான். மறுகணம் இந்திரதனுசுடனே இந்திரன் மேகத்திலே சென்று மறைந்தான் என்று எண்ணும்படி, அவன் வெள்ளம் புரண்டோடுகிற கங்கை நதியில் மறைந்தான். மோகனா அஸ்திரத்தால் தாக்கப்பட்ட சந்தனு மூச்சொடுங்கித் தரையிலே விழுந்தான்.

அப்போது கங்காதேவி தன் அன்புக்குரிய கணவன் மூர்ச்சித்துக் கிடப்பதையும், தன் சிறந்தமகன் தன் வெள்ள

நீரிலே மறைந்ததையும் பார்த்து மனங்கரைந்தாள். உடனே மகனையும் அழைத்துக் கொண்டு, பாற்கடலில் சந்திரனோடு தோன்றிய இலக்குமி போல சந்தனுவிடம் விரைந்து வந்தாள். அவனருகே உட்கார்ந்து மாதுளங்கனி போல் சிவந்த வாயைத் திறந்து கணவனை அன்பாகக் கூப்பிட்டுக் கொண்டே, சூடக வளையல் அணிந்த தன் அழகிய கைகளால் அவனை எடுத்துக் கொண்டாள்.

வெய்யிலில் வாடிக் கிடந்த மரத்தில் மழை பெய்தது போல, கங்காதேவியின் கருணையுடைய கையணைப்பால் சந்தனு மூர்ச்சை தெளிந்து பழைய உணர்வோடு எழுந்தான். நன்குத் தெளிந்து எழுந்த மன்னனை அவள் தன் நெஞ்சோடு நெஞ்சாகச் சேர்த்துக் கட்டி அணைத்துக் கொண்டு, ''நாம் எண்ணிய காரியம் நிறைவேறியது!'' என்று சொன்னாள்.

பிறகு அவள் தன் புதல்வனை கணவனிடம் மகிழ்ச்சியோடு ஒப்படைத்துவிட்டு , ''அரசே! கேளுங்கள். இவன் உங்கள் மகனே ! தேவவிரதன் என்பது இவன் பெயர். சாஸ்திரங்களையெல்லாம் முறையாக வசிஷ்டரின் கருணையினால் கற்றுத் தேர்ந்திருக்கிறான். மேலும், மழுவேந்திய பரசுராமரின் திருவருளினால் அவரது அழகிய திருவடிகளை வணங்கி, அஸ்திரங்களையும், மந்திரங்களையும் ஆயுதங்களையும் பெற்றிருக்கிறான். பிள்ளையைப் பெற்றவர்களில் எவரும் இது வரையில் பெற்றிருக்காத மகிழ்ச்சியும், உயிர் வாழ்க்கையும், உடல் வலிமையும் அதிகமாக அடைகிற தவத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள், இவனோடு நீங்கள் பூமியை ஆட்சி செய்யுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, பிரியா விடைபெற்று மெல்ல மெல்ல நடந்து சென்று கங்கை வெள்ளத்திலே மறைந்தாள்.

கங்காதேவியைப் பிரிந்ததால் சந்தனு மிகவும் வருந்தினான். ஆனால், அந்த வருத்தம் மகனைத் திரும்பவும் பெற்றதால் மகிழ்ச்சியாக மாறியது. அம்மகிழ்ச்சியோடு அவன், மைந்தனையும் தேரில் ஏற்றிக் கொண்டு ஹஸ்தினா புரிக்குள் நுழைந்தான். சந்திரனையும் புதனையும் போல தேரில் வீற்றிருந்த மாமன்னனையும் தேவவிரதனையும் கண்டு மக்கள் மகிழ்ந்து கைகூப்பி வணங்கினார்கள்.

சந்தனுவும் தேவவிரதனும், பகைவர்கள் அஞ்சித் தங்களை வந்து வணங்கும்படி ஹஸ்தினாபுரியில்

வாழ்ந்திருந்தார்கள். அப்போது ஒரு நல்ல நாளில் தேவவிரதனுக்கு இளவரசு பட்டம் சூட்டினான் சந்தனு மன்னன். பின் அவனை அரியாசனத்தில் அமர்த்திவிட்டுக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். தன் பரிவாரங்களோடு வேட்டைக்குச் சென்ற சந்தனு சூரியனின் மகளான யமுனாநதியின் கரைக்குச் சென்று சேர்ந்தான்.

அப்படி சந்தனு வேட்டையாடி முடிந்தபின், யமுனாநதி கரையில் பாசறை அமைத்துத் தங்கினான். அப்போது வீசிய இளங்காற்றில் தெய்வத்தன்மை கொண்ட நறுமணம் கலந்து வீசி சந்தனு மன்னனின் நாசியைத் துளைத்தது. அம்மணத்தை நுகர்ந்த சந்தனு மிக்க மகிழ்ச்சியடைந்தான். அந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிய எண்ணி, அம்மணம் வரும் திசையை எதிர்நோக்கி தேரில் ஏறிச் சென்றான்.

ஒருயோசனை தூரம் சென்ற சந்தனு செம்படவர் குலத்து அரசனின் மகளைக் கண்டான். அவளைப் பார்த்ததும், தான் நுகர்ந்த மணம் அவள் உடம்பிலிருந்து தான் வீசுகிறது என்பதை அறிந்தான்.

சந்தனுவின் உள்ளம் மகிழ்ச்சியால் கூத்தாடியது. அவன் துள்ளும் உள்ளத்தோடு தேரைவிட்டு இறங்கி வந்து, ''ஒளிவீசும் நகைகளையணிந்து விளங்கும் மாதரசியே! நீ யார்?'' என்று வினவினான்.

சந்தனுவைப் பார்த்து அஞ்சி நின்ற அப்பெண், அவன் வார்த்தைகளைக் கேட்டு மேலும் அஞ்சி நடுங்கினாள். ஆயினும் பெரியவர்களைக் கண்டால் வணங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே அவள் அவனைப் பார்த்து கைகளைக்கூப்பி வணங்கி, ''என்பெயர்யோஜனகந்தி! இந்தப் பெரிய நதியைக் கடந்து செல்ல இந்தத் துறைக்கு வருபவர்களை என் தந்தையின் கட்டளைப்படி மரக்கலத்தில் ஏற்றி அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பேன்'' என்றாள்.

யோஜனகந்தி அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சந்தனு மன்னன் அவள்மீது கொண்ட காம இச்சையால் உள்ளம் உருகி உடல் தளர்ந்தான். உடனே அந்தத் தளர்வோடு வலைஞர்தலைவன் இருக்கும் இடம் சென்றான்.

மன்னன் சந்தனுவைக் கண்டதும், அந்தச் செம்படவராசன் வந்து, தலை மண்பட வணங்கி எழுந்தான். வணங்கிய வலைஞர் தலைவனிடம் திருமணம் பேசும்படி தன் தேர்ப்பாகனுக்கு ஜாடை காட்டினான் சந்தனு.

அரசன் விருப்பப்படி தேர்ப்பாகன் வலைஞர் தலைவனை அணுகி, "உலகம் முழுவதுக்கும் தலைவரான எங்கள் மன்னர்பிரான் உன் மகள் யோஜனகந்தியை மணந்து கொள்ள விரும்புகிறார். இப்படி எங்கள் அரசர் உன் மகளை மணந்து கொள்ள விரும்பியது மயில் போலும் சாயல் கொண்ட உன்மகள் செய்த தவப்பயனோ? நீ செய்த பெரிய தவமோ? இல்லை, பழங்குலமாகிய பரதவகுலத்தவர் செய்த தவமோ? இவற்றில் ஒன்றால் உண்டானதுதான்!'' என்றான்.

அதைக் கேட்டதும் பரதவராசன், "பூருவின் வம்சத்தில் பிறந்த உங்கள் மன்னர், தாழ்ந்த குலத்தில் பிறந்த என் பெண்ணை மணந்து கொள்வது என்பது, இமயத்தை ஒரு தட்டிலும் அணுவை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுக்கிற செயலைப்போன்றதாகும். ஆனால், இப்போது இவற்றைப் பற்றிப் பேசி என்ன பயன்? கங்காதேவியின் மகனான இளவரசன் தேவவிரதன் உங்கள் சந்தனு மகாராசரின் அரசை மனமகிழ்ச்சியோடு அரசாள்வதற்குத் தயாராக இருக்கிறான். அப்படியிருக்க இந்த என் பெண் உங்கள் மன்னரை மணந்து பெறப் போகிற புதல்வன் என்ன செய்வான்? அவன் செய்ய வேண்டிய செயலைச் சிந்தித்துச் சொல்லுங்கள்! '' என்றான்.

தன்முன்னே வணக்கத்தோடு நின்று பரதவர்பதி சொன்ன கொடுஞ் சொற்களைக் கேட்டவுடனே, சந்தனு தன் காதுகளில் கொள்ளிக்கட்டையை நுழைத்தது போலத் துடித்தான். அக்கொடிய வார்த்தைகளால் மேலும் அவன் நெஞ்சம் வெந்தான். அதனால் மௌனமான சந்தனு, "முன்பு கோபத்தோடு வசிஷ்டரிட்ட சாபமே இன்று பயனைக் கொடுக்க வந்து விட்டது போலும்!'' என்று எண்ணி அதிக வருத்தம் கொண்டான். அந்த வருத்தத்தோடு, அன்னமும் குயிலும் வாழும் சோலைகளைக் கொண்ட ஹஸ்தினா புரத்துக்குத் திரும்பினான்.

நாட்கள் பல கடந்தும் சந்தனுவின் மனம் தெளிவு பெறவில்லை. அவன் மனம் கங்காதேவியை அறவே

மறந்து, யோஜனகந்தியின் நினைவில் திளைத்துக் கொண்டிருந்தது. அந்த நினைவாலும் அவள்மேல் வைத்த காம இச்சையாலும் மன்னனின் உடல் நாளுக்கு நாள் இளைக்கத் தொடங்கியது. அதோடு பௌர்ணமிக்குப் பின் ஒவ்வொரு கலையாகக் குறைந்து ஒளியிழக்கும் சந்திரனைப் போல முகவொளியும் இழந்து வந்தான் சந்தனு.



தந்தையின் நிலையைக் கொஞ்ச நாட்களாகவே கூர்ந்து கவனித்து வந்த தேவவிரதன், கடைசியாக தேர்ப்பாகனை அழைத்து, ''என் தந்தையின் முகம் ஏன் சோர்ந்து போயிருக்கிறது? அம்முகத்தின் அழகு கெடுவதற்கானக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

தேர்ப்பாகன், தேவவிரதனின் கேள்விக்குப் பதிலளிக்க நிகழ்ந்தவற்றை விவரித்தான். அதைக் கேட்ட மறுகணமே இளவரசனான தேவவிரதன் வலைஞர் தலைவனிடம் சென்றான். அவனைப் பாசத்தோடு நோக்கி, ''நீங்கள்

எனக்குப் பாட்டன். என்னைப் பெற்றவள் கங்காதேவி இல்லை. உங்கள் மகளே என் தாய்! உங்கள் விருப்பம் போல் இனி நடக்கும். அதனால் இந்த அரசு என் தம்பிக்கு உரியதாகும். எனவே, காலம் கடத்தாமல் அரசராகிய என் தந்தைக்கு உங்கள் பெண்ணை மணம் செய்து வைப்பதற்கு ஒப்புக் கொள்ளுங்கள்!'' என்றான்.

வலைஞர்தலைவன் வியப்படைந்தாலும், தான் கொண்ட சந்தேகத்திலிருந்து அவன் பூரணமாக நீங்க வில்லை. அச்சந்தேகத்துடன் மெல்ல அவனைப் பார்த்து, ''செம்மலே! உன் தந்தைமேல் உறுதியாக வைத்த அன்பினால் நீ ராஜ்ஜியம் வேண்டாம் என்று விட்டுவிட்டாய். ஆனால், உனக்குப் பிறக்கும் மகன் இந்த ராஜ்ஜியத்தை அடைவதற்கு உரிமையுடையவனாவானே. அப்போதும் என் விருப்பம் நிறைவேறாமல் போகுமே. என்மகள் வயிற்றுப் பேரன் உன் தந்தையின் சிம்மாசனத்தில் ஏறுவதற்கு உரிமையில்லாதவனாகப் போய்விடுவானே!'' என்றான்.

உடனே தேவவிரதன், ''பாட்டனாரே! இப்போது நான் தீர்மானித்துக் கொண்டு வந்துள்ள விரதத்தைப் பற்றிச் சொல்கிறேன். எல்லோரும் கேளுங்கள். நான் இப்பிறவியை விட்டு நீங்கும் வரை பெண்ணின்பத்தையே நினைக்காதவன் ஆவேன். பிள்ளையைப் பெற்றவர்க்கு உண்டான நற்கதியையும், இப்போது உங்கள் மகள் என் தந்தையைத் திருமணம் செய்து கொள்ளும்படிச் செய்ததின் பயனாக நான் அடைவேன்!'' என்றான்.

தேவவிரதன் கூறிய சபதத்தைக் கேட்டதும் முதியவர்களும், முனிவர்களும், தேவர்களும், அரம்பையர்களும் மகிழ்ந்தார்கள். பின், ''பூமியில் இவனைக் காட்டிலும் மனவுறுதி கொண்ட அரசர் வேறுயாரும் இல்லை!'' என்று கூறினார்கள். மேலும், அவர்கள் அவன் மனவுறுதியைப் பாராட்டி அவனைப், ''பீஷ்மன்!'' என்று அழைத்து, அவன் மேல் மலர்மாரிப் பொழிந்தார்கள்.

பிறகு பீஷ்மர் வலைஞர் தலைவனையும் யோஜனகந்தியையும், முனிவர்களும் சுற்றத்தவர்களும் சூழ்ந்து வர ஹஸ்தினாபுரத்து அரண்மனைக்கு அழைத்து வந்தார்.

யோஜனகந்தியை சந்தனுவின் முன்னால் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, பீஷ்மர் அவளது பாதங்களைத் தொழுது நின்றார். மகனின் செயலைக் கண்ட சந்தனு மகிழ்ந்து அவரை மார்போடு கட்டியணைத்துக் கொண்டான். அன்பின் எல்லையில் கட்டுண்டு பீஷ்மரின் உச்சியை மோந்து சந்தனு, ''முன்பு தன் இளமையை தந்தைக்குக் கொடுத்த பூரு என்னும் ராஜகுமாரனும் உனக்கு நிகராகமாட்டான்!'' என்று பாராட்டினான்.

மீண்டும் சந்தனு பீஷ்மரை நோக்கி, ''மகனே! பிள்ளைகள் தந்தைக்குச் செய்கிற உதவியைக் காட்டிலும் நூறு மடங்குக்கும் அதிகமான உதவியை நீ செய்தாய். ஆனால், நானோ தந்தை மகனுக்குச் செய்யும் உதவியைச் செய்யும்படி கொஞ்சமும் நல்ல தவத்தைச் செய்தவன் இல்லை. ஆகவே, நீ என்றைக்கு உயிர்நீத்து சுவர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று எண்ணுகிறாயோ, அப்பொழுது தான் உன்னை எமன் நெருங்குவான். அதற்கு முன்பாக — உன் விருப்பமில்லாது எமன் ஒருக்காலும் உன்னை நெருங்க மாட்டான்!'' என்று புகழ்ந்து, ஒரு வரத்தையும் கொடுத்தான்.

அப்போது வலைஞர்தலைவன் தேவர்களும் அதிசயிக்கும் கிளிபோன்ற தன் புதல்வியை சந்தனுவின் முன்னே நிறுத்திவிட்டு, அவன் பாதங்களை வணங்கி எழுந்தான். பிறகு கைகட்டி அடக்கத்தோடு மன்னனைப் பார்த்து அவன், ''எம்பெருமானே! கேட்டருளுங்கள். உங்களின் மனைவியாவதற்கான உண்மைத் தவம் புரிந்துள்ள இந்த என் மகள், தாமரையில் தோன்றும் திருமகளைப் போன்றவள். அத்திருமகளேயல்லாமல் இவளை வலைஞர் குலத்தில் பிறந்த நற்குணவதி என்று நினைக்காதீர்கள். சேதி வம்சத்தில் பிறந்த வசு என்பவன் சிறந்த நோன்பிருந்து தேவேந்திரனின் அருளால் வானத்தில் செல்லும் விமானத்தைப் பெற்றான். அந்த விமானத்தில் ஏறிக் கொண்டு ஒருசமயம் அவன் வானத்தில் சஞ்சரித்தான். அப்போது அவன் தன் மனைவியை நினைத்து, மோகாவேசம் கொண்டான். அதனால் அவனிடமிருந்து சுக்கிலம் வெளிப்பட்டது. அச்சுக்கிலத்தை அவன் ஒரு இலையில் ஏந்தி சியேனப் பறவையிடம் கொடுத்துத் தன் மனைவி கிரிகையிடம் சேர்க்கும்படிச் சொன்னான். அப்படியே அப்பறவை அந்த இலையைக் கொண்டு

சென்றது. அப்போது வேறொரு சியேனப் பறவை அதை இரையென்று நினைத்து அப்பறவையோடு சண்டை யிட்டது. அதனால் இலையிலிருந்த சுக்கிலம் முத்துப் போல யமுனாநதி வெள்ளத்தில் விழுந்தது. அச்சமயம் ஒரு முனிவரின் கோபத்திற்கு ஆளான தேவமங்கை ஒருத்தி யமுனையில் மீனாகி அலைந்து கொண்டிருந்தாள். அவள் நதியில் விழுந்த சுக்கிலத்தை உணவென்று கருதி உண்டு விட்டாள். உடனே மீன்வடிவிலிருந்த அந்த தேவப்பெண் கருவுற்றாள். பின்னால் அவள் கருமுதிர்ந்தபோது, வலைஞர்கள் வீசிய வலையில் அகப்பட்டுக் கொண்டாள். ஆம், அந்த மீன் அகப்பட்டுக் கொண்டது. அதை அறுத்துப் பார்த்தபோது ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் அதன் வயிற்றினுள்ளே இருந்தார்கள். அக்குழந்தைகளை வலைஞர்கள் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவர்களை நான் மானிடர்த் தலைவனாகிய வசுவினிடம் கொண்டு சென்று காட்டினேன். வசு அவர்களைக் கண்டு மகிழ்ந்தான். ஆண் குழந்தையை மட்டும் பெற்றுக் கொண்டு, அக்குழந்தைக்கு மீனவன் என்று பெயர் வைத்து வளர்த்தான். பெண் குழந்தையை அவன் என்னிடமே கொடுத்து விட்டான். நான் இன்று வரையிலும் என் மகளாகவே பாவித்து அக்குழந்தையை வளர்த்தேன். இதோ, நான் வளர்த்த அக்குழந்தை யோஜனகந்தி. இன்று இவள் இன்னிசை பொழியும் மென்மையான குயில் போல் வளர்ந்து வந்து தனக்குரிய அரசர் குலத்தில் கலந்து விட்டாள்!'' என்று கூறி முடித்தான்.

வலைஞர்தலைவனால், தான் விரும்பியவள் சிறந்த வசுவின் பெண் என்பதையறிந்ததும் சந்தனு மன்னன் அதிக மகிழ்ச்சியடைந்தான். உடனே அவன், ''இந்நாளே மணம் செய்து கொள்வதற்கு ஏற்ற நன்னாள்!'' என்று சொல்லி, மண்ணுலகத்தவர்கள் வாழ்த்துகூற யோஜனகந்தியை மணந்து கொண்டான்.

கங்கைக் கரையிலே சந்தித்த கங்காதேவியோடு அனுபவித்த இன்பம் மறைந்தபின், யமுனைக் கரையிலே சந்தித்த கங்காதேவியின் தங்கை போன்ற யோஜனகந்தியை மணந்த சந்தனு, அவளோடு இன்பத்தைக் குறைவற அனுபவித்தான். அதனால் சந்தனு அரசாட்சி நடத்துவதைக் கைவிட்டான்.

அதனால் தந்தையின் அரசாட்சியைப் பீஷ்மர் ஏற்று நன்றாக நடத்தினார். பீஷ்மர் அப்படி அரசாட்சி நடத்தவும் சந்தனு செவ்வரிபரந்த கண்களையுடைய யோஜனகந்தியோடு சுகித்த இன்பத்தால், அவள் சூரியனும் சந்திரனும் போன்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தாள்.

சிற்றன்னைப் பெற்றெடுத்த புதல்வர்களான சித்திராங்கதனுக்கும் விசித்திரவீரியனுக்கும் பீஷ்மர் உரிய பருவத்தில் தக்க கல்வியைப் பயிற்றுவித்தார். அதனால் அவர்கள் இருவரும் ஒத்த கல்விமான்களானார்கள்.

நெடுநாட்கள் பெண்ணின்பமும் அரசாட்சியும் கொண்டபின் சந்தனு மன்னன் சுவர்க்கம் போய்ச் சேர்ந்தான்! தந்தை இறந்ததும் பீஷ்மர், தமது தம்பியர்களுள் மூத்தவனான சித்திராங்கதனை, ''நம் பூமிக்கு என் தம்பியே அரசன்!'' என்று சொல்லி, சிம்மாசனம் ஏற்றினார்.

சித்திராங்கதன் அரசாட்சி செய்கையில், அவன் பெயர் கொண்ட கந்தருவன் ஒருவன் இருந்தான். அவன் தனது பெயரை மானிடன் ஒருவன் வைத்துக் கொண்டிருப்பதா என்று நினைத்து வெகுண்டான். அதனால் அவனைக் கொன்றுவிட எண்ணினான். ஆயினும் பீஷ்மரிடம் கொண்ட அச்சத்தினால் பகலில் சென்று சித்திராங்கதனைக் கொல்வதற்கு அவனால் முடியவில்லை. எனவே, ஒருநாள் இரவு யாரும் அறியாமல் அரண்மனைக்குள் புகுந்து சித்திராங்கதனைக் கொன்றுப் போட்டுவிட்டு மறைந்தான்.

சித்திராங்கதனின் மறைவால் யோஜனகந்தி ஆற்றாது அழுதாள். அவளது அழுகையையும் துன்பத்தையும் மாற்ற எண்ணினார் பீஷ்மர். உடனே பகைவர் அஞ்சி ஓடும் வலிமையுள்ள இரண்டாவது தம்பியான விசித்திரவீரியனுக்கு முடி சூட்டினார்.

அண்ணன் பீஷ்மரின் தயவால் முடி சூடிக் கொண்ட விசித்திரவீரியன் அரசாட்சியை நன்றாக நடத்தி வந்தான். அப்பொழுது காசிமன்னன் தன் மூன்று குமாரிகளுக்கும் சுயம்வரம் நடத்த நினைத்து , எல்லா மன்னர்களுக்கும் தூது அனுப்பினான். அம்பை, அம்பிகை, அம்பாலிகா என்ற காசிராசனின் புதல்வியரை மணந்து கொள்ள மன்னர்கள் யாவரும் சுயம்வரத்துக்குச் சென்றார்கள்.

பீஷ்மர், காசிமன்னன் நடத்தும் சுயம்வரத்தை அறிந்தார். உடனே அவர், ''பெண்களால் விரும்பப்படும் மன்னர்களின் வலிமையை ஒழித்து ஓடச்செய்தாவது காசிராசனின் பெண்களை என் தம்பிக்கு மனைவி யாக்குவேன்!'' என்று எண்ணி, வில்லேந்தி தமது தம்பியோடு அந்தச் சுயம்வரத்திற்குச் சென்றார்.

அப்படிச் சென்ற பீஷ்மர் களைப்போடு கங்கைக் கரையில் சிறிது நேரம் தங்கினார். கங்காநதி தன் தவப்புதல்வன் தன் கரையில் தங்கியிருப்பதைக் கண்டதும், தென்றலோடு நீர்த்திவலைகளை அவர் மேல் தெளித்து, வழி கடந்து வந்த அவரது களைப்பைப் போக்கினாள்.

களைப்பு நீங்கியபின் பீஷ்மர் தம்பியோடு புறப்பட்டுப் போய் காசிராசனின் அரண்மனையை அடைந்தார். காசிராசன் பீஷ்மரை அன்போடும் மதிப்போடும் வரவேற்றுப் பாராட்டி உயர்ந்த மன்னர்க்குரிய ஆசனத்தில் தம்பியோடு அவரை அமரச் செய்தான். அச்சமயம் அங்கிருந்த பலநாட்டு மன்னர்களும் பீஷ்மரைக் கண்டு அஞ்சினார்கள். அவ்வச்சத்தோடு, ''குருக்ஷேத்திரத்திலே இந்தப் பீஷ்மர், தாம் இப்பிறவியில் திருமணமே செய்து கொள்வதில்லை என்று சபதம் செய்தார். இதை உலகத்தவர்கள் அனைவரும் அறிவார்கள். அப்படியிருக்க இந்தக் கிழபீஷ்மர் இனி என்ன செய்ய நினைத்து இங்கே வந்திருக்கிறாரோ? ஒருவேளை இவர் இக்கன்னியரை மணந்து கொள்ள நினைத்திருக்கிறாரோ?'' என்றெல்லாம் எண்ணி, சுயம்வர மணமாலை தங்களுக்குக் கிடைக்கும் என்று வந்த அரசகுமாரர்கள் மனம் வாட்டமுற்றார்கள்.

அச்சமயம் காசிராசனின் கன்னிப் பெண்கள் மூவரும் கைகளில் மணமாலை எடுத்துக் கொண்டு சுயம்வர மண்டபத்திற்கு வந்தார்கள். அப்பெண்களின் கூடவே வந்த தோழிப் பெண்கள் அந்த மண்டபத்தில் உட்கார்ந்திருந்த அரசர்களை அவர்களுக்கு ஒவ்வொருவராய் அறிமுகப்படுத்தி வந்தார்கள். அப்படியே பீஷ்மரின் எதிரே வந்து நின்றபோது, அவரது வீரத்தையும் வலிமையையும் பெருமையையும் அரசகன்னியர்களுக்குத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும் அரசிளங்குமரிகள், ''இவரே நமக்குக் கணவனாவதற்கு உரியவர். நமது கையிலிருக்கும் மணமாலை இவருக்கே

உரிமையுடையது!'' என்று நினைத்தார்கள். ஆனால், பீஷ்மர் கிழவராயிருப்பதைக் கண்டு தயங்கிப் பின்வாங்கினார்கள்.



தம்மைக் கண்டு தயங்கிய அரசகன்னியர்களை மறுகணமே தூக்கிச் சென்று தேரில் வைத்தார் பீஷ்மர். அதைக் கண்ட அரசகுமாரர்கள் வெகுண்டு அவரைப் பார்க்க, அவர் சிறிதும் அச்சம் இல்லாது தம்பியுடன் தேரேறி, அதைக் காற்றைவிட வேகமாக ஓட்டினார்.

பீஷ்மரின் செயல் மேலும் அரசகுமாரர்களை மனங் கொதிப்படையச் செய்தது. அவர்கள், ''இவர் முறையாகப் பெண்களைக் கொள்ளாமல் வலிமையால் அவர்களைத் தூக்கிச் செல்கிறாரே? எங்களிடம் அப்படி என்ன வலிமை குறைந்திருக்கிறது?'' என்று கோபத்துடன் கூறிக் கொண்டே, ஒன்றாகக் கூடி வேகமாக பீஷ்மரைத் தொடர்ந்து வந்து போரிட்டார்கள்.

தம்மை எதிர்த்துப் போருக்கு வந்த மன்னர்களை யெல்லாம் பீஷ்மர் அர்த்தசந்திரபாணங்களால் காயப்படுத்தி

ஓடச் செய்தார். மன்னர்கள் தோற்றோடியதும் பீஷ்மர் தம்பியோடும் அரசகன்னியர்களோடும் ஹஸ்தினாபுரத்தை அடைந்தார். அப்போது அரச கன்னியர்களுள் ஒருத்தியான அம்பை, தான் வந்த வழியையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பீஷ்மர் கண்டார். தம்மோடு போரிட்ட அரசகுமாரர்களில் சற்று வலிமையில் மற்றவர்களைக் காட்டிலும் மிகுந்திருந்த சாலுவன்மேல் அவள் உள்ளம் சென்றுவிட்டது என்பதை அறிந்து கொண்டார்.

பீஷ்மர் அம்பையைப் பார்த்து, "பெண்ணே ! பிறர் மேல் மனம் வைத்த கன்னிகையை மணந்து கொள்வது எங்கள் பெருமைக்குத் தகுதியில்லை!" என்று சொல்லி, அவளைத் தேரிலிருந்து இறக்கிச் சாலுவ தேசத்து அரசனான பிரமதத்தனிடம் அனுப்பினார்.

பிறகு பீஷ்மர், "அழகினால் இப்பெண்களுக்குச் சமமான என் தம்பி விசித்திரவீரியனே இவர்களுக்குக் கணவனாவான்!" என்று கூறி, அவர்களை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

பீஷ்மரின் சகோதர பாசத்தால் விசித்திரவீரியன் காசிராசனின் புதல்வியர்களான அம்பிகையையும் அம்பாலிகையையும் மணந்து மகிழ்ந்தான்.

சாலுவராசனான பிரமதத்தனைத் தேடிச் சென்ற அம்பை, அவனையடைந்து தன் காதல் உள்ளத்தைத் தெரிவித்துத் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினாள். ஆனால், கெடுமதி கொண்ட பிரமதத்தன், "என்னை வென்று பகைவன் கொண்டு சென்ற உன் உடலை நான் தீண்டமாட்டேன், போ!" என்று அவளைப் புறக்கணித்தான்.

அதனால் அம்பைத் திரும்பி பீஷ்மரிடம் வந்தாள். தன்னை மணந்து கொள்ளும்படி அவரை வேண்டினாள்.

தம்மை விரும்பி மணந்து கொள்ள வந்த அம்பையின் நிலைக்கு இரக்கம் கொண்டார் பீஷ்மர். ஆனால், தாம் கொண்ட பிரும்மசரிய சபதத்துக்குப் பங்கம் விளைவிக்க அவர் விரும்பவில்லை. எனவே அவளை நோக்கி, "பெண்ணே! உன்னை மணப்பது நடக்காது!" என்றார்.

பீஷ்மர் தன்னை மணப்பதற்கு மறுத்ததும் மிக்கத் துயரம் கொண்டாள் அம்பை. அத்துயரம் அவள் உள்ளத்தில் பொல்லாத ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அதனால் அவள் கண்கள் சிவந்து நீரைக் கொட்டின. கடைசியாக அவள், ''தந்தை என்ன சொல்வாரோ?'' என்று அஞ்சியபடி காசி அரண்மனையை அடைந்தாள்.

நேரே அம்பை தந்தையிடம் சென்று அவன் பாதங்களை வணங்கி, கண்ணீரோடு தனக்கு நேர்ந்ததைச் சொன்னாள். அதைக் கேட்டதும் காசிராசன், தன் மகள் அம்பையை மணந்து கொள்ளும்படி பீஷ்மருக்குத் தூது அனுப்பினான்.

தூதுவர்கள் சென்று காசிராசனின் எண்ணத்தை பீஷ்மருக்குச் சொன்னார்கள். தாம் கொண்ட விரதத்தால் மன்மதனை வென்று வாழ்ந்திருக்கும் பீஷ்மர், காசி மன்னனின் விருப்பத்திற்கு இணங்க முடியாது என்று கடுமையாக மறுத்துத் தூதுவர்களைத் திருப்பி அனுப்பினார்.

போன தூதுவர்கள் காரியத் தோல்வியுடன் வந்ததும் அம்பை அளவிட முடியாத துன்பம் கொண்டாள். மகளின் துன்பத்தைக் கண்டு மனம் பொறுக்காத காசிராசன், ''மகளே! பீஷ்மருக்கு வில்வித்தை பயிற்றுவித்த ஆசிரியரான பரசுராமரின் பேச்சை பீஷ்மர் மறுக்கமாட்டார். எனவே, நீ சென்று பரசுராமரின் பாதங்களை வணங்கி உனது குறையைச் சொல். அவசியம் அவர் உன்னை மணந்து கொள்ளும்படி பீஷ்மருக்குச் சொல்வார். அவர் பேச்சை மறுக்க முடியாமல் பீஷ்மர் மகிழ்ச்சியோடு உன்னைத் திருமணம் புரிவார்! அப்படியும் அவர் உன்னை மணந்து கொள்ள மறுத்துவிட்டார் என்றால், நீ நினைத்திருப்பது போலவே பெரிய தவத்தைச் செய்!'' என்றான்.

தந்தையின் பேச்சைக் கேட்டு கொஞ்சம் மன ஆறுதல் பெற்றாள் அம்பை, தந்தையையும் தாயையும் வணங்கி, திருமகளையும் அழகால் வென்ற அம்பை பல்லக்கில் ஏறி, தன்னை மங்கையர்கள் சூழ்ந்துவர சமதக்கினி முனிவரின் மகனான பரசுராமரின் குடிலை அடைந்தாள்.

பல்லக்கைவிட்டு இறங்கி அம்பை வாயிற்காவலனிடம் தான் யார் என்பதைத் தெரிவித்து முனிகுமாரரைப் பார்க்க

வந்திருப்பதையும் சொன்னாள். வாயில் காவலன் உடனே விரைந்து சென்று பரசுராமரை வணங்கி, காசிராசன் மகள் வந்திருக்கும் செய்தியைச் சொன்னான். பரசுராமர், "அவளை உள்ளே வரவிடு!" என்று கட்டளையிட்டுக் காவலனை அனுப்பினார்.

காவலன் வந்து செய்தியைக் கூறியதும் அம்பை குடிலுக்குள் சென்று பரசுராமரைக் கண்டாள். முதலில் அவரை வாழ்த்தினாள். பிறகு அவரது பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்தாள். தன் மனக்குறையை எடுத்துச் சொல்லி, தன் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும்படி வேண்டினாள்.

பரசுராமர் அம்பையின் மனக் குறையைப் பொறுமை யோடு கேட்டறிந்தபின், அவள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக உறுதி கொடுத்தார்.

பரசுராமர் வேண்டுபவர்களுக்கு வேண்டும் வரத்தைக் கொடுப்பவர். மழுப்படை வீரனாகிய அவர், க்ஷத்திரிய குலத்தில் தோன்றிய பல மன்னர்களைக் கொன்று தம் சபதத்தையும் வீரத்தையும் நிலை நாட்டியவர். நற்றவம் கொண்ட பரசுராமர் அம்பை நிலைக்கு இரங்கி, அவளைத் தேரில் ஏற்றிக் கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றார்.

தம்மைப் பார்ப்பதற்காக வரும் பரசுராமரை பீஷ்மர் எதிர் கொண்டு வரவேற்றார். அன்புடனும் பக்தியுடனும் அவரது பாதங்களில் தலைபட வணங்கி அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். பரசுராமருடன் அம்பையும் சென்றாள்.

பீஷ்மர் தமக்கு வில்வித்தைச் சொல்லிக் கொடுத்த ஆசிரியரான பரசுராமரைப் பொன்னாசனத்தில் உட்காரச் செய்து முகமலர்ந்து பலவாறு உபசரித்தார். பிறகு, "ஆசிரியரே! தாங்கள் இங்கு எழுந்தருளி என்னுடன் இருப்பதற்கு நான் என்ன தவம் செய்தேன்!" என்று மகிழ்ந்து கூறினார்.

"பீஷ்மா! இதோ நிற்கும் அம்பை உனக்கு ஆசையோடு மணந்து கொள்வதற்கு ஏற்றவள்!" என்று பரசுராமர் மகிழ்ச்சியோடு தன் பக்கத்தில் நிற்கும் அம்பையைக் காட்டிக் கூறினார்.

"பெருந்தவமுடைய பரிசுத்த மூர்த்தியே! இனிய சொற்களால் உலகத்தவர்களைக் கவர்ந்த என் தந்தை, இன்பந்தரும் திருமணத்தைச் செய்து கொள்ள விரும்பினார். அப்போது நான் அவர் அந்த இன்பத்தையடைந்து மகிழ்வதற்காகப் பெண்ணின்பத்தை எப்போதும் இச்சிக்க மாட்டேன் என்று ஒரு சபதம் எடுத்துக் கொண்டேன். தங்களுடைய வார்த்தையை எவரும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள். அதை எண்ணித் தாங்கள் இப்பெண்ணை மணந்து கொள்ளும்படி எனக்குக் கூறினீர்கள். ஆனால், தங்கள் வாயிலிருந்து வந்த அந்தப் பழிச் சொற்களை இப்போது என் காதுகள் ஏற்று நிற்குமோ?" என்றார்.

மேலும் அவர், "எதிர்த்தவர்களைக் கொன்றே தீர்க்கின்ற வில்லாளியே! என் உள்ளத்தில் வாழ்கிற கடவுள் தங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. இது சத்தியம். ஆகவே, பெண்ணுக்காகப் பரிந்துப் பேசுகிற பேச்சை விடுங்கள். அதற்குப் பதிலாக என் உயிர் வேண்டுமானாலும் இக்கணமே தருகிறேன்!" என்றார்.

குருவின் வார்த்தையை மறுத்துப் பேசியதைக் கண்டதும் பரசுராமர் பீஷ்மர்மேல் வெறுப்படைந்தார். கார்த்தவீரியார்ச்சுனனின் ஆயிரம் தோள்களையும் மழு வாயுதத்தினால் வெட்டியெறிந்த பரசுராமர், தம் உள்ளத்தில் எழுந்த வெறுப்பால் மேலும் பீஷ்மர்மேல் கரைமீறிச் செல்லும் கடல் போலச் சினம் கொண்டார். அதனால் அவர் மேனி வெளுத்தது. கண்கள் சிவந்தன. அடக்க முடியாத கோபத்தோடு உடனே பரசுராமர் பீஷ்மரோடு போர் புரிய நினைத்துத் தேரேறினார்.

ஆசாரியரின் கோபத்தைக் கண்ட பீஷ்மர் அஞ்சினார். அந்தப் பயத்துடன் குருவின் தாமரைப் பாதங்களில் விழுந்து வணங்கினார். "மன்னித்தருளுங்கள்!" என்று வேண்டினார்.

ஆனால், பரசுராமரோ கோபம் தணியவில்லை. அவர் போருக்குத் தயாரானார். குருவின் நிலை கண்டதும் பீஷ்மர், "சபதத்தை மீறுவதைக் காட்டிலும் குருவோடு போர் செய்து இறப்பதே மேல்!" என்று நினைத்து, போருக்குத் தயாராக இருந்த தேர் ஒன்றில் தாமும் ஏறினார்.

குருவுக்கும் மாணவருக்கும் இடையே பத்து நாட்கள் இரவும் பகலுமாகக் கொடிய போர் நடந்தது. கடைசியாக

தசரதராமர் போல் பீஷ்மர் பரசுராமரின் உடல் வலிமை முழுவதையும் அம்பு பொருந்திய தமது வில்லினால் தளரச் செய்தார். அதனால் பரசுராமர் அஞ்சிப் போரைக் கைவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார்.

பீஷ்மரின் வீரத்தைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்து பாராட்டினார்கள். பலகோடி அரசர்கள் அவரைப் புகழ்ந்தார்கள். அந்தப் புகழ்ச்சியோடு பீஷ்மர் தமது அரண்மனைக்குத் திரும்பினார்.

தான் பீஷ்மரைப் பரசுராமரால் மணந்து வாழலாம் என்று எண்ணி வந்த அம்பை, தன் எண்ணத்திற்கு மாறாக நடந்த செயலைக் கண்டு உள்ளம் வெந்தாள். அதற்குமேல் அவளால் அங்கே நிற்க முடியவில்லை. உடனே அவள் முன்பே தான் எண்ணியிருந்தபடி பெருந்தவம் செய்வதற்காகத் தபோவனம் சென்றாள்.

தபோவனம் சென்ற அம்பை, "பாம்பினை வெல்லும் கருடனைப் போல் பீஷ்மரைப் போரில் வெல்லும் சூரனாவேன்!" என்று சபதம் பூண்டு பெரும் தவம் புரியத் தொடங்கினாள். அப்படி தவம் புரியத் தொடங்கியவள் இரண்டு பாதங்களுள் ஒரு பாதத்தை மடக்கி மற்றொரு பாதத்தின் மேல் வைத்தாள். மூங்கில் போன்ற அழகிய தன் இரண்டு தோள்களையும் மேற்புறமாகத் தூக்கிக் குவித்து நிறுத்தினாள். பாதங்களிலே வாள்போன்ற இரு கண்களின் பார்வையையும் குவித்தாள்.

அந்தக் கோலத்துடன் அம்பை யாராலும் செய்ய முடியாத பெரும் தவத்தைப் பத்தாண்டுகள் செய்தாள். அதனால் அவள் முருகக் கடவுளைப் போல் சிகண்டி என்னும் பெயரோடு யாகசேனனுக்கு மகனாகப் பிறந்தாள்.

அம்பை சிகண்டியாகப் பிறந்திருக்கையில், பீஷ்மரின் தம்பியான விசித்திரவீரியனோ அம்பிகை, அம்பாலிகை என்ற மனைவியரிடம் அதிகமான இன்பத்தை அனுபவித்ததனால், ராஜயக்ஷ்மா என்னும் க்ஷயரோகத்தால் மாண்டான்!

2. பாண்டவர்கள் பிறந்தார்கள்

அருமைத் தம்பி விசித்திரவீரியன் ராஜயக்ஷ்மாவால் இறந்ததும், அவனுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியையெல்லாம் நன்குச் செய்து முடித்தார் பீஷ்மர். ஆயினும் அவர் உள்ளம் தம்பியின் மறைவால் துயரத்தில் திளைத்தது. அப்போது விசித்திரவீரியனின் தாய் யோஜனகந்தி பீஷ்மரிடம் ''மகனே! நான் சொல்வதைக் கேள். உனது உடன் பிறந்தவன் சுவர்க்கம் போய்விட்டான். இனி அவனுக்குப்பின் இந்தச் சந்திர குலத்தை விளங்க வைக்க யாருமில்லை. அதனால் வம்சம் அழிந்த சந்திரகுலம் மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியனைப் போலாயிற்று. வேதங்களில் தேர்ந்தவனே! இனி இந்தச் சந்திரகுலம் எந்த வழியால் அழியாது நிற்கும் என்பதை நான் அறியாதவளானேன். அதனால் ஏற்பட்ட துன்பத்துக்கும் நான் ஆளானேன். ஆனாலும் ஒன்று சொல்கிறேன் கேள். என் இந்தத் துன்பம் நீங்க வேண்டுமானால் தேவமுறைப்படி நீ நடக்க வேண்டும். அதாவது பிள்ளை இல்லாது உடன் பிறந்தான் இறந்தபோது, அவன் மனைவியுடன் சுகித்துப் பிள்ளைகளைப் பெறுவதே அது. உனது தாயாகிய நானே இச்செயலைச் சொல்லி நீ செய்வதால், பெண்ணின்பம் பெறமாட்டேன் என்கிற உனது விரதம் கெடாது!'' என்றாள்.

சிற்றன்னை கூறிய சொற்களைக் கேட்டதும் பீஷ்மர், இடி விழுந்த நாகம் போல் மனம் நடுங்கித் தன்னிரு காதுகளையும் கைகளால் பொத்திக் கொண்டார். பின்பு அவர் சற்றே மனம் தெளிந்து, ''தாயே! மீண்டும் நான் கங்காதேவியின் வயிற்றிலே கருவுற்று பிறப்பேனானால், அப்போது என் விரதமும் என்னைவிட்டு நீங்கும்!'' என்றார்.

மீண்டும் அவர் தாயைப் பார்த்து, ''க்ஷத்திரிய விரோதியான பரசுராமரால் மனுவின் குலமே அழிந்து விட்டது. அப்போது மனுகுலத்து அரசமங்கையர்கள் முனிவர்களைக் கூடிப் பிள்ளைகளைப் பெற்றார்கள் என்று சொல்வார்கள். ஸ்மிருதிகளில் சொல்லியபடி அம்முறையில் அரசமகளிர் சந்ததியைப் பெறுவதே சகஜமானது!'' என்று கூறி, இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினார்.

பீஷ்மர் கூறிய வார்த்தைகளால் யோஜனகந்தி மனத்தெளிவு பெற்றாள். அத்தெளிவோடு, ''செல்வனே!

முன்பு ஒருசமயம் நான் சூரியனின் புதல்வியாகிய யமுனையின் கரையிலே நடந்து சென்றேன். அப்போது அங்கிருந்த பராசரன் என்னும் முனிவர் தமது வம்ச விருத்திக்காக ஒரு மகனைப் பெறுவதற்கு எண்ணினார். அதனால் அவர் என்னையழைத்து, மீன் வயிற்றில் பிறந்ததனால் இயற்கையாக என்மேல் வீசிய புலால் வாடையை நீக்கினார். அதற்குப் பதிலாக ஒரு யோஜனைத் தூரம் மணம் பரப்பக் கூடிய நறுமணத்தை என் உடல் பெறும்படிச் செய்தார். பிறகு அவர் யமுனைக் கரையில் பிறருக்குத் தெரியாதபடி பனியால் என்னையும் தம்மையும் மறைத்துக் கொண்டு என்னோடு கூடினார். பராசரரோடு கூடி நான் அனுபவித்த இன்பத்தால் – அம்முனிவர் கருணையினால் இடையில் முச்சிப்புல் நாணும், மார்பில் வெண்புரி நூலும், ஒளிவீசும் பொன்போன்ற நிறங்கொண்ட சடையுமாகத் தவத்தையே செல்வமாகக் கொண்ட வியாசமுனிவன், அரணிகட்டையில் தோன்றிய நெருப்புப் போல என் வயிற்றிலிருந்து பிறந்தான். பிறந்த அந்த மகன் என்னைத் தலைதாழ்த்தி வணங்கி, ''அம்மா! நான் எப்போதாவது வர வேண்டும் என்று நீ விரும்புவாய். அப்படி நீ விரும்பிய கணத்திற்குள் நான் உன் அருகே வந்து நிற்பேன்!'' என்றான். பிறகு பராசர முனிவர் என்னை மீண்டும் கன்னிகையாக்கிவிட்டு, தம் மகன் வியாசனுடன் போய் விட்டார். மகனே! இது முன்பு நடந்த கதை. இப்போது கணவனையிழந்து செயலற்றுப் போயிருக்கும் உன் தம்பியின் மனைவிமார்களிடம் அந்த வியாசன் வந்தானானால் என் எண்ணம் பலிக்கும்!'' என்று சொன்னாள் யோஜனகந்தி.

மேலும் அவள் பீஷ்மரை நோக்கி, ''மைந்தனே! இன்னும் நான் சொல்வதைக் கேள். நான் இப்படி நினைக்கின்றேன். உன் தம்பியாகிய அந்த வியாசன் என் கட்டளையை மறுத்துச் சொல்ல மாட்டான். இந்தக் காரியம்— இந்த வழி உன் மனத்துக்கு ஏற்றதாகத் தெரிகிறதா? இல்லையா? உன் மனத்தில் இருப்பதை உண்மையாக அப்படியே சொல்!'' என்று கேட்டாள்.

அதற்கு பீஷ்மர், ''அன்னையே! நீங்கள் இப்போது சொல்வது என் மனத்துக்கு ஏற்றதாகவே படுகிறது'' என்று சொல்லி, தாயிடம் விடைபெற்று அங்கிருந்து சென்றார்.

பீஷ்மர் தன் வார்த்தைகளைக் கொண்டாடி அங்கிருந்து போன பின்பு, யோஜனகந்தி தன் மனத்தில் தாய்ப்பாசம் பெருக வியாசரை நினைத்தாள். உடனே வியாசர் தாயின் மனமகிழும்படி அவள்முன் வந்து தோன்றினார்!

வியாசமுனிவர் தமது நெற்றியில் பூசிய விபூதியினால் யோஜனகந்தியின் பாதப் புழுதிகள் போகும்படி தலைபட வணங்கினார். சடாமுடியோடு விழுதுகள் விட்ட ஆலமரம் போல் தோன்றிய வியாசரின் முகத்தை நோக்கி அவள், ''மகனே! இந்தக் குருகுலத்தைக் கேடு சூழ்ந்து கொண்டது. உனது அருளால் அந்தக் கேட்டை நீக்க வேண்டும்!'' என்று சொன்னவள், தன் எண்ணத்தை அவருக்கு விளக்கினாள்.

தாயின் வார்த்தையை அப்படியே ஏற்றுக் கொண்டு வியாசர், அவள் எண்ணப்படியே நடப்பதாக ஒப்புக் கொண்டார். பின்பு அவர், ''தாயே! கருதரிப்பதற்கு ஏற்றது வசந்தகாலமே. அந்தச் சரியான நேரத்தில் அப் பெண்களுடன் நான் சேருவேன்!'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

யோஜனகந்தி அதிக மகிழ்ச்சியடைந்தாள். அம்மகிழ்ச்சியோடு அம்பிகை அம்பாலிகையிடம் சென்றாள். அவர்களின் மனத்தைத் தேற்றி, தனது விருப்பத்தைக் கூறி, அவர்களையும் அதற்கு ஒப்புக் கொள்ளச் செய்தாள் யோஜனகந்தி.

வசந்த காலம் வந்தது!

கரிய இருள் சூழ்ந்த நேரத்தில் வியாசரும் வந்தார்! அப்பொழுது அம்பிகையும் அம்பாலிகையும் கணவனை எண்ணி ஏங்குகின்ற உள்ளத்தோடு பஞ்சணையில் படுத்திருந்தனர். அச்சமயத்திலே வந்து சேர்ந்த வியாசர் அவர்களை நெருங்கினார்.

அவரைக் கண்டு அம்பிகை கூசினாள். அதனால் தன்னிரு கண்களையும் அவள் இறுக மூடிக் கொண்டாள். வியாசர் அந்த நிலையிலிருந்த அம்பிகையோடு கூடி, அவளிடம் கர்ப்பத்தை உண்டாக்கிச் சென்றார்.

நேரே வியாசர் யோஜனகந்தியிடம் போய், ''அம்மா! நான் சென்றபோது அம்பிகையிருந்த நிலையினால் அவள்

வயிற்றிலே பதினாயிரம் யானை பலங்கொண்ட ஒரு ராஜகுமாரன் பிறந்தாலும், அவனது இருகண்களுக்கும் பார்க்கும் சக்தி இருக்காது!'' என்றார். (அப்படிப் பிறக்கப்போகும் புத்திரன் திருதராஷ்டிரனாவான்.)

மகனின் பேச்சைக் கேட்ட தாய் அதிக மகிழ்ச்சியடைய வில்லை. அவள் அவரிடம், ''குமாரனே! இன்னொருத்தியான அம்பாலிகையும் ஒரு மகனைப் பெற வேண்டும். அவள் வயிற்றில் பிறக்கும் புதல்வன், தாமரைக் கணவனான சூரியனைப் போலவும் சந்திரனைப் போலவும் அறிவோடும் அழகோடும் விளங்க வேண்டும். அவனே இந்தப் பூமியை வெண்கொற்றக் குடையின் கீழ் அரியணையில் அமர்ந்து அரசாட்சி செய்ய வேண்டும். அத்தகைய மகனை நீ அம்பாலிகையிடம் கருதரிக்கச் செய்!'' என்றாள்.

தாயின் வார்த்தைப்படியே செய்ய வியாசர் உடனே அம்பாலிகையிடம் சென்றார். அவள் தன்னருகே வந்த வியாசரைக் கண்டு நாணம் அடைந்தாள். அந்த நாணத்தினால் வருந்தி அஞ்சி உடல் வெளுத்தாள். அந்நிலையோடிருந்த அம்பாலிகையிடம் வியாசர் கலந்து, அவளைக் கருதரிக்கச் செய்தார்.

பிறகு வியாசர் தாயிடம் மீண்டும் சென்று, ''அன்னையே! அம்பாலிகையோடு நான் கலந்தபொழுது அவளிருந்த நிலையால், அவள் வயிற்றில் இந்தப் பூமி முழுவதையும் தான் ஒருவனாகவே ஆளக்கூடிய வீரமகன் ஒருவன் பிறப்பான். மயிலிறகின் அடிபோல் வெளுத்த பற்களையுடைய அம்பாலிகைப் பெற்றெடுக்கும் அம்மகன், நான் அவளோடு கூடியபொழுது அவள் கொண்ட மருட்சியினால் உடல் முழுதும் வெளுத்திருப்பான்'' என்றார். (அப்படிப் பிறக்கப் போகும் புத்திரன் பாண்டு ஆவான்.) பிறகு தாயிடம் விடைபெற்று தேவன் போல் கணப்பொழுதில் அங்கிருந்து வியாசர் மறைந்தார்.

வியாசமுனிவரால் கருதரித்த அம்பிகையும் அம்பாலிகையும் உரிய காலத்தில் பதினாயிரம் யானை பலம் கொண்ட திருதராஷ்டிரனையும், எப்படிப்பட்ட பகை வரையும் தனது காலடியில் வணங்கச் செய்யும் வீரம் வாய்ந்த பாண்டுவையும் பெற்றெடுத்தார்கள்.

யோஜனகந்தி என்னும் சத்தியவதி தனது பேரக் குழந்தைகளைக் கண்டாள். அம்பிகை குருட்டுமகனையும், அம்பாலிகை நல்லமகனையும் பெற்றதை எண்ணி உள்ளம் கலங்கினாள். அம்பிகை குருடில்லாத மகன் ஒருவனைப் பெற்று மகிழ வேண்டும் என்று நினைத்தாள். அதனால் அவள் மீண்டும் வியாசரை நினைத்தாள்.

தாயின் நினைவால் வியாசர் உடனே அவள் முன் வந்தார். மகனைக் கண்டு மகிழ்ந்தாள் சத்தியவதி. பின்பு அவரிடம் தன் எண்ணத்தை முழுமையாகத் தெரிவித்தாள்.

சத்தியவதியின் மனக்கருத்தை அறிந்து கொண்ட வியாசர், அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு அம்பிகையின் படுக்கைக்குச் சென்றார். அங்கு வந்த அம்பிகை, தன் படுக்கையில் வியாசர் இருப்பதைக் கண்டாள். அவரது எண்ணத்தை அறிந்தாள். அதனால் அவள் கூசி தன்னைவிட அழகான தன் தோழி ஒருத்தியை அப்படுக்கைக்கு அனுப்பினாள். வியாசர் வந்த தோழிப் பெண்ணைப் படுக்கையிலே, நறுமணம் வீசும் அவளது கொங்கைகள் தமது மார்பிலே நன்கு அழுந்தும்படி அணைத்தார். காமசாஸ்திரம் கூறும் முறைப்படி அவளை அணைத்த வியாசர், தேவேந்திரன் அனுபவிக்கும் காம இன்பத்தை அடைந்தார். அந்த இன்பம் பூரணமாகும்படி அவளோடு மனமும் உடலும் உணர்ச்சியால் ஒன்றாகக் கலந்தார்.

வியாசரின் உடலுறவால் அந்தத் தோழிப்பெண் கருதரித்தாள். உடனே வியாசர் அந்த இரவிலேயே தாயிடம் போய், ‘‘அம்மா! அம்பிகை என்னோடு சேரவில்லை. அதற்குப் பதிலாக அவள் தன் தோழியை அனுப்பினாள். தான் முன்பு செய்த தவத்தினாலும், தேவர்களிடம் பெற்றுள்ள வரத்தினாலும் அவள் என்னோடு கலந்தாள். அதனால் அவள் தன் வயிற்றிலே அறக்கடவுளான யமன் வந்து பிறக்கும் பதவியைப் பெற்றாள். அவளிடத்தில் பிறக்கும் புதல்வன் கொடிய ஆயுதங்களைக் கொண்டு போர் செய்வதில் வீரனாவான். அவன் விதுரன் என்னும் பெயரோடு சிறப்பாக விளங்குவான். தாயே! இனி எனது சம்பந்தத்தினால் வாரிசு பெறும் ஆசையை விட்டுவிடுங்கள்!’’ என்று கூறி அவளிடம் விடைபெற்று காட்டுக்குச் சென்றார்.

முனிகுமாரரின் வார்த்தைப்படியே தோழிப்பெண் விதுரனைப் பெற்றாள். அவ்விதுரனும், திருதராஷ்டிரனும், பாண்டுவும் பீஷ்மரிடம் அரசர்க்கு உண்டான போர்க் கலைகளையெல்லாம் கற்றார்கள். அப்படிக் கற்று அவர்கள் யானை ஏற்றத்திலும், குதிரை ஏற்றத்திலும், தேர் ஏற்றத்திலும், வில்லை வளைத்து குறிபார்த்து அம்பு விடுவதிலும் கைதேர்ந்து விளங்கினார்கள்.

நல்ல நாள் பார்த்து பீஷ்மர் எட்டுத்திசையில் உள்ளவர்களும் வந்து வணங்கும்படி திருதராஷ்டிரனுக்கு முடிசூட்டி அரசனாக்கினார். அவனுடைய சேனாதிபதியாக பாண்டுவையும், அமைச்சனாக விதுரனையும் நியமித்தார்.

திருதராஷ்டிரனுக்கு காந்தார தேசத்து மன்னன் சுபலனின் மகள் காந்தாரியை மணம் செய்விக்க எண்ணினார் பீஷ்மர். தமது எண்ணத்தைத் தூதுவர்கள் மூலம் சுபலனுக்குத் தெரிவித்தார். சுபலன் அதுகேட்டு மகிழ்ந்து, காந்தாரிக்கு அதைக் கூறினான். அப்போது காந்தாரியிடம் அவள் உறவினர்கள், ''திருதராஷ்டிரன் குருடன்!'' என்றார்கள்.

அருந்ததி போல் கற்புக்கரசியான காந்தாரி அதற்கு, ''கடவுளால் கொடுத்த வரன் இது!'' என்று சொல்லி மகிழ்ந்தாள்.

மேலும் அவள், ''எனக்கு வரப்போகும் கணவர் பார்வையில்லாதவர். அதனால் இனி நானும் கண்களால் இவ்வுலகை பார்க்கமாட்டேன்!'' என்று, தனது கண்களைப் பொற்பட்டத்தால் கட்டி மறைத்துக் கொண்டாள்.

திருமணத்துக்கு குறித்த நன்னாளில் சுபலனும், அவன் மகன் சகுனி முதலியோரும், முனிவர்களும் திருமணத்துக்கு வேண்டிய பொருள்களைச் சித்தம் செய்து, வேதவிதிப்படி காந்தாரிக்கும் திருதராஷ்டிரனுக்கும் திருமணத்தைச் செய்து முடித்தார்கள்.சந்திரனுக்கு உரோகிணி போல திருதராஷ்டிரன் மணந்த பல மனைவியர்களுள் காந்தாரி சிறப்போடு விளங்கினாள்.

இது இப்படியிருக்க, யதுகுலத்து அரசன் சூரனின் மகள் பிரதை, பலரும் போற்றும்படி கலைகளால் சரஸ்வதியையும், அழகால் லக்ஷ்மியையும், கற்பால்

அருந்ததியையும், பொறுமையால் பூமாதேவியையும் போல விளங்கியிருந்தாள். அவள் குந்தி போஜனுக்கு சுவீகாரப் புத்திரியாகி அவன் வீட்டில் வளர்ந்து வந்தாள். அதனால் அந்தப் பிரதை, குந்தி என்று எல்லோராலும் மகிழ்ச்சியோடு அழைக்கப்பட்டாள்.

குந்தி விளையாட்டுப் பருவத்தில் இருந்தபோது ஒருநாள் துருவாச மாமுனிவர் குந்திபோஜன் மாளிகைக்கு வந்தார். வந்த முனிவரை வணங்கிய குந்திபோஜன், பின் மகளைப் பார்த்து, ''இம்மாமுனிவரை உபசரித்து வாழ்வாயாக!'' என்றான்.



தந்தையின் கட்டளைப்படி அதுமுதல் குந்தி அம்மானை ஆடுவதையும், ஊஞ்சலாடுவதையும், தண்ணீரில் ஓரியாடுவதையும் மறந்தாள். முனிவர் சொற்படி அவருக்குத் தேவையான உபசரணைகளைச் செய்தாள். அப்படி முகம் சுளுக்காது மகிழ்ச்சியோடு பன்னிரண்டு மாதங்கள் நெஞ்சு பூராவும் கோபமுள்ள துருவாச முனிவருக்கு அவள் பணிவிடை செய்தாள்.

குந்தியின் உபசரிப்பால் துருவாசர் மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியோடு அவர் அவளைத் தம்மருகில் அழைத்து, "பெண்ணே! எனது கட்டளையை சிரமம் என்று எண்ணாது எல்லாவற்றையும் செய்தாய். உன்னைப் போல் உபசரிப்பவர் இந்தப் பூமியில் யாருமில்லை. ஆதலால் உனக்கு ஒரு வேத மந்திரம் சொல்கிறேன். கேள்!" என்று கூறி, அவள் காதில் அதைச் சொன்னார்.

மீண்டும் அவர் அவளிடம், "நீ இந்த மந்திரத்தைச் சொல்லி, தேவர்களில் யார் யாரை அழைக்கிறாயோ, அவரவர்கள் கணப்பொழுதில் உன்னிடம் வருவார்கள். வந்தவர்கள் உன்னைச் சேர்ந்து, அவர்களின் அம்சமாக ஒரு மகனை உன்னிடத்தில் பிறக்கச் செய்வார்கள். நான் தவத்தால் அருமையாக அடைந்த வேதப்பலன், இப்பிறவியில் தானாகவே உனக்கு வந்து சேர்ந்தது!" என்று சொல்லி, தவம் செய்ய காட்டுக்குப் போனார்.

முனிவர் சென்றதும் குந்தி தனது அந்தப்புரம் சென்றாள். துருவாசர் சொல்லித் தந்த மந்திரத்தின் மகிமையைச் சோதித்துப் பார்க்க எண்ணினாள் குந்தி. கன்னிப் பெண்ணாகிய அவள் அதற்காக நிலாமுற்றத்துக்குச் சென்றாள். சூரியன் அப்போது உதயகாலத்தில் இருந்தான். குந்தி அவனை நினைத்து மந்திரத்தைச் சொன்னாள். மறுகணம் மலரில் வண்டு மொய்ப்பது போல் அவள்முன் சூரியன் வந்தான்.

உடம்பிலே பட்டுப்பீதாம்பரமும், காதுகளில் கவசக் குண்டலங்களும், தலையிலே இரத்தனகிரீடமும், தோள்களில் பொன்வளையங்களும் கொண்டு பவழநிற மேனியோடு அங்கு வந்த சூரியன், பதுமினி என்னும் உத்தமசாதிப் பெண்ணாகிய குந்தியின் முகம் மகிழும்படி, அவளை அணைத்தான்.

அன்னம் போல் நடக்கும் குந்தி, தன்னைச் சூரியன் தொட்டதும் உடம்பு நடுங்க நாணம் கொண்டு அச்சத்தோடு விலகி நின்று, "நான் கன்னி! என்னைத் தொடாதீர்! பெண்களின் கற்பை நீர்அறிவீர், இல்லையா?" என்று கேட்டாள்.

அதுகேட்டு சூரியன் அவளைக் கோபித்து, "பெண்ணே! பின் எதற்கு நீ என்னை அழைத்தாய்?" என்று பதிலுக்கு வினவினான்.

மீண்டும் அவன் அவளைப் பார்த்து, ''என் மனைவியர்களான சாயாதேவியும் உஷாதேவியும் அறியாத படி நான் உன்னிடம் வந்திருக்கிறேன். அப்படியிருக்க நீ அச்சத்தால் என்னோடு இன்பங்கொள்ள மறுத்துவிட்டாய். நீ இப்போது மறுத்ததற்காக இந்த மந்திரத்தை உனக்குச் சொல்லிக் கொடுத்த துருவாசனை சபித்துவிடுவேன். பெண்ணே! என் சாபத்தால் உன் குலமும் அழிந்து போகும்!'' என்றவன், மனம் கொதித்து மேலும் அவளிடம், ''உன் தந்தை கோபிப்பானே என்று அஞ்சுகிறாயா? அந்த அச்சம் வேண்டாம். நல்வினை உன்னிடம் என்னை வரச் செய்தது என்று நினைத்து, மனப்பூர்வமாகச் சம்மதித்து என்னோடு இன்பம் கொள். அதனால் உனக்குப் புகழ் வரும்படியான சிறந்த வீரமகன் ஒருவன் பிறப்பான். அம்மகன் என்னைவிட உலகத்தவர் வணங்கிப் போற்றும் பெருமையைப் பெறுவான்!'' என்றான்.

ஒளிக்கெல்லாம் அதிபதியான சூரியன் அப்படிச் சொன்னதும், குந்தி தன் அச்சத்தையும் நாணத்தையும் கைவிட்டு மகிழ்ந்தாள். பின் தனது சம்மதத்தைக் கண்களின் வழியாக அவனுக்குத் தெரிவித்தாள். புன்சிரிப்போடு தனது இடது தோள் துடிக்க சூரியனை அணைத்துக் கொண்டு மலர்கள் தூவிய மஞ்சத்தில் சேர்ந்தாள்.

சூரியன் மலர் போன்ற மென்மையான குந்தியின் கொங்கைகளைத் தன் மார்போடு நன்கு அழுத்தி, அவளைத் தழுவி, காமவின்பத்தின் எல்லையை அவளுக்குக் காட்டினான்.

குந்தியோடு இன்பம் கொண்ட சூரியன், அவளுக்குத் தனது அம்சமான புதல்வனைக் கருதரிக்கச் செய்தான். பின் மீண்டும் அவளைக் கன்னியாக்கிவிட்டு கனவுபோல் அவன் கணத்தில் மறைந்தான்.

சூரியனால் கருவுற்ற குந்தி பின்னும் அதிகமான அழகு பெற்றாள். கருமுதிர்ந்த , காலத்தில் சமுத்திரக்கரை சிந்தாமணியைப் பெற்றது போல், குந்திக்கு கவச குண்டலத்துடன் வீரமகன் ஒருவன் பிறந்தான்.

பிறந்த மகனைப் பார்த்த குந்தி மகிழ்ந்தாள். அதேசமயம் கன்னியான தனக்கு ஒருமகன் என்றால் உலகம்

பழிக்குமே என்று பயந்தாள். உடனே அவள் தன் அந்தரங்கத் தோழியின் மூலம் குழந்தையைப் பெட்டியில் அடைத்து கங்கை வெள்ளத்தில் விட்டாள்.



கங்கை என்னும் பகீரதி பெட்டியினுள் இருந்த குழந்தையைத் தனது அலைக்கரங்களால் மெல்ல மெல்லத் தாலாட்டிச் சுமந்து அழைத்துச் சென்று, அன்றைக்கே கொடிய அம்புகளுடன் வில்லேந்திய தேர்ப்பாகர் தலைவனான அதிரதனின் நகரத்தில் சேர்த்தாள்.

அப்போது நதி வெள்ளத்தைக் காண்பதற்காக அங்கு வந்திருந்த அதிரதனும், அவன் மனைவி ராதையும் வெள்ளத்தில் மிதந்து வந்த பெட்டியைக் கண்டார்கள். உடனே அதிரதன் வெள்ளத்தில் நீந்திச் சென்று பெட்டியை எடுத்துக் கொண்டு கரைக்கு வந்தாள். கணவனும் மனைவியும் பெட்டியினுள் என்ன இருக்கும் என்று ஆவலோடு திறந்து பார்த்தார்கள். பெட்டியினுள் குழந்தை இருப்பதைக் கண்டு வியப்புற்று அகமகிழ்ந்தார்கள். குழந்தையைக் கொண்டாடி தங்களோடு எடுத்துச் சென்று, கர்ணன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்தார்கள்.

கர்ணன் வளர்ந்து காளைப்பருவம் அடைந்தான். வீரனுக்குரிய போர்ப்பயிற்சியும் வில்வித்தையும் கற்க

எண்ணினான் கர்ணன். ஆகவே, அவன் அந்தணன் போல் வேடமிட்டுக் கொண்டு பரசுராமரை வேண்டி, அவரிடம் அவ்வித்தைகளைக் கற்றுத் தேர்ந்து, எல்லோரும் தன் பாதங்களில் விழுந்து வணங்கும் சிறப்போடு வீரமும் அழகும் பெற்றான்.

கர்ணன் அப்படியிருக்க, அவனைப் பெற்ற கன்னியான குந்திக்குச் சுயம்வரம் நடத்த விரும்பினான் அவளைப் பெற்ற சூரன். அவன் தனது எண்ணத்தை எல்லா மன்னர்களுக்கும் ஓலை எழுதித் தெரிவித்தான். அதன்படி சுயம்வரத்தன்று, தங்களுக்கு அவள் மணமாலை சூட்டுவாள் என்ற எண்ணத்தோடு மன்னர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். பாண்டுவும் சுயம்வரத்துக்கு வந்தான்.

அல்லிமலர் சந்திரனை மட்டுமே கண்டு முகம் மலர்வது போல, மண்டபத்தில் உட்கார்ந்திருந்த அரசர்களில் பாண்டுவைக் கண்டு குந்தி மனமகிழ்ந்து முகம் மலர்ந்தாள். தனது கையில் வைத்திருந்த மணமாலையை அவனுக்குச் சூட்டினாள்.

பின்பு பாண்டுவின் வீரத்தையும் அழகையும் உணர்ந்த மத்திரதேசத்து அரசன் ருதாயன், தனது மகள் மாத்திரியை அவனுக்கு மணம் செய்து கொடுத்தான். ருதாயனின் மகன் சல்லியன் தனது தங்கை பாண்டுவை மணந்தது கண்டு மகிழ்ந்தான்.

ஒருநாள் பாண்டுமன்னன் வேட்டையாட விரும்பி தன் மனைவியர்களோடு இமயமலையின் அடிவாரத்துக்குச் சென்றான். காட்டிலே அவன் கலைமானையும், காட்டுப் பசுவையும், பன்றியையும், புலியையும், கரடியையும், யாளியையும், யானையையும், சிங்கத்தையும் அம்பினால் வேட்டையாடினான். அதனால் அவன் களைப்படைந்தான். பாண்டுவின் களைப்பை வாயுபகவான் தனது மென்மையான காற்றினால் போக்கினான்.

பின்னர் பாண்டு மீண்டும் வேட்டையாட விரும்பிய போது, அவனுக்கு முன்னே ஆணும் பெண்ணுமாக இரண்டு மான்கள் கூடிக் குலாவின. உடனே பாண்டு வில்லில் அம்பைத் தொடுத்து, ஆண்மான்மேல் எய்தான். அவனது அம்பினால் உயிர் போகும் நிலையிலிருந்த ஆண்மான் மறுகணம் முனிவனின் உருவமாக மாறியது.



மானிலிருந்து தோன்றிய கிந்தமன் என்னும் அம்முனிவர் பாண்டுவை நோக்கி, "மன்னா! உமா தேவிக்குத் தனது ஒரு பாகத்தைக் கொடுத்த சிவபெருமானால் முன்பு அழிந்து, பின் அவனாலேயே உயிர் பிழைத்த மன்மதன் தன் மலரம்புகளை என்மேல் தொடுத்தான். நான் அதிகமான காம சுரத்தைப் பெற்றேன். அதனால் நானும் என் மனைவியும் மானுருவம் கொண்டு கூடிக் காமச்சுகத்தை அடைந்தபோது, உனது அம்புகளால் நான் உயிர் தளர்ந்து விழுந்தேன். ஆகவே, என்னைப் போலவே நீயும் காமஇன்பத்தை அனுபவிக்கும்போது இறப்பாய்!" என்று சொல்லி இறந்தார்.

கணவர் கிந்தமன் இறந்ததும், அவரது மனைவி தீயில் விழுந்து இறந்து மானுருவும் நிங்கினாள் .

கணவனும் மனைவியுமாக இருவர் தன் புத்தியற்ற செயலால் இறந்ததைக் கண்டு பாண்டுராசன் அதிக வருத்தம் அடைந்தான். தனக்குப் புத்திரனும் பிறக்கமாட்டான் என்பதை எண்ணி மனம் நொந்தான். இனி, தான் வாழ்க்கையில் கரைசேருவது செய்யும் தவத்தால்தான் என்று முடிவெடுத்தான். அம்முடிவோடு மனைவியர்களை அழைத்துக் கொண்டு தபோவனம் சென்றான்.

அங்கு சென்று பாண்டு தனது பட்டாடைகளையும் தங்கநகைகளையும் கிரீடத்தையும் அகற்றிவிட்டு, தவக்கோலம் கொண்டு தேவராலும் செய்யமுடியாத பெருந்தவத்தைச் செய்தான். அதனால் அவன் குரோதம்,

லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலிய மன விரோதிகளைக் கொன்று ஞானஸ்தனானான்.

அப்படிப் பெரும் ஞானத்தோடு பாண்டு தபோவனத்தில் இருந்தபோது ஒருநாள் அவன், தனக்குப்பின் சந்ததி வேண்டுமே என்று எண்ணினான். புத்திரப் பாக்கியம் இல்லாமல் இறந்தால் சுவர்க்கமும் கிடைக்காதே என்று கவலை கொண்டான். அதனால் குந்தியைப் பார்த்து, ''மாதேவி! வியாசமுனிவரின் வரத்தால் காந்தாரி, என் தமையர் திருதராஷ்டிரரோடு சம்பந்தப்பட்டு நூறு பிள்ளைகளைப் பெறுகின்ற கருவைத் தரித்தாள். சொள்ளொழுக மழலைப் பேசிக் கொண்டு நம்மோடு தொடர்ந்தோடி வந்து தோள்மேல் ஏறி விளையாடும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இல்லறத்தின் இனிமை ஏது? அவர்களுடைய வாழ்க்கை என்னவாகும்? நாள்தோறும் உண்மைப்பேசியும், தானதருமம் செய்தும், விரதங்கள் இருந்தும், யாகம் புரிந்தும் வாழ்ந்தார்கள் என்றாலும் புத்திரப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு நல்லகதி கிடைக்காது. அவர்களுக்குச் சுவர்க்கமும் இல்லை. பெண்ணே! குழந்தையில்லாதவர்கள் பிதிர் காரியங்களைச் செய்யும் வல்லமை இல்லாதவர்களாவார்கள். நான் செய்த தீவினையால் குழந்தை இல்லாத துன்பம் அடைந்தேன். நீ மனம் வைத்து தேவர்களாலோ முனிவர்களாலோ பிள்ளைப் பெற்றால், நான் நற்கதியடைவேன். இல்லறத்தாருக்கு இன்பமும், நல்வாழ்க்கையும், புகழும் கொடுக்கக் கூடியவர் அவர்களின் மனைவியரைத் தவிர வேறு யார்? எனவே நான் சொன்னபடி முனிவர்களையோ தேவர்களையோ கூடி குழந்தை பெற்று, நான் சுவர்க்கம் போவதற்குச் செய்!'' என்றான் பாண்டுமன்னன்.

கணவனின் பேச்சைக் கேட்டதும் குந்தி உயிர் போனது போல் நாணங் கொண்டாள். அந்த வேதனை உள்ளத்தை அரித்தெடுக்க அவள், ''சுவாமி! பழி வார்த்தைகளை எப்படிச் சொல்லிவிட்டீர்கள்? ஆற்று வெள்ளம் சிறுகுட்டையில் தேங்கி நின்றால்தான், கற்புள்ள பெண்ணின் மனம் கணவனைவிட்டு மாற்றான்மேல் செல்லும்!'' என்றாள்.

ஆனால் பாண்டு கேட்கவில்லை. மீண்டும் மீண்டும் தன் விருப்பப்படிச் செய்யுமாறு அவளை வற்புறுத்தினான்.

கணவனின் வற்புறுத்தலை மீறமுடியாமல் கடைசியில் குந்தி, கர்ணனைப் பெற்றதைச் சொல்லாமல், தான் துருவாச முனிவரால் பெற்ற மந்திரத்தின் சிறப்பை மட்டும் அவனிடம் தெரிவித்தாள்.

குந்தி கூறிய வார்த்தைகளைக் கேட்டு பாண்டு மன மகிழ்ந்தான். உடனே அம்மந்திரத்தின் மூலம் பிள்ளையைப் பெறும்படி அவன் குந்திக்குக் கட்டளையிட்டான்.

கணவன் கட்டளைப்படி குந்தி யமதருமனை நினைத்து மந்திரத்தைச் சொன்னாள். அக்கணமே யமதருமன் அவளிடம் வந்தான். குந்தி தன் கணவனை மனத்தில் நினைத்தபடி யமனோடு மலர்ப்படுக்கையில் கூடி இன்புற்று கருதரித்தாள்.

முகூர்த்தமும், வாரமும், நட்சத்திரமும், திதியும், கரணமும், யோகமும் மங்களகரமாகப் பொருந்த நவகிரகங்களும் நன்மை தரக் கூடிய இடத்தில் இருக்கும் நன்னாளில் குந்திக்குத் தருமர் பிறந்தார். அவர் பிறந்தபோது பெரியோர்களும், முனிபுங்கவர்களும், தேவர்களும் நன்னிதி பெற்றவர்கள் போல சிநேகத்தோடு மகிழ்ச்சி கொண்டார்கள். மங்கல நிமித்தங்கள் எங்கும் முழங்கின.

குந்தி பெற்ற மகனின் தேஜோமயமான முகத்தைப் பார்த்துப் பார்த்து பாண்டு மகிழ்ந்தான். அவன் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. உள்ளம் மகிழ்ச்சியால் கசிந்துருகியது. உடல் புளகாங்கிதத்தால் பூரித்தது. அவன் மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை.

காந்தாரி குந்திக்கு அறச்செல்வனாக தருமர் பிறந்திருக்கும் செய்தியைக் கேட்டாள். அதுதான் தாமதம். மறுகணமே அவள் பொறாமையினால் இன்னது செய்கிறோம் என்று கொஞ்சமும் நினைக்காமல், கருவுற்றிருக்கும் தன் வயிறு உள்ளே குழம்பும்படி வயிற்றைக் கல்லால் மோதினாள். அதனால் அவள் கருப்பை அறுந்து செக்கர்வானம் போல் இரத்தம் பெருக தரையில் விழுந்தது. அப்பொழுது அங்கு வந்த வியாசர் அதைப் பார்த்தார்.

உடனே அவர் சிதைந்த கருப்பையை எடுத்து நூறு சமபாகங்களாகத் துண்டித்தார். அப்போது கொஞ்சம் கோசத்தசை மிஞ்சியது. தாம் துண்டித்த நூறு

துண்டுகளையும் ஒவ்வொன்றாய் நெய் நிரம்பிய நூறு கும்பங்களில் போட்டார். பின் மிஞ்சியதை ஒரு பானையில் பெண்ணாகும்படி இட்டுவைத்தார். பிறகு வியாசர் காந்தாரியை நோக்கி, "கற்புக்கரசியே! உன் கர்ப்பம் அழிந்து விட்டது என்று நினைத்து மனம் வருந்தாதே. அதனால் அச்சம் கொள்ளாதே. உன்னிடமிருந்து விழுந்த கருப்பையை நூறு துண்டுகளாக்கிக் கும்பங்களில் இட்டுள்ளேன். மிஞ்சியதைப் பானையில் வைத்திருக்கிறேன். அவை உருவம் பெற்று தானாகவே வெளியே வரும் வரையில் கையால் அத்தசைத் துண்டுகளை நீ தொடாதே. நான் முன்பு உனக்குத் தந்த வரத்தால் அத்தசைத் துண்டுகள் நல்லுருவம் பெற்று குழந்தைகளாகப் பிறக்கும். இது தவறாது!'' என்று சொல்லிச் சென்றார்.

காந்தாரி அதுமுதல் தனது முட்டைகளைப் பாதுகாக்கும் பாம்பு போல, வியாசர் சொன்னபடி தசைத் துண்டுகள் குழந்தைகளாகும் வரையில் பரிவோடும் பாசத்தோடும் அவற்றைப் பாதுகாத்து வந்தாள்.

பாண்டு, காந்தாரி அடைந்த நிலையைக் கேள்விப் பட்டான். அதனால் மனவேகம் கொண்டான். குந்தியை நோக்கி, ''மாதரசியே! நீ இன்னும் ஒரு மகனை எனக்காகப் பெற வேண்டும்!'' என்று பலமுறை வேண்டினான் பாண்டு.

கணவனின் கட்டளையை மறுத்துப் பேச முடியாமல் குந்தி வாயுதேவனை எண்ணி மந்திரத்தைச் சொன்னாள். அக்கணமே வாயுதேவன் விரைந்தோடி வந்து அவளோடு உடலும் உள்ளமும் ஒன்றாகக் கலந்தான்!

வாயுதேவனின் சம்பந்தத்தால் குந்தி, சூரியன் நடு உச்சியில் இருக்கும் முகூர்த்தத்தில் அஞ்சனாதேவியின் மகனான அநுமனைப் போல் வலிமை கொண்ட பீமனுக்குத் தாயானாள். பீமன் பிறந்தபோது தென்றல் இனிமையாக வீசிற்று, யாககுண்டங்களில் தீ வலப்புறமாகச் சுழன்று சுவாலையுடன் எரிந்தது.

பீமன் பிறப்பதற்கு முதல்நாள் சூரியன் அஸ்தமித்த முகூர்த்தத்தில் வியாசர் தந்த வரத்தின்படி நெய்க் கும்பத்திலிருந்து காந்தாரியின் மகனாகத் துரியோதனன் பிறந்து வெளிவந்தான். அவன் பிறந்தபோது, கடல்போல்

பேரோசை எழுப்பும் மங்கலமுரசின் ஓசை நரிகளின் ஊளையால் அடங்கியது. ஹஸ்தினாபுரத்துப் பெரியோர்களின் கண்கள் ஆனந்தக் கண்ணீர்ப் பொழிவதற்குள், மேகக்கூட்டம் வானத்திலிருந்து இரத்தமழை பொழிந்தது.

துரியோதனன் பிறந்த நாளுக்கு மறுநாள் கிரகங்கள் தீங்குள்ள இடங்களில் சஞ்சரிக்கும் முகூர்த்தத்தில், தேளைக் காட்டிலும் கொடுமையான அவனது தம்பி துச்சாதனன் பிறந்தான். இப்படியே தீயவேளைகளில் துரியோதனனின் மற்ற தொண்ணூற்றெட்டு தம்பிமார்களும் அடுத்தடுத்து ஒவ்வொரு நாளாகப் பிறந்தார்கள். கடைசியாக அவன் தங்கை துச்சளைப் பிறந்தாள்.

தனக்கு நூறு புதல்வர்களும் ஒரு புதல்வியும் பிறந்ததால் காந்தாரி அளவில்லாமல் மகிழ்ச்சி அடைந்தாள்.

பாண்டு காந்தாரியின் மனமகிழ்ச்சியை அறிந்தான். அதனால் மீண்டும் அவன் குந்தியிடம், ''இன்னும் ஒரு மகனை எனக்குப் பெற்றுக் கொடு!'' என்று கெஞ்சினான்.

முன்போலவே கணவனின் பேச்சை மறுக்கச் சக்தியில்லாது, குந்தி தேவேந்திரனை நினைத்து மந்திரத்தைக் கூறினாள். தேவேந்திரன் அக்கணமே வந்து அவளோடு கலந்தான்.

தேவேந்திரனின் கலப்பால் பங்குனி உத்திரத்தில் அர்ச்சுனன் குந்திக்குப் பிறந்தான். அப்போது தேவர்கள் கற்பகப் பூக்களைத் தூவி ஆனந்தக் கூத்தாடினார்கள். முனிவர்கள் மங்கல வேதங்களைப் பாடினார்கள். மங்கல முரசங்கள் ஒலித்தன. வலம்புரிச் சங்குகள் முழங்கின. இது நல்லப் பகற்காலம் என்று மக்கள் எல்லோரும் விரும்பி அந்தநாளைக் கொண்டாடினார்கள்.

தனக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தும் பாண்டுவுக்குக் குழந்தை ஆசை தீரவில்லை. அவன் குந்தியிடம் அந்த மந்திரத்தை மாத்திரிக்குச் சொல்லித் தரச் சொன்னான். குந்தி அப்படியே செய்தாள்.

மாத்திரி இரண்டு பிள்ளைகள் தனக்கு வேண்டும் என்று அசுவினிதேவர்களை நினைத்து, தான் அறிந்து கொண்ட மந்திரத்தைச் சொன்னாள். அக்கணமே சூரிய குமாரர்களான

அசுவினிதேவர்கள் அவளிடம் வந்தார்கள். தேவ வைத்தியர்களான அசுவினிதேவர்கள் ஒருவராகி அவளைச் சேர்ந்தார்கள்.

அசுவினிதேவர்களின் கூடலால் மாத்ரி துன்பம் சிறிதும் இல்லாமல் ஒரே சமயத்தில் இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். எல்லோராலும் கண்ணென்று போற்றப்படும் அவர்கள் நகுலன், சகாதேவன் என்று பெயர் கொண்டார்கள்.

பாண்டுவுக்குப் பிறந்த அந்த ஐந்து புதல்வர்களும் செவிலித்தாய்மார்களின் மடியிலும், தந்தையின் மார்பிலும், தாய்மார்களின் கையிலுமாக வளர்ந்தார்கள். அவர்கள் நடக்கும் பருவத்தில் சிங்கத்தோடும், புலியோடும், யானைக் குட்டியோடும், மானோடும் ஓடி விளையாடினார்கள்.

சிறுவயதிலேயே வீரத்தோடு விளங்கிய குமாரர்கள் தக்க வயது அடைந்ததும் பூணூல் போட்டுக் கொண்டார்கள். அவர்கள் அறுபத்து நான்குக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தபோது காளைப் பருவம் அடைந்தார்கள்.

பாண்டுராசனின் குமாரர்கள் கற்ற கல்வி அவர்களுடைய மார்பைக் காட்டிலும் பெரியது. அவர்கள் பெற்ற புகழ் அவர்களது அழகைக் காட்டிலும் சிறந்தது. அவர்கள் கொண்ட வெற்றி அவர்களது தோளைக் காட்டிலும் உயர்ந்தது. அவர்கள் கொண்ட சத்தியம் அவர்களது கண்ணைக் காட்டிலும் பெருமையுள்ளது. அவர்கள் செய்த தருமம் பூமியைக் காட்டிலும் பரந்தது.

இவ்வாறு ஐந்து குமாரர்களும் சிறப்போடு விளங்குகையில்—

பிரிந்திருக்கும் காதலர்கள் அதிகமாக மனம் உருக வசந்தகாலம் வந்தது. மன்மதன் முடிசூடித் தன் செங்கோலைச் செலுத்தத் தொடங்கினான்.

சந்திரவொளி படிந்த சோலையெல்லாம் வண்ண மலர்களைச் சுமந்தன. அப்பூக்களிலெல்லாம் வண்டுகள் தேன் உண்டு மயங்கின. இந்திரஜாலம் போல் அசோக மரங்களும், கொன்றை மரங்களும், செண்பகமரங்களும் பூக்களைத் தரையில் சிந்தின. மாமரச் சோலைகள் மஞ்சள் வண்ணப் பூக்களால் சிரித்தன. அம்மாஞ்சோலைகளில் எல்லாம் குயில்கள் கீதம் படித்தன.

இளவேனில் காலம் பாண்டுவிடம் உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. மன்மதனின் மலர்க்கணைகள் அவன் உடலை விரகதாபத்தால் வதைத்தன.

பாண்டு மாத்திரியின் அழகைக் கண்டான். அவள் முகத்தில் மின்னும் புன்சிரிப்பைக் கண்டான். அவன் உடலும் உள்ளமும் காமஇன்பத்தைச் சுகிக்கத் துடித்தன. அவன் கிந்தம முனிவரின் சாபத்தை மறந்தான். அதனால் மாத்திரியிடம் மோகாவேசம் கொண்டான்.



மாத்திரியை அழைத்துக் கொண்டு பாண்டு ஒரு சோலைக்குச் சென்றான். ஆணும் பெண்ணுமாக இருகுயில்கள் அச்சோலையில் கூடி இன்புற்று, அதனால் பரவசமாகிக் காதல் கீதம் பாடின. மாத்திரியும் பாண்டுவும் அதுகேட்டு உள்ளமும் உடலும் காமத்தால் உருக மாதவிபந்தலுக்கு ரதியும் மன்மதனும் போலச் சென்றார்கள்.

அங்கே அவர்கள் மன்மதப் பாடத்தைப் படிக்கத் தொடங்கினார்கள். பூப்படுக்கை அழகாகவும் கொங்கைகளிலே மயிர்க்கூச்சம் அதிகமாகவும், உள்ளமும் உடலும்

காமப்பரவசமாகி மாத்திரி, சந்தனம் மணக்கும் பாண்டுவின் மார்பிலே தவழ்ந்தாள்.

பாண்டுவும் மாத்திரியும் அப்படிக் கூடி அதிக இன்பத்தைப் பெறும் வேளையில், கிந்தம முனிவரின் சாபத்தால் பாண்டு இறந்தான்!

கிளிமொழி பேசும் மாத்திரியின் ஆம்பல் இதழ் தந்த அமுதத்தைக் குடித்து பாண்டுமன்னன் இறந்துவிட்டானே! இது என்ன ஆச்சர்யம்! ஆமாம், தீவினையால் அமுதமும் விஷமாகும். நல்வினையால் விஷமும் அமுதமாகும்!

பாண்டுவின் மார்பிலே காதல் மயக்கத்தில் கிடந்த மாத்திரி, அவன் இறந்துவிட்டதை உணரவில்லை. அவன் காதல் மயக்கத்தால் களைப்புற்று தூங்குவதாகவே அவள் எண்ணியிருந்தாள். தன் காதல் மயக்கம் குறைந்த போதுதான் மாத்திரிக்குச் சந்தேகம் எழுந்தது. "இவ்வளவு நேரமாகியும் இவர் மூச்சுவிடவில்லையே. கண்களைத் திறக்கவில்லையே. மயக்கமும் தெளியவில்லையே!" என்று எண்ணி, "இவர் இறந்துவிட்டாரோ?" எனத் தன் சந்தேகத்துக்கு முடிவு கண்டாள். மறுகணமே மாத்திரி 'கோ' வெனக் கதறி அழுதாள்.

மாத்திரியின் கதறல் கேட்டு குந்தி, கிந்தமரின் சாபம் பலித்துவிட்டதோ என்ற சந்தேகத்துடன் அங்கே அவசர அவசரமாகத் தன் புதல்வர்களோடு ஓடி வந்தாள். கணவன் மாண்டு கிடப்பதைக் கண்டாள். உடனே தனக்கு ஏற்பட்டுவிட்ட அமங்கலத்தையும், காமச்சுகத்தால் கணவன் இறந்ததையும் எண்ணி எண்ணிக் கதறினாள்.

குந்தியின் அழுகையைக் கேட்டு முனிவர்கள் அங்கு வந்தார்கள். பாண்டு மாண்டு கிடப்பதையும், மாத்திரியும் குந்தியும் குமாரர்களும் துக்கம் மீற ஆற்றாது அழுவதையும் கண்டார்கள். அதனால் ஆசையும் பற்றும் துறந்த அம்முனிவர்களும் மனம் நைந்துருகினார்கள்.

கடைசியாக முனிவர்கள் குந்திக்கும் மாத்திரிக்கும் சமாதானம் சொல்லித் தேற்றிவிட்டு, புதல்வர்களைக் கொண்டு பாண்டுவுக்கு அந்திமக் கடன் செய்து முடித்தார்கள். அப்போது மாத்திரி கணவனைப் பிரிந்த

துன்பத்தால் உயிர் வாழ விரும்பாது, சிதையடுக்கித் தீக்குளித்து இறந்தாள்!

தீக்குளித்த மாத்திரி கணவனுடன் சுவர்க்கம் சென்று, ஆகாசக் கங்கையிலே குளித்து, கற்பகவனத்து நிழலில் தங்கி மகிழ்ந்தாள்!

பாண்டுவும் மாத்திரியும் அப்படியாக, குந்தி தன் புதல்வர்களோடு ஆற்றில் தலைமுழுகிக் கணவனுடைய ஈமக்கடனைச் செய்து முடித்தாள்.

கணவனைப் பிரிந்த குந்தியையும், அவளது புதல்வர்களையும் கண்டு காசிப முனிவர் முதலிய சதசிருங்க முனிவர்கள் மனம் வருந்தினார்கள். பிறகு அவர்கள் குந்தியையும் குமாரர்களையும் அழைத்துச் சென்று ஹஸ்தினாபுரத்து அரண்மனையில் சேர்த்தார்கள்.

திருதராஷ்டிரன் பாண்டுவும் மாத்திரியும் இறந்ததை அறிந்து மனம் வருந்தினான். தந்தையை இழந்த குமாரர்கள் தன் பாதங்களை வணங்கியதும் அவர்களை எடுத்து அணைத்து, தான் கொண்ட வருத்தம் நீங்கி, ‘‘புண்ணியத்தால் இவ்வின்பம் பெற்றேன்'' என்றெண்ணி மகிழ்ந்தான்.

பீஷ்மரும் விதுரனும் பாண்டு இறந்த செய்தி கேட்டுத் துன்பம் தாங்காமல் கண்ணீர்விட்டார்கள். அதேசமயம் பாண்டுவின் புதல்வர்களான பஞ்ச பாண்டவர்களைக் கண்டு மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

பாண்டவர்களைக் கண்டு துரியோதனாதியர்கள் மகிழ்ந்தார்கள். அவர்களை அன்போடு தழுவிக் கொண்டு சகோதரப் பாசத்தில் ஒன்றானார்கள். பிறகு பாண்டவர்களும் கௌரவர்களும் ஒற்றுமையாக சிநேகபாவத்தோடு கூடி வளர்ந்து வரலானார்கள்.

அச்சமயத்தில் பாண்டு இறந்த செய்தி கேட்டுத் துக்கம் விசாரிக்க கிருஷ்ணனும், அவன் தந்தை வசுதேவனும், குந்திபோசனும், மற்ற உறவினர்களும் ஹஸ்தினாபுரத்துக்கு வந்தார்கள்.

கண்ணபிரானின் தாய் தேவகி, துக்கித்திருந்த குந்திக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினாள். அப்போது கண்ணனும்,

குந்தியின் மற்ற உறவினர்களும் இனி யார் அரசாள்வது என்பது பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

பின்பு கண்ணன் தருமரைப் பார்த்து, ''பூமாதேவியின் பாரத்தையும், உங்களுக்கு நேரவிருக்கும் துன்பத்தையும் நாமே தீர்த்து வைப்போம்!'' என்றான்.

இவ்வாறிருக்க, திருதராஷ்டிரனும் பீஷ்மரும் விதுரனும் துரியோதனாதியரும் வந்த உறவினர்களை அன்போடு வரவேற்று பேசினார்கள். பீஷ்மர் அவர்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார். அன்போடு அவர்களுக்கு விருந்து உபச்சாரம் செய்தார். அப்போது அவரும் திருதராஷ்டிரனும் விதுரனும் விருந்தினர்களைப் பார்த்து, ''பாண்டவர்களும் கௌரவர்களும் தனித்தனியே யமனைப் போல் வலிமையுடையவர்கள். இவர்களுக்கு முன்னே கடுமையான கொடும் போரைச் செய்வதற்கு எவருக்கும் வலிமை கிடையாது. அப்படியும் யாராவது துணிந்து இவர்களோடு போருக்கு வந்தாலும், இவர்களுக்கு உங்கள் உதவி இருக்கிறது. அருளும் இருக்கிறது. உங்கள் சம்பந்தத்தினால் இவர்களுக்குப் பெருமையும் இருக்கிறது. இவர்களின் பாரமும் உங்கள் பாரமே!'' என்று உபச்சாரம் பேசினார்கள்.

கடைசியாக ஹஸ்தினாபுரத்துப் பெரியோர்கள், வந்த விருந்தினர்கள் அவரவர் நகரம் போய்ச் சேர யானை குதிரை தேர் ஆகியவற்றைக் கொடுத்து விடைசொல்லி அனுப்பி வைத்தார்கள்.

நாட்கள் கடந்தன.

துரியோதனாதியரும் பாண்டவரும் ஒன்றாகக் கூடி விளையாடி மகிழ்ந்தார்கள். அம்மகிழ்ச்சி நாளாக நாளாகக் குறைந்து கொண்டே வந்தது. ஆம், பீமன் மட்டும் கௌரவர்களோடு அதிக ஒற்றுமை பாராட்டவில்லை. கந்துருவின் புதல்வர்களான நாகங்களைப் போன்ற துரியோதனாதியருடன் பீமன் கருடனாகத் தனித்து நின்றான்!

3. வாரணாவதநகரம்

பாண்டவர்களில் வலிமை மிகுந்த பீமனைக் கண்டு துரியோதனன் பொறாமை கொண்டான். தனக்கு அவனது வலிமை இல்லையே என்ற ஏக்கத்தால் எழுந்த பொறாமை அது. அதனால் அவன் பீமனுக்குச் சமமான வலிமையுள்ள கர்ணனைத் தனது ஆருயிர்த் தோழனாகச் சேர்த்துக் கொண்டான்.

அப்படியிருக்கும்போது ஒருநாள் பாண்டவர்களும் கௌரவர்களும் தங்களுடைய நண்பர்களுடன் கங்கையில் குதித்து விளையாடினார்கள். வெகுநேர விளையாட்டுக்குப் பின், அவர்கள் கரையேறினார்கள். பக்கத்திலிருந்த பொன்மாளிகைக்குப் போய் அறுசுவை உணவைச் சாப்பிட்டுத் தூங்கினார்கள்.

தூங்கும்போது துரியோதனன் விழித்தெழுந்தான். தூரத்தில் உறங்கிக் கொண்டிருந்த பீமனைக் கண்டு பொறாமையால் உள்ளம் வெந்தான். அந்த ஆத்திரத்தோடு பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த மாமா சகுனியையும் கர்ணனையும் எழுப்பினான். பின் அவர்களோடு கலந்து ஆலோசித்து, பீமனைக் காட்டுக் கொடியினால் இறுகக் கட்டி, கங்கையின் நடுவில் கொண்டு போய் எறிந்தான்.

கங்கையில் கட்டுகளோடு மூழ்கிய பீமன் விழித்துக் கொண்டான். உடனே தனது நிலையை அறிந்து கொண்டான். மறுகணமே அவன் தன் பலத்தால் உடலைச் சுற்றியிருந்த கொடிகளை அறுத்துக் கொண்டு, நீருக்கு மேலே வந்து நீந்தி, தூங்கி எழுந்தது போன்ற ஆனந்தத்துடன் கரையேறினான்.

பீமன் பிழைத்துக் கொண்டதைக் கண்ட துரியோதனன், மற்றொருநாள் பீமன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவனைப் பாம்புகளைவிட்டுக் கடிக்கச் செய்தான். அதனால் தூக்கம் கலைந்து எழுந்த பீமன், தன்னைக் கடித்த பாம்புகளைத் துடிக்கத் துடிக்க மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிக் கொன்றுவிட்டு, தன் உடன்பிறந்தவர்களோடு ஹஸ்தினாபுரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

மற்றொருநாள் துரியோதனன் கங்கையின் நீரினுள் வெளியே தெரியாதபடி சூலங்களை நட்டு வைத்து விட்டு,

பீமனை நீர்விளையாட்டு ஆடுவதற்கு அழைத்துச் சென்றான். இருவரும் கங்கையில் விளையாடினார்கள். துரியோதனன் சூலங்கள் இருக்கும் இடத்தைவிட்டு, கரையிலிருந்து அதன் பக்கத்தில் குதித்து விளையாடினான். அதுபோலவே பீமனையும் குதிக்கும்படிக் கூறினான் துரியோதனன். பீமனும் அதன்படியே குதிக்க நினைத்த போது, கங்கையின் நீர்ப் பரப்பில் வண்டுகள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனுக்கு வியப்பாகப் போய்விட்டது. தண்ணீரின் மேல் வண்டுகள் எப்படி உட்காரும் என்று நினைத்து கூர்ந்து பார்த்தபோது, முனைமேலிருக்க நீருக்கடியில் குத்திட்டு நிறுத்தப்பட்டிருந்த சூலங்களைக் கண்டான். பொறாமையால் தன்னைக் கொல்வதற்குத் துரியோதனன் செய்த சூழ்ச்சி அது என்பதையும் புரிந்து கொண்டான். தான் அறிந்து கொண்டதைத் துரியோதனன் தெரிந்து கொள்ளாதபடி மறுகணமே சூலங்களுக்கு அப்பால் நீரில் குதித்துக் கரையேறித் தப்பித்தான் பீமன்.

இன்னொருநாள் துரியோதனன் அன்போடு பீமனுக்கு விருந்து படைப்பது போல், விஷங்கலந்த உணவைச் சாப்பிடச் செய்தான். பீமன் சிறிதும் தயக்கம் காட்டாமல் அவற்றை உண்டு உயிரோடு இருந்தான். ஆனாலும், அவன் அதிகமாக விஷ உணவை உண்டதால் மயக்கம் அடைந்தான்.

அது கண்டு துரியோதனன் மகிழ்ந்தான். உடனே தனது சகோதரர்களுடன் பீமனைக் கயிற்றால் கட்டி கங்கையிலே எறிந்தான்.

கட்டுண்டு கங்கையில் மூழ்கிய பீமன், அந்நதியின் பிலத்துவாரத்தின் வழியாகப் பாதாளலோகத்தில் போய் விழுந்தான். அங்குள்ள பாம்புக்குட்டிகள் பீமனைக் கடித்துத் துன்புறுத்தின. பாம்புக்குட்டிகள் கடித்ததால் பீமன் உடலில் ஏறிய விஷம், முன்பு அவன் விஷஉணவு உண்டதால் இரத்தத்தில் கலந்திருந்த விஷத்தை முறித்தது. பீமன் மயக்கம் தெளிந்தான்.

பீமன் அப்படியிருக்கையில், நாகங்கள் சென்று நாகராஜனான வாசுகிக்கு அவன் வருகையைத் தெரிவித்தன. அதுகேட்டு வாசுகி மகிழ்ந்து பீமனிடம் விரைந்து வந்தான்.

பீமனைக் கட்டித் தழுவினான். பிறகு பீமனுக்குப் பொற்குடங்களிலே அமுதம் தந்து குடிக்கச் செய்தான்.

அமுதம் உண்ட பீமன், எரிந்த காட்டில் மழையால் தழைத்த பசுமை போல் உடலழகு பெற்றான். மேலும் வாசுகி அவனை உபசரித்து மகிழ்ந்தான். வாசுகியின் அன்பான உபசரிப்பில் மகிழ்ந்து, பீமன் அவனுடைய பாதாள மாளிகையில் எட்டுநாள் தங்கியிருந்தான்.

தந்திரத்தால் பீமனைக் கயிற்றால் கட்டி கங்கையில் எறிந்த துரியோதனன், தன் சகோதரர்களோடும் தோழர்களோடும் மகிழ்ச்சியுடன் ஹஸ்தினாபுரத்து அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான்.

கௌரவர்களும் தனது நான்குப் புதல்வர்களும் இருக்கும்போது தன்மகன் பீமன் மட்டும் அரண்மனையில் இல்லாததைக் கண்ட குந்திக்கு ஒன்றும் புரியவில்லை. அவனை எங்கும் தேடினாள். அவன் ஹஸ்தினா புரத்திலேயே இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். அவன் எங்கு போய்விட்டானோ, என்ன ஆனானோ என்றெல்லாம் எண்ணிக் கவலையுற்றாள். அதனால் ஹஸ்தினாபுரத்தில் பீமன் இல்லாத அந்த எட்டு நாட்களும் அவள் சாப்பிடவே இல்லை. மகனைக் காணாத ஏக்கத்தால் தூங்கவும் இல்லை. தன் மற்ற பிள்ளைகளோடு பேசவுமில்லை.

தாயின் வருத்தத்தோடு பீமனையும் காணாததைக் கண்ட தருமர் முதலானவர்கள், பீமனைத் தேடிக் காடுகளிலும் நதிக்கரையிலும் ஓடைகளிலும் தேடினார்கள். அவன் எங்குமே காணாததைக் கண்டு, ''இனி அவனை எங்கே காண்போம்? இனி என்ன செய்வோம்!'' என்று வருந்தினார்கள். கடைசியாக அவர்கள், ''பீமன் இறந்து விட்டானோ?'' என்று சந்தேகித்து, உள்ளம் நடுங்கினார்கள்.

மேலும் அந்த நால்வரும் நடுங்கி, ''துரியோதனனே பீமனின் வலிமையைக் கண்டு, அவன்மீது பொறாமை கொண்டிருப்பவன். இதைத்தவிர வேறு எதையும் நாம் அறியவில்லையே!'' என்று நினைத்து மனமயக்கம் கொண்டார்கள்.

பீமனின் பிரிவால் வருந்திய குந்தி, தன் மற்ற புதல்வர்களோடு பீஷ்மரிடம் சென்று, பீமனைக் காணவில்லை என்பதைச் சொன்னாள். பீஷ்மர் தம் ஞானக்கண்ணால் பார்த்து உண்மையை உணர்ந்து, குந்திக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார். அப்போது அங்கிருந்த விதுரனும் அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

அதுமட்டும் இல்லை. பீமன் வருவான் என்பதற்கு அடையாளமாக அரண்மனையில் இருப்பவர்களில் சிலர் சாமியாடித் தெரிவித்தார்கள். நல்ல சகுனங்களும் அவளுக்கு அதை உணர்த்தின. ஆனாலும், குந்தி மகனைக் காணாத துக்கத்திலிருந்து விடுபடவில்லை.

குந்தி பிள்ளைப்பாசத்தால் மனம் கலங்கித் தவித்திருக்கையில், வாசுகியின் பாதாள மாளிகையில் எட்டுநாள் தங்கியிருந்து இளைப்பாறிய பீமனை, அந்த நாகராஜனின் கட்டளைப்படி அதிக வலிமையுள்ள நாகங்கள் சுமந்து சென்று கங்கைக் கரையில் சேர்த்தன. கரை சேர்ந்த பீமன் உடனே அரண்மனைக்குச் சென்றான்.

பீமன் வந்து விட்டதைக் கண்டதும் பீஷ்மர் மகிழ்ந்தார். விதுரன் மகிழ்ந்தான். குந்தி மகிழ்ந்தாள். தருமர் முதலிய உடன் பிறந்தவர்கள் மகிழ்ந்தார்கள். எல்லோருமே மகிழ்ந்தார்கள். ஆனால், துரியோதனனும் அவனது சகோதரர்களும் நண்பர்களும் மட்டும் மகிழவில்லை; அச்சம் கொண்டார்கள்.

துரியோதனனின் சதியை முறியடித்துத் திரும்பி வந்த பீமன், தனது பிரிவால் மனங்கலங்கித் தவித்திருந்த தாயை இனிய வார்த்தைகளால் தேற்றி மகிழச் செய்தான். தாயின் ஆசியையும் அன்பையும் முன்னைவிட அதிகமாகப் பெற்றான்.

முன்போலவே பீமனும் அவனது உடன் பிறந்தவர்களும் குந்தியின் அன்பால் மகிழ்ச்சியோடு வளர்ந்து வந்தார்கள். அப்போது—

கௌதம முனிவரின் பேரனும் சரத்துவானின் மகனுமான கிருபாசாரியரிடம் கௌரவர்களும் பாண்டவர்களும் வில்வித்தை கற்க பீஷ்மர் ஏற்பாடு செய்தார். அதன்படி பகைவர்கள் அஞ்சும்படியாக

அவர்களுக்கு கிருபாசாரியர் வில்வித்தையோடு மற்ற போர்வித்தைகளையும் கற்றுத் தந்தார்.

கிருபாசாரியரிடம் எல்லா ஆயுத வித்தைகளையும் அவர்கள் நன்குக் கற்று வந்ததைக் கண்டபோதிலும் பீஷ்மர், மேலும் அவர்கள் அந்த வித்தைகளில் தேர்ந்த ஆசிரியரிடம் கற்றுத் தேறவேண்டும் என்று எண்ணினார். அதனால் அவர்களுக்கு ஆயுதவித்தைகளைச் சொல்லித்தரக் கூடிய கிருபாசாரியரை விடச் சிறந்த வேறொரு ஆசிரியரைத் தேடிக் கொண்டிருந்தார்.

பீஷ்மர் அத்தகைய ஆசிரியர் துரோணர்தான் என்று, பலராலும் அவரைப் பற்றி அறிந்தபின் மனத்தில் திட்டம் செய்தார். உடனே துரோணரை அழைத்துவரத் தூதுவனை அனுப்பி வைத்தார். அங்கிரஸ் என்னும் முனிவரின் குலத்தில் தோன்றிய பரத்துவாசர் கங்கைக்கரையில் யாகம் செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு மேனகையைக் கண்டு காமுற்றார். அதனால் அவரது மனமும் உடலும் நெகிழ்ந்து உருக, அவரது விருப்பத்தால் ஒரு துரோணகலசத்திலிருந்து ஒரு குமாரன் பிறந்தான். அக்குமாரனே துரோணர். அவர் தம் தந்தையிடம் எல்லா போர் வித்தைகளையும் வேத சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். பிறகு பரசுராமரிடம் ஏழே நாட்களில் அஸ்திரங்களை முழுவதும் கற்றுத் தேர்ந்தார். உலகத்தில் இதுபோல் ஏழுநாட்களில் அஸ்திரங்களை முழுவதும் கற்றுத் தேர்ந்தவர்கள் யாருமே இல்லை. கலைகளிலும் போர் வித்தைகளிலும் ஈடுஇணை யில்லாது விளங்கிய துரோணர் கிருபியை மணந்து, அசுவத்தாமனுக்குத் தந்தையாகி வாழ்ந்திருந்தார்.

பீஷ்மரின் தூதுவன் சொன்ன செய்தி கேட்டு துரோணர் மகிழ்ந்தார். உடனே தமது மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு ஹஸ்தினாபுரத்தை அடைந்தார்.

துரோணாசாரியர் வரும் செய்தியைத் தூதுவனால் முன்பே அறிந்து கொண்ட பீஷ்மர், விரைந்து எதிர் கொண்டு சென்று வரவேற்று அரண்மனைக்கு அவரை அழைத்து வந்தார். தமது மனம் போல் விளங்கும் சிங்காசனத்தில் துரோணரை உட்கார்த்தினார். பின்பு அவரை நோக்கி பீஷ்மர், "சுவாமி! தாங்கள் இங்கு எழுந்தருளுவதற்கு நான் என்ன தவம் செய்தேனோ?" என்று போற்றிப் புகழ்ந்தார்.

தம்மைப் பாராட்டிய பீஷ்மரைத் துரோணாசாரியர் வாழ்த்திவிட்டு, அவரைப் பார்த்து, "பாஞ்சாலதேசத்து அரசன் யாகசேனன் என்னிடம் இளமையில் நட்பு கொண்டிருந்தான். துருபதன் என்னும் அவனும் நானும் அங்கிவேச முனிவரிடம் போர்வித்தைகளைக் கற்று வந்தோம். ராஜகுமாரனாகிய அவன் தன்னைப் போலவே ஏழையாகிய என்னையும் பாவித்தான். எனது தந்தை பரத்துவாசமகாமுனிவரும் அவனது தந்தை பிருஷத மகாராஜாவும் நெருங்கிய நண்பர்கள். அதனாலும் நானும் துருபதனும் இப்படி அதிக சிநேகம் கொண்டவர்களாக இருந்து வந்தோம். நாங்கள் அந்த நாளில் ஒருவரைவிட்டு ஒருவர் எப்போதுமே பிரியமாட்டோம். என்மீது அவன் கொண்டிருந்த நட்பாலும், நான் அவன் மீது செலுத்திய நட்பாலும், அவன் அடிக்கடி என்னிடம், "என் தந்தை இறந்த பிறகு அவர் ராஜ்ஜியத்துக்கு நான் அரசனாவேன். அப்படியானால் நான் அடைந்த தேசத்தின் பாதியை நீ அரசாளும்படி உன்னை அரசனாக்கி வைப்பேன்!" என்பான். அப்பொழுதெல்லாம் நானும் அவனை நோக்கி, "என் ஆருயிர் நண்பனே! உன் வார்த்தை நல்லது, நல்லது!" என்று புகழ்வேன். கல்வியைப் பூரணமாக முடித்தபிறகு நாங்கள் பிரிந்தோம். நான் எனது சாதிக்குத் தகுந்த தவம் செய்வதில் இருந்துவிட்டேன். துருபதன் தனது தந்தை இறந்துபோக பாஞ்சால தேசத்துக்கு அரசனானான். தவம் செய்துமுடித்த நான் கிருபனின் தங்கையாகிய இவளை மணந்து கொண்டேன். இந்தக் குழந்தையும் முருகனைப் பெற்ற சிவபெருமானின் கருணையால் பிறந்த குழந்தை. இப்பிள்ளையும் ஐந்து வயது வரையில் இளமைப் பருவத்துக்கு உண்டான இன்பம் ஒன்றையும் அறியாமலே வளர்ந்தான். ஆமாம், வறுமையில் சிக்கி நாங்கள் தவித்தோம். என் பிள்ளைக்குத் தாய்ப்பாலும் இல்லை. பசும்பாலும் இல்லை. என் மனைவி பிள்ளையைப் பார்த்துப் பார்த்து அதிகமாக வருந்தினாள். அதைக் கண்டு என் மனமும் பொறுக்கவில்லை. ஆகவே, ஒரு பசுவை யாசகமாகப் பெற்றுவர துருபதனிடம் போனேன். என்னைக் கண்டதும் அவன், 'நீ யார்?' என்று தெரியாதவன் போல் கேட்டான். அவன் கேள்வியால் நான் உடலும் உள்ளமும் கூசினேன். ஆயினும் அவனிடம் எனது வாயைத்திறந்து, 'நான் உன் நண்பன்!' என்றேன். அதற்கு அவன், 'சாதியால் நானோ

அரசன்! நீயோ அந்தணன்! அப்படியிருக்க எனக்கும் உனக்கும் என்ன சிநேகம் இருக்க முடியும்?' என்று பழித்துப் பேசிச் சிரித்து, என்னைப் பரிகாசம் பண்ணி அலட்சியம் செய்தான். உடனே நான் அந்தச் சபையில் உள்ள அரசர்கள் எல்லோருக்கும் கேட்கும்படி துருபதனைப் பார்த்து, 'துருபதா! சொன்ன வார்த்தையிலிருந்து நீயோ தவறி விட்டாய். நானோ தவறமாட்டேன். பொய்யனே! முன்பு என்னிடம் சொன்னபடியே நீ அரசாளும் இந்த நாட்டிலும் பாதியை நான் எனக்கு உரிமையாக்கிக் கொள்வேன். அது மட்டுமில்லை. போரிலும் உன்னை வென்று தேர்க்காலுடனே கட்டிச் சிறைபிடிப்பேன். இதுவே இப்போது நான் செய்யும் சபதம்!' என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன்!'' என்று சொன்னார்.

அப்போது கிருபாசாரியருடன் அங்கு வந்த துரியோதனாதியரான கௌரவர்களும் பாண்டவரும் பீஷ்மரை வணங்கினார்கள். தம்மை வணங்கிய பேரப்பிள்ளைகளைப் பீஷ்மர் துரோணரிடத்தில் அறிமுகம் செய்து வைத்து, ''சுவாமி! தாங்களே இனி விரைவில் இவர்களுக்கு வில்வித்தைகளைக் கற்றுத் தந்து, பின்னால் இவர்களைக் கொண்டே தங்களின் சபதத்தை முடித்துக் கொள்ளுங்கள்!'' என்றார்.

மேலும் பீஷ்மர் துரோணரிடம், ''சுவாமி! இதற்கு முன்பு தாங்கள் அந்தணர். இன்றுமுதல் தாங்களும் இந்தத் தேசத்து மன்னர். எங்களில் ஒருவர். இனி மன்னர்களுக்கு உண்டான போர்ச் செயலையும் மேற்கொள்ளுங்கள்!'' என்று கூறி, வெண்கொற்றக்குடையையும் அரசச் சின்னங்களையும் அவருக்குக் கொடுத்தார்.

அன்றுமுதல் கௌரவர்களும் பாண்டவர்களும் துரோணாசாரியரிடம் ஆயுதவித்தைகளைக் கற்றார்கள். ஒருவர் போலவே எல்லோரும் அவ்வித்தைகளில் தேர்ச்சி பெற்றார்கள். ஆயினும் அவர்களில் அர்ச்சுனன் இராம பிரானைப் போல் வில்வித்தையில் சிறந்து விளங்கினான். அதைப் பார்த்து துரியோதனாதியர் அர்ச்சுனன்மேல் பொறாமை கொண்டார்கள். ஆனால், ஆசாரியர் துரோணர் அர்ச்சுனனின் வில்லாற்றலைக் கண்டு மகிழ்ந்து, அவன் மேல் நீங்காத அன்பு கொண்டார். ஆமாம், நன்றாகப் படிக்கும் மாணவனிடம் ஆசிரியர் அன்பு கொள்வதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது!

இது இவ்வாறிருக்க காட்டிலே வாழும் ஏகலைவன் என்னும் வேடன் ஒருவன் துரோணரிடம் வந்து, ''எனக்கு வில்வித்தைக் கற்றுத்தர வேண்டும்!'' என்று பணிவுடன் கேட்டான்.

துரோணர் அதற்கு முன்பே அர்ச்சுனனிடம், ''உன்னைவிட மேம்பட்ட மாணாக்கர் எனக்கு எவரும் இல்லை!'' என்று கூறிவிட்டிருந்தார். அதனால் அவர் 'இவ்வேடனுக்கு வில்வித்தைக் கற்பித்தால் இவன் தன் மாணவர்களைவிடச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுவிடுவான்' என்று எண்ணி, ஏகலைவனுக்குக் கற்றுத்தர மறுத்துவிட்டார்.

ஆயினும் துரோணர் ஏகலைவனை நோக்கி, ''பயிற்சியில் மேம்பட்டிருக்கும் நீ என் மாணவனே. உனக்கு அனுமதி தந்தேன். போகலாம்!'' என்றார்.

குருவின் அனுமதி கிடைத்ததும் ஏகலைவன் மகிழ்ந்து, அவரை வணங்கி விடைபெற்று காட்டுக்குச் சென்றான். தன் குடிசையில் துரோணரைப் போல் ஒரு பொம்மை செய்து, அவ்வுருவத்தையே குருவாய்ப் பாவித்து தானே முயன்று கற்று வில்வித்தையில் அர்ச்சுனனைவிடச் சிறந்தவனானான்.

அதை அறிந்த துரோணர், ஏகலைவனை வரவழைத்து குருகாணிக்கையாக அவனது வலக்கைப் பெருவிரலைக் கேட்டார். ஏகலைவன் கொஞ்சமும் தயங்காமல் அக்கணமே அக்காணிக்கையைச் செலுத்தினான்.

அர்ச்சுனனைவிட வில்லாற்றலில் சிறந்திருந்த ஏகலைவன் தனது வலக்கைப் பெருவிரலை இழந்ததால் வில்லாற்றல் மங்கிப் போனான். அதற்குப்பின் அர்ச்சுனனை வில்லால் வெல்பவர்கள் யாருமே இல்லாதவர்களானார்கள்.

ஒருநாள் துரோணர் கங்கையில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது இரண்டு கால்களையும் ஒரு முதலை பிடித்துக் கொண்டது. அது கண்டு அஞ்சிய துரோணர், கரையிலே இருந்த சீடர்களை நோக்கி விஷயத்தைச் சொன்னார். மாணவர்கள் அதுகேட்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார்கள். அர்ச்சுனன் மட்டும் உடனே தனது வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து, கஜேந்திரனைக் காப்பாற்றிய ஆதிமூலம் போல்

முதலையைக் கொன்று அதன்பிடியிலிருந்து துரோணரைக் காப்பாற்றினான்.

தம்மை அர்ச்சுனன் காப்பாற்றியதும் துரோணர் மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியோடு அர்ச்சுனனுக்குச் சிறந்த அஸ்திரம் ஒன்றைப் பரிசாகத் தந்தார். இவ்வாறு அர்ச்சுனன் குருவிடம் பக்தியும், துரோணர் சிஷ்யனிடம் வாஞ்சையும் கொண்டு ஒருவரையொருவர் விரும்பி கருணையிலும் வணக்கத்திலும் மிகுந்திருந்தார்கள்.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் எல்லா வித்தைகளையும் குறைவில்லாமல் கற்றுக் கொடுத்தபின், துரோணர் அவர்களின் ஆற்றலை எல்லோரும் அறிவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

அரண்மனையின் முன்னால் உள்ள யுத்தரங்கத்தில் அறிஞர்களும், பல தேசத்து மன்னர்களும், பீஷ்மர் திருதராஷ்டிரன், விதுரன் ஆகியோரும் வந்து தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள். எல்லோரும் வந்துவிட்டதும் கௌரவரும் பாண்டவரும் கிருபாசாரியரையும் துரோணாசாரியரையும் வணங்கிப் பூஜை செய்துவிட்டுத் தங்கள் வில்லாற்றலைக் காட்ட தொடங்கினார்கள். அவர்கள் வில்லை வளைத்து கூரிய அம்புகளைத் தொடுத்து, பெருவண்மையும், சிறுவண்மையும், சலமும், நிச்சலமுமாகிய நான்குவகை லக்ஷியங்களையும், அவற்றுக்குரிய வகைப்படிப் பிளந்து தள்ளித், தங்களின் சிறந்த வில்லாற்றலை மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

மற்றும் அவர்கள் பல ஆயுதங்களையும் கொண்டு போரிட்டுக் காட்டியும், யானையும் குதிரையும் ரதமும் ஏறி அநேகவிதமான நடைவிகற்பங்கள் உண்டாகச் சவாரி செய்து காட்டியும், தாம் தேர்ந்த கல்வித்திறங்களைச் செய்து எல்லோரையும் மகிழ வைத்தார்கள்.

பிறகு அந்த யுத்தரங்கத்தில் துரியோதனனுக்கும் பீமனுக்கும் கதைப் போர் நடந்தது. இரண்டு யானைகள் போல அவர்கள் கதாயுதத்தால் ஒருவரையொருவர் கொடூரமாகத் தாக்கிப் போரிட்டார்கள். ஆளுக்குச் சமமாகப் பதினாயிரம் யானைபலம் கொண்ட அவர்கள் இருவரும் செய்த கதைப்போரைக் கண்டு எல்லோரும் நடுங்கினார்கள்.

நேரம் செல்லச் செல்ல பீமனும் துரியோதனனும் தங்களுக்குள் கொண்டிருந்த தனிப்பட்ட பகையால், முறையாக கதைப்போர் செய்யாமல் இடிபோல் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் அப்படிப் போரிடவும், அருகே நின்றிருந்த அசுவத்தாமன் அதுகண்டு விரைந்துபோய் அவர்களைச் சண்டையிலிருந்து விலக்கி நிறுத்தினான்.

அதன்பின் துரோணரின் கட்டளையை ஏற்று அர்ச்சுனன் தனது வில்லாற்றலைக் காட்ட தொடங்கினான். முன்பு தானே ஓர் அஸ்திரத்தைத் தொடுத்து அதன் திறத்தை வெளிக்காட்டி வியப்பு உண்டாக்கி, உடனே அதற்குப் பகையான அஸ்திரத்தைக் கொண்டு முன் அஸ்திரத்தின் தீவிரத்தைத் தணித்தான். இப்படி பல விநோத வித்தைகளைத் தனது வில்லினால் செய்து எல்லோரையும் ஆச்சர்யப்பட வைத்தான் அவன்.

அர்ச்சுனன் அப்படித் தன் வில்லாற்றலைக் காட்டி முடித்த போது, துரியோதனனின் நண்பனான கர்ணன் தான் உட்கார்ந்திருந்த சிம்மாசனத்தைவிட்டு எழுந்தான். துரோணா சாரியரை மனப்பூர்வமான பக்தியோடு வணங்கினான். அவரது அனுமதியைப் பெற்றுக் கொண்டான். சிங்கம் போல் யுத்தரங்கத்தில் குதித்து பெருங்கர்ஜனை செய்தான். பின்பு தனது வில்லாற்றலைக் காட்டி, தான் அர்ச்சுனனைவிடச் சிறந்தவன் என்பதை அங்கிருந்தவர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டினான், கர்ணன்.

கர்ணனின் வில்லாற்றலைக் கண்டு அங்கிருந்தவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள். அவனை ஒப்பற்ற வில்வீரன் என்று கொண்டாடினார்கள். துரியோதனன் அதனால் அளவிட முடியாத மகிழ்ச்சி அடைந்தான். தனது நண்பன் கர்ணனைக் கட்டித் தழுவிக் கொண்டான். அவன் தம்பிமார்களும் கர்ணனைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அதேசமயம் அர்ச்சுனன் கர்ணனின் வில்லாற்றலைக் கண்டு மிகவும் வெட்கம் அடைந்தான்.

வில்திறம் காட்டிய கர்ணன் அப்போது அர்ச்சுனனை நெருங்கி, ''நாம் இருவரும் விற்போர் செய்யலாம் வா!'' என்று அழைத்தான்.

கர்ணன் அப்படிக் கூப்பிடவும், அதைப் பார்த்த துரியோதனன் நண்பனைப் பாராட்டி மேலும் அன்போடு தழுவிக் கொண்டான்.

அர்ச்சுனன் உடனே கர்ணனை நோக்கி, ''போர் செய்வதற்கு நீயா எனக்கு எதிரி?'' என்று கோபத்துடன் கேட்டான்.

கர்ணன் அதற்கு, ''ஒருவரையொருவர் நாம் பகைத்துக் கொண்டு செய்யும் இந்தப் போரிலே உனது தலையை வெட்டுவேன். அதனால் என் உள்ளத்தில் பீரிட்டெழும் கோபம் மறையும். வெட்டிய உனது தலையைக் கொண்டு இந்த யுத்தரங்கத்துக்குப் பூஜை செய்வேன்!'' என்று முன்னைக் காட்டிலும் கோபமாகச் சொன்னான்.

அர்ச்சுனனும் கர்ணனும் பகைவர்களாகி ஒருவர்க் கொருவர் வீரவார்த்தைப் பேசிக் கொண்டதைக் கண்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் திகைத்தார்கள். அப்போது கிருபாசாரியர் எழுந்து நின்று, ''தேரோட்டி மகன் அரசகுமாரனிடம் வீரம் பேசுவது முறையில்லை. இப்படிப் பேசுவது பெரும் குற்றம்!'' என்றார்.

துரியோதனன் அதுகேட்டு வெகுண்டு எழுந்து, ''படித்தவர்களுக்கும், அழகிய கன்னிப் பெண்களுக்கும், வள்ளல்களுக்கும், வீரர்களுக்கும், அரசர்களுக்கும், முனிவர்களுக்கும் சாதியில்லை. அவர்கள் எல்லோரும் ஒரே சாதியே. அதில் உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை இல்லை!'' என்று கிருபாசாரியரின் மனம் கொதிக்கும்படிச் சொன்னான்.

மேலும் அவன் தொடர்ந்து, ''முன்பு நாராயணமூர்த்தி தூணில் பிறந்தான். சிவபெருமான் மூங்கிலில் பிறந்தான். கடலைப் பருகிய அகஸ்திய முனிவரும், பரத்துவாச முனிவரின் குமாரரான இந்த துரோணாசாரியரும் பூரணகும்பத்திலிருந்து பிறந்தார்கள். முருகக்கடவுளும், தேவரீராகிய தாங்களும் பிறந்தது நாணலிலிருந்து அல்லவா?'' என்றான்.

துரியோதனன் அதோடு நிற்கவில்லை. அவன், ''இன்றுமுதல் எனது நண்பனான இந்த கர்ணனை

அங்கதேசத்து மன்னனாக்குகிறேன்!'' என்று சொல்லி, அரசர்கள் எல்லோரும் கொண்டாடும்படி கர்ணனுக்குக் கிரீடத்தைத் தன் கையாலேயே எடுத்துச் சூட்டினான்.

பிறகு, தான் உட்கார்ந்திருந்த சிங்காசனத்தில் தன்னோடு கர்ணனையும் உட்கார வைத்து, அவனுக்குச் சரியாசன மரியாதை செய்தான் துரியோதனன்.

அச்சம்பவத்தோடு அன்றைய யுத்தரங்கப் போர் முடிந்தது!

கர்ணனும் துரியோதனனும் அதுமுதல் நெருங்கிய நண்பர்களானார்கள். அர்ச்சுனனும் பீமனும் பயப்படும் படியாக தேசமுழுவதும் இனி தங்களுடையதே என்று எண்ணி அதிக செருக்கும் கொண்டார்கள்.

துரோணாசாரியர் பாண்டவர்களும் கௌரவர்களும் யுத்தரங்கத்தில் காட்டிய வீரச்செயலைக் கண்டு பெருமிதம் கொண்டார். ''இந்தக் குமாரர்கள் எல்லா போர் வித்தைகளிலும் வல்லவர்கள். இவர்களை எதிர்த்துப் போரிலே வெல்லக் கூடியவர்கள் உலகில் இனிமேல் யாருமே இல்லை!'' என்று தமக்குள்ளாகச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

அம்மகிழ்ச்சியோடு அவர்களிடம், ''குருகுலம் தழைக்க வந்த குமாரர்களே! வாருங்கள். நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டிய குருதட்சிணையை நாளைக்கே தாருங்கள். அந்தக் குருதட்சிணை என்ன தெரியுமா? பாஞ்சாலதேசத்து அரசன் துருபதன் எனது பகைவன். அவனைக் கொல்லாமல் உயிரோடு தேர்க்காலில் கட்டி என்னிடம் இழுத்து வாருங்கள். இதுவே நான் உங்களிடம் பெற விரும்பும் குருகாணிக்கை!'' என்று கூறினார்.

உடனே அவர்கள் குருவை வணங்கி அவரது கட்டளைப்படி சதுரங்கச்சேனையோடும் கொடிய ஆயுதங்களோடும் புறப்பட்டுப்போய் பாஞ்சாலதேசத்து அரண்மனையை முற்றுகையிட்டார்கள்.

அப்போது அவர்களுடைய சேனைகளால் மேலெழுந்த புழுதிப்படலம் துருபதனின் கண்களை மறைத்தது. சேனையின் பேராரவாரங்கள் அவனது

காதுகளை அடைத்தன. அவர்களுடைய யானைகளும் குதிரைகளும் அரண்மனை வெளிவாசலை நெருங்கி ஆரவாரம் செய்தன.

அதுகண்டு துருபதன் மிகவும் ஆத்திரம் அடைந்தான். மறுவினாடியே மனச்சோர்வு கொஞ்சமும் இல்லாமல் சிம்மகர்ஜனை புரிந்து கொண்டு தனது சேனையோடு வெளிவாசலுக்கு வந்தான்.

சோமகுலத்து அரசனான துருபதனுக்கும் குருகுல குமாரர்களுக்கும் வலிமை மிகுந்த கொடிய போர் தொடங்கியது. அப்போது துருபதன் எதிர்த்துத் தாக்கிய தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் துரியோதனாதியர் புறமுதுகிட்டு ஹஸ்தினாபுரத்துக்கு ஓடிப்போனார்கள். பாண்டவர்களோ அவனது தாக்குதலை எதிர்த்து வீரப்போர் புரிந்தார்கள். நெடுநேரப் போருக்குப்பின் அர்ச்சுனனின் அம்புவலையில் துருபதசிங்கம் மாட்டிக் கொண்டது.



சிறைபிடித்த துருபதனை அர்ச்சுனன் தனது தேர்க்காலில் அம்புகளாலேயே கட்டி, எல்லோரும் பார்த்துப்

பரிகசித்துச் சிரிக்கும்படி அவனை இழுத்து வந்து துரோணாசாரியர் முன் நிறுத்தினான்.

துரோணர் துருபதனைப் பார்த்துப் பரிகசித்துச் சிரித்தார். பிறகு துருபதனை நோக்கி, "துருபதா! பின்னால் வருவதை அறியாமல் முன்பு நீ என்னை எல்லோர் முன்னாலும் இழிவாகப் பேசிச் சிரித்தாய். அது உனக்கு மறந்திருக்காது. நானும் குற்றமற்ற பிராமணன். நீயும் க்ஷத்திரியன். இந்திரகுமாரனான அர்ச்சுனன் என்கட்டளைப் படி இன்று உன்னை வென்று தேரோடு கட்டி இழுத்து வந்தான். அன்று பெருமை பேசினாயே. இன்று இது உனக்கு என்ன பெருமை? வீரனே! முன்பு நீ எனக்குத் தருவதாக வாக்குத் தந்த உனது பாதி ராஜ்ஜியம் மட்டும் எனக்குப் போதும். மீதியை உனக்கே நான் தத்தம் செய்தேன். பிழைத்துப் போ!" என்று சொல்லி, அவனைத் தேர்க்காலிலிருந்து விடுதலை செய்தார் துரோணர்.

அவமானப்பட்டு விடுதலை அடைந்த துருபதன் வெட்கத்தால் மனங்குமுற பாஞ்சால தேசத்து அரண்மனையை அடைந்தான்.

துருபதனின் உள்ளம் ஒருநிலையில் இல்லை. தன்னை அவமானப்படுத்திய துரோணரை அழிக்க வேண்டும் என்று சதா சிந்தனை செய்தான். அதேசமயம் வில்விஜயனான அர்ச்சுனனின் வீரத்தை எண்ணித் தனக்குள் பாராட்டினான். துருபதன் அப்படிச் சிந்தித்து, கடைசியாக அவன் துரோணரைக் கொல்வதற்கு ஒரு மகனையும், அர்ச்சுனனை மணப்பதற்கு ஓர் அழகிய மகளையும் பெற விரும்பினான். உடனே துருபதன் ரிஷ்யசிருங்கமுனிவரைப் போன்ற சிறந்த முனிவர்களிடம் சென்று வணங்கி, தனது எண்ணத்தைக் கூறிப் பிரார்த்தித்தான்.

கங்கைக்கரையில் வாழ்ந்திருந்த அந்த முனிவர்களுள் சிறந்தவர்களான உபயாஜமுனிவரும் யாஜமுனிவரும் துருபதனின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்குத் தந்தார்கள். பின்பு அவனது உதவியோடு இரண்டு முனிவர்களும் அவனுக்காகப் புத்திரகாமயாகத்தைச் செய்தார்கள்.

முனிவர்கள் செய்த யாகம் முடிந்தது. புத்திர காமயாகத்தில் அக்கினி ஓமஞ் செய்த ஹவிஸை



பொற்பாத்திரத்தில் வைத்து அரசன் மனைவியிடம் உண்ணும்படிக் கொடுத்தார்கள். அந்த ஹவிசை துருபதனின் மனைவி உண்பதற்கு மறுத்துவிட்டாள். அதனால் முனிவர்கள் அந்த ஹவிசை அக்கினியில் போட்டார்கள். மறுகணம் ஓமக்குண்டத்திலிருந்து தோள்களில் வளையங்கள் விளங்கவும், தலையிலே கிரீடம் பிரகாசிக்கவும், காதுகளை இரத்தினகுண்டலங்கள் அழகு செய்யவும், உடம்பிலே வச்சிரகவசத்துடன் வில்லும் கையுமாய்ச் சிங்கக்குட்டிபோல துருபதனுக்கு மகனாக திருஷ்டத்யும்நன் தோன்றினான்.

ஓமாக்கினியிலிருந்து தோன்றிய திருஷ்டத்யும்நனைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தார்கள். துருபதன் அவனைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். பாஞ்சாலதேசம் முழுதும் விழாக் கோலம் கொண்டது.

பின்பு முனிவர்கள் யாகாக்கினியிலே ஆகுதி செய்த ஹவிஸினால் மூங்கில் போன்ற தோள்களும், முல்லை அரும்பு போன்ற பற்களும், பொன் போன்ற மேனியும் கொண்ட அழகிய திரௌபதி தோன்றினாள். அப்பொழுது வானத்தில், "அரக்கர்குலம் அழியும்படி முன்பு ஒருத்தி பூமியில் பிறந்தாள். இப்போது அரசர்குலத்தை அழிக்கும்பொருட்டு சிவபிரானுடைய நெற்றிக்கண்ணாகிய அக்கினியிலிருந்து இவள் பிறந்திருக்கிறாள்! இனி நடக்கப் போவது என்ன?" என்று யாகசாலையில் உள்ளவர்கள் எல்லோருக்கும் கேட்கும்படி ஓர் அசரீரி வாக்குக் கேட்டது.

யாகத்தால் துரோணரைக் கொல்ல ஒரு மகனையும், அர்ச்சுனனை மணக்க ஒரு மகளையும் பெற்றதால் துருபதன், இனி தனது எண்ணம் நிறைவேறும் எனக் கருதி மகிழ்ந்தான்.

துருபதனுக்கு மகனாகப் பிறந்த திருஷ்டத்யும்நன் துரோணாசாரியரிடம் சென்றான். அவர் பாதங்களை வணங்கி, "குருவே! எனக்கு வில்வித்தைக் கற்றுக் கொடுத்தருளுங்கள்!" என்று வேண்டினான்.

திருஷ்டத்யும்நனால் தமக்கு மரணம் என்பதைத் தமது ஞானத்தால் அறிந்தார் துரோணர். ஆனாலும், திருஷ்டத்யும்நனின் வேண்டுதலை அங்கீகரித்தார். அவனுக்கு வில்வித்தையைப் பூரணமாகக் கற்றுக் கொடுத்தார்.

இது இப்படியிருக்க, தருமருடைய நல்லொழுக்கத்தைப் பார்த்து மகிழ்ந்த திருதராஷ்டிரனும் விதுரனும், அவருக்கு இளவரசு பட்டம் கட்ட விரும்பினார்கள். பீஷ்மரும் அதையே விரும்பினார். பெரியவர்கள் நன்னாளில் ஒன்றுகூடி தருமருக்குக் கிரீடத்தையும் வெண்கொற்ற குடையையும் கொடுத்து இளவரசுபட்டம் கட்டினார்கள்.

துர்ப்புத்தி கொண்ட துரியோதனன் தருமரின் யுவராஜ பட்டாபிஷேகத்தைக் கண்டு மனம் வெதும்பினான். ராஜநீதியைக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல் தருமரின்மேல் பொறாமை கொண்டான். கொடிய அந்த உள்ளத்தோடு அவன் தனது தந்தை திருதராஷ்டிரனிடம் போய், "தந்தையே! தங்களுக்கு உரிமையான இந்தப் பூமியை அரசாளும்படி தருமனுக்குக் கொடுத்துவிட்டீர்களே.

அன்பில்லாத அவனுடைய தம்பிமார்களின் ஆணவத்தால் எனது பெருமையும் அரசசெல்வமும் இப்போது அழிந்து விட்டன!'' என்று அற்பத்தனமாக முறையிட்டான்.

அதற்குத் திருதராஷ்டிரன், ''சந்திர குலத்தவனே! மகனே! மனுநீதியை நீ நன்றாக அறிந்து கொள்ளவில்லை. அந்நீதியின்படி நீ நடக்கவுமில்லை. இந்த ராஜ்ஜியம் இறந்துபோன என்தம்பி பாண்டுவுக்குச் சொந்தம். அதனால் இந்த ராஜ்ஜியத்தை அவனது பிள்ளைகளே பெற்று அரசாள வேண்டும். அதைவிட்டு இந்த ராஜ்ஜியம் எனது பிள்ளைகளுக்குச் சொந்தம் என்று பேசுவது தகாது! நீ நியாயம் இல்லாததை நினைத்தாய். அதோடு நியாயம் தவறி என்னிடமும் பேசினாய். உன் பேச்சில் பெரியோர்கள் ஒப்புக் கொள்ளும் கருத்து ஒன்றும் இல்லை. ஆகவே, இனி உன் ஆத்திரப் புத்தியைக் கட்டுப்படுத்திக் கொள். பாண்டவர்களோடு சிநேகமாக இரு. பாண்டவர்களுக்குச் சொந்தமான இந்த ராஜ்ஜியத்தை அவர்களோடு ஒற்றுமை கொண்டு கௌரவர்களும் ஆளவேண்டும். இதுவே அரச நீதி!'' என்றான்.

உடனே தந்தையின் பேச்சை மறுத்துத் துரியோதனன், ''அப்பா! நண்பன் கர்ணனும், எனது தம்பிமார்களும், மாமா சகுனியும் எனக்கு எப்போதும் துணையாக நிற்பார்கள். ஆகவே, நான் என்னிடம் அன்பில்லாத அந்தப் பாண்டவர்களோடு இனி ஒருக்காலும் சேரமாட்டேன்!'' என்று வெஞ்சினத்தோடு சொன்னான்.

பாவி துரியோதனன் சொன்னதைக் கேட்டுத் திருதராஷ்டிரன் மனம் மயங்கினான். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். துரியோதனன் போனபிறகு பீஷ்மரையும் விதுரனையும் அழைத்து திருதராஷ்டிரன், ''என் பிள்ளைகள் தம்பி பாண்டுவின் பிள்ளைகளோடு சேரமாட்டேன் என்கிறார்கள். பாண்டு குமாரர்களின் சிறப்பையும், பெருமையையும், அரச வாழ்க்கையையும் கண்டு பொறாமைப்படுகிறார்கள். அவர்களிடம் என் பிள்ளைகள் கொடிய பகைமை பாராட்டுகிறார்கள். இனி நாம் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

மேலும் அவன், ''என் பிள்ளைகளும் பாண்டவர்களும் இனி ஒன்றாக வசிப்பதற்கில்லை. அப்படி வசித்தால்

அவர்களின் கொஞ்சநஞ்ச ஒற்றுமையும் குலைந்து போகும். இன்னும் அதிகமாக தங்களுக்குள் பகைமை கொள்வார்கள். ஆகவே, என் புத்திரர்களான கௌரவர்களும் என் தம்பி பாண்டுவின் புத்திரர்களான பாண்டவர்களும் வெவ்வேறு இடத்தில் தூரத்தில் வசிப்பதே நல்லது. அப்போதுதான் அவர்களுக்கு நடுவே உள்ள பகைமை மறையும். நட்பு உருவாகும்!'' என்றான்.

திருதராஷ்டிரனின் வார்த்தைகளைக் கேட்டதும் பீஷ்மரும் விதுரனும் சிறிது நேரம் கலந்து ஆலோசித்தார்கள். பிறகு அவர்கள் திருதராஷ்டிரனைப் பார்த்து, ''கௌரவர்கள் இளமையிலிருந்தே பாண்டவர்களிடம் பகைமை கொண்டுவிட்டார்கள். ஆகவே, கௌரவர்கள் எங்கள் வார்த்தையைக் கேட்டு நடக்க மாட்டார்கள். இனிமேல் அவர்கள் விருப்பப்படியே நடக்கட்டும்!'' என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

அவர்களின் பேச்சால் திருதராஷ்டிரன் மேலும் அதிகமாக மனத்தடுமாற்றம் அடைந்தான். கடைசியாக அவன் பிள்ளைப்பாசத்தால் கட்டுண்டு மனம் மாறினான். தனது பிள்ளைகளுக்கே தான் ஆண்டுவரும் ராஜ்ஜியம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று எண்ணினான். அவ்வெண்ணத்தோடு துரியோதனனையும் தனது மதிமந்திரி புரோசனனையும் அழைத்துச் சதியாலோசனை செய்தான்.

அவர்கள் மூவரும் பாண்டவர்களைக் கொல்ல முடிவு செய்தார்கள். அதற்கு வாய்ப்பாக இருக்கும் ஒரு வழியைச் சிந்தித்து துரியோதனன் தந்தையின் காதில், ''தந்தையே! பார்ப்பணர்களால் புகழப்படுவதும், திருமால் முதலான தேவர்கள் எழுந்தருளியிருப்பதும், பொற்கோபுரங்களைக் கொண்டதுமான வாரணாவத நகரத்துக்குப் போய் வசிக்கும் படி தாங்கள் பாண்டவர்களுக்குக் கட்டளையிடுங்கள்!'' என்றான்.

துரியோதனனின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக திருதராஷ்டிரன் உடனே ஒப்புக் கொண்டான்.

அன்றுமுதல் புரோசனன் வாரணாவதநகரத்தைப் புதுப்பிக்கத் தொடங்கினான். வாரணாவத நகரத்தில் புரோசனன் கற்பகச்சோலை என்று சொல்லும்படி பல அழகான சோலைகளை ஏற்படுத்தினான். மாடமாளிகை

களையும், கூடகோபுரங்களையும் கட்டினான். எங்கும் அழகிய சிற்பங்களை நிர்மாணித்தான். அமராவதி நகரமும் அழகால் தோற்றது என்று பார்த்தவர்கள் எல்லோரும் சொல்லும்படியாக வாரணாவதநகரத்தைப் புதுப்பித்து முடித்தான் புரோசனன்.

வாரணாவதநகரம் புதுப்பிக்கப்பட்ட பின் ஒருநாள் அரசசபையில் வீற்றிருந்த திருதராஷ்டிரன் தருமரை நோக்கி, ''மகனே, தருமபுத்திரா! வலிமை கொண்ட உனது தம்பிமார்களுடன் சென்று, புஜபராக்கிரமத்தால் வாரணாவத நகரத்தில் தனித்து வாழ்வாய்!'' என்றான்.

பிறகு திருதராஷ்டிரன் புரோசனனிடம், ''நீ இந்தப் பாண்டவர்களுடன் செல். இவர்களோடு வாரணாவதத்தில் தங்கியிருந்து இவர்களுக்கு அமைச்சனாக இரு. இவர்களின் பகைவர்களை அழி. இவர்களின் நண்பர்களுக்கு நல்லது செய். இந்தப் பூமியைத் தருமபுத்திரன் அரசாளும்படி காரியம் செய்!'' என்று உள்ளர்த்தத்தோடு கட்டளை யிட்டான்.

அதாவது, 'நீ பகைவர்களான பாண்டவர்களைக் கொன்று, வேண்டியவர்களான துரியோதனாதியர்களுக்கு நன்மை செய்து, இந்த ராஜ்ஜியத்தை துரியோதனன் ஆளும்படிச் செய்!' என்று மறைமுகமாக புரோசனனுக்குத் திருதராஷ்டிரன் கட்டளைப் பிறப்பித்தான்.

மன்னனின் கட்டளையை ஏற்றான் புரோசனன். மன்னனைத் தொழுதுவிட்டு அவன், பாண்டவர்களைக் கொல்வதற்குத் தேவையான ஆயுதங்களோடும் சேனையோடும் பாண்டவர்களையும் குந்தியையும் அழைத்துக் கொண்டு வாரணாவதநகரம் சென்றான்.

வாரணாவதநகரம் சென்ற பாண்டவர்களும் குந்தியும் புரோசனனுடன் அந்நகரத்து சிவாலயத்துக்குச் சென்றார்கள். சிவபெருமானை மனதார வழிபட்டார்கள். பிறகு, புரோசனனால் சூழ்ச்சியாகக் கட்டப்பட்ட அரக்கு மாளிகையில், பூரணகும்பமும் மங்கல முரசொலியும் வரவேற்க சென்று அவர்கள் தங்கினார்கள்.

அந்த மாளிகை பார்ப்பதற்கு அரக்கினால் கட்டப் பட்டது போல் விளங்கவில்லை. சலவைக்கல்லினால்

கட்டப்பட்டது போல் எழிலோடு விளங்கியது. அம்மாளிகையில் எங்கும் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. பட்டுக் கொடிகள் பறந்தன.

அரக்கு மாளிகையில் தங்கியிருந்தபடியே பாண்டவர்கள் அரசாட்சி செய்து வந்தார்கள். புரோசனனும் தனது சூழ்ச்சியை அவர்கள் அறியாதபடி அவர்களுக்கு நல்லது செய்வதுபோல் தந்திரம் செய்து வந்தான்.

ஆனால், பாண்டவர்கள் தங்களுக்கென்று புரோசனன் கட்டியிருக்கும் மாளிகையின் அமைப்பைப் பார்த்து சந்தேகம் கொண்டார்கள். புரோசனன் மேல் அவர்களுக்குப் பெரும் சந்தேகம் தோன்றியது. அவர்கள் அந்த மாளிகையை நன்றாகக் கூர்ந்து கவனித்தார்கள். அது அரக்கினால் கட்டப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். அவர்கள், 'புரோசனன் வஞ்சனையாக இம்மாளிகையை அரக்கினால் நமக்காகக் கட்டி வைத்திருக்கிறான். இவன் நம்மிடம் நல்லவன்போல் பொய்யாக நடிக்கிறான். மேலும், இவன் தன்னோடு எப்போதும் அதிக சேனை பலத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். தொழுத கையினுள்ளும் படை ஒடுங்கும் என்பது பொய்யில்லை! இவன்மேல் நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதனால் இவன் நம்மிடம் அன்புள்ளவன் போல் கொடுக்கின்ற உணவுகளையும், சந்தனத்தையும், ஆபரணங்களையும், ஆடைகளையும், பூமாலைகளையும், மலர்களையும் சோதித்துப் பார்க்காமல் வாங்கிக் கொள்ளக் கூடாது!' என்று தங்களுக்குள் முடிவு செய்து கொண்டார்கள்.

இவ்வாறிருக்கும் பொழுது ஒருநாள் அந்த அரக்கு மாளிகையைக் கட்டிய சிற்பிகளில் ஒருவன், பீமனைத் தனியே வந்து சந்தித்து, "தலைவனே! உண்மையாக நடந்த ஒரு செய்தியைத் தங்களுக்குச் சொல்கிறேன். கேளுங்கள். தங்களின் பெரிய தகப்பனார் திருதராஷ்டிர மன்னரின் கட்டளையினால் புரோசனன் சூதாக இந்த மாளிகையை இந்த நகரத்தில் நிர்மாணிக்கத் தொடங்கினான். இதனை யறிந்த தங்களின் சிறிய தகப்பனார் விதுரபூபதி, எனது குணத்தால் என்னை நம்பி இங்கு வேலை செய்யும் சிற்பிகளுள் என்னையும் ஒருவனாக அனுப்பி வைத்தார். புரோசனனின் கட்டளைப்படி வஞ்சமாக சிற்பிகள் தங்களோடு தங்கள் சகோதரர்களையும் கொல்வதற்காக இந்த

அரக்கு மாளிகையைக் கட்டி முடித்தார்கள். அதைக் கண்ட நான், உடனே அவர்கள் அறியாதபடி இந்த மாளிகையில், வெகுதூரத்தில் உள்ள காட்டுக்குப் போய் முடியும்படியான நிலவறை ஒன்றை அமைத்தேன். யாரும் தெரிந்து கொள்ள முடியாதபடி அந்தக் குகைவழி ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு பெரிய தூணை நிர்மாணித்திருக்கிறேன். தங்களின் பலத்தால் அந்தத் தூணைப் பெயர்த்தெடுப்பது சுலபம். நான் சொன்னது யாவும் சத்தியம். இதை நம்புங்கள். தங்களுக்குத் தீங்கு நேரும்போது அந்தச் சுரங்க வழியாகத் தப்பிச் சென்று வாழுங்கள்!'' என்று சொல்லி வணங்கினான்.

தன்னிடம் வந்து அரக்குமாளிகையின் இரகசியத்தைச் சொன்ன சிற்பிக்கு பீமன் மகிழ்ந்து அளவிட முடியாத பரிசுகளைக் கொடுத்தனுப்பினான். அதுமுதல் பீமன், 'புரோசனன் எந்த நேரத்திலும் இந்த அரக்கு மாளிகைக்குத் தீவைத்து தங்களைக் கொல்லத் துணிவான். இது நிச்சயம்' என்று எண்ணி, ஒவ்வொரு கணமும் கவனிப்புடன் இருந்தான்.

பாண்டவர்கள் பகல் நேரத்தில் காடுகளில் வேட்டை யாடினார்கள். இரவு நேரத்தில் தூங்காது விழிப்புடன் அரக்குமாளிகையில் தங்கியிருந்தார்கள். அதுமட்டும் இல்லை. புரோசனனையும் அவர்கள் தனியே எங்கும் செல்லவிடாமல் தங்களுடனேயே இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள்.

அப்படி இருக்கும்போது ஒருநாள் புரோசனனுடன் பாண்டவர்கள் வெகுநேரம் ராஜ்ஜிய பரிபாலனம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக அவர்கள் அவனிடம், ''இரவு வெகுநேரமாகிவிட்டது. அதனால் எங்கும் போக வேண்டாம். இங்கேயே எங்களுடன் தூங்குங்கள்!'' என்று சொல்லி, மென்மையான பட்டு மெத்தையை அவனுக்குக் கொடுத்தார்கள்.

புரோசனன் மறுத்துக் கூற முடியாமல் மெத்தையை விரித்து அவர்கள் பக்கத்திலேயே படுத்துக் கொண்டான். பாண்டவர்களும் அவனருகில் படுக்கையைப் போட்டுப் படுத்துக் கொண்டார்கள்.

புரோசனன் நன்குத் தூங்கிவிட்டதும் பீமன் படுக்கையிலிருந்து எழுந்தான். சிற்பி சொன்ன தூணை

அகற்றினான். தாயையும் சகோதரர்களையும் எழுப்பி நிலவறைக்கு அழைத்துப் போய் விட்டுவிட்டு வந்தான். அரக்கு மாளிகைக்குத் தீ வைத்தான். பிறகு நிலவறைக்குத் திரும்பிப்போய் தாயையும் சகோதரர்களையும் அழைத்துக் கொண்டு அவ்வழியே விரைந்தான்.



மூங்கில் காட்டை நெருப்பு அழித்தது போல, அரக்குமாளிகையை பீமன் வைத்த தீ அழித்தது!

நிலவறை வழியாக சென்ற குந்தியும் பாண்டவர்களும் கடைசியாக இடிம்பவனம் போய்ச் சேர்ந்தார்கள்.

பொழுது விடிந்தது. வாரணாவத நகரத்து மக்கள் பாண்டவர்களின் மாளிகை எரிந்தழிந்து கிடப்பதைக் கண்டார்கள். அதுகண்டு அவர்கள், "ஐயோ, பஞ்ச பாண்டவர்களும் அவர்கள் தாய் குந்திதேவியும் மாளிகையோடு அழிந்து போனார்களே!" என்று சொல்லிக் கண்ணீர் விட்டார்கள்.

ஆமாம், நகரத்து மக்கள் அப்படி நினைப்பதற்குக் காரணம் இருந்தது. துரியோதனனின் கட்டளைப்படி பாண்டவர்களுக்கு விஷம் கொடுக்க வந்த ஐந்து வேடர்களும்,

அவர்களின் தாய் வேடுவச்சியும் புரோசனனுடன் அழிந்த மாளிகையில் உருத்தெரியாமல் வெந்து கிடந்தார்கள்.

வாரணாவத நகரத்து மக்களைப் போல் அந்த உண்மையை அறியாத பூவுலகத்து அரசர்கள் எல்லோரும், உண்மையாக பஞ்சபாண்டவர்களும் குந்தியுமே இறந்ததாக நினைத்து, 'இருள் சூழ்ந்த வானம் போல் பூமாதேவியின் முகம் இருளும்படி குருகுலச் செல்வம் அழிந்தது!' என்று கவலை கொண்டார்கள்!

பாண்டவர்களும் குந்தியும் இறந்து போனதாக துரியோதனாதியரும் நினைத்தார்கள். அவர்கள் அதனால் மிகக் கவலைப்பட்டுக் கண்ணீர் வடிப்பதாக எல்லோருக்கும் முன்பாக நடித்தார்கள். உள்ளுக்குள் மிகவும் குதூகலம் கொண்டார்கள்!

துரியோதனன் சத்துருகாதினி என்னும் கதாயுதத்தைக் கொண்ட பீமனை அரக்குமாளிகையோடு தீவைத்து அழிக்க எண்ணினான். இது என்ன ஆண்மை? அக்கினி தனது நண்பன் வாயுதேவனின் மைந்தனை எரிப்பானோ?

4. வேத்திரகீயம்

பீமன் தனது சகோதரர்களோடும் தாயோடும் கொடிய இடிம்பவனத்தை அடைந்தபோது, அங்கு வாழ்ந்து வரும் இடிம்பி என்னும் அரக்கி அவன் முன் வந்து நின்றாள். கொடிய நெருப்பு போன்ற செம்பட்டை மயிருடைய அவள், காட்டில் வாழும் தெய்வமகள் போல செவ்விதழும் முத்துப்பற்களுமாக பேரழகுடன் பார்ப்பவர் கண்கள் கூசும்படி தோன்றினாள். இடிம்பி பீமனைப் பார்த்து, "இந்தக் காட்டில் இந்த அர்த்தராத்திரியில் நீ எப்படி வந்து சேர்ந்தாய்? நீ எதற்கு இங்கே வந்தாய்? இவர்கள் யார்?" என்று கேட்டாள்.

அதற்கு பீமன், "நான் இங்கே வந்த விதத்தையும் காரணத்தையும் சொல்கிறேன். ஆனால், அதற்குமுன் நீ யார் என்பதை எனக்குச் சொல்!" என்று பதில்கேள்வி போட்டான்.

பீமனின் கட்டுடலையும் அழகையும் கண்டு சொக்கி, அவனை அடையும் ஆசை கொண்ட இடிம்பி உடனே

அவன் கேள்விக்கு, ''இராவணன் மகன் இந்திரஜித்தைப் போன்ற கொடிய அரக்கன் ஒருவன் இந்தக் காட்டிலே வாழ்ந்து வருகிறான். மனித மாமிசத்தை ஆசையுடன் புசிக்கும் அவன் பேர் இடிம்பன். அவன் மனித வாடை வீசுவதை உணர்ந்து, உங்களின் வருகையையும் அறிந்து கொண்டான். அவன் எனது தமையன். அவனுடைய கட்டளையால் உங்களைக் கொல்வதற்காகவே இப்போது நான் இங்கே வந்தேன். ஆனால், இப்போது எனக்கு அந்த எண்ணம் இல்லை. அப்படி உன்னைக் கொல்வதால் எனக்கென்ன பிரயோஜனம்? இரண்டு மலைகள் போல அழகிய தோள்களும், நீண்ட அழகிய இரத்தினமாலை அணிந்த மார்பும் கொண்டவனே! நான் சொல்வதைக் கேள். பெண்களுக்குத் தங்களின் காதலை எடுத்துச் சொல்வதற்கு மனம் வெட்கும் என்று நாணமில்லாத அரக்கிகளும் சொல்வார்கள். அப்படியிருக்க என் உள்ளத்தில் பீரிட்டெழும் ஆசை நோயைப் பற்றி எப்படி உனக்கு எடுத்துச் சொல்லி முடிப்பேன்? மழைக்காலத்தில் கலங்கி வரும் ஆற்று நீர் வெய்யிற்காலத்தில் கலங்கல் மாறித் தெளிவோடு போய்க் கடலில் சேர்வதுபோல, கோபத்துடன் வந்த நான் சாந்தத்தோடு உன்னை அடைந்தேன். இக்கணம் முதல் எல்லாம் எனக்கு நீயே! நான் இங்கு வெகுநேரம் நிற்பதற்கு இல்லை. அப்படி நின்றால் மன்மதனாகிய அரக்கன் கொல்வதற்கு முந்தி, என் தமையன் கொடிய சினத்தோடு வந்து அவன் கட்டளையைச் செய்யத் தவறிய என்னைக் கொன்று போடுவான். உன்னையும் அவன் ஒருகணத்தில் கொன்றுவிடுவான். அதைப்பற்றி இப்போது சிந்திப்பதில் பயன்இல்லை. இது நேரமும் இல்லை. உடனே நாம் இங்கிருந்து தப்பிப் போக வேண்டும். அதற்கு ஒருவழி இருக்கிறது. நீ என்னை விரும்பி இன்பம்மிகத் தழுவிக் கொள். அக்கணமே நான் வானத்தில் எழும்பி உன்னை ஒரு மலைமேல் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்!'' என்றாள்.

பீமன் அதுகேட்டு, ''இரக்கம் இல்லாமல் இந்தக் கொடிய காட்டில் எனது சகோதரர்களையும் தாயையும் தனியே விட்டுவிட்டு, என்னைக் காப்பாற்றும் பலமுடைய ஒரு பெண்ணின் பின்னால் போவதா? அது புருஷர்களுக்கு ஆண்மையா? கிடையாது! மலைமேல் வசிக்கும் உன் தமையன் என்னைக் கொல்வதற்கு வரட்டும். அப்போது என்ன நடக்கிறது என்பதை நீ பார்! அவன் அரக்கன் என்றால்

எனக்கு என்ன? அசுரனாகத்தான் இருக்கட்டுமே. ஒரு கணத்தில் நான் அவனுடைய உயிரைக் கவர்வேன்!'' என்று வீரவாதம் புரிந்தான்.

இடிம்பியும் பீமனும் அப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் இடிம்பன் அங்கே வந்தான். அவன் கண்கள் கோபாக்கினியை வீசின. குகைபோன்ற அவனது வாயில் நீட்டிக் கொண்டிருந்த கோரத்தந்தங்கள் பார்ப்பதற்கு அச்சத்தைக் கொடுத்தன. அவன் உடம்பு மழைமேகம் போல் கறுத்துக் கிடந்தது.

பீமனை நெருங்கி வந்த இடிம்பன் இடி போல் சிரித்தான். அப்போது கடைவாய் தந்தங்களுக்கு நடுவே தொங்கிய அவனுடைய நாக்கு யானையின் காதுபோல் ஆடியது. மலைபோல் நின்றிருந்த அவன் இடிம்பியைக் கூப்பிட்டுக் கொண்டே இன்னும் நெருங்கினான்.

பிறகு இடிம்பன் தன் தங்கையைப் பார்த்து, ''உணவின் ஆசையால் கொல்ல வந்த நீ, காம விருப்பத்தால் மனமழிந்து இவனைக் கணவனாக அடைய நினைப்பதா? அரக்கர்களுக்கு உண்டான விதிமுறையிலிருந்து தவறுவதா? சுடும் பசித்தீ அடங்கிப் போக, சுடும் காமாக்கினியைக் கொண்ட கொடிய ஒருபெண்புலி அன்பால் ஓர் ஆண்மானை விரும்புவதா? பேதையே! அரக்கியுடன் ஒரு மனிதன் பேசுவதா?'' என்று கோபித்தான்.

தங்கையை அப்படி ஏசிய இடிம்பன், பின்பு பீமனை நோக்கி அதிக சினத்துடன், ''அடே! போருக்கு வாடா! உனக்கு அரக்கமகள் அடுக்குமோ? நான் போரிட்டு உன்னை அடித்துப் போடுவேன். உனது உடம்பைத் தின்று உயிரைச் சுவர்க்கத்துக்கு அனுப்புவேன். அப்போது அங்கே நீ உனக்குரிய தேவக்கன்னியரின் தோளைத் தழுவடா! உன்னுடன் போர் செய்தல் எனக்குத் தகாது. ஆண்சிங்கம் சிறுபூனையுடன் போர் செய்ய நினைக்குமா? என் வீரத்தைப் பாரடா! அரக்கரின் கையில் அகப்பட்டபின் மண்ணில் உயிருடன் இருந்தவர் யாரடா!'' என்று கூறி, போருக்கு ஆயத்தமானான்.

உடனே பீமன் சகோதரர்களையும் தாயையும் ஒதுங்கி நிற்கச் சொல்லிவிட்டுப் போருக்குத் தானும் தயாரானான்.

இடிம்பி பீமனுக்கு வெற்றியைக் கொடுப்பதற்காகவே வந்த வீரலக்ஷ்மியைப் போல ஒரு பக்கமாக ஒதுங்கி, அவர்கள் இருவரையும் கண்களை அகலவிரித்துப் பார்த்தபடி நின்றாள்.



பீமன் தன்னோடு போருக்கு வந்த இடிம்பனின் கோரத் தந்தங்களும் நாக்கும் துண்டாகும் படி நெருங்கி, அவன் வாயிலே ஓங்கிக் கைகளால் குத்தினான். பதிலுக்கு இடிம்பன் பீமனின் மார்பிலே நகங்கள் நீண்ட தன் கைகளால் ஓங்கி அடித்தான். பீமனுக்கும் இடிம்பனுக்கும் கொடிய போர் தொடங்கிவிட்டது! இருவரும் மாறிமாறி ஒருவரையொருவர் கைகளால் அடித்தார்கள். கால்களால் உதைத்தார்கள். பக்கத்திலிருந்த மரங்களைப் பிடுங்கிச் சாடினார்கள். மேகங்கள் மோதி இடிப்பது போல, அவர்களுடைய தோள்கள் மோதி ஒலித்தன.

சிறிது நேரத்துக்கெல்லாம் பீமனின் தாக்குதலைத் தாங்க முடியாமல் இடிம்பன் களைத்துப் போனான். பீமனின் தாக்குதலால் கரியமலையில் செங்காந்தள் மலர்கள் பூத்தது போல், மலைபோன்ற இடிம்பனின் உடம்பிலிருந்து இரத்த ஆறுகள் வழிந்தன. கடைசியாக பீமன் குத்திய குத்தால்

இடிம்பன் இரணியாசுரன் போலத் தரையில் விழுந்து உயிர்விட்டான். பீமனோ இரணியனைக் கொன்ற நரசிங்கமூர்த்தி போல களைப்பு சிறிதும் இல்லாமல் நின்றான்!

பீமனுடைய பலத்தைக் கண்டு குந்தி மகிழ்ந்தாள். பெரிய யானையைத் தனது குட்டி கொன்றதைக் கண்ட பெண்சிங்கம் போல, இடிம்பனைக் கொன்ற பீமனைப் பார்த்தாள் குந்தி. பீமனின் சகோதரர்களும், 'பீமன் இனிமேல் நமது பகைவர்களை நிச்சயம் அழிப்பான்!' என்று மனக்கலக்கம் தெளிந்து மகிழ்ந்தார்கள். இடிம்பி தனது தமையனின் இறப்பால் வருந்தினாலும், அதேசமயம் பீமனின் ஆற்றலை நினைத்து களிப்படைந்தாள்.

அப்போது கதிர்களைப் பொன்மயமாக விரித்துக் கொண்டு உதயசூரியன் எழுந்தான்.

அந்தக் காலை வேளையின் அழகில் பீமன் இடிம்பியை நோக்கினான். தன்மீது ஆசை கொண்ட உள்ளத்தோடு நோக்கும் அவளுடைய கண்களின் குறிப்பை உணர்ந்தான். உடனே அவளைப் பார்த்து பீமன், "மாண்டு போன இடிம்பனின் தங்கையே! எங்கள் தமையனார் இன்னும் மணம் செய்து கொள்ளவில்லை. தவிர நாங்கள் மனிதர்கள். நீயோ அரக்கமகள். இவற்றை எண்ணிப் பார்த்து, நான் உன்னை விவாகம் செய்து கொள்வது முறையில்லை என்பதைப் புரிந்து கொள். முன்பு க்ஷத்திரிய குலத்தில் தோன்றிய வில்வீரனான ஸ்ரீராமபிரான் அரக்கி சூர்ப்பணகையைத் திருமணம் செய்ய மறுத்து, அவளை வெறுத்து ஒதுக்கியதையும் அறிந்து கொள்!" என்றான்.

பீமன் இடிம்பியிடம் சொன்னதைக் கேட்ட குந்தி, அவன் அவளை மணந்து கொள்வது பற்றி தனது மற்ற நான்கு குமாரர்களுடன் கலந்து ஆலோசித்தாள். பிறகு மகனை நோக்கி, "கோபித்த பகைவரின் உயிரை வாங்குகிற மகனே! தம்மிடம் குறைவேண்டியவரை மறுத்துப் பேசுவது முறையில்லை. மனிதர்களுக்கு யாரிடத்திலும் தருமசிந்தனை ஏற்பட வேண்டும். உனது தமையன் தருமபுத்திரன் சொற்படி நீ இவளை மணந்து கொள்வது உனக்குத் தகும்!" என்றாள் அவள்.

தாயின் வார்த்தையை பீமன் தேவவாக்கு போல அக்கணமே ஏற்றுக் கொண்டு இடிம்பியை மணந்தான்.

அதன்பின் பாண்டவர்களும் குந்தியும் இடிம்பியோடு அங்கிருந்து புறப்பட்டுப் போய் ஒரு குளக்கரையில் தங்கினார்கள்.

அப்போது அவர்களின் கவலையைப் போக்குவதற்காக வியாசமுனிவர் வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட பாண்டவர்கள் மோட்சம் அடைந்தவர்களைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி கொண்டார்கள். மிகவும் பக்தி சிரத்தையோடு அவரை வணங்கித் துதித்தார்கள்.

தம்மை வணங்கிய பாண்டவர்களிடம், ''பாண்டு குமாரர்களே! நீங்கள் இங்கிருந்து இந்தக் காட்டைக் கடந்து சென்று, இங்குள்ள சாலிகோத்திரமுனிவரின் வனத்தில் சிலநாட்கள் தங்கியிருங்கள். பிறகு, பார்த்தவர்கள் நம்பும்படியாக பிராமண வேஷம் தரித்து வேத்திரகீயத்தை இனிது சேருங்கள்!'' என்று சொல்லிவிட்டு, வியாசமுனிவர் விடைபெற்று அங்கிருந்து மறைந்தார்.

வியாசமுனிவரின் கட்டளைப்படி பாண்டவர்கள் தாயையும் இடிம்பியையும் அழைத்துக் கொண்டு அந்தக் கொடிய காட்டைக் கடந்து சென்று, சாலிகோத்திரமுனிவரின் வனத்தை அடைந்தார்கள். அங்கேயே தங்கி வசிக்கத் தொடங்கினார்கள்.

இடிம்பி தனது மாமியாரை தினமும் வணங்கிப் பணிவிடைகள் செய்து வந்தாள். மீதிநேரத்தில் இரவும் பகலும் பீமனோடு உல்லாசமாக பொழுது போக்கினாள். பீமனும் இடிம்பியும் கந்தனும் வள்ளியும் போல கஸ்தூரி மணக்கும் கொடி வீடுகளிலும், பூமணம் கமழும் பெரிய சோலைகளிலும், தேன் சுனைகள் உள்ள பெரிய மலைகளிலும் தங்கி ஆசைமிகக் காமஇன்பத்தை அனுபவித்தார்கள்.

பீமனிடம் பெற்ற இன்பத்தால் இடிம்பிக்கு கரியமலை போல் மேனி கொண்ட கடோத்கஜன் பிறந்தான்!

ஆதிவராகமூர்த்தி பெற்ற நரகாசுரனைப் போன்ற கடோத்கஜன் பாண்டவர்களை வணங்கி, ''நற்குணத் தந்தையர்களே! நீங்கள் என்னை நினைக்கும்போது நான் வருவேன். அப்போது அங்கே எனக்கு நீங்கள் சொல்லும் செயலை உடனே செய்து முடிப்பேன். இனி எனக்கும் என்

தாயுக்கும் விடைகொடுத்து அருளுங்கள்!'' என்று கூறி, அவர்களிடம் விடைபெற்று தன் தாய் இடிம்பியுடன் இடிம்பவனம் போய்ச் சேர்ந்தான்.

இடிம்பியும் கடோத்கஜனும் போன பிறகு, பாண்டவர்களும் குந்தியும் பிராமண வேஷத்தோடு வேத்திரகீய நகரத்துக்குச் சென்றார்கள்.

வேத்திரகீய பிராமணர்கள் அவர்களைக் கண்டு வரவேற்று, ஒருவர்க்கொருவர் முந்திக் கொண்டு உபசார வார்த்தைச் சொன்னார்கள். அவர்களில் சிறந்த ஒரு பிராமணன் எல்லோரையும் விலக்கிவிட்டு, பாண்டவர்களையும் குந்தியையும் அரசமாளிகையைப் போன்ற தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு சென்றான்.

ஒருநாளைப் போலவே எல்லா நாட்களும் வேத்திரகீய நகரத்துப் பிராமணர்களால் அன்பாக உபசரிக்கப்பட்டு, பாண்டவர்களும் குந்தியும் அந்நகர விருந்தினர்களாக வசித்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் விருந்து உண்டு வாழ்ந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் ஒரு வீட்டுக்கு விருந்துக்குப் போனார்கள். அவ்வீட்டுப் பெண் அவர்களை வரவேற்று இன்முகத்தோடு விருந்து படைத்தாள். பாண்டவர்களும் குந்தியும் விருந்துண்டபின் களைப்பாறத் தொடங்கினார்கள்.

அப்போது அந்தப் பெண் பக்கத்து அறையில் அழுது புலம்புவது கேட்டது. உடனே பாண்டவர்களும் குந்தியும் அந்த அறைக்குச் சென்றார்கள். அங்கே துன்பத்துடனிருக்கும் கணவனின் மடியிலிருக்கும் தனது இருபிள்ளைகளையும் கட்டிக் கொண்டு அவள் அழுவதைக் கண்டார்கள்.

குந்தியால் அவளின் அழுகையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. குந்தி அவளை நோக்கி, ''சிறந்த பார்ப்பணன் மனைவியே! ஏன் நீ கலங்கிப் புலம்புகிறாய்? என்ன காரணம் சொல்!'' என்று கேட்டாள்.

அவள் அதைக்கேட்டு எழுந்து, குந்தியின் அருகே வந்து மெல்லிய குரலில் நெஞ்சம் தழுதழுக்க, ''கோபாக்கினி வீசும் கண்கள் கொண்ட பகாசுரன் என்னும் அரக்கன் ஒருவன் இந்த நகரத்துக்குப் பக்கத்தில் உள்ள காட்டில்

வசித்து வருகிறான். அவன் கருணையில்லாத மனமும், கெட்ட ஒழுக்கமும், கோர உருவமும், கர்ஜனைக் குரலும், பயனில்லாத பேச்சுகளும், புலால் நாற்றம் வீசும் உடம்பும் கொண்டவன். மனித மாமிசத்தைக் கண்டால் தின்னாமல் விடமாட்டான். இருளின்மேல் இரண்டு பிறைகள் தோன்றுவது போல, இரண்டு பக்க கடைவாயிலும் வெள்ளொளி வீசும் கோரத்தந்தங்களையுடையவன். யமனும் அவனைக் கண்டு அஞ்சி ஓடுவான். அந்தப் பகாசுரன் முன்பெல்லாம் சதா இந்த நகரத்துக்கு வந்து எங்களூரில் பலரைப் பிடித்துக் கொன்று தின்று வந்தான். அப்போது ஊர் பிராமணர்களும் எனது தகப்பனாரும் அவன் இங்கே வந்து செய்யும் அட்டகாசங்களுக்குப் பயந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அம்முடிவோடு அந்த அரக்கனைப் பயத்துடனே வணங்கி, ஒரே சமயத்தில் எங்கள் எதிரிலேயே பலரைக் கொன்று நீ புசிப்பது தருமம் இல்லை. இன்றுமுதல் என்றைக்கும் வரிசைக்கிரமப்படி எங்கள் வீடுதோறும் ஒரு வண்டி அறுசுவை உணவும், எங்கள் குல மனிதரில் ஒருவரை பலியாகவும் உனக்குத் திறைப் பொருளாகக் கொடுத்து அடிமைத் தொழில் செய்கிறோம், என்றார்கள். பகாசுரன் அப்பேச்சை ஒப்புக் கொண்டு நகரத்துக்கு வராமல் காட்டிலேயே வசித்து வருகிறான். நாங்களும் ஒவ்வொரு வீடாக நாள்தோறும் ஒரு நரபலியும் ஒருவண்டி அறுசுவை உணவும் அவனுக்குக் கொடுத்து வருகிறோம். அந்த நியமத்தின்படி இன்றைக்கு என் வீட்டு முறை. ஆகவே, இராகுகேது பாம்பினால் பிடிக்கப்பட்ட சந்திரன் போல என் உயிர் சோர்ந்தது. என் மனமும் ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் தவிக்கிறது. எனது ஒரே மகளான இவள் வேறொருவர் மனைவி . எனது ஒரே மகனான இவனோ எங்கள் குலத்தின் வாரிசு. இந்த உலகத்தில் எனக்கு வேறொருவரும் துணையில்லை. அதனால் என்துன்பம் அதிகமாகிவிட்டது. நான் என்ன செய்வேன்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எனது கணவரைப் பலிகொடுக்க நினைத்தால் என் நெஞ்சம் அவலமடைகிறது. நானே பலிக்குச் சென்றால், வயதான இவருக்கு உதவ என்னைவிட இவர்மேல் அன்புடையவர் வேறு யாரும் இல்லை! இருக்கவும் முடியாது!'' என்று சொல்லி, வெள்ளம் போல் கண்ணீர்விட்டாள்.

அதைக்கேட்டு குந்தி மிகவும் மனம் வருந்தினாள். பின்பு பார்ப்பாத்தியைத் தேற்றத் தொடங்கி, அவளைப்

பார்த்து குந்தி, "பார்ப்பணப் பெண்ணே! கவலைப்படாதே! கண்ணீர் விடாதே! எனது பிள்ளைகளில் அநுமனைப் போன்ற பராக்கிரமசாலி ஒருவன் இருக்கிறான். அவன் இருக்கும் வரை எந்த அரக்கனையும் கண்டு அஞ்சத் தேவையில்லை. இரவில் சஞ்சரிக்கின்ற அந்தக் கொடிய பகாசுரனின் மூளைசிதறும்படி அவன் உடம்பைப் பிளந்திடுவான். மான் போன்றவளே! இன்னும் அச்சம் ஏன்? பராக்கிரமத்தால் அக்கினியைவிட கொடியவர்களும், கைதேர்ந்த வில்வீரர்களும், பொறாமை இல்லாதவர்களும், நற்குணம் உடையவர்களுமாகிய ஐந்து பிள்ளைகள் எனக்கு இருக்கிறார்கள் இல்லையா? எங்கள் எல்லோரையும் காப்பாற்றி வரும் அந்த ஒரு குமாரனே இந்நகரத்து தெய்வப் பார்ப்பணர்களையும் காப்பாற்றி, அவர்களின் வருத்தத்தைப் போக்குவான். அதற்கான செயலை இன்றே அவன் செய்வான்!" என்றாள்.

குந்தி அப்படிச் சொன்னதும் அந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் மகிழ்ந்தார்கள். உடனே அறுசுவை உணவை ஒரு மலையளவு சமைத்தார்கள். எல்லோரும் வயிறுபுடைக்க உண்டார்கள். மீதியிருந்த உணவை ஒரு வண்டி நிறைய ஏற்றினார்கள்.

பீமன் தாயின் சொற்படியே பகாசுரனைச் சந்திக்கத் தயாரானான். அவன் செந்நிற ஆடையணிகளால் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டான். உணவு ஏற்றிய வண்டியை தள்ளிக் கொண்டு காட்டுக்குச் சென்றான். அங்கே பகாசுரன் எங்கிருக்கிறான் என்று அறிய வண்டியில் எழுந்து நின்று பார்த்தான்.

களிந்தமலையில் தோன்றி வெள்ளமாக ஓடிவரும் யமுனையின் கரையில் உள்ள மலைக்குகை ஒன்றில் பகாசுரன் இருந்தான். அவன் இன்னும் தனக்கு இரை வராததால் ஏற்பட்ட கோபத்தால் பற்களோடு நாக்கையும் நறநறவென்று கடித்தான். மனம் காய்ந்து வேகப் பெருமூச்சுவிட்டான். பசியால் அவன் துடித்து இரை வருகிறதா என்று சுற்றிலும் அடிக்கடிப் பார்த்தான்.

தன்னை அநேக நரிகள் தோத்திரம் செய்ய கழுகுகளின் நிழலில் எலும்பாசனத்தில் பார்ப்பவர்கள் அஞ்சும்படியான கோரமுகத்துடன் உட்கார்ந்திருந்த பகாசுரனைக் கண்டதும்

பீமன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன், 'இப்போதே இவனைக் கொன்றுவிடலாம். ஆனால், இந்த உணவு அசுத்தமாகிவிடுமே' என்று நினைத்தான். மறுகணமே அவன் வண்டியிலேயே முன்பின்னாகத் திரும்பி உட்கார்ந்து அந்த உணவைச் சாப்பிடத் தொடங்கினான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பகாசுரன் பசியை மேலும் தாங்க முடியாமல் நகரத்துக்கே போவதென்ற முடிவோடு குகையைவிட்டு வெளியே வந்து நடந்தான். சிறிது தூரத்தில் பீமன் வண்டிச் சோற்றை உண்டு கொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே ஓடி வந்து பீமனின் பின்னால் நின்றபடியே, "அடே! புலிக்காக வைத்திருந்த மாமிசத்தைப் பூனை தின்பது போல, எனக்காக அனுப்பிய வண்டிச் சோற்றையும் உண்டால் உனக்குச் செரிக்குமோ? என்னை எளியவன் என்றா எண்ணினாய்? நான் அப்படியில்லை என்பதை இப்போதே காட்டுகிறேன் பார்!" என்று கர்ஜனை புரிந்தான்.

அடுத்தகணம் மலைமேல் இடி இடித்தது போல, பகாசுரன் பீமனின் பிடரி ஒடியும்படி பருத்த வலிய தனது கைகளால் மாறிமாறி அடித்துத் தனது கொடிய கோபத்தைக் காட்டினான்.

பகாசுரன் அப்படி பீமனின் பிடரியிலும் விலாவிலும் கைமுஷ்டியால் குத்தக் குத்த, பீமனின் தொண்டையிலே விக்கும்படி நின்றிருந்த பெரிய சோற்றுருண்டைகள் பகபகவென்று அவன் வயிற்றின் உள்ளே இறங்கின. பீமனும் மகிழ்ச்சியோடு பகாசுரனின் குத்துக்களைப் பொருட்படுத்தாமல் வண்டி சோற்றையும் தின்று தீர்த்தான்.

அதுகண்டு பகாசுரன், "நீ சாப்பிட்ட உணவு எங்கே போய்விட்டது? உன் வயிற்றினுள்ளே தானே? அந்த உணவோடு உனது உடம்புச் சதை முழுவதையும் சாப்பிடுவேன்!" என்றான்.

பகாசுரன் அவ்வாறு சொன்னாலும், பீமனைக் குத்திக் குத்திக் கைகள் சோர்வுற்றதால் கொடிய கோபமும் சிறிது குறைந்து நின்றான்.

வண்டி சோற்றையும் தின்றுவிட்ட பீமன் பெரிய ஏப்பம் விட்டான். பிறகு, கொஞ்சமும் பயம் இல்லாமல்

பீமன், நடுஉச்சி சூரியனைப் போல உக்கிரத்தோடு எழுந்து நின்று, பகாசுரனை நோக்கி, ''உலகத்தில் உள்ள எல்லா அரக்கர்களிலும் வலிமையுடைய நீ, வீணாக ஏன் பேசிக் கொண்டு நிற்கிறாய்? அதை விட்டுவிட்டு என்னோடு சமமாகப் போர் செய்ய, உனது கச்சையை வலிமையோடு வரிந்து கட்டிக் கொண்டு தயாராகு. இனி வீண் வார்த்தைப் பேசிப் பயன் என்ன? நீ அரக்கன். நான் மனிதன். ஆயினும் நீ கற்றுத் தேர்ந்த மற்போரையோ, ஆயுதப்போரையோ செய்து போரில் என்னை வெல்வதற்கு உனக்கு மனத்துணிவு இருந்தால், என்முன் வந்து போர் செய். வலிய இடிம்பனை வென்று உன்னைக் கொல்வதற்கு இன்று வந்தேன்!'' என்று வீரவாதம் பேசிக் கொண்டே, தனது இரண்டு கைகளையும் தட்டி அரக்கனின் மார்பிலே குத்தினான்.

பிறகு பீமனும் பகாசுரனும், மலை மலையோடு போர் செய்ய நிச்சயித்தது போல, மண்டல கதியால் மாறிமாறி ஒருவரையொருவர் கொடூரமாகத் தாக்கி, மல்யுத்தம் புரிந்தார்கள். கைகுத்துச் சண்டை போட்டார்கள். தங்களுக்குத் தெரிந்த போர் வகைகள் எல்லாவற்றாலும் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கினார்கள். கொடிய ஆண்சிங்கம் போன்ற அவர்கள் இருவரும் தங்கள் கைகள் கைகளோடு பின்னவும், கால்கள் கால்களோடு பிணங்கவும், தலை தலையோடு மோதவும், மார்புகளைச் சேர்த்தும், வளர்ந்த புஜங்களைச் சேர்த்தும் ஒருவரையொருவர் எதிர்த்துத் தாக்கி மற்போர் செய்தார்கள். பிறகு மரங்களைப் பிடுங்கி வேகமாக ஒருவர்மேல் ஒருவர் எறிந்து தாக்கினார்கள். பெரிய கற்களை எடுத்து ஒருவர்மேல் ஒருவர் வீசினார்கள். வீரவாதம் பேசிக் கொண்டே போர் செய்தார்கள்!

கடைசியாக வாயுகுமாரனான பீமன் தனது கால்களால் பகாசுரனை வெகுஉக்கிரத்தோடு எட்டி உதைத்தான். அந்த உதையால் பகாசுரனின் விலாஎலும்புகளும், பரந்த மார்பும், முதுகும், கன்னங்களும், தோள்களும், கடைவாய்க் கோரத்தந்தங்களும் ஒடிந்து போக, அவன் தெம்பற்றுச் சோர்ந்து திகைத்து நின்றான். அடுத்தகணம் யானையின் தலையில் சிங்கம் பாய்ந்து ஏறி உட்கார்ந்தது போல, சோர்ந்து நின்ற பகாசுரனைக் கீழே தள்ளி அவன் மேல் ஏறி உட்கார்ந்தான் பீமன். அவன் மார்புமேல் மண்டியிட்டு



உட்கார்ந்து கொண்டவன், தனது சிவந்த ஒரு கையால் அவனுடைய பெரிய கழுத்தைப் பலமாகத் திருகி தலையைத் துண்டித்து வெகுதூரத்திலே வீசி எறிந்தான். பகாசுரனின் முண்டத்தை தான் கொண்டு வந்திருந்த வண்டியிலே எடுத்துச் சென்று மயானத்தில் எறிந்தான்.

பிறகு, பீமன் பூக்கள் நிறைந்த நீரோடையிலே குளித்தான். அப்போது சூரியன் அஸ்தமானான்.

நேரே தான் தங்கியிருந்த பிராமணரின் வீட்டுக்குச் சென்றான் பீமன். அவன் பகாசுரனைக் கொன்றுவிட்டு வந்தது கண்டு எல்லோரும் விளக்கேற்றி நகரத்தை அழகு படுத்தி மகிழ்ச்சியுடன் வெற்றிவிழா கொண்டாடினார்கள்.

ஈசனும் பார்வதியும் போல இல்லறத்தில் நல்லறம் செய்து வரும் அந்த தம்பதியை முதலில் பீமன் வணங்கினான். பின் தாயையும் தமையனையும் வணங்கினான். தம்பியர்கள் தன்னை வணங்க, மகிழ்ந்து அவர்களை அன்போடு தழுவிக்கொண்டான்.

அந்த வீட்டு அந்தணனும், நகரத்து அந்தணர்களும் பீமனை வாழ்த்திப் புகழ்ந்தார்கள். கொடிய பகாசுரனைக்

கொன்றதை எண்ணி அவர்கள், ‘உலகத்தை வெளிப் படுத்திய அழகிய நாபியை உடைய திருமாலோ இவன்?’ என்று வியந்து, பீமனைக் கண்கள் களிக்க கண்டு மகிழ்ந்து கொண்டாடினார்கள்!

5. திரெளபதி சுயம்வரம்

பஞ்ச பாண்டவர்களும் குந்தியும் வேத்திரகீயத்தில் இன்பத்துடன் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கையில், பாஞ்சால தேசத்து அதிபதி துருபதனும் அவர்கள் இறந்து போனதாக நினைத்து வருந்தினான்.

துருபதன் அப்படி நினைத்தாலும் அவர்கள் இறக்கவில்லை என்ற சந்தேகமும் அவனுள் சதா இருந்து கொண்டிருந்தது. முன்பு திரெளபதி பிறந்தபோது வானில் கேட்ட அசரீரியையும், அவள் தோன்றிய விதத்தையும், அரசகுரு சொன்ன உறுதியையும் நினைத்துப் பார்த்த துருபதன், அவர்கள் இறக்கவில்லை என்பதை நிச்சயித்துக் கொண்டான். அத்துடன் திரெளபதி அர்ச்சுனனுக்கே உரியவள் என்ற தீர்மானத்திலும் உறுதி கொண்டான்.

இவ்வாறு எண்ணிய துருபதன் உடனே திரெளபதிக்குச் சுயம்வரம் நடத்த முடிவு செய்தான். அதைக் குறித்து எல்லா தேசத்து அரசர்களுக்கும் ஓலை அனுப்பினான்.

திரெளபதியின் சுயம்வரத்துக்குக் குறித்த நாளில் பல தேசத்து மன்னர்களும், அவள் தங்களுக்கே கிடைப்பாள் என்ற ஆசையோடு வந்து சுயம்வர மண்டபத்தில் கூடினார்கள்.

பாண்டவர்களும் குந்தியும் அச்செய்தியை பாஞ்சாலதேசம் போய்த் திரும்பிய அந்தணன் ஒருவன் சொல்லத் தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்களும் சுயம்வரத்துக்குப் புறப்பட்டு காட்டு வழியாகச் சென்றார்கள். அப்போது நாரதனைப் போன்ற வியாச முனிவர் அவர்கள் முன்னே தோன்றினார்.

எதிரே தோன்றிய வியாசரைப் பாண்டவர்கள் வணங்கினார்கள். தம்மை வணங்கிய பாண்டவர்களை வாழ்த்திவிட்டு, வியாசர் அவர்களை நோக்கி, “நீங்கள் எதிரே

வந்ததால் வாழ்வு பெற்றீர்கள். துருபதராஜன் உங்களுடன் திருமண சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள விரும்பி, முன்பு யாகத்தால் திரௌபதியைப் பெற்றான். அக்கன்னிகை நாளையே மணமாலை சூட்டுவாள். இன்றைய பகலும் இரவும் எங்கும் தங்காதீர்கள். வேகமாக நடந்து போய் அந்தச் சுயம்வர மண்டபத்தைச் சேருங்கள். நாளைதான் திரௌபதியின் சுயம்வரம். நாளைக்கு அவளுடைய மணமாலையைப் பெற்ற பின்பு, அங்கு உங்களின் உண்மையான வடிவத்தை வெளிப்படுத்துங்கள். அதுவே ஆண்மைக்குரிய செயல்!'' என்று சொல்லி விடைபெற்று மறைந்தார்.

வியாசர் மறைந்த பிறகு அவர்கள் தொடர்ந்து வேகமாக நடந்தார்கள். பகல் மறைந்து இரவு வந்தது. அர்ச்சுனன் கையில் தீவட்டிக் கொளுத்திப் பிடித்துக் கொண்டு முன்னே வழிகாட்டிச் சென்றான். மற்றவர்கள் அவனைத் தொடர்ந்து நடந்தார்கள்.

காட்டுவழியைக் கடந்து கங்கைக் கரையைப் பாண்டவர்கள் அடைந்தார்கள். அப்போது வஞ்சனைக்கும் மாயவித்தைக்கும் தலைவனான சித்ரரதன் என்னும் கந்தருவன் அவர்களை நெருங்கி வலுவில் போருக்கு அழைத்தான். அதனால் அர்ச்சுனன் சினமடைந்தான். உடனே வில்லை வளைத்து ஆக்கிநேயாஸ்திரத்தினால் சித்ரரதனின் அழகிய தேரை ஒரே கணத்தில் கருகச் செய்தான். சித்ரரதன் தோற்றான்.

சித்ரரதன் அர்ச்சுனனின் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தான். தான் கொண்ட பகையைவிட்டு அவனுக்கு நண்பனானான். பிறகு, அவர்களுக்கு வழிகாட்டி உற்கசதீர்த்தத்தின் கரையிலே உள்ள தௌமியமுனிவரின் இருப்பிடத்தில் விட்டுவிட்டு விடைபெற்று திரும்பிச் சென்றான்.

பாண்டவர்கள் தௌமியமுனிவரைக் கண்டு வணங்கினார்கள். பின் அம்முனிவருடன் சென்று பாஞ்சால தேசத்து எல்லையை அடைந்தார்கள்.

அப்போது ஆதவன் கீழ்த்திசையில் எழுந்தான். அவன் எழவும் இரவுப் பொழுதும், அவ்விரவில் கொட்டும் பனியும் ஒன்றாக மறைந்தன; பூவுலகத்தவர்களின் மனமும்

கண்களும் மலர்ந்தன; திசைகளும் பூமியும் வெளிச்சம் அடைந்தன; தடாகங்களும் சோலைகளும் மலர்ச்சி பெற்று விளங்கின; பறவைகளும் விலங்குகளும் ஆரவாரம் செய்தன; சக்கரவாகப் பறவைகளும் அவற்றின் பெடைகளும் ஒன்றோடொன்று கூடின; முரசும் சங்கும் முழங்கின.

நறுமணம் சுமந்த இனிய தென்றல் பாண்டவர்களை நோக்கி, ''மலைகளையும் காடுகளையும் கடந்து என் நண்பன் அக்கினியின் மகள் திரௌபதியை மணம் புரிந்து உதவ வந்தீர்கள். உங்கள் வரவு மிகவும் நல்லது. நீங்கள் வழி நடந்து வந்ததால் மிகவும் களைத்துவிட்டீர்கள்!'' என்று கூறியபடி, மகிழ்ச்சியோடு இனிய செங்கழுநீர்மலர்களின் வாசனையை மேலே வீசி அவர்களுடைய வழிநடை வருத்தத்தைத் தணிவித்தது.

தென்றலின் சுகத்தை அனுபவித்துக் கொண்டே அவர்கள் மேலே நடந்தார்கள். அப்போது அவர்கள் வழியிலே இருந்த குளத்தில் அரும்பாய் நின்ற தாமரை மலரைச் சூழ்ந்து தேனுண்ண பல வண்டுகள் காத்திருக்க, ஒரு வண்டு தனது சிறகால் இதழ்களை நெகிழ்த்து மலரினுள் புகுந்து தேன் உண்டதைக் கண்டார்கள். ஆற்றங் கரையில் உள்ள மாமரத்திலிருந்து ஒரு மாங்கனி நீரில் விழ, அதனைப் பல மீன்கள் போட்டிப் போட்டுக் கவ்வ முனைந்தபோது, எங்கிருந்தோ ஒரு வாளைமீன் நீரைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து போய் அந்த மாங்கனியைக் கவ்விக் கொண்டதையும் பார்த்தார்கள். மற்றும், 'கருங்கூந்தலுடைய பூங்கொடி போன்ற திரௌபதியின் திருமணக் காட்சியைக் காண்பதற்கு யானைப்படை கொண்ட அரசர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். அவளை மணந்து கொள்வதற்கு வேகமாக நீங்கள் வாருங்கள்!' என்று உரத்துக் கூவுகிற குரலால் தங்களை அழைப்பன போன்ற குயில்களின் குரலையும் பாண்டவர்கள் கேட்டார்கள்.

மேலும் பாண்டவர்கள், 'பாஞ்சால மன்னன் மகள் திரௌபதியின் திருமணத்துக்கு அதிக நாட்கள் இல்லை. இன்றைக்கே அது நடக்கும். பாண்டவர்களே அவளை மணம் செய்து கொள்வார்கள். அதனால் மற்ற மன்னர்கள் தங்களுக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் ஓடிப் போவார்கள். இது நிச்சயம்!' என்று எண்ணி, அதனால்

உண்டான மகிழ்ச்சியோடு கூத்தாடும் மயில்களைக் கண்டு மனம் களிக்க நடந்தார்கள்.

இன்னும் சோலைகள் பூத்த மலர்களில் எல்லாம் வண்டுகள் தங்குவதையும், குளங் குட்டைகளில் எல்லாம் பறவைகள் தங்குவதையும், விலங்குகள் ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் குலாவுவதையும், மரங்களில் எல்லாம் கொடிகள் தழுவுவதையும் பார்த்துக் கொண்டே, அவற்றை நல்ல சகுனமாகக் கருதி மகிழ்ச்சியோடு பாண்டவர்கள் வேகமாக நடந்தார்கள்.

விரைவாக நடந்த பாண்டவர்கள், திருமாலின் சொரூபம் போல தேஜோமயமாகப் பூர்ணகும்பங்களாலும் பொற்கோபுரங்களாலும் அழகாக உயர்ந்து, அகழி சூழ நிற்கும் பாஞ்சால நகரத்தின் மதிலைக் கண்டார்கள்.

பாண்டவர்கள் மேலும் வேகமாக நடந்து சென்று மதிலைக் கடந்து நகரத்துக்குள் நுழைந்தார்கள். அந்நகரின் எல்லா இடங்களிலும் மங்கல முரசங்கள் ஒலித்தன. வேறு பல வாத்தியங்களும் முழங்கின. சங்குகள் ஆரவாரித்தன. அப்போது நால்வகைச் சேனைகளும் எங்கும் பரவிச் சூழ்ந்து நிற்க, மன்னர்கள் நகரின் பலவிடங்களையும் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். பாண்டவர்களும் அவர்களோடு கலந்து சென்றார்கள்.

நகர வீதிகளின் மாடமாளிகைகளில் எல்லாம் வானத்தை முட்டிப் பறந்து கொண்டிருந்த பட்டு வண்ணக் கொடிகள், திரௌபதியின் சுயம்வரத்துக்கு விரைந்து வரும்படி பாண்டவர்களைக் கைநீட்டி அழைப்பது போலப் பறந்தன.

பாண்டவர்கள் நகரின் கடைவீதிகளையும், அங்குள்ள செல்வங்களையும், மற்ற வீதிகளையும் பார்த்துக் கொண்டே சென்று, கடைசியாக பார்க்கவன் என்னும் குயவனுடைய வீட்டை அடைந்தார்கள். பிறகு, அந்தக் குயவனின் வீட்டில் தங்களின் தாய் குந்தியைத் தங்கச் செய்துவிட்டு, தௌமியமுனிவருடன் சுயம்வர மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அதேசமயம், தான் பஞ்சபாண்டவர்களுக்கு உரியவள் என்று முன்பு சோதிடர்கள் சொன்னதை எண்ணி திரௌபதி

மகிழ்ச்சியுடன் அந்தப்புரத்தில் இருந்தாள். ஆனாலும் அவர்கள் அரக்கு மாளிகையில் இறந்துவிட்டார்களோ என்று அடிக்கடி சந்தேகம் கொண்டு மனம் துடித்தாள். அப்போதெல்லாம் அவள் தோழிகள் பாண்டவர்கள் இறக்கவில்லை என்று சோதிடர்கள் கூறியதை எடுத்துச் சொல்லி அவளுக்குத் தேறுதல் அளித்தார்கள். அத்தேறுதலால் மனத் தளர்ச்சி நீங்கி திரௌபதி மீண்டும் பாண்டவர்களை எண்ணி மனக் களிப்படைந்தாள். பாண்டவர்களை எண்ணி மகிழ்ந்தாலும் திரௌபதி அர்ச்சுனன் மேல்தான் அதிக மையல் கொண்டு மகிழ்ச்சியடைந்தாள். அதுமட்டுமில்லை. அப்போது அவள் தன் மனத்தில், 'என் தந்தையின் ஆசைப்படி அர்ச்சுனனை மணப்பதற்காகவே நான் யாகாக்கினியில் தோன்றினேன். அந்த அர்ச்சுனன் இந்தச் சுயம்வர மண்டபத்துக்கு வந்து என்னைத் திருமணம் புரிந்து கொள்ளாமல் போவானானால், திரும்ப நான் அக்கினியிலே பிரவேசித்துவிடுவேன்!' என்று எண்ணினாள்.

இவ்வாறெல்லாம் அர்ச்சுனனையே எண்ணி மனம் உருகிக் கொண்டிருந்த திரௌபதியை, அவளுடைய தோழிகள் புண்ணிய தீர்த்தங்களால் குளிப்பாட்டினார்கள். அவளுக்குச் சிறந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அழகாக அணிவித்தார்கள். அகில்மணம் வீசும் மலர் மாலையை அவள் கழுத்திலும் கூந்தலிலும் பாங்காகச் சூட்டினார்கள். அந்தத் தோழிப்பெண்கள், திரௌபதியைக் காணும் புருஷர்கள் மதி மயங்கும்படி அலங்காரம் செய்வித்தனர்.

அலங்கரிக்கப்பட்ட திரௌபதியை நோக்கிச் செவிலித் தாய்மார்கள், "அரசிளங்குமரி! ராஜகுமாரர்கள் எல்லோரும் சுயம்வர மண்டபத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். நீயும் வா!" என்று மகிழ்ச்சியோடு உபசாரமாகக் கூறி, அவளை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

திரௌபதி சுயம்வர மண்டபத்தில் கையில் மாலையுடன் நுழைந்ததுதான் தாமதம். அவளைக் கண்ட அரசர்கள் எல்லோரும் மன்மத பாணங்களால் தாக்கப்பட்டு தீப்பட்ட நெய்போலக் காமத்தால் நெகிழ்ந்து உருகினார்கள்.

மேகம் மூடிய சூரியனைப் போல் பார்ப்பண வேஷத்தில் தங்களின் எழில் மேனியை மறைத்துக் கொண்டு



மண்டபத்தில் அரசர்களுடன் உட்கார்ந்திருந்த பாண்டவர்களை, அவர்களிடம் அன்புமிக்க திரௌபதியின் கண்கள் தெரிந்து கொண்டனவோ? இல்லை; சூரியனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தாமரை போல அவள் கண்கள் அவர்களை எதிர்நோக்கினவோ? ஆமாம்!

அப்போது திரௌபதியின் தமையன் திருஷ்டத்யும்நன் ஆசனத்தைவிட்டு எழுந்து நின்றான். மண்டபத்தில் வீற்றிருந்த அரசர்கள் எல்லோரையும் பார்த்து, ''கலைஞானங்களில்

வல்லவர்களே! வில் இதோ இருக்கிறது. அம்புகள் இதோ இருக்கின்றன. குயவனின் சக்கரம்போல் வேகமாக வட்டவடிவத்தோடு சுற்றும் யந்திரத்தின் நடுவிலே லட்சியமும் அதோ விதானத்தில் காணப்படுகிறது. உங்களில் யார் அந்த லட்சியத்தை அம்பெய்து வீழ்த்துகிறார்களோ அவர்களுக்கே இந்தக் கன்னிகை உரியவள்!'' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

திரௌபதி தங்களுக்கே கிடைப்பாள் என்ற ஆசையோடு காமத்தால் நெஞ்சழிந்து மண்டபத்தில் உட்கார்ந்திருந்த அரசர்கள் எல்லோரும், திருஷ்டத்யும்நன் சொன்னதைக் கேட்டதும் பேரிடி கேட்ட நாகம் போல் மனம் கலங்கினார்கள். ஆனாலும் திரௌபதியிடம் வைத்த ஆசையால் தங்கள் திறமையை உணராது அம்பெய்து அந்த லட்சியத்தை வீழ்த்த புலியைப் பார்த்த குருடன் போல் துணிவு கொண்டார்கள்.

அதேசமயம் திரௌபதியின் கண்பார்வை போன்ற அம்புகளையும், அவளுடைய புருவம் போன்ற வலிய வில்லையும் பார்க்கும் போதெல்லாம் அந்த அரசர்களுக்கு ஏற்பட்ட மனக்கலக்கத்துக்கு அளவே இல்லை! ஆயினும் திரௌபதியை மணந்து கொள்ள வேண்டும் என்ற பேராசையால் மதிமயங்கி திருஷ்டத்யும்நன் சொன்ன செயலை முடிக்க மனங்கொண்டார்கள்.

வில்லில் நாணேற்றி அம்பு தொடுத்து லட்சியத்தை வீழ்த்தி திரௌபதியை மணக்க எண்ணிய அரசர்களை, திரௌபதிக்குச் செவிலித்தாயார்கள் அறிமுகம் செய்து வைக்கத் தொடங்கினார்கள்.

முதலில் அவர்கள் திரௌபதிக்குத் துரியோதனனைக் காட்டி, ''வலிய போருக்குரிய இந்த வில்லின் வலிமையைப் பார்த்து, தம்மால் இதனை வளைத்து அம்பெய்து லட்சியத்தை வீழ்த்த முடியாது என்பதைப் புரிந்து கொண்டதால், சினத்தால் நெஞ்சம் கொதிக்கத் திறமையுடையவர் போல் பொய்யான முகமலர்ச்சியுடன் சும்மா உட்கார்ந்திருக்கும் இவர், துரியோதன மகாராஜா!'' என்றார்கள்.

பின்பு துரியோதனனின் தம்பிமார்களைக் காட்டி, ''இவர்கள் துரியோதன மகாராஜாவின் தம்பியர்களான கொடிய துச்சாதனன் முதலானவர்கள்!'' என்றார்கள்.

அடுத்து சகுனியைக் காட்டி, ''காந்தார தேசத்து மன்னர் சகுனி இவர்தான். சூதாடுவதிலும் வஞ்சனைகள் புரிவதிலும் இவருக்கு அரசர்களுள் யாருமே நிகரில்லை!'' என்றார்கள்.

அசுவத்தாமனைச் செவிலித்தாய்மார்கள் திரௌபதிக்குச் சுட்டிக் காண்பித்து, ''அறிவாலும், போர் வலிமையாலும், சிறந்த ஒழுக்கத்தாலும், பிறப்பின் சிறப்பாலும், உடம்பின் ஒளியாலும், வில்லாற்றலாலும் புகழ்பெற்ற துரோணாச் சாரியாரின் புதல்வர் இவர். பெயர் அசுவத்தாமன். தேவர்களில் சிவபெருமானைச் சிறிதே இவருக்கு உவமையாகச் சொல்லலாம். மற்றபடி இவருக்குச் சமமானவர் உலகில் யாரும் இல்லை!'' என்றார்கள்.

கர்ணனை நோக்கி, ''இவர் கர்ணபூபதி. சத்தியத்துக்கும், பலத்துக்கும், நட்புக்கும், புகழுக்கும், நெஞ்சுறுதிக்கும், நல்லொழுக்கத்துக்கும், தேஜஸுக்கும், வில்லாற்றலுக்கும், தானத்துக்கும் உலகில் தமக்குத் தாமே நிகரானவர். அங்கதேசத்து மன்னர்!'' என்றார்கள்.

அடுத்து அவர்கள் பலராமனைக் காட்டி, ''யமுனையைத் தாமிருக்கும் இடத்துக்குத் தமது கலப்பை முனையால் இழுத்து வரச்செய்து, அந்நதிமங்கையால் கொடுக்கப்பட்ட நீலவஸ்திரங்களை உடுத்திருப்பவர் இவர். வசுதேவரின் புத்திரர். மகளிர் இன்பத்தில் களிக்கும் மனமுடையவர். இவர் பலராமன்!'' என்றார்கள்.

செவிலித்தாய்மார்கள் பிறகு கண்ணபிரானை திரௌபதிக்குக் காண்பித்து, ''இவர் கண்ணபிரான். இந்த உத்தம புருஷர் யதுவமிசம் முழுவதுக்கும் திலகம் என்னும்படி அலங்காரமாய் அக்குலத்தில் வந்து அவதரித்தவர். இடையர்களுடன் வளர்ந்தவர். யாரும் அறியமுடியாத பெரிய மாயவித்தையில் கைதேர்ந்தவர். தமது இளம்வயதிலேயே மாமன் கம்சனைக் கொன்றவர். அமராவதிப்பட்டணத்து கற்பகச்சோலை இவர் மனைவி வசிக்கும் அந்தப்புரத்தில் இருக்கும் சோலையாகும்!'' என்றார்கள்.

சாத்தகியைக் காட்டி, ''இவர் சாத்தகி. கண்ணபிரானின் தம்பி. போசகுலுத்துத் தலைவர்!'' என்றார்கள். சாத்தகிக்கு அப்பால் வீற்றிருந்த சிசுபாலனைத் திரௌபதிக்கு, ''இவர்

சிசுபாலன். கண்ணபிரானை நிந்தித்துப் பேசும் சொற்களையே தமது வலிமை என்று நினைப்பவர். சேதி தேசத்து அரசர்!'' என்று அறிமுகப்படுத்தினார்கள்.

சராசந்தனைத் திரௌபதிக்குக் காட்டி, ''போரிலே வில்லெடுத்துத் தம்மை எதிர்த்தோர் புறமுதுகிட்டு ஓடச் செய்யாமல் அந்தப் போர்க்களத்திலிருந்து இவர் திரும்பிச் செல்ல மாட்டார். சராசந்தன் என்னும் இவர் மதுராபுரியை விட்டு துவாரகை போய் நெடுங்காலம் வாழும்படி மாயக்கண்ணனைப் போரிலே வென்றவர்!'' என்றார்கள்.

அடுத்து பகதத்தனைப் பார்த்து, ''தமக்கு நிகர் யாருமில்லை என்று இறுமாப்புடன் இங்கே அமர்ந்திருக்கும் இவர் பகதத்தன். ஐராவதம் போன்ற யானைமேல் ஏறிப் போர்க்களம் புகுந்தால் இவரை எதிர்த்து ஜெயிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்று திரௌபதிக்கு அறிமுகம் செய்தார்கள்.

பிறகு சல்லியனைக் காட்டி, ''சல்லியன் என்னும் பெயருடைய இவர் அரசர்களில் சிங்கம் போன்றவர்!'' என்றும்; நீலனைக் காட்டி, ''தமது பகைவர்களைச் சுவர்க்கத்தில் சேர்க்கின்ற அழகுடைய இவர் நீலன்!'' என்றும்; பாண்டியனைக் காட்டி, ''இனிய தமிழ் மொழியை ஆராய்ந்து தேர்ந்த வலிமையுடைய பாண்டியர் இவர்!'' என்றும்; சோழனைக் காட்டி, ''சூரிய குலத்தில் தோன்றிய சோழர் இவர்!'' என்றும்; சேரனைக் காட்டி, ''அக்கினி குலத்தில் தோன்றி பதினான்கு உலகத்தவர்களாலும் புகழப் பெற்ற சேரர் இவர்!'' என்றும் செவிலித்தாய்மார்கள் திரௌபதிக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

மேலும் அவர்கள் பதினெட்டு தேசத்து மன்னர்களையும் அறிமுகப்படுத்திவிட்டு, கடைசியாக திரௌபதியை நோக்கி, ''அமுத மொழியாளே! அழகியே! நாகணவாய்ப் பறவையே! மயிலே! பாவையே! திரௌபதி! உன் சுயம்வர மாலை பெற வேண்டி இங்கே எல்லா தேசத்து ராஜாக்களும் வந்திருக்கிறார்கள். இவர்களில் யார் வில்வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து, தமது புஜபராக்கிரமத்தாலும் வில்லாற்றலாலும் லட்சியத்தை வீழ்த்துகிறாரோ, அவரே உனக்கு மணாளர். அவரைக் கணவராக உடனே நீ ஏற்றுக் கொள்!'' என்று கூறினார்கள்.

செவிலித்தாய்மார்களின் பேச்சைக் கேட்டு சில அரசர்கள் சோர்வடைந்தார்கள். அதேசமயம் சில அரசர்கள் ஊக்கத்தோடு எழுந்தார்கள்.

அப்போது சுயம்வர மண்டபத்தில் பிராமண வேஷத்தில் பாண்டவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்டு கொண்டான் கண்ணபிரான். உடனே அவன் திரௌபதியின் மணமாலையைப் பெற எண்ணி எழுந்திருந்த தனது யதுகுல அரசர்களைத் தடுத்து நிறுத்தினான். பாண்டவர்கள் மாறுவேஷத்தில் வந்திருக்கும் செய்தியை அவர்களுக்கும் பலராமனுக்கும் தெரிவித்தான்.

கண்ணபிரான் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் மற்ற தேசத்து அரசர்கள் திருஷ்டத்யும்நன் சொன்னதைச் செயல்படுத்த முயற்சித்து, கடைசியில் தோற்றுப் போய்த் திரும்பித் தங்கள் ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள்.

கடைசியாக பிராமண வேஷத்துடன் இருந்த அர்ச்சுனன் ஸ்ரீராமபிரானைப் போல எழுந்து நின்றான். திருஷ்டத்யும்நனை நோக்கி இடி போன்ற உரத்த குரலில், "க்ஷத்திரியருக்கு மட்டுமோ இந்தப் போட்டி? பிராமணர்களும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாமோ? அப்படிக் கலந்து கொண்டு லட்சியத்தை அம்பு எய்து வீழ்த்தினால் திரௌபதி மணமாலை சூட்டுவாளோ?" என்று கேட்டான்.

அதற்கு திருஷ்டத்யும்நன், "அது விவாகத்துக் குறைவில்லையே! பெருமை அல்லவா?" என்றான்.

உடனே அர்ச்சுனன் விரைந்து சென்று சிவபெருமான் மகாமேருவாகிய வில்லை எடுத்தது போல, அந்தச் சிறந்த வில்லை கணப்பொழுதில் வெகு சுலபமாக எடுத்து நிறுத்தினான். மறுகணம் வில்லை வளைத்து நாணேற்றி அம்பெய்து லட்சியத்தை வீழ்த்தினான்.

அர்ச்சுனனின் அந்த வீரச் செயலைக் கண்டு தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள். அவன்மேல் பரிமளமலர்களைச் சொரிந்து வாழ்த்தினார்கள்.

அர்ச்சுனன் லட்சியத்தை அம்பால் வீழ்த்தியதையும், தேவர்கள் அவ்வெற்றியைக் கொண்டாடி அவன்மேல்



மலர்கள் தூவி வாழ்த்தியதையும் கண்ட அரசர்கள் எல்லோரும், தங்களின் கையாலாகாத தனத்தை எண்ணி முகம் வாடினார்கள். அவன் மேல் பொறாமை கொண்டு உள்ளம் கொதித்தார்கள்.

வில்லை வளைத்து லட்சியத்தை வீழ்த்தியவன் அர்ச்சுனன்தான் என்பதை திரௌபதி புரிந்து கொண்டாள். அவள் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. நெஞ்சம் பூரிக்க, மேனி சிலிர்க்க அவள் அர்ச்சுனன் மார்பில் சுயம்வர மாலையைச் சூட்டினாள்!

தன்னை மணந்த திரௌபதியை அர்ச்சுனன், சந்திரனைத் தொடர்ந்த ரோகிணியைப் போலத் தன்னோடு அழைத்துக் கொண்டு, யாரையும் மதிக்காமல் அங்கிருந்து செல்லத் தொடங்கினான். அவனோடு மற்ற பாண்டவர்களும் தௌமிய முனிவரும் புறப்பட்டார்கள்.

துரியோதனன் அதைப் பார்த்துப் பொறாமையால் மனம் கொதித்தான். அவன் மற்ற மன்னர்களைப் பார்த்துக் கோபமாக, "அந்தணன் ஒருவன் இங்கே கூடியுள்ள அரசர்களையெல்லாம் ஒன்றாக அவமானப்படச் செய்துவிட்டான். அது மட்டுமில்லை. பாஞ்சால ராஜகுமாரி திரௌபதியையும் தன் வலிமையால் உரிமையாக்கிக் கொண்டு போகின்றான். அரசர்களே! இதைப் பார்த்தும் பேசாமல் இருக்கிறீர்களே! என்ன காரியம் செய்து விட்டீர்கள்!" என்று கத்தினான்.

கொடிய துரியோதனன் வார்த்தைகளைக் கேட்டதும் அரசர்கள் கோபம் கொண்டு, கல்பாந்த காலத்தில் கொதித்தெழுந்து ஆரவாரிக்கும் கடல்போல மனம் கொதித்துப் பாண்டவர்களை எதிர்த்துப் போருக்கு எழுந்தார்கள்.

மன்னர்களின் போர் எழுச்சியைக் கண்டதும் அர்ச்சுனன் திரௌபதியைத் தருமரின் பின்னே நிற்கச் செய்தான். தான் முன்னே போருக்குச் சித்தமாக நின்றான். அவனோடு பீமனும் போருக்குத் தயாரானான். அதற்குள் அங்கிருந்த அந்தணர்கள் எல்லோரும் அக்கினிபோல் வெகுண்டெழுந்தார்கள். கைகளிலே வைத்திருந்த தண்டங்களைத் தூக்கிப் பிடித்தார்கள். எதிர்த்த அரசர்கள் பயந்து ஓடும்படி தங்கள் பலத்தைக் காட்டவும் தொடங்கினார்கள்.

அந்தணர்கள் போர் செய்ய வந்ததைப் பார்த்து, கர்ணன் அவர்களை ஏளனம் செய்து சிரித்தான். "என்முன் யமனே வந்தாலும், அவனை நான் பிளந்துவிடுவேன்!" என்று வீரம் பேசினான். உடனே அர்ச்சுனன் அதுகண்டு கோபம் கொண்டான். தனது வில்லை வளைத்து கர்ணன்மேல் அம்பு தொடுத்து அவனைத் தாக்கி மண்ணில் விழ வைத்தான்.

அதேசமயம் எதிர்த்து வந்த சல்லியனை பீமன் கீழே தள்ளி மார்பில் அடித்தான். பின் அவனைத் தூக்கி வானத்தில் எறிந்தான். வானத்தில் சென்ற சல்லியன் கீழே வந்து விழுந்து நெஞ்சுமுறிந்தான்.

கர்ணனும் சல்லியனும், 'தோற்றாலும் வென்றாலும் அந்தணர்களுடன் கொடிய போர் செய்வது அவமானம்!' என்றெண்ணி அங்கிருந்து சென்றார்கள்.

அவர்களின் செயல்களைக் கண்டு மேலும் ஆத்திரம் கொண்ட அரசர்கள் பாண்டவர்களுடன் போருக்குத் தயாரானார்கள். அப்போது கண்ணபிரான் அவர்களைத் தடுத்து நிறுத்தி, "இவர்கள் பிராமணர்கள் இல்லை. இப்போது போரில் வென்றிருப்பவர்கள் அர்ச்சுனனும் பீமனும்தான்!" என்ற உண்மையை எடுத்துச் சொன்னான்.

மன்னர்கள் அதனால் ஒன்றும் செய்ய முடியாதவர் களானார்கள். மௌனமாக அவர்கள் தங்கள் நகரங்களுக்குத் திரும்பிப் போனார்கள்.

பாண்டவர்கள் திரௌபதியை அழைத்துக் கொண்டு தாங்கள் தங்கியிருந்த குயவன் வீட்டை அடைந்தார்கள். அப்போது குந்தி வீட்டினுள்ளே இருந்தாள். அவர்கள் வெளியே இருந்தபடியே தாயிடம், ''அம்மா! இன்று கனி ஒன்று பரிசு பெற்று வந்திருக்கிறோம். இதை என்ன செய்வது?'' என்று கேட்டார்கள்.

வீட்டின் உள்ளே இருந்தபடியே குந்தி அதுகேட்டு, ''புதல்வர்களே! நீங்கள் பெற்று வந்த கனியை ஐவரும் பங்கிட்டு அமிர்தமாகச் சாப்பிடுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, வெளியே வந்தாள்.

அங்கே பரிசுக்கனியாக திரௌபதி நிற்பதைக் கண்டாள் குந்தி. உடனே அவள், 'என்ன நினைத்து, என்ன சொல்லிவிட்டேன்! என்ன காரியம் செய்துவிட்டேன்!' என்று , தான் பொருளைப் பார்க்காது சொன்னதை எண்ணி வருத்தப்பட்டாள்.

தாயின் வருத்தத்தைக் கண்ட தருமர் அவளை நோக்கி, ''தாயே! தங்களின் வாக்கு வேதவாக்கு! இது தாங்கள் கூறியது இல்லை. தெய்வச்செயலாக தங்கள் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தை!'' என்று கூறி வணங்கினார்.

குந்தி தருமரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிறிதே மன ஆறுதல் பெற்றாள். தான் சொன்னதும், தன் பிள்ளை சொல்வதும் விதிவசத்தால் உண்டானது என்று நினைத்து மேலும் சாந்தம் அடைந்தாள்.

மனச்சமாதானம் அடைந்த தாயை அன்போடு நோக்கிப் பாண்டவர்கள், பிறகு அரசசபையில் தங்களுக்கு நேர்ந்ததையெல்லாம் சொன்னார்கள்.

பாண்டவர்கள் திரௌபதியை குயவன் வீட்டுக்கு அழைத்துச் சென்றதையும், அங்கே குந்தி இருப்பதையும் பாஞ்சால தேசத்து ஒற்றர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்கள் துருபதனிடம் சென்று நேரில் பார்த்த உண்மையைச் சொன்னார்கள். துருபதன் அதுகேட்டு

மகிழ்ச்சியால் துள்ளினான். மறுநாளே துருபதன் தன் அரண்மனைக்கு அவர்களை அழைத்துக் கொண்டு சென்றான்.

ஆயினும் துருபதனுக்கு அவர்கள் மேல் உள்ள சந்தேகம் முழுதும் தீரவில்லை. அவர்கள் பாண்டவர்கள் தானா என்பதைச் சோதித்துப் பார்க்க எண்ணினான். அவர்கள் முன்னே பல விலையுயர்ந்த பொருள்களையும் ஆயுதங்களையும் கொண்டு வந்து வைக்கச் செய்தான். பாண்டவர்கள் ஆயுதங்களையே விரும்பி எடுத்துக் கொண்டார்கள். அதைப் பார்த்ததும் அவர்கள் பாண்டவர்கள்தான் என்பது துருபதனுக்குப் புரிந்தது. அவன் மனம் தெளிந்தான்; மகிழ்ச்சி அடைந்தான். பஞ்ச பாண்டவர்களுக்கும் குந்திக்கும் விருந்து செய்து, அவர்களை இரத்தினசிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தான்.

பிறகு பாண்டவர்களை நோக்கி துருபதன், ''ராஜகுமாரர்களே! வில்லாற்றலால் என்மகள் திரௌபதியின் மணமாலையைப் பெற்ற அர்ச்சுனனுக்கும் அவளுக்கும் இன்றே திருமணம் செய்து வைப்போம்!'' என்றான்.

அதற்கு தருமர், ''மாமா! நாங்கள் ஐவருமே இத்திரௌபதியை மணந்து கொள்வோம்!'' என்றார்.

துருபதன் அதுகேட்டு வருத்தம் கொண்டான். அப்போது வியாசமுனிவர் அவன்முன் தோன்றி, ''மன்னா! நீ கொண்ட சந்தேகத்தை விடு!'' என்று சொன்னார்.

வியாசமுனிவரைக் கண்டதும் துருபதன் மகிழ்ந்தான். அவரை வணங்கிப் பொன்னாசனத்தில் அமர்த்தினான். அவரைச் சுற்றி வந்து, ''இது என்ன சோதனை?'' என்று கேட்டான் துருபதன்.

அவன் கேள்விக்கு வியாசர், ''திரௌபதியைப் பாண்டவர்கள் ஐவரும் மணப்பதற்குக் காரணம் ஒன்று உண்டு. அதை உனக்குச் சொல்கிறேன். கேள்! யாகாக்கினியில் பிறந்த இத்திரௌபதி முன் ஜன்மத்தில் நளாயிணியாகப் பிறந்தவள். அந்தணர்களின் தலைவனான மௌத்கல்ய முனிவரின் மனைவியானவள். அந்த முனிவர் அவளின் கற்பையும் காதலையும் சோதிக்க எண்ணினார். அதனால் மனைவியிடம் குஷ்டநோயுள்ள கிழவனாகத் தன்னுருவத்தை மாற்றிக்

காட்டினார். அது மட்டுமில்லை. மனத்தில் அடங்காத கோபமும், உடம்பில் துர்க்கந்தமும் உடையவனாக விளங்கினார். அவர் சதாக் காலமும் மனைவியான இவளைத் துன்புறுத்தினார். ஆனாலும் நளாயிணி அவர்மேல் வைத்த அன்பில் சிறிதும் குறையவில்லை. அதுகண்டு மௌத்கல்ய முனிவர் மேலும் அவளைச் சோதிக்க நினைத்தார். ஒருநாள் தாம் உண்டதுபோக மிஞ்சிய உணவில் தமது அழுகிய விரல் ஒன்றைக் கிடக்கச் செய்தார். நளாயிணி அதுகண்டும் அறுவறுக்காமல் இன்பமாக அவ்வுணவை உண்டாள். முனிவர் அதைப் பார்த்தார். மனைவியின் கற்பையும் காதலையும் பூரணமாகப் புரிந்து கொண்டார். உடனே தமது அழகிய நிஜஉருவத்தை மீண்டும் எடுத்தார். மனைவியைப் பார்த்து அவர், 'மின்னற்கொடியே! பத்தினி அருந்ததியும் கற்பில் உனக்கு நிகராகமாட்டாள்! இப்போதே இங்கேயே நீ விரும்பும் வரங்களை என்னிடம் வேண்டிப் பெற்றுக் கொள்!' என்றார். அதற்கு அவள், 'ஐயனே! தங்களின் அன்பு எந்நாளும் என்னைவிட்டு நீங்காத வரத்தைக் கொடுத்தருளுங்கள்!' என்று வேண்டினாள். முனிவர் அப்படியே வரம் கொடுத்தார். அவர்கள் இருவரும் அதுமுதல் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் எப்போதும் மன்மதக் கலைகளைக் கற்றார்கள். இன்பத்தை முழுமையாக அனுபவித்தார்கள். பிறகு ஜன்மம் முடிய நளாயிணி இறந்தாள். அடுத்த ஜன்மத்தில் அவள் இந்திரசேனையாகப் பிறந்தாள். முற்பிறவி கணவனாகிய மௌத்கல்யரை நாடி தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி வேண்டினாள். அவரோ அப்போது மோட்சம் பெறும் ஆசையால், அவளை மணந்து சிற்றின்பம் பெற அஞ்சினார். தொடர்ந்து பெரும் தவத்தில் ஈடுபட்டார். அப்போது இந்திரசேனை அவரைப் பார்த்து, 'தங்களைப் பிரிந்து இனி நான் என்ன செய்வேன்?' என்றாள். பின்னர் முனிவர் சொன்ன கட்டளைப்படி அவள் சிவபெருமானைக் குறித்து தவம் செய்தாள். சிவபெருமான் அவள்முன் தோன்றி, 'பெண்ணே! உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். இந்திரசேனை உடனே, 'சுவாமி! எனக்குக் கணவரைத் தருக!' என்று ஐந்துமுறைக் கூறி வேண்டினாள். சிவபெருமானும் அதற்கு, 'நீ ஐந்து முறை வேண்டினாய். அப்படியே உனக்கு ஐந்து மணவாளர்கள் கிடைப்பார்கள்!' என்றார். அதுகேட்டு அவள் திடுக்கிட்டு பரமசிவனைப் பார்த்து. 'சுவாமியே! தக்க ஒரு நாயகனைத் தருக!' என்றா

வேண்டினாள். சிவபெருமான் அதை மறுத்து, 'நீ ஐந்து தரம் வேண்டியபடி நான் உனக்கு ஐந்து தரம் அருளியது தவறாது. ஆனால், அவ்வரத்தை மறுபிறவியில் அனுபவிக்கும்படி அருள் செய்கிறோம்!' என்றார். பின்பு சிவபெருமான் அவளைக் கங்கையில் மூழ்கிவரும்படியும், அப்போது அவள் முன் எதிர்ப்படும் புருஷனை அழைத்து வரும்படியும் கூறி அனுப்பினார். இந்திரசேனை அதனால் சோகமுற்று கங்கையில் நீராடினாள். அவள் கண்களிலிருந்து கொட்டிய நீர்த்துளிகள் கங்கையில் பொற்றாமரைகளாயின. அச்சமயம் அங்கு வந்த இந்திரன் அதுகண்டு ஆச்சர்யம் அடைந்து அவளை நெருங்கி, 'இது என்ன அதிசயம்?' என்று கேட்டான். உடனே அவள் அவனைத் தன் பின்னே வரும்படிக் கூறி முன்னே சென்றாள். இந்திரன் அவளைத் தொடர்ந்தான். அப்போது அவர்கள் எதிரே சிவபெருமான் வந்தார். இந்திரன் சிவனைக் கண்டு லட்சியம் செய்யவில்லை. அது கண்ட பரமசிவன் கோபம் கொண்டு, 'இவனுக்கு இவ்வளவு இறுமாப்பா?' என்று நினைத்தார். மறுகணமே இந்திரன் பலமிழந்து எல்லோரும் பரிகசித்துச் சிரிக்கக் கீழே விழுந்தான். பிறகு, முன்பே பிலத்தில் அடைத்து வைத்திருந்த நான்கு இந்திரர்களோடு அவனையும் சிவபெருமான் சேர்த்து அடைத்தார். அப்போது அந்த ஐந்து இந்திரர்களும் சிவபெருமானை வணங்கி, 'எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்!, என்று வேண்டினார்கள். சிவன் அவர்களைப் பார்த்து, 'அன்புடன் நீங்கள் ஐவரும் இவளுக்குக் கணவராவீர்கள்!' என்றார். அவர்கள் ஐவரும் பூமியில் வந்து பிறந்தார்கள். துருபதா! தருமனும் பீமனும் நகுல சகாதேவர்களும் முன்பே பிலத்தில் அடைப்பட்டுக் கிடந்த நான்கு இந்திரர்கள். அர்ச்சுனன் தேவர்களின் அரசனான இந்திரன்.இவன் பிறப்பதற்கு, முன்பு இந்திரனே தந்தையுமானான். இத்திரௌபதியே முன்ஜன்மத்தில் இந்திரசேனையானவள். ஆகவே, இந்த பஞ்சபாண்டவர்கள் இவளுக்குக் கணவராவார்கள்!'' என்று சொல்லி, துருபதனின் சந்தேகத்தைப் போக்கினார்.

வியாசமுனிவரின் வார்த்தைகளைக் கேட்டுத் துருபதன் மனந்தெளிந்தான். உடனே மகளைப் பஞ்சபாண்டவர்களுக்கும் மணம் செய்து கொடுக்கச் சம்மதித்தான். பிறகு, வைதிக பிராமணர்களும் அரசர்களும் கூடியுள்ள கல்யாண மண்டபத்துக்கு மகளோடு பாண்டவர்களையும் குந்தியையும்

அழைத்துச் சென்றான். அங்கே திரௌபதியைப் பாண்டவர்கள் ஐந்து பேருக்கும் துருபதன் தனித்தனியே திருமணம் செய்து கொடுத்தான். மேலும், மருமக்களுக்குச் சீர்வரிசையாக சதுரங்கசேனையும், பூமியும், செல்வமும், மற்றும் பலவற்றையும் தனித்தனியே கொடுத்தான்.

பாஞ்சாலதேசத்து அரண்மனையில் பாண்டவர்கள் வெளிப்பட்ட செய்தி எங்கும் பரவியது. துரியோதனனும் அதை அறிந்தான். உடனே அவன் தனது தம்பிமார்களுடன் பாண்டவர்களைக் கொல்லப் படை எடுத்துக் கொண்டு பாஞ்சாலம் வந்தான்.

கௌரவர்கள் படை எடுத்து வந்ததைக் கண்டு திருஷ்டத்யும்நன் அடங்காத சினங்கொண்டான். தனது படையை உடனே அவன் திரட்டிக் கொண்டு கௌரவர்களைப் போரில் எதிர்த்தான். இரண்டு படைகளும் பயங்கரமாக மோதிக் கொண்டன. கடைசியில் கௌரவப்படை திருஷ்டத்யும்நனை எதிர்க்க முடியாமல் தோற்று ஓடியது.

ஆனாலும் கௌரவர்களும் கர்ணனும் சகுனியும் தொடர்ந்து கொடிய போர் செய்தார்கள். அர்ச்சுனன் எஞ்சிய கௌரவப்படையை அம்புமழையால் சிதறடித்தான். முருகக்கடவுள் தாரகாசுரனை அழித்தது போல, கர்ணனை நகுலன் அம்பால் தாக்கிப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். சகாதேவன் சகுனியைத் திரும்பிப்பார்க்காமல் தோற்று ஓடச் செய்தான். துரியோதனாதியர்கள் எல்லோரையும் பீமன் ஒருவனே தனித்து நின்று தாக்கித் துன்புறுத்தி நடுங்கி ஓட வைத்தான்.

தோற்றப் பகைவர்கள் உடல் வலிமையும் உள்ளத் தெம்பும் இழந்து சோர்வுடன் அஸ்தினாபுரி போய்ச் சேர்ந்தார்கள்.

கௌரவர்களை வென்று ஜயலக்ஷ்மியையும் மணந்த பாண்டவர்களின் வலிமையை மெச்சி கண்ணபிரான் அங்கு வந்து சேர்ந்தான். அவனோடு பாண்டவர்கள் பாஞ்சால நகரில் தங்கி ஒருவர்க்கொருவர் அன்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

பாண்டவர்கள் அப்படியிருக்க திருதராஷ்டிரன், தனது தம்பி பாண்டுவின் ராஜ்ஜிய பாகத்தை அவனது மகன்

தருமருக்குக் கொடுக்க நினைத்துத் தன் அமைச்சர்களுடன் ஆலோசித்தான். முடிவில் அவன் பாண்டவர்களைக் கொல்ல முயற்சிப்பதில் பயனில்லையாதலால், அவர்களுக்கு முறைப்படி கொடுக்க வேண்டிய ராஜ்ஜியத்தைக் கொடுத்து விடுவதே நல்லது என்று முடிவு எடுத்தான். உடனே தூதுவனை அனுப்பி திருதராஷ்டிரன் பாண்டவர்களை அஸ்தினாபுரிக்கு அழைத்துவரச் செய்தான்.

பீஷ்மருக்கும் விதுரனுக்கும் திருப்தி ஏற்படும்படி திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்கான ராஜ்ஜிய பாகத்தை அவர்களுக்குக் கொடுத்தான். பாண்டவர்கள் அதனை ஏற்று மகிழ்ச்சியோடு அஸ்தினாபுரியில் நெடுங்காலம் தங்கி ராஜ்ஜிய பரிபாலனம் செய்து வந்தார்கள்!

6. இந்திரப்பிரஸ்தம்

பாண்டவர்களும் கௌரவர்களும் ஒற்றுமையுடன் அஸ்தினாபுரியில் வாழ்ந்து வந்தார்கள். அதனால் மற்ற தேசத்து அரசர்கள் எல்லோரும் அவர்களுடன் பகைமை பாராட்ட அஞ்சி நடுங்கிக் கிடந்தார்கள். அப்போது சகுனி முதலிய உறவினர்களையும் அமைச்சர்களையும் அழைத்து, அவர்களுடன் ஆலோசனை நடத்தியபின்பு, திருதராஷ்டிரன் முறைப்படி தருமருக்குப் பட்டாபிஷேகம் நடத்த நாள் குறித்தான்.

தருமரின் பட்டாபிஷேக நாள் வந்தது.

அச்செய்தி எங்கும் முரசறைந்து தெரிவிக்கப்பட்டது. நகரமெங்கும் அலங்கரிக்கப்பட்டது. மங்கல வாத்தியங்கள் எங்கும் முழங்கின. முனிவர்கள் அரசசபையில் வந்து கூடினார்கள். வியாசரும் தௌமியருமாகிய முனிவர்கள் பலரும் அத்திப் பலகையின்மேல் நவரத்தினங்கள் பதித்த பொன்னாசனத்தையிட்டு, அச்சிங்காசனத்தில் தருமரை அமரச் செய்தார்கள். தருமரின் முடிமேல் பொற்குடங்களில் இருந்த புண்ணிய தீர்த்தங்களைக் கொட்டினார்கள். சூரியனைப் போன்ற ஒளிமுகத்துடன் விளங்கிய தருமரின் தலைமேல் சிறந்த கிரீடத்தைச் சூட்டினார்கள்.

பிறகு, பெண்கள் தருமருக்கு ஆரத்தி எடுத்தார்கள். மங்கல வாத்தியங்கள் முன்னே முழங்கிச் செல்லவும்,



சந்திரகிரணங்களை வெண்கொற்றக்குடை வீசவும், அரசர்கள் முன்னும் பின்னும் நடந்து வரவும், பெண்கள் மங்கள நெற்பொரிகளைச் சிந்தி வாழ்த்தவும், தம்பியர்கள் தம்மைச் சூழ்ந்து வரவும் தருமர் பட்டத்து யானை மேல் ஏறிக் கொண்டு அஸ்தினாபுரி நகரத்தை பவனிவந்தார்!

நகர்வலம் வந்தபின் தருமர் பெரியோர்களை வணங்கி அஸ்தினாபுரியில் சிறப்போடு தம்பிமார்களுடன் வாழ்ந்து வந்தார். அப்போது ஒருநாள் திருதராஷ்டிரன் கூறிய கட்டளைப்படி தருமர் காண்டவப் பிரஸ்தம் என்னும் நகரில் தம்பியர்களுடன் சென்று வாழ்ந்திருக்க நிச்சயித்தார். அந்நகரம் கொடிய காடுகளால் சூழ்ந்திருந்தது. ஒருகாலத்தில் நன்றாக அழகுடன் இருந்த அந்த நகரம் பேய்கள் வசிக்கும் பாழடைந்த நகரமாக இப்போது விளங்கியது. அங்கே மனிதர்கள் யாருமே வசிக்கவில்லை.

ஆயினும் பாண்டவர்கள் அதை நினைத்து வருந்தவில்லை. அவர்கள் மிக்க சந்தோஷத்துடன் தாயையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு கண்ணபிரானுடன் காண்டவப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது கண்ணபிரான் பாழடைந்த அந்நகரத்தை அழித்துப் புதியதோர் நகரத்தை அமைக்க விரும்பினான். உடனே அவன் இந்திரனையும் விசுவகர்மாவையும் நினைத்தான். அக்கணமே அவர்கள் கண்ணன்முன் வந்து நின்று வணங்கினார்கள்.

பின்பு கண்ணபிரானின் கட்டளைப் படி இந்திரன் விசுவகர்மாவைப் பார்த்து, "தேவர்களும் மனிதர்களும் பார்த்து அதிசயிக்கும்படி இங்கே ஒரு சிறந்த அழகிய நகரத்தை உடனே நீ நிர்மாணித்துக்

கொடு. .அந்நகரத்தைப் போல் மூவுலகிலும் ஒரு நகரம் இல்லை என்று பார்த்தவர்கள் எல்லோரும் சொல்ல வேண்டும்!'' என்று ஆணையிட்டான்.

இந்திரனின் ஆணைப்படியே விசுவகர்மா கணப் பொழுதில் காண்டவப்பிரஸ்தத்தை அழித்து, அங்கே மிகச் சிறந்த அழகிய நகரம் ஒன்றை நிர்மாணித்தான். அந்நகரத்தின் அமைப்பையும் செல்வத்தையும் அழகையும் கண்டு எல்லோரும் அதிசயித்தார்கள். அந்நகரத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். கைதேர்ந்த சிற்பிகள் கண்டு மகிழ்ந்தார்கள்.



மேலும் அந்நகரத்தைப் பார்த்து இந்திரனும், குபேரனும், மற்ற தேவர்களும் தங்கள் நகரத்தைவிட இது சிறந்தது என்று புகழ்ந்தார்கள். இரவிலே சந்திரனை மிஞ்சிய ஒளியும், பகலிலே சூரியனை மிஞ்சிய பிரகாசமும் கொண்டு அந்நகரம் அழகுடன் விளங்கியது. விசுவகர்மா அந்த நகரத்திலே மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், அழகிய மஞ்சங்களையும், பெரிய மதில்களையும், மகரதோரண வீதிகளையும், பூஞ்சோலைகளையும், தடாகங்களையும், அரண்மனையையும் அழகாக நிர்மாணித்திருந்தான். கண்ணபிரான் அவற்றையெல்லாம்

பார்த்து மகிழ்ந்து, இந்திரனால் படைக்கப்பட்டதால் அந்த நகரத்துக்கு இந்திரப்பிரஸ்தம் என்று பெயரிட்டான்.

இந்திரப்பிரஸ்தத்தில் தேவலோகத்தில் உள்ள சிறந்த பொருள்கள் யாவும் இருந்தன. ஆனால், அந்நகரத்தில் உள்ள பொருள்கள் யாவும் தேவலோகத்தில் இல்லை. அப்படிப்பட்ட அந்த நகரத்தின் அழகைப் பூரணமாகக் கண்டு விவரிப்பது பூவுலகில் யாராலும் முடியாது.

இந்திரப்பிரஸ்த நகரில் வேதங்களும் வேத மந்திரங்களும் எங்கும் சதா முழங்கின. அரசர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் ஒருபக்கம் கேட்டது. வணிகர்கூட்டம் ஆவண வீதிகளில் நிரம்பி வழிந்ததனால் ஏற்பட்ட பேரொலி ஒரு பக்கம் கேட்டது. விளைச்சல் பெருகியது கண்டு உழவர்கள் கூத்தாடி பாடிய ஒலி மற்றொரு பக்கம் கேட்டது. ஒருபக்கத்திலே நடனமாதர்கள் நாட்டியம் செய்தார்கள். மற்றொருபக்கத்திலே அழகிய இரத்தின தீபங்கள் ஒளிவீசின. வேறொருபக்கத்திலே சதுரங்கசேனை இருந்தது. திருமாலைத் தொழுது போற்றும் மகரிஷிகள் ஒரு பக்கமாக இருந்தார்கள். மயன் முதலிய தெய்வத்தச்சர்கள் ஒரு பக்கமும், வித்தியாதரர்களும் கின்னரர்களும் ஒரு பக்கமும், ஊர்வசி முதலான தேவமங்கையர்கள் ஒரு பக்கமும் இருந்தார்கள். கற்பகமரம் ஒரு பக்கத்தில் மலர்களைச் சொரிந்தது. இந்திரப்பிரஸ்தத்தைச் சார்ந்த மலைகளில் எல்லாம் அகில்மரங்களும், சந்தனமரங்களும், கஸ்தூரி கூட்டங்களும் செழித்து வளர்ந்திருந்தன. அந்நகரத்தைச் சார்ந்த கடல்களிலெல்லாம் முத்துக்களும், பவழக் கொடிகளும், மாணிக்கங்களும், பச்சைரத்தினங்களும் விளைந்திருந்தன. அக்கடல்களின் கரைகளிலெல்லாம் புன்னைமரங்களும், வெண்தாழைக்காடுகளும், செந்தாழைக் காடுகளும் நிறைந்திருந்தன. நகரம் முழுதும் பொன்னும் வெள்ளியும் அளவில்லாது இருந்தது. அந்நகர மருத நிலங்களில் நெல்லும் கரும்பும் அளவின்றிப் பயிராயின. கரும்புச்சாறு கங்கை வெள்ளம்போல் தடாகங்களில் பெருகி வழிந்தது. அத்தடாகங்களில் வாழும் அன்னங்கள் மதில்களில் பறந்த கொடிகளைக் கண்டு மயங்கி, அவற்றைத் தங்களினம் என நினைத்துப் பறந்து அக்கொடிகளிடம் சேர்ந்தபோது, அவற்றை மேகங்கள் என வேறாக எண்ணித் திரும்பவும் தடாகங்களில் வந்து தங்கள் குஞ்சுகளைக் காக்கத்

தொடங்கின. இப்படி அடிக்கடி அன்னங்கள் செய்வது அழகாக இருந்தது. மற்றும் இளம் பெண்கள் நிலவொளியில் பந்து விளையாடி மகிழ்ந்தார்கள்.

அப்படிப்பட்ட அழகிய இந்திரப்பிரஸ்த நகரத்தில் பாண்டவர்கள் திரௌபதியுடனும் தாயுடனும் குடிபுகுந்தார்கள். அரண்மனையின் உப்பரிகையில் ஏறிநின்று நகரத்தின் சிறப்பையும் அழகையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

பிறகு, தருமர் இந்திரப்பிரஸ்தத்தை நிர்மாணித்துத் தந்த தேவச்சிற்பி விசுவகர்மாவுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் மகிழ்ச்சியோடு தங்கி அரசாட்சி செய்து வந்தார்கள். அப்போது ஒருநாள் நாரதர் அங்கே வந்தார். அவரைக் கண்டு பாண்டவர்கள் மகிழ்ந்தார்கள். பாண்டவர்கள் மிகவும் பக்தியுடன் வணங்கி, புண்ணிய தீர்த்தங்களால் நாரதரின் பாதங்களைக் கழுவினார்கள். இரத்தினசிங்காசனத்தில் அவரை எழுந்தருளச்



செய்து விருந்து உபசாரம் செய்தார்கள். அதனால் பாண்டவர்கள் தங்கள் பூர்வஜன்மமாகிய பழைய இந்திராதியரைப் போல் பெருமை அடைந்தார்கள். குந்தியும் திரௌபதியும் நாரதரைப் போற்றி வணங்கிச் சிறப்புற்றார்கள்.

கடைசியாக நாரதர் அவர்கள் எல்லோரையும் அன்புடன் நோக்கி, ‘‘பாண்டவர்களே! நான் ஒருகதை சொல்கிறேன். கேளுங்கள்! இரணியகசிபு என்றொரு அசுரன் இருந்தான். அவன் குலத்தில் நிகும்பன் பிறந்தான். அவனுக்குப் பிள்ளைகளாய் சுந்தன், உபசுந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அதிக அன்பு கொண்டவர்கள். அவர்கள் இளமையிலேயே மூவுலகத்தையும் வெல்லக் கருதினார்கள். எனவே விந்தியமலைக்குப் போய் மும்மூர்த்திகளையும் நினைத்து நெடுங்காலம் கடும்தவம் புரிந்தார்கள். அதைக் கண்டு அஞ்சிய தேவர்கள் அவர்களின் தவத்தைக் கெடுக்க எண்ணினார்கள். அதனால் மாயையாகப் பல பெண்களைப் படைத்து அவர்களை மயக்க ஏவினார்கள். அந்த அசுரர்களோ அதைப் பொருட்படுத்தாமல் கடும்தவம் செய்து முடித்தார்கள். இறுதியில் மும்மூர்த்திகளும் அவர்கள் முன் தோன்றிப் பல வரங்களைக் கொடுத்து வரும்போது, அசுரர்கள் மும்மூர்த்திகளிடம், ‘நாங்கள் யாராலும் கொல்லப்படாதவர்களாக வேண்டும்!’ என்று வரம் கேட்டார்கள். அதற்கு ஆதிதேவர்கள், ‘உங்களுக்குப் பிறவுயிர்கள் எவற்றாலும் மரணமில்லை!’ என்று வரம் கொடுத்தார்கள். அதுகேட்டு அவர்கள் மகிழ்ந்து மனத்தில் இறுமாப்பு கொண்டார்கள். பின்பு மூவுலகையும் வெல்ல எண்ணி இந்திராதி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மனிதர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும், பிராணிகளுக்கும் துன்பம் செய்தார்கள். அசுரர்களின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்களும் முனிவர்களும் பிரமனிடம் சென்று முறையிட்டார்கள். பிரமதேவர் விசுவகர்மாவினால் திலோத்தமையைப் படைத்து அசுரர்களிடம் அனுப்பினார். அப்போது விந்தியமலைச் சாரலில் உல்லாசமாகத் தங்கியிருந்த அசுரர்கள் அவளைக் கண்டு மயங்கினார்கள். அவள்மேல் காமங்கொண்டு சுந்தன் அவளுடைய வலக்கையைப் பற்றினான். உபசுந்தன் இடக்கையைப் பிடித்துக் கொண்டான். இருவரும் அவள்மேல் கொண்ட ஆசையால் மனமாறினார்கள். அவர்களின் ஒற்றுமை

குலைந்தது. அண்ணன் தம்பியைப் பார்த்து, 'தமையனான என்னால் காதலிக்கப்பட்ட இவள் உனக்குத் தாயாவாள். ஆதலால் இவளை நீ விரும்புவது சரியில்லை!' என்றான். அதற்குத் தம்பி அண்ணனை நோக்கி, 'தம்பியான என்னால் காதலிக்கப்பட்ட இவள் உனக்கு மருமகளாவாள். இவளை நீ விரும்புவது முறையில்லை!' என்றான். அவர்களுக்குள் பேச்சு முற்றிச் சினம் எழுந்தது. ஒருவர்க்கொருவர் கதாயுதத்தால் தாக்கிக் கொண்டு போர் செய்து, கடைசியில் ஒன்றாக இருவரும் மாண்டார்கள்! இந்தக் கதையை எல்லோரும் அறிவார்கள் இல்லையா?'' என்று கூறி முடித்தார்.

மேலும் நாரதர் தொடர்ந்து அவர்களைப் பார்த்து, ''பாண்டவர்களே! நீங்கள் ஐந்து பேரும் உங்களின் விதிவசத்தால் இத்திரௌபதி ஒருத்தியை மனைவியாக அடைந்தீர்கள். இவளோடு வருஷத்துக்கு ஒருவராகத் தொடர்ந்து கூடி வாழுங்கள். ஒருவர் இவளுடன் வாழும்போது மற்றவர்கள் இவளைப் பார்ப்பது சரியில்லை! அப்படி முறைதவறி இவளைப் பார்த்தவர் ஒருவருஷத்துக்கு மாறுவேஷம் கொண்டு தீர்த்த யாத்திரை சென்று வருவதே இவளைப் பார்த்த தோஷத்துக்குப் பரிகாரமாகும்!'' என்று சொல்லிவிட்டு ஆகாயமார்க்கமாகச் சென்றார்.

நாரதர் சொல்லிச் சென்றபடியே பாண்டவர்கள் ஒவ்வொருவராக ஒரு வருஷத்துக்கு திரௌபதியை மனைவியாக அடைந்து, இன்பத்துடன் இந்திரப்பிரஸ்தத்தில் தாயோடு ராஜ்ஜிய பரிபாலனம் செய்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள்!

7. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை

இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து கொண்டு தருமர் தம்பிமார்களின் துணையுடன் மக்களின் துன்பம் நீங்கும்படி நீதிதவறாமல் அரசாட்சி புரிந்து வந்தார். அப்போது ஒருநாள் அரண்மனை வாசலில் ஓர் அந்தணன் வந்து நின்று, ''இது முறையோ?'' என்று அவலமாக முறையிட்டான்.

அவன் முறையீட்டை வாயில் காவலர்கள் சென்று தெரிவிக்க, அர்ச்சுனன் அந்தணனின் முன் வந்து,

''வேதவல்லவனே! என்ன காரணத்தால் இப்படி நீ முறையிட்டாய்? '' என்று கேட்டான்.

அதற்கு அந்தணன், ''வில்லரசே! வில்வேடர்கள் இடையர்களிடமிருந்து எனது பசுக்கூட்டங்களைக் கொள்ளை கொண்டு போனார்கள்!'' என்றான்.

உடனே அர்ச்சுனன், ''முனிவனே! நீ அஞ்ச வேண்டாம். உனது பசுக்களை ஒன்றும் குறையாது அவர்களிடமிருந்து இப்போதே விடுவித்துக் கொடுக்கிறேன்'' என்று அபயமளித்து, தனது வில்லை எடுத்து வர ஆயுதசாலைக்குச் சென்றான்.

அங்கே தருமருடன் குலவிக் கொண்டிருந்தாள் திரௌபதி. அவளுடைய சிறிய பாதங்களை அர்ச்சுனன் பார்த்தான். அவ்வளவுதான். நாரதரின் வார்த்தைகள் நினைவுக்கு வர, தருமருடன் திரௌபதியைக் கண்ட தோஷத்தால் அவன் உடம்பு நடுங்கினான். அவன் முகம் வெளிறியது. மனத்தில் வெட்கம் நிறைந்தது. உடனே அவன் விரைவாக வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு கோபமாக வேடர்கள் இருக்கும் இடம் சென்றான். அவ்வேடர்களைக் கணப்பொழுதில் அம்புகளால் வென்று பசுக்களை மீட்டு அந்தணனிடம் சேர்த்தான். அதே வேகத்தில் அரண்மனைக்குத் திரும்பி வந்தான்.

பிறகு, திரௌபதியைப் பார்த்த தோஷத்தைப் போக்கத் தீர்த்த யாத்திரைக்குத் தயாரானான் அர்ச்சுனன். அவன் தருமரிடம் சென்று விடைபெற்றுக் கொண்டு, இந்திரப்பிரஸ்தத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றான். நேரே அவன் வைதிக வேஷத்தோடு பிராமணர்கள் தொடர கங்கைக்குச் சென்று நீராடினான். அப்போது நாக கன்னியர்கள் நீராடுவதற்காக அவன் எதிரே வந்தார்கள்.

அவர்களுள் உலூபி என்பவளைப் பார்த்ததும் அர்ச்சுனன் மனம் மயங்கினான். அவள்மேல் தீராத காதல் கொண்டான். எனவே அவள் குளித்துவிட்டுப் பிலத்துவாரத்தின் வழியே நாகலோகம் சென்றபோது, அவனும் தொடர்ந்து சென்று அவளுடைய காதலைப் பெற்று அவளை மணந்தான்!

உலூபியுடன் அர்ச்சுனன் சில நாட்கள் நாகலோகத்தில் தங்கி இன்பம் அனுபவித்து வாழ்ந்தான். அவன் தந்த

இன்பத்துக்கு அவள் அரவான் என்னும் புதல்வனைப் பரிசாகத் தந்தாள். அக்குமாரனைப் பார்த்து அர்ச்சுனன் மகிழ்ந்தான். பின்பு அர்ச்சுனன் மனைவியிடமும் மகனிடமும் விடைபெற்று நாகலோகத்தைவிட்டுப் புறப்பட்டு இமயமலைச் சாரலை அடைந்தான். அங்குள்ள புண்ணியத் தீர்த்தங்களில் எல்லாம் நீராடினான். அதன்பிறகு அவன் கிழக்குதிசை நோக்கிப் புறப்பட்டான். யமுனை முதலிய புண்ணிய நதிகளில் தீர்த்தமாடினான். அங்கிருந்து தெற்குத்திசையில் புறப்பட்டு திருவேங்கடமலையை அடைந்தான். அங்கு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானைத் தொழுதுவிட்டுக் காஞ்சிபுரம் சென்றான். அந்நகரில் குடிகொண்ட திருமாலையும் சிவபெருமானையும் வணங்கிப் போற்றினான். அங்கிருந்து திருவண்ணாமலையை அடைந்து அருணாசலேசுவரரைப் பணிந்த பின்பு, அர்ச்சுனன் பெண்ணையாற்றில் நீராடி திருக்கோவலூர் சென்று திரிவிக்கிரமமூர்த்தியைத் தொழுதான். பிறகு அவன் திருவெண்ணைநல்லூர், திருவதிகை, திருவகீந்திரபுரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று கெடில நதியில் நீராடி, அவ்வூர்களில் கோயில் கொண்டுள்ள தடுத்தாட் கொண்ட ஈசுவரரையும், வீரட்டானேசுவரரையும், தேவநாதரையும் வணங்கிச் சென்றான்.

மேலும், அர்ச்சுனன் சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானைத் தரிசித்தான். அங்கிருந்து திருவரங்கம் சென்று ஸ்ரீரங்கநாதரை வணங்கிவிட்டு, பல புண்ணிய நதிகளில் நீராடி மதுரையை அடைந்தான். அங்கு தன்னைத் தொடர்ந்த பிராமணர்களுடன் சென்று பாண்டியமன்னன் சித்திரவாகனனைச் சந்தித்தான்.

அர்ச்சுனனைக் கண்ட பாண்டியன் அவனை வரவேற்று ஆசனம் தந்த பின்பு, ''தாங்கள் எந்த தேசத்தவர்? எங்கே போகின்றீர்கள்?'' என்று கேட்டான்.

அதற்கு அவன், ''கன்னியாகுமரிக் கடலில் நீராட வந்தோம்!'' என்றான்.

சித்திரவாகனன் அர்ச்சுனனையும் அவனுடன் வந்திருந்த பிராமணர்களையும் மிக்க அன்புடன் அரண்மனை சோலைக்கு அழைத்துச் சென்று அறுசுவை விருந்து படைத்தான். அப்போது பாண்டியன் மகள் சித்திராங்கதை

தோழிமார்களுடன் உல்லாசமாக விளையாடுவதற்காக அச்சோலைக்கு வந்தாள்.

அர்ச்சுனன் அவளைப் பார்த்தான். அவளுடைய அழகையும், செக்கச் சிவந்த அதரத்தையும், முத்துப் பற்களையும், கவர்ந்து இழுக்கும் கண்களையும், அமுதம் போன்ற பேச்சுக்களையும், நாணத்தையும், பருத்த தனங்களையும், சிற்றிடையையும் பார்த்து அர்ச்சுனன் தன்னை மறந்தான்; மனம் மயங்கினான். அவள் மேல் காதல் பித்தம் கொண்டான்.

பாண்டிய மன்னன் சித்திரவாகனன் பெரும்தவம் புரிந்து பெற்ற ஒரே மகளான சித்திராங்கதை, அர்ச்சுனனின் மோகப் பார்வையைக் காணவில்லை. அவள் பூக்கொய்து கொண்டு தோழிமார்களுடன் போய் ஒரு செய்குன்றில் உட்கார்ந்தாள்.

அர்ச்சுனன் உடனே மோகத்தீயைத் தாங்க முடியாது, தனது வைதிகவேஷத்தைக் கலைத்துவிட்டு நிஜஉருவத்தோடு தனியே சென்று அவள் கண்கள் மகிழும்படி நின்றான். சித்திராங்கதை அவனைக் கண்டாள். அவன்மேல் காதல் கொண்டாள். தோழிமார்களைவிட்டு மெல்ல விலகி அர்ச்சுனனிடம் வந்தாள். இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவிக் கொண்டார்கள்.

அவர்களின் மனம் ஒன்றுபட்டது. அர்ச்சுனன் சித்திராங்கதையைக் காந்தர்வ மணம் புரிந்து கொண்டான். இருவரும் ரதியும் மன்மதனும் போல இணைபிரியாது காமஇன்பத்தை அனுபவித்து மகிழ்ந்தார்கள்.

பிறகு, அர்ச்சுனன் அவளிடம் தான் யார் என்பதைத் தெரிவித்து, ''பெண்ணே! நீ வந்து அதிக நேரம் ஆகிவிட்டது. உன் தோழியர்கள் ஏதோ என்று சந்தேகம் கொள்வார்கள். ஆகவே நீ போ!'' என்று சொல்லி அவளுக்கு விடை தந்தான்.

சித்திராங்கதை அவனைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்று தோழியர்களை அடைந்தாள். அவர்களிடம் தனக்கு நேர்ந்ததையெல்லாம் அவள் மனமகிழ்ந்து உருகிச் சொன்னாள். சித்திராங்கதையின் விரகதாபத்தைக் கண்ட தோழிப்பெண்கள் அவளைக் கன்னிமாடத்துக்கு அழைத்துப் போனார்கள். அங்கே இரத்தினக்கட்டிலில் விரித்திருந்த

பஞ்சசயனத்தில் அவளைப் படுக்க வைத்தார்கள். ஆனாலும் சித்திராங்கதை அர்ச்சுனன்மேல் கொண்ட காதல் வேட்கையால் உள்ளமும் உடலும் துடித்தாள். காமவேதனையால் அவள் கண்கள் தூங்க மறுத்தன. அவள் நாணத்தை மறந்தாள். தனது காதல் நோயால் எல்லைகடந்து வருந்தினாள்.



தோழியர்கள் காதலனைப் பிரிந்த அவளது துன்பத்தைக் கண்டு சகிக்க முடியாமல் அவள் உடல் முழுவதும் சந்தனக் குழம்பைப் பூசினார்கள். அதனாலும் சித்திராங்கதையின் விரகதாபம் தணியவில்லை. அவள், "இது அக்கினிக் குழம்போ?" என்று நெட்டுயிர்த்தாள். அர்ச்சுனனின் நினைவால் அவள் கண்கள் கரகரவென்று கடல்முத்துக்கள் போலக் கண்ணீர்த் துளிகளைச் சிந்தின. அத்துளிகள் அவள் மேனியில் பூசப்பட்டிருந்த சந்தனத்தைக் கரைத்து அழித்தன. தோழிப்பெண்கள் அதுகண்டு புல்லாங்குழல் வாசித்தார்கள். அவ்விசையும் அவளை ஈர்க்கவில்லை. அப்போது வானில் குளிர்ச்சுடர் பரப்பி பவனிவந்த சந்திரனைக் கண்டாள் சித்திராங்கதை. உடனே

அவள் விரகதாபம் அதிகமாகியது. அவள் துடித்து துவண்டு "படுக்கையில் வீழ்ந்தாள். அர்ச்சுனன் தந்த காதல் நோயால் சித்திராங்கதை உடல் மெலிந்து வதைபட்டாள்.

சித்திராங்கதை அர்ச்சுனன்மேல் காதல் உணர்வு கொண்டு வாடுவதைக் கண்ட செவிலித்தாய்மார்கள், உடனே சித்திரவாகனனிடம் சென்று அதனைத் தெரிவித்தார்கள். அதுகேட்டு பாண்டியன் தன் மகளை அர்ச்சுனனுக்கு மணமுடித்துவிட துடித்தான். 'வெகுதூரம் விருப்பத்துடன் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டு, அர்ச்சுனன் இங்கே வந்தது நமது தவப்பயன்தான்!' என்று எண்ணி மகிழ்ந்தான்.

பாண்டிய குமாரியைப் பிரிந்ததும் அர்ச்சுனன் மன்மதபாணங்களால் தாக்கப்பட்டு மனம் வருந்தினான். அத்துடன் குளிர்ந்த தென்றல் காற்று மேனியில் படவும், உடம்பில் ஊசி நுழைந்தது போல் துடித்தான். அதனால் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. இரவு முழுவதும் அவன் விழித்துக் கிடந்தான். உதயப்பொழுதில் தூங்கி எழுந்த அந்தணர்களுடன் தானும் விழித்தெழுந்தது போல் எழுந்து, அர்ச்சுனன் காலைக்கடன்களைச் செய்து முடித்தான்.

பிறகு, அர்ச்சுனன் பாண்டியனின் அரண்மனைக்குச் சென்றான். அவனைக் கண்டு சித்திரவாகனன் மகிழ்ச்சி கொண்டான். அர்ச்சுனனைப் பார்த்து அவன், "ராஜகுமாரா! பாற்கடல் அமுதம் போல் நான் பெற்ற மகள் இனி உனக்கு மனைவியாவாள்!" என்றான்.

மேலும் அவன் தொடர்ந்து அர்ச்சுனனிடம், "நான் சொல்லும் ஒரு வார்த்தையும் கேள். முன்பு எமது குலத்தில் தோன்றிய ஓர் அரசன் புத்திர பாக்கியம் வேண்டி சிவபெருமானை நோக்கிக் கடும்தவம் புரிந்தான். அவன் தவத்தை மெச்சி சிவபெருமான் அவன்முன் காட்சியளித்து, 'அரசனே! உனது குலத்தில் தோன்றிய அரசர்களுக்கெல்லாம் ஒவ்வொரு சிறந்த குழந்தையே தவறாமல் பிறக்கும்!' என்று அவனுக்கு வரம் கொடுத்து மறைந்தார். சிவபெருமான் வரத்தின்படியே அன்று முதல் எமது குலத்து அரசர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறந்த குழந்தையைப் பெற்றார்கள். ஆனால், அந்த ஒரு குழந்தையும் எனக்குப்

பெண்ணாய்ப் பிறந்தது. நான் உன்னிடம் ஒரு வேண்டு கோள் விடுக்கின்றேன். அதனை நீ மறுக்காதே! அதாவது உன்னிடம் என்மகள் பெறும் ஒற்றைக் குழந்தையை எனது குலவிருத்திக்காகவும், பாண்டிய சிம்மாசனத்தை அலங்கரிப்பதற்காகவும் எனக்கு அபிமான புத்திரனாகக் கொடுக்க வேண்டும்!'' என்றான்.

பாண்டியன் சித்திரவாகனனின் வேண்டுகோளை அர்ச்சுனன் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான்.

பிறகு, சித்திரவாகனன் அர்ச்சுனனுக்கும் தனது மகளுக்கும் எட்டுத்திசை அரசர்களுக்கும் தெரிவித்துச் சிறப்பாகத் திருமணத்தைச் செய்து வைத்தான். அவர்கள் இருவரும் கணவனும் மனைவியுமாகி ஊடலும் கூடலுமாக இல்லற சுகத்தைத் திகட்டத் திகட்ட அனுபவித்தார்கள்.

சித்திராங்கதை அர்ச்சுனனின் சம்பந்தத்தால் பப்புருவாகனனை மகனாகப் பெற்றாள். முன்பு கூறிய படியே அர்ச்சுனன் தன் மைந்தனை மகிழ்ச்சியுடன் சித்திரவாகனனுக்குப் பிள்ளையாகத் தந்தான். பாண்டியன் பப்புருவாகனனை ஏற்றுக் கொண்டு அர்ச்சுனனிடம், ''மருமகனே! உன்னால் என்குலம் நிலைத்தது!'' என்றான். தனது புத்திரசோகத்தை மறந்தான்.

அர்ச்சுனன் சில நாட்களுக்குப்பின், மனைவியிடமும் பிள்ளையிடமும் விடைபெற்றுக் கொண்டு மதுரையை விட்டுப் புறப்பட்டான். பாண்டிய நாட்டுப் புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் நீராடினான். அங்கிருந்து நேரே திருமாலிருஞ்சோலை அடைந்து, அங்குள்ள அழகர்பிரானையும் சுந்தரவல்லிநாயகியையும் தியானித்தான். அர்ச்சுனன் தென்திசையே தொடர்ந்து போய்ச் சேது தரிசனம் கண்டான். அவன் அங்கெல்லாம் குமரியிலும், பொருநையிலும், பாபநாசத்திலும் நீராடினான். பிறகு, வடதிசை திரும்பி அர்ச்சுனன் யாத்திரை செய்தான். அப்போது வழியில் இந்திரசாபத்தால் முதலைகளாகித் தடாகத்தில் வாழ்ந்து வந்த ஐந்து தேவமாதர்களின் சாபம் அர்ச்சுனனால் நீங்கியது. பிறகு, அவன் சிவத்தலமாகிய திருக்கோகர்ணம் சென்று, அங்கே சிவனை வணங்கிவிட்டு மழைக்காலத்தில் துவாரகையை அடைந்தான். துவாரகையில் அர்ச்சுனன் திரதண்டம் தாங்கி சன்னியாசி வேஷம் கொண்டான்.

சன்னியாசியான அர்ச்சுனன் ரைவதகமலைக்குச் சென்றான். அங்குள்ள ஓர் ஆலமரத்தடியில் தங்கினான். அப்போது அவன் கண்ணபிரானை நினைத்தான். உடனே கண்ணன் தனியே வந்து அவன்முன் தோன்றினான்.

கண்ணபிரானைக் கண்டு அர்ச்சுனன் மகிழ்ச்சியோடு வணங்கினான். அதை அன்புடன் ஏற்றுக் கொண்ட கண்ணன் அர்ச்சுனனை ஆரத்தழுவிக் கொண்டான். அர்ச்சுனன் சற்றுநேரம் கழித்து ஆலமரத்தடியில் அமர்ந்து தான் வந்த காரியத்தைக் கண்ணனிடம் எடுத்துச் சொன்னான். அதனைக் கேட்ட கண்ணபிரான் மிகவும் சந்தோஷித்து, ''நாளை உதய காலத்தில் வருகிறேன்!'' என்று சொல்லி, விடைபெற்றுக் கொண்டு கணப்பொழுதில் திரும்பவும் துவாரகை அரண்மனையை அடைந்தான்.

மறுநாள் விடிகாலையில் கிருஷ்ணபகவான் யதுகுல அரசர்களுக்கும், துவாரகை வாசிகளுக்கும் ரைவதகமலையில் இந்திரவிழா கொண்டாடும்படிக் கட்டளையிட்டான். அவன் கட்டளைப்படி துவாரகை ஜனங்களும், யதுகுல வேந்தர்களும் ரைவதகமலைக்கு இந்திரபூஜை செய்ய வந்தார்கள். அவர்களுடன் பலராமனும், தோழியர்கள் சூழ சுபத்திரையும் வந்தார்கள்.

அந்த மலையில் ஆலமரத்தின் கீழ் இருந்த அர்ச்சுனனைக் கண்டு உண்மைச் சன்னியாசி என்று எல்லோரும் நம்பினார்கள். அவனைக் கரம் கூப்பி நமஸ்கரித்தார்கள். சன்னியாசியின் அநுகிரகத்தைப் பெற்று அங்கிருந்து போனார்கள். அப்போது கிருஷ்ணன், தன்னை மனத்தால் நமஸ்கரிக்கும் அர்ச்சுனனை வாழ்த்தினான்.

அதேசமயம் சுபத்திரை அம்மலைச்சாரலில் ஓரிடத்தில் இருப்பதை அர்ச்சுனன் பார்த்தான். அதனால் அவன் உடல் சிலிர்த்தது. அவளழகைக் கண்ட அவன் கண்கள் கடப்பமரம் மலர்ந்தது போல் மலர்ந்தன. அதுகண்டு கண்ணபிரான் புன்னகைத்தான். மைத்துனன் அர்ச்சுனனை நோக்கி அவன் மகிழ்வுடன், ''உன் விருப்பத்தை எங்கள் குலத்தவர் அறிந்தால், அதற்குப் பலர் இணங்க மாட்டார்கள். ஆகவே, இங்கே அவர்கள் அறியாதபடி ரகசியமாக சுபத்திரையை விவாகம் செய்து கொண்டு, உனது நகரத்துக்கு அவளைக் கூடவே அழைத்துக் கொண்டு போய்ச் சேர்! இப்படி யாரும்

அறியாமல் தன்னை விரும்பும் ஒரு கன்னிகையை மணந்து கொண்டு தன்னுடன் அழைத்துப் போவது அரசர்க்குரியது தான்!'' என்று சொன்னான்.

பிறகு கண்ணன் சுபத்திரையை அருகே அழைத்து, ''பெண்ணே! உண்மைச் சன்னியாசியான இந்த முனிவருக்கு நான்கு மாத காலம் நீ அன்போடு பணிவிடை செய்து வா!'' என்று கட்டளையிட்டான்.

அதன்படியே சுபத்திரை அர்ச்சுனனை யார் என்று அறியாமலேயே தன் மாளிகைக்கு அன்புடன் அழைத்துச் சென்றாள். அங்கே அர்ச்சுனன் சுபத்திரையின் நினைவுடன் ஓரறையில் தங்கினான். அவ்வறையில் இருந்த படுக்கையில் தூங்குவது போல் பொய்யாகப் படுத்தான். வேறொரு அறையில் சுபத்திரை தனது தோழிமார்களுடன் படுத்துத் தூங்கினாள்.

இரவு முழுதும் அர்ச்சுனன் தூங்கவேயில்லை. சுபத்திரை மேல் கொண்ட காம நோயால் அவன் உடலும் உள்ளமும் வாடி தூக்கம் இழந்துத் துடித்தான். ஆனால் இரவு விடியாமல் போகுமா என்ன? அது விடிந்தது! இருள் மறைந்தது. அர்ச்சுனனின் விரகதாபம்தான் மறையவில்லை!

அன்று முதல் சுபத்திரை குற்றமற்ற சிந்தையோடு அர்ச்சுனனுக்குப் பணிவிடை செய்து வந்தாள். ஆனால், அர்ச்சுனனோ அவளைக் கண்டுக் கண்டு மோகித்து, பேடையைப் பிரிந்த ஆண் அன்றில் பறவையைப் போல மனம் வருந்தினான்.

சுபத்திரை அவனுக்குப் பணிவிடை செய்து கொண்டு வருகையில், சிற்சில சமயம் அவனுடைய மேனியின் உத்தம லட்சணங்களையும், வில் தழும்புபட்ட கைகளையும் கண்டு அவனைச் சந்தேகித்தாள். அந்தச் சந்தேகம் சுபத்திரையின் மனத்தில் கொஞ்சம் கொஞ்மாகப் பெரிதாக வளர்ந்தது. அவளால் அவனை யார் என்று அறிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஒவ்வொரு சமயமும் அதனால் அவள் துடித்தாள். ஒருநாள் தன்னை மீறிய ஆவலில் தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள சுபத்திரை அர்ச்சுனனின் பாதங்களை நமஸ்கரித்து, ''தேவரீர்! புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுவதற்கு எல்லாவிடமும் சென்றிருந்தாலும், தாங்கள்

எழுந்தருளியுள்ள நகரம் எதுவென அடியாள் அறியலாமோ?'' என்று பவ்வியமாகக் கேட்டாள்.

சுபத்திரையின் கேள்விக்கு விடையாக, ''இந்திரப் பிரஸ்தம்!'' என்றான் அர்ச்சுனன்.

உடனே அவள் அவனிடம் அவனைத் தவிர மற்ற பாண்டவர்களைப் பற்றி யோக க்ஷேமம் விசாரித்தாள்.

அர்ச்சுனன் அப்போது அவளைப் பார்த்து, ''மின்னற்கொடியே! பாண்டவர்கள் ஐவர். அவர்களுள் நால்வரை விசாரித்த நீ, எதனால் வில்வீரனான அர்ச்சுனனை மட்டும் விசாரிக்க மறந்தாய்?'' என்று கேட்டான்.

அச்சமயம் அங்கு வந்து நின்ற சுபத்திரையின் தோழி அர்ச்சுனனை வணங்கி, ''வீணாகானம் போல் இனிமையாகப் பேசும் எங்கள் தலைவியாகிய இவள், முறைப்படி அந்த அர்ச்சுனமகாராஜாவுக்கு மனைவியாக வேண்டியவள். ஆகவே, வெட்கத்தால் அம்மன்னனைக் குறித்து விசாரிக்காமல் விட்டாள்!'' என்றாள்.

மேலும் அவள், ''தீர்த்த யாத்திரை செய்ய இந்திரப்பிரஸ்தத்தைவிட்டு அர்ச்சுனராஜா பூமிபிரதக்ஷிணம் செய்வதாக அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள். இப்போது அவர் எங்கிருக்கிறார் என்று சுவாமிகளுக்குத் தெரியுமோ?'' என்று கேட்டாள்.

வில்விஜயன் அதற்கு, ''தீர்த்த யாத்திரை போன அர்ச்சுனன் எல்லாப் புண்ணியத் தீர்த்தங்களிலும் நீராடிவிட்டு, கடைசியாக இங்கே வந்தான். இப்போது இம்மாளிகையிலேயே தங்கியிருந்து சுபத்திரையின் பணிவிடைகளை மகிழ்ச்சியோடு ஏற்று வசிக்கிறான்!'' என்றான்.

அர்ச்சுனன் அப்படிச் சொல்லவும், அவனை யார் என்று கணப்பொழுதில் சுபத்திரை அறிந்து கொண்டாள். அவன்முன் தான் நிற்பதை எண்ணினாள். அக்கணமே அவள் நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பின; செவ்வாய்த் துடித்தது; தனங்கள் மயிர்க்கூச்சம் அடைந்தன! நாயகன் பக்கத்தில் இருக்கும்போது பெண்மனம் சஞ்சலம் அடையாதா, என்ன?

பவழம் போல் சிவந்த வாயும், நீலோற்பல மலர் போல் கண்களும் கொண்டு, கார்காலத்தைக் கண்டு களித்து ஆடும் இளமயில் போல் அழகுடன் விளங்கும் சுபத்திரையின் நிலையைக் கண்ட அர்ச்சுனன் மகிழ்ந்தான். அவனுடைய விரகதாபம் அதிகமாகியது. வளையல் குலுங்கும் அவளுடைய மென்மையான கைகளைத் தனது நீண்ட அழகிய கைகளால் பற்றினான்.

சுபத்திரை உடனே தனது தோழியர்களிடம், "என் உயிரனைய தோழியரே! எங்களின் இக்கட்டைத் தவிர்ப்பீராக!'' என்றாள்.

அக்கணமே அவள் தோழிமார்கள் அங்கிருந்து சென்றார்கள். சுபத்திரையும் விஜயனும் அருகில் இருந்த ஒரு மாதவி பந்தலுக்குச் சென்றார்கள்.

தோழிமார்கள் நேரே சென்று சுபத்திரையின் தாய் தேவகியிடம் தாங்கள் கண்டறிந்த சேதியைச் சொன்னார்கள். அது கேட்டு தேவகி மகிழ்ந்தாள்.

கண்ணபிரான் அச்சமயம் அச்செய்தியைத் தனது யதுகுலத்தவர்கள் அறியாமல் இருப்பதற்காக, அவர்கள் எல்லோரையும் சிவபூஜை நடத்தும் பொருட்டு, தன்னோடு மகாத்வீபம் என்னும் இடத்துக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்ந்தான்.

அர்ச்சுனனும் சுபத்திரையும் துவாரகையைவிட்டு யதுகுலத்தவர்கள் எல்லோரும் சென்றுவிட்டதை அறிந்தார்கள். அர்ச்சுனன் தன் தந்தை இந்திரனை நினைத்தான். சுபத்திரை தன் தமையன் கிருஷ்ணனை மனத்தில் தியானித்தாள். அக்கணத்தில் இந்திரனும் கிருஷ்ணனும் அவர்கள்முன் வந்து சேர்ந்தார்கள்.

இந்திராணியுடன் வந்த தேவேந்திரனைக் கண்ணபிரான் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு அழைத்து உபசரித்தான். அவனைப் பொன்மண்டபத்தில் சிங்காசனத்தில் உட்கார வைத்தான். அர்ச்சுனன் தந்தையை வணங்கினான். தேவேந்திரன் எல்லோரோடும் உரையாடி மகிழ்ந்தான். அங்ஙனம் பேசிக் கொண்டிருந்த பின், இந்திரனும் இந்திராணியும் தங்களுடைய ஆபரணங்களினால் அர்ச்சுனனையும் சுபத்திரையையும் அழகாக அலங்கரித்தார்கள்.

அப்போது கண்ணபிரான் தன்னருளால் வசிஷ்டரையும், மற்ற முனிவர்களையும் அங்கே வரவழைத்தான். அவர்கள் மணமக்களை ஆசீர்வதித்தார்கள்.



முரசும் சங்கும் மங்கலம் முழங்க கூடியிருந்த பெரியோர்களின் ஆசியுடன் அக்கினி சாட்சியாக அர்ச்சுனன் சுபத்திரையை மணந்தான். சுபத்திரா கல்யாணம் முடிந்ததும் இந்திரன் முதலானவர்கள் தங்கள் இருப்பிடம் போனார்கள்.

கல்யாணம் முடிந்துவிட்டது! ஆனால், மைத்துன கேலி இன்னும் முடியவில்லையே. அது முடிந்தால் அல்லவா கல்யாணம் பூரணமாக முடிந்ததாக அர்த்தம்? கண்ணபிரான் அர்ச்சுனனைத் தழுவிக் கொண்டு, ''மைத்துனா! பெண்களை விவாகம் செய்வதற்காக நீ இன்னும் என்ன என்ன பெரிய தவவேஷங்களையெல்லாம் போடுவாயோ?'' என்று கிண்டல் செய்தான்.

கேலி முடிந்ததும் கண்ணபிரான் சுபத்திரைக்கு ஒரு கட்டளையிட்டான். அதன்படி சுபத்திரை தேரை ஓட்டினாள்.

தேரில் அர்ச்சுனன் அமர்ந்து இந்திரப்பிரஸ்தத்தை நோக்கிச் சென்றான்.

அவர்கள் துவாரகையைவிட்டு நீங்கியதும், கண்ணபிரான் பலராமன் முதலியவர்களை உடனே அழைத்து, ''அர்ச்சுனன் நமது தங்கை சுபத்திரையைப் பலாத்காரமாகக் கொண்டு போகிறான்!'' என்று சொன்னான்.

அதைக் கேட்டு பலராமன் சினத்தால் கொதித்தான். தனது யதுகுலவீரர்களுடன் பெரிய சேனை கொண்டு அர்ச்சுனனை எதிர்க்க விரைந்தான். வேகமாகச் சென்ற யதுகுலத்தவர்கள் சற்று தூரத்திலேயே அர்ச்சுனன் தேரை மடக்கிக் கொண்டார்கள். அப்புறம் என்ன? யது குலத்தவர்களுக்கும் அர்ச்சுனனுக்கும் கடும்விற்போர் மூண்டது!

சுபத்திரை அதனைப் பார்த்து அஞ்சினாள். அவள் அச்சத்தைக் கண்ட அர்ச்சுனன், ''கயல்விழியாளே! அஞ்சாதே. போரில் உனது சுற்றத்தவரின் உயிரைக் கவர்வேன்!'' என்று அவளுக்குத் தேறுதல் சொன்னான்.

மறுவினாடி அர்ச்சுனன் தன் கொடிய வில்லிலிருந்து பாணங்களைச் சரமாரியாகத் தொடுத்தான். அவனுடைய அம்புகளுக்குப் பதில் சொல்ல முடியாது யதுகுலத்தவர்கள் தோற்றுப் புறமுதுகிட்டுத் துவாரகை நோக்கி ஓடினார்கள். அர்ச்சுனன் வெற்றிபெற்று மனைவியைத் தழுவிக் கொண்டான்.

சுபத்திரை திரும்பவும் தேரை ஓட்டினாள். அர்ச்சுனன் மகிழ்ச்சியோடு தேரில் அமர்ந்து சென்றான். தேர் இந்திரப்பிரஸ்தத்தின் எல்லையை அடைந்தது. வெகுநாட்களுக்குப் பின் சொந்த ஊர் திரும்பி வரும் அர்ச்சுனனை அவனுடைய உடன் பிறந்தவர்கள் எதிர் கொண்டு வரவேற்று அழைத்துச் சென்றார்கள்.

தோற்றுத் திரும்பி வந்த யதுகுலத்தவர்களைக் கண்ணன் அழைத்துச் சமாதானம் செய்தான். பிறகு, பலராமனை அழைத்துக் கொண்டு மணமக்களுக்கான சீதனப்பொருள்களுடன் கண்ணன் இந்திரப்பிரஸ்தம் வந்தான். மணமக்களுக்குத் தான் கொண்டு வந்த பொருள்களை அன்போடு கொடுத்தான். பலராமன்

தங்கையை ஆசீர்வதித்துவிட்டுத் திரும்பவும் துவாரகைக்குத் திரும்பிச் சென்றான். கண்ணபிரான் பாண்டவர்களுடன் இந்திரப்பிரஸ்தத்தில் தங்கினான்.

அர்ச்சுனனும் சுபத்திரையும் நாள்தோறும் தொடர்ந்து இன்பச் சுகம் கண்டு வாழ்ந்து வந்தார்கள். அப்படியே நாட்கள் பல கடந்தன. சுபத்திரை நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் அபிமந்யுவை மகனாகப் பெற்றாள்!

திரௌபதியிடம் பஞ்ச பாண்டவர்கள் வருஷத்துக்கு ஒருவராகக் கூடி வாழ்ந்ததால், அவள் அவர்களால் ஒவ்வொரு வருஷமும் கர்ப்பம் தரித்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள். தருமரிடம் அவள் பிரதிவிந்தியனையும், பீமனிடம் சுதசோமனையும், அர்ச்சுனனிடம் சுருதகர்மாவையும், நகுலனிடம் சதாநீகனையும், சகாதேவனிடம் சுருதஸேநனையும் பெற்றாள்.

உரிய பருவம் அடைந்தவுடன் அபிமந்யுவும் பஞ்சதிரௌபதியரும் கல்வியும் போர்ப் பயிற்சியும் பெற்றார்கள். அவர்களில் அபிமந்யு எல்லோரைக் காட்டிலும் சிறந்த வீரனாக விளங்கினான்.

நாட்கள் அவ்வாறு செல்ல இளவேனில் வந்தது!

8. காண்டவ தகனம்

சூரியன் தட்சிணாயணம் விட்டு உத்தராயணம் வந்தான்!

வசந்தகாலம் வந்தது!

பொதிகைத் தென்றல் தவழ்ந்தது!

சோலையெல்லாம் பூத்தன!

குயில்கள் தளிர்களை வாயினால் கோதின!

மன்மதன் ரதிதேவியுடன் பட்டணப் பிரவேசம் செய்யப் புறப்பட்டான்!

கிருஷ்ணனும் அர்ச்சுனனும் தங்கள் தேவியருடன் வசந்தோற்சவம் கொண்டாட சோலைக்குச் சென்றார்கள்.

வானில் திரள் திரளாக மேகங்கள் வட்டமிடுவதையும், மின்னல் பளிச் பளிச்சென்று தோன்றுவதையும், வானவில் தெரிவதையும், இந்திரகோபப் பூச்சிகள் பறப்பதையும், முல்லையும் குமிழும் காந்தளும் பூப்பதையும், மலைகளிலிருந்து முத்துக்கள் அருவியாக விழுவதையும் பெண்களின் வடிவங்களிலெல்லாம் கண்டு மயில்கள், இளவேனிற் பருவம் கார்ப்பருவமானது என்று மகிழ்ந்தன.

அரம்பையர் போன்ற பெண்களின் பார்வைப்பட்டு சோலைகளிலெல்லாம் மாமரம் பூத்தது; நகைப்பைக் கண்டு முல்லை பூத்தது; பாடல் கேட்டு குருகத்தி மலர்ந்தது; ஆடல் பார்த்து புன்னை மலர்ந்தது; உதையால் அசோகு பூத்தது; அணைப்பால் குரா மலர்ந்தது; நட்பால் ஏழிலைம்பாலை மலர்ந்தது; நிந்தனையால் பாதிரி மலர்ந்தது; சுவைப்பால் மகிழம் பூத்தது; நிழல்பட சண்பகம் தளிர்த்தது! அவ்வாறு பூத்த மலர்களை அவர்கள் கொய்தார்கள்.

பெண்கள் நீராட தடாகங்கள் சோலைகளாயின. அவர்கள் நடமாட சோலைகள் தடாகங்கள் ஆயின.

இளவேனிலில் சோலையில் வசந்தோற்சவம் கொண்டாடச் சென்ற அர்ச்சுனன் தனது தேவியருடன் ஒருபக்கம் ஜலக்கிரீடையும் நீர்விளையாட்டும் செய்தான். வேறொருபக்கம் கிருஷ்ணன் தனது தேவியருடன் அர்ச்சுனனைப் போலவே மகிழ்ந்தான்.

வசந்தோற்சவம் பகல் முழுவதும் கொண்டாடி மகிழ்ந்தபின், அர்ச்சுனனும் கிருஷ்ணனும் தங்கள் தேவியருடன், பணிப்பெண்கள் முன்னே விளக்கேந்தி வழிகாட்டி நிற்க அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

இளவேனில் மறைந்தது!

முதுவேனில் பிறந்தது!

வெய்யிற் கொடுமையைப் போக்க மாளிகைகளில் எல்லாம் சீதளகரமான தாமரையுட்சுருள் தரையெங்கும் பரப்பப்பட்டன. கணவர்கள் மனைவியர்களுடன் கூடி இன்பம் அனுபவித்தார்கள். அதேசமயம் ஊடலும் கொண்டு பெண்கள் ஆண்களை ஒதுக்கித் தள்ளினார்கள்.

முதுவேனிலின் கொடூரம் மேலும் அதிகரித்தது. காற்றில்லாததால் புழுக்கமும், மழையில்லாததால் நீர் வறட்சியும் ஏற்பட்டன.

கண்ணனும் அர்ச்சுனனும் யமுனைக் கரையோர சோலையில் கோடையின் கொடுமையைத் தவிர்க்கத் தங்கியிருந்தார்கள். அப்போது அக்கினிதேவன் அந்தண வேஷங் கொண்டு அவர்கள் முன் வந்தான். அவனைக் கண்டு அவர்கள் எதிர்சென்று வணங்கி வரவேற்று அழைத்து வந்தார்கள். பொன்னாசனத்தில் அக்கினியை உட்கார வைத்து உபசரித்தார்கள். கடைசியில் அக்கினி அவர்களைப் பார்த்து, ''கொடியபசி எனக்கு அதிகமாக இருக்கிறது. சீக்கிரம் எனக்கு உணவு கொடுங்கள்!'' என்று வேண்டினான்.

அதுகேட்டு அவர்கள், ''மகாமுனிவனே! நீ உண்பதற்குத் தகுந்த உணவை இந்தக் கணமே தருவோம்!'' என்று மனமகிழச் சொன்னார்கள்.

உடனே அக்கினிதேவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவர்களை ஆசையோடு நோக்கி, ''புத்தம் புது மலர்மாலை தரித்தவர்களே! நான் அந்தணன் இல்லை. மாறுவேஷத்துடன் இங்கு வந்தேன். நான் அக்கினிதேவன். இப்போது எனக்கு உணவாக வேண்டுவது காண்டவவனம். அது இந்திரனின் பாதுகாப்பில் உள்ளது. நான் அதை உண்பதற்கு இந்திரன் ஒருக்காலும் இடங்கொடுக்க மாட்டான்! அந்தக் காண்டவ வனத்தில் நால்வகை விருட்சங்களும் நிறைந்துள்ளன. பெரிய மலைக்கூட்டங்கள் அங்குள்ளன. அசுரர்களுக்கும் அரக்கர்களுக்கும் அது இருப்பிடம். இரத்தம் குடிக்கும் சிங்கம் முதலிய வனவிலங்குகள் அங்கே அதிகம். அநந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்ஷகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்னும் அஷ்டமகாநாகங்களுடன் தக்ஷகன் வசிக்கும் காடு அது. நான் அந்த வனத்தைச் சாப்பிடத் தொடங்கினால், அதனைக் காவல் காக்கும் இந்திரன் ஏழு மேகங்களையும் அனுப்பி அவற்றால் என் மேல் மழை பெய்யச் செய்து என்னைத் தணித்து விடுவான். முன்பு கிருஷ்ண பரமாத்மா கோவர்த்தனகிரியை குடையாகப் பிடித்து மழையைத் தடுத்துப் பசுக்கூட்டங்களைப் பாதுகாத்து அருளியது போல, ஒன்றாக அம்மழையைத் தடுத்துவிட்டால் என் ஆசையும் எண்ணமும் நிறைவேறும்! இதுவே நான் வேண்டுவது!'' என்றான்.

அர்ச்சுனன் அதற்கு, ‘‘அக்கினியே! உன் விருப்பப் படியே உணவு கொடுத்தோம். அந்தக் காண்டவவனத்தை இமைப்பொழுதில் நீ உணவாய்க் கொள்!’’ என்றான்.

அக்கினிதேவன் விஜயனின் வார்த்தைகளால் மகிழ்ச்சியடைந்தான். அம்மகிழ்ச்சியுடன் கண்ணபிரானது அருளால் அர்ச்சுனனுக்கு அவன் எடுக்க எடுக்கக் குறையாத அம்புகள் கொண்ட இரண்டு அம்பறாத்தூணிகளையும், வில்லையும், தேரையும், நான்கு வெள்ளைக் குதிரைகளையும், தேர்ப்பாகனையும் கொடுத்தான்.

தேர்ப்பாகன் அடுத்தகணம் தேரைப் போருக்குத் தயார் செய்தான். அர்ச்சுனன் போர்க்கோலம் கொண்டு தேரில் ஏறினான். உற்சாகத்தோடு வில்லின் நாணியைக் கைவிரலால் தெறித்தான். அதனால் வில்லிலிருந்து பேரொலி எழுந்தது. அவ்வொலி காண்டவ வனத்தில் வாழும் கொடிய பிராணிகளை அச்சுறுத்தி இடிபோல வானத்தை முட்டி ஒலித்தது.

உடனே அக்கினிதேவன் படபாமுகாக்கினி போலவும், ஊழித்தீப் போலவும் வளர்ந்தெழுந்தான். அவன் அர்ச்சுனனின் கையையும், அக்கையிலுள்ள நீண்ட வில்லையும் வாழ்த்திக் கொண்டே வாயுவின் உதவியோடு அண்டகோளத்துக்கும் மேலே உயர்ந்தெழுந்து காண்டவ வனத்தை வளைத்துக் கொண்டு அழிக்கத் தொடங்கினான்.

அக்கினியின் கொடுந்தீச்சுவாலைப் பட்டு மரங்கள் எரிந்தன. மலைகள் வெடித்துச் சிதறின. பறவைகள் கருகின. மிருகங்கள் வெந்துச் சாம்பலாயின. நாகங்கள் மாண்டன.

தேவேந்திரன் காண்டவவனம் அக்கினியால் அழிவதை அறிந்தான். அவன் கண்கள் கோபாக்கினியை உமிழ்ந்தன. உடல் சினத்தால் கொதித்தது. அக்கணமே அவன் காண்டவவனம் வந்தான். அங்கே கிருஷ்ணனும் தனது மகன் அர்ச்சுனனும் துணை செய்ய அக்கினி வனத்தை எரிப்பதைக் கண்டான். காண்டவ வனத்தில் வாழும் தக்ஷகன் மகாநாகம் அழிந்து போகுமே என்று கவலை கொண்டான். உடனே மேகங்களைத் தீயைத் தணிக்குமாறு கட்டளையிட்டு அனுப்பினான். தானும் போர்க்கோலம் கொண்டு தேவசேனையுடன் போருக்குக் கிளம்பினான்.

இந்திரனின் கட்டளைப்படிச் சென்று ஏழு மேகங்களும் காண்டவவனத்தின் ஆகாயத்தில் பரவின. கருக்கொண்டு பயங்கர இடி முழக்கம் செய்தன. அது கண்டு அக்கினிதேவன், 'புகையும் என்னுடையது. வாயுவும் என்னுடைய நண்பன். அந்த நீரும் என்னிடமிருந்து பிறந்ததுதான். நானும் இப்போது இந்த மூன்று பொருள்களுடன் சேர்வதை நிறுத்துவேன். இந்த நான்குப் பொருள்களும் ஒன்றோடொன்று சேராமல் பிரிந்துவிட்டால், மேகங்கள் எங்கிருக்கும்? மேகங்கள் இல்லாமல் இந்திரன் போரில் என்னை என்ன செய்துவிடுவான்? இனி நடப்பதை அறிவோம்!' என்று எண்ணிச் செருக்கடைந்தான்.

அதேபோல் மேகங்கள், 'இந்திரகுமாரன் அம்புகளால் தடுத்தாலும் சரி. கிருஷ்ணன் முன்பு கோவர்த்தன மலையை எடுத்தது போல மலையை எடுத்துக் குடையாகப் பிடித்துத் தடுத்தாலும் சரி நாங்கள் அக்கினியை அழித்து எங்களுடைய காண்டவவனத்தைப் பாதுகாப்போம்!' என்று நினைத்துச் செருக்குடன் பெருமழைப் பெய்தன.

உதயப்பொழுதில் சூரியன் பனி முழுவதையும் விழுங்கியது போல, அக்கினி காண்டவவனத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் விழுங்கினான். அதனால் அவனுக்குப் பெரும் தாகம் எடுத்தது. அப்போது ஏழுபெரிய மேகங்களும் ஏழு கடல் நீரையும் முகந்து வந்து மழையாகச் சொரிந்தன. அந்நீரில் தனது ஏழு நாக்குகளையும் அக்கினி நனைத்துக் கொண்டான். அப்படியும் அவனுடைய அதிகமான தாகம் அடங்கவில்லை.

மேகங்கள் செருக்குற்று மேலும் மழையைப் பொழிந்தன. அக்கினி நெய்க் கடல் சொரிந்தது போல அம்மழை நீரைத் தாகசாந்தி செய்வதற்காகக் குடித்து ஆகாயத்தை முட்டி எழுந்தான்.

அதேசமயம் அர்ச்சுனன் அம்புகளினால் மழையைத் தடுத்து நிறுத்தி சரக்கூடம் கட்டினான். அப்போது தேவர்கள் தக்ஷகனைக் காப்பாற்றுவதற்காக, அப்பாம்பைத் தேடிக் கொண்டு சரக்கூடத்தைச் சுற்றி வந்தார்கள். அர்ச்சுனன் சரக்கூடம் கட்டியதைப் பார்த்ததும் தக்ஷகனின் மனைவியான நாகமாது தனது குட்டியை வாயில் கவ்விக் கொண்டு வானத்தில் எழுந்தது. அர்ச்சுனன் அதைப்

பார்த்தான். உடனே அந்த நாகமாதின் தலையை அம்பால் துண்டித்து கீழே தள்ளினான்.

இந்திரன், துண்டித்து விழுந்த நாகமாதின் தலையிடம் சென்றான். தீப்பற்றி எரிந்த அத்தலையை ஐராவதத்தின் மதநீரால் நனைத்துத் தீயை அணைத்தான். அத்தலையைப் போர்க்களத்திலிருந்து ஒதுக்கி, அதனுள்ளிருந்து பிழைத்த தனது நண்பன் தக்ஷகனின் குமாரனை எடுத்து அணைத்துக் கொண்டான். அச்செய்கையை அக்கினி கண்டான். ஆனால், அவன் இந்திரனை ஒன்றும் செய்யவில்லை. எப்படிச் செய்வான்? இந்திரனும் அக்கினியும் உடன் பிறந்தவர்கள் அல்லவா?

தக்ஷகனின் மகனான அசுவசேனனை இந்திரன், எரிந்த நாகமாதின் தலையிலிருந்து விடுவித்ததைக் கண்டதும் அர்ச்சுனன் பெரும் கோபம் கொண்டான். அக்கோபத்துடன் தன்னை எதிர்த்த தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். ஏழு மேகங்களையும் அம்புகளால் பிளந்து மறையச் செய்தான்.

அப்போது அசுவசேனன் பலரிடம் வேண்டி அர்ச்சுனனின் பகைவன் கர்ணன் என்பதை அறிந்து கொண்டான். உடனே சூரியபுத்திரன் கர்ணனின் பாதங்களே புகலிடம் என்று எண்ணி விரைந்து சென்று அவனிடம் தஞ்சமடைந்து, உக்கிரங் கொண்ட கொடிய அம்பாகி அவன் அம்பறாத்தூணியில் புகுந்தான்.

அசுவசேனனைக் காப்பாற்றி அனுப்பிய பிறகு, இந்திரன் தக்ஷகனைக் காண்டவவனம் முழுவதும் தேடினான். அவனை எங்கும் காணவில்லை. அதனால் இந்திரன் கோபம் கொண்டான். சினம் பொங்கும் உள்ளத்தோடு ஐராவதத்தை வேகமாக ஓட்டிக் கொண்டு தன்மகன் அர்ச்சுனன் முன் வந்தான். மேகங்களும் தேவர்களும் அர்ச்சுனனால் நிலைகுலைந்ததை எண்ணினான் இந்திரன். அவன் கோபம் மேலும் அதிகமாகியது. அடக்கமுடியாத கோபத்தோடு அவன் வில்லும் அம்பும் எடுத்துப் போருக்குத் தயாரானான். இந்திரனுக்குத் துணையாகத் திக்குப்பாலர்களும் தங்கள் வாகனங்களில் ஏறிப் போருக்கு ஆயத்தமானார்கள். தோற்றோடிய முப்பத்து முக்கோடி தேவர்களும் கூட இந்திரனின் ஆவேசம் கண்டு

தைரியமடைந்தார்கள். உடனே அவர்கள் முப்பத்து மூன்று தேவர்களின் தலைமையில் ஒவ்வொரு கோடி தேவர்களாகப் போர் செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

யுகமுடிவு என்பது போல் கூடிய தேவர்கள் மனிதர்களான கிருஷ்ணார்ச்சுனரைக் கோபித்துப் போர் செய்யத் தொடங்கினார்கள்.

அர்ச்சுனன் அக்கணமே கொடும் போர் செய்தான். அவனுடைய அம்புகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தேவர்களான துவாதசாதித்தர்களும், ஏகாதசருத்திரர்களும், வசுக்களும், அசுவிநீதேவரும், திக்குபாலர்களும் தோற்றோடினார்கள். மேலும், அவனுடைய அம்புகளால் மேகங்கள் சிதறி ஓடின.

கடைசியாக அர்ச்சுனன் இந்திரனை எதிர்த்து உக்கிரமாகப் போர் செய்யத் தொடங்கினான். தந்தை என்றும் எண்ணாமல் இந்திரனின் போர்க் கொடியைத் துண்டித்தான். அப்போது வானத்தில் இந்திரனை நோக்கி அசரீரி எழுந்தது. ''உங்களுக்குச் சுற்றத்தவர்களைவிட இனியவனான தக்ஷகன் முன்பே குருக்ஷேத்திரத்தை அடைந்து அக்கினிக்குத் தப்பிப் பிழைத்தான். அவனுடைய மகன் அசுவசேனனும் உங்களால் தப்பிப் பிழைத்து விட்டான். அக்கினி மேகத்துக்குத் தணியமாட்டான். இந்தக் கிருஷ்ணார்ச்சுனர்கள் நம்மைச் சேர்ந்த இரண்டு தேவர்களே. இவர்களும் நமக்குச் சிறிதும் இளைக்கமாட்டார்கள். ஆகவே, தேவர்களும் தேவராஜனுமான நீங்கள் இவர்களோடு செய்யும் போரை நிறுத்துங்கள்!...போரை நிறுத்துங்கள்!'' என்னும் அசரீரி வாக்கைக் கேட்டு இந்திரனும் தேவர்களும் சாந்தம் கொண்டார்கள். அவர்கள் கிருஷ்ணார்ச்சுனர்களுடன் செய்த போரை நிறுத்திவிட்டு தேவலோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்படியான பின்பு அர்ச்சுனன் தனக்குப் போரில் ஏற்பட்ட வெற்றியைக் கொண்டாட வெற்றிச்சங்கம் ஊதினான். கிருஷ்ணன் மைத்துனனின் போர்த்திறமை கண்டு வாழ்த்தினான்.

அது மட்டுமில்லை. தோற்றோடிய தேவர்களும் இந்திரனும் கூட அர்ச்சுனனின் போர்வலிமையைப் புகழ்ந்தார்கள். முனிவர்கள் அவனை ஆசீர்வதித்துப் பாராட்டினார்கள்.

அச்சமயம் அக்காண்டவவனத்தில் அதுவரை மறைந்திருந்த மயனை அக்கினி சென்று வருத்தினான். உடனே மயன் அக்கினியின் கொடுமை தாங்காது, ''அர்ச்சுனா, அபயம்!'' என்று கதறினான்.

மயனின் கதறல் கேட்டு கண்ணபிரான் அவனுக்கு அருள்புரிய அவன் தப்பிப் பிழைத்தான். மேலும், அக்கினியின் கொடுமைக்கு ஆளாகாமல் தப்பிப் பிழைத்தவர்கள் அசுவசேனனும், தக்ஷகனும், மந்தபாலரின் அருளால் தோன்றிய நான்கு இளைய சார்ங்க்கப்பறவைக் குஞ்சுகளுமே ஆகும். அச்சார்ங்க்கப்பறவைக் குஞ்சுகளும் அக்கினியைப் பிரார்த்தித்ததாலும், மந்தபாலமுனிவரின் விருப்பத்தைத் தழுவியதாலும் தப்பிப் பிழைத்தன.

பதினான்கு உலகங்களையும் திருமால் பிரளய காலத்தில் விழுங்குவது போல, அறுபது யோஜனை விஸ்தீரணமுள்ள காண்டவவனத்தை அக்கினிதேவன் சுத்தமாக தகனம் செய்த பின்பு, தனது கொடிய பசி அடங்கப் பெற்றான். அவன் வயிறு குளிர்ந்தது. அவன் சினம் நீங்கிச் சாந்தம் அடைந்தான். அக்கினிதேவன் கிருஷ்ணார்ச்சுனர்களை ஆசீர்வதித்தான். பிறகு, அவன் உணவு நிரம்பிய வயிற்றைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி அசைந்து அசைந்து சென்று வானுலகைச் சேர்ந்தான்.

வெற்றி விஜயர்களான கிருஷ்ணார்ச்சுனர்கள் அலங்கரிக்கப்பட்ட வெற்றித் தேர்களில் ஏறினார்கள். இந்திரப்பிரஸ்தத்தை நோக்கித் தேர்கள் ஓடின. தருமர் முதலிய பந்துக்கள் அவர்களின் வெற்றியை அறிந்து மகிழ்ந்தார்கள். அவர்கள் எதிர்கொண்டு வந்து வரவேற்று இருவரையும் அழைத்துக் கொண்டு சென்றார்கள். நகரமக்கள் மகிழ்ந்து வரவேற்கவும், மூவகை முரசங்களும் வெற்றியை ஒலிக்கவும், சங்குகள் வெற்றிச் சின்னம் ஊதவும், மீண்டும் கிருஷ்ணார்ச்சுனர்கள் மகிழ்ச்சியுடன் இந்திரப்பிரஸ்தத்தை அடைந்தார்கள்!

சபா பருவம்

1. இராஜசூயம்

பஞ்சபாண்டவர்கள் கண்ணபிரானுடைய உதவியுடன் இந்திரப்பிரஸ்தத்தில் தங்கி நல்லாட்சி புரிந்து வந்தார்கள். அப்போது ஒருநாள் அசுரசிற்பியான மயன் அவர்களிடம் வந்து வணங்கி வாய்ப் பொத்தி, ''குருகுல குமாரர்களே! நீங்கள் பிறந்த குருகுலத்தை நல்லொழுக்கத்துடன் காப்பது போல, மற்ற குலத்தவர்களின் ஒழுக்கத்தையும் பாதுகாத்து வருகின்றீர்கள். தீவினையுடைய நான் இன்று உங்களால் உயிர்ப் பிழைத்திருக்கின்றேன். இந்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக நான் செய்வதற்கு வேறெதுவும் இல்லை. என்றாலும் நீதி தவறாது அரசாட்சி புரிந்து வரும் தருமருக்கு சிற்பிகளே வியக்கும்படியான அருமையான ஓர் இரத்தினமண்டபம் கட்டித் தருகிறேன். வ்ருஷபர்வா என்னும் அசுரராஜன் ஒருவன் முன்பு இந்தப் பூமியை ஆண்டு வந்தான். அவன் தனது பராக்கிரமத்தால் பகைவர்களை வென்று, அவர்களிடமிருந்து நட்சத்திரங்கள் போல் ஒளிவீசும் பலவகையான இரத்தினங்களை அரசிறைப் பொருளாகப் பெற்றான். அந்த இரத்தினங்கள் எல்லாம் பிந்து என்னும் பொய்கையில் கிடக்கின்றன. அவற்றையே நான் தருமருக்காகக் கட்டும் இரத்தின மண்டபத்துக்குப் பயன்படுத்தப் போகிறேன்!'' என்றான்.

தருமர் அதுகேட்டு, ''அப்படியே, ஆகட்டும்!'' என்று கட்டளையிட்டார்.

உடனே மயன் தனது பணியாளர்களுக்கு அந்தக் கட்டளையைத் தெரிவித்தான். அடுத்தகணம் மிகப்பராக்கிரமசாலிகளான மயனின் அறுபதுலக்ஷம் வேலையாட்களும் அந்த இரத்தினங்கள் முழுவதையும் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

சோதிடர்கள் குறித்து தந்த சுபமுகூர்த்தத்தில் மயன் மண்டபம் கட்டும் வேலையை ஆரம்பித்தான். பொற்கற்களை அடுக்கி பொன்னால் சுவர்கள் எழுப்பினான். மரகதத்தால் தூண்களைச் செய்து நட்டான். பவழத்தால் உத்திரங்களை அமைத்தான். அப்படியாக மயன்

சிற்பசாஸ்திரமே ஆச்சர்யப்படும்படி சுதர்மை என்னும் தேவேந்திர சபாமண்டபத்தைவிட மிகப் பிரமாதமான சபாமண்டபத்தைக் கட்டி முடித்தான். கோடிக்கணக்கான நாட்கள் கஷ்டப்பட்டுக் கட்ட வேண்டிய அம்மண்டபத்தை மயன் தனது அபாரத் திறமையினால் பதினான்கு மாதங்களிலே கட்டி முடித்துவிட்டான். பின்பு, அவன் சத்துருகாதினி என்னும் கதாயுதத்தை பீமனுக்கும், வருணனுடைய தேவதத்தம் என்னும் சங்கத்தை அர்ச்சுனனுக்கும் பரிசாகக் கொடுத்தான்.

நல்லதொரு முகூர்த்தத்தில் மயன் தமக்காக கட்டிக் கொடுத்த இரத்தின மண்டபத்தில், சுற்றத்தார்கள் மனமகிழ திரௌபதியுடன் தருமர் கிரகப்பிரவேசம் செய்தார். ஒருநாள் அந்த மண்டபத்திலே பல தேசத்து அரசர்கள் கூடியிருக்க, தம்பிகளோடும் கண்ணனோடும் தருமர் அரசசபை நடத்தும் போது நாரதர் வந்தார். உடனே தருமர் எதிர் கொண்டு சென்று வரவேற்று அழைத்து வந்து அவரைச் சிங்காசனத்தில் உட்காரச் செய்தார். மேலும், எல்லா உபசாரங்களையும் நாரதருக்குச் செய்துவிட்டு, தருமர் கடைசியாக அவரை நோக்கி, ''சுவாமி! தாங்கள் இங்கு எழுந்தருளுவதற்கு நான் என்ன தவம் செய்தேன்!'' என்று உப்சாரவார்த்தை கூறினார்.

மீண்டும் தொடர்ந்து தருமர் நாரதரைப் பார்த்து, ''அமுதபானம் செய்த தேவர்களின் காதுகளில் யாழிசையாகிய தேனோடு கலந்த அமுதத்தை ஊற்றும் சங்கீதப் பண்டிதரே! சிவபெருமானின் திருநடனத்துக்குத் தக்கபடி ஆனந்தத்துடன் தேவகானம் பாடுகின்ற தத்துவஞானஸ்தரே! மகாமுனிவராகிய தாங்கள் இங்கு எழுந்தருளியதால், நான் பெரும் தவம் செய்தவனானேன். என்னைப் போல் இத்தவம் செய்தவர்கள் உலகில் வேறு யார் இருக்கின்றார்கள்?'' என்று சொன்னார்.

தருமர் அப்படி நாரதருக்கு உபசாரவார்த்தைச் சொல்லி முடித்ததும், மற்ற பாண்டவர்கள் வந்து அவரை நமஸ்கரித்தார்கள். கண்ணபிரான் களிப்பு பொங்கும் கண்களால் நாரதரை நோக்கினான். அப்போது நாரதர் தருமரிடம், ''தருமா! இந்தச் சபாமண்டபம் போல் ஒரு சபாமண்டபம் செல்வச் சீமானான குபேரனின் நகராகிய அளகாபுரியிலும் இல்லை! 'தருமன் இச்சபாமண்டபத்திலே

மன்னர்கள் எல்லோரும் திரண்டிருக்க இராஜசூய யாகம் செய்ய வேண்டும்' என்று பரலோகத்தில் உள்ள உன் தந்தை என்னிடம் சொன்னார்!'' என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

நாரதர் சொல்லிச் சென்றதைக் கேட்ட கண்ணபிரான், 'இதுவே, ஜராஸந்தவதம் நடப்பதற்கான காலம்!' என்று நினைத்தான். அந்நினைவோடு அவன் தருமரை நோக்கி, ''ஜராஸந்தமன்னன் நரமேதயாகம் செய்வதற்காகப் பலதேசத்து அரசர்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போய்ப் பெரிய சிறையில் அடைத்து வைத்திருக்கின்றான். மேலும் பலகோடி ராஜாக்கள் அவனை எதிர்க்க முடியாமல் பயந்து ஓடி ஒளிந்து கொண்டார்கள். அந்தப் பலசாலி ஜராஸந்தனைக் கொல்வதற்கு நூறு கோடி யானை பலமுள்ள பீமனைத் தவிர வேறு யாராலும் முடியாது! சந்தனமணம் வீசும் மலைகள் பல உலகத்தில் இருக்கலாம். ஆனால், பாற்கடலைக் கடைவதற்கு மந்திரமலையைத் தவிர வேறு மலை ஏது? அதுபோல் அந்த ஜராஸந்தனைப் போரில் வென்றவர்கள் முன்பு யாருமே இல்லை. இப்போது வேதப் பிராமணர்கள் வேஷத்தோடு பீமார்ச்சுனரும் நானும் அவனிடம் போவோம்!'' என்றான்.

கண்ணபிரானுடைய வார்த்தையைத் தருமர், ''அப்படியே, செய்யுங்கள்!'' என்று சொல்லி அங்கீகரித்தார்.

தருமரின் ஒப்புதல் கிடைத்ததும் அவர்கள் மகிழ்ந்தார்கள். அக்கணமே பிராமண வேஷம் பூண்டார்கள். அவர்கள் மூவரும் புறப்பட்டுச் சென்று மூன்றாம் நாள் மகததேசத்து மன்னன் ஜராஸந்தனின் இராஜதானியாகிய கிரிவிரச நகரத்தை அடைந்தார்கள். அந்நகரிலுள்ள அவனுடைய அரண்மனையின் பொன்வாயிலில் போய் நின்று, தங்களின் வரவை அந்த வாயிற் சேவகர்களுக்குத் தெரிவித்தார்கள்.

உடனே வாயிற் காவலர்கள் மன்னனிடம் போய், ''ராஜராஜ! வாயிலில் மூன்று பிராமணர்கள் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்!'' என்று சொன்னார்கள்.

ஜராஸந்தன், ''அப்படியா? அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு வாருங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

வாயிற்காவலர்கள் மன்னன் கட்டளைப்படி விரைந்து போய் அவர்களை அழைத்து வந்தார்கள். ஜராஸந்தன் அவர்களை முகமலர வரவேற்று பொன்னாலான சிங்காசனத்தில் அமர்த்தினான். அவர்கள் அவனுக்கு ஆசி கூறினார்கள். அப்போது ஜராஸந்தன் அவர்களின் தோள்களில் வில்தழும்பு இருப்பதையும், தோற்றத்தால் அவர்கள் பிராமணர்களிலிருந்து மாறுபட்டிருப்பதையும் பார்த்தான். தனது விவேகத்தால் அவன் அவர்களைச் சந்தேகித்து, "நீங்கள் பிராமணர்கள் இல்லை! பிறகு வேறு யார்?" என்று கேட்டான்.

அதுகேட்டு கண்ணபிரான் அவனுக்குப் பதில் சொல்லத் தொடங்கி, "மன்னா! நான் சொல்வதைக் கேள். நான் சந்திரகுலத்து யதுவம்சத்தில் தோன்றிய கிருஷ்ணன். இவர்கள் குருகுலத்துச் சந்திர வம்சத்தில் தோன்றிய தருமருடைய தம்பிமார்கள். இவர்களில் ஒருவன் வாயுகுமாரன் பீமன். மற்றொருவன் இந்திரகுமாரன் அர்ச்சுனன். நாங்கள் மூவரும் உனது நகரத்தைப் பார்க்க ஆசை கொண்டோம். மன்னர்கள்தான் உன் நகரத்துக்குள் வர முடியாதே. அதனால் பிராமணர்களாக வந்தோம்!" என்றான்.

அவ்வளவுதான். ஜராஸந்தன் அவர்களைப் பார்த்து, "பல நாட்களாக நான் போர் செய்யவில்லை. அதனால் என் தோள்கள் இரண்டும் போர்த்தினவு எடுத்துத் துடிக்கின்றன. அத்தினவு மறைய என்னோடு இப்போது நீங்கள் விரும்பி ப் போர் செய்யுங்கள்!" என்று தோள் தட்டி ஆரவாரித்தான்.

மேலும் ஜராஸந்தன் கண்ணனைத் தனியே நோக்கி, "கண்ணா! நீ என்னோடு போர் செய்வதற்கு தகுதியற்றவன். ஏனென்றால் கருடனுக்குப் பயந்த ஈபோல முன்பு நீ எனக்கு அஞ்சி உனது மதுராபுரியை விட்டுவிட்டு ஓடிப்போய்த் துவாரகையில் பதினெட்டு வருஷங்கள் ஒளிந்திருந்தாய். நோய்க்கு அஞ்சுவது போல அசுரர்களுக்குப் பயந்து தோற்றுப் புறமுதுகிட்டு ஓடி கற்பகச் சோலையில் பதுங்கியுள்ள தேவேந்திரனின் குமாரனான இந்த அர்ச்சுனனுடன் போர் செய்யலாம். ஆனால், இவன் உங்கள் மூன்று பேரிலும் சிறுவனாக இருக்கின்றான். ஆகவே, பீமனோடு போரிடுவேன். இவனைக் கொன்று

சுவர்க்கத்துக்கு அனுப்புவேன்!'' என்று கண்கள் சிவக்கக் கோபத்தோடு சொன்னான்.

பிறகு, ஜராஸந்தன் தன்மகன் சகதேவனுக்கு மன்னர்களும் தேவர்களும் மந்திரிகளும் சூழ்ந்திருக்கப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு, பீமனோடு யுத்தம் செய்ய தோள் தட்டி ஆரவாரம் செய்து கொண்டு ஆய்த்தமானான்.

அடுத்த வினாடியே பீமனுக்கும் ஜராஸந்தனுக்கும் கொடிய மற்போர் தொடங்கியது. இருவரும் இரண்டு சிங்கங்கள் போலப் பயங்கரமாக ஒருவரையொருவர் தாக்கி மோதிக் கொண்டார்கள். அவர்கள் பகலும் இரவுமாக பதினைந்து நாட்கள் போர் செய்தார்கள். அவர்களின் கொடிய போரினால் பூமி அதிர்ந்தது. ஏழுகுல பருவதங்கள் நடுங்கின. அஷ்ட திக்கஜங்களோடு எட்டுத்திக்குகளும் ஸ்தம்பித்தன. தேவலோகம் அதிர்ந்தசைந்தது. அப்போரைப் பார்த்த ஜனங்களின் மனமும் உடலும் அச்சத்தால் வெடவெடத்தன. பாதாளலோகம் நடுங்கியது. அவர்களுடைய நெஞ்சமும் பறை கொட்டியது போல அதிகமாகத் துடித்துச் சோர்வோடு பதறியது. சாவைத் தவிர மற்றெல்லாத் துன்பங்களையும் போரில் அவர்கள் இருவரும் தனித்தனியே அடைந்தார்கள். அதனால் அவர்கள் களைப்படைந்தார்கள். இருவரும் ஒருவரையொருவர் கொல்வதற்காகப் போரிட்டு முடியாமல் கடைசியில் மயங்கி விழுந்தார்கள்.

வெகுநேரத்துக்குப்பின் பீமன் மூர்ச்சைத் தெளிந்து எழுந்தான். தரையில் நடுக்கத்துடன் கிடந்த ஜராஸந்தனைப் பார்த்தான். பீமன் அவனை நெருங்கி அவனுடைய ஒருகாலை தனது இருகால்களால் அழுத்திக் கொண்டு, அவனுடைய மற்றொருகாலைக் கைகளால் பிடித்து, நரசிங்கமூர்த்தி இரணியனைப் பிளந்தது போல அவனுடம்பை இரண்டாகக் கிழித்து வீசி எறிந்தான். ஜராஸந்தவதம் முடித்து வெற்றி கொண்ட பீமன் உலகம் பிளவுபடும்படியாக மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான்.

ஆனால் ஜராஸந்தன் சாகவில்லை. அவனுடைய இரு துண்டான உடம்பு மீண்டும் ஒட்டிக் கொண்டது. அவன் உயிரோடு எழுந்து போர் கர்ஜனை செய்தான். திரும்பவும் பீமனுக்கும் அவனுக்கும் கடும்போர் நடந்தது.

முன்போலவே பீமன் ஜராஸந்தனை அடித்து வீழ்த்தி, அவன் உடம்பை இரண்டாகக் கிழித்தான்.

அப்போது கண்ணபிரான் பீமனை நோக்கி, 'பீமா! இவனுடைய உடம்புத் துண்டுகளைத் தலையோடு தலையும் காலோடு காலும் நேராகப் போடாதே. தலையோடு காலும் காலோடு தலையுமாக மாற்றிப் போடு!' என்று கண்ஜாடை செய்தான்.

கண்ணபிரானின் கண்ஜாடையைப் பீமன் புரிந்து கொண்டான். அப்படியே அவன் தான் கிழித்த ஜராஸந்தன் உடம்புத் துண்டுகளைத் தலையும் காலும் மாறுபட தரையிலே வீசி எறிந்தான். அதனால் ஜராஸந்தன் திரும்பவும் உயிர் பிழைக்க முடியாதபடி இறந்து போனான்.

அர்ச்சுனன் ஜராஸந்தன் மாண்டதைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தான். அவன் கண்ணனைப் பார்த்து, "முன்பு கோவர்த்தனகிரியைத் தூக்கி மழையைத் தடுத்துப் பசுக்களைக் காத்தருளிய கோபாலனே! இன்றைய அருமையான போரில் என் தமையரின் கைகளால் ஜராஸந்தன் இறந்து போனான். இவனது உடம்பின் பிளவுகள் முதலில் ஒன்று சேர்ந்து உயிர்த்தெழுந்தன. பின்பு ஒன்று கூடாமல் தனித்தனியே கிடந்து அழிந்தன. இவற்றின் காரணங்களை நாங்கள் அறியும்படி நீ சொல்லியருள்!" என்று வேண்டினான்.

கண்ணபிரான் அதற்கு விடையாக ஜராஸந்தனின் கதையைச் சொல்லத் தொடங்கி, "அர்ச்சுனா! மகததேசத்து அசுரர் குலத்தில் தோன்றியவன் பிருகத்ரதமன்னன். தேவர்களுக்கு ஜன்மசத்துருக்களான அசுரர்களில் ஒருவன் அவனுடைய வயிற்றில் பிறந்தான். அவனே இந்த ஜராஸந்தன். இவன் பூலோகத்தில் தனிமுறையாக ஆட்சிசெய்து பல போர்கள் புரிந்தான். அப்போர்களில் எல்லாம் ராஜவம்சத்தை வேரோடு அழித்தான். இவன் இந்தப் பூலோகம் முழுவதையும் தான் ஒருவனே அரசாள எண்ணினான். அதற்காக நரமேதயாகம் செய்ய நினைத்து, பல அரசர்களைப் போரில் வென்று உயிரோடு பிடித்துத் தனது சிறைச்சாலையில் அடைத்து வைத்தான். இவனுடைய பெயரை இந்திரன் முதலிய தேவர்களும் சொல்ல அஞ்சுவார்கள். இவன் தந்தை பிருகத்ரதன் முன்பு தனக்குப் பிள்ளை இல்லாததால் மிகவும் கவலை கொண்டான். தன்

கவலையைப் போக்கிக் கொள்ள அவன் சண்டகௌசிக முனிவனை நமஸ்கரித்து, புத்திரபாக்கியம் வேண்டி வரம் கேட்டான். அம்முனிவனும் தான் வசிக்கின்ற இடத்திலுள்ள பெரிய மாமரத்திலிருந்து தன் மடியில் விழுந்ததும், பூமியில் கிடைக்காததுமான இனிய மாம்பழம் ஒன்றை அவனுக்குக் கொடுத்தான். பிருகத்ரதன் அப்பழத்தைத் தனது இரண்டு மனைவியர்களும் சாப்பிடக் கொடுத்தான். காசிராஜனின் பெண்களான அவர்கள் அப்பழத்தை இரண்டு துண்டுகளாக்கிக் கணவனின் கட்டளைப்படி அமுதம் உண்பது போல இனிமையாகப் புசித்தார்கள். அதனால் ஒரு குழந்தை அந்த இரண்டு பெண்களின் கர்ப்பத்திலும் பாதிபாதியாய் நன்றாக வளர்ந்தது. பின்பு அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு குழந்தையுடைய உருவத்தின் பாதிபாதி அங்கத்தைப் பெற்றெடுத்தார்கள். ஒரு மகனே பாதிபாதியாய் இரண்டு மனைவியர்களின் வயிற்றிலிருந்தும் ஒரே சமயத்தில் பிறந்ததைக் கண்டான் பிருகத்ரதன். அதை ஒரு துரதிருஷ்டமாக எண்ணினான். மேலும், அது ஒரு தீக்குறி எனவும் அவன் நினைத்தான். எனவே, அவன் பயந்து போய்ப் பாதிபாதியாகப் பிறந்த குழந்தையின் உடற்துண்டுகளைத் தனது கிரிவிரச நகரத்தின் வாயிலில் எறிந்துவிட்டுப் போனான். அப்போது அவ்வழியாக வந்த ஜரை என்னும் கொடிய புலையுண்ணும் ராக்ஷஸி அவ்வுடற்துண்டுகளைக் கண்டாள். அவற்றை உண்ண விரைந்து வந்தாள். ஆனால், உடற்துண்டுகளைக் கையில் எடுத்தவள், அவற்றைச் சாப்பிடாமல் பொருத்திப் பார்த்தாள். இரண்டு துண்டுகளும் ஒட்டிக் கொண்டு குழந்தையாகி உயிர்பெற்றது. அப்புதல்வனைச் சாப்பிட அவளுக்கு மனம் வரவில்லை. அதனால் பிருகத்ரதனுக்கு அக்குமாரனைக் கொடுத்து, 'இக்குழந்தைக்கு ஜராஸந்தன் என்று பெயரிடு' என்று சொல்லிவிட்டுச் சென்றாள். அன்றுமுதல் அப்புதல்வன் ஜராஸந்தனானான். இவன் பிறந்த முறை இப்படியானதால் சாவதற்கும் இப்படிச் செய்ய வேண்டியதாயிற்று!'' என்று கூறி முடித்தான்.

பீமனும் அர்ச்சுனனும் ஜராஸந்தன் கதை கேட்டு அதிசயித்து மனம் மகிழ்ந்தார்கள்.

பிறகு, அவர்கள் ஜராஸந்தனால் சிறை வைக்கப் பட்டிருந்த அரசர்களையெல்லாம் விடுதலை செய்தார்கள்

திறைப் பொருள்களுடன் வந்து தங்கள் பாதங்களை நமஸ்கரித்த ஜராஸந்தனின் மகன் சகதேவனுக்கு வாழ்த்துக் கூறி அவனை மகத தேசத்துக்கு அரசனாக்கினார்கள். அதன் பின் சகதேவன் கொண்டு வந்து தந்த தேரில் மூவரும் ஏறிக் கொண்டார்கள். கண்ணபிரான் தேரோட்ட, பீமார்ச்சுனர்கள் தேரில் அமர்ந்து இந்திரப்பிரஸ்தம் நோக்கிப் பயணமானார்கள். அவர்கள் வெற்றி பெற்றுத் திரும்பி வரும் செய்தியைக் கேட்டு தருமர் மகிழ்ந்து அவர்களை எதிர்கொண்டு வரவேற்றார். அவரோடு அவர்கள் மனமகிழ இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தார்கள்.

ஜராஸந்தனைக் கொன்று அவனிடமிருந்து கொண்டு வந்த அளவற்ற செல்வத்தை அவர்கள் தருமருக்குக் காட்டிமகிழ்ந்தார்கள். பிறகு, வியாசர் முதலிய முனிவர்களும் அரசர்களும் அமர்ந்துள்ள ராஜ சபையில் தருமர் வீற்றிருக்கையில் அவரை நோக்கி அர்ச்சுனன், "அண்ணா! நம் தந்தை சொல்லி அனுப்பியபடி வேதவிதி தவறாது உடனே இராஜசூய யாகம் செய்ய வேண்டும். அதற்காக எட்டுத்திக்கும் போய் போரிட்டு அரசர்களையெல்லாம் வென்று திறை பெற்று வர வேண்டும். கிழக்குத் திசையில் தமையன் பீமனும், வடக்குத் திசையில் நானும், மேற்குத் திசையில் தம்பி நகுலனும், தெற்குத்திசையில் தம்பி சகாதேவனும் போர் செய்யப் புறப்படுகிறோம்!" என்றான்.

அர்ச்சுனன் சொன்னதைத் தருமர் மகிழ்ச்சியோடு ஆமோதித்தார். உடனே அவர்கள் நால்வரும் மிகச் சிறந்த சேனைகளுடன் போருக்குப் புறப்பட்டார்கள். போர் வாத்தியங்கள் முழங்கின. அம்முழக்கம் கேட்டு எட்டுத் திக்குகளும் திடுக்கிட்டன.

ஸ்ரீகிருஷ்ணபகவான் நால்வரையும் வாழ்த்திப் போருக்கு அனுப்பிய பின்பு, இந்திரப்பிரஸ்தத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்த் துவாரகையை அடைந்தார்.

கிழக்குத்திசையில் சேனையோடு போர் செய்யப் புறப்பட்டுப் போன பீமன் வங்கதேசத்து மன்னனையும், கலிங்க தேசத்து அரசனையும், குலிங்க தேசத்து ராஜாவையும் போரில் வென்று கொன்றான். மற்றும் கிழக்குத் திசையில் உள்ள பலதேசத்து வேந்தர்களையும் அவன் போரில் வென்றான். பீமனின் கொடும் போரைத் தாங்க

முடியாது பல மன்னர்கள், 'அபயம்!' என்று அவன் பாதங்களை வந்து வணங்கினார்கள். அப்படி பல தேசத்து அரசர்களையெல்லாம் வென்று, அவர்கள் கொடுத்த மேருமலை போன்ற செல்வங்களையெல்லாம் கணக்கிட முடியாத யானைகளின் மேல் ஏற்றிக் கொண்டு, பீமன் இந்திரப்பிரஸ்தம் திரும்பி வந்து சேர்ந்தான்.

வடக்குத் திசையில் போருக்குச் சென்ற அர்ச்சுனன் பாரதவர்ஷம் முதலிய இடங்களில் அரசர்களையெல்லாம் எதிர்த்து கொன்று குவித்தான். அப்படியே தொடர்ந்து கைலாசத்துக்கும் இமயமலைக்கும் சென்றான். அங்குள்ள கந்தர்வ ராஜாக்களையும் கின்னர ராஜாக்களையும் போரில் வென்றான். அவர்கள் கொடுத்த மலையளவு செல்வங்களைப் பல்லாயிரக்கணக்கான யானைகளின் மேல் ஏற்றிக் கொண்டான். மேலும், அவன் யுகமுடிவில் பொங்கியெழும் கடல் போல அதிக உக்கிரம் கொண்டு விந்தியகிரி, ஏமகூடகிரி, நிஷதகிரி, மந்தரகிரி, மாலியகிரி, கெந்தமாதனகிரி, நீலகிரி ஆகிய மலைப்பிரதேசங்களுக்கெல்லாம் சேனையுடன் சென்றான். அங்கெல்லாம் வசிக்கின்ற ஆகாசஸஞ்சாரிகளான வித்தியாதரர், யக்ஷர், கந்தர்வர், கின்னரர் முதலியவர்கள் அச்சத்தால் உடலும் உள்ளமும் நடுங்கும்படி அவர்களைக் கொடிய போரிட்டு வென்றான். அதன்பின் உத்தரகுருக்களைப் போரில் வென்று, அவர்கள் நாட்டில் ஜெயஸ்தம்பம் நாட்டினான். அவ்வாறு வடதிசை அரசர்களையெல்லாம் போரில்வென்ற அர்ச்சுனன் அவர்களிடமிருந்து கோடிக்கணக்கான யானைகளையும், கோடிக்கணக்கான தேர்களையும், காற்றைவிட வேகமாகச் செல்லும் கோடிக்கணக்கான குதிரைகளையும், கோடிக் கணக்கான சிறந்த ஒன்பது வகையான இரத்தினங்களையும், கோடிக்கணக்கான மலைகள் போன்ற பசும்பொன் குவியல்களையும் கைப்பற்றிக் கொண்டு, திரும்பவும் வெற்றி விஜயனாக இந்திரப்பிரஸ்தம் அடைந்தான்.

மேற்குத் திசையில் பெரும் சேனையுடன் போருக்குப் போன நகுலன் தன்னைத் தஞ்சமடைந்த அரசர்களுக்கு ஆதரவு தந்தான். எதிர்த்த மன்னர்களைக் கொன்று குவித்தான். அவனுடைய வலிமைக்குப் பதில் சொல்ல முடியாது பலதேசத்து வேந்தர்கள், ஏழைக்குக் கொடுக்காத பணக்காரனின் செல்வம் போல் ஓடி ஒளிந்தார்கள். மாளவம், கர்ப்படம், திரிகர்த்தம் ஆகிய தேசத்து ராஜாக்களையும்

சதுரங்கச்சேனையால் நகுலன் வென்றான். அவர்கள் எல்லோரும் கொடுத்த மேருமலையைவிட பெரிதான இரத்தினப் பொன்குவியலை பலகோடி யானைகளும் குதிரைகளும் இரதங்களும் சுமந்து வர, கடைசியாக நகுலன் துவாரகை அடைந்தான். அந்நகரில் கிருஷ்ணனைக் கண்டு வணங்கி வாழ்த்துப் பெற்றான். பிறகு, தனது செல்வங்களோடும் சதுரங்கச் சேனையோடும் நகுலன் இந்திரப்பிரஸ்தம் திரும்பி வந்தான்.

தெற்குத்திசையில் சென்ற சகாதேவன் மகுடவர்த்தனர்களைப் போரில் ஜெயித்தான். பின்பு, அவன் நீலன் என்னும் அரசனுடைய மாகிஷ்மதி நகரத்துக்குள் சதுரங்கச் சேனையோடு பிரவேசித்தான். அப்போது அப்பட்டணத்துக்குப் பாதுகாவலனாயிருந்த அக்கினி தேவன் சகாதேவனின் போரெழுச்சியைக் கண்டு கோபம் கொண்டான். உடனே அவன் சகாதேவனின் சேனைகளெல்லாம் மயங்கித் திகைக்கும்படி கொடிய வெம்புகையைக் கக்கினான். அதுகண்டு சகாதேவன் அர்த்தசந்திர பாணங்களை அக்கினி மேல் பிரயோகித்தான். சகாதேவனின் அர்த்தசந்திர பாணங்களைக் கண்டதும் அக்கினிதேவன் பயந்து போனான். உடனே அவன் ஒரு பிராமண ரூபமாய் சகாதேவன் எதிரில் வந்தான். சகாதேவன் அவன் அக்கினிதான் என்பதை உணர்ந்து கொண்டான். அவன் அக்கினியைப் பார்த்து, "அக்கினிதேவா! நீ அவியாமல் என் சேனைகளைச் சுடுகின்ற காரணம் என்ன?" என்று கேட்டான்.

அக்கினி அதற்கு விடையாக, தான் அந்நகரத்துக்கு வந்த வரலாற்றையும், நீலராஜன் தன்னை உபசரித்துப் பெற்ற வரத்தையும் சொன்னான்.

பின்பு, சகாதேவன் நீலராஜன் தன்னை உபசரித்துக் கொடுத்த திறைப் பொருள்களுடன் விந்தியமலைச்சாரல் அழியும்படி சதுரங்கசேனையோடு புறப்பட்டுப் போய், ஏழுவகை கலிங்க தேசங்களையும் ஜெயித்தான். மேலும், அவன் தொடர்ந்து போய் சோழ ராஜனிடமும், குடகுராஜனிடமும், கொங்க ராஜனிடமும் திறை பெற்றான். அதன்பின் பாண்டிநாட்டுக்கு உறவினனாகச் சென்றான். பாண்டிய மன்னனின் உபசரிப்பைப் பெற்று, அவன் கொடுத்த முத்துக்குவியல்களையும் எடுத்துக் கொண்டு

அகத்தியர் வசிக்கும் பொதியமலைக்குப் போனான். அவனோடு சென்ற சதுரங்க சேனை அம்மலையில் ஓரிடத்தில் கூடியது. அதனால் பூமி கடலில் மிதக்கும் தோணி போல அசைவடைந்து தெற்குப் பக்கமாகச் சாய்ந்தது. அதுகண்டு தேவர்கள் அஞ்சினார்கள். அவர்கள் பூமியைச் சமமாக நிற்கச் செய்வதற்காகப் பொதிகைமலையில் வாழும் அகத்திய முனிவரை வடக்குத்திசைக்கு வரும்படி செய்ய எண்ணினார்கள்.

அது அப்படியிருக்க, சகாதேவன் கடோத்கஜனை வரவழைத்து, "நீ தெற்கில் உள்ள இலங்காபுரிக்குச் சென்று திறை வாங்கி வா!" என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

சிறியதந்தையின் கட்டளைப்படி இலங்கைக்குப் போன கடோத்கஜன், அங்குள்ள இராவணவம்சத்து அரக்கர்களுடன் போரிட்டான். அச்சமயம் அரசாண்ட விபீஷணன் கடோத்கஜனைப் பார்த்து, "நீ யார்? சொல்!" என்றான்.

கடோத்கஜன் அதற்கு, "நான் பூமி முழுவதையும் அரசாண்ட குருகுலத்து பாண்டுமகாராஜனுடைய பேரன். அரக்கர் தலைவன் இடிம்பனின் மருமகன்!" என்றான்.

அதுகேட்டு விபீஷணன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அன்போடு கடோத்கஜனைக் கட்டித் தழுவிக் கொண்டான். அவனோடு உறவு பாராட்டினான். நல்ல விருந்து படைத்து உபசரித்தான். பிறகு விபீஷணன் அவனை நோக்கி, "நீ இலங்கைக்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டான்.

விபீஷணனின் கேள்விக்கு அவன், "நீதியிற் சிறந்த தருமராஜா ராஜசூய மகாயாகம் செய்ய எண்ணியுள்ளார். யாக செலவுக்காக அவர் தம்பிமார்கள் நால்வரும் எட்டுத்திக்குகளிலும் போய் அரசர்களை வென்று, அவர்கள் கொடுத்த திரவியங்களைச் சேர்த்தார்கள். அதற்காகவே நானும் உனது இலங்கைக்கு வந்தேன்! நீயும் உனது அன்பை எல்லோரும் புகழ, அந்த யாகத்துக்குத் தேவையான பொருளுதவியைத் தா!" என்று பதிலுரைத்தான்.

உடனே விபீஷணன் மகிழ்ந்து கடோத்கஜனிடம் பொன்னாலான மிகப் பெரிய பதினான்கு பனைமரங்களைத் திறையாகக் கொடுத்தான். அவற்றை வாங்கிக் கொண்ட

கடோத்கஜன் விபீஷணனின் பாதங்களை வணங்கிப் புகழ்ந்தான். மற்றும் பத்மராகம் முதலிய பல இரத்தின குவியல்களையும், அவனிடம் பெற்றுக் கொண்டு இரண்டே நாட்களில் கடோத்கஜன் சகாதேவனிடம் திரும்பி வந்து சேர்ந்தான்.

தான் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் கடோத்கஜன் சகாதேவனுடைய பாதங்களில் வைத்து வணங்கி விடைபெற்றுச் சென்றான். பிறகு சகாதேவன், தான் அரசர்களை ஜெயித்து பெற்ற பொருள்களோடும் தனது சதுரங்கசேனையோடும் பொதிகை மலையைவிட்டுப் புறப்பட்டு இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தான்.

நேரே தருமரிடம் போய்த் தான் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் அவர் பாதங்களில் வைத்து வணங்கினான் சகாதேவன்.

தருமர் தமது தம்பிமார்கள் கொண்டு வந்த அளவற்ற செல்வங்களைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தார். உடனே அவர் கண்ணபிரானை இராஜசூயமகாயாகத்துக்காக அழைத்து வர நாரதமுனிவரை வரவழைத்து அனுப்பினார். மற்ற அரசர்களையெல்லாம் அழைத்து வர வேறு வேறு தூதுவர்களிடம் திருமுகம் கொடுத்து அனுப்பினார். வியாசமுனிவர் முதலிய முனிவர்களை அழைத்து வரும்படி உலூகன் என்னும் புரோகிதனை அனுப்பி வைத்தார்.

அசுர சிற்பி மயன் நிர்மாணித்த திறத்தைத் தேவ சிற்பி விசுவகர்மா கண்டு மகிழும்படியான அந்த இரத்தினசபா மண்டபத்திலே தருமர் இராஜசூய யாகத்துக்கு ஏற்பாடு செய்தார். அந்த யாகத்துக்காக அம்மண்டபத்திலே எல்லா அரசர்களும் முனிவர்களும் மனிதர்களும் வந்து கூடினார்கள்.

தருமர் தமது தம்பிமார்களோடு யாகத்துக்கு வந்த முனிவர்களை வரவேற்று உபசரித்தார். அவர்களை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றார். மன்னர்கள் கொண்டு வந்து கொடுத்த பரிசுப் பொருள்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். யாகத்துக்கு வந்த கண்ணபிரானைத் தம்பியர்களுடன் எதிர்சென்று வரவேற்று அழைத்து வந்து ஆசனம் தந்து உபசரித்தார். பலராமன் யாகத்துக்கு வர அவனையும் தம்பியர்களோடு எதிர்சென்று நமஸ்கரித்து வரவேற்று அழைத்து வந்து உபசாரங்கள் செய்தார்.

கடைசியில் பாண்டவர்கள் கண்ணபிரானுடன் நகர்வலம் வந்தார்கள். ஜனங்கள் நகரத்தை அதற்காகக் கணப்பொழுதில் அலங்கரித்தார்கள். பாண்டவர்களையும் கண்ணனையும் நகர மக்களெல்லோரும் கொண்டாடி வணங்கினார்கள்; வாழ்த்தினார்கள்; தூப தீபம் காட்டிப் போற்றினார்கள். அவர்கள் மேல் மலர்களைத் தூவினார்கள். பெண்கள் அவர்களின் அழகையும் வீரத்தையும் எண்ணிக் காமுற்றார்கள்.

ஆண்களும் பெண்களும் தங்களைக் கண்டு இங்ஙனம் வாழ்த்தி வணங்கவும் காமவேட்கை கொள்ளவும் கண்ணபிரான் பாண்டவர்களுடன் குந்தியின் அரண்மனைக்குச் சென்றான். குந்தியைக் கண்ணபிரான் நமஸ்கரித்தான். குந்திதேவி அவனை வாழ்த்தினாள். அதனால் கிருஷ்ணன் மகிழ்ச்சியடைந்தான். அப்போது திரௌபதி, சுபத்திரை முதலிய அரசமகளிர் அவனை வந்து நமஸ்கரித்தார்கள். கிருஷ்ணபகவான் அன்போடு அவர்களை ஆசீர்வதித்தான்.

பின்பு, தருமர் கண்ணபிரானை அரசசபைக்கு எழுந்தருளச் செய்து, அழகிய பொன்னாசனத்தில் அவனை அமர்த்தினார். அச்சமயம் தருமரின் தம்பிமார்கள் எட்டுத்திக்குகளுக்கும் சென்று தாங்கள் அரசர்களை வென்று கொண்டு வந்த செல்வங்களையெல்லாம் அவனுக்குக் காட்டினார்கள். அப்பொருள்களைப் பற்றியும் தங்களின் போர் வரலாற்றையும் அவனுக்குச் சொன்னார்கள். கண்ணன் எல்லாவற்றையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்தான்.

அப்போது மகதமன்னன் ஜராஸந்தன் மகன் சகதேவனும், பீஷ்மரும் துரியோதனனுமாகிய பூரு குலத்து அரசர்களும் தருமர் நடத்தும் யாகத்துக்காகச் சதுரங்க சேனைகளுடன் இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தார்கள்.

தருமரின் இராஜசூய யாகத்தால் இந்திரப்பிரஸ்தம் செல்வத்தாலும் அழகாலும் சிறந்து விளங்கியது. அந்நகரத்தைப் பார்த்து தேவர்கள் அமராவதி பட்டணத்துக்கும் அதற்கும் வேற்றுமை தெரியாது வியந்து போனார்கள்.

அநேக அந்தணர்கள் வேத பாராயணத்தோடு யாகசாலைக்குச் சென்றார்கள். யாகசாலை வேதவிதிப்படி

அமைக்கப்பட்டது. அப்போது வியாசமுனிவர் பாண்டவர்களைத் தனியே அழைத்துச் சென்று அவர்கள் காதுகளில் மெல்ல, "பாண்டவர்களே! முற்பிறவியை உணர வல்லவர்கள் யாவரும் குறிப்பால் உணர்ந்து உங்களை முன்பு இந்திரர்களாக இருந்தவர்கள் என்று சொல்வார்கள். நீங்கள் ஐந்து பேரும் சிவபெருமானுடைய கட்டளையால் யாகாக்கினியிலிருந்து தோன்றிய திரௌபதியை, பூமியை ஒன்றாக அரசாளுவது போல ஒன்றாக விவாகம் புரிந்து கொண்டீர்கள். ஒவ்வொரு வருஷமும் நீங்கள் ஒவ்வொருவராக மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் இத்திரௌபதிக்குக் கணவராக இருந்து வருகிறீர்கள். இப்போது திரௌபதி உங்களில் மூத்தவனாகிய தருமனுக்கு மனைவியாகி, பெருமையுள்ள யாகாக்கினியைக் கூடயிருந்து வளர்க்கும் பெருமையைப் பெற்றாள். இந்தப் பெரிய ஜன்மத்தில், யாகம் தொடங்கிய இந்நாள் முதல் தருமனின் தம்பிமார்கள் நால்வரும், யாகத்துக்குத் தலைவனாகிய தருமனே தங்களின் பிதாவாகவும், தருமனுக்கு யாகபத்தினியாகிய திரௌபதியே மாதாவாகவும் கொள்ள வேண்டும். அதாவது இப்போது நீங்கள் திரௌபதியையும் தருமனையும் முறையே உங்கள் மாதாபிதாக்களான குந்திதேவியும் பாண்டுமகாராஜனும் என்றே நினைக்க வேண்டும்!" என்று கூறினார்.

வியாசர் சொன்னபடியே பாண்டவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். யாகத்துக்குரிய சுபமுகூர்த்தம் வந்தது. உடனே இராஜசூய யாகத்துக்கான ஏற்பாடுகளை வேகமாகச் செய்தார்கள். தருமருக்கும் திரௌபதிக்கும் கங்கா தீர்த்தத்தால் மங்கல ஸ்நானம் செய்தார்கள். யாக சாஸ்திர விதிப்படி அவர்கள் இருவரையும் யாக சடங்குக்குத் தக்க ஆடையாபரணங்களால் அலங்கரித்தார்கள்.

தருமர் கண்ணனையும் பீஷ்மரையும் நமஸ்கரித்தார். பிறகு, யாகசாலைக்குப் போய் பீமனைப் பார்த்து, "தம்பி! கடல் மணல்களைக் காட்டிலும் அதிகமான ஜனங்கள் யாகத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் சாப்பிடுவதற்குத் தேவாமிருதத்தைவிட மிக இனிய உணவை அவர்களுக்கெல்லாம் பரிமாறு!" என்றார்.

அடுத்து தருமர் அர்ச்சுனனை நோக்கி, ''நீ வந்திருக்கும் ஜனங்களுக்கெல்லாம் கஸ்தூரியும், சந்தனமும், பன்னீரும், பூமாலையும், மலர்களும் கொடு!'' என்றார்.

நகுல சகாதேவர்களைப் பார்த்து தருமர், ''தம்பிகளே! வந்தவர்களுக்கெல்லாம் நீங்கள் இரண்டு பேரும் வெற்றிலையும் பச்சைக் கர்ப்பூரமும் கொடுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

மேலும் தருமர் கர்ணனிடம், ''நீ தானமும் தியாகமும் எல்லோருக்கும் தா!'' என்றார்.

துரியோதனனை நோக்கி அவர், ''நீ யாகத்துக்காக இங்கே வைக்கப்பட்டுள்ள எல்லாச் செல்வங்களையும் பாதுகாத்து வா!'' என்றார்.

மற்றும் பல பேர்கள் தருமரின் கட்டளைப்படி பணிபுரிந்தார்கள்.

எல்லா வேலைகளும் முடிந்தபின் தருமர் முனிவர்களின் பாதங்களை நமஸ்கரித்து ஓமகுண்டத்துக்கு அருகில் உட்கார்ந்தார். அவரது வலது பக்கம் திரௌபதி உட்கார்ந்து கொண்டாள். அப்போது யாகச் சடங்கு செய்யும் முனிவர்கள் தருமருக்கு மான்தோல் கொடுத்தார்கள். அவர் அதனை உடம்பில் போர்த்திக் கொண்டார். அதனால் அவர் பார்ப்பதற்கு வாமபாகத்து வீற்றிருக்கும் பார்வதி வலப்பக்கமாக வீற்றிருக்க, சிவபெருமான் அமர்ந்திருப்பது போல் தோன்றினார்.

தருமர் தமது கவனம் முழுவதையும் யாகச் சடங்கிலே செலுத்தினார். ஓமகுண்டத்தில் அக்கினியைப் பிரதிஷ்டை செய்தார். அந்த யாகத்தால் ஏற்படும் நன்மைகளை அசுரர்கள் கெடுத்துவிடாதபடி அதற்குப் பாதுகாப்பாக ஓமகுண்டத்தின் நான்கு விளிம்புகளிலும் தருப்பைகளை வைத்தார். சுருவையால் நெய்யை மொண்டு மொண்டு அக்கினியில் ஊற்றித் தேவர்களுக்கான ஹவிஸைக் கொடுத்தார். அப்படி தருமர் முனிவர்களும் தேவர்களும் தம்மைச் சூழ்ந்திருக்க ஏழு நாட்கள் ஓமம் பண்ணினார்.

எட்டாம் நாள் காலையில் தருமர் தேவர்களுக்கெல்லாம் ஹவிஸைக் கொடுத்தார். தம் மனைவியும் தாமுமாகச்

சுவாகாதேவியின் கணவனான அக்கினிதேவனை மூன்றுதரம் பிரதக்ஷிணம் செய்து, தமது சிரசு தரையில் படும்படி நமஸ்கரித்தார். அவ்வாறு பெருமை பெற்ற அந்த இராஜசூய மகாயாகம் முடிவடைந்தது.

பிறகு, தருமர் தம்பிமார்கள் திறையாகப் பெற்று வந்த அளவற்ற செல்வங்களையெல்லாம் தானமாகவும் தியாகமாகவும் அந்தணர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கினார். அது முடிந்ததும் தமது தேவியோடு மங்கலஸ்நானம் செய்தார். அப்போது நாரதர் முதலிய முனிவர்கள் அவரை ஆசீர்வதித்தார்கள். புலவர்கள் அவரைப் போற்றி மங்கல வாழ்த்துக் கவிகளைப் பாடினார்கள்.

யாகத்தால் பெருமையடைந்த தருமர் திரௌபதியோடு கண்ணபிரானை மனப்பூர்வமாக நமஸ்கரித்தார். அடுத்து தருமர், பீஷ்மரின் பாதங்களை வணங்கி, ''தாத்தா! சந்திரனையும் அக்கினியையும் ஆதிபுருஷராகக் கொண்ட பலவகை ராஜவம்சங்களிலும் தோன்றிய அரசர்களுள் அக்கிரபூஜைக்கு உரியவர் யார்?'' என்று கேட்டார்.

பீஷ்மர் அக்கேள்விக்கு விடையறிய வியாசரைப் பார்த்து, ''ரிஷிசிரேஷ்டர்களே! பூமி முழுவதும் ராஜ பரிபாலனம் செய்யும் அரசர்கள் எல்லோரையும் உங்களுக்குத் தெரியும். அவர்கள் எல்லோரும் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்களில் யார் அக்கிரபூஜைக்கு உரியவர்? சொல்லுங்கள்!'' என்று கேட்டார்.

வியாசர் உடனே தருமரிடம், ''கிருஷ்ணபகவானே அந்த அக்கிரபூஜைக்கு உரியவர். அவருக்கே நீ அந்தப் பூஜையைச் செய்!'' என்றார்.

அங்கிருந்த அரசர்கள் எல்லோரும் வியாசர் சொன்னதைக் கேட்டு, அது சரியே என்று ஒப்புக் கொண்டு மகிழ்ந்தார்கள். ஆனால், சேதிதேசத்து அரசன் சிசுபாலன் மட்டும் அதுகேட்டு மனம் வெதும்பி முகம் கறுத்தான். அவன் கண்கள் நெருப்புப் போலக் கோபத்தால் சிவந்தன. உடனே அவன் எழுந்து அங்கிருந்தவர்களைப் பார்த்து ஆத்திரத்துடன், ''மன்னர்களே! முனிவர்களே! பூமியை அரசாளும் அரசர்கள் கூடிய இந்தச் சபையிலே அக்கிரபூஜை உபசாரத்தைப் பெறுகின்ற தகுதி பெற்றவர்கள், காட்டில்

பசுக்களை மேய்த்துக் கொண்டு வாழும் இடையர்களோ? சூரிய வம்சத்து அரசர்களும், சந்திர வம்சத்து அரசர்களும், அக்கினி வம்சத்து அரசர்களுமாகிய பிரசித்திப் பெற்ற அரசர்கள் எல்லோரும் இங்கே வந்திருக்கிறார்கள். அப்படி இருக்க, பராக்கிரமத்தாலும் செல்வத்தாலும் இடையர்கள் தானோ பேரரசர்கள்? அவர்களுக்கு அக்கிரபூஜை செய்யவும் வேண்டுமோ? இந்தக் கிருஷ்ணன் பிரஸவகிருகத்தில் பிறந்த போதே தன்னைப் பெற்ற தாயான தேவகியும் தந்தையான வசுதேவனும் எதிரில் தன்னை வணங்கி நிற்கும் பெருமை பெற்றான். பெற்றோரின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, இவன் சொல்லக் கூடாத பேச்சுகளையெல்லாம் பேசினான். அன்று இரவே யமுனா தீரத்தைக் கடந்து இடையர் தலைவனான நந்தகோபனுக்குப் புதல்வனானான். அவன் மனைவி யசோதை பெற்ற பெண் குழந்தையைத் தன் சொந்தத் தாய் தேவகியிடம் சேர்ப்பித்தான். பூதனை என்னும் ராக்ஷஸி இவனைக் கொல்ல வந்தாள். அவள் யசோதை போல் உருமாறி, தாய்ப் பாசத்தோடு இவனை எடுத்து மார்புடன் அணைத்துப் பாலூட்டினாள். இவன் அப்போது அவள் தந்த பாலோடு அவளுடைய உயிரையும் குடித்து விட்டான். ஆயர்பாடியிலே வசித்த இவன் உரல்மேல் ஏறி, ஆய்ச்சியர்கள் உறிகளிலெல்லாம் எட்டாதபடி உயரத்தில் வைத்திருந்த தயிரையும் நெய்யையும் பாலையும் வெண்ணெயையும் திருடித் திருடி உண்டான். இது அறிந்த யசோதை இவனை உரலோடு கயிற்றால் கட்டிப் போட்டாள். அதனால் இவன் அழுதான். பார்ப்பவர்கள் எல்லோரும் பரிகசிக்கும்படி கண்ணன் கோகுலத்து வீதிகளில் பாட்டுப் பாடிக் கொண்டு திரிந்தான். இளம் இடைச்சிப் பெண்களுடைய வீடுகளுக்கெல்லாம் போய், அவர்கள் கொடுத்த வெண்ணெய்க்காக மகிழ்ந்து கூத்தாடினான். அந்தக் கோபியர்களுடைய முகங்களிலெல்லாம் எச்சிற்படுத்தினான். கோபி ஸ்திரீகள் தன்னைவிட்டுப் பிரிந்து முன்னே ஓட, இவன் அவர்களைப் பின் தொடர்ந்து ஓடினான். கம்சனால் அனுப்பப்பட்டுத் தன்னைக் கொல்வதற்காக விளாமரத்தின் வடிவமாக வந்த கபித்தாசுரனையும், கன்றின் வடிவமாக வந்த வத்ஸாசுரனையும் அறிந்தான் இந்தக் கண்ணன். உடனே கன்றை விளாமரத்தில் தூக்கி எறிந்து அந்த அசுரர்களைக் கொன்றான். தன்னைக் கொல்ல மலைப்பாம்பாக வந்த அகாசுரனையும், கொக்காக வந்த பகனையும் அழித்தான். கோபிகைக் கன்னிகளிடம் எத்தனை ஆட்டம் இவன்

ஆடினான்! அவர்கள் குளிக்கும்போது ஆடைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு, தான் விரும்பிய சிற்றின்பக் களிப்பிலே அவர்களை மயங்கச் செய்தான். அவர்களுக்கு இவன் மன்மதனுமானான். அப்பெண்களிடம் தூர்த்தனாக இருப்பதற்கு இவன் மாற்றான் இல்லை. அவர்களின் முழுநம்பிக்கையும் பெற்றவனேதான் இவன்! மேலும், இவனுடைய பெருமைகளை அறியாத அரசர்கள் யாருமில்லை! இந்திரனுக்குப் படைப்பதற்காக சமைத்த உணவை ஒருநாள் தானே தனியாகச் சாப்பிட்டான். அதனால் இந்திரனிட்ட கட்டளையால் மேகங்கள் பெய்த மழையைக் கோவர்த்தன கிரியைத் தூக்கித் தடுத்தான். எருது வடிவமாகத் தன்னைக் கொல்ல வந்த அசுரன் அரிஷ்டனைக் கொன்றான். பிரமன் செய்த மாயையால் முன்பொரு சமயம் கோபாலர்களும் பசுக்களும் கன்றுகளும் மறைந்தபோது, இவனே அத்தனைக் கோபாலர்களாகவும் பசுக்களாகவும் கன்றுகளாகவும் வடிவமெடுத்து மாயம் புரிந்தான். ஜராஸந்தனோடும் காலயவனனோடும் போர் செய்ய பயந்தோ, இல்லை அவர்களோடு போர் செய்ய வேண்டாம் என்று எண்ணியோ தெரியவில்லை, இவன் மதுராபுரியை விட்டுத் துவாரகைக்கு ஓடிப் போனான். அங்கே தன் சொந்தக்காரர்களோடும் தமையன் பலராமனோடும் பகையில்லாமல் வாழ்ந்திருந்தான். கிருஷ்ணன் தனது மாமன் கம்சனைப் போர் செய்து கொன்றான். அது மட்டுமா? தந்திரமாக எத்தனையோ யுத்தங்களைச் செய்து முடித்தான். தன்னையே சுற்றிக் கொண்டிருக்கும் சுற்றத்தவர்களின் உதவியால் தானே பெருமையெல்லாம் பெற்று, தானே ராஜ்ஜியத்தை ஆள்கின்றான். தந்தையும் தாயும் தனக்காகச் சிறையில் இருக்க தனக்கு முன் பிறந்த ஆறு சகோதரர்களையும் கொல்வித்தான். தன் தமையன் பலராமனைப் பெற்ற தாய்மார்கள் இருவர் என்று சொல்லும் படிச் செய்தான். இப்படிப்பட்ட மாயக் கிருஷ்ணனுக்கு நிகரானவர்கள் அவனைத்தவிர வேறு யாரும் இல்லை!'' என்று கண்ணபிரானின் புகழையும் இழிவுப்படுத்திப் பேசினான்.

சிசுபாலன் நூறு பிழைகள் செய்யும் வரை அவனைக் கொல்லாமல் விடுவேன் என்று அவன் தாய்க்கு முன்பு கிருஷ்ணன் வாக்குத் தத்தம் செய்திருந்தான். இப்போது அவன் பேசிய வசைகளையெல்லாம் கிருஷ்ணன் எண்ணி

வந்தபோது, நூறு பிழைகள் முடிந்து விட்டிருப்பதைக் கண்டான். உடனே கண்ணபிரான் சிசுபாலனின் நிந்தனைகளுக்குப் பதில் ஏதும் சொல்லாமல், அவனைப் போரில் கொல்லத் தேரேறினான். அவனைப் பார்த்து கிருஷ்ணன், "சேதிதேசத்து மானிடராஜனே! எல்லா தேசத்து அரசர்களும் கூடிய இந்தப் பெரிய சபையிலே நீ பேசிய வார்த்தைகள் மிக அழகாக இருந்தன. ஆகவே, இப்போது நாமிருவரும் போர் புரிந்து நமக்குள் இருக்கிற உயர்வு தாழ்வு பற்றி அறிவோம். விரைந்து போருக்குப் புறப்பட்டுவா!" என்றான்.

அதுகேட்டு சிசுபாலன் மிகவும் கோபம் கொண்டான். அதனால் அவன் கண்கள் நெருப்புத் துண்டங்களாக அனல் வீசின. அவன் உடனே தேரில் ஏறினான். அப்போது ஒன்றுக்கு ஒன்று எதிராக வலம்புரிச் சங்குகள் முழங்கின. மேகங்கள் இடி இடிப்பன போலப் போர்ப் பறைகள் ஒலித்தன. முனிவர்களும் அரசர்களும் இருவரின் போரெழுச்சியையும் கண்டு ஆச்சர்யமடைந்தார்கள். அவர்களின் போரைக் காண தேவர்கள் விமானத்தில் வந்து யுத்த ஆகாயத்தில் கூடினார்கள். கிருஷ்ணபகவானும் சிசுபாலனும் இந்திரப்பிரஸ்தத்துக்கு வெளியே யுத்தபூமியில் போர் செய்யத் தொடங்கினார்கள். தேவாசுர யுத்தத்தைவிட கொடிய யுத்தத்தைத் தங்கள் சுற்றத்தவர்களின் உதவியோடு செய்தார்கள். அவர்களின் சதுரங்கசேனைகளும் ஒன்றுக்கு ஒன்று எதிராகப் பயங்கரப் போரைப் புரிந்தன. அவர்களின் சுற்றத்தவர்களும் கோபத்தோடு ஒருவரையொருவர் இடி போல் தாக்கிச் சமர் புரிந்தார்கள்.

கிருஷ்ணனும் சிசுபாலனும் கொடிய ஆயுதங்களால் போர் புரிந்தார்கள். மலை போன்ற தங்களின் தேர்களில் இருந்தபடியே அவர்கள் இருவரும் வாள், வேல், அம்புகளால் தாக்கிப் போர் செய்தார்கள். இருவரும் ஒருவர்க்கொருவர் சளைக்கவில்லை. வெகுநேரத்துக்குப்பின் கண்ணபிரான் அவனைக் கொல்வதற்கு இதுவே தருணம் என்று நினைத்துத் தனது சக்கராயுதத்தை அவன்மேல் ஏவினான்.

சக்கராயுதம் அக்கணமே விரைந்து போய்ச் சிசுபாலனின் தலையைத் துண்டித்தது. அதே கணத்திலேயே அது திரும்பவும் கண்ணனின் வலத் திருக்கரத்திலே வந்து சேர்ந்தது!

அப்போது தலையறுப்பட்டு விழுந்த சிசுபாலனின் உடம்பிலிருந்து உயிர் பேரொளியாகி வெளிப்பட்டு, சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு ஊடுருவிச் சென்று, உலகத்தை ரட்ஷிக்கும் பரமாத்மாவாகிய கண்ணனின் திருவடிகளில் சேர்ந்தது. பரமாத்மாவோடு ஜீவாத்மா சேரும் அந்தக் காட்சியை அந்த யாகசபையில் கூடியிருந்த அரசர்களும் முனிவர்களும் கண்டார்கள்.

அது கண்டு அவர்கள் எல்லோரும் ஆச்சர்ய மடைந்தார்கள். கண்ணனின் அதிசயச் செயலைக் கொண்டாடினார்கள். அவனைக் கண்களிக்கப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

அந்த அதிசயம் பற்றிப் பூரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எல்லோரும் துடித்தார்கள். அரசர்களும் அந்தணர்களும் கண்ணனைத் தோத்திரம் செய்தார்கள். பாண்டவர்கள் அவன் எதிரில் வந்து பவ்யமாக வணங்கி நின்றார்கள். அப்போது வியாசர் சிசுபாலனின் கதையைச் சொல்லத் தொடங்கினார். அதனைப் பீஷ்மர் முதலிய அரசர்கள் எல்லோரும் வியப்போடும் அமைதியோடும் கேட்க ஆரம்பித்தார்கள்.

வியாசர் கூறிய சிசுபாலன் கதை இதுதான்:—

"துருவாசமுனிவர் ஒருசமயம் ஸ்ரீவைகுண்டத்துக்குச் சென்றார். அப்போது வைகுண்டத்து வாயிற்காவலர்களான ஜயவிஜயர்கள் அவரை உள்ளே போக விடாமல் தடுத்து நிறுத்தினார்கள். எப்போதுமே கடுங்கோபமுள்ள ரிஷிசிரேஷ்டரான அந்தத் துருவாசர் அதனால் மேலும் அதிகக் கோபம் கொண்டார். அக்கோபத்தோடு ஜயவிஜயர்களை நோக்கி, 'நீங்கள் இவ்வைகுண்டத்துக் காவலைவிட்டுப் போய்ப் பூமியில் பிறப்பீர்களாக!' என்று சாபமிட்டார். திருமாலின் செவிகளில் அச்சாபவார்த்தை விழுந்தது. உடனே எம்பெருமான் ஓடோடி வந்து முனிவரை வரவேற்று உபசரித்து, 'உமது சாபத்தால் கலங்கிய இவ்வாயில் காவலருக்குச் சாபவிமோசனம் எப்போது ஏற்படும்?' என்று கேட்டார். அதற்கு மனமிரங்கி துருவாசர், 'இத்துவாரபாலகர்கள் தேவரீரிடம் அன்புடையவர்களாய் ஏழு பிறப்புப் பிறந்த பின்பே, திரும்பவும் தங்கள் பதவியை அடைய முடியும்; அல்லது மூன்று பிறப்பு தேவரீருக்கு

விரோதிகளாய்ப் பிறந்து இப்பதவியைச் சேர வேண்டும். இவ்விரண்டு வ்ழியில்லாமல் இவர்கள் துவாரபாலகர்களாக மீண்டும் ஒருக்காலும் ஆக முடியாது!' என்றார். உடனே ஸ்ரீமந்நாராயணமூர்த்தி துவாரபாலகர்களிடம், 'துவார பாலகர்களே! நீங்கள் எம்மிடம் ஏழுபிறப்பு அன்பர்களாய்ப் பிறந்து உங்களுக்கு இம்முனிவரிட்ட சாபம் நீங்க எண்ணுகிறீர்களா? இல்லை, மூன்று பிறப்பு பகைவர்களாய்த் தோன்றிச் சாபவிமோசனம் அடைய நினைக்கிறீர்களா? இவ்விரண்டு வழிகளில் உங்களுக்கு விருப்பமானது எது?' என்று கேட்டான். அதற்கு அவர்கள் திருமாலின் திருவடிகளைப் பூஜித்து, 'எம்பெருமானே! ஏழு பிறப்புகள் அதிகம். அதனை நாங்கள் விரும்பவில்லை. மூன்று பிறப்புகள் என்றால் குறைவு. ஆகவே, நாங்கள் முப்பிறப்புகளில் தங்களுக்குக் கொடிய பகைவர்களாய்த் தோன்றிப் பிறகு, தங்களின் திருவடியைச் சேர்வோம்!' என்று தங்களின் கருத்தை விண்ணப்பஞ் செய்தார்கள். அதுகேட்டு லக்ஷ்மிமணாளன் அவர்களின் விருப்பப்படியே வரமருளினார். அப்படியே துவாரபாலகர்கள் அசுரர்களாய்ப் பூமியில் வந்து பிறந்தார்கள். அவர்கள் முதல் யுகமான கிருதயுகத்திலே இரணியன் இரணியாக்ஷஸனாய்ப் பிறந்தார்கள். நீதிக்கு மாறான கொடுஞ் செயல்களை யெல்லாம் புரிந்தார்கள். மூவுலகங்களையும் தங்கள் வலிமையால் வசப்படுத்திக் கொண்டார்கள். அச்சமயம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நரசிங்கரூபமாய்த் தூணிலிருந்து அவதரித்து, தம்மைப் பகைத்த இரணியனைச் சம்ஹாரம் செய்தார். வராகமூர்த்தியாக இரணியாக்ஷஸனைச் சம்ஹரித்தார். பின்பு, திரேதாயுகத்திலே அத்துவார பாலகர்கள் கொடிய அரக்கர்களான கும்பகர்ணனாகவும் இராவணனாகவும் பிறந்தார்கள். அச்சமயம் திருமால் ஸ்ரீராமாவதாரம் செய்து அவர்களைத் தன் பாணங்களால் கொன்றார். இந்த நல்லத் துவாபரயுகத்திலே அவர்கள் கம்சனாகவும் சிசுபாலனாகவும் தோன்றினார்கள். அவர்களையும் வைகுண்டவாசன் கிருஷ்ணனாகத் தோன்றி அழித்தார். இதனைப் பூரணமாக மனத்தால் அறியுங்கள்!''

வியாசமுனிவர் சொன்னதைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஆச்சர்யமடைந்து கண்ணபிரானைத் துதித்தார்கள். பீஷ்மரும், விதுரனும், துரோணரும், மற்றுமுள்ள அரசர்களும் ஆனந்தக்

கண்ணீர்ப்பெருக கண்ணபிரானைப் பார்த்து, நாக்குளற போற்றிப் பாடினார்கள்; கொண்டாடித் துதித்தார்கள். அவன் பாதங்களில் சிரம்பட நமஸ்கரித்தார்கள்!

அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் தன் கோபம் தணிந்து தருமரை நோக்கி, ''தருமபுத்திரனே! இப்போது நீ அரசர்கள் எல்லோருக்கும் சிறந்த உபசாரங்கள் செய்!'' என்று கட்டளையிட்டான்.

தருமர் அப்படியே முதலில் கண்ணனுக்கு அக்கிர பூஜை செய்தார். அதன்பின் மற்ற எல்லா மன்னர்களுக்கும் உபசாரங்கள் புரிந்தார். முனிவர்களையும் அவர் உபசரித்தார்.

அது முடிந்ததும் முனிவர்கள் அவரை ஆசீர்வதித்து விட்டு தபோவனம் சென்றார்கள். கிருஷ்ணபகவான் தருமரிடம் விடைபெற்றுத் தனது சுற்றத்தவர்களுடன் துவாரகைக்குப் போனான். துரியோதனன் முதலிய குருகுலத்து மன்னர்கள் அஸ்தினாபுரிக்குச் சென்றார்கள். மத்ஸ்ய தேசத்து மன்னன் விராடனும், பாஞ்சால தேசத்து ராஜன் யாகசேனனும் தங்கள் நகரங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மத்திரதேசத்து அரசன் சல்லியன் முதலிய மற்ற அரசர்களும் தங்கள் நகரங்களுக்குத் திரும்பிப் போனார்கள்.

அரசர்களும் முனிவர்களும் தங்கள் தங்கள் இடங்களுக்குப் போன பிறகு, பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்திலேயே தங்கி நல்லாட்சி புரிந்து வந்தார்கள்.

தருமர் அதுமுதல் தினமும் அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும், தேவதாசிகளுக்கும், புலவர்களுக்கும் தான தருமங்கள் செய்து, தம் குலத்து ஆதிபுருஷனான சந்திரன் போல் பெருமை பெற்று வாழ்ந்திருந்தார்!

2. சூதுபோர்

இந்திரப்பிரஸ்தத்தை விட்டுச் சென்ற துரியோதனன், தன்னைத் தம்பிமார்களும், பீஷ்மரும், கர்ணன் முதலியவர்களும் சூழ்ந்துவர அஸ்தினாபுரி போய்ச் சேர்ந்தான். மறுநாள் அவன் தனது ராஜசபையைக் கூட்டினான். அவன் அரசசபையில் உள்ள அரசர்கள் எல்லோரும் அப்போது வந்து கூடினார்கள். அவர்கள்

எல்லோருக்கும் அவன் தக்க ஆசனங்கள் கொடுத்து உபசரித்த பின், மனத்தில் பலமான யோசனை கொண்டு பேசாமல் இருந்தான்.

துரியோதனனின் சிந்தையில் ஓடிய எண்ணங்களை அறிந்து கொண்ட கர்ணன் தன் நண்பனைப் பார்த்து, ‘‘ராஜராஜனே! தருமன் இராஜசூய யாகம் செய்து அடைந்த பெருமை போல், உலகில் அரசர்களுள் சிறப்புப் பெற்றவர்கள் யாருமேயில்லை! அவனுடைய செல்வச் சிறப்புக்கும் ஓர் எல்லையில்லை. இனி அவனுக்கு நிகரானவர்களும் இல்லை!’’ என்று சொன்னான்.

சகுனி துரியோதனனின் எண்ணமும், கர்ணனின் வார்த்தைகளும் ஒன்றாக இருப்பதைக் கண்டான். உடனே அவன், ‘‘ஆண்சிங்கம் குகையில் பதுங்கிக் கிடந்தாலும் மதங்கொண்ட ஆண்யானையை எதிர்க்காமல் விடுமோ?’’ என்று துரியோதனனிடம் கூறினான்.

துச்சாதனன் எழுந்து, ‘‘பகலில் சந்திரன் சூரியனின் முன்னே எப்படி இருக்கும்?’’ என்றான்.

அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டு துரியோதனன் சந்தோஷம் அடைந்தான். அவன் தனது பேச்சை தந்தையும், பீஷ்மரும், விதுரனும், கர்ணனும், துரோணரும், மற்றும் அந்தச் சபையிலே கூடியிருந்த எல்லோரும் கேட்கும்படி பேசத் தொடங்கினான். ‘‘தருமன் தன்னை இந்திரன் முதலிய தேவர்கள் பெருமைப்படுத்தவும், தன் கட்டளைப்படி அரசர்கள் காரியங்கள் செய்யவும், தனக்காக முனிவர்கள் வேதசாஸ்திரப்படி இராஜசூய யாகம் புரியவும் பெருமை பெற்றான்! அவன் தம்பிமார்களும் பராக்கிரமசாலிகளாக ஆகிவிட்டார்கள். இன்னும் சிலநாட்கள் போனால் அவன் எனது அரச வாழ்க்கையையும் பறித்துக் கொள்வான். முட்களுள்ள வேலமரத்தைச் செடியிலேயே பிடுங்கி எறிய வேண்டும். இல்லாவிட்டால் அது வயிரம் பாய்ந்துவிடும். அப்போது அதை வெட்ட முடியாது. வெட்டத் தொடங்கினாலும் கோடாலியின் கூர்மழுங்கி வாய் மடிந்துவிடும்! இப்போதே அவன் அரச செல்வத்தை நான் கைப்பற்றுவேன். இல்லாவிட்டால் அவன் மேலும் பலம் பொருந்தியவனாகிவிடுவான். அப்போது அவனுடைய பலத்தை யாராலும் அழிக்க முடியாது. ஆகையால்

இப்போதே போர் செய்தாவது அவனுடைய அரச செல்வத்தைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் வஞ்சனையாகவாவது எனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதுவே என் எண்ணம்!''

துரியோதனன் அப்படிச் சொன்னவுடன் துச்சாதனன் எல்லோரையும் பார்த்து, ''தருமனின் பலத்தை ஒடுக்க வேண்டும். அதுவே இப்போது நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். குருதேசத்து மன்னரான என் தமையர் துரியோதன மகாராஜாவை இந்திரப்பிரஸ்தத்து ராஜமண்டபத்தில் பீமன் பரிகசித்துச் சிரித்தான். திரௌபதி கேலிபுரிந்து சிரித்தாள். இதை நீங்கள் உணரவில்லையா? இராஜசூய யாகத்துக்கு எத்தனையோ அரசர்கள் வந்திருந்தார்கள். நாம் அவர்களுள் சிறிதும் பெருமை இல்லாமல் ஒடுங்கிக் கிடந்தோம். அப்போது தருமன் கண்ணனுக்கே அக்கிரபூஜை செய்தான்! அதைக் கண்டு எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். ஆனால் சிசுபாலன் மட்டும், 'இது தகுதியில்லை!' என்றான். அதனால் கிருஷ்ணனைக் கொண்டு சிசுபாலனைக் கொல்லத் தருமன் போரை உண்டாக்கினான். தருமன் தனது வீரத்தையும், தம்பிமார்களின் பலத்தையும், மாய கிருஷ்ணனின் புஜபராக்கிரமத்தையும் வைத்துக் கொண்டு இந்தப் பூமி முழுவதையும் தனதாக்கிக் கொள்ள நினைத்தான். அதனால்தான் தம்பிமார்களைத் திக்விஜயம் செய்ய வைத்து அரசர்களையெல்லாம் தனக்குக் கீழ்ப்படுத்தி, கண்ணனுக்குப் பெருமை ஏற்படுத்தவே அந்த இராஜசூய யாகத்தையும் செய்து முடித்தான். பகலில் சஞ்சரிக்கும் சூரியனைப் போன்ற யதுகுல கிருஷ்ணனும் உபத்திரவம் தரும் போரைச் செய்வதற்காக சல்லியன்மேல் படையெடுத்துச் சென்றிருக்கிறான். வலையில் அகப்பட்டுக் கொண்ட புலி போல நமது சேனைகளுக்கு இடையே அத்தருமன் அகப்பட்டுக் கொள்ள வேண்டும். ஆம், நாம் போர் புரிந்து தருமனை வெல்ல வேண்டும். அதுவே இப்போது நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்!'' என்றான்.

தம்பியின் பேச்சைக் கேட்டுத் துரியோதனன், ''இப்போது நாம் போருக்குச் சென்றால் கண்ணன் திரும்பி வந்து பாண்டவர்களுக்குத் துணைபுரிய மாட்டான்.

ஏனென்றால் சல்லியன் அதிக பலமுள்ளவன். தன்மீது படையெடுத்து வந்த கண்ணனை அவன் எளிதில் விடமாட்டான்! ஆகவே, இப்போது பாண்டவர்களை வெல்வதற்கான உபாயத்தை ஆலோசித்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களின் பலத்தை அடக்குவது மிகவும் சுலபம்!'' என்றான்.

பிறகு, அவன் சபையில் உள்ளவர்களைப் பார்த்து, ‘‘நாம் வஞ்சனையாகவோ சதுரங்கசேனைகளைக் கொண்டோ நாளையே பாண்டவர்களை அழிப்பது அவசியம் செய்ய வேண்டிய காரியமாகும். கம்ஸனைக் கொல்ல நினைத்து பூதகியின் முலைப்பாலைக் குடித்த கண்ணன், திரும்பி வந்து பாண்டவர்களோடு சேர்ந்து கொள்வதற்குள் வேகமாக நீங்கள் எல்லோரும் புறப்படுங்கள்!'' என்றான்.

அப்போது கர்ணன் துரியோதனனிடம், ‘‘நான் வில் வளைத்து பாணம் விட்டால், சினம் கொண்டு போர்புரிய வந்த பகையரசர்கள் எல்லோரும் இறந்து வீரசொர்க்கம் போவார்கள். அதைவிட்டு என்னை எதிர்த்துப் போர் செய்து ஜெயிப்பவர்கள் யார் இருக்கின்றார்கள்? போர் செய்து பாண்டவர்களை வெல்வதற்குப் பயந்தால் அல்லவா, வஞ்சனையால் அவர்களை ஜெயிக்க நினைக்க வேண்டும்?'' என்றான்.

இப்படி எல்லோரும் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த சகுனி உடனே எழுந்தான். எல்லோரையும் பார்த்து அவன், ‘‘இந்தக் கர்ணனே எதிர்த்துப் போர் புரிந்தாலும் தருமனைப் போரில் வெல்ல முடியாது! இடிம்பனையும் பகாசுரனையும் ஜராஸந்தனையும் கொன்ற பீமன் தருமனுக்குச் சகாயமாக இருக்கும்போது, அவனைப் போரில் வெல்ல முடியும் என்று சொன்னால், அப்படிச் சொன்னவருக்கு என்னால் என்ன பதில் சொல்லமுடியும்? வில்வளைத்து லட்சியத்தை வீழ்த்தித் திரௌபதியை மணக்க வந்த அரசர்கள், அது முடியாமல் மனம் கலங்கிக் கிடந்தபோது அர்ச்சுனன் பிராமணனாக வந்து அக்காரியத்தை முடித்து அவளை மணந்தான். அப்போது மனம் கலங்கிக் கிடந்த மன்னர்களுள் மன்னர்களாக நாமெல்லோரும் கூட இருந்தோம். இந்தப் பிறவியில் மட்டும் இல்லை. இன்னும் ஏழு பிறப்புகள் பிறந்தாலும் உண்மையே

பேசும் தருமனை நாம் ஜெயிக்க மாட்டோம். துரியோதனனே ஏதேனும் உபாயம் செய்து, அதனால் தப்ப முடியாதபடி சூதாட்டத்தைக் கொண்டு அவனை அழிக்க வேண்டும். அதுதான் இப்போது நாம் செய்ய வேண்டிய காரியம்!'' என்றான்.

சகுனி சொன்னதைக் கேட்டதும் துச்சாதனன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன், ''பாண்டவர்கள் பெரும் சேனை கொண்டு போர் புரிவதற்குக் கொஞ்சமும் பயப்பட மாட்டார்கள். ஆகையால் மாமாவின் வார்த்தைப்படியே அவர்களைச் சூதாட்டத்தில் ஜெயிப்பதே இப்போது நாம் செய்யக் கூடிய சரியான காரியம்!'' என்றான்.

மாமா சகுனியும் தம்பி துச்சாதனனும் யோசித்து தருமரை ஜெயிப்பதற்கான வழிவகைகளைச் சொன்னதைக் கேட்டு துரியோதனன் சந்தோஷித்தான். அவன் மனம் குளிர்ந்தது. உடனே தன் மாமாவைப் பார்த்து அவன், ''மாமா! என் ஆசனத்திலேயே வந்து உட்காருங்கள்!'' என்றான்.

சகுனி மருமகனின் ஆசனத்தில் அவனோடு வந்து உட்கார்ந்தான்.

அப்போதுதுரியோதனன்அவனிடம், ''பாண்டவர்களைச் சூதாட்டத்தில் நீர் வெல்வதற்குரிய ஆலோசனையை எனக்குச் சொல்லும்!'' என்று வேண்டினான்.

அதற்கு சகுனி, ''குருநாட்டு வேந்தனே! நீ உடனே விரைந்து உனது அரண்மனையில் ஒரு புதிய அழகிய மண்டபத்தைக் கட்டு. பிறகு, அந்த மண்டபத்தை வந்து பார்க்கும்படி பாண்டவர்களைக் கூப்பிடு. பாண்டவர்கள் உனது அழைப்புக்கு இணங்கி வருவார்கள். அவர்கள் மண்டபத்தைப் பார்த்து மகிழ்ந்திருக்கும் சமயத்தில், நாம் தருமனைச் சூதாட்டம் ஆடுவதற்கு அழைப்போம். அதற்கு தருமன் ஒத்துக் கொண்டு நம்மோடு சூதாட துணிந்து வருவான். அப்படி வந்த தருமனை நான் சூதாட்டத்தில் வெல்வேன். அதனால் பாண்டவர்களுடைய செல்வத்தையும், அரசாட்சியையும், அவர்கள் திக்விஜயம் புரிந்து பெற்ற பொருள்களையும் தோற்கச் செய்து, அவர்களை அழித்துவிடுவேன்!'' என்றான்.

மாமாவின் வார்த்தைகள் துரியோதனனுக்குத் தேனாக இனித்தன. அவன் மகிழ்ச்சியோடு பல தடவைகள், ''இதுவே இப்போது நாம் செய்ய வேண்டிய சரியான காரியம்!'' என்றான். அவன் தம்பிமார்களும் அப்படியே சொன்னார்கள்.

உடனே துரியோதனன் விதுரனிடம் தருமரை ஜெயிப்பதற்கு சகுனி சொன்ன உபாயத்தைச் சொல்லி விளக்கினான். அதுகேட்டு விதுரன், ''துரியோதனா! தருமனிடமிருந்து தேசத்தையும், அரசாட்சியையும், செல்வ வாழ்க்கையையும் பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்பது உனது எண்ணமானால், இழிவான சூதாட்டத்தால் அப்படிச் செய்ய வேண்டாம். உன் தந்தை திருதராஷ்டிரமகாராஜா உனக்கே தங்களின் தேசத்தையும், அரசாட்சியையும், செல்வத்தையும் கொடுக்கும்படி பாண்டவர்களுக்குத் திருமுகம் எழுதி அனுப்பினால், அந்தக் கணமே அவர்கள் தடுத்துச் சொல்லாமல் எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துவிடுவார்கள். பெரிய தகப்பனாரின் கட்டளைக்குப் பணிந்து பாண்டவர்கள் எல்லாவற்றையும் உனக்குத் தந்துவிட்டுக் காட்டுக்குப் போய்விடுவார்கள். அப்போது பூரணமாக எல்லாமே உனக்குச் சொந்தமாகிவிடும். ஆகையால் சூதாட்டத்தைவிட்டு தந்தையைக் கொண்டு ஓலை எழுதச் செய்யுங்கள். இப்படிச் செய்து நீங்கள் பாண்டவர்களின் ராஜ்ஜியத்தைப் பெற்றதை மற்ற அரசர்கள் கேள்விப்பட்டாலும், உங்களை அவர்கள் பழித்துப் பேசுவதற்கு இடமிருக்காது! கெட்டவர்கள் ஆடும் சூதாட்டத்தால் பாண்டவர்களை ஜெயித்து, அவர்களின் ராஜ்ஜியத்தைப் பறித்துக் கொள்வது உங்களுடைய பெருமைக்கும் புகழுக்கும் மாசுதேடிவிடும். மேலும், மும்மூர்த்திகளும் நான்கு வேதங்களும் இருக்கும்வரை, சூதாட்டத்தால் நீங்கள் பாண்டவர்களை ஜெயித்தபழி உங்களை விட்டு நீங்காது!'' என்றான்.

விதுரனின் பேச்சு துரியோதனனுக்கு மகாகோபத்தைக் கொடுத்தது. அவன் அக்கோபத்துடன் விதுரனை நோக்கி, ''பாண்டவர்களானாலும் நாங்களானாலும் சரி, என் தந்தைக்கு ஒன்றுதான். நாங்கள் இருவருமே அவருக்கு ஒரே உறவுமுறையானவர்கள். அப்படியிருக்க எங்கள் இருவரிடமும் மாறுபட்ட பட்சபாதகமான எண்ணம் அவருக்கு உண்டோ? இப்போது அவர் ஓலை எழுதி

பாண்டவர்களின் ராஜ்ஜியத்தை எங்களுக்கு வாங்கிக் கொடுத்தால் மட்டும் சூதாட்டம் ஆடுகின்ற அதேபழி வந்து சேராதோ? அது புகழோ? உனக்கு இப்படி பட்சபாதகமாகச் சொல்வதே தொழில். உனது அன்பு எப்போதும் பாண்டவர்களிடத்தில்தான். உன்னை எனது உயிரினும் இனிய தந்தையாக நினைக்கிறேன். உனக்கும் உன் சொந்தக்காரர்களுக்கும் இனிய வாழ்க்கையும், வசிக்க இடமும், உடுத்த துணியும், உண்ண உணவும் தினமும் தருகிறேன். ஆனால், நீயோ அப்பாண்டவர்களிடம்தான் அன்பு கொண்டிருக்கிறாய்!'' என்றான்.

துரியோதனன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். விதுரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அதேசமயம் அவன் துரியோதனன் பேச்சால் வருத்தமும் அடைந்தான். விதுரன் அவனைப் பார்த்து, ''துரியோதனா! தந்தையாக இருப்பவருக்குப் புதல்வர்களுள் ஒரு சாரார் இடத்தில் மட்டும் அன்பு இல்லை என்று சொன்னாய். நானும் பாண்டவர்களுக்கும் உங்களுக்கும் தந்தையாக இருப்பவன். நீங்களும் பாண்டவர்களும் அன்போடு கூடி இந்தப் பூமியை ஆட்சி செய்து வந்தால், பகையரசர்களும் உங்களுக்குப் பணிந்து உங்களுடைய கருணையைப் பெறுவதற்காக இந்த அரண்மனையின் தலைவாசலிலே காத்துக் கொண்டிருப்பார்கள். அதுமட்டும் இல்லை. உங்களுடைய புகழும் செல்வமும் ஒன்றாக விருத்தியடையும். அப்படி இல்லாமல் பாண்டவர்களும் நீங்களும் பகைத்து உங்களுக்குள் போரிட்டுக் கொண்டால், உங்களுடைய பகைவர்கள்தான் வளம் பெறுவார்கள்! பாண்டவர்களோடு நீங்கள் கொள்ளும் ஒற்றுமையால் நன்மை ஏற்படும். உங்களுக்குள் ஏற்படும் வேற்றுமையால் தீமைதான் விளையும். நான் இப்போது உனக்கு நன்மை தரும் காரியத்தையே சிந்தித்துச் சொன்னேன். இனிமேலாவது தகுதியான நல்ல வழியைத் தெரிந்து கொள். இனிமேல் நான் உன்னோடு எந்தவொரு உறவும் இல்லாதவன் போல, உனக்கு எதையும் சொல்ல மாட்டேன்! இப்போது உன்னிடம் பொய்யான அன்பு கொண்டவர்கள் சொல்லும் பேச்சே உனக்கு இணக்கமாகத் தெரியும். உன்மேல் அன்பு கொண்ட நல்லவர்களின் அறிவுரைகள் உனக்குச் சரியென்று தோன்றாது!'' என்று சொன்னான்.

விதுரன் அப்படிச் சொல்லியும் துரியோதனன் மனம் திருந்தவில்லை. அவன் விதுரனைப் பார்த்து மேலும் நிஷ்டுரமாகப் பேசத் தொடங்கினான். "சிறிய தந்தையே! தருமனுடைய மனத்தில் நீதி நிறைந்திருப்பதையும், பெரியோர்களின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசும் என்னிடம் குற்றம் நிறைந்திருப்பதையும் நீ வரையறுத்து அறிந்தாய். உனது அடியவனாகிய நான் செய்த பிழைகள் எல்லாவற்றையும் பொறுத்தருள்வாயாக!" என்று சொல்லி, கைகூப்பி வணங்கிப் பரிகசித்துச் சிரித்தான்.

துரியோதனனுடைய கேலிப்பேச்சு விதுரனைச் சினத்தால் கொதிக்கச் செய்தது. உடனே அவன் சபாமண்டபத்தைவிட்டுத் தனது மாளிகைக்குச் சென்றான்.

விதுரன் போனதும் துரியோதனன் சபையிலிருந்த அரசர்களிடம், "இங்கே விரைந்து ஒரு புதிய மண்டபத்தை அழகாகக் கட்டி முடியுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய ஆணைப்படி அரசர்கள் எல்லோரும் வேகமாகச் சென்று, தங்கள் தங்கள் தேசத்தில் கிடைக்கின்ற கட்டிடப் பொருள்களையெல்லாம் உடனே கொண்டு வந்து சேர்த்தார்கள். பிறகு, அஸ்தினாபுரத்து அரண்மனையை ஒட்டி மண்டபம் கட்டத் தொடங்கினார்கள். முதலில் பொன்னால் சுவர் எழுப்பினார்கள். சிற்பிகள் தங்கள் கைத்திறமையெல்லாம் காட்டிச் செய்த அழகிய சித்திர வேலைப்பாடுடைய தூண்களை நிறுத்தினார்கள். இரத்தினங்கள் பதிக்கப்பட்ட உத்திரங்களை அவற்றின் மேல் ஏற்றி, மேற்கூரையை முத்துக்களினால் மூடினார்கள்.

மண்டபச் சுவர்கள் முழுவதையும் அழகிய சித்திரங்கள் அலங்கரித்தன. மேல் மாடங்களில் எல்லாம் பட்டுவண்ணக் கொடிகள் பறந்தன. காவியப் புலவர்கள் கண்டால் அதிசயித்துக் கவிபாடும்படியாக மண்டபம் அழகுடன் விளங்கியது! துரியோதனனுடைய எண்ணப்படியே சிற்ப வேலைக்காரர்களால் அம்மண்டபம் தகுதியாகக் கட்டப் பெற்று, பூரணமாக நிறைவடைந்தது!

மண்டபம் கட்டி முடிந்ததும் துரியோதனனிடம் சென்று அரசர்கள் அதனைத் தெரிவித்தார்கள். துரியோதனன்

உடனே சகுனியோடு சென்று மண்டபத்தைப் பார்த்தான். அதன் அழகைக் கண்டு அதிசயித்தான். தான் நினைத்த படியே மண்டபம் அமைந்திருக்கிறது என்று எண்ணி மகிழ்ந்தான். பிறகு, துரியோதனன் திருதராஷ்டிரனிடம் சென்றான். தந்தையை நோக்கித் தனயன், "தந்தையே! நான் சொல்வதைக் கேளுங்கள். எனது விருப்பம் நிறைவேறும்படி மேகங்கள் தவழும் இரத்தின மயமான மண்டபம் ஒன்றை, இப்போது இந்நகரில் நான் புதிதாகக் கட்டியுள்ளேன். அம்மண்டபத்தின் சிறப்பைத் தங்கள் தம்பியின் குமாரர்கள் பார்க்க வேண்டும். உடனே இங்கே வரும்படி அவர்களுக்கு ஒரு தூதுவன் மூலம் ஓலை எழுதி அனுப்புங்கள்!'' என்றான்.

அதுகேட்டு திருதராஷ்டிரன் மகிழ்ச்சியடைந்தான். அவன் தன் மகனை அன்போடு பார்த்து, "குமாரனே! தக்க உபாயத்தால் பாண்டவர்களை ஜெயிக்கத் தொடங்கினீர்கள். பெரும்போர் புரிந்தாலும் பலமுடைய பாண்டவர்களை உங்களால் ஜெயிக்க முடியாது. இப்படி பூமி முழுவதையும் நீங்கள் அடைவதற்கு சகுனியைத் தவிர வேறு யாரால் உதவி செய்ய முடியும்?'' என்று கூறினான்.

பிறகு, திருதராஷ்டிரன் விதுரனை அழைத்து, "தம்பி! நீ தூது போய்ச் சொன்னால், இந்த உலகத்தில் உனது வார்த்தையைத் தட்டக் கூடியவர்கள் யார் இருக்கின்றார்கள்? ஆகவே, நீ பாண்டவர்களிடம் தூது செல். அவர்களை உனது வார்த்தைகளால் மயக்கி அழைத்து வா. உனது பிள்ளைகளான துரியோதனாதியர்கள் எண்ணியுள்ள காரியம் நிறைவேற வழி செய்!'' என்றவன், உடனே தருமருக்குப் பொன் ஓலை எழுதினான்.

அந்த ஓலையில், "தருமபுத்திரா! உனது தம்பிகளான துரியோதனாதியர்கள் விரும்பிக் கட்டி முடித்த மண்டபத்தின் அழகையும் என்னையும் காண்பதற்காக நீ உடனே அஸ்தினாபுரிக்குப் புறப்பட்டு வா!'' என்று எழுதி, விதுரனிடம் அதனைக் கொடுத்தான் திருதராஷ்டிரன்.

ஓலையைப் பெற்றுக் கொண்ட விதுரனிடம் மேலும் அவன், "தம்பி! இப்போதே நீ சென்று தருமனிடம் இதனைக் கொடுத்து, அவர்களை அழைத்து வா!'' என்று கட்டளையிட்டான்.

தமையனின் கட்டளையை விதுரன் மறுக்கவில்லை. உடனே அவன் சதுரங்க சேனையோடு புறப்பட்டான். இரண்டே நாளில் இந்திரப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்தான். அந்த நகரத்தைப் பார்த்து அவன் மகிழ்ந்தான்.

விதுரன் வரும் செய்தியை அவனுடைய தூதுவர்கள் முன்னே சென்று பாண்டவர்களுக்குத் தெரிவித்தார்கள். அதுகேட்டுப் பாண்டவர்கள் சந்தோஷித்து, அவனை எதிர்கொண்டு வரவேற்று நமஸ்கரித்தார்கள். தன்னை நமஸ்கரித்த பாண்டவர்களைக் கைகளால் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டு, சந்திரனைக் கண்ட கடல் போல் மகிழ்ந்தான். அவன் உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சியால் உடம்பு பூரித்தது.

பாண்டவர்கள் விதுரனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குப் போனார்கள். தக்க பொன்னாசனத்தில் அவனை அமர்த்தி நமஸ்கரித்தார்கள். அவர்களுக்கு விதுரன் அன்போடும் மகிழ்ச்சியோடும் ஆசீர்வாதம் செய்தான். பிறகு, அவர்களை உட்காரும்படிச் சொன்னான்.

விதுரனின் கட்டளைப்படி பாண்டவர்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். அச்சமயம் அம்மண்டபத்தில் பாண்டவர்களும் விதுரனும் மட்டுமே இருந்தார்கள்.

அப்போது விதுரன் பாண்டவர்களை நோக்கி, ''புதல்வர்களே! திருதராஷ்டிர மகாராஜா உங்களை அழைத்து வரும்படி ஓலை எழுதிக் கொடுத்து, என்னைத் தூதுவனாக அனுப்பி வைத்தார். தமையனார் கட்டளையால் நானும் உங்களை அழைத்துப் போவதற்கு வந்தேன். அவர் இப்போது உங்களை அழைத்திருப்பதற்குக் காரணம் உண்டு. தருமபுத்திரா! உனது இராஜசூய யாகம் முடிந்தபின்பு நாங்கள் எல்லோரும் அஸ்தினாபுரிக்குப் போனோம். மறுநாள் இந்திரன் போல் துரியோதனன் ராஜசபையில் வீற்றிருந்தான். அப்போது அவன் தன் தம்பிமார்களுடனும் சகுனியுடனும் கலந்தாலோசித்து, சிறந்த அழகிய மண்டபம் ஒன்று கட்டும்படி சிற்பிகளுக்குக் கட்டளையிட்டான். அதன்படி சிற்ப ஸ்தபதிகள், உலகிலுள்ள அரசர்கள் எல்லோரும் வந்து தங்குவதற்கு ஏற்ற சபாமண்டபத்தைக் கட்டி முடித்தார்கள். துரியோதனன் தன் தந்தையோடு கலந்தாலோசித்து உங்களை அம்மண்டபத்தைக்

காண வரும்படி அழைத்துள்ளான். நீங்கள் மண்டபத்தைப் பார்த்து மகிழ்ந்திருக்கும்போது சகுனி உன்னுடன் சூதாட விருப்பம் தெரிவிப்பான். அந்தச் சூதாட்டத்தால் துரியோதனன் உங்களுடைய ராஜ்ஜியத்தையும் செல்வத்தையும் அபகரிக்க நினைத்திருக்கிறான். தருமா! அவர்களுடைய இந்த எண்ணம் உனக்குத் தெரியாததில்லை! துரியோதனனுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகத் திருதராஷ்டிர மகாராஜா உனக்கு ஓலை எழுதி கொடுத்துள்ளார்! இதோ அத்திருமுகம்!'' என்று சொல்லி, ஓலையைத் தருமரிடம் கொடுத்தான்.

தருமர் ஆசனத்தைவிட்டு எழுந்து விதுரனை வணங்கி அவ்வோலையைப் பவ்யமாகப் பெற்றுக் கொண்டார். பக்கத்திலிருந்த ஓலை வாசிப்பவனிடம் அதனைக் கொடுத்தார். அவன் அத்திருமுகத்தை எல்லோருக்கும் கேட்கும்படி இனிமையாகப் படித்தான்.

அதுகேட்டு தருமர், ''கடவுளின் ஆணையால் நிகழும் செயலை நடக்காதபடி தடுப்பதற்கு நாம் யார்?'' என்றார்.

மேலும் அவர், ''துரியோதனன் வஞ்சனையாக நம்மை வரவழைத்துச் சூதாடி ஜெயிப்பதற்கு எண்ணியுள்ளான். இது அவனுக்கு நல்லதுதான். ஆனால், இது குருகுலத்தின் பெருமைக்குத் தகுமோ?'' என்றார்.

மீண்டும் தருமரே பேசத் தொடங்கினார். ''அரசச் சிறப்பும், பராக்கிரமமும், பலமும், சேனையும், அழகும், வெற்றியும், குடிப்பிறப்பின் மேன்மையும், மானமும், செல்வமும், பெருமையும், வம்சமும், இன்பமும், ஒளியும், நற்குணமும், ஒழுக்கமும், புகழும், கல்வியும் ஆகிய யாவும் சூதாடுகின்றவர்களிடம் அழிந்து போகும். ஆகையால் அறிஞர்கள் சூதாட்டத்தில் விருப்பம் வைக்கமாட்டார்கள்! காமுகர்கள் மனக்கவலையில் தாமே தம்மை மாட்டிக் கொள்கின்ற விதத்தை அறிந்து கொள்ள முடியாமல் எந்நாளும் சூதாட்டத்தில் மிக அதிகம் பழகுவார்கள். அறிவுடைய சான்றோர்கள் தரும காரியங்களைவிட்டு ஒருநாளும் சூதாடமாட்டார்கள். இந்தச் சூதாட்டத்தைவிட அதிக மயக்கம் தருகின்ற கள்குடிப்பது இனியதே! பண்டிதர்களும் வேதசாஸ்திரிகளும் சூதாடுதல் பெரும் பாவத் தொழில்களுள் ஒன்று என்று முன்பே பலவகையாக

நிந்தித்து விலக்கியிருக்கின்றார்கள். அப்படியிருந்தும் பாவச் சிறுவர்கள் போல் கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்காமல், வஞ்சக எண்ணத்தோடு சகுனி தான் ஆடுகின்ற சூதாட்டத்துக்கு என்னைத்தானா எதிர் நின்று ஆடுபவனாகக் கொள்ள வேண்டும்?''

தன் மனத்தில் உள்ளதையெல்லாம் சொன்ன தருமர் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். பிறகு அவர் திரும்பவும், ''நான் இப்படி நினைப்பதால் மட்டும் என்ன நடந்துவிடும்? விதியை வென்றவர்கள் யார் இருக்கிறார்கள்? சிறிய தந்தையே! பெரிய தந்தையின் எண்ணத்தையும், அவரின் மனக்கருத்துக்கு ஒத்து நடக்கின்ற துரியோதனனுடைய எண்ணத்தையும் சிந்தித்துப் பார்த்து, தங்கள் அபிப்பிராயத்தை எனக்குச் சொல்லுங்கள்!'' என்றார்.

உடனே விதுரன், ''தருமபுத்திரனே! நீ என்னிடம் இப்போது சொன்னதையெல்லாம் முன்பே நான் துரியோதனன் முதலியவர்களிடம் நன்றாக எடுத்துச் சொன்னேன். என் வார்த்தைகளை அவர்கள் எல்லோரும் அலட்சியம் செய்தார்கள். கேள்! சான்றோனாகிய நீ உன் மனக் கருத்துப்படிச் செய்!'' என்று கூறினான்.

அப்போது பீமன், ''நாம் சிறுவர்களாயிருக்கும் போது துரியோதனன் கங்கையில் கழுக்களை மறைவாக வரிசைப்படி நட்டு வைத்து, வஞ்சனையாக என்னைக் கொல்ல சதி செய்தான். பிறகு, அரக்கு மாளிகை கட்டி நம்மையெல்லாம் கொல்ல நினைத்தான். இப்போது சூதாட்டத்தில் நம்மை ஜெயித்து நமது ராஜ்ஜியத்தையும், செல்வத்தையும், வாழ்வையும் வஞ்சகமாக அபகரிக்க நினைத்திருக்கிறான். அதற்காகவே அவன் கட்டிய புதுமண்டபத்தை நாம் காண வேண்டும் என்கின்ற வியாஜத்தினால் நம்மைத் தந்திரமாக அழைத்திருக்கிறான். எப்போதும் நம்மிடம் பகை பாராட்டுகின்ற துரியோதனன் இப்படியெல்லாம் செய்கின்றான். அவன் நம்மிடம் அன்புள்ள சகோதரனாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை! முளைக்கும் போதே உயிரைக் கொல்லும் ஒரு கொடிய விஷமரம் முதிர்ந்து மிகவும் வயிரமேறி வளர்ந்துவிட்டால், அது எந்தக் கெடுதலைத்தான் செய்யாது? அது போலவே கொடிய துரியோதனனும் பலவகையாலும் நமக்குத் துன்பம் செய்கின்றான். ஆகையால் கௌரவர்களுடன் விரும்பிக்

கொள்ளும் சிநேகம் நமக்கு இனிமேல் வேண்டாம். நாம் அத்துரியோதனனுக்கு அடங்கிப் பணிவாக நடந்தால், அவன் நமக்குத் துன்பத்தையே கொடுப்பான். அத்தோடு நிற்காமல் நம்மை எதிர்த்து மேலும் போர் செய்து வருத்துவான். எனவே அவனோடு நட்புக் கொள்ளாமல், கொடிய ஆயுதங்களால் போர் செய்து அப்பகையை அழிக்க வேண்டும். இப்படிச் செய்தால் மட்டுமே நாம் உயிரோடு வாழ முடியும்!'' என்றான்.

பின்பு அர்ச்சுனன் தருமரைப் பார்த்து, ''கெட்டவர்களை நம்புவதும், நல்லவர்களை நம்பாதிருப்பதும், சிநேகிதரைப் பகைவராக நினைத்து அவரோடு போர் புரிவதும், பகைவரோடு நட்பு கொண்டு கலந்து வாழ்வதும் அரசர்களுக்கு முறையற்ற காரியங்கள் என்று முன்பே அரசநீதி சாஸ்திரத்தில் சான்றோர்கள் கூறியுள்ளார்கள். அரசநீதிக்கு மாறான காரியங்களை, தாங்கள் இப்போது செய்ய வேண்டுவதாகச் சொல்கிறீர்கள். இதற்கு என்ன காரணம்? நம்மிடம் கொடிய பகை கொண்டுள்ள துரியோதனனை நல்ல நண்பனாக நினைத்து, நாம் அவனிடம் எதற்காகப் போக வேண்டும்?'' என்றான்.

அடுத்து நகுலனும் சகாதேவனும், ''நாம் துரியோதனனுடைய விருப்பப்படி அஸ்தினாபுரிக்குப் போவது சரியில்லை!'' என்றார்கள்.

தம்பிமார்கள் சொன்னதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த தருமர் கடைசியாக, ''நீங்கள் எல்லோரும் சொன்னதே சரியென்று இப்போது கொள்ள வேண்டும். ஆனால், நம்மிடம் குறையாத அன்பு கொண்ட பெரிய தந்தையின் கட்டளையை மறுத்து அலட்சியம் செய்வது சரியில்லையே!'' என்றார்.

திரும்பவும் தருமர் பேசத் தொடங்கி, ''நியாய வழியில் சென்றால் சிறந்த புகழ் உண்டு. அதைத்தவிர உயிரை அதனால் காத்துக் கொள்ள முடியும் என்று நினைக்கக் கூடாது. நாம் அஸ்தினாபுரிக்குச் சென்றாலும் சரி, இங்கேயே தங்கிவிட்டாலும் சரி, விதி என்று இருந்தால் எங்கிருந்தாலும் நமது உயிர் போகத்தான் செய்யும். மேலும், நம்மை வரும்படிக் கட்டளையிட்டவரோ நமது பெரிய தந்தை. நம்மை அழைத்துப் போக வந்திருப்பவரோ சிறிய தந்தை.

இதுவே நாம் செல்வதற்குச் சரியான காரணமாகும் அப்படியிருக்க, பெரிய தந்தையின் கட்டளையால் சிறிய தந்தை வந்து அழைக்கும் போது, நாம் போகாமல் இருப்பது பழிப்புக்கு இடமாகும். அஸ்தினாபுரிக்குப் போவதால் நமக்குத் தீங்கு ஏற்படுமானால், அது ஊழ்வினையின் பயனே. அப்படி இருந்தால் அது நடந்துதான் தீரும். அதை நம்மால் தடுத்து நிறுத்த முடியாது. ஆகையால் பெரியோர்களின் கட்டளையை மறுத்தார்கள் என்ற பழிக்கு ஆளாகாமல் இப்போதே நாம் அஸ்தினாபுரிக்குப் போவது நல்லது!'' என்றார்.

பின்பு, தருமர் தங்களின் பயணத்தைப் பறையறைவோரிடம் தெரிவித்தார். அவர்கள் அச்செய்தியை எங்கும் பறையறைந்து தெரிவித்தார்கள். உடனே சேனைத்தலைவர்களும் அரசர்களும் வந்து அரண்மனையில் கூடினார்கள். சதுரங்க சேனையும் சித்தமாயிற்று.

பஞ்சபூதங்களும், பஞ்சேந்திரியங்களும், பஞ்ச தருக்களும், பஞ்சமஹாயஜ்ஞங்களும், பஞ்சபாணங்களும், பஞ்சமுக வாசப் பொருள்களும் போல் பஞ்சபாண்டவர்கள் பஞ்சதேர்களின் மேல் ஏறிக் கொண்டார்கள்! அப்போது அத்திரி முனிவரின் கண்ணிலும், திருமாலின் மனத்திலும், அக்கினியிலும், திருப்பாற் கடலிலும், பிரம்மாவின் சிருஷ்டியிலும் பிறந்து நிலவொளி வீசும் ஐந்து சந்திரர்கள் போல் பாண்டவர்கள்மீது பிடிக்கப்பட்ட ஐந்து வெண்கொற்றக் குடைகளும் விளங்கின. அச்சந்திரர்களிடம் இருந்து வீசும் நிலாக் கதிர்கள் போல, பாண்டவர்களின் இருபக்கமும் மகளிர் நின்று வீசுகின்ற வெண்சாமரங்கள் தோன்றின.

பாண்டவர்களுடைய தேர்களின் முன்னும் பின்னும் சதுரங்கசேனை சென்றது. மலை போன்ற யானைகளும், காற்றைவிட வேகமாகச் செல்லும் குதிரைகளும், மணியோசையோடு இரதங்களும் கடல்போல் ஆரவாரத்துடன் சென்றன. பலகோடி காலாட்படையும் போனது. ஆயுதங்களின் உரசல் ஒலியும், வாத்தியங்களின் பேரோசையும் யுகப் பிரளய இடி போல் முழங்கின.

சதுரங்கசேனையால் தூக்கிப் பிடித்துச் செல்லப்பட்ட கொடிகளால் ஆகாயமே மறைந்துவிட்டது. மற்றும்

சேனையால் எழுந்த புழுதிப்படலம் மூவுலகையும் ஆக்கிரமித்தது!

தருமர் தமது நான்கு பக்கமும் தம்பிமார்கள் சூழ்ந்து வர சேனையோடு வேகமாகச் சென்றார். ராஜஸ்திரீகளிடம் பெண் யானைமேல் தன்னைத் தொடர்ந்து வருமாறு கட்டளையிட்டு, திரௌபதி முத்துப்பல்லக்கில் ஏறி தருமரைத் தொடர்ந்தாள்.

அப்போது தருமர் செல்லும் வழியில் பல அபசகுனங்கள் தோன்றின. தருமருடைய எதிரில் கௌளிகள் துர்நிமித்தமாக ஒலித்து அவரைப் போக வேண்டாம் என்று தெரிவித்தன. செம்போத்துப் பறவைகள் வலது பக்கத்திலிருந்து இடதுபக்கத்துக்குத் தாவிச் சென்றன. கலைமான்கள் தாவிக் கொண்டு எதிரில் வந்தன. அதுகண்டு சகுனசாஸ்திரிகள் அந்த அபசகுனங்களைப் பற்றித் தெளிவாக தருமருக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால், தருமர் அவர்களின் அறிவுரையைக் கேட்க மறுத்துவிட்டார். அதனால் அவர்கள் மௌனமானார்கள். தருமர் மேலே பயணத்தைத் தொடர்ந்தார்.

பாண்டவர்கள் சூரியன் அஸ்தமனமான நேரத்தில் அஸ்தினாபுரி நகரத்தின் எல்லையை அடைந்து, அங்கிருந்த ஒரு சோலையில் தங்கினார்கள்.

அவர்களின் வருகையை அறிந்து கௌரவர்கள், 'தங்கள் எண்ணம் இனி நிச்சயம் நிறைவேறும்' என்று எண்ணி அளவில்லாது மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இரவு கழிந்தது!

சூரியன் உதயமானான்!

பாண்டவர்கள் துயில் நீங்கி விரதானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, திரௌபதியோடு தாங்கள் மட்டும் அஸ்தினாபுரத்து அரண்மனைக்குப் போனார்கள். நேரே அவர்கள் திருதராஷ்டிரனின் மாளிகைக்குச் சென்றார்கள். வாயிற்காவலர்கள் அவர்களின் வருகையை அக்கணமே சென்று திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்தார்கள். அவர்களை அழைத்து வரும்படி அவன் காவலர்களுக்குக் கட்டளை யிட்டான். மறுகணமே அவர்கள் அக்கட்டளையைச் செய்து முடித்தார்கள்.

திருதராஷ்டிரன் முன் சென்ற பாண்டவர்கள், அவனுடைய பாதங்களை வணங்கி எழுந்தார்கள். அவன் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டு, ‘‘குமாரர்களே! உங்களுடைய இன்றைய பராக்கிரம செயலையும், வாழ்வையும், புகழையும் என் தம்பி பாண்டு பார்த்து மகிழ்வதற்குப் புண்ணியம் செய்யாதவனாகி விட்டான். அது போகட்டும். நீங்கள் ஐந்து பேரும் விசுவாசம் வைத்து உங்கள் தம்பிமார்களான துரியோதனாதியர்களுடன் மனம் ஒன்றுபட்டு வாழுங்கள்!’’ என்று தனக்கு நன்மை தரும் தந்திர வார்த்தைகளைச் சொன்னான்.

அப்போது திரௌபதி திருதராஷ்டிரனுடைய பாதங்களைப் பணிந்து எழுந்தாள். அவளை நோக்கி அவன், ‘‘சௌக்கியமாக நீடூழி வாழ்க!’’ என்று வாழ்த்தி, காந்தாரியிடம் அனுப்பி வைத்தான்.

பிறகு, தருமரைப் பார்த்து திருதராஷ்டிரன், ‘‘தருமபுத்திரா! செய் தொழில் வல்லமையும், நியாயமும், அதிக கல்வியறிவும், மந்திராலோசனைத் திறமும், பெருந்தன்மையும், பராக்கிரமமும், முயற்சியும், கௌரவமிக்க புகழும், தருமமும் ஆகிய யாவும் உனது இயற்கைக் குணங்கள். ஆகவே, உன் அரசாட்சி குறைவின்றி இனிதாகவே நடக்கும்! நீ தம்பிமார்களைக் கொண்டு திக்விஜயம் செய்தாய். பகைவர்களை ஜெயித்தாய். அவர்கள் செலுத்திய கணக்கில்லாத செல்வத்தைப் பெற்றாய். பிறகு, இராஜசூய யாகத்தைச் செய்து முடித்தாய். அப்போது தானமும் தருமமும் அளவில்லாமல் செய்தாய். உன்னுடைய இத்தனைச் சிறப்புகளையும் உனது தம்பிமார்களான கௌரவர்கள் எனக்குச் சொல்லியுள்ளார்கள். பூமி முழுவதும் குருகுல மன்னர்களே முன்பு அரசாண்டதாகும். அது போலவே நீங்களும் கௌரவர்களும் இராஜ்ஜியத்தைப் பிரித்துக் கொள்ளாமல் ஒன்றுபட்டு, துரியோதனாதியருடன் ஏகசக்ராதிபதியாக உலகம் முழுவதையும் ராஜபரிபாலனம் செய்யுங்கள். உங்கள் சிறப்புக்களைப் பிறர் சொல்லக் கேட்டு மகிழ்கின்றேன். அதைத்தவிர உங்கள் ராஜபரிபாலனத்தைக் கண்களால் நேரில் காணும் பாக்கியத்தை நான் பெறவில்லை!’’ என்றான்.

திருதராஷ்டிரன் அதன் பிறகு அவர்களிடம், ‘‘நீங்கள் போய் உங்களுடைய பெரிய தாய் காந்தாரியை

வணங்கிவிட்டு, எனது பெரிய தந்தை பீஷ்மரின் தாமரைப் பாதங்களைச் சென்று வணங்குங்கள்!'' என்றான்.

பெரிய தந்தையின் விருப்பப்படியே பாண்டவர்கள் விரைந்து சென்று காந்தாரியின் பாதங்களை நமஸ்கரித்தார்கள். காந்தாரி தன்னை வணங்கிய பாண்டவர்களை ஆசீர்வதித்தாள்.

அப்போது காந்தாரி பாண்டவர்களும் திரௌபதியும் பெற்றுள்ள சிறப்புகளை நினைத்து, 'முன் ஜன்மத்தில் குந்தி அதிகமாக நல்வினைகள் செய்திருக்கின்றாள்!' என்று மனத்துக்குள் மகிழ்ச்சியோடு பாராட்டினாள்.

காந்தாரியிடம் ஆசிபெற்ற பாண்டவர்கள் திரௌபதியை அங்கேயே விட்டுவிட்டு, தாயிடம் விடைபெற்றுக் கொண்டு பீஷ்மரிடம் போனார்கள். அவருடைய பொற்பாதங்களைப் போற்றி நமஸ்காரம் செய்தார்கள்.

பாட்டனை வணங்கியபின் பாண்டவர்கள், திருதராஷ்டிரனுடைய கட்டளையால் தங்களை விதுரன் அழைத்து வந்த விபரம் முழுவதையும் அவருக்குச் சொன்னார்கள்.

அதுகேட்டு பீஷ்மர், ''நல்லவர்களுக்குத் தீங்கு செய்ய வஞ்சகர்கள் பல கொடிய வழிகளைக் கையாண்டாலும், முடிவில் நல்லவர்களுக்கு விதியினால் அனுபவிக்க வேண்டிய நன்மை வந்தே தீரும்!'' என்னும் தத்துவத்தை எடுத்துக் கூறினார்.

பிறகு , அவர்கள் பீஷ்மரிடம் விடைபெற்றுச் சென்று வில்லாசிரியர் துரோணாசாரியரையும், அவர் மகன் அசுவத்தாமனையும், வேதசாஸ்திரி கிருபாசாரியரையும் மனப்பூர்வமாக வணங்கி ஆசி பெற்றார்கள்.

கடைசியாக பாண்டவர்கள் விதுரனுடைய மாளிகைக்குச் சென்றார்கள். அங்கே சிறிய தந்தை மகிழ்ச்சியோடு தங்களை வரவேற்று உபசரிக்க விருந்துண்டு மகிழ்ந்து தங்கினார்கள்.

சூரியன் அஸ்தமித்தான்.

அப்போது தருமரின் விருப்பப்படி திரௌபதி விதுரனுடைய மாளிகைக்கு வந்து சேர்ந்தாள்.

இரவு அவர்கள் நன்கு உறங்கினார்கள்.

சூரியன் தன் கடமையைச் செய்ய கீழ்வானத்தில் பவனிவரத் தொடங்கினான்.

தருமர் தம்பிமார்களுடன் காலை பூஜை புனஸ்காரங்களை நன்கு செய்து முடித்தபின், விதுரனுடைய அரண்மனையில் மகிழ்ச்சியோடு தங்கியிருந்தார். அச்சமயம் அவர் குபேரன் போல பிராமணார்களுக்கும் பண்டிதர்களுக்கும் மிக அதிகமாக தானதருமங்கள் செய்தார். தம்மை வந்து வணங்கிய மன்னர்களுக்கெல்லாம் குதிரைகளையும், குடைகளையும், பல்லக்குகளையும், சாமரங்களையும், யானைகளையும் அளவில்லாமல் கொடுத்தார்.

இது இப்படியிருக்க, அப்போது துரியோதனாதியர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை இனி எடுத்துச் சொல்வோம்—

துரியோதனன் தனது ராஜசபையில் சிங்காசனத்தில் செருக்கோடு வீற்றிருந்தான். அந்தச் சபையிலே சகுனியும், துச்சாதனன் முதலிய அவனுடைய தம்பிமார்களும், அங்கதேசாதிபதி கர்ணனும், திருதராஷ்டிரனும், பீஷ்மரும், விதுரனும், துரோணாசாரியரும், அசுவத்தாமனும், கிருபாசாரியர் முதலியவர்களும் கூடியிருந்தார்கள்.

அப்போது தேரோட்டி பிராதிகாமியைப் பார்த்து துரியோதனன், ''நான் கட்டிய புதிய மண்டபத்தை பாண்டவர்கள் பார்த்து மகிழ்வதற்காக, நீ கணப்பொழுதில் சென்று அவர்களை இங்கே அழைத்துக் கொண்டு வா!'' என்று கட்டளையிட்டான்.

பிராதிகாமி அக்கணமே போய் பாண்டவர்கள் தங்கியிருந்த விதுரனுடைய அரண்மனையை அடைந்தான். அவர்கள் முன்னே சென்று, பவ்யமாக தருமருடைய பாதங்களை வணங்கினான். பிறகு, தருமரிடம் தான் வந்த காரணத்தை எடுத்துச் சொன்னான்.

அதுகேட்டு தருமர் திரௌபதியிடம், ''நீ போய் எங்கள் பெரிய தந்தையாரின் அரண்மனையில் பெரிய தாயுடன் தங்கியிரு!'' என்று சொல்லிவிட்டு, தமது தம்பிமார்களுடன் துரியோதனனுடைய ராஜசபையை அடைந்தார்.

தருமர் பெரியோர்களை வணங்கி, தமக்காகப் போடப்பட்டிருந்த பொன்னாசனத்தில் அமர்ந்தார்.

தாம் உட்கார்ந்திருந்த புதிதாகக் கட்டப்பட்ட அந்த மண்டபத்தைத் தருமர் பார்த்து மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியோடு அவர், ''இந்தப் புதிய மண்டபத்தின் அழகைப் பற்றி எப்படி நான் புகழ்வேன்? இந்த மண்டபத்தில் உள்ள அழகு சுதன்மை என்னும் தேவலோகத்துச் சபாமண்டபத்திலும் இல்லை. அதுவே அப்படியானால் இந்த உலகத்தில் உள்ள மற்ற மண்டபங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை!'' என்றார்.

தருமர் அவ்வாறு சொல்லும்போது அவருடைய மற்ற தம்பிமார்கள் பெரியோர்களை வணங்கி ஆசி பெற்று துரியோதனனுடைய எதிரில் தங்களுக்காகப் போடப் பட்டிருந்த பொன்னாசனங்களில் அமர்ந்தார்கள்.

துரியோதனன் அச்சமயம் தருமரை நோக்கி, ''அண்ணா! இச்சபாமண்டபத்தைவிட்டுப் போய் நம் தந்தையின் மாளிகையில் உணவருந்துகின்ற நேரம் வரையில் சும்மாயிருப்பானேன்? அது வரையில் தாங்களும் என் ம ா சகுனியும் சூதாடுங்களேன். காலமும் இனிமையாகக் கழியும். தாங்கள் அவரோடு சூதாடுகிறீர்களா?'' என்று கேட்டான்.

அதற்கு தருமர், ''துரியோதனா! வஞ்சனையாகக் கோபம் கொள்வதும், பிறருடைய பெருங்குற்றங்களை எடுத்துத் தூற்றுவதும், நண்பரைச் சந்தேகிப்பதும், சூதாட விரும்புவதும் ஆகியவையெல்லாம் பாவமானவை என்று முன்பே பெரியோர்கள் தரும சாஸ்திரங்களில் கூறியிருக்கின்றார்கள். அப்படியிருக்க மாமா சகுனியோடு நான் சூதாட்டப் போர் நடத்தி, எனது பொருள்களையெல்லாம் இழந்து தோல்வி அடைய வேண்டும் என்பது உனது எண்ணமோ? நீங்கள் உங்கள் மனத்தில் எங்களிடமிருந்து எப்பொருளைப் பெற வேண்டும் என்று நினைத்திருக் கின்றீர்களோ, அப்பொருளை உங்களுக்கு இப்போதே இங்கே கொடுத்துவிடுகின்றேன்!'' என்றார்.

சகுனி அது கேட்டு உடனே சபையோர்களைப் பார்த்து ''சபையோர்களே! சூதாட்டத்தில் உருட்டப்படும் காய்களால் வரும் தாயம் இரண்டு ஆட்டக்காரர்களுக்கும்,

பொதுவானதுதான். காய்களை வைப்பதில் அறிவின் திறமையைத் தவிர, அச்சூதாட்டத்தில் கபடம் சிறிதும் இல்லையே! அப்படியிருக்க, சூதாட்டத்தில் வஞ்சகம் உண்டு என்று தருமன் சொன்னால், இவனை யார்தான் சூதாட அழைப்பார்கள்? சூதாடுவதில் இவனுக்கு விருப்பம் உண்டு என்றால் எனக்கும் விருப்பம் உண்டு. அதைவிட்டு இவன் சூதாடுதல் வஞ்சனையானது என்று ஒதுங்கித் தான் சூதாட பின்வாங்குவானானால், 'உனது இருப்பிடத்துக்குப் போ' என்று அவனைப் பார்த்துச் சொல்லுங்கள். அவன் சம்மதித்து என்னோடு சூதாட முன்வருவானானால், நீங்கள் எல்லோரும் பார்த்துச் சந்தோஷம் அடையும்படி இப்போது எனக்குள்ள சாமர்த்தியத்துக்கு ஏற்ப சூதாட்டத்தை நடத்தலாம்!'' என்றான்.

மீண்டும் அவன் பேசத் தொடங்கி தருமரிடம், ''நீதி தவறாத தருமராஜனே! நான் சொல்வதைக் கேள். நாம் விரும்பி ஆடப் போகின்ற சூதாட்டத்தில் கிடைக்கின்ற வெற்றியும் தோல்வியும் நம்மிருவருக்கும் சமமானவையே. நீ சூதாட்டம் வஞ்சனையானது என்று சொல்லி தரித்திரன் போல் அஞ்சி ஓடுவதற்குக் காரணம், பந்தயம் வைக்கும் பொருளிடம் உலோபியாய் இருப்பதுதானோ? நான் உருட்டிய காய்களில் ஜெயித்தால், நீ பந்தயமாக வைத்த பொருளைத் தோற்பாய். நீ உருட்டிய காய்களால் ஜெயித்தால், நீ பந்தயமாக வைத்த பொருளைவிட இரண்டு மடங்குப் பொருளை நான் உனக்குத் தருவேன். பசுவைக் கொன்ற கொலை பாதகரைப் போலப் பயப்பட வேண்டாம். உடனே சூதாட விரும்பி வா!'' என்றான்.

தருமர் சகுனியின் வார்த்தைகளைக் கேட்டுப் பேசாமல் இருந்தார். அதுகண்டு கர்ணன் தருமரைப் பார்த்து, ''துரியோதனன் உன்னைச் சூதாட்டத்துக்கு அழைத்தும், நீ சூதாடுவதற்கு அஞ்சி மனம் வருந்தி நடுங்குகிறாய்! இதற்கே பயப்படும் நீ ஆயுதப் போரில் எப்படி உயிர் பிழைப்பாய்? இப்படி எந்தப் போருக்கும் தகுதியற்ற நீ, உடனே தம்பிமார்களோடு உனது இந்திரப்பிரஸ்தத்துக்குப் போய்ச் சேர்!'' என்றான்.

கர்ணனுடைய கொடூர வார்த்தைகளைக் கேட்டதும் அர்ச்சுனன் சினத்தால் வெகுண்டான். அர்ச்சுனன் கோபமாகக் கர்ணனை நோக்கி, ''எங்களை ஏமாற்றும்

உபாயத்தோடே புதிதாக மண்டபம் கட்டி, அம்மண்டபத்தை நாங்கள் பார்த்து மகிழ வேண்டும் என்ற வியாஜத்தினால் எங்களை வரவழைத்து, இப்போது சூதாடக் கூப்பிட்டீர்கள். அதற்கு எங்கள் தமையனார் உடன்படாமல், சூதாடுவது பாவம் என்று தடுத்துக் கூறினார். இதனால் அவர் போருக்கு அஞ்சுவதாக எப்படிச் சொன்னீர்கள்? கர்ணா! இப்படி தகாத சொற்களால் க்ஷத்திரிய தருமத்திலிருந்து கொஞ்சமும் பின்வாங்காத என் தமையனாரைப் பழித்தாய். அப்படிப் பழித்த உனது நாவை இக்கணமே துண்டிப்பேன்!'' என்று சொல்லி, அவன் மேல் அம்பு தொடுக்க வில்லைக் கையில் ஏந்தினான்.

அப்போது தருமர் அர்ச்சுனனிடம், ''தம்பி! நீ அயலான்போல் சும்மாயிரு!'' என்று கூறி, அவனை அடக்கி உட்கார வைத்தார்.

பிறகு அவர், ''நான் போர் புரிந்தால், என்னோடு எதிர்த்து நின்று அஞ்சாமல் போர் செய்யும் பலமுடைய வீரர் யார் இருக்கின்றார்கள்? ஆயினும் நம்மைப் பற்றி நாமே புகழ்ந்து பேசினால், நமது வீரம் குறைந்து போகும். ஆகையால் ஒன்றும் சொல்ல வேண்டாம்!'' என்று கூறி ரோஷத்தோடு எழுந்தார்.

சகுனியை நோக்கி தருமர் அந்த ரோஷத்தோடு, ''உமது வஞ்சகமான சூதாட்டத்தை ஆடுவோம், வாருங்கள்!'' என்று கூறினார்.

சகுனி அதுகேட்டு மகிழ்ந்தான். அவன் மட்டுமா? துரியோதனாதியர்கள் எல்லோரும் குதூகலித்தார்கள்.

தருமர் சகுனியோடு சூதாடத் தயாரானார்.

துரியோதனன் அச்சமயம் தருமரைப் பார்த்து, ''என் மாமா உம்மை ஜெயித்தால், நீர்வைத்த பந்தயப் பொருள்கள் எல்லாவற்றையும் எனக்குக் கொடுக்க வேண்டும். நீர் என் மாமாவை ஜெயித்தால், அப்போது உடனே நான் எனது பொருள்களை உமக்குக் கொடுத்துவிடுவேன். ஆனால், உம்மைச் சூதாட்டத்தில் யாருமே ஜெயிக்க முடியாது!'' என்று பந்தய விதிகளைச் சொன்னதோடு, அவருக்கு உற்சாகமும் கொடுத்தான்.

பின்பு, தருமரும் சகுனியும் எதிர் எதிர் ஆசனங்களில் அமர்ந்து சூதாடத் தொடங்கினார்கள். சகுனியின் வஞ்சகமான சூதாட்டத்தால் தருமர் முதலில் முத்தாரத்தைப் பந்தயம் வைத்து ஜெயித்தார். அதனால் அவர் மனத்தில் சூதாடும் ஆசை அதிகமாகியது. அடுத்து தருமர் பந்தயம் வைத்த முத்துமாலையை சகுனி ஜெயித்துக் கொண்டான்.



இப்படியே தருமர் தமக்கு கிருஷ்ணபகவானால் கொடுக்கப்பட்ட தேரையும், தமது சதுரங்கசேனையையும், தாய்ப்பாகமாகக் கிடைத்த தேசத்தையும், அரச உரிமையையும், இந்திரப்பிரஸ்தத்தையும் சகுனியிடம் தோற்றார்.

அத்தனைத் தோற்றும் தருமர் சூதாட்டத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. தோற்றதையெல்லாம் திரும்ப அச்சூதாட்டத்திலேயே பெற வேண்டும் என்ற வெறியும் ஆசையும் அவருள் அதிகமாகிவிட்டது. அவர் மேலும் சகுனியோடு சூதாடினார்.

அதனால் மேலும் அவர் சித்திரரதன் தமக்குக் கொடுத்த ஐந்நூறு குதிரைகளையும், பல ராஜஸ்திரீகளையும் பந்தயம் வைத்துத் தோற்றார்.

தருமர் அவ்வாறு தமது பொருள்கள் எல்லாவற்றையும் சகுனியிடம் தோற்று வருவதைக் கண்டு துரியோதனன் மனத்துக்குள் மிகவும் மகிழ்ந்தான். அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவன் சகுனியிடம் மெல்ல, ''மாமா! தருமர் தம்மையும், தமது நான்கு தம்பிகளையும் பந்தயமாக வைத்து ஆடும்படிச் சொல்லுங்கள்!'' என்றான்.

சகுனி அதுகேட்டு மகிழ்ந்து, பாண்டவர்களின் நாசத்தை உத்தேசித்து உற்சாகமானான். உடனே அவன், ''தருமா! உன்னையும், வீரம் பேசிய உனது நான்கு தம்பிகளையும் பந்தயம் வைத்துச் சூதாடு!'' என்று தருமரிடம் சொன்னான்.

சகுனியின் வார்த்தைகளைக் கேட்ட தருமர், அவற்றை ஆலோசித்துப் பார்க்காமல் அதற்கு உடன்பட்டு சூதாடினார். அப்பந்தயத்திலும் தோற்றார்.

அப்போது தருமரிடம் சகுனி, ''தருமா! இனி உனது எண்ணம் என்ன?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டான்.

மேலும் அவன் தருமரைப் பார்த்து, ''முறைப்படி விளையாடி நாங்கள் ஜெயித்துவிட்டதால், நீங்கள் ஐவரும் எங்களுக்கு நன்கு அடிமைகளாகிவிட்டீர்கள். உனது யாகபத்தினியாகிய திரௌபதியைப் பந்தயமாக வைத்து நீ இன்னும் நன்றாகச் சூதாடவா!'' என்றான்.

சகுனி சொன்னதைக் கேட்டு விதுரன் மிகவும் வருத்தம் அடைந்தான். உடனே அவன் திருதராஷ்டிரனைப் பழித்துப் பேசத் தொடங்கினான். ''அண்ணா! உங்கள் அறியாமையால் இப்படிப்பட்ட அக்கிரமச் செயல் இங்கே நடக்கிறது. இதுபோல் மற்ற வேந்தர்கள் நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். இந்த அக்கிரமம் குருகுலத்தில் பிறந்த நமக்கு அடுக்குமோ? நீங்கள் துரியோதனாதியருக்கு அறிவுரை சொன்னால், அதனை அவர்கள் கேட்காமல் தவறு செய்வார்களோ? உங்கள் பிள்ளைகள் வஞ்சகமாகப் பாண்டவர்களுக்குத் தீங்கு செய்கிறார்கள். அதைக் கண்டும் பாண்டவர்களிடம் உண்மையான அன்பு கொண்டவர்

போல் பாவனை செய்யும் நீங்கள், இந்த அக்கிரமச் செயலுக்குச் சம்மதித்திருப்பது தகுதியோ? நீங்கள் மிருகமில்லை; பறவையுமில்லை. மனிதராயிருந்தும் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாத உங்கள் பக்கம் நாங்கள் வந்து சேர்ந்திருக்கிறோம். இதற்குக் காரணம் எங்களுக்குப் புத்தியில்லாததுதான். இதனால் உங்கள் மேல் குற்றம் சொல்வதிலும் பயனில்லை. பாண்டவர்கள் தங்களுடைய பெருமை கெட்டு வருந்தும்படி கௌரவர்கள் வஞ்சகத்தால் பெரும் துன்பம் செய்து வருத்துவார்களோ? இது என்ன நியாயம்? இதுபோல் எங்குமே கண்டதில்லையே! தம்பியின் பிள்ளைகளிடம் உங்களுக்கு அன்பு நீங்கிவிட்டது என்றாலும், நீதியழிய நீங்களே இப்படி அவர்களைத் துன்பமாக நடத்தினால் இப்பூமியில் இன்னும் எதிர்காலத்தில் என்னென்ன தீங்குகள்தான் ஏற்படுமோ தெரியவில்லையே! தருமபுத்திரனை வஞ்சகமாக ஜெயித்து எல்லாவற்றையும் தான் கவர்ந்தாகிவிட்டதே. இன்னும் அவனுடைய தருமபத்தினியையும் பந்தயமாக வைத்துச் சூதாட வேண்டுமோ? அப்படி சூதாட வேண்டும் என்று சொல்வது நீதியாகுமோ? இது செய்யக் கூடிய காரியம் இல்லை! உங்களுக்குக் கேடுகாலம் நெருங்கிவிட்டது. அதனாலேயே பெருந்தன்மை இல்லாமல் உங்கள் மனம் இப்படியெல்லாம் மாறுபடுகின்றது!''

திருதராஷ்டிரன் விதுரனுடைய பேச்சைக் கேட்டான். ஆயினும் அவன் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான்.

அப்போது தருமர், சகுனி கூறியபடியே திரௌபதியைப் பந்தயமாக வைத்து அவனோடு சூதாடித் தோற்றார். எல்லாவற்றையும் இழந்த அந்த நேரத்திலும் தருமர் சிறிதுகூட மனம் கலங்கவில்லை. அதுதான் ஆச்சர்யம்!

ஆனால், சபையில் உள்ள அரசர்கள் எல்லோரும் தருமரின் நிலையைக் கண்டு உடல் நடுங்கி மனம் தவித்து மிகவும் வருந்தினார்கள்! அவர்கள், ''துரியோதனன் மிகவும் கொடியவன்! மருமகனாகிய துரியோதனனுடைய உயிருக்கு இந்தச் சகுனி யமன்தானோ? தருமபுத்திரன் இவ்வளவு காலமாகச் செய்து வந்த தருமமெல்லாம் பொய்யாகி விடுமோ? இடியைவிட கொடியவனாகிய பீமன் கோபத்துடன் இனிப் போருக்குத் தயாராவானோ? அரவக்

கொடியுடைய துரியோதனன் தனக்கும் பாண்டவர்களுக்கும் உள்ள உறவைச் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை! தருமமும், நன்மதிப்பும், மநுசாஸ்திர நீதிப்படி நடப்பதுமாகிய அனைத்தும் தருமனுக்குப் பயன் தராமல் அழிந்தன. ஆனால், யாகாக்கினியில் பிறந்த திரௌபதியினுடைய பதிவிரதா தருமம் தவறாமல் எதிரிகளை அழித்தே தீரும்! தேவேந்திரகுமாரன் அர்ச்சுனன் தனது இரண்டு கண்களும் சிவக்கப் பெற்றான். இதனைப் பாருங்கள்! திருதராஷ்டிரன் இந்த அக்கிரமச் செயல் நிகழவும், தனது மகனாகிய துரியோதனனைத் தடுத்து ஒன்றும் பேசாமல் இருக்கின்றானே. இது என்ன கொடுமை! ஆனாலும் என்ன செய்வது? கண்ணில்லாத குருடன் மீது பழி சொல்வதிலும் பயனில்லையே! இக்கொடுமைக்கு ஆதரவு தந்த திருதராஷ்டிரனால், அவனது புதல்வர்களான துரியோதனாதியர்களின் செல்வம் இனி நிச்சயம் அழிந்தேவிடும்! இந்த திருதராஷ்டிரன் செய்தது குருகுலத்துக்குத் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கப் போகும் அபகீர்த்திதான்!'' என்று ஒருவர்க்கொருவர் தங்களுக்குள் வெவ்வேறாகப் பேசிக் கொண்டார்கள்.

இப்படி அச்சபையில் உள்ள அரசர்கள் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தபோது துரியோதனனும், துச்சாதனனும், சகுனியும், கர்ணனும் ஒன்றுகூடி தமக்குள் கலந்து ஆலோசித்தார்கள்.

பிறகு, துரியோதனன் கேட்டவர்கள் எல்லோரும் உடம்பு நடுங்கும்படி பீஷ்மரைப் பார்த்து, ''பாட்டா! தருமர் இப்படி தனக்குள்ளதையெல்லாம் தோற்றுவிட்டாரே! இது அவர் முன் ஜென்மத்தில் செய்த தீவினையோ? சகுனி மாமா பூர்வ ஜென்மத்தில் பண்ணிய புண்ணியமோ? ஐவருக்கும் பொதுவான திரௌபதி, தருமருடைய பத்தினியாக யாகசாலைக்குச் சென்ற குற்றமோ? இல்லை, தருமருடைய தம்பிகள் தங்களைப் பற்றிப் பெருமையாக மதித்த எண்ணமோ? இப்படி நேர்ந்துவிட்டது எதனால்?'' என்று கர்வமாகக் கேட்டான்.

துரியோதனனுடைய கர்வ வார்த்தைகளைக் கேட்டுப் பீஷ்மர் அவனைப் பார்த்துப் பரிகசித்துவிட்டு, ''துரியோதனா! நம்மை நாமே பழித்துப் பேசுவது நமது குலத்துக்குத் தகுதியில்லை. இப்போது உண்டான கோபத்தை

இனிமேலும் வளராதபடி விட்டுவிடு!'' என்று புத்திமதி கூறினார்.

பீஷ்மரின் புத்திமதிகள் துரியோதனனுடைய செவிகளில் ஏறவில்லை. அவன் மேலும் அதிகமாகக் கோபம் கொண்டான். அக்கோபத்தோடு விதுரனை நோக்கி, ''சிறிய தந்தையே! தருமர் என்னிடம் முறையாகச் சூதாடித் தோற்றுவிட்ட அவருடைய குதிரைகளையும், யானைகளையும், ரதங்களையும் அந்தந்த இடங்களிலிருந்து உடனே கொண்டு வரும்படி நமது வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடுங்கள்! நமது தேசங்களிலும் நகரங்களிலும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கச் செய்யுங்கள். பாண்டவர்களுடைய அளவில்லாத எல்லாச் செல்வங்களையும் அஸ்தினாபுரிக்கு இப்போதே கொண்டு வரும்படி ஆட்களை ஏவுங்கள். தருமர் பந்தயமாக வைத்துத் தோற்ற ராஜஸ்திரீகளையெல்லாம் நம் நகரத்துக்கு அழைத்து வரும்படி வீரர்களை அனுப்புங்கள். தருமரோடு அவர் தம்பிகளும் நமக்கு அடிமைகளாகும்படியும் உடனே கட்டளையிடுங்கள்! அது மட்டுமில்லை. தருமருடைய யாகபத்தினியான திரௌபதியை அரசர்கள் எல்லோரும் பார்த்து மகிழ, இப்போதே அவளைப் பலாத்காரமாக இந்த ராஜசபைக்கு இழுத்துக் கொண்டு வரும்படியும் கட்டளையிடுங்கள்!'' என்று கொடூரமாகச் சொன்னான்.

விதுரன் அதுகேட்டு வேதனையடைந்தான். தான் இப்போதும் துரியோதனனுக்குப் புத்தி கூறுவதே முறை என்று நினைத்தான். 'நம்பி! யமதருமன் பெற்ற யுதிஷ்டிரனைத் தரும விரோதமாகச் சூதாட வைத்து, அவனுடைய எல்லாச் செல்வங்களையும் தீயவழியால் அபகரித்துக் கொண்டாய். இது சுத்த வீரனுக்கு அடுக்காது. சாமர்த்தியமும் இல்லை. இது உனக்கு மங்கல வாழ்க்கையில்லை; பெருமையில்லை; தரும சாஸ்திரங்களில் சொல்லப்படும் புத்தியுமில்லை. நீ எனக்குக் கட்டளையிட்ட எல்லாச் செயல்களையும் வேண்டுமானாலும் செய்து முடி. ஆனால், பதிவிரதையான திரௌபதியைப் பற்றி எல்லா அரசர்களின் முன்பாகக் கேவலமாகப் பேசுவதை மட்டும் மனத்தில் எண்ணாதிரு! அப்படிச் செய்தால் நீ தேவர்களைப் போல் நீடுழி வாழ்வாய். அருந்ததியைத் தவிர வேறு யாரையும் தனக்கு நிகரில்லாத திரௌபதியை நீ பழித்துப்

பேசியதை இப்போது சிந்தித்துப் பார்த்தால், முன்பு நான் கேள்விப்பட்டுள்ள விஷயத்துக்கு மிகவும் ஒத்திருக்கின்றது!'' என்றான்.

துரியோதனன் உடனே, ''முன்பு தாங்கள் கேள்விப் பட்டுள்ள விஷயம் என்ன?'' என்று கேட்டான்.

அக்கேள்வியால் விதுரனுடைய நெஞ்சம் நெகிழ்ந்து உருகிக் கரைந்தது. அவன் கண்கள் மடைதிறந்த வெள்ளமாயின. அவன் மிக்க அன்போடு துரியோதனனைப் பார்த்தான். பின்பு அவனிடம், ''பூமாதேவி அதிக பாரத்தால் துன்புற்று மகாமேரு பர்வதத்தில் இருக்கும் தேவசபைக்குச் சென்றாள். அங்கிருந்த பிரமதேவர் முதலிய தேவர்களுக் கெல்லாம் வந்தனம் செய்து, 'ஓ, தேவர்களே! முன்பு மகாசமர்த்தரான ஸ்ரீவிஷ்ணுபகவானால் சங்கரிக்கப்பட்ட காலநேமி முதலிய பல அசுரர்களும் இப்போது பூலோகத்தில் ராஜவம்சங்களில் பிறந்திருக்கின்றார்கள். அவர்கள் இரவும் பகலும் பிரஜைகளைத் துன்பப்படுத்திக் கொண்டு கொடுமை செய்து திரிகின்றார்கள். அவர்களை நான் எண்ணக் கூடிய சக்தி இல்லாமல் இருக்கின்றேன். பலபராக்கிரமங்களுடையவர் களாகவும் மிக்கச் செருக்குடையவர்களாகவும் இருக்கிற அந்த அசுரேந்திரர்களுடைய கூட்டமான சேனைகள் என்மேல் இருக்கின்றன. அதனால் நான் வெகுவான பாரத்தைச் சுமக்கும் வருத்தமுடையவளாக இருக்கிறேன். அவற்றோடு என்னைச் சுமக்கவும் சக்தியற்றவளாக இருக்கின்றேன். இந்தச் சங்கதியை உங்களுக்கு விண்ணப்பம் செய்தேன். ஆகையால் நீங்கள் என்மேல் அன்புகூர்ந்து நான் சோர்ந்து போய்ப் பாதாளம் சேராதபடி என் சுமையை இறக்கியருள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தாள். அப்போது சதுர்முகன் தேவர்களை நோக்கி, 'ஓ, தேவர்களே! பூமாதேவி சொன்னதெல்லாம் சத்தியம்தான். வாருங்கள். திருப்பாற் கடற்கரைக்குப் போவோம். அங்கே போய் ஸ்ரீலக்ஷ்மிபதிக்குத் தண்டன் சமர்ப்பித்து இவையெல்லாம் விண்ணப்பம் செய்வோம்.அப்படி நாம் செய்தால் ஸர்வ ஸ்வரூபியான எம்பெருமான் பூமாதேவியின் நிமித்தம் அவதாரம் செய்து தருமத்தை நிலைநாட்டியருளுவார்' என்று இப்படிச் சொல்லி, அவர்களைக் கூட்டிக் கொண்டு திருப்பாற்கடலுக்குச் சென்றார். அங்கே அவர் யோகநிஷ்டையிலுள்ள மனதோடு ஸ்ரீகருடதுவஜனைத்

தோத்திரம் செய்தார். ஸ்ரீலக்ஷ்மிபதி பிரமதேவர் செய்த ஸ்தோத்திரத்தைத் திருவுள்ளத்தில் ஏற்று சந்தோஷத்துடன் விசுவரூபம் காட்டி, 'ஓ, நான்முகனே! நீர் தேவர்களோடு கூட என்னிடம் எதை நினைத்துப் பெற வந்தீரோ, அதைச் சொல்லக் கடவீர். அது கையில் கிடைத்ததாகவே நினைப்பீர், என்று அருளிச் செய்தார். பிரமதேவர் அப்போது மீண்டும் துதித்துப் பூமாதேவியின் குறையை விஷ்ணுபகவானிடம் எடுத்துக் கூறினார். பிரமா விண்ணப்பித்ததனால் பூமாதேவியின் குறையை அறிந்தார் திருமால். அதனால், 'தானே பூமியில் வசுதேவருடைய மனைவியான தேவகியின் கர்ப்பத்தில் தோன்றித் துஷ்ட நிக்கிரகஞ் செய்து பாரத்தைப் போக்குவதாக' வாக்களித்து, அப்பூமாதேவியின் குறையைப் போக்கியருளினார். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவே தேவகியின் வயிற்றில் கண்ணனாய் அவதாரம் புரிந்திருக்கின்ற திருமால், இப்படி பலமுறை கேடுகள் புரியும் உன்னை அழிப்பது நிச்சயம். இதை எண்ணியே நான் இரவும் பகலும் மிகவும் மனம் நொந்து தூக்கம் இல்லாமல் வருந்திக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பாண்டவர்களுடன் ஒற்றுமைப்பட்டு வாழாமல் மனம் வேறுபட்டுப் பகைமை கொள்வது, உங்களுடைய அழிவுக்கு மட்டும் காரணமாகாது. உங்களுக்கு நண்பர்களாக உதவுகின்ற உலகத்தரசர்கள் பலருடைய அழிவுக்கும் காரணமாகிவிடும். இப்படி கொஞ்சமும் யோசித்துப் பார்க்காமல் தீச்செயல் செய்வது சிறிதும் நல்லதில்லை!'' என்று புத்திமதி சொன்னான்.

விதுரன் சொன்னது எதுவுமே துரியோதனனுடைய மனத்தை மாற்றவில்லை. அதற்குப் பதிலாக அவன் அவ்வார்த்தைகளைக் கேட்டு கைகொட்டிப் பரிகாசமாகச் சிரித்தான். மேலும், விதுரனுடைய மனம் கொதிக்கும்படிக் கேவலமாகப் பேசினான். பின்பு, அவன் தன்னருகே கைகட்டி வாய்ப் பொத்தி நின்றிருந்த பிராதிகாமியை நோக்கி, ''தேர்ச்சாரதி! நீ உடனே ஓடிப் போய் என் தாயின் வீட்டில் இருக்கின்ற திரௌபதியைக் கொண்டு வா!'' என்றான்.

துரியோதனனிட்ட கட்டளையைக் கேட்டு பிராதிகாமி மனம் வருந்தினான். ஆனால், தன் வருத்தத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து உடனே சென்றான். காந்தாரியின் அரண்மனைக்குப் போகும் வழியில்

கொஞ்சநேரம் தாமதித்து நின்றான். பிறகு, திரும்பவும் அவன் துரியோதனனிடம் வந்து வணங்கி, ''ராஜராஜ! 'மநுதர்ம சாஸ்திரப்படி நடக்கும் தருமராஜா முதலில் என்னைப் பந்தயமாக வைத்துச் சூதில் தோற்றாரா? இல்லை, முதலில் தம்மைத் தோற்றுவிட்டு, பிறகு தமக்கு ஏற்பட்ட மனவருத்தத்தால் என்னைப் பந்தயம் வைத்துத் தோற்றாரா? இவற்றில் எது முதலில் நடந்தது என்ற விஷயம் எனக்குத் தெரிய வேண்டும். ஏனெனில், என்மணாளர் தம்மைத் தோற்பதற்கு முன்பு பந்தயம் வைத்து இழந்த பொருள்களைத் துரியோதனராஜா உரிமையாக்கிக் கொள்வது முறையே. ஆனால், தம்மைத் தோற்ற பிறகு தம்முரிமையை இழந்த என் மணாளர் என்னைத் தோற்றிருந்தால், என்னை வைத்தாடுவதற்கு அவருக்கு உரிமையில்லை. அப்படிப் பந்தயமாக வைத்து ஆடிய ஆட்டமும் செல்லாது. அதனால் என்னைத் துரியோதனராஜா உரிமை கொண்டாடுவதற்கும் நியாயமில்லை!' என்று ராஜமாதா திரௌபதிதேவி கூறினார்'' என்றான்.

பிராதிகாமி அப்படிச் சொன்னதுதான் தாமதம். துரியோதனனுடைய கண்கள் கோபத்தால் ஜொலித்தன. அவன் துச்சாதனனை நோக்கிப் பெருங்குரலில், ''துச்சாதனா! ஓடு! திரௌபதியை உடனே இச்சபைக்கு இழுத்து வா!'' என்று கட்டளையிட்டான்.

துச்சாதனன் அக்கணமே மனத்தில் கறுவிக் கொண்டு தன் தாய் காந்தாரியின் அரண்மனைக்குப் போனான். திரௌபதியைப் பார்த்து அவன், ''தானாகவே சூதாடி எல்லாப் பொருள்களையும் தருமன் இழந்தான். பிறகு, தன்னையும் பந்தயம் வைத்துத் தோற்றுவிட்டுத் தம்பிகளையும்பந்தயமாக்கித் தோற்றான். கடைசியாக உன்னையும் பந்தயம் வைத்து முறைப்படியே தோற்றான். அதனால் உன் பர்த்தாக்களான பாண்டவர்கள் போலவே நீயும் எங்களுக்கு அடிமையானாய். ஆகவே, எங்களுக்கு அடிமைப்பட்ட நீ எங்களுடைய விருப்பப்படி உடனே ராஜசபைக்கு வா! இந்திரப்பிரஸ்தத்தில் தடாகம் போல் காணப்பட்ட தரை ஓவியத்தைக் கண்டு ஆடையைத் தூக்கிக் கொண்டு நடந்த என் தமையனரைப் பார்த்துச் சிரித்தாயே. அப்படிச் சிரித்த உன் வாய் உன் பதியினைப் பார்த்து அழுது புலம்பும்படி நாங்கள் அவனைப் பரிகசித்துச் சிரித்தால், நீ

மனம் பொறுக்கமாட்டாயே? அப்போது செய்த வினையின் விளைவை இப்போது நீ அனுபவித்தே தீர வேண்டும்! உலக வழக்கத்துக்கு மாறாக பஞ்ச பாண்டவர்களை ஒவ்வொருவராக ஆலிங்கனம் செய்து கொண்டு, பொய்யான அன்பை மெய்யன்புபோல் காட்டுபவளே! இப்படிச் செய்வதால் நீ கற்பிழந்தவளானாய். ஆகவே, உனக்கென்ன கூச்சம்? கூச்சமில்லாத நீ உடனே என் பின்னாலேயே அரசசபைக்கு வா!'' என்று கேவலமாகப் பேசினான். அத்துடனாவிட்டான் அந்தக் கொடியவன்! தரும பத்தினியான பாஞ்சாலியின் மலர்க்கரத்தையும் பலாத்காரமாகப் பிடித்திழுத்தான்.

துச்சாதனனுடைய கைப்பட்டதும் திரௌபதி மனம் நடுங்கினாள். உடல் கூசினாள். கொல்லன் ஊதுளைத் துருத்திபோல் தீயாய்ப் பெருமூச்சுவிட்டு, வேடன் வலையில் சிக்கிய மானாய் மருண்டோடி காந்தாரியின் பக்கத்தில் நின்றாள்.

எல்லாவற்றையும் உணர்ந்தபடி நின்று கொண்டிருந்த காந்தாரி, கொஞ்சமும் இரக்கமின்றி அப்போது திரௌபதியிடம், ''பாஞ்சாலி! உன்னைக் கூப்பிடுகின்றவர்கள் பகைவர்கள் இல்லை. நமது சொந்தக்காரர்கள்தான். இப்படி அவர்கள் அழைக்கும்போது போகாமல் இருப்பது சரியில்லை. நீ கொஞ்சமும் பயமில்லாமல் போய், இனி உனது எண்ணம் என்ன என்பதை அவர்களிடம் சொல்!'' என்றாள்.

தனக்கு அநுகூலமாகத் தாய் சொன்னதைக் கேட்டு துச்சாதனன் மகிழ்ச்சியும் இறுமாப்பும் கொண்டான். உடனே அவன் தன் தாயின் பக்கத்தில் நின்றிருந்த திரௌபதியிடம் சென்றான். அவளுடைய கூந்தலை முரட்டுத்தனமாகப் பிடித்திழுத்துக் கொண்டு முன்னே நடந்தான்!

துச்சாதனனுடைய கொடுமையால் திரௌபதி மானம் அழிந்ததே என்று மனம் கலங்கினாள். ஆனாலும் தான்போகும் ராஜசபையில் தனது கணவன்மார்கள் இருப்பதனால், அவர்கள் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணி கொஞ்சம் தைரியம் அடைந்தாள். அதனால் மௌனமாகத் துச்சாதனன் பின்னே நடந்தாள்.

அப்போது துச்சாதனன் கையில் சிக்குண்டு அலங்கோலமான திரௌபதியின் நீண்ட கூந்தல் தரையிலே மேகம் விழுந்து புரண்டது போல் துர்நிமித்தமாய்ப் புரண்டது. துச்சாதனன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் வலிமையோடு அவள் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாகச் சென்றான்.

தருமபத்தினியான திரௌபதியை அவமானப்படுத்தி துச்சாதனன் இழுத்துச் செல்வதைக் கண்டு நகரமக்கள் எல்லோரும் மனம் கலங்கினார்கள். கண்ணீர் வடித்தார்கள். அக்கொடிய காட்சியைப் பார்த்த கண்களைக் கைகளால் அறைந்து கொண்டார்கள். அவர்கள், ''ஐயோ, இது என்ன கொடுமை! பாஞ்சாலியின் கூந்தல் குலைந்தது. ஆம், அரவக் கொடியுடைய துரியோதனனுடைய வம்சம் அல்லவோ இப்போது குலைந்துவிட்டது! கொடியவன் துரியோதனனுடைய வெண்கொற்றக்குடை பூமியில் வசிப்பவர்களுக்கு நிழலைத் தருவதைவிட்டு, நெருப்பாய் அல்லவோ வாட்டுகிறது? தனது வில்லாற்றலைப் பல சமயங்களில் காட்டியுள்ள அர்ச்சுனனால் கோதி மலர் சூட்டப் பெற்ற திரௌபதியின் அழகிய கூந்தலில் இப்போது மண்புழுதி படிந்துவிட்டதே! காந்தாரி தனது குமாரர்களின் தீச்செயலைக் கேட்டறிந்தும், துச்சாதனனுடைய கொடிய செய்கையைத் தடுக்காமல், திரௌபதியை அவனோடு போவென்று அனுப்பி வைத்துவிட்டாளே. அவள் எத்தனைக் கொடியவள்! இப்படிப் பெருந்தீங்கைச் செய்ததனால், தன் சுற்றம் முழுவதையும் அவள் இப்போதே அழித்துவிடுவாள்! பாஞ்சாலியின் மாமனாராகிய திருதராஷ்டிரன் துரியோதனாதியர்கள் செய்த இந்தத் துராலோசனைக்கெல்லாம் உடன் பட்டானே. அவன் மனம் என்ன இரும்போ? பெண்ணோடு பிறந்த பல அரசர்கள் ராஜசபையிலிருந்தும் கௌரவர்களின் கொடிய செயலுக்குக் கொஞ்சமும் சினம் கொள்ளாமல் இருக்கின்றார்களே. பீமன் ஒருக்கால் பொறுமையாக இருந்தாலும், இந்தக் கொடிய செயலைக் கண்டு அர்ச்சுனன் கொஞ்சமும் பொறுக்க மாட்டானே. ராஜசபையிலிருந்த வேந்தர்கள் சூதாடுதல் நல்லதில்லை என்று தடுத்திருந்தால், இந்தக் கேடு ஏற்பட்டிருக்குமோ? இது என்ன விபரீதம்! நல்ல குடியில் பிறந்திருப்பவர்களுக்கு இனிமேல் இந்த அஸ்தினாபுரி வாழ்வதற்கு ஏற்ற இடமில்லை. துச்சாதனன் செய்கையை

நாம் சென்று தடுக்கலாம். ஆனால், அவன் நம்மைக் கோபிப்பானோ? எங்கள் தாயே! திரௌபதி! விரைவில் உன் துன்பம் நீங்கி இன்பம் அனுபவிப்பாய்! பாஞ்சால தேசத்து ராஜா துருபதனுடைய மகள் திரௌபதி நாங்கள் காணும்படி இத்துன்பங்களையெல்லாம் படலாமோ? தருமராஜா சூதால் தீமை விளையும் என்பதை அறிந்திருந்தும், அந்தப்பொய்ச் சூதை ஆடும்படி அவருக்குப் புத்திப் பேதலித்துவிட்டதே! தமது ஊழ்வினையால் எல்லாப் பொருள்களையும் பந்தயம் வைத்துச் சூதில் தோற்று அவமானப்பட்டாரே! இது என்ன வேதனை; அவலம்!'' என்று புலம்பிப் புரண்டார்கள்; முட்டி மோதிக் கொண்டு அழுதார்கள்.

மகாபதிவிரதையாகிய திரௌபதி தனக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்து மனம் குமைந்தபடி கண்களில் நீர்ப் பெருகவும், துச்சாதனனின் கையில் சிக்குண்டு தரையில் தனது கூந்தல் புரளவும் துரியோதனனுடைய ராஜசபையை அடைந்தாள்!

திரௌபதி கதறிக் கொண்டு ராஜசபைக்கு வந்தபோது, அவளைக் கண்ட மன்னர்கள் எல்லோரும் கண்ணீர்ப் பெருக்கினார்கள். அவளுடைய துன்பத்தைக் கண்டு சகிக்க முடியாமல் தலைகுனிந்து கொண்டார்கள். ஆனால், கண்ணில்லாத திருதராஷ்டிரனோ பேசாமல் சும்மா உட்கார்ந்திருந்தான்.

அப்போது மேகங்கள் துர்ச்சகுனமாக இரத்தமழைப் பொழிந்தன. அந்தப் பட்டப் பகலிலும் வானத்தில் கணக்கற்ற நட்சத்திரங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. பூமி நடுங்கியது. அந்த அபசகுனங்களைப் பார்த்தும் துரியோதனனும், துச்சாதனனும், கர்ணனும், சகுனியும் கொஞ்சம் கூட மனம் கலங்கவில்லை. அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பெரிதும் மனம் வருந்திச் சோர்ந்தார்கள்.

துச்சாதனனுடைய கொடிய செயலைக் கண்டதும் பீமன் தனது சத்துருகாதினி என்னும் கதாயுதத்தின்மேல் பார்வையைச் செலுத்தினான். அர்ச்சுனன் தனது காண்டீபத்தை நோக்கினான். நகுலனும் சகாதேவனும் நெஞ்சில் அடங்காத சினம்கொண்டார்கள். தருமர் தமது தம்பிமார்களின் எண்ணத்தை அறிந்தார். உடனே அவர் அவர்களைப் பார்த்து, ''தம்பிகளே! பல பூக்கள் வாடிக்

கிடக்கும்போது சில சமயங்களில் சில பூக்கள் மலர்ந்திருக்கும். அதுபோல நாமெல்லோரும் வருந்தும் இந்தச் சமயத்தில் துரியோதனாதியர்கள் மகிழ்கிறார்கள். ஆனால், நல்லநேரம் வரும்போது நாம் இழந்தபொருள்கள் தானே நமக்கு வந்து சேரும். கொடிய காடு தீப்பற்றி எரிகையில், அக்காட்டில் வசிக்கின்ற பிராணிகளும் அத்தோடு அழிந்துவிடும். அதுபோல் வருகின்ற காலத்தில் எல்லாம் வருவதும், போகின்ற காலத்தில் எல்லாம் போவதும் வினைப்பயனே. துரியோதனாதியர்களுக்கு இப்போது நல்ல நேரம். அதனால் அவர்களுக்கு எல்லாம் கைகூடுகிறது. அழிகின்ற காலம் விரைவிலேயே வரும். அப்போது எல்லாம் அவர்களுக்குக் கைகூடாமல் போய்விடும். ஆகையால், தம்பிகளே! முன்பு பல சமயங்களில் பொறுத்திருந்ததுபோல், நமக்கு நல்ல காலம் வரும் வரையில் கொஞ்ச காலத்துக்குப் பொறுத்திருங்கள்!'' என்று கூறிச் சாந்தப்படுத்தினார்.

பாஞ்சாலி தனக்கு நேர்ந்த துயரத்தைத் தாங்க மாட்டாமல் தரையில் விழுந்து புரண்டாள். அவளுடைய கண்கள் மடைதிறந்த வெள்ளம்போல் கண்ணீர்ச் சிந்தின. தரையிலே கதறியபடி புரண்ட திரௌபதியின் உடம்பு அவமானத்தால் மேலும் கொதிக்கும்படி துச்சாதனன் அவளைப் பார்த்தான். பிறகு, ''மின்னிடையாளே! பல தேசத்து ராஜாக்களும் கூடியுள்ள இந்த ராஜசபையில் உனது மாமனாராகிய திருதராஷ்டிரமகாராஜா இருக்கின்றார். மற்றும் உன்னை மணந்த பஞ்ச பாண்டவர்களும் உன்னெதிரே இருக்கின்றார்கள். உன்னைச் சேர்ந்த இவர்கள் எல்லோரும் அருகே இருக்கும்போது, கண்ணீர்விட்டு அழும்படி உனக்கு இப்போது என்ன கதி நேர்ந்துவிட்டது? ஒன்றும் இல்லையே! பல ஆண்களுக்குப் பொதுவாயிருக்கும் வேசியான உனக்கு, நினைத்தபோது கண்ணீர்வடித்தல் சுலபமானதுதான்!'' என்று கொடூரமாகச் சொல்லி ஏளனமாகச் சிரித்தான்.

அற்பனான துச்சாதனன் பத்தினியான தன்னை அப்படிச் சொன்னதைக் கேட்டும் ராஜசபையில் இருந்தவர்கள் பேசாமல் இருப்பதைக் கண்டாள் திரௌபதி. அவள் நெஞ்சமும் உடம்பும் அவமானத்தாலும் சினத்தாலும் பற்றி எரிந்தன. அவள் சபையிலிருந்த பீஷ்மரையும் திருதராஷ்டிரனையும் பார்த்து கைகூப்பி நமஸ்கரித்து,

கண்களில் நீர்ப்பெருக, ''மாமா! கங்கைமைந்தா! தரும சாஸ்திரத்தில் வல்லவர்களாகிய உங்களுக்கு இது முறையோ? அபலையின் கண்ணீரைக் கண்டும் இப்படி மௌனம் சாதிப்பது பெருமையோ? இல்லை, இதுதான் பூமியில் உங்களுக்கு இயற்கைக் குணமோ?'' என்றாள்.

பீஷ்மர் திரௌபதியின் முறையீட்டைக் கேட்டு மனம் கலங்கினார். பாஞ்சாலியின் நிலைக்கு மனமிரங்கி துச்சாதனனை நோக்கி , ''துச்சாதனா! அருந்ததி போன்ற பதிவிரதையாகிய திரௌபதியை வேசிமகள் என்று இழித்துப் பேசுவது நீதிக்குத் தகாது!'' என்றார்.

பிறகு அவர் பாஞ்சாலியிடம், ''குழந்தாய்! நீ முன்பு சொன்னதையெல்லாம், இப்போது திருதராஷ்டிரன் முன் சொல்!'' என்று பணித்தார்.

முன்பு பிராதிகாமி தான் சொன்னதாகக் கூறியது சரியாகும்படி, திரௌபதியும் உடனே சபையோரை நோக்கி, ''பெரியோர்களே! தருமராஜா தம்மைத் தோற்ற பிறகு என்னைத் தோற்றாரா? என்னைத் தோற்ற பின்பு தம்மைத் தோற்றாரா? இவ்விஷயத்தைப் பற்றிய உண்மையை நீங்கள் சொல்லுங்கள். என் கணவர் தம்மைத் தோற்பதற்கு முன்பே என்னைத் தோற்றிருந்தால், துரியோதனனுக்கு என்னை அடிமையாக்கிக் கொள்வதில் எனக்கு ஆட்சேபமில்லை. தருமராஜா தம்மைத் தோற்ற பிறகு ஐவருக்கும் பத்தினியான என்னைத் தோற்றிருந்தால், முன்பே அடிமையாகிவிட்ட அவருக்கு என்னைப் பந்தயம் வைத்துத் தோற்பதற்கு உரிமையில்லை. அப்போது என்னை அடிமையாக்கச் சிறிதும் முறையில்லை!'' என்றாள்.

அவள் கூறியதற்குப் பதில் சொல்லத்தான் சபையோர்கள் நினைத்தார்கள். ஆனால், துரியோதனனிடம் கொண்டிருந்த பயம் அவர்களை மௌனமாக்கிவிட்டது! அவர்கள் எழுதி வைத்த சித்திரம் போல் கொஞ்சம் கூட இப்படி அப்படி அசையாமல் உட்கார்ந்து கிடந்தார்கள். ஐயோ, அந்தக் கொடுமையைப் பற்றி எடுத்துச் சொன்னாலும், அப்போது நமக்குப் பெரும்பாவம் உண்டாகும்!

அந்த ராஜசபையில் சத்தியம் பேசும் தெய்வமாக ஒருவனும் இருந்தான். ஆம், துரியோதனனுடைய

தம்பியாகிய விகர்ணன் திரௌபதியின் நிலைக்குப் பொறுக்க முடியாமல் சபையோரைப் பார்த்து, ''அரசர்களே! நீங்கள் எல்லோரும் நரகத்துக்குப் போகாமல் இருப்பதற்காக நீதியே கூறுங்கள்! பதிவிரதாதருமமிக்க பாஞ்சாலி நியாயம் கேட்டும், நீங்கள் பேசாமல் இருக்கின்றீர்கள். இதற்குக் காரணம் என்ன? ராஜசபையிலே நடந்த சூதாட்டப் போர் உங்களுக்கு நினைவில்லையோ? இல்லை, துரியோதனன் உங்களைக் கோபிப்பானே என்ற அச்சமோ? நியாயமிருந்தால் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்வது குற்றமாகுமோ? நல்ல குலத்தில் பிறந்தவர்கள், தாம் பிரதியக்ஷயமாகக் கண்டதை எப்போதும் சொல்லாமல் மறைப்பார்களோ? தருமபுத்திரன் முதலில் தனது பொருளையும், பின் தன்னையும் தம்பிமார்களையும் தோற்ற பிறகே பாஞ்சாலியைப் பந்தயம் வைத்துத் தோற்றான் என்ற நியாயத்தை நீங்கள் எடுத்துச் சொல்ல மாட்டீர்களோ?'' என்று கேட்டான். அவன் கூறிய நீதியைக் கேட்டு அரசர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். விகர்ணனுக்கு எல்லோரும் 'யோக்கியன்' என்று பட்டமும் சூட்டினார்கள்.

அப்போது கர்ணன் அவனை நோக்கிக் கோபத்துடன், ''விகர்ணா! இந்த ராஜசபையில் இருக்கின்ற அரசர்கள் எல்லோரையும் விட நீ மிகவும் நல்லறிவு படைத்தவனோ? இவர்களைக் காட்டிலும் ராஜதர்மத்தில் பெருமை பெற்றவனோ? உன்னை விட்டால் இந்த நீதியை எடுத்துப் பேசுகின்றவர்கள் வேறு ஒருவரும் இல்லை என்று நினைத்துப் பேசுகின்றாயோ? உன்னிடம் நியாயம் கேட்க வந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களோ? ஒன்று கூறத் தொடங்கும்போது பலரோடும் ஆலோசித்த பிறகு அல்லவோ பேச வேண்டும்?'' என்றான்.

மீண்டும் விகர்ணனைப் பார்த்து, ''தருமபுத்திரன் தன்னைத் தோற்ற பின்பு திரௌபதியைப் பந்தயம் வைப்பதற்கு உரிமையில்லாதவன் என்பது எல்லோருக்கும் அங்கீகாரமானது என்றாலும் ஆகட்டும். தருமன் எப்போது எல்லாப் பொருள்களையும் பந்தயம் வைத்துத் தோற்றேன் என்றானோ, அப்போதே அவனுடைய சொத்தாகிய திரௌபதியும் அப்பந்தயப் பொருளில் அடங்குவாள். மேலும், எனது நகரத்தையும் இல்லையும் பந்தயம் வைத்தேன் என்று கூறியபோதும், நகரம் என்ற போது

அதற்கு உட்பட்ட இல்லும் அடக்கம்தான்! ஆகையால், அவன் கூறிய 'இல்' என்பது அவனுடைய மனைவியாகிய திரௌபதியையே குறிக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லையே. 'இல்' என்பது மனைவியைக் குறிக்கும் என்று நானாகக் கூறவில்லை. இச்சொல் இப்பொருளில் வருவது எல்லோருக்குமே தெரியும். ஆகவே, இத்திரௌபதி சூதாட்டத்தில் தோற்கப்படாதவள் என்று நீ சொன்னது, சிறிதும் பொருத்தம் உடையது இல்லை!'' என்றான் கர்ணன்.

பிறகு அவன் சபையோரை நோக்கி, ''சபையோர்களே! இந்த விகர்ணன் சாஸ்திரமேதை. சூட்சமபுத்தியுள்ளவன். பொறுமையுடையவன். ஆகவே, அரசர்கள் எல்லோரும் இவனுக்கு 'யோக்கியன்' என்று பட்டம் கொடுத்து விட்டீர்கள். ஆஹா, என்ன ஆச்சர்யம்! இவையெல்லாம் இவனுக்கே தகும்! இப்படியெல்லாம் செய்து உங்களைப் போல் பெருமை பெற்ற அரசர்கள் வேறு யார் இருக்கின்றார்கள்? நீங்கள் நான் கூறிய வார்த்தைக்கு மாறாக நீதி வார்த்தை இருக்குமானால் எடுத்துக் கூறுங்கள்!'' என்று கேலி பேசினான்.

அச்சமயம் துரியோதனன் துச்சாதனனிடம், ''தம்பி, துச்சாதனா! உன் தம்பி விகர்ணனை யோக்கியன் என்று கூறிய இந்த ராஜசபையின் முன்பாகவே, மானங்கெட்ட இந்தப் பஞ்சபாண்டவர்களின் ஆடையைப் பறித்துப் பங்கம்செய். அது மட்டும் போதாது. இந்தத் திரௌபதியின் துகிலையும் உரிந்துவிடு!'' என்று மிக்கச் சினத்தோடு கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய கொடிய கட்டளையைக் கேட்டதும் அரசர்கள் எல்லோரும் வருந்தினார்கள். பீமனும் அர்ச்சுனனும் கோபத்தால் தீப்பொறி பறக்கத் தங்களின் ஆயுதத்தையும், தருமருடைய முகத்தையும் நோக்கினார்கள். தம்பிமார்களின் ஆத்திரத்தைக் கண்ட தருமர், அவர்களுடைய கோபத்தைக் கண்ஜாடையால் தணித்தார்.

பாண்டவர்களுடைய ஆடைகளைப் பறிக்க துச்சாதனன் அவர்கள் முன்வந்தான். அவனாகப் பறிக்குமுன்பே அவர்கள் தங்கள் உத்தரீயங்களைக் களைந்து அவனிடம் கொடுத்தார்கள். உடனே துச்சாதனன் கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் திரௌபதியின் துகிலைக்

களைவதற்கு அவளை நெருங்கினான். தன்னை மானபங்கம் செய்ய துச்சாதனன் நெருங்குவதைப் பார்த்ததும் பத்தினித்தாயான பாஞ்சாலி கைகுவித்து அஞ்சலித்து, தன் மனத்தில் கண்ணபிரானை நினைத்துத் தியானித்தாள்.

துச்சாதனன் அப்போதும் மனம்மாறவில்லை. அவன் அவள் துகிலைப் பிடித்திழுத்தான். திரௌபதி துகிலைக் கெட்டியாகப் பிடித்தாள். ஆனால், அவளால் வலிய துச்சாதனனுடைய பிடியிலிருந்து தனது துகிலை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவள் கைதளர்ந்தது; மெய்ச் சோர்ந்தது; கூந்தல் குழைந்தது. கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. அவள், ''கோவிந்தா!..... கோவிந்தா! ...'' என்று கதறினாள். அப்போது அவள் நாவில் அமிர்தரஸம் சுரந்தது! அவள் கிருஷ்ணபகவானின் நினைவால் உடல் சிலிர்த்து மனம் கரைந்து உருகினாள்.

ஸ்ரீகண்ணபிரானின் திருச்செவியில் பதிவிரதையான திரௌபதியின் அபயக்குரல் விழுந்தது. அக்கணமே அவன் வேறு யாருக்கும் தெரியாதபடி அவள் மனத்தில் காட்சி தந்தருளினான். பாஞ்சாலியின் மானம் காக்க, அவளுடைய துகிலும் வளரும்படி அநுக்கிரகித்தான்.

முட்டாளான துச்சாதனன் திரௌபதியின் துகிலைக் களையத் தொடங்கினான். அவன் பிடித்திழுக்க இழுக்க துகில் வளர்ந்து கொண்டேயிருந்தது. அவன் அத்துகிலை இழுத்துக் கொண்டேயிருந்தான். துகில் பூர்ணமாக திரௌபதியின் மேனியை மறைத்துக் கொண்டிருந்ததே தவிர, அவளுடம்பை அது கொஞ்சமும் வெளிக்காட்டவில்லை. துச்சாதனன் மேலும் துகிலைக் களைந்தான். துகில் பாஞ்சாலியின் மேனியிலிருந்து வற்றவில்லை!

அப்படி துச்சாதனன் திரௌபதியின் உடம்பிலிருந்து களைந்து குவித்த பட்டாடைகள் அந்தச் சபாமண்டபம் முழுதும் நிறைந்தது. போகப் போக அவ்விடமும் பட்டாடைகளை நிறைத்து வைக்கப் பற்றவில்லை. அதனால் கோடிக்கணக்கான வீரர்கள் அந்தப் பட்டாடைகளை உடனுக்குடனே வெளியே கொண்டு போய்க் குவித்தார்கள்.

கடைசியாக துச்சாதனன் கைகள் வலிக்கக் களைப்படைந்தான்!

பீஷ்மரும் மற்ற அரசர்களும் திரௌபதியின் கற்பைக் கண்டு உடம்பு நடுங்கி, கண்ணீர்ப் பெருக, கைகூப்பி அவளை வணங்கி, ''இத்திரௌபதியே கற்புக்கும் குலத்துக்கும் தெய்வமாவாள்!'' என்று கூறிப் போற்றினார்கள். அப்போது துந்துபியும் வலம்புரிச்சங்குகளும் முழங்கின. தேவர்கள் சந்தோஷத்தோடு கற்பகமலர்களைத் திரௌபதியின் மேல் தூவி, அவளிடம் அன்பும் அருளும் கொண்டார்கள்!

திரௌபதி துச்சாதனனுடைய கொடுமையால் அவமானப்பட்டதை எண்ணியெண்ணி மனம் வருந்தியதால், அவள் மிகவும் களைப்புற்றாள். அவளால் நிற்க முடியவில்லை. தரையிலே சோர்ந்து விழுந்தாள். அவளுடைய நிலையைக் கண்ட பீமனால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை. அவன் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. துரியோதனாதியர்களோடு போர்செய்ய நினைத்துக் கோபத்துடன் கதாயுதத்தைத் தூக்கிப் பிடித்தான். துரியோதனனைப் பார்த்தான். ''அடே, துரியோதனா! கோபம் கூடாது என்று எங்கள் தமையனார் பலமுறை சொல்லி எங்களைத் தடுத்துவிட்டார். அதனால் நாங்களும் இராச்சூரியன் போல் வலிமையை அடக்கிக் கொண்டு, உங்களுடன் போர் செய்து உங்களை அழிக்காமல் சும்மா இருந்தோம். அதைவிட்டு உங்களைப் பெரும்வீரர்கள் என்று எண்ணிப் பயந்து உங்களோடு போர்செய்யாமல் இருந்தோமோ? ஆனால், இனி அப்படியில்லை. இக்கணமே நீங்கள் நூறு பேரும் எனது எதிரில் வந்து போர் செய்யுங்கள்!'' என்று கர்ஜித்தான்.

துரியோதனன் பீமனுடைய பேச்சால் உள்ளம் கொதித்தான். உடனே கொடிய எண்ணத்தோடு துச்சாதனனிடம், ''துச்சாதனா! திரௌபதியை இழுத்துக் கொண்டு வந்து என் தொடைமேல் உட்கார வை!'' என்று துரியோதனன் கட்டளையிட்டான்.

திரௌபதி அவ்வார்த்தைகளைக் கேட்டதும் பேரிடி கேட்ட கொடிய சர்ப்பம் போல் மனம் பதைபதைத்தாள். ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தியானித்து, ''பகவானே! ரட்க்ஷகா! என்னைத் தன் தொடைமேல் உட்கார வைத்துப் பார்க்க நினைத்த இக்கொடியவன், தனது தொடை வழியாகவே பறவைகள் உண்ணும்படி ரத்தமும் நிணமும் கொட்ட

சாவானாக!'' என்று கேட்டவர்கள் எல்லோரும் அஞ்சும்படி அவள் துரியோதனனைச் சபித்தாள்.

மேலும் அவள், ''இக்கொடிய துரியோதனன் இச்சபையிலே எல்லா அரசர்களின் முன்பாகவும் துச்சாதனனைக் கொண்டு என் கூந்தலைப் பிடித்திழுக்கச் செய்து அலங்கோலப்படுத்தினான். எனது துகிலைத் தொட்டு அவிழ்க்கச் செய்தான். இந்த அக்கிரமத்தோடு நிற்காமல் இப்போது என்னைத் தன் தொடைமீது உட்கார்த்திப் பார்க்க நினைத்தான். இப்படியெல்லாம் துரியோதனனும் இவன் தம்பிமார்களும் செய்த அக்கிரமத்துக்குப் பரிகாரமாகக் கொடிய போரில் இவர்களின் தலைகள் வெட்டுண்டு தரையில் இரத்தம் பெருக உருள வேண்டும். ஜயபேரிகை முழங்குகின்ற அப்போதுதான், இப்போது அலங்கோலமாகி விட்ட எனது கூந்தலை அள்ளி முடிப்பேன். அதுவரையில் ஒருபோதும் எனது அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடிக்க மாட்டேன். இது சத்தியம்!'' என்று சபதம் செய்தாள்.

பாஞ்சாலியின் சபதம் கேட்டுச் சபையோர்கள் நடுநடுங்கிப் போனார்கள். அப்போது பீமன் அவர்களைப் பார்த்து, ''அரசர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். பதிவிரதையான திரௌபதியை இப்படியெல்லாம் பங்கப் படுத்திய துரியோதனனோடு அவனுடைய தம்பிமார்களையும் தங்கள் வம்சம் அடியோடு அழியும்படிப் போர் செய்து நானொருவனாகவே கொன்று தீர்ப்பேன். திரௌபதியின் கூந்தலையும் துகிலையும் தொட்டிழுத்து மானபங்கம் செய்த துச்சாதனனுடைய உடம்பைப் பிளந்து வழியும் இரத்தத்தைக் குடிப்பேன். அது வரையில் நான் கைகளால் அள்ளி தண்ணீர் குடிக்க மாட்டேன். இக்கதாயுதத்தால் தண்ணீரை மோதித் தெறித்து மேலிருந்து விழுகின்ற நீரையே பருகுவேன். அப்படியே நீர்குடித்து எனது உயிரைக் காத்துக் கொண்டு வருவேன்!'' என்று சபதம் பேசினான்.

அர்ச்சுனன், ''கர்ணனை நான் போரில் கொல்வேன்!'' என்றான்.

நகுலன், ''வஞ்சகன் சகுனியின் மகனாகிய உலூகனுடைய உயிரை நாசம் செய்வேன்!'' என்றான்.

சகாதேவன், ''சகுனியை நான் சாகடிப்பேன்!'' என்றான்.

தருமருடைய தம்பிமார்கள் செய்த சபத வார்த்தை களைக் கேட்ட சபையோர்கள், ''துரியோதனாதியர்கள் பாண்டவர்களுக்குச் செய்த கொடுமை மிகப் பெரியது. ஆகையால், அவர்கள் செய்த சபதம் சரியே!'' என்று கூறி ஏங்கினார்கள்.

அப்போது திரௌபதி துயரம் தாங்காது புலம்ப, வானத்தில் மேகங்கள் இல்லாமலேயே இடிமுழக்கங்கள் தோன்றின. சூரியனைச் சுற்றி மண்டலம் தோன்றியது. பூகம்பம் ஏற்பட்டது. அந்தப் பகலில் நட்சத்திரங்கள் விழுந்தன. காரணம் இல்லாமலேயே பொய்கை நீர் வற்றியது. யாகசாலையில் இரத்த ஆறுகள் ஓடின. அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அரசர்களின் உடம்பு ஒளிகுறைந்தது!

திருதராஷ்டிரன் எல்லாவற்றையும் அறிந்தான். அதனால் தன் வம்சத்துக்கு உண்டாகப்போகும் கெடுதலை எண்ணிஅஞ்சினான். அவன் திரௌபதியின் பூப்பாதங்களை வணங்கி, ''அம்மா! என் பிள்ளைகள் உனக்குச் செய்த குற்றங்களையெல்லாம் மன்னிக்க வேண்டும்!'' என்று வேண்டினான்.

மீண்டும் அவன் அவளிடம், ''எனது புதல்வர்களான துரியோதனாதியர்கள் மைத்துனர் என்கின்ற உறவு முறையைக் கொண்டு தாம் செய்வது என்ன என்று தெரியாமல் முறைகேடான இத்தீச் செயல்களை உனக்குச் செய்து விட்டார்கள். அறிவில்லாமல் அவர்கள் எவ்வளவு பெரிய அபராதங்களை உனக்குச் செய்திருந்தாலும், அவை எதையும் மனத்தில் வைத்துக் கொள்ளாதே. அவர்களுடைய சொல்லும் செயலும் பைத்தியக்காரர்களுடையது என்று நினைத்து, அவர்களைத் தண்டிக்காமல் இப்போதே எல்லாவற்றையும் நீ மறந்து விடு!'' என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் பிதற்றினான்.

பாஞ்சாலியின் மனவருத்தத்தைத் தணித்த திருதராஷ்டிரன், பிறகு பாண்டவர்களுடைய கோபத்தைத் தனித்தனியே பல நல்ல வார்த்தைகளைச் சொல்லித் தணிய வைத்தான். அதன் பின்பு அவன் அவர்களின் முகம் நோக்கி, ''குமாரர்களே! நீங்கள் சூதில் தோற்ற இராஜ்ஜியத்தையும், தேர்களையும், யானைகளையும், குதிரைகளையும், செல்வத்தையும்,

மற்றுமுள்ள எல்லாவற்றையும் திரும்பவும் என்னுடைய அநுமதியின்படியே பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்றான்.

திரும்பவும் திருதராஷ்டிரன் பாண்டவர்களிடம், ''ராஜசபையில் இருக்கின்ற அருந்ததி போன்ற கற்பரசியான இத்திரௌபதியை உடனே கூடவே அழைத்துக் கொண்டு உங்களுடைய இந்திரப்பிரஸ்தத்துக்குப் போய்விடுங்கள்!'' என்று சொல்லி, அவர்களை அருகே அழைத்துக் கட்டியணைத்துக் கொண்டான்.

அப்போது மேலும் அவன் அவர்களிடம் சொன்னான். ''என் தம்பி பாண்டு எனக்குக் கண்போல் இருந்தான். நான் வேறு அவன் வேறு என்று எப்போதுமே தனியாகப் பிரித்து நினைத்ததில்லையே. நான் உங்களையும் அது போல் எனது புத்திரர்களாகவே எண்ணியிருக்கின்றேன். ஆயினும் நீங்கள் சூதாடும் போது விளையாட்டாக ஆடுகின்றீர்கள் என்றே நினைத்திருந்தேன். அச்சூதாட்டம் இப்படிப் பெருந்தீங்காய் முடியும் என்று எனக்கு ஒருவரும் அறிவிக்கவில்லை. நானும் இப்படியாகும் என்று முன்பே அறிந்து கொண்டிருக்கவில்லை. போனது போகட்டும். நான் கூறியபடி உங்கள் மனைவியோடு ஊர் போய்ச் சேருங்கள்! கௌரவர்களை எனது புதல்வர்கள் என்றும், உங்களைப் பாண்டுவின் புதல்வர்கள் என்றும் எப்போதுமே நான் வேற்றுமையாக நினைத்ததில்லை. உங்களையே எனது புதல்வர்களாகவும், துரியோதனாதியர்களையே பாண்டுவின் புதல்வர்களாகவும் எண்ணியே நான் இதுவரையில் உங்களை வளர்த்து வந்தேன். இந்த ஜம்புத்வீபத்தில் தோன்றிய அரச குமாரர்களில் உங்களைப்போல இத்தனைக் காலம் ஒற்றுமையோடு வளர்ந்தவர்கள் யாருமே இல்லை. எனது குமாரர்களான நீங்கள் உங்களுடைய இந்திரப்பிரஸ்த நகரத்துக்குச் செல்லுங்கள்!'' என்றான்.

பிறகு, தான் சொன்னபடியே தருமர் சூதாடித் தோற்ற எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, இந்திரப்பிரஸ்தம் போக விடையும் தந்தான் திருதராஷ்டிரன்.

அச்சமயம் சகுனி திருதராஷ்டிரனை நோக்கி வஞ்சகம் பேசத் தொடங்கி, ''வலிய புலிகளை வால் தடவி விடுகின்றீர்களே! இனி அப்புலிகள் உங்கள்மீது வஞ்சம் கொண்டு உங்களைக் கொல்லாமல் சும்மா விடுமோ? ஒருவர் செய்வது எந்தக் காரியமாய் இருந்தாலும், செய்வதற்கு

முன்பு எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் காரியம் தன் மனத்துக்கு ஒத்ததாக இருந்தால் அதனைத் துணிந்து செய்ய வேண்டும். அப்படியெல்லாம் செய்யாமல் அந்தக் காரியத்தின் மீதுள்ள ஆசையால் அவசரப்பட்டுத் துணிந்து செய்தால், பிறகு அதைப் பற்றிச் சிந்தித்து வருத்தப்படுவதில் பயனில்லை. இப்படியெல்லாம் சான்றோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தச் சான்றோர் வாக்குக்கு ஒத்ததாக உங்களுடைய அறிவு இல்லையே! நீங்கள் பாண்டவர்களுக்குப் பெருந்துன்பம் உண்டாகும்படி அவர்களை ஜெயித்திருந்தும், மீண்டும் மனமிரங்கித் தவறான காரியத்தைச் செய்துவிட்டீர்களே! தீயினால் சுட்டப்புண் ஆறிவிடும். ஆனால், அத்தீயைவிட கொடிய வாயினால் சுடுவது போன்ற கொடுஞ் சொற்கள் மறைந்து விடுமோ? ஒருபொழுதும் மறையாத வடுவாக அல்லவோ அவை இருக்கும்? நீங்கள் செய்த தவறுகளையெல்லாம் மறப்பதற்குப் பாண்டவர்கள் பேய்ப்பிடித்துத் தம் வசமிழந்திருப்பார்களோ? நீங்கள் செய்த பிழைகளைப் பெருமை பெற்ற பாண்டவர்கள் மறந்துவிடுவார்களோ? ஒருபோதும் மறக்காமல் உங்களைப் பழி வாங்கியே தீருவார்கள்!'' என்றான்.

சகுனியின் வார்த்தைகளைக் கேட்டதும் துரியோதனன் திடுக்கிட்டான். அவன் துச்சாதனனுடைய முகத்தையும் கர்ணனுடைய முகத்தையும் தனித்தனியே நோக்கி மனக் குறிப்பால் ஆலோசித்தான். பிறகு துச்சாதனனைப் பார்த்து அவன், ''தம்பி! சூதில் தோற்றவற்றைக் காரணம் இல்லாமல் பெற்றுச் செல்வது தகுதியில்லை என்று நீ தருமனுக்குச் சொல்!'' என்று கட்டளையிட்டான்.

உடனே துச்சாதனன் தருமரிடம், ''நீ பொய்ப் பேசுவதையே விரதமாகக் கொண்டிருந்தால் தோற்றிழந்த ராஜ்ஜியத்தைப் பறித்துக் கொண்டு போகலாம். சத்திய விரதனாய் இருப்பதால், பலரும் கூடிய சபையில் முறைப்படி சூதாடித் தோற்ற ராஜ்ஜியத்தைத் திரும்பப் பெறுவதற்குத் தகுதியில்லையே! மற்றும் ராஜ்ஜியத்தைச் சூதாடி ஜெயித்தவர்கள் நாங்களே ஆதலால், இந்த ராஜ்ஜியத்தை நாங்கள் உடன்பட்டுக் கொடுத்தால் மாத்திரமே உங்களுடையதாகும். அதைவிட்டு எங்கள் தந்தை கொடுக்க நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை. ராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்குள்ள

பேராசையால் அதனைப் பெற்றுக் கொள்வோம் என்று நீங்கள் சொன்னாலும், நாங்கள் கொடுக்க மாட்டோம். இப்போது வேண்டுமானால், எங்கள் தந்தைக்காக உங்களை அடிமைத்தனத்திலிருந்து மட்டும் நீக்கிச் சுதந்திரம் பெற்றவர்களாகச் செய்கின்றோம்! நீங்கள் அடிமைகளாய் இருந்தால் இங்கேயிருந்து எங்களுக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும். எங்கள் தந்தையின் அருளால் அந்த அடிமைத்தனத்திலிருந்து நீங்கிவிட்டபடியால், இனி நீங்கள் உங்கள் ராஜ்ஜியத்தில் வசிக்கக் கூடாது. காட்டுக்குப் போய் வசியுங்கள். எங்களுடைய இந்த ராஜ்ஜியத்தில் நீங்கள் இருக்கவும் கூடாது!'' என்று தெரிவித்தான்.

துச்சாதனன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன், மேற்கொண்டு என்ன செய்வது என்று பீஷ்மரையும், விதுரனையும், அமைச்சர்களையும் கலந்தாலோசித்தான்.

அப்போது துரோணாசாரியார், ''ராஜராஜ! எங்களுடைய பேச்சுக்களை சகுனி முதலியோர் மதிக்க மாட்டார்கள். அத்தோடு நாங்கள் ஏதாவது சொன்னாலும் இகழ்வார்கள். ஆகவே, நாங்கள் இப்போது எதுவும் சொல்வதில் பிரயோஜனமில்லை. ஆகையால், அவர்களுடைய நன்மையைக் கருதும் நீங்களே தரும சாஸ்திரங்களுக்கு மாறுபடாமல் கூறினால், அவர்கள் மறுத்துப் பேசாமல் அப்படியே செய்வார்கள். ஆதலால் இப்போது நீங்களே சிந்தித்துப் பார்த்துச் செய்ய வேண்டியதைச் சொல்லுங்கள்!'' என்று திருதராஷ்டிரனிடம் கூறினார்.

துரோணாசாரியார் சொன்னதை அமைச்சர்களும், விதுரனும், பீஷ்மரும் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். திருதராஷ்டிரன் வில்லாசிரியன் கூறியபடியே தனக்குள்ளாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். அம்முடிவை சபையோர்கள் மனம் சருகுபோல் வாடவும், தன்மனம் கிளர்ச்சியடையவும் சொல்லத் தொடங்கி, அவன் தருமரை நோக்கி, ''தருமபுத்திரா! நீயே ஞானமுடையவன். ஆகையால், பெரியோர் சொற்படி நடப்பாய். எனது குமாரர்களோ மடையர்கள். ஆதலால் என் வார்த்தைப்படி திரும்ப உங்களுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுக்க அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆகவே, உனது கௌரவத்திற்குத் தக்கபடி ஒன்று சொல்கிறேன், கேள்! நீ சிறிது காலம் காட்டில் வசித்துத் திரும்பி வந்து உனக்கு உரியதைப் பெற்றுக் கொள்!'' என்றான்.

திருதராஷ்டிரன் கூறியதை மேலும் தருமருக்குத் தெளிவாகச் சொல்ல நினைத்தார் துரோணாசாரியார். எனவே அவர் தருமரைப் பார்த்து, ''தருமா! ஸ்ரீராமபிரான் போல் உங்கள் ராஜ்ஜியத்தைவிட்டுக் காட்டில் கொஞ்ச காலம் கழித்த பின்பு, திரும்பி வருவதே நீங்கள் இப்போது செய்ய வேண்டிய காரியமாகும். நீங்கள் ஐந்து பேரும் பாஞ்சாலியுடன் காட்டுக்குச் சென்று பன்னிரண்டு வருஷங்கள் வனவாசமும், ஒரு வருஷம் நாட்டில் அஞ்ஞாதவாசமும் செய்யுங்கள். அவ்வாறு பதின்மூன்று வருஷங்கள் கழித்தபிறகு திரும்பி வந்து உங்களுடைய ராஜ்ஜியத்தையும் செல்வத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்றார்.

மீண்டும் அவர் தருமரிடம், ''அஞ்ஞாத வாச காலத்தில் நீங்கள் பிறரால் கண்டுபிடிக்கப்பட்டால், மறுபடியும் இந்தப் பிரகாரமே காட்டுக்குப் போக வேண்டும்!'' என்று சொன்னார்.

துரோணாசாரியார் கூறியதைக் கேட்டுப் பீஷ்மர், திருதராஷ்டிரனுடைய முடிவு சரியானதுதான் என்று ஒப்புக் கொண்டார். ''அப்படியே செய்யுங்கள்!'' என்று அவர் பாண்டவர்களுக்கும் தெரிவித்தார்.

அப்போது திரௌபதி தருமர் முகம் பார்த்து, ''சுவாமி! நீங்கள் ஐவரும், எனது ஐந்து பிள்ளைகளும், நானும் அடிமை நீங்கிச் சுதந்திரமாகும்படி மீண்டும் தாங்கள் கொடிய சூதுபோர் செய்வது, இப்போது நன்மை தருவதாகும்!'' என்று விண்ணப்பம் செய்தாள்.

திரௌபதியின் விருப்பப்படி தருமர் சகுனியோடு ஒருதரம் சூதாடத் தொடங்கினார். அப்போது சாட்சியாக இருந்த அரசர்கள் மறுபடியும் சூதாட்டத்தைக் கவனத்தோடு பார்த்தார்கள்.

அச்சமயம் திரௌபதி தருமரிடம், ''நாதா! சூதாடும் இச்சமயத்தில் திருமாலின் துவாதச நாமங்களைச் சொல்லிப் புகழ்ந்து ஆடுங்கள்!'' என்றாள்.

தருமரும் அப்படியே, ''கேசவா! நாராயணா! மாதவா! கோவிந்தா! விஷ்ணுவே! மதுசூதனா! திரிவிக்ரமா! வாமனா! ஸ்ரீதரா! ஹ்ருஷீகேசா! பத்மநாபா! தாமோதரா!'' என்று திருமாலின் பன்னிரண்டு துவாதச நாமங்களையும் நாவில்

அமிர்தரஸம் சொட்ட உச்சரித்துவிட்டு, பாச்சிகைகளைச் சூதாடுவதற்காகக் கையில் எடுத்தார்.

சகுனி உடனே "தருமா! இந்த ஆட்டத்தில் நீ வைக்கும் பந்தயம் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு, "நான் ஜெயித்தால் நாங்கள் அடிமையிலிருந்து நீங்கியவர்களாவோம். நீர் ஜெயித்தால், துரியோதனன் எனது புண்ணியம் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளட்டும்!" என்று தருமர் முன் யோஜனையோடு பந்தயம் வைத்தார்.

கடவுளைத் துதித்து ஒரு காரியம் செய்பவர்கள் வெற்றிப் பெற்றே தீருவார்கள். இது அனுபவ உண்மை. தருமர் ஸ்ரீகண்ணபிரானைத் துதித்துப் பாச்சிகைகளை உருட்டிவிட்டார். அப்பாச்சிகைகள் சகுனியின் எண்ணப்படி விழாமல் தருமருடைய விருப்பப்படியே விழுந்தன. தான் வைத்த பந்தயப் பொருளை ஜெயித்தார் தருமர்!

அதுகண்டு துரியோதனாதியர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் மிகவும் கலக்கம் அடைந்தார்கள்!

பிறகு, தருமர் தமது தாய் குந்திதேவியை விதுரனுடைய விருப்பத்திற்கு இணங்கி, அவன் அரண்மனையில் தங்கச் செய்தார். திருதராஷ்டிரன், பீஷ்மர், விதுரன், துரோணாசாரியார், கிருபாசாரியார், அசுவத்தாமன் முதலிய பெரியோர்களை வணங்கி விடைபெற்றுக் கொண்ட பின், தருமர் பாஞ்சாலியோடும் தம்பிமார்களோடும் காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

பாண்டவர்கள் வனவாசத்துக்குப் போவதைக் கண்ட அஸ்தினாபுரத்து ஜனங்கள் வெகுவாக வருந்தி, உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டுத் தனித்தனியாகப் புலம்பி அழுதார்கள். அரசர்கள் மனம் தளர்ந்து கண்ணீர்விட்டார்கள். குழந்தைகள் பால் குடிக்காமல் தவித்தன. ஆனால், துஷ்டசதுஷ்டர்களான கௌரவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் அதிகம் குதூகலித்தார்கள்.

தருமபுத்திரர் தமது அழகிய பாதங்கள் சிவக்க தம்பிமார்களோடும் பத்தினியோடும் காமியவனத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது மனக் கலக்கம் நீங்கி அவர் மகிழ்ச்சி கொண்டார்!

ஆரணிய பருவம்

1. அர்ச்சுனன் தவநிலை

ஸ்ரீகிருஷ்ணபகவானின் நல்லருளால் சூதாட்டப் போரில் ஜெயித்து சுதந்திரர்களான பாண்டவர்கள், பாஞ்சாலியை அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனபோது அவர்களுடன் தௌமிய முனிவரும் சென்றார். மற்றும் தருமரோடு பன்னிரண்டாயிரம் முனிவர்கள் காமியவனத்தை அடைந்தார்கள்.

அந்தக் காமியவனத்தைச் சந்தன மரங்களும், மலையருவிகளும், மலைச்சுனைகளும், ஆண்யானைகள் பெண்யானைகளுடன் விளையாடுகின்ற காட்டாறுகளும், மரநிழல்களும் அழகு செய்தன.

பாண்டவர்கள் சென்றவுடனே அந்தக் காமியவனத்தில், மிருகங்கள் தங்களுக்குள் இயற்கையாகக் கொண்டிருக்கும் பகைக் குணத்தை விட்டொழித்தன. முனிவர்கள் புரிந்த யாகத்தால் எழுந்த ஓமப்புகையினால் மேகங்கள் தோன்றின. அவ்வனம் முழுவதுமே இமயமலைச்சாரல் போல் அழகு பெற்றது.

அப்போது துருபதமகாராஜனும், அவன் மகன் திருஷ்டத்யும்நனும், சோமகுலத்து அரசர்களும், விராடராஜனும், அந்த அரசர்களின் பந்துக்களும், இன்னும் வேறு வேறு தேசத்து ராஜாக்களும், சொந்தக்காரர்களும், அறிஞர்களும் காமியவனத்துக்கு வந்து பாண்டவர்களைப் பார்த்தார்கள். அதேசமயம் ஸ்ரீகண்ணபிரானும் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தான்.

துருபதன் முதலிய பந்துக்கள் தருமரைப் பார்த்து, ‘‘பாஞ்சாலியை ராஜசபைக்கு அழைத்து வந்து மானபங்கம் செய்த துரியோதனாதியர்களை இப்போதே படையெடுத்துச் சென்று அழிக்க வேண்டும்!’’ என்று சீற்றத்தோடு சொன்னார்கள்.

வேறு சிலர், ‘‘இப்போதே அஸ்தினாபுரிக்குப் போவோம். தேவர்கள் பார்க்க, கௌரவர்களைத் தனித்தனியே வெட்டிச் சாய்ப்போம்!’’ என்றார்கள்.

இன்னும் சிலர், ''கொடிய சூதாடி வஞ்சகம் செய்த சகுனியை இக்கணமே அம்பெய்துக் கொல்வோம்!'' என்றார்கள்.

மற்றும் சிலர், ''தேரோட்டி மகனான கர்ணனைத் தேவர்கள் காணப் போரில் எமனுலகு அனுப்புவோம்!'' என்றார்கள்.

பாண்டவர்களுக்கு ஏற்பட்ட நிலைக்காக இரங்கித் துரியோதனாதியர்களைக் கொல்லத் துணிந்து, துருபதன் முதலியவர்கள் பேசியதைக் கேட்டான் ஸ்ரீகண்ணபிரான். உடனே அவன் அவர்களை நோக்கி, ''அரசர்களே! சாந்தமடையுங்கள். பாண்டவர்களின் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் முடிந்தபின்பு, உங்களுடைய பலபராக்கிரமங்களைக் காட்டிப் பகைவர்களைக் கொல்லுங்கள். குற்றமுள்ள மனத்தோடு பிறர்க்கு வஞ்சனை செய்பவர்கள் கெட்டே தீருவார்கள் என்பதை நீங்கள் கேட்டிருக்கவில்லையோ? துரியோதனனுடைய ராஜசபையில் பாண்டவர்கள் சம்மதித்துச் சொன்ன உடன்பாட்டின்படி, அவர்கள் தங்களுடைய வனவாசத்தையும் அஞ்ஞாதவாசத்தையும் கழித்த பின்பு அல்லவோ, கௌரவர்களுடன் செய்கின்ற போரைப் பற்றிப் பேச வேண்டும்? இப்போது பேசுவதால் பயன் ஒன்றும் இல்லை!'' என்று கூறினான்.

பிறகு அவன் தருமரைப் பார்த்து, ''யுதிஷ்டிரா! நான் சொல்வதைக் கேள். உங்கள் புத்திரர்களையும் தாய்மார்களையும் சொந்தக்காரர்களிடம் அனுப்பி வையுங்கள். நீங்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் புரிந்துவிட்டு இந்திரப்பிரஸ்தம் வந்தால் நற்பயன்கள் யாவும் அடைவீர்கள்! உங்கள் தாய் குந்திதேவியை காந்தாரியின் அரண்மனையில் வாழச் செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளைத் துருபதராஜனோடு அனுப்புங்கள். மற்ற உறவினர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிப் போகட்டும். எல்லாம் முடிந்தபிறகு நீங்கள் தருமத்தோடு காட்டில் வசிப்பதே நல்லது!'' என்றான்.

கண்ணனுடைய கட்டளையைக் கேட்டு தருமர் அளவற்ற சந்தோஷம் கொண்டார். அக்கட்டளைப்படியே எல்லாவற்றையும் செய்து முடித்தார்.

கண்ணபிரான் துவாரகைக்குத் திரும்பிச் சென்றான். துருபதன் முதலிய அரசர்கள் தங்களுடைய ராஜதானிக்குப் போனார்கள். தருமரும், அவரோடு வந்த முனிவர்களும், தம்பிகளும், திரௌபதியும் காட்டில் வசிக்கத் தொடங்கினார்கள்.

அப்போது வியாசமுனிவர் பாண்டவர்களிடம் வந்தார். பாண்டவர்கள் எதிர்சென்று அவரை வணங்கி அழைத்து வந்து உபசரித்தார்கள். தருமர், துரியோதனன் தங்களுக்குச் செய்த கொடுமைகளையெல்லாம் வியாசரிடம் விபரமாகச் சொன்னார்.

தருமர் கூறியவற்றைக் கேட்ட வியூாசர், "தருமா! நடந்து போனவற்றைப் பேசுவது கொடிய பாவம்! மனம் வேறுபட்ட பங்காளிகளைக் காட்டிலும், பகைவர்கள் நல்லவர்கள் என்று அறிந்தவர்கள் சொன்னார்கள். ஆசைக்கு எல்லை உண்டோ? பந்துக்கள் நல்லவர்களுக்குத் தீங்கு செய்தாலும் நன்மையாகவே முடியும்!" என்று அவரைச் சமாதானப்படுத்திவிட்டு, ஐவரையும் பார்த்து, "பாண்டவர்களே! நீங்கள் மட்டுமோ சூதாட்டத்தில் நாட்டை இழந்திருக்கிறீர்கள்? நளச்சக்கரவர்த்தி புஷ்கர ராஜனிடம் சூதாட்டத்தில் தோல்வியடைந்து காட்டுக்குப் போன கதை உங்கள் காதில் கேட்டதில்லையோ?" என்றார்.

மீண்டும் வியாசர் தருமரிடம், "தருமனே! அர்ச்சுனன் தவம் புரிந்து சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றால் தவிர, பகைவர்களை அழிப்பது என்பது உங்களால் முடியாது!" என்றார்.

வியாசர் கூறியதைக் கேட்டுப் பாண்டவர்கள் மகிழ்ந்தார்கள். தருமர் வியாசருடைய பாதங்களை அன்புடன் வணங்கிவிட்டு அர்ச்சுனனை நோக்கினார். "தம்பி, அர்ச்சுனா! நீ உடனே ஸ்ரீகைலாசமலைச் சாரலுக்குப் போய் பரமசிவனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாவது பாசுபதாஸ்திரம் பெற்றுவா!" என்று கூறி, அவனுக்கு விடை கொடுத்தார்.

அர்ச்சுனன் அக்கணமே தமையனுடைய கட்டளையை ஏற்றான். வியாசமுனிவருடைய பாதங்களை நமஸ்கரித்து அவரிடமிருந்து ஒரு மந்திரத்தை உபதேசம் பெற்றான்.

பிறகு, நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் அர்ச்சுனன், யக்ஷர்கள் தனிப்பட்ட வழியைக் காட்ட அவ்வழியே புறப்பட்டுப் போனான்.

வியாசமுனிவர் பாண்டவர்களிடம் மேலும், ''ராஜசபையில் வஞ்சனையாளர்கள் தங்களுக்குக் கொடிய விஷம் போன்ற தீங்குகளைச் செய்தார்கள் என்றாலும், உங்களைப் போன்ற அரசர்கள் கவலைப்பட மாட்டார்கள். ஆகையால், நீங்கள் எதற்கும் பயப்படாதீர்கள்!'' என்று தைரியம் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

அர்ச்சுனன் சடாமுடி தரித்து தவக்கோலத்துடன் வில்லும் அம்பும் ஏந்தி, கொடிய காடுகளைக் கடந்து சென்று ஸ்ரீகைலாசபர்வதத்தின் சாரலையடைந்தான். பக்தியோடு ஸ்ரீகைலாசத்தை நமஸ்கரித்தான். அங்குள்ள ரிஷிகளைப் பக்தியுடன் வணங்கினான். அங்கே பரமசிவனையும், நாராயணமூர்த்தியையும், பிரமதேவனையும் குறித்து தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப தவம் செய்யும் சாரணர்களையும், யக்ஷர்களையும், வித்தியாதரர்களையும், தேவர்களையும் கண்டு அர்ச்சுனன் மகிழ்ந்தான். கடைசியாக அவன் மேலும் தொடர்ந்து சென்று ஸ்ரீகைலாசகிரியை அடைந்தான்.

ஸ்ரீகைலாசத்துக்கு வந்து சேர்ந்த அர்ச்சுனன் பரமசிவக்கடவுளை மனத்தில் எண்ணித் தியானித்தான். பிறகு, அப்பெருமானைக் கண்களால் காணத் தேடினான். அவனால் சிவபெருமானைக் காண முடியவில்லை. அதனால் அவன் நெஞ்சம் வருந்தியது. அப்போது அங்கு தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் அவனைத் தேற்றினார்கள். அர்ச்சுனன் மனம் சமாதானப்பட்டான். உடனே பரமசிவனை வேண்டி பாசுபதாஸ்திரம் பெறுவதற்காக உண்மையான தவத்துக்குரிய விரதங்களை அநுஷ்டிக்கத் தொடங்கினான்.

பகீரததபசுபோல மிகக் கஷ்டமான தவத்தை அர்ச்சுனன் செய்தான். அவன் உள்ளம் ஸ்ரீகைலாச பூபதியைத் தியானித்தது. அவன் நாக்கு ஸ்ரீபஞ்சாக்ஷர மகாமந்திரத்தை உச்சரித்தது. அவன் மேனி விபூதியில் குளித்தது. அவன் சதா நேரமும் ஈசுவரார்ப்பண விஷயத்தில் ஈடுபட்டான்.

பஞ்சாக்கினி மத்தியிலிருந்து உடம்பை வருத்தித் தவஞ் செய்பவர்கள், அந்நெருப்பின் உஷ்ணத்தைக் கருதாமல்,

அதனைக் குளிர்ச்சியாக நினைப்பார்கள். அந்நெருப்பும் அவர்களுக்குக் குளிர்ச்சியாகத் தோன்றும். அதுபோல் அர்ச்சுனனுக்கு அக்கினி குளிர்ச்சியாக இருந்தது. அவன் சிவத்தியானத்தால் உடம்பு எங்கும் புத்துணர்ச்சி அடைந்தான்.

கோடைக்காலம் வந்தது. அர்ச்சுனன் தனது கடிய தவத்திலிருந்து நீங்கவில்லை. அப்போது கொடுமையான உஷ்ணம் தகிக்கும் சூரியனும் அவனுக்கு நிலவுபோல் குளிர்ச்சியாக இருந்தான். மேலும், அவன் தன் உடம்பிலிருந்து மேலெழும் பிராணவாயுவால் இருதயத்தில் சஞ்சரிக்கும் அக்கினியை மேலே எழுப்பி அவ்வெப்பத்தை மேலெழுந்த வாயுவால் அடக்கி யழித்து, சிரசிலே தங்கியுள்ள அமுதத்தால் குளிர்ச்சியடையும்படி மனத்தைத் தியானத்தில் ஒடுங்கச் செய்தான். இப்படியெல்லாம் அர்ச்சுனன் பரமசிவனை எண்ணிக் கடுந்தவம் புரிந்தான்.

அப்போது தேவேந்திரன் அர்ச்சுனனுடைய தவத்தை அறிந்தான். அதனால் மகிழ்ந்தான். தன் மகன் அர்ச்சுனனுடைய தவத்தைப் பற்றிப் பிரகஸ்பதி பகவானுக்குச் சொன்னான். அவனுடைய தவத்தைத் தந்திரமாகப் பரிசோதிக்கவும் விரும்பினான். அதனால் அவன் உள்ளத்தில் பெரும் ஆலோசனை எழுந்தது. அவன் தனக்குள்ளாக, 'அர்ச்சுனன் சிவனைக் குறித்து தவம் செய்வது பாசுபதாஸ்திரம் முதலிய பாணங்களைப் பெறுவதற்காகவே போலும்! நாம் அவனுடைய நல்ல தவத்தின் வலிமையையும் எண்ணத்தையும் பூரணமாகப் பரிசோதித்துத் தெரிந்து கொள்வோம்!' என்று எண்ணி, கைலாசமலைக்குச் சென்றான். அர்ச்சுனனுடைய தவத்தைச் சோதித்து அறிவதற்கான உபாயத்தையும் ஆலோசித்தான்.

பிறகு அவன் ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை ஆகிய தேவகன்னியரை அழைத்து, "திருப்பாற்கடலிலிருந்து மான் போலவும் மயில் போலவும் தோன்றிய பெண்களே! நீங்கள் போய் அர்ச்சுனனின் கருத்தை அறிந்து வாருங்கள்!" என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

அவர்கள் அர்ச்சுனனிடம் சென்றார்கள். அவனுடைய உறுதியான தவத்தைக் கலைக்க நினைத்தார்கள். உடனே

அவர்கள் மன்மதனை அங்கு வரும்படி எண்ணினார்கள். அக்கணமே மன்மதன் கரும்பு வில்லேந்தி, அசோகம், தாமரை மா, மல்லிகை, நீலோற்பலம் ஆகிய பஞ்ச பூக்களாலான அம்புகளையும் எடுத்துக் கொண்டு, அத்தேவ கன்னியர்களையும் அழைத்துக் கொண்டு காமப் போர் புரிய அர்ச்சுனனை நெருங்கினான்.

மன்மதன் வரவும் அங்கு மந்தமாருதம் வீசியது. வசந்தம் தவழ்ந்தது. குயில்கள் இசைத்தன. சோலைகளிலும் காடுகளிலும் பசுமை கோலமிட்டது. சுனைகளும் வாவிகளும் குளிர்ந்தன.

அர்ச்சுனன் இவை எதையுமே கவனிக்கவில்லை. அவன் பஞ்சாக்கினி மத்தியில் கடும்தவம் புரிந்து கொண்டிருந்தான். அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க வந்த தேவகன்னியர்கள் அக்காட்சியைக் கண்டார்கள்.

ஆனாலும் தேவகன்னியர்கள் சோரவில்லை. அவர்கள் ஆகாயத்தில் தேவர்களின் துந்துபி முழங்கவும், மன்மதனுடைய பேரிகை ஒலிக்கவும், பொற்சிலம்பும் இடையாபரணங்களும், சங்குவளையல்களும் சப்தமிடவும் அம்மானை ஆடினார்கள். செந்தூரப் பொட்டிட்டுத் தங்களை அலங்கரித்துக் கொண்டார்கள். கிளிகளை அழைத்தார்கள். கலாப மயிலுடன் நடனமாடினார்கள். மலைச்சாரல் முழுவதும் தங்களின் இனிய சிரிப்பொலி கேட்கும்படி அவர்கள் நகைத்தார்கள். கருமுகில் போன்ற கூந்தலை அவிழ்த்து உடனே முடிந்தார்கள். குங்குமக் குழம்பைத் தனங்களில் பூசிக் கொண்டார்கள். இடையாடையை சிறிது நழுவவிட்டுப் பிறகு சரிபடுத்தினார்கள். மேலாடையை எடுத்துவிட்டு வேறு புதிய மேலாடையை அணிந்தார்கள். அழகிய இடையில் உடுத்தியிருந்த ஆடை நனையும்படி சுனையிலே மூழ்கினார்கள் பன்னீரையும் சந்தனத்தையும் ஒருவர் மேல் ஒருவர் வீசி விளையாடினார்கள். காம வேதத்தைக் கடைக்கண்களால் ஓதினார்கள் . யாழிசை போல் பாடினார்கள். புல்லாங்குழல் வாசித்தார்கள். பள்ளியறையில் கணவனோடு பேசுகின்ற ரகசிய பேச்சுகளையெல்லாம் பேசிக் கொண்டு அடிக்கடி அர்ச்சுனனை நெருங்கினார்கள். தேவாமிருதத்தைக் குடித்தார்கள். ஒருவர் மேல் ஒருவர் மலர்களைப் பறித்து வீசினார்கள். இப்படி அர்ச்சுனனுடைய

தவத்தைக் கெடுக்க தேவகன்னிகைகள் பலகோடி காமசேஷ்டைகளையெல்லாம் செய்தார்கள்.

மன்மதனும் பஞ்சமலர்களை அர்ச்சுனன்மேல் எய்தான்.

ஆனால், அர்ச்சுனன் கொஞ்சமும் அசையவில்லை. அவன் மனம் காமவேட்கையில் ஈடுபடவில்லை. பூரணமாக அவன் சிவத்தியானத்திலேயே வசமாகி நின்றான்.

எத்தனை முயன்றும் மன்மதனாலும் தேவகன்னிகைகளாலும் அர்ச்சுனனுடைய தவத்தைக் கலைக்க முடியவில்லை. தங்களுடைய முயற்சி தோற்றதைக் கண்டதும் மன்மதனுக்கு அச்சம் தோன்றியது. அவன், 'அர்ச்சுனன் தவத்தைக் கெடுத்தால் நமக்கு என்ன தீங்கு நேருமோ?' என்று எண்ணி, உடனே உடம்பு நடுங்கி அங்கிருந்து ஓடினான். தேவகன்னிகைகளும் திரும்பிச் சென்றார்கள்.

சூரியன் அஸ்தமித்தான்.

தேவகன்னிகைகள் நேரே சென்று இந்திரனிடம் தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தெரிவித்தார்கள். உடனே அவன் அர்ச்சுனனிடம் சென்றான்.

இந்திரன் ரிஷிபோல் தோற்றம் கொண்டு அர்ச்சுனனை நெருங்கி, "அப்பா! உன் எண்ணம் என்ன? நீ எதற்காக தவம் செய்கின்றாய்?" என்று கேட்டான்.

வந்திருப்பது இந்திரன் என்பதை அர்ச்சுனன் அறியவில்லை. அவன் இந்திரனுடைய கேள்விக்கு, "மகாரிஷியே! உமைபங்கனான பரமசிவக்கடவுள் நேரில் பிரதியக்ஷமாகின்ற வரையிலும் இத்தவத்தை விடாமல் தொடர்ந்து செய்வேன்" என்று பதிலுரைத்தான்.

தேவேந்திரன் மீண்டும், "தேவர்களாலும் வேதங்களாலும் அறிய முடியாத சிவபெருமான், உன்னுடைய தவத்துக்குப் பிரதியட்சமாவாரா?" என்று கூறிச் சிரித்தான்.

அர்ச்சுனன் தன் தவத்தைப் பரிகசித்த இந்திரனை நோக்கி உடனே, "முனிசிரேஷ்டரே! தாங்கள் எதற்காகச் சிரித்தீர்கள்?" என்று கேட்டான்.

"நீ இவ்வளவு கடுமையான தவத்தைச் செய்கிறாயே. இதனால் உனக்கு வருத்தம் உண்டாகுமே தவிர, நீ

நினைத்திருக்கின்ற பயன் கிடைக்காது!'' என்று மறுவார்த்தைச் சொன்னான் இந்திரன்.

தேவேந்திரன் சொன்னதைக் கேட்டு அர்ச்சுனன் கோபம் கொண்டான். அக்கோபத்துடன் இந்திரனை நோக்கி, ''என் உயிர் போகுமட்டும் நான் இந்த எண்ணத்தை விடமாட்டேன். பரமசிவக்கடவுளைப் பிரதியக்ஷமாகக் கண்டே தீருவேன்!'' என்று படபடத்தான்.

இந்திரன் அர்ச்சுனனுடைய வார்த்தைகளால் சந்தோஷித்தான். அக்கணமே அவன் தன் சுய உருவத்தோடு அர்ச்சுனனுக்குக் காட்சியளித்தான். மகனை நோக்கி அவன், ''குமாரா! உன்னுடைய இந்தப் பெரிய தவத்தை மெச்சி பரமசிவன் நேரில் தோன்றி, உனக்குப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தருளுவார்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அர்ச்சுனன் மீண்டும் தொடர்ந்து பரமசிவனை வேண்டிக் கடுமையாகத் தவம் புரிந்தான். அவனுடைய தவத்தைப் பற்றி பார்வதியின் தோழிமார்கள் சென்று அவளிடம் சொன்னார்கள். அச்செய்தியை உமாதேவி சிவபெருமானுடைய திருவடிகளை நமஸ்கரித்து அவருக்குத் தெரிவித்தாள்.

பார்வதி சொன்னதைக் கேட்ட பரமசிவன், அவளைப் பார்த்து, ''தேவி! அர்ச்சுனன் நெடுங்காலமாகத் தவம் செய்கின்றான். இந்த விஷயம் உனக்குத் தெரியும். அவன் தருமனுக்கும் பீமனுக்கும் தம்பி. கண்ணபிரானுக்கு உயிரினும் மேலான நண்பன். மானிடன். கௌரவர்களின் வஞ்சனையான சூதாட்டத்தால் எல்லாவற்றையும் தோற்ற பாண்டவர்களில் அர்ச்சுனன், யுத்தத்தில் துரியோதனாதியர் களைக் கொல்ல வேண்டும் என்று எண்ணியே இக்கைலாச மலைச்சாரலுக்கு வந்தான். அந்த எண்ணத்துடனே பஞ்சாக்கினி மத்தியில் நின்று நம்மைக் குறித்தே கடும்தவம் செய்கின்றான். இதுவும் அறிவோம். அவன் காய் கனி கிழங்குகளை உண்பதில்லை. நீர் குடிப்பதில்லை. காற்றையும் வெய்யிலையும் இலைச்சருகுகளையுமே புசிக்கின்றான். பக்தியால் உருகி நம்மைத் தியானிக்கின்றான். நாம் சென்று வீற்றிருக்கும் இடமாகத் தன் மனத்தையே கோயிலாக்கிக் கொண்டிருக்கின்றான். இவனைப் போல் தவம் செய்வதில் சிறந்தவர்கள் வேறு யார் இருக்கின்றார்கள்?

பார்வதி! இன்னும் நான் சொல்வதைக் கேள். பாண்டவர்களை வஞ்சனையான சூதாட்டத்தால் வென்று காட்டுக்கு அனுப்பிவிட்டு குருதேசத்தில் வாழ்கின்ற துரியோதனன், அர்ச்சுனனைக் கொல்வதற்காக மூகாசுரனை அனுப்பி இருக்கின்றான். அந்த மூகாசுரன் பன்றிரூபத்துடன் இப்போது தனது கொம்பால் அர்ச்சுனனைக் குத்திக் கொல்வதற்காக இம்மலைச்சாரலில் வந்திருக்கின்றான். அக்கொடிய மூகாசுரன் அர்ச்சுனனைக் குத்திக் கொல்வதற்கு முன்னால், நாம் அந்த அசுரனின் உயிரைப் போக்க வேண்டும். மேலும், அர்ச்சுனன் கேட்கும் வரங்களையும் கொடுக்க வேண்டும்!'' என்று சொல்லிவிட்டு, தமது ஆசனத்தைவிட்டு எழுந்தார்.

சிவபெருமான் புறப்பட எழுந்ததை உணர்ந்த நந்திகேசுவரன் விரைந்து வந்து, அவருடைய திருவடிகளில் புஷ்பங்களை அர்ச்சித்து, ''யாது கட்டளை?'' என்று குறிப்பால் கேட்டபடி முன்னே நின்றான்.

நந்திதேவனின் குறிப்பை அறிந்த சிவபெருமான் அவனைப் பார்த்து, ''நந்தி! எமது கருத்துக்கு ஏற்ப நீ பிரதமகணங்களோடு வேட வடிவம் கொண்டு புறப்படு!'' என்று கட்டளையருளினார்.

பிறகு, தாமும் தேவியுமாக வேட வடிவம் கொண்டார்.

நந்தி சிவபதங்களை வணங்கிவிட்டு, கணநாதர்களுக்கு சிவாஞ்ஞையைச் சொன்னான். அக்கணமே சிவகணத் தலைவர்கள் வேட வேஷம் பூண்டார்கள்.

தாமும் பார்வதியும் கணநாதர்களும் வேட வேஷம் கொண்டபின், சிவன் பன்றிரூபத்துடன் அர்ச்சுனனைக் கொல்ல வந்துள்ள மூகாசுரனைத் தேடிக் கொண்டு வேட்டைக்குக் கிளம்பினார். உமாதேவி குமரக்கடவுளைக் கையில் எடுத்துக் கொண்டு எல்லோரும் துதிக்க தனது மணாளனுக்குப் பின்னே நடந்தாள்.

சிவபெருமானுடைய கட்டளையால் வேதங்கள் எல்லாம் நாயாகி அவர் பக்கத்தில் வந்தன. சிவகணத் தலைவர்கள் வேடர்களாக அவரைத் தொடர்ந்தார்கள். சிவகணத்தலைவர்களும் சிவபெருமானும் பன்றிரூபமான மூகாசுரனுடைய பாதங்களின் அடையாளத்தைக் கண்டு

அவனைக் கொல்ல வில்லை நாணேற்றிச் சித்தமாக வைத்துக் கொண்டு, அர்ச்சுனன் தவம் செய்யும் இடத்தின் அருகே சென்றார்.

சிவபெருமான் அங்குபோன போது, அர்ச்சுனனைக் கொல்ல மூகாசுரன் நெருங்கிக் கொண்டிருந்தான்.

மூகாசுரனுடைய பன்றி ஆரவாரத்தைக் கேட்டு அர்ச்சுனன் நிஷ்டை கலைந்தான். பன்றி ரூபமான அந்த அசுரனைக் கண்டான். தனது தவத்தை அந்தப் பன்றி கெடுத்துவிடுமோ என்று அஞ்சினான். அதனால் அவன் நெஞ்சில் கோபப் பிரவாகம் ஏற்பட்டது. உடனே அர்ச்சுனன் காண்டீபத்தில் அம்பு தொடுத்து மூகாசுரன் மேல் எய்தான். அர்ச்சுனனுடைய அம்பு மூகாசுரனைக் கொல்லும் முன்பு, சிவபெருமான் அசுரனின் பின்பக்கம் பிளக்கும்படி ஒரு பாணத்தைப் பிரயோகித்தார்.

பன்றிரூபங் கொண்ட மூகாசுரன் சிவபெருமானுடைய அம்பால் இறந்தான். அப்போது அங்கு வேடர்களாக வந்த சிவகணத்தலைவர்கள் அர்ச்சுனனை நோக்கி, ''முன்பே ஒருவன் குறிவைத்து பாணம் பிரயோகித்திருக்க, அந்தக் குறியையே நீ அம்பெய்து துளைத்தது என்ன வலிமையோ?'' என்று சொல்லி, அவனோடு சண்டைக்குப் போனார்கள்.

அப்போது அர்ச்சுனன் வேடனாக வந்திருப்பவர் பரமசிவன் என்று அறியாது அவரைப் பார்த்து, ''நான் முன்னால் எய்த அம்பு பன்றியின் முகத்தைத் துளைத்துப் பின்பக்கமாய்ச் சென்றது. பின்னால் நீ விட்ட அம்பு அதன் தலையைத் துண்டித்தது. ஆனால் நீயோ, உன் படைவீரர்களோ தவறாகச் சொல்கின்றீர்கள். இப்படிக் கொடுமையாகச் சொல்வது நீ கொண்ட தேகபலத்தை நினைத்தோ? இல்லை, உனது வில்லாற்றலை எண்ணியோ? இப்பன்றியின் உடம்பிலே என் பெயர் பொறித்த அம்பு தைத்துள்ள இடத்தைப் பார். நீ விட்ட அம்பு தைத்த இடத்தையும் பார்! வேடுவத்தலைவனே! நான் கடும்தவம் அனுஷ்டித்ததால் எனக்கு உதிர்ந்த சருகைத் தவிர வேறு போஜனம் இல்லை. ஆகையால் இப்பன்றி உனக்கும், உனது சேனையிலுள்ள வேடர்களுக்கும் நல்ல உணவாகும். எனவே, நீ இதனை எடுத்துக் கொண்டு போ. உன்னுடைய



சேனை அல்லது ஆயுதங்களின் பலத்தைக் கொண்டு நியாயம் இல்லாமல் கோபித்தால், அதாவது வீண் சண்டைக்கு வந்தால் நான் சும்மா விடமாட்டேன். உங்கள் தலைகளெல்லாம் எல்லாத் திக்குகளிலும் சிதறும்படி கொடிய அம்புகளை எய்வேன்!'' என்றான்.

அதற்கு வேடனாகிய சிவபெருமான், ''உண்மையான அன்பு இல்லாதவனே! இந்தப் பன்றி உன்னைக் கொன்றுவிடும் என்று பயந்தாயோ? கடும்தவம் செய்பவர்கள் தாம் இறக்க நேர்ந்தாலும், தாம் கொண்ட எண்ணத்தைத் தவிர வேறு ஒன்றை நினைப்பார்களோ? நீயே சொல்! இப்படி இந்தப் பன்றியைக் கொல்லலாமோ? இது நீதியோ? தருமந்தானோ? தவசிரேஷ்டர்கள் பசுதோல் போர்த்திய புலிபோல் பாய்வார்களோ?'' என்று கேட்டார்.

மீண்டும் அவர் அர்ச்சுனனிடம், ''நீ பிராமணனோ? அரசனோ? வணிகனோ? பொறுமையோடு தவத்தைச் செய்கின்ற அசுரர்கள், மனிதர்கள், தேவர்கள், அரக்கர்கள்



ஆகியவர்களில் நீ யாரோ? தவத்துக்குண்டான லக்ஷணத்தோடு சந்திரன் போல் நாளுக்குநாள் உடம்பு இளைக்க, பஞ்சாக்கினியின் மத்தியிலே பலநாட்களாக தவம் செய்கின்றாயே. நீ இப்படி தவம் செய்ய உனக்கு ஏற்பட்ட குறை என்ன?'' என்று கேட்டார்.

சிவபெருமானுக்கு உடனே அர்ச்சுனன் தன் வரலாற்றைத் தெரிவித்தான்.

அதுகேட்ட சிவபெருமான் அவனைப் பார்த்து, ''பஞ்சபாண்டவர்களிலேயே வில்வித்தையில் சிறந்தவனாகிப் போரில் துருபதராஜனை ஜெயித்து தேர்க்காலில் கட்டியிழுத்துக் கொண்டு போய் குருதக்ஷிணை செய்த சிறுபிள்ளை நீ தானோ? ஏகலைவன் என்னும் வேடனின் வில்லாற்றலைக் கண்டு பொறாமைப்பட்டு, அவனுடைய வலக்கை பெருவிரலையும் வாங்கினாய். முன்னொரு காலத்தில் ஓர் அந்தணனுடைய பேச்சைக் கேட்டு பல வேடர்களை எந்தவொரு பயனும் இல்லாமல் அம்புகளால் கொன்றாய்!

அரசனே! மேலும் அக்கினியின் விருப்பத்துக்காக, அவன் கொடுத்த காண்டீபத்தையும் அம்புகளையும் தேரையும் பெற்றுக் கொண்டு காண்டவவனத்தை அழித்தாய். அப்போது அவ்வனத்தில் வாழ்ந்திருந்த பல உயிர்களோடு வேடர்களையும் கொன்றாய். இவையெல்லாம் நீ செய்தவை என்று பலரும் சொல்வார்கள். இன்றும் என் முகம் நோக்கி எனது தேகபலத்தையும் வில்லாற்றலையும் நிந்தித்துப் பேசினாய். இரக்கமற்றவனே! மனவலிமையும் தோள்பலமும் நமக்குத்தான் உண்டென்று இப்படி எல்லாவற்றிலும் சிறந்து ஜெயமடைவதால்தான் விஜயன் என்கின்ற பேர் நமக்குண்டென்றும் எண்ணி நீ இறுமாப்பு கொண்டிருக்கின்றாய். நீ சொன்ன வார்த்தைக்காக நான் பயந்து உன்னை விட்டுவிட மாட்டேன். இப்போது நாம் இருவரும் நமது பலத்தையும் வில்லாற்றலையும் பார்த்து யாருக்கு யார் மிஞ்சியவர் என்பதை அறிவோம். ஆகவே, வா போருக்கு!'' என்று கூறினார்.

அர்ச்சுனன் அக்கணமே வில்லை வளைத்து கொடிய அம்பொன்றை வேடனாகிய சிவன்மேல் பிரயோகம் செய்தான்.

தம்மை நோக்கி வந்த அந்த அம்பை தமது அம்பால் சிவன் அழித்தார். பின்பு, இரண்டு பாணங்களை அர்ச்சுனன் மேல் ஏவினார். அந்த அம்புகள் விரைந்து சென்று அர்ச்சுனனுடைய மார்பையும் தோளையும் துளைத்தன. உடனே அர்ச்சுனன் மூன்று அம்புகளை சிவனுடைய தலைக்கும் இரண்டு தோள்களுக்குமாக லட்சியம் வைத்துப் பிரயோகித்தான். அதேசமயம் சிவனும் மூன்று அம்புகளால் அந்த அம்புகளைச் சிதைத்தார். மேலும், அர்ச்சுனனை இலக்கு வைத்து வேறொரு அம்பைத் தொடுத்தார்.

சிவபெருமான் சுலபமாகவும் விளையாட்டாகவும் விற்போர் செய்கின்றார் என்பதை அறிந்து கொள்ளாமல் அநுமக் கொடியுடைய அர்ச்சுனன், அவர் சடா முடிக்குக் குறிவைத்து கொடும் கணையை எய்தான். அந்த அம்பு குறிதவறாமல் சிவன் திருமுடியைத் தாக்கியது. அது கண்டு வேடர்களாகி வந்த சிவகணத்தலைவர்கள் அர்ச்சுனனைக் கோபித்துப் போருக்கு எழுந்தார்கள்.

உடனே சிவன் அவர்களைக் கையமர்த்தி, ''நீங்கள் போருக்குத் தயாராக வேண்டாம். சும்மாயிருங்கள்!'' என்று சொன்னார்.

பிறகு அர்ச்சுனனை நோக்கி, "நீ இப்போது விட்ட அம்பின் வலிமையைப் பார்த்தோம். அடடா! உனக்கு முன் நின்று வில் பிடிக்கின்ற தந்திரத்தையும் நாம் அறியோம். வேதமந்திரங்களோடு செய்யும் விற்போரை உன்னிடமிருந்து நாம் கற்றுக் கொள்வோம்!" என்று பரிகசித்துவிட்டு, சிவபெருமான் அர்த்தசந்திர பாணத்தை அவன்மேல் தொடுத்தார்.

அதுகண்ட அர்ச்சுனன் சிவன்மேல் தன்னுடைய அர்த்தசந்திர பாணத்தை ஏவினான். இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதி எரிந்து போயின. அப்போது அர்ச்சுனன் பரமசிவன்மேல் பல அம்புகளை மழைபோல் தொடுத்து விட்டான்.அந்த அம்புகளெல்லாம் விரைந்துபோய் அவர் மேல் தைக்காமல், அவரைச் சுற்றி வேலி போல் கீழே விழுந்து மண்ணிலே குத்திட்டு நின்றன. தனது அம்புகள் அப்படியானதைக் கண்டு அர்ச்சுனன் மிகவும் சினங் கொண்டான்.

அச்சினத்தோடு வேறு ஒரு கணையை சிவன்மேல் அர்ச்சுனன் பிரயோகித்தான். அர்ச்சுனன் விட்ட அம்பை சிவன் தமது அம்பால் பிளந்தார். அதேசமயம் தாமும் கோபித்து பல அம்புகளை அர்ச்சுனனை லட்சியமாக்கி ஏவினார்.

சிவனுடைய அம்புகள் குறி தவறாது அர்ச்சுனனைத் தாக்கின. அதனால் அவன் மிகவும் தளர்ந்தான். அவனுடைய கைகளும் தொடைகளும் களைப்பால் நடுங்கின. அவன் பக்கத்திலிருந்த மரத்தின் நிழலில் போய் நின்றான்.

அர்ச்சுனனுடைய நிலையைக் கண்ட பார்வதி அவனுக்காக மிகவும் இரங்கினாள். உடனே அவனுடைய பரிதாப நிலையை சிவபெருமானுக்குக் கூறினாள். அர்ச்சுனன் மேல் மிகுந்த கருணையும் அன்பும் கொண்டிருந்த சிவபெருமான் விளையாட்டுக்கு மேலும் கோபித்து, அவனுடைய காண்டீபத்தின் நாண் அறுந்துபோகும்படி ஓர் அம்பைப் பிரயோகம் செய்தார்.

குறி தவறாது அந்த அம்பு காண்டீபத்தின் நாணை அறுத்தது. அதனைப் பார்த்ததும் அர்ச்சுனனால் பொறுக்க முடியவில்லை. அவன் அக்கணமே புதுத்தெம்போடு

விரைந்தோடி சிவபெருமானுடைய சடாமுடியைக் காண்டீபத்தண்டால் தாக்கினான். அத்தாக்குதலால் சிவபெருமானுடைய சடாமுடியில் சூட்டப்பட்டிருந்த மயிலிறகுகள் தரையிலே சிந்தின. பிறைச்சந்திரனுடைய அமிருதம் சிந்தியது. அம்முடியில் ஆபரணமாக விளங்கிய நாகங்களின் தலைகள் பதைத்தன. அதனால் அவற்றிலுள்ள மாணிக்கங்கள் நான்குப்பக்கமும் சிதறின. அத்திருமுடியில் இருந்த கங்காநதி இருப்பிடம் விட்டெழுந்து நிலைகுலைந்து பரந்த ஆகாயத்தைச் சேர்ந்தது. சிவபெருமான் அவற்றால் களைத்துத் தம் வசம் இழந்து பரவசமடைந்தார்.

சிவபெருமான் அப்படி காண்டீபத்தினால் தாக்குண்டதால், அதேசமயம் திருமால் பிரமதேவன் முதலிய மற்ற தேவர்களும் தாக்குண்டார்கள். மனிதர்களும் தாக்குண்டார்கள். ஆதிசேஷன் முதலிய நாகர்களும் தாக்குண்டார்கள். எல்லா உயிர்களுமே தாக்குண்டன. மற்றும் வேதங்களும், ஆகமங்களும், பஞ்சபூதங்களும், காலதத்துவமும், தாவரங்களும் தாக்குண்டன!

பிறகு, சிவபெருமானும் அர்ச்சுனனும் மல்யுத்தம் செய்தார்கள். சிவபெருமான் அர்ச்சுனனைத் தூக்கி வானத்திலே எறிந்தார். அப்போதும் அர்ச்சுனன் சிறிதும் பின் வாங்காமல் மீண்டும் முன் போல் போர் புரிய நினைத்து ஆரவாரத்தோடு சிவனை எதிர்த்து நின்றான்.

அச்சமயத்தில் சிவபெருமான் திருமாலும், பிரமனும், சூரியனும், இந்திரனும், சந்திரனும், மற்ற தேவர்களும் தமது தேவகணங்களும் சூழ அர்த்தநாரீசுவரராக ரிஷப வாகனத்தின் மேல் எழுந்தருளி அர்ச்சுனனுக்குக் காட்சி தந்தார்!

நாரதரும் தும்புரு வீணை மீட்டிப் பண்ணிசைக்க எழுந்தருளிய பெருமானைக் கண்டு அர்ச்சுனன் ஆனந்தப் பரவசமடைந்தான். மகிழ்ச்சிப் பெருகக் கூத்தாடினான். தன்னை மறந்தான். பெருமான் முன் விரைந்தோடினான். மனமுருகி மயங்கினான். கீதம் இசைத்தான். சிவபெருமானின் திருமேனி கண்டு மெய்மறந்தான். அதனால் சற்றே உடல் நடுங்கினான்.

பிறகு, அர்ச்சுனன் இருகைகுவித்து பரமசிவனைத் தொழுது, "ஐயனே! எம்பெருமானே! சர்ப்பங்களையும் சந்திரனையும் சூடிய சடாமுடியனே ! பாவக்கருமங்களால் பிறவிக் கடலில் விழுந்து நாயினும் கடைப்பட்டு வாடும்

அடியேன் எதிரில் தேவரீர் வந்து தரிசனம் தந்தருளிய இச்செயல் என்ன மாயமோ? ஆதியே! உலகங்களிலும், அவற்றிலுள்ள சராசரப் பொருள்களிலும் ஒளியாய் விளங்குபவனே! கொன்றை மாலையானே! அர்த்தநாரியே! பவழ மேனியனே! அன்பர்க்கு மெய்யனே! அகிலமருளும் அருட்பெருஞ்சோதியே! தனிப்பெருங்கருணையே! உனது முக்கண்களும், சந்திரகாந்தம் வீசும் புன்சிரிப்பும், வட்டமுகமும், சடாமுடியும், அர்த்தநாரி மேனியும் சிறந்து வாழட்டும்! பொன்னார் மேனியனே! நான் தருமரின் தம்பி. பரதத்துவமான கண்ணபிரானுடைய நண்பன். உம்மையும் வணங்கினேன். என் தவப் பயன் போல் யார் இவ்வுலகில் பெற்றார்?'' என்றெல்லாம் போற்றினான்.

சிவபெருமான் அதுகேட்டு மகிழ்ந்து ''அர்ச்சுனா! பாண்டவர்களாகிய உங்கள் கதை எனக்குத் தெரியும். சூதாட்டத்தில் உங்கள் பொருள்களையெல்லாம் தோற்று விட்டு கானகத்தில் தரித்திரர் போல் வருத்தத்தோடு வாழ்கின்றீர்கள். நீ ஐம்புலன்களையும் அடக்கிப் பெரும் தவம் செய்தாய். உனது இந்த தவம் போல் வேறு யாராலும் செய்யலாம் என்று எண்ணிப் பார்க்கக்கூட முடியாது. அரவக்கொடியுடைய துரியோதனனின் கட்டளையால் மூகன் என்னும் அசுரன் உன்னைக் கொல்ல இங்கே பன்றி ரூபமாய் வந்தான். அவன் உன்னைக் கொல்லும் முன்பாக நான் அவனைக் கொல்லக் கருதினேன். அதனால் உமாதேவியோடு வேடனாக வந்து அப்பன்றியை அம்பினால் வீழ்த்திக் கொன்றேன்.அதனால் நீ வெகுண்டெழ உன்னோடு விளையாட்டுக்குப் போரிட்டேன். போரில் உனது காண்டீப நாணை அறுத்தேன். அதனால் நீ உக்கிரங் கொண்டு காண்டீபத் தண்டால் என்னைத் தாக்கினாய். அந்த அடியையும் நான் பட்டேன். உனது அருமையான மல்யுத்தத்தால் மகிழ்ந்தேன். ராஜகுமாரா! நீ இப்போது வேண்டும் வரம் என்ன? சொல்!'' என்றார்.

அதற்கு அர்ச்சுனன் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, '' எந்தையே! பாரதப் போரில் பகைவர்களைக் கொல்ல எனக்கு உமது பாசுபதாஸ்திரத்தைத் தந்தருள்வீர்'' என்று வேண்டினான்.

உடனே சிவபெருமான் பாசுபதாஸ்திரத்தையும், மற்றும் சில அஸ்திரங்களையும், அம்பறாத்தூணியையும்,



வில்லையும் அர்ச்சுனனுக்குக் கொடுத்து, அவற்றைக் கையாளும் விதத்தையும் கற்பித்தருளினார்.

பின்பு, பரமசிவன் தம் தேவியோடும் தேவ கணங்களோடும் கைலாசத்துக்குச் சென்றார்.

அப்போது தேவேந்திரன் வந்து அர்ச்சுனனைக் கட்டி அணைத்துக் கொண்டு வாழ்த்தினான். அவன் மேலும் அர்ச்சுனன் முகம் பார்த்து அன்போடு, "மகனே! நீ பெற்ற தவப்பயன் நீடுழி வாழ்க! உனது வில்லும், அம்பறாத்தூணியும், அம்புகளும் வாழ்க! போராற்றல் மிக்க உன் நீலமேனி நலத்தோடு வாழ்க!" என்று வாழ்த்தினான்.

தன்னை வாழ்த்திய தந்தையை தனயன் வணங்கினான். மகனை தேவேந்திரன் தேரில் ஏற்றிக் கொண்டு அக்கணமே இந்திரலோகம் சென்றான்.

தேவேந்திரன் அமராவதிப்பட்டணத்தை அடைந்து, தனது மகனை அழைத்துக் கொண்டு போய்த் தன்

அமரசபையில் தன்னோடு ஆசனத்தில் ஒன்றாக உட்கார வைத்துக் கொண்டான்.

அப்போது இந்திராணி அங்கே வந்தாள். தனது தமையனான கண்ணனுடைய அத்தைப்பிள்ளையும் அபிமந்யுவின் தந்தையுமான அர்ச்சுனனைப் பார்த்து தாயாகிய இந்திராணி களிப்படைந்தாள்.

தாயான இந்திராணியைக் கண்டதும் அர்ச்சுனன் எழுந்து வந்து, அவள் பாதங்களில் தன் சிரம்பட வணங்கினான். தன்னை நமஸ்கரித்த மகனைக் கைகளால் தூக்கி அன்போடு அணைத்துக் கொண்டாள் இந்திராணி. புத்திரபாசம் மிக அவனை நோக்கி அவள், ''மகனே! உன் தந்தையின் ஐசுவரியத்தையும் நீ பெறுவாயாக!'' என்று சொல்லி, இந்திரனைக் காட்டிலும் பதினாயிரம் மடங்கு அதிகமாக வாழ்த்திவிட்டு, தனது அந்தப்புரம் போனாள்.

அப்போது பேரிகைகள் முழங்கின. வேதங்களின் பாராயணம் ஒலித்தன. சங்குகள் ஊதின. யானைகள் பிளிறின. கற்பகவிருக்ஷம் அர்ச்சுனனுடைய முடிமேல் பூமாலை சூட்டியது.

தேவேந்திரனும் அர்ச்சுனனும் அமரசபையில் ஒரே ஆசனத்தில் அழகாக வீற்றிருந்தார்கள். அவர்கள் முன்னே நாரதர் அமிருதம் உண்டு மகிழ்ச்சியோடு தும்புரு வீணை மீட்டி வாசித்தார். கின்னரர்கள் யாழிசைத்தார்கள். அகஸ்தியரும், வசிஷ்டரும், மற்ற முனிவர்களும், ஏழு வசுக்கள் முதலான தேவர்களும் மனமகிழ்ந்து முகமலர அவர்களை வாழ்த்தினார்கள். தேவகன்னியர்கள் காற்சிலம்பும், இரத்தின வளையல்களும், மேகலாபரணங்களும் ஒலிக்க அவர்கள் அருகே நின்றிருந்தார்கள்.

தேவேந்திரனும் அர்ச்சுனனும் இரண்டு மேகங்கள் போல ஒரே சிங்காசனத்தில் வீற்றிருக்கையில், ஊர்வசி சபைக்கு வந்து நாட்டியம் ஆடினாள். அவளுடைய அற்புத நாட்டியத்தைக் கண்டு அர்ச்சுனன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அம்மகிழ்ச்சியோடு, ''மின்னல் போல் இடையும், மின்னல்போல் ஆபரணங்களும் கொண்ட பூங்கொடி போன்ற இந்த ஊர்வசியைத்தவிர வேறு ஒருத்தி இத்தனைச் சிறப்பாக நாட்டியமாட முடியுமோ?'' என்று அவளைச் சிறப்பித்துப் பேசினான்.

பிறகு, தேவேந்திரன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் விடை கொடுத்து அனுப்பினான். அதன்பின் அவன் மகனோடு ஆகாசகங்கையில் நீராடிவிட்டு, அழகிய மண்டபத்தில் தனயனும் தானுமாக அமுதமும் மற்ற ருசியான உணவும் உண்டு களித்தான்.

கடைசியில் அர்ச்சுனனுக்குத் தனியே ஒரு மாளிகையை வசிப்பதற்காகக் கொடுத்து விடைதந்து அனுப்பினான் தேவேந்திரன். அச்சமயம் சூரியன் அஸ்தமித்தான்.

சந்திரன் பவனி வந்தான்!

அர்ச்சுனன் இந்திரனால் கொடுக்கப்பட்ட மாளிகையில் மகிழ்ச்சியோடு பொன்னாசனம் ஒன்றில் அமர்ந்திருந்தான். அர்ச்சுனன் மேல் மோகம் கொண்டு ஊர்வசி அப்போது அவன் எதிரே வந்தாள். அவளை அர்ச்சுனன் வரவேற்று உபசரித்து, ''எங்கள் குலத்துப் பிதாவான புரூரவ சக்கரவர்த்தியின் மனைவியே! நீ இப்போது இங்கே வந்ததின் காரணம் என்ன?'' என்று கேட்டு, அவளுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தான்.

ஊர்வசியை நமஸ்கரித்த அர்ச்சுனன் மரியாதையோடு சற்று விலகி நின்றான். அர்ச்சுனனுடைய செய்கையைக் கண்ட ஊர்வசிக்கு மகாகோபம் வந்துவிட்டது. அவள் சிவந்த உதடுகளை மடித்துக் கொண்டு, கண்கள் சிவக்க, கடும் விஷவார்த்தைகளை அவனைப் பார்த்துச் சொன்னாள். ''அர்ச்சுனா! ஏகாந்தமான இந்த இரவில் உனது தோள்களை ஆலிங்கனம் செய்து கொள்ள வந்த என்னைத் தாயாக வைத்துப் பேசி இகழ்ந்தாய். நீ செய்த தவப்பயன் யாவும் சாம்பலாகும்படிச் சபிப்பேன். உன்போல் போர் செய்யும் வீரர் பூலோகத்தில் யாருமே இல்லை. மற்றும் நீ யாகாக்கினியில் தோன்றிய திரௌபதியை அன்போடு மனைவியாக அடைந்தாய். காமமுடையவர்களுக்குப் பொன் போல் அருமையானது இந்த இரவு. ஆனால், நீயோ இந்த இரவில் உன்னோடு சுகிக்க நான் வந்திருந்தும் ஆண்மையுடையவர் சொல்லக் கூடாத சொற்களைச் சொல்கிறாய். நீ இப்படிச் செய்வதால் உனக்கு அருள் நலமோ, வீரமோ, புகழோ கிடைக்கும் என்று எண்ணுகிறாயோ? அதனால் இவற்றில் ஒன்றுகூட உனக்குக் கிடைக்காது!''

ஊர்வசியின் காம ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை. மேலும் அவனைப் பார்த்து அவள், "அர்ச்சுனா! உன்னை மோகித்து வந்த என்னை நிந்தித்தாய். ஆகையால் நீ பேடியாவாய்!" என்று சாபம் கொடுத்துவிட்டுத் தன் மாளிகைக்குச் சென்றாள்.

பெரும் வீரனான அர்ச்சுனன் ஊர்வசியின் சாபத்தால் பேடியானான். அதுகண்டு அவன் மிகவும் வருந்தினான். போராற்றலும் பேராண்மையும் மிக்க தான், ஒரு பெண்ணிட்ட சாபத்தால் பேடியானதை நினைத்து மிகவும் மனம் நொந்தான். அந்த வருத்தத்தோடு அர்ச்சுனன் மனம் கலங்கி ஆடையால் உடம்பை மறைத்துக் கொண்டு படுக்கையிலே உறங்கினான்.

சூரியன் உதித்தான்!

தேவேந்திரன் அர்ச்சுனனுடைய நிலையை அறியாதவனாக முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் தேவசபாமண்டபத்தை அடைந்து சிங்காசனத்தில் அமர்ந்தான். கந்தருவன் ஒருவனை அழைத்து , அர்ச்சுனனை சகல மரியாதைகளுடன் சபைக்கு அழைத்து வரும்படிக் கட்டளையிட்டு அனுப்பினான்.

கந்தருவன் உடனே விரைந்து அர்ச்சுனனிடம் சென்றான். அவனுக்கு நேர்ந்துள்ளதையெல்லாம் அறிந்தான். அக்கணமே அவன் திரும்பி வந்து இந்திரனை வணங்கிச் செய்தியைச் சொன்னான்.

அதுகேட்டு தேவேந்திரன் திடுக்கிட்டான். பின்பு மனங்கலங்கினான். கண்ணீர்விட்டான். தேவர்கள் தன்னைத் தொடர மனக்கலக்கத்தோடு தேவேந்திரன் அர்ச்சுனனிடம் சென்றான்.

மகனைக் கட்டியணைத்துக் கொண்டு இந்திரன், "குமாரா! பயப்படாதே! தேவதாசியான ஊர்வசி கொடுத்த கொடிய சாபம் விரைவிலேயே உன்னைவிட்டுப் போகும்!" என்று தேற்றினான்.

பிறகு, அவன் தேவர்களோடு ஊர்வசியின் மாளிகைக்குச் சென்றான். தேவேந்திரனைப் பார்த்ததும் ஊர்வசி அஞ்சி, விரைந்தோடி வந்து அவன் பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

அப்போது தேவர்கள் அவளைத் துதித்து, "ஊர்வசி! நீ யாருக்குத் தாயாய் இருந்தாலும், தேவமகளாகிய உனது காமநோயைக் கலவிச்சுகத்தால் தீர்க்க வேண்டியது ஆண்கள் யாருக்கும் கடமையாகும். அர்ச்சுனன் அரசகுலத்தில் பிறந்தவனாக இருந்தும், இது முறை என்று அறியாமல் உன் ஆசையைப் பூர்த்தி செய்யாத பெரும் தவறைச் செய்துவிட்டான். அதனால் நீ வெகுண்டு அவனைப் பேடியாகச் சபித்தாய். மானிடர் யாரும் வார்த்தை தவறினாலும் உனது சாபம் தவறாது. ஆயினும் அர்ச்சுனன் இச்சாபத்தை விரும்பும் பொழுது அவனுக்கு இப்பேடி வடிவம் வரட்டும். இதற்கு நீ அனுகிரகம் செய்!" என்று கேட்டுக் கொண்டார்கள்.

தேவர்களின் வேண்டுகோளுக்கு ஊர்வசி இணங்கி அப்படியே அர்ச்சுனனுக்கு வரமளித்தாள். அக்கணமே அர்ச்சுனன் சாபம் நீங்கி தன்னுடைய நிஜஉருவத்தைப் பெற்று மகிழ்ந்தான்!

2. நிவாதகவசர் காலகேயர் வதை

தேவேந்திரன் நிஜஉருவம் பெற்ற அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு தேவ சபாமண்டபத்துக்குச் சென்றான். தன்னோடு அவனையும் அம்மண்டபத்தில் இந்திரன் சிங்காசனத்தில் உட்கார வைத்துக் கொண்டான். தேவர்களைப் பார்த்து இந்திரன், "தேவர்களே! நமது பகைவர்களான அசுரர்களைக் கொல்லும் வீரன் இந்த அர்ச்சுனனைக் காட்டிலும் வேறு ஒருவரும் இல்லை. முன்பு நமது காண்டவவனத்தை எரியச் செய்த வீரம் இவனுடையதே!" என்று சொல்லி, மேலும் அவனுடைய வீரச்செயல்களையெல்லாம் விவரித்தான்.

இந்திரனுடைய வார்த்தைகளைக் கேட்டு தேவர்கள் மகிழ்ந்தார்கள். அவர்கள் அன்போடு அர்ச்சுனனுக்குப் பலவகைச் சன்மானங்களைச் செய்தார்கள்.

தேவேந்திரன் அர்ச்சுனனை ஆகாச கங்கையில் ஸ்நானம் செய்வித்து, கற்பகமாலையை அவனுக்கு அணிவித்தான். பிரமனால் தனக்குச் சூட்டப்பட்ட தனது நவரத்தின கிரீடத்தை இந்திரன் அர்ச்சுனனுக்குச் சூட்டி மகிழ்ந்தான். மேலும், அவன்

அர்ச்சுனனுக்கு வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், ஆயுதங்களையும் கொடுத்து தன்னாசனத்தில் அமர்த்தி சரியாசன மரியாதை செய்தான். அவனோடு கூடயிருந்து அமுதபானம் பருகினான். கடைசியாக தேவேந்திரன் தேவர்களுக்கு இளவரசனாக அர்ச்சுனனுக்குப் பட்டம் கட்டி சிறப்புச் செய்தான்.

அதுகண்டு இந்திராணி பெரிதும் கோபம் கொண்டாள். அவள் விழிகளிலிருந்து தீப்பொறிகள் வெளிப்பட்டன. அவள் கணவனை நோக்கி, ''தேவராஜா! பூலோகத்தில் வசிக்கும் மானிடனாகிய இந்த அரசன் இங்கே வந்து, உம்முடன் சரியாசனத்தில் அமர்ந்து உண்பது தகுதியோ? சொல்வீர்!'' என்று கேட்டாள்.

மனைவியின் கேள்வியைக் கேட்டு தேவேந்திரன் தனது இரண்டு தோள்களும் குலுங்கப் பெரிதாகச் சிரித்தான். அச்சிரிப்போடு அவளைப் பார்த்து, ''மங்கையர் திலகமே! ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அத்தைப்பிள்ளை இந்த அர்ச்சுனன். என்னுடைய மகனும் கூட. மேலும், சிவபெருமானுடன் போரிட்ட வீரன் இவன். இப்படிப்பட்டவனைத் தேவர்களுக்குரிய சிறப்பில்லாத சாதாரண மானிடன் என்று எண்ணி, நீ பலவாறு நிந்திப்பது முறையோ?'' என்று பதில் கேள்வி கேட்டான்.

அப்போது தேவர்கள் தேவராஜனுடைய பாதங்களை நமஸ்கரித்து அவனிடம், ''வேந்தே! முன்பு சத்திய பாமாவுக்காக பாரிஜாத தருவை வேரோடு இங்கிருந்து கொண்டு சென்று பூலோகத்தில் நட்டு வைத்த ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய மைத்துனன் இந்த அர்ச்சுனன் என்றால், இதைக் காட்டிலும் விசேஷம் இவனுக்கு வேறு வேண்டிய தில்லை. அர்ச்சுனன் இங்கே வந்திருப்பதற்கு ஏதேனும் காரணம் இருக்குமே?'' என்று வினவினார்கள்.

அர்ச்சுனன் இந்திராணி கூறிய ஆக்ஷேப வார்த்தை களையும், தேவர்கள் சொன்ன சமாதான வார்த்தைகளையும் கேட்டு, இந்திரனைத் தொழுது, ''தந்தையே! மூவுலகத்தவர்களும் துதிக்கின்ற உம்மோடு மானிடனாகிய நான் சரியாசனம் பெற்று, உமது கிரீடத்தையும் தரிப்பது தகுமோ?'' என்றான்.

புதல்வன் சொன்ன விநயவார்த்தைகளைக் கேட்டு தேவேந்திரன் சந்தோஷம் கொண்டான். அந்த மகிழ்ச்சியுடன் அவன், "மகனே! மூன்று லோகங்களிலும் உன்னைப் போல் ஒரு வீரன் இல்லை. நீ பரமசிவன் கொடுத்தருளிய பாசுபதாஸ்திரம் முதலிய ஆயுதங்களையும் பெற்றாய். அக்கினி தேவனிடமிருந்து குதிரைகளையும், தேரையும், அம்புகளையும், காண்டீபத்தையும் பெற்றாய். மேலும், பல தேவர்களிடமிருந்து வரங்களையும், மந்திரங்களையும், ஆயுதங்களையும் பெற்றாய். வேதமுறைப்படிப் பார்த்தால் உன்னைக் காட்டிலும் சிறந்த தேவர்கள் வேறு யாரும் இல்லை. விஜயனே! நான் சொல்வதைக் கேள். மாணவர்கள் குருதட்சிணையாகக் கொடுக்கக் கூடிய பொருள் ஒன்று உண்டு என்று பெரியோர்கள் சொல்வார்கள். நானும் உனக்கு வில்வித்தை உபதேசித்த ஆசாரியனாவேன். ஆகையால், நீயும் நான் வேண்டும் வரத்தை எனக்குக் கொடு!" என்று அர்ச்சுனனிடம் சொன்னான்.

அதற்கு அர்ச்சுனன் மகிழ்ச்சியோடு, "தந்தையே! மானிடர்களுக்குத் தேவர்களே வரம் கொடுப்பார்கள். அதுவே முறை. அதைவிட்டு தேவர்களுக்கு மானிடர்கள் செய்யக் கூடிய உதவி ஒன்றுமே இல்லை. ஆனாலும் நீர் விரும்புவதைச் சொல்லும்!" என்றான்.

தேவேந்திரன் உடனே அர்ச்சுனனை நோக்கி, "குமாரா! சமுத்திரத்துக்கு நடுவே தோயமாபுரம் என்னும் ஒரு தேசம் இருக்கிறது. அத்தேசத்தில் மூன்று கோடி அசுரர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் திருமாலாலும், யமனாலும், சுப்பிரமணியகடவுளாலும் கூட வெல்ல முடியவில்லை. அவர்கள் பதினான்கு உலகங்களில் உள்ளவர்களையும் வதைத்து வருகின்றார்கள். அவர்கள் நிவாதகவசர் என்னும் பேருடைய அசுரர்கள். யுத்தசாமர்த்தியமும் தவவலிமையும் கொண்டவர்கள். வில்வித்தையில் வல்லவர்கள். தாங்கள் விடுகின்ற மூச்சாலேயே எல்லா உலகங்களையும் நடுங்க வைப்பவர்கள். யுத்தத்தை ஏற்படுத்தும் கொடுஞ் சொற்களைப் பேசுபவர்கள். எப்போதும் சீற்றம் கொண்டவர்கள். அவர்கள் எப்போதுமே எல்லோருக்கும் பகைவர்கள். சிவபெருமானாலும் வெல்ல முடியாத திறமைசாலிகள். அந்த அசுரர்களை அழிப்பதற்கு உன்னைத் தவிர வேறு யாராலும் முடியாது. விஜயனே! அந்த

அசுரர்களை நீ நாசம் செய்ய வேண்டும் என்னும் வரத்தையே நான் உன்னிடம் கேட்கின்றேன்!'' என்றான்.

தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு அர்ச்சுனன் மகிழ்ந்தான். அவனுடைய மார்பும் தோள்களும் பூரித்தன. அவன் மகிழ்ச்சியோடு அசுரவதத்திற்குச் சம்மதித்தான்!

உடனே தேவேந்திரன் சந்தோஷித்து பதினாயிரம் குதிரைகளையும், தனது தேரையும், தேர்ப்பாகனான மாதலியையும், பொற்கவசத்தையும் அர்ச்சுனனுக்குக் கொடுத்தான். தான் அணிந்திருந்த கற்பகமாலையை அவனுக்குச் சூட்டினான். பிறகு, அசுர யுத்தத்துக்கு இந்திரன் அர்ச்சுனனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

இந்திரனுடைய ஆக்ஞையை ஏற்று அர்ச்சுனன் அக்கணமே போர்க்கோலம் கொண்டு தேரில் ஏறினான். மாதலியை நோக்கி, ''தேர்ப்பாகா! நிவாதகவசர்கள் எந்தத் திசையிலே இருக்கின்றார்கள்?'' என்று கேட்டான்.

அர்ச்சுனனின் கேள்விக்கு தேர்ப்பாகன் அந்த அசுரர்களின் இருப்பிடம், தன்மை முதலியவற்றை விளக்கிச் சொல்லத் தொடங்கி, ''தேவ இளவரசே! கடலுக்கு மத்தியிலே தோயமா ரம் என்னும் வஞ்சனையுள்ள ஒரு பெரிய மாயநகரம் உண்டு. அங்கே அந்தக் கொடிய அசுரர்கள் வசிக்கிறார்கள்!'' என்றான்.

பின்பு, அவன் சித்திரசேனன் என்னும் கந்தருவனைப் பார்த்து, ''அங்கே செல்வதற்கான நல்ல வழியைக் காட்டு!'' எனச் சொல்லித் தேரை ஓட்டினான்.

அப்போது தேவமங்கையர்கள், ''முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அழிக்க முடியாத பலமுள்ள அசுரர்களுடைய சேனையை, சேனா பலமில்லாமல் தனியே மானிடன் ஒருவன் அம்பெய்து ஜயிக்க முயல்வது அறிவீனம்!'' என்று சொல்லி ஏளனமாகச் சிரித்தார்கள்.

அர்ச்சுனன் அது கேட்டு கோபிக்கவில்லை. அவன் புன்சிரிப்பை உதிர்த்தான். அச்சமயத்தில் தேர் கோபுர வாயிலை அடைந்தது. அங்கே இருந்த தேவர்கள் அவனை இந்திரன் என்றெண்ணி அவனிடம் வந்து கூடினார்கள். அருகில் வந்த தேவர்கள் அர்ச்சுனனைப் பார்த்துப் புரிந்து

கொண்டதும், மாதலியை நோக்கி, ''இந்த அர்ச்சுனன் யுத்தசந்நத்தனாக இருப்பதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்கள்.

மாதலி அவர்களுக்கு அர்ச்சுனனின் புகழை எடுத்துச் சொல்லி, அவன் போர்க்கோலம் கொண்டதற்கான காரணத்தையும் சொன்னான்.

தேவர்கள் மாதலி சொன்னதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து அர்ச்சுனனைப் பார்த்து, ''அர்ச்சுனா! நீ அசுரர்களை ஜெயித்து திரும்பி வா!'' என்று ஆசீர்வதித்து, அவனுக்குத் தங்களால் முடிந்த சன்மானங்களைக் கொடுத்தார்கள்.

மேலும் அவர்கள் அவனிடம், ''இப்போது நீ ஏறியுள்ள இந்த ரதம் முன்பு தேவேந்திரன் ஜம்புவான் ஜம்புமாலி என்னும் இரண்டு அசுரர்களைக் கொன்ற காலத்தில் ஏறியது. மற்றும் இராவணனைக் கொன்ற காலத்தில் ஸ்ரீராமபிரான் ஏறியது. அப்படிப்பட்ட தேரில் தேவேந்திரனுடைய கவசமும் கிரீடமும் அணிந்து செல்லும் நீ, எங்கள் மனக்குறை முழுவதையும் தீர்ப்பாய்!'' என்றார்கள்.

அர்ச்சுனன் அதனால் மகிழ்ந்தான். அவர்களுடைய பாதங்களை வணங்கினான்.

மாதலி தேரை ஆகாயத்தில் செலுத்தி தோயமாபுரத்து கடற்கரையில் கொண்டு போய் நிறுத்தினான்.

அர்ச்சுனன் தேர்ப்பாகனை நோக்கி அன்புடன், ''மாதலி! இந்தப் பட்டினத்தில் வசிக்கும் அசுரர்களைப் பற்றி எனக்கு விபரமாகச் சொல்!'' என்று கேட்டான்.

மாதலி அதன்படி அர்ச்சுனனைப் பார்த்து, ''தேவ இளவரசே! இப்பட்டினத்தில் வசிக்கும் அசுரர்கள் மிகவும் கொடியவர்கள். கோபமாகவே எப்போதும் பேசுவார்கள். கோபத்தால் தீப்பொறி பறக்கும் சிவந்த கண்களைக் கொண்டவர்கள். கருத்த பெருத்த தோற்றமுடையவர்கள். பயங்கரமான பிலத்துவாரம் போன்றது அவர்களுடைய வாய். பஞ்சபூதங்களையும் அழிக்க நினைத்தாலும் அவர்கள் வெகு சுலபமாக அழித்துவிடுவார்கள். இருட்டில்

எண்ணெய்த் தடவியது போன்றது அவர்களுடைய உடம்பு. தங்களுடைய புஜபராக்கிரமத்தால் ஆதிசேஷன் தாங்கும் இந்தப் பூலோகத்தைத் தாங்கக் கூடியவர்கள். பிரமனுடைய ஆயுளும் இந்த அசுரர்களின் தீர்க்காயுசை நினைத்தால் சிறிதுதான். கைலாசகிரியில் தலைகீழாக நின்று பிராணாயாமத்தால் பந்தனம் செய்து கற்பகாலம் வரையிலும் கடுந்தவம் புரிந்தவர்கள். அத்தவத்தால் அளவில்லாத வரங்களைச் சிவபெருமானிடமிருந்து பெற்றவர்கள். இந்தக் கடலைக் கால்களாலேயே தாண்டக் கூடியவர்கள். வில், வாள், வேல், சூலம், ஈட்டி, சக்கரம் ஆகிய ஆயுதங்களைக் கையில் எப்போதும் வைத்திருப்பார்கள். யுத்தம் என்றால் குதூகலத்துடன் ஆரவாரம் செய்து முன்னே வருவார்கள். ஏழு கடல்களையும் குடித்துத் திரும்பவும் உமிழும் வலிமை கொண்டவர்கள். யமனும் இடியும் போல் தோற்றமும் பேச்சும் கொண்டவர்கள். தேவர்கள் ஒவ்வொரு யுத்தத்திலும் அவர்களை ஜெயிக்க முடியாமல் தோற்று ஓடியிருக்கிறார்கள். மூன்று கோடி அசுரர்களான அவர்கள் பற்களாலேயே எல்லா உலகங்களையும் கிழித்து விடுவார்கள். சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்திலும் உயிர் தப்பியவர்கள். அவர்கள் இந்திரனை ஜெயித்து இந்தத் தோயமாபுரத்தை அவனிடமிருந்து அபகரித்துத் தமதாக்கிக் கொண்டார்கள்!'' என்று தெரிவித்தான்.

பிறகு அவன் சித்திரசேனனைப் பார்த்து, ''நீ போய் அர்ச்சுனனை எதிர்த்து வந்து யுத்தம் செய்யும்படி அசுரர்களிடம் தூது சொல்லி வா!'' என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

மாதலி ரதத்தைப் பூமியில் மெல்ல ஓட்டினான். அதேசமயம் அர்ச்சுனன் தனது வில்லின் நாணைத் தெறித்துப் பேரொலி எழுப்பினான்.

அர்ச்சுனன் தேர் ஒலியும், நாணோசையும் எல்லா அண்டங்களையும் கிடுகிடுக்கச் செய்தன. அந்த ஒலிகளால் எல்லாப் பிராணிகளும் அதிர்ச்சியடைந்தன. அசுரர்கள் அந்த ஓசைகளைக் கேட்டார்கள். தேவேந்திரன்தான் தங்களோடு போருக்கு வருகிறான் என்று நினைத்தார்கள். அப்படி நினைத்த மாத்திரமே அவர்கள் மனத்தில் கோபம் பொங்கியது. கண்கள் சிவந்தன.

சித்திரசேனன் அசுரர்களிடம் சென்று, "ஏ, அசுரர்களே! தனக்கு யாரும் நிகரில்லாமல் குருகுலத்தில் பிறந்த இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனோடு யுத்தம் புரிய இக்கணமே புறப்பட்டுப் பெருஞ்சேனையோடு வாருங்கள்!" என்றான்.

அது கேட்டு அசுரர்கள் மனம் வெதும்பினார்கள். அவர்களுடைய கண்கள் தீப்பொறிகளை உமிழ்ந்தன. பெரும் கோபத்தோடு அவனைப் பார்த்து அவர்கள், "கந்தருவனே! நீ சொன்ன வார்த்தை வேடிக்கையானது!" என்று கைகொட்டிச் சிரித்தார்கள்.

மீண்டும் அவர்கள், "துணையில்லாமல் ஒரு பூனை புலிக்கூட்டத்தோடு யுத்தம் செய்ய விரும்பி தைரியத்துடன் வந்து கூப்பிடுவதா? இது என்ன வேடிக்கை! இந்திரனுடைய போகமெல்லாம் நாசமாவதற்கான காலம் வந்துவிட்டது!" என்று சொல்லிச் சிரித்தார்கள்.

மேலும் அந்த அசுரர்கள் சித்திரசேனனிடம், "திரிமூர்த்திகளும் அழிக்க முடியாத எங்களோடு பூமியிலுள்ள மானிடனாகிய அர்ச்சுனன் வந்து போர் செய்வது தகுமோ? அசுர சேனைகளை மதிக்காமல் அலட்சியத்துடன் அவன் போர் புரிய நினைப்பதுவோ?" என்று கேலி பேசினார்கள்.

அசுரர்களுடைய சினம் அப்படியும் குறையவில்லை. அவர்கள் மேன்மேலும் அதிக கோபம் கொண்டார்கள். தங்கள் வில்லை எடுத்து நாணேற்றினார்கள்.

போருக்கு ஆயத்தமாகிய அசுரர்கள், "அரவக் கொடியுடைய துரியோதனனிடம் தங்கள் தேசத்தையும் செல்வத்தையும் பறி கொடுத்துவிட்டு, நிற்பதற்கும் இடமில்லாமல் காட்டுக்கு வந்த வில்வீரனாகிய அர்ச்சுனனா எங்களை எதிர்த்து யுத்தம் செய்ய வந்தான்?" என்று கூறி, கடல் போல் ஆரவாரித்துக் கூடினார்கள்.

அசுரர்கள் தேவலோகமும், பூலோகமும், பாதாள லோகமும், திக்குகளும், மற்ற உலகங்களும் அதிர்ந்து நடுங்க வெகு கோபத்துடன் தங்களுடைய ரதகஜதுரகபதாதிகளோடு அர்ச்சுனனை எதிர்த்து யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள்.

அப்போது சங்குகள் முழங்கின. பேரிகைகள் ஒலித்தன. தாரையும் திருச்சின்னமும் ஊதின. முரசுகள்

ஆர்த்தன. உடுக்கையும் மத்தளமும் கொட்டின. கடல் இரைச்சல் போல் அந்த வாத்திய ஓசைகள் கேட்டன. அசுரர்களுடைய சூலங்களும், சக்கரங்களும், வளைதடிகளும், பரசுகளும், தோமரங்களும், வில்களும், ஈட்டிகளும், அம்புகளும், வேல்களும், வாள்களும் சேனை நெருக்கத்தால் ஒன்றோடு ஒன்று மோதி பேரொலி செய்தன.

யுத்தத்துக்கு வந்த கொடிய அசுரர்கள் ஆயுதங்களைத் தயாராக வைத்துக் கொண்டு அர்ச்சுனனுடைய தேரைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அவன் மேல் சூலங்களையும், சக்கரங்களையும், அம்புகளையும் எறிந்தார்கள்.

தன்னை அசுரர்கள் வளைத்துக் கொண்டு ஆயுதங்களால் தாக்கியதும் அர்ச்சுனன் அவர்கள் மேல் அம்புமழை பெய்தான். கொஞ்சமும் சோர்வில்லாமல் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''மூன்றுகோடி அசுரர்களே! என்கை அம்புகளால் உங்களுடைய புகழையும், போர் சாமர்த்தியத்தையும், சேனாபலத்தையும் நொடியில் அழிப்பேன். முன்பு பல தடவை உங்களோடு போர்செய்து புறமுதுகிட்டு ஓடிய தேவகுலத்து வீரர்கள் போன்றவன் இல்லை நான்! பொன் போன்ற உங்களுடம்பை பொடிப் பொடியாக்கிவிட்டே இங்கிருந்து திரும்பிச் செல்வேன்!'' என்று வீரவாதம் பேசினான்.

அதுகேட்டு அவர்கள் அர்ச்சுனனை நோக்கி, ''ஏ, அர்ச்சுனா! உனது பத்தினியாகிய திரௌபதியின் கூந்தலையும் சேலையையும் அவிழ்த்த துரியோதனாதியரை நீ அழிக்கவில்லையே. உன் வீரம் என்ன வீரம்!'' என்றார்கள்.

அவ்வளவுதான். அர்ச்சுனன் நெஞ்சம் கோபத்தால் துடித்தது. அவன் கொடிய அம்புகளை அவர்கள்மேல் பிரயோகித்தான்.

அச்சமயம் மேகங்கள் சூரியனை மறைப்பது போல் அசுரர்கள் அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டு அம்புகளையும், வாள்களையும், மழுக்களையும், வேல்களையும் அவன் மேல் எறிந்தார்கள்.

காண்டீபன் அதுகண்டு அஞ்சவில்லை. தன்னை எதிர்த்து வந்த அசுரர்களை ஒவ்வொருவராக அவன் எமலோகத்துக்கு அனுப்பினான். அவனுடைய யுத்த

சாமர்த்தியத்தைக் கண்ட அசுரர்களில் பாதிபேர் அவனோடு போர் செய்ய பயந்தார்கள். மீதிபேர் அதேசமயம் அவனோடு உக்கிரமாகப் போரிட்டுக் கொண்டே அஞ்சி நிற்பவர்களை நோக்கி, ''அசுரர்களே! இது என்ன செய்கை? அசுரர்கள் எல்லோரும் வீணாகத் தம் பராக்கிரமங்களை இழக்கலாமா? இவன் உடம்பையும் உயிரையும் அழித்துத் தேவர்களுக்கு முன்னால் ஜெயத்துக்கு அடையாளமாக வாகை சூடுவோம்!'' என்றார்கள்.

அவர்களின் பேச்சால் அஞ்சியவர்கள் தைரியம் அடைந்தார்கள். அவர்களும் அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டு உக்கிரமாகப் போர் செய்தார்கள்.

இந்திரகுமாரன் எதற்கும் சளைக்கவில்லை. அவன் மேலும் தீவிரமாக யுத்தம் செய்தான். அப்போது அசுரர்கள் ஏவிய ஆயுதங்கள் அர்ச்சுனனைக் கடுமையாகத் தாக்கின. அதுகண்டு தேவர்கள் அர்ச்சுனனுக்கு அபாயம் ஏற்படுமோ என்று உடம்பு வேர்த்தார்கள்.

மேன்மேலும் அசுரர்கள் கொடிய ஆயுதங்களை அர்ச்சுனன் மேல் பிரயோகித்தார்கள். அர்ச்சுனன் அதனால் மிகவும் சீற்றமடைந்தான். அவன் கொடிய பாணங்களை அவர்கள் மேல் வர்ஷித்தான். அசுரர்கள் அதற்கும் அஞ்சவில்லை. தொடர்ந்து அவர்கள் தங்கள் ஆயுதங்களினால் அவனுடைய தேரையும், குதிரைகளையும், சாரதியையும் ஒரு கலக்குக் கலக்கினார்கள்.

அர்ச்சுனன் அசுரர்களின் ஆற்றலை மேலும் வளரச் செய்வது சரியில்லை என்று எண்ணினான். உடனே பிரமாஸ்திரத்தை அவர்கள் மேல் பிரயோகம் செய்தான்.

நெருப்பைக் கக்கிக் கொண்டு காற்றாக விரைந்த பிரமாஸ்திரம் பல லக்ஷ அசுரர்களின் உடம்பைத் துண்டித்து உயிரைக் குடித்தது. அவர்களின் உடம்பிலிருந்து பெருகிய இரத்த ஆற்றினால் சிவபெருமானுடைய ஒரு பாகம் போல் யுத்தகளம் சிவந்தது.

பிரமாஸ்திரத்தால் பல லக்ஷ அசுரர்கள் மாண்டதைக் கண்டதும் மீதி அசுரர்கள் மிகவும் சீற்றமடைந்தார்கள். இரண்டு கோடி அசுரர்கள் ஒன்றாகச் சேர்ந்து அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் மேல் கொடிய ஆயுதங்களை

எறிந்தார்கள். அப்போது அவன் கொடிய வைஷ்ண வாஸ்திரத்தை அவர்கள் மேல் ஏவினான். அதனால் பல லக்ஷ அசுரர்கள் இறந்தார்கள். மீதியுள்ளவர்கள் மாயப்போர் புரியத் தொடங்கினார்கள். உடனே அர்ச்சுனன் மகேந்திராஸ்திரத்தால் அவர்களுடைய ஆயுதங்களை அழித்தான். அது கண்டு அவர்கள் அவன் மேல் மேகாஸ்திரத்தை ஏவினார்கள். அதனைத் தனது ஆக்நேயாஸ்திரத்தால் அர்ச்சுனன் அழித்தான்.

அக்கணத்தில் அசுரர்கள் அவன் மேல் வாயு வியாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அவன் ௳ லாஸ்திரத்தை அதற்கு எதிராகப் பிரயோகம் செய்தான்.

கொடிய அசுரர்கள் உடனே அவன் மேல் மோஹாஸ்திரத்தை ஏவிவிட்டு ஆரவாரம் செய்தார்கள்.அந்த அஸ்திரம் கொடிய நெருப்பு மழையையும், மின்னல் மழையையும், இடி மழையையும், நீர் மழையையும் உலகமெங்கும் பொழிந்து கொண்டே வந்து அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டது!

அந்த மோஹாஸ்திரத்தால் அர்ச்சுனனுடைய தேர் குதிரைகள் பயந்தன. தேர்ப்பாகனான மாதலி மயங்கி விழுந்தான். உடனே அர்ச்சுனன் மாதலியின் மயக்கத்தைப் போக்கிவிட்டு, அமோஹாஸ்திரத்தை அதற்குரிய தேவதையைத் தியானித்து மோஹாஸ்திரத்துக்கு எதிராகத் தொடுத்தான்.

இருளைப் போக்கும் சூரியனைப் போல அமோஹாஸ்திரம் விரைந்து போய் மோஹாஸ்திரத்தை அழித்தது!

விஜயன் தங்கள் அஸ்திரத்தை அழித்தும் அசுரர்கள் சோர்வடையவில்லை. அவர்கள் மேலும் உக்கிர மடைந்தார்கள். பல கொடிய ஆயுதங்களை அவன் மேல் எறிந்தார்கள். அதற்குப் பதிலாக அர்ச்சுனன் பாணங்களைப் பிரயோகம் செய்து பல லக்ஷ அசுரர்களைக் கொன்றான். அந்தக் காட்சியைத் தேவர்கள் கண்டு குதூகலித்தார்கள்.

மாண்டவர்கள் போக மீதியிருந்த அசுரர்கள் அர்ச்சுனனைப் பார்த்து, ''அர்ச்சுனா! எங்களை மறுபடியும் அவமானப்படுத்தினாய். அடே! உன் உயிரை இப்போதே

போக்குவோம்!'' என்று கர்ஜனை செய்து, அவன் மேல் பல்லாயிரக்கணக்கான கொடிய ஆயுதங்களை எறிந்தார்கள்.

அர்ச்சுனன் அந்த ஆயுதங்களையெல்லாம் தனது அம்புகளால் அழித்தான். பிறகு, தனது கணைகளால் அசுரர்களுடைய மார்புகளையும், தோள்களையும், கண்களையும், வயிறுகளையும், வாய்களையும், தலைகளையும், கால்களையும் கண்டதுண்டமாக்கினான். மேலும், அவன் அம்புகளால் அவர்களுடைய ஆயுளையும், வரங்களையும், மந்திரங்களையும் அழித்தான்.

ஆனால் என்ன மாயம்! இறந்த மூன்று கோடி அசுரர்களும் திரும்பவும் உயிர் பெற்று அர்ச்சுனனோடு யுத்தத்துக்கு வந்தார்கள். அந்த அதிசயத்தைக் கண்டு அர்ச்சுனன் ஒன்றும் புரியாமல் திகைத்தான். இனி அவர்களை எப்படிக் கொல்வது என்று புரியாமல் வருத்தத்தோடு யோசித்தான்.

அப்போது அசரீரி ஒன்று அர்ச்சுனனுக்கு மட்டும் கேட்கும்படி ஆகாயத்தில் எழுந்தது. ''அர்ச்சுனா! நான் சொல்வதைக் கேள். யமனிடத்தில் இந்த அசுரர்கள் முன்பு ஆயுதங்களும், வரங்களும் , தேகபலமும் பெற்றுள்ளார்கள். ஆகையால், இவர்கள் கொடிய ஆயுதங்களுக்குச் சாகமாட்டார்கள். இவர்களுடைய உடம்பை நூறு துண்டுகளாக்கிப் போட்டாலும் முன் போலவே உருவத்தோடு உயிர் பெறுவார்கள். இவர்கள் பரிகாசமாகப் பேசுகின்ற சமயத்தில் அம்பெய்து கொல்வதே வழி!''

ஆகாயத்தில் எழுந்த அசரீரி வார்த்தைகளைக் கேட்டு அர்ச்சுனன் மயக்கம் தெளிந்தான். உடனே அவன் சந்தோஷத்தோடு ரதத்தைத் திருப்பி ஓட்டச் செய்தான். பாசுபதாஸ்திரத்தை அசுரர்கள் அறியாதபடி வில்லிலே தொடுத்துப் பிரயோகிக்கத் தயாராக வைத்துக் கொண்டான்.

கொடிய அசுரர்கள் அர்ச்சுனன் தேரைத் திருப்பிக் கொண்டு போனதைக் கண்டதும், அவன் தோற்றோடுவதாக எண்ணிக் கொண்டார்கள். அதனால் அவனை நோக்கிப் பரிகாசம் புரிந்தார்கள். உடனே அர்ச்சுனன் அவர்கள் மேல் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். அவ்வளவு தான். மூன்று கோடி அசுரர்களும் நொடியில் மாண்டு போனார்கள்.

அதுகண்டு தேவர்கள் மகிழ்ந்தார்கள். அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

அதேசமயம் அசுரமங்கையர்கள் இறந்த அசுரர்களின் உடம்பின் மேல் விழுந்து புரண்டு கதறினார்கள். அக்காட்சியைப் பார்த்து அர்ச்சுனன் கோபம் தணிந்து சாந்தமானான். அந்த அசுர மங்கையர்களின் மீது இரக்கம் கொண்டான்.

உடனே மாதலியைப் பார்த்து, "தேர்ப்பாகா! ரதத்தைத் திருப்பி தேவலோகத்துக்கு ஓட்டிச் செல்!" என்று அர்ச்சுனன் கட்டளையிட்டான்.

மாதலி மறுகணம் தேரை ஆகாயத்தில் செலுத்தினான். அப்போது வழியில் இருந்த ஓர் அழகிய நகரத்தைக் கண்டு அர்ச்சுனன் வியந்து, "மாதலி! இந்த நகரத்தின் வரலாறு என்ன?" என்று கேட்டான்.

அதற்கு மாதலி, "தேவ இளவரசே! அசுரப் பெண்களுள் காலகை, புலோமை என்னும் இரண்டு பெண்கள் உண்டு. அவர்கள் நெஞ்சில் வஞ்சனை நிறைந்தவர்கள். கருத்த கூந்தல் கொண்டவர்கள். அழகிய பொற்கொடி போன்ற இடையுடையவர்கள். அவர்கள் பிரமனை நோக்கி கைலாசகிரியிலிருந்து தவம் பண்ணினார்கள். அப்படி தவம் பண்ணிய காலத்தில் பிரமா பிரசன்னமாகி அவர்களுக்குப் பலவரங்களைக் கொடுத்தார். காசியப முனிவரின் மனைவியாகிய அதிதி பெற்ற புதல்வர்களான தேவர்களால் தங்கள் இருவரின் புதல்வர்களான அசுரத்தலைவர்கள் இறக்காதிருக்கின்ற வரத்தையும், ஆகாயத்தில் பறந்து போகின்ற அழகிய இந்த இரணிய நகரத்தையும் பிரமதேவர் அவர்களுக்குத் தந்தார். அப்பெண்களில் காலகையின் புதல்வராகிய அசுரர்கள் காலகேயர்களாவார்கள். அந்தக் கொடிய அசுரர்கள் பொன்னொளி வீசும் உடம்பைக் கொண்டவர்கள். ஒளிவீசும் பொற்குண்டலங்களைக் காதில் அணிந்திருப்பவர்கள். வேகமாகப் போய் யமனையும் போரில் கொல்லக் கூடிய வலிமை படைத்தவர்கள். பயங்கர ஆயுதங்களையுடையவர்கள். கோபத்தால் விஷத்தைக் கக்குகின்ற கண்களைக் கொண்டவர்கள். முப்புரம் எரித்த காலத்தில் சிவபெருமான் அழித்த அசுரர்கள் போன்றவர்கள். அவர்கள் மொத்தம் அறுபதினாயிரம் பேர் இந்த

இரணியபுரத்தில் வசிக்கின்றார்கள்!'' என்று இரணியபுரத்தைப் பற்றியும், அங்கு வசிக்கின்ற அசுரர்களைப் பற்றியும் விளக்கமாக அர்ச்சுனனுக்குத் தெரிவித்தான்.

மாதலி சொன்னதைக் கேட்ட அர்ச்சுனன், ''இப்போதே இந்தக் காலகேயர்களின் உயிரை யமபட்டணத்துக்கு அனுப்புவேன். அதன் பின்பே நான் தேவலோகத்து அமராவதிபட்டணத்துக்குச் செல்வேன்!'' என்று சபதம் செய்தான்.

பிறகு அவன் தேர்ப்பாகனை நோக்கி, ''மாதலி! உடனே தேரை இந்த நகரத்தின் மேல் ஓட்டு!'' என்று கட்டளையிட்டான்.

அக்கணமே மாதலி ரதத்தை இரணியபுரத்தின் மேல் வேகமாக ஓட்டினான்.

அர்ச்சுனன் அச்சமயம் தனது வில்லின் நாணைத் தெறித்துப் பேரோசை எழுப்பினான்.

விஜயனுடைய ரத சப்தமும், நாணொலியும் கேட்டு இடியோசை கேட்ட நாகம் போல் காலகேயர்கள் திடுக்கிட்டார்கள். தாங்கள் கேட்ட ஓசைகள் எதனால் ஏற்பட்டது என்று புரியாமல் திகைத்தார்கள். தங்களுக்குள் அவர்கள், ''நாம் கேட்ட இந்த ஓசை யுகாந்த காலத்தில் ஏழுமேகங்களும் இடி முழக்கத்தோடு செய்கின்ற ஓசையோ? பிரளயத்தில் சமுத்திரம் பொங்கி வருகின்ற ஓசையோ? இல்லை, தேவசேனாதிபதியாகிய சுப்பிரமணியக் கடவுள் ஆகாசமார்க்கத்தில் தேரைச் செலுத்தி வருகின்ற ஓசைதானோ? இவ்வோசைகளுள் எந்த ஓசையை நாம் கேட்டோம்?'' என்று சொல்லிக் கொண்டார்கள்.

காலகேயர்கள் அதனால் மிகவும் கோபம் கொண்டார்கள். பற்களை நற நறவென்று கடித்தார்கள். வசைமொழிகளைப் பேசினார்கள். தீப்பறக்க விழித்துப் பார்த்தார்கள். மீசையைத் திருகிவிட்டார்கள். கொடிய வாளை உறையிலிருந்து எடுத்தார்கள். பாற்கடலில் கொதித்தெழுந்த காளகூடம் என்னும் கொடிய விஷம் போல் தங்கள் இருப்பிடத்தைவிட்டு எழுந்து ஓசை வந்த திசையை நோக்கி ஓடினார்கள். ஓசைக்கான காரணத்தைக் கோபத்தோடு ஆராய்ந்தார்கள். தங்களுடைய பராக்கிரமத்தை நினைத்துச் சிரித்தார்கள்.

தேவர்களின் வாழ்வை நாசப்படுத்துகின்ற ஆயுதங்களைத் தேடி எடுத்தார்கள். ரதங்களில் வேகமாக ஏறினார்கள். குதிரைகளும், கழுகுகளும், யானைகளும், சிங்கங்களும் இழுக்கின்ற ரதங்களின் மேல் ஏறிக் கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள்.

யுத்தகளத்தில் அர்ச்சுனனைக் கண்ட காலகேயர்கள் தங்களுடைய மனத்தில், 'நம்மை எதிர்த்துப் போர் செய்யக் கூடிய அளவுக்கு யமன் சாமர்த்தியம் உடையவன் இல்லை. நம்மால் முன்பு அபயம் கொடுக்கப்பட்டுத் தோற்று ஓடியவன் இந்திரன். ஆகையால் இப்போது நம்மோடு யுத்தம் புரிய இந்திரனோ, யமனோ வரமாட்டார்கள். முருகக் கடவுள் நம்மோடு சண்டைக்கு வந்திருக்கிறான் என்றாலோ, நம் எதிரே நிற்கும் இவனுக்கு ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களும் கைகளும் இல்லை. ஆகவே, இவன் முருகன் இல்லை. இப்போது போருக்கு வந்திருக்கும் இந்த வீரன் அந்த மூவரில்லாமல் வேறு யார்?' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது அர்ச்சுனன் அந்த அசுரர்களின் சந்திரகாந்தம் வீசும் வலிய பற்களையும், சூரியகாந்தம் வீச காதுகளில் விளங்கும் ரத்தினகுண்டலங்களின் அழகையும், சூரிய ஒளி மின்னும் கிரீடத்தையும் கண்டு மனம் வருந்தினான். தான் கொண்ட வருத்தத்தோடு, "மன்மதனை ஜெயித்த அழகுள்ள தோற்றமும், ஆபரணங்கள் பிரகாசிக்கும் மார்பும் இந்த அசுரர்களுக்கு இருப்பது போல் தேவர்களுக்குக் கூட கிடையாது. இந்த அழகிய அசுரர்களைக் கொல்ல வேண்டும் என்று எண்ணி வந்தது நான் முன் ஜன்மத்தில் செய்த பாவமோ?" என்று சொன்னான்.

ஆனால், அவர்களைக் கொல்வதாக முன்பு செய்த சபதமே முடிவில் அர்ச்சுனனுடைய நெஞ்சில் உறுதிபட்டது!

விஜயன் அப்படி நினைக்கவும் காலகேயர்கள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அர்ச்சுனனுடைய மார்பிலும் தோள்களிலும் அம்புகளைப் பிரயோகித்தார்கள். அவனை நோக்கி இரணியபுரத்து அசுரர்கள், "புழுவென்று எங்களால் மதிக்கப்படுகின்ற மானிடனாகிய நீ, எங்களுக்குப் பயந்து கைலாசகிரியின் குகைகளிலே ஓடி ஒளிகின்ற தேவர்களின்

கட்டளையால் தனியாக ரதத்தில் ஏறி யுத்தத்துக்கு வந்தாயோ? இது ஏனடா?'' என்று கேட்டார்கள்.

காலகேயர்களின் வார்த்தையைக் கேட்டு அர்ச்சுனன் நகைத்து, ''காலகேயர்களே! உங்களோடு நான் சமர் செய்து உங்களுடைய உயிரை யமபட்டணத்துக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்துவிட்டது!'' என்று பதில் சொன்னான்.

அர்ச்சுனன் வார்த்தையால் விஷம் போலக் காலகேயர்கள் கோபம் கொண்டார்கள். தீப்பறக்க அவனை விழித்துப் பார்த்தார்கள். சூலங்களையும், வேல்களையும், நேமிசக்கரங்களையும், மழுக்களையும், அம்புகளையும், ஈட்டிகளையும் அவன்மீது உக்கிரத்துடன் எறிந்தார்கள்.

காண்டீபன் அந்த ஆயுதங்களையெல்லாம் தனது அம்புகளால் அழித்துவிட்டு , அவர்கள் மேல் பல கோடி பாணங்களைப் பிரயோகித்தான். அர்ச்சுன பாணங்கள் குறிதவறாமல் போய் அசுரர்களின் உடம்பில் தைத்து குருதி கொட்டச் செய்தன. அதனால் காலகேயர்கள் மிகவும் துன்பமடைந்தார்கள். உடனே அவர்கள் ஆரவாரத்தோடு ஆகாயத்தில் சஞ்சரித்து, தங்கள் பட்டணத்தோடு பூமியிலும் சமுத்திரத்திலும் மறைந்து மாயம் செய்தார்கள்.

காலகேயர்களின் இரணியபுரம் ஒருசமயம் அர்ச்சுனனுடைய ரதத்துக்கு எதிரே காணப்பட்டது. உடனே ஆகாயத்தில் சஞ்சரித்தது. மறுசமயம் ஒரு மலையின் மேல் தோன்றியது. அடுத்த சமயம் எங்கும் அது இருந்தது. அந்தக் கணத்திலேயே அது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. இப்படி பல மாயங்களை இரணியபுரம் செய்தது!

அர்ச்சுனன் அசுரர்களின் மாயத்தை அறிந்து, தனது காண்டீபத்தை வளைத்து எங்கும் பாணங்களைச் சஞ்சரிக்கவிட்டான். விஜயனின் அச்செயலைப் பார்த்த அசுரர்கள், ''ஆகா! இடி முழங்கும் மேகம் போன்ற எதிரியின் தேர் ஒன்றுதான். அழியாத மேருபோல் வளைந்து அம்புகளை வர்ஷிக்கும் பயங்கரமான வில்லும் ஒன்றுதான். அப்படியிருந்தும் ஆகாயமெங்கும் அம்புகளை வர்ஷிக்கின்றான். ஒரு மானிடன் என்றால், அவனுடைய வில்வித்தைதான் எத்தனைச் சிறந்தது! இவனுடைய வில்லாற்றல் நல்லது!'' என்று போற்றிச் சொன்னார்கள்.

ஆனால், அதேசமயம் அவர்கள் மிகவும் கோபம்கொண்டு, புருவத்தை நெரித்துக் கண்களிலிருந்து தீப்பொறியைச் சொரிந்தார்கள். அர்ச்சுனன் மேல் வேகமாக அம்புமழையையும், இடி மழையையும், நெருப்பு மழையையும் பொழிந்து காளமேகம் போல் கர்ஜனை செய்தார்கள்.

காலகேயர்கள் அப்படி யுத்தம் செய்யவும், அர்ச்சுனன், 'இந்த அசுரர்களின் உயிரை வாங்குவதற்கு இதுவே தக்க சமயம்' என்று எண்ணி, அவர்களின் மார்புக்கும் தோளுக்கும் குறி வைத்துப் பாணங்களை வர்ஷித்தான்.

அர்ச்சுனன் விட்ட அம்புகளை அசுரர்கள் நொடியில் தங்கள் ஆயுதங்களால் சிதைத்துவிட்டு, அவன் மேல் கணைகளை ஏவினார்கள்.

இப்படியாக தசரதசக்கரவர்த்தியின் திருமகனான ஸ்ரீராமபிரானும் இலங்காபுரி அரக்கர்களும் போரிட்டது போல, இந்திரகுமாரனும் காலகேயர்களும் கடும்யுத்தம் செய்தார்கள்!

கடைசியாக அர்ச்சுனன் சிவபெருமானைத் தியானித்து பாசுபதாஸ்திரத்தை காலகேயர்களின்மீது பிரயோகம் செய்தான். அந்த அஸ்திரம் நொடியில் விரைந்து போய் அறுபதினாயிரம் அசுரர்களையும் எமபட்டணத்துக்கு அனுப்பி வைத்தது!

மாதலி அர்ச்சுனனுடைய காண்டீப ஆற்றலைக் கண்டு சந்தோஷித்தான். அவனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தான்.

இந்திரன் முதலான தேவர்கள் அர்ச்சுனனால் தங்களின் பகை அசுரர்கள் அழிந்தது கண்டார்கள். அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தையும் பலத்தையும் நினைத்து மகிழ்ந்தார்கள். அதனால் அமிருத பானம் செய்தவர்கள் போல ஆனந்தக் கூத்தாடினார்கள்.

அப்போது இரணியபுரம் மறைந்தது! பிரமன் அசுரர்களுக்குக் கொடுத்த வரம் முடிந்ததால் அது மறைந்ததா? அல்லது அர்ச்சுனன் பாணத்தால் அது மறைந்ததா? இல்லை, தன்னிடம் வசித்த அசுரர்கள் இறந்ததால் மறைந்ததா? எதனாலோ அது மறைந்துவிட்டது!

கொடிய காலகேயர்களை வதம் செய்த அர்ச்சுனன் யுத்த களைப்பு தீருவதற்காக வில்லிலிருந்து நாணை இறக்கிவிட்டு, தேரிலிருந்து இறங்கி நின்று சிரமப்பரிகாரம் செய்தான்.

பிறகு, அர்ச்சுனன் களைப்பு தீர்ந்து அமராவதிப் பட்டணத்துக்குப் போகத் தேரில் ஏறினான். மாதலி ரதத்தை வேகமாக ஓட்டினான்.

அவர்களுக்கு முன்பாக சித்திரசேனன் போய் தேவர்களுக்கும் இந்திரனுக்கும் அர்ச்சுனனுடைய வெற்றியைத் தெரிவித்தான்.

சித்திரசேனன் சொன்னதைக் கேட்டு இந்திரனும் தேவர்களும் மகிழ்ந்தார்கள். உடனே இந்திரன் தேவலோகத்தையும் அமராவதிப்பட்டணத்தையும் அழகாக அலங்கரிக்கச் செய்தான். திக்குபாலகர்களோடும் தேவர்களோடும் எதிர்கொண்டு சென்று அர்ச்சுனனை வரவேற்று அழைத்து வந்தான் இந்திரன்.

அப்போது கின்னர மிதுனங்கள் இசைபாடின. தேவமுரசுகள் ஒலித்தன. துந்துபிகள் முழங்கின. முனிவர்கள் வேதமந்திரங்களை ஓதி ஆசீர்வதித்தார்கள். தேவேந்திரன் அர்ச்சுனனைப் புத்திர வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டான்.

அசுரவதம் செய்து வந்த விஜயனை இந்திரன் ஐராவதத்தில் ஏற்றிப் பட்டணப் பிரவேசம் செய்வித்தான். அப்போது வித்தியாதரன் ஒருவன் அந்தக் காட்சியைக் கண்டான். மானிடனாகிய அர்ச்சுனன் ஐராவதத்தில் நகர்வலம் வருவது அவனுக்குப் பொறுக்கவில்லை. அவன் இந்திரனைப் பார்த்து, ''தேவமன்னா! மானிடனுக்கு இப்படிப்பட்ட சிறப்புகள் தகுமோ?'' என்று கேட்டான்.

வித்தியாதரனுடைய வார்த்தைகளால் தேவேந்திரன் கோபம் கொண்டான். கண்களில் தீப்பொறி பறக்க அந்த வித்தியாதரனை நோக்கி இந்திரன், ''புத்தியில்லாதவனே ! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தேவர்களுக்கும் பூமாதேவிக்கும் உண்டான துன்பத்தைத் தீர்ப்பதற்காக, முன்பு ஜானகி பிராட்டி மணாளனான ஸ்ரீராமபிரானாக அவதரித்தான். அது போலவே இப்போதும்

பூலோகத்திலே மறுபடியும் அவன் அர்ச்சுனனுடைய ரூபமாக அவதாரம் செய்தான். ஆகையால், விஷ்ணுவின் அவதாரமான இந்த அர்ச்சுனனை இப்போது நீ சாதாரண மானிடன் என்று நினைத்து அலட்சியம் செய்ய வேண்டாம்!'' என்று சொன்னான்.

மேலும், அவன் அர்ச்சுனனுடைய பட்டணப் பிரவேசத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடி, தனது அரண்மனைக்கு அவனை அழைத்துச் சென்றான்.

தேவேந்திரன் அர்ச்சுனனுக்குச் சரியாசன மரியாதை செய்தான். அவர்களைச் சுற்றி தேவர்கள் நின்று கொண்டு வாழ்த்தினார்கள். அச்சமயத்தில் இந்திரன் மாதலியை நோக்கி, ''தேவசாரதியே! நீ அர்ச்சுனனுடைய போர்ச் செயலைப் பற்றி எங்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்!'' என்று கூறினான்.

உடனே மாதலி , ''தேவர்தலைவா! அர்ச்சுனனுக்கும் அசுரர்களுக்கும் உண்டான யுத்தத்தைப் பற்றி என்னால் இப்போது எடுத்துச் சொல்வதற்கு முடியாது. ஆயினும் முடிந்த அளவுக்கு கொஞ்சம் சொல்கிறேன். தோயமாபுரத்து நிவாதகவசராகிய மூன்று கோடி அசுரர்களும் அர்ச்சுனனுக்கு முன்னே ஒன்றாக வந்து இறந்ததைக் கண்டேன். பின்பு, அர்ச்சுனனுடைய வில்லின் இடி போன்ற நாணோசையைக் கேட்டேன். அதன் பிறகு பிரமனுடைய வரத்தால் பலமும் வரமும் கொண்ட இரணியபுரத்து காலகேயர்களாகிய அறுபதினாயிரம் அசுரர்களையும் ஒரே அஸ்திரத்தால் நொடிப் பொழுதில் அர்ச்சுனன் எமப்பட்டணம் சேர்த்ததைக் கண்டேன். இப்படியெல்லாம் நடந்தது மாயையினாலோ? இல்லை, மானிடனாகிய அர்ச்சுனனது வலிய வில்லின் பலத்தினாலோ? எனக்குத் தெரியவில்லை!'' என்று தெரிவித்தான்.

ரதசாரதி கூறியதைக் கேட்டு தேவேந்திரன் குதூகலித்தான். அப்போது தேவர்கள் எல்லோரும் பேரானந்தத்துடன் தனித்தனியே வேத மந்திரங்களை உச்சரித்தபடி, பகை வெல்லும் ஆயுதங்களையும் மற்றும் பலவற்றையும் விஜயனுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

பிறகு, அர்ச்சுனன் தேவேந்திரனின் பாதங்களை வணங்கி, ''தந்தையே! நான் என் தமையனாராகிய

தருமபுத்திரரின் திருவடிகளைச் சென்று வணங்க வேண்டும். ஆகையால், எனக்கு இப்போதே உத்தரவு கொடுத்து அருளுங்கள்!'' என்று வேண்டினான்.

இந்திரன் அதுகேட்டு, ''குமாரனே! அவசரப்பட வேண்டாம். இன்னும் சில நாட்கள் இந்த அமராவதிப் பட்டணத்தில் தங்கிவிட்டுச் செல்!'' என்று சொல்லி, அர்ச்சுனனுக்கு ஐயாயிரம் தேவகன்னிகைகளையும் பொன்மாளிகையையும் கொடுத்தான்.

மேலும், அவன் தன் மைந்தனுக்கு தேவாயுதங் களையும் மந்திரங்களையும் கொடுத்தான். பிரமன் உண்டாக்கிய அண்டகோளம் ஒரு கால் அழிந்தால் தமது கையிலிருந்து ஒரு ரோமம் உதிர்கின்ற ரோமசரிஷியிடம் இந்திரன் நடந்த செய்திகளையெல்லாம் சொன்னான்.

திரும்பவும் அவன் ரோமசரிஷியைப் பார்த்து, ''மகரிஷியே! அர்ச்சுனன் தருமனைவிட்டுப் பிரிந்த பின்பு கடும்தவம் செய்து சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றான். எனது பகைவர்களான அசுரர்களையெல்லாம் தானே தனித்து நின்று அழித்தான். இவற்றையெல்லாம் நீர்போய் தருமனுக்கு எடுத்துச் சொல்லும்!'' என்று கூறினான்.

தேவேந்திர கட்டளையை ஏற்று ரோமசரிஷி உடனே அமராவதிப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் காமிய வனத்துக்குச் சென்றார்!

3. புஷ்ப யாத்திரை

அர்ச்சுனன் தேவேந்திரனுடைய அமராவதிப் பட்டணத்துப் பொன்மாளிகையில் இன்பமாக வசித்திருந்தான். அப்போது காமியவனத்தில் தருமர் தம்பி மற்ற தம்பிகளுடனும் திரௌபதியுடனும் வசித்து வந்தார். இனி, தருமருக்கு ஏற்பட்டதையெல்லாம் சொல்லத் தொடங்குவோம்.

தருமர் அர்ச்சுனனைப் பிரிந்த வருத்தத்தோடு அவ்வாறு இருக்கும் போது ரோமசரிஷி அவரிடம் வந்தார். தருமரை நோக்கி அவர், ''தருமபுத்திரா! அர்ச்சுனனைப் பிரிந்த வருத்தத்தால் பயப்பட வேண்டாம்!'' என்றார்.

ரோமசமகரிஷியைக் கண்ட தருமரும் மற்ற பாண்டவர்களும் மகிழ்ந்தார்கள். அவரை எதிர் சென்று வரவேற்று, அவர் பாதங்களை நமஸ்கரித்தார்கள். அவர்களை மகரிஷி ஆசீர்வதித்தார்.

பின்பு மகரிஷி, தருமர் மனப்பிரீதியோடு கொடுத்த புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்தார். தருமரைப் பார்த்து ரோமசரிஷி, ''பாண்டுமைந்தா! உன் தம்பி அர்ச்சுனன் கைலாசகிரியில் கடும்தவம் புரிந்து சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றான். பின்பு, இந்திரன் அவனைத் தேவலோகத்துக்கு அழைத்துச் சென்றான். அவனுக்குச் சரியாசன மரியாதை செய்தான். தன் கிரீடத்தை அவனுக்குச் சூட்டினான். இந்திரனுடைய பகைவர்களான நிவாதகவசர் காலகேயர் என்ற அசுரர்களை இந்திர கட்டளையால் அர்ச்சுனன் வதம்செய்தான். வெற்றி விஜயனாகத் திரும்பிய அர்ச்சுனனை தேவேந்திரன் சிலநாட்கள் தனது அமராவதிப் பட்டணத்தில் தங்கிச் செல்லும்படி அன்புக் கட்டளை இட்டுள்ளான். அதன்படி அர்ச்சுனன் அமராவதிப் பட்டணத்திலுள்ள ஒரு பொன்மாளிகையில் மகிழ்ச்சியோடு தங்கியிருக்கின்றான். இன்னும் சில நாட்களில் அர்ச்சுனன் தேவேந்திரனிடம் உத்தரவு பெற்று காந்தர்ப்பமலை வழியாகத் திரும்பி பூலோகத்துக்கு வருவான். இச்செய்திகளை இந்திரன் எனக்குச் சொல்லி, அர்ச்சுனனைப் பிரிந்ததால் உனக்கு உண்டான துன்பத்தைப் போக்கும்படி அவன் எனக்குக் கட்டளையிட்டான். அதன் நிமித்தமாகவே நானும் இப்போது உன்னிடம் வந்தேன். இந்தச் செய்திகளையும் தெரிவித்தேன்!'' என்று கூறினார்.

ரோமசரிஷி கூறியதைக் கேட்டு தருமரும், மற்ற பாண்டவர்களும், திரௌபதியும் வருத்தம் தீர்ந்தார்கள். அளவற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். பிறகு, ரோமசமகரிஷி வழி காட்டிச் செல்ல அவர்கள் காமியவனத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். வழியிலுள்ள மதுகர தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானம் செய்தார்கள். அவர்கள் இந்திரகீலசயிலத்தின் சாரலை அடைந்தார்கள்.

அந்த இந்திரகீல பருவதத்தின் அதிசயங்களையெல்லாம் கண்டு அவர்கள் மகிழ்ந்தார்கள். அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் நீராடினார்கள். பின்பு, ரோமசமகரிஷி

அர்ச்சுனன் தபசு புரிந்த இடத்தை அவர்களுக்குக் காட்டினார். அவ்விடத்தைக் கண்ட பாண்டவர்கள் அர்ச்சுனனையே நேரில் கண்டது போல் பார்த்து மகிழ்ந்தார்கள். அம்மகிழ்ச்சியோடு தம்மை ரிஷிகள் தொடர ரோமசமுனிவரோடு அவர்கள் தசாங்கரிஷியின் தபோவனத்தை அடைந்தார்கள்.

அதன் பின்பு பாண்டவர்கள் அங்கிருந்த முனிவர்களின் பாதங்களை வணங்கி ஆசிபெற்றார்கள். அந்தத் தபோவனத்துத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துவிட்டுப் புறப்பட்டுப் போனார்கள். வழியிலே ரோமசரிஷி அவர்களுக்கு மந்தரமலையைக் காட்டினார். பாண்டவர்கள் அம்மலையைக் கடந்து சென்றார்கள். கடைசியாக அர்ச்சுனன் தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வரப்போகின்ற இடமான காந்தர்ப்பமலையை அவர்களுக்கு மகரிஷி காட்டினார்.

ரோமசரிஷி அந்தக் காந்தர்ப்பமலையில் தவம்புரியும் ரிஷிகளையெல்லாம் பற்றி தருமருக்கு விளக்கமாக எடுத்துச் சொன்னார். அங்கிருந்து கைலாசகிரி நூறு யோஜனை தூரத்தில் உள்ளது என்ற விபரத்தையும் தெரிவித்தார். காந்தர்ப்பகிரியில் வசிக்கும் தெய்வரிஷியான விசாலய முனிவரின் இருப்பிடத்தையும் அவர்களுக்குக் காட்டினார். பிறகு அவர் தருமரை நோக்கி, ''புண்ணியனே! செங்கோல் கொண்டவனே! இந்தக் காந்தர்ப்பமலையில் ஒரு வருஷ காலம் தங்கியிரு!'' என்றார்.

மகரிஷியின் கட்டளைப்படியே தருமர் திரௌபதியோடும் தம்பிகளோடும் அங்கே தங்கியிருந்தார். பாண்டவர்களும் திரௌபதியும் அந்த இடத்தையே தங்கள் சொந்த இடமாக நினைத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்கள். அம்மலையிலுள்ள இலைகளையும் காய்களையும் கனிகளையும் உண்டு கவலையில்லாமல் இருந்தார்கள்.

அப்போது ஒரு நாள் தேவேந்திரனுடைய பொற்கிரீடம் அணிந்த தலையின் மேல் இருக்க வேண்டிய பொற்றாமரை மலர் ஒன்று திரௌபதியின் எதிரே வந்து விழுந்தது. அம்மலரைக் கண்டு திரௌபதி ஆச்சர்யப்பட்டாள். கண்களை அகல விரித்து அதனைப் பார்த்தாள். கையில் அம்மலரை எடுத்து வைத்துக் கொண்டு, ''இந்தப்

பொற்றாமரைப்பூ உலக முழுவதையும் உண்டாக்கிய திருமாலின் நாபிக் கமலமோ? சூரியனுடைய கரத்திலிருக்கின்ற அந்த மலரோ? ஸ்ரீமகாலக்ஷ்மி வசிக்கும் தாமரை மலரோ? பூமியிலுள்ள எந்தத் தாமரை மலரும் தனக்கு முன்னே கருகிப் போகும்படியாக எல்லா இடத்திலும் இந்த மலரின் சுகந்தம் வீசுகின்றதே!'' என்று அதன் நறுமணத்தைப் பற்றிச் சிந்தித்தாள்.

திரௌபதி அச்சிந்தனையோடு பீமனிடம் சென்று அம்மலரைக் காட்டி, "சுவாமி! இந்தத் தாமரை மலருக்கு ஒப்பான மலர் இந்தப் பூமியில் வேறு ஒரு மலரும் இல்லை!" என்று கூறி, அதனை அவன் கையில் கொடுத்தாள்.

மேலும் பாஞ்சாலி அவனிடம், "இம்மலரைப் போன்ற அழகிய மலர் ஒன்றைத் தாங்கள் எனக்குக் கருணை செய்து கொடுக்க வேண்டும்!'' என்று பிரார்த்தித்தாள்.

பீமன் உடனே அம்மலரோடு சென்று ரோமசரிஷியின் பாதங்களை வணங்கினான். அத்தாமரைப் பூவை அவரது சந்நிதானத்திலே வைத்தான். அவரை நோக்கி, "மகரிஷியே! இப்பூவின் வரலாறு என்ன?'' என்று வினவினான்.

அதற்கு முனிசிரேஷ்டர், "பீமா! நாம் இந்தப் பொற்றாமரை மலரின் இயல்பையும் பெருமையையும் பற்றிப் பலபடியாகப் புகழ்ந்து பேசுவதற்கு முடியாது. இது அப்படிப்பட்ட சிறந்த பூ. இப்பூ யட்சர்களுக்குத் தலைவனாகிய குபேரனுடைய அளகாபுரி பட்டணத்தில் உள்ளது. இது போன்ற அருமையான பூ தேவலோகத்தில் தான் உண்டு. மேலும், இப்பூவைப் பற்றிச் சொல்ல வேண்டுவது இல்லை. உன்னைத் தவிர வேறு யாராலும் இம்மலரைக் கொண்டு வருவது என்பது சுலபமில்லை. ஸ்ரீகிருஷ்ணபகவான் தேவலோகத்துக்குச் சென்று சத்திய பாமாவுக்காகப் பாரிஜாத மலரைக் கொண்டு வந்து கொடுத்த பின்பு, இது போன்ற புஷ்பத்தைப் பார்த்து அறிந்தவர்கள் யாரும் இல்லை!'' என்று தெரிவித்தார்.

பாஞ்சாலி தந்த மலரைப் போன்ற மலர் குபேரனுடைய அளகாபுரி பட்டணத்தில் இருக்கின்றது என்று ரோமசரிஷி கூறியதைக் கேட்டு பீமன் மகிழ்ந்தான். உடனே மகரிஷியிடம் உத்தரவு பெற்று கதாயுதமும் வில்லும்

ஏந்தினான். ''தேவர்கள் அநுபவிக்கின்ற நறுமணமுள்ள இது போன்ற பூவை இக்கணமே சென்று கொண்டு வந்து பாஞ்சாலிக்குக் கொடுப்பேன்!'' என்று சொல்லி, அளகாபுரியை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

பீமன் காற்றைவிட விரைவாக வடக்குத் திக்கில் சென்றான். அவன் சென்ற வேகத்தால், அநுமனால் இலங்காபுரி அசோகவனம் அழிந்தது போல பூமி நடுங்கியது. மலைகள் அதிர்ந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. மரங்களும் பறவைகளும் அழிந்தன. அவன் காஞ்சனவனத்தைக் கடந்து சென்றான்.

காஞ்சனவனத்தைவிட்டுப் பலகாத தூரம் சென்று காதலீவனத்தைப் பார்த்தான் பீமன். அங்கிருந்த காதலீ வனத்துக் காவலர்களான ராட்சசர்களையெல்லாம் கொன்று குவித்தான். தான் கொண்ட வெற்றிக்கு அடையாளமாக சிம்மகர்ஜனை செய்தான். அந்தப் பேரொலியால் ஆதிசேஷனுடைய சிரசிலிருந்த மாணிக்கங்கள் சிதறின. தேவர்கள் எல்லோரும் மிக்கத் துன்பத்தை அடைந்தார்கள்.

மேலும் , பீமனுடைய சிம்மகர்ஜனையால் மலைகள் நிலைகுலைந்தன. காடுகள் நிலைகலங்கின. பூமி கலங்கியது. ஆகாயம் அதிர்ந்தது. கடல்கள் குழம்பின. திக்குகள் தடுமாறின. உலகங்கள் யாவும் நடுங்கின. காலம் நிலை கலங்கியது. சான்றோரின் பேச்சும் தடுமாறியது; மனமும் கலக்கம் கொண்டது. உயிரினங்கள் எல்லாம் தவித்தன.

காதலீ வனத்தில் அப்போது அநுமன் தவம் புரிந்து கொண்டிருந்தான். அவன் பீமனுடைய கர்ஜனையைக் கேட்டான். உடனே அநுமன் பீமன் வருகின்ற வழியில் சென்று நின்றான். அவ்வழியிலே அவன் கடல் கடந்த தன் பாதங்களை நீட்டிக் கொண்டும், கைகளை இரண்டு மலைகளிலே வைத்துக் கொண்டும், இலங்காபுரிக்குத் தீ வைத்த வாலை எல்லாத் திசைகளிலும் சுழற்றிக் கொண்டும் நின்றான். ஆம், அவன் விசுவரூபம் கொண்டு நின்றான்!

பிறகு, திருமாலைத் தவிர வேறு யார் கண்களுக்கும் தெரியாத குண்டலங்கள் அணிந்த அநுமன் ஒரு மலையின் மேல் மேருமலை போல் உட்கார்ந்து கொண்டான்.

அப்போது பீமன் தோளைத் தட்டி ஆரவாரம் செய்து கொண்டும், அதட்டிக் கொண்டும், தனது சிரிப்பால் மூவுலகும் நடுங்கும்படிச் செய்து கொண்டும் கம்பீரமாக நடந்து அங்கே வந்தான். வந்தவன் வீரமும் சாமர்த்தியமுமுள்ள அநுமனைக் கண்டான். அவனைப் பீமன் யார் என்று அறியவில்லை. வழியிலே ஒரு குரங்கு தான் மேலே செல்ல முடியாதபடி வழியை அடைத்துக் கொண்டிருப்பதாக அவன் நினைத்தான்.

தன் முன்னே வந்த பீமனை நோக்கி அநுமன், "மானிடா! இந்தக் காதலீ வனத்துக்கு வருவதற்கு தேவர்கள் அஞ்சுவார்கள். அசுரர்களும் அரக்கர்களும் குலை நடுங்குவார்கள். அப்படியிருக்க, நீயோ அஷ்டதிக்குகளும் அஞ்சியோடும்படி ஆரவாரித்துக் கொண்டு வந்திருக்கின்றாய். யாரடா நீ?" என்று கேட்டான்.



அதற்குப் பதில் சொல்லாமல் பீமன், ''என் எதிரில் வந்துள்ள நீ யார்?'' என்று எதிர்கேள்வி கேட்டான்.

வாயுகுமாரனான அநுமன் அது கேட்டு கோபித்தான். ''அடே! உனது வில்லாற்றலை நினைத்தோ, என்னைப் பார்த்து நீ யார் என்று கேட்டாய்? இல்லை, உன் தோள் வலிமையை எண்ணிக் கேட்டாயோ? அல்லது வேறு எந்தக் காரணத்தால் அப்படிக் கேட்டாய்? உனது பலத்தை அறியும் வழியறியாத மானிடனே! நீ பலமுள்ளவன் என்றால், எனது வாலைத் தாண்டிப் போ, பார்க்கலாம்!'' என்று சவால் விட்டான்.

பீமன் அது கேட்டு, ''ஏ, குரங்கே! அகஸ்தியர் கொடுத்த கோதண்டத்தையுடைய ஸ்ரீராமபிரானின் தூதுவன் அநுமன். சமுத்திரத்தை ஒரே மூச்சில் கடந்த அவன் எனது தமையன். அவனுடைய வாலை மாத்திரமே என்னால் மட்டுமில்லை, யாராலும் தாண்டிச் செல்ல முடியாது. ஆனால், சாதாரண குரங்காகிய உனது வாலைக் கடந்து போவது எனக்குக் கஷ்டமோ? சொல்!'' என்றான்.

உடனே அநுமன், ''நீ சொன்னது நன்றாக இருக்கிறது!'' என்று கூறி ஏளனமாகச் சிரித்தான்.

மேலும் அவன் தொடர்ந்து, ''மானிடனாகிய ராமனைத் தோளில் சுமந்ததற்கே தோள்வலியால் வருந்திய அற்பக் குரங்கையா என்னிடம் பாராட்டிப் பேசுகின்றாய்?'' என்றான்.

அநுமன் சொன்னதைக் கேட்டதும் பீமன் தோள்களைக் குலுக்கி இடி போல் சிரித்தான். அநுமனை நோக்கி ஆரவாரத்துடன், ''அரக்கர் தலைவனாகிய இராவணனுடைய இலங்காபுரியைத் தீய்த்து உலகத்தைக் காத்தருளிய ஸ்ரீராமபிரானையா ஒரு மானிடன் என்று கேவலமாகப் பேசுகின்றாய்?'' என்றவன், ஸ்ரீராமனின் பெருமையையும் அநுமனுடைய புஜபராக்கிரமத்தையும் எடுத்துக் கூறினான்.

பீமன் கூறியதையெல்லாம் கேட்ட அநுமன் மனம் சந்தோஷப்பட்டான். கருணை கொண்டு பீமனை கடாட்சித் தான். பிறகு அவனைப் பார்த்து மாருதி, ''இங்கு நீ என்ன காரியத்தை நினைத்து வந்தாய்? நீ யார்?'' என்று கேட்டான்.

அதற்கு பீமன், ''இவ்வுலகத்தைப் பாதுகாக்கின்ற தருமருக்கு அடுத்த தம்பி நான். அர்ச்சுனனுக்கு முன்னே பிறந்தவன். பீமன் என்பது என் பெயர். நான் வாயுகுமாரன்!'' என்று தெரிவித்தான்.

உடனே அநுமன் பீமனைப் பார்த்து, ''பீமா! ஸ்ரீராமபிரானுடைய புகழை நீ சொன்னமுறை கேட்பதற்கு இன்பமாக இருக்கிறது. உனக்கு ராகவனுடைய புகழைச் சொன்னவர் யார்?'' என்று கேட்டான்.

அநுமனுடைய கேள்விக்கு, ''ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் வில் வலிமையைப் பற்றி முன்பு துரோணாசாரியார் சொல்லப் பலமுறை கேட்டுள்ளேன்!'' என்றான் பீமன்.

கடைசியாக அநுமன் பீமனிடம், ''தம்பி! நான் யார் தெரியுமா? இலங்காபுரியை வாலினால் கொளுத்தித் தீர்த்தவனும் நானே. ஸ்ரீராமபிரானுடைய பாதங்களைச் சதா தியானிக்கின்ற அடியவனும் நானே. உனது தந்தையாகிய வாயுவுக்குப் பிறந்த குமாரனும் நானே. ஆம், இந்த வாழ்க்கையைக் கொண்ட அநுமன் நான்தான்!'' என்றான்.

அநுமன் கூறிய செய்தி கேட்டு பீமன் அளவில்லாமல் மகிழ்ந்தான். அநுமனைத் தோத்திரஞ் செய்து ஆனந்தக் கூத்தாடினான். ''எப்போது நாம் செய்த நல்ல தவம் பொய்க்காது!'' என்று அதிசயித்துக் கூறினான். அநுமனின் அருகில் போய் அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கினான்.

தன்னை நமஸ்கரித்த பீமனை அன்போடு கைகளால் எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான் அநுமன். பிறகு அவனை நோக்கி, ''தம்பி! நெருப்பாகக் கொதிக்கும் இந்தக் காட்டிலே உன் பாதங்கள் கொப்பளிக்க, தனியாக வந்த காரணம் என்ன?'' என்று வினவினான்.

தமையனுக்கு பீமன் உடனே பதில் கூறத் தொடங்கி, ''அண்ணா! துரியோதனன் முதலிய பங்காளிகளும், கொடிய வஞ்சகனான சகுனியும் சூதாட்ட மோச வழியில் எங்கள் இராஜ்ஜியத்தைப் பறித்துக் கொண்டார்கள். எங்களுக்கு வனவாசத்தைத் தந்தார்கள். நாங்கள் காமியவனத்தில் வசித்து வந்தோம். அப்போது ஒருநாள் பாஞ்சாலியின் முன் தேவபரிமள பொற்றாமரை மலர் ஒன்று வந்து விழுந்தது.

அதைக் கண்டு வியந்த திரௌபதி தனக்கும் அம்மலர் போல் ஒரு மலர் வேண்டும் என்று என்னிடம் கேட்டாள். அதன் காரணமாக நானும் இங்கே வந்து சேர்ந்தேன்!'' என்று சொல்லி, அநுமனைத் துதித்தான்.

அநுமன் தம்பியைப் பார்த்து, ''பீமா! நான் சொல்வதைக் கேள். திரௌபதி உன்னிடம் கேட்ட மலர் குபேரனுடைய அளகாபுரி பட்டணத்துச் சோலையின் தடாகக் கரையிலே உள்ளது. அங்கு போய்ச் சுதந்திரமாக அம்மலரைப் பறித்துக் கொண்டு வருவது என்பது தேவர்களாலும் முடியாது. அந்தத் தடாகக் கரையை அரக்கர்களும் இயக்கர்களும் கடுமையாகக் காவல் புரிந்து வருகிறார்கள். அந்த இடத்தைத் தவமும் கருணையும் ஒழுக்கமும் இல்லாதவர்கள் கொஞ்சமும் நெருங்க முடியாது. உன்னிடம் அறிவும், ஆற்றலும், சத்தியமும், தூய்மையும், அன்பும், கல்வியும், தவமும், நீதியும், மானமும், வீரமும் நிறைய இருக்கின்றன. ஆகையால், உன்னால் பெறுவதற்கு எதுவுமே கஷ்டமில்லை. நீ அந்தத் தெய்வமலரை வெகுசுலபமாகப் பெற முடியும்!'' என்று கூறி அநுகிரகித்தான்.

மாருதி சொன்னதைக் கேட்டு பீமன் மகிழ்ந்தான். அம்மகிழ்ச்சியோடு அநுமனிடம், ''என் தமையனாராகிய தருமரின் தருமம் எனக்குத் துணையாக உள்ளது. என் வீரம் இருக்கிறது. ஆலோசித்துப் பார்த்தால் உம்முடைய கருணையும் எனக்கு உண்டு. எனது புஜபராக்கிரமமும் உண்டு. தேவர்களும், அசுரர்களும், திரிமூர்த்திகளும், மூவுலகத்துச் சிறந்த வீரர்களும் அந்த இடத்தைக் காவல் புரிந்தாலும் சரி. இந்த நொடியிலேயே குபேரபட்டணத்தை அடைந்து, அங்குள்ள சோலையிலிருக்கும் அந்தப் பரிமளமலரைப் பறித்துக் கொண்டு வருவேன்!'' என்றான் பீமன்.

அப்போது அநுமன் பீமனிடம், ''தம்பி! நீ விரும்பும் வரத்தைக் கேள். தருகிறேன்!'' என்று அன்போடு சொன்னான்.

பீமன் அதற்கு, ''நாங்கள் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் முடித்துச் சென்று, கௌரவர்களோடு போரிடுகின்ற சமயத்தில் போர்க்களத்திலே அர்ச்சுனனுடைய தேரின் கொடிமீது நீர் எழுந்தருளி ஆனந்தக் கூத்திட வேண்டும்!'' என்று வரம் கேட்டான்.

ஸ்ரீராமதூதன் பீமனுக்கு உடனே அந்த வரத்தைக் கொடுத்தருளினான்.

அப்போது பீமன், ''சகோதரரே! இலங்காபுரியில் தீ வைத்த பொழுது நீர்கொண்டிருந்த விசுவரூபத்தை நான் கண்டு மகிழக் காட்டும்!'' என்று மற்றொரு வரத்தை வேண்டினான்.

மாருதி அந்தக் கணத்தில் பீமனுக்கு எதிரே திரிவிக்கிரமனைப் போல் பூமியும் ஆகாயமும் அளக்க விசுவரூபம் எடுத்து எழுந்து நின்றான்! அவனுடைய ஓங்கார உருவத்தைக் கண்டு தேவர்கள் ஆச்சர்யமடைந்தார்கள்!

பீமனால் அநுமனுடைய விசுவரூபத்தையும், அந்த ரூபத்தின் பேரொளியையும் கண்கொண்டு பார்க்க முடிய வில்லை. அவன் கண்கள் கூசின. மனம் அச்சப்பட்டது. அதனால் அவன் அநுமனுடைய பாதங்களில் விழுந்து, ''ஐயனே! உமது விசுவரூபத்தைச் சுருக்கிக் கொள்ளும்!'' என்று வேண்டினான்.

உடனே தமிழில் பக்திப் பாமாலைத் தொடுத்த ஞானியரைப் போல, பீமனுடைய விருப்பத்துக்கு இணங்கி அநுமன் தன் சுய உருவத்தை அடைந்தான்!

அச்சமயம் பீமன் அநுமனை நோக்கி, ''சிரஞ்சீவியே! நான் உம்மைப் பற்றி அலட்சியமாக நினைத்துச் செய்த பிழைகளையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் பொறுத்தருளும்!'' என்று கூறி, அவனுடைய பாதங்களைத் தொழுதான்.

தன் பாதங்களில் தெண்டனிட்ட பீமனை அன்போடு தூக்கி நிறுத்தி அநுமன், ''பீமா! உன் தம்பிகளோடும் திரௌபதியைத் தன்னருகே கொண்ட தருமனோடும் இந்தப் பூமியில் வாழ்ந்திருக்க வேண்டிய நாளெல்லாம் நீ வாழ்ந்து முடித்த பின், என்னிடம் வந்து சேர்!'' என்று அருளினான்.

தனக்குப் பேரருள் புரிந்த மாருதியிடம் பீமன், ''ஐயனே! உமது இன்னருள் எனக்கு எப்போதும் எங்கும் உண்டு. ஆகையால், பதுமநிதியுள்ள அளகாபுரி பட்டணத்துக்குச் சரியான வழியை நான் போவதற்குக் கூறியருளும்!'' என்று வேண்டினான்.

உடனே அநுமன், "தம்பி! இந்தக் காதலீ வனத்தை விட்டு இருநூறு யோஜனை தூரம் தாண்டிய பின்பு, மேலும் சில யோஜனை தூரம் கடந்து செல். அங்கே பரிமளம் வீசும் இது போன்ற தெய்வ மலர் சோலையிலுள்ள தடாகத்திலே காணப்படும். அந்தச் சோலையை அநேக ராட்சசர்கள் காவல் காத்து வருகின்றார்கள். அவர்கள் எல்லா உலகங்களையும் தின்றுவிடக் கூடிய பற்களை உடையவர்கள். அந்த அரக்கர்களைக் கொன்றால், நீ போய் அந்த மலரைப் பறித்து வரலாம். இல்லையென்றால் குபேரனும் அவன் மனைவியும் அச்சோலையில் வந்து தங்கியிருக்கும் போது, நீ சென்று அவர்களோடு நட்புறவு கொள். அப்போது உன் விருப்பப்படி அவன் அம்மலரை உனக்குப் பரிசாகத் தருவான்!" என்றவன், பீமனுக்கு மலரிருக்கும் இடத்துக்குச் செல்லும் வழியையும், வழியிலுள்ள அடையாளங்களையும், மற்றவற்றையும் சொல்லி விடை கொடுத்து அனுப்பினான்.

பீமன் தமையனை நோக்கி, "எம்பெருமானே! வனவாசம் வந்ததின் பயனாக நான் உம்மை இந்த இடத்திலே சந்தித்தேன்!" என்று உபசார வார்த்தைகள் கூறி, அவனுடைய பாதங்களைத் தியானித்துக் கொண்டே ஒரு நாழிகையில் விரைந்து சென்றான்.

அந்தக் கணத்திலே பீமன் வித்தியாதர தேசத்தைக் கடந்து போய், தேவர்கள் துதிக்கும் சக்கரமலைச் சாரலை அடைந்தான். அதன்பின் அங்கிருந்து சென்று கைலாசகிரிக்கு ஒப்பான திவாகர பருவதத்தை அடைந்தான். அங்கே பீமன் புண்டரீகன் என்னும் அரக்கனைக் கண்டான்.

அந்தப் புண்டரீக அரக்கன் கறுத்த மேகத்தோடு விஷமும் வஞ்சனையும் கலந்தது போன்ற உருவத்தோடு தோன்றினான். செம்பட்டை முடிகள் கொண்ட அவன் தலை ஆகாயத்தை இடித்தது. அவன் குகை போல் வாயும், பிறைச்சந்திரன் போல் கோரைப்பற்களும் கொண்டிருந்தான். அவன் தோள்கள் பன்னிரண்டு காததூரம் நீண்டிருந்தன. நொடியில் இருநூறு காததூரம் நடந்து செல்லும் திறமைசாலியாக அவன் இருந்தான். சிவபெருமானையும் எதிர்த்துப் போர் செய்யும் வலிமை அவனுக்கு இருந்தது. தன் பராக்கிரமத்தால் எட்டுத் திக்கையும் ஜெயித்து அவன் தனது பெயரை எழுதி ஜெயஸ்தம்பம் நாட்டி வைத்திருந்தான்.

பீமன் வருவதைக் கண்டான் அந்தப் புண்டரீகன். அதனால் மிகவும் கோபம் கொண்டான். அவன் கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. இடி போல் அவன் சிரித்தான். பற்களால் உதட்டைக் கடித்தான். கோரப்பற்களை மென்றான். இவ்வாறு ஆரவாரத்தோடு சிங்கக் கொடியுடைய பீமனைப் பார்த்து அவன், "அடே! தேவர்களும் அசுரர்களும் நான் வசிக்கின்ற காடு என்பதால், இந்தக் காட்டுக்கு வரமாட்டார்கள். அப்படியிருக்க, மானிடனாகிய நீ எனக்கு ருசிமிக்க மானிட மாமிசம் கொடுப்பதற்காக இந்தக் காட்டுக்கு வந்தாயா? இங்கு வந்த காரணம் என்ன? உடனே சொல்!" என்று கர்ஜித்தான்.

அது கேட்டு மலை போன்ற தன் தோள்கள் குலுங்க பீமன் இடியிடியென்று சிரித்துவிட்டு, "ஏ, ராக்ஷசனே! உன்னுயிரைப் போக்குவதற்காகவே நான் இங்கே வந்தேன்!" என்றான்.

அதனால் புண்டரீகனுக்கும் பீமனுக்கும் கடும் சண்டை ஏற்பட்டது!

மலையும் மலையும் மோதிக் கொள்வது போல், அவர்கள் வெகு நேரம் கோபத்தோடு யுத்தம் செய்தார்கள். ஆயினும் அவர்கள் ஒருவருக்கொருவர் பலத்தில் கொஞ்சமும் சளைக்கவில்லை.

அப்போது பீமனுக்கு மட்டும் கேட்கும்படியாக வானத்தில் அசரீரி ஒன்று எழுந்து, "பீமனே! இந்த அரக்கனுக்கு ஒரு ரிஷியிட்ட சாபமுண்டு. இவன் உன்னால் எந்த வகையாலும் இறந்தே போவான். நீ இவனை நெருங்கி இவனது தோள்மீது கதாயுதத்தால் தாக்கிக் கொல்!" என்றது.

பீமன் அக்கணமே அசரீரி வார்த்தைப்படி புண்டரீகனை நெருங்கி, அவனுடைய தோளில் தனது கதாயுதத்தால் தாக்கினான்.

அவ்வளவுதான். புண்டரீகன் மனம் வருந்தித் துடித்து, வாயுபகவானுக்கு அஞ்சி முன்பு சமுத்திரத்தில் மறைத்த மைநாகமலை போலப் பூமியில் உயிரற்றுச் சாய்ந்தான்!

புண்டரீகனைக் கொன்று பசியால் வருந்தும் கழுகுகளுக்கும், பேய்களுக்கும், பருந்துகளுக்கும்,

யமனுக்கும் விருந்தாகப் படைத்த பின்பு, பீமன் மேலே தொடர்ந்து சென்றான். அங்கிருந்து அவன் சந்திரசைலத்தைக் கடந்து, அளகாபுரி பட்டணத்தைப் போய்ச் சேர்ந்தான்.

பிறகு, பீமன் அநுமன் சொன்ன வழியாகப் போய் அப்பட்டணத்தின் தெற்குப் பக்கமுள்ள சோலையையும், அதிலுள்ள தடாகத்தையும் கண்டான்.

அப்போது அந்த இடத்தைக் காவல் காத்து வந்த கொடிய அரக்கர்கள் நரவாடை வீசுவதை உணர்ந்தார்கள். உடனே அவர்கள் கோபத்தோடு கண்களில் தீப்பறக்க விழித்து நோக்கி, கொடிய ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி ஒன்று கூடினார்கள். அப்படி உக்கிரத்தோடு ஆரவாரித்துக் கூடிய அரக்கர்கள் காற்றாக விரைந்து வந்த பீமனை, யமனைப் பார்ப்பது போல் பார்த்தார்கள். அந்த லக்ஷம் ராக்ஷசர்களும் அவனை நோக்கி, ''மானிடனே! இந்திரன் முதலிய தேவர்களும் இந்தச் சோலையைப் பார்க்க நினைத்தாலும், எங்களால் வருத்தம் அடைவார்கள். அப்படியிருக்க, நீ இங்கே வந்த காரணம் என்ன? உன்னுடைய உயிரை நாங்கள் அழிப்பதற்குள் சொல்!'' என்று கோபத்தோடு அதட்டினார்கள்.

ராக்ஷசர்கள் கூறியதைக் கேட்டு பீமன் சிரித்தான். அவர்களிடம், ''ஏ, ராக்ஷசர்களே! இடியுடைய மேகங்கள் போல ஆரவாரிக்கின்ற உங்களது பிராணனை எனது அம்புகளால் போக்கிவிட்டு, இச்சோலை தடாகத்தில் மலர்ந்திருக்கும் பரிமள மலர்களைப் பறித்துக் கொண்டு போகவே வந்தேன். திரேதாயுகத்திலே தனது கோதண்டத்தால் ராக்ஷச சமூகத்தை அழித்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி மானிடனோ, இல்லை தேவனோ? வஞ்சகர்களே! அவன் மானிடன் என்பதை மறந்து விட்டீர்களோ?'' என்று கேட்டான் பீமன்.

அது கேட்டு அரக்கர்கள், ''நீயா இந்தத் தடாகத்து மலர்களைப் பறிப்பாய்? இப்படிப் பேசிய உனது நாக்குத் துண்டிக்கப் படாமல் இருப்பது சரியில்லை!'' என்று சீற்றத்தோடு சொல்லிவிட்டு, கண்ணபிரான் குடையாகப் பிடித்த கோவர்த்தனமலைமீது கூடிய மேகங்கள் போலப் பீமனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

பீமனைச் சூழ்ந்து கொண்ட அரக்கர்களும், அவர்களுக்குத் தலைவனாகிய வாலசேனனும் ஆரவாரத்தோடு

கொடிய ஆயுதங்களை அவன் மேல் எறிந்தார்கள். அது கண்ட பீமன் உடனே தனது கதாயுதத்தைத் தூக்கிப் பிடித்தபடி அந்த அரக்கர்களின் நடுவே பிரவேசித்தான்.

புலிக் கூட்டத்தின் நடுவிலே புகுந்த சிங்கம் போல், பீமன் தனது கதாயுதத்தால் அரக்கர்களின் ஆயுதங்களை எல்லாம் நிர்மூலமாக்கினான். அரக்கர்களைக் கண்டதுண்டமாக்கி உயிரற்று பூமியிலே விழச் செய்தான். மேலும், தன்னை எதிர்த்த சில அரக்கர்களைக் கதாயுதத்தால் தாக்கிக் கொன்றான். சிலரைக் கைகளால் தூக்கி ஆகாயத்தில் எறிந்து கொன்றான். சிலரைத் தூக்கி காற்றாடி போல் சுழற்றிக் கொன்றான். சிலரைக் கைகளால் அறைந்து கொன்றான். சிலரை வாளினால் வெட்டிச் சாய்த்தான். சிலரைக் கைகளால் பிடித்துக் கொன்றான். சிலரைக் கைகளால் பிசைந்து கொன்றான். சிலரை மண்ணில் மோதிச் சாகடித்தான். சிலருடைய அவயவங்களை முறித்துக் கொன்றான். சிலரைக் கழுத்து நெரித்துக் கொன்றான். சிலரை அதட்டி அச்சுறுத்தி வீழ்த்தினான். தனது கைகளாலும், தோள்களாலும், கதாயுதத்தாலும், மராமரக் கிளைகளாலும், கால்களாலும் பீமன் அரக்கர்களைக் கொன்று முடித்தான்!

அப்போது வேறு லக்ஷம் அரக்கர்கள் பீமனைச் சூழ்ந்து கொண்டு யுத்தம் செய்தார்கள். அவர்களைக் கண்ட பீமன் கொஞ்சமும் சோர்வடையாமல் வில்லின் நாணை விரலால் தெறித்து ஆரவாரித்தான். பீமன் எழுப்பிய நாணோசை எங்கும் பரவி மோதியது. அந்த அதிர்ச்சியால் பயந்து அஷ்ட திக்கஜங்களும் மதநீர் வறண்டு மயங்கிச் சோர்ந்து விழுந்தன. ஆதிசேஷன் மனம் நடுங்கி விஷத்தைக் கக்கிப் படங்களோடு சாய்ந்து விழுந்தான்!

பீமன் கோபித்து மேன்மேலும் பாணங்களை லக்ஷக் கணக்கில் பிரயோகித்தான். அவன் பிரயோகித்த எல்லா அம்புகளும் குறிதவறாது சென்று அரக்கர்களுடைய தலைகளிலும், தோள்களிலும், மார்புகளிலும், கண்களிலும் தைத்தன. அதனால் கரனுடைய அரக்கச் சேனையை ஸ்ரீராமனுடைய அம்புகள் தளரச் செய்தது போல், அரக்கர்களும் தளர்ந்தார்கள். துன்பம் தாங்காது அலறினார்கள்.

ஆனால், அந்தக் கணத்தில் மீண்டும் அந்த அரக்கர்கள் எல்லோரும் செருக்கோடு சக்கரமும், சூலமும், பாசாயுதமும்,

தண்டமும், வேலும், முள்ளாயுதமும், வாளும், இரும்புலக்கையும், வளைதடியும், எறியீட்டியும், இரும்புத் தடியும், இரும்புக் கொழுவும், முசுண்டியும், பேர்ட்டியும் எடுத்துக் கொண்டு அவனைக் கொல்ல ஆரவாரித்தபடி நெருங்கினார்கள்.

பீமன் உடனே லக்ஷக்கணக்கான கணைகளை அவர்கள் மேல் பிரயோகித்தான். அந்தக் கணைகள் நொடியில் விரைந்து போய் அரக்கர்களின் கையிலிருந்த ஆயுதங்களையெல்லாம் அழித்தன. மேலும், அந்த அரக்கர்களின் உயிரைப் போக்கின. இப்படி தன்னை எதிர்த்து வந்த அரக்கர்களையெல்லாம் பீமன் சம்ஹரித்த பின்பும், எந்தவிதச் சோர்வும் இல்லாமல் சிரித்தபடி நின்றான்!

தடாகத்தைக் காக்கின்ற யக்ஷர்கள் பீமனால் ராக்கதசேனை அழிந்ததைக் கண்டார்கள். அதனால் அவர்கள் அஞ்சி மயங்கி வருந்தினார்கள். ஆயினும் அவர்கள் உடனே ஓடிச் சென்று தங்கள் தலைவனாகிய குபேரனை வணங்கி, "எம்பெருமானே! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். நமது பூஞ்சோலையில் ஒரு மானிடன் வந்திருக்கின்றான். அவன் தடாகத்திலே இறங்கினான். அப்போது அவனை அரக்கர்கள் எதிர்க்க, அவன் நமது சேனையில் புகுந்து ஆண்யானை போலக் கலக்குகின்றான்!" என்று வாய்ப் பொத்தி பவ்வியமாகக் கூறினார்கள்.

அதுகேட்டு குபேரன் கடுஞ்சினம் கொண்டான். அவன் கண்கள் கோபத்தில் நெருப்புத் துண்டங்களாக ஜொலித்தன. மனத்தில் ஆத்திரம் கொப்பளித்தது. அவன் சீற்றத்தோடு இடிபோல் சிரித்தான்.

பிறகு, குபேரன் தன்னருகே நின்றிருந்த சங்கோடணன் என்னும் சேனைத் தலைவனைப் பார்த்து, "சங்கோடணா! நீ போய் யானை பலமுள்ள அந்த மானிடனைக் கொல்லாமல், அவனது தோள்களைக் கட்டிச் சிறைப்படுத்தி அழைத்து வா!" என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

சங்கோடணன் அக்கணமே தனது மகாசேனையோடு துந்துபிகள் முழங்க தடாகத்தை அடைந்தான்.

தடாகக் கரையிலிருந்த பீமனை யக்ஷசேனாதிபதிகள் நொடியில் வளைத்துக் கொண்டார்கள். அப்போது

யக்ஷர்களால் வளைக்கப்பட்டு நடுவிலே நின்ற பீமன், யானைக் கூட்டத்தால் வளைக்கப் பெற்ற யாளியைப் போல் தோன்றினான்!

ஆகாயமார்க்கத்தில் அநேக யக்ஷர்கள் தன்னைச் சூழ்ந்து கொண்டு தன்மேல் கொடிய ஆயுதங்களை எறிந்ததும், பீமன் வில்லை வளைத்து அம்புகளை அவர்கள் நடுங்கப் பிரயோகம் செய்தான். அவனுடைய அம்புகள் யக்ஷர்களின் ஆயுதங்களை அழித்தன. அவர்களில் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்றன. மீதி யக்ஷர்கள் நிலைகெட்டு உடல் நடுங்கித் தோற்றோடினார்கள்.

சங்கோடணனின் மார்பிலே சத்துருக்காதினியால் பீமன் ஓங்கி அடித்தான். அவ்வளவுதான். அவன் இடி கேட்ட நாகம் போல் உடல் பதைக்க அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடினான்.

அவன் நேரே சென்று குபேரனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து, "மன்னா! அழிக்கின்ற கடவுளாகிய சிவபெருமானே இந்த மானிட வடிவம் கொண்டு வந்திருக்க வேண்டும். அந்த மாவீரன் சாதாரண மானிடனாக இருக்க மாட்டான்! இந்த க்ஷணத்தில் பண்போடு அவனிடம் போய், அவன் விரும்புகின்ற செல்வங்களையெல்லாம் தாங்கள் கொடுத்தருள வேண்டும். இல்லாவிட்டால் இந்த நகரத்து யக்ஷர்கள் எல்லோரும் எமப்பட்டணம்தான் போய்ச் சேருவார்கள். இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை!" என்று கூறினான்.

குபேரன் அதுகேட்டு யோசித்தான். சங்கோடணன் கூறுவது சரியென்றே அவனுக்குப் பட்டது. உடனே தனது இளைய மகனாகிய ருத்திரசேனனை நோக்கி, "மகனே! நம் பூஞ்சோலைக்கு வந்திருக்கின்ற மானிடனிடம் சென்று, அவன் விரும்பி வந்திருக்கும் பொருள் என்ன என்பதைக் கேட்டுவா!" என்று சொல்லி அனுப்பினான்.

தந்தையின் கட்டளைப்படி ருத்திரசேனன் அக்கணமே விரைந்து பூஞ்சோலைக்குப் போனான். அங்கே மலைபோல அரக்கர்களுடம்பும் யக்ஷர்களுடம்பும் குவிந்திருக்க, அவற்றின் நடுவே முருகக் கடவுள் போல் வெகு பராக்கிரமத்தோடு நின்று கொண்டிருக்கும் பீமனைக் கண்டான்.

பீமனை நெருங்கி ருத்திரசேனன், ''பலசாலியே! வண்டுகளும் நுழைய முடியாத கட்டுக் காவலையுடைய இந்தப் பூஞ்சோலைக்குள் நுழைந்து, இங்கே காவல் புரிந்த அரக்கர்களையெல்லாம் வீணாகக் கொன்று தீர்த்தாய். நீ யார்? சொல்!'' என்று கேட்டான்.

அதற்கு பீமன், ''ருத்திரசேனா! உன் தந்தையும் இந்த அளகாபுரிக்கு அரசனுமான குபேரனுடைய குமாரர்களின் சாபத்தைத் தீர்ப்பதற்காக, முன்பு மருத மரங்களின் நடுவே தவழ்ந்து சென்ற கண்ணபிரானுக்கு நான் இனிய மைத்துனன். பூலோகத்தவர்கள் எல்லோரும் புகழும் அரசகுலத்தவன். என் பெயர் பீமன். நான் வாயுமைந்தன்!'' என்று பதில் சொன்னான்.

''ஐயனே! நீர் கிருஷ்ணபகவானுக்கு அத்தைமகன் என்றால், தனியே இந்தச் சோலைக்கு வந்த காரணம் என்ன?''

பீமன் ருத்திரசேனனுடைய கேள்விக்குப் பதிலாக நடந்த செய்திகள் யாவும் தெரிவித்தான். அது கேட்டு ருத்திரசேனன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அம்மகிழ்ச்சியோடு அவன் தடாகத்துப் பொற்றாமரை மலர்களைப் பறித்து பீமனுக்குப் பரிசாகத் தந்துவிட்டுச் சென்றான்.

ருத்திரசேனன் நேரே தந்தையிடம் சென்றான். சோலையில் நடந்தவற்றையெல்லாம் அவன் தந்தைக்குச் சொன்னான்.

அப்போது பீமன் தான் விரும்பி வந்த மலர் கிடைத்ததால் மிகவும் குதூகலம் அடைந்திருந்தான். அவன் போர் புரிந்த களைப்பைப் போக்குவதற்காக தடாகத்தில் குளித்து உற்சாகம் பெற்றான். பின்பு தடாகக் கரையிலே உட்கார்ந்து கொண்டு, அப்போர்க்களத்தில் கணக்கற்ற பேய்கள் கூத்தாடுவதைக் கண்டு ரசித்தான். அதனால் அவனுடைய உடல் சோர்வும் மனச் சோர்வும் தீர்ந்தன.

பீமன் குபேரப் பட்டணத்தில் அவ்வாறிருக்க, காட்டிலிருந்த தருமர் பீமனைக் காணாது வருந்தினார். அவ்வருத்தத்தோடு திரௌபதியைப் பார்த்து, ''பாவாய்! பீமன் எங்கே போயிருக்கிறான்? உனக்குத் தெரியுமா? சொல்!'' என்று வினவினார்.

உடனே பாஞ்சாலி தன்னெதிரே ஆகாயத்திலிருந்து பொற்றாமரை மலர் விழுந்ததையும், பீமனிடம் தனக்கு அதுபோல் ஒரு மலர் வேண்டும் என்று கேட்டதையும், அதனால் அவன் குபேரனுடைய அளகாபுரிக்குத் தனியாகச் சென்றிருப்பதையும் தருமருக்குத் தெரிவித்தாள்.

முன்பே அர்ச்சுனனுடைய பிரிவால் வருந்தியிருந்த தருமர், இப்போது பாஞ்சாலி கூற பீமனுடைய பிரிவை உணர்ந்து மேலும் வருந்தினார். வேல் தைத்த புண்ணில் சூட்டுக்கோல் நுழைத்தது போல் தருமர் மிக மிக வருந்தினார். 'பீமனுக்கு என்ன அபாயம் நேருமோ?' என்று மனம் பதைத்தார்.

அதனால் தருமர் கடோத்கஜனை நினைத்தார். அந்தக் கணத்தில் கடோத்கஜன் பேய்கள் பூட்டிய ரதத்தின் மேலேறிக் கொண்டு அங்கே வந்தான். பெரிய தந்தையின் பாதங்களில் நமஸ்கரித்து எழுந்தான்.

கடோத்கஜனை நோக்கி தருமர், "குமாரா! உன் தந்தையான பீமன் என்னோடு ஆலோசிக்காமல் பொற்றாமரை மலரைக் கொண்டு வருவதற்காகத் தனியே அளகாபுரிக்குப் போய்விட்டான்!" என்று கூறி மனம் வருந்தினார்.

மேலும், அவர் அன்புப் பிரவாகத்துடன் கடோத்கஜனிடம், "என் தம்பி பீமனுக்கு எந்த அபாயமும் ஏற்படுவதற்குள் நாம் அளகாபுரியிலுள்ள அந்தச் சோலைக்குச் சென்று திரும்பி வருவோம்!" என்றார்.

பிறகு, கடோத்கஜனுடைய ரதத்தில் தருமர் ஏறிக் கொண்டார். மறுகணமே ஆகாயத்தில் தனது தேரைச் செலுத்தினான் கடோத்கஜன். அந்த ரதம் அவர்களைச் சுமந்து கொண்டு நான்கு நாழிகைக்குள் அளகாபுரி சோலையை அடைந்தது.

அங்கே பீமன் வெற்றி வீரனாக இருந்ததைக் கண்டு தருமர் அளவில்லாமல் மகிழ்ச்சியடைந்தார். கடோத்கஜன் பாசமும் மகிழ்ச்சியும் நெஞ்சில் மோத தந்தையின் பாதங்களைச் சென்று வணங்கினான்.

பீமன் அந்தச் சோலையிலுள்ள மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து தமையனுடைய பாதங்களில் அர்ச்சித்து,

அவரை மூன்று தரம் பிரதக்ஷிணம் செய்து சாஸ்திர முறைப்படி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

தம்மை வணங்கிய தம்பியை தருமர் அன்போடு கைகளால் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டார். பின்பு, அவர் சற்றே கோபத்துடன் பீமனை நோக்கி, ''பீமா! தேவர்களும் புகமுடியாத கட்டுக் காவலுள்ள இந்தச் சோலையில் என் அனுமதியில்லாமல் திரௌபதியின் விருப்பத்தால் கபடமாக வந்து, இங்கே பெரும்யுத்தம் செய்தது உனக்குப் பெருமையோ? உனது தம்பிகளாகிய அர்ச்சுனாதியர்கள் உன் கட்டளைப்படி நடக்கவில்லையா? எனது தம்பியான நீ மட்டும் என் கட்டளையில்லாமல் இப்படிச் செய்தது ஏன்?'' என்று கேட்டார்.

ஆனால், மறுவினாடியே தருமர் தமது கோபம் நீங்கி, பீமனோடு தடாகத்தில் ஸ்நானம் செய்தார். தடாகத்து மலர்களைப் பறித்துச் சூடிக் கொண்டார். தாமும் பீமனுமாக கடோத்கஜனுடைய ரதத்தில் ஏறிக் கொண்டு திரும்பவும், நகுலசகாதேவர்களும் திரௌபதியும் உள்ள காட்டுக்கு வந்து சேர்ந்தார்.

தருமர் ரோமசமகரிஷியின் பாதங்களை வணங்கி, திரௌபதிக்கு அவள் கேட்ட மலர்களைத் தந்தார். கடோத்கஜனுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பினார்.

அன்று முதல் அர்ச்சுனனைத் தவிர மற்ற பாண்டவர்களும் திரௌபதியும் ரோமசரிஷியை வணங்கி, அவரின் உபதேசங்களைக் கேட்டு வாழ்ந்திருந்தார்கள். மேலும், அப்போது அவர்கள் மகரிஷி கூறிய சிவசரிதத்தைப் பக்தியோடு கேட்டுக் கொண்டு கவலையற்று அந்தக் கொடிய காட்டிலே வசித்து வந்தார்கள்!

4. சடாசுரன் வதை

பாண்டவர்கள் அந்தக் காமியவனத்தில் ரோமசரிஷியின் உபதேசங்களைக் கேட்டு இன்பத்தோடு வாழ்ந்திருக்கையில், ரிஷி சிரேஷ்டர்கள் தங்களை மிருகங்களிடமிருந்து காத்தருள வேண்டும் என்று அவர்களிடம் அபயம் கோரி வந்தார்கள்.

தருமர் அவர்களுடைய பாதங்களை நமஸ்கரித்து, அவர்களிடம், ''மகரிஷிகளே! உங்களுக்கு உண்டான குறையைக் கூறியருளுங்கள்!'' என்றார்.

அவர்கள், ''தருமபுத்திரா! நாங்கள் தவம் புரிவதற்கு முடியாமல் வனவிலங்குகள் எங்களுக்குத் தொல்லைகள் தருகின்றன. அவற்றால் உண்டாகும் துன்பங்களை நீ தீர்க்க வேண்டும்!'' என்றார்கள்.

முனிவர்களின் குறையைத் தீர்ப்பதாக தருமர் அங்கீகரித்தார்.

உடனே பீமனை அழைத்து தருமர், ''ஐயனே! நீ போய் முனிவர்களுடைய துன்பத்தைத் தீர்த்து வா!'' என்று கட்டளையிட்டு அனுப்பினார்.

பீமன் சென்றபின் தருமர் மற்ற தம்பிகளோடும் பாஞ்சாலியோடும் மகிழ்ந்திருந்தார். அப்போது சடாசுரன் என்னும் அரக்கன் அங்கே வந்தான். அவன் கொடிய ராக்ஷசன். பயங்கர வஞ்சனைச் செயலே உருவானவன்.

அந்தச் சடாசுரன் ஜானகியை ராவணன் பிராமண வேஷம் கொண்டு தூக்கிச் சென்றது போல, திரௌபதியை அபகரித்துப் போக பிராமணனாக வந்தான். நேரே திரௌபதி வசிக்கின்ற பர்ணசாலைக்குச் சென்றான். பர்ணசாலையைக் காவல் காத்திருந்த நகுலசகாதேவர்கள் தன்னைக் காணாதவாறு மந்திரத்தால் மாயாவியாகி திரௌபதியைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்திலே பறந்து சென்றான்.

திரௌபதி தன்னை அரக்கன் தூக்கிப் போவதைக் கண்டதும் அபயம் வேண்டி புலம்பிக் கூவினாள். அவள் குரல் கேட்டு நகுலசகாதேவர்கள் நடந்ததை ஒருவாறு ஊகித்துக் கொண்டார்கள். அதனால் பெரும் கோபம் நெஞ்சிலே மோத, சீற்றத்தோடு கர்ஜித்துக் கொண்டு கொடிய வில்லுடன் விரைந்தார்கள். யானை நடுங்கும்படி அதனைச் சுற்றிக் கொண்ட யாளி போல், அவர்கள் திரௌபதியைத் தூக்கிச் செல்லும் அரக்கனை வளைத்துக் கொண்டு, ''வஞ்சகனே! பிராமணனாக வந்து கற்புடைய மாற்றான் மனைவியை அபகரித்துக் கொண்டு ஆகாயமார்க்கத்தில் போவது உனக்கு ஒரு பெருமையோ? பித்தனே! நீதியில்லாத் காரியத்தைச் செய்து சாக நினைக்கின்ற மூர்க்கனே! முன்பு

உன் குலத்து ராவணன் சீதாபிராட்டியை அபகரித்ததால் ஸ்ரீராமபிரானுடைய அம்பால் அழிந்ததை நினைத்துப் பார்!'' என்று சொல்லி, அவன் மேல் துரிதமாக பாணங்களை வர்ஷித்தார்கள்.

சடாசுரன் அதுகண்டு மனம் வெதும்பினான். மேகம் போலக் கர்ஜித்தான். கண்கள் சிவக்க கோபித்தான். அவர்களோடு யுத்தம் புரியத் தயாரானான்.

அப்போது முனிவர்களுக்கு உண்டான துன்பத்தைப் போக்கிவிட்டுத் திரும்பி வந்த பீமன் நடந்த செய்திகளையும், ஆகாயத்திலே சடாசுரன் கோபிப்பதையும் கண்டான்.

பீமனுக்குப் பெருங்கோபம் வந்துவிட்டது. அவன் கண்கள் அக்கினி ஜுவாலையைக் கக்கின. மனம் ஊதுலையாய்க் கொதித்தது. அஷ்டதிக்குப் பிராணிகளும் அஞ்சவும், அண்டகோளங்களும் அதிரவும் இடிபோல் கோபமாகச் சிரித்துக் கொண்டே அவன் சடாசுரன் எதிரே போய் நின்றான். அரக்கனை அதட்டி ஆரவாரித்துத் தோள்களைத் தட்டி பீமன், பிரளய காலத்துப் பெருங் காற்றாக இன்னும் அவனை நெருங்கினான்.

சடாசுரனை நோக்கி பீமன் மிகவும் ஆத்திரத்துடன், ''அடே! ராக்ஷசா! பகாசுரனையும், இடிம்பாசுரனையும், புண்டரீகாசுரனையும் கொன்றவன் நான். குபேரபட்டணத்து ராக்ஷசர்களையெல்லாம் எமப்பட்டணத்துக்கு அனுப்பியவன் நான். உன்னுடைய பிராணனையும் இந்த க்ஷணத்திலேயே தென்திசை பாலகனாகிய யமனுக்குக் கொடுப்பேன்!'' என்றான்.

மறுகணமே பீமன் வழியிலே வளர்ந்திருந்த ஓர் ஆச்சாமரத்தைப் பிடுங்கிச் சடாசுரனை அடித்தான். அதனால் அவன் திரௌபதியைக் கீழே விட்டு விட்டுக் கோபத்தோடு பக்கத்திலிருந்த மலையைப் பறித்து பீமன் மேல் வீசினான். பீமன் அம்மலையைக் கதாயுதத்தால் தாக்கிப் பொடியாக்கினான். அவன் மேல் பாய்ந்து அவனுடைய தோள்களைத் தனது கைகளால் இறுகக் கட்டி, அவனது தொடைகளைத் தனது தொடைகளால் தாக்கி, எல்லா லோகங்களும் நடுங்கும்படி அவன் கீழாகவும், தான் மேலாகவும் பூமியிலே வந்து விழுந்தான் பீமன். பதிலுக்குச் சடாசுரன் கொடுமையாக பீமனைத் தாக்கினான்.

இவ்வாறு அவர்களுக்குள் வெகுநேரம் யுத்தம் நடந்தது!

கடைசியாக பீமன் சடாசுரனைத் தனது கைகளால் தலைக்கு மேல் தூக்கிப் பயங்கரமாகச் சுழற்றி ஆகாயத்திலே வீசி எறிந்தான். ஆகாயத்தில் சென்ற சடாசுரன் ஆதிசேஷன் நடுங்கும்படி தன் அவயவங்கள் தனித்தனியாகச் சிதற பூமியிலே வந்து விழுந்து இறந்தான்!

சடாசுரன் இறந்ததும் பீமன் திரௌபதியையும் தம்பிகளையும் அழைத்துக் கொண்டு தங்களின் இருப்பிடத்தை அடைந்தான். பீமன் தருமருடைய பாதங்களை வணங்கி நடந்தவற்றைச் சொன்னான்.

பிறகு தருமர் தம்பிகளோடும், திரௌபதியோடும், முனிசிரேஷ்டர்களோடும் நாராயண மகரிஷியின் பதரி ஆசிரமத்துக்குச் சென்றார்.

பாண்டவர்கள் நாராயணரிஷியின் பாதங்களை நமஸ்கரித்தார்கள். அந்த ஆசிரமத்திலேயே முனிவர்களோடு அவர்கள் தங்கினார்கள். அங்கு தங்கிக் களைப்பாறிய பின் புறப்பட்டுப் பல மலைகளைக் கடந்து சென்றார்கள்.

நேரே அவர்கள் அஷ்டகோண மகரிஷியின் வனத்தை அடைந்தார்கள். அந்த மகரிஷியின் திவ்ய பாதங்களை நமஸ்கரித்துத் தோத்திரம் செய்தார்கள்.

சிவபெருமானைப் போன்ற அஷ்டகோண முனிவர் அவர்களை எதிர் கொண்டு அழைத்து உபசரித்தார்.

அர்ச்சுனனைத் தவிர மற்ற பாண்டவர்களும் திரௌபதியும் அஷ்டகோணமகரிஷியின் ஆசிரமத்தில் ஒன்பது வருஷங்கள் சௌக்கியமாக வாழ்ந்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் மகரிஷி அவர்களுக்கு அநேக புண்ணிய சரித்திரங்களை உபதேசித்து அருளினார்!

---

5. மணிமான் வதை

அஷ்டகோண மகரிஷியின் ஆசிரமத்திலே பாண்டவர்களும் பாஞ்சாலியும் புண்ணிய கதைகளைக் கேட்டுக் கொண்டு சௌக்கியமாக வாழ்ந்து வருகையில், ஒரு

நாள் பாஞ்சாலி ரிஷிபத்தினிகளுடன் போய் நதியில் ஸ்நானம் செய்தாள்.

அப்போது ஆற்று வெள்ளத்தில் ஒரு பங்கஜமலர் அடித்துக் கொண்டு வந்தது. திரௌபதி அதைக் கண்டு ஆனந்தித்தாள். உடனே அதனை வேகமாகக் கைகளில் எடுத்தாள்.

திரௌபதி அம்மலரைக் கொண்டு போய் பீமனிடம் கொடுத்து, "சுவாமி! இது போன்ற பூ இங்கே எங்கு இருக்கின்றது?" என்று கேட்டாள்.

பீமன் அதற்கு, "அக்கினிபகவான் பெற்ற மயிலே! பூச்சூடும் உனது கூந்தலுக்கு, முன்பும் நான் இது போன்ற மலர்களை யக்ஷர்களின் அளகாபுரி பட்டணத்திலிருந்து கொண்டு வந்து கொடுத்தேன். அதே மாதிரி இப்போதும் நீ மகிழும்படி நொடியில் இது போன்ற மலரையும் உனக்குக் கொண்டு வந்து கொடுப்பேன். ஆகையால், நீ மனம் வருந்த வேண்டாம்! இது போன்ற பூ தேவேந்திரனுடைய அமராவதி நகரத்தில் இருந்தாலும் சரி. இப்போதே போய் உனது கருங்கூந்தலுக்காக அம்மலரைப் பறித்துக் கொண்டு வந்து தருவேன். அப்படி என்னால் முடியாவிட்டால் எனது தோள்கள் துரியோதனாதியர்களைக் கொல்லும் பலமுள்ளவையாக இருக்காது!" என்று சபதம் செய்தான்.

முன் போலவே பீமன் இப்போதும் தன் உடன் பிறந்தவர்களுக்குத் தெரியாமல் கதாயுதமும் வில்லும் எடுத்துக் கொண்டு, திரௌபதி விரும்பிய மலரைக் கொண்டு வருவதற்காகத் தனியே புறப்பட்டுப் போனான். ஆற்று வழியாகவே அவன் அநேக யோஜனைதூரம் சென்றான். பின்பு, அவன் சூரிய சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் எப்போதும் பிரதக்ஷிணம் செய்கின்ற ரத்தினகிரியை அடைந்தான்.

ரத்தினமலையில் ஒரு பக்கம் மரகதரத்தின மாளிகைகள் காணப்பட்டன. ஒரு பக்கம் இந்திரநீல மாளிகைகள் இருந்தன. ஒரு பக்கம் பதுமராகமணி மாளிகைகள் தோன்றின. ஒரு பக்கம் முத்து மாளிகைகள் அழகுடன் விளங்கின. ஒரு பக்கத்தில் கின்னரர்களின் சங்கீதங்கள் கேட்டன. ஒரு பக்கத்தில் வித்தியாதரர்களும்,

அவர்களுடைய மனைவிமார்களும் இருந்தார்கள். ஒரு பக்கத்தில் ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் வசித்திருந்தார்கள். ஒரு பக்கத்தில் யக்ஷர்களும், அவர்களுடைய தேவிமார்களும் தங்கியிருந்தார்கள். ஒருபக்கம் ஆண்குரங்கு, பெண்குரங்குக்கு தேன் பருகக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒருபக்கம் ஆணும் பெண்ணுமாக யானைகள் கூடிச் சல்லாபித்தன. ஒரு பக்கம் புலியும் யாளியும் குகைகளில் கடுஞ்சண்டையிட்டன.

இவ்வாறான அந்த அழகிய ரத்தினகிரியின் அதிசயங்களையெல்லாம் கண்டு கண் களிக்க பீமன் குதூகலித்தான். பீமன் அந்த மலையிலிருந்து இறங்கிக் கடும்வேகமாக அளகாபுரி பட்டணத்தின் நான்கு வாயிலையும் கடந்து வட மேற்குத் திசையில் சென்று நின்றான்.

பிறகு, அவன் யுத்தத்துக்குரிய சங்க நாதம் செய்து ஆரவாரித்தான்!

பீமனின் சங்கநாதம் கேட்டு அளகாபுரி பட்டணத்து யக்ஷர்கள், யார் இப்படிச் செய்வது என்று சந்தேகித்தார்கள். உடனே அவர்கள் தங்களின் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள ஒருவர்க்கொருவர் முந்திக் கொண்டு பெருஞ்சேனையோடு பீமனை நெருங்கி வந்தார்கள்.

அவர்களுள் பலசாலியான ஒரு வித்தியாதரன் பீமன் முன் வந்து வேகமாக நின்றான்.அவன் ராக்ஷசர்களைவிட வஞ்சனையிலும் மாயையிலும் கைதேர்ந்தவன். கொடிய பராக்கிரமம் உடையவன். அவன் பீமனைப் பார்த்து, 'இவன் முருகக் கடவுளோ?' என்று எண்ணி அச்சம் கொண்டான்.

தான் கொண்ட அச்சத்துடன் பீமனை மேலும் கூர்ந்து நோக்கினான். அவனுக்குப் பீமனை யார் என்று புரிந்துவிட்டது. 'முன்பு திரௌபதிக்காக இப்பட்டணத்துச் சோலைத் தடாகத்துக்கு வந்த பீமன் இவன்தான்' என்று நிச்சயம் செய்து கொண்டான். உடனே அவன் உடம்பு நடுங்க, பீமன் வந்திருக்கும் செய்தியை யக்ஷர்களுக்குத் தெரிவிக்க வேகமாகத் திரும்பிச் சென்றான்.

நேரே அவன் குபேரனுடைய சேனைத் தலைவனாகிய மணிமானிடம் சென்றான். அவனை நோக்கி, "சேனாதிபதி!

முன்பு ஒரு நாள் நம் சோலைக்குப் பூப்பறிக்க வந்து, அங்கு காவலிருந்த அரக்கர்களையெல்லாம் கொன்று தீர்த்த மானிடன் மீண்டும் இப்போது வந்திருக்கின்றான்!'' என்று தெரிவித்தான்.

அதுகேட்டு மணிமான் கோபித்தான். அவன் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. குபேரனுக்கு நெருங்கிய சிநேகிதனாகிய அவன், ''வாயுதேவன் பெற்ற மானிடனாகிய அவனா, குபேரப் பட்டணத்துக்கு வந்து இப்படியெல்லாம் அட்டூழியங்கள் செய்பவன்? நமது வேந்தனாகிய குபேரனுக்கு இப்போது இச்செய்தியைத் தெரிவிக்கக் கூடாது. அவனுக்குத் தெரிவிக்காமலேயே யுத்த வாத்தியங்கள் முழங்க, ரதகஜதுரகபதாதிகளோடு நாமே போய் அம்மானிடனுடைய உயிரை வாங்குவோம்!'' என்று கோபத்துடன் சொன்னான்.

மணிமான் அந்த வினாடியே, ''பயங்கர ஆயுதங்களுடைய நமது சமுத்திரம் போன்ற சேனையும், அச்சேனைக்குத் தலைவர்களாகிய எட்டாயிரம் யக்ஷசிரேஷ்டர்களும் இம்மானிடன் மீது யுத்தத்துக்குப் புறப்படுங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

உடனே சாலேந்திரன் முதலிய யக்ஷசேனாதிபதிகள், தேவலோகத்தவர்களும் அஞ்சும்படி பீமனோடு போர் செய்ய துரிதமாகச் சென்றார்கள். அவர்கள் சென்று பீமனை வளைத்துக் கொண்டார்கள். அப்போது பாற்கடலில் திருமாலிட்ட மந்தரமலை போல் எட்டாயிரம் யக்ஷசேனாதிபதிகளின் நடுவே பீமன் காணப்பட்டான்.

யக்ஷசைனியம் தன்னை வளைத்துக் கொண்டதைக் கண்டு பீமன் கொஞ்சமும் கலங்கவில்லை. அவன் வெகு துணிச்சலோடு அச்சேனையை அழிக்க பாணப் பிரயோகம் செய்தான்.

அப்போது சாலேந்திரன் பீமனுடைய மனவுறுதியை அறிய நினைத்தான். அதனால் சாலேந்திரன் தனது சேனையை பீமனுடன் போர் செய்யாதபடி தடுத்து நிறுத்திவிட்டு, ரதத்தில் ஏறி அவன் மு... சென்று, ''அடே! நீ சிவனோ? நான்முகனோ? திருமாலோ? முருகக்கடவுளோ? பராக்கிரமமுடைய குபேரனின் அளகாபுரி பட்டணத்துக்கு

வந்திருக்கும் நீ இவர்களில் யாரோ? உன்னுடைய பிராணன் உடம்பிலிருந்து எங்களால் நீங்குவதற்குள் நீ யார் என்று சொல்!'' என்று கேட்டான்.

சாலேந்திரன் வார்த்தைகளைக் கேட்டு பீமன் மகிழ்ச்சியுடன் சிரித்து, ''முன்பு ஒரு பூவின் நிமித்தமாக இந்தப் பட்டணத்தில் என்னை எதிர்த்த அரக்கர்சேனையை நிர்மூலமாக்கியவன் நான். யுத்தத்தில் சிறந்த அரசன் நான். பகைவருடைய யுத்தத்தை ஒரு பொருட்டாகவே மதிக்காத பலமும் வெற்றியுமுடைய வாயுகுமாரனான பீமனும் நான்!'' என்றான்.

மேலும் பீமன் தொடர்ந்து, ''முன் போலவே இப்போதும் நான் விரும்பி வந்திருக்கும் பூவை எனக்குக் கொடுத்தால், உங்களுடைய அருமையான உயிரை நானும் கொடுப்பேன். அப்படியில்லாமல் நீங்கள் என்னோடு யுத்தம் செய்தால், இப்போதே எல்லோரும் எமலோகத்தைச் சேர்வீர்கள்!'' என்று தெரிவித்தான்.

பீமன் சொன்னதைக் கேட்டு சாலேந்திரன் கோபத்தால் மனம் வெதும்பித் தோள்கள் குலுங்கச் சிரித்தான். கண்கள் அக்கினி ஜுவாலையைக் கக்க பீமனைப் பார்த்து அவன், ''முட்டாளே! தேவர்களுக்குரியது இப்பூ. இதனை மானிடர்கள் தலையில் சூடிக் கொள்ள வருவார்கள் என்பது என்ன ஆச்சர்யம்! காட்டில் வசிக்கின்ற உனது உயிரை க்ஷணநேரத்தில் என்னுடைய அம்புகளுக்குத் தீனியாகத் தருவேன்!'' என்றவன், சேனாதிபதிகளிடம், ''இப்போதே இவன்மேல் ஆயுதப் பிரயோகம் செய்து வேகமாகச் சிறைப்படுத்துங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

சாலேந்திரன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். பீமன் கோபித்து மூர்க்கத்தனமாக யக்ஷர்கள் மேல் அம்புகளை வர்ஷித்துச் சிரித்தான்.

பீமனுடைய கொடிய கணைகளால் யக்ஷசேனை அழிந்தது. அதுகண்ட வித்தியாதரர்கள் அவன்மேல் அம்புகளைத் தொடுத்து விட்டார்கள். அதற்கு மாற்றாக பீமன் கணைகள் தொடுத்துச் சிரித்தான். பீமனுடைய அக்கணைகள் குறிதவறாமல் போய் வித்தியாதரர்களை எல்லாம் ஒருவர் பாக்கியில்லாமல் கொன்று தீர்த்தன.

அப்போது சாரணர்கள் பீமனோடு யுத்தத்துக்கு வந்தார்கள். பீமன் தனது கதாயுதத்தால் அவர்களை எல்லாம் வீரசொர்க்கம் சேர்த்தான். அதில் மிஞ்சியவர்கள் புறமுதுகிட்டு ஓடினார்கள்.

சாரணர்களின் நிலையைப் பார்த்த ராக்ஷசர்களும் யக்ஷர்களும் மீண்டும் லக்ஷக்கணக்கில் கூடி வந்து பீமனைச் சூழ்ந்து கொண்டார்கள். பீமன் மேல் கொடிய ஆயுதங்களை எல்லாம் எறிந்தார்கள். அவன் தனது கதாயுதத்தால் எல்லாவற்றையும் அழித்தான். தேர்களையும், குதிரைகளையும், யானைகளையும் சின்னாபின்னமாக்கினான். எதிர்த்த வித்தியாதரர்களையும் ராக்ஷசர்களையும் கொன்றான்.

எஞ்சிய வித்தியாதரர்கள் பீமனோடு சண்டை செய்ய முடியாமல் புறமுதுகிட்டு ஓடினார்கள். அவர்கள் நேரே மணிமானிடம் போய்த் தங்களின் இயலாமையைத் தெரிவித்தார்கள்.

அதுகேட்டு மணிமான் தோள்கள் துடித்தான். கோபத்தால் புருவங்களை நெளித்தான். காளமேகம் போலச் சிரித்தான். நெஞ்சிலே அடங்காத சினம் கொண்டான். தோற்றோடி வந்தவர்களை நோக்கி மணிமான், "அடே, பதர்களே! யுத்தத்தில் பீமனுடைய உயிரைப் போக்காமல் அவனுக்குப் பயந்து, சிங்கத்திடம் தோற்றோடிய யானைக் கூட்டமாகியதோ நமது சேனை?" என்று கூறிக் கோபித்தான்.

உடனே மணிமான் பயங்கரமான யானையில் ஏறிக் கொண்டு யுத்தசநந்தனாக பீமனுக்கு எதிரே சென்றான். அவனைத் தொடர்ந்து யக்ஷசேனாதிபதிகளும் சென்றார்கள்.

அவர்களையெல்லாம் பீமன் பார்த்தான். கோபத்தோடு புன்சிரிப்பொன்றை உதிர்த்தான். அவன் கண்கள் அப்போது தீப்பொறிகளைச் சிந்தின.

பீமன் அப்படி கோபத்தோடு பார்க்கையில், அவனைச் சூழ்ந்து கொண்ட தேவகணத்தவர்கள் மேருமலைமீது காளமேகம் மழையைத் தூவுவது போல், அவன்மீது ஆயுதங்களைத் தூவினார்கள்.

தன்னைத் தாக்க வந்த தேவர்களின் பல்லாயிரக் கணக்கான ஆயுதங்களையெல்லாம் சிவபெருமான் யமனை

எதிர்த்தது போல், பீமன் உக்கிரம் கொண்டு பக்கத்தில் உள்ள மரங்களைப் பிடுங்கித் தாக்கி அழித்தான்.

மணிமான் அதைக் கண்டு மிகவும் சீற்றம் கொண்டான். அச்சீற்றத்தோடு பீமன்மேல் ஆயுதப் பிரயோகம் செய்து கொண்டே அவனை நெருங்கி வந்தான்.

தன் அருகில் மணிமான் வரவும், பீமன் தன் உடல் வலிமையையெல்லாம் திரட்டித் தனது கையால் அவனுடைய மார்பில் ஓங்கி அடித்தான். பீமனுடைய அடியைப் பொறுக்க மாட்டாமல் மணிமான் மனம் வருந்தினான். இடியோசை கேட்ட நாகம் போல நடுக்கம் அடைந்தான்.

அந்தக் கணத்தில் மணிமான், பீமனோடு எதிர்நின்று யுத்தம் செய்வது தன்னால் முடியாது என்பதைக் கண்டு கொண்டான். அதனால் அவன் கண்கள் நெருப்பைக் கக்கின. அவன் விஷம் போலக் கொடுமையாகக் கோபித்தான். அக்கணமே பீமனோடு மாயப் போர் புரிய ஆகாயத்தில் எழும்பினான்.

ஆகாயத்தில் எழுந்த மணிமான் மறுகணமே மாயம் செய்தான். மணிமானுடைய மாயத்தால் எங்கும் புகையுள்ள பெருங்காற்று வீசியது. காளமேகங்கள் கணமழை பொழிந்தன. அக்கினி ஆகாயம் முழுவதும் அழித்தது. பூமியிலே புழுதிப் புயல் அடித்தது. அவன் எல்லாத் திசைகளிலும் வஞ்சனையாகத் தோன்றினான்.

மணிமானுடைய மாயத்தைப் பீமன் உணர்ந்து கொண்டான். அதனால் சிங்கக் கொடியுடைய பீமன், முன்பொரு சமயம் திருமால் கொடுத்தருளிய வைஷ்ணவாஸ்திரத்தைத் தொடுத்தான். அந்த அஸ்திரம் மணிமானுடைய மாயச்செயலை ஒழித்தது.

பிறகு இந்திரஜித்தனும் லக்ஷ்மணனும் போல, மணிமானும் பீமனும் பூமியிலும் ஆகாயத்திலும் நின்று போர் செய்தார்கள். அப்போது மணிமான் பீமன்மேல் பெருங் கோபத்துடன் ஒரு சூலாயுதத்தை எறிந்தான். அதற்கு எதிராக பீமன் பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். பிரமாஸ்திரம் அந்தக் கணத்தில் சூலாயுதத்தை அழித்து, மணிமானுடைய மார்பைப் பிளந்து கொண்டு அப்பால் சென்றது!

மணிமான் அதனால் அலறிப் பொறி கலங்கி பூமியிலே சாய்ந்தான்!

பீமன் மணிமானை அழித்த கையோடு எதிர்த்து வந்த சாலேந்திரன் முதலிய சேனாதிபதிகளைக் கதாயுதத்தால் தாக்கினான்.அவனுடைய தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அவர்கள் நிலைகலங்கித் தோற்று, ஒருவர்க்கொருவர் முந்திக் கொண்டு அளகாபுரி பட்டணத்துக்குள் ஓடினார்கள்.

யக்ஷசேனை முழுவதையும் அழித்த பீமன், பகைவருடைய குருதி வெள்ளத்திலே நின்று சிங்கநாதம் செய்தான்!

அளகாபுரி பட்டணத்திலே பீமன் இவ்வாறிருக்கையில், காட்டிலே அஷ்டகோண மகரிஷியின் ஆசிரமத்தில் தங்கியிருந்த தருமர் அவனைக் காணாது வருந்தினார். திரௌபதியை நோக்கி, ''தேவி! பீமன் எங்கே?'' என்று கேட்டார்.

திரௌபதி அதற்கு, ''சுவாமி! இன்று நதி வெள்ளத்தில் ஒரு பரிமள மலரை நான் பார்த்தேன். அது போன்ற ஒரு மலரை இன்னும் ஒருதரம் சென்று கொண்டு வரும்படி அவரிடம் கேட்டேன். அதனால் அவர் அளகாபுரிக்கு வேகமாகப் போயுள்ளார்!'' என்று தெரிவித்தாள்.

பாஞ்சாலி சொன்னதைக் கேட்டு தருமர் துடித்துப் போனார். 'பீமனுக்கு என்ன அபாயம் நேரிடுமோ?' என்று நிலைகலங்கி அழுதார். அப்போது அங்கு வந்த ரோமசரிஷி அமுதமான வார்த்தைகளால் அவரைத் தேற்றினார்.

ரோமசரிஷியின் வார்த்தைகளால் மனம் சிறிது தெளிந்தாலும், தருமர் பீமனை எண்ணிக் கலங்குவதை நிறுத்தவில்லை. அவர், ''ஐயனே! என் தம்பி பீமா! 'அரவக் கொடியுடைய துரியோதனாதியர்களை நானொருவனே வீரசுவர்க்கம் சேர்ப்பேன். அது வரையில் தண்ணீரைக் கைகளால் எடுத்துக் குடிக்க மாட்டேன்' என்று சபதம் செய்தாய். அச்சபதப்படியே உனது உயிரையும் காப்பாற்றி வந்தாய். இப்போது உனது அந்தச் சபத வார்த்தை வீணாகிப் போகுமோ? ஏழுலகும் பெற வேண்டிய நீ, ஒரு பூவைப் பெரிதாக எண்ணிச் சென்றிருக்கிறாயே! உனது உயிர் இதனால் அழிந்துவிட்டால் நான் என்ன செய்வேன்? நீ

மட்டும் இருந்தால் போதும். தனியான எனக்கு எல்லோரும் துணையுள்ளவர்கள் ஆவார்கள். நானும் உயிருள்ளவனாவேன். போன ஜென்மத்தில் நான் செய்த பாவத்தாலோ, புண்ணியத்தாலோ முன்பே அர்ச்சுனன் என்னைவிட்டுப் பிரிந்து போனான். நீயும் இப்போது என்னைவிட்டுச் சென்றாய். இனிமேல் நான் இங்கேயிருந்து என்ன செய்யப் போகின்றேன்?'' என்று புலம்பி, ரோமசரிஷியின் உபய பாதங்களில் விழுந்து வணங்கினார்.

தருமரைப் பார்த்து ரிஷி மிகவும் அன்போடு, ''தருமராஜனே! நீ பயப்படாதே! பராக்கிரமசாலியான பீமன் சாகவில்லை. அவனுக்கு அளகாபுரி பட்டணத்தில் வித்தியாதரர்களோடு ஒரு கோடி கொடிய யுத்தம் ஏற்பட்டது. அப்போது பீமன் எய்த பிரமாஸ்திரத்தால் வஞ்சகனாகிய மணிமான் என்னும் யக்ஷசேனாதிபதி இறந்தான். அதனால் இனி பீமன்மேல் குபேரனுக்குக் கோபம் உண்டாகும். குபேரன் கோபித்து பீமனுக்குத் துன்பம் தருவதற்குள் நாம் அங்கு செல்ல வேண்டும். அதற்காக கடோத்கஜனை இங்கே வரும்படி இப்போதே நீ உன் மனத்தில் அவனை நினைப்பாய்!'' என்று கூறினார்.

முனிசிரேஷ்டரின் கட்டளைப்படி தருமர் கடோத்கஜனை நினைத்தார். அக்கணமே கடோத்கஜன் ரதத்தில் அங்கே வந்தான். தருமருடைய பாதங்களை நமஸ்கரித்து, ''தந்தையே! சொல்லுங்கள். தங்களின் அடிமையும் நாய் போல் கடைப்பட்டவனுமாகிய எனக்குத் தாங்கள் நியமிக்கும் கட்டளை என்ன?'' என்று கேட்டான் அவன்.

உடனே தருமர் நடந்தவற்றை அவனுக்கு விளக்கினார்.

அது கேட்டு கடோத்கஜன், ''என் தந்தைக்குத் துன்பம் உண்டாகக் கூடும். ஆகையால், இப்போதே மிக விரைவாகப் புறப்படுங்கள்!'' என்று கூறினான்.

அவர்கள் எல்லோரும் தேரில் ஏறிக் கொண்டார்கள். கடோத்கஜன் தேரைக் குபேரப் பட்டணத்தை நோக்கி அந்த வினாடியே ஆகாயத்தில் செலுத்தினான். ஒரு மாத்திரைப் பொழுதுக்குள் கடோத்கஜனுடைய ரதம் அளகாபுரி பட்டணத்து யுத்தகளத்தை அடைந்தது.

பீமன் அவர்களைக் கண்டதும் எதிர் கொண்டு சென்று உபசரித்தான். தருமருடைய பாதங்களில் பூக்களை வைத்து நமஸ்கரித்தான்.

அப்போது தருமர் பீமனைப் பார்த்து, "எனக்குத் தெரியாமல் வஞ்சனையாக இங்கே வந்து இப்படியான காரியங்களைச் செய்தாய். இப்படி வஞ்சகம் புரிந்த நீ எனக்கு ஏற்ற தம்பியாக ஆகமாட்டாய். வீணாக மணிமானுடைய உயிரைப் போக்கினாய். நவநிதிகளுக்குத் தலைவனாகிய குபேரன் அதனால் தனது பெருஞ்சைனியத்தோடு இப்போது உன்மேல் கோபித்து போர் செய்ய வருவான். நீ முன்பொரு நாள் செய்த காரியத்தால் ஏற்பட்ட கோபமும் உன்மேல் அவர்களுக்கு இருக்கிறது. ஐயோ! மனைவியின் பேச்சைக் கேட்டு இந்த அற்பப்பூவுக்காக, சிவபெருமானுடைய சிநேகிதனாகிய குபேரனின் சேனையை நீ அழித்தாய்!" என்று கோபமாகக் கூறினார்.

தருமர் அப்படி பீமனிடம் கோபத்தோடு பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு தூதுவன் குபேரனிடம் விரைந்து சென்று கண் கலங்க நடந்தவற்றையெல்லாம் சொன்னான்.

தூதுவன் சொன்னதைக் கேட்டு குபேரன் கொடிய விஷம் உண்டவன் போல் உணர்வும் உயிரும் ஒடுங்கினான். மிகவும் கோபத்துடன் மனம் கொதித்து அவன், "யாரோ ஒரு தனி மானிடனாம். அவன் மதில் சூழ்ந்த நமது அளகாபுரிக்கு வந்திடுவானாம். மணிமானுடன் போர் செய்வானாம். அவனைக் கொன்று நமக்குத் துன்பத்தைக் கொடுப்பானாம். இப்படியிருக்க என் பெயர் தனதன் என்பதாம்! முட்டாள் மானிடன் ஒருவன் நமது அளகாபுரிக்கு வருவானாம். கொடிய யுத்த கணைகளைத் தொடுப்பானாம். தன்னை வளைத்துக் கொண்ட நமது சேனையை அந்த அம்புகளால் அழிப்பானாம். நமது சோலையிலுள்ள தாமரைப் பூவைப் பறித்துக் கொள்வானாம்.இப்படியிருக்க என் பெயர் ராஜராஜன் என்பதாம்! வந்த மானிடன் தேவேந்திரன் இல்லையாம். சிவபெருமானும் இல்லையாம். சந்திர சூரியர்களும் இல்லையாம். வந்தவன் வலிமையில்லாத ஒரு மானிடனாம். அவன் இங்கு வந்து கந்தர்வரையெல்லாம் போர்க்களத்தில் அழிப்பானாம். இது என்ன ஆச்சர்யம்!" என்றான்.

மீண்டும் அவன் தொடர்ந்து, ''இதுவரை பல போர்களில் ஜெயங்கொண்ட சித்த சிரேஷ்டர்களே! வித்தியாதர தலைவர்களே! கின்னரர்களே! அரக்கர்களே! சாரணர்களே! நீங்கள் எல்லோரும் போருக்குப் புறப்படுங்கள். அந்த அற்ப மானிடனை வளைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கூறிக் கொண்டே போருக்குப் புறப்பட்டான்.

அப்போது ருத்திரசேனன் குபேரனுடைய பாதங்களைத் தொழுது, ''தந்தையே! நான் சொல்வதைக் கேளுங்கள். நமது சோலைக்கு வந்துள்ள வீரனைச் சாதாரண மானிடன் என்று நினைக்காதீர்கள். முன்பு சிவபெருமான் இந்திரர்கள் ஐவரைப் பூலோகத்தில் பிறக்கும்படிக் கட்டளையிட்டார். அவர்கள் அதன்படி பூமாதேவி தாங்கி வருந்தும் கொடியவர்களின் பாரத்தைப் போக்குவதற்காகப் பூலோகத்தில் மானிடர்களாய் வந்து பிறந்தார்கள். அவர்களே பாண்டு மைந்தர்கள். தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் எனப்படும் பஞ்ச பாண்டவர்கள். நமது சோலைக்கு வந்து சேனைகளை அழித்த வீரன் பீமனாவான்! இவன் தருமனுடைய தம்பி. காண்டீபத்தையுடைய அர்ச்சுனன் தருமனுக்கு இன்னொரு தம்பி. அவன் அசுரர்களைக் கொன்று தேவேந்திரனுடைய அமராவதிப் பட்டணத்தை அவர்களிடமிருந்து காப்பாற்றிச் சீர்படுத்தியுள்ளான். இப்போது அவன் அமராவதி நகரில் தேவேந்திர உபசரணையோடு தங்கி இருக்கின்றான். பீமன் இப்போது கொண்டுள்ளது மானிடவடிவம். கோபிக்கின்ற நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் ஆண்களின் மகிமையை அறிய முடியாது. ஐயனே! கேட்டருளுங்கள். முன்பு சிறிய வாமன வடிவம் ஒன்று ஆகாயவுச்சிவரை விசுவரூபம் கொண்டு நிற்கவில்லையா? அது போலவே இந்த பீமனும் சாதாரண மானிடன் போலிருந்து சமயம் வந்தபோது தன் திறமையைக் காட்டுவான். தந்தையே! மலைகள் அச்சத்தால் நடுங்க ஸ்ரீகைலாசகிரியை தோளில் தூக்கிய ராவணனுடைய உயிரையும் ராஜபோகத்தையும் அழித்தவர்கள் மானிடர்கள் தானே! தேவர்கள் இல்லையே! மணிமானுக்கு அகஸ்தியர் முன்பு, 'நீ வில்லேந்திய மானிடன் ஒருவனால் இறப்பாய்!' என்று சாபம் கொடுத்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள். அப்படியிருந்தும் அந்த மணிமான் இறந்ததற்கு வருந்தலாமா? கூடாது! வந்துள்ள பீமனுக்கு, அவன் விருப்பம் அறிந்து வேண்டியவற்றை அன்போடு

கொடுத்துவிட்டு, சாந்தமாக இங்கேயே தாங்கள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் தங்களின் உயிரும் ராஜபோகமும் நிலைத்திருக்கும். அவனால் தங்களுக்கு எந்தவித அபாயமும் ஏற்படாது. அப்படியில்லாமல் சேனையோடு போய் அவன் மேல் கோபித்தால் தாங்கள் அடையும் பயன் ஒன்றுமில்லை!'' என்று கூறினான்.

குமாரனுடைய வார்த்தைகளைக் கேட்டு குபேரன் மனம் மாறவில்லை. அவன் வெகு உக்கிரத்துடன், ''எனது பிராண சிநேகிதனாகிய மணிமானைக் கொன்றவனது உயிரை நான் இப்போதே சென்று வாங்குவேன்!'' என்று சொல்லி, தனது புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டு போருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

குபேரனுடைய யக்ஷசேனை ஆகாயத்திலும் பூமியிலுமாகப் பரவி கடுவேகத்துடன் சென்றது.

பிரளய கடல் போல் அஷ்ட திக்குகளிலுமாகப் போருக்கு வந்த யக்ஷசேனையையும் குபேரனையும் தருமர் பார்த்தார். அது கண்டு அவர் உடம்பும் அறிவும் உயிரும் ஒடுங்கி பீமனைக் கோபித்தார். பிறகு, தருமர் குபேரனுடைய கீர்த்தியையெல்லாம் சொல்லி அவனை நமஸ்கரித்தார்.

மேலும் குபேரனை வணங்கி தருமர், ''அனகா! அமலா! அளகாபுரி வேந்தா! தனதா! சங்கரன் தோழா! புனிதா! குபேரா! புலஸ்திய குல திலகா! செல்வா! தேவதேவா! பரிசுத்த மூர்த்தி! நீர் வெறுக்கத் தக்க காரியமோ என் தம்பியால் ஏற்பட்டுவிட்டது. அது குற்றமானாலும், எனது வேண்டுகோளை நீர் மறுப்பது முறையில்லை. சிறியவர்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களை அழிப்பது தகுதியில்லை. அவற்றைப் பொறுத்தருள்வதே பெரும் புகழுக்குக் காரணமாகும்!'' என்று வேண்டினார்.

தருமருடைய வேண்டுகோளைக் கேட்டு குபேரன் பீமனிடம் கொண்ட சினம் தணிந்தான். பகையையும் வீராவேசத்தையும் கைவிட்டான். மகிழ்ச்சியோடு அவர்களை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தான். தருமரைக் குபேரன் தனது மார்போடு அன்பாக அணைத்துக் கொண்டான்.

பிறகு குபேரன் தருமரிடம், ''பூலோகத்து உயிர்களிடம் இயல்பாகவே அதிக கருணை கொண்ட அரசனே! சந்திர

குலத்திலே, அக்குலத்துக்கு ஏற்ற நற்குணத்தோடு பிறந்த குமாரன் நீ! ஆகையால், உன் தம்பியிடம் கொண்ட கோபத்தையும் பகையையும் நான் விட்டு விட்டேன்!'' என்று சொல்லி, அவரைப் புகழ்ந்தான்.

மேலும் அவன் தருமரைப் பார்த்து, ''எனது நகரம் வேறு உனது நகரம் வேறு என்பது இல்லை. இந்த அளகாபுரி உன்னுடைய நகரமே. முன்பு நீங்கள் வசித்து வந்த அஸ்தினாபுரி என்னுடையதே!'' என்றவன், அவர்களைத் தனது அளகாபுரி அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

குபேரன் அவர்களுக்குத் தனது அளகாபுரி பட்டணத்தைச் சுற்றிக் காட்டினான். தனது சிறப்புகளைக் காட்டினான். தனது நவநிதிகளைக் காட்டினான். கற்பகச் சோலைக்கு ஒப்பான தன்னுடைய சைத்திரரதம் என்னும் உத்தியான வனத்தைக் காட்டினான். அந்தச் சோலையிலுள்ள தடாகங்களைக் காட்டினான். ரத்தின குவியல்களையும் அரண்மனையையும் நன்றாகக் காட்டினான்.

அவர்கள் குபேரன் காட்டிய எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

பிறகு, குபேரன் அவர்களை ஸ்நானம் செய்வித்தான். சிறந்த பாத்திரங்களில் அமிருதம் போன்ற இனிய உணவு வகைகளை அவர்களுக்குக் கொடுத்து விருந்து உபசரித்தான். தனது கைகளாலேயே அவர்களுக்கு வஸ்திரங்களையும் பலவகையான செல்வங்களையும் பரிசாகக் கொடுத்தான்.

அப்போது குபேரன் தருமரை நோக்கி, ''அஸ்தினாபுரத்து ராஜனே! நீ இங்கே வரும்படி எனது தவத்தின் பயன் இருந்தது. என் உயிர் போன்ற அன்புச் சிநேகத்தால் நீ சிவபெருமானைப் போன்றவனானாய்!'' என்று உபசார வார்த்தைகள் சொன்னான்.

திரும்பவும் அவன் தருமரிடம், ''நேற்று அமராவதிப் பட்டணத்தில் தேவேந்திரனோடு தேவசபையில் நானும் வீற்றிருந்தேன். அப்போது அர்ச்சுனன் என்னும் மானிடன் அங்கே வந்தான். அவனைப் பற்றி நான் அங்கிருந்த தேவர்களிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள் அவனுடைய செய்கைகளையும் ஜெயத்தையும் கூறி, அவன்

குருவம்சத்துத் தலைவன் என்றும் சொன்னார்கள். நீயும் பூலோகமும் வாழ்வு பெற அந்த அர்ச்சுனன் தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்குத் தேவேந்திரனுடன் கூடிய சீக்கிரம் வந்து சேர்வான். ஆகையால், பூலோகம் முழுவதும் இனி உன்னுடையதாகிவிடும். நீ துன்பத்தால் வருந்தாதே!'' என்று கூறி, அவருக்குத் தாமரைப் பூவைத் தந்து விடை கொடுத்தான்.

தருமர் அச்சமயம் குபேரனிடம், ''ஐயனே! உமது பெருமையை அறியாமல் சிறுவனாகிய பீமன் உமது அளகாபுரிக்கு வந்து சேர்ந்தான். ஆகவே, அவன் செய்த குற்றங்களைப் பொறுத்தருளும். அவன் செய்த ஒரு பிழையையும் மனத்தில் வைத்துக் கொள்ளாதீர்!'' என்று வேண்டிக் கொண்டான்.

குபேரன் தருமருடன் வந்த ரோமசரிஷியின் பாதங்களைப் பூஜை செய்து நமஸ்கரித்தான். அவருக்கு வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் கொடுத்தான். மகரிஷி குபேரனை ஆசீர்வதித்துத் தமது தபோவனத்தை அடைந்தார்.

பிறகு, எல்லோரும் கடோத்கஜனுடைய ரதத்தில் ஏறிக் கொண்டு நந்திசேன முனிவரின் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

தருமர் நந்திசேனரின் பாதங்களை நமஸ்கரித்து நடந்தவற்றையெல்லாம் கூறிவிட்டு, கடோத்கஜனை அவருக்கு அறிமுகப்படுத்தினார். கடோத்கஜன் முனிவரின் திருவடிகளை வணங்கி எழுந்தான்.

கடோத்கஜனை நோக்கி அப்போது தருமர், ''குமாரனே! முதலையிடமிருந்து யானையைக் காத்தருளிய திருமால் போல், நீ உனது தந்தையின் உயிரைப் பாதுகாத்தாய்!'' என்று பாராட்டினார்.

தருமர் கடோத்கஜனுக்குப் பூமாலை கொடுத்தார். தமக்குக் குபேரன் கொடுத்த ஆடைகளைக் கொடுத்தார். மேலும் அவனுக்கு முத்துக்குடையும், நவரத்தினங்களும், பயங்கர ஆயுதங்களும், நல்ல பெயரும் கொடுத்தார். பின்பு, கடோத்கஜனுக்குத் திரும்பிச் செல்ல உத்தரவு கொடுத்தார்.

கடோத்கஜன் பக்தியும் மகிழ்ச்சியும் நெஞ்சிலே மோத பாண்டவர்களைப் பிரதக்ஷிணம் வந்து நமஸ்கரித்தான். பிறகு, தனது ரதத்தில் ஏறி அவன் இடிம்பவனம் போய்ச் சேர்ந்தான்.

அந்தச் சமயத்தில் அர்ச்சுனன் தேவலோகத்திலிருந்து அந்த வனத்துக்கு வந்து சேர்ந்தான். அதுமுதல் பஞ்சபாண்டவர்கள் திரெளபதியோடு ஒன்றாக அந்த வனத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தார்கள்!

6. துருவாசமுனிவர்

பாண்டவர்கள் அவ்வாறு காட்டிலே வசித்து வந்தபோது துருவாசமுனிவர் அங்கே வந்தார். அவர் கொடிய கோபம் உள்ளவர். பெரும்தவம் உடையவர். பிறருக்குக் கொடிய சாபத்தைக் கொடுப்பவர். பார்த்தவர்கள் அஞ்சுகின்ற கொடிய மகரிஷி.

துருவாசரிஷியைப் பாண்டவர்கள் கண்டார்கள். அவர்கள் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது. தங்களிடம் மகரிஷி வந்தது தாங்கள் செய்த தவப்பயனே என்று அவர்கள் பெருமை கொண்டார்கள். அவருடைய திருவடித் தாமரைகளை நமஸ்கரித்து பாண்டவர்கள், "எம்பெருமானே! தாங்கள் இங்கே எழுந்தருளும் பாக்கியத்தை நாங்கள் அடைந்தோம்!" என்று கூறி, அவரைப் பூஜித்தார்கள்.

தம்மை வணங்கிய பாண்டவர்களை மகரிஷி ஆசீர்வதித்தார்.

முனிசிரேஷ்டரை தருமர் புலித்தோல் ஆசனத்தில் அமரச் செய்து, அவர் நடந்து வந்த சிரமத்தைப் போக்கினார்.

அப்போது துருவாசர், "தருமபுத்திரனே! சூரியன் வானுச்சிக்கு வந்துவிட்டான். ஆகையால், இப்போது எனக்குச் சாப்பிடும் நேரமாகிவிட்டது!" என்றார்.

அது கேட்டு தருமர், "முனிவரே! தாங்கள் நீராடிவிட்டு வாருங்கள்!" என்றார்.

துருவாசர் அதன்படியே ஸ்நானம் செய்து வர முனிவர்களோடு சென்றார்.



மகரிஷி உண்பதற்கு என்ன கொடுப்பது என்று தருமருக்குப் புரியவில்லை. அவர் தம்பிகளிடமும் மனைவியிடமும் அது குறித்து விசாரித்தார்.

பீமன் அதற்கு, ''நமது பகைவர்களான துரியோதனாதியர்களின் சொல்லுக்கு இணங்கி இம்முனிவர் வந்திருக்கின்றார். அதைத்தவிர இவர் இங்கே வருவதற்கு

வேறு ஒரு காரணமும் இல்லை. ஐயோ! இப்படி இவர் வந்ததற்கு இப்போது நான் சொல்வதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை. இந்த மகரிஷியை ஏவிய துரியோதனாதியர்களை இப்போதே புறப்பட்டுப் போய் யுத்தம் புரிந்து கொல்ல வேண்டும். நமது உயிரையும் காத்துக் கொள்ள வேண்டும். இதுவே, நாம் இந்த நேரத்தில் செய்யத் தக்கக் காரியம்!'' என்று கூறினான்.

அதுகேட்டு அர்ச்சுனன், ''வேதங்களால் புகழப்படும் கடவுள் போன்ற பெருமையுள்ளவர் துருவாசமகரிஷி. அவரை ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வரும்படி அனுப்பியுள்ளோம். இப்படிச் செய்துவிட்டு, நாம் அதற்கு மாறாக மனத்தில் எண்ணமிடுவது கொஞ்சமும் சரியில்லை!'' என்றான்.

நகுலன் அச்சமயம், ''இரண்டு மருத மரங்களின் நடுவே சென்ற ஸ்ரீகிருஷ்ணபகவானை இங்கே விரைந்து வரும்படி அழையுங்கள்!'' என்றான்.

சகாதேவனும் அதற்கு இணங்கி, ''இப்போது நமக்கு வரப்போகும் ஆபத்து எதுவாக இருந்தாலும் இருக்கட்டும். திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தியானியுங்கள். அப்படிச் சிந்தித்தால் அந்தத் திருமால் இந்த இடத்துக்கு இப்போதே வருவார். அவர் இங்கே வந்தால் நமது இந்தக் கவலை நீங்கும்!'' என்று தெரிவித்தான்.

தருமர் சகாதேவனுடைய சொல்லுக்கு உடன்பட்டார்.

அப்போது பாஞ்சாலி, ''ஐயையோ! சூரியன் வானத்தின் நடுவுச்சியைக் கடந்துவிட்டான். அந்த மகரிஷி நம்மிடம் வருவதற்கு முன்பே நாம் முனிவர்களோடு இலை காய் கிழங்குகளைச் சாப்பிட்டு விட்டோம். இது என்ன தகாத செயல்! இயற்கையாகவே பெருங் கோபமுள்ள மகரிஷியை இப்போது நாம் எப்படி உபசரிக்கப் போகின்றோம். இப்போது ஏற்படப் போவதும் என்ன?'' என்று கூறி, பயத்தால் மேனி நடுங்க நின்றாள்.

தருமர் எல்லாவற்றையும் யோசித்துவிட்டு ஸ்ரீகிருஷ்ண பகவானை மனத்தில் தியானித்தார். அக்கணமே பெருமான் தன்னைத் தியானித்த தருமருடைய இதயக்கமலத்திலிருந்து வெளிப்பட்டு வந்து தோன்றினான்!

கருணை பொங்கும் கண்களால் பாண்டவர்களை நோக்கிக் கண்ணன், ''நீங்கள் ஆரணிய வாசம் செய்ய ஆரம்பித்த காலத்தில் சூரியபகவான் உங்களுக்குக் கொடுத்துதவிய அட்சய பாத்திரத்திலே சோறு இருக்கின்றதா?'' என்று கேட்டான்.

திரௌபதி அதுகேட்டு அட்சய பாத்திரத்தைப் பார்த்தாள். அதிலே ஒரு சோற்றுப் பருக்கை ஒட்டிக் கொண்டிருந்தது. அதனை எடுத்து கண்ணனின் கையில் கொடுத்தாள்.

கண்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்தச் சோற்றுப் பருக்கையைத் தனது வாயிலே போட்டுச் சுவைத்தான். அந்தக் கணத்தில் நீராடிவிட்டுச் சாப்பிட வந்து கொண்டிருந்த துருவாசமகரிஷியும் மற்ற முனிவர்களும் பாற்கடல் அமிருதம் உண்டவர்கள் போல் பசித்துயர் நீங்கினார்கள்.

கொடிய தமது பசித்துயர் சாப்பிடாமலேயே மாறியதைக் கண்டதும் மகரிஷி ஆச்சர்யப்பட்டார். அவர் கோபமும் தணிந்தது. மனம் குளிர்ந்தது. கண்கள் கருணை பொழிந்தன. மகரிஷி அதனால் அதிசயித்து ஞானதிருஷ்டியால் நடந்ததைக் கண்டார். ஸ்ரீகிருஷ்ணனுடைய மாயத்தால் தருமன் ஆபத்திலிருந்து தப்பினான் என்பதைப் புரிந்து கொண்டார்.

உடனே அவர் தருமரிடம் வந்தார். அங்கே கிருஷ்ணனையும் பாண்டவர்களையும் கண்டார். அதனால் பெருமகிழ்ச்சியடைந்து துருவாசரிஷி தருமரைப் பார்த்து, ''தருமபுத்திரா! தேவர்களுக்கும் சுலபத்தில் கிடைக்காத பாற்கடல் அமிருதம் போன்ற உணவைச் சாப்பிட்டவர் போலப் பெரும் திருப்தியை உன்னால் அடைந்தோம். எந்த லோகத்தில் இருப்பவர்களுக்கும் காணக் கிடைப்பதற்கு அருமையான ஸ்ரீமுகுந்தாமுராரியின் உபய பாதங்களையும் நாம் உன்னால் தரிசிக்கப் பெற்றோம். உன்னை அரசன் என்று ஏற்றுக் கொண்டு பாராட்டுபவரைத் தவிர, வேறு யார் இந்தப் பூலோகத்தில் வாழ்பவர்கள்?'' என்று அவரைப் பாராட்டினார்.

பிறகு, அவர் தாம் அங்கே வந்த காரணத்தைச் சொல்லத் தொடங்கி, ''நேற்று நாம் துரியோதனனுடைய அரண்மனைக்குச் சென்றோம். அவன் இனிய பாலும்,

சர்க்கரையும், பழங்களும் கொடுத்து எமது கொடிய பசியைப் போக்கினான். அப்போது நாம் அவனிடம், 'எம்மிடம் உனக்கு வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொள்' என்றோம். அதற்கு அவன், 'என்னிடம் சாப்பிட்ட உணவுபோல் காட்டிலே வசிக்கின்ற பாண்டவர்களிடம் நாளைக்கே போய்ச் சாப்பிட வேண்டும். இதுவே, எனக்குத் தரவேண்டிய வரம்' என்றான். எல்லாச் செல்வமும் தர வல்ல திருமாலின் அருட்செல்வத்தைப் பெற்ற உங்களைக் காட்டிலும் பெரிய செல்வந்தன் போல, அவன் முட்டாள்தனத்தால் இப்படிச் சொன்னான். அதனால் நாமும் உங்களிடம் வந்தோம்!'' என்று கூறி முடித்தார்.

மீண்டும் துருவாசமகரிஷி தருமரை நோக்கி அன்புடன், ''பாண்டு குமாரா! நீ இப்போது உனக்கு விருப்பமான வரத்தை எம்மிடம் பெற்றுக் கொள்!'' என்றார்.

தருமர் அவருடைய பாதங்களை வணங்கி, ''மகரிஷியே! தாங்கள் கௌரவர்களின் வார்த்தைகளைக் கேட்டு இனியாவது கொஞ்சமும் எங்கள் மேல் கோபம் கொள்ளாதிருக்க வேண்டுகிறேன்!'' என்றார்.

துருவாசமகரிஷி அவ்வாறே தருமருக்கு வரம் கொடுத்து விட்டுத் தாம் வசிக்கின்ற காட்டுக்குச் சென்றார். ஸ்ரீகிருஷ்ணபகவானும் துவாரகாபுரி போய்ச் சேர்ந்தான்.

அவர்கள் சென்ற பின்பு தருமர் தம்பிமார்கள் வணங்கவும், திரௌபதி மகிழவும் அந்த வனத்திலேயே தங்கி வசித்து வந்தார்!

7. பழம் பொருந்தல்

நந்திசேனமகரிஷியின் ஆசிரமத்தில் தங்கி சில நாட்கள் வனவாசம் புரிந்து வந்த பின்பு, பாஞ்சாலி அமித்திர முனிவருக்காகத் தோன்றிய நெல்லிக்கனியைக் கண்டாள். உடனே அவள் அர்ச்சுனனிடம், ''சுவாமி! அதோ பாருங்கள். இனிய நெல்லிக்கனி ஒன்று அந்த நெல்லி மரத்திலே இருக்கின்றது. அதனை எனக்குத் தாருங்கள்!'' என்றாள்.

அர்ச்சுனன் துருபதராஜகுமாரியின் விருப்பத்தை நிறைவேற்ற, தனது அம்பால் அக்கணமே அந்த மதுரமான நெல்லிக்கனியை வீழ்த்தி அவளிடம் கொடுத்தான்.

விஜயனின் அச்செயலைக் கண்ட சில முனிவர்கள், "ஐயோ! இந்த நெல்லிக்கனி அமித்திரமுனிவருடையதாயிற்றே. இதனைக் கணையால் வீழ்த்தி இவன் பாஞ்சாலிக்குக் கொடுத்தானே. இவனுடைய இச்செயலை மகரிஷி கண்டால், அவரால் இவனுக்கு ஆபத்து நேருமே!" என்று சொன்னார்கள்.

அதுகேட்டு அர்ச்சுனன், தான் விற்கணையால் பறித்த நெல்லிக்கனியை திரௌபதியிடமிருந்து வாங்கிச் சென்று தருமருடைய பாதங்களில் வைத்தான். பின்பு, நடந்தவற்றை அவருக்குத் தெரிவித்தான்.

தருமர் அர்ச்சுனனுடைய வார்த்தைகளைக் கேட்டு மிகவும் மனம் நொந்து, "அர்ச்சுனா! நாம் செய்த பாவத்தால் வனவாசம் வந்தோம். இங்காகிலும் காய் கனி கிழங்குகளை உண்டு இன்பமாக வாழலாம் என்றால், அப்படி வாழ முடியாதபடி ஏதாவது துன்பம் நமக்கு வந்து கொண்டேயிருக்கின்றது. என்ன செய்வது?" என்றார்.

பீமன் தருமரிடம் அப்போது, "அமித்திரரிஷி இதனைக் கேள்விப்பட்டால் கோபாக்கினி தோன்ற நம்மைச் சபிப்பது நிச்சயம். கொடிய சாப வார்த்தையை அந்த மகரிஷி சொல்வதற்கு முன்பு நாம் அவரிடம் செல்வோம். அவரைத் துதித்துப் புகழ்வோம். நம் புகழ்ச்சியால் அவர் நம்மைக் கோபிக்கமாட்டார்! அந்த முனிவர் ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவர். ஆகையால், நம் பிழையைப் பொறுத்தருள்வார். ஐயனே! தங்கள் மாசற்ற பேச்சை அவர் மறுத்துப் பேசமாட்டார்!" என்று கூறினான்.

தருமர் அது கேட்டு மகிழ்ந்தார். பீமனுடைய சொல்லுக்கு உடன்பட்டார்.

ஆனால் , அர்ச்சுனனோ தமையனின் வார்த்தைகளைக் கேட்டதும், தருமரைப் பார்த்து, "அண்ணா! அமித்திரரிஷி உண்பதற்காக வருஷத்துக்கு ஒருமுறை தோன்றும் நெல்லிக்கனியைக் கணையால் வீழ்த்தியவன் நானே. அதனால் முனிவர் என்னைத் தவிர வேறு எவரையும் சபிக்க மாட்டார். ஆகவே, நீங்கள் அம்முனிவர் சபிப்பாரே என்று பயப்படுவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

தருமர் அதற்கு காண்டீபனை நோக்கி, "விஜயா! ஆலோசிக்காமல் பாஞ்சாலிக்காக இந்த நெல்லிக்கனியைப்

பறித்துவிட்டாய். இதனால் நீ அமித்திரரிஷியின் சாபத்தால் வருத்தத்தை அனுபவிக்க, நாங்கள் உன்னைவிட்டுப் போய்ப் பிழைத்திருப்போமோ?'' என்றார்.

அப்போது நகுலன், ''அண்ணா! துருவாசமகரிஷியின் கோபத்தால் ஏற்படவிருந்த ஆபத்தைக் காட்டிலும், இந்த வனத்தில் அமித்திர மகரிஷியின் உணவாகிய நெல்லிக்கனியைப் பறித்தது மிகவும் கொடிய செயல். இதனால் மகரிஷிக்கு உண்டாகப் போகும் கோபத்தைப் போக்கி, நாம் ஆபத்திலிருந்து தப்ப வேண்டும். இதற்கு ஒரே வழிதான் உண்டு. இப்போதும் அந்தக் கிருஷ்ணபகவானை இங்கே வரும்படி தாங்கள் தியானியுங்கள்!'' என்று தருமரிடம் சொன்னான்.

நகுலனையடுத்து சகாதேவன் தருமர் முகம் பார்த்து, ''அன்புள்ள தமையரே! தாம் சாப்பிடுகின்ற நெல்லிக்கனி பறிக்கப்பட்டதைக் கண்டு அமித்திரமகரிஷி கோபிப்பதற்குள், நாம் அவர்முன் செல்வோம். அவரது பாதங்களை நமஸ்கரித்து இந்த நெல்லிக்கனியை அவர்முன் சமர்ப்பிப்போம். அப்படிச் செய்தால் அந்த ரிஷிசிரேஷ்டர் தம் மனத்தில் வருத்தம் ஏற்பட நம்மைக் கோபிக்க மாட்டார். இது நிச்சயம்!'' என்றான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்த துருபதராஜகுமாரி, தன்னால்தான் இத்துன்பம் ஏற்பட்டது என்பதை உணர்ந்தாள். அதனால் அவள் மனம் வருந்தி கண்ணீர்ப் பெருக்கெடுக்க, ''எப்போதும் பெரியவர்கள் பெண் பேச்சைக் கேட்டு நடக்கமாட்டார்கள் என்று இந்த உலகத்தவர்கள் சொல்வது பொய்யில்லை. முன்பு நீங்கள் அடைந்த துன்பத்தையெல்லாம் மனத்தில் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், அவையாவும் என்னால்தான் ஏற்பட்டன என்பது எனக்குப் புரிகிறது!'' என்று கதறினாள்.

தம்பிமார்களும் திரௌபதியும் கூறிய வார்த்தைகளைக் கேட்டு நின்ற தருமர், நகுலனின் யோஜனைப்படி நடப்பதே இப்போதைக்கு உத்தமம் என்று நினைத்தார். உடனே அவர் கிருஷ்ணனைத் தியானம் செய்தார். அக்கணமே அந்த மாயக்கண்ணனும் அவர்கள் எதிரே வந்து தோன்றினான்.

தம்முன் வந்த கண்ணபிரானைக் கண்டு தருமர் சந்தோஷித்தார். அவனுடைய பொற்றாமரைத் திருவடிகளை வணங்கினார். தங்களுக்கு அப்போது ஏற்பட்டுள்ள துன்பத்தை அவனுக்குத் தருமர் தெரிவித்தார்.

அவற்றைக் கேட்ட கிருஷ்ணன் அவர்களைப் பார்த்து, ''பாண்டவர்களே! நீங்கள் ஐவரும், இந்தத் திரௌபதியும் இப்போது உங்கள் மனத்தில் உள்ளதை மறைக்காமல் அப்படியே சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் விஜயனுடைய கணையால் வீழ்ந்த இந்த நெல்லிக்கனி, திரும்பவும் தானிருந்த கிளையில் சென்று ஒட்டிக் கொள்ளும்!'' என்று சொன்னான்.

ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஆணைப்படி அவர்கள் தங்கள் மனத்தில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லத் தொடங்கினார்கள்.

முதலில் தருமர் கண்ணனைப் பார்த்து, ''பூதனையைக் கொன்றவனே! தருமமும், சத்தியமும், பொறுமையும், திருமாலும் ஜெயிக்கட்டும். பாவமும், பொய்யும், கோபமும், அசுரர்குலமும் தோற்கட்டும். இரவும் பகலும் இந்த எண்ணம் என் மனத்தில் இடைவிடாமல் இருக்கும்!'' என்றார்.

அடுத்து பீமன், ''எம்பெருமானே! மரணம் ஏற்படுவதானாலும் சரி. பிறர் மனைவிமாரைப் பெற்ற தாயாக நேசிப்பேன். பிறர் சொத்தை எட்டிக் காயாகக் கருதுவேன். பிறரை ஏளனமாகப் பேசுவது பெருமையாகாது. பிறருக்கு ஏற்படும் துன்பத்தை என் துன்பமாக நினைப்பேன். இவையே என் மனத்தில் எப்போதும் கிடக்கின்ற விஷயங்களாகும்!'' என்று கண்ணன் முகம் நோக்கிச் சொன்னான்.

அர்ச்சுனன் மைத்துனனிடம், ''ஞான சொரூபியே! உயிரே போவதானாலும் மானத்தைக் காத்து வாழ வேண்டும். அதுவே இப்பூலோகத்தில் உள்ள எப்படிப் பட்டவர்களுக்கும் சிறப்பையும் புகழையும் கொடுக்கும்!'' என்றான்.

நகுலன் கண்ணபிரானைப் பார்த்து, ''சக்கரதாரியே! நிலையற்ற இந்த உலகில் ஒருவர் சிறந்த குடிப்பிறப்பும், அழகும், செல்வமும், தருமமும் உடையவராக இருக்கலாம்.

அப்படியிருந்தாலும் அவர் கல்வியறிவு இல்லாதவரானால் அவரைப் பலாசமரத்தின் வாசனையற்ற பூவாகவே நான் மதிப்பேன்!'' என்றான்.

சகாதேவன் தருமரை நோக்கி, ''சத்தியமே தாய். ஞானமே தந்தை. தருமமே சகோதரன். கருணையே நண்பன். சாந்தமே மனைவி. பொறுமையே பிள்ளை. இந்த ஆறு பேரையும் தவிர வேறு யாருமே உறவினர் இல்லை!'' என்று தெரிவித்தான்.

திரௌபதி தமையனாகிய ஸ்ரீகிருஷ்ணனைத் தோத்தரித்து, ''இறைவனே! பெண்ணாய்ப் பிறந்தவர்கள் யாரும் தம்முடைய பர்த்தாவைத் தவிர வேறு புருஷரை விரும்புவார்கள். ஆயினும் அவர்கள் விரும்பியபடி அவர்களுக்குக் கணவர்கள் கிடைப்பதில்லை. ஆகவே, பலரும் ஒரு புருஷரையே கணவராகக் கொண்டுள்ளார்கள். தாம் மணந்து கொண்ட ஒரு புருஷரைத் தவிர அவர்கள் வேறு புருஷரை மோகிக்க மாட்டார்கள் என்பதில்லை. ஆனால், நானோ மகாவீரர் ஐவரைக் கணவராகப் பெற்றிருக்கின்றேன். ஆதலால் ஆறாவதாக வேறு ஒரு புருஷரையும் நான் காமுற மாட்டேன். இது சத்தியம்!'' என்று சொன்னாள்.

ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஆணைப்படி பாண்டவர்களும் திரௌபதியும் தங்கள் மனத்தில் உள்ளதை மறைக்காமல் சொன்னதுதான் தாமதம். அமித்திர முனிவருக்குச் சொந்தமான அந்த நெல்லிக்கனி திரும்பவும் தானிருந்த கிளையில் சென்று ஒட்டிக் கொண்டது. ஆம், எப்போதும் பெரியோர்கள் பேசுகின்ற வார்த்தை உண்மையாகச் சொல்லப்படுமானால், அவ்வார்த்தை பாராட்டுக்குரிய புகழை அடையும்!

கண்ணன் அமித்திரமுனிவரின் சாபத்துக்கு அஞ்சி வருந்திய பாண்டவர்களின் துன்பத்தைத் தீர்த்ததும், அவர்களிடம் உத்தரவு பெற்று துவாரகாபுரி போய்ச் சேர்ந்தான். அப்போது அவனை அவர்கள் எல்லோரும் நமஸ்கரித்துப் போற்றினார்கள்.

அதன் பிறகு அந்த வனத்திலே பாண்டவர்கள் திரௌபதியோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்!

8. நச்சுப் பொய்கை

காமிய வனத்தில் சிலகாலம் வாழ்ந்திருந்த பின்பு, பாண்டவர்கள் விஷ்ணுசித்தமுனிவரின் தபோவனத்தை அடைந்தார்கள். அங்கே அவர்கள் எந்தவிதக் கவலையும் இல்லாமல் வசித்திருந்தார்கள்.

பாண்டவர்கள் அவ்வாறு விஷ்ணுசித்தரின் தபோவனத்தில் வாழ்ந்திருக்கையில், அஸ்தினாபுரியில் துரியோதனன் ஒரு சூழ்ச்சி செய்யத் தொடங்கினான். அவன் துச்சாதனன், சகுனி, கர்ணன் ஆகியவருடன் கூடி பாண்டவர்களைப் பற்றி யோசித்தான். அந்தக் கொடிய நால்வர்களும், 'பாண்டவர்கள் உயிரோடு இருந்தால் மறுபடியும் திரும்பி வந்து இந்த ராஜ்ஜியத்தை அரசாள விரும்புவார்கள். ஆகையால், அவர்கள் வனவாசத்தையும் அஞ்ஞாதவாசத்தையும் முடித்துக் கொண்டு திரும்பி வருவதற்குள், நாம் அவர்களைத் தந்திரமாகக் கொன்று விடுவோம்' என்று துணிந்தார்கள்.

உடனே தங்கள் முடிவைச் செயல்படுத்தவும் தொடங்கினான் துரியோதனன். அவன் ஒரு முனிவரை அழைத்து, ''தாங்கள் இப்போதே விரைந்து சென்று காளமாமுனிவரை இங்கே அழைத்து வாருங்கள்!'' என்று ஆணையிட்டான்.

முனிவர் அதன்படி வேகமாகப் போய் காளமாரிஷியை அழைத்து வந்தார்.

காளமாமுனிவரை துரியோதனன் மிகவும் அன்போடு எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தான். அவருடைய பாதங்களை வணங்கினான். அவரை நோக்கி, ''தங்களின் தவப்பெருமையால் பூலோகம் முழுவதிலும் எனது கட்டளையே நடக்கின்றது. தாங்கள் எனக்கு வரவிருக்கும் ஆபத்திலிருந்து என்னைக் கரையேற்றும்படி, தங்களின் திருவுள்ளத்தில் கருணை புரிய வேண்டும்!'' என்று கூறி, சாஷ்டாங்கமாக அவர் பாதங்களில் விழுந்தான்.

துரியோதனனை மகரிஷி ஆசீர்வதித்துவிட்டு, ''ராஜராஜனே! நீ இன்று என்னை இங்கே அழைத்ததற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

அது கேட்டு துரியோதனன் சகுனியைப் பார்த்தான். சகுனி உடனே காளமாமுனிவரைப் பாராட்டிவிட்டு, ''முனிவர் பெருமானே! தாங்கள் இந்தத் துரியோதனனுடைய கொடிய பகைவரைப் போக்கியருளுங்கள்!'' என்று தெரிவித்தான்.

அப்போது கர்ணன் காளமாரிஷியைப் பார்த்து, ''மகாமுனிவரே! பாண்டவர்கள் உயிரோடு இருந்தால், தாங்கள் சூதாட்டத்தில் தோற்ற ராஜ்ஜியத்தைத் திரும்பவும் வந்து கேட்பார்கள். ஆகவே, அவர்களைக் கொல்வதற்கு உண்டான யாகத்தை அவர்கள் அறியாதபடி தாங்கள் செய்தருள வேண்டும். அப்படிச் செய்தால் இப்பூலோகம் முழுவதையும் தாங்கள் துரியோதனனுக்கு நிலையாகக் கொடுத்தவர் ஆவீர்கள்!'' என்றான்.

கர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் காதுகளில் தீ நுழைந்தது போல் காளமாமுனிவர் துடித்தார். தமது பஞ்சேந்திரியங்களும் மனமும் இடியோசை கேட்ட நாகம் போல் நடுங்கப் பெற்றார். அவர், 'தாம் அதுவரை செய்த தவங்களும், தமது பெருமையும் அழிந்தன. ஏழு பிறவிகளிலும் செய்த புண்ணியங்களும் இன்றோடு அழிந்தன' என்று நினைத்தார்.

பிறகு துரியோதனனைப் பார்த்து முனிவர், ''ராஜராஜனே! அஷ்டதிக்குகளிலும் உனது புகழ் இல்லாத திக்கு எதுவும் இல்லை. பூலோகம் முழுவதும் உனது ஒப்பற்ற குடையின் கீழ் தங்கி, மநுசாஸ்திரப்படி வாழ்வு பெற்றுள்ளது. எந்தக் குறையைக் கண்டு நீ பகைவர்களை யாகம் புரிந்து கொல்ல நினைக்கிறாய்? பாண்டவர்களைக் கொல்வதற்கான யாகத்தை நான் செய்யலாம். ஆனால், நல்வினையுள்ள அவர்கள் இறக்க மாட்டார்கள். அதனால் நானே சொர்க்கம் போவேன். ஏனென்றால் அவர்களை அழிக்க முடியாதபடி அவர்களுக்குத் துணையாக ஸ்ரீகிருஷ்ணபகவான் இருக்கின்றார். எனவே, அவர்களை யாகத்தால் அழித்து உனக்கு நிலையான ராஜ்ஜியத்தைக் கொடுப்பது என்பது, என்னை நானே தற்கொலை செய்து கொள்வதாகும். அதுவே சத்தியமாக நடக்கும்!'' என்றார்.

காளமாமுனிவர் அப்படிச் சொன்னதும் அந்த நால்வர்களும் அவரை வணங்கினார்கள். பலவாறு புகழ்ந்து தங்களின் விருப்பப்படி யாகம் செய்ய வேண்டும் என்று



கேட்டுக் கொண்டார்கள். முனிவர் அதற்குமேல் மறுக்க முடியாமல் அவர்களின் விருப்பத்துக்கு இணங்கினார். உடனே துரியோதனன் யாகத்துக்கு வேண்டிய எல்லாவற்றையும் அவருக்குத் தந்தான்.

மகரிஷி அவற்றைப் பெற்றுக் கொண்டு அபிசார யாகம் செய்யச் சென்றார். துரியோதனனும் இனி தன் எண்ணம் நிறைவேறும் என்று மகிழ்ச்சியுடன் தனது மாளிகைக்குப் போனான்.

காளமாமுனிவர் நேரே சென்று தம்முடைய தவச் சாலையின் ஒரு பக்கத்திலேயே யாகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்தார். முதலில் தேவர்களும், முனிவர்களும், மானிடர்களும் அஞ்சும்படி பல கொடிய பலிகளைக் கொடுத்தார். பிறகு, பெரிய ஓம

குண்டத்தில் அளவற்ற அக்கினி ஜுவாலை எழ நிறைய விறகுகளையிட்டார். அபிசார யாகத்துக்கான வேத மந்திரங்களை ஜபித்து ஒழுங்காக யாகச் சடங்குகளைப் புரிந்தார். ஒரு மந்திரத்துக்கு ஏழு தடவை நெய்யை ஓமஞ்செய்து அபிசாரத்துக்கு ஏற்ற மந்திரங்கள் எல்லாவற்றையும் ஓதி கொடுமை மிகுந்த ஓமத்தையும் செய்தார்.

துரியோதனனுடைய எண்ணப்படி காளமாமுனிவர் யாகம் செய்ததும், அந்த யாகக் குண்டத்திலிருந்து ஒரு பூதம் தோன்றியது. அதன் கடைவாயிலிருந்த இரண்டு கோரத் தந்தங்களிலிருந்தும் நிலவொளி வீசியது. கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. அந்தப் பூதம் வெய்யிலில் குளித்த கருநிற மலைபோல் காணப்பட்டது!

முனிவர் அந்தப் பூதத்தைக் கண்டு பயந்து உடம்பு நடுங்கினார்!

இது இவ்வாறிருக்க, காட்டில் வசிக்கின்ற பாண்டவர்களுக்கு இனி நேருவதைச் சொல்வோம்.

துரியோதனனுக்காக காளமாமுனிவர் பாண்டவர்களைக் கொல்ல யாகம் புரிவதை யமதருமராஜன் அறிந்தான். அந்த யாகத்தால் பாண்டவர்களுக்குத் தீங்கு ஏற்படாதவாறு தடுப்பதற்காக உடனே அவன் ஓர் உபாயம் செய்யலானான்.

பாண்டவர்களோடு வனத்தில் ரிஷிகளும் ரிஷி குமாரர்களும் வசித்து வந்தார்கள். அந்த ரிஷிகுமாரர்களுள் ஒருவன் தரித்துக் கொண்டிருந்த மான்தோலை, மானொன்று பாண்டவர்களையும் லட்சியம் செய்யாமல் பறித்துக் கொண்டு காற்றை விட வேகமாக ஓடியது.

தனது ஆடையாகிய மான்தோலை மான் பறித்துக் கொண்டு போனதைக் கண்டு ரிஷிகுமாரன் வருந்தினான். அவன் நேரே பாண்டவர்களிடம் வந்து, ''நான் பூணூலோடு தரித்திருந்த மான்தோலை மான் ஒன்று வந்து கவர்ந்து கொண்டு ஓடியது. அதனைப் பிடிக்கலாம் என்றாலோ, காற்றைவிட வேகமாக அது நெடுந்தூரம் ஓடி மலையிலே மறைந்துவிட்டது. எனக்கு அபயம் தாருங்கள்!'' என்று கண்ணீர்ப் பெருகக் கதறி முறையிட்டான்.

அவனுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக அக்கணமே பாண்டவர்கள் வில்லிலே அம்பைப் பூட்டிக்

கொண்டு ம.... சென்ற வழியே விரைந்தார்கள். நெடுந் தூரத்தில் அந்த மானை அவர்கள் கண்டார்கள். உடனே அதனை அம்பால் குறி வைத்துக் கொல்ல அவர்கள் முனைந்தார்கள். ஆனால், அடுத்த வினாடியே அது எங்கோ தொலைவில் ஓடிவிட்டது. மீண்டும் அவர்கள் மானைத் தேடிச் செல்லத் தொடங்கிய உடனே, அது அவர்கள் அருகே தோன்றியது. இப்படியாக அந்தமான் பாண்டவர்கள் தன்னைப் பிடிக்க முடியாதபடி சோர்ந்து போகும் வரையில் அவர்களை அலைக்கழித்தது. ஒருவாறு பாண்டவர்கள் களைப்படைந்தார்கள். அதனால் அந்த மான் இந்திரஜால செய்கை உடையது என்று நினைத்து, அதனைப் பிடிக்கும் ஆசையை அவர்கள் கைவிட்டார்கள்.

அப்போது யமதருமன், 'பாண்டவர்களுக்கு இது இடம் தெரியாத காடு. இந்தக் காட்டில் அவர்கள் அலைந்ததால் மனக்கலக்கமும் பெரும் தாகமும் அடைந்திருப்பார்கள்' என்று நினைத்தான். அதனால் மறுகணமே அவன் மானுருவம் நீங்கித் தானே பார்ப்பதற்கு நல்ல தண்ணீர் போல் தெரியும் விஷப்பொய்கையாகவும், வெகு நாட்களாக வளர்ந்துள்ள மரங்களாகவும் அங்கே தோன்றினான்.

பாண்டவர்கள் பெருந்தாகத்தால் உடல் சோர்ந்து வருந்தினார்கள். தருமர் சகாதேவனைப் பார்த்து, "தம்பி! இப்போதே நீ போய் விரைவில் பருகுவதற்கு நீர் கொண்டு வா!" என்று கட்டளையிட்டார்.

தருமருடைய ஆணைப்படி நீர் கொண்டு வர சகாதேவன் அப்போதே புறப்பட்டுச் சென்றான். அவன் காடு முழுதும் நீர் தேடி அலைந்தான். எங்குமே நீரில்லை. கடைசியாக ஒரு மலைமீது ஏறி நின்று சுற்றிலும் நோக்கினான். ஒரு பக்கத்திலே யமதருமனால் உண்டாக்கப் பட்ட நச்சுப்பொய்கை இருப்பதைக் கண்டான். அது நச்சுப்பொய்கை என்பது அவனுக்குத் தெரியாது. அதனால் அவன் அப்பொய்கைக்கு விரைந்து சென்றான். அதிலிருந்து நீரையள்ளிக் குடித்தான். நச்சுப்பொய்கையின் தண்ணீர் வயிற்றில் போவதற்குள்ளேயே அவன் உயிர் சோர்ந்து இறந்தான்!

சகாதேவனுடைய நிலையை அறியாத தருமர் நீர் வேட்கை தாங்காது வருந்தினார். அதனால் உடனே நீர்

கொண்டு வரும்படிக் கட்டளையிட்டு நகுலனை அனுப்பினார்.

நகுலன் அக்கணமே விரைந்து சென்று சகாதேவன் போலவே நச்சுப்பொய்கையின் நீரைப் பருகி இறந்தான்!

வெகு நேரமாகியும் நீர் கொண்டு வரச் சென்ற தம்பிகளைக் காணாததால், அர்ச்சுனனை நீர் கொண்டு வரும்படி தருமர் அனுப்பினார்.

அர்ச்சுனனும் சென்று தம்பிகளைப் போலவே மாய்ந்தான்!

தருமர் நீர் கொண்டு வரப் போனத் தம்பிமார்கள் நெடு நேரமாகியும் வராதது கண்டு வருந்தினார். அந்த வருத்தத்துடன், ‘‘என் தம்பிமார்கள் என்ன இப்படிச் செய்து விட்டார்கள்!’’ என்று சொல்லிச் சோர்ந்தார்.

தருமருடைய தளர்ச்சியைப் பார்த்ததும் பீமன், தான் போய் நீர் கொண்டு வருவதாக அவரைச் சமாதானப்படுத்தி விட்டு விரைந்து சென்றான். பீமன் தம்பிமார்கள் இறந்து கிடக்கின்ற நச்சுப்பொய்கையைக் கண்டான். தம்பிமார்கள் இறந்து கிடப்பதற்கு அந்த நீர்தான் காரணம் என்பதை அவன் உணர்ந்தான். நல்ல நீர் போல் பார்ப்பதற்குத் தோன்றும் அது விஷமுடைய நீர் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது!

தான் அடைந்தது நச்சுப்பொய்கை என்று தெரிந்த போது பீமன், நீர்வேட்கையால் அளவு கடந்து துடித்தான். ஆனாலும் தனது பெருந்தாகத்தை அடக்கிக் கொண்டான். அதுபோல் தம்பிமார்கள் இறந்த சோகத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

பீமன் பிரவாகமாகப் பெருகிய தனது கண்ணீரால் அர்ச்சுனனுடைய உடம்பைக் குளிப்பாட்டினான். இறந்து கிடந்த நகுல சகாதேவர்களைப் பார்த்து, ‘‘ஐயோ! என்னுடைய துணைவர்களை இழந்தேனே! இனி, நான் என்ன செய்வேன்? யாரும் நீர் கொண்டு சென்று கொடுக்காததால், எனது தமையனாரும் இந்தக் காட்டிலேயே நீர் வேட்கையால் இறந்து விடுவார். பிறகு, பேசும்படி வேறு ஓர் உடன் பிறந்தாரையும் நான் காணமாட்டேன். அதனால் நான் யாரோடு சம்பாஷனை செய்வேன்? என்னோடு

பேசுவதற்கு உடன் பிறந்தவர்கள் ஒருவரும் இல்லையே!'' என்று அழுது புலம்பினான்.

கடைசியாக அவன், 'என் தமையரும் ஒருகால் இங்கே வந்தாலும் வரக்கூடும். அப்படி வந்தால் பார்ப்பதற்கு அழகாகத் தெரிகின்ற இந்த விஷத்தண்ணீரை அவர் பருகவும் நேரிடலாம்!' என்று நினைத்தான். அத்துடன் தான் இனி வாழ்வதிலும் பயனில்லை என்று எண்ணினான்.

அந்த நினைவால் பீமன், தான் செய்யப் போகின்ற துணிச்சலான காரியத்தை மணலில் எழுதி வைத்துவிட்டு அந்த விஷநீரைக் குடித்தான்!

அதனால் பீமனும் இறந்து போனான்!

பாண்டவர்களில் தருமர் மட்டுமே அப்போது உயிரோடு தனித்திருந்தார்!

நீர் கொண்டு வரச் சென்ற தம்பிமார்கள் யாரும் திரும்பி வராததால் தருமர் மிகவும் வருந்தினார். போன தம்பிமார்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டு வந்து சொல்ல, ஒருவரையும் காணாததால் அவர் துன்பம் அதிகமாகியது. அத்துடன் அவர் பெரும் தாகத்தால் அறிவு மயங்கினார். மெல்ல மெல்ல மனமும் உடலும் சோர்ந்து போய் வெட்ட வெளியான அந்தக் காட்டிலே புலனொடுங்கி விழுந்தார்.

பாண்டவர்களுக்கு இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்த சமயத்தில், காளமாமுனிவருடைய யாகத்திலிருந்து தோன்றிய பூதம் முனிவரை நோக்கி, ''முறையாக நான் செய்ய வேண்டிய காரியத்தைச் சொல்!'' என்று கேட்டது.

மாசற்ற காளமாமுனிவர் அதற்கு, ''பூதமே! இங்கே கொஞ்சமும் தாமதித்து நிற்காதே. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் கொடிய காட்டுக்குப் போ. அங்கே வசிக்கின்ற பாண்டவர்களை ஒரே சமயத்தில் கொன்றுவிட்டுத் திரும்பி வா!'' என்று கட்டளையிட்டார்.

உடனே அந்தப் பூதம், ''காட்டில் வசிக்கின்ற பாண்டவர்களிடம் இப்போதே போகின்றேன். ஆனால், அவர்கள் என் கண்களுக்குத் தெரியாமல் போய்விட்டால், திரும்பி வந்து நான் உன்னையே கொல்வேன்!'' என்றது.

பிறகு, பஞ்சமஹா பூதங்களைப் போன்ற அந்தக் கொடிய பூதம் காளமாமுனிவரை வணங்கிவிட்டுப் பாண்டவரைத் தேடி வேகமாகச் சென்றது.

அந்த மகாபூதம் காட்டில் சென்ற வேகத்தால் வழி நெடுகிலும் உள்ள மரங்கள் வேரோடு சாய்ந்தன. கடைசியாக பூதம் தருமரிடம் போய்ச் சேர்ந்தது. அவரைத் தனது பயங்கர விழிகளால் விழுங்கிவிடுவது போல் பார்த்தது. அவரைக் கண்டதும் பூதம், 'யமனால் பிறந்த இந்தத் தருமன், மந்திரம் மறந்த வித்தியாதரன் போல் சந்தன மரத்தின் அடியில் மயங்கி உடல் சோர்ந்து கிடக்கின்றான்! இவனுடைய தம்பிமார்கள் நால்வரும் இவனைத் தனியே தவிக்கவிட்டுப் பிரிந்து போய் விட்டார்கள் போலும். இவனும் இப்போது தாங்க முடியாத வெப்பத்தால் இறந்தான் போலும்! இனி, நான் என்ன செய்வேன்?' என்று தனக்குள் எண்ணிக் கொண்டது.

பின்பு பூதம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று மற்ற நான்கு பேரையும் தேடியது. அவர்கள் நச்சுப் பொய்கையின் கரையிலே இறந்து கிடப்பதைக் கண்டது. அவர்களையும் பொய்கையையும் பார்த்ததும் பூதத்துக்கு என்ன நடந்திருக்க வேண்டும் என்பது புரிந்துவிட்டது.

பூதமும், 'இந்தக் குளிர்ச்சுனை விஷச்சுனை என்பது தெரிகிறது. இதன் நீரை இவர்கள் குடித்திருக்கிறார்கள். அதனால் இவர்கள் நால்வரும் ஒன்றாக மாண்டு போனார்கள். இப்படி அவர்கள் எந்தச் செயலை நினைத்து என்ன செய்துவிட்டார்கள்! ஐயோ, பாவம்! இப்போது நிகழ்ந்த இந்தச் செயல் கொடுமையானது. இந்தக் கொடுமை எதனால் நடந்தது?' என்று எண்ணியது.

மேலும் அந்தப் பூதம், 'துரியோதனனுடைய பேச்சுக்கு இணங்கி காளமாமுனிவன் என்னை யாகத்தீயில் உண்டாக்கினான். இந்தப் பாண்டவர்களைக் கொல்ல என்னை அனுப்பினான். ஆனால், இவர்கள் பகைவர்கள் தம்மைக் கொல்வதற்கு முன்பே இறந்து விட்டார்கள். குற்றம் இல்லாதவர்களைக் கொல்ல வேண்டும் என்று துரியோதனனின் பேச்சால் காளமாமுனிவன் என்னை அனுப்பியது பெரும் பாவச்செயல். அப்படிப்பட்ட பாவச்செயல் புரிந்த முனிவனைக் கொல்வது கேவலம் இல்லை!' என்று நினைத்தது.

அந்த நினைவால் பூதம் அக்கணமே அடங்காத கோபத்தோடு காளமா முனிவரிடம் சென்றது. அவரை நோக்கி, "நல்லொழுக்கச் சத்தியசந்தனே! துரியோதனனின் பேச்சைக் கேட்டு, திரிகால ஞானியாகிய நீ கலக்கம் அடைந்தாய். அதனால் பாண்டவர்களை விஷநீர் குடிக்க வைத்துச் சாகடித்தாய். அப்படி அவர்களைக் கொல்ல நீ யாரை ஏவினாய்? சிவபெருமான் ஊர்த்த தாண்டவம் செய்வதற்கு ஏற்ற கொடிய வெப்பமான காட்டிலே உள்ள பாண்டவர்களைக் கொன்றுவிட்டுவர நீ என்னை அனுப்பினாய்! ஆனால், நான் அங்கு போவதற்கு முன்பே அவர்கள் இறந்து விட்டார்கள். முட்டாளே! ஒருமுறை இறந்தவர்கள் மீண்டும் மீண்டும் இறப்பார்களோ? ஆகவே, நீ இந்தத் தீவினைக்கு ஆளாகிவிட்டாய்!" என்று கோபமாகச் சொல்லிச் சிரித்தது. பிறகு, தன்னுடைய சூலாயுதத்தால் பூதம் காளமாமுனிவரின் தலையைத் துண்டாக்கி வீழ்த்தியது.

தான் வந்த செயல் முடிந்ததும் பூதம் திரும்பவும் யாகத் தீயில் மூழ்கி மறைந்தது!

காட்டிலே இறந்து கிடந்த பாண்டவர்களின் நிலையை இனி பார்ப்போம்.

சந்தனமரத்தின் அடியில் மயங்கிக் கிடந்த முரசக் கொடியுடைய தருமர், தென்றல் காற்று உடம்பில் பட மூர்ச்சைத் தெளிந்தார். மெல்ல எழுந்து உட்கார்ந்தார். திருவஷ்டாக்ஷரத்தைப் பலமுறை ஜபித்தார். நீர் கொண்டு வரச் சென்ற தம்பிமார்களைப் பற்றி நினைத்தார்.

தம்பிமார்களின் நினைவு எழுந்ததுதான் தாமதம். அடுத்தகணமே அவர் மிகவும் தைரியம் அடைந்தார். தம்பிமார்களைத் தேடிப் புறப்பட்டார். அவர்களின் பாத அடையாளங்களைப் பார்த்துக் கொண்டே சென்ற தருமர், கடைசியாக நச்சுப் பொய்கையின் கரையிலே அவர்கள் இறந்து கிடப்பதைக் கண்டார்.

இறந்து கிடக்கும் தம்பிமார்களை உற்று நோக்கினார் தருமர். 'இவர்கள் உடம்பிலே சிறுகாயம் கூட கிடையாது. அதனால் யாரோடும் சண்டையிட்டு இவர்கள் சாகவில்லை. பின்னே இவர்கள் எப்படி இறந்தார்கள்?' என்று எண்ணிச் சிந்தித்தார். சிந்தனையின் முடிவில் தருமர், 'இவர்கள் குடிக்கத்

தண்ணீர் கிடைக்காத களைப்பால்தான் இறந்திருக்க வேண்டும்!' என்று நினைத்தார்.

தருமர் மேலும் தம்பிமார்களை நெருங்கிப் பார்த்தார். அப்போது பீமனின் அருகில் மணலில் எழுதப்பட்டிருந்த வாசகத்தைக் கண்டார். அதனைப் படித்ததுமே அருகில் உள்ள அந்தப் பொய்கை நச்சுப்பொய்கை என்பதை தருமர் அறிந்து கொண்டார். அதனால் தருமர், 'பாண்டவர்கள் வனவாசம் அஞ்ஞாதவாசம் முடிந்து வந்து நாட்டை திரும்பக் கேட்பார்களோ என்று பயந்து, துரியோதனன் இப்படி சூழ்ச்சி செய்துவிட்டான். என் தம்பிமார்கள் போனபின் நான் மட்டும் உயிரோடு ஏன் இருக்க வேண்டும்?' என்று எண்ணி, தாமும் நீர் பருகித் தாகம் தீரப் பொய்கையின் நீரைக் கைகளில் அள்ளினார்.

அப்போது வானத்தில் ஓர் அசரீரி எழுந்தது. அது தருமரை நோக்கி, "தருமபுத்திரனே! இந்தப் பொய்கையின் நீர் விஷமுடையது. ஆகவே, இந்தத் தண்ணீரை நீ குடிக்க நினைக்காதே. இங்கே புதிதாக வந்து, இதோ இறந்து கிடக்கின்ற இந்த நான்கு பேரும், இந்த நீரைப் பருக வேண்டாம் என்று நான் சொன்னதைக் கேட்கவில்லை. அதனால் இந்நீரைக் குடித்து இறந்தார்கள். இப்போது உனக்குப் பெரும் தாகம் ஏற்பட்டால் என்ன? நான் உன்னைக் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு, பிறகு இந்த நீரைக் குடி!" என்றது.

அதுகேட்டு தருமர், "அப்படியே ஆகட்டும்! என்னை நீ கேட்க நினைத்ததைச் சொல்!" என்றார்.

அசரீரி, "சாஸ்திரங்களில் உயர்ந்தது எது?" என்று கேட்டது.

தருமர், "வேதமே சாஸ்திரங்களில் உயர்ந்தது!" என்றார்.

"இல்லற தருமத்துக்கு உரிமையான பொருள் எது?"

"நற்குணச் சிறப்புடைய மனைவி!"

"வாசமுள்ள மலர்மாலைகளில் சிறந்தது எது?"

"சாதிப்பூ மாலை!"

“சிறந்த பெரிய தவம் எது?”

“தமது குலத்துக்கு ஏற்ப நடத்திவரும் நல்லொழுக்கம்!”

“முனிவர்கள் வணங்கும் ஆண்டவன் யார்?”

“திருத்துழாய் மாலையணிந்த முகுந்தன்!”

“பெண்ணுக்கு இயற்கையாய் அமைய வேண்டிய குணம் எது?”

“நாணம்!”

“பாதுகாப்பாக வேண்டியது எது?”

“தகுதியுள்ள ஈகை!”

“மானிடனின் இரண்டு காதுக்களுக்கும் இனிமை தருவது எது?”

“குழந்தைகளின் மழலைச் சொல்!”

“நிலைத்து நிற்பது எது?”

“புகழ்!”

“கற்றுக் கொள்ள வேண்டியது எது?”

“குற்றம் இல்லாமல் கற்க வேண்டியது கல்வி!”

“எல்லாத் தொழில்களிலும் ஒருவனுக்குக் கேவலத்தை ஏற்படுத்துவது எது?”

“பிச்சை!”

அசரீரி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தருமர் இப்படி தகுதியான விடைகளை அளித்தார்.

உடனே அசரீரியாக இருந்த யமதருமன் அவர்முன் தோன்றினான். மகனை அன்போடு அணைத்துக் கொண்டு மகிழ்ந்தான்.

தருமர் தந்தையை அறிந்து கொண்டார். அவன் பாதங்களைப் பக்தியோடு நமஸ்கரித்தார்.

அப்போது தருமரைப் பார்த்து யமன், ''மகனே! இப்போது இறந்து கிடக்கின்ற உனது தம்பிமார்கள் உயிர் பெறுவதற்கு ஒரு வழி உண்டு! நான் உனக்கு ஒரு மந்திரம் சொல்கிறேன். அதனைச் சொல்லி இறந்த உன் தம்பிமார்களுள் உனக்கு மிகவும் அன்பான ஒருவனை எழுப்பு!'' என்றவன், அவருக்கு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தான்.

தருமர் யமனால் உபதேசிக்கப்பட - மந்திரத்தை உச்சரித்து சகாதேவனை எழுப்பினார் சகாதேவன் அப்போதே உயிர் பெற்று எழுந்தான்.

யமன் தருமரை நோக்கி, ''குமாரனே! நீ உனது சொந்த தம்பிமார்களான பீமார்ச்சுனர்களில் ஒருவனை உயிர் பிழைக்கச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக மாற்றாந்தாயின் புதல்வனும் சாதாரண வீரனுமாகிய சகாதேவனை உயிர் பிழைக்கச் செய்தாய். இதற்கு என்ன காரணம்?'' என்று வினவினான்.

''தந்தையே! குந்திபிராட்டிக்கு நான் ஒருவன் புத்திரனாக இருக்கிறேன் என்னும்படி என்னை உயிர் பிழைக்கச் செய்தீர். அதுபோல் நான் என்னுடைய மாற்றாந்தாயாகிய மாத்திரிபிராட்டிக்கு ஒரு புத்திரன் உயிரோடு இருக்கிறான் என்னும்படிச் சகாதேவனை உயிர்பிழைக்க வைத்தேன். இல்லாவிட்டால் அத்தாய்க்கு ஒரு புத்திரனும் இல்லாமல் அல்லவோ போவான்?'' என்று தந்தையின் கேள்விக்குத் தருமர் பதில் அளித்தார்.

மகனுடைய வார்த்தைகளைக் கேட்டு யமன் மிகவும் சந்தோஷம் அடைந்தான். அவருக்குப் பகைவர்களை வெல்லும் மந்திரங்களையும் ஆயுதங்களையும் அன்புடன் கொடுத்தான். மேலும் , அவன் தருமர் கேட்ட வரங்களையும் கொடுத்து, மற்ற பாண்டவர்களையும் உயிர்பெறச் செய்தான்!

மீண்டும் தருமரிடம், ''குமாரனே! துரியோதனன் காளமாமுனிவனைக் கொண்டு, உங்களைக் கொல்ல அபிசார யாகம் செய்தான். அந்த யாகத்தீயிலிருந்து ஒரு பூதம் வெளி வந்தது. அதனிடம் உங்களைக் கொன்றுவிட்டு வரும்படி முனிவன் கட்டளையிட்டு அனுப்பினான். காட்டுக்கு வந்த

பூதம் நீங்கள் இறந்து கிடப்பதைக் கண்டது. அதனால் கோபத்தோடு முனிவனிடம் திரும்பிச் சென்றது. அந்த முனிவனைக் கொன்றுவிட்டு யாகத்தீயில் மறைந்தது. இவற்றையெல்லாம் முன்பே அறிந்திருந்த நான், மானாகி ரிஷி குமாரனுடைய மான்தோலைப் பறித்துக் கொண்டு வந்தேன். நீங்களும் அக்குமாரனுக்காக என்னைத் தொடர்ந்தீர்கள். நான் நச்சுப் பொய்கையை உண்டாக்கினேன். உன்னைத் தவிர மற்றவர்கள் அதனுடைய நீரைப் பருகி உயிர்விட்டார்கள். பின்பு நடந்தவைகள் யாவும் உனக்குத் தெரியும்!'' என்றான் யமன்.

கடைசியாக யமன் பாண்டவர்களைப் பார்த்து, ''பாண்டவர்களே! நீங்கள் பன்னிரண்டு வருஷ வனவாசம் கழித்த பிறகு செய்யப் போகும் அஞ்ஞாத வாசத்திலும் எந்தத் துன்பமும் அடையாமல் இன்பமாக வாழ்வீர்களாக!'' என்று வாழ்த்தினான்.

அப்போது பாண்டவர்கள் யமனுடைய பாதங்களை நமஸ்கரித்து விடை பெற்றார்கள். மகிழ்ச்சியோடு மீண்டும் அவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

பாண்டவர்களைக் காணாமல் திரௌபதி கண்ணீர் விட்டு வருந்தினாள். திரும்பி வந்த பாண்டவர்கள் அவளிடம் நடந்தவற்றைத் தெரிவித்தார்கள். அவர்கள் அவளுக்கு ஆறுதல் கூறி, அவளுடைய துன்பத்தைப் போக்கினார்கள்!



விராட பருவம்

1. அஞ்ஞாத வாசம்

பாண்டவர்கள் திரௌபதியோடும் முனிவர்களோடும் பன்னிரண்டு வருஷங்கள் வனவாசம் செய்து முடித்தார்கள். அப்போது தருமர் தம்பிமார்களை நோக்கி, ‘‘நாம் இதுவரை மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து காலம் கழித்து வந்தோம். நாம் செய்ய வேண்டிய பன்னிரண்டு வருஷ வனவாசமும் முடிந்துவிட்டது. இனி ஒரு வருஷம் நாம் யார் என்று பிறர் அறிந்து கொள்ளாதபடி அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டும். இந்த ஒரு வருஷமும் நாம் தங்கி வாழ்வதற்குத் தகுந்த இடம் எது? நீங்கள் சொல்லுங்கள்!’’ என்று கேட்டார்.

அதற்கு இந்திர குமாரனாகிய அர்ச்சுனன், ‘‘அண்ணா! மச்சதேசம் சிறந்த தேசம். அத்தேசம் நீதியும், பயனும், தருமமும், செல்வமும், நவதானியங்களும் கொண்டது. அங்கே தேவர்களும் பிராமணர்களும் வசிக்கின்றார்கள். மச்சதேசத்தை மநுசாஸ்திரப்படி ஆள்பவன் மநுகுலத்தில் தோன்றியவனான விராடராஜன். அவனுடைய கீர்த்தி அஷ்டத் திக்குகளிலும் பரவி இருக்கின்றது. ஆகையால், நாம் இன்றே விராட நகரம் செல்வோம். அங்கே மாறு வேஷத்தோடு வசிப்போம். இதுவே செய்யத் தகுந்தது. விராட நகரத்தைத் தவிர நாம் சென்று வசிப்பதற்கு ஏற்ற இடம் எதுவும் இல்லை!’’ என்று தெரிவித்தான்.

விஜயனுடைய யோஜனை தருமருக்குச் சரியெனப் பட்டது. அவர் தங்களோடு வசித்து வந்த அரசர்களுக்கும் முனிவர்களுக்கும் விடை கொடுத்து அனுப்பினார்.

பின்பு தம்பிமார்களைப் பார்த்து தருமர், ‘‘தம்பிமார்களே! இன்று ராத்திரியே புறப்படுவோம். சூரியன் உதிப்பதற்குள் நாம் அந்த விராட பட்டணத்துக்குள் நுழைவோம்’’ என்றார்.

ஆதவன் மறைந்தான்.

இரவு வந்தது!

தருமர் தம்பிமார்களையும் பாஞ்சாலியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர்களோடு காடுகளையும், மலைகளையும், முல்லை நிலத்தையும், மருத நிலத்தையும் கடந்து மச்ச தேசத்தை அடைந்தார்.

தருமர் மேலும் அவர்களோடு தொடர்ந்து சென்று, முதலைகள் வாழும் அகழியும் மதிலும் சூழ்ந்த விராட நகரத்தின் எல்லையை அடைந்தார். அந்த நகரத்தின் எல்லையில் ஒரு மயான பூமி இருந்தது. அங்கே ஒரு காளி கோயில் இருப்பதை அவர்கள் கண்டார்கள். பாண்டவர்கள் அக்கோயிலுக்குச் சென்றார்கள். கோயிலின் முன்னே ஒரு வன்னி மரம் இருந்தது. அந்த மரத்தின் பொந்தில் அவர்கள் தங்களுடைய ஆயுதங்களையும், கவசங்களையும், ஆடைகளையும் மறைத்து வைத்தார்கள். பிறகு, மந்திரங்கள் ஜபித்து காளியை வணங்கிவிட்டு, மேற்கொண்டு செய்வதைப் பற்றி அவர்கள் ஆலோசித்தார்கள்.

கடைசியாக தருமர் வேதியனாக வேஷம் பூண்டார். கங்கன் என்று தன் பெயரை வைத்துக் கொண்டார். தம்பிமார்களிடமும் திரௌபதியிடமும் விடை பெற்றுக் கொண்டு விராடராஜனுடைய சபைக்குச் சென்றார்.

புதிதாக வந்த துறவியைக் கண்டு விராடராஜன் மகிழ்ச்சியடைந்தான். எதிர்கொண்டு சென்று துறவியை வரவேற்று வணங்கினான் அவன். தம்மைத் தொழுத மன்னனை வேதியனான தருமர் வாழ்த்தினார்.

விராடராஜன் தருமரைப் பார்த்து, "ஐயனே! தாங்கள் யார்? எங்கிருந்து இங்கே வந்தீர்கள்?" என்று பவ்யமாகக் கேட்டான்.

அதற்கு தருமர், "விராடனே! தருமனுக்குத் தோழனாய் நான் பழகி இருந்தேன். அவன் வனவாசம் போன போது கூடவே சென்று வசித்தேன். இப்போது உன்னோடு சில நாட்கள் தங்க நினைத்து வந்திருக்கின்றேன் " என்று தெரிவித்தார்.

தருமர் கூறியதைக் கேட்டு விராடராஜன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தருமர் மேல் மதிப்பும் பக்தியும் கொண்டான். அவரை நோக்கி விராடராஜன், "ஐயனே! நான் ஏழு பிறவிகளிலும் செய்த நல்ல தவப் பயனாலேயே

தாங்கள் இங்கே எழுந்தருளியுள்ளீர்கள். தாங்கள் எத்தனை நாட்கள் இங்கே வசிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அத்தனை நாட்களும் வசியுங்கள்!'' என்றான்.

தருமர் விராடராஜனிடம் சென்று சேர்ந்த சில நாட்களுக்குப் பிறகு, பீமன் சமையற்காரனாக அவனிடம் சென்றான். மன்னனிடம், ''அரசே! நான் கைதேர்ந்த சமையற்காரன். பீமராஜனிடம் சமையற்காரனாக நான் இது நாள் வரை இருந்தேன். நான் எல்லாக் காய்கறிகளையும் ஐந்து வகைகளுக்குள் ஆறு சுவைகளும் வெவ்வேறாக மாறி மாறி வரும்படிச் சமைப்பதில் கெட்டிக்காரன். கொடிய மல்யுத்தம் செய்வதிலும் வல்லவன். பலாயனன் என்பது என் பெயர். சத்தியமாகச் சொன்னால் இந்திரலோகத்திலும் என்னைப் போல் சமைக்கக் கூடியவர் யாரும் இல்லை!'' என்றான்.

பீமன் சொன்னதைக் கேட்டு விராடராஜன் சந்தோஷித்தான். அவனுக்குப் பொன்னாபரணங்களையும், இரத்தினாபரணங்களையும், பட்டாடைகளையும், குதிரைகளையும், யானைக்குட்டிகளையும் பரிசாக வழங்கினான். மகிழ்ச்சியுடன் பீமனை நோக்கி அவன், ''பலாயனா! இன்றுமுதல் நீ எம்முடைய சுற்றத்தார்களில் ஒருவன்!'' என்று பாராட்டினான்.

விராடராஜன் தனது அரண்மனைச் சமையற்காரர்களுக்குப் பீமனைத் தலைவனாக்கி வைத்தான்.

பீமன் விராடராஜனுக்குச் சமையற்காரனாகிய பிறகு, அர்ச்சுனன் முன்பு தனக்கு ஊர்வசி கொடுத்த சாபத்தை இப்போது பயன்படுத்திக் கொள்ள எண்ணினான். அதன்படி ஒரு வருஷத்துக்கு தான் பேடியாய் இருப்பதே நல்லது என்று முடிவு எடுத்தான். உடனே தனது அழகிய உருவமும் வீரமும் மாறி அர்ச்சுனன் பேடியானான்.

விராடராஜனுடைய சபைக்கு அர்ச்சுனன் சென்றான். வேதியனாக அங்கே அமர்ந்திருந்த தருமருடைய பாதங்களை வணங்கினான். பின்பு மன்னனை நோக்கி அர்ச்சுனன், ''மன்னா! நான் வில்லாளியான அர்ச்சுனனுடைய அரண்மனையிலே இதுவரை வசித்து வந்த பேடி. சங்கீதமும் நடனமும் சாஸ்திரரீதியாகச் செய்வதில் வல்லவள். பெண்களுக்கும் அவற்றைக் கற்றுத் தருவதில் நான்

கைதேர்ந்தவள். என்னைப் பிருகந்நளை என்று பெயர் சொல்லி அழைப்பார்கள். உமது இந்த வளமான நகரத்தில் வசிக்க எண்ணி இங்கே வந்தேன். வேதமும் உலகமும் உள்ளவரை உமது குலம் விளங்கட்டும்!'' என்று கூறினான்.

மன்னன் அது கேட்டு மகிழ்ந்தான். கலை வல்லவனாகிய அவன் பேடியான அர்ச்சுனனுக்கு வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் அன்போடு கொடுத்தான். அர்ச்சுனனைப் பார்த்து விராடன், "பிருகந்நளை! நீ என் மகளான உத்தரைக்கு உயிர் தோழியாவாய்!'' என்று கூறி, தன் மகளிடம் அவனை அனுப்பி வைத்தான்.

அர்ச்சுனன் அவ்வாறான பிறகு சில நாட்கள் கழித்து, நகுலன் குதிரைப் பயிற்சியாளனாக வேஷம் தரித்து விராடனிடம் சென்றான். அவனைக் கண்ட விராடன், "நீ யார்? எங்கிருந்து வருகின்றாய்?'' என்று கேட்டான்.

நகுலன் அதற்கு, "நான் அசுவசாஸ்திரி. பாண்டவர்களுள் ஒருவனான நகுலனுடைய குதிரைக் கொட்டிலுக்குத் தலைவர்களாக இருந்த மானிடர்களுள் ஒருவன். நான் குதிரைகளின் வடிவமும், நல்லச் சுழிகளும், நிறமும், உடல் மணமும், குரலும், பலவகையான நடைகளும் அறிவேன். குதிரைகள் அதிகமாக உள்ள தேசமும் எனக்குத் தெரியும். அவற்றுக்கு வருகின்ற நோய்களையும் போக்குவேன். குதிரையின் மேலேறி வட்டம் அடிப்பேன். நேராகச் செல்வேன். வளைந்து வளைந்தும் போவேன். ஆமாம், குதிரைச் சவாரியில் எனக்கு ஈடு யாரும் இல்லை. ரதத்தில் பூட்டுகின்ற குதிரைகளைப் பற்றியும் நான் ஆராய்ந்தறிய வல்லவன். மன்னா! பாண்டவர்கள் வனவாசம் போன பிறகு, நான் உணவும் மனவுறுதியும் இழந்துவிட்டேன். உமது புகழ் கேட்டு இப்போது இங்கே வந்தேன்!'' என்று தெரிவித்தான்.

நகுலனுடைய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தான் விராடராஜன். தனது குதிரைத் தலைவர்களைவிட அவனுக்கு அதிக மரியாதைகள் செய்தான். அக்குதிரைத் தலைவர்களுக்குத் தலைவனாக நகுலனை அவன் நியமித்தான்.

தாமக்கிரந்தி என்ற பெயருடன் நகுலன் விராடராஜனுடைய குதிரைத் தலைவனாகப் பதவி ஏற்ற

பிறகு, மற்றொருநாள் சகாதேவன் இடையன் வேஷத்துடன் ராஜசபைக்கு வந்தான்.

அவனை நோக்கி விராடராஜன், ''நீ யார்?'' என்று கேட்டான்.

தருமரோடு ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்த அந்த விராடராஜனை சகாதேவன் வேறொரு தந்திரத்தால் வணங்கிவிட்டு, ''துரியோதனனால் வனவாசம் போன பாண்டவர்களுள் சகாதேவனுடைய பசுக்களைக் காத்து வந்தவன் நான். தந்திரிபாலன் என்பது என் பெயர்'' என்றான்.

விராடராஜன் அது கேட்டுச் சந்தோஷித்தான். சகாதேவனை அருகில் அழைத்து தக்கப் பரிசுகளை அன்புடன் வழங்கினான். அவனைப் பார்த்து, ''தந்திரிபாலனே! சகாதேவனிடத்தில் செய்தது போலவே இங்கேயும் பசுக்கூட்டங்களை நீயே பாதுகாத்துவா!'' என்றான் விராடராஜன்.

அதன்படி சகாதேவன் அரண்மனை பசுக்களையெல்லாம் தன் வசமாக்கிக் கொண்டான். அரண்மனையில் தனக்கு மூன் இருந்த இடையர்களுக்கெல்லாம் அவன் தலைவனானான்.

பாண்டவர்கள் ஐவரும் அவ்வாறான பிறகு, திரௌபதி பெண்களுக்கு அலங்காரம் செய்யும் பணிப்பெண் வேஷம் கொண்டு, விராடராஜனுடைய தேவியின் அந்தப்புரத்துக்குச் சென்றாள்.

திரௌபதியைக் கண்டதும் அந்தப்புர வாயில் காவலர்கள் விராடராஜனுடைய மனைவியான சுதேஷ்ணையிடம் சென்று, ''தேவி! லக்ஷ்மி போல் அழகும், நுண்ணிடையும் கொண்ட மானிடப்பெண் ஒருத்தி வந்திருக்கின்றாள்!'' என்று தெரிவித்தார்கள்.

சுதேஷ்ணை உடனே,''அந்தப் பெண்ணை உள்ளே அழைத்து வாருங்கள்!'' என்று கட்டளையிட்டு அவர்களை அனுப்பினாள்.

காவலர்கள் ராணியின் கட்டளைப்படி திரௌபதியை உள்ளே அழைத்து வந்து விட்டுச் சென்றார்கள். சுதேஷ்ணை

அவளைக் கண்டு மகிழ்ந்தாள். அன்போடு அவளைத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டாள். திரௌபதிக்கு சந்தனமும், அகிலும், புஷ்பமும், வெற்றிலையும் அன்புடன் பரிசாகத் தந்தாள். பிறகு அவளைப் பார்த்து சுதேஷ்ணை, "தாங்கள் எந்த நகரத்தவர்? நாங்கள் அறியும்படிச் சொல்லுங்கள்!" என்று மரியாதையுடன் விசாரித்தாள்.

"தேவி! நான் பாண்டவர்களுடைய ராணிகளின் பக்கத்திலே பணிப்பெண்ணாக எப்போதும் வசித்து வந்தேன். விரதசாரிணி என்பது என் பெயர். நான் பெண்களுக்கு வேண்டிய எல்லாவித அலங்காரங்களையும் மிக அழகாகச் செய்வேன். ராணி! உனது தோழியாக வேண்டும் என்பது எனது விருப்பம்! என் தந்தை வீட்டில் வாழ்ந்த இளம் பருவம் முதல், கந்தருவர் யாதொரு தீங்கும் வராமல் காவல் செய்கின்ற கற்பை உடையவளானேன். நான் எந்த மனிதருடைய முகத்தையும் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டேன். இப்போது உன் மாளிகையில் தங்கி வாழ்வதற்காக வந்திருக்கின்றேன்!" என்று சுதேஷ்ணையின் கேள்விக்கு திரௌபதி பதில் சொன்னாள்.

பாஞ்சாலி அப்படிக் கூறியதைக் கேட்டதும் சுதேஷ்ணை மகிழ்ந்து, அவளைப் பார்த்து, "நீ தேவமாதர் போல் இங்கே இனிது தங்கி இரு. இனி நீ எனக்கு இரண்டு கண்களையும் போன்றவள். என் பிராணனும் உனது காவலுக்கு உட்பட்டது!" என்று அன்போடு கூறினாள்.

சுதேஷ்ணையின் வார்த்தைப்படியே திரௌபதி அவளுடைய அந்தப்புரத்தில் தங்கி வசித்து வந்தாள். தினந்தோறும் சுதேஷ்ணைக்கு அழகிய புத்தம் புதிய அலங்காரங்களையும் செய்து வந்தாள்.

உத்தமர்களான பாண்டவர்களும் துருபதராஜகுமாரியும் அஞ்ஞாத வாசத்துக்காக மச்சதேசத்தில் தங்கி வசித்ததால், அத்தேசம் மிகவும் செழித்தது! விராடராஜன் முறையோடு ஆட்சி செய்தான்! மக்கள் மகிழ்ந்திருந்தார்கள்!

2. மற்போர்

பாண்டவர்கள் அவ்வாறு விராட நகரத்தில் வசித்து வருகையில் ஒரு மல்லன் அந்நகருக்கு வந்தான். அவன், "வில் வித்தையில் ஒப்பற்றவன் ஸ்ரீராமபிரான். வேல்வித்தையில் சிறந்தவன் முருகக்கடவுள். தமிழ்மொழியில் புலமை வாய்ந்தவன் அகத்திய முனிவன். அதுபோல் மல்யுத்தத்தில் வாசவனான நானே தலை சிறந்தவன்!" என்று சொல்லி ஆரவாரித்தான்.

அந்த வாசவமல்லனுடைய தலை வானத்தை முட்டியது. தோள்கள் மேருமலை போல் காணப்பட்டன. அத்தோள்களில் அவன் குங்குமச்சேறு பூசிய கடகங்களை அணிந்திருந்தான். அவன் சண்டமாருதத்தோடு ஒத்த பலமுடையவன். யானையின் துதிக்கைபோல் அவன் கால்கள் இருந்தன.

வாசவமல்லன் தன்னைப் பல மல்லர்கள் சூழ்ந்துவர விராடராஜனுடைய சபைக்கு வந்தான். மன்னனை வணங்கி, "வேந்தே! மல்யுத்தத்தில் என்னைப் போல் திறமைசாலி இந்தப் பூலோகத்தில் யாரும் இல்லை!" என்று அவன் தன் திறமையைத் தெரிவித்தான்.

விராடராஜன் அதுகேட்டு அவனைப் பாராட்டினான். அவனுக்குக் கொடுக்கத் தக்கச் சிறப்புகளைக் கொடுத்தான். பிறகு, தனது அவைக்களத்தில் உள்ள மல்லர்களை விராடராஜன் நோக்கினான்.

மன்னனின் ஜாடையைப் புரிந்து கொண்ட மல்லர்கள் ஒவ்வொருவராக இடிபோல் கர்ஜித்துக் கொண்டு வாசவனோடு மல்யுத்தம் செய்தார்கள். மற்போர் சாஸ்திரப்படி அவர்கள் எல்லோரும் யுத்தம் செய்து வாசவனிடம் தோற்றுப் போனார்கள்.

அதுகண்ட விராடராஜன் வீராதி வீரனான வாசவமல்லனைப் புகழ்ந்தான். அவனுக்கு எல்லாச் சிறப்புகளையும் செய்தான்.

மறுநாள் தருமர் விராடராஜனிடம், "அரசே! நேற்று வெற்றி பெற்ற வாசவமல்லனை வெல்லக் கூடிய



மஹாமல்லன் ஒருவன் இருக்கின்றான். இப்போது உன்னுடைய சமையற்காரர்களுள் ஒருவனாக இருக்கும் பலாயனன்தான் அவன். அவனைத் தவிர வேறு யாராலும் இந்த வாசவமல்லனை வெல்ல முடியாது!'' என்று தெரிவித்தார்.

உடனே விராடராஜன், ''அந்தப் பலாயனனை அழைத்து வாருங்கள்!'' என்று கூறினான்.

வேலைக்காரர்கள் விரைந்தோடி மன்னனுடைய உத்தரவை பீமனிடம் தெரிவித்தார்கள்.

பீமன் அக்கணமே இடுப்பில் டொறக்கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கதாயுதத்தோடு ராஜசபைக்கு வந்தான்.

பிறகு, வாசவமல்லனும் பீமனுட் மன்னனுடைய விருப்பப்படி உதயமலையும் அஸ்தமலையும் போல, ஒருவரோடு ஒருவர் மோதி மல்யுத்தம் செய்தார்கள்.

இடையிடையே அவர்கள் தங்கள் தோள்களைத் தட்டினார்கள். இடிபோல கர்ஜித்தார்கள். பாதங்களாலும் கைகளாலும் கொடூரமாக யுத்தம் புரிந்தார்கள். ஒருவரை யொருவர் பலமாக உதைத்தார்கள். கைகளால் உடம்பில் புண் உண்டாகும்படிக் குத்தினார்கள். புருவங்களையும், மூக்கையும், வாயையும் தாக்கிச் சிதைத்தார்கள். தோளால் தோளை மோதினார்கள். அதனால் வலி தாங்காது ஒருவரையொருவர் விட்டு விலகியும், பின்பு ஆத்திரம் கொண்டு முன்னைவிடக் கடுமையாகத் தாக்கியும் யுத்தம் செய்தார்கள்.

வெகுநேரம் வாசவனை யுத்தம் செய்ய விட்டு வேடிக்கையாக யுத்தம் செய்த பீமன், கடைசியாகத் தனது தொடையால் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்து, கையால் அவனது கழுத்தை நெரித்துக் கொன்றான்!

வெற்றி பெற்ற பீமன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான்.

விராடராஜன் அவனுடைய மல்யுத்தத் திறமையைக் கண்டு அடங்காத மகிழ்ச்சி கொண்டான். பீமனைக் கட்டித் தழுவிக் கொண்டு, "உன்னைப் போல் மல்யுத்தத்தில் சிறந்தவர் வேறு யாருமே இல்லை!" என்று அவன் பாராட்டினான்.

மேலும், விராடராஜன் அரசர்களுக்குரிய சிறப்புகளை யெல்லாம் பீமனுக்குக் கொடுத்தான். பிறகு, கங்க முனிவனாகிய தருமரோடு பீமனையும் அமர்த்திக் கொண்டு தானும் அதே ஆசனத்தில் அமர்ந்து பெரும் மரியாதை செய்தான். பீமனைப் பின்னும் பாராட்டி விராடமன்னன், "இனிய சமையலைச் சமைக்கும் இந்தப் பலாயனனுக்கு ஒப்பானவர் இந்தப் பூமியிலே இல்லை!" என்றான்.

3. கீசகன் வதை

பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராடனுடைய அரண்மனையில் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். ஒருநாள் சுதேஷ்ணையின் தம்பியான கீசகன் அவளைக் காண்பதற்கு வந்தான்.

கீசகன் மன்மதனைப் போல் அழகானவன். கம்பீரமான தோற்றம் உடையவன். மிகுந்த பராக்கிரமசாலி.

சுதேஷ்ணையோடு பிறந்த நூற்றுநான்குப் பேர்களுள் ஒருவன். அவன் விராடராஜனுடைய சேனாதிபதியாக இருந்தான்.

சுதேஷ்ணையின் நூபுரம் அணிந்த பாதங்களை வணங்கிவிட்டு கீசகன், அந்தப்புரத்தைச் சார்ந்த சோலை வழியே திரும்பிச் சென்றான். அப்போது விரதசாரிணியாகிய திரௌபதி பூப்பறித்துக் கொண்டு அவன் எதிரே வந்தாள்.

திரௌபதியைக் கீசகன் பார்த்தான். அவளுடைய அழகைக் கண்டவுடனே அவன் அவள்மேல் பெரிதும் காமம் கொண்டான். 'இவள் யார்?' என்று தனக்குள்ளாகக் கேட்டுக் கொண்டு புத்தி மயங்கினான் அவன்.

கீசகன் மேலும், 'இவள் தேவலோகத்தில் வாழும் தேவகன்னிகையோ? தாமரை மலரில் வாழும் லக்ஷ்மியோ? மலைமகளான பார்வதியோ? பூலோகத்தில் மானிடப் பெண்ணாகத் தோன்றிய பெண்தெய்வமோ? பாதாள லோகத்தில் வாழும் மோகினியோ? சமுத்திரத்தில் வாழும் அரமகளோ? அழகிய சித்திரப் பதுமையின் ஒளிமயமான வடிவமோ?' என்று துருபதராஜகுமாரியைப் பற்றிச் சிந்தித்தான்.

ஆயினும் கீசகனால் அவளை யார் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே , அவன் தன் சமீபத்தில் இருந்த பெண்களை நோக்கி, ''இவள் யார்?'' என்று விசாரித்தான்.

அதற்கு அவர்கள், ''இவள் ராணியின் அலங்காரப் பணிப்பெண்!'' என்று பதில் சொன்னார்கள்.

கீசகன் அதுகேட்டதுதான் தாமதம். அவன் பாஞ்சாலியின் பாதங்களில் தன் தலைபடக் கும்பிட்டு, ''தேவி! நீ என் உயிர்!'' என்றவன், மேலும் எத்தனையோ வார்த்தைகளைச் சொன்னான்.

பாஞ்சாலி அவனுடைய வார்த்தைகளுக்குப் பதில் பேசாமல் பக்கத்திலிருந்த மரக்கிளையில் தன்னை மறைத்துக் கொண்டு நின்றாள். அவன் முகத்தைப் பார்க்காமல் அவனிடம் திரௌபதி, ''வீரனே! பழிகளும் பாவமும் உனக்கு அதிகமாகின்றன. உனக்கு இவ்வுலகத்தில்

விளைவதையும், மறுபிறப்பில் விளையப் போவதையும் நீ ஆலோசித்துப் பார்க்கவில்லை. சொல்லத் தகாத அற்ப வார்த்தைகளை இன்னமும் சொல்கின்றாய். நீ இப்படியிருந்தால், உலகத்தைக் காத்து ரட்ஷிக்கும் விராடராஜனுக்கு நாசத்தைச் செய்கின்றவனர்வாய். நீ அறிவு கெட்டவன் போல் காணப்படுகின்றாய்! மன்மத பாணத்தால் உயிர் போவதாக இருந்தாலும் குற்றமற்ற வமிசத்தில் பிறந்தவர்கள், அயலார் மனைவியின் முகத்தைப் பார்க்கவாவது செய்வார்களா? இப்படி மாற்றான் மனைவியை விரும்பும் கள்ளனானதால்தான் நீ இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னாய். இனி இப்படிப் பேசாதே. எனது இரண்டு தோள்களும் ஐந்து தேவர்களின் பாதுகாவலில் உள்ளன. வீரனே! அப்பால் போ! என்னருகே நீ வந்தாலோ கண்மூடிக் கண்திறப்பதற்குள் இறந்து போவாய்!'' என்றாள்.

திரௌபதி கீசகனை அப்படிக் கண்டித்துப் பேசியும், அவன் அவள் மேல் கொண்ட ஆசையை விடவில்லை. இன்னும் அதிகமாகவே அவன் அவள்மேல் காமம் கொண்டான். கீசகன் அவள் முன்னே நெருங்கி நின்று, ''பெண்ணே! உன்மேல் கொண்ட காதலால் எனது அருமையான உயிர் போவதானாலும் அது தகும்!'' என்று சொல்லி, அவளுடைய பாதங்களில் தன் நெற்றிபடும்படி வணங்கினான்.

அதனால் திரௌபதி மிகவும் ஆத்திரம் அடைந்தாள். அவள் உடனே அங்கிருந்து வேகமாக சுதேஷ்ணையிடம் சென்றாள். அச்சத்தால் அவள் உடல் நடுங்கியது. மனம் கலங்கியது. நா வறண்டது. கண்களில் நீர் திரண்டது. அவள் சுதேஷ்ணையை நோக்கி, ''அரசியே! நடந்ததைக் கேள். உன்னோடு பிறந்த கீசகன் என்னைப் பார்த்துச் சொல்லத் தகாத பல வார்த்தைகளைச் சொன்னான். நான் இங்கு வந்தவுடன் உனக்கு என்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன். என் பெயர் விரதசாரிணி என்று சொன்னேன். தேவர்கள் என் உடலுக்குக் காவலாக இருப்பதையும் சொன்னேன். இப்படி இருப்பதால்தான் என்னை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆகையால், உன் தம்பியின் ஆசையையும் மன்மத வருத்தத்தையும் வேசியரால் மாற்றச் செய். என்னால் அவனுடைய ஆசையையும் துன்பத்தையும்

போக்கலாம் என்று நீ நினைக்காதே. அப்படி நினைக்கலாம் என்று நினைத்தாலும் அதனைக் கைவிடு. முறை தவறி ஏதாவது நடந்தால் உன் தம்பியின் அருமையான உயிர் அழிந்துவிடும்!'' என்றாள்.

பாஞ்சாலி கூறியதைக் கேட்டு சுதேஷ்ணை பேரிடி கேட்ட நாகம் போல் நடுங்கினாள். அச்சத்தோடு திரெளபதியின் கண்ணீரைத் துடைத்தாள். ''இது நன்றாக இருக்கிறது!'' என்று சொல்லி, கீசகன் மேல் மிகவும் கோபம் கொண்டாள். பிறகு கீசகனை அழைத்து, ''இனி, இந்த அந்தப்புரத்தின் பக்கமே வராதே! போ!'' என்று சினத்தோடு கூறினாள் சுதேஷ்ணை.

எது புண்ணியம் எது பாவம் என்று ஆலோசித்து அறியாத கீசகன், தமக்கையின் வார்த்தையால் மிகவும் துயரம் கொண்டான். அத்துயரத்தோடு உடனே அவன் அங்கிருந்து தன் மாளிகைக்குச் சென்றான்.

தன் மாளிகைக்கு வந்த பின்பும் கீசகனுடைய உள்ளம் சமாதானப்படவில்லை. அவன் காமத்தால் அமைதி இழந்தான். மலர் மஞ்சத்தில் படுத்தான். அது அவனுக்குப் பாலைச் சுடுமணலில் படுத்தது போல் இருந்தது. அவன் எழுந்தான். தன் மேல் அப்போது பட்ட தென்றல் காற்றையும் அவன் தீ என்றான். வானில் அமுதத் தாரைகளை வர்ஷித்த நிலவைக் கண்டு சூரியன் என்று நினைத்து ஏங்கினான். என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் தடுமாறினான். அன்று இரவு முழுவதும் கீசகன் திரெளபதியின் மேல் வைத்த ஆசையால் பட்ட துன்பங்கள் சொல்லத் தரமுடையதோ? இல்லை, அவனைத் தவிர அத்துன்பத்தை வேறு யார்தான் அனுபவிப்பார்களோ?

கீசகனுடைய மாளிகையில் வேலை செய்கின்ற பணிப்பெண்கள் அவனுடைய காம வேதனையைக் கண்டார்கள். திரெளபதி மேல் வைத்த ஆசையால்தான் அவன் அப்படித் துடிக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் சுதேஷ்ணையிடம் சென்று, ''தேவி! தங்களுடைய தம்பி கீசகமகாராஜா மிகவும் காமத்தால் துடித்துத் துவள்கிறார். அவருக்கு மலர் மஞ்சமும் முள்ளாக உறுத்துகிறது. தென்றல் காற்றும் தீயாகச் சுடுகிறது. சந்திரக் கிரணங்களும் சூரிய கதிர்களாகக் கொதிக்கின்றன.

ஆகவே, அலங்காரப் பணிப்பெண்ணாகிய விரதசாரிணியை அவர் தமது கண்களால் பார்த்தாலும் போதும். அவளால் உண்டான தமது காம நோய் தணியப் பெறுவார். தாமும் சாகாமல் இருப்பார். ஆகவே, அவர் அவளைப் பார்க்க வேண்டும். நிச்சயமாக அவர் அவளுடம்பைக் கட்டித் தீண்டமாட்டார். இது தங்கள்மேல் ஆணை!'' என்று கூறினார்கள்.

பணிப்பெண்கள் கூறியதைக் கேட்டு சுதேஷ்ணை மிகவும் வருந்தினாள். ''கீசகா! காமத்தால் பஞ்சேந்திரியங்களும் கெட்டுப் போகத் துன்புற்றாய். பெரியவர்கள் சொல்லியுள்ள நீதி வாக்கியங்களையெல்லாம் படித்திருந்தும் நீ மனம் தெளியவில்லை. மன்மத சாஸ்திரத்தின் முறைமையும் பார்க்கவில்லை. நாச காலம் வரும் பொழுது மனவுறுதியும் நல்லறிவும் கெட்டுவிடுமோ?'' என்று சொல்லிப் புலம்பினாள்.

பிறகு சுதேஷ்ணை வருத்தத்தால் மனம் தளர்ந்து சோர்ந்தாள். அச்சோர்வோடு திரௌபதியின் பாதங்களை வணங்கி, ''அன்பானவளே! உனது கண்ணின் அருட் பார்வை உண்டு என்றால், அரசர்களில் சிறந்தவராகிய எனது கணவரின் செங்கோலும் அரசநீதியும் பழுதுபடாமல் நிற்கும். என் பேச்சை நீ தட்டினால் எல்லாமே இன்று அழிந்துவிடும். நான் சொல்வதை நன்கு கவனித்துக் கேள். என் தம்பி அறிவு முதிராதவன். இளையவன். அதனால் ஆலோசனை இல்லாமல் மன்மத பாணத்தால் உடல் வருந்துகிறான். உனது உடலால் பெறுகின்ற இன்பத்தை மிகவும் விரும்புகிறான். அதன் காரணமாக இன்று தகாத செயல்களைச் செய்கின்றான். முடிவில் இதனால் கொடிய பழி உண்டாகுமே. இந்தக் கொடிய பழி உண்டாகாதபடி, தந்திரமாக அவனுடைய அந்த ஆசை நோயைப் போக்கிவிடு. அப்படிச் செய்தால் அச்செயல் அவனுடைய உயிரையும் காத்து உனது கற்பையும் காக்கும்! நான் ஒரு வார்த்தையை ஆலோசித்துச் சொல்கின்றேன். நீ அதனை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போதே என் தம்பியின் மாளிகைக்கு நீ போ. நான் கொடுக்கின்ற மாலையை அவனிடம் கொடுத்துவிட்டு உடனே திரும்பிவிடு. என் தம்பி கீசகன் உன்னைக் கண்டாலும், உன் பேச்சைக் கேட்டாலும் உயிரோடு இருப்பான். போய் வா. நீ வாழ்க!'' என்று

சொல்லி, மலர் மாலையை அவளிடம் கொடுத்தாள் சுதேஷ்ணை.

திரௌபதி அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அவளைப் பார்த்து, "பாவையே! கொடிய பாவச் செயலைச் சொல்கின்றாய். நீ சொல்கின்ற வார்த்தையைத் தட்டாமல் செய்ய வேண்டுவது பணிப்பெண்ணாகிய எனக்குக் கடமை என்று செய்கின்றேன். ஆனாலும், இதனால் உன்னுடைய தம்பிக்கு நாசமே விளையும். இதனை நீ அறியவில்லை. இப்படி நான் சொல்வதால் நீ என்மேல் வெறுப்புக் கொள்ள வேண்டாம்!" என்றாள்.

திரௌபதி சுதேஷ்ணையின் விருப்பப்படியே மலர்மாலையை எடுத்துக் கொண்டு கண்ணீரோடு கீசகனிடம் சென்றாள்.

பாஞ்சாலி கீசகனுடைய மாளிகையை அடைந்தபோது சூரியன் உதயமானான். இரவு கழிந்தது. அதனால் கீசகனுடைய தனிமைத் துயர் நீங்கியது.

திரௌபதியைக் கண்டதும் கீசகனுடைய மோகம் அதிகமாகியது. அவன் அவளிடம் தகாத வார்த்தைகளைச் சொன்னான்.அந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் துடித்தாள். தனது துன்பத்தை முறையிட்டு திரௌபதி சூரியனை வணங்கினாள். "சூரிய பகவானே! எனக்கு நீ ஒரு வரம் தா! எனது கற்பு இந்தக் கீசகனால் அழிந்துவிடுமோ என்று வருந்தும் என் மனத் துன்பத்தைப் போக்கியருள்!" என்று வேண்டினாள்.

பிறகு, அவள் கீசகன் முன் சென்றாள். அவனிடம் மாலையைக் கொடுத்துவிட்டு, உடல் நடுங்கினாலும் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற மனவுறுதியோடு நின்றாள்.

அப்போது வாழைத் தளிரிலைகளும் தாமரை இதழ்களும் பரப்பிய மஞ்சத்தில், சுடுகாட்டில் சுடுநெருப்பின் மீது பிணம் இருப்பது போல கீசகன் தவிப்போடு படுத்திருந்தான்!

கீசகன் மேல் பணிப்பெண்கள் சந்தனத்தைப் பூசினார்கள். பன்னீர் தெளித்தார்கள். பூக்களைச்

சொரிந்தார்கள். ஆனாலும், அவனுடைய உடம்பு முன்னைவிட காம தாபத்தால் அதிகமாகக் கொதித்தது.

காமநோய் அதிகரிக்க அதிகரிக்க, கண்ணுக்குத் தெரியும் இடங்களில் எல்லாம் கீசகன் மருள மருள விழித்துப் பார்த்தான். அப்படிப் பார்த்தவன், தான் செய்த புண்ணியம் பயன் பெற்றது போல எதிரே நின்றிருந்த திரௌபதியைக் கண்டான். உடனே அவன், ''எனது பெருந் தவப்பயன் போன்றவள் வந்தாள். நான் வணங்கும் தெய்வம் போன்றவள் வந்தாள். எனது உயிர் போன்றவள் வந்தாள். எனது வண்ண மங்கை வந்தாள். நான் வாழ்வுபெற வந்தாள்!'' என்று கூறிக் குதூகலித்தான்.

மேலும் கீசகன் திரௌபதியைப் பார்த்து, ''பெண்ணே! நீ என் பக்கத்திலே வா! என் காதுகள் உன் பேச்சால் உருகும்படி இனிய வார்த்தைகளைத் தா! என் உடம்பு இன்பம் அடையும்படி நீ என்னைத் தழுவிக் கொள்! பவழம் போன்ற உன் வாயிதழை நான் சுவைக்கத் தா!'' என்று சொல்லிக் கொண்டே மஞ்சத்தைவிட்டு எழுந்து நின்றான்.

கீசகன் அத்துடன் நிற்கவில்லை. திரௌபதியைக் கட்டியணைத்துக் கொள்ள நெருங்கினான்.

தன்னை ஆலிங்கனம் செய்து கொள்ள கீசகன் நெருங்கியதும் திரௌபதி ஓடினாள். காமுகனாகிய கீசகன் அவளைத் தொடர்ந்து ஓடினான்.

திரௌபதி நேரே அரசசபைக்கு ஓடினாள். அங்குள்ள அரசர்கள் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்க, அவள் விராடராஜனின் முன்பாகக் களைத்து விழுந்தாள்.

பாஞ்சாலியைத் தொடர்ந்து வந்த கீசகன் காமமூர்க்கத்தால் அவளை நெருங்கினான். அரசசபையில் உள்ள பலரும் பார்த்துக் கொண்டிருக்கையில், நாம் ஒரு பெண்ணைத் தொடலாமா என்ற கூச்சம் கொஞ்சமும் இல்லாமல், அவன் அவளைத் தொட முனைந்தான்.

அந்தக் கணத்தில் சூரியனுடைய ஆணையால் ஒரு கிங்கரன் சுழற்காற்று ரூபமாக வந்து, திரௌபதியைத் தீண்டாதபடி கீசகனை அப்பால் தூக்கி எறிந்தான்!

விராடராஜன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். கீசகனுடைய அக்கிரமச் செயலைக் கண்டும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வஞ்சகனாகிய கீசகனுடைய பலத்தையும் அக்கிரமத்தையும் எண்ணியே ஒரு வார்த்தையும் சொல்லாமல் அவன் மௌனமாக அந்த ராஜசபையில் உட்கார்ந்திருந்தான்.

கீசகனால் திரௌபதிக்கு ஏற்பட்ட துன்பத்தை அங்கு நின்று கொண்டிருந்த பீமன் கண்டான். அதனால் அவன் மனத்தில் கோபம் கொந்தளித்தது. கீசகனைக் கொன்றுவிட அவன் கைகள் துடித்தன. அந்த ஆவேசத்துடன் பக்கத்திலே இருந்த மரத்தைப் பார்த்தான்.

அப்போது கங்கமுனிவனாக அங்கிருந்த தருமர் பீமனுடைய ஆவேசத்தை அறிந்தார். உடனே அவர் தம்பியிடம், ‘‘பலாயனா! தனியாக நிற்கும் இந்த மரம் நெருப்புப் பிடித்து எறிவதற்கு ஏற்றதாகாது. ஆகையால், இப்போது இந்த மரம் உன் சமையல் தொழிலுக்கு உபயோகப்படும் விறகு ஆகாது!’’ என்று குறிப்பாகச் சொன்னார்.

பீமன் தமையனுடைய வார்த்தைகளைக் கேட்டான். தமையன் கூறுவதே இப்போதைக்குச் சரியானது என்பதை உணர்ந்தான். உடனே தனது சினத்தை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

அச்சமயத்தில் திரௌபதி அழுது கொண்டே விராட மன்னனிடம், ‘‘வேந்தே! என்னைத் தீண்டுதல் தகாது என்று நான் சொல்லியும் கீசகன் என்னைத் தீண்டுகின்றானே. தான் விரும்பிய செயலை அவனைச் செய்ய விடுகின்றாயே. இது ராஜதர்மத்துக்கு ஏற்குமோ? நான் கீசகனுடைய செயலை உன்னிடம் முறையிட்டுக் கொள்கின்றேனே! இப்போது இந்தக் கீசகனுடைய செயலை மன்னவனாகிய நீ கண்டிக்கவாவது வேண்டும். அது உன்னால் முடியா விட்டால், அவன் செயல் சரி என்றாவது பாராட்ட வேண்டும். இந்த இரண்டில் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கின்றாயே. இதற்கு என்ன காரணம்? என்மீது மிகவும் அன்புள்ளவள் உனது தேவி. அவளோடு அந்தப்புரத்தில் வெகுநாட்கள் நான் வாழ்ந்திருந்தேன். இன்று எனது தீவினையால் உனது மைத்துனன் தன்னுடைய பலத்தால்

என்னை ஆலிங்கனம் செய்து கொள்வதற்கு நினைத்தான். நீ கீசகனைக் கண்டிக்காமல் மௌனம் சாதிக்கின்றாய். இது உன் நற்குணத்துக்கு அடுக்காது. அநீதி செய்பவர்களைக் கண்டிக்க முடியாத உன்னால், எப்படி ராஜாங்கத்தை ஒழுங்காக நடத்த முடியும்? வருத்தமடைந்தவர்களின் வருத்தத்தை நீ போக்கும் ஆற்றல் இல்லாதவன் என்றால், உனது அரசாட்சி அழிந்துவிடும்!'' என்று முறையிட்டு விட்டு, வருத்தத்தோடு சுதேஷ்ணையிடம் போய்ச் சேர்ந்தாள்.

திரௌபதி போன பின் கங்கமுனிவனாகிய தருமர் விராடராஜனை நோக்கி, "மன்னா! தமது பராக்கிரமத்தால் பூமியைப் பாதுகாக்கின்ற அரசர்கள் கொடுஞ்செயல் புரிபவர்களைத் தண்டிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் போனால் அவர்களுக்கு நியாயமும் ஐசுவரியமும் நிலைத்து நிற்குமோ? நீதி நேர்மைக்கு உட்பட்ட அரசர்கள் சுற்றத்தாரைப் போற்றியும் மற்றவர்களைக் கண்டித்தும் நடப்பார்களோ? நாதியற்ற ஒருத்தி உனது அரண்மனையில் உன்னையே கதியென்று நம்பி வந்து தங்கினாள்.அப்படி தங்கியவளிடம் ஒருவன் ஆசை கொண்டு காதல் பேசுவது வீரச்செயலோ? இல்லை, நியாயமான செயலோ? அல்லது அது விரும்பத்தக்கக் காரியமோ? இப்படிப்பட்ட காரியங்களை முட்டாள்களைத் தவிர மற்றவர்கள் செய்வார்களோ? நாதியற்றவளிடம் முறைதவறி நடந்து கொண்டவன் கீசகனாக இருந்தாலும் சரி. அவன் செய்யக் கூடாத காரியத்தைச் செய்தான். காதல் நோய் மானிட வர்க்கத்திற்கெல்லாம் உண்டு என்பதே இதற்குக் காரணம். ஆனால், மன்னன் என்பவன் தீங்கு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டியவன். அப்படி தீங்கு செய்த கீசகனை நீ தண்டிக்காமல் சும்மா இருக்கின்றாய். இந்தக் காரியம் மன்னவனான உனக்கும் நாசத்தை ஏற்படுத்தும்!'' என்று உபதேசித்தார்.

தருமரும் திரௌபதியும் கூறிய உண்மைகளை எண்ணிப் பார்த்தான் விராடராஜன். அவன் மனம் அதனால் மிகவும் வருந்தியது. அந்த வருத்தத்தை அவனால் தாங்க முடியவில்லை. அவன் எழுந்து ராஜசபையைவிட்டு வெளியேறினான். தன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான்.

மன்னன் சென்ற பிறகு, பீமன் கோபத்துடன் தான் சமையல் செய்யும் இடத்துக்கு வேகமாகச் சென்றான்.

சூரியன் அஸ்தமனமானான்!

குந்திதேவியின் புத்திரர்களான பஞ்ச பாண்டவர்கள் துயரம் தாங்காது மனம் வருந்தினார்கள். விராடராஜன் தனது அரசாட்சியில் நீதியழிந்ததை நினைத்து வெறுப்பு கொண்டான். சுதேஷ்ணை மனம் தளர்ந்தாள். இவ்வாறு அந்தப் பெரிய நகரத்தில் உள்ளவர்கள் எல்லோரும் கீசகன் செயலை நினைத்து மனம் வருந்தினார்கள்!

கடைசியாக எல்லோரும் தூங்கிய பின்பு, அர்த்தராத்திரியில் பாஞ்சாலி பீமனிடம் சென்று கண்ணீரோடு, ''சுவாமி! என்னை விரும்பி நெருங்கிய கீசகனை வதம் செய்பவர் தங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த இரவில் தாங்கள் செய்யப் போவது என்ன?'' என்று கேட்டாள்.

திரௌபதியின் வார்த்தையால் பீமன் கீசகன்மேல் அளவற்ற கோபம் கொண்டான். ''ஆண்களுக்குப் பொறுமை என்பது பெண்களுக்குரிய ஆபரணம் போல் பெருமை தருவதாகும். சாஸ்திரங்கள் இப்படிச் சொன்னாலும் பகைவர்கள் முறையற்ற காரியங்களைச் செய்தால், அவர்களுடைய தலையை வெட்டி எறிவதே ஆண்மைக்குப் பேரணிகலமாகும். பெண்களுக்கு அழகைத் தருவது நாணமே. ஆனால், கணவனோடு மஞ்சத்தில் சுகம் காணும் போது பெண்கள் நாணம் இல்லாமல் இருப்பதே அவர்களுக்குப் பேரணிகலமாகும்! சகுனியோடு சூதாடி ராஜ்ஜியத்தைத் தோற்றபோது, ராஜசபையிலே துச்சாதனன் உன் துகிலைப் பறித்தான். அப்போது வெகுண்டெழுந்த எங்களை, எங்கள் பராக்கிரமம் வெளிப்படாதபடி தருமராஜா தடுத்துவிட்டார். அது போலவே இன்று கீசகன் உன்னை அவமானப்படுத்திய போதும், அவனை நாங்கள் அழிக்க முடியாதபடி அவர் தம் ஜாடையால் எங்களைத் தடுத்துவிட்டார். மதயானையைக் கொல்லும் சிங்கம் போல் இப்போதே போர் செய்து, அந்தக் கீசகனோடு அவனுடைய தம்பிமார்களையும் நான் கொல்வேன்!'' என்று திரௌபதிக்குச் சொன்னான் பீமன்.

பாஞ்சாலி பீமனுடைய வார்த்தைகளைக் கேட்டதும், அவனைப் பார்த்து, ''சுவாமி! முன்பே நமது பன்னிரண்டு வருஷகால வனவாசம் முடிந்துவிட்டது. இப்போது ஒரு

வருஷ கால அஞ்ஞாதவாசத்தில் பெரும்பாலான நாட்கள் கழிந்துவிட்டன. இன்னும் கழிக்க வேண்டிய அஞ்ஞாதவாசமும், நம்மைப் பிறர் அறிந்து கொள்ளாதபடி கழிக்க வேண்டுமே என்ற காரணத்தால்தான் அவர் உங்களைத் தடுத்தார். எந்த இடத்தில் பராக்கிரமத்தைக் காட்ட வேண்டும் என்பதும், எந்த இடத்தில் அடங்கிப் போக வேண்டும் என்பதும் அவருக்கு நன்குத் தெரியும். அதனாலேயே ராஜசபையில் தாங்கள் கீசகனை அக்கணமே மரத்தால் அடித்துக் கொல்ல முயன்றதை அவர் தடுத்தார். சுவாமி! கருடனுக்கு முன் எதிர்பட்ட பாம்பு போல, இன்றிரவு கீசகன் உயிர் துடிக்க அவனைத் தாங்கள் கொல்வது செய்யக் கூடிய காரியம் இல்லை. இன்னும் இரண்டொரு நாட்கள் போகட்டும். அதன்பிறகு கந்தருவரால் கீசகன் கொலையுண்டான் என்று எல்லோரும் பேசிக் கொள்ளும் படி தந்திரமாகத் தாங்கள் அவனைக் கொல்லுங்கள். அதுவே செய்யத் தகுந்த காரியம்!'' என்றாள்.

பீமன் அவளுடைய வார்த்தையை அங்கீகரித்தான். பிறகு, மேற்கொண்டு தந்திரமாகச் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி அவளுக்கு விளக்கமாகச் சொன்னான். தனது பெரும் கோபத்தை அடக்கிக் கொண்டு மெல்ல அந்த இரவைக் கழித்தான்.

இரண்டொரு நாட்கள் கடந்தன.

சுதேஷ்ணையின் அரண்மனையிலே திரெளபதி அவளுக்குப் பணிவிடைகள் செய்து வந்தாள். அப்போது கீசகன் அங்கே வந்தான். கூந்தலில் புழுதியும் தனங்களில் கண்ணீருமாக இருந்த திரெளபதியைக் கண்ட கீசகன், முன் போலவே அவள்மீது பெரும் மோகம் கொண்டான். காமவேகத்தால் பாஞ்சாலியிடம் அவன், ''வண்ணமகளே! விராடராஜனுடைய நல்வாழ்க்கையும், இந்த நகரமும் எனது வலிமையாலேயே பெருமை பெற்றுள்ளன. இதனை நன்றாக நீ எண்ணிப் பார்த்து, உன் மனத்தால் உணர்ந்திருக்கின்றாய். அத்தோடு உனது உடலைக் காக்கின்ற கந்தருவர்களின் பேடித்தனமான உறுதியையும் வலிமையையும் கண்டறிந்திருக்கிறாய். இனி உனது விருப்பம் என்ன?'' என்று கேட்டு, அவளைத் தனது இரண்டு கைகளாலும் கும்பிட்டுத் தன்மீது மனம் இரங்கும்படி வேண்டிக் கொண்டான்.

கீசகன் கூறியதைக் கேட்டு துருபத ராஜகுமாரி மனம் மகிழ்ந்தாள். பீமனால் கீசகவதம் இனி முடிய வேண்டும் என்று தன் மனத்துக்குள் அவள் சங்கல்பம் செய்து கொண்டாள். எனவே, மாற்றான் மனைவியை விரும்பும் அந்தக் கொடிய கீசகனைப் பார்த்து அவள், ''கீசகனே! நீ என்னை அடைவதற்காக மிகவும் வருந்திவிட்டாய். நான் உயர்ந்த குலத்தில் பிறந்தவள். நல்லொழுக்கமும் தவமும் கொண்டவள். அதனாலேயே முன்பு நான் உன் விருப்பத்துக்கு இணங்க மறுத்தேன். அப்போது என் உடம்பைக் காவல் புரியும் கந்தருவர்களும் என்னைக் காப்பாற்ற மறந்துவிட்டார்கள். ஆனால் ஒன்று. தம்மைக் காதலிப்பவன் தேவேந்திரனே என்றாலும் பெண்கள் இலேசில் சம்மதித்து வந்துவிட மாட்டார்கள். ஆகவே, நான் முன்பு உன்னை மறுத்தேன். அத்தோடு வெறுத்தும் பேசினேன். அப்படி நான் பேசியதை மனத்தில் வைத்துக் கொள்ளாதே. இன்றிரவு நீ தனியாக என்னிடம் வா!'' என்று மென்மையாகச் சொன்னாள்.

திரௌபதி சொன்ன வார்த்தைகள் கீசகனுடைய காதுகளில் அமிர்த தாரையாகப் பாய்ந்தன. தவித்துக் கொண்டிருந்த அவனுடைய பிராணன் நிலைத்து நின்றது. அவன் உடம்பிலே ரோமாஞ்சிலி ஏற்பட்டது. அவன் மனமோ ஆசை வெள்ளத்தில் திக்குமுக்காடியது. அவன் மிகவும் ஆர்வத்துடன், ''வண்ணமகளே! இன்றிரவு உன்னை நான் எங்கே சந்திப்பது?'' என்று கேட்டான்.

அதற்கு பாஞ்சாலி, ''ராஜனே! விராடராஜாவின் அரண்மனைத் தோட்டத்தில் நாம் சந்திப்போம். அந்தச் சோலையில் உள்ள பளிங்கு மண்டபம் இருட்டிலும் நிலா வெளிச்சம் போன்று பளிச்சென்று தெரியும். அங்கே வாருங்கள்!'' என்றாள்.

கீசகன் அவளுடைய பேச்சுக்குச் சம்மதித்தான். அவளிடம் விடைபெற்று மிகவும் குதூகலத்துடன் தன் மாளிகைக்குச் சென்றான்.

உடனே பாஞ்சாலி பீமனிடம் சென்றாள். நடந்தவற்றை அவனிடம் தெரிவித்தாள். பீமன அதுகேட்டு பெருமகிழ்ச்சியடைந்தான்.

அந்தக் கணம் முதல் கீசகன் இறப்பதை எப்போது பார்க்கப் போகிறோம் என்ற சிந்தனையிலேயே பாஞ்சாலி பகற் பொழுதைக் கழித்தாள்!

சூரியன் அஸ்தமித்தான்!

இரவு தொடங்கியது!

யமன் இருக்கும் இடத்தை நாடிச் செல்வது போல், கீசகன் அந்த நள்ளிரவில் திரௌபதி சொன்ன இடத்தை நோக்கிச் சென்றான்.

அதேசமயம் மிகவும் பராக்கிரமசாலியான பீமன், கீசகவதத்திற்காகத் தன்னை ஓர் அழகிய பெண்போல் மிக நன்றாக அலங்கரித்துக் கொண்டான். பிறகு, கீசகனை வரச் சொல்லியிருந்த பளிங்கு மண்டபத்துக்கு பீமன் திரௌபதியோடு போய்ச் சேர்ந்தான். அம்மண்டபத்தில் ஒரு மறைவான இடத்தில் திரௌபதியைத் தங்கச் செய்துவிட்டு, அவன் மிகவும் கவனத்தோடு கண்கொட்டாமல் கீசகனுடைய வருகையை எதிர்பார்த்திருந்தான்!

அப்போது பிணத்துக்கு அலங்கரித்தது போல, கீசகன் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு அங்கே வந்தான். திரௌபதி மீது கொண்ட காமதாபத்தால் அவன் இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. நாக்கு வறண்டிருந்தது.

கீசகனைக் கண்டதும் பீமன் மண்டபத்தினுள் விரைந்து சென்றான். தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, அங்கிருந்த ஒரு பொற்கம்பத்தைக் கட்டிக் கொண்டு நின்றான்.

நேரே கீசகன் மண்டபத்தினுள் வந்தான். பொற்றூணைக் கட்டிக் கொண்டு ஸ்திரீ ஒருத்தி நிற்பதைக் கண்டான். திரௌபதியே அப்படி நிற்பதாக, அவன் எண்ணினான். அதனால் அவன் மனத்தில் ஆசை அதிகமாகியது. உடம்பு காமத்தால் துடித்தது. அவன் பெண்ணாகி நின்ற பீமனை நோக்கி ஆர்வத்தோடு வணங்கி, ''மின்னிடையாளே! நான் முன் ஜன்மத்தில் செய்த பெருந்தவத்தின் பயனாகத் தோன்றியவள் நீ என்பதை முன்பு அறியாதவனாகி விட்டேன். அதனால் காம வேகத்தால் உன்னிடம் கொஞ்சம் தவறு செய்துவிட்டேன். உனக்கு நான் செய்த பிழையைப் பொறுத்தருள்!'' என்று கூறி, பாதங்களை நமஸ்கரித்தான்

மேலும் தொடர்ந்து கீசகன், "தென்னங் குரும்பையை ஏளனம் செய்யும் தனத்தாளே! இரவைக் கஸ்தூரிப் புழுக்கெண்ணெய் கொண்டு தடவி வைத்தது போன்ற கூந்தலையுடையவளே! இந்த நடு ராத்திரியில் பாதமே நடந்து செல்லும் வழியைக் காட்ட இங்கே நீ வந்தாய். போக இருந்த எனது உயிரைக் கொடுப்பதற்காகவே நீ இப்படி இங்கே வந்தாய்! பலாசமலர் வாய்த் திறந்து, கிளிமொழியால் காமதேவனுக்குப் பயப்படாதே என்று நீ ஒரு பேச்சு சொல்வதை, இன்னும் நான் கேட்கவில்லையே! ஒடுங்குகின்ற எனது உயிரை, விஷம் போன்ற உனது கடைக்கண் பார்வையால் நீ பாதுகாப்பது எப்போது? தினமும் நான் கும்பிடுகின்ற கடவுளும், மற்றுமுள்ள எல்லாமும் எனக்கு நீயே! இனி, உன் கட்டழகுக்கு முன்னால் இழிவாகத் தோன்றும் பிற பெண்களின் முகத்தை நான் எப்போதும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன். என் காமநோய் அதிகமாகிவிட்டது!" என்று சொன்னான்.

கீசகன் கூறியதைக் கேட்ட பீமன், திரிபுரசங்கார காலத்தில் சிரித்து எதிரிகளையழித்த சிவபெருமான் போலப் பயங்கரமாகச் சிரித்தான். கண்களில் கோபாக்கினிப் பறக்க கீசகனுடைய இரண்டு கைகளையும் அவன் பலமாகப் பிடித்துக் கொண்டான். அடுத்த கணம் பீமன், தான் பிடித்த கைகளால் காற்றாடி போல் ஆகாயத்தில் கீசகன் உடம்பு எழும்படி அவனைக் கரகரவென்று சுற்றினான். அங்கிருந்த கம்பத்தில் அவன் தலையை மோதினான். பெரும்பலத்துடன் பீமன் கீசகவதத்தைத் தொடங்கினான்!

கீசகன் உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டான். சட்டென்று பீமனுடைய பலமான பிடியிலிருந்து தன்னை அவன் விடுவித்துக் கொண்டான். பீமனுடைய முகத்திலே தனது கைகளால் தாக்கினான். பீமன் உடனே அவனைப் பிடித்துத் தள்ளிக் கீழே வீழ்த்தினான். அதனால் கீசகன் முன்பிருந்த வீரப்பொலிவு குன்றினான். அவன் முகத்தில் சாவுக்களைத் தோன்றியது!

ஆயினும் கீசகன் சளைக்கவில்லை. அவன் மறுகணமே எழுந்து நின்று மிக்க வீரத்தோடு பீமனைத் தாக்கினான். பீமன் பதிலுக்கு உக்கிரத்துடன் கீசகனுடைய விலாவில் குத்தினான். அதனால் அவனுடைய விலா எலும்புகள் நொறுங்கின. கீசகன் கொஞ்சமும் அதைப்

பொருட்படுத்தவில்லை. பீமனுடைய பாதங்களோடு தன் பாதங்களும், அவன் தோள்களோடு தன் தோள்களும் படிய மல்யுத்தம் செய்தான்! காம இன்பம் அனுபவிக்கையில் பாதத்தோடு பாதமும் தோளோடு தோளும் பின்னிக் கிடப்பது போல், மல்யுத்தத்திலும் அப்படிப் பின்னி கீசகன் சண்டை செய்ததால் மன்மதனால் வருகின்ற இன்ப நலம் கூட அவனுக்குக் கொஞ்சமாகத் தோன்றியது!

கீசகன் அப்படிப்பட்ட இன்ப உணர்வோடு தன் பலத்தையெல்லாம் திரட்டி பீமனைத் தூக்கித் தலைக்குமேல் சுற்றித் தரையிலே அடித்தான். தரையிலே விழுந்த பீமன் கொடூரமாக வெப்பப் பெருமூச்சுவிட்டான். அடுத்தகணமே துள்ளி எழுந்தான். கீசகனுடைய மயிரைப் பிடித்துச் சிம்பினான். கைகளால் அவன் மார்பைத் தாக்கி, வாயிலிருந்து ரத்தம் கக்கச் செய்தான்.

உடனே கீசகன் ஒரு கையால் பீமனைக் கட்டிப் பிடித்து, மறுகையால் பதிலுக்கு அவனுடைய வாயை கிழித்தான்.

வீரத்திலும், தேகபலத்திலும், போர் வலிமையிலும் ஒத்தவர்களான அந்த கீசகபீமர்களின் மனோதைரியமும் போர் உற்சாகமும் பற்றி நம்மால் தெளிவாகச் சொல்ல முடியுமோ?

அதிக சூரத்தனமும் பகையும் உடைய பீமன் இரவு வெகுநேரம் ஆகிவிட்டதை உணர்ந்தான். அந்தக் கணத்தில் பீமன் தன் முழு பலத்தையும் திரட்டி உக்கிரத்தோடு கீசகனைத் தாக்கிக் கொன்றான்! ஆம், கீசகனைக் கொல்லக் கூடிய பராக்கிரமச் செயலைப் பீமனைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்?

அவரவர்கள் செய்த புண்ணிய பாவரூபமான செய்கைகளின் பயனை அடைந்தே தீருவார்கள். அதைவிட்டுத் தாம் நினைத்த செயலை வினைப்பயனுக்கு மாறாக, தாம் நினைத்தபடி அடைந்தவர்கள் யார்? கீசகன் செய்த தீச்செயல், பீமனுக்கு நல்வினைப் பயனை தருவதாக ஆயிற்று!

கீசகனைக் கொன்ற பின்பு பீமன் திரௌபதியை அருகே அழைத்தான். அவள் மறைவிடத்தைவிட்டு

அவனருகே வந்து நின்றாள். அவள் பாதங்களிலே கீசகனின் பிணத்தைப் பீமன் வைத்தான். அருகே வளர்ந்திருந்த ஒரு மரத்தைப் பிடுங்கித் தன் கைகளால் பிசைந்து அதனைப் பற்றி எரியச் செய்தான். அந்த நெருப்பு ஜுவாலையில் பீமன் கீசகனுடைய பிணத்தைத் திரௌபதிக்குக் காட்டி, அவள் துன்பத்தைப் போக்கினான்.

பீமன் அப்போது அவளை நோக்கி, ''பாஞ்சாலி! உன்னை விரும்பியவர்கள் இந்தக் கீசகன் போலவே இப்படி ஆவார்கள். இனி உன் இடத்துக்கு நீ போ!'' என்று சொல்லி விடை கொடுத்தான்.

திரௌபதி சுதேஷ்ணையின் அந்தப்புரத்துக்குச் சென்றாள். அவள் சென்றபின், பீமன் தனது சமையல் மாளிகைக்குச் சென்றான்.

விராடராஜனுடைய அரண்மனைச் சோலையில் உண்டான ஆரவாரமும், மல்யுத்த ஓசையும் கேட்டு, கீசகனுடைய தம்பிமார்களான உபகீசகர்கள் தூக்கம் கலைந்து எழுந்தார்கள். அவர்கள் தங்கள் மனத்தில், 'தமக்கை சுதேஷ்ணையின் அலங்காரப் பணிப்பெண்ணின் நிமித்தம், நமது அண்ணனாகிய கீசகன் காம தாபத்தால் வருத்தம் அடைந்திருந்தான். ஆகையால், இந்த ராத்திரி வேளையில் அந்தச் சோலையில் அவளைக் கண்டு அவன் நெருங்கினான் போலும்! அதனால் அந்த வண்ணமகளைக் காத்து வருகின்ற கந்தருவரோடு அவனுக்குக் கொடிய யுத்தம் உண்டானதோ?' என்று எண்ணினார்கள்.

அவ்வளவுதான். அவர்கள் மிகவும் கோபம் கொண்டார்கள். அவர்களுடைய கண்கள் நெருப்பைக் கக்கின. தங்களுடைய உயிர் அண்ணனுடைய உயிரைக் காப்பதில் போனாலும் பரவாயில்லை என்று எண்ணி, அவர்கள் அந்தச் சோலைக்கு விரைந்து ஓடினார்கள்.

உபகீசர்கள் அப்போது செய்த ஆர்ப்பாட்டத்தினால் விராட நகரத்தில் உள்ளவர்கள் எல்லோரும் தூக்கம் கலைந்து அச்சம் அடைந்தார்கள். உபகீசகர்கள் பலநூறு தீபங்களைப் பிடித்துக் கொண்டு, அந்தச் சோலையில் என்ன நடந்தது என்பதை அறிய இங்கும் அங்கும் சுற்றிப் பார்த்தார்கள். அப்படித் தேடிப் பார்த்தவர்கள் அங்கிருந்த பளிங்கு

மண்டபத்தில் உடம்பு சிதைந்து மாண்டு கிடந்த கீசகனைக் கண்டார்கள்.

உடனே உபகீசகர்கள் ஓடிச் சென்று சுதேஷ்ணைக்குக் கீசகன் இறந்த செய்தியைக் கூறிப் புலம்பினார்கள். பிறகு, அவர்கள் யாரும் அறியாதபடி கீசகனைச் சிதையேற்றி எரிக்க நினைத்தார்கள். அந்த எண்ணத்துடன் கூடவே அவர்கள், கீசகன் இறப்பதற்குக் காரணமான அலங்காரப் பெண்ணாகிய விரதசாரிணியையும் அவனோடு சிதையேற்றி எரிக்கத் தீர்மானித்தார்கள்.

உபகீசகர்கள் மறுகணமே திரௌபதியை வந்து பிடித்துக் கொண்டார்கள். திரௌபதி அதனால் வருந்திக் கதறினாள். "அஞ்சத்தக்க இந்தக் காரிருளில் கொடிய கொலை பாதக மன்னர்கள் என்னை நெருப்பிலிட்டுக் கொளுத்த நினைத்து வந்திருக்கிறார்கள். எனது உடம்பைப் பாதுகாக்கின்ற தெய்வங்களே! என்னைக் காப்பாற்ற உடனே ஓடி வாருங்கள்!" என்று புலம்பிக் கண்ணீர் வடித்தாள்.

திரௌபதியின் அவலக்குரல் கேட்டான் பீமன். அவன் விஷயத்தை உடனே புரிந்து கொண்டான். 'ஆகா! இந்த உற்சாகத்தோடு செய்யக் கூடிய பெரும் யுத்தம் எப்போதும் கிடைக்கக் கூடியது இல்லை!' என்று நினைத்தான். அந்நினைவால் அவன் பெரிதும் மகிழ்ந்தான். அக்கணமே அவன் தனது தொடை மற்றொரு தொடையோடு மோத காற்றைவிட வேகமாக அங்கு ஓடி வந்தான்.

வந்தவன் அந்தச் சோலையிலுள்ள மரங்களை வேரோடு பிடுங்கினான். அவற்றால் உபகீசகர்களைத் துரத்தித் துரத்தி அடித்தான். அந்தத் துர்ப்புத்திகாரர்கள் என்ன செய்வது என்று புரியாமல் மயங்கி இங்கும் அங்கும் ஓடினார்கள். அச்சத்தால் பதறித் துடித்தார்கள்; கதறினார்கள்.

பீமன் ஒருவரையும் உயிரோடு விட்டு வைக்கவில்லை. மரங்களால் அவர்களைத் தாக்கி, அவர்களுடைய கர்வத்தையும் உயிரையும் கொன்றான்!

ஏக காலத்தில் விராடராஜனுடைய மைத்துனர்களான கீசகனும் உபகீசகர்களும் இறந்ததை நினைத்து நகரத்தவர்கள்

எல்லோரும் வருந்தினார்கள். அவர்கள், ''கந்தர்வருக்கு முன்னே நின்று மானிடரால் சண்டை செய்து ஜெயிக்க முடியுமா? ஆகையால்தான் பராக்கிரமசாலிகளான கீசகர்கள் எல்லோரும் தாம் கொண்ட அகங்காரத்தால் இறந்தார்கள்!'' என்று சொல்லி நடுங்கினார்கள்.

அப்போது பீமனும் திரௌபதியும் யாருக்கும் தெரியாமல் தங்கள் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இரவு கழிய, சூரியன் உதித்தான்!

விராடராஜனின் அரண்மனைச் சோலையில் கீசகர்கள் கந்தருவரால் அழிந்தார்கள் என்ற செய்தி எல்லா நகரங்களிலும் பரவியது!

விராடராஜன் கந்தருவரால் தனது மைத்துனர்கள் அழிந்த செய்தி கேட்டு, அதனை மனத்தால் நன்கு உணர்ந்து சோர்வடைந்தான்!

அச்சமயத்தில் பாண்டவர்கள், 'ஒரு வருஷ அஞ்ஞாதவாசம் பெரும்பாலும் கழிந்துவிட்டது. இன்னும் ஒருசில நாட்களே மீதி இருக்கின்றன. அவையும் விரைவில் கழிந்துவிடும். அதன்பிறகு மீண்டும் நாம் நிஜரூபத்துடன் வெளிப்படுவோம்!' என்று நினைத்து, அதற்கேற்ற மனப்பக்குவத்தோடு அமைதியாக விராடராஜனுடைய அரண்மனையிலே தங்கி, அந்த நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்!

4. ஆநிரை மீட்சி

துரியோதனன் மாமனாகிய சகுனியோடு சூதாடி, ராஜ்ஜியத்தைத் தோற்ற பாண்டவர்கள் வனவாசம் புரிந்தார்கள். பின்பு அஞ்ஞாதவாசம் செய்தார்கள். அந்தப் பாண்டவர்களுடைய அஞ்ஞாதவாச காலத்தில் நடந்த வரலாற்றைச் சொன்னோம்! இனி, கொடிய துரியோதனன் விராடராஜனுடைய பசுக்களைக் கவர்ந்து கொண்டு போன வரலாற்றைக் கூறுவோம்!

அப்போது துரியோதனன், ''தேவர்களுக்குப் பதிமூன்று நாட்கள் என்னும் மானிடர்களுக்கான பதிமூன்று

வருஷங்கள் பெரும்பாலும் கழிந்துவிட்டன. இனி, பாண்டவர்கள் வெளிப்பட்டுத் தங்களுக்குரிய ராஜ்ஜியத்தை மீண்டும் பெறுவதற்கு வந்துவிடுவார்கள். ஆகவே, அவர்கள் மாறுவேஷத்துடன் வசிக்கின்ற தேசம் எது என்று கண்டுபிடித்து வாருங்கள்!'' என்று சொல்லி, ஆயிரங்கோடி வேவுக்காரர்களை அனுப்பினான்.

துரியோதனனுடைய ஆணைப்படி ஒற்றர்கள் பூமியில் உள்ள எல்லாத் தேசங்களுக்கும் சென்றார்கள். பாண்டவர்களை அங்கெல்லாம் மிகக் கவனமாகத் தேடினார்கள். ஆனால் அவர்களால் பாண்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாக அவர்கள் தோல்வியோடு திரும்பித் துரியோதனனிடம் வந்தார்கள்.

திரும்பி வந்த ஒற்றர்கள், "மகாராஜா! நாங்கள் காடுகளிலும், மலைகளிலும், ஆற்றங்கரைகளிலும், கடல்களிலும், தேசங்களிலும், நகரங்களிலும் ஆகிய எல்லா இடங்களிலும் பாண்டவர்களைத் தேடிப் பார்த்து விட்டோம். அவர்களை நாங்கள் இந்தப் பூமியில் தேடாத இடமே இல்லை. இது தங்கள் திருவடி மீதாணை!'' என்று துரியோதனனிடம் சொன்னார்கள்.

பீஷ்மர் அப்போது துரியோதனனை நோக்கி, "துரியோதனா! தருமபுத்திரன் மறைந்து வசிக்கின்ற தேசத்தை உனது ஒற்றர்களால் அறிய முடியுமோ? பாண்டவர்கள் வசிக்கின்ற தேசத்தைக் கண்டறிய ஓர் உபாயம் உண்டு. அவர்கள் வாழ்கின்ற தேசத்தில் மழைவளம் மிகுந்திருக்கும். தானிய விளைச்சல் அமோகமாக இருக்கும்!'' என்றார்.

பாண்டவர்கள்ளைத் தேடித் திரும்பிய ஒற்றர்களுள் ஒருவன், பீஷ்மர் சொன்னதைக் கேட்டு அவர்கள் எங்கு வசிக்கக் கூடும் என்பதை ஒருவாறு ஊகித்தான். உடனே அவன் துரியோதனனை வணங்கி, "மகாராஜா! விராடராஜனுடைய மச்சதேசத்தில் முன்பெல்லா வருஷங்களையும் விட இந்த வருஷம் தானிய விளைச்சல் அதிகமாக இருக்கிறது. மழைவளம் மிகுந்திருக்கிறது. அங்குள்ள மக்கள் முன்னைவிட இப்போது அதிக சுபீட்சமாக இருக்கிறார்கள். மற்றும் ஓர் அதிசயம் சமீபத்தில் அங்கே நடந்திருக்கிறது. மல்யுத்த வீரனாகிய கீசகன் ஓர் அலங்காரப் பணிப்பெண்ணை விரும்பிய காரணத்தால் இறந்தான்!'' என்று கூறினான்.

ஒற்றன் சொல்லி முடித்ததும் கர்ணன் நண்பனைப் பார்த்து, ''மாமன்னா! விராடராஜனுடைய மச்சதேசத்தின் மேல் நாம் இப்போதே போருக்குச் செல்வோம். போரில் அவனது பசுக்களைக் கவர்ந்து ஓட்டிக் கொண்டு வருவோம். பாண்டவர்கள் அங்கே உண்மையிலேயே வசித்திருப்பார்களானால், அவர்களால் நிச்சயம் நாம் கவர்ந்த பசுக்கள் விராடராஜனுக்காக மீட்கப்படும். அவர்கள் அங்கே இல்லாவிட்டால் பசுக்களை ஒருக்காலும் விராடராஜனால் மீட்க முடியாது! என் மனத்தில் தோன்றும் எண்ணம் இதுதான்!'' என்றான்.

துரியோதனன் அதுகேட்டு மகிழ்ந்தான். உடனே விராடதேசத்தின் மீது படையெடுத்துச் சென்று பசுக்களைக் கவர்ந்து வரும்படிக் கட்டளையிட்டான். அவன் கட்டளையை ஏற்றுக் கொண்டு திரிகர்த்த தேசத்து ராஜனான சுசர்மா வெட்சிப்பூமாலைச் சூடி, ஓர் அக்ஷௌஹிணி சேனையோடு விராடதேசத்தின்மீது போர் தொடுத்தான். சுசர்மா விராட தேசத்தின் தெற்குப் பக்கம் போரிட்டு விராடனுடைய பசுக்களைக் கவர்ந்து ஓட்டினான்.

உடனே பசுக்களைக் காவல் செய்கின்ற ஆயர்கள் விராடராஜனிடம் சென்று, திரிகர்த்தராஜன் பசுக்களைக் கவர்ந்து செல்லும் செய்தியைச் சொன்னார்கள்.

அதுகேட்டு ஓர் அக்ஷௌஹிணி சேனையுள்ள விராடராஜன், தன் சேனைத்தலைவர்களை நோக்கி, ''சேனாதிபதிகளே! என்னை அலட்சியப்படுத்தி எனது தேசத்திலுள்ள பசுக்களை மாற்றான் கவர்ந்து கொண்டு போவதா? இக்கணமே நமது பசுக்களை மீட்பதற்காக நீங்கள் ரதகஜதுரகபதாதி சேனைகளை அணிவகுத்துப் போருக்குச் சித்தம் செய்யுங்கள்!'' என்று இடிபோல் முழங்கினான்.

விராடராஜனுடைய கட்டளையை அக்கணமே சேனாதிபதிகள் நிறைவேற்றினார்கள். ரதகஜதுரகபதாதி சேனைகள் போருக்கு அணிவகுத்துச் சித்தம் செய்யப் பட்டன. விராடராஜன் அச்சேனைகளோடு திரிகர்த்தன் கொண்டு போகும் பசுக்களை மீட்க விரைந்தான். அவன் சேனைகள் செல்லும் வேகத்தால் எழுந்த புழுதிப் படலம் ஆகாயத்தை மறைத்தது. சேனைகளில் முழங்கப்பட்ட

பலவகை வாத்தியங்களின் பேரோசை உலகெங்கும் பரவியது. விராடராஜன் தனது சேனையோடு போய் திரிகர்த்தன் சேனையைச் சந்தித்தான்.

அப்போது விராடராஜனுடைய மகள் உத்தரையின் கன்னிமாடத்தில் பிருகந்நளையாக வசித்து வந்த அர்ச்சுனனைத் தவிர, மற்ற நான்கு பாண்டவர்களும் யுத்தத்தைப் பார்ப்பதற்காக விராடனோடு சென்றார்கள்.

போர்க்களத்தில் விராடசேனையும் திரிகர்த்த சேனையும் ஒன்றோடொன்று பயங்கரமாக மோதிக் கொண்டன. ஒன்றையொன்று வெற்றி பெற வேண்டும் என்ற வெறியோடு இருசேனைகளும் கடுமையாகப் போரிட்டன. அச்சமயத்தில் திரிகர்த்த சேனைக்கு முன்பாக வந்த கௌரவசேனை விராடசேனையை எதிர்க்க முடியாமல் புறமுதுகிட்டு ஓடியது. திரிகர்த்தசேனையும் தோற்று ஓடியது.

போரில் புண்பட்ட திரிகர்த்தன் அதனால் சோர்வு அடையவில்லை. தான் கவர்ந்த பசுக்களை அப்பால் போகவிட்டு, அவன் நாணேற்றி அறுபது அம்புகளை விராடன் மேல் மழை போலப் பிரயோகித்தான்.

விராடன் பதிலுக்குத் தன் வில்லை வளைத்து ஐந்து அம்புகளை வர்ஷித்தான். அவைகள் நொடிக்குள் சென்று திரிகர்த்தனின் அறுபது பாணங்களையும் முறியடித்தன. அத்துடன் அவனுடைய தேரையும், சாரதியையும், கொடியையும், தேர்க்குதிரைகளையும், வில்லையும் அழித்தன. திரிகர்த்தன் அச்சத்தால் நடுங்கும்படி விராடன் அவன் அழகிய மார்பில் வேறு சில பாணங்களை வர்ஷித்தான்.

திரிகர்த்தன் உடனே வேறொரு தேரில் ஏறிக் கொண்டான். பயங்கரமான இருபது அம்புகளை விராடன் மேல் பிரயோகித்து அவனுடைய தேரையழித்தான். மேலும், திரிகர்த்தன் விராடனைத் தோற்கடித்துத் தனது தேர்க்காலில் கட்டினான்!

வெற்றிப் பெருமிதத்துடன் திரிகர்த்தன் தனது தேரைத் திருப்பி குருதேசத்தை நோக்கிச் செலுத்தத் தொடங்கினான்.

அதுகண்டு கங்கப்பட்டனாகிய தருமர், பலாயனனாகிய பீமனைக் குறிப்பாக நோக்கினார். அந்தக் கண்ஜாடையிலிருந்து விராடராஜனைத் திரிகர்த்தனிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதை பீமன் புரிந்து கொண்டான். அவ்வளவுதான். பீமன் மூண்டெரிகின்ற நெருப்புப் போலப் போருக்குக் கொதித்தெழுந்தான்!

கற்பாந்த காலத்தில் மலைகளை ஒன்றுடன் ஒன்று பேரோசையோடு மோதச் செய்யும் தனது தந்தையாகிய வாயுவைப் போல, பீமன் திரிகர்த்தனுடைய தேரை வேறொரு தேரால் மோதி அழித்தான். திரிகர்த்தனை அவனுடைய வில்லோடு சேர்த்துக் கட்டிப் பிடித்துக் கொண்டு, விராடனது கட்டுக்களை அவிழ்த்துத் தேர்க்காலிலிருந்து விடுவித்தான். பிறகு, வேறு ஒரு பொன் மயமான தேரில் விராடனை ஏறச் செய்தான். அதே தேர்க்காலில் திரிகர்த்தனை, விராடனை அவன் கட்டிய கயிற்றாலேயே கட்டினான். தான் வந்த வேலை முடிந்ததும் தேரைத் திருப்பிச் செலுத்தினான் பீமன்.

பீமன் அப்படி திரிகர்த்தனைச் சிறை பிடிக்கவே, திரிகர்த்த சேனை முழுவதும் அழிந்துவிட்டது!

விராடராஜன் தன்னைத் திரிகர்த்தனிடமிருந்து பீமன் காப்பாற்றியதை நினைத்து மகிழ்ந்தான். அந்தப் பெரும் சந்தோஷத்துடன் பீமனை நோக்கி, "பலாயனா! யுத்தகளத்தில் நீ எனக்குப் பேருதவி செய்தாய். இந்த மகோபகாரத்திற்கு நான் செய்யக் கூடிய பிரதியுபகாரம் எந்த வகையிலும் இல்லை!" என்று அவன் பாராட்டினான்.

அப்போது தாமக்கிரந்தி என்னும் பெயருடன் வாழ்ந்திருந்த நகுலன், திரிகர்த்த சேனையிலிருந்த வலிமையுள்ள பதினாயிரங் குதிரைகளைக் கவர்ந்து கொண்டான். தந்திரிபாலன் என்னும் பெயருடன் இருந்த சகாதேவன், திரிகர்த்தன் கொண்டு போன பசுக்களைத் திருப்பி ஊருக்கு ஓட்டி வந்தான்.

சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கினான்!

தருமர் அயோத்திப் பட்டணத்து மன்னனாகிய விராடனிடம், "ராஜனே! இந்தத் திரிகர்த்தனை விட்டுவிடு!" என்றார்.

விராடராஜன் கங்கமுனிவனின் கட்டளைப்படி திரிகர்த்தனைத் தேர்க்காலிலிருந்து விடுவித்தான். அவனுக்கு ஒரு தேரையும் கொடுத்து திரும்பிச் செல்ல அனுமதி தந்தான்.

திரிகர்த்தன் போன பிறகு விராடன், "துரியோதனனுடைய இரண்டாவது சேனை நம்மோடு போருக்கு வரக்கூடும்" என்று எண்ணினான். அதனால் அவன் சேனையை வியூகப்படுத்தி தனது நகரத்தின் தெற்குப் பக்கத்திலேயே தங்கியிருந்தான்.

துரியோதனன் திரிகர்த்தனுடைய தோல்வியை அறிந்தான். அதனால் அவன் மிகவும் வெகுண்டான். உடனே அன்றிரவே அவன் பெரும் சேனையுடன் வந்து விராடநகரத்தின் வடக்குப் பக்கத்தில் முற்றுகையிட்டான். அவன் அத்துடன் சும்மா இருக்கவில்லை. தனது சேனையால் மச்சதேசம் முழுவதும் ஆக்கிரமித்தான். அத்தேசத்தில் நன்கு விளைந்திருந்த பயிர்வகைகளை யெல்லாம் கொடிய நெருப்பால் நாசம் செய்தான். விராடராஜனின் பசுக்களைக் கவர்ந்து கொண்டு திரும்பினான்.

அதுகண்டு பசுக்களைக் காத்து வருகின்ற இடையர்கள் வருந்தினார்கள். அவர்கள் அக்கணமே ஓடிச் சென்று விராட நகரத்திற்குள் புகுந்தார்கள். பசுக்களைத் துரியோதனன் கவர்ந்து கொண்டு போகும் செய்தியை விராடராஜனுடைய இளைய மகனாகிய உத்தரகுமாரனுக்குத் தெரிவித்தார்கள்.

மேலும், அவர்கள் அவனிடம் அச்செய்தியை விளக்கமாகக் கூறத் தொடங்கி, "இளவரசே! நமது ராஜா பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக நகரத்தின் தெற்குப் பக்கம் போனார். அப்போது சர்ப்பக் கொடியுடைய துரியோதனன் பெருஞ்சேனையோடு வந்து நகரத்தின் வடக்குப் பக்கத்தை வளைத்துக் கொண்டான். துரியோதனாதியர்கள் நமது தேசத்தின் பயிர்பச்சைகளையெல்லாம் சர்வநாசம் செய்துவிட்டார்கள். நமது பசுக்களையும் கவர்ந்து கொண்டார்கள். இப்படி நடந்த பின்பும் தாங்கள் அந்தப் பகைப் பாம்புகளையழிக்காமல், கருடக் குஞ்சு போல் மாளிகைக்குள்ளே வாசம் செய்து கொண்டிருப்பது ஏன்?" என்றார்கள்.

இடையர்கள் உத்தரகுமாரனிடம் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, சுதேஷ்ணை தனது பரிசாரகப் பெண்களிடம், ‘‘பணிப்பெண்களே! நமது ராஜா பகைவரால் கவர்ந்து போகப்பட்ட பசுக்களை மீட்டு வருவதற்காக நகரத்தின் தெற்குப் பக்கம் போயிருக்கிறார். அவர் திரும்பி நகரத்துக்குள் வந்து சேரும் வரை, நீங்கள் ஆயுதங்களை ஏந்தி, நமது நகரத்து மதிலைச் சுற்றிக் காவல் செய்யுங்கள்!’’ என்று கட்டளையிட்டாள்.

உத்தரகுமாரன் தாயின் செயலைக் கண்டான். அவளை அவன் நமஸ்கரித்துவிட்டு, ‘‘அம்மா! தாங்கள் இப்போது கூறிய வார்த்தைகள் நன்றாக இருக்கின்றன!’’ என்று கூறிப் பரிகசித்தான்.

மேலும் அவன் தாயிடம், ‘‘சந்தனக்குழம்பும், முத்து மாலைகளும், பூமாலைகளும் அணிந்து மலை போன்ற என் தோள்களைத் தாங்கள் வளர்த்தீர்கள். அப்படிச் செய்தது பகைவரோடு நான் சென்று யுத்தம் செய்யாமல், பெண்கள் போய் யுத்தம் செய்வதற்காகவோ? நான் ஒருவனே சென்று, பெருஞ்சேனையோடு வந்து நமது பசுக்களைக் கவர்ந்து கொண்ட அந்தக் கொடிய துரியோதனாதியர்களை அழியும்படித் தோற்றோடச் செய்வேன்! இதனை நான் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் முடிப்பேன். ஆனால் போரைப் பற்றித் தெரிந்து, அதற்கு ஏற்ப ரதத்தை வேகமாகச் செலுத்தக் கூடிய, அதிலும் என் மனத்தோடு ஒத்த ஒரு தேர்ப்பாகன் இப்போது எனக்குக் கிடைக்கவில்லையே!’’ என்றான்.

அங்கே நின்று கொண்டிருந்த விரதசாரிணியாகிய திரௌபதி அது கேட்டு, உத்தரகுமாரனின் அருகில் சென்று, ‘‘இளவரசே! இதோ நிற்கும் பிருகந்நளையே அர்ச்சுன ராஜாவுக்கு முன்பெல்லாம் தேர் ஓட்டுபவள்!’’ என்று சொல்லி, பெண்ணாகி நிற்கும் அர்ச்சுனனை அவனுக்குக் காட்டினாள்.

உத்தரகுமாரன் அதுகேட்டு மகிழ்ந்தான். தன் தாயிடம் பிருகந்நளையையே தனக்குத் தேர்ச்சாரதியாக்கும்படி வேண்டினான்.

சுதேஷ்ணை மகனின் விருப்பத்திற்கு இணங்கி, பிருகந்நளையை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டு,

''பெண்ணே! நீ சாரத்தியம் செய்ய ஒப்புக் கொண்டால், என் மகன் போர்க்களத்தில் பகைவரை ஜெயித்து விரைவில் திரும்பி வருவான்!'' என்று சொன்னாள்.

பிருகந்நளை சுதேஷ்ணையின் கட்டளைப்படி மிகச் சிறந்த நான்குக் குதிரைகளைத் தேரில் கட்டி போருக்கு ஆயத்தப்படுத்தினாள். உத்தரகுமாரன் அருமையான கொடிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தேரில் ஏறினான். அப்போது அநேக கோடிப் பெண்கள் அவனை வாழ்த்தினார்கள்.

பிருகந்நளை ரதத்தை யுத்தகளத்தை நோக்கி வேகமாகச் செலுத்தினாள்!

ரதம் மறுவினாடியே நகரத்தின் வடக்குப் பக்கத்தை அடைந்தது!

ஸ்ரீராமபிரான் தோன்றிய சூரிய குலத்தில் பிறந்த உத்தரகுமாரன், சந்திரனும் சந்திரனைச் சூழ்ந்த நட்சத்திரங்களும் போல, யுத்தபூமி முழுவதும் பரவியிருந்த துரியோதனனையும் அவனது சேனையையும் பிரதியட்சமாகப் பார்த்தான். அக்கணமே அவன் அச்சத்தால் மனம் கலங்கினான். அவன் நாக்கு வறண்டது. கைகளும்,



கால்களும், உடம்பும் நடுங்கின. அவனுடைய வார்த்தைகள் தடுமாறின. தலைக்கிரீடமும் நடுங்கியது. அவன் மூர்ச்சையடைந்தான்!

அப்போது பிருகந்நளை உத்தரகுமாரனை மூர்ச்சைத் தெளிவித்து, ''ராஜகுமாரா! நீ பயப்படாதே! போருக்கு வந்தவர்களுக்கு இரண்டு காரியங்கள்தான் உண்டு. ஒன்று பகைவர்களை அழிக்க வேண்டும். இல்லையேல் தாம் சாக வேண்டும். இவை தவிர வேறு ஒரு காரியம் உண்டோ? யுத்தத்துக்கு வந்துவிட்டு புண்படாமல் பயந்துத் திரும்பிச் சென்றால், பெண்கள் உன்னை என்ன சொல்லி இகழ மாட்டார்கள்? நீ தைரியமாக நின்று வில்லை வளைத்து கொடிய அம்புகளைப் பகைவர்கள் மேல் பிரயோகித்து யுத்தம் செய். கொஞ்சமும் சோர்வடையாமல் இப்படி நீ யுத்தம் புரிந்தால், உன்னை எதிர்த்து நிற்கக் கூடிய அரசர்கள் இந்தப் பூமியில் யார் இருக்கின்றார்கள்? இளவரசே! அதோ பார். அங்கே நிற்பது குதிரைப்படை. அதற்குப் பக்கத்தில் இருப்பது யானைப்படை. இந்தப் பக்கத்தில் இருக்கிறதே, அது தேர்ப்படை. முன்னே நிற்பதுதான் காலாட்படை! இனி உன் வீரத்தைக் காட்டு!'' என்று தேறுதல் சொல்லி, அவனை உற்சாகப்படுத்தினாள்.

ஆனால், உத்தரகுமாரன் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன் அச்சம் மேலும் அதிகமாகியது. அதனால் அவன், ''சாரத்தியப் பெண்ணே! இப்போதைக்கு நாம் திரும்பிச் சென்று விடுவதே துணிச்சலான காரியம்!'' என்றான்.

உத்தரகுமாரன் அப்படிச் சொல்லவும், பிருகந்நளை முன்னைவிட அவனுக்கு அதிகமாகச் சைத்தியோபசாரம் செய்து, ''தலைவனே! நீ ஒரு க்ஷண நேரம் பயந்து தோற்றோடாமல் இங்கேயே இரு. நான் பகைவர்களைத் தனித்தனியே தோற்றோடச்செய்கின்றேன்! அவர்கள் கவர்ந்து கொண்ட பசுக்களையும் மீட்டுக் கொடுக்கின்றேன்!'' என்றாள்.

பிருகந்நளை கூறிய வீரவார்த்தைகளைக் கேட்டும் உத்தரகுமாரன் தைரியப்படவில்லை. அவனுடைய பயம் அதிகமாகியது. அவன் ரதத்திலிருந்து குதித்து, பாதங்கள் பிடரியில் அடிபட வேகமாக ஓடினான்!

அந்தக் கணத்திலேயே பிருகந்நளை உத்தரகுமாரனைத் தொடர்ந்து ஓடிப் பிடித்துக் கொண்டாள். அவனையிழுத்துக் கொண்டு வந்து தேரோடு கட்டினாள்!

பிறகு, பிருகந்நளை தேரைச் செலுத்திக் கொண்டு போய்க் காளிகோயிலில் நிறுத்தினாள். அர்ச்சுனனாக இருந்த காலத்தில் அங்கேயுள்ள மரப்பொந்தில் மறைத்து வைத்த தனது அம்புகளையும் வில்லையும் எடுத்துக் கொண்டாள். அதே வினாடியில் யுத்தகளத்துக்குத் தேரைத் திருப்பிக் கொண்டு வந்து சேர்ந்தாள்!

அப்போது உத்தரகுமாரன், "சாரத்தியப் பெண்ணே! நீ வன்னிமரப் பொந்திலிருந்து எடுத்து வந்த ஆயுதங்கள் யாருடையவை?" என்று கேட்டான்.

பிருகந்நளை அதற்கு, "ராஜகுமாரா! இவை மலைகளிலும் காடுகளிலும் வாசம் செய்த அர்ச்சுனனுடையவை!" என்றாள்.

"அப்படியா? இப்போது அந்த அர்ச்சுனன் எங்கே சென்று வசிக்கின்றான்?"

"இளவரசே! நான் சொல்வதைக் கேள். உன் தந்தை விராடராஜாவோடு சரியாசனத்தில் வீற்றிருக்கும் கங்கமுனிவர் இந்த நகரத்துக்கு வந்தபோது, தன் தீவினையால் பேடியாகிய அர்ச்சுனன் அவரோடு வந்து சேர்ந்தான்! அஞ்ஞாத வாசத்துக்கு நியமித்த ஒரு வருஷ காலம் இன்னும் முடியவில்லை. அதற்கு இன்னமும் நான்கு நாழிகைப் பொழுது கழிய வேண்டும். பின்பு இந்த இடத்திலேயே அந்த அர்ச்சுனன் வெளிப்பட்டுத் தோன்றுவான்! ஆகையால், நீ திரும்பி ஓடிப் போவதை விட்டுவிடு. நீ இப்போது எனக்குப் பதிலாக ரத சாரத்தியம் செய்!" என்று கூறிய பிருகந்நளை, உத்தரகுமாரனுடைய கட்டுகளை அவிழ்த்து விடுதலை செய்தாள்.

உத்தரகுமாரன் பிருகந்நளைச் சொன்னதைக் கேட்டுப் பயம் தெளிந்தான். அர்ச்சுனனே பிருகந்நளையாக இருக்கின்றான் என்பதையும் புரிந்து கொண்டான். அர்ச்சுனனின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குச் சாரத்தியம் செய்ததைப் போல், தானும் செய்யப் போவதை எண்ணி மகிழ்ந்தான். உடனே மிகவும் தைரியமும் உற்சாகமும்

கொண்டு, துரியோதனாதியர்களும் அவர்களுடைய சேனைகளும் அழிந்தோடும்படி உத்தரகுமாரன் ரதத்தைச் செலுத்தினான்.

துரியோதனனுடைய படைத்தலைவர்களான துரோணாசாரியார் முதலியவர்கள் உத்தரகுமாரனின் செயலைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தார்கள். 'முன்பு இந்த உத்தரகுமாரன் தேரேறிப் போர் செய்ய வந்து அஞ்சியோடினான். ஆனால், அவனோ இப்போது சாரத்தியம் செய்த பேடியின் செயலால் மனம் தேறினான். அத்துடன் அந்தப் பேடிக்குச் சாரதியாகித் தேரை வேகமாகச் செலுத்தி வருகின்றான். இது என்ன ஆச்சர்யம்! நாம் முதலில் சந்தேகித்தபடி இந்தப் பேடி வேறு யாரும் இல்லை. அர்ச்சுனனேதான்!' என்று நினைத்தார்கள்.

அப்போது பிருகந்நளையான அர்ச்சுனன், பகைவர்கள் தன் பேடித் தன்மையை ஆண்மையாக மெச்சும்படி வில்லை வளையல் அணிந்த தன் கையில் ஏந்தினான். உத்தரகுமாரனை நோக்கி அர்ச்சுனன், "ராஜகுமாரனே! நான் அநேக பாணங்களைத் தொடுக்கும் ஒவ்வொரு முறையும் பகைவர்களைத் தனித்தனியே தோற்றோடச் செய்வேன். அவர்கள் கவர்ந்து கொண்ட பசுக்களையும் மீட்பேன். நீ பயப்படாமல் தைரியமாகத் தேரை ஓட்டு!" என்று சொல்லி, அவனைத் தைரியப்படுத்தினான்.

விஜயனின் கட்டளைப்படி உத்தரகுமாரன் ஒரு கணத்துக்குள் ரதத்தை யுத்தகளத்தின் முன் ஓட்டிக் கொண்டு வந்து நிறுத்தினான். அர்ச்சுனன் அக்கணமே அநேக கோடி பாணங்களைப் பகைவர்களின் மேல் வர்ஷித்தான். அவனுடைய அம்புகளால் பகை அரசர்கள் எத்தனையோ பேர் மாண்டார்கள்!

அதுகண்டு பீஷ்மர், விதுரன், துரியோதனன் முதலியவர்கள் கோபித்து மனம் பதைத்தார்கள்.

விதுரன் துரியோதனனைப் பார்த்து, "துரியோதனா! பாண்டவர்கள் வனவாசம் போன காலத்தில் அர்ச்சுனன் சிவபெருமானைக் குறித்து தவம் செய்தான். அதனால் அந்தக் கடவுளிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றான். அப்போது தேவேந்திரன் அவனைத் தேவலோகத்துக்கு அழைத்துச்

சென்றான். அங்கே தேவர்களால் அர்ச்சுனன் கற்பகமலர்கள் சூட்டப் பெற்றான். தேவேந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்கி மூன்று கோடி நிவாதகவசர்களையும், அறுபதினாயிரம் காலகேயர்களையும் அர்ச்சுனன் கொன்றான். ஆகையால், முன்பு சூதாட்ட காலத்திலிருந்த அர்ச்சுனனே இவன் என்று எண்ணாதே. இப்போது முன்னைக் காட்டிலும் பலம் பொருந்தியவனாக இவன் இருக்கின்றான்! தன்னிடத்திலிருந்து விலகி வந்த பெரிய யானையைக் காட்டிலும், தன்னிடத்திலே இருக்கின்ற சிறிய முயல்குட்டி பலமுடையது என்பது பழமொழி. இதனை நீ அறிவாய். ஆகையால், தனது இடத்திலும் மாற்றான் இடத்திலும் உனக்குப் போர் செய்வது எளிதாக இருந்தாலும், இவர்கள் நமது இடத்துக்கு வந்த பின்பு, நாம் போரைத் தொடங்குவது நல்லது!'' என்று கூறினான்.

பீஷ்மரும் துரோணாசாரியாரும் அது கேட்டு, ''துரியோதனா! விதுரன் கூறுவதே இச்சமயத்துக்கு ஏற்ற காரியம்!'' என்றார்கள்.

அவர்கள் மூவரும் அப்படிச் சொன்னதைக் கேட்டு துரியோதனன் மனம் கொதித்தான். அப்போது அவன் பக்கத்தில் மலையே நெருங்கினாலும் பொடிப் பொடியாகி இருக்கும்!

கர்ணன் அந்நிலையில் அவர்களைப் பார்த்து, ''என்ன இது வேடிக்கை! நமக்கு எதிர்பக்கத்தில் யுத்தத்துக்குச் சித்தமாக ஒற்றைத் தேரே நிற்கிறது. அத்தேரில் வில்லை வளைத்துக் கொண்டு நிற்பவனோ வீரனில்லை. அவன் ஆண்மையில்லாத ஒரு பேடி! இப்படியிருக்க வீரப் புகழ் பெற்ற நீங்கள் எல்லோரும் மனம் தளர்ந்து யுத்தத்துக்கு அஞ்சுகின்றீர்கள். இதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டான்.

அப்போது துரியோதனன், ''நாம் கவர்ந்து கொண்டு வந்த பசுக்களை நமது இடையர்கள் முன்னே ஓட்டிக் கொண்டு போகட்டும். நமது சேனை அந்த இடையர்களுக்குத் துணையாக நிற்கட்டும்!'' என்று கட்டளையிட்டான்.

மேலும் அவன் தனது தம்பிமார்களைப் பார்த்து, ''தம்பிமார்களே! தேரில் யுத்தத்துக்குத் தயாராக நின்று

கொண்டிருக்கும் பேடியைச் சூழ்ந்து கொண்டு போரிடுங்கள்!'' என்று கூறிவிட்டு, போர்க்களத்துக்குத் திரும்பினான்.

அப்போது பிருகந்நளையாகிய அர்ச்சுனன், பீஷ்மர் துரோணாசாரியார் முதலியவர்களைத் தனது அம்புகளால் அப்பால் போகச் செய்தான். துரியோதன சேனையால் கவர்ந்து கொள்ளப்பட்ட பசுக்களையும் விடுவித்துக் கொண்டு வந்தான்!

விஜயனுடைய செயலால் துரியோதனனுடைய இடையர்கள் மனம் நடுங்கினார்கள். உத்தரகுமாரனுடன் வந்த இடையர்களோ மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அவர்கள் தங்களுடைய பசுக்களை ஓட்ட, அவைகள் வழக்கமாக மேயும் விராடநகரத்தின் பக்கத்தில் உள்ள காட்டுக்கு ஓடின.

பாண்டவர்களுக்கு உண்டான அஞ்ஞாத வாச வருஷத்தின் கடைசி நான்கு நாழிகைப் பொழுதும் கழிந்தது!

ஊர்வசி அர்ச்சுனனுக்கு இட்ட சாபம் நீங்கியது!

அந்தக் கணத்தில் பிருகந்நளை என்னும் பேடி வடிவம் நீங்கி, அர்ச்சுனன் தன் சுயரூபம் அடைந்தான். அதே சமயத்தில் அவன் அநுமனைத் தியானிக்க, முன்பு அக்கினிதேவன் அவனுக்கு அளித்த தேர் அநுமக் கொடியோடு எதிரே வந்து நின்றது.

அழகிய ரதம் தன் எதிரே வந்து நின்றதை அர்ச்சுனன் கண்டான்!

விஜயன் மறுகணம் அத்தேரில் ஏறிக் கொண்டான். உத்தரகுமாரன் தேரில் ஏறி அதனைச் செலுத்தினான். தேரில் நின்ற அர்ச்சுனன் தனது மலைபோன்ற வில்லை நன்றாக வளைத்து நாணேற்றினான்.

அர்ச்சுனரதம் துரியோதனனுடைய சேனையிலிருந்த அரசர்களின் முன் போய் நின்றது. அநுமன் ரதக்கொடியில் ஆனந்தக் கூத்தாடினான்!

தேவேந்திர குமாரனாகிய அர்ச்சுனன் வில்லில் நாணொலி எழுப்பினான். அவ்வொலி கேட்டதும்

பகைவர்கள், இடியொலி கேட்ட நாகங்கள் போல் மனம் ஒடுங்கினார்கள்!

அர்ச்சுனன் ஊதித் தொனி செய்த தேவதத்தம் என்னும் சங்கின் ஓசையும், அவன் செய்த சிங்கநாதமும், அவன் தெறித்த நாணொலியும் கேட்டு, பகைவர்கள் போல உத்தரகுமாரன் மனம் கலங்கினான். அதனால் ரதசாரத்தியத்தையும் மறந்து, அவன் நினைவிழந்து தேரில் விழுந்தான்!

உத்தரகுமாரன் மயங்கி விழுந்ததை அர்ச்சுனன் பார்த்தான். அவனை அன்போடு தூக்கி நிறுத்தி மீண்டும் பக்குவமாக மயக்கம் தெளியச் செய்தான். உத்தரகுமாரன் அதனால் பழைய தெளிவையடைந்து, மீண்டும் ரதத்தை ஓட்டத் தொடங்கினான். அர்ச்சுனன் அச்சமயம் உத்தரகுமாரனிடம், "ராஜகுமாரனே! தேரை துரியோதனன் முன் செலுத்து" என்று கட்டளையிட்டான்.

அர்ச்சுனனின் கட்டளைப்படியே சூரிய சாரதியாகிய அருணன் போல, உத்தரகுமாரன் துணிவோடு சாரத்தியம் செய்தான். அதனால் அர்ச்சுனனுடைய தேரில் பூட்டப்பட்டுள்ள நான்குக் குதிரைகளும், சூரியனுடைய தேர்க்குதிரைகள் போலப் பறந்தோடின.

உத்தரகுமாரன் செலுத்திய தேர் துரியோதனனுடைய தேரை நெருங்கி நின்றது. அவ்வாறு நின்றது, அர்ச்சுனன் தேர்க் கொடியிலுள்ள அநுமன், துரியோதனனுடைய தேர்க் கொடியில் எழுதப்பட்டுள்ள பாம்பைப் பார்த்து, 'என் தந்தையாகிய வாயுபகவான் முன்பே மகாமேருமலையின் மூன்று சிகரங்களையும் முறித்துத் தள்ளி, உனது தந்தையான ஆதிசேஷனை ஜெயித்தான். அப்படியே நானும் உன்னைத் துன்பப்படும்படி ஜெயிப்பேன்!' என்று கறுவி கொண்டு வீரவாதம் கூறிப் போருக்கு நெருங்குவது போல் தோன்றியது!

தேவேந்திரமைந்தன் உடனே பகைவர்கள் மேல் கொடிய அம்புகளைத் தொடுத்தான். அந்த அம்புகளால் அவனை எதிர்த்த சேனாவீரர்கள் இறந்து போனார்கள். பின்பு, அவன் துரியோதனனுடைய தேர்ச்சாரதியையும் குதிரைகளையும் தன் பாணங்களால் அழித்தான். தன்

வெற்றியை. துரியோதனன் உணரும்படிச் செய்ய, அவனைப் பார்த்து அர்ச்சுனன் பரிகசித்துச் சிரித்தான்.

அதனால் மிகவும் பயந்து போன துரியோதனன் வேறொரு தேரில் ஏறித் தப்பி ஓடத் தொடங்கினான். அக்கணமே அர்ச்சுனன் தனது தேரால் அவனது தேரைத் தடுத்து நிறுத்தினான். தன் தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தான். அர்ச்சுனன் துரியோதனனை நோக்கி, ''துரியோதனா! உன் கையிலே உள்ள வில் இன்னும் ஒடிக்கப்படாமல் இருக்கின்றது. அப்படியிருக்க நீ தப்பி ஓடுகின்றாய். இப்படிச் செய்த நீ, உன் நகருக்குச் சென்று யானைமேல் வீதிகளில் பவனி போகும் போது, கோலம் காண வருகின்ற பெண்கள் உன் பேடித்தனத்தைப் பற்றி மிகவும் நிந்திப்பார்களே! சாமரங்கள் வீசவும், வெண்கொற்றக்குடை நிழல் தரவும், இந்தப் பூமி முழுவதும் உன் வசமாகப் பகைவர்கள் கைகூப்பி வணங்கும்படி ராஜசபையிலே கோலாகலமாக வீற்றிருக்கும் நீ, புறமுதுகிட்டு ஓடுதல் தகுமோ? உன்னுடைய பெரிய தம்பிமார்களையும், உன்னையும் ஒரு க்ஷணநேரத்துக்குள் எனது பெரிய அம்புகளுக்கு உணவாகச் செய்து விடுவேன். அப்படி நான் செய்தால், சிங்கக் கொடியுடைய என் தமையன் பீமனின் பெருஞ் சபதம் தவறிப் போகுமே! ஆகவே, உன்னை நான் கொல்லாமல் இருக்கின்றேன். சூரியன் இல்லாத இரவில் சந்திரன் ஒளிவீசி விளங்குவது போல, எங்களைக் காட்டுக்குப் போகும்படி அனுப்பிவிட்டு நீங்கள் பெரிய ஆஜ்ஞாசக்கரத்தை உலகம் முழுவதும் செலுத்தி வாழ்ந்து வந்தீர்கள். இப்படிப்பட்ட துரோகிகளாகிய உங்களை வெகு சீக்கிரத்தில் பீமராஜன் தனது சத்துருகாதினி என்னும் கதாயுதத்தால் போர்க்களத்தில் கொன்று பலியிடுவான்! கொடியவனே! யாசகர்களும், பாலகர்களும், புலவர்களும், தூதர்களும், முதியவர்களும், பிராமணர்களும், பெண்களும், கோழைகளும், ஐங்குரவர்களும் ஆகியவர்களைக் கொல்லுதல் பாவம்! இதனை முதலில் நீ அறிந்து கொள். அதனாலும் நான் தோற்றோடிய உன்னைக் கொல்லாமல் விடுகின்றேன்!'' என்றான்.

அப்போது வேதக் கொடியுடைய துரோணாசாரியாரும், பீஷ்மரும், கர்ணனும் ஒன்றாகக் கூடி வந்து அர்ச்சுனனை

வளைத்துக் கொண்டார்கள். அவர்களில் கர்ணன் மிகவும் கோபம் கொண்டு அர்ச்சுனனைப் பார்த்து, "விஜயா! நீ துரியோதராஜனை எதிர்த்துப் பேசுவது செய்யக் கூடிய காரியம் இல்லை. இனி என்னோடு போர் செய்!" என்று வீரவாதம் பேசி, அவனைத் தன்னுடன் போருக்கு அழைத்தான்.

கர்ணனின் விருப்பத்துக்கு இசைந்தான் அர்ச்சுனன். உடனே அவன் யானைமேல் பாய்வதைவிட்டுப் புலிமேல் பாயும் யாளி போல, துரியோதனனை விட்டு கர்ணன் முன் தனது தேரைச் செலுத்தி நிறுத்தினான்.

இரண்டு தேர்களும் ஒன்றையொன்று நெருங்கி நின்றபோது, அவற்றில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் கனைத்து ஆரவாரித்தன. இரண்டு தேர்ச்சாரதிகளும் பெருங் கோபம் கொண்டு ஆரவாரித்தார்கள். கர்ணனும் அர்ச்சுனனும் அதேசமயம் வேகமாகத் தங்கள் விற்களை வளைத்தார்கள்!

அவர்கள் இரண்டு பேரும் எதிரெதிரே நின்று சமமாகப் பாணப் பிரயோகம் செய்து போரிட்டார்கள். தங்கள் அம்புகளினால் அவர்கள் அஞ்சத்தக்க இருள் உண்டாகும் படி ஆகாயத்தை மறைத்தார்கள். அப்படி வெகுநேரம் உக்கிரமாக யுத்தம் செய்தும், அவர்கள் ஒருவராயினும் தங்கள் வலிமையிலிருந்து சிறிதும் குறையுவில்லை.

அச்சமயத்தில் அர்ச்சுனன் ஒரு கணத்துக்குள் மூன்று அம்புகளை ஒன்றாகப் பிரயோகித்தான். அந்த அம்புகள் நொடிக்குள் சென்று அங்கபூபதியான கர்ணனுடைய குதிரைகளையும், சாரதியையும், தேரையும் அழித்தன. அதனால் கர்ணன் தோற்று, யுத்தம் புரிவதைக் கைவிட்டு அப்பால் சென்றான்!

ஆனால், தோற்றோடிய கர்ணன் மீண்டும் வேறொரு தேரில் ஏறிக் கொண்டு வந்தான். முன் போலவே அர்ச்சுனனோடு போரிட்டான். அர்ச்சுனன் அப்போதும் சளைக்கவில்லை. திரும்பவும் அவனைத் தோற்கடித்துத் துரத்தினான். அப்படி பலமுறை கர்ணன் அர்ச்சுனனிடம் தோற்றுப் பின் வாங்கி ஓடினான்.

மூன்று தரம் அர்ச்சுனனிடம் தோற்றுத் திரும்பிய கர்ணனைக் கண்டு, துரோணகுமாரனாகிய அசுவத்தாமன்,

“வாசப் பூமாலையுடன் ரத்தினாரம் தரித்த மார்பனே!‘நமக்கு எதிராகப் போரிட வந்து நிற்பது ஒரு தேர்தான். அத்தேரில் நம்மோடு போரிடுவதற்காக வந்திருப்பவனும் ஒருவன்தான். இப்படியிருக்க நீங்கள் எல்லோரும் அச்சம் அடைகின்றீர்களே!’ என்று எங்களையெல்லாம் நீ அவமதித்துப் பேசினாய். ஆனால், நீயோ இப்போது அந்த ஒருவனோடு செய்யும் போரில் தோற்றுப் புறமுதுகிடுகின்றாய். இப்படி நீ தோற்று ஓடிப் போவது உனக்குத் தகுமோ? இருந்த இடத்தில் இருந்து கொண்டு செய்ய முடியாத காரியத்தையும் செய்து முடிப்பேன் என்று எளிதாகச் சொல்வது எல்லோருக்கும் சுலபம்தான். ஆனால், தான் சொல்லிய அச்சொல்லின்படியே பகைவரைப் போரில் ஜெயித்துவிடலாம் என்பது, தெய்வத்துக்கும் நிச்சயமாகக் கைகூடுகின்ற ஒரு காரியம் இல்லை. மேலும், வலிய சிங்கத்தைப் பல யானைகள் ஒன்றாகக் கூடி சூழ்ந்து கொண்டாலும், அவற்றால் அதனைக் கொல்ல முடியுமோ?” என்று உடம்பில் தைத்து ரணகளப்படுத்தும் அம்புகளைக் காட்டிலும் கொடிய வார்த்தைகளைச் சொன்னான்.

அசுவத்தாமன் அப்படிச் சொல்லிமுடித்தபோது, அர்ச்சுனன் துரோணாசாரியாரையும் பீஷ்மரையும் வணங்குவதற்காக சில அம்புகளைத் தொடுத்து விட்டான்!

தமது பாதங்களை வணங்குவதற்காக, அவற்றின் மேல் அர்ச்சுனன் தொடுத்த இரண்டு அம்புகளையும் பார்த்து துரோணாசாரியார் மகிழ்ந்தார். அதேசமயம் அந்த மகிழ்ச்சியோடு அர்ச்சுனனை எதிர்த்துப் போர் புரிய துரோணாசாரியார், அவன்முன் தமது தேரை ஓட்டிச் சென்று நிறுத்தினார்.

விஜயன் தனது வில்லாசிரியனாகிய துரோணாசாரியாரை நோக்கினான். மனத்தில் கொண்ட பெரும் பக்தியுடன் குருவின் பாதங்களை வணங்கி, “பிராமணச்சிரேஷ்டரே! நாங்கள் தங்களுடைய அநுகிரகத்தால் சிரமமின்றிக் காட்டில் வாசம் செய்ய வேண்டிய காலங்களைக் கழித்துவிட்டு, மீண்டும் திரும்பி வந்திருக்கின்றோம்!” என்றான் அர்ச்சுனன்.

மேலும் அவன் துரோணரைப் பார்த்து, “சுவாமி! யாதொரு கல்வியும் அறிந்திராத என்னை வில் வீரனாக்கினீர்கள். நானே எவருக்கும் ஈடுஇணையில்லாத

பெரும் வில்லாளி என்ற நிலையையும் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். என்னை எல்லோரும் சிறந்த வில்வீரன் என்று கொண்டாடும்படிச் செய்தீர்கள். இப்படியெல்லாம் சிறிதும் தீங்கில்லாமல் எனக்கு யுத்தப் பயிற்சியும் ஆயுதப்பயிற்சியும் உபதேசித்தருளிய தாங்கள் எனக்குச் சத்தியமான தெய்வம்! ஆகையால், தங்களின் உபய பாதங்களுக்கு நான் பிழை செய்வது, பஞ்சமாபாதகங்களில் ஒன்றில்லையா? நான் பேரிடி போல் கோபித்து துரியோதனனோடு மட்டுமே போர் செய்வேன். அதைவிட்டு தங்களுடனோ, இல்லை கிருபாசாரியாருடனோ, அசுவத்தாமனுடனோ, பீஷ்மருடனோ கொடிய யுத்தத்தைச் செய்ய மாட்டேன். அத்துடன் தங்களோடு நான் போர் செய்வது தகுதியும் ஆகாது. அப்படிச் செய்தால், அது நிச்சயமாய்ப் பாவமே!'' என்று பக்தியுடன் சொன்னான்.

துரோணாசாரியார் அது கேட்டு மகிழ்ந்தார். ஆனாலும் அவர் அர்ச்சுனனிடம், ''பகைவர்களுடைய போரைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாத மகாவீரனே! துரியோதனனுடைய செஞ்சோற்றுக் கடனை நாங்கள் கழித்தே தீர வேண்டும். ஆகையால், இந்திரன் முதலிய தேவர்களுக்குப் பகைவர்களான நிவாதகவசர்களும் காலகேயர்களுமாகிய அசுரர்களை ஜெயித்த உனது உக்கிரமான யுத்த சாமர்த்தியத்தை, நாங்கள் பார்க்கும்படி நீ உனது வில்லை வளைத்து எங்களோடு போர் செய்!'' என்று கட்டளையிட்டார்.

அர்ச்சுனனால் வில்லாசிரியரின் கட்டளையை மறுக்க முடியவில்லை. அதனால் அவன் துரோணாசாரியாருடன் போரிடத் தொடங்கினான். துரோணாசாரியாரும் அவனுக்கு எதிராக வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்தார். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் குறி வைத்து ஒவ்வொரு கோடி அம்புகளைப் பிரயோகித்தார்கள்.

துரோணாசாரியாரும் அர்ச்சுனனும் தொடுத்த அம்புகள் ஒன்றையொன்று தாக்கி அழித்தன. அதைத் தவிர ஒருவருடைய அம்பு ஒருவருடைய உடம்பைத் தைக்கவே இல்லை! அப்படி அவர்கள் இருவரும் சற்றுநேரம் சமமாகப் போரிட்டார்கள்.

ஆனால், தான் கற்ற வில்லாசிரியனை விட அர்ச்சுனன் பத்து மடங்குச் சிறப்பாக வில்வித்தையில் தேறியிருந்தான்.

அதனால் துரோணாசாரியார் அவனிடம் வில்வித்தைக் கற்க எண்ணினார். எனவே அவர் பலவிதமாக அர்ச்சுனன் மேல் அம்புகளை வர்ஷித்தார். அர்ச்சுனன் அவையனைத்தையும் பல்வேறு உபாயங்களால் பாணங்களைப் பிரயோகித்து அழித்தான்.

கடைசியாக அர்ச்சுனன் கொடிய ஆறு அம்புகளைப் பிரயோகித்தான். அந்த அம்புகள் குறி தவறாமல் சென்று துரோணாசாரியாருடைய தேரையும், வேதக் கொடியையும், குதிரைகளையும், சாரதியையும், வில்லையும் அழித்தன. அதனால் அவர் தோற்றார். தாம் கொண்ட தோல்வியால் வெட்கம் அடைந்து புறமுதுகிட்டார்!

அசுவத்தாமன் தனது தந்தை போரில் தோற்று நடுக்கம் அடைந்ததைப் பார்த்தான். அவன் மனம் வெதும்பியது. தன் தந்தையைத் தோற்கடித்த அர்ச்சுனன் மேல் அவன் பெரும் கோபம் கொண்டான். அந்தக் கோபத்துடன் அசுவத்தாமன் அர்ச்சுனனை எதிர்த்துப் போர் தொடங்கினான். அவனுடைய உக்கிரமான பாணப் பிரயோகத்தால், அர்ச்சுனனுடைய வில்லின் நாண் அறுபட்டது!

உடனே க்ஷத்திரியனாகிய அர்ச்சுனன் பிராமண குமாரனாகிய அசுவத்தாமன் மேல் பாசுபதாஸ்திரத்தைத் தொடுக்க முனைந்தான். அதுகண்டு அசுவத்தாமன் பெரிதும் அச்சம் அடைந்தான். இனி தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் புரிந்து கொண்டான். ஆகையால், அவன் புறமுதுகிட்டு ஓடினான்.

அவர்கள் எல்லாம் அப்படியென்றால், அர்ச்சுனன் பார்த்த மாத்திரமே கிருபாசாரியார் நிலைகெட்டு அங்கிருந்து ஓடினார். அப்போது பல அரசர்கள் அர்ச்சுனனை எதிர்த்துப் போரைத் தொடங்கினார்கள். இந்திரகுமாரன் அவர்கள் மேல் பாணங்களைத் தொடுத்து விட்டான். அந்தக் கணத்தில் அவனுடைய அம்புகளால் அவர்கள் இறந்தார்கள்!

சூரியன் வானத்தின் உச்சியை அடைந்தான்!

அந்த நேரத்தில் பீஷ்மரும், விதுரனும், துரியோதனனும், சிந்து தேசத்து அரசன் ஜயத்திரதனும், மற்றும் பல அரசர்களும் நான்குப் பக்கத்திலும் வந்து அர்ச்சுனனை வளைத்துக் கொண்டு போரிட்டார்கள். அர்ச்சுனன்

அப்போதும் சோர்வு அடையவில்லை. தான் ஒருவனே அத்தனைப் பேர்களும் தொடுத்த கணைகளைத் தனது கணைகளால் அவன் தடுத்து அழித்தான். அதேசமயத்தில் ஒன்றாக நான்கு திசைகளிலும் அவன் பாணங்களைப் பிரயோகித்தான். மேற்குப் பக்கத்தில் இந்திரனுடைய இந்திராஸ்திரத்தையும், கிழக்குப் பக்கத்தில் வருணனுடைய வருணாஸ்திரத்தையும், வடக்குப் பக்கத்தில் யமனுடைய யமாஸ்திரத்தையும், தெற்குப் பக்கத்தில் குபேரனுடைய குபேராஸ்திரத்தையும் வர்ஷித்தான். அதனால் அவனை எதிர்த்தவர்களின் ஆயுதங்களெல்லாம் அழிந்தன. அவர்களின் உடம்பும் படுகாயப்பட்டன.

மேலும், அர்ச்சுனன் மோகனாஸ்திரத்தை அவர்கள் மேல் ஏவினான். அதனால் கௌரவசேனா வீரர்கள் மயங்கித் தாறுமாறாகத் தரையிலே விழுந்தார்கள். அத்துடன் அர்ச்சுனன் விடவில்லை. விராடராஜகுமாரியாகிய உத்தரை வைத்துக் கொண்டு விளையாடுகின்ற பொம்மைகளுக்கு அலங்காரமாக அணிவிப்பதற்காக, அவன் மயங்கி விழுந்த வீரர்களின் தேர்க்கொடிகளையும், ஆடைகளையும் பறித்துக் கொண்டான்.

நெடுநேரம் கழிந்த பின்பு, கௌரவ சேனா வீரர்கள் மயக்கம் தெளிந்து எழுந்தார்கள். தங்களை வென்ற மாவீரனான அர்ச்சுனனைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவனோடு மேலும் போர் செய்ய வலிமையில்லாததால் தங்களுடைய தேர்களில் ஏறிக் கொண்டார்கள். அர்ச்சுனனை வாழ்த்திக் கொண்டே அவர்கள், தேர்களைத் திருப்பி ஓட்டிக்கொண்டு தங்கள் ஊர்களுக்குச் சென்றார்கள்.

அப்போது கொங்கு தேசத்து அரசனான வரபதியாட்கொண்டான் வடதிசை மன்னர்களைக் கிரீடபங்கம் செய்தது போல, அர்ச்சுனன் தன்னை எதிர்த்துப் போரிட்ட துரியோதனனுடைய கிரீடத்தை அம்பால் கீழே தள்ளி அவனை அவமானப் படுத்தினான்!

தன்னை அர்ச்சுனன் கிரீடபங்கம் செய்ததால் துரியோதனன் மிகவும் ஆத்திரம் அடைந்தான். அவன் உடம்பு சினத்தால் கொதித்தது. அவன் பீஷ்மரை நோக்கி, ''பிதாமகரே! பாண்டவர்கள் கழிக்க வேண்டிய அஞ்ஞாதவாசம் இன்னும் இருக்கிறது. அதற்குள் அவர்கள்

வெளிப்பட்டுத் தோன்றிவிட்டார்கள். ஆகையால் முன்பு கூறிய நிபந்தனையின்படி, மீண்டும் அவர்கள் வனவாசம் செய்ய வேண்டும். தாங்கள் இந்தக் கட்டளையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும்!" என்றான்.

பீஷ்மர் அதுகேட்டு, "துரியோதனா! நான் சொல்வதைக் கேள். பாண்டவர்கள் சின்ன வயதிலிருந்தே துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டிய ஒரு வருஷ காலமும் சந்திர சஞ்சாரத்தால் நேற்றோடு கழிந்துவிட்டது!" என்று துரியோதனனுக்குத் தெரிவித்தார்.

துரியோதனன் பீஷ்மரின் வார்த்தைகளால் ஒளியிழந்த சந்திரன் போல் மனம் தளர்ந்தான். 'சரி, போகப் போகப் பார்த்துக் கொள்வோம்' என்று எண்ணினான். அதனால் அவன் தனது பெருஞ்சேனையுடன் எல்லோரும் தூங்குகின்ற நடுராத்திரியில் அஸ்தினாபுரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்!

பாம்புக் கொடியுடைய துரியோதனன் தோற்றுத் திரும்பிச் சென்றதால் போர் முடிந்தது!

அர்ச்சுனன் தேரை ஓட்டிக் கொண்டு காளி கோயிலுக்குச் சென்றான். தனது ஆயுதங்களை முன் போலவே அங்குள்ள வன்னிமரப் பொந்தில் மறைத்து வைத்தான். பின்பு, அவன் இனிமேல் ஆகவேண்டிய காரியங்களை நினைத்து, தன் சுயரூபத்தை மறைத்து மீண்டும் பேடியானான். அதேசமயம் அக்கினி தேவன் அர்ச்சுனனுக்குக் கொடுத்த ரதமும் மறைந்தது.

அதன்பின் அர்ச்சுனன் உத்தரகுமாரனுடைய தேரில் பிருகந்நளையாக ஏறிக் கொண்டான். உத்தரகுமாரனுக்குத் தானே சாரத்தியம் செய்து கொண்டு சென்றான். அவர்கள் இருவரும் விராடநகரத்தின் மதிலுக்கு வெளிப்பக்கத்தில் இருந்த சோலையில் சென்று தங்கினார்கள்.

உத்தரகுமாரனுடைய விருப்பத்துக்கு இணங்கி அங்கே அர்ச்சுனன் அவனுக்குத் தங்களுடைய வரலாற்றைச் சொல்லத் தொடங்கினான். "உத்தரகுமாரா! பாண்டவர்களாகிய நாங்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்தோம். பின்பு, ஒரு

வருஷ அஞ்ஞாதவாசத்துக்காக உருமாறி இந்தப் பட்டணத்தில் தங்கி வசித்து வருகிறோம்!'' என்றான்.

பிறகு அர்ச்சுனன் தூதுவர்களை நோக்கி, ''தூதர்களே! 'பிருகந்நளை சாரத்தியம் செய்யப் போருக்குச் சென்ற உத்தரகுமாரன், போரில் ஜெயித்து, பகைவர்கள் கவர்ந்து சென்ற பசுக்களைத் திருப்பிக் கொண்டு வந்தான்' என்னும் செய்தியை நீங்கள் முன்னே ஓடிச் சென்று சொல்லுங்கள்!'' என்று கட்டளையிட்டு, அவர்களை விராடராஜனிடம் விரைந்து செல்லும்படி அனுப்பினான்.

இது இப்படியிருக்க, விராடராஜன் முன்தினமே திரிகர்த்தனைத் தோற்கடித்து அனுப்பிவிட்டு, பசுக்களை விடுவித்துக் கொண்டு தனது அரண்மனைக்கு வந்து சேர்ந்திருந்தான்.

பிருகந்நளை சாரத்தியம் செய்ய தன் மகனாகிய உத்தரகுமாரன் நகரத்தின் வடக்குப்பக்கம் போருக்குச் சென்ற செய்தியை அவனுக்குச் சுதேஷ்ணை சொன்னாள். அது கேட்டதும் உயிர் நீங்கியது போல் விராடராஜன் மனம் கரைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

விராடராஜனுடைய நிலையைக் கண்ட கங்க முனிவனாகிய தருமர் மிகவும் வருந்தினார். அவனுக்குச் சைத்தியோபசாரம் செய்து மயக்கத்தைப் போக்கினார். அவனைப் பார்த்து தருமர், ''மன்னா! பிருகந்நளை சாரத்தியம் செய்ய உன் மைந்தன் போருக்குச் சென்றிருக்கிறான். அதனால் நீ அஞ்ச வேண்டாம். உத்தரகுமாரன் வெகுசீக்கிரத்தில் பகைவரை ஜெயித்து பசுக்களை மீட்டுக் கொண்டு வருவான்!'' என்று தேறுதல் சொன்னார்.

அப்போது அர்ச்சுனன் அனுப்பிய தூதுவர்கள் வந்து விராடராஜனை வணங்கி, ''ராஜராஜ! பசுக்களைக் கவர்ந்துப் போரிட்ட துரியோதனன் தோற்றோடி விட்டான். தமது ஒரு ரதத்தோடு போர் செய்து இளவரசர் பகைவரை ஜெயித்தார். பகைவர்கள் கவர்ந்து கொண்ட பசுக்களையும் மீட்டுக் கொண்டு, இப்போது திரும்பி வந்து கொண்டிருக்கிறார்!'' என்று சொன்னார்கள்.

இனிய அமுதம் போன்ற அந்தச் செய்தியைக் கேட்டு, விராடராஜன் தன் கவலையையும் துன்பத்தையும் மறந்தான்.

அவன் நெஞ்சம் மகிழ்ச்சியால் விம்மியது. அவன் ஆனந்தத்தோடு சேனாதிபதிகளை நோக்கி, ''படைத் தலைவர்களே! நீங்கள் எல்லோரும் இக்கணமே போய், உத்தரகுமாரனை எதிர்கொண்டு அழைத்து வாருங்கள்!'' என்று கட்டளைப் பிறப்பித்தான்.

மாற்றானுக்குப் பிறந்த குழந்தையைத் தனது குழந்தை என்று நினைத்து, அதனைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சி உருகும் ஆடவனைப் போல, கொடிய போரில் அர்ச்சுனன் பெற்ற வெற்றியைத் தன் மகன் பெற்றதாக எண்ணி விராடராஜன் பேரானந்தம் அடைந்தான். அதனால் உடம்பு புத்துணர்ச்சி பெறப் பருத்து நின்றான்!

உத்தரகுமாரன் வெற்றிப் பெற்று வரும் செய்தி நகரம் முழுவதும் பரவியது. அதனால் மகிழ்ச்சியடைந்த மக்கள் பட்டணத்தைப் பலவகையாலும் அலங்கரித்தார்கள். அவர்கள் வீதிகளில் நீர்த் தெளித்துக் கோலமிட்டார்கள். பூரணப் பொற்கும்பங்களை வாசல் திண்ணைகளில் வைத்தார்கள். வாழை மரங்களாலும் பாக்குமரங்களாலும் பந்தல்கால் நட்டார்கள். ரத்தின விளக்குகளை எங்கும் ஏற்றி வைத்தார்கள். நகர் எங்கும் துவசங்களைப் பறக்க விட்டார்கள். பலவகைத் தோரணங்களைக் கட்டினார்கள்!

ஆனந்தத்தால் தவித்த விராடராஜன் அப்போது தருமரைப் பார்த்து, ''மகரிஷியே! என் மகன் திரும்பி வரும் வரையில் நாம் இரண்டு பேரும் சந்தோஷம் தரும் சூதாட்டத்தை ஆடுவோம். வாருங்கள்!'' என்று சொல்லி, மிகவும் ஆசையோடு அழைத்தான்.

மன்னனின் விருப்பத்தை மறுக்க முடியாமல் தருமர் அதற்கு ஒப்புக் கொண்டார்.

இருவரும் சூதாடினார்கள். அந்தச் சூதாட்டத்தில் பல ஆட்டங்கள் தொடர்ச்சியாக தருமரே வெற்றி பெற்றார். அதனால் ஓர் ஆட்டம் தொடங்கியபோது விராடராஜன் தருமரிடம், ''மகாமுனிவரே! ஜயசாலியாகிய உத்தரகுமாரனுக்கு எதிரில் பகைவர்களான துரியோதனாதியர்கள் தோற்றது போல, இனி ஆடும் இந்த ஆட்டத்தில் என்னிடம் தாங்கள் தோற்பீர்கள்!'' என்றான.

தருமர் அதுகேட்டு விராடராஜனைப் பார்த்து, ''ராஜசிங்கமே! கணக்கற்ற சேனையோடு போருக்கு வந்து துரியோதனனை ஜெயித்துத் தோற்றோடச் செய்தவன் உன் மகன் உத்தரகுமாரன் இல்லை. அவனுக்குச் சாரத்தியம் செய்த பேடியே அந்த வீரத்தைச் செய்தவள்! அவளைத் தவிர உன் இளையகுமாரன் அச்சத்தால் உடம்பு நடுங்காமல் போரில் எதிர்த்து நின்று, துரியோதனாதியர்களை ஜெயிக்க வலிமை உடையவனோ? பிருகந்நளை என்னும் பேடியை, நீ சாதாரண பேடி என்று இழிவாக எண்ணாதே! அந்தப் பேடி யார் தெரியுமா? அவள்தான் முன்பு காண்டவவனத்தை அக்கினிதேவனுக்கு உணவாகக் கொடுத்த வில்வீரன் அர்ச்சுனன்! அவனே முன்பும் இந்திரனுடைய பகைவர்களாகிய அசுரர்களை, தான் ஒருவனாகவே சென்று அருமையாக ஜெயித்தவன்!'' என்றார்.

விராடராஜன் உடனே கங்கப்பட்டனை நோக்கி, ''பிரமமூர்த்தியே! என் மகனே தனித்துப் போரிட்டு பல கோடிக்கணக்கான குருகுலத்தவரின் கொடிய சேனையை அழித்துவிட்டு, அவர்கள் கவர்ந்து சென்ற பசுக்களையும் மீட்டுக் கொண்டு வருகின்றான் என்று நான் சொன்னேன். தாங்களோ இதனை மறுத்துப் பேடியே அதனைச் செய்தவள் என்று கூறி, அவளைப் பெருமை பாராட்டிப் புகழ்ந்து பேசுகின்றீர்கள். அரசர்கள் எது சொன்னாலும் அதுவே சரி என்று சொல்வதுதான் அவர்களை நம்பி வாழ்பவர்களுக்கு அழகு. எல்லாம் தெரிந்த தங்களுக்கு இந்தச் சாதாரண உண்மை புரியவில்லை. நான் கூறியதை மறுத்துப் பேசலாமோ?'' என்று சினத்தோடு சொன்னான்.

தருமர் அதற்குச் சாந்தமாக, ''வேந்தனே! கர்ணனையும், துரோணாசாரியாரையும், அசுவத்தாமனையும், பீஷ்மரையும் உனது மகன் ஜெயிப்பானோ? உனது மகன் வந்து கூறினால், பிறகு நீ அவர்களையெல்லாம் வென்றவள் நான் கூறிய பேடியே என்னும் உண்மையைத் தெளிவாக அறிவாய்!'' என்றார்.

கங்கப்பட்டனின் வார்த்தைகளால் விராடராஜன் மிகவும் அதிகமாகக் கோபம் கொண்டான். அவரை நோக்கி விராடராஜன், ''இன்றையப் போரில் என் மகன் தனது வலிமையால் பகைவரை ஜெயித்திருக்கின்றான். அப்படியிருக்க, நீர் பக்ஷபாதகமாக பேடியே பகைவரை

ஜெயித்தவள் என்று பல முறை கூறி என் மகனை இகழ்ந்து பேசுகிறீர். இது ஏன்?'' என்று பாம்பு போல் சீறினான். அதே ஆத்திரத்துடன் சூதாட்டக்காயை தருமர் மேல் வீசி எறிந்துச் சிரித்தான்.

விராடராஜன் வீசிய சூதாட்டக்காய் மையமாக தருமரின் நெற்றியைத் தாக்கிக் காயப்படுத்தியது. அக்காயத்திலிருந்து ரத்தம் வழிந்தது. அப்போது அங்கே வந்த விரதசாரிணியாகிய திரௌபதி அதுகண்டு துடித்துப் போனாள்.

திரௌபதி, 'இந்தக் கங்கப்பட்டரது ரத்தம் கீழே சிந்தினால் விராடராஜனுடைய சுற்றமும், பெருமையும், வாழ்வும், நகரமும் இன்றைக்கே அழிந்து போய்விடும்' என்று எண்ணினாள். அதனால் கொண்ட அச்சத்தாலோ, தனது கணவனாகிய தருமரிடத்தில் வைத்த அன்பாலோ தெரியவில்லை. அவள் கண்கள் நீரைப் பெருக்கின. அவள் கண்ணீரோடு வேகமாக வந்து தருமருடைய நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்தாள்.

அலங்காரப் பெண்ணின் செய்கையையும், தருமருடைய சாந்த சொருபத்தையும் பார்த்து விராடராஜன் தன் தவறை உணர்ந்தான். 'ஆலோசனையில்லாமல் என்ன தவறான காரியம் செய்து விட்டோம்' என்று பல தடவை எண்ணித் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான். அவனுடைய கோபமும் அதனால் அடங்கியது.

மாலைப் பொழுது வந்தது!

சேனைத்தலைவர்கள் மங்கல வாத்தியங்கள் முழங்க தன்னை எதிர் கொண்டு வந்து வரவேற்று அழைக்க, உத்தரகுமாரன் விராடப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தான். தேவேந்திரனுடைய அமராவதிப் பட்டணம் போன்ற தனது நகரத்தின் வீதிகளில் பிருகந்நளை சாரத்தியம் செய்யவும், மக்கள் வாழ்த்தி ஆரவாரிக்கவும், பெண்கள் மங்கலம் பாடி ஆரத்தி எடுக்கவும், பேரிகைகள் முழங்கவும் உத்தரகுமாரன் பவனி வந்தான்.

பவனி வந்து கொண்டிருந்த உத்தரகுமாரனை எதிர்கொண்டு சென்று, சூரபதுமனையழித்துத் திரும்பிய

சுப்பிரமணியக் கடவுளைச் சிவபெருமான் தழுவிக் கொண்டது போல விராடராஜன் தழுவி மகிழ்ந்தான்!

உத்தரகுமாரன் தன்னை அன்புடன் தழுவிக் கொண்ட தந்தையின் பாதங்களில் ஸாஷ்டாங்கமாக வணங்கி எழுந்தான். பிறகு, தந்தையோடும் அரசர் கூட்டத்தோடும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அவன் நேரே தருமரிடம் சென்றான். தருமரின் பாதங்களை நமஸ்கரித்து, அவருடைய முகத்தைப் பார்த்தான்.

அப்படிப் பார்த்த உத்தரகுமாரன், தருமருடைய நெற்றியிலே இருந்த புதிய காயத்தைக் கண்டான். அதனால் அவன் மனம் வருந்தி, "ஐயனே! தங்களுடைய நெற்றியில் புண் ஏற்படுத்தியது யார்?" என்று கேட்டான்.

உடனே பக்கத்திலிருந்த விராடராஜன், மகனுக்கு நடந்த செய்தியைச் சொன்னான்.

அதுகேட்டு உத்தரகுமாரன் தன் தந்தையின் மேல் அளவற்ற வெறுப்பு கொண்டான். பின்பு அவன் தந்தையை நோக்கி, "அப்பா! இந்த மகாமுனிவரைக் காட்டிலும் பெருமையில் சிறந்தவர்கள் இந்தப் பூமியில் வேறு யாருமே இல்லை!" என்றான்.

முன்பே ஓரளவு மனம் தெளிந்திருந்த விராடராஜன், மகனின் வார்த்தைகளால் பூரணமாக அறிவு பெற்றான். விராடராஜன் தருமரைப் பார்த்து, "தவசிரேஷ்டரே! சிறியோர் செய்த தீங்கை வெறுத்துக் கோபிப்பது பெருந்தன்மை இல்லை. அதனைப் பொறுத்துக் கொள்வதே தங்களைப் போன்றவர்களுக்குப் பெருமை!" என்று சொல்லி, அவருடைய பாதங்களை நமஸ்கரித்தான்.

தந்தையைப் போலவே உத்தரகுமாரனும் வேண்டிக் கொண்டு தருமருடைய பாதங்களை வணங்கினான்.

இருவருடைய வேண்டுகோளையும் நிராகரிக்க முடியாமல் தருமர், தம் மனத்திலிருந்த சிறு கோபத்தையும் நீக்கிச் சாந்தமடைந்தார்.

பிறகு, விராடராஜனும் உத்தரகுமாரனும் சுதேஷ்ணையின் அந்தப்புரத்துக்குப் போனார்கள். வெற்றி

விஜயனாகத் திரும்பி வந்த தன் மகனைக் கண்டதும் சுதேஷ்ணை, அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிகமாகச் சந்தோஷம் கொண்டாள்!

உத்தரகுமாரனுடன் அரண்மனைக்கு வந்த பிருகந்நளை, பகைவர்களிடமிருந்து பறித்துக் கொண்டு வந்த ஆடைகளையும் கொடிகளையும் உத்தரைக்குக் கொடுத்து, ''இளவரசி! நீ விளையாடுகின்ற உன் பொம்மைகளுக்கு அலங்கரிக்க இப்பட்டாடைகளை வைத்துக் கொள்!'' என்று சொல்லிக் கொடுத்தாள்.

அதன்பின் பிருகந்நளையும் உத்தரையும் சென்று சுதேஷ்ணையோடு தங்கினார்கள்.

விராடராஜன் உத்தரகுமாரனை அழைத்துக் கொண்டு ஏகாந்த மாளிகைக்குப் போனான். அங்கே தானும் மகனும் பொன்னாசனங்களில் உட்கார்ந்து கொண்டதும், அவனிடம் போரைப் பற்றி விசாரித்தான்.

தந்தைக்கு அதனை விளக்கத் தொடங்கி உத்தரகுமாரன், ''தந்தையே! பிருகந்நளை சாரத்தியம் செய்யப் போருக்குப் போன நான், பெருஞ்சேனையுடன் வந்த துரியோதனனைக் கண்டு அஞ்சி மூர்ச்சித்து விழுந்தேன். என்னைப் பிருகந்நளை தேற்றித் தனக்குப் பதிலாகச் சாரத்தியம் செய்ய வைத்தாள். அவளும் தன் சுயரூபம் கொண்டாள். ஆமாம், ஊர்வசியிட்ட சாபத்தால் பேடியாக இருந்த அர்ச்சுனனே பிருகந்நளை. அர்ச்சுனன் சுயரூபத்துடன் போர்க்களத்தில் காண்டீபத்தை வளைத்தது தான் தாமதம் சூரியனை எதிர்த்த சிங்கம் போலவும், விளக்கை எதிர்த்த விட்டில்பூச்சி போலவும் பகைவர்கள் தாம் கவர்ந்த பசுக்களை விட்டுவிட்டுத் தோற்றோடிப் போனார்கள். தந்தையே! தங்களுடைய உயிர்ச் சிநேகிதராய் இருக்கும் கங்கப்பட்டரே, பாண்டவர்களுள் மூத்தவராகிய தருமராக இருக்க வேண்டும். அலங்காரப் பணிப் பெண்ணாகிய விரதசாரிணியே பாஞ்சால தேசத்து துருபதராஜகுமாரியாகிய திரௌபதியாக இருக்க வேண்டும். அதுபோல் சமையற்காரனாகிய பலாயனன் பீமனாகவும், குதிரைக்காவலன் தாமக்கிரந்தி நகுலனாகவும், பசுக்களின் காவலன் தந்திரிபாலன் சகாதேவனாகவும் இருக்க வேண்டும். ராஜகுமாரர்களாகிய பாண்டவர்கள் தங்களை யாரும் அறிந்து

கொள்ளாதபடி இந்த நகரத்தில் இது வரையில் மறைந்திருந்தார்கள். நாளைக்கே அவர்கள் வெளிப்படுவார்கள். நேற்றே அவர்கள் கழிக்க வேண்டியிருந்த அஞ்ஞாதவாச காலம் கழிந்துவிட்டது. தந்தையே! மற்றும் ஒன்று. முருகக் கடவுளைப் போல் அழகும் வீரமும் உடையவன் அர்ச்சுனன். அவனே என் தங்கை உத்தரைக்கு ஏற்ற கணவன். இதனை யோசித்துச் செய்யுங்கள்!'' என்று கூறி முடித்தான்.

மகன் சொன்னதைக் கேட்டு முதலில் விராடராஜன் மனம் நடுங்கினான். ஆனால் , உடனே அவன் சிந்தித்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான்!

சூரியன் அஸ்தமித்தான்!

இரவு வந்தது!

பாண்டவர்களும் திரௌபதியும் அந்த இரவில் தனியாக இருந்து ஆலோசித்து, தங்கள் நிஜவடிவத்தை அடைந்தார்கள்!

அப்போது ஆதவன் திரும்பவும் தன் பணியைத் தொடங்க உதயகிரியில் எழுந்தான்!

5. பாண்டவர் வெளிப்பட்டார்கள்

தங்களின் பழைய வடிவத்தைப் பெற்ற பாண்டவர்கள் அந்த இரவை இனிமையாகக் கழித்தார்கள். சூரியன் உதித்ததும் தருமர் சூரிய நமஸ்காரம் செய்தார். பிறகு, தமது தம்பிமார்களோடும் திரௌபதியோடும் ஒன்றாகத் தங்கியிருந்தார். தருமருடைய தம்பிமார்கள் அப்போது அவருக்குச் சேவை செய்து மகிழ்ந்தார்கள்.

அச்சமயத்தில் அர்ச்சுனன் தருமருடைய நெற்றிக் காயத்தைக் கண்டு, ''அண்ணா! தங்களுடைய நெற்றியிலே காணப்படும் தழும்பு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டான்.

திரௌபதி அர்ச்சுனனுடைய கேள்விக்குப் பதில் சொன்னாள்.

பீமனும் அர்ச்சுனனும் அது கேட்டு மிகவும் ஆத்திரம் அடைந்தார்கள். உடனே அர்ச்சுனன், ''இப்போதே இந்தப் பட்டணத்தைத் தீயிட்டுக் கொளுத்துவேன். அந்த விராடனின் தலையைத் துண்டிப்பேன்!'' என்று கோபாவேசத்துடன் கூறி, தான் சொல்லியபடியே செய்ய வில்லைக் கையில் ஏந்தினான்.

வாயுகுமாரனுடைய கண்கள் நெருப்புப் பொறி பறக்கச் சிவந்தன!

தம்பிமார்களின் கோபத்தைக் கண்ட தருமர் சாந்தமாக அவர்களை நோக்கி, ''தம்பிமார்களே! சாந்தமடையுங்கள். ஒருவர் ஒருதவி செய்தாலும் அந்த உபகாரத்தை மறந்துவிடக் கூடாது. அப்படி ஓர் உபகாரம் செய்தவர் பல குற்றங்கள் செய்தாலும், அவற்றையெல்லாம் பெரியவர்கள் பொறுத்திடுவார்கள். ஆனால், பல உதவிகள் செய்தவர் ஒரு கெடுதல் செய்தாலும் சிறியவர்கள் பொறுக்க மாட்டார்கள். அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்து விடுவார்கள். தமக்குச் செய்த ஒரே குற்றத்தை நினைத்து, அவரைக் கோபித்து வதைப்பார்கள். அதைவிட்டு அவர் செய்த நன்மையை எண்ணி அமைதியாக இருக்க மாட்டார்கள். நாம் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டிய ஒரு வருஷ காலமும், எந்தவித துன்பமும் இல்லாமல் இந்த விராடராஜனுடைய குடை நிழலில் தங்கியிருந்தோம். அப்படிப் பல நன்மைகளை அவனால் அடைந்த நாம், இன்று அவன் செய்த ஒரு சிறு தவறுக்காக அவனைக் கோபிப்பது தவறு!'' என்றார்.

விராடராஜன் பாண்டவர்கள் சுயவடிவத்தோடு வெளிப்பட்ட செய்தியை அறிந்தான். அவனுக்கு நடந்த உண்மை விளங்கியது. பாண்டவர்கள் வேற்று உருவத்துடன் தன்னிடம் வசிக்கையில், அவர்களை வேலைக்காரர்களாக நடத்தினோமே என்று எண்ணி அவன் மிகவும் மனச்சங்கடப்பட்டான். அதனால் பெரும் கவலை கொண்டான். அந்தக் கவலையுடன், பாண்டவர்களுக்குத் திறையாகக் கொடுப்பதற்காகப் பெருஞ்செல்வத்தோடு மகனையும் அழைத்துக் கொண்டு அவர்களிடம் வந்தான்.

பாண்டவர்களுக்கு விராடராஜன், தான் கொண்டு வந்த செல்வத்தைக் கொடுத்தான். அவர்களுடைய பாதங்களில் விழுந்து கும்பிட்டுத் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

தங்களின் பாதங்களை வணங்கிய விராடராஜனை, தருமர் தூக்கி மார்போடு அணைத்து ஆறுதல் அளித்தார். பிறகு, தம் பக்கத்திலேயே ஓர் ஆசனத்தில் அவனை உட்கார வைத்தார்.

விராடராஜனைப் பார்த்து தருமர், ''விராடனே! உன்னைப் போல் கொண்டாடத் தக்கப் பெரும் புகழை அடைந்தவர்கள், ஆதிசேஷனுடைய சிரசில் சுற்றிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்?'' என்றார்.

முரசக்கொடியுடைய தருமரை நோக்கி அதற்கு விராடராஜன், ''ஐயனே! அதிக பொறுமையுள்ளவர்களைத் தவிர, மற்றவர்களால் புகழை அணிந்து கொள்ள முடியுமோ? அமுதம் போன்ற நல்ல குணம் இல்லாதவர்களிடத்தில் உண்டான குறையைத் தாங்கள் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம்!'' என்றான்.

தருமர் விராடராஜனுடைய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தார். மீண்டும் அவர் விராடராஜனை நோக்கி, ''மன்னா! நாங்கள் இந்த நகரத்துக்கு வந்து சேர்ந்த பின்பு, இந்த ஒரு வருஷ காலமும் எந்தவிதமான துன்பமும் இல்லாமல் எங்களுடைய இந்திரப்பிரஸ்த நகரில் வாழ்வது போல, இங்கே இன்பமாக வசித்திருந்தோம். எங்களுக்கு உன்னைக் காட்டிலும் பெருமையுள்ள உறவினர்கள் நீ அறிய யாராவது உண்டா? உனது புதல்வர்களும் சேனையும் என் தோள் போல் என் பக்கத்திலேயே இனி வரப் போகின்ற யுத்தத்தில் இருக்க வேண்டும். அப்படியிருந்தால், வலிமையோடு வஞ்சனைகள் புரிகின்ற துரியோதனனைச் சேர்ந்த மன்னர்களின் சேனைகள் யாவும் யமலோகத்தைச் சேரும்படிப் போர் செய்வேன். இது நிச்சயம்!'' என்றார்.

மச்சதேசத்து அரசனான விராடராஜன் தருமருடைய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தான். அக்கணமே தருமருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்குக் கொடுத்து, பாண்டவர்களின் மனத்துயரைப் போக்கினான்.

உத்தரகுமாரன், 'இந்தப் பாண்டவர்களுக்கு உதவுவது நமக்கு நன்மையையே தரும்' என்று எண்ணினான். அந்த

எண்ணத்துடன் தருமரிடம் அவன், ''எனது தந்தையைப் போன்றவரே! இந்த மச்சதேசமும் தங்களுடையதே. நாங்களும் உமது வேலைக்காரர்கள். எங்களுடைய ஆறுவகை சேனைகளும் தங்களுடையனவே. என்னோடு பிறந்த ராஜகுமாரி உத்தரை அர்ச்சுனனுக்கு உரியவள்!'' என்றான்.

அர்ச்சுனன் உடனே உத்தரகுமாரனைப் பார்த்து, ''ராஜமைந்தனே! வீரமும், கல்வியும், கலைகளும், வலிமையும், அழகும் பொருந்தியவனே! இல்லறத்துக்கு உரிய, மிகச் சிறந்த, உண்மையான நற்குணங்களுடைய உத்தரை என் மகன் அபிமந்யுவுக்கே மனைவியாவதற்குத் தகுந்தவள்!'' என்றான்.

எல்லோரும் அர்ச்சுனன் கூறியதை ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு, பாண்டவர்கள் தங்களுடைய சுற்றத்தரசர்களுக் கெல்லாம், தாங்கள் வெளிப்பட்ட வரலாற்றை தூதுவர்கள் மூலமாகச் சொல்லி அனுப்பினார்கள்.

பாண்டவர்கள் வெளிப்பட்ட செய்தி அறிந்ததும், ஸ்ரீகிருஷ்ணபகவான் தனது உடன்பிறந்தவர்களோடும், தங்கை சுபத்திரையோடும், அவள் மகன் அபிமந்யுவோடும், சிவேதனோடும் அவர்களிடம் வந்து சேர்ந்தான்.

ஸ்ரீகிருஷ்ணன் வனவாச அஞ்ஞாத வாசங்களைக் கழித்து வெளிப்பட்ட தருமரைக் கண்டு மகிழ்ந்தான். அவரைத் தனது கைகளால் தழுவி அணைத்துக் கொண்டான்.

மற்ற பாண்டவர்கள் கண்ணபிரானைக் கைகூப்பி வணங்கித் தொழுதார்கள்.

பிறகு, ஸ்ரீகிருஷ்ணபகவான் பாண்டவர்களோடு மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசித்தான்.

கடைசியாக கிருஷ்ணபகவான் விராடராஜனைப் பார்த்து, ''விராடனே! இதோ நிற்கும் சிவேதனும் உனது மகனே! இவன் முன்னொரு காலத்தில் தேவலோகத்துக்குப் போயிருந்தான். அப்போது வசுக்கள் இவனை

மயிலாகும்படிச் சபித்து, இவன் பேர் எழுதிய அம்பொன்றை இவன் மேல் எறிந்தார்கள். அந்த அம்பு பட்டவுடனே இவன் மயிலாகிப் போனான். பிறகு, இவன் உன்னிடம் வந்தான். நீ இவனையறிந்து கொள்ளாமல் துரத்திவிட்டாய். இவன் பறந்து சென்று தவம் புரிந்து சிவபெருமான் அருளால் சாபம் நீங்கினான். அப்பெருமானிடம் ஆயுதங்களும் கவசங்களும் பெற்றான். இவனே என் பகையையும் அழித்தான்!'' என்று கூறி, வெகுநாளாகச் சிவேதனுடைய பிரிவால் மனம் வருந்திக் கிடந்த அவனுடைய துன்பத்தைத் தீர்த்தான்.

விராடராஜன் தன் மகனைப் புரிந்து கொண்டு, அவனைக் கண்டு மகிழ்ந்தான்; நெஞ்சம் உருகினான்.

சிவேதன், பிள்ளைப் பாசத்தால் மனம் உருகும் தந்தையின் பாதங்களை வணங்கி அவனோடு வசித்தான்!

அதற்குப் பின் பாஞ்சால தேசத்து அரசர்களும், போசகுலத்து ராஜாக்களும், பாண்டிய மன்னர்களும், மத்திரதேசத்து அரசர்களும், மகததேசத்து வேந்தர்களும், சேரதேசத்து மன்னர்களும், சோழ நாட்டு வேந்தர்களும் ஆகிய எல்லோரும் தங்கள் சேனைகளுடன் மகிழ்ச்சியோடு பாண்டவர்கள் இருந்த விராட நகரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் எல்லோரும் தருமருடைய பாதங்களை வணங்கி, ''பாண்டவர்களே! நீங்கள் வெகுகாலம் வனவாசம் செய்தீர்களே! ஐயோ, இது என்ன கொடுமை!'' என்று கூறி வருந்தினார்கள்.

தருமர் அதற்கு அவர்களை நோக்கி, ''மன்னர்களே! நாங்கள் விராடநகரத்துக்கு வந்து வசிக்கத் தொடங்கிய போதே, வனவாசத்தால் அனுபவித்த துன்பம் நீங்கி விட்டது!'' என்றார்.

மேலும் அவர் அவர்களிடம், ''இனிய சங்கீதம் கேட்டு மகிழும் அசுணபறவை பறையொலி கேட்டால் இறந்து போகும். அப்பறவை போன்றவர் திருதராஷ்டிர மகாராஜா. அவருடைய வார்த்தைகளை நம்பி, அவர் மகன் துரியோதனன் செய்த வஞ்சனையான ஆலோசனைக்கு நான் தோற்றுவிட்டேன். ராஜ நண்பர்களான நீங்கள் எல்லோரும் கண்களை இமைகள் காப்பது போல் எங்களைக் காத்து

வந்தீர்கள்!'' என்றவர், துரியோதனன் தங்களுக்குப் புரிந்த கொடுமைகளையெல்லாம் சொன்னார்.

அப்போது சல்லியன், துரியோதனன் தன்னை ஏமாற்றி அவன் பக்கத்தில் சேர்த்துக் கொண்ட விபரத்தைக் கூறிவிட்டு அஸ்தினாபுரிக்குச் சென்றான். அவன் அன்று முதல் துரியோதனனுக்கு உதவி செய்தான்.

போரிலே வீரர்கள் தம்மை எதிர்ப்பவர்கள் நண்பர்கள் என்றோ, விரோதிகள் என்றோ பார்க்க மாட்டார்கள். யாராயிருந்தாலும் அவர்களோடு யுத்தம் புரிவார்கள். ஆனால், அந்த யுத்தத்திலும் செஞ்சோற்றுக் கடனையே அவர்கள் பெரிதாகக் கருதுவார்கள். சல்லியன் இந்தக் கருத்தை மீண்டும் பூமியில் நிலைக்கச் செய்தான்!



விராடராஜன் தன் மகள் உத்தரையை அபிமந்யுவுக்குச் சந்தோஷத்துடன் விவாகம் செய்து கொடுத்தான்!

பிறகு, பாண்டவர்கள் காளிகோயிலுக்குப் போனார்கள். அவர்கள் காளிக்கு பலி கொடுத்து, தாங்கள் அங்குள்ள வன்னிமரப் பொந்தில் வைத்திருந்த தங்களுடைய ''கண்ணா!

ஆயுதங்களையும் ஆடைகளையும் எடுத்துக் கொண்டு திரும்பினார்கள்.

எல்லாம் முடிந்த பின்பு, பாண்டவர்கள் கிருஷ்ணனோடும் சுற்றத்தரசர்களோடும் விராட நகரத்துக்கு அருகிலுள்ள உபப்லாவ்ய நகரத்துக்குச் சென்று தங்கினார்கள். அங்கே அவர்கள் எல்லோரும், இனி துரியோதனனை எதிர்த்துச் செய்யப் போகும் பெரும் யுத்தத்துக்கான ஆலோசனைகளைச் செய்தார்கள்!

உத்தியோக பருவம்

1. உலூக முனிவர் தூது

உபப்லாவ்ய நகரத்து மாளிகையில் பாண்டவர்கள், சுற்றத்தரசர்களுடனும் ஸ்ரீகிருஷ்ணபகவானுடனும் துரியோதனாதியர்களை எதிர்த்துப் போர் செய்வது பற்றி ஆலோசித்தார்கள் அல்லவா? அப்போது அங்கிருந்த மன்னர்களைப் பார்த்து கண்ணபிரான், ''வேந்தர்களே! சூதாட்டத்தினால் துரியோதனன் பறித்துக் கொண்ட ராஜ்ஜியத்தைத் திரும்பவும் அச்சூதாட்டத்தில் ஜெயித்துப் பெறுவதே முறை. அதைவிட்டுப் போர் புரிந்து ராஜ்ஜியத்தை மீட்டுக் கொள்வோம் என்று நினைப்பது கொஞ்சமும் ராஜதர்மம் இல்லை. இந்த விஷயத்தில் துரியோதனனுடைய எண்ணத்தை, அவனுடைய வார்த்தைகளின் மூலமாக ஒரு தூதுவனைக் கொண்டு தெரிந்து கொள்வோம்!'' என்றான்.

பலராமன் அதுகேட்டு, ''ராஜசபையிலே எல்லோரும் பார்த்திருக்க, துரியோதனன் தருமனோடு சகுனியைக் கொண்டு சூதாடி, பாண்டவர்களுடைய ராஜ்ஜியத்தை ஜெயித்துக் கொண்டான். அதனால் அவனே அந்த ராஜ்ஜியத்தை அநேக வருஷ காலம் அரசாண்டான். அப்படி அவன் வென்று பல நாட்கள் அரசாண்ட ராஜ்ஜியத்தைத், திரும்பவும் அவனிடமிருந்து பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள நினைப்பது மகா கொடுமை!'' என்றான்.

உடனே சாத்தகி பலராமனைப் பார்த்து, ''உன் மேனி கறுத்திருந்தாலும், நீ சொல்கின்ற வார்த்தைகள் உன் உடம்பைவிட மிகவும் வெளுத்திருக்கிறது!'' என்று அவன் மனம் வருந்தும்படி பரிகாச வார்த்தைகளைச் சொன்னான்.

ஸ்ரீகிருஷ்ணன் அவர்களின் வார்த்தைகளைக் கேட்டு, அவர்களை நோக்கி, ''நீங்கள் இரண்டு பேரும் பேசாமல் இருங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

பிறகு அவன் உலூக முனிவரை நோக்கி, ''முனிவரே! ரதகஜதுரக சேனைகளுடைய திருதராஷ்டிர மகாராஜாவிடம் நீ தூது சென்று, பாண்டவர்களுடைய கருத்தைக் கூறும். அப்போது அவன் கூறுகின்ற எண்ணத்தைத் தெரிந்து கொண்டு திரும்பிவாரும்!'' என்று சொல்லிவிட்டு, தான் துவாரகைப் போய்ச் சேர்ந்தான்.

அப்போது பாண்டவர்களின் சுற்றத்தரசர்கள் எல்லோரும் தருமரிடம், ''பூமன்னா! இந்த முனிவர் சென்று உமது கருத்தை திருதராஷ்டிரனிடம் சொல்லிய பின்பும், அவர் உங்களுடைய ராஜ்ஜியத்தைத் திருப்பித் தரவில்லை என்றால், உடனே எங்களுக்கு அது குறித்து ஓலை யனுப்புங்கள்!'' என்று கூறிவிட்டு, தங்களுடைய பட்டணங்களுக்குச் சென்றார்கள்.

எல்லோரும் போனபின் தருமர் உலூகமுனிவரை நோக்கி, ''உலூகமுனிவரே! நீர் கருணையுடன் தூது செல்லும்!'' என்று கூறி, அவரை வணங்கித் துதித்தார்.

மீண்டும் அவர் முனிவரைப் பார்த்து, ''நீர் அஸ்தினாபுரத்து ராஜசபைக்குள் நுழைந்ததும், முதலில் எங்களுடைய பாத நமஸ்காரத்தை பீஷ்மருக்கும், திருதராஷ்டிரருக்கும், விதுரருக்கும், துரோணருக்கும் தெரிவித்துவிட்டு, பிறகு தூது விஷயத்தைச் சொல்லும்!'' என்று கூறி அனுப்பினார்.

உலூகமுனிவர் அப்படியே செய்வதாகச் சொல்லி , அஸ்தினாபுரத்துக்குச் சென்றார்.

விராடராஜனுடைய புரோகிதரான உலூகமுனிவர் நேரே அஸ்தினாபுரத்து ராஜசபைக்குச் சென்றார். அவரைக் கண்டதும் துரியோதனன் எதிர் கொண்டு சென்று வரவேற்று

அழைத்து வந்து, நவரத்தினாசனத்தில் உட்காரச் செய்தான். முனிவருடைய திருவடிகளைப் பணிந்தான்.

பீஷ்மரும் மற்றவர்களும் முனிவரை வணங்கித் துதித்தார்கள். பிறகு அவர்கள், "ஐயனே! நீர் இங்கு எழுந்தருளிய காரணம் என்ன?" என்று கேட்டார்கள்.



அப்போது உலூகமுனிவர் திருதராஷ்டிரனும், துரியோதனாதியர்களும், கர்ணனும், சகுனியும் மனம் கொதிக்கும்படி அவர்களைப் பார்த்து, "பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷ கால வனவாசத்தையும், விராட நகரத்தில் ஒரு வருஷ கால அஞ்ஞாத வாசத்தையும் முடித்துக் கொண்டு இப்போது வெளிப்பட்டார்கள். முன்பு ராஜசபையில் அரசர்களின் முன்பாகச் சூதாடி, நீங்கள் பறித்துக் கொண்ட பாண்டவர்களுடைய ராஜ்ஜியத்தை ஒப்பந்தப்படி இப்போது அவர்களுக்குக் கொடுப்பீர்களோ? இல்லை,

கொடுக்க மாட்டீர்களோ? குருநாட்டு அரசர்களே! யுத்தம் செய்யாமல் சூதாட்டத்தாலேயே முன்பு பாண்டவர்களுடைய ராஜ்ஜியத்தைப் பறித்துக் கொண்டீர்கள். ஆகையால், அந்த ராஜ்ஜியத்தை அவர்கள் மீட்டுக் கொள்வதற்காக, திரும்பவும் சூதாட வேண்டும் என்றாலும் அவர்களோடு அதனைச் செய்யுங்கள். இந்த நியாயத்துடன் நீங்கள் நடந்து கொண்டால், இனிமேல் உங்கள் இருதரப்பினர்களுக்குள்ளும் மாறுபாடு உண்டாகாது. உங்கள் அரசாட்சிச் செல்வமும், முன் போலப் பெருமையடையும்! சூதாட்டத்தைவிட்டு நீங்கள் போர் செய்து அவர்களை ஜெயிக்க நினைத்தால், அது உங்களால் முடியாது. பீமனும் அர்ச்சுனனும் கோபம் கொண்டு போர்க்களத்துக்கு வந்து சேர்ந்த உடனே, நீங்கள் எல்லோரும் யுத்தத்தில் நிச்சயமாக இறந்தே விடுவீர்க்ள். எப்போதும் என்னைப் போன்ற முனிவர்களின் வார்த்தை தவறியே போகாது!'' என்றார்.

உலூகமுனிவர் அப்படிச் சொன்னதுதான் தாமதம். துரியோதனன் மகாசினம் கொண்டான். அவன் உலூகமுனிவரை நோக்கி, ''புரோகிதரே! இப்போது பூனைபோல் மாளிகைக்குள் இருந்து கொண்டு வீரம் பேசுவதில் வலிமையில்லை. நாங்கள் இருதரப்பினர்களும் செய்கின்ற யுத்தத்திலேயே, யாருக்கு ஆண்மையும் புஜபராக்கிரமமும் இருக்கிறது என்பதைப் பார்க்கலாம்!'' என்றான்.

துரியோதனன் கூறியதைக் கேட்டதும், விதுரன் அவனிடம், ''துரியோதனா! இந்த அந்தணரின் வார்த்தைப் படி பாண்டவர்களுக்கு உரிய ராஜ்ஜியத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடு. அது தர்மம். அதைவிட்டு விதூஷகர்களை விட அறிவில்லாதவர்களின் வார்த்தைகளைக் கேட்டு, அதன்படி அதர்மமாக நீ நடந்து கொண்டால் திருமகள் உன்னைவிட்டு விலகிப் போவாள். யுத்தத்தில் உன்னுடைய சுற்றத்தார்களும் சேனாவீரர்களும் அழிந்து போவார்கள். இது நிச்சயம்!'' என்று புத்தி சொன்னான்.

விதுரனுக்குப் பின் துரோணாசாரியார் துரியோதனனைப் பார்த்து, ''ராஜனே! நீ சத்தியத்துக்கு மாறாக, உனது சேனைகளையும் மற்ற வலிமைகளையுமே முக்கியமாகக் கொண்டு, அவற்றால் அப்பாண்டவர்களை எதிர்த்து யுத்தம் செய்யத் தொடங்குதல் பெரும்குற்றம். அப்படி நீ போரைச்

செய்தால் அர்ச்சுனனுடைய காண்டீபம், அம்புகள் தைத்த இடங்களிலெல்லாம் ரத்தம் கொட்டும்படி அம்புகளை வீசும்!'' என்றார்.

கிருபாசாரியாரும் துரியோதனனுக்கு அதையே கூறினார்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பீஷ்மர் பெருங்கோபம் கொண்டார். அவர் திருதராஷ்டிரனை நோக்கி, ''மன்னா! பாண்டவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வனவாசம் அஞ்ஞாதவாசம் ஆகிய பதிமூன்று வருஷ காலமும் முடிந்துவிட்டது. அதனால் அவர்களுக்குரிய ராஜ்ஜிய பாகத்தைத் திருப்பிக் கொடுத்து விடு. அதற்கு மாறாக அவர்களோடு கொடிய யுத்தம் செய்வதற்கு விரும்பினால், நாளைக்கு யுத்தகளத்தில் அர்ச்சுனனுக்கு எதிராகப் போர் புரிவதற்கு வில்லை வளைப்பவர்கள் நம் பக்கத்தில் யார் இருக்கின்றார்கள்?'' என்றார்.

கர்ணன் பீஷ்மரின் வார்த்தைகளைக் கேட்டுக் கோபத்தால் கண்கள் சிவந்தான். அவன் பீஷ்மரைக் கோபத்துடன் நோக்கி, ''பிதாமகரே! ஸ்ரீராமபிரானால் முற்காலத்திலேயே வலிமையழிந்த பரசுராமரை, அவரிடமே கற்ற வில்வித்தையால் தாங்கள் ஜெயித்தீர்கள். அதைத் தவிர வேறு என்ன பராக்கிரமம் தங்களுக்கு உண்டு என்று, இப்போது எங்கள் எல்லோரையும் அவமதித்துப் பேசுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

பீஷ்மர் உடனே கர்ணனைப் பார்த்து, ''அடே, கர்ணா! திரௌபதி அர்ச்சுனனுக்கு மாலையிட்ட போது, அவனோடு விற்போர் புரிந்து நீ ஜெயித்தாயோ? இல்லை, துரியோதனனை சித்திரசேனன் முதலிய கந்தருவர்கள் தூக்கிச் செல்லாதபடி பீமன் காத்தபோது, அந்தப் பீமனை யுத்தத்தில் ஜெயித்தாயோ? உத்தரகுமாரன் தேரோட்ட அர்ச்சுனன் பசுக்களை மீட்டுக் கொண்டு போனபோது, அவனை எதிர்த்து, பாவம் வெகுநேரம் யுத்தம் செய்தாய்! ஆனால், இனி கண்ணன் சாரத்தியம் செய்ய, அர்ச்சுனன் யுத்தகளத்தில் காண்டீபத்திலிருந்து தொடுத்து விடுகின்ற அம்புகளுக்கு எதிராக, உன்னைத் தவிர நின்று ஜெயிக்கக் கூடியவர்கள் யாரும் இல்லை போலும்!'' என்று பரிகசித்தார்.

துரியோதனன் அந்தப் பரிகாச வார்த்தைகளைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. அவன் கர்ணனைப்

பாராட்டினான். கர்ணன் கூறிய வார்த்தைகளை அவன் ஏற்றுக் கொண்டான். அதனால் துரியோதனன் தூது வந்த உலூகமுனிவரைப் பார்த்துக் கைகொட்டிப் பரிகசித்துச் சிரித்தான். பின்பு அவரை நோக்கி துரியோதனன், ''இந்த ராஜ்ஜியம் எங்களுடையது. இதுவரை வசித்து வந்த வனமே பாண்டவர்களுடையது!'' என்றான்.

உலூகமுனிவர் உடனே சபையைவிட்டு வெளியேறி, உபப்லாவ்ய நகரத்துக்குச் சென்றார். பாண்டவர்களிடம் போய் அஸ்தினாபுரத்து ராஜசபையில் நடந்த விபரங்களைத் தெரிவித்தார்.

பிறகு உலூகமுனிவர் துவாரகை சென்று, கண்ணபிரானிடம் அதையே தெரிவித்தார். கண்ணன் அதுகேட்டு மிகவும் மகிழ்ந்தான். அவன் உலூகமுனிவரிடம், ''முனிவரே! நீர் வேகமாகச் சென்று அர்ச்சுனனை என்னிடம் அனுப்பி வையும்!'' என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

கண்ணனுடைய கட்டளைப்படியே உலூகமுனிவர் விரைந்து போய் அர்ச்சுனனுக்குச் செய்தியைக் கூறினார்!

2. வாசுதேவன் படைத்துணை

உலூக்முனிவர் தூது வந்து போன பின்பு, துரியோதனன் கர்ணனையும் பீஷ்மரையும் கோபம் தணியச் செய்தான். அதன்பின் அவன் துரோணாசாரியார் முதலிய மந்திரிமார்களுடன் தனித்திருந்து, மேற்கொண்டு செய்ய வேண்டியது பற்றிக் கலந்தாலோசித்தான்.

ஆலோசனை முடிந்ததும் துரியோதனன், போரில் தனக்குத் துணைவர்களாக வரும்படி எல்லா அரசர்களுக்கும் தூது அனுப்பினான். பிறகு, கண்ணபிரானைத் தனக்குப் படைத்துணைவனாக வரும்படி அழைக்க, அவனுடைய துவாரகைக்குச் சென்றான் துரியோதனன்.

ஸ்ரீகிருஷ்ணபகவான், அர்ச்சுனனுக்கு முன்பாக துரியோதனன் துவாரகைக்கு வந்துவிட்டதை ஞான திருஷ்டியால் அறிந்து கொண்டான். உடனே அவன் வாயில்காவலர்களிடம், ''காவலர்களே! பிறவிக் குருடனான

திருதராஷ்டிரனுடைய மூத்த குமாரன் துரியோதனன் இங்கு வந்தால், எனக்கு முன்பே செய்தியைத் தெரிவிக்காமல் நீங்கள் அவனை உள்ளே அனுப்புங்கள்!'' என்று கட்டளையிட்டுவிட்டுப் பள்ளி கொண்டான்.

சேனையோடு வந்த துரியோதனன் கண்ணபிரானுடைய அரண்மனையை அடைந்தான். தன் சேனையை அரண்மனைக்கு வெளியிலேயே நிறுத்திவிட்டு, தான் மட்டும் தடையின்றி உள்ளே சென்றான். நேரே சென்றவன் மஞ்சத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் கண்ணனைக் கண்டான். தூங்கும் கண்ணனை எழுப்புவது முறையில்லை என்று எண்ணினான். அதனால் கண்ணனுடைய தலைப்பக்கத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று உட்கார்ந்து கொண்டு, அவனுடைய விழிப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.



கண்ணபிரான் துரியோதனன் வந்திருப்பதை உணர்ந்திருந்தும் கண்விழிக்கவில்லை. அவன் அர்ச்சுனன் இன்னும் வரவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்தான். அப்போது அர்ச்சுனன் வந்து கண்ணனுடைய திருவடிப் பக்கம் நின்றான். கண்ணன் அர்ச்சுனன் வந்துவிட்டதை உணர்ந்தான். அக்கணமே அவன் கண்விழித்து அர்ச்சுனனைப் பார்த்து மகிழ்ச்சியால் முகம் மலர்ந்தான். அர்ச்சுனனுக்குக் கருணை புரிந்தான்.

தன்னைக் கண்திறந்து பார்த்த கண்ணனை அர்ச்சுனன் வணங்கினான். பிறகு அர்ச்சுனன், துரியோதனன் வந்திருப்பதைக் கண்ணனுக்குத் தெரிவித்தான். உடனே கண்ணன் மஞ்சத்தைவிட்டு எழுந்திருந்து துரியோதனனுக்கு மரியாதை செய்துவிட்டு, ''துரியோதனா! நீ முன்பே வந்துவிட்டாயோ? ஏன் நீ உனது வருகையை எனக்கு அப்போதே தெரிவிக்கவில்லை?'' என்று சொல்லி, அவனைத் தன் மார்போடு இறுகத் தழுவிக் கொண்டான்.

மேலும், மாயாஜாலக் கண்ணன் துரியோதனனுக்கு இனிய உபசார வார்த்தைகளைக் கூறினான். அந்த வார்த்தைகளால் அவன் துரியோதனனை மகிழ்ச்சியடைய செய்தான்.

பிறகு ஸ்ரீகிருஷ்ணன் இருவரையும் நோக்கி, ''நீங்கள் இரண்டு பேரும் இப்போது எதற்காக வந்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்!'' என்று பொதுவாகக் கேட்டான்.

அதற்கு அவர்கள் இருவரும், ''ஒப்பில்லாதவனே! இனி நடக்கப் போகும் போரில் எங்களுக்கு நீ உதவி செய்ய வேண்டும்!'' என்று ஒரே சமயத்தில் சொன்னார்கள்.

கண்ணபிரான் அப்போது துரியோதனனைப் பார்த்து, ''துரியோதனா! போரில் உதவுவதாக முன்பே உபப்லாவ்யத்தில் தருமனுக்கு நான் வாக்குதத்தம் செய்துவிட்டேன். இங்கே இப்போதும் நான் விழித்தெழுந்த போது உனக்கு முன் அர்ச்சுனனே என் கண்ணில் பட்டான்!'' என்று உறுதியாகச் சொன்னான்.

துரியோதனன் அதுகேட்டுக் கொஞ்சம் மனம் சஞ்சலப்பட்டான். இருப்பினும் அவன் தைரியத்தைக்

கைவிடவில்லை. நம்பிக்கையையும் இழந்து விடவில்லை. எனவே அவன் கண்ணனைப் பார்த்து, "பாண்டவர்களுக்குப் போரில் உதவும் நீ, யுத்தத்தில் அவர்களுக்குத் துணையாக ஆயுதங்கள் எடுக்கக் கூடாது!'' என்று வேண்டினான்.

கண்ணன் உடனே அவ்வேணடுகோளுக்கு உடன்பட்டு, அர்ச்சுனனை நோக்கி, ''விஜயா! உனக்கு உதவியாக துரியோதனனின் வேண்டுகோளின்படி நான் ஆயுதங்களைத் தொடமாட்டேன். ஆகையால், நான் உனக்குப் போரில் எப்படி உதவுவது என்பதைச் சொல்!'' என்று கேட்டான்.

அர்ச்சுனன் அதற்கு, ''எம்பெருமானே! நீ எனக்கு யுத்தத்தில் தேர்ச்சாரதியானால், இந்த மனிதர்கள் என்ன? கண்டவர்கள் அஞ்சும் யக்ஷர்களானாலும், தேவர்களானாலும், வித்தியாதரர்களானாலும் சரி, வேறு யாரானாலும் சரி. என்னைப் போரில் எதிர்ப்பவர்களின் தலைகளையெல்லாம் காண்டிபத்தை வளைத்து அம்பு தொடுத்துத் துண்டிப்பேன்!'' என்றான்.

ஸ்ரீகிருஷ்ணன் அதுகேட்டு துரியோதனனிடம், ''வேந்தனே! இந்த அர்ச்சுனனுக்கு நான் தேரோட்டியாவதைத் தவிர, ஆயுதங்களைப் பிரயோகித்து உங்களோடு போர் செய்ய மாட்டேன்!'' என்றான்.

மேலும் அவன் துரியோதனனைப் பார்த்து, ''துரியோதனா! என்னைத் தவிர மற்ற யதுகுலத்து அரசர்களையும், பனைக்கொடியுடைய எனது தமையன் பலராமனையும் இனிவரும் போருக்கு உனக்கு உதவியாக நீ அழைத்துப் போ!'' என்றான்.

திரும்பவும் கண்ணபிரான் அவனிடம், ''நமது கிருதவர்மா ஓர் அக்ஷௌஹிணி சேனையோடு போரில் உனக்கு உதவியாக வருவான்!'' என்று சொல்லி, மற்றும் இனிய வார்த்தைகளைப் பேசி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

உடனே துரியோதனன் கிருஷ்ணனை வணங்காமல் வேகமாகப் போய் பலராமனைப் பார்த்தான். அவனிடம், ''அண்ணலே! உனது பெரும் யாதவசேனையோடு போரில்

நீ எனக்குத் துணை செய்ய வேண்டும்!'' என்று சொல்லி, துரியோதனன் அஸ்தினாபுரத்துக்குச் சென்றான்.

துரியோதனன் துவாரகையைவிட்டுப் போன பின்பு, கிருஷ்ணபகவான் அர்ச்சுனனோடு தருமருடைய உபப்லாவ்ய அரண்மனையை அடைந்தான்!

3. சஞ்சய முனிவர் தூது

அஸ்தினாபுரத்துக்கு வந்து சேர்ந்த துரியோதனன், கிருஷ்ணன் தனக்கும் பாண்டவர்களுக்கும் ஒவ்வொரு வகையாக உதவி செய்ய ஒப்புக் கொண்டதைப் பற்றித் தந்தைக்குத் தெரிவித்தான். அதுகேட்டு திருதராஷ்டிரன் தனது புதல்வர்களோடு மீண்டும் கலந்து யோசித்தான். அந்த ஆலோசனையிலும் அவன், பாண்டவர்களுக்குரிய ராஜ்ஜிய பாகத்தைக் கொடுக்க நினைக்கவில்லை!

திருதராஷ்டிரன் சஞ்சயமுனிவரை வரவழைத்து உபசரித்தான். பிறகு அவருடைய பாதங்களை நமஸ்கரித்து, ''முனிவரே! நீர் குருகுலத்து அரசர்களுக்கெல்லாம் குருவானவர். ஆதலால் உமது வார்த்தைகளைப் பாண்டு குமாரர்களும் சரி, என் குமாரர்களும் சரி தடுத்து நடக்க மாட்டார்கள். ஆகவே, நீர் உபப்லாவ்யம் சென்று, என் குமாரர்களே இந்த ராஜ்ஜியத்தை ஆள்வதற்கான வழிவகைகளைச் செய்யும். பாண்டவர்களிடம் நீர் சென்று, அவர்களைக் காட்டில் தவம் செய்யும்படி அன்பாகச் சொல்லியருளும்!'' என்றான்.

சஞ்சயமுனிவர் சக்கரவர்த்தியின் விருப்பப்படி உபப்லாவ்யம் சென்றார். அவரைக் கண்டு கிருஷ்ணனும் பாண்டவர்களும் எதிர்கொண்டு சென்று நமஸ்கரித்தார்கள். முனிவர் அவர்களுக்குத் தம் ஆசியை வழங்கினார். பிறகு, அவர்கள் சஞ்சயமுனிவரை அன்புடன் அழைத்து வந்து சுவர்ணபீடத்தில் எழுந்தருளச் செய்தார்கள்.

அப்போது அவர் தருமரை நோக்கி, ''தருமபுத்திரனே! நீங்கள் அரசர்களாய்ப் பூலோகத்தை ஆள்வதைவிட்டுத் தவசிரேஷ்டர்களைப் போல வனத்திலும் வாழ்வதற்கு வல்லவரானீர்கள். ஆகையால், இதுவும் உங்களுக்கு நன்மையான காரியம்தான்! முட்டாள்களோ அழிந்து போகும்

செல்வத்தை முக்கியமாகக் கொண்டு வாழ்ந்து, இறந்து போவார்கள்! ஏழுவகைப் பிறப்புகளிலும், வேறொரு பிறவியில் பிறவாமல் மானிடப் பிறவியைப் பெற்று வாழ்வது உலகத்தில் அருமையானது. அந்த மானிடப் பிறவியிலும் மாயை நீக்கித் தத்துவஞானிகளாய் விளங்குவது அருமையானது. வனத்தில் செய்கின்ற தவமே, இந்த உடம்பு நீங்கியபின் முத்தியைப் பெறுவதற்குக் காரணமான அத்தத்துவஞானம் உண்டாகும் வழியாகும். நான் கூறிய இந்த மூன்றும் உங்களுக்கு இயற்கையாகப் பலித்துள்ளன. நீங்கள் ராஜ்ஜியத்தை ஆள்வதற்குச் செருக்கோடு நினைத்தால், அரவக்கொடியுடைய துரியோதனன் உங்களுடன் மகிழ்ச்சியாய்க் கலந்து வாழ்வதற்கு ஒப்புக் கொள்ள மாட்டான். ஆகையால், இனிமேல் உங்களுடைய ராஜ்ஜியத்தையும் அரசுரிமையையும் விட்டுவிடுங்கள். வனம் சென்று முத்தியுலகம் அடைவதற்கான பெரும் தவத்தைச் செய்யுங்கள். இதுவே உங்களுடைய கடமை! பராசரமுனிவருடைய குலத்திலே பிறந்தவர்களானாலும் துரியோதனாதியர்கள், இம்மானிட ஜன்மத்தால் பெற வேண்டிய நல்லொழுக்கப் பயனை, இவ்வுலகத்திலே கடமையாகச் செய்து முடிக்கவில்லை. அவர்கள் கெட்ட பேராசையுடையவர்கள். உங்களிடம் சிறிதும் அன்பில்லாதவர்கள். எனவே அவர்கள் இப்போது எனது வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பற்றற்ற பெரியோர்கள் சித்தாந்தமாகக் கூறியுள்ள தத்துவார்த்தங்களை இனிமேல் நீ கைகொள்! பூமிமேல் உள்ள ஆசையையும், ராஜ்ஜிய அதிகாரத்திலுள்ள ஆசையையும், போராசையையும், பெண்ணாசையையும் நீ முழுதும் துறந்துவிட்டு; எல்லாவற்றிலும் சிறந்த முக்தி மார்க்கத்தைச் சேர்வதற்கான தவத்தை மனத்தில் எண்ணு!'' என்று கூறினார்.

தருமர் அதுகேட்டு மெல்ல நகைத்து, ''தவசிரேஷ்டரே! இவ்வுலகத்தில் பழி நிலைத்து நிற்க, சுவர்க்கத்தில் முக்தி கிடைக்கும் வழியைத் தாங்கள் சொல்கிறீர்கள். பழியை இவ்வுலகத்தில் பெற்று அவ்வுலகத்தில் முக்தியைப் பெறுவதைக் காட்டிலும், ஏழுவகையான நரகங்களிலும் தனித்தனியே விழுந்து வருந்துவதே மிகவும் நன்மையுடையதாகும்! தங்களுக்குத் தெரிந்த துறவறத்தின் சிறப்பை நன்கு எங்களுக்குப் புரியும்படிச் சொல்லியருளினீர்கள். என்றாலும் அரசர்கள் ராஜ தர்மத்தைவிட்டுத் துறவறம் கொள்ளப்

பிரயத்தனப்படுவார்களோ? எனக்குரிய ராஜதர்மத்தில் முதலில் நான் தவறாமல் நிலைத்து நின்று, பகைவர்களைக் கொல்ல வேண்டும். பின்பே என் மனம் துறவறத்தில் நன்குப் படியும்!'' என்றார்.

அடுத்து பீமன் பெருங்கோபத்துடன், ''முனிவரே! நீர் எங்களுக்குத் தத்துவப் பொருளை உபதேசிக்கும் சிறந்த ஆசிரியர். இதுபோலவே எங்களின் பகைவர்களான துரியோதனாதியர்களுக்கும் நீர் ஆசிரியர். அப்படியிருக்க, பட்சபாதகமாக நீர் துரியோதனாதியர்களின் பக்கம் கருணை செய்து பேசுவது உமக்குத் தகுதியில்லை. நேற்று நாங்கள் உலூகமுனிவரைத் தூது அனுப்பியபோது, துரியோதனன் அவரிடம் எங்களோடு போர் செய்வதற்குத் துணிந்து சொன்னான். ஆதிசேஷன் தாங்கும் இந்த உலகத்தை ஆள்கின்ற அரசர்கள் பேச்சு ஒன்றும் செயல் ஒன்றுமாக இருக்க மாட்டார்கள். பின்புத்தியுள்ள பிறவிக் குருடனாகிய திருதராஷ்டிரமகாராஜா இருகண்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும். அதைவிட்டு அவர் தமக்குப் பெருமையில்லாத வார்த்தைகளைச் சொன்னார். அது போகட்டும். நாளைக்கு நடக்கப் போகின்ற யுத்தத்திலே நான் எனது சத்துருக்காதினி கதாயுதத்தால் பகைவர்களை அடித்து வீழ்த்த போகும் அதிசயத்தைப் பற்றிச் சொல்கிறேன். கேளும். நீர் மனமகிழ்ந்து உபதேசித்த தவவொழுக்கங்கள், எங்களுக்கு அருமையான சிறந்த தவமில்லை. பகைவர்களை வெட்டி வீழ்த்தி ஜயிப்பதே, நீர் சொல்லும் தவத்தைவிடச் சிறந்தது. எங்களுடைய தீவினை நீங்குவதற்குரிய தவமும் அதுவே! அரசர்களாகிய எங்களுக்கு இத்தவமே முக்காலமும் பொருந்தும்! யுத்தகளமாகிய யாகசாலையிலே துரியோதனாதியர்களாகிய நூறு பசுக்களைக் கொன்று செய்யும் களவேள்வியையும், முன்பு ராஜசூய யாகம் புரிந்த எனது தமையனாரைக் கொண்டு செய்விப்பேன்!'' என்றான்.

கண்ணபிரான் அப்போது குறுக்கிட்டு, ''பீமா! இத்துடன் உன் பேச்சைவிடு!'' என்று சொல்லி, பீமனை அடக்கினான்.

பின்பு அவன் சஞ்சயமுனிவரிடம், ''முனிவரே! இந்தப் பாண்டவர்களுக்கு ராஜ்ஜியம் ஆளுதலும், அந்தத் துரியோதனாதியர்களுக்குப் போரில் மாண்டு வீரசுவர்க்கம் சேர்தலுமே செய்யும் தவமாகும். ஆகையால், அவற்றைத்

தடுப்பதற்கு நாம் எந்த தருமத்தை இருதரப்பினர்க்கும் உபதேசித்தாலும் பிரயோஜனம் ஒன்றும் இல்லை! எனவே நீர் புறப்பட்டுச் செல்லும்!'' என்று நல்ல வார்த்தைகளை ஒழுங்காகச் சொன்னான்.

சஞ்சயமுனிவர் பாண்டவர்களுடைய மனக்கருத்தை நன்குப் புரிந்து கொண்டார். அவர் நேரே அஸ்தினாபுரம் சென்றார். தருமர் ராஜ்ஜியத்தில் விருப்பங் கொண்டு சொன்ன வார்த்தைகளையும், பீமன் கோபம் கொண்டு பேசிய வார்த்தைகளையும், கண்ணனுடைய வார்த்தைகளையும் அவர் திருதராஷ்டிரனிடம் கூறித் தம் தூதை முடித்தார்!

4. கிருஷ்ணன் தூது

சஞ்சய முனிவர் தூது வந்து போன பின்பு, தருமர் கண்ணபிரானை நோக்கி, ''கண்ணா! சஞ்சயமுனிவருக்கு நாம் சொன்ன செய்தியையும், முன்பு உலூகமுனிவரிடம் நாம் தூது சொன்ன செய்தியையும் நன்கு அறிவாய். விஷத்தை அதிகமாக உண்ட பின்பு, அவ்விஷத்தை ஒழிக்கக் கூடிய சிறந்த மருந்துகளையும் மந்திரத்தையும் தேடாமல் இருப்பது சரியில்லை. அது போல நாம் யாதொரு முயற்சியும் செய்யாமல், உயிர் ஒடுங்குபவர்களைப் போல இருப்பதும் தகுதியில்லை! போருக்கு வரும்படி துரியோதனாதியர்கள் கூறினாலும், சிறிதும் தருமம் இல்லாமல் பலர் அழியும்படி நாம் யுத்தம் புரிவது நீதியில்லை!'' என்றார்.

உடனே கிருஷ்ணபகவான் தருமரைப் பார்த்து, ''தருமபுத்திரா! குருதேசத்தைச் சமாதானமாகத் துரியோதனாதியர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதுதான் உனது எண்ணமோ? இல்லை, மீண்டும் வனவாசம் செய்து துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதுதான் உனது எண்ணமோ? அல்லது கோபத்துடன் போர் செய்வதுதான் உனது எண்ணமோ? உங்கள் ஐந்து பேர்களுக்கும் உண்மையான எண்ணம் என்ன?'' என்று கேட்டான்.

அதற்கு தருமர், ''எங்களுக்கு உயிர் போன்றவனே! கொடிய தீயை வளர்த்தால் மூங்கில் காடு தானாகவே அழிந்து போகும். அது போலப் பகைமை கொண்டு உக்கிரமாகப் போர் செய்தால் துரியோதனாதியர்களும் நாங்களும் அழிந்து

போவோம். அப்படியாகாமல் இருப்பதற்காகவும், நாங்கள் எல்லோரும் சமாதானமாகக் கூடி குருதேசத்தில் வாழ்வதற்காகவும் நீ அவர்களிடம் தூது சென்று அருள்வாய்!'' என்றார்.

அதுகேட்டு மாயக்கண்ணன், ''துரியோதனனோடு இரண்டாம் முறையாகவும் சூதாடி, நீங்கள் அந்த ஆட்டத்தில் ஜெயித்தீர்கள். அப்போது அந்தத் துரியோதனன் சொன்ன கட்டளையின்படி பல வருஷ காலம் வனவாசம் செய்து இப்போது திரும்பி வந்து விட்டீர்கள். ஆகையால், அவன் உங்களுக்குரிய பாதி ராஜ்ஜியத்தைக் கொடுக்க வேண்டும். அப்படி அந்தத் துரியோதனன் கொடுக்க மறுத்துவிட்டால், அங்கே அவனை யுத்தத்தில் கொல்ல வேண்டும். பின்பு, அவர்களுடைய ராஜ்ஜியத்தோடு உங்கள் ராஜ்ஜியத்தையும் சேர்த்து ஆள்வதற்கு நீங்கள் துணிய வேண்டும். இதுவே இனிமேல் செய்ய வேண்டிய காரியம்!'' என்று தெரிவித்தான்.

அப்போது கண்ணனை நோக்கி தருமர், ''பெரியோர் களையும், உறவினர்களையும், தம்பிமார் களையும் யுத்தத்திலே கொன்று ராஜ்ஜிய பரிபாலனம் செய்வதைக் காட்டிலும், திருதராஷ்டிர ராஜா சஞ்சய முனிவரிடம் சொல்லி அனுப்பியது போல மீண்டும் வனவாசம் செய்வதே நல்லது!'' என்று சொன்னார்.

கிருஷ்ணமூர்த்தி உடனே, ''நீங்கள் உங்களுக்குரிய யுத்தத்தைவிட்டுக் காட்டுக்குச் சென்றால், பூலோகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் உங்களை இகழ மாட்டார்களா? திரௌபதியைத் துச்சாதனன் துகிலுரிந்த பொழுது நீங்கள் அந்த ராஜசபையில் சொன்ன சபதமும் பொய்யாகி விட்டதா?'' என்று கேட்டான்.

பகவானின் வார்த்தைகளைக் கேட்டுத் தெளிந்த தருமர், ''கண்ணா! நீ எங்களுக்காக துரியோதனாதியர்களிடம் தூது செல். எங்களுடைய எண்ணத்தை அவர்களுக்குச் சொல். அதுகேட்டு துரியோதனன் எங்களுடைய ராஜ்ஜிய பாகத்தையும் அதிகாரத்தையும் எங்கள் எண்ணப்படி கொடுப்பான். அப்படி அவன் கொடுக்காவிட்டால், போர் செய்தாவது ராஜ்ஜியத்தைப் பெறுவேன். முதலில் சமாதான வழியில் நடப்போம். அது தோற்றால் பின்பு போர்



செய்வோம். இப்படிச் செய்தால் நமக்குப் பழியும் வந்து சேராது! கிருஷ்ணா! நீ துரியோதனனிடம் எங்களுடைய ராஜ்ஜிய பாகத்தைக் கேள். அதைக் கொடுக்க அவன் சம்மதிக்காவிட்டால், எங்கள் ஐந்து பேர்களுக்குமாக ஐந்து ஊர்களைக் கேள். அவன் அதற்கும் சம்மதிக்கவில்லை என்றால், ஐந்து வீடுகளைக் கேள். அதையும் அவன் கொடுப்பதற்கு மறுத்தால், யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லிவிட்டு வா!'' என்றார்.

பீமன் அதுகேட்டு கோபமும் வெறுப்பும் கொண்டான். அவன் வேகமாக எழுந்து நின்று கண்ணபிரானை வணங்கினான். அவனை நோக்கி பீமன், ''பகவானே! எங்கள் தமையனார் இப்படிச் சொல்வதற்கு நாங்கள் என்ன செய்வோம்?'' என்றான்.

பிறகு பீமன் தருமரிடம், ''அண்ணா! ராஜசபையிலே துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பிடித்திழுத்த பொழுது வெகுண்டெழுந்த எங்களைத் தனித்தனியே தடுத்துவிட்டீர்கள். தாங்கள் அப்படிச் செய்து நமக்கும் நமது குலத்துக்கும் உலகமுள்ள வரைக்கும் நீங்காத பழியை உண்டாக்கினீர்கள். வனவாசமும் அஞ்ஞாதவாசமும் கழித்துவிட்டு வந்த இப்போதும் தாங்கள், கொடிய பகைவர்களான துரியோதனாதியர்களை யுத்தத்திலே கொல்வதைவிட்டுத் தயங்கி நிற்கிறீர்கள். அண்ணா! துரியோதனனுடைய இரக்கமில்லாத மனத்துக்குப் பயப்படுவதைவிட, தங்களின் கருணைக்கு நான் அதிகமாகப் பயப்படுகிறேன்! தங்களைக் காட்டுக்கு அனுப்பிய திருதராஷ்டிரனுடைய மகனான துரியோதனன் ஆளுகின்ற ராஜ்ஜியம் முழுவதையும், தாங்கள் ஆளும்படி இப்போதே தங்களுக்குக் கொடுப்பேன். அதேசமயம் தங்களுடைய ராஜ்ஜிய பரிபாலனத்தைக் கண்டு பொறாமைபடாதபடித் துரியோதனனுக்கு இந்திரனுடைய அமராவதிப் பட்டணத்தைக் கொடுப்பேன்!'' என்றான்.

அதன்பின் அவன் கண்ணனை நோக்கி, ''சிவபெருமானுடைய கபாலத்தில் பிச்சையிட்டுச் சாபம் தவிர்த்த நீ உணரும்படி, என் தமையனார் யுத்தத்தை நிறைவேற்றவில்லை. யுத்தம் செய்து பாஞ்சாலியின் கூந்தலை முடிக்கவில்லை. தம்பிமார்களின் முன்னே ராஜசபையில் முன்பு கூறிய சபதங்களை முடிக்கவில்லை. பழிப்பில்லாத புகழைப் பூரணமாகப் பெறவில்லை. இப்படிப்பட்ட என் தமையனாருக்கு நான் தம்பியாகப் பிறந்ததும் தகுதியில்லை! போர்க்களத்தில் துரியோதனனையும், அவனுடைய துணைவர்களையும் வென்று ராஜ்ஜியத்தைப் பெற வேண்டும். அதைவிட்டு சாந்தமாக உறவு முறைகளைப் பாராட்டி, தூது அனுப்பி யாசித்து ராஜ்ஜியத்தைப் பெற்று வாழ்வதற்கு என் தமையனார் நிச்சயித்தார். ஐயோ, எல்லா வருத்தங்களிலும் இது அதிகமான வருத்தமாகும்!'' என்று வருத்தத்துடன் கூறினான்.

தருமர் அதுகேட்டுத் தம்பியைப் பார்த்து, ''தம்பி! குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை. ஒரு குடும்பத்திலே பிறந்தவர்கள் தங்களுக்குள் வேற்றுமை இல்லாமல் ஒன்றாக வாழும் இல்வாழ்க்கையைப் போல நன்மை தருவது

வேறு எதுவுமே இல்லை. ராஜ்ஜியம் காரணமாக எதிர்த்துப் போர் செய்வது பங்காளிகளான நம் இரண்டு பேருக்குமே கேவலம் இல்லையா? நமது தம்பிமார்களான கௌரவர்கள் உரிமையோடும் அறிவில்லாமலும் ராஜசபையிலே அன்று சொன்ன வார்த்தைகள் பல. அவைகளை நாம் கேட்டோம். ஆனாலும் அவ்வார்த்தைகள் நமக்கு அவமானத்தைத் தருவதில்லை. ஒருவர்க்கு அவமானத்தைத் தருவது என்பது ஒரு குலத்தில் பிறந்தவர்களின் வசை மொழிகளால் உண்டாவதில்லை. பிறருடைய வசை மொழிகளைக் கேட்பதே அவமானம். நம்மவர்களிடம் வசை வார்த்தைகள் கேட்பது அவமானம் இல்லை. இது உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒத்துக் கொள்ளக் கூடிய கருத்து. ஒருவனுடைய கண்ணில் அவனுடைய கையே படுவதில்லையா? ஆம், நம் கையே நம் கண்ணைக் குத்துவதில்லையா? அதுபோல்தான் பங்காளிகளான கௌரவர்கள் நமக்குத் துன்பம் தருகிறார்கள். இது பொருட்டில்லை. இருந்தாலும் அரசர்களுக்குண்டான உபாயங்கள் கடைசியில் இருக்கவே இருக்கின்றன!'' என்று தெரிவித்தார்.

அண்ணன் இப்படிச் சொல்லவும் பீமன், ''அண்ணா! நாம் ராஜ்ஜியம் பெறுவதற்காக கண்ணபிரான் தூது போக வேண்டியதில்லை. திரௌபதியின் சபதமும், என் சபதமும் நிறைவேற துரியோதனனிடம் இப்போது என்னைத் தூது அனுப்புங்கள்! எனது கதாயுதத்தின் வலிமையைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள். அர்ச்சுனனுடைய காண்டீபத்தின் வலிமையைப் பார்த்திருக்கிறீர்கள். நகுல சகாதேவர்களின் வலிமையைப் பார்த்திருக்கிறீர்கள். கிருஷ்ணபகவான் நமக்கு உதவி புரிய உறுதியாக நிற்கும் நிலையைப் பார்த்திருக்கிறீர்கள், பாஞ்சாலியின் விரிந்த கூந்தலைப் பார்த்திருக்கிறீர்கள். அப்படியிருந்தும், தாங்கள் நொடியில் பகைவர்களை நாங்கள் கொலை செய்வதைப் பார்த்து மகிழ விரும்பவில்லை. அதற்குமாறாக அந்தத் துரியோதனனின் ஆட்சியின் கீழ் அடங்கியிருந்து உயிர் வாழ நினைக்கின்றீர்கள்!'' என்று கோபித்தான்.

அச்சமயம் கண்ணன் பீமனை அன்பாக நோக்கி, ''வீரனே! தமையனார் ராஜ தர்மத்தை எடுத்துச் சொன்னால், அவ்வார்த்தைகளைத் தம்பிமார்கள் கேட்டு அங்கீகரிக்க

வேண்டும். அதைவிட்டு தம்பிமார்கள் மறுப்பதில்லை. ஆகவே, நீ கோபத்தைவிட்டுச் சாந்தம் கொள்!'' என்றான்.

கண்ணனின் கட்டளைப்படி பீமன் கோபத்தைவிட்டு அமைதியடைந்தான். அப்போது இந்திரகுமாரனாகிய அர்ச்சுனன் எழுந்து நின்று கண்ணனை நமஸ்கரித்து, அவனுக்கும் தனது தமையன் தருமருக்கும் சில வார்த்தைகளைக் கூறத் தொடங்கினான். ''முன்பு சூதாடிய பொழுது பகைவர்களின் பிழைகளையெல்லாம் பொறுத்தது போதாதோ? இப்போதும் யுத்த முயற்சி இல்லாமல் பொறுமையாக இருப்பதோ? இன்னும் பொறுமையாகிய தர்மத்தைப் போதித்துக் கொண்டிருப்பதோ? அப்படியானால் நாம் எப்போது பகைவர்களைக் கொல்வது? எப்பொழுது திரௌபதி விரிந்த தன் கூந்தலை அலங்கரித்து முடிப்பது? தேவர்களானாலும் சரி. அசுரர்களானாலும் சரி. இன்னும் வேறு யாரானாலும் சரி. போரில் எதிர்த்தவர்களின் உயிரைக் குடிப்பதற்காக என் கையிலுள்ள அம்பு தயாராக இருக்கிறது. அப்படியிருக்க என் தமையனார் குருதேசத்தை எந்தக் காரணத்தால் துரியோதனனிடமிருந்து பிச்சையாகக் கேட்டுப் பெற விரும்புகின்றார்? துச்சாதனன் திரௌபதியை துகிலுரிந்த போது கண்ணபிரானிடம் அபயம் கேட்டு அவள் கூவி அழுதாள். அப்போது பாண்டவர்களாகிய நாம் ஐந்து பேரும் ராஜசபையிலே ஒன்றும் செய்ய முடியாமல் மாண்டவர்கள் போல் ஒடுங்கிக் கிடந்தோம். மனைவியைக் காப்பாற்றாமல் நின்ற அந்தக் குற்றத்துக்கான பரிகாரத்தைச் செய்ய வேண்டாமோ? அப்படிச் செய்து நமது குற்றத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாமோ? செய்ய வேண்டிய தருமம் பொறுமை மட்டும் தானோ? கண்ணன் தூது சென்றாலும் சரி. அவன் தருமராஜாவின் சமாதான வார்த்தைகளை எடுத்துச் சொன்னாலும் சரி. துரியோதனன் கேட்டு அதன்படி ஒருக்காலும் நடக்க மாட்டான். ஏனென்றால் விதியின் பலத்தால் அழிவதற்குக் காரணமான அறிவுக்கு நீதி புலப்படாது. களர் நிலத்தில் எப்போதும் எந்த விதையை விதைத்தாலும் அது முளைக்காது! பாம்புக்குப் பாலை வார்த்தாலும், அது விஷத்தைத் தவிர வேறு நல்ல பயனைத் தராது அல்லவா?'' என்று சினத்தோடு சொன்னான் அர்ச்சுனன்.

மாயக்கண்ணன் அதற்குப் பதிலேதும் சொல்லாமல் அர்ச்சுனனைக் கையமர்த்தி சாந்தமாக இருக்கும்படிக்

கட்டளையிட்டான். அர்ச்சுனன் அப்படியே கோபம் தணிந்து சாந்தமானான். அப்போது நகுலன் எழுந்து நின்று கண்ணபிரானுடைய பாதங்களை நமஸ்கரித்தான். பின்பு, தருமரை வணங்கி அவரைப் பார்த்து நகுலன், ''அண்ணா! பூமி முழுவதையும் துரியோதனனிடமிருந்து பாண்டவர்கள் பெறுவார்கள் என்று உலகத்தவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லும் அச்சொல் பொய்யாகுமோ? ராஜதர்மத்தில் ஆண்மகனுக்குள்ள வீரம் பற்றிச் சொல்லப்படவில்லையோ? தாங்கள் சொல்லுங்கள்! கேவலமில்லாத உறுதியான பகைமை கௌரவர்களுக்கும் நமக்கும் நடுவே வெகுகாலமாக நிலைத்திருக்கிறது. அதனால் கண்ணபிரான் தூது சென்றாலும், அந்தத் துரியோதனன் குருதேசத்தில் நமக்குள்ள ராஜ்ஜிய பாகத்தையும், அதன் அரசாட்சியையும் நமக்கு நிச்சயமாகக் கொடுக்க மாட்டான். ஆகையால், நாம் ராஜ்ஜியத்தைப் பகைவனிடமிருந்து யாசித்துப் பெற்றோம் என்று பூலோகத்து ராஜாக்கள் எல்லோரும் நம்மைப் பரிகசித்துப் பேசாதபடி, துரியோதனனுடைய சேனாபலத்தையும் என் தோள் பலத்தையும் மோதவிட்டு, எது சிறந்தது என்று வெகுசீக்கிரமே பரிட்சித்துப் பார்த்து விடலாமே! நம் குலத்தில் பிறந்த புரூரவச் சக்கரவர்த்தி தேவேந்திரனுக்காக ஊர்வசியை அசுரர்களிடமிருந்து போர் செய்து விடுவித்துத் தரவில்லையா? அப்படியிருக்க, நமது பத்தினியாகிய பாஞ்சாலியை ராஜசபையிலே நம் கண்முன்னால் துச்சாதனனைக் கொண்டு துகிலுரிந்த நெஞ்சுறுதி படைத்த துரியோதனனிடம் இன்னமும் இரக்கம் கொள்ளலாமா? அதனால் அவனிடம் நமக்குள்ள ராஜ்ஜியத்தைப் பிச்சையாகப் பெற நினைக்கலாமா? அப்படி நாம் ராஜ்ஜியம் பெற்று வாழ்ந்திருந்தால் உலகத்தவர்கள் நம்மைப் பற்றி என்னதான் சொல்ல மாட்டார்கள்? நம்மைக் கேவலமாகப் பேசமாட்டார்களா? தன்னுடன் பிறந்தவர்களான பாண்டவர்கள், தனது கட்டளைப்படி பதிமூன்று வருஷகாலம் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் கழித்துவிட்டு வந்திருக்கிறார்கள் என்று எண்ணி, தானாகவே நம்மீது துரியோதனன் கொஞ்சமும் இரக்கம் கொள்ளவில்லை. அத்துடன் முன்பு சொன்ன வார்த்தையின்படி நமக்குள்ள இந்திரப்பிரஸ்தத்தையும், ராஜ்ஜிய பாகத்தையும், அதன் அரசாட்சியையும் அவன் கொடுக்கவில்லை. தானாக அறிந்து இவற்றையெல்லாம் செய்யாதவன், வேறொருவர் சென்று சொன்னாலும் செய்ய மாட்டான்!'' என்றான்.

கிருஷ்ணபகவான் நகுலனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவனைக் கையமர்த்தி சாந்தம் அடையச் செய்தான். பிறகு சகாதேவனை நோக்கிக் கண்ணன், "சகாதேவா! உனது தமையனார்களின் வார்த்தைகளையெல்லாம் நாம் கேட்டோம். இனி உனது கருத்து என்ன? சொல்!" என்று கேட்டான்.

சகாதேவன் கண்ணனுக்குப் பதில் சொல்லத் தொடங்கி, "ஆதிமூர்த்தியே! இப்போது என் தமையனாரின் விருப்பப் படி நீ தூது போனாலும் என்ன? போகாவிட்டாலும் என்ன? துரியோதனன் எங்களுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுத்தாலும் என்ன? கொடுக்காவிட்டாலும் என்ன? திரௌபதியும் கூந்தலை அலங்கரித்து முடித்தாலும் என்ன? முடிக்கா விட்டாலும் என்ன? நீ நினைத்த காரியம் கடைசியில் இப்படித்தான் முடியும் என்று அடியேனுக்குத் தெரியாது! எது எப்படி நடந்தாலும் எல்லாம் உனது விருப்பப்படித்தான் முடியும்! ஆமாம், நீ சூத்திரதாரி. உன் கையிலுள்ள பொம்மைகள் நாங்கள். நீ ஆட்டுவித்தபடி ஆடுகிறோம்! குழந்தையாய் இருந்த காலத்தில் நீ பூதனையின் முலைப்பால் குடித்தாய். மருதமரங்களின் நடுவே தவழ்ந்து சென்றாய். சகடாசுரனைக் காலால் உதைத்துக் கொன்றாய். கோகுல மாளிகையில் வளர்ந்தாய். திருமாலே! உனது மாயம் இங்கு ஒருவருக்கும் தெரியாது. அதை உள்ளபடி நான் அறிவேன். ஆகையால், உனது எண்ணம் எதுவோ அதுவே எனது எண்ணம்!" என்றான். முக்காலச் செய்திகளையும் அறிவதில் கடவுளைப் போன்றவன் அல்லவா சகாதேவன்? எனவேதான் அவன் அப்படிச் சொன்னான்.

அதுகேட்டு கண்ணன் புன்னகைத்தான். 'இச்சகாதேவன் தந்திரமாகச் சொன்னான்' என்று எண்ணினான். பிறகு, கண்ணன் சகாதேவனை மட்டும் அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த ரத்தினமண்டபத்துக்குள் சென்றான். சகாதேவனை நோக்கி கண்ணன், "மைத்துனா! பாரத யுத்தம் நடக்காதபடியும், எல்லோரும் வாழும்படியும் நீ தக்கதொரு உபாயத்தைச் சொல்!" என்று கேட்டான்.

அதற்கு சகாதேவன் கிருஷ்ணனை வணங்கி, "கார்மேக வண்ணா! கோபாலா! கோவிந்தா! பாரதப் போரில் எல்லோரையும் அழித்து பூமாதேவியின் பாரத்தைப் போக்க நீ விரும்பியருளினாய். ஆகையால், உன் எண்ணப்படி

நடக்கும் பாரதப் போரை, அதனை நடத்தும் உன்னைத் தவிர தடுத்து நிறுத்தக் கூடியவர் வேறு ஒருவரும் இல்லை! கர்ணன் அரசாட்சி செய்யும்படி அர்ச்சுனனை முதலில் கொல்ல வேண்டும். பின்பு பாஞ்சாலியின் கூந்தலை அறுக்க வேண்டும். அதன் பின்னால் உன் கைகளையும் கால்களையும் விலங்கிட்டுக் கட்ட வேண்டும். இவ்வாறு நான் செய்தேன் என்றால், பாரதப் போர் நடக்காதபடி தடுத்து விடலாம்!'' என்று நடுநிலையோடு தனது மனக்கருத்தைச் சொன்னான்.

உடனே மாயவன் சகாதேவனிடம், ''நீ முன்னே சொன்ன காரியங்களையெல்லாம் நிறைவேற்றினாலும், கடைசியாகச் சொன்னபடி என்னை எப்படிக் கட்டுவாய்?' என்று கேட்டான்.

சகாதேவன் அதற்கு விடையாக, ''உனது குணங்களின் பெருமையை அறிய மாட்டாதவனே! உனது திவ்விய சொரூபத்தை நீ என்னுடைய அறிவிற்கு விஷயமாக்கி இருப்பதால், நான் உன்னைக் கட்டி விடுவேன்!'' என்றான்.

அது கேட்டதும் கிருஷ்ணன் தன்னிடம் அதிக பக்தியுடைய சகாதேவனின் கருத்தை அறிவதற்காக அக்கணமே, ''என்னை நீ கட்டு!'' என்று கூறி, பதினாறாயிரம் திருவுருவங்களை ஒன்றாக எடுத்தான்.

அப்போது சகாதேவன் அந்த வடிவங்களுக்கெல்லாம் முதன்மையான திருவுருவத்தை இன்னதென்று தனது தத்துவ ஞானத்தால் கண்டறிந்து, எல்லா உலகங்களையும் அளந்த அந்த எம்பெருமான் உபய பாதங்களைத் தனது மனக் கயிற்றால் கட்டினான்.

அவ்வளவுதான். மண்ணுலக தேவர்களாலும் விண்ணுலக தேவர்களாலும் தேடியும் பார்க்க முடியாத திருவடிகளையுடைய கண்ணபிரான், தனது எல்லா உருவங்களையும் மறைத்துக் கொண்டு, நிஜரூபமாய் தன்னை மனத்தால் கட்டிய சகாதேவன் முன்னே நின்றருளினான்! அடியார்க்கு அடங்காத ஆண்டவன் இல்லையே! அவன் அடியார்க்கும் அடியவன் அல்லவா?

தனது கால்களை மனத்தால் கட்டிவிட்ட சகாதேவனை நோக்கி கண்ணபிரான், ''அன்பனே! பக்தியால் இப்போது

எனது சொரூபத்தை நீ உணர்ந்து கட்டியது நன்றாக இருக்கிறது! இனி நீ எனது கால்களை விடு!'' என்றான்.

கண்ணனிடம் அப்போது சகாதேவன், ''கண்ணா! உன்னிடம் அடைக்கலம் புகுந்த எங்கள் ஐந்து பேரையும், இனிவரும் பாரதப் போரில், உனது திருவருள் கடாட்சத்தால் பாதுகாத்தருள வேண்டும்!'' என்று பலமுறை சொல்லி நமஸ்கரித்தான்.

கண்ணன், ''அப்படியே ஆகட்டும்!'' என்று வரம் கொடுத்தான்.

மேலும் அவன் மைத்துனனிடம், ''சகாதேவா! இப்போது இங்கே நம்மிரண்டு பேருக்கும் நடுவில் நடந்த பேச்சையும் செயலையும் நீ ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்!'' என்று கட்டளையிட்டான்.

பிறகு, அவர்கள் இருவரும் மற்றவர்களிடம் திரும்பி வந்தார்கள். அப்போது சகாதேவன் பாஞ்சாலியின் முகம் பார்த்து, ''திரௌபதி! இப்போதைக்குச் சமாதானமே நன்மை தருவது!'' என்றான்.

மாயவனும் திரௌபதியிடம், ''தங்கையே! தருமபுத்திரனுடைய எண்ணமும் இதுவே! நெருங்கிய சொந்தக்காரர்களான கௌரவர்களோடு பாண்டவர்கள் யுத்தம் செய்யாமல் ஒற்றுமையோடு ஒன்றாகக் கூடி வாழ்வதே எனக்கும் விருப்பம்!'' என்றான்.

உடனே திரௌபதி அது கேட்டுக் கண்ணீர்விட்டாள். கூந்தல் மண்ணிலே புரள கண்ணபிரானுடைய பாதங்களில் விழுந்து புலம்பினாள். அவள் மாயவனை நோக்கி, ''தன் மகன் பிரகலாதனை இரணியன் கோபித்த போது, அந்த இரணியனை அழித்த நரசிங்கமூர்த்தியே! ஆதிமூலமே என்று கூவிய யானையை முதலையிடமிருந்து காத்தருளிய திருமாலே! கோவிந்தா! துச்சாதனன் என் துகிலைப் பிடித்திழுத்து அவிழ்த்தபோது என் கணவர்களான இந்தப் பஞ்ச பாண்டவர்கள், யாதொரு பரிகாரமும் செய்யாமல் அந்த ராஜசபையிலே என் அவல நிலையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தார்கள். அந்தச் சமயத்திலும் உன்னைத்தவிர வேறு யாரும் என் மானத்தைக் காப்பாற்றவில்லை! எம்பெருமானே! ராஜசபையிலே

துச்சாதனனால் அழைத்து வரப்பட்ட என்னை, அவனைக் கொண்டே துரியோதனன் என் துகிலை அவிழ்க்கச் செய்து அவமானப்படுத்தினான். அப்படிப்பட்டவனிடம் என் கணவர்கள் ஐவரும் பிச்சையாக ராஜ்ஜியம் பெற்று வாழ்ந்திருந்தால், அன்று விரிந்த என் கூந்தலைச் சபதப்படி நான் இனிமேல் எப்பொழுது முடிப்பேன்?'' என்று சொல்லிப் புலம்பினாள்.

அப்போது சாத்தகி, ''துச்சாதனன் திரௌபதியைச் சபையில் இழுத்து வந்து துகிலுரிந்த காலத்தில் இந்தப் பீமனுடைய கையிலே சத்துருகாதினி கதாயுதம் இருந்தது. அந்த அர்ச்சுனனுடைய கையிலே காண்டீபவில் இருந்தது. அப்படியிருந்தும் அந்த ராஜசபையிலே திரௌபதி அவமானப்பட்டாள். அப்போது நீங்கள் எல்லோரும் திரௌபதியின் அவலத்தைப் பார்த்தும் அங்கே சும்மா இருந்துவிட்டீர்கள். இப்போதும் உங்களை மதிக்காத பகைவர்களிடம் நீங்கள் ஒவ்வொரு ஊரை யாசித்துப் பெற்று, அங்கே உயிரோடிருந்து வாழ்வதற்கே வழி சொல்கிறீர்கள். இனி, நீங்கள் பட்ட அவமானம் நீங்கும் விதத்தைச் சொல்லுங்கள்! உலூகன் முதலிய தூதுவரால் துரியோதனனுடைய எண்ணத்தை அறிந்திருந்தும் அவனிடம் சமாதானம் பேசுவது கண்ணனுடைய யோசனையோ? இல்லை, தருமனின் யோசனையோ?'' என்றான்.

தன் தம்பி இப்படிச் சொன்னதும் கண்ணபிரான் திரௌபதியிடம், ''தங்கையே! பாண்டவர்களுக்காக துரியோதனனிடம் தூது சென்று வந்த பின்பு, உனது கூந்தலை நானே முடிக்கின்றேன். உன் கூந்தலுக்கு நேர்ந்த கதி, இனி வரும் பாரதப் போரில் துரியோதனாதியர்களின் பத்தினிகளுடைய கூந்தலுக்கு ஏற்படும். ஆகையால் கவலைப்படாதே. நான் சொல்வதைக் கேள். உன் புத்திரனாகிய அபிமந்யு பகைவர்களைக் கொன்று உன்னுடைய கூந்தலையும் முடிப்பான்!'' என்று கூறி அவளைச் சமாதானம் செய்தான்.

அச்சமயத்தில் தம் கருத்தின்படி கண்ணன் நடப்பதைத் திரௌபதி நடுவில் வந்து தடுத்து, அவன் மனத்தை மாற்ற முயற்சித்ததைக் கண்டு தருமர் சற்றே வெறுப்படைந்தார். அதனால் அவர், ''ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசனை

செய்யும் இடத்தில் நோயாளர்களும், பற்றற்றவர்களும், அடக்கமில்லாதவர்களும், கோபமுள்ளவர்களும், படிக்காதவர்களும், சிறு பிள்ளைகளும், நீதி அறியாதவர்களும், பெண்களும் எப்போதும் வருவதற்குத் தகுதி யில்லாதவர்கள்!'' என்றார்.

பிறகு, அவர் தமது தம்பிமார்களையும் சாத்தகியையும் பேசாமல் இருக்கும்படிச் சொல்லிவிட்டு, கண்ணனைப் பார்த்து, ''கண்ணா! நீ தூது செல்!'' என்றார்.

உடனே கண்ணன் அக்கட்டளையை ஏற்றுக் கொண்டு, துரியோதனனிடம் தூது செல்லத் தனது ரதத்தின் மேல் ஏறினான். அக்கணத்தில் சங்குகளும், பேரிகைகளும், சல்லரி வாத்தியங்களும், தாரைகளும் முழங்கின. தேர் புறப்பட்டது! கண்ணனின் இருபக்கங்களிலும் பணியாளர்கள் சாமரம் வீசினர். ரதகஜதுரகபதாதிகள் கண்ணனின் ரதத்தைச் சூழ்ந்து சென்றன. அரசர்கள் பலர் கண்ணனைத் தொடர்ந்து சென்றார்கள்.

முதலிரண்டு நாட்களும் கண்ணபிரான் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களைக் கடந்து சென்றான். மூன்றாம் நாள் அவன் அஸ்தினாபுரியைக் கண்டான்.

பவழத் தொகுதிகளும், ரத்தின வகைகளும், முத்துக்களும் பதித்த தேரின்மீது வந்த கண்ணனுக்கு எதிரே அலங்காரமாகப் போடப்பட்ட பந்தல்கள் போல், அஸ்தினாபுரத்தைச் சூழ்ந்த சோலைகளிலுள்ள பாக்கு மரங்கள் அப்போது காணப்பட்டன.

மற்றும் அந்தச் சோலைகளில் உள்ள அகில்மரங்களும், சந்தன மரங்களும், பலாமரங்களும், தேமா மரங்களும், சண்பக மரங்களும், பச்சிலை மரங்களும் கண்ணனை வரவேற்பது போல காற்றில் அசைந்தாடின. தேவாதி தேவனான கண்ணபிரானுடைய வருகையைப் பார்த்து மனம் களித்து வண்டுகள் பாடின; மயில்கள் கூத்தாடின!

கண்ணன் அஸ்தினாபுரி நகரத்தை அடைந்ததும், அதன் தெற்குப் பக்கத்தில் உள்ள ஓர் அழகிய சோலையில் சென்று தனது பரிவாரங்களுடன் தங்கினான்.

அப்போது தூதுவர்கள் துரியோதனனிடம் சென்று, அவனை வணங்கி, ''ஸ்ரீராமாவதாரம் செய்தபோது

தூதனாகிய அநுமனால் ராவணனுடைய லங்காபுரியை நெருப்புக்கு இரையாக்கிய திருமால், இப்போது பஞ்சபாண்டவர்களுக்குத் தூதாக வந்து தங்களுடைய நகர மதிலின் வெளியே தங்கியுள்ளார்!'' என்று தெரிவித்தார்கள்.

துரியோதனன் அச்செய்தியைக் கேட்டவுடனே நகரத்தை அலங்கரிக்கும்படிக் கட்டளையிட்டான். அதன்படி அஸ்தினாபுரத்து ஜனங்கள் விரைவாக பட்டணத்தை அலங்காரம் செய்தார்கள்.

துந்துபிகள் முழங்க துரியோதனன் கண்ணனை எதிர்கொண்டு உபசரிக்கப் புறப்பட்டான். அப்போது கொடிய சகுனி, ''கண்ணனை எதிர்கொண்டு வரவேற்க நீ செல்வது என்ன காரியம்?'' என்று கூறி, தனது மருமகனாகிய துரியோதனனை, கண்ணனை எதிர் சென்று வரவேற்காதபடி வலுக்கட்டாயமாகத் தடுத்துவிட்டான்.

சகுனியின் யோசனைக்குக் கட்டுப்பட்ட துரியோதனன், கண்ணன் அமர்வதற்காக அழகாக அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தைச் சித்தம் செய்துவிட்டு, மன்னர்களும் தம்பிமார்களும் தன்னைப் புகழ்ந்து வணங்கப் பொற்சிங்காசனத்தில் வீற்றிருந்தான்!

அதேசமயம் பீஷ்மரும், துரோணாசாரியாரும், அசுவத்தாமனும், விதுரனும், கிருபாசாரியாரும், அறுபது லட்சம் அரசர்களும் இரண்டு யோஜனை தூரம் முன்னே சென்று கண்ணபிரானை வரவேற்றார்கள். அவனை நமஸ்கரித்து நின்றார்கள். கண்ணன் அவர்களையெல்லாம் அருள் பொங்கப் பார்த்தான். பிறகு, அவர்களின் உபசாரத்துடன் கண்ணபிரான் தத்துவ ஞானஸ்தனான விதுரனின் மாளிகைக்குச் சென்றான்.

விதுரனுடைய மாளிகைக்கு வந்த கண்ணன் எல்லோருக்கும் விடை கொடுத்து அனுப்பிவிட்டு, மாளிகையின் நடுவில் உள்ள மண்டபத்துக்குச் சென்றான். அப்போது விதுரன் ஓர் அழகிய ரத்தின சிங்காசனத்தைக் கொண்டு வந்து சமர்ப்பித்தான். அந்தச் சிங்காசனத்தில் கண்ணன் அமர்ந்தருளினான்!

தனது மாளிகைக்குத் திருமால் விருந்தினனாக எழுந்தருளிய மகிழ்ச்சியில் விதுரன் மனம் கரைந்து

உருகினான். கண்ணபிரானை மனமார வணங்கினான். அதனால் அவன் இருவகை வினைகளையும், அவற்றுக்குக் காரணமான ஜனனத்தையும் மரணத்தையும் ஒழித்தவனானான்!

மேலும், விதுரன் கண்ணனைத் தியானித்தான். பகவானுடைய சொருபத்தை நினைத்துணர்ந்து மனம் கரைந்தான். அதனால் உண்டான பேரானந்தத்தால் துள்ளிக் குதித்தான். எம்பெருமானுடைய உபயபாதங்களைச் சிரசின்மேல் வைத்துக் கொண்டாடினான். பிறவித் துன்பங்களை ஒழித்தான். அமிருதத்தைக் கைகளிலே அள்ளி எடுத்தவன் போல, தனது கண்களால் கண்ணனுடைய வடிவழகைத் தரிசித்தான்!

அதிக ஆனந்தத்துடன் கண்ணனைப் பார்த்து விதுரன், "எம்பெருமானே! எனது இந்தக் குடிசை அநாதிகாலமாக நீ யோக நித்திரை செய்தருளப் பெற்ற பழமையுள்ள திருப்பாற்கடலோ? சர்ப்பங்களுக்கெல்லாம் தலைவனாகிய ஆதிசேஷனான திருப்பள்ளிச் சயனமோ? பசு நிற ஆலிலையோ? பெருமையுள்ள நான்மறையோ? இந்தச் சிறிய குடிசையை நீ ஒரு பொருளாக திருவுளத்தில் மதித்து எழுந்தருளுவதற்கு, இது என்ன பெரிய தவம் செய்ததோ?" என்று புகழ்ந்தான்.

பின்பு அவன், "தேவனே! எனது குடிசையில் நீ விருந்துண்டு அருள வேண்டும்!" என்றான்.

ஆதிமூல நாயகன் அதற்கு ஒப்புக் கொண்டு, "உன் எண்ணப்படியே ஆகட்டும்!" என்றான்.

'பிரளயகாலத்தில் மூவுலகங்களையும் உண்டருளிய திருமால் எனது எளிய குடிசையில் விருந்துண்ண ஒப்புக் கொண்டானே! என்ன இது ஆச்சர்யம்!' என்று விதுரன் தனக்குள் சொல்லிக் கொண்டான். உடனே அவன் தனது ஆறு லட்சம் சமையல்காரர்களையும் குறிப்பாகப் பார்த்தான்.

விதுரனின் குறிப்பை உணர்ந்த சமையல்காரர்கள் அக்கணமே சமையல் செய்தார்கள். அவர்கள் கண்ணனோடு வந்த ரதகஜதுரகபதாதிகளுக்கும், ஐம்பது லட்சம் அரசர்களுக்கும், மற்றவர்களுக்கும் தேவேந்திரனுக்குக் கூட கிடைக்காத தேவாமிருதம் என்னும்படியான உணவு வகைகளைத் தயாரித்து முடித்தார்கள்.

கிருஷ்ணபகவான் விதுரனின் பரிவாரங்களால் சித்தம் செய்யப்பட்ட பரிமள மணம் கமழும் நல்ல தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தான். விதுரனால் படைக்கப்பட்ட பல வகை கறிகளோடு கூடிய அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தான். பின் தனது பரிவாரங்களுக்கும், உடன் வந்த அரசர்களுக்கும் விருந்துபசாரம் செய்தான். அவர்கள் எல்லோரும் விருந்து சாப்பிட்டு, தேவர்கள் அமிருதம் உண்டது போலத் திருப்தி அடைந்தார்கள்.

எல்லோரும் விருந்து சாப்பிட்ட பின்பு, விதுரன் கொடுத்த சந்தனக் குழம்பையும் வாசனைப்பொடிகளையும் தங்கள் மார்பிலும் தோளிலும் பூசிக் கொண்டார்கள். விதுரனால் கொடுக்கப்பட்ட புஷ்பசரங்களைத் தலையில் சூடிக் கொண்டார்கள். உடம்பில் மாலையாகப் போட்டுக் கொண்டார்கள். அப்போது கண்ணபிரான் வெண்கொற்றக் குடையின் நிழலிலே போடப்பட்டிருந்த சிங்காசனத்தில் எழுந்தருளினான்.

அதேசமயம் சூரியன் அஸ்தமித்தான்!

நகரெங்கும் மங்கல தீபங்கள் ஏற்றப்பட்டன.

கண்ணபிரான் வீற்றிருந்த மண்டபத்தில் பல்லாயிரம் வீரர்கள் திருவிளக்குகளை ஏற்றிக் கொண்டு வந்து நின்றார்கள்.

விதுரன் அப்போது கண்ணனை நமஸ்கரித்து, ‘‘பாற்கடலிலுள்ள ஆதிசேஷனாகிய சயனத்தைவிட்டு நீங்கி இவ்வுலகத்துக்குத் தேவனே வந்தருளினாய். அதனால் ஆதிசேஷன் பொலிவிழந்தான். பின்பு நீ கோகுலத்தில் வளர்ந்தாய். மருதமரங்களின் நடுவே தவழ்ந்தாய். கங்காநதியின் திருவடியிலிருந்து பெருகிய அழகிய கிருபாசமுத்திரமே! நீ இங்கே இப்போது எழுந்தருளிய காரணம் என்ன? கூறியருள்வாய்!’’ என்றான்.

அதுகேட்டு கண்ணபிரான் விதுரனை நோக்கி, ‘‘விதுரனே! வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்துக் கொண்டு பாண்டவர்கள் மச்சதேசத்து உபப்லாவியத்தில் வெளிப்பட்டுத் தங்கி இருக்கிறார்கள். நாம் அந்தப் பாண்டவர்களுக்காக, அவர்களுடைய ராஜ்ஜிய பாகத்தைத்

துரியோதனனிடமிருந்து கேட்டுப் பெறுவதற்குத் தூதாக வந்தோம்!'' என்று அன்புடன் சொன்னான்.

உடனே விதுரன், ''கொடிய துரியோதனன் சமாதானமாக தருமனுக்கு நீதிப்படி ராஜ்ஜிய பாகத்தைக் கொடுக்கமாட்டான். போரில் பாண்டவர்கள் அவனைக் கலக்கினால்தான் அவன் நீதியை அறிவான்!'' என்று கண்ணனுக்குத் துரியோதனனுடைய குணத்தை எடுத்துக் கூறினான்.

அதுகேட்டு கண்ணபிரான், ''துரியோதனன் பாண்டவர்களுக்குள்ள ராஜ்ஜியத்தைச் சமாதானமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படி அவன் கொடுக்காவிட்டால், பாண்டவர்கள் அவனையும் அவனது தம்பிமார்களையும் யுத்தத்தில் நிச்சயமாக அழித்து விடுவார்கள்!'' என்றான்.

மேலும் கண்ணன் தொடர்ந்து, ''ஏழைகளாகிய தங்களுடைய சொந்தக்காரர்கள் தங்களிடம் பொருள் கேட்டு யாசித்தால், மன்னர்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் பொருள் கொடுக்க மாட்டார்கள். அதே சொந்தக்காரர்கள் போரில் தங்கள் மேல் அம்புகளைப் பிரயோகித்து அழிக்கும்போது, அவர்கள் எது கேட்டாலும் அந்த மன்னர்கள் அவற்றை உடனே கொடுத்துவிடுவார்கள். இதுவே உலகத்திலுள்ள அரசர்களின் மனோபாவம்!'' என்று சொன்னான்.

பின்பு, கிருஷ்ணமூர்த்தி விதுரனுக்கு விடை கொடுத்து அனுப்பினான். காவலர்கள் துடி என்னும் வாத்தியத்தை வாசிக்க, அவன் பரிமள மலர் மஞ்சத்தில் பள்ளி கொண்டான்!

சூரியன் உதித்தான்!

அஸ்தினாபுரத்து ராஜசபையிலே துரியோதனன் வெண்கொற்றக் குடையின் கீழ் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அவனுக்குப் பெண்கள் சாமரம் வீசினார்கள். அந்தணர்கள் புகழ் பாடினார்கள். முனிவர்கள் ஆசி கூறினார்கள். மூன்று லட்சத்து அறுபத்தோராயிரம் ராஜாக்கள் அவனை வணங்கினார்கள். அப்போது அவனைச் சுற்றி பீஷ்மரும், துரோணாசாரியாரும், தம்பிமார்களும், விருது கொடி ஏந்திய பெண்களும், சாஸ்திர மேதைகளும்

இருந்தார்கள். பதினொரு அக்ஷௌகிணி சேனைகள் அவனை வந்து சூழ்ந்திருந்தன!

நவரத்தின கொலுமண்டபத்தில் முத்துக்கள் பதித்த பொன்மயமான சிங்காசனத்தில் தேவேந்திரன் போல் வீற்றிருந்த துரியோதனன், தனது பாதங்களை நமஸ்கரித்த வேந்தர்களைப் பார்த்து, ‘‘நீங்கள் உட்காருங்கள்!’’ என்று கட்டளையிட்டான்.

மன்னனின் கட்டளைப்படி அவர்கள் தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

பிறகு, துரியோதனன் அரசர்களையெல்லாம் பார்த்து, ‘‘வேந்தர்களே! ராஜ்ஜியத்தைப் பெறுவதற்காகப் பாண்டவர்கள் என்னோடு யுத்தம் செய்யக் கருதியுள்ளார்கள். அவர்களின் தூதுவனாக இடைச்சாதி கண்ணன் இப்போது இந்த ராஜ சபைக்கு வரப்போகின்றான். அப்போது உங்களில் யாரேனும் அவனை எதிர்கொண்டு வரவேற்று உறவு கொண்டாடினால், அவர்களின் ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்திவிடுவேன்!’’ என்று கோபமாகச் சொன்னான்.

அவ்வாறு துரியோதனனும் மற்ற அரசர்களும் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கையில், கண்ணபிரான் தூங்கி எழுந்தான். காலைக் கடமைகளை முடித்து சூரிய நமஸ்காரம் செய்தான். பிறகு, அவன் விதுரனுடைய மாளிகையிலிருந்து புறப்பட்டு ராஜசபைக்கு எழுந்தருளினான்.

அப்போது பீஷ்மரும், துரோணாசாரியாரும், அசுவத்தாமனும், விதுரனும், துரியோதனனைத் தவிர மற்ற மன்னர்களும் கண்ணனுடைய திருபாதங்களை வணங்கினார்கள். கர்ணனோ ஒன்றும் புரியாமல் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தான். தனது எண்ணத்துக்கு மாறாக எல்லோரும் கண்ணனைக் கௌரவித்ததைப் பார்த்ததும் சகுனியோ, அந்தக் காட்சியைப் பார்க்கப் பொறுக்காமல் மனம் கொதித்து வெதும்பினான். அப்படியிருக்கும்போது மற்றவர்கள் கொண்டு வந்து சமர்ப்பித்த ஆசனத்தின்மீது கண்ணன் எழுந்தருளினான்!

துரியோதனன் அச்சமயத்தில் வெகு அலட்சியமாகக் கண்ணனை நோக்கி, ‘‘நேற்று நீ இந்தப் பெரிய பட்டணத்துக்கு வந்து சேர்ந்தும், எனது மாளிகைக்கு வந்து

தங்காமல் விதுரனின் மாளிகையில் தங்கினாய்! இதற்கு என்ன காரணம்? சொல்!'' என்றான்.



அதற்குக் கிருஷ்ணபகவான், ''துரியோதனா! எனக்கு உன் வீடு என்றும், என் வீடு என்றும் பேதமில்லை. இந்த உன் வீடு என் வீடு. துவாரகையிலுள்ள அந்த என் வீடு உன் வீடு. ஆனால், நான் வரும் போதே வழியில் விதுரன் வந்து என்னை வரவேற்று உபசரித்தான். அதனால் நான் அவன் வீட்டுக்குச் சென்றேன். உன் வீட்டுக்கு வராமல் நான் அவன் வீட்டுக்குப் போனதற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால், சிந்தித்துப் பார்த்தால் இதற்கு வேறொரு காரணமும் உண்டு. நானோ பஞ்சபாண்டவர்களின் தூதனாக இந்த நகரத்துக்கு வந்தவன். அப்படிப்பட்ட நான் இன்று உன்னோடு தங்கி விருந்துண்ட பின்பு, உன்னை வெறுத்துப் போக நினைப்பது நியாயமில்லை அல்லவா? ராஜதுரோகம் செய்யும் மந்திரிகளும், பெரியோர்களின் உபதேசங்களை அலட்சியம் செய்பவர்களும், பிறர் செய்த உபகாரத்தை மறந்தவர்களும்,

விருந்துபசரித்தவர்களைக் கோபித்து அவர்களுடன் போர் செய்ய எண்ணுபவர்களும் சூரியனும் சந்திரனும் உள்ளவரை நரகலோகத்தை அடைந்து துன்பங்களை அனுபவிப்பார்கள்!'' என்று பதில் கூறினான்.

துரியோதனன் அதுகேட்டு மாதவனைப் பார்த்து இகழ்ச்சியாகச் சிரித்தான். "நீ தூதனாக வந்த விபரத்தைச் சொல்!'' என்று அவன் கண்ணனிடம் கேட்டான்.

கிருஷ்ணபகவான் உடனே, "துரியோதனா! உன் கூடப் பிறந்த பாண்டவர்கள் உன்னோடு ஆடிய சூதாட்டத்தில் தங்களுடைய ராஜ்ஜியத்தை இழந்தார்கள். ஆகையால், அப்போது நீங்கள் சொன்ன வார்த்தைப்படி அவர்கள் வருத்தத்துடன் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் கழித்து விட்டு, இப்போது திரும்பி வந்திருக்கிறார்கள். எனவே, நீ இப்போது அவர்களுடைய ராஜ்ஜிய பாகத்தை சிநேகத்தோடு அவர்களுக்குக் கொடுப்பாயாக! அரவக்கொடி வேந்தனே! உனது அன்புள்ள உடன் பிறந்தவர்களான பாண்டவர்களை வரவழைத்து, அவர்களுக்குச் சில நாடுகளைக் கொடுத்து அவர்களோடு சிநேகமாக நீ வாழ்ந்திரு. எல்லா அரசர்களும் உனது அந்தச் செயலைக் கண்டு, உன்னைச் சத்தியசந்தன் என்று புகழ்ந்து, உன்மேல் அன்பு வைத்துத் தினந்தோறும் துதிப்பார்கள்! நீ இப்படிச் செய்யாமல் பாண்டவர்களுக்கு ராஜ்ஜியபாகம் கொடுக்க மறுத்துவிட்டால், உனக்குத் தருமமும் ஆண்மையும் புகழுமில்லை!'' என்று கூறினான்.

அதுகேட்டு துரியோதனராஜன், "பஞ்ச பாண்டவர்கள் அந்தக் காலத்தில் சூதாடி தங்களுடைய பொருள்களை யெல்லாம் உரிமையில்லாமல் கைவிட்டுச் சென்றார்கள். ஆனால், இப்போது நீ தந்திரமாக மீண்டும் அந்தப் பொருள்களையெல்லாம் அவர்களுக்காகப் பறிக்க நினைக்கிறாய். நான் என்ன அவர்களைவிட வலிமையிலும் புத்தி சாதுர்யத்திலும் குறைந்தவனோ? இனியும் தொடர்ந்து வனவாசம் செய்வதே அவர்களுக்கு நன்மை தரும்!'' என்று கண்ணனின் முகம் பார்த்துச் சொன்னான்.

மேலும் அவன் கோபத்துடன் கண்ணனிடம், "கண்ணா! நீ என்னை வெறுத்தால் என்ன? இங்கிருக்கும் அரசர்கள் இது என்னவென்று பிரமித்தால் என்ன? நீயும் இவர்களும் எனது செய்கையைப் பார்த்து அநேக

எண்ணங்களை எண்ணினால் என்ன? மறைவில் சென்று இதைப் பற்றி நினைத்துச் சிரித்தால் என்ன? நான் முன்பு கூறிய வார்த்தை சத்தியம் தவறியது என்று தேவர்கள் சொன்னால் என்ன? பஞ்சபாண்டவர்கள் என்னோடு கோபித்து உக்கிரமாகக் கொடிய போரைச் செய்தால் என்ன? ஈ தங்கும் அளவுள்ள இடமாயினும், இந்தப் பூமியில் அரசாள அவர்களுக்கு இனி நான் கொடுக்க மாட்டேன்!'' என்று உறுதியாகக் கூறினான்.

கண்ணன் மீண்டும் துரியோதனனை நோக்கி, ''ராஜனே! பாண்டவர்களுக்குரிய ராஜ்ஜிய பாகத்தை முழுதுமாக நீ கொடுக்காவிட்டாலும், அதில் பாதியையாவது அவர்களுக்குக் கொடு!'' என்று வேண்டினான்.

மாதவனின் அந்த வார்த்தைகளையும் துரியோதனன் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதனால் கண்ணன், ''ஐந்து ஊரையாவது அவர்களுக்குக் கொடு!'' என்று வணக்கமாக அவனிடம் யாசித்தான்.

அதற்குத் துரியோதனன், ''கண்ணா! தேசமுழுவதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமோ? இல்லை, ஐந்து ஊர்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமோ? நாம் முன்பு அவர்களுக்குக் காட்டைக் கொடுத்தோம். அக்காட்டில் அலைந்து திரிந்து அவர்கள் வசித்த பின்பு, உருமாறிப் போனார்கள். மீண்டும் தங்களுக்கென்று அவர்களுக்கு ஒரு வீட்டைக் கொடுத்தாலும், அவர்கள் அதை வேண்டாம் என்று வெறுத்துவிடுவார்களோ? முடிவாகச் சொல்கிறேன். என்னிடமிருந்து அவர்களுக்காகச் சிறிது இடத்தையாவது பெற வேண்டும் என்று நினைக்கும் உனது நினைப்பை இனி நீ விட்டுவிடு!'' என்றான்.

கிருஷ்ணபகவான் அதுகேட்டு அவனை நோக்கி, ''துரியோதனா! தமது மாற்றாந்தாயின் பிள்ளைகளுக்காக தமக்குரிய ராஜ்ஜியத்தையும் செல்வத்தையும் கொடுத்தவரும் உன்குலத்தில் பிறந்தவருமான பீஷ்மரும் இப்போது இந்தச் சபையில்தான் இருக்கின்றார். அப்படியிருக்க உன்னை விட மூத்தவனும், அதனால் ராஜ்ஜியத்துக்குரிய பாத்தியதையுடையவனுமான தருமனுக்கு நீ ஐந்து

ஊர்களையாவது கொடுக்காவிட்டால், உனது அரசாட்சி நீதியற்றதாகும்! ஒரு குலத்தில் தோன்றிய இரண்டு அரசர்களும் அரசாட்சி உரிமையை அடைந்தால், அவர்கள் இருவரும் ஒரே சமமாக வாழ்வு பெறுதல் எல்லாக் குலங்களிலும் ஏற்படும் இயல்பாகும். ஆனால், குருவம்சத்தில் பிறந்த அரசர்களின் சுபாவம் இதற்கு மாறாக இருக்கிறதே. இதுவும் மிக நன்றாக இருக்கிறது!'' என்றான்.

மாயவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு துரியோதனன் மிகவும் கோபம் அடைந்தான். அவன் கண்கள் தீப்பொறிகளைச் சிந்தின. அந்தக் கொடுங் கோபத்துடன் கண்ணனை நோக்கி அவன், ''இந்தப் பூமி வீரர்களுடையது. அதனை அடைவதற்கு மற்றவர்கள் பாத்தியதைக் கொண்டாடுவது தகுதியில்லை!'' என்றான்.

உடனே கண்ணபிரான், ''துரியோதனா! நீ பாண்டவர்களுக்கு அரசாட்சி கொடுக்கவில்லையென்றால், குருக்ஷேத்திரத்துக்கு வந்து அவர்களை எதிர்த்து கொடிய யுத்தம் செய்வதற்கு இப்போது கையடித்துச் சத்தியம் செய்து கொடு!'' என்று இறுதியாகச் சொன்னான்.

துரியோதனன் கண்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கோபத்தால் உடம்பு துடித்தான். எதிரே இருந்த தூணைக் கைகளால் மோதினான். பிறகு கண்ணனைப் பார்த்து அவன், ''இழிந்த இடையர்களோடு காட்டில் பசுக்களை மேய்க்கின்ற உனது பிறப்பின் கேவலத்தையும், இடைப்பெண்கள் உன்னை உரலோடு கட்டி வைத்ததையும் நீ மறந்து, ராஜவம்சத்தில் சிறந்த குருவம்சத்து அரசர்களின் சத்தியத்தையும் குற்றமற்ற என் பிறப்பின் பெருமையையும் உணராமலோ சபையில் இந்த வார்த்தைகளைச் சொன்னாய்! கண்ணா! பஞ்சபாண்டவர்கள் போரில் என்னை எதிர்த்து நின்றால், நான் சோர்ந்து கோழையாக இருந்து விடுவேனோ? தன்னை விரோதித்து எதிர்க்கும் மதயானைகளைக் கண்டு, சிங்கராஜா அவற்றோடு போர் செய்வதற்குப் பயப்படுமோ? குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்களோடு போர் செய்வதற்கு ஒப்புக் கொண்டால் முன்னதாகவே கையடித்துச் சத்தியம் செய்து கொடு என்று நீ என்னைப் பார்த்துச் சொன்னாய். இப்படி நீ உனது செருக்கின் காரணமாகத்தான் சொன்னாயோ? இல்லை, எனது சொல் தவறும் என்று நினைத்து நீ இப்படிச் சொன்னாயோ? ஆகா, அரசர்களின்

நியாயம் மிக அழகாக இருக்கிறது! பாண்டவர்களின் பத்தினியான பாஞ்சாலியை, நான் ராஜசபையிலே துச்சாதனனைக் கொண்டு அவளது கூந்தலைப் பிடித்து இழுத்து வரச் செய்து வஸ்திரபங்கம் செய்தேன். அப்போது ஒன்றும் செய்ய முடியாமல் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அல்லவா அந்தப் பாண்டவர்? காட்டில் கிடைத்த குட்டை நீரைக் குடித்து, யார் போட்டாலும் அந்தச் சோற்றைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்த பாவிகளான அந்தப் பாண்டவர்களும் இப்போது மானத்தின் நிலைமையை அறிவார்களோ? அந்தப் பாண்டவர்களின் தாய்மார்களும் இரண்டு பேர். அவர்களைப் பெற்ற தந்தைமார்களோ ஐந்து பேர். அப்படியிருக்க, குருவம்சத்துக்குரிய ராஜ்ஜியத்துக்கு அவர்கள் விருப்பத்தோடு பாத்தியதை ஆவார்களாம். அந்தப் பாண்டவர்கள் ஐந்து பேரும் ஒரே ஜன்மத்தில் ஒரு பெண்ணை அன்புடன் மணந்து கொண்டு தனித்தனியே விரும்பிச் சேர்வார்களாம். அவர்களோடு ஒப்ப ஒரே குலத்தில் தோன்றியவன் என்று சொல்வது, தாய் தந்தை வம்ச உரிமை மணம் செய்தல் ஆகிய எல்லாவற்றிலும் ஒரு குற்றமும் இல்லாத என்னையாம்! இது என்ன ஆச்சர்யம்! இவைகள் என்ன நியாயமாம்!'' என்றான்.

துரியோதனன் அப்படிச் சொன்னதும், அவனுடைய அறியாமை ஆணவத்தை நினைத்து கண்ணபிரான் அவனை நோக்கி மெல்லச் சிரித்தான். பிறகு அவன், 'இனி பாண்டவர்களின் எண்ணம் நிறைவேறும்' என்று எண்ணி அங்கிருந்து புறப்பட்டான். நேரே கண்ணன் விதுரனுடைய மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். நல்லொழுக்கம் இல்லாதவர்கள் கோபித்த போதும், மாசற்ற பெரியோர்கள் அவர்களின் எதிரில் கோபிப்பார்களோ?

கண்ணபிரான் சென்ற பிறகு துரியோதனன், விதுரன் கண்ணனுக்கு விருந்துபசரித்ததைப் பற்றிக் கோபித்தான். அவன், ''கண்ணனுக்கு இந்த விதுரன் விருந்துபசாரம் செய்ததற்கு உண்டான சம்பந்தம் என்ன?'' என்றான்.

மேலும் அவன், ''என் வீட்டில் சாப்பிடாமல் இருந்த கண்ணனுக்குத் தன் வீட்டில் விதுரன் விருந்துபசாரம் செய்தான். பாண்டவர்கள் எனது ராஜ்ஜியத்தைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியோ இவன் கண்ணனுக்கு அப்படி விருந்துபசாரம்

புரிந்தான்? இவன் என் தந்தையோடு கூடப் பிறந்தவன். இன்று வரையிலும் நான் என் கையால் கொடுத்த சோற்றை உண்டு வாழ்பவன். அப்படியிருந்தும் இவன் என்னிடம் கொஞ்சமும் அன்பில்லாதவன். ஆகையால், இவன் எனக்கு நேர் பகைவனாக இல்லாவிட்டாலும், உட்பகைவனாக இருக்கின்றான் அல்லவா? தாசிகள் ஒருவன் கொடுத்த செல்வத்தால் அவனோடு கூடி இன்பம் தருவார்கள். அதேசமயம் வேறு ஒரு புருஷன் அவர்களுக்கு முன்னவனைக் காட்டிலும் அதிகமாகச் செல்வத்தைக் கொடுத்தால், அந்த முதல் புருஷனைக் கைவிட்டுப் பின்னால் வந்த புருஷனோடு சேர்ந்து விடுவார்கள். அது மட்டுமோ? குறைவான செல்வத்தைக் கொடுத்த முதல் புருஷனை அவர்கள் ஒரு பொருளாக மதிப்பார்களோ? பொருள் கொடுப்பவர்களுக்கெல்லாம் மனைவியாவதுதான் தாசிகளின் இயல்பு. ஆகையால், ஒரு தாசியின் மகனான விதுரன், பழையவனாகிய என்னிடம் கொண்ட அன்பை விட்டுப் புதிதாக வந்த கண்ணனோடு சேர்ந்து கொண்டான். தாயின் குணம் அல்லவோ தனயனையும் தொடர்ந்தது? இப்படிப்பட்ட ஓர் அதிசயத்தை என்ன சொல் சொல்லி வெறுத்து ஒதுக்குவது?'' என்று விதுரனைப் பலவாறும் நிந்தித்துப் பேசினான்.

அதுகேட்டு விதுரன் வருத்தத்தோடு எழுந்து நின்றான். அவன் துரியோதனனைப் பார்த்து, ''நீ என்னைக் கேவலமாகப் பேசினாய். அப்படிப் பேசிய உனது வாயில் ரத்தம் பெருகும்படி, நான் அந்த வாயில் என் வாளாயுதத்தால் துளை செய்து உனது தலையையும் வெட்டிவிடுவேன். ஆனால், குருவம்சத்தில் பிறந்த ஒருவன், தனது புதல்வனைக் கொன்றான், என்று இந்த உலகத்தவர்கள் மட்டுமல்லாமல் தேவர்களும் பரிகசித்துச் சிரிப்பார்களே! அதற்காகவே நான் இப்போது ஆலோசித்துப் பேசாமல் இருக்கின்றேன். இல்லாவிட்டால் என்னைக் கேவலப்படுத்திப் பேசிய நாக்கோடு இன்னும் நீ வாழ்ந்திருப்பாயோ? பாண்டவர் தூதனாகிய கண்ணனுக்கு உதவியதற்கே, நீ இப்போது என்னைப் பழித்தாய். நான் வெளிப்படையாக அந்தப் பாண்டவர்களுக்கே உதவினாலும் அரசர்கள் என்னைப் பழிக்கமாட்டார்கள்! நான் ஒரு தடவைப் பேசிய வார்த்தையை மறுதடவை மாற்றிப் பேசமாட்டேன். ஆம், நான் இரண்டு வார்த்தை எப்போதும் சொல்லமாட்டேன்.



இனி வரும் பாரதப் போரில் நான் யார் பக்கமும் நின்று கொடிய அம்பைத் தொடுக்க மாட்டேன்! இது சத்தியம்!'' என்று சொல்லி, தனது விஷ்ணுதனுசை தனித்தனியே இரண்டு துண்டாகும்படி வெட்டி எறிந்தான்.

பின்பு, விதுரன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று தன் மாளிகையை அடைந்தான்.

விதுரன் அப்படிக் கோபித்துக் கொண்டு போனதைக் கண்ட அரசர்கள், 'சிவதனுசையும் விஷ்ணுதனுசையும் ஒத்த தனது வில்லை இவன் முறித்தெறிந்து விடுவதா? காண்டீப வில்லையுடைய அர்ச்சுனன் போரில் வந்து பராக்கிரமித்தால், இனி அவனுக்கு எதிராக நின்று யுத்தம் செய்யும் வில்லாளி யாரும் இல்லையே!' என்று மனமிரங்கினார்கள்.

அப்போது பீஷ்மர் மனம் கலங்கி துரியோதனனை நோக்கி, ''வில்வீரனாகிய விதுரனைப் பழித்துப் பேசிய நீ, இனி பகைவர்களை எவ்வாறு ஜெயிப்பாய்? தனியாக நின்று

ஜெயிப்பாயோ? இனி பூமி முழுவதையும் பாண்டவர்களே அரசாளும்படி நீயே செய்துவிட்டாய்! உனது புகழ்முழுதும் அழிந்து விட்டது!'' என்று கூறி அவனைக் கண்டித்தார்.

துரியோதனன் உடனே, ''விதுரனைத் தவிர வில்வித்தையில் சிறந்த வேறு வீரர்கள் எவரும் இல்லையோ? தானத்தையே ஒழுக்கமாகக் கொண்ட அங்கதேச பூபதியாகிய கர்ணனுடைய வில்லொன்றே பஞ்சபாண்டவர்களைப் போரில் அழிப்பதற்குப் போதும்! புலவர்கள் பரணி பாடுவதற்கும் அவனுடைய வில்லின் வலிமை ஒன்றே போதும்! என் பக்கத்தில் பிதாமகராக் தாங்களும், வில்லாசிரியராகிய துரோணாசாரியாரும், அசுவத்தாமனும், மற்ற அரசர்களும் இருக்கின்றீர்கள். அப்படியிருக்க, கிருஷ்ணனுக்கு விருந்துபசாரம் செய்த விதுரன் ஒருவன் என்னை வெறுத்தால் என்ன? என்னைவிட்டுத் தனியே போய் இருந்தால் என்ன? தன் வில்லை அவன் முறித்துப் போட்டால் என்ன? நம்மை எதிர்த்துப் போர் செய்ய வல்லவர்கள் யார் இருக்கின்றார்கள்?'' என்றான்.

அவ்வாறு துரியோதனன் கூறிமுடித்ததும் கர்ணன், ''நான் இருக்கும்போது போரில் அர்ச்சுனனை எதிர்த்துப்போய், அவனுடைய உயிரைக் கொல்வதற்கு வலிமையுள்ளவர்கள் யார் இருக்கின்றார்கள் என்று நன்றாகச் சொல்கிறீர்கள்! இந்தக் கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாக இருந்தாலும், என்னுடைய வில்லாற்றலை அப்போது யுத்தகளத்தில் யாவர்க்கும் பிரதியக்ஷமாகப் பார்க்கச் செய்வேன்! மானிடர்கள் மட்டுமல்லாமல் தேவர்களும் என்னோடு பகைத்துக் கோபித்தாலும், என்னுடைய ஒரு பாணத்தாலேயே அவர்கள் அழிவார்கள். இது நிச்சயம்! நான் யுத்தத்தில் கொடிய நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தால் அர்ச்சுனன் உயிரோடு திரும்பிச் செல்வானோ? இந்த உலகத்திலே எனக்குச் சமமான ஒரு வில்லாளி இரண்டு பக்கச் சேனையிலும் ஒருவரும் இல்லை!'' என்று செருக்குடன் சொன்னான்.

பீஷ்மர் அதுகேட்டுக் கோபித்தார். அவர் கர்ணனைப் பார்த்து, ''தன்னை எட்டுத்திக்கிலும் வந்து வளைத்துக் கொண்ட அசுரர்களையெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல அழித்து, தேவர்களுக்கு அரசாட்சிச் சிறப்பைக் கொடுத்த அர்ச்சுனனுக்குச் சமமானவன் நீயோ?

சந்திரனுக்குச் சமமானவன் சுக்கிரனோ? அர்ச்சுனனை எண்ணும் போது நீயும் வில்வித்தைக் கற்றவனாவாயோ?'' என்று கண்டித்தார்.

சூரியமைந்தனாகிய கர்ணன் பீஷ்மரின் வார்த்தைகளால் சினமடைந்தான். அவன் பீஷ்மரை நோக்கி, ''துரியோதனனுடைய அன்னத்தைச் சாப்பிடுகின்ற நீர் அவனுடைய பகைவர்களின் கீர்த்தியையும் பராக்கிரமத்தையுமே எடுத்துச் சொல்பவராக எப்போதும் இருக்கின்றீர். எல்லாவுலகத்தவர்களும் ஒன்றாகத் திரண்டு வந்தாலும் சரி. அவர்கள் என்னோடு போர் செய்ய வல்லவர்கள் என்றால், என்னை எதிர்த்துப் போர் செய்ய அனுப்பும். ஆமாம். சிவபெருமானும் எனது அம்புக்குப் பயப்படுவான்!'' என்று நிஷ்டூரமாகப் பேசினான்.

பின்பு பீஷ்மர், 'போர் நடக்கும்போது யுத்தகளத்தில் இக்கர்ணனுடைய பராக்கிரமத்தை நேரில் பார்த்தறிவோம்!' என்றெண்ணி, வேறொன்றும் பேசாமல் அச்சபையைவிட்டு எழுந்து தனியே சென்றார். அதன் பிறகு துரியோதனன் எல்லோருக்கும் விடை கொடுத்து அனுப்பினான்.

இது இப்படியிருக்க, கண்ணபிரான் தங்கியுள்ள விதுரன் மாளிகையில் நடந்த செய்தியை இனிச் சொல்வோம்!

தனது மாளிகைக்குச் சென்ற விதுரன் நேரே சென்று கண்ணபிரானை நமஸ்கரித்தான். அப்போது மாதவன் அவன் முகம் நோக்கி, ''இரண்டு சிறந்த விற்கள் உள்ளன என்று இந்தப் பெரிய பூலோகத்தில் பிரசித்தமாகச் சொல்லப்படுகின்ற விற்களுள் ஒன்றாகிய உனது வில்லை, நீ முறித்துப் போடும்படி உனக்குக் கோபம் உண்டானதற்கான காரணம் என்ன? சொல்!'' என்று கேட்டான்.

விதுரன் அதற்கு, ''பகவானே! தனக்கும் பிறருக்கும் நன்மையான காரியத்தைச் சிந்திக்காதவனுக்கும், மந்திரிகளின் வார்த்தைகளைக் கேட்டு நடக்காதவனுக்கும், தான் அழிவதைச் சிந்திக்காதவனுக்கும், தனக்கு இனி ஏற்படும் பயன்களை அறியாதவனுக்கும், தனது நாக்கை அடக்கி வைக்காதவனுக்கும் உதவியாகச் சென்று யுத்தத்தில் இறப்பது குற்றமாகும் என்று உலகத்தில் உள்ள பெரியோர்கள் எல்லோரும் சொல்லுகின்றார்கள் அல்லவா?

மனிதர்கள் சிலர் தமக்குப் பொருள் வந்தபோது, அந்தப் பொருள் தமக்கு வருவதற்குத் திருவருள் புரிந்த கடவுளையும் கொஞ்சமும் விரும்பிக் கொண்டாடமாட்டார்கள். தாம் சொல்லும் வார்த்தைகளை ஆராய்ந்து உணர்ந்து சொல்ல மாட்டார்கள். உறவினர் என்றும் நண்பர் என்றும் தாட்சணியம் பார்க்க மாட்டார்கள். தாம் ஜெயித்து விடுவோம் என்று எண்ணுவார்களே தவிர, பகைவர்களின் வலிமையைச் சிறிதும் மதிக்க மாட்டார்கள். எல்லாவற்றையும் விட வலிமையான ஊழ்வினையின் பயனையும் அவர்கள் ஆராய மாட்டார்கள். எவருடைய திரிகரணங்களுக்கும் எட்டாத நீ, தனது அரண்மனைக்கு வந்து நல்லுபதேசம் செய்தும், அதனை ஏற்று பாண்டவர்களோடு சிநேகமாக வாழ ஒத்துக் கொள்ளாத துரியோதனன், நீ வந்த பின்பு என்னையும் உன்னையும் நிந்தித்துப் பேசினான். அவன் சொன்ன அந்த இழிவான வார்த்தைகள் எனக்குப் பொருந்தாததால் நானும் எனது பெரிய வில்லை முறித்துப் போட்டுவிட்டு வந்து விட்டேன்!'' என்றான்.

மாதவன் விதுரனின் வார்த்தைகளால் மகிழ்ச்சி அடைந்தான். அவன் விதுரனிடம், ''ராஜனே! துரியோதனன் போர்க்களத்தை அடையும் சமயத்தில் நீ அவனைவிட்டு நீங்கிய அந்தக் கணமே, உனது அன்புக்குரிய குமாரர்களான பாண்டவர்கள் ராஜ்ஜிய பாகத்தையும் செல்வத்தையும் மற்றவற்றையும் அடைவார்கள்! நெய்யூற்றி விறகுகளைத் தீப்பற்ற வைத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்தாலும், எரிவதற்குத் தேவையான காற்று சமயத்துக்கு வந்து உதவி செய்யாவிட்டால், விறகு நன்றாக எரியாதல்லவா? சிவபெருமானைப் போன்ற உனது கைவில் முறிந்ததால், இனி நிச்சயம் துரியோதனனுடைய சைனியம் யமலோகத்துக்குச் செல்லும்! ஆகவே, நீ துரியோதனன் கூறிய கேவல வார்த்தைகளையெல்லாம் பொறுத்துக் கொள்!'' என்று சொல்லிவிட்டு, குந்திதேவியின் மாளிகைக்குச் சென்றான்.

கண்ணனின் வருகையைக் கண்டு குந்திதேவி மிகவும் சந்தோஷம் அடைந்தாள். தனது மருமகனாகிய கண்ணனை அவள் எதிர்கொண்டு சென்று வரவேற்று அழைத்து வந்தாள். காளமேகத்தை மகிழ்ச்சியோடு பார்க்கின்ற மயில் போல, அவள் கண்ணனை மகிழ்ச்சி பொங்கப் பார்த்தாள்.

குந்திதேவி கண்ணனைப் பார்த்து, ''நான் வசிக்கும் இந்த வீட்டுக்கு நீ வந்து சேர்ந்தது, நான் செய்துள்ள எந்தப் பெருந்தவத்தின் பயனோ?'' என்று புகழ்ந்தாள்.

மேலும் கண்ணனைப் பார்த்து, வனவாசம் செய்த தன் பிள்ளைகளைப் பார்த்தவள் போல அதிகமாக மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியுடன் கண்ணனின் சிவந்த அழகிய திருமுகத்தை நோக்கி, ''கண்ணா! நீ இந்த ஊருக்கு வந்ததற்கு என்ன காரணம்? சொல்லியருள்!'' என்று கேட்டாள்.

அதற்குக் கண்ணன் குந்திதேவியை நோக்கி, ''பாண்டவர்களின் தூதனாகத் துரியோதனனின் உள்ளக் கருத்தை அறிவதற்கு நான் இங்கு வந்தேன். அதற்கு அவன் யுத்தம் செய்வேன் என்று சொன்னான்! பல வார்த்தைகளைச் சொன்னதால் என்ன பயன்? இனி, வெகுசீக்கிரம் கௌரவர்களும் பாண்டவர்களும் ஒருவர்க்கொருவர் எதிர்த்துப் போர் செய்யவே நேர்ந்தது!'' என்றான்.

குந்திதேவி அதுகேட்டு மிகவும் வருந்தினாள். மேலும் அவள், ''இனி வரும் யுத்தத்தில் ஜெயிப்பவர்கள் யாரோ? ஊழ்வினையால் யுத்தகளத்தில் இறப்பவர்கள் யாரோ?'' என்று சொல்லி மனம் கலங்கினாள்.

அப்போது கண்ணன் குந்திதேவியைச் சமாதானப் படுத்தத் தொடங்கி, அவளைப் பார்த்து, ''முன்பு நடந்த உண்மையான ஒரு செய்தியை நான் தங்களுக்கு இப்போது சொல்கின்றேன். கவனமாகக் கேளுங்கள்! தாங்கள் குந்திபோஜராஜனின் மாளிகையில் கன்னிப்பெண்ணாக இருந்த காலத்தில், தங்களுக்கு துருவாச முனிவர் ஐந்து மந்திரங்களை உபதேசித்தார். அம்மந்திரங்களுள் ஒரு மந்திரத்தால் தாங்கள் சூரியனை நினைத்தீர்கள். அதனால் அச்சூரியனும் அப்போது தங்கள் எதிரே வந்து நின்றான். சூரியனின் கருணையால் தாங்கள் அப்போது ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தீர்கள். கன்னிப்பெண்ணான தாங்கள் தாயானதால், அது தங்களுக்கும் தங்கள் குலத்துக்கும் கேவலம் என்றெண்ணிப் பயந்தீர்கள். எனவே, தங்கள் மகனை ஒரு மரப்பெட்டியில் வைத்துமூடி யமுனாநதியில் விட்டுவிட்டீர்கள். அப்போது அந்த யமுனாநதியும் அக்குழந்தையைப் பெட்டியோடு கங்காநதியில் கொண்டு போய்ச் சேர்த்தது. கங்கையோடு

போனஅப்பெட்டியிலுள்ள குழந்தையை திருதராஷ்டிரனுடைய தேர்ப்பாகனான அதிரதன் கண்டெடுத்தான். அக்குழந்தையை அவன் தன் மகனாகவே பாவித்து வளர்த்தான். அந்தச் சமயத்தில் சூரியன், 'இப்புதல்வனை எல்லோரும் கர்ணன் என்று அழைப்பாராக!' என்று அசரீரி வாணியாகச் சொன்னான். அதிரதனும் அவ்வாறே அப்புதல்வனுக்குக் கர்ணன் என்று பெயரிட்டு வளர்த்தான். இத்தகு சிறப்புடைய தங்கள் புத்திரனாகிய கர்ணன் பரசுராமரிடம் எல்லா ஆயுதவித்தைகளையும் முதன்மையாகக் கற்றறிந்தான். அவனுடைய ஆயுத வித்தையின் சிறப்பைக் கண்ட துரியோதனன், அவனைத் தன் சிநேகிதனாக ஆக்கிக் கொண்டான். அத்துடன் அவனை அங்கதேசபூபதியாகவும் ஆக்கினான். அந்தக் கர்ணனை ஜெயிக்கின்ற வீரர்கள் யாருமே இல்லை! அப்படிப்பட்ட தங்கள் மகனான கர்ணனே இப்போது வருகின்ற யுத்தத்தில் அர்ச்சுனனை வந்து எதிர்த்துப் போர் செய்ய இருக்கின்றான். அர்ச்சுனன் தனக்குத் தம்பி என்ற பங்காளி முறையை கர்ணனும் அறியவில்லை. ஆகையால், அவனுக்கு இந்த உறவு முறையைச் சந்தேகமில்லாமல் தாங்கள் சென்று எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லி அந்தக் கர்ணனை வெகுசீக்கிரத்தில் பாண்டவர்களோடு சேரும்படிச் செய்யுங்கள் அவனிடம், 'பஞ்சபாண்டவர்களாகிய தம்பிமார்கள் ஐந்து பேரும் தனித்தனியாக உனக்குப் பணிவிடை செய்ய, நீயே பூலோகம் முழுவதையும் தனிப்பட அரசாளலாம். ஆகையால், பாண்டவர் பக்கம் வந்து சேர்ந்துவிடு' என்று சொல்லி, தாங்கள் அவனை ஆசைகாட்டி அழைத்தால் அவன் நிச்சயம் தங்கள் வார்த்தைக்கு இசைவான். அவ்வாறு கர்ணன் தங்கள் வார்த்தைக்கு இசையாமல் மறுத்தால், அவன் கொண்டுள்ள நாகாஸ்திரத்தை ஒரு தடவைக்கு மேல் மறுதடவையாக அர்ச்சுனன் மேல் பிரயோகிக்காமல் இருக்கும்படியான ஒரு வரத்தை தாங்கள் அவனிடம் கேட்டுப் பெற வேண்டும். காண்டவவனத்தை அர்ச்சுனன் முன்பு அக்கினிக்கு இரையாக்கிய காலத்தில், அவ்வனத்தைக் காத்து வந்த தக்ஷன் என்னும் நாகராஜனின் குமாரனான அசுவசேனனையே இப்போது கர்ணன் அஸ்திரமாகக் கொண்டுள்ளான். அந்த அஸ்திரம் அர்ச்சுனனைப் பழி வாங்கிவிடாதபடி நான் சொல்லியவாறு தாங்கள் கர்ணனிடம் வரம் கேட்டுப் பெறுவீர்!'' என்று கர்ணனின் பிறப்பு வளர்ப்பைப் பற்றியும்,

அர்ச்சுனனைக் காப்பதற்கான உபாயத்தையும் அவளுக்கு எடுத்துக் கூறினான்.

அது கேட்டு குந்திதேவி, ''கர்ணன் எனது மகன் என்கின்ற செய்தியை முன்பே நீ எனக்குச் சொல்லியிருந்தால், நான் அவனைத் துரியோதனனோடு சேராமல் இருக்கும்படிச் செய்திருப்பேன். போர்க்களத்தில் போய் உயிரை மாய்த்துக் கொள்ளும்படி போரை மூட்டிவிட்டு, அதன்பின்பு இப்போது வந்து நீ இந்தச் செய்தியை என்னிடம் கூறினாய். ஐயனே! என்ன நினைத்து என்ன காரியம் செய்தாய்? நாகாஸ்திரத்தை அர்ச்சுனன்மீது ஒரு தடவைக்குமேல் பிரயோகிக்காதபடி கர்ணனை நான் தடுத்தேனானால், சூரியமைந்தனாகிய அவன் இறப்பான்! இப்போது சென்று நான் அந்த வரத்தைக் கர்ணனிடம் பெறாமலிருந்தால், இந்திர குமாரனாகிய அர்ச்சுனன் அந்த நாகாஸ்திரத்தால் இறப்பான்! எப்படிப் பார்த்தாலும் கடைசியில் எனக்குத் தீங்குதான் ஏற்படப் போகிறது. ஆகையால், நான் அடைந்த கொடிய நிலைமை மிக நன்றாக இருக்கிறது!'' என்று புலம்பியழுது கீழே விழுந்தாள்.

குந்திதேவியின் சோகத்தைக் கண்டு கண்ணன் அவளைத் தேற்றினான். மேலும் அவன் அவளைப் பார்த்து, ''பாண்டவர்கள் ஐந்து பேரும் இறந்து போவது நல்லதோ? கர்ணன் ஒருவன் மட்டும் இறந்து போவது நல்லதோ? யுத்தத்தில் பாண்டவர்களுள் ஒருவர் இறந்தாலும், மற்ற நால்வரும் உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள். ஆகையால், தாங்கள் மனம் தளர்வதைவிட்டு கர்ணனிடம் சென்று, நான் சொன்னபடி வரத்தை யாசிப்பதே இப்போது செய்ய தகுந்த காரியமாகும்!'' என்றான்.

கடைசியாக கிருஷ்ணமூர்த்தி குந்திதேவியைச் சமாதானப்படுத்தி கர்ணனிடம் அனுப்பிவிட்டு, விதுரன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அப்போது சூரியன் அஸ்தமித்தான்!

சூரியன் அஸ்தமித்ததும் சந்திரன் உதித்தான்!

சந்திரன் உதயமான அந்த நேரத்தில் துரியோதனனுடைய கட்டளையால் திருதராஷ்டிரனும், துச்சாதனன் முதலிய அவனது தம்பிமார்களும், கர்ணனும்,

சகுனியும், அமைச்சர்களும் ஆலோசனை மண்டபத்தில் வந்து கூடினார்கள்.

அப்போது துரியோதனன் எல்லோரையும் பார்த்து, "காட்டில் திரிந்து கொண்டிருந்த பாண்டவர்களைத் தானே வலிய அழைத்து 'உங்கள் தேசத்தை மீண்டும் திருப்பிக் கேளுங்கள்' என்று அவர்களிடம் சொல்லிக் கலகத்தை மூட்டிவிடுகின்ற கண்ணன், இப்போது இங்கே தனியாக வந்திருக்கின்றான். இந்த நேரத்தில் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன? சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

அதற்குத் திருதராஷ்டிரன் பதில் சொல்லத் தொடங்கி, "மகனே! புலி தானாகவே வந்து வலையில் மாட்டிக் கொண்டால், வேடர்கள் அதனைக் கொல்லாமல் வெளியே தப்பிச் செல்லும்படி விடமாட்டார்கள். அது போல் தானே வலிய வந்து மாட்டிக் கொண்ட கண்ணனையும், நாம் இந்த இரவு முடிவதற்குமுன் சேனைகளோடு போய் வளைத்துக் கொன்றுவிடுவதே இப்போது செய்யத் தகுந்த காரியமாகும்!" என்றான்.

திருதராஷ்டிரனுடைய கொடிய வார்த்தைகளைக் கேட்டுத் துரியோதனனுடைய தம்பியாகிய விகர்ணன் ஏளனமாகச் சிரித்தான். அச்சிரிப்போடு அவன், "இதற்கு முன்பு தூதுவரைக் கொலை செய்தவர்கள் யாருமில்லை. இப்போது நீங்கள் எல்லோரும் தூதுவரைக் கொலை செய்ய நினைக்கின்றீர்கள். ஆலோசனையில்லாத இந்த நினைப்பை நீங்கள் யாரிடமிருந்து அறிந்து கொண்டீர்கள்?" என்றான்.

மேலும் அவன் தன் தந்தையை நோக்கி, "சக்கரவர்த்தி! முதியவர்களையும், குழந்தைகளையும், வேதப்பிராமணர் களையும், நோயாளிகளையும், புலவர்களையும், பெண்களையும், தூதுவர்களையும் கொன்றால், அரசர்களுக்கு இதுபோல் கொடிய பாவம் வேறு ஒன்றுமில்லை! மேலும், அவர்கள் இப்பாவத்தால் நரகத்திலும் போய்ச் சேர்வார்கள்!" என்றான்.

திரும்பவும் விகர்ணன், "தன்னைப் பழிக்கின்ற பகைவர்களானாலும் தனது ஊருக்கு வந்தால், அவர்களைக் கொல்வது பாவம்; அது வீரமும் இல்லை என்று பெரியோர்கள் கூறுவார்கள். இந்த ராத்திரி வேளையில்

பெருஞ்சேனையோடு சென்று சூழ்ந்து கொண்டாலும், கண்ணபிரான் எப்படிப்பட்ட பராக்கிரமசாலிகளுக்கும் தன்னைக் கொல்லக் கிடைக்க மாட்டான்!'' என்று கூறி நிறுத்தினான்.

விகர்ணன் கூறியதைக் கேட்டவுடனே துச்சாதனன் மிகவும் ஆத்திரமடைந்தான். அவன் விகர்ணனை மிகவும் கோபித்து, துரியோதனனைப் பார்த்து, ''அண்ணா! ரகசியமாக ஆலோசனை செய்யக் கூடியுள்ள இந்த இடத்தில், எந்த ஆலோசனையைச் சொல்வதற்காகச் சிறியவர்களைக் கூப்பிட்டீர்கள்? அதிரதர் முதலிய அரசர்கள் நம்மோடு கூடி நிற்க, விதுரனையும் கண்ணனையும் அந்த மாளிகையிலேயே ஒன்றாகத் தீவைத்துக் கொளுத்திவிட வேண்டும். இதைத் தவிர வேறு ஓர் ஆலோசனையும் இல்லை. ஆகவே, இப்போதே எல்லோரும் சீக்கிரம் புறப்படுங்கள்!'' என்றான்.

அதுகேட்டு கர்ணன், ''சூரியன் உதித்து அழிக்கத் தொடங்கினால், எங்காவது இருள் அழியாமல் போவதுண்டோ? கண்ணனைக் கொல்வதற்காக இப்போது நம் நகரத்துக்கு அவன் வந்து தங்கியிருக்கும் வீட்டைக் கொளுத்த வேண்டுமோ? கொடிய ஒரு பாணத்தாலேயே நான் அவனைக் கொன்றுவிட்டு வெற்றியுடன் திரும்புவேன்! ஆதலால் இந்த இரவிலேயே எல்லோரும் என்னுடன் போருக்குப் புறப்படுங்கள்!'' என்று தற்புகழ்ச்சிப் பேசினான்.

சகுனி அப்போது எல்லோரையும் நோக்கி, ''இந்தக் கண்ணன் நாளைக்கே நம் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய் பாண்டவர்களைச் சேர்ந்து விடுவான். அதன் பிறகு நாம் அவனையும் பகைவர்களையும் ஜெயிப்பது முடியாது. ஆமாம். கண்ணன் பாண்டவர்களைச் சேர்ந்துவிட்டால். முற்பிறப்பில் செய்த கொடிய ஊழ்வினையின் பயன் போல, நம்மைக் கொடிய போரில் அவன் ஜெயிக்கவிட மாட்டான்! ஆகையால், இப்போது வேறொன்றையும் ஆலோசிக்க வேண்டாம். கண்ணனை நம் வீட்டுக்கே வரவழைத்து வளைத்துக் கொண்டு வஞ்சனையாக வெல்வதே இச்சமயத்தில் நாம் செய்ய வேண்டிய காரியம்!'' என்றான்.

மீண்டும் அவன் பேசத் தொடங்கி, ''தூதுவரைக் கொல்வது நல்ல அரசர்களுக்கு முறையில்லை. ஆகையால்,

நான் வேறு ஓர் உபாயம் சொல்கிறேன். கேளுங்கள்! பெரும் பள்ளம் தோண்டி அதற்குள் ராட்சசர்களையும் வீரர்களையும் மறைந்திருக்கச் செய்வோம். அதன் மீது ஓர் ஆசனத்தை அமைத்து, வருகின்ற கண்ணனை அதில் அமரச் செய்வோம். சமயம் பார்த்து அவனைப் பள்ளத்தில் விழச் செய்வோம். அவ்வாறு அகப்பட்டுக் கொள்ளும் கண்ணனை விலங்கிட்டுச் சிறையிலே காவலில் வைப்போம். இதுவே தூதுவர்களுக்குக் கொடுப்பதற்குரிய தண்டனை!'' என்று கூறினான்.

மாமன் சகுனி கூறியதைத் துரியோதனன் அங்கீகரித்தான். உடனே அவன் தனது மேற்பார்வையின் கீழ் பெரியதொரு பள்ளத்தைத் தோண்டச் செய்தான். அதற்குள் லட்சம் ராட்சசர்களையும், இரண்டு லட்சம் மற்போர் வீரர்களையும், நான்கு லட்சம் வில்வீரர்களையும், நாற்பது லட்சம் ஆயுத வீரர்களையும் ஒளித்து வைத்தான். பிறகு, தன் வேலையாட்களைக் கொண்டு அந்த நிலவறையை மூங்கில் பிளாச்சிகளினால் மூடச் செய்து, அதன் மேல் ரத்தின பீடத்தை அமைத்தான். மற்றும் அந்த இடத்தைத் தோரணங்களாலும் மாலைகளாலும் நன்றாக வேறுபாடு தெரியாதபடி அலங்கரிக்கச் செய்தான். அவ்வாறு துரியோதனன் அந்தச் சதிவேலையை அத்தனைக் கச்சிதமாக அந்த இரவில் ஒரு நாழிகைக்குள் செய்து முடித்தான்!

சூரியன் உதித்தான்!

அரசர்கள் எல்லோரும் துரியோதனனுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது கண்ணபிரான் தூங்கி எழுந்து ஸ்நானம், ஸந்தியா வந்தனம் முதலிய உதயகால அநுஷ்டானங்களை முறை தவறாமல் செய்து முடித்தான்.

கிருஷ்ணபகவான் காலைக்கடன்களையெல்லாம் முடித்து இனிது இருக்கும் போது, துரியோதனனுடைய தூதுவர்கள் வந்து அவனுடைய திருவடிகளை வணங்கினார்கள். பின்பு கண்ணனை நோக்கி அவர்கள், ''பகவானே! தங்களை எங்கள் துரியோதனமகாராஜா தம்மிடம் எழுந்தருளும்படிக் கட்டளையிட்டு எங்களை அனுப்பினார்!'' என்று தெரிவித்தார்கள்.

கண்ணபிரான் அதுகேட்டுத் துரிதமாக துரியோதனனுடைய அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றான்.

அப்போது தன்னைச் சுற்றிலும் திருதராஷ்டிரனும், பீஷ்மரும், மற்ற அரசர்களும், அமைச்சர்களும், சேனைகளும் இருக்க, துரியோதனன் தேவேந்திரனுடைய சபாமண்டபம் போன்ற ராஜசபையின் நடுவே, கண்ணுக்கு இனிமையாக ரத்தின சிங்காசனத்தில் வீற்றிருந்தான்!

அவ்வாறிருக்கையில், கண்ணபிரான் தன்னோடு பல அரசர்களையும் சதுரங்கசேனைகளையும் அழைத்துக் கொண்டு அச்சபாமண்டபத்தின் முன் வந்தான். அதுகண்டு காவலர்கள் விரைந்து வந்து துரியோதனனுக்குச் செய்தியைச் சொன்னார்கள். உடனே துரியோதனன் அவர்களிடம், “கண்ணன் ஒருவனை மாத்திரமே உள்ளே வரவிடுங்கள்!” என்று கட்டளையிட்டான்.

காவலர்கள். அக்கணமே விரைந்து சென்று கண்ணபிரானுக்குத் துரியோதனனின் கட்டளையைத் தெரிவித்தார்கள். அதுகேட்டு கண்ணன் தன்னோடு வந்தவர்களை வெளியிலேயே இருக்கச் செய்துவிட்டு, தான் மட்டும் சபைக்குள் புன்சிரிப்போடு பிரவேசித்தான். தனியாக உள்ளே வந்த கண்ணனை துரியோதனன் அன்போடு பார்த்து, “கண்ணா! அந்த ஆசனத்தில் அமர வேண்டும்!” என்றான்.

துரியோதனன் சுட்டிக் காட்டிய ஆசனத்தில் கண்ணன் உட்கார்ந்தான். உடனே மூங்கில் பிளாச்சிகள் முறிந்தன. அதனால் ஆசனத்தோடு அவன் நிலவறைக்குள் விழுந்தான். துரியோதனன் செய்த சூழ்ச்சியை கண்ணன் உணர்ந்தான். அக்கணமே நெஞ்சிலே மூண்டெழுந்த கோபத்தோடு தனது திருவடி பாதாளத்தில் செல்லவும், தனது திருமுடி ஆகாயத்தில் செல்லவும் கண்ணன் விசுவரூபம் எடுத்தான்!

கண்ணனின் விசுவரூபம் கண்டு தேவர்களும், பாதாளலோக நாகசாதியர்களும் நடுநடுங்கினார்கள்!

அப்போது தன்னைக் கொல்வதற்காகச் சூழ்ந்து வந்த மல்லர்களையும், வில்லாளிகளையும், வாள் வீரர்களையும், வேல் வீரர்களையும், ராட்சசர்களையும் கண்ணன், தான் எடுத்த அநேக கால்களால் எட்டி உதைத்தான். அதனால்



பேரிடி கேட்ட நாகங்கள் போல அவர்கள் எல்லோரும் செத்தொழிந்தார்கள். அப்போது அவர்கள் வாயுதேவனால் அழகழிந்த மேருமலையைப் போலவும், இந்திரனுடைய வச்சிராயுதத்தால் சிறகறுந்த மலைகளைப் போலவும், முருகக் கடவுளின் வேலாயுதத்தால் அழிந்த கிரௌஞ்சமலையைப் போலவும், ஸ்ரீராமபிரானுடைய கணையால் சின்னா பின்னமான துந்துபியின் எலும்பு மலையைப் போலவும், அகத்தியரின் திருவடியால் நசுங்கிய விந்தியமலையைப் போலவும், தேவர்களுக்கு மத்தாகிய மந்தர மலையைப் போலவும், குரங்குகள் கடலில் அணை கட்டுவதற்கு எடுத்துப் போட்ட மலைகளைப் போலவும் நிலைகுலைந்து உயிரொடுங்கிப் போனார்கள்!

'கண்ணபிரான் நிலவறையில் தன்னைச் சூழ்ந்த வீரர்களைத் தனது திருவடிகளால் மிதித்தபின், இப்பூலோகத்துப் பிராணிகளெல்லாம் இப்போது அழியாமல் எவ்வுலகங்களில் சென்று வாழும்? எந்த மலைகள்தான் அவன் திருவடிக்கு நிமிர்ந்து நிற்கும்? எந்தக் கடல்கள்தான் கரைபுரளாமல் அமைதியாக இருக்கும்?' என்றெண்ணி, தேவர்களும் அப்போது அஞ்சினார்கள்.

அதேசமயம் துவாரகாபுரிக்கு அதிபதியான கண்ணபிரான் அண்டகோளத்தின் மேல் முகட்டை அளாவும் படி உயர்ந்து நின்று, கண்களில் நெருப்பு உண்டாகப் பிரளயக் கடலொலி போலவும், புயற்காற்றின் ஓசை போலவும், காளமேகத்தின் இடி போலவும் பயங்கரமாகச் சிரித்தான்!

அந்த விசுவரூபமூர்த்திக்கு அச்சமயத்தில் தோன்றிய திருக்கைகள் அநேகம். அவை ஒவ்வொன்றும் கடல் நீர் முழுவதையும் மொத்தமாக மொண்டெடுக்க வல்லவை; தேவலோகத்தில் உள்ள கற்பக விருட்சங்களையும் நீண்டுப் போய் முறிக்க வல்லவை; அஷ்டதிக்கஜங்களையும் அப்பால் தள்ள வல்லவை; அஷ்டகுலபருவதங்களான கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதநம் ஆகியவற்றையும் உடைக்க வல்லவை; மேருமலையை எடுத்துச் சுழற்ற வல்லவை!

மேலும், அப்போது அந்த விசுவரூபமூர்த்தியின் அநேக கைகளில் சில வலம்புரிச் சங்குகளை ஏந்தி வாயில் வைத்து ஊதின! சில கைகள் உலகமுழுவதும் அஞ்சும்படி

கோடாலிப்படையை வீசின! சில கைகள் கூரம்புகளையும், மொட்டம்புகளையும் ஏந்தின! சில கைகள் விற்களை வளைத்தன! மற்றும் பற்பல கைகள் வளைதடிகளையும், வேலாயுதங்களையும், உலக்கைகளையும், வச்சிராயுதங் களையும், கலப்பைகளையும், இரும்பு முட்களையும், வாளாயுதங்களையும், கதாயுதங்களையும், சக்கராயுதங் களையும் தாங்கியிருந்தன!

விசுவரூபமூர்த்தியின் கைகளில் சில வாளாயுதங்களை எடுத்து மேலே எறிந்தன; சில கைகள் கேடகத்தை எடுத்துக் கொண்டன; சில கைகள் கவண்கற்களை எறிவதற்காக எடுத்தன; சில கைகள் தோமரங்களை எடுத்துக் கொண்டன; சில கைகள் சூலாயுதங்களோடு உயர்ந்தன; சில கைகள் பாசாயுதங்களோடு உயர்ந்தன!

மற்றும் சில கைகள் பகைவரைக் கொல்கின்ற தனது திருவடிகளில் வீரக்கழல்களைக் கட்டின; சில கைகள் சுழல்கின்ற தோள்களில் பூமாலைகளைத் தரித்தன; சில கைகள் அழகிய மார்பில் ஆபரணங்களை ஒழுங்காக அணிந்தன; சில கைகள் பகைவர் அச்சத்தால் திகைப் படையும்படி அவர்களை விரல்களால் சுட்டிக் காட்டின!

அவ்வாறு கண்ணபிரான் எடுத்த விசுவரூபத்தைக் கண்டு, தேவர்களும் ரிஷிகளும் நான்கு வேதங்களையும் சுரத்தோடு சொல்லி அவனைத் துதித்தார்கள்.

சுவர்க்கலோகவாசிகளான தேவர்கள், "பிரமரூபியே! உருத்திரரூபியே! புவனங்களையெல்லாம் சிருஷ்டித்த மூலகாரணக் கடவுளே! கருணாமூர்த்தியே! கமலா காசினிமணாளா! ஆதிமூலமே! காளமேகமே! நாராயண சாமியே! கோபிக்காதே! கோபிக்காதே!" என்று சொல்லி நமஸ்கரித்தார்கள்.

பூலோக தேவர்களான ரிஷிகள், "மாதவனே! கோபிக்காதே! அடியார்க் கடவுளே! கோபிக்காதே! யாதவனே! கோபிக்காதே! இதயத்தில் இருப்பவனே! கோபிக்காதே! ஆதவனே! கோபிக்காதே! சந்திரனே! கோபிக்காதே! அக்கினியே! கோபிக்காதே! நீதிதேவனே! கோபிக்காதே! கோபிக்காதே!" என்று கூறி வணங்கினார்கள்.

பீஷ்மரும், கர்ணனும், திருதராஷ்டிரனும், துரியோதனனைத் தவிர மற்ற கௌரவர்களும், பிற அரசர்களும் கண்ணனின் விசுவரூபம் கண்டு அஞ்சி எழுந்தார்கள். அவனை நோக்கி சிரம்மேல் கைகூப்பி, ''ஐயனே! எங்கள் குற்றங்களை இப்போது நீ பொறுத்தருள வேண்டும்!'' என்று வேண்டினார்கள்.

மேலும் அவர்கள், ''ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவே! மனத்தில் உறுதியான அறிவு சிறிதும் இல்லாதவர்கள் நாங்கள். ஆகையால், சிறியோர்களாகிய நாங்கள் செய்த பெரிய பிழைகளையெல்லாம் நீ பொறுத்தருள்! வெண்ணெயைத் திருடி உண்டவனே! பொறுத்தருள்! கார்வண்ணமூர்த்தியே! பொறுத்தருள்! வாமனே! பொறுத்தருள்! வரதனே! பொறுத்தருள்!'' என்று கூறி, கண்ணனுடைய திருவடிகளைத் தங்களின் தலைமேல் வைத்து வணங்கித் துதித்தார்கள்.

தேவர்களும், இந்திரனும், முனிவர்களும், பிரமனும், அரசர்களும், மற்றவர்களும் பக்தியோடு கண்ணனுடைய ஆயிரம் திருநாமங்களையும் ஜெபித்து கோபம் தணியும்படி வணங்கினார்கள். அதனால் அப்போது மும்மூர்த்திகளுள் ஏகமூர்த்தியாக விளங்கிய கண்ணபிரான் கோபம் தணிந்து விசுவரூபம் மறைந்து நின்றான்!

கண்ணபிரான் விசுவரூபம் எடுத்ததைப் பார்த்தும், அதன்பின் சாதாரண மானிட வடிவமானதைப் பார்த்தும் துரியோதனன் சிறிதும் அஞ்சவில்லை. அவன் முன்போலவே செருக்கோடு சிங்காசனத்தைவிட்டு எழுந்திருக்காமல் வீற்றிருந்தான்! அதுமட்டுமில்லை. எம்பெருமானாகிய கண்ணனின் புகழைச் சிறிதும் அவன் பேசவுமில்லை!

அப்போது கண்ணன் துரியோதனனை நோக்கி, ''சந்திரவம்சத்து ராஜ சபையில் வீற்றிருக்கும் அரசனே! துர்ப்புத்தியால் நீ என்னைக் கொல்ல நினைத்தது நல்லது!'' என்றான்.

மீண்டும் அவன் துரியோதனனிடம், ''உனது வம்சம் பூராவும் அழியும்படி யுத்தகளத்தில் எதிர்த்துப் போர் செய்து

ஒரு நொடிக்குள் பொடியாக்குவேன். நீங்கள் எல்லோரும் ஒருவர் பாக்கியில்லாமல் இறந்து வீரசொர்க்கம் சேர்வீர்கள்! முன்பு நீ என்னைப் படைத்துணைக்கு அழைத்தபோது, உனக்கு எதிராக ஆயுதம் ஏந்தமாட்டேன் என்று சத்தியம் செய்தேன். பாஞ்சாலியை நீ மானபங்கம் செய்த காலத்தில் உன்னை யுத்தத்தில் கொல்வோம் என்று பாண்டவர்கள் தனித்தனியே சபதம் எடுத்துள்ளார்கள். இவ்விரண்டு காரணங்களையும் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அதனால் இப்போது உன்னைக் கொன்றால், பாண்டவர்களின் சபதம் வீணாய்ப் போய்விடும் என்று எண்ணியும், எனது சத்திய வார்த்தையை நினைத்தும் உன்னைக் கொல்வதற்கு நான் முயலேன்!'' என்று சொல்லிவிட்டு, சபையைவிட்டு வெளியேறினான்.

உடனே கண்ணனை வழியனுப்ப துரியோதனனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அவனைத் தொடர்ந்து சென்றார்கள். தன்னை எல்லோரும் தொடர்ந்து வருவதைக் கண்டு கண்ணன், அவர்களுக்கு ஏற்ற உபசார வார்த்தைகளைச் சொல்லி அவர்களைத் திரும்பிப் போகச் செய்தான்.

பின்பு, கர்ணனை மட்டும் தனியே அழைத்து கண்ணபிரான், ''கொடை வள்ளலே! யோசித்துப் பார்த்தால் பாண்டவர்கள் ஐந்து பேரும் உனக்குத் தம்பியாவார்கள். எப்படியென்றால் குந்தியோடு சூரியன் சம்பந்தப்பட்டு, அவள் வயிற்றிலே பாண்டவர்களுக்கு முன்னே உன்னைப் பெற்றாள். அதன்பிறகு குந்தியிடம் தருமராஜன் தருமனையும், வாயுதேவன் பீமனையும், இந்திரன் அர்ச்சுனனையும் பெற்றார்கள். உன் தந்தையான பாண்டுவின் இளையராணியாகிய மாத்திரியிடம் அசுவினிதேவர்கள் நகுல சகாதேவர்களைப் பெற்றெடுத்தார்கள்! தேவ சம்பந்தமுள்ள குந்திதேவி கன்னிப்பெண்ணாய் இருக்கும்போது தனக்குத் துருவாசமுனிவர் உபதேசித்த ஐந்து மந்திரங்களால், அவள் உங்கள் ஆறுபேரையும் பெற்றாள். நான் இனிமேல் பல வார்த்தைகளைச் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் உங்களுக்குள்ளேயே இந்த ராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்படிப் பெற்றுக் கொள்ளாவிட்டால், இனி இந்த ராஜ்ஜியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வேறு யாருமில்லை. ஆகையால், நீ உன் தம்பிமார்களோடு இக்கணமே வந்து சேர்ந்து கொள்!'' என்றான்.

கண்ணன் கூறியதைக் கேட்டு கர்ணன் அவனைப் பார்த்து, "கோபாலா! இப்போது நீ சொன்னதால், நான் என் பிறப்பைப் பற்றி அறிந்தேன். இதனால் நான் பாண்டவர்களுக்குத் தமையன் என்பதையும் புரிந்து கொண்டேன். இந்தக் காரணத்தால் நான் மனமிரங்கி பாண்டவர்களோடு சேர முடியுமோ? அப்படிச் சேர்ந்து விட்டால், இந்தப் பூலோகத்து ஜனங்கள் எப்பொழுதும் என்னைப் பார்த்து பரிகசித்துச் சிரிப்பார்களே! நான் யார் என்று தெரியாத நேரத்திலேயே ராஜராஜனான துரியோதனன் என்னை ஆதரித்து நண்பனாக்கிக் கொண்டான்! அதுமட்டுமில்லை. என்னை ராஜகுலத்தவனாக்கினான். அங்கதேசத்துக்கு அரசனாகவும் கிரீடாபிஷேகம் செய்தான். தனக்குரிய சிறப்புகளையும், அதிகாரத்தையும், அளவற்ற செல்வத்தையும் அவன் எனக்கு ஒருவனுக்கே தன் மனமறிந்து கொடுத்தான். அப்படியிருக்க, கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் யுத்தம் நடக்கப் போகிறது என்று தெரிந்திருக்கும் இந்தச்சமயத்தில், ஒருவர் செய்த உதவியை மறந்தவர் போல துரியோதனனைவிட்டு நான் பாண்டவர்களிடம் போகமாட்டேன்!" என்றான்.

கர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கண்ணன் வேறொன்றும் சொல்லாமல், "கர்ணா! நீ செல்!" என்று அன்போடு கட்டளையிட்டு அனுப்பி வைத்தான்.

பின்பு, அசுவத்தாமனை தனியே அழைத்து கண்ணபிரான், "அசுவத்தாமா! துரியோதனனுடைய வார்த்தைப்படி வனவாசமும் அஞ்ஞாதவாசமும் செய்து திரும்பிய பாண்டவர்களுக்காக நான் தூது வந்தேன். அவர்களுக்காக அவனிடம் ஐந்து ஊர்களையாவது கொடுக்கும்படிக் கேட்டேன். அவன் அதற்கு மறுத்துவிட்டான். இனி வரும் யுத்தகளத்தில் இதற்கு நீயே சாட்சி!" என்றான்.

மேலும் அவன் அசுவத்தாமனிடம், "ஞானஸ்தனே! உனக்குச் சமமான பராக்கிரமசாலி உலகத்தில் யாருமே இல்லை. யுத்தகளத்தில் துரியோதனன் உன்னை வணங்கி சேனாதிபதியாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டால், நீ அதற்கு மறுத்துவிட வேண்டும். அவ்வாறு செய்தால் பாண்டவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். உனக்கும் பாண்டவர்களிடம் அன்பு உண்டு அல்லவா?" என்றான்.

அப்போது கண்ணன் தனது கைவிரல் மோதிரத்தைத் தானாகவே கழன்று விழுவது போல் தரையில் நழுவவிட்டான். அதுகண்டு அசுவத்தாமன் அந்த ரத்தினமோதிரத்தை எடுத்துக் கண்ணனிடம் நீட்டினான். கண்ணன் அதனை உடனே கையில் வாங்கிக் கொள்ளாமல், அசுவத்தாமனை நோக்கி, ''பரிசுத்தனே! அதோ, ஆகாயத்தில் சூரியனை மண்டலம் சூழ்ந்து கொண்டது பார்!'' என்று கூறி, ஆகாயத்தைப் பார்த்தான்.

அசுவத்தாமனும் மோதிரத்தைக் கண்ணனிடம் நீட்டிக் கொண்டே ஆகாயத்தைப் பார்த்தான்.

ராஜசபையிலிருந்த எல்லோரும் அவர்களுடைய செயலைப் பார்த்துத் திகைத்தார்கள். பின்பு அவர்கள் தங்களுக்குள், ''கண்ணன் அசுவத்தாமனையும் துரியோதனனிடமிருந்து மித்திரபேதம் செய்துவிட்டான். அசுவத்தாமனும் கண்ணனுக்கு அதனால் ஏதோ சபதம் செய்து கொடுத்தான்!'' என்று கூறிக் கொண்டார்கள்.

துரியோதனன் அதுகண்டு மிகவும் கோபம் கொண்டான். அடங்காத சினத்தோடு அவன் அரசர்களைப் பார்த்து, ''அசுவத்தாமன் கண்ணனிடம் தானாகவே சென்று, அவன் மோதிரத்தைக் கையில் வாங்கி ஏதோ சபதம் செய்து கொடுத்துவிட்டான். ஆகையால், அவன் இனி நம்மிடம் வந்து நட்புடன் இருந்தாலும், அவனை எப்படி நம்புவது?'' என்றான்.

துரோணபுத்திரன் துரியோதனனுடைய வார்த்தைகளையும், அரசர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்ட வார்த்தைகளையும் கேட்டு மனம் கலங்கினான். அவன், 'இவர்கள் என்னை நம்பாதபடி இக்கண்ணன் மித்திரபேதம் செய்தான்' என்று எண்ணினான்.

அச்சமயத்தில் கண்ணபிரான் அசுவத்தாமனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, தான் நினைத்து வந்தது நிறைவேறிவிட்டது என்றெண்ணி மகிழ்ச்சியுடன் விதுரன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். பின்பு, அவன் தேவேந்திரனைத் தன்னிடம் வரும்படி நினைத்தான்.

தேவேந்திரன் அக்கணமே கண்ணன் முன் வந்து நின்று, அவனை வணங்கினான். கண்ணன் அவனை

மகிழ்ச்சியோடு வரவேற்று ஒரு சிங்காசனத்தில் உட்காரச் செய்தான். அதன்பின் இந்திரனைப் பார்த்து மாயவன், ''வச்சிராயுதனே! நான் சொல்வதைக் கேள். அர்ச்சுனனுக்குச் சத்துருவாகி நெடு நாட்களாகப் பகை கொண்டு இருக்கின்ற ஒரு விஷநாகம், அவனுக்குப் பகைவனான கர்ணனிடம் அஸ்திரமாக இருப்பதை உலகத்தில் அறியாதவர்கள் யாருமில்லை. அந்த நாகாஸ்திரத்தைக் கொண்டு கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றுவிட்டால், பூலோகம் முழுவதும் துரியோதனனுக்கே சொந்தமாகிவிடும். அதுமட்டுமில்லை. அர்ச்சுனன் இறந்தால் மற்ற பாண்டவர்களும் இறந்து விடுவார்கள். அதனால் முன்பு நடந்த சூதாட்டத்தின்போது அர்ச்சுனன் முதலியவர்கள் கர்ணன் முதலியவர்களைக் கொல்வதாக எடுத்துக் கொண்ட சபதம் நிறைவேறாமல் போய்விடும். அப்படியாகிவிட்டால் பாண்டவர்களுக்கு மாத்திரமே அது பழியாகாது. உன் மனம் அறியவும் நான் அறியவும் அர்ச்சுனனுடைய தந்தையாகிய உனக்கே அந்தப் பழிப்பும் என்றும் அழியாமல் நிச்சயமாக வந்து சேரும்! கர்ணன் பிறந்தபோதே அவன் உடம்போடு பிறந்தவை கவசகுண்டலங்கள். அவற்றை அவன் தரித்திருக்கும் வரை அவனுக்கு அழிவில்லை. யுகம் முடியும்வரை அவனோடு போரிட்டாலும், அவனைப் பூமியிலுள்ள ஒருவராலும் கொல்ல முடியாது! ஆகையால் பந்துக்கள் கதறவும், சகோதரர்கள் துடித்தழவும் யுத்தபூமியில் அர்ச்சுனன் கர்ணனால் இறப்பான். அவனைப் பெற்றவனும் எனக்குச் சிநேகிதனுமான இந்திரனே! அதனை முன் ஜாக்கிரதையாகவே இப்போது உன்னிடம் தெரிவித்து விட்டேன்! சாஸ்திர ஞானஸ்தர்களுக்கும், வேதப் பிராமணர்களுக்கும், தேவர்களுக்கும், ஏழைகளுக்கும், செல்வந்தர்களுக்கும், யாசித்தவர்களுக்கும், துறவிகளுக்கும், தம் குறையைச் சொல்பவர்களுக்கும், சொல்லாதவர்களுக்கும், மதத்தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சிறிதும் வேறுபாடு இல்லாமல் கர்ணன் பிறரால் கொடுப்பதற்கு முடியாத தானங்களையெல்லாம் கொடுக்கின்றான். நீ அர்ச்சுனனுக்கு நன்மை செய்ய விரும்பினால், உடனே வேதியனாகி கர்ணனிடம் செல். அவனிடம் கவசகுண்டலங்களைக் கொடுக்கும்படிக் கேள். அக்கர்ணன் யாருக்கும் எந்தப் பொருளையும் கொடுப்பதற்கில்லை என்று சொல்லி யறியாதவன். தனது உயிரையே பிறர் யாசித்தாலும், அதனையும் அவன் மறுக்காமல் கொடுத்துவிடுவான்! நீ

மட்டும் கர்ணனிடமிருந்து அந்தக் கவசகுண்டலங்களை வாங்கிக் கொண்டு வந்து விட்டால், அப்புறம் யுத்தத்தில் அர்ச்சுனனுக்கு முன் யாராலும் எதிர்த்து நிற்க முடியாது! அக்கர்ணனும் யுத்தகளத்தில் அர்ச்சுனனுடைய அம்பால் இறப்பான். இது நிச்சயம்!'' என்றான்.

உடனே தேவேந்திரன் எழுந்து நின்று கண்ணபிரானை நமஸ்கரித்து விட்டு கர்ணனிடம் சென்றான். அவன் வழியிலேயே கிழஅந்தணனாக வடிவம் கொண்டான். ஒரு கையிலே சிறிய குடையும், மறுகையிலே ஊன்றுகோலும் கொண்டு தள்ளாடி நடந்தான். அவன் கால்கள் நடுங்கின. உடம்பு கூன் விழுந்து தளர்ந்தது. அவனுடைய கிழ உருவத்தைப் பார்த்து எல்லோரும் அவனை மதித்து வணங்கினார்கள். மொத்தத்தில் தேவேந்திரன் அப்போது முதுமைப் பருவமே ஒரு மனித வடிவம் கொண்டது போல் காணப்பட்டான்!

தேவேந்திரன் அந்தக் கிழ அந்தண உருவத்தோடு கர்ணனுடைய மாளிகையின் வாசல்முன் போய்ச் சேர்ந்தான். அப்படி அவன் வயதான கிழவனாய் மிகவும் மெதுவாகச் சிரமப்பட்டு நடந்து சென்றதால், கர்ணனுடைய மாளிகையை அடையும்பொழுது இரவாகிவிட்டது. அதனால் காவலர்கள் அவனை மாளிகையின் உள்ளே செல்லாதபடித் தடுத்து நிறுத்தி, "முதியவரே! யாசகர்களுக்குக் கொடுக்க வேண்டிய தானங்களையும் வெகுமானங்களையும் எங்கள் கர்ணபூபதி பகல் பொழுது முழுதும் கொடுத்துவிட்டு இப்போதுதான் உள்ளே சென்றார். ஆகவே, தாங்கள் நாளைக்கு வாருங்கள்!'' என்றார்கள்.

ஆனால், தேவேந்திரன் அந்த இடத்தைவிட்டு அசையாமல் நின்றான். அது கண்டு காவலர்கள் கர்ணனிடம் சென்று செய்தியைத் தெரிவித்தார்கள். கர்ணன் உடனே, "அந்த முதிய பிராமணரை உள்ளே அனுப்புங்கள்!'' என்று கட்டளையிட்டுக் காவலர்களை அனுப்பினான்.

கர்ணனின் கட்டளைப்படி காவலர்கள் விரைந்து சென்று தேவேந்திரனை உள்ளே அனுப்பி வைத்தார்கள்.

தேவேந்திரனைக் கர்ணன் யாரென்று புரிந்து கொள்ளவில்லை. அவனை முதிய அந்தணன் என்றெண்ணி

அன்போடு பார்த்து மகிழ்ந்தான். மேலும், கர்ணன் தேவேந்திரனைக் கைகூப்பி அஞ்சலி செய்து, அவனுடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

பின்பு கர்ணன் தேவேந்திரனை நோக்கி, ''ஐயனே! தாங்கள் அன்பு கொண்டு என் மாளிகைக்குக் கருணையோடு வருவதற்கு நான் என்ன பெரும் தவம் செய்தேனோ?'' என்று உபசார வார்த்தைகளைக் கூறினான்.

அதன்பின் கர்ணன் தேவேந்திரனைப் பொன்னாசனத்தில் உட்கார வைத்து, அதிதியாக வந்த அந்தணனுக்குச் செய்வதற்குரிய உபசாரங்களையெல்லாம் செய்தான்.

அப்போது தேவேந்திரன் கர்ணனைப் பார்த்து, ''கொடை வள்ளலே! நான் கிழவனானதால் உன் மாளிகைக்கு நடந்து வருவதற்குள் பகல்பொழுது கழிந்து இரவாகிவிட்டது!'' என்றான்.

கர்ணன் அதுகேட்டு மெல்லச் சிரித்து, ''வேதியரே! பரவாயில்லை. காலம் கடந்தாலும் தாங்கள் விரும்பிக் கேட்கும் பொருளையெல்லாம் தங்களுக்கு நான் கொடுப்பேன்!'' என்று கூறினான்.

இந்திரன் அதற்கு, ''எனக்கு விருப்பமான பொருளைக் கொடுப்பது என்பது கற்பக விருட்சத்தாலும் முடியாது. அப்படியிருக்க நீ கொடுப்பாயோ?'' என்று கேட்டான்.

சூரியமைந்தன், தேவேந்திரனின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்தான். பிறகு அவனிடம், ''எனது உயிரைக் கேட்டாலும் நான் மனப்பூர்வமாக அதைத் தங்களுக்குக் கொடுப்பேன். அப்படிக் கொடுக்காவிட்டால், யுத்தத்தில் புறமுதுகிட்டு ஓடும் அரசர்கள் மறுமையில் போய்ச்சேரும் துர்க்கதியை நானும் அடைவேன்!'' என்று சபதமிட்டான்.

உடனே தேவேந்திரன், ''அப்படியா? சரி. நீ பிறக்கும் போதே உன்னோடு தோன்றிய கவசகுண்டலங்களை உன் உடம்பிலிருந்து கழற்றி எனக்குக் கொடு!'' என்று யாசகம் கேட்டான்.

அக்கணமே கர்ணன், ''இதோ கொடுத்துவிட்டேன். வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லி, அவனுக்கு அவற்றைக் கழற்றிக் கொடுக்கத் தொடங்கினான்.

அப்போது வானத்தில் அசரீரி கர்ணனை நோக்கி, "கண்ணன் இந்திரனை வஞ்சகமாக இக்கிழ உருவத்தோடு இப்படி யாசிக்க அனுப்பினான். ஆகையால், நீ உன் கவச குண்டலங்களை இவனுக்குக் கொடுக்காதே!'' என்று கூறியது.

கர்ணன் அது கேட்டுத் தன் மனத்தை மாற்றிக் கொள்ள வில்லை. மனத்தில் சிறிதும் கலக்கம் இல்லாமல் அவன் தன் கவசகுண்டலங்களைத் தேவேந்திரனுக்குக் கொடுத்தான்!

சூரிய மைந்தனாகிய கர்ணன் அப்படி இந்திரனுக்குக் கவசகுண்டலங்களைக் கொடுத்தபோது, ஆகாயத்திலுள்ள தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்க தேவர்கள் எல்லோரும் அவன்மேல் மலர்களைச் சொரிந்தார்கள். தேவேந்திரன் கிழவடிவம் நீங்கி, அழகிய தனது சுயரூபத்துடன் வெளிப்பட்டுத் தோன்றினான்.

அதேசமயம் கர்ணன், 'தேவேந்திரனே தன்னிடம் வந்து யாசகம் கேட்டானே' என்று எண்ணி, மனம் உருகினான். கர்ணன் அப்படியிருக்கும் போது, இந்திரன் அவனை நோக்கி, "கர்ணா! யுத்தத்தில் இந்த ஆயுதம் உனக்கு வெற்றியைக் கொடுக்கும்!'' என்று சொல்லி, வேலாயுதம் ஒன்றைக் கையில் எடுத்தான்.

மேலும் அவன் அப்போது, "இந்த வேலாயுதத்தை நீ அர்ச்சுனன் மேல் பிரயோகிக்கக் கூடாது. பீமனுடைய மகனாகிய கடோத்கஜன் உன்னை வந்து எதிர்த்துப் போர் செய்யும் காலத்தில், நீ இதனை அவன்மேல் பிரயோகிக்க வேண்டும். இவ்வாயுதத்தால் அவன் பிராணன் போகும்!'' என்று கூறி, அதற்குரிய மந்திரத்தையும் உபதேசித்து, அந்த வேலாயுதத்தை அவனுக்குக் கொடுத்தான்.

கர்ணன் தேவேந்திரனை வணங்கி, அந்த வேலாயுதத்தைப் பணிவோடு பெற்றுக் கொண்டான்.

பிறகு, இந்திரன் கர்ணனிடம் விடை பெற்றுக் கொண்டு கண்ணனிடம் வந்து நடந்தவைகளையெல்லாம் கூறினான். கண்ணன் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவனைப் பார்த்து, "தேவேந்திரா! போரில் தன்னைப் பிறர் கொல்லாதபடி காத்து நிற்கும் கவச குண்டலங்களைக் கர்ணன் யாசித்த உனக்குக் கொடுத்துவிட்டான். இந்த

உலகத்தில் இழிவான செல்வந்தர்கள், நண்பர்களோ உறவினர்களோ தம்மால் கொடுக்கக் கூடிய எளிய பொருளை யாசித்தால் கூட கொடுக்க மாட்டார்கள். ஆனால், வள்ளல்களோ பகைவர்களே வந்து தமது உயிரைக் கேட்டாலும், மனம் சிறிதும் கலங்காமல் உடனே கொடுத்து விடுவார்கள்!'' என்று கூறி, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

தேவேந்திரன் சென்றதும் கண்ணன், தான் நினைத்து வந்ததைப் பூரணமாக முடிக்கும் பொருட்டு குந்திதேவியிடம் சென்றான். அவளை, ''கர்ணனிடம் சீக்கிரம் செல்லுங்கள்!'' என்று கூறி அனுப்பினான்.

கண்ணனின் கட்டளையை ஏற்று குந்திதேவி கர்ணனிடம் சென்றாள். அவளுக்கு முன் அவளுடைய அன்பு கர்ணனை நோக்கிச் சென்றது!

குந்திதேவி கர்ணனின் மாளிகைக்குள் நுழைந்தாள். காவலர்கள் அவளைக் கண்டதும் விரைந்தோடிச் சென்று கர்ணனுக்குச் செய்தியைத் தெரிவித்தார்கள். உடனே கர்ணன் எதிர் கொண்டு சென்று குந்திதேவியை உபசரித்தான். சாஸ்திரங்களில் தாய்க்குச் செய்யும்படிச் சொன்ன நல்ல உபசாரங்களைக் கொஞ்சமும் தவறாமல் செய்து, கர்ணன் அவளை ஆசனத்தில் உட்கார வைத்தான். பின்பு, அவன் சந்திரக் கிரணங்களைக் கண்டு கரை கடந்து பொங்கி மகிழும் கடல்போல, அவளை மகிழ்ச்சியும் அன்பும் பொங்கப் பார்த்து, ''தாயே! தாங்கள் என்னிடம் வந்தது எனது அருமையான தவத்தின் பயனே!'' என்று கூறி, அவளை வணங்கினான்.

மேலும் அவன் அவளிடம், ''தாங்கள் இங்கே வந்த காரியம் என்ன?'' என்று கேட்டான்.

அதற்கு குந்திதேவி, ''கர்ணா! நான் உனக்குத் தாய்!'' என்று முதலில் சுருக்கமாகக் கூறினாள்.

அதன்பின் அவள், தனது கன்னிப் பருவத்தில் துருவாசமுனிவரின் அருளால் ஐந்து மந்திரங்களைத் தெரிந்து கொண்டதையும், அவற்றில் ஒரு மந்திரத்தால் சூரியனோடு சம்பந்தப்பட்டு கர்ணனைப் பெற்றெடுத்ததையும், பிறகு அவனைப் பெட்டியில் வைத்து யமுனையில் விட்டு

விட்டதையும் பற்றி ஒன்றையும் மறைக்காமல் அவனுக்கு விளக்கமாகச் சொன்னாள்.

எல்லாவற்றையும் கர்ணன் கவனமாகக் கேட்டுக் கொண்டான். ஆனால் அவன், அவள் அப்படிச் சொல்வதும் கண்ணனின் சூழ்ச்சியாக இருக்குமோ என்று சந்தேகித்தான். அதனால் அவளை நோக்கி கர்ணன், "தாயே! தாங்கள்தான் என்னைப் பெற்றவர்கள் என்று சொல்கிறீர்கள். இதனை நான் நம்பமாட்டேன். எத்தனையோ பெண்கள் வந்து என்னைத் தாங்கள்தான் பெற்றதாகச் சொன்னார்கள். அவர்களுள் என் தாய் யார் என்று அறிய எண்ணி, என் குறையை தேவர்களிடம் முறையிட்டேன். அவர்கள் தெய்வத் தன்மையுள்ள ஒரு வஸ்திரத்தைக் கொடுத்தார்கள். அந்த வஸ்திரத்தை என்னைப் பெற்ற தாயைத் தவிர வேறு யார் உடுத்தினாலும், அவர்கள் எரிந்துச் சாம்பலாகப் போய் விடுவார்கள். அப்படியான பெண்கள் ஏராளம்! ஆமாம். தகாத காரியத்தைச் செய்து படுவதற்கு முடியாத பாடுபட்டு இவ்வாறு இறந்தார்கள்!" என்றான்.

கர்ணன் கூறியதைக் கேட்டவுடனே குந்திபிராட்டி அவனிடம், "மகனே! அந்த வஸ்திரத்தை என் கையிலே கொடு!" என்றாள்.

அப்படியே கர்ணன் அந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து குந்திதேவியிடம் கொடுத்தான். குந்திதேவி அந்த வஸ்திரத்தை வாங்கி, "தேவ வஸ்திரமே! நான் இவனைப் பெற்றவள் இல்லையென்றால், என்னைக் கோபித்து அழித்துவிடு!" என்று சொல்லி, அதனை எடுத்துப் பிரித்து உதறி உடுத்திக் கொண்டு, கர்ணனின் முன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

குந்திதேவி அப்போது தான் கர்ணனைப் பெற்ற அந்த நாள் போல, அவன்மேல் மிகவும் அன்பு கொண்டாள். அதனால் தனது பெரிய இரண்டு தனங்களிலிருந்தும் அவள் பாலைச் சொரியவிட்டாள்!

கர்ணனும் அப்போது தாயிடம் மிகவும் அன்பு கொண்டு, அவளுடைய முலைப்பாலைக் குடிப்பவன் போல் உடம்பு மயிர் சிலிர்க்கப் பெற்றான்!



மகன்மேல் பாசம் அதிகமாக, குந்திதேவி அவனை அணைத்து உச்சி மோந்து பெருமூச்சோடு, "மகனே! நான் உன்னைப் பெற்ற அந்தக்காலத்திலேயே, உன்மேல் அன்பு வைத்து எடுத்து வளர்க்கும் காரியத்தைச் செய்ய வில்லையே!" என்றாள்.

மேலும் அவள், "எனது செல்வனே! என்னுடன் வா. பாண்டவர்களாகிய உன் தம்பிமார்களோடும் சேர்ந்து கொள். அவர்கள் அன்போடு உன்னை நமஸ்கரித்து, நீ கூறிய வேலைகளையெல்லாம் செய்வார்கள். க்ஷத்திரிய முறைப்படி அவர்கள் துணையோடு நீயே ராஜாங்கத்தை நடத்து. அப்போது அரசர்கள் எல்லோரும் வந்து உனது அரண்மனையின் வாசற்புறத்தில் நின்று வணங்குவார்கள். உன் மாளிகையில் வீரமும் செல்வமும் விளங்கும். குருகுலத்து ராஜராஜனாகப் போகும் நீ செய்ய வேண்டிய கடமை இதுதான்!" என்றாள்.

அதுகேட்டு கர்ணன் குந்தியைப் பார்த்து, ''அம்மா! தாங்கள் புத்திர வாஞ்சையில்லாமலோ, அல்லது ஊர்ப் பழிக்கு அஞ்சியோ என்னைப் பெற்ற போதே கைவிட்டு விட்டீர்கள். அன்று முதல் இன்றுவரை துரியோதனன் என்னை ஆருயிர் நண்பனாக நினைத்து, எனக்கு முடிசூட்டி அங்கதேசத்து ராஜாவாக்கினான். அதுமட்டுமில்லை. இன்றுவரை நான் தேரோட்டி மகனாக இருந்தும் என்னோடு சமமாக அமர்ந்து அவன் சாப்பிடுகின்றான். அவனுடைய தம்பிமார்களும் சுற்றத்தார்களும் என் பாதங்களை வணங்க, அவன் பிரசித்தமான பேரையும் உயர்வையும் எனக்குக் கொடுத்தருளினான்! இன்னும் துரியோதனன் எனக்குச் செய்துள்ள சிறப்பையும் உயர்வையும் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அவன் என்னிடம் கொண்டுள்ள நம்பிக்கையைப் பற்றியும் சொல்ல வேண்டும். அந்த நம்பிக்கைக்கு அத்தாட்சியான ஓர் அந்தரங்க சம்பவத்தைச் சொல்கிறேன். கேளுங்கள்! ஒரு சமயம் நானும் அவனுடைய பத்தினியான பானுமதிதேவியும் ஒரு தனியிடத்தில் அமர்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தோம். அந்தச் சமயத்தில் துரியோதனன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் தேவி எழுந்தாள். நான் அவன் வந்ததைக் கவனிக்கவில்லை. தேவி பாதி ஆட்டத்திலேயே எழுந்து விட்டாளே என்ற சிந்தனையில், அவளைத் திரும்பவும் உட்காரச் செய்து ஆடவைக்க தவறுதலாக அவளுடைய சேலையின் முந்தானையைப் பிடித்திழுத்தேன். அச்சேலையின் முந்தானையிலுள்ள மணிகள் அதனால் சிதறித் தரையிலே விழுந்தன. அப்போதுதான் நான் துரியோதனனைப் பார்த்தேன். உடனே எனக்குப் பயமாகிவிட்டது. பானுமதியும் அஞ்சி நின்றாள். ஆனால் ஆத்திரப்பட வேண்டிய துரியோதனன் ஆத்திரப்படவில்லை. அதற்குப் பதிலாக அன்போடு அவன் எங்களைப் பார்த்து, 'இந்த மணிகளை நான் பொறுக்கி எடுக்கட்டுமா? எடுத்துக் கோத்துக் கொடுக்கட்டுமா?' என்று கேட்டான். ஆமாம். நண்பனாகிய என்னிடம் அவன் அத்தனை நம்பிக்கை வைத்திருக்கின்றான்! அப்படிப்பட்ட துரியோதனனுக்கு வெற்றியைத் தேடித் தருவதற்காக, நான் போர்க்களம் சென்று என்னுடைய செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க வேண்டும். அதுவே எனக்கு இனிமேல் புகழைத் தரும். நான் செய்ய வேண்டிய காரியமும் தருமமும் அதுதான்! ஆகவே, நான் துரியோதனனைவிட்டு நீங்கிப் பாண்டவர்களிடம் வரமாட்டேன்!'' என்றான்.

குந்திதேவி கர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்ட பின்பும், அவனைப் பாண்டவர்களோடு சேரும்படி வற்புறுத்தினாள். கர்ணன் அதற்கு, "தாயே! இப்போது பல வார்த்தைகளைச் சொல்லிப் பயன் என்ன? யுத்தமோ ஏற்பட்டுவிட்டது! தாங்கள் என்னிடம் நினைத்து வந்த காரியம் என்ன? அதனை மறைக்காமல் உண்மையாகச் சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

கர்ணன் அப்படிச் சொன்னதும், குந்திதேவி அவனைப் பெற்று யமுனையில் விட்ட நேரத்தில் பட்ட துயரத்தைவிட அதிக துயரமடைந்தாள். அதனால் அவள் கண்களில் நீர்ப் பெருக, வார்த்தைத் தடுமாறி உள்ளம் நொந்துப் புலம்பினாள்.

தாயின் துயரத்தைக் கண்டு கர்ணன் மிகவும் மனம் மருகினான். அவளுடைய கண்ணீரைத் துடைத்து வெகுவாகச் சமாதானப்படுத்தினான். பிறகு அவளை நோக்கிக் கர்ணன், "தாயே! ஒருவர் இச்சைப்படி எதுவும் நடப்பதில்லை. எல்லாம் விதிப்படித்தான் நடக்கும். நான் எது கேட்டாலும் எல்லோருக்கும் கொடுக்கும் குணமுள்ளவன். ஆகையால், தாங்களும் பாண்டவர்களோடு என்னைச் சேர்ப்பதைத் தவிர, வேறெதை வேண்டுமானாலும் கேளுங்கள்!" என்றான்.

குந்திபிராட்டி உடனே, "புத்திரனே! அர்ச்சுனன் போர்க்களத்தில் உன்னை எதிர்த்துப் போரிட்டால், அவன்மேல் ஒருமுறையே நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க வேண்டும். அம்முறைக்கு அர்ச்சுனன் தப்பிப் பிழைத்தாலும் நாகாஸ்திரத்தைத் திரும்பவும் அவன் மேல் தொடுத்து அவனைக் கொல்லக் கூடாது! மேலும், உனது தம்பிமார்களான மற்ற பாண்டவர்களையும் நீ கொல்லக் கூடாது!" என்று இரண்டு வரங்களை அவனிடம் வேண்டினாள்.

கர்ணன் அதற்கு, "தாயே! ஓர் அஸ்திரத்தைத் தன்னை எதிர்த்துப் போர் செய்யும் பகைவர்மேல் ஒருமுறைதான் பிரயோகிக்க வேண்டும். அந்த ஒரு தடவையிலேயே பகைவரும் மாள வேண்டும். அதைவிட்டு அவர்கள் பிழைத்திருந்தால், அவர்களைக் கொல்ல அந்த அஸ்திரத்தை இரண்டாம் முறையாக ஏவுவது அரசர்களுக்கு வீரமில்லை;

அது அழகுமில்லை. மற்றும் அது தருமமுமில்லை! ஆகையால், நான் அடைந்துள்ள நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் ஒரு தரமே பிரயோகிப்பேன். அவனைத் தவிர மற்ற பாண்டவர்களையும் நான் கொல்ல மாட்டேன். இது சத்தியம்!'' என்று சொல்லி, தாய் கேட்ட இரண்டு வரங்களையும் கொடுத்தான்.

பிறகு கர்ணன் குந்திதேவியை கைகூப்பி வணங்கி, ''தாயே! எனக்குத் தாங்கள் இரண்டு வரம் கொடுத்தருள வேண்டும். ஒன்று போர்க்களத்தில் அர்ச்சுனனால் நான் இறந்து விழும் பொழுது, தாங்கள் எனக்குத் தாய்ப்பால் கொடுத்து 'தங்கள் புதல்வன்' என்னும் உண்மையை உலகறியச் சொல்ல வேண்டும். அடுத்து, நான் தங்கள் மகன் என்னும் உண்மையைப் போர் முடியும் வரையில் பாண்டவர்கள் அறியாதபடி தாங்கள் மறைத்து வைக்க வேண்டும். அப்படியில்லாமல் அவர்கள் இந்த உண்மையைக் கொஞ்சமாவது அறிந்து கொண்டால், ராஜ்ஜியத்தை எனக்குக் கொடுத்துவிடுவார்கள். நானும் அதனை எனது பிராண சிநேகிதனாகிய துரியோதனனுக்குத் தவிர வேறு யாருக்கும் கொடுக்க மாட்டேன்!'' என்றான்.

உடனே குந்தி, ''மகனே! நீ கேட்ட இரண்டு வரங்களையும் கொடுத்தேன். பெற்றுக் கொள்!'' என்றாள்.

பிறகு அவள், ''நான் உனக்கு முன்னே சாவது இனி எக்காலமோ?'' என்று சொல்லி, கண்ணீரோடு அவனிடம் விடைபெற்றுக் கொண்டு கண்ணன் இருக்கும் இடத்துக்குச் சென்றாள்.

கண்ணன் குந்தியை வரவேற்று நடந்தவைகளை விசாரித்துத் தெரிந்து கொண்டான். தான் வந்த காரியம் யாவும் நல்லபடியாக முடிந்துவிட்டதை எண்ணி மிகவும் சந்தோஷம் அடைந்தான். அந்தச் சந்தோஷத்துடன் குந்திதேவியை அவள் மாளிகையிலேயே தங்கச் செய்துவிட்டு, பாண்டவர்களிடம் புறப்பட்டான். அப்போது தன்னைத் தொடர்ந்து வந்த அரசர்களையும் அஸ்தினாபுரத்திலேயே விட்டுவிட்டு, கண்ணபிரான் தனது தேரில் ஏறிக் கொண்டு உபப்லாவியத்தை நோக்கி வேகமாகச் சென்றான்!

5. படை எழுச்சி

ஸ்ரீகண்ணபிரான் வந்து துரியோதனனுடைய செய்தியைச் சொன்னதும் தருமர் மிகவும் ஆத்திரம் கொண்டார். உடனே அவர், ''கொடிய பகைவர்களான துரியோதனாதியர்களை இந்த க்ஷணத்திலேயே அழிப்பேன்!'' என்று சபதமிட்டார். அக்கணமே தருமர் கொடிய பாரதப் போர் உண்டாகும்படி ஏற்பட்ட சம்பவங்களையெல்லாம் விளக்கமாக ஓலைகளில் எழுதி, அவற்றைத் தூதுவர்கள் மூலம் தமது அரச நண்பர்களுக்குக் கொடுத்து அனுப்பினார்.

தருமரால் செய்தி அறிந்தவுடன் பாஞ்சால தேசத்து அரசர்களுள் ஒருவனான துருபதராஜன் தனது சதுரங்கச் சேனைகளோடு உபப்லாவியத்துக்கு விரைந்து வந்தான். அவனுக்குப் பின் திருஷ்டத்யும்நனும், திருஷ்டகேதுவும், சிகண்டியும், உத்தமோஜஸும், யுதாமன்யுவும் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். பின்பு மத்ஸ்யதேசத்து அரசர்களான விராடனும், சதாநீகனும், சுவேதனும், வராககேதுவும், உத்தரகுமாரனும் வந்தார்கள். அதற்குப் பிறகு சேரனும், சோழனும், பாண்டியனும், கேகயதேசத்து அரசர்களும், குந்திபோஜதேசத்து ராஜாக்களும் வந்தார்கள், மற்றும் இடிம்பியின் மகனாகிய கடோத்கஜனும், அர்ச்சுனன் குமாரர்களாகிய அபிமந்யுவும், அரவானும், திரௌபதியின் புத்திரர்களாகிய விந்தனும், சோமனும், வீரகீர்த்தியும், புண்டலனும், ஜெயசேனனும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் சீனம், சாவகம், மத்திரம், மாளவம், ஆந்திரம், கலிங்கம், சோனகம், கன்னடம், மகதம், துலுக்கம், கூர்ச்சரம், ஒட்டரம் ஆகிய ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் பாண்டவருக்குத் துணையாகப் பாரதப் போரில் கலந்து கொள்ள வந்தார்கள்.

மற்றும் அப்போது கிரீடமில்லாத அரசர்களும், ராஜகுமாரர்களும், சிற்றரசர்களும், மந்திரிகளும், சேனாதிபதிகளும் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்கள்.

தமக்குத் துணையாக வந்த அரசர்களையும் மற்றவர்களையும், தருமர் தனித்தனியே அவரவர்களுக்குள்ள சிறப்புக்குத் தகுந்தபடி எதிர்சென்று வரவேற்று அழைத்து

வந்து உபசரித்தார். அப்போது பாண்டவர்களுக்குத் துணையாக வந்து சேர்ந்த ரதகஜதுரகபதாதிகளான ஏழு அக்ஷௌஹிணி சேனைகளும் அங்கே ஒன்றாகக் கூடின. சேனைகளின் நடுவே பேரிகைகள் காளமேகங்கள் போல் முழங்கின!

பிறகு, தருமர் எல்லா அரசர்களையும் சபாமண்டபத்தில் உபசரித்து உட்காரச் செய்தார். மன்னர்கள் அமர்ந்ததும் அவர்களின் அருகே சென்று, அவர்களுடைய முகத்தைப் பார்த்து, ''அரசர்களே! நான் கண்ணபிரானைப் பணிந்து துரியோதனனிடம் பாண்டவர்களாகிய எங்களுக்குரிய ராஜ்ஜிய பாகத்தைக் கேட்டுத் தூது அனுப்பினேன். அதற்குத் துரியோதனன் சம்மதிக்காமல் போருக்கு வாருங்கள் என்று கூறிவிட்டான். சமாதான வழியில் நாங்கள் துரியோதனனிடம் ராஜ்ஜியம் கேட்டோம். ஆனால், அவனோ அதனை லட்சியம் செய்யவில்லை. அதற்கு மாறாக ராஜ்ஜியம் எங்களுக்குத் தர மறுத்துவிட்டான். எனது ஆருயிர் சிநேகிதர்களே! இச்செய்தியை நீங்கள் அறியுங்கள்! நான் வாளின் துணையாலும் வில்லின் துணையாலும் என் பராக்கிரமத்தை எப்போதும் கூறிக் கொள்கின்றவன் இல்லை. இனி மேல் உங்கள் புஜபலத்தால் போரில் பகைவரை அழித்து ஜெயிப்பேன். அந்த வெற்றிக்கு அடையாளமான வாகை மாலையையும் தரிப்பேன்!'' என்று தருமர் கூறினார்.

உடனே அந்த அரசர்கள் எல்லோரும் தருமரை அன்புடன் பார்த்து, ''ராஜராஜனே! எங்கள் உயிரும், எங்கள் பெரிய சேனைகளும், மற்றும் எங்களுடைய எல்லாப் பொருள்களும் இனி உனக்கே சொந்தம்!'' என்று அவருக்கு உறுதி கூறினார்கள்.

அதுகேட்டு தருமர் கவலை மறந்தார். அப்போதே விராடராஜனின் மூத்த மகனான சுவேதனைத் தமது பெரிய சேனைகளுக்குத் தலைவனாக்கினார். அச்சமயத்தில் உலூபி என்னும் நாககன்னியின் குமாரனாகிய அரவான், ''பகைவர்களின் கொடிய சேனைகளையெல்லாம் ஒரே நாளில் ஒரே பாணத்தால் நான் கொன்றிடுவேன்!'' என்று வீரம் பேசினான்.

அவ்வாறு பாண்டவர்கள் மற்ற அரசர்களோடு கூடி பாரதப் போருக்கான ஆயத்தங்களைச் செய்து,

உபப்லாவியத்தில் கண்ணனோடு போருக்குத் தயாராகக் காத்திருந்தார்கள்!

இனி, அஸ்தினாபுரத்தைவிட்டு பகவான் கிருஷ்ணன் சென்ற பின்பு, துரியோதனன் செய்த காரியங்களைச் சொல்லத் தொடங்குகிறோம்.

தருமரைப் போலவே துரியோதனனும் தனக்கு வேண்டிய அரசர்களுக்கெல்லாம், "பஞ்சபாண்டவர்களோடு நமக்குக் கொடிய யுத்தம் செய்ய நேர்ந்துவிட்டது. ஆகையால், தாங்கள் தங்கள் சுற்றத்தார்களோடும் சதுரங்கச் சேனைகளோடும் உடனே போரில் நமக்குத் துணையாகப் புறப்பட்டு வாருங்கள். நமக்குத் துணையாக வந்த அரசர்களுக்கே வாழ்க்கை உண்டு. மற்றவர்களுக்கு இல்லை!" என்று ஓலை எழுதித் தூதுவர்கள் மூலம் அனுப்பினான்.

அச்சமயம் தனது மருமக்களான பாண்டவர்களுக்குப் போரில் துணை செய்வதற்காகச் சல்லியன், சுற்றத்தார்களோடும் சதுரங்கச்சேனையோடும் உபப்லாவியத்தை நோக்கி வந்தான். அதனையறிந்த துரியோதனன் உடனே அவ்வழியெங்கும் தண்ணீர் பந்தல்களையும் உணவுசாலைகளையும் அமைத்தான். துரியோதனனுடைய சூழ்ச்சி அறியாத சல்லியன், தனது படைகளோடு அங்கு தங்கியும் உணவு உண்டும் பிரயாணக்களைப்புத் தீர்ந்தான். அப்போது அவன் தன்னை உபசரித்தவர்களுக்கு யுத்தத்தில் துணைசெய்ய தான் கடமைப்பட்டிருப்பதாக வாக்களித்தான். பின்பே சல்லியன் தன்னை விருந்துபசரித்தவன் துரியோதனன் என்பதை அறிந்தான். ஆனாலும், தான் செய்துவிட்ட வாக்குத் தத்தத்தால் அவன் துரியோதனனுக்குப் போர்த் துணைவனானான்.

பிறகு சல்லியனும், காந்தார தேசத்து அரசனாகிய சகுனியும், மகததேசத்து அரசனும், விந்திரனும், விந்தனும் ஆறு வகைச் சேனைகளோடு போரில் துணை புரிவதற்காக சமுத்திரம் போல் துரியோதனனிடம் வந்தார்கள்.

அதற்குப்பின் கலிங்கதேசத்து மன்னன் சோமதத்தனும், காம்பிலிதேசத்து ராஜன் கௌசிகனும், தெலுங்கு நாட்டு வேந்தனும், போஜதேசத்து அரசனும்,

கேகயதேசத்து மன்னனும், திரிகர்த்ததேசத்து ராஜனும், கௌடதேசத்து அரசனும், மாளவ தேசத்து மன்னனும், சோழனும், சேரனும், ஒகநீகனும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களுக்குப் பின்னே பங்களம், குகுரம், சீனம், பப்பரம், கொப்பம், வங்கம், சிங்களம், துளுவம், அங்கம், ஆரியம், திகத்தம், சேதி, கொங்கணம், கடாரம், கொங்கம், கூபகம், இரட்டம், ஒட்டம் ஆகிய தேசத்துஅரசர்கள் எல்லோரும் அஸ்தினாபுரிக்குத் துரியோதனனுக்குத் துணையாக வந்து கூடினார்கள்.

மற்றும் அசுவத்தாமனும், பதினாயிரம் யதுகுல வீரர்களும், பூரிச்ரவசுவும், கௌரிமாவும் ஆகியவர்கள் அளவற்ற சேனைகளோடு பாரத யுத்தத்துக்குத் தயாராக வந்து சேர்ந்தார்கள்!

அதன்பின் துச்சாதனன் முதலிய துரியோதனனுடைய தம்பிமார்கள், அவனுக்குப் போரில் உதவுவதற்காக யுத்த கோபத்தோடு வந்து அஸ்தினாபுரியில் ஒன்றாகக் கூடினார்கள்.

அப்போது பீஷ்மரும், கிருபாசாரியாரும், கர்ணனும், துரோணாசாரியாரும், விகத்தசேனனும், பகதத்தனும் ஆகிய சேனாதிபதிகள் எல்லோரும் போர் எழுச்சியுடன் துரியோதனனிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஏழுபேரும் அச்சமயத்தில் ஏழுகுலபர்வதங்களைப் போல விளங்கினார்கள்!

ஆமாம். ஆறுகள் வந்து கடலில் சேர்வது போல, பதினொரு அக்ஷௌஹிணி சைன்யம் துரியோதனனை வந்து சூழ்ந்து பூலோகம் முழுவதும் பரவி நின்றது!

சேனைகளும் அரசர்களும் பாரதப் போருக்குத் தயாராக வந்து கூடிய பின்பு, துரியோதனன் எல்லோரையும் நோக்கி, ''பரசுராமரிடம் வில்வித்தைக் கற்று, அவரையே ஜெயித்த பிதாமகராகிய பீஷ்மரையே பாரதயுத்தத்தில் கௌரவப் படைகளுக்குச் சேனாதிபதியாக்குகிறேன்!'' என்று சொல்லி, பீஷ்மரைச் சேனாதிபதியாக்கினான்.

6. முகூர்த்தங் கேள்வி

துரியோதனன் பாரதப் போரில் கௌரவப் படைகளுக்குப் பீஷ்மரைச் சேனாதிபதியாக்கிய பின்பு, அவருடைய பாதங்களை வணங்கி, ''பிதாமகரே! போர் தொடங்குவதற்கு முன்பு, போர்க்களத்தில் நம்மால் பலி கொடுக்க தகுந்தவர்கள் யார்? அதற்கு ஏற்ற நாள் எது?'' என்று கேட்டான்.

அதற்கு பீஷ்மர், ''துரியோதனா! நல்ல முகூர்த்தம் பார்த்துச் சொல்வதில் சகாதேவனைத் தவிர சிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை. ஆகையால், நீங்கள் அவனிடம் இப்போதே போய் இது பற்றிக் கேளுங்கள்!'' என்றார்.

மேலும் பீஷ்மர் துரியோதனனை நோக்கி, ''பாண்டவர்கள் பக்கத்தில் அரவான் என்னும் சுத்தவீரன் ஒருவன் இருக்கின்றான். அவன் நமது சேனைகள் எல்லாவற்றையும் ஒன்றாக ஒரு பகற்பொழுதுக்குள்ளாகவே கொல்வதற்குச் சபதமிட்டு நிற்கின்றான். நீ போய் அவனைப் பிரார்த்தித்தால், அவன் தன்னை நீங்கள் களப்பலி கொடுக்கச் சம்மதிப்பான். அவனை நீங்கள் பலி கொடுத்துவிட்டால், வெகுசீக்கிரத்தில் பாண்டவர்களை ஜெயித்துவிடுவீர்கள். அரசாட்சியும் நல்வாழ்க்கையும் என்றும் உனக்கே கைகூடும்!'' என்று தெரிவித்தார்.

உடனே துரியோதனன் ஹம்ஸ தேரிலேறி சகாதேவனிடம் சென்றான். சகாதேவன் என்றுமே தனது தாயாதிகளான துரியோதனாதியரை வெறுத்தவன் இல்லை. அவர்களைப் பகைவர்களாக எண்ணியவனும் இல்லை. ஆகையால், சகாதேவன் தன்னிடம் வந்த துரியோதனனை அன்போடு வரவேற்று, அவன் வந்த காரியத்தையும் தெரிந்து கொண்டான். அக்கணமே அவன் துரியோதனனுக்கு, ''மார்கழி மாதத்து அமாவாசை இரவில் போர்க்களத்துக்குரிய பலியைக் கொடுத்தால் பகைவரை ஜெயித்து விடலாம்!'' என்னும் உண்மையைக் கூறினான்.

பின்பு, துரியோதனன் அர்ச்சுனனுடைய மகனாகிய அரவானிடம் சென்றான். துரியோதனன் தன் எதிரே வந்ததைக் கண்டதும், அரவான் தனக்குத் தந்தை முறையான அவனுடைய பாதங்களை வணங்கினான். அதன்பிறகு

அவனைப் பார்த்து அரவான், "தந்தையே! என்னிடம் வந்த காரியம் என்ன?" என்று கேட்டான்.

அதற்குத் துரியோதனன் பதில் சொன்னதும் அரவான், "தங்கள் எண்ணப்படியே என்னைக் களப்பலி கொடுங்கள்!" என்று ஒப்புக் கொண்டான்.

தான் நினைத்து வந்த காரியங்கள் யாவும் வெகு சுலபமாக முடிந்தது கண்டு துரியோதனன், "இனி எல்லா வாழ்க்கையும் நான் பெற்றவனாவேன்!" என்றெண்ணி, மகிழ்ச்சியோடு அஸ்தினாபுரிக்குத் திரும்பிச் சென்றான்.

7. களப்பலி

துரியோதனனுக்குச் சகாதேவன் போருக்குரிய நாள் வைத்துக் கொடுத்ததையும், அவனுக்கு அரவான் களப்பலிக்கு உடன்பட்டதையும் கண்ணபிரான் அறிந்தான். உடனே அந்தப் போர் முகூர்த்த நாளை மாற்றி அமைக்கவும், அரவானைக் களப்பலியிலிருந்து மீட்கவும் எண்ணினான். அதனால் அவன் முகூர்த்த நாளுக்கு முந்திய நாளான சதுர்த்தசியன்றே அமாவாசை வரும்படி தனது திவ்ய சக்தியால் செய்து, முனிவர்கள் முதலிய பலரிடம் இன்றைக்கே அமாவாசை என்று கூறினான். அவர்கள் எல்லோரும் கண்ணனின் கட்டளைப்படியே அன்றைக்கே அமாவாசை என்று மகிழ்ந்து, அதனைக் கொண்டாடினார்கள். அப்போது சூரியனும் சந்திரனும் அதைப் பார்த்து, "இதென்ன சதுர்த்தசியாகிய இன்றைக்கு இவர்கள் அமாவாசையைக் கொண்டாடுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டுத் தமக்குள் ஆலோசித்தார்கள்.

பின்பு, அவர்கள் இருவரும் ஒன்றாக கண்ணபிரானிடம் வந்து, "இன்றைக்கு எப்படி அமாவாசை யாகும்?" என்று கேட்டார்கள்.

திரிலோக சீதாராமனாகிய கண்ணபிரான் அதற்கு, "அமாவாசை என்பது, நீங்கள் இரண்டு பேரும் ஒன்று சேரும் தினம் அல்லவா? நீங்கள் இருவரும் இப்போது ஒன்றாகக் கூடி வந்த இந்தத் தினத்தை அமாவாசை என்று சொல்ல தடை என்ன?" என்று விடை கூறினான்.

அதுகேட்டு சூரியனும் சந்திரனும் மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார்கள்.

அதற்குப்பின், கண்ணபிரான் நடந்த செய்திகளையெல்லாம் தருமருக்கு விளக்கமாகச் சொல்லிவிட்டு, ''தருமபுத்திரா! துரியோதனன் களப்பலி கொடுப்பதற்கு முன்பே நீ களப்பலி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் போரில் துரியோதனனை ஜெயிப்பது என்பது உன்னால் முடியாது! ஆகவே, என்னை வெகுசீக்கிரம் நீ களப்பலி கொடு!'' என்று கபடமாகக் கூறினான்.

பாண்டவர்கள் கண்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டதும், இடி விழுந்த நாகம் போல மனம் கலங்கினார்கள். உடனே அவர்கள் கண்ணனுடைய திருவடிகளை நமஸ்கரித்து, ''எம்பெருமானே! உன்னைக் கொன்று பலி கொடுத்த பின்னால் வருகின்ற வாழ்க்கையும் வெற்றியும் எங்களுக்கு வேண்டாம்! இனி நாங்கள் செல்வ வாழ்க்கையையும் போர்க்களத்து வெற்றியையும் விரும்ப மாட்டோம். நாங்கள் இறப்பதே நல்லது!'' என்றார்கள்.

அப்போது அரவான் அவர்களைப் பார்த்து, ''முன்பு துரியோதனன் வேண்டியபடி நான் அமாவாசை தினத்தில் அவனுக்குக் களப்பலியாவதற்குச் சம்மதித்தேன். அமாவாசையோ வந்துவிட்டது. ஆனால், துரியோதனன் தான் சொன்னபடி இன்னும் என்னைக் களப்பலி கொடுப்பதற்கு வரவில்லை. ஆகவே, இப்போது நான் உங்களுக்கு என்னைக் களப்பலி கொடுப்பதற்குச் சம்மதிக்கிறேன்! என்னைப் பலியிடுங்கள்!'' என்றான்.

கண்ணன் அதுகேட்டு அவனை நோக்கி, ''அரவானே! உன்னைத் தவிர உலகத்தில் எனக்குச் சமமானவர்கள் வேறு யாருமே இல்லை. ஆகவே, ஒத்த உத்தம இலக்கணமுடைய நம்மிருவருள் ஒருவரே பலியாக வேண்டும்!'' என்றான்.

அதற்கு அரவான், ''யுத்தத்தில் பகைவர்களைக் கொன்று பாண்டவர்களுக்குச் செல்வ வாழ்க்கையைக் கொடுத்தருளப் போகும் பெருமானே! அடியேன் களப்பலி கொடுப்பதற்குத் தகுதியானவனாக இருக்கும் போது, தாங்கள் பலியாவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், என்னை விரைவில் களப்பலியாகக் கொடுத்து

விட்டாலும், உக்கிரமாக நடக்கும் போரைச் சில தினங்களாவது நான் பார்க்க அருள் புரிய வேண்டும். அதன் பின்பே நான் இறந்து போகும் வரத்தைத் தாங்கள் எனக்கு அருள வேண்டும்!'' என்று பிரார்த்தித்தான்.

கண்ணபிரான், ''அப்படியே ஆகட்டும்!'' என்று அரவான் கேட்ட வரத்தைக் கொடுத்தான்.

பின்பு, பாண்டவர்கள் கண்ணபிரானோடும் அரவானோடும் அந்த மாறுபட்ட அமாவாசை இரவிலேயே, துரியோதனாதியர்களுக்குத் தெரியாதபடி தாங்கள் பிறந்த குருதேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்குள்ள யுத்த தேவதையான காளியின் முன்பு, அரவான் சிறிதும் வருந்தாமல் முக மலர்ச்சியோடு தன்னைத் தானே முறைப்படி களப்பலிக் கொடுத்துக் கொண்டான்!

அரவான் களப்பலியானதும், பாண்டவர்கள் ஐவரும் காளிதேவிக்கு யாமளநூல் முறைப்படி யானை முதலிய முக்கிய பலிகளைக் கொடுத்து, தங்களின் ஜெயத்தையும் அவளிடம் வேண்டிக் கொண்டு திரும்பிச் சென்றார்கள்!

8. அணிவகுப்பு

மறுநாள் உதயப் பொழுது.

கண்ணபிரானும், பாண்டவர்களும், அவர்களுக்குப் போர்த் துணையாக வந்துள்ள அரசர்களும் ராஜசபையிலே வீற்றிருந்தார்கள். அப்போது கண்ணபிரான் பாண்டவர் படை சேனாதிபதியாகிய சுவேதனை நோக்கி, ''சுவேதனே! நீ நால்வகைத் தேர்வீரர்களோடு துரியோதனாதியர்களை எதிர்த்துப் போரிட இப்போதே குருக்ஷேத்திரத்துக்குப் புறப்பட்டுச் செல்!'' என்று கட்டளையிட்டான்.

உடனே சுவேதன் பாண்டவ சேனா வீரர்களை அணியணியாகப் பிரித்தான். தன்னோடு பீமன், அர்ச்சுனன், அபிமந்யு ஆகியவர்களையும் சேர்த்து அதிரதச் சேனாதிபதிகளாக நியமித்துக் கொண்டான். சிகண்டி, சாத்தகி, திருஷ்டத்யும்நன், விராடராஜன், தருமர் ஆகியவர்களை மகாரதச் சேனாதிபதிகளாக நியமித்தான். யாகசேனன், யுதாமந்யு, உத்தமோஜா ஆகியவர்களை சமரதச்

சேனாதிபதிகளாக்கினான். நகுலன், சகாதேவன், கடோத்கஜன் முதலியவர்களை அர்த்தரதச் சேனாதிபதிகளாக நியமனம் செய்தான். மற்ற பூலோகத்து அரசர்களையெல்லாம் சுவேதன் இந்த நான்கு அணிகளிலும் சமமாகப் பிரித்துச் சேர்த்தான்.

தங்களுடைய படைகளின் அணி வகுப்பைப் பார்த்து கண்ணனும் பாண்டவர்களும், பஞ்ச இந்திரியங்களும் மனமும் ஒன்று சேர்ந்தது போல மிகவும் மகிழ்ந்தார்கள். அப்போது அவர்களோடு இருந்த பலராமன், அவர்களைப் பார்த்து, "நீங்கள் நினைத்த யுத்தம் முடியும் வரையில் நான் தீர்த்த யாத்திரை சென்று வருகிறேன்!" என்று கூறிவிட்டு, அவர்களிடமிருந்து சிநேகித்துடன் பிரிந்து சென்றான்.

பலராமன் போகும் போது விதுரனையும் அழைத்துக் கொண்டு தீர்த்த யாத்திரை சென்றான். அவர்கள் இருவரும் செல்லும் வழியெல்லாம் முனிவர்கள் எதிர்கொண்டு வந்து வரவேற்று உபசரித்தார்கள். அவர்களின் உபசரிப்போடு விதுரனும் பலராமனும் தீர்த்த யாத்திரை செய்ய எட்டுத் திசைகளிலும் சென்றார்கள்.

பாண்டவர்களின் பக்கத்தில் அணி வகுத்து நின்ற சதுரங்கச் சேனைகளின் பலமோ மிகப் பெரியது. அச்சதுரங்கச் சேனையிலுள்ள யானைப்படை மிகப் பயங்கரமாக இருந்தது. அச்சேனையிலுள்ள யானைகள் காளமேகங்கள் போலவும், கடல்கள் போலவும், வாத்தியங்கள் போலவும் கர்ச்சித்தன. அவைகள் தங்களின் உரல் போன்ற கால்களைத் தரையில் அடி எடுத்து வைக்கும் தோறும் பாதாள லோகத்து நாகங்களின் படத்திலுள்ள மாணிக்கங்கள் சிதறிப் பொடிப் பொடியாயின.

யானைப்படை போலவே தேர்ப்படையும் காண்பதற்கு அச்சத்தைத் தந்தது. அப்படையிலுள்ள தேர்களின் சக்கரங்களுடைய நுனிபட்டாலே போதும். பெரிய மலைகளும் பாதாளலோகத்தில் போய் அழுந்திவிடும். மற்றும் அத்தேர்களில் பூட்டியுள்ள குதிரைகளால் எழுந்த புழுதிப் படலம் ஆகாயத்திலுள்ள தேவர்களின் கண்களை மறைக்கும். அப்போது தேர்மீது கட்டப்பட்டிருக்கும் கொடிகள் அத்தேர்களின் கண்களைத் துடைக்கும். இது நிஜமே!

குதிரைப்படையும் சாமான்யமானதில்லை. அப்படைகளிலுள்ள குதிரைகள் இலட்சணம் தவறாத நடையுடையவை. அத்துடன் அவைகள் அநேகவிதமான நடைகளைக் கொண்டவை. காற்றைப் போல் வேகமாகச் செல்லக் கூடியவை. அவைகளின் குளம்புகளால் எழும் புழுதிப்படலம் மிக அதிகமாக ஆகாயத்தில் செல்வதால் பாதாள லோக நாகசாதியர்கள் தலைபாரம் குறைவார்கள். அக்குதிரைகள் சக்கரவாளகிரியையே தாம் வட்டமாக ஓடுவதற்குச் சுற்றெல்லையாகக் கொண்டு மண்டலகதியாகச் சுற்றி வரும். அது மட்டுமில்லை. அவைகள் ஏழுவகை மேகங்களின் தலைகளும் கிழியும்படி தம் குளம்புகளை அவற்றின் மேல் பாவிச் செல்லும்.

காலாட்படையோ இன்னும் அதியற்புதமானது. அப்படையிலுள்ள வீரர்களின் புருவங்கள் கொடிய விற்களின் வளைவு போல் தோன்றின. அவர்களின் சுவாசத்தோடு புகை கிளம்பியது. அவர்களுடைய பவழம் போன்ற வாயிலுள்ள முத்து போன்ற பற்களில் இளஞ்சந்திரகாந்தி வீசியது. அவர்கள் வீரநகை செய்யும் போது அவ்வொளி வெளியில் அதிகமாகத் தெரிந்தது. அவர்களின் மனத்திலே கோபத்தீ பொங்கிக் கொண்டிருந்தது. தங்களுடைய நீண்ட கைகளில் அவர்கள் சூரியகாந்தி போன்ற ஒளிவீசும் வேல்களை வைத்திருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களில் அழகு கொலுவிருந்தது. கோபத்தால் அவர்களுடைய கண்கள் செந்நிறமாகக் காணப்பட்டன. மொத்தத்தில் அவர்கள் பார்ப்பதற்கு ராட்சசர்களைப் போல் தோன்றினார்கள்!

பேரிகை முழக்கத்தைப் போல் கம்பீரமான சொற்களுடைய அரசர்கள் தங்களைக் கொடிகளும், வெண்கொற்றக்குடைகளும், ரதகஜதுரகபதாதிகளும், புழுதிப்படலமும் சூழ்ந்து வர ஒருவர்க்கொருவர் தோள்களும் கிரீடங்களும் மோதிக் கொள்ள முறையாக நெருங்கினார்கள்!

தேர்களின் மீது கட்டப்பட்டுப் பறந்த கொடிகள் சூரிய ஒளியை மறைத்து பூமியில் இருட்டடிப்புச் செய்தன. அவைகள் வீசும் காற்றுக்குத் தக்கப்படி அசைந்தன. ஆகாய கங்கையில் சஞ்சரிக்கும் உடம்பில் கோடுகளுடைய மீன்களைப் போல் நெளிந்து அசைந்துப் பறந்தன. நக்ஷத்திரக்

கூட்டமும் ஆகாய வட்டமும் மறையும்படி அவற்றுக்குப் போட்ட கவசத்தைப் போல் அக்கொடிகள் விளங்கின.

அப்போது துணைப்படை, பகைப்படை, நாட்டுப் படை, காட்டுப்படை, கூலிப்படை, மூலப்படை ஆகிய ஆறுவகைச் சேனைகளும் அணிவகுக்கப்பட்டு ஒரே இடத்தில் கூடின. அதனால் கீழிருந்து பூமியைத் தாங்குகின்ற நாகங்கள் பாரமிகுதியை நினைத்து அச்சம் கொண்டன.

மேலும், அச்சேனையிலுள்ள நூறு வகையான வாத்தியங்களும் பலவேறு தாளங்களில் ஒலித்தன. அரசர்களின் வெண்கொற்றகுடைகள் அநேக பூர்ண சந்திரர்கள் போல் விளங்கி நிழல் கொடுத்தன. நவரத்னமிழைத்த கொடிகளின் சீலைகள், பல கங்காநதிகள் போல ஒழுங்காய் நிறைந்தன. பல சூரியர்கள் வரிசையாக விளங்குவது போல வீரர்கள் ஏந்திய அநேக வகை ஆயுதங்களும் விளங்கின.

பாண்டவர்சேனை அணிவகுத்து நின்ற அந்த யுத்தபூமி, அச்சேனையிலுள்ள யானைகளாலும், கிரீடங்களாலும், குடைகளாலும், குதிரைகளாலும், ஆயுதங்களாலும், கொடிகளாலும், இடையிடையே மலைகள் உள்ள காட்டைப் போல் தோன்றியது!

மற்றும் அச்சேனையில் சங்குகள் முழங்கின; கிடுகுபறைகள் அடிக்கப்பட்டன; ஊதுகொம்புகள் ஒலித்தன; மகுடிகள் ஊதப்பட்டன; மிருதங்கங்கள் அதிர்ந்தன; கிணைப் பறைகள் ஆர்த்தன; பலவகை துளைக் கருவிகள் வாசிக்கப்பட்டன; பேரிகைகள் இரைந்தன; உடுக்கைகள் ஒலித்தன; அந்தப் பேரோசைகளால் கேட்டவர்களின் காதுகளெல்லாம் செவிடாயின. அவ்வாறு பாண்டவர்சேனை புறப்பட்டதால் உலகம் முழுவதும் குழப்பம் அடைந்தது!

கண்ணபிரான் உயிராகவும், தருமர் மார்பாகவும், சுவேதன் முகமாகவும், பீமனும் அர்ச்சுனனும் தோள்களாகவும், நகுல சகாதேவர்கள் கால்களாகவும், மற்றுமுள்ள அரசர்கள் உடம்பின் வெவ்வேறு உறுப்புகளாகவும் கொண்ட அந்தப் பாண்டவர் சேனை குருக்ஷேத்திரத்தைச் சேர்ந்தபோது ஒரு முழு ரூபத்தை அடைந்தது!

பாண்டவர்களுடைய சேனை இவ்வாறு குருக்ஷேத்திரத்தில் போருக்குச் சித்தமாக வந்து நின்றுவிட்டது!

இனி, கௌரவ சேனை போருக்கு ஆயத்தமான செய்தியைச் சொல்வோம்!

தான் களப்பலியாகக் கொடுப்பதற்கு இருந்த அரவானை, கண்ணபிரான் மாற்றியமைத்த அமாவாசை இரவில் பாண்டவர்கள் பலி கொடுத்துவிட்டதை அறிந்ததும் துரியோதனன் கொடிய ஆத்திரம் கொண்டான். அவன் உடனே பீஷ்மரை நோக்கி, "பிதாமகரே! பாண்டவர்கள் நமக்குப் பயந்து கொண்டு, நமக்கு முன்னால் களப்பலி கொடுத்துவிட்டார்கள். நமக்குச் சமமான பராக்கிரமசாலிகள் அவர்கள் சேனையில் ஒருவருமில்லை. அதை நான் அறிவேன். தாங்களும் அறிவீர்கள் அல்லவா? ஆகையால், இப்போதே நமது படை அரசர்களையெல்லாம் நால்வகை ரதச் சேனாதிபதிகளாகப் பிரித்து அணிவகுக்கச் செய்து போருக்குப் புறப்படுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய கட்டளைப்படி பீஷ்மர் உடனே, "இதோ, அப்படியே அணிவகுக்கிறேன்!" என்று கூறி, அதனைச் செய்யத் தொடங்கினார்.

பீஷ்மர் தம்மோடு துரோணாசாரியார், அசுவத்தாமன், பூரிச்ரவஸ் ஆகியவர்களையும் சேர்த்து அதிரதச் சேனாதிபதிகளாக நியமித்துக் கொண்டார். பின்பு அவர் சோமதத்தன், பகதத்தன், துர்மர்ஷணன் ஆகியவர்களை மகாரதச் சேனாதிபதிகளாக்கினார். கிருதவர்மராஜன், கிருபாசாரியார், சகுனி, சல்லியன், ஜயத்ரதன் ஆகியவர்களைச் சமரதச் சேனாதிபதிகளாக நியமித்தார். கர்ணன், விருஷஸேநன், துரியோதனனுடைய தம்பிமார்களான துச்சாதனன் ஆகியவர்களை அர்த்தரதச் சேனாதிபதிகளாக நியமனம் செய்தார்.

கௌரவசேனைகளைப் பீஷ்மர் அவ்வாறு பிரித்ததைக் கண்டதும் கர்ணன் மிகவும் ஆத்திரமடைந்தான். தன்னை முதல் மூன்று சேனைகளில் ஒன்றிலும் சேர்க்காமல் கடைசிச் சேனையில் சேர்த்ததை எண்ணி பீஷ்மர் மேல் அளவற்ற கோபம் கொண்டான். அக்கோபத்துடன் அவரை நோக்கி கர்ணன், "உமது உயிரை மாய்த்துவிடுவேன்!" என்று வாளாயுதத்தை உறையிலிருந்து எடுத்தான்.

ஆனால், கர்ணன் மறுகணமே தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு வாளை உறையில் போட்டுவிட்டு பீஷ்மரைப் பார்த்து, "கொடிய யுத்தத்தில் நீர் இறக்கும் வரையிலும் நான் ஆயுதத்தைத் தொடமாட்டேன்!" என்று சபதமிட்டான்.

பின்பு, பேரிகைகள் ஸப்த மேகங்கள் போல் முழங்க துரியோதனன், தன்னை ரதகஜதுரகபதாதிகளும் தம்பிமார்களும் தொடர பீஷ்மரோடு போர்க்களத்துக்குச் சென்றான்.

துரியோதனனுடைய சதுரங்கச்சேனை மிகப் பயங்கரமானது. அச்சேனையிலுள்ள யானைப்படை மிகவும் அற்புதமானது. அச்சேனையிலுள்ள மதயானைகள், காளமேகத்தில் விளங்கும் இளவெயில் போன்ற செம்புள்ளிகளோடு தோன்றின. அந்த யானைகள் பனைமரம் போன்ற தமது துதிக்கையால் மேகத்தைக் கிழித்து நட்சத்திரங்களைப் பறிக்கும் ஆற்றலுடையன. அந்த யானைகளின் கண்களிலிருந்து கோபத்தீ வெளிப்பட்டது. அவற்றின் நெற்றியிலிடப்பட்டிருந்த சிந்தூரத்திலகம் சூரியகாந்தி போல் ஒளிவீசியது. அவைகள் பிறைச்சந்திரன் போன்ற தமது தந்தங்களிலே கிம்புரி என்னும் பூணை அணிந்திருந்தன!

குதிரைப்படையிலிருந்த குதிரைகள் யாவும் யவனதேசக் காடுகளிலே பிறந்து வளர்ந்தவை. அவை சூரியனுடைய தேர்க்குதிரைகளுக்குச் சமமானவை. இமைப்பதற்குள் அந்தக் குதிரைகள் பூலோகம் முழுவதையும் அதிவேகமாகச் சுற்றி வந்துவிடும். அவைகளின் குளம்புகளால் எழும் புழுதிப்படலம் கடலையும் தூர்த்துவிடும். காற்றின் சஞ்சாரம் போல் அந்தக் குதிரைகளின் நடை வேகமிருக்கும். அநேகவிதமான வர்ணங்களுடையவை அந்தக் குதிரைகள். அவைகளின் சுவாசம் நறுமணமுடையது!

கௌரவர்களுடைய தேர்ப்படையோ இன்னும் சிறந்தது. தேர்ப்படையிலுள்ள ஒவ்வொரு தேரும் மலைபோல இருந்தது. நட்சத்திரக் கூட்டம் போல அந்தத் தேர்கள் காணப்பட்டன. அத்தேர்களின் சக்கரங்கள் சூரிய மண்டலம் போல் தோன்றின. தேர்களின் மகுடங்கள்

மலைச்சிகரங்களை ஒத்திருந்தன. அந்தத் தேர்களில் பூட்டியுள்ள குதிரைகளோ காற்றைப் போல் வேகமாகச் செல்லக் கூடியவை. அத்தேர்களின் கொடிகள் மலையருவிகளைப் போலிருந்தன. ஆமாம், அத்தேர்கள் யாவும் ஏழுகுல பர்வதங்களைப் போல வெகு கம்பீரமாகக் காட்சியளித்தன!

துரியோதனனுடைய பாதாதிசேனையோ அதிவீரதீர முடையது. அச்சேனையிலுள்ள வீரர்கள் அஞ்சாநெஞ்சம் கொண்டவர்கள். பாம்பின் விஷம் போன்ற கோபத்தையுடையவர்கள். சலியாத உறுதி படைத்தவர்கள். குதிரைகளோடு சமமாக நடக்கும் வேகமான நடை கொண்டவர்கள். இடி போல் கர்ச்சிக்கும் குரலும், தூண் போன்ற தோள்களும், காற்று போல் வலிமையான மார்பும், மன்மதனைப் போல் அழகிய உடம்பும் படைத்தவர்கள். கடற்கரை மணல் போன்ற அளவற்ற வீரர்கள் அச்சேனையில் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அணிவகுத்து கொடிய ஆயுதங்களோடு சென்றார்கள்!

வெண்கொற்றக்குடைகளும் சாமரங்களும் சந்திரகாந்தி வீசவும், கையிலுள்ள ஆயுதங்களும் அணிந்துள்ள ஆபரணங்களும் கிரீடங்களும் சூரியகாந்தி வீசவும், இடையிடையே தூக்கிப் பிடிக்கப்பட்ட கொடிகள் நிழல் கொடுக்கவும் அரசர்கள் எல்லோரும் சூரியனைப் போன்ற தோற்றத்தோடு போருக்கு விரைந்தார்கள்.

அப்போது ஏழுகடல்களும் பொங்கியது போலவும், ஏழு தீவுகளும் எதிர்த்தது போலவும், ஏழுமேகங்களும் இடி முழக்கம் செய்தது போலவும் நால்வகைக் கருவிகளும் அச்சேனை முழுவதும் ஒலித்தன!

துரியோதனனுடைய தேர் சென்ற வேகத்தால், அத்தேரில் கட்டப்பட்டிருந்த பாம்புக்கொடி பின்னோக்கிப் பறந்தது. அது பார்ப்பதற்கு கண்ணனுடைய கருடக் கொடியையும், அர்ச்சுனனுடைய இடிக்கொடியையும் கண்டு பயந்து பின்னோக்கிப் பறப்பது போல் தோன்றியது!

கௌரவசேனையால் எழுந்த புழுதிப் படலத்துக்கு ஓர் அளவேயில்லை. அந்தப் புழுதிப்படலம் துரியோதனனுடைய நீதியற்ற அரசாட்சியில் தான் இருந்த பாவத்தைப் போக்கிக்

கொண்டு, தருமனுடைய வெண்கொற்றக்குடையின் கீழ் இருப்பதற்காக ஆகாயகங்கையில் நீராடும் பொருட்டு ஆகாயத்தை நோக்கிச் செல்வது போல் எழுந்து பரவியது. அப்போது அந்தப் புழுதிப்படலம் மறைக்க முடியாத சூரிய ஒளியையும் மறைத்துவிட்டது!

கௌரவசேனையும் விரைவாக வந்து போருக்கு ஆயத்தமாக குருக்ஷேத்திரத்தை அடைந்தது!

பாண்டவசேனைகளும் கௌரவசேனைகளும் எதிரெதிராக தேவசேனையும் அரக்கச்சேனையும் போலப் போருக்குத் தயாராக நின்றன!

அப்போது துரியோதனன் பீஷ்மரைப் பார்த்து, "பிதாமகரே! நமது கண்ணுக்கு எதிரே அணிவகுத்து நிற்கின்ற பாண்டவர்களுடைய சேனைகளையெல்லாம் அழிப்பதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும்?" என்று கேட்டான்.

பீஷ்மர், "துரியோதனா! இங்கு கூடியுள்ள இந்தச் சேனைகள் முழுவதையும் நான் ஒரே தினத்தில் போர் செய்து அழித்துவிடுவேன். துரோணாசாரியார் மூன்று நாட்கள் போரிட்டு அழிப்பார். கர்ணன் ஐந்து நாட்கள் போர் செய்து அழிப்பான். அசுவத்தாமன் ஒரே நாழிகையில் யுத்தம் புரிந்து அழிப்பான். ஆனால், அர்ச்சுனனோ பூலோகத்து உயிர்களும், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பிராணிகளும், தேவலோகத்தவர்களும் அஞ்சும்படி ஒரு க்ஷணத்துக்குள் அழித்து முடித்துவிடுவான்!" என்றார்.

அப்போது அர்ச்சுனன் தனக்கு எதிரே நிற்கும் கௌரவச்சேனையைப் பார்த்தான். அச்சேனைக்குப் பிரதம தளபதியாக பீஷ்மர் இருப்பதைக் கண்டான். மற்றும் அச்சேனையிலே துரோணாசாரியார், கிருபாசாரியார், அசுவத்தாமன் முதலிய பெரியவர்களும்; துரியோதனன், சல்லியன், துச்சாதனன், விகர்ணன், ஜயத்ரதன், சகுனி ஆகிய உறவினர்களும் வரிசை வரிசையாக நிற்கும் கோலத்தைக் கண்டான். அவர்களையெல்லாம் பார்த்ததும் அர்ச்சுனன், அவர்களோடு எப்படி எதிர்த்துப் போர் செய்வது என்று மனம் கலங்கினான்.

உடனே அர்ச்சுனன் கண்ணபிரானை நோக்கி, "கண்ணா! எனது பிதாமகரும், உறவினர்களும், அண்ணன்

தம்பிமார்களும் அல்லவா எதிரே போர் செய்ய எண்ணி நிற்கின்றார்கள்! அவர்களை எனது புஜபராக்கிரமத்தால் கொன்று நாங்கள் அடையப் போவது இந்தப் பூமியைத் தானே! இப்போது இந்தப் பூமியை அடைந்திருப்பவனும் எனது தமையனே! இனி அடையப் போகின்றவனும் எனது தமையனே!'' என்றான்.

மேலும் அவன் அவர்களையெல்லாம் கொல்வது கொடிய பாவம் என்று எண்ணினான். அதனால் அர்ச்சுனன், ''நான் இப்போது போர் செய்ய மாட்டேன்'' என்று கண்ணனைப் பார்த்து யுத்தகளத்தில் கூறினான்.

அதுகேட்டு கண்ணபிரான் புன்னகைத்தான்!



பீஷ்ம பருவம்



1. முதல் நாள் போர்

அர்ச்சுனன் தனது சுற்றத்தார்களையும் குருதேவர்களையும் எதிர்த்துப் போரிட மாட்டேன் என்று கூறியதைக் கேட்டதும், கண்ணபிரான் புன்னகையோடு அவனை நோக்கி, ''அர்ச்சுனா! மாயை என்பவள் ஒருத்தி. அவளிடம் மனம் என்னும் ஒருமகன் உண்டானான். அவன் பரிசுத்தமான ஞானம் என்பவனை வெளிப்படாதபடிச் செய்துவிட்டான். தாய் தந்தை பிள்ளைகள் மனைவி ஆகிய இவர்களிடம் வைத்த அன்பும், அந்த மனம் என்பவனால் உண்டானதொரு எண்ணமே! பந்தபாசம் என்பது மனத்தால் தோன்றும் ஒரு பொய்மையே! இதனை உணர வேண்டும்! உடம்பில் பொருந்திய பஞ்ச இந்திரியங்களிடமிருந்து அமைக்கப்பட்ட ஐம்புலன் உணர்வுகளையும், தானே அனுபவித்து மூவகைக் குணங்களோடும் ஆறுவகைச் சேனைகளோடும் அரசாட்சி செய்கின்றவன் மனம் என்னும் பகைவன். அவன் தூங்கிய பொழுது ஞானம் என்பவன் வெளிப்படுவான். அந்தச் சுத்தஞானம் என்னும் புருஷனை உள்ளபடி உணர்ந்தவர்களே அறிஞர்களாவார்கள். எல்லாப்



பிரபஞ்சத்துக்கும் பரமபிதாவான கடவுளால் அமைக்கப் பட்ட சராசரமாகிய எல்லாப் பொருள்களிலும், சகல ஜீவாத்மாக்களிலும் பாலில் நெய் போல் அந்தராத்மாவாய் மறைந்து, அப்பரமான்மா வாழ்கின்ற சம்பந்தத்தை நன்கறிந்து ஆலோசித்துப் பார். அப்படி ஆலோசிக்கும் காலத்தில் ஒருவனுக்கு யாரும் பகைவரும் இல்லை; நண்பரும் இல்லை. தேவர்களும், முனிவர்களும், மற்றவர்கள் எல்லோரும் அறியாத ஒரு தத்துவப்பொருளை, இப்பொழுது இங்கு உனக்கு நானே அறிவிக்கிறேன். கேள்! எல்லாப் பிராணிகளுக்கும் சரீரங்கள் ஐந்து பெரிய பூதங்களாலும் செய்யப்பட்டன. அவற்றினுள்ளே ஞானசொரூபியாய் ஒப்பற்ற கடவுள் ஒருவன் இருந்து, எல்லாத் தொழில்களையும் அவற்றைக் கொண்டு

நடத்துகின்றான். என்னை இத்தன்மையானவன் என்று நானே சொல்கிறேன். நீ கேள்! எங்கும் நிறைந்து எல்லாப் பொருள்களுமாய் அழியாது நிலைபெற்ற பரம்பொருளும் நானே! வேதங்களுக்கெல்லாம் முடிவான பொருளும் நானே! உன்னைவிட்டு நான் எப்போதும் பிரிவதில்லை. முற்காலத்தில் ஒரு தரம் நாம் இருவரும் பிரிந்து நரநாராயணர்களாய் அவதரித்தோம்! பின்பு ஓர் அவதாரத்திலே நாம் இருவருமே ராமலக்ஷ்மணர் என்னும் பெயரை அடைந்தோம். இந்தப் பெரிய அவதாரத்திலே அர்ச்சுனனாகிய நீயும் கிருஷ்ணனாகிய நானுமாய் இங்கு நிற்கின்றோம். ஆகையால், உன்னிடமுள்ள திகைப்பையும், உறவினர் என்றும் நண்பர் என்றும் கொண்ட இந்த அபிமானத்தையும் நீக்கு!'' என்று உபதேசித்து, தனது உண்மை நிலையான விசுவரூபத்தை அவனுக்குக் காட்டினான். அத்திருவருளால் அர்ச்சுனனுடைய மனத்தில் தத்துவ தெளிவை கண்ணன் ஏற்படுத்தினான்.

அப்போது அர்ச்சுனன் மனமயக்கம் தீர்ந்து நல்லுணர்வு பெற்றான். உடனே அவன் கண்ணபிரானை நோக்கி, ''எம்பெருமானே! தரும அர்த்த காமம் என்னும் மூன்று புருஷார்த்தங்களையும் முடிய ஒழித்து, பிரபத்தியாகிய பரம உபாயத்தால் உன் திருவடியை அடைந்து உய்கின்ற நற்பயனை அடியேனுக்கு அருளினாய்!'' என்று உபசாரம் பேசி, அவனுடைய தாமரைத் திருவடிகளை நமஸ்கரித்தான்.

பிறகு அர்ச்சுனன் கிருஷ்ணபகவானிடம், ''நான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள்!'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போருக்குத் தயாரானான்.

அர்ச்சுனனுடைய மனமயக்கத்தைப் போக்கி அவனைப் போருக்குச் சித்தப்படுத்திய பின்பு, தன்னோடு பாண்டவர்கள் வர கண்ணபிரான் தேரில் ஏறிக் கொண்டு பீஷ்மரிடம் சென்றான். அவரை நோக்கி கண்ணன், ''பீஷ்மா! எல்லோரையும் விடச் சிறந்த நீயே இப்பாண்டவர்களை எதிர்த்துப் போர் செய்தால், உன்னை ஜெயித்து இவர்கள் போர்க்களத்தை ஆக்ரமித்துக் கொள்ள முடியுமோ?'' என்று கேட்டான்.



பீஷ்மர் தாம் நினைத்த பொழுது உயிரை விடுதல் முதலிய பெரும் வரங்களைப் பெற்றவர். யாராலும் வெல்ல முடியாத பராக்கிரமசாலி. அதனால் அவரை வெல்வதற்கு அவரையே வழிகேட்பதற்காக மாயவன் அவரிடம் அப்படிக் கேட்டான்.

பீஷ்மரும் அதற்குப் பதில் சொல்லத் தொடங்கி, "கண்ணா! இனிமேல் தருமனே இந்தப் பூமி முழுவதுக்கும் அரசனாவான். என்னைக் கொல்லும் உபாயத்தைச் சொல்கிறேன். நீ கேள்! முன்னொரு காலத்தில் என்மேல் கோபம் கொண்ட அம்பை என்னும் பெண், தானே யுத்தத்தில் என்னைக் கொல்வதற்காகத் தவம் செய்து, பின்னால் சிகண்டி என்னும் ராஜகுமாரனாகப் பிறந்திருக்கிறாள்! துருபதராஜனுடைய மகனான அந்தச் சிகண்டியைப் பத்தாம் நாள் போரில் என்முன் நிறுத்தினால், பெண்ணாயிருந்து ஆணாக மாறிய அவனோடு போர் செய்ய

நான் எந்த ஆயுதத்தையும் தொடமாட்டேன். அதற்குப் பதிலாக அந்தச் சிகண்டி கோபித்துப் போர் செய்கின்ற பராக்கிரமத்தைப் பார்ப்பேன். பிறகு, அர்ச்சுனனுடைய அம்பால் அடிபட்டுப் போர்க்களத்தில் இறப்பேன்!'' என்றார்.

பின்பு பீஷ்மர் கண்ணனின் முகம் பார்த்து, ''மேகவண்ணா! நீ பாண்டவர்கள் பக்கம் துணைபுரிய கருணையோடு நிற்கின்றாய். ஆகையால், பாண்டவர்களைத் தவிர வெற்றியை அடைபவர்கள் வேறு யாருமில்லை!'' என்று கூறினார்.

அதுகேட்டு பாண்டவர்கள் பீஷ்மருடைய பாதங்களை வணங்கினார்கள்.

அதன்பின் கண்ணன் அவர்களை அழைத்துக் கொண்டு துரோணாசாரியாரிடம் சென்றான். பாண்டவர்கள் துரோணாசாரியாருடைய பாதங்களை நமஸ்கரித்து நின்றார்கள். அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி துரோணரைப் பார்த்து, ''துரோணா! பாண்டவர்கள் ஜெயிக்கும்படி நீ கருணை செய்தால்தான், அவர்களுக்கு வெற்றியுண்டு. அதைத்தவிர உன்னை ஜெயிப்பது என்பது மூவுலகத்தையும் அளந்த திருமாலாலும் முடியாது!'' என்றான்.

துரோணாசாரியார் அஸ்திரசாஸ்திரங்களில் அதிசாமர்த்தியசாலி. அவரை யாராலும் அத்தனைச் சுலபத்தில் அழித்துவிட முடியாது. ஆகையால், அவரைக் கொல்வதற்கு அவரையே வழிகேட்பதற்காக, மாதவன் அவரிடம் அப்படிச் சொன்னான்.

துரோணாசாரியாரும் கிருஷ்ணனுக்குப் பதில் கூறத் தொடங்கி, ''வசுதேவ மைந்தா! பாண்டுவின் குமாரனாகிய தருமன்தான் பகைவரை ஜெயித்து இனி பூமியை அடையப் போகிறவன். இனி பாண்டவர்கள் என்னை ஜெயிப்பதற்கான உபாயத்தைச் சொல்கிறேன். கேள். தேவேந்திரனைப் போன்ற அரசர்களின் முன்னால், என் மகன் அசுவத்தாமன் நான் இறப்பதற்கு முன்பு போரில் இறந்துவிட்டால், அதன் பின்பு நான் வில்லை கையில் எடுக்க மாட்டேன்! அப்போது நான் நிராயுதபாணியாய் எதிரே நிற்பதாலும், தனது பெரிய வரத்தாலும் திருஷ்டத்யும்நன் எனக்கு யமனாகப்

போரிடுவான். அப்படி அவன் போர் செய்த அந்த க்ஷணமே எனது உயிர் நீங்கும்!'' என்றார்.

பின்பு அவர், ''சரி, நீங்கள் செல்லுங்கள்!'' என்று கண்ணனையும் பாண்டவர்களையும் நோக்கிக் கூறினார்.

பீஷ்மரிடமும் துரோணாசாரியாரிடமும் ஆசி பெற்றுக் கொண்ட பாண்டவர்கள் கண்ணனோடு தங்கள் சேனைக்குத் திரும்பிச் சென்றார்கள்.

பாண்டவர்களுடைய ஏழு அக்ஷௌஹிணி சேனையையும் கண்ணபிரான் மலைபோல் அமைப்பு கொண்ட அசல வியூகமாக வகுத்தான். பின்பு, ''துர்க்கையே! ஜெயத்தைக் கொடுத்தருள்!'' என்று காளியை வேண்டினான். அதன் பின்பு, படைகளைப் போர் செய்யும்படி உத்தரவிட்டான்.

கண்ணனுடைய கட்டளையைக் கேட்டவுடனே பாண்டவர்களின் முதற்படை துரியோதனாதியர்களின் முதற்படையை எதிர்த்துப் போர் செய்ய நெருங்கியது.

அப்போது முரசக்கொடியுடைய தருமருடைய சேனையில் முரசங்கள் ஆர்த்தன. கண்ணனின் கைகளில் இருக்கும் பாக்கியத்தைச் செய்துள்ள வலம்புரிச்சங்குகளும் சஞ்சலச்சங்குகளும் ஒலித்தன.

பாரதப் போர் தொடங்கிவிட்டது!

இரண்டு சேனைகளிலுமுள்ள தேர்கள் ஒன்றையொன்று எதிர்த்து நெருங்கின. யானைகள் ஒன்றையொன்று எதிர்த்து நடந்தன. குதிரைகள் ஒன்றையொன்று எதிர்த்தன. காலாள் வீரர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட நெருங்கினார்கள்.

இரண்டு பக்கங்களிலும் வாள்கள் ஒன்றையொன்று எதிர்த்து மோதின. வேல்கள் ஒன்றையொன்று எதிர்த்து தாக்கின. விற்கள் ஒன்றையொன்று அழித்தன. அம்புகள் ஒன்றையொன்று சிதைத்தன.

இரண்டு படைகளிலுமுள்ள மகுடவர்த்தனர்கள் மகுடவர்த்தனர்களைக் குரூரமாகத் தாக்கிப் போரிட்டார்கள்! அதுபோல் மந்திரிகள் மந்திரிகளை எதிர்த்தார்கள்.

சேனாதிபதிகள் சேனாதிபதிகளைத் தாக்கினார்கள். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அம்புகளைப் பிரயோகித்தார்கள். மண்டலாதிபதிகள் மண்டலாதிபதிகளின் மேல் வாளை வீசினார்கள். ஸாமந்தராஜர்கள் ஸாமந்தராஜர்கள்மேல் கோபித்து விற்களை வளைத்தார்கள்.

அந்த யுத்தத்தில் அப்போது தலை துண்டிக்கப்பட்டு விழுந்த அரசர்கள் ராகுவைப் போல் தோன்றினார்கள். கால்களை இழந்தவர்கள் சூரியசாரதி அரு ணனைப் போல் காணப்பட்டார்கள்.

மன்னர்களின் தோள்களிலும் மார்பிலும் எதிரிகளின் அம்புகள் பாய்ந்து, ரத்தப் பெருக்கெடுக்கச் செய்தன. அப்போதும் அவர்கள் சோதிவிருட்சம் போலவும், கடம்பமரம் போலவும் தோன்றி வீரத்தோடு போரிட்டார்கள்.

பாண்டவர் சேனையிலுள்ள சில அரசர்கள் தங்கள் கையிலிருந்த அம்புகளையெல்லாம் எதிரிகளைக் கொல்ல உபயோகித்துத் தீர்ந்ததும், தங்களுடைய உடம்பில் பாய்ந்திருந்த பகைவர்களின் அம்புகளைப் பிடுங்கி அவர்கள் மேலேயே அவற்றை வில்லில் பூட்டிப் பிரயோகித்தார்கள். மற்றும் சில வீரர்களோ போரில் வலக்கையை இழந்து விட்டதால், அம்புகளைப் பற்களால் வில்லில் தொடுத்து ஏவினார்கள். இன்னும் சில வீரர்கள் ஒரே சமயத்தில் பகைவர்களின் இரண்டு தோள்களும் துண்டித்துவிழும்படி இரண்டு வாள்களை ஒரே வீச்சில் வீசினார்கள்.

இரண்டு படைகளிலும் தேர்கள் ஒன்றையொன்று தாக்கி உடைந்தன. யானைகள் ஒன்றையொன்று தாக்கிக் கீழே விழுந்தன. குதிரைகள் ஒன்றையொன்று தாக்கி இறந்தன. காலாள்வீரர்கள் ஒருவரையொருவர் தாக்கி அழிந்தார்கள்!

ஒருவீரன் கையில் பிடித்த வாளை எதிரியின் தலை சிதறும்படி வீசினான். அதனால் தலை சிதறிய வீரன் பகைவனின் தலைக்கு முன்பே குறிவைத்த வாளை வீசி அவன் தலையைச் சிதறடித்தான்.

கழுகுப்பந்தலின் கீழ் பேய்கள் உள்ளங்கைகளைத் தட்டிக் கொண்டு கூத்தாடும் யுத்தகளத்தில் சில வீரர்கள், உடம்பெங்கும் அம்புகள் பாய்ந்து தைத்துக்

கொண்டிருக்கவும், சோர்ந்து விடாமல் சிங்கங்கள் போலப் பராக்கிரமசாலிகளாய்ப் போர் செய்தார்கள்.

சில வீரர்கள் தமது உடம்பில் அம்புகள் பாய்ந்திருந்த புண்களிலிருந்து குருதிவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதையும் பொருட்படுத்தாமல் போரிட்டார்கள். அப்போது அவர்கள் சூரியனைப் போல் தோன்றினார்கள்.

பகைவரால் வெட்டப்பட்ட சில வீரர்கள், தாம் அவர்களை அழிப்பதாக முன்பு செய்த சபதப்படி, அவர்கள் மேல் விழுந்துத் தாக்கிக் கொன்றார்கள்!

கௌரவர் பக்கமும் பாண்டவர் பக்கமுமாக இரண்டு பக்கங்களிலும் எதிர்த்து நின்ற கொங்கம், போஜலம், போஜம், சிங்களம், குகுதம், ஆரியம், துளுவம், கங்கம், சோனகம், யவ்னம், சீனம், கலிங்கம், தத்தம், ஆந்திரம், வங்கம் , கோசலம், தமிழகம், குண்டலம், ஒட்டம், மாளவம், மகதம் ஆகிய நாட்டு வீரர்கள் எல்லோரும் பராக்கிரமத்தோடு ஒருவரையொருவர் தாக்கிப் போர் புரிந்தார்கள்.

அர்ச்சுனன் பீஷ்மரை எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினான். அதுகண்டு இரண்டு பக்கத்துச் சேனைகளும் அங்கே நெருங்கி வந்து போரிட்டன. அப்போது எழுந்த புழுதிப்படலத்தால் தங்களுடைய இமையாக் கண்களின் இமைகளைத் தேவர்கள் மூடினார்கள். பாதாளலோக நாகசாதியர்கள் ஒரே இடத்தில் குவிந்த பாரத்தைத் தாங்க முடியாமல் தாங்கி, தங்களுடைய கழுத்துக்கள் வலிக்க களைப்புற்றார்கள்!

அப்போது துரியோதனன் போரில் கொண்ட உற்சாகத்தோடு தனது தம்பிமார்களையும், சகுனியையும், சல்லியனையும் பீஷ்மருக்குத் துணையாகச் சென்று போரிடும்படிக் கட்டளையிட்டு அனுப்பினான். அதன்படியே அவர்கள் பீஷ்மரிடம் வந்து அவருக்குத் துணையாக நின்றார்கள். அதுபோலவே தருமருடைய கட்டளையால் பீமனும், விந்தரனும், அபிமந்யுவும் அர்ச்சுனனுக்குத் துணையாகச் சென்று நின்றார்கள்.

அப்படி அர்ச்சுனனுக்குத் துணையாக வந்த பீமன் பீஷ்மருடைய பனைமரக் கொடிமேல் பனிரெண்டு பாணங்களை வர்ஷித்தான். மேலும், பீஷ்மருடைய

உடம்புக் கவசத்தின்மேல் ஒன்பது பாணங்களை ஏவினான். இப்படியாக பீமன், பீஷ்மர் உடல் நடுங்கும்படி உக்கிரமாகப் போர் செய்தான். அப்போது பீமன் பீஷ்மருக்குத் துணையாக வந்த சகுனியும், சல்லியனும், துரியோதனனுடைய தம்பிமார்களும் பின்வாங்கும்படி அநேக அம்புகளைப் பிரயோகித்தான்.

அபிமந்யு அச்சமயத்தில் பீஷ்மருடைய தேர்க் குதிரைகள் நான்கும் இறந்து விழும்படி தனது அம்புகளைத் தொடுத்துவிட்டான். உத்தரகுமாரன் சல்லியனை எதிர்த்துப் போரிட்டு அவன்மேல் அநேக அம்புகளை வர்ஷித்தான்.

மேலும், உத்தரகுமாரன் தனது அம்புகளால் சல்லியனுடைய தேர்க்குதிரைகளையும், தேர்ப்பாகனையும், அவனுக்குத் துணையாக வந்த வீரர்களையும் கொன்றான். சல்லியனுடைய வில்துணியையும் அம்பால் அவன் கிழித்தான். அப்போது சல்லியன், 'இனி, இந்தப் பாவியோடு தொடர்ந்து வில்லெடுத்துப் போர் செய்வது நல்லதில்லை' என்று எண்ணினான். உடனே உத்தரகுமாரன் எதிரில் போய் நின்றான். அவன்மேல் உக்கிரமான வேலாயுதத்தை எறிந்தான்.

சல்லியன் எறிந்த வேலாயுதம் அக்கணமே உத்தரகுமாரனைத் தாக்கி வீழ்த்தியது. அவன் சுவர்க்கம் போய்ச் சேர்ந்தான்!

விராடபுத்திரனாகிய உத்தரகுமாரன் இறந்ததைக் கண்டதும் துரியோதனாதியர்களும், அவர்கள் பக்கம் இருந்த வீரர்களும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கல்பாந்த காலத்தில் பொங்கியெழும் கடல்போல, ஆணவத்தோடு ஆரவாரித்தார்கள். அதே சமயம் உத்தரகுமாரன் இறந்ததால் பாண்டவர்கள் மிகவும் வருத்தம் அடைந்தார்கள். அவர்களுடைய சேனையும் செயலற்றுப் போய்விட்டது.

தங்கள் சேனையின் நிலையைக் கண்டதும் பீமன் துணுக்குற்றான். ஆனால், மறுகணமே அவன் மதயானையைப் போல் யுத்தத்தைத் தொடங்கினான். சூரியன் வானத்தின் மேல் வரவர இருள் அழிவது போல, பீமன் சத்ருக்காதினி கதாயுதத்தோடு முன்னேற முன்னேற பகைவர்கள் மாண்டார்கள்.

துரியோதனன் பீமனால் தன்படை அழிவதைக் கண்டு ஆத்திரம் அடைந்தான். உடனே அவன் பீமனை நோக்கிப் போரிட வந்தான். அதுகண்டு பீமன் கடுங்கோபம் கொண்டான். அவன் கண்கள் அதனால் சிவந்தன. அவன் மன்மதனை எதிர்த்த சிவபெருமான் போல் துரியோதனனை எதிர்த்துச் சென்றான். மற்றும் அப்போது சிவபெருமான் கொடுத்த செண்டினால் மேருமலையைச் சூழலச் செய்த மலயத்துவஜபாண்டியன் போல, பீமன் தனது கதாயுதத்தால் துரியோதனனுக்குத் துணை வந்த அரசர்களின் தேர்களை அழித்தான். அந்தத் துணை அரசர்களின் ரத்தின கிரீடங்களையும், யானைகளையும், குதிரைகளையும் கண்டதுண்டங்களாக்கினான். பின்பு, துரியோதனனை நேருக்கு நேர் எதிர்த்து பீமன் போர் செய்யத் தொடங்கினான்.

அப்போது அவர்கள் இருவரும் பல வகையான போர்களைச் செய்தார்கள். அவர்கள் செய்யாத போர் வகையே உலகில் ஒன்றுமில்லை. கடைசியாக அவன் துரியோதனனுடைய வில்லை முறித்துப் போட்டு, அவனைத் தேரோடு தூக்கி வீசி எறிந்தான்.

பீமன் உக்கிரமாக வீசி எறிந்ததால் துரியோதனனுடைய தேரின் சக்கரங்கள் அழிந்தன; சக்கரத்தின் இலைகள் அழிந்தன; அச்சுகள் அழிந்தன; தேரும் சின்னாபின்னமாகிச் சிதறியது. அது கண்டு துரியோதனன் தோற்றான் என்று எண்ணி கௌரவசேனை பின் வாங்கியது. துரியோதனன் பக்கம் நின்ற அரசர்கள் அஞ்சி ஒன்று கூடினார்கள்.

அச்சமயத்தில் துரியோதனனுக்குப் பக்கபலமாக அவனுடைய மைத்துனன்மார்கள் வேலும், வாளும், வில்லும் ஏந்தி விரைந்து வந்து அவனைச் சூழ்ந்து நின்றார்கள். அவர்கள் பீமனையும், அவனுக்குத் துணையாக வந்தவர்களையும் குறிவைத்து பாணங்களைத் தொடுத்து விட்டார்கள்.

உடனே பீமன் மிகவும் கோபம் கொண்டு தனது கதாயுதத்தால் அவர்களையெல்லாம் அடித்தான். அதனால் வாயுவால் விழுந்து சிதறிய மேருமலைச் சிகரங்கள் போல, துரியோதனனுடைய மைத்துனன்மார்கள் சிதறி ஓடினார்கள். தேவர்களும் ஆச்சர்யப்படும்படி பீமன் அப்படி யுத்தம் செய்து கொண்டிருக்கையில், சுவேதன் தன்தம்பி

உத்தரகுமாரன் இறந்தான் என்னும் செய்தி கேட்டான். அவ்வளவுதான். அவன் வடவாமுகாக்கினி போலப் போருக்குரிய தும்பைப்பூ மாலையைச் சூடிக் கொண்டு, சிவபெருமான் தனக்குத் தந்த வில்லோடு உக்கிரமாகப் போர் செய்யப் புறப்பட்டான்.

சங்குகள் முழங்கவும், பேரிகைகள் ஒலிக்கவும், சதுரங்கச் சைன்யத்தோடு பல அரசர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும் போருக்குப் புறப்பட்ட சுவேதன், அப்போது தன்னை எதிர்த்தவர்களைக் கொன்று எமலோகத்துக்கு அனுப்பிக் கொண்டே முன்னேறினான். அப்படிப் போரிட்டுக் கொண்டே, “என் தம்பியைக் கொன்ற சல்லியன் எங்கே?” என்று கேட்டவண்ணம் சென்றான். கடைசியாக அவன் சல்லியன் முன் போய்ச் சேர்ந்தான்.

சல்லியனை எதிரே கண்டதும், சுவேதன் அவனை நோக்கி உரத்தகுரலில் வீரவாதம் பேசினான். பிறகு, இருவரும் ஒருவரோடு ஒருவர் அம்பு தொடுப்பதற்கு உரிய வில்லை வளைத்துப் போரிட்டார்கள்.

துரியோதனன் அப்போது சல்லியனுக்குத் துணையாகத் தனது தம்பிமார்கள் ஆறு பேரை அனுப்பினான்.

அண்ணனின் கட்டளைப்படி வந்து சேர்ந்த அவர்கள் முருகக்கடவுள் போல் சுவேதனை எதிர்த்துப் போரிட்டார்கள். சுவேதன் அதனால் கொடுங் கோபம் கொண்டு அநேக பாணங்களை அவர்களுடைய மனம் அழியும்படி அவர்கள் மேல் பிரயோகித்தான். அவனுடைய பாணப்பிரயோகத்தால், துரியோதனாதியர்களின் விற்கள் ஒவ்வொன்றும் இரண்டு துண்டுகளாக ஒடிந்தன. மேலும், அவனுடைய பாணங்களால் பகைவரின் நால்வகைச் சேனையும் இலவம்பஞ்சாகியது. சுவேதன் அவற்றைப் பறக்கடிக்கும் காற்றாக அப்போது வெற்றி கொண்டு நின்றான்.

சுவேதனுடைய பாணங்களால் அழிந்த சேனைகள் போக, மற்றவைத் தோற்றோடியதைக் கண்டு துரியோதனன் அளவற்ற சினம் கொண்டான். உடனே அவன் சுவேதனை எதிர்த்துப் போர் செய்யும்படி பீஷ்மருக்கு உத்தரவிட்டான். பீஷ்மரும் அக்கணமே சுவேதன் முன் வில்லோடு போய் நின்றார்.

அதுகண்டு சுவேதன் சல்லியனை விட்டுவிட்டு பீஷ்மர்மேல் பாணப்பிரயோகம் செய்தான். தனது கொடிய அம்புகளால் பீஷ்மருடைய வில்லையும் அறுத்துத் தள்ளினான். அதனால் நிராயுதபாணியாகி நின்ற தம்மை வந்து தாக்கிய சுவேதனுடைய அம்புகளைத் தடுக்க முடியாமல் பீஷ்மர் திண்டாடினார். அத்திண்டாட்டத்தோடு அவர் சித்திரம் போல் பிரமித்து நின்றார்!

மறுகணமே பீஷ்மர் ஒரு வில்லை எடுத்துக் கொண்டார். உக்கிரமான ஓர் அம்பை அதில் தொடுத்து சுவேதனுடைய கிரீடத்தைச் சிதறச் செய்தார். உடனே சுவேதன் தனது அம்புகளால் பீஷ்மரின் பனைக்கொடிச்சீலையை அறுத்துக் தள்ளினான். அதுமட்டுமில்லை. புதிதாக பீஷ்மர் எடுத்த வில்லையும் தான் பிரயோகித்த அநேக பாணங்களால் இரண்டு துண்டுகளாக்கினான். அதனால் பீஷ்மர், இனி அவனோடு என்ன போர் செய்வது என்று நினைத்துச் சோர்ந்தார்.

பீஷ்மர் சுவேதனுடைய பாணங்களால் சோர்ந்து விட்டதைக் கண்டதும், துரியோதனன் தன் பக்கம் இருந்த பல ராஜாக்களை நோக்கி, ''அரசர்களே! சுவேதனோடு பிதாமகருக்குச் செய்வதற்குரிய போர் ஏற்பட்டது. அதில் பிதாமகர் சோர்ந்துவிட்டார். ஆகையால், நமக்கு அவமானம் ஏற்படாதபடி, பிதாமகருக்குத் துணையாக நீங்கள் விரைந்து செல்லுங்கள்.அந்தச் சுவேதனை எதிர்த்து கடும்போர் புரியுங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய கட்டளைப்படியே அநேக மன்னர்கள் வெகுவேகமாகச் சென்று சுவேதனை எதிர்த்து யுத்தம் செய்தார்கள். அப்போது சுவேதன் தன்னை எதிர்த்த அரசர்களையெல்லாம் அம்புகளால் வதைத்தான். அவர்களுடைய தேர்களைச் சின்னாபின்னமாக்கினான். அதனால் களைத்த அந்த அரசர்கள் எல்லோரும் சுவேதனுடைய போர் வலிமைக்கு அஞ்சித் திரும்பி ஓடினார்கள்.

தான் பீஷ்மருக்குத் துணையாக அனுப்பிய அரசர்கள் தோற்றுத் திரும்பி வந்ததைக் கண்டதும், துரியோதனன் சினத்தீயால் துடித்தான். உடனே அவன் குகுர தேசத்து மன்னனையும், மற்றும் ஐந்து அரசர்களையும் மீண்டும் பீஷ்மருக்குத் துணையாக அனுப்பி வைத்தான். அவர்களும் வேகமாகச் சென்று சுவேதனை எதிர்த்தார்கள். சுவேதன்

தன்னை அவர்கள் எதிர்த்த அக்கணமே அவர்களுடைய விற்களைத் தனது பாணங்களால் முறித்துப் போட்டான்.

அச்சமயம் பீஷ்மர் வேறொரு வில்லை கையில் எடுத்துக் கொண்டு, சிங்கம் போல் கோபித்து சுவேதனை எதிர்த்துப் போரிட்டார். அதே கணத்தில் சுவேதன் மறுபடியும் வீரநகை புரிந்து அவருடைய வில்லைச் சின்னாபின்னப்படுத்தினான். அதனால் அவரை அவமானம் அடையச் செய்து, தனது மேன்மை தோன்ற அவர் எதிரில் வெகுகம்பீரமாக நின்றான்.!

தேவர்கள் சுவேதனுடைய வீரத்தைக் கண்டு மெய்ச்சிலிர்த்தார்கள். அவர்கள், "சிவபெருமான் கொடுத்த இந்த வில்லை, தான் செய்த தவத்திற்காக சுவேதன் வரமாகப் பெற்றான்!" என்று அவனைப் புகழ்ந்தார்கள்.

மேலும் தேவர்கள், "சுவேதனுக்கு முன்னால் ஆண் சிங்கம் போன்ற பீஷ்மனே போரில் சோர்ந்து விட்டார் என்றால், விற்போரில் இவனை ஜெயிக்கக் கூடியவர்கள் வேறு யாருமில்லை. ஆகையால், ஒருவரையொருவர் பகைத்துச் செய்யும் கொடிய யுத்தத்தில் வஞ்சனையால்தான் இவனை வெல்ல முடியும். நியாய வழியில் இவனை யாராலுமே வெல்ல முடியாது!" என்று கூறினார்கள்.

பீஷ்மர் தேவர்களின் வார்த்தைகளைக் கேட்டார். உடனே அவர் சுவேதனை நோக்கி, "பராக்கிரமசாலியே! உனக்கு வில்வித்தை மட்டும்தான் தெரியுமோ? மற்ற வாள்யுத்தம் வேல்யுத்தம் ஆகியவற்றை நீ கற்றதில்லையோ?" என்று கேட்டார்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் சுவேதன் நாணம் அடைந்தான். மறுகணமே உக்கிரமாகக் கோபித்து, சிவதனுசைக் கீழே போட்டுவிட்டு தனது வாளை உறையிலிருந்து எடுத்துக் கொண்டு பீஷ்மரை நெருங்கினான். அந்தக் கணத்தில் பீஷ்மர் தாமும் ஒரு வாளை எடுக்காமல், மற்றொரு வில்லை எடுத்து அம்பு தொடுத்து வளைத்தார். அவருடைய பாணம் ஒருகணத்துக்குள் சென்று சுவேதனுடைய வாளாயுதம் ஏந்திய கையை அறுத்துத் தள்ளியது.

தனது ஒருகை அறுந்து விழுந்ததை சுவேதன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. உடனே அவன் மற்றொரு கையால்

வேறொரு வாளை எடுத்தான். தன்மேல் அளவற்ற அம்புகளைப் பிரயோகிக்கும் பீஷ்மரின் தலையை வெட்டுவதற்காக, அவரை உக்கிரத்தோடு நெருங்கினான் சுவேதன். அதேசமயம் பீஷ்மர் தமது கொடிய அம்பு ஒன்றினால் சுவேதனைக் கொன்றார்!

அதுகண்டு தேவர்கள் சிறந்த வீரனாகிய சுவேதன் மண்ணுலகத்தைவிட்டுத் தமது விண்ணுலகத்துக்கு விருந்தினனாக வந்ததை எண்ணி மகிழ்ந்தார்கள். மேலும், அவர்கள் தமது இனத்தவர்களான வசுக்களில் ஒருவனாகிய பீஷ்மர் வென்றதை நினைத்தும் சந்தோஷித்தார்கள்! அதனால் அவர்கள் ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்க, பீஷ்மருக்கு வாழ்த்துக் கூறி மனம் மகிழ்ந்தார்கள்!

அப்போது சுவேதன் மாண்டதைக் கண்டு கௌரவசேனா வீரர்கள், யுகமுடிவில் ஏழுகடல்களும் பொங்கி எங்கும் பரவி ஆரவாரிப்பது போலச் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்!

போரில் உடைபட்ட தேர்களின் சக்கரங்கள், இறந்த வீரர்கள் சூரிய மண்டலத்தைத் துளைத்துக் கொண்டு சுவர்க்கம் போவது போல் இரத்த வெள்ளத்திலே அமிழ்ந்தன. பெண்கள் குளிக்கும் குளத்தில் தோன்றும் குமிழ் போல் இரத்த வெள்ளத்தில் மிதந்த தேர்க்குடைகள் காட்சி தந்தன. ஆற்றின் புதுவெள்ளத்தில் நீந்தும் சேல்மீன்களைப் போல, தேர்க்கொடிகள் இரத்த வெள்ளத்தில் தோன்றின. தாமரை அரும்பின் கூட்டம் போல, கிரீடத்தோடு துண்டுபட்டு ரதத்திலேயே கிடந்த அரசர்களுடைய தலைகள் விளங்கின. அளவற்ற இரத்த ஆற்று வெள்ளத்தின் இரண்டு பக்கங்களிலும் விழுந்து கிடக்கின்ற யானைகளும் குதிரைகளும் வீரர்களும் அதன் கரைகளாய் அமைந்திருக்க, தோல் கிழிந்த பேரிகைகள் அந்த ஆற்றின் தொடக்கத்திலுள்ள மதகின் கண்களைப் போல் இருந்தன. ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்கள் கடலிலே விழுந்து கிடப்பது போல், மாண்ட அரசர்களின் ரத்தினாபரணங்கள் இரத்த வெள்ளத்திலே கிடந்தன!

தங்களுடைய பிரதம சேனாதிபதியாகிய சுவேதன் இறந்ததனால் பாண்டவர்களும், அவர்களுடைய சேனாவீரர்களும் மிகவும் மனக்கலக்கமும் துக்கமும்

அடைந்தார்கள். அதனால் அன்றைய யுத்தத்தை அத்தோடு நிறுத்திவிட்டுத் தங்கள் பாசறைக்கு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

அதேசமயத்தில் சூரியனும் மேற்குத் திசையிலுள்ள அஸ்தகிரிக்குப் போய்ச் சேர்ந்தான். அப்போது தன்மேல் போர்க்களத்திலுள்ள ரத்தம் தெறித்ததனால் அவன் செந்நிறமாக விளங்கினான்!

பாசறைக்கு வந்து சேர்ந்த விராடராஜன் புத்திர சோகத்தால் மிகவும் வருந்தினான். கண்ணபிரான் முதலிய ரதாதிபதிகளான அரசர்கள் அவனை நோக்கி, ''ஐயனே! உத்தரனும் சுவேதனமாகிய உனது குமாரர்கள் இரண்டு பேரும் ஒரேவிதமாகக் கொடிய போரில் இறந்து விட்டார்கள் என்ற காரணத்தால், நீ வருந்த வேண்டாம். போரிலே சுவேதன் பீஷ்மரை புறமுதுகிட்டு ஓடச் செய்தான். தன்னை எதிர்த்த பகை அரசர்களையெல்லாம் அழித்து வெற்றிக் கொண்டான். பின்பு, பீஷ்மர் சுவேதனை சூழ்ச்சியாக, வில்லைவிட்டு வாளை எடுக்கச் சொன்னார். சுவேதனும் வாளை எடுத்தான். ஆனால், பீஷ்மர் அதற்கு எதிராக் வாளை எடுக்காமல் வஞ்சகமாகப் பாணத்தைத் தொடுத்து அவனைக் கொன்றுவிட்டார். நீதி தவறிய முறையால் அல்லவோ பெருவீரனான உன்மகனைப் பீஷ்மரால் ஜெயிக்க முடிந்தது!'' என்று சுவேதனுடைய வீரப்புகழைச் சொல்லிச் சமாதானப்படுத்தினார்கள்.

தருமர் அப்போது விராடனைப் பார்த்து, ''மன்னா! காட்டிலே அலைந்த எங்களுக்குத் தாய் பிள்ளைக்குச் செய்வது போல, அநேக உபசாரங்களை அன்போடு செய்தாய். அது மட்டுமில்லை.இன்றைய போரில் உன் புத்திரர்கள் எங்களுக்காகப் போரிட்டுத் தமது பிராணனைத் தியாகம் செய்த உபகாரத்தைப் பற்றிப் பூலோகத்தவர்கள் மட்டும் புகழவில்லை. தேவர்களும் அந்த உபகாரத்தைப் புகழ்கிறார்கள். ஆத்ம நண்பர்களில் நேராகவும் புத்திரர்கள் மூலமாகவும் நீ எங்களுக்குச் செய்த உதவியைப் போல், ஓர் உதவியைச் செய்தவர்கள் யாருமேயில்லை!'' என்று அவனுக்கு உபசார வார்த்தைகளைக் கூறினார்.

அதற்கு உத்தரம் கூறத் தொடங்கி விராடராஜன் தருமரை நோக்கி, ''பிரமன் படைத்த நிலவுலகத்தில்

வாழ்கின்ற எல்லாவுயிர்களுக்கும் உயிரானவனே! பேரன்புடையவனே! உன் பிள்ளைகளைப் போலப் பாவித்து மிகவும் அன்போடு நீ வளர்த்த உத்தரகுமாரனும் சுவேதனும், போர் வல்லமையுள்ள அரசர்கள் இருந்து புகழும்படி இன்றைய போரில் தங்களுடைய உயிரைக் கொடுத்தார்கள். இனிமேல் என்னுடைய உயிரும் உன்னுடையதேயாகும்!'' என்றான்.

கண்ணபிரானோடு பாண்டவர்களும், அவர்களுடைய சேனாவீரர்களும் பாசறையில் தலைசாய்ந்து படுத்தார்கள். ஆனால், பாண்டவர்கள் தூங்கவில்லை. தாங்கள் வெற்றி கொள்ளும்படி எப்போது சூரியன் உதிப்பான் என்றெண்ணிக் கொண்டேயிருந்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை முடிப்பதற்கென்றே வருவது போலவும், இரண்டு பக்கமுள்ளவர்களின் போரையும் பார்ப்பதற்காக வருவது போலவும் அப்போது விரைந்து வந்து சூரியன் உதித்தான்!

அவ்வாறு உதித்த சூரியனின் முன்னே, சுவேதனால் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போன சல்லியனுடைய சேனை போல இருள் அழிந்து போயிற்று!

2. இரண்டாம் நாள் போர்

சூரியன் உதயகிரியில் தோன்றியதும் கண்ணபிரான் திருஷ்டத்யும்நனை நோக்கி, ‘‘இனி, நீ சேனைக்குத் தலைவனாக இருந்து போரை நடத்து!'' என்று கட்டளையிட்டான்.

கிருஷ்ணபகவானின்கட்டளைப்படியேதிருஷ்டத்யும்நன் பாண்டவர்சேனைக்குப் பிரதமசேனாதிபதியானான்.

இந்தப் பக்கத்தில் பாண்டவர் சேனை போருக்குப் புறப்பட்டது. அந்தப் பக்கத்தில் துரியோதனாதியர் சேனை போருக்குப் புறப்பட்டது. அவ்வாறு இரண்டு சேனைகளும் கோபத்தோடு புறப்பட்டு இரண்டு கடல்கள் கிளம்பி ஒன்றன்மேல் ஒன்று செல்வது போல, கேட்பவர்கள் அஞ்சும்படியான பேராரவாரத்துடன் போர்க்களத்தை அடைந்தன.

மன்மதனை எரித்தபோது சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய புகை மேலெழுந்தது போல, அந்தச் சேனைகளால் எழுந்த புழுதிப்படலம் இருப்பதைக் கண்டு தேவர்கள் அஞ்சி நடுங்கினார்கள். அச்சேனைகளில் முழங்கிய அநேக வாத்தியங்களின் பேரோசையைக் கேட்டு, பூலோகத்தவர்கள் இடி என்று நினைத்து தேவர்களைக் காட்டிலும் மிக அதிகமாகப் பயந்து போனார்கள்.

போர்க்களத்துக்கு வந்து சேர்ந்த பாண்டவர்சேனை போருக்குச் சித்தமாக அணிவகுத்து நின்றது. தருமர் பிரதம சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நனுடன் சதுரங்கச் சேனையின் நடுவிலே நின்றார். அவருக்கு முன்னே அபிமந்யுவும், பீமனும், அர்ச்சுனனும், கண்ணனும் நின்றார்கள். அவருக்குப் பின்னால் மந்திரி முதலிய சேனாவீரர்கள் நின்றிருந்தார்கள். அவருக்கு வலப்பக்கம் எழுபதினாயிரம் தேர்களோடும், சோழர் முதலிய அரசர்களோடும் நகுலன் நின்றான். இடப்பக்கம் அரசர்களுடைய பன்னீராயிரம் தேர்களோடும், யானைகள் குதிரைகளோடும் சகாதேவன் நின்றிருந்தான்.

அதேபோல் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்த கௌரவச்சேனையும் யுத்தத்துக்குத் தயாராக அணிவகுத்து நின்றது. துரியோதனன் பீஷ்மரோடு சதுரங்கச் சேனையின் நடுவிலே நின்றிருக்க, அவனுக்கு இரண்டு பக்கங்களிலும் கோடிக்கணக்கான மன்னர்களின் சேனை நின்றிருந்தது. பின்னால் மற்ற சேனா வீரர்கள் நின்றிருந்தார்கள். துரியோதனனுக்கு முன்பக்கம் மண்டலாதிபதிகளான ராஜாக்கள் உக்கிரத்தோடு நின்றார்கள்.

இரண்டாம் நாள் போர் தொடங்கியது!

கீழ்காற்றோடு மேல்காற்று மோதுவதால் நெருங்கிய இரண்டு மேகங்கள் ஒன்றையொன்று எதிர்த்து மழைபொழிவது போல, பாண்டவசேனையின் முதற் சேனையும் கௌரவசேனையின் முதற்சேனையும் ஒன்றையொன்று கடுமையாக எதிர்த்துப் போரிட்டு அம்புகளைச் சொரிந்தன. அந்த இரண்டு சேனைகளும் பலமாகப் பெய்த அம்பு மழைகளினால் ஆகாயம் முழுதும் மறைந்துவிட்டது.

அப்போது திருஷ்டத்யும்நனும் துரோணாசாரியாரும் ஒருவரையொருவர் கோபித்துப் போரிட்டார்கள். இருவரும் ஒருவர்மேல் ஒருவர் கோடிக்கணக்கான அம்புகளைப் பிரயோகித்தார்கள். அந்த அம்புகளெல்லாம் ஆகாயத்திலிருந்து விழுகின்ற எரிநட்சத்திரங்கள் போலத் தோன்றின. அவைகள் யானைகளின் முகங்களிலே தைத்து மறைந்தன.

தம்மை எதிர்த்த திருஷ்டத்யும்நனுடைய வில்லையும் தேரையும் துரோணாசாரியார் தமது அம்புகளால் அழித்தார். அதனால் திருஷ்டத்யும்நன் பூர்ண சந்திரனுக்குத் தோற்ற இருள் போலத் தோற்று அங்கிருந்து ஓடினான்!

பீமன் தங்களுடைய பிரதம சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் துரோணாசாரியாருக்குத் தோற்றுப் பின்வாங்கி ஓடி வருவதைக் கண்டான். அதனால் துரோணாசாரியார்மேல் அவன் மிகவும் கோபம் கொண்டான். அக்கோபத்தோடு மேகம் போல அவன் கர்ஜித்து, மந்தரமலை போன்ற தனது தேரை துரோணாசாரியார் முன் கொண்டு வந்து நிறுத்தினான். அதேகணத்தில் அவன் துரோணாசாரியாரும், அவருக்குத் துணையாக நின்ற அரசர்களும் தோற்றுப் பயந்தோடும்படி கடும்போரைச் செய்தான்.

கலிங்க மன்னன் சக்கரதேவன், பீமன் துரோணாசாரியாருடன் கடும்போர் புரிவதைக் கண்டான். உடனே பல்லாயிரக்கணக்கான யானைவீரர்களோடு அங்கே விரைந்து வந்தான். சக்கரதேவன் அம்புகளைச் சரமாரியாக பீமன்மேல் தொடுத்து அவனை எதிர்த்துப் போரிட்டான்.

அந்தக் கணத்தில் பீமன் தன்னை எதிர்த்து வந்த யானைகளின் துதிக்கையைக் கைகளால் பிடித்து வீசி எறிந்து, அவற்றைக் கொன்றான். அநுமன் பெயர்த்து வீசிய மலைகள் போல, பகைவர்களுடைய உடம்பிலுள்ள எலும்புகள் சிதறும்படி யானைகளை பீமன் வீசிக் கொன்ற விதம்தான் என்னே!

கடலில் கப்பல்கள் காற்றால் ஒன்றின் மேல் ஒன்று விழுவது போல, பீமன் வீசியெறிந்த யானைகள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுத்தடுத்து விழுந்து இறந்தன. தன்னை எதிர்த்த யானைகளையெல்லாம் பீமன் ஒரு

கையாலேயே பிடித்து வீசி எறிந்தான். அதனால் அந்த யானைகள் போய் விழுந்தபோது, அவற்றின் தந்தங்கள் பூமியிலே புதைந்தன. அதைப் பார்க்கும் போது பூமியைக் கோட்டால் குத்தியெடுத்த வராகமூர்த்தியைப் போல் அந்த யானைகள் காட்சியளித்தன. மேலும், பீமனால் ஆகாயத்தில் எறியப்பட்ட யானைகள், தமது சிறகுகளுடன் வானத்தில் பறக்கும் மலைகளைப் போல் இருந்தன. மற்றும் அந்த யானைகள் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களைப் போலவும் விளங்கின.

பீமனுக்குப் பயந்து அப்போது பின்வாங்கிய பல்லாயிரக்கணக்கான யானைகள் முதற்படையில் புகுந்து பெரும் கலக்கத்தை ஏற்படுத்தின. அதைப் பார்த்தும் கலிங்கராஜன் கொஞ்சமும் அஞ்சவில்லை. அவன், "இது என்ன வீரம்?" என்று சொல்லிக் கொண்டே, தூக்கிப் பிடித்த வில்லோடு ரதத்தைச் செலுத்திக் கொண்டு பீமனை எதிர்த்து வந்தான்.

அப்போது அவனுடைய கட்டளையால் பல மன்னர்கள் வேகமாக வந்து பீமனைச் சூழ்ந்து கொண்டு போரிட்டார்கள்.

தன்னைச் சுற்றி எதிர்த்துத் தாக்கிய அரசர்களையும் சக்கரதேவனையும் பீமன் கடுமையாகப் போரிட்டு அழித்தான். அதுகண்டு பீஷ்மர் இந்திரனால் சிறகு துண்டிக்கப்பட்ட மலை போல மனம் வருந்தினார். ஆனால், மறுகணமே அவர் மிகவும் கோபத்தோடு பீமனை எதிர்த்து வந்து போர் செய்தார்.

உடனே பீமன் தனது தேரில் ஏறிக் கொண்டான். பீஷ்மருடைய தோளைக் குறிவைத்து கொடியதொரு வேலாயுதத்தை எறிந்தான். பீஷ்மர் அக்கணமே தாம் எறிந்த தோமரத்தால் அந்த வேலாயுதத்தைத் துண்டித்துத் தள்ளினார். அத்துடன் பீஷ்மர் நிற்கவில்லை. அவர் பீமனுடைய தேர்க்குதிரைகளையும், தேரையும், அதன் கொடியையும், அவனுக்குத் துணை வந்த சேனாவீரர்களையும் தனித்தனியாக அம்புகளைப் பிரயோகித்து அழித்தார்.

பீமன் பீஷ்மருடைய கடும்யுத்தத்தால் அளவற்ற ஆத்திரம் அடைந்தான். உடனே வெகுகோபத்தோடு ஒரு

கதாயுதத்தை எடுத்துக் கொண்டு வேகமாகப் போய் குறிதவறாமல் தேர்ப்பாகனைக் காயம்படும்படி அடித்தான். மேலும், அவன் பீஷ்மருக்குத் துணையாக வந்த அரசர்களைக் கதாயுதத்தால் தாக்கி அவர்களின் மூளைகளைச் சிதறடித்தான். பீஷ்மருக்குப் பாதுகாப்பாக வந்த குதிரைப் படையையும், தேர்ப்படையையும், யானைப்படையையும் பீமன் சின்னாபின்னமாக்கினான். அப்போது போர்க்களத்தில் பேரிடி விழுவது போலப் பேரிரைச்சல் கேட்டது!

பீஷ்மரும் பீமனும் மறுபடியும் கோபித்து ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிப் போரிட்டார்கள். அவர்கள் இருவரும் இரண்டு மேகங்கள் ஒன்றையொன்று தாக்குவது போல கண்களிலே தீப்பறக்க வெறி கொண்டு போரிட்டார்கள். அப்படி அவர்கள் இருவரும் குரூரமாகப் போர் செய்யும் சமயத்தில், அபிமந்யு தன்னை எதிர்த்த வீரர்களின் நெற்றியையெல்லாம் தனது அம்புகளால் துளைத்தான். அப்போது அபிமந்யு திருமாலாகிய அஸ்திரத்தைத் தொடுத்து முப்புரமும் எரித்த சிவபெருமான் போல் தோற்றம் தந்தான்!

அபிமந்யுவும் பீமனும் பீஷ்மர் அஞ்சும்படி கடும்யுத்தம் செய்வதைக் கண்டு துரியோதனன் சினத்தால் பொங்கினான். உடனே அவன் தன் பக்கமிருந்த அரசர்களையெல்லாம் பீஷ்மருக்குத் துணையாகச் சென்று போரிடும்படிக் கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய கட்டளையைப் பெற்ற அக்கணமே அந்த அரசர்கள் எல்லோரும் விரைந்து வந்து பீமனையும் அபிமந்யுவையும் வளைத்துக் கொண்டு போரிட்டார்கள். அதையறிந்த அர்ச்சுனன் மறுகணமே அங்கு வந்தான். தன் மகனையும் தமையனையும் சூழ்ந்து நின்ற மன்னர்களைத் தன்னோடு போருக்கு அழைத்து அவர்கள் மேல் பாணப் பிரயோகம் செய்தான்.

அர்ச்சுனனுடைய பாணங்களால் சூரியனைக் கண்ட மூடுபனி போல, பகை அரசர்கள் எல்லோரும் தங்களுடைய தேர்கள் அழியும்படி, அவன் முன் நிற்க முடியாமல் சிதறுண்டு போனார்கள். அதுகண்டு பீஷ்மர் திகைத்து ஒன்றும் புரியாமல் நின்றுவிட்டார்!



பீஷ்மர் அர்ச்சுனனுடைய வீரத்தைக் கண்டு அப்படி திகைத்து நின்றுவிடவே, கௌரவப்படையின் நால்வகைச் சேனா வீரர்களும் தோற்றோடி தங்களுடைய பாசறையைச் சேர்ந்தார்கள்.

கௌரவசேனையின் பிரதம சேனாதிபதியான பீஷ்மரும் மற்றவர்களும் பாற்கடல் அமுதத்தைப் பெற வந்த தேவர்கள் போல அப்போது இருந்தார்கள். அர்ச்சுனனோ அந்தப் பாற்கடலிலிருந்து எல்லோரும் பயப்படும்படி எழுந்த காலகூட விஷத்தைப் போல் விளங்கினான்.

அச்சமயத்தில், தான் இனிமேல் வெளியில் ஒருகணப்பொழுது இருந்தாலும் அர்ச்சுனன் தன் மேலும் போருக்கு வருவான் என்று எண்ணியவன் போல சூரியன் மேற்கடலில் போய் மறைந்தான்! அதனால் அவன் மறைந்த மேற்கு திசை மட்டுமோ செந்நிறம் அடைந்தது? இல்லை,

இருள் பிரவேசிப்பதற்கு இடமில்லாதபடி படபாமுகாக்கினி போல திக்குகளும், கடலும், பூமியும் இரத்த வெள்ளத்தால் சிவந்தன. அப்போது இரண்டு பக்கத்து அரசர்களும் சேனாவீரர்களும் தங்கள் தங்களுடைய பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பேய்கள் கூத்தாடும் கொடிய யுத்தகளத்தைவிட்டுத் தன்னை வந்து சேர்ந்த அரசர்களையெல்லாம் பார்த்து துரியோதனன், "அரசர்களே! அபிமந்யுவுக்கும் அர்ச்சுனனுக்கும் அஞ்சி நமது சேனை பின் வாங்குவதா? நாளைய யுத்தத்தில் உங்களில் யாராவது அவர்களுக்குப் பயந்து பின்வாங்கினால், அவர்களை நானே கொன்று விடுவேன்!" என்று அந்த இரவில் கடுமையாகச் சொன்னான்.

பின்பு சூரியன் அர்ச்சுனனுடைய போர்த்திறத்தையும், அபிமந்யுவின் கொடிய யுத்தத்தையும் பார்க்க நினைத்து மீண்டும் உதித்தான்!

3. மூன்றாம் நாள் போர்

மூன்றாம் நாள் யுத்தத்துக்கு ஆயத்தமாக இரண்டு பக்கத்துச் சேனைகளும் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தன. பீஷ்மர் தமது சேனையைப் பயங்கரமான கருடவியூகமாக அமைத்தார். கண்ணபிரான் பாண்டவர் சேனையை அர்த்தசந்திர வியூகமாக அமைத்தருளினான்.

பிறகு, இரண்டு பக்கத்துச் சேனைகளும் ஒன்றை யொன்று பகைத்துப் போரிடத் தொடங்கின.

அப்போது கல்பாந்த காலத்தில் உலகத்தை அழிக்கின்ற கடல்களைப் போலவும், மேகங்களைப் போலவும் இரண்டு பக்கத்துச் சேனைகளிலுமுள்ள பறைகளும் எக்காளமும் ஒலித்தன. அதனால் எழுந்த பெரும் சப்தத்தால் எல்லாவுலகத்துப் பிராணிகளும் செவிடாயின.

பீஷ்மரும், துரோணாசாரியாரும், அதிரதர்களும், நால்வகைச் சேனாவீரர்களும் வேகமாகச் சென்று அபிமந்யுவையும், அர்ச்சுனனையும், தேர்ச்சாரதி கண்ணனையும் வளைத்துக் கொண்டார்கள். அதேசமயம் பலயானைகள் ஒரு சிங்கத்தை வளைத்துக் கொண்டது

போல துரியோதனனும், அவன் தம்பிமார்களும், சகுனி முதலிய அரசர்களும் பீமனை வளைத்துக் கொண்டு போரிட்டார்கள்.

இரண்டு பக்கத்துச் சேனைகளும் கடுமையாகப் போரிட்டன. சேனாவீரர்கள் விற்களைத் தூக்கிப் பிடித்து மந்திரங்கள் ஜபித்துப் பாணப்பிரயோகம் செய்ததால் அவர்களுடைய கண்கள் மறைந்தன. அவர்கள் தொடுத்து விட்ட அம்புகளால் ஆகாயம் மறைந்தது. அவர்களுடைய அம்புகள் துண்டித்துத் தள்ளிய பகைவர்களின் தலைகளால் பூமி மறைந்தது. அத்தலைகளிலிருந்து பெருகிய இரத்தச் சேற்றால் நான்குத் திசைகளும் மறைந்தன.

அப்போது கடோத்கஜன் துரியோதனனை எதிர்த்துப் போர் செய்தான். தனது அம்புகளால் அவன் துரியோதனனுடைய தேரையும், கொடியையும், தேர்க்குதிரைகளையும், மார்பு கவசத்தையும் அழித்தான். பின்பு, அர்த்தசந்திர பாணம் ஒன்றை துரியோதனனுடைய மார்புக்குக் குறி வைத்து வர்ஷித்தான். கடோத்கஜன் அந்த அம்பைப் பிரயோகித்த அந்தக் கணத்திலேயே, அதனால் தாக்கப்பட்டுத் துரியோதனன் தன் தம்பிமார்கள் முன்னால் மூர்ச்சித்து விழுந்தான்!

துரியோதனன் அப்படி மூர்ச்சித்து விழும்போது, அபிமந்யு விரைந்து வந்து அவனது தேர்ப்பாகனுடைய மார்பைக் குறி பார்த்து ஒரு வேலாயுதத்தை எறிந்தான். அந்த வேலாயுதம் துரியோதனனுடைய தேர்ச்சாரதியின் மார்பைப் பிளந்து கொண்டு அப்பால் சென்றது. அந்த வினாடியே தேர்ப்பாகன் இறந்தான்!

அதுகண்டு கௌரவ சேனாவீரர்கள், "துரியோதனன் கடோத்கஜனுடைய அம்பால் மூர்ச்சித்து விழுந்து விட்டான். அவனுடைய தேர்ப்பாகன் அபிமந்யுவினுடைய வேலாயுதத்தால் இறந்தான்!" என்று கூவினார்கள்.

தன்னுடைய வீரர்களின் வார்த்தைகளைக் கேட்டதும், பீஷ்மர் தம்மை எதிர்த்துப் போர் செய்த அர்ச்சுனனையும் கண்ணனையும் விட்டுநீங்கி, அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டுத் துரியோதனனிடம் வந்து சேர்ந்தார்.

பீஷ்மர் துரியோதனனுடைய மார்பைத் துளைத்துக் கொண்டு போன அம்பு சென்ற வழியைப் பார்த்தார். அவனைத் தம் கையால் தூக்கித் தமது தேரில் வைத்தார். பிறகு, பீஷ்மர் உயிரைக் காப்பாற்றக் கூடிய ஔடதத்தை அவனுக்குக் கொடுத்தார். துரியோதனன் பீஷ்மர் தந்த மருந்தை உட்கொண்டான். அந்தக் கணத்திலேயே துரியோதனன் மயக்கம் தெளிந்து எழுந்தான்.

உடனே பீஷ்மர் துரியோதனனை மீண்டும் அவனுக்குரிய படைவரிசையில் சேர்த்து யுத்தத்தை ஆரம்பித்து வைத்தார். பிறகு, 'இவனுடைய வில்லும் மகாமேருமலையே! இவனும் முப்புரத்தை எரித்த சிவபெருமானே!' என்று தம் வில்லையும் தம்மையும் பிறர் பாராட்டும்படி, பீஷ்மர் வில்யுத்தத்தைத் தொடங்கினார். அப்போது அவர் பீமனையும், கடோத்கஜனையும், அபிமந்யுவையும் பின்வாங்கும்படிக் கடுமையாக எதிர்த்துப் போர் புரிந்தார்.

மேலும், அப்போது பீஷ்மர் எதிரிகளுடைய மார்பிலும், தோள்களிலும், முகத்திலும், கண்களிலும் தைத்து ஊடுருவிச் செல்லும்படி கோடிக்கணக்கான அம்புகளைச் சரமாரியாகத் தொடுத்துவிட்டார். எதிரிகளுடைய தலைகளையும் அம்புகளால் அறுத்துத் தள்ளினார். தாம் ஒருவராகவே பாண்டவரின் சேனையில் புகுந்து, திருப்பாற்கடலைக் கடைந்த மந்தரகிரி போல பீஷ்மர் சுழன்று சுழன்று கொடிய போரைச் செய்தார்!

பீஷ்மர் படபாமுகாக்கினி போல பாண்டவர் சேனையில் புகுந்து அளவற்ற வீரர்களையும், குதிரைகளையும், தேர்களையும், யானைகளையும் கொன்று குவித்துக் கொண்டே போனார். அதைக் கண்டு அர்ச்சுனன் ஆத்திரம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவன் அந்தக் காட்சியைக் கண்டும் காணாதது போலப் போர் செய்யாது திகைத்து நின்றான்!

ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுடைய செயலைக் கண்டான். அதனால் மிகவும் ஆத்திரம் அடைந்தான். உடனே அவனை நோக்கிக் கண்ணன், "பார்த்தா! காட்டில் தீப்பற்றி எரிவது போல, பீஷ்மர் நம்சேனையில் புகுந்து நமது வீரர்களைத் தாக்கிக் கடுமையாகப் போர் செய்கின்றார்.

இதனைப் பார்த்தும் நீ மானத்தைப் பாதுகாக்க எண்ணவில்லை. வில்லை கையில் எடுக்கவுமில்லை. அம்பைப் பிரயோகிக்கவுமில்லை. உனக்கு ஏன் இந்தக் குணம்?'' என்று கோபத்துடன் கூறினான்.

பிறகு, கண்ணபிரான் அர்ச்சுனனுடைய தேரைவிட்டு இறங்கினான். அப்போது அவன், "இப்போது எனக்கு ஆவது ஆகட்டும்!'' என்று சொல்லி, தனது சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தைக் கையில் ஏந்தினான்.

தான் ஏந்திய சக்கராயுதத்தோடு பிரளயகாலத்துத் தீப்போல கண்ணன் பீஷ்மரைக் கொல்வதற்காக விரைந்தான். அதுகண்டு அர்ச்சுனன் ஓடிச் சென்று கண்ணனுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு, "ஞானசொருபனே! மாயவனே! வாழ்வாயாக! எல்லையில்லாத ஆற்றலுடைய உனக்கு எனது பிதாமகரோ எதிராவார்?'' என்று கூறி நமஸ்கரித்தான்.

ஆனால், கண்ணபிரான் சினம் தணியவில்லை. அர்ச்சுனன் மீண்டும் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான். கண்ணனோ கோபம் தணியாமல் பீஷ்மரைக் கொல்வதற்காக விரைந்து நடந்தான்.

அர்ச்சுனன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டும், கோபம் தணியாமல் தம்மைக் கொல்வதற்காக கிருஷ்ணன் விரைந்து வருவதை பீஷ்மர் பார்த்தார். அக்கணமே அவர் உடம்பு வெடவெடவென்று நடுங்கியது. தமக்கு அழிவு காலம் வந்துவிட்டது என்ற அச்சத்துடன் பீஷ்மர் தேரைவிட்டுக் கீழே இறங்கினார்.

கிருஷ்ணமூர்த்தியை எதிர்கொண்டு சென்று, "வேதங்களில் சொல்லிய நியமத்தையுடையவனே! மாதவனே! அச்சுதனே! கடலில் பள்ளி கொண்டருளும் பிரபஞ்ச காரணனே! ஞானத்தையே குணமாகவும் வடிவமாகவும் கொண்டவனே! திருமகளின் அன்புள்ளத்தில் எப்போதும் குடிகொண்டருளும் நாராயணனே! அற்புதனே! தேவர்களுக்கு-ஒப்பற்ற தனிநாயகனே! உன்னை வணங்கிய யானைக்கு மோட்சம் தந்தவனே! முன்னொரு காலத்தில் தூணில் நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைக் கொன்றாய்! குள்ள அந்தணப் பிரமசாரியாய்ச் சென்று மகாபலிசக்கரவர்த்தியைச் சிறையிலே வைத்தாய்!

இராவணனை அம்பால் அழித்தாய்! இப்படிப்பட்ட பேராற்றல் படைத்தவன் நீ! என்னை உனக்கேற்ற பகைவன் என்று எண்ணியோ, சக்கராயுதத்தை ஏந்திக் கொண்டு இப்போது நீ கோபத்துடன் வருகிறாய்? மறுமையில் நான் நரகத்துக்குச் செல்லாதபடி மோட்சத்தைக் கொடுத்தருள நீ எண்ணி வந்தாய். இது முற்பிறப்புக்களில் நான் செய்துள்ள மிகுந்த தவத்தின் பலமேயாகும்! கடவுளே! ஆகையால், எளியவனாகிய நானும் இனி பிறப்பெடுக்காதபடி அந்தப் பரமபதத்தை எனக்குக் கொடுத்தருள்வாய்!'' என்று தத்துவஞானம் பொருந்திய சுத்த சித்தத்தோடு நாக்குத் தடுமாற ஜெபித்து, அவனருள் வேண்டினார் பீஷ்மர்.

பீஷ்மருடைய வேண்டுதலால் கண்ணன் கோபம் தணிந்தான். அப்போது அர்ச்சுனன் தனது காண்டீபத்தை வளைத்து ஆரவாரம் செய்து, ''எனது எதிரிலே யார் வந்து நின்றாலும் சரி. என்னை எவர் தடுக்க முயன்றாலும் சரி. இனி, நான் சிறிதும் பின் வாங்க மாட்டேன். நான் துணிவோடு நின்று இந்த மத்தியானப் பொழுதுக்குள்ளாகவே என்னை எதிர்ப்பவர்களையும் தடுப்பவர்களையும் ஒன்றாக அழிப்பேன்! இனி, நீ முன்போலவே எனது தேரில் ஏறி யருள்வாய்!'' என்று கண்ணபிரானைப் பிரார்த்தித்து, தனது ரதத்தின் மேல் ஏறினான்.

ஸ்ரீகிருஷ்ணபகவானும் முன்போலவே அர்ச்சுனனுக்குச் சாரத்தியம் செய்யத் தொடங்கினான்.

அவ்வளவுதான். அர்ச்சுனன் வில்லை வளைத்தான். அம்புகளைச் சரமாரியாகத் தொடுத்தான். தான் தொடுத்து விட்ட அம்புகளால் பகை அரசர்களின் கிரீடங்களையெல்லாம் பொடிப் பொடியாக்கினான். அந்த அரசர்களின் மூளைகளால் பூமி முழுவதையும் சேறாக்கினான். அதனால் எல்லாத் திக்குகளிலும் இரத்த வெள்ளத்தால் பல ஆறுகளை உண்டாக்கினான். தன்னை எதிர்த்த ஒவ்வொரு வீரருக்கும் எதிராகத் தான் பிரயோகித்த ஆயிரமாயிரம் கூரிய அம்புகளால் அவர்களைக் கொன்று தீர்த்தான். அப்போது கௌரவசேனையில் அர்ச்சுனனால் கோடிக்கணக்கான வீரர்கள் இறந்து போனார்கள்.

மேலும், அர்ச்சுனன் வாய்வ்யாஸ்திரத்தையும், ஐந்திராஸ்திரத்தையும், வருணாஸ்திரத்தையும், ஆக்நேயாஸ்

திரத்தையும், மற்றும் பல தேவர்களுக்குரிய அஸ்திரங்களையும் பிரயோகித்தான். அவன் பிரயோகித்த அந்த அஸ்திரங்களால் பகைவரின் தேர்க் கூட்டங்கள் அழிந்தன. காலாட் கூட்டங்கள் அழிந்தன. யானைக் கூட்டங்கள் அழிந்தன. குதிரைக் கூட்டங்கள் அழிந்தன. அந்தச் சதுரங்கச் சேனைக்கு அரசராகவுள்ள வீரர்களும் அழிந்தார்கள்!

அர்ச்சுனன் தொடர்ந்து செய்த கொடிய போரினால் அப்போது சல்லியன் முதலிய சமரதவீரர்களும், அவனை எதிர்த்துப் போர் செய்வதற்குப் பயந்து ஓடி இடம் தேடி ஒளிந்து கொண்டார்கள். சோமதத்தன் முதலிய மகாரதச் சேனாதிபதிகளும் ஒன்றாகக் கூடி ஒளிந்து கொண்டார்கள். துரியோதனனுடைய தம்பிமார்கள் முதலிய அர்த்தரத வீரர்களும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். அவர்களோடு மகததேசத்து ராஜவீரர்களும், ஓட்ரதேசத்து ராஜவீரர்களும், மாளவதேசத்து ராஜவீரர்களும், கூர்ச்சரதேசத்து ராஜவீரர்களும் வாட்டமுற்று ஒளிந்து கொண்டார்கள்!

அர்ச்சுனனுடைய கடுமையான போரினால் கௌரவசேனை அழிந்தது கண்டு கண்ணன் மகிழ்ச்சியடைந்தான். அந்த மகிழ்ச்சியோடு அவன் தேரோட்டிச் சென்று தன் சேனையின் பக்கத்தை அடைந்தான்.

அதேசமயம் பீஷ்மரும், துரோணாசாரியாரும், அசுவத்தாமனும் தங்கள் அரசனான துரியோதனனை, அர்ச்சுனனுடைய அம்புகளுக்கு இலக்காகாதபடி பாதுகாப்போடு அழைத்துக் கொண்டு, தங்களுடைய பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது யுத்தகளத்திலே அர்ச்சுனனுடைய அம்புகளால் துண்டித்து விழுந்திருந்த யானைகளின் துதிக்கைகள் பாம்புகள் போல் காணப்பட்டன. வட்டமாகத் தேங்கியிருந்த ரத்தப்பெருக்கு சூரிய மண்டலம் போல் காட்சி தந்தது. யானைகளுடைய முதுகின் இருபக்கமும் தைத்திருந்த அம்புகளின் இறகுகள், முன்னொரு சமயம் தேவேந்திரனுடைய வச்சிராயுதத்தால் அறுபட்ட மலைகளின் சிறகுகளைப் போல் விளங்கின. போர்க்களத்தில் இறந்து கிடந்த அரசர்களின் மகுடங்களைப் பேய்கள் எடுத்துக் கொண்டன. அவற்றில் அந்தப் பேய்கள் தாளம் தட்டிக் கொண்டே, அன்றைய போரில் அர்ச்சுனன் காட்டிய

பராக்கிரமத்தைப் பாடிய வண்ணம் கூத்தாடின. இறந்த வீரர்களின் பிணங்களும், குதிரைகளும், யானைகளும் போர்க்களம் முழுவதும் மலைமலையாகக் குவிந்து கிடந்தன. அந்தப் பிணமலைகளிலிருந்து இரத்த ஆறுகள் அருவிபோல் இறங்கின. தம் விலாபுறத்தில் பகைவரின் அம்புகள் பட்ட புண்களிலிருந்து கொழுப்புகள் வெளிப்பட யானைகள் இறந்து கிடந்தன. அப்போது அந்த யானைகள் முருகக் கடவுளின் வேலாயுதம் பாய்ந்த இடத்தில் நெருப்புக்குழம்பு ஏற்பட்ட கிரௌஞ்சமலையைப் போல் தோன்றின. மனிதத் தலையோடு கூடிய மிருகங்கள் போல, அர்ச்சுனனுடைய அம்புகளால் துண்டிக்கப்பட்ட பகைவர்களின் தலைகளைக் கவ்விக் கொண்டு திரிந்த நாய்கள் காட்சியளித்தன.

அன்று அர்ச்சுனனுடைய அம்புகளால் உடல் துண்டிக்கப்பட்ட அரசர்களுடைய ரத்தம் தன்மேல் தெறித்ததால், அந்த ரத்தக்கறையைக் கழுவிக் கொள்வதற்காக சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்!

பீஷ்மர் அச்சமயம், அர்ச்சுனன் போர்க்களத்தில் திகைத்து நின்று போர் செய்ய மறந்ததையும், அதனால் கண்ணபிரான் கோபித்துத் தானே போர் செய்ய சக்கராயுதம் ஏந்தியதையும், அதன்பின்பு அர்ச்சுனன் வில்லெடுத்துப் போர் செய்ததையும் பாராட்டி தம் சேனாவீரர்களிடம் கூறினார். ஆமாம், அர்ச்சுனனுடைய ஒப்பற்ற வீரப்புகழை பிதாமகராகிய பீஷ்மர் கொஞ்சமும் வஞ்சமில்லாமல் தம் படைவீரர்களிடம் தெரிவித்தார்!

பாண்டவசேனாவீரர்களும் பீஷ்மரைப் போல, அர்ச்சுனனுடைய விற்போர் சிறப்பையும், கடோத்கஜனுடைய வீரப் போரையும் பற்றிப் புகழ்ந்து அவர்கள் இருவரையும் துதித்தார்கள். அதேசமயம் கௌரவசேனையில் உள்ளவர்கள் தம் பக்கத்தில் இறந்த அரசர்களுக்காகப் புலம்பிக் கதறினார்கள். இவ்வாறு அந்த இரண்டு பக்கத்துச் சேனைகளும் அன்று இரவு முழுவதும் தூங்காமல் அடைந்த நிலையை நாம் என்னவென்று சொல்வோம்?

பின்பு, 'கண்ணபிரான் நேற்றுப் போர் செய்வதற்காகச் சக்கராயுதமாக என்னையே ஏந்தினான். ஆகையால், அவன் இன்றைக்கும் போராயுதமாக ஏந்துவதற்கு என்னைத்

தேடுவான்' என்று எண்ணியோ என்னவோ, சூரியன் உதயகிரியில் அவசர அவசரமாக வந்து உதித்தான்!

4. நான்காம் நாள் போர்

பாண்டவர்சேனையும் கௌரவர்சேனையும் மீண்டும் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுவதற்காக நான்காம் நாளாகிய இன்றும் குருக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தன.

முதல்நாள் போலவே கண்ணபிரான் பாண்டவர் சேனையை அர்த்தசந்திர வியூகமாக அமைத்தான். கண்ணபிரான் படைவகுத்த விதத்தைப் பார்த்த கௌரவர்கள் தங்கள் சேனையையும் முதல்நாள் போலவே கருடவியூகமாக வகுத்தார்கள்.

பிறகு, இரண்டு பக்கத்துச் சேனைகளும் பறையொலி முழங்க ஒன்றையொன்று உற்சாகத்தோடு எதிர்த்து ஆரவாரித்தன.



அப்போது பீமனை கௌரவர்களின் யானைப்படை வந்து வளைத்துக் கொண்டு தாக்கியது. அதுகண்டு பீமன் கொடிய ஹாலாஹல விஷம் போலக் கோபம் கொண்டான். அக்கோபத்தோடு யானைகளை, அவற்றின் மேலிருந்த வீரர்களோடு தனது கைகளால் தூக்கி வீசி எறிந்தான். அதனால் பல யானைகள் நிணமும் சதையும் எலும்பும் சாறாக வெளிப்பட்டுப் போகச் சுளையெடுத்த பலாப்பழம் போல் வெற்றுத் தோலாகப் பூமியில் விழுந்தன. மற்றும் பல யானைகளின் வாய் கிழிந்து போயின. இன்னும் பல யானைகள் பொடிப்பொடியாயின. மேலும், பல யானைகள் எலும்புக் கூடாயின. பீமனுக்குத் தப்பித்த சில யானைகள் பயந்து பின்வாங்கி ஓடி தமது கட்டுத்தறியை அடைந்தன. அதைவிட்டு எதிர்த்த பல யானைகள் கோழி போல பீமனுடைய குத்தால் சுருண்டன. பீமனுடைய கதாயுதத்தால் தாக்குண்ட யானைகள் மலைமலையாகப் போர்க்களம் முழுதும் இறந்து விழுந்தன.

பீமன் அப்படி யானைப்படையைக் கலக்கினான். அதனால் புறமுதுகிட்டோடிய யானைகள் பகைவரின் சேனையில் புகுந்து குதிரைகளையும் ரதங்களையும் அழித்தன.

துரியோதனன் அதைக் கண்டு மிகவும் ஆத்திரம் அடைந்தான். உடனே தனது தம்பிமார்களில் சிலரும், மற்றும் பலரும் தன்னைச் சுற்றித் தொடர்ந்து வர பீமன் மேல் அவன் போருக்கு வந்தான்.

துரியோதனன் பீமன் முன் போய் நின்றான். அடுத்த கணமே அவன் பீமனுடைய வில்லும், உடம்புக் கவசமும் அழியும்படி பாணங்களைப் பிரயோகித்தான்.

அதுகண்டு பீமன் சோரவில்லை. அதே கணத்தில் பீமன் துரியோதனனுடைய பாம்புக்கொடியை, தனது அம்புகளால் அறுத்துத் தள்ளினான். மேலும், பீமன் தொடுத்துவிட்ட நூறு பாணங்கள் துரியோதனனுடைய பரந்த மார்பிலே பாய்ந்து ஊடுருவிச் சென்றன. அதன்பின்பு பீமன் வேறு பாணம் தொடுக்கவில்லை.

பின்பு, துரியோதனன் பீமன்மேல் எதிர் அம்புகளைப் பிரயோகித்தான். அவன் விட்ட அம்புகளால் பீமனுடைய

சிங்கக்கொடி அறுந்து விழுந்தது. பீமனுடம்பிலும் அந்த அம்புகள் தைத்துச் சென்றன. அதைப் பார்த்து பீமன் பெரும் கோபம் கொண்டான். தான் கொண்ட அந்த அடங்காச் சினத்தைத் தனது தோள்களைக் கைகளால் தட்டி, பீமன் துரியோதனனுக்குக் காண்பித்தான்.

அச்சமயத்தில் துரியோதனனுடைய அம்புகளால் பீமன் சோர்ந்துவிட்டான் என்று எண்ணி, அவனுக்கு உதவியாக அவனுடைய தம்பிமார்களும் மைத்துனன் மார்களும் மற்றும் சில ராஜகுமாரர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

பீமனுக்குத் துணையாக பாண்டவர் படையிலுள்ள சில ராஜாக்கள் வந்ததைக் கண்டு, சதுரங்கச் சேனா வீரர்களோடு கௌரவப்படையிலுள்ள சில அரசர்கள் துரியோதனனுக்குத் துணையாக அவனருகே வந்து கூடினார்கள்.

இரண்டு பக்கத்திலுமுள்ள அரசர்கள் ஒருவரை யொருவர் எதிர்த்தார்கள். தங்களுடைய விற்களில் கைவிரலால் நாணொலி எழுப்பினார்கள். அந்தப் பேரோசையால் எல்லா அண்டங்களும் அதிர்ச்சியடைந்தன. பின்பு , அவர்கள் பகைவர்களின் அம்புகளால் தங்களுடைய தோள்களும் தலைகளும் அறுபட்டு தரையிலே விழுந்து மாண்டார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் வீரசொர்க்கம் அடைந்தார்கள்.

பீமன் அப்போது தனது அம்புகளால் துரியோதனனுடைய வில்லை முறித்தான். அவனுடைய தேர்க்குதிரைகளின் தலைகளைத் துண்டித்தான். அவனுடைய தேரைச் சின்னாபின்னமாக்கினான். அத்துடன் பீமன் நிறுத்தவில்லை. கொடிய கணைகளால் துரியோதனனுடைய மார்பைத் துளைத்தான். பிறகு, துரியோதனனுடைய தோல்வியைக் கண்டு பீமன், அவன் முன் நின்று ஏளனமாகச் சிரித்தான்!

துரியோதனன் பீமனுடைய அர்த்த சந்திர பாணங்களால் மூர்ச்சித்தான். அதுகண்டு சல்லியனும், மற்ற துணை அரசர்களும் துரியோதனனுக்கு என்னவாகுமோ என்று எண்ணி அஞ்சி நடுங்கினார்கள். அந்தப் பயத்துடன் அவர்கள், ''மூன்றாம் நாள் போரில் கடோத்கஜன் தனது

அம்புகளால் நம் ராஜராஜனை மூர்ச்சிக்கச் செய்தான். இன்றைய போரில் பீமன் தனது அர்த்த சந்திர அம்புகளால் நம் மாமன்னனின் மார்பைத் துளைத்துவிட்டான்!'' என்று சொல்லிக் கொண்டே, துரியோதனனைத் தூக்கி அணைத்துக் கொண்டார்கள்.

தங்களுடைய தமையனுக்கு நேர்ந்த கதியைக் கண்டதும் மற்ற துரியோதனாதியர்கள் மனம் துடித்து வெகுண்டார்கள். அளவற்ற கோபத்தோடு அவர்கள் ஒன்று கூடி போருக்கு ஒருவருக்கு முன் ஒருவராக அங்கே விரைந்து வந்தார்கள். வரும்போதே அவர்கள் தங்களுடைய வில்லின் நாணைக் கைவிரலால் தெறித்துப் பேரோசை எழுப்பினார்கள். அப்படிப் போருக்கு வந்த மற்ற துரியோதனாதியர்கள், கண்ணபிரானால் கோவர்த்தன மலையைக் கொண்டு தடுக்கப்பட்ட மேகம் போல அம்புமழையைச் சொரிந்தார்கள்.

துரியோதனனுடைய தம்பிமார்கள் போருக்கு வந்த விதத்தைக் கண்டு கோபித்த பீமன், அவர்களுடைய தேர்களையும் விற்களையும் தன் வில்லில் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துத் தொடுத்த அம்புகளால் அழித்தான். மேலும், வெற்றி தருகின்ற ஐந்து பாணங்களால் துரியோதனனுடைய தம்பிமார்களான சேனாவிந்து, சுதக்கணன், பிங்கலசன், சலாசந்தன், பீமவாகு ஆகிய ஐந்து பேர்களையும் கொன்றான்!

அப்போது போர்க்களத்தில் ஒரு பக்கத்தில் பீமனும், ஒரு பக்கத்தில் அர்ச்சுனனும், ஒரு பக்கத்தில் அபிமந்யுவும், ஒரு பக்கத்தில் நகுலனும், ஒரு பக்கத்தில் சகாதேவனும், ஒரு பக்கத்தில் அரவானும், ஒரு பக்கத்தில் கடோத்கஜனும், ஒரு பக்கத்தில் துருபதராஜனும், ஒரு பக்கத்தில் உத்தமோஜஸுமாக வெவ்வேறு பக்கத்தில் நின்று கடும்போர் புரிந்தார்கள். அதனால் துரியோதனனுடைய பெரியசேனை தோற்றுப் பின்வாங்கி பது!

கௌரவசேனை பின்வாங்கியதைக் கண்டதும் பகதத்தன் அங்கே விரைந்து வந்தான். அந்தப் பகதத்தன் திருமாலின் பேரன். நரகாசுரனின் மகன். தந்தையின் காலத்துக்குப்பின் கண்ணபிரானால் இளமையில் பரிபாலனம் செய்யப்பட்டவன். ஒரு காலத்தில் தேவர்களுக்கும்

அசுரர்களுக்கும் நடந்த போரில் தோல்வியடைந்த தேவேந்திரனுக்காக அசுரர்களை வதம் செய்து, அவனுக்குத் தேவேந்திரப் பதவியைத் திரும்ப நிலைக்கச் செய்தவன். அப்படிப்பட்ட அந்தப் பகதத்தன் தோற்றோடி வரும் கௌரவசேனையை நோக்கி, ''அஞ்ச வேண்டாம்! அஞ்ச வேண்டாம்!'' என்று பலமுறை சொல்லிக் கொண்டே, பகைவர்களின் எதிரில் போருக்குச் சென்றான்.

யமனைப் போன்ற அந்தப் பகதத்தன், கருங்கடல் போல் ஆரவாரிக்கும் யுத்தகளத்தில் யானைமேல் இருந்த படியே வில்லை வளைத்து தொடுத்துவிட்ட தனது அம்புகளால், பல பகைவர்களின் தலைகளைத் துண்டித்தான்.

பதினாயிரம் யானைகள் தன்னைச் சுற்றிவர சுப்பிரதீகம் என்னும் மதயானைமேல் அமர்ந்து போர் புரியும் பகதத்தனுடைய வீரப்போரையும், தோள் வலிமையையும், மனக்களிப்பையும் கடோத்கஜன் பார்த்தான். அத்துடன் அந்தப் பகதத்தனுடைய கொடிய போரால் தன் பக்கத்துச் சேனை களைத்துப் போனதையும் அவன் கண்டான்.

மறுகணமே கடோத்கஜன் பகதத்தனுடைய சேனையிலுள்ள லக்ஷம் மதயானைகளாகவும், அந்த யானைகளின் மேலுள்ள வீரர்களாகவும், அவர்களின் கையிலுள்ள விற்களாகவும், அந்த விற்களில் தொடுக்கப்படும் அம்புகளாகவுமான எல்லாம் தானேயாகிய மாயாரூபத்தை எடுத்தான். அந்த மாயாரூபத்தோடு கடோத்கஜன் பகதத்தனோடு யுத்தத்தைத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் சங்குகள் முழங்கின. பேரிகைகள் ஆரவாரித்தன. பறைகள் ஒலித்தன. மேலெழும் புழுதிப்படலம் கடல்கள் வற்றும்படிப் பரவியது. ஒரு சிங்கம் ஒரு மலையின்மேல் ஏறிப் போவது போல, கடோத்கஜன் தன் கைவில்லோடு மாயையால் தானும் தன் யானையுமாக பகதத்தன் எதிரில் போனான்!

கடோத்கஜன் மாயா யானைகளாகி பகதத்தனுடைய உண்மையான யானைகளை எதிர்த்துக் கொடிய போரைச் செய்தான். அப்போது பகதத்தனுடைய போருக்குரிய உண்மையான யானைகள் பொய் யானைகள் போலாயின.

அதைப் பார்த்த கடோத்கஜனுடைய யானைப் படையிலுள்ள மாயா வீரர்கள் எதிர்த்து நின்றார்கள். அவர்கள் பகதத்தனுடைய யானைகளையெல்லாம் மாயா அம்புகளினால் கொன்றார்கள். பின்பு, பகதத்தனுடைய யானைப்படை வீரர்களையெல்லாம் கடோத்கஜனுடைய மாயா வீரர்கள் கொன்றார்கள். அப்படி கடோத்கஜனுடைய மாயா வீரர்கள் பகதத்தனுடைய உண்மையான வீரர்களை ஜெயித்துவிட்டார்கள்!

அப்போது பகதத்தன், "யுத்தகளம் முழுதும் யானைச் சண்டை அதிகமாகிவிட்டது. ஓடிப்போன வீரர்கள் எல்லோரும் உயிர் பிழைத்து வாழ்வார்கள். ஆகையால், எல்லோரும் தப்பி ஓடிப் போங்கள்!" என்று, தன் யானைப்படை வீரர்களுக்குப் பலமுறை கட்டளையிட்டான். பிறகு, தானும் பின்வாங்கி ஓடிப் போனான்.

பகதத்தன் புறமுதுகிட்டு ஓடிச் சென்றதைப் பார்த்த சூரியன், தானும் கடோத்கஜனுடைய யானைப்படைக்கு அஞ்சித் தோற்றோடுபவன் போல ஓடி ஒளிந்தான்!

பாண்டவர்கள் யானைப்போரில் பகைவரை ஜெயித்த வெற்றிச் சந்தோஷத்துடன், தங்களுடைய துணை அரசர்கள் தொடர பாசறைக்குச் சென்றார்கள். பீஷ்மர் துரியோதனனோடு தமது பாசறையை அடைந்தார்!

தினம்தோறும் தன்பிள்ளைகள் நூறு பேரையும் பார்க்கும் காந்தாரி, அன்று அவர்களுள் ஐந்து பேரைக் காணாததால் மிகவும் துயரம் அடைந்தாள். அத்துயரத்தோடு அவள், "எனது அந்த ஐந்து புத்திரர்களும் வீரசொர்க்கத்துக்குப் போய் விட்டார்களோ?" என்று சொல்லி, கண்ணீர்விட்டு மனம் தளர்ந்தாள்.

மேலும் அவள், "பாண்டவர்கள் ஐந்து பேரும் சாகாமல் இருக்க, நீங்கள் மட்டும் கொலைபட்டீர்கள். முன்பு அவர்கள் எண்ணிய எண்ணம் இன்று பலித்துவிட்டது!" என்று புலம்பி, மின்னல் விழுவது போலத் தரையிலே விழுந்தாள். மீண்டும் காந்தாரி, "இது என்ன துக்கம்! என்ன துக்கம்!" என்று மனம் வருந்தி, படாதபாடு அப்போது பட்டாள்!

பத்தினித் தெய்வமாகிய திரௌபதியை பெண்கள் செல்லத் தகாத ராஜ சபையிலே துரியோதனனும் துச்சாதனனும் மானபங்கம் செய்தபோது. அதனைத் தடுக்காத காந்தாரி, தணியாத புத்திர சோகமாகிய வெள்ளத்திலே தான் அடித்துச் செல்வதற்கு அன்றுதான் முதன்முதலாகக் கால் வைத்தாள்!

இறந்த அரசர்களுக்காக அழும் ஓசையை நாம் கேட்காமல் எப்போது நீங்குவோம் என்று கருதி, அந்த இருள் நிறைந்த இரவு மீண்டும் ஓடிவிட்டது. அப்போது சூரியன் கிழக்குத் திசை காவலனான தேவேந்திரனுடைய தலையில் விளங்கும் கிரீடம் போல உதித்துத் தோன்றினான்!

5. ஐந்தாம் நாள் போர்

சங்குகளும், தாரைகளும், சின்னமும், எக்காளமும், பேரிகைகளும், துந்துபியும், மத்தளங்களும் முழங்க பாண்டவர் சேனை ஐந்தாம் நாள் போருக்குத் தயாராக வரிசையாகப் புறப்பட்டது!

பிருதுகளும் பேரிகைகளும் முழங்க, நான்காம் நாள் போரில் தோற்றுச் சென்ற கௌரவர் சேனையும் ஐந்தாம் நாள் போரில் கலந்து கொள்ள வெகு உற்சாகத்தோடு போர்க்களத்தை வந்து அடைந்தது!

அப்போது துரியோதனாதியர்சேனை ராவணன் சேனையைப் போலவும், பாண்டவர் சேனை ராமனுடைய வானரசேனையைப் போலவும் ஒன்றையொன்று எதிர்த்து நெருங்கின.

அர்ச்சுனன் தன்னைப் பாதுகாப்பதற்காக துணை நிற்கும் கண்ணபிரானோடு தேரேறிப் போருக்கு வந்தான். அவனுடைய தேரில் பறந்த ஆஞ்நேயகொடி, 'பூர்வகாலத்தில் ராவணசேனா வீரர்களைப் போரில் கொன்று வீரசொர்க்கத்துக்கு அனுப்பியவர்களும், எங்கள் இனத்தவரான வானரவீரர்களேயாவர். இன்றும் அந்த வானரவீரர்கள் போல, உங்களை அழிப்பதற்கு நான் இங்கு வந்து நின்றேன்!' என்று சொல்வது போல வேகமாக அசைந்தாடியது.

கண்ணபிரான் பீஷ்மரோடு அர்ச்சுனனைப் போரிடச் செய்ய விரும்பினான். அதனால் அவன் பாஞ்சசன்னியம் என்னும் தனது சங்கை ஊதியபடி, அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு தேரை பீஷ்மர் போர் செய்யும் இடத்துக்கு ஓட்டிச் சென்றான்.

பீஷ்மர் முன் கண்ணனின் தேர் வந்து சேர்ந்த சமயம், கலிங்க தேசத்து ராஜாக்கள் முதலிய பகை அரசர்கள் அர்ச்சுனனை வந்து எதிர்த்துப் போரிட்டார்கள். அர்ச்சுனன் உடனே நீண்ட பாணங்களை அவர்கள் மேல் வர்ஷித்தான். அந்த அம்புகள் குறி தவறாமல் சென்று பகைவர்களின் உடம்பைப் பிளந்தன. அதனால் தங்களுடைய உடம்பில் ஏற்பட்ட புண்களின் வழியே பெருகிய ரத்த வெள்ளத்திலே அவர்கள் எல்லோரும் மூழ்கினார்கள்!

கலிங்க மன்னர்கள் அர்ச்சுனனால் மாண்டதைக் கண்டார் பீஷ்மர். உடனே அர்ச்சுனன்மேல் தமது பாணங்களை அவர் பிரயோகித்தார். அதுகண்டு அர்ச்சுனன் கோபித்து ஐந்து பாணங்களைப் பிரயோகித்து பீஷ்மருடைய வில்லையும், வில்லின் நாணியையும், அம்புகளையும் ஒரே சமயத்தில் அழித்தான்.

பீஷ்மரும் அர்ச்சுனனும் ஒரு பக்கத்தில் தங்களுடைய பராக்கிரமத்தோடு அப்படிப் போர் செய்து கொண்டிருக்க, மற்றொரு பக்கத்தில் அநேக பகை அரசர்கள் பீமனை வளைத்துக் கொண்டு போரிட்டார்கள். பீமன் தான் தொடுத்து விட்ட அம்புகள் பகைவர்களின் மார்பை ஊடுருவிக் கொண்டு செல்லும்படிச் செய்து அவர்களை அழித்தான்.

பிறகு துச்சாதனனும், அவனுடைய தம்பிமார்கள் பலரும், அந்தத் தம்பிமார்களின் குமாரர்களும், சகுனியும், சல்லியனும், மற்றும் கிரீடாதிபதிகளான அரசர்கள் பலரும் விரைந்து வந்து பீமனைச் சூழ்ந்து கோபத்தோடு போரிட்டார்கள். பீமன் அதுகண்டு பெரும் சினம் கொண்டான். அவர்களையெல்லாம் கொன்று விடுவதாக வீரவாதம் பேசினான். தனது ஒரே வில்லில் அவர்கள் எல்லோருக்கும் தனித்தனியே பல அம்புகளைப் பிரயோகித்து அவர்களையெல்லாம் அவன் தோற்றோடும் படிச் செய்தான்.

துரியோதனன் பீமனால் தனது தம்பிமார்கள் தோற்றோடி வருவதைக் கண்டான். அவன் உள்ளம்

அதனால் கொதிப்படைந்தது. அவன் அடங்காத ஆத்திரம் கொண்டான். அதேசமயம் அவனுடைய மனம் கலங்கியது. ஆனாலும் அவன் கொண்ட கோபத்தால் கண்களிலிருந்து தீப்பொறிகள் வெளிப்பட்டன. அவன், ''வாயுதேவன் பெற்ற பீமனை இப்போதே போர் செய்து கொல்வேன்!'' என்று வீரவாதம் சொல்லி அதட்டிக் கொண்டே, தனது தேரின் மேல் வந்து பீமனை நெருங்கினான்.

துரியோதனன் ஆரவாரத்தோடு பத்து பாணங்களைப் பிரயோகித்து பீமனுடைய மார்புகவசத்தையும் மார்பையும் பிளந்தான்.

உடனே பீமன் மன்மதனை எரித்த சிவபெருமானுடைய நெற்றிக்கண் போன்ற ஒரு பாணத்தைத் தொடுத்து, துரியோதனனுடைய மார்பை பதிலுக்குப் பிளந்தான்.

பீமனும் துரியோதனனும் அப்படிச் சண்டை செய்து கொண்டிருக்கும்போது, பூரிச்ரவஸுவு விரைந்து வந்து கொடிய இரண்டு பாணங்களைப் பீமன் மேல் பிரயோகித்தான்.

கண்ணபிரானுடைய தம்பியாகிய சாத்தகி அதுகண்டு கோபித்தான். அக்கணமே அவன் வாயுவேகமாக தனது தேரை அங்கே செலுத்திக் கொண்டு வந்து சேர்ந்தான். அவன், ''பீமன்மேல் பாணம் தொடுத்த பூரிச்ரவஸுவின் அருமையான உயிரை இப்போதே நான் வாங்குவேன்!'' என்று வீரம் பேசி, பூரிச்ரவஸுவின்மேல் ஒரு பாணத்தை ஏவினான். அதே வினாடியில் பூரிச்ரவஸு சாத்தகியின்மேல் எதிரம்பு தொடுத்தான்.

சாத்தகியும் பூரிச்ரவஸுவும் கடுமையாக வில்யுத்தம் புரிந்தார்கள். அவர்கள் ஒருவர்க்கொருவர் பிரயோகித்த அம்புகளால் அவர்களுடைய விற்கள் முறிந்தன. கொடிகள் அறுந்தன. ஆயினும் அந்த இரண்டு வீரர்களுடைய புகழையும் சொல்வதற்குச் சிறிதும் குறைந்ததில்லை!

அந்த இரண்டு பேரும் நெருங்கிய சிநேகிதர்களுடைய மனம் போல சமமாகப் போரிட்டார்கள். பிறகு, அவர்கள் தேரிலிருந்து இறங்கி, ஒவ்வொருவரும் ஒரு கையில் வாளாயுதமும், மறுகையில் கேடயமும் எடுத்துக் கொண்டார்கள்.

பூரிச்ரவஸூவும் சாத்தகியும் அப்போது சூரியனும் சந்திரனும் போல ஒருவர்க்கொருவர் கோபித்தும், வீரவாதம் பேசியும், வலதுசாரி இடதுசாரியாகச் சுற்றிச் சுழன்றும், கேடயத்துக்குள் மறைந்தும், வெளிப்பட்டு வாளைச் சுழற்றித் தாக்கியும் கொடிய போர் புரிந்தார்கள்.

அதேசமயம் குதிரைகளோடு குதிரைகளும், யானைகளோடு யானைகளும், தேர்களோடு தேர்களும் மோதிப் போரிட்டன. அவற்றின் மேலுள்ள வீரர்களும் ஒருவரையொருவர் தாக்கி யுத்தம் செய்தார்கள். வில்வீரர்கள் வில்வீரர்களை எதிர்த்துத் தாக்கினார்கள். கிரீடாதிபதிகள் கிரீடாதிபதிகளைத் தாக்கிப் போரிட்டார்கள். காலாள்வீரர்கள் காலாள் வீரர்களை வலிமையாகத் தாக்கினார்கள். அப்படி இரண்டு பக்கத்துச் சேனைகளும் தோற்காமல் ஒன்றை யொன்று எதிர்த்து வலிமையோடு கோபித்துப் போர் செய்தன.

அப்போது போர்க்களத்தில் ஒரு பக்கத்தில் ஓடிய ரத்த வெள்ளத்திலே துண்டுபட்ட யானைகளின் துதிக்கைகள் வாளைமீன்களைப் போல ஓடின. மறுபக்கத்தில் பகைவரால் இறந்த வீரர்களின் உடல் துண்டங்கள் எழுந்து கூத்தாடும் பொழுதெல்லாம் பேய்களும் கூடச் சேர்ந்து கூத்தாடின. வேறொரு பக்கத்தில் எடுத்த ஆயுதங்களோடு துண்டுபட்ட கைகள் கிடந்தன. இன்னொரு பக்கத்தில் ரத்தம் பரவிய போர்க்களம் செவ்வானமாகவும், அக்களத்திலே ஒடிந்து கிடந்த யானைகளின் தந்தங்கள் பிறைச்சந்திரனாகவும் காட்சியளித்தன. மற்றும் ஒரு பக்கத்தில் பவழத்தால் செய்யப்பட்ட படகுகள் போல, தேர்ச்சக்கரங்கள் இரத்த வெள்ளத்திலே மிதந்தன. புது வெள்ளத்தின் கரைகளிலே ஒதுங்கும் வெண்ணுரை போல, இரத்த வெள்ளத்தின் கரைகளிலே வெண்மையான மூளைகள் அலைந்தன.

அந்த ஐந்தாம் நாள் போரில் இருபத்தைந்தாயிரம் அரசர்கள் மாண்டு வீரசொர்க்கம் போய்ச் சேர்ந்தார்கள். அதனால் ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகத்தில் இடப்பஞ்சம் மிகவும் அதிகமாக ஏற்பட்டது.

அப்போது தேவர்களின் வாசஸ்தலமான மேருமலையைப் பிரதக்ஷிணமாகச் சுற்றி வந்த சூரியன், செவ்வானம் பொருந்திய மேற்குத் திசையிலுள்ள

அஸ்தகிரியைத் தனக்கு வசிக்கும் இடமாக நிச்சயித்து, அம்மலையை அடைந்தான்!

சூரியன் அஸ்தமித்ததும் இரண்டு பக்கத்து ராஜாக்களும் வீரர்களும் போர்க்களத்தைவிட்டு நீங்கி, தங்களுடைய பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சூரியன் முதல்நாள் மேற்குக் கடலில் மறைந்தவன், மறுநாள் உதயப் பொழுதில் கிழக்குக் கடலின்மேல் பிரகாசமாக எழுந்து தோன்றினான்!

---

6. ஆறாம் நாள் போர்

பஞ்ச பாண்டவர்கள் தூங்கி எழுந்தார்கள். கண்ணபிரானுடைய திருவடிகளை நமஸ்கரித்தார்கள். பின்பு, அவனுடைய அனுமதிப்படி அவனோடு தங்களுடைய சதுரங்கச்சேனை தொடர அவர்கள் போர்க்களத்தை அடைந்தார்கள்.

குருக்ஷேத்திரப் போர்க்களத்தை அடைந்ததும் திருஷ்டத்யும்நன் பாண்டவர் சேனையை மகரவியூகமாக அணி வகுத்தான்.

யுத்த வாத்தியங்கள் ஆரவாரிக்க பீஷ்மரும் துரியோதனனும், அரசர்களோடும் சேனைகளோடும் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

பீஷ்மர் தம்சேனையை கிரௌஞ்ச வியூகமாக அணிவகுத்தார்.

ஆறாம்நாள் போர் தொடங்கியது!

இரண்டு பக்கத்துச் சேனாவீரர்களும் ஒருவர்க்கொருவர் வீரவாதம் பேசிக் கொண்டே, ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கி ஆயுதப் போர் செய்தார்கள். அந்தப் போர்க் காட்சியைக் காண்பதற்காக வந்து நின்ற தேவர்களால் ஆகாயத்தில் இம்மியும் வெற்றிடம் இல்லாமல் போயிற்று. தனது அதிக பாரத்தைத் தாங்க முடியாமல் ஆதிசேஷனும் வருந்திக் கலங்கினான்.

திரிபுர சங்கார காலத்தில் சிவபெருமானுக்குக் குதிரைகளாக இருந்த நான்கு வேதங்கள் போன்ற சிறந்த

குதிரைகளைப் பூட்டிய தேரின்மேல் ஏறிக் கொண்டு துரோணாசாரியார், ''கொடிய பகைவர்களாகிய இருளை அழிப்பதற்கு வந்த பிரகாசமான சூரியன் நான்!'' என்று கூறிக் கொண்டே, தம்மைச் சதுரங்கச் சேனா வீரர்கள் தொடர, பீமனை எதிர்த்துப் போர் செய்ய நெருங்கினார்.

துரோணாசாரியார் தன் மேல் கோபித்துப் போருக்கு வந்ததும், தனது வில்லாசிரியராகிய அவரைப் பீமன் முதலில் நமஸ்கரித்தான். பின்பு, அவன் தனது வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்து துரோணாசாரியாருடைய தேர்க்குதிரைகளின் தலைகளையும் தேர்ச்சாரதியின் தலையையும் துண்டித்தான்.

மேலும், பீமன் துரோணாசாரியாருக்குத் துணை வந்த அரசர்களையெல்லாம் கொன்று குவித்தான். அப்போது அங்கு வந்து சேர்ந்த சல்லியன் பீமனைப் பார்த்து, ''நண்பனே! இப்போது என்னுடன் போர் செய்வாயாக!'' என்று சொன்னான்.

உடனே பீமன் சல்லியனை நோக்கி, ''நீ கொடிய போரைச் செய்வதில் வல்லவன். ஆகையால், என்னை எதிர்த்துப் போர் செய்ய சீக்கிரம் வா!'' என்று அழைத்தான்.

சல்லியன் அக்கணமே அவனோடு போருக்குச் சித்தமானான்.

மறுகணம் பீமன் சல்லியனுடைய வில்லை தனது அம்புகளால் துண்டாக்கினான். பிறகு, முன்னொருநாள் கொடிய யானைகளைத் தூக்கி எறிந்தது போல, பீமன் சல்லியனைத் தேரோடு தூக்கித் தரையிலே மோதினான்.

பீமனுடைய தாக்குதலால் சல்லியன் சோர்ந்தான். அதுகண்டு பீமன் அவனை நோக்கி, ''சல்லியனே! இப்போது பகைவர்களாகிய உங்களுடைய உயிர் உள்ளங்கை நெல்லிக்கனி போல என் கைவசத்தில் இருக்கிறது!'' என்று வீரவாதம் கூறினான்.

அப்போது யுத்த வாத்தியங்கள் முழங்க, துரியோதனன் பீமனோடு போர் செய்ய அவன் எதிரே வந்தான். அவனோடு அவனுடைய தம்பிமார்களும், சகுனியும், துணை அரசர்களும் வந்தார்கள். அவர்கள்

எல்லோரும் பீமனுக்கு எதிராக தங்கள் விற்களை வளைத்து ஆயிரமாயிரம் அம்புகளை மழைபோல ஆரவாரித்துச் செல்லும்படிப் பிரயோகித்தார்கள்.

பீமனும் தன் பிள்ளைகளாகிய கடோத்கஜன் முதலியவர்களும், தம்பிமார்களாகிய அர்ச்சுனன் முதலியவர்களும், மைத்துனன்மார்களாகிய திருஷ்டத்யும்நன் முதலியவர்களும் தனக்குத் துணையாக வர, தேரில் ஏறிக் கொண்டு கௌரவர்களை எதிர்த்து வந்து போரிட்டான்.

இரண்டு பக்கத்துச் சேனைகளும் ஒன்றுக்கொன்று எதிராக நின்று விற்களாலும், வேல்களாலும், வாள்களாலும் யுத்தம் செய்தன. பீமனும் துரியோதனனும் ஒருவர்க் கொருவர் எதிராக தங்களுடைய விற்களை வளைத்து கர்ஜித்துக் கொண்டு நெருங்கினார்கள்.

துரியோதனன் தனது பாணங்களால் பீமனுடைய மார்பிலே தொயில் எழுதினான். பதிலுக்குப் பீமன் தனது பாணங்களால் துரியோதனனுடைய தோள்களிலே தொயில் எழுதினான். இவ்வாறு காற்றும் நெருப்பும் போல், அவர்கள் இரண்டு பேரும் ஒருவரையொருவர் எதிர்த்து, பூமியெங்கும் மிக அதிகமாக கோபாக்கினியின் பொறிகள் சிந்தும்படி யுத்தம் பண்ணினார்கள்.

பீமன் தனது அம்புகளை துரியோதனனுடைய மார்பை ஊடுருவிச் செல்லும்படிப் பிரயோகித்தான். அந்த அம்புகளும் அப்படியே துரியோதனனுடைய மார்பைத் துளைத்துக் கொண்டு அப்பால் சென்றன.

தனது அம்புகளால் துரியோதனனை வருத்திய பின்பு, பீமன் அவனுடைய தம்பிமார்களையும் தனது அம்புகளால் உடம்பில் புண்படுத்தித் துன்புறுத்தினான். பின்னும் பீமன் கௌரவசேனையிலுள்ள பல அரசர்களைத் தன்னுடைய அம்புகளால் கொன்று வீரசொர்க்கத்துக்கு அனுப்பி வைத்தான்.

பீமனுடைய கடுமையான எதிர்தாக்குதலைத் தாங்க முடியாமல் துரியோதனாதியர் சேனை புறமுதுகிட்டது. கௌரவப்படையிலுள்ள வீரர்கள் எல்லோரும் உயிருக்கு அஞ்சி ஓடினார்கள். அதுகண்டு தேவர்கள் எல்லோரும் பீமனுடைய பலத்தை எண்ணி மகிழ்ந்தார்கள். அந்த

மகிழ்ச்சியுடன் அவர்கள் பீமன்மேல் பூமாரிப் பொழிந்தார்கள்!

அதற்குப் பிறகு விகர்ணன் பல அரசர்களோடு திரும்பவும் போருக்கு வந்தான். உடனே அபிமந்யு தனது தேரில் ஏறிக் கொண்டு, வில்லைத் தூக்கிப் பிடித்தபடி அந்த விகர்ணனை எதிர்த்துப் போர் புரிய அவன் முன் வந்து சேர்ந்தான்.

அபிமந்யு தான் தொடுத்துவிட்ட பாணங்களால் விகர்ணனுடைய தேரையும், தேர்க்குதிரைகளையும், தேர்ச்சாரதியையும், தேர்ச்சக்கரங்களையும் ஒன்றாக அழித்தான்.

தனது தேரும் பாகனும் அழிந்ததும் விகர்ணன், பக்கத்திலே தனக்குத் துணையாகப் போருக்கு வந்த சித்திரசேனனுடைய தேரில் அதிசீக்கிரத்தில் ஏறிக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் துரியோதனனுடைய தம்பிமார்களும், அவர்களுடைய மைத்துனனான ஜயத்ரதனும், மற்றும் பகதத்தனும் விகர்ணனோடு சேர்ந்து கொண்டு பீமனை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். அவர்கள் எல்லோரும் தன்மீது பிரயோகித்த பாணங்களைத் தனது எதிர் பாணங்களால் பீமன் அழித்தான். மேலும், அவன் தான் வர்ஷித்த அம்புகளால் அவர்களுடைய மார்பைத் துளைத்து, அவர்களைக் களைத்துப் போகச் செய்தான்.

அபிமந்யு அத்துடன் தனது போரை நிறுத்தவில்லை. தொடர்ந்து அவன் பாணப் பிரயோகம் செய்து விகர்ணனை வருத்தினான். அபிமந்யுவின் ஒரு பாணத்தால் விகர்ணனுடைய குடல் சரிந்து ரத்தம் வழிந்தது. தோள்களில் பெரும் காயங்கள் ஏற்பட்டன.

கௌரவசேனாவீரர்கள் அதுகண்டு, 'அபிமந்யு வேறு துணையில்லாமல் தான் ஒருவனாகவே நின்று ராஜராஜனான துரியோதனன் தம்பியாகிய விகர்ணனுடைய மார்பை பல அம்புகளால் துளைத்தான் என்றால், நம்மால் அந்த அபிமந்யுவை எதிர்த்து என்ன போர் செய்ய முடியும்?' என்று எண்ணி வெடவெடத்து நடுங்கினார்கள்.

அன்றையப் போரில் விகர்ணன் முதலிய கௌரவ சேனாவீரர்கள் உடம்பு களைப்படையும்படி அடைந்த தோல்வியை நாம் என்னவென்று எடுத்துச் சொல்வோம்? அபிமந்யுவின் வீரத்தால் துரியோதனனுடைய பக்கத்திலுள்ள எல்லா அரசர்களும் தங்களுடைய பாசறையை அடைவதற்கு ஒருவருக்குமுன் ஒருவராக அதிசீக்கிரமே ஓடிப் போனார்கள்.

பாண்டவர்கள் அதுகண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார்கள். பகைவர்களைத் தனது வீரத்தால் ஓட ஓட விரட்டி வெற்றி கொண்டு போர்க்களத்திலே நிற்கும் அபிமந்யுவை, அவர்கள் விரைந்து வந்து தங்களுடைய மார்போடு தழுவிக் கொண்டார்கள்.

போர்க்களத்திலே இறந்து கிடந்த யானைகள் கண்ணபிரானுக்கு முன்னே கம்சன் அனுப்பிய குவலயாபீடம் என்னும் யானையைப் போல் விளங்கின. முதலையின் வாயில் அகப்பட்டுத் தத்தளித்த கஜேந்திரன் என்னும் யானையைப் போல, இரத்த வெள்ளத்திலே பல யானைகள் பாதி மூழ்கியும் பாதி மூழ்காமலும் இறந்து கிடந்தன. சிவபெருமான் தன்மேல் போர்த்தியுள்ள யானைத்தோலைப் போல, பேய்களால் சதையும் நிணமும் உண்ணப்பட்டுவிட்ட யானைகள் காட்சி தந்தன. துண்டிக்கப்பட்டுக் கிடந்த யானைகளின் தலைகளை வாயிலே கவ்விக் கொண்டு, இறந்து கிடக்கும் வீரர்களுடைய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு இரண்டு பூதங்கள் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிட்டன. அந்தக் காட்சி தேவேந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகோளின்படி யானைமுக அசுரராஜனோடு விநாயகக்கடவுள் போரிட்ட நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தியது!

அப்போது சூரியன், 'இன்றையப் போரில் உங்கள் போர்த்தொழில் இத்துடன் போதும்!' என்று சொல்வது போல, முதலில் தான் அஸ்தகிரியைச் சென்றடைந்தான்.

சூரியன் அஸ்தமித்ததும் பீமன் முதலிய தம்பிமார்கள் தருமரோடு தங்களுடைய பாசறைக்குச் சென்றார்கள்.

இரவு வெகுசீக்கிரமே கழிந்தது!

மீண்டும் சூரியன் இருள் அழியும்படி உதயகாலத்தில் உதயகிரியில் உதித்தான்!

7. ஏழாம் நாள் போர்

ஏழாம்நாள் போருக்குத் தயாராக கௌரவர்சேனையும் பாண்டவர்சேனையும் பறையொலி முழங்க, குருக்ஷேத்திரப் போர்க்களத்தை வந்தடைந்தன!

கண்ணபிரான் பாண்டவர்சேனையைச் சர்ப்ப வியூகமாக அமைத்தான்.

பீஷ்மர் கௌரவர்சேனையைச் சகட வியூகமாக அணிவகுத்தார்.

போர் தொடங்கியது!

வேப்பம்பூ மாலையும் மீன்கொடியுமுடைய பாண்டியராஜன் துரோணாசாரியாருடன் போரிட்டு, அவருக்குத் தோற்று அஞ்சி ஓடினான்.

நான்காம் நாள் போரில் மாயா யானைகளை அமைத்து, தான் உண்மையான யானையின்மேல் ஏறிக் கொண்டு பகதத்தன் முதலிய அரசர்களோடு போர் செய்து, அவர்களைத் தோற்கடித்த கடோத்கஜன் இன்றையப் போரிலும் கலந்து கொள்ள விரைந்து வந்தான்.

சாத்தகிக்கு சுதாயு தோற்று ஓடினான். பீமனுடைய கடுமையானப் போரைத் தாங்க முடியாமல் சகுனியும் சல்லியனும் தோற்று அஞ்சி ஓடிப் போனார்கள். அதனால் வெற்றி பெற்ற பீமன் வாகைப்பூ மாலை தரித்தான்.

கண்ணன் தேரோட்ட அர்ச்சுனன் பீஷ்மரை எதிர்த்தான். உடனே பீஷ்மரும் அர்ச்சுனனை எதிர்த்தார். இருவருடைய விற்களும் ஒன்றுக்கொன்று எதிராக வளைந்தன.

பீஷ்மரும் அர்ச்சுனனும், தாரகாசுரனும் சுப்பிரமணிய கடவுளும் போலப் போரிட்டார்கள். தேவேந்திரனும் பலாசுரனும் போலப் போரிட்டார்கள். ஸ்ரீராமபிரானும் ராவணனும் போலப் போரிட்டார்கள். அவர்கள் இருவரும் தொடுத்துவிட்ட அம்புகள் ஒன்றுக்கொன்று எதிராக தாக்கி

அழிந்தன. அவர்களுடைய போர்த்திறமை இப்படிப்பட்டது என்று மனத்தாலும் நினைக்க முடியுமோ?

அவர்கள் இரண்டுபேர்களும் பிரயோகித்த அம்புகளால் யானைவரிசைகளில் உள்ள எல்லா யானைகளும் காயம்பட்டன. தேர்வரிசைகளில் உள்ள எல்லாத் தேர்களும் கலக்கம் அடைந்தன. குதிரை பந்திகளில் உள்ள எல்லா குதிரைகளும் வெட்டுப்பட்டன. அந்த மூப்படைகளைச் செலுத்தும் பாகர்கள் எல்லோரும் இறந்து விழுந்தார்கள். அந்த இரண்டு பேர்களுடைய பாணங்களாலும் தாக்கப்படாத அரசர்களும் இல்லை! மனித அவதாரமான அர்ச்சுனனும், வசுவின் அவதாரமான பீஷ்மரும் அப்போது செய்த யுத்தத்தைச் சொல்லத் தொடங்கினால் சொல்கின்ற நாக்கும் அஞ்சும்!

பீஷ்மரும் அர்ச்சுனனும் செய்த யுத்தத்தால், எல்லாத் திசைகளிலும் இரத்தத்தால் சிவந்த கவந்தங்கள் எழுந்து கூத்தாடின.

முதல் ஆறு நாட்களும் நடந்த போரில் மாண்ட சேனையின் அளவைப் போல், ஆறு மடங்குச் சேனை அந்த ஏழாம் நாள் போரில் பீஷ்மராலும் அர்ச்சுனனாலும் அழிந்தது.

இனிமேலும் அன்றைக்கு அந்த இரண்டு பக்கத்துச் சேனைகளும் போர் செய்ய வேண்டுமோ?

மாண்டவீரர்கள் வீரசொர்க்கம் செல்வதற்காக ஆகாயத்தில் பரவியிருந்த சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சென்றார்கள். அதனால் சூரியன் மிகவும் களைத்துப் போனான். எனவே அவன், 'நீங்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் உங்கள் பாசறைக்குப் போய்ச் சேருங்கள். உங்கள் சேனைகளும் போரினால் களைத்துவிட்டன!' என்று சொல்பவன் போல, மேற்குத் திசை கடலைப் போய் அடைந்தான்!

சூரியன் அஸ்தமித்ததும், சந்திரகுலத்தில் பிறந்த இரண்டு பக்கத்தாருடைய சேனைகளிலுமுள்ள அரசர்கள் எல்லோரும் தங்களுடைய போர்க்களைப்புத் தீருவதற்காகப் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மகாமேருமலையின் தென்திசைப் பக்கத்தைப் பகலில் அளந்தது போலவே, இரவில் அம்மலையின் வடதிசைப் பக்கத்தை அளந்த பின்பு, சூரியன் உதயகிரியில் தோன்றினான்!

8. எட்டாம் நாள் போர்

ஏழாம் நாள் போரில் இரண்டு பக்கத்துச் சேனைகளும் சமமாகப் போரிட்டதால், தருமர் அந்தப் போரில் தமது படை தோற்றதாகவும், கௌரவசேனை வென்றதாகவும் எண்ணினார். அதனால் அவர், 'நமது மாபெரும் சேனை நேற்றுப் போரில் தோற்றுவிட்டது. ஆகையால், இன்றையப் போரில் பகைவர் சேனைத் தோற்றோடும்படி நாம் போரிட்டு அதனை அழிப்போம்!' என்று நினைத்தார். அந்த நினைவோடு தருமர் தமது சேனைகளுடன் போருக்கு வந்தார். அப்போது அவருடைய சேனையால் எழுந்த புழுதிப் படலம் ஆகாயத்தை நிறைத்து ஆகாச கங்காநதியின் நீரை வற்றச் செய்தது. தருமர் செய்யும் போரைக் காண்பதற்காக தேவர்கள் வானத்தில் வந்து கூடினார்கள்.

பாம்புக் கொடியுடைய துரியோதனன் ஏழாம்நாள் போரில் ஜெயித்ததால், இன்றையப் போரிலும் நாமே ஜெயிப்போம் என்றெண்ணி தனது படையோடு போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தான்.

பீஷ்மர் தமது சேனையை அசுவவியூகமாக அணிவகுத்தார்.

கண்ணபிரான் பாண்டவர் சேனையைச் சகடவியூகமாக அமைத்தருளினான்.

துரியோதனன் தனது தம்பிமார்களோடு சுழல் காற்றுப் போல பீமனை எதிர்த்துப் போரிட அவன் முன் வந்தான். அவனும் அவனுடைய தம்பிமார்களும் பிரயோகித்த பாணங்கள் பீமன் மேல் தைத்தன. அதனால் பீமன் பெருங் கோபம் கொண்டான். அந்தக் கோபத்துடன், "என் தம்பிமார்களில் எட்டுப்பேர் இன்று வீரசொர்க்கம் சென்று, பின்பு வரும் துரியோதனனுக்காக அங்கு இடம் அமைத்து வைப்பார்களாக!" என்று கூறி, பீமன் தன் அம்புகளை அவர்கள்மேல் செலுத்தினான்.

அந்தக் கணத்தில் பீமனுடைய அம்புகள் விரைந்து சென்று துரியோதனனுடைய தம்பிமார்களான சுந்தரன், விசாலக்கண்ணன், வீரவாசி, பௌதுண்டன், மகோதரன், மாகவிந்து, அபயன், ஆதித்தகேது ஆகியவர்களின் உடம்பை ஒரே சமயத்தில் தாக்கின. அதனால் அந்த எட்டுப் பேர்களும் ஒன்றாக அப்போதே போர்க்களத்தில் உயிர் நீத்தார்கள்.

தனது எட்டுத் தம்பிமார்கள் பீமனால் இறந்தது கண்டு துரியோதனன் மிகவும் வருந்தினான். அந்த வருத்தத்தோடு அவன் பீமனை எதிர்த்துப் போர் செய்வதைக் கைவிட்டு, பீஷ்மரிடம் போய்ச் சேர்ந்தான்.

பீஷ்மரின் பாதங்களைத் தனது தலைமேல் வைத்து நமஸ்கரித்து, துரியோதனன் அவரை நோக்கி, ''பிதாமகரே! பிதாவின் மேலுள்ள அன்பால் தம்பிமார்களுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுத்தவரே! தாங்களே எனக்குத் தந்தை! தாங்களே எனக்குத் தாய்! இதுவரை இப்படித் தங்களை நான் நினைத்திருக்கும் போது, எனது எட்டுத் தம்பிமார்கள் பீமனால் இறந்து போனார்கள்! தாங்கள் எனது சேனைக்குப் பிரதமசேனாதிபதியாக இருப்பதால், எனக்கு வாழ்வைத் தவிர அழிவு ஏற்படாது என்றும் நினைத்திருந்தேன்!'' என்று சித்திரப்பாவை போல, அதிகசோகத்தால் உடல் உணர்ச்சியற்று வருத்தத்தோடு கண்களில் நீர் மல்கச் சொன்னான்.

அதுகேட்டு பீஷ்மர் துரியோதனனைப் பார்த்து, ''ஐயனே! நீ கொஞ்சமும் வருந்தாதே! ஆயுதங்களைப் போரில் ஏந்துவது தப்பிப் பிழைப்பதற்கு மாத்திரம் இல்லை. தம்மால் முடிந்த அளவுக்கு அந்த ஆயுதங்களால் பகைவர்களைக் கொல்வதுமாகும். அதுமட்டுமில்லை. தம்மால் பகைவர்களோடு போரிட முடியாதபோது, அவர்களால் உடல் வேறு தலை வேறாகத் துண்டிக்கப் பட்டுச் சாவதும் வீரர்களுக்குச் சிறப்பாகும்! செல்வந்தர்கள் தாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்குத் தருமம் செய்வதற்குப் பின்வாங்க மாட்டார்கள். இல்லறத்தார்கள் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதற்குச் சிறிதும் பின்வாங்க மாட்டார்கள். ஞானவான்கள் இயல்பாக ஏற்படும் மரணத்துக்குப் பயப்பட மாட்டார்கள். முனிவர்கள் அரிய தவத்தைச் செய்வதற்கு வருந்தமாட்டார்கள். அது போலவே

அரசர்களும் கொலைக்குக் காரணமான போர்த் தொழிலுக்கு அஞ்ச மாட்டார்கள். நான் சொல்லும் இந்த தரும உபதேசத்தை உனது காதுகள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், நான் கூறும் இன்னொரு சேதியையும் நீ கேள். உனக்கு முன்பு அரசாட்சி செய்த அரசர்களில் யாருமே நீதி தவறியதில்லை. உன்னால் ராஜசபையிலே மானபங்கப்பட்ட திரெளபதியின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், இனி இத்தீங்குகளுக்கு மட்டுமில்லாமல் வரும் எல்லாத் தீங்குகளுக்குமே காரணமாகும்! கர்ணனும், சகுனியும், துச்சாதனனும், நீயும் எண்ணிய தீயசிந்தையின் பயன் நாளைக்கே தெரிந்துவிடும்! விதுரனும் உனது கடுஞ்சொல்லைப் பொறுக்க மாட்டாமல் வில்லை முறித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டான். தன்னை அதிரதச் சேனாதிபதியாக நியமிக்காவிட்டால், கர்ணனும் உனக்காகப் போர் செய்ய வரமாட்டான். ஆதலால் அர்ச்சுனனும் பீமனும் கோபத்தோடு வந்து போர் செய்யும் பொழுது, அவர்களை எதிர்க்கக் கூடியவர்கள் நம் இருவரையும் தவிர, நமது படையில் வேறொருவரும் இல்லை. பாண்டவர் சேனைக்கு தருமனுடைய சத்திய பலமும், கண்ணனுடைய தெய்வபலமும் இருக்கின்றது. ஆகையால், அச்சேனையில் அதிகம்பேர் இறக்கவில்லை. கௌரவச்சேனைக்கோ உங்கள் தீச்செயல் பயனும், விதுரன் கர்ணன் ஆகியோரின் உதவி இல்லாமையுமே இருக்கின்றது. ஆகையால்தான் இச்சேனையில் அதிகம்பேர் இறக்கின்றார்கள். இனிமேல் இறக்காமல் இருப்பவர்களும் யாருமில்லை! நீ கவலைப்பட வேண்டாம். அந்தக் கவலையை விடு. இனி நடக்க வேண்டிய காரியத்துக்கானவற்றைக் கூறுகிறேன். இப்போதே போரில் பகைவர்களைக் கொல்வோம்.இல்லையேல் அவர்களுடைய கையால் இறப்போம். ஆகையால், நீ போர் செய்ய வா!'' என்று சொல்லி, தேரில் ஏறிக் கொண்டு போருக்குச் சென்றார்.

அப்போது கடோத்கஜன் காளமேகம் போன்ற கரிய யானையின்மேல் ஏறிக் கொண்டு போர் செய்தான். அவன் மாயையால் பல வடிவம் எடுத்து, நட்சத்திரம் போல் அதிகமாகவுள்ள பகை அரசர்களின் சேனைகளையெல்லாம் அழித்தான்!

அதுபோல் மற்றொரு பக்கத்தில் அரவான் மாயையால் பலஆயிரம் வடிவங்கள் எடுத்து விற்போர் செய்தான். அவன்

பிரயோகித்த அம்புகளால் பாம்பின் முன் வந்துவிட்ட எலிகள் போல, பகை அரசர்கள் எல்லோரும் அஞ்சி வருந்தி, தங்கள் சேனைகளோடு சிதறிப் போனார்கள்.

முன்பு பீமனால் வேத்திரகீய வனத்தில் மாண்ட பகாசுரனின் தம்பியாகிய அலம்புசன், பீமன்மேல் கோபம் கொண்டு பாண்டவர் சேனையை எதிர்த்துப் போர் செய்ய வந்தான்.

அந்த அலம்புசன் துரியோதனனிடம், ''எனது உடன் பிறந்தவனான பகாசுரனை தருமனுடைய தம்பியாகிய பீமன் முன்பு கொன்று விட்டான். அதற்குப் பதிலாக நான் அந்தப் பீமனுடைய உடம்பைப் பிளந்திடுவேன்!'' என்று சொல்லிவிட்டு, அரக்கர் சேனையோடு பீமனை எதிர்த்து வந்திருந்தான்.

அப்படி வந்து அலம்புசன் போர் செய்த போது, அரவான் அவனை எதிர்த்துப் போர் செய்ய நெருங்கினான்.

அரவான் அலம்புசனுடைய அரக்கர் சேனையைத் தான் கொண்ட பல வடிவத்தோடு போர் செய்து அழித்தான். அதனால் அலம்புசன் தனிப்பட்டான். தான் தனிப்படவே அவன் அரவானை எதிர்த்துப் போர் புரிவதற்குப் பயந்து தோற்றுப் பின்வாங்கி ஓடினான்.

பிறகு, அலம்புசன் திரும்பவும் அரவானோடு போர் செய்ய விரைந்து வந்தான். அப்போது அவன் மாயையால் கருட வடிவம் கொண்டு பயங்கரமான இடிபோல அரவானை எதிர்த்துப் போருக்கு வந்தான். அது கண்டு அரவான் பாம்புவடிவம் எடுத்தான். இரண்டு பேர்களும் கருடனும் பாம்புமாக மாயப்போர் புரிந்தார்கள். அப்போரில் கருடனால் பாம்பு உயிர் ஒடுங்குவது போல, அலம்புசனால் அரவான் பலமிழந்து திகைத்து நின்றான்!

அதேகணத்தில் அலம்புசன் வாளாயுதத்தை எறிந்து அரவானைக் கொன்றான்!

துரியோதனாதியர் சேனை அலம்புசன் அரவானைக் கொன்ற வெற்றியைக் கண்டு மகிழ்ந்து, பிரளயகாலத்தில் பொங்கும் கடல்போல ஆரவாரித்தது. அப்போது அலம்புசன் என்னும் அந்த அரக்கன் செய்த மாயப்போரை,

எதிர்த்துப் போர் செய்து அழிக்க வல்லவர்கள் யாருமே இல்லை!

அச்சமயத்தில் பாஞ்சாலதேசத்து துருபதராஜன் திருஷ்டத்யும்நன் முதலிய அரசர்கள் பலரும் தோற்றோடும்படி, அசுவத்தாமனும் துரோணாசாரியாரும் தங்கள் விற்களை வளைத்து அம்புகள் தொடுத்தார்கள்.

பின்பு, அபிமந்யு தனது தம்பியாகிய அரவான் இறந்த செய்தி கேட்டு மிகவும் துயரமடைந்தான். அதனால் பகைவர்கள்மேல் அடங்காத ஆத்திரம் கொண்டான். அந்தக் கோபத்தோடு தனது தேரை பகைவர்களின் நடுவே செலுத்தினான். தனது வில்லை வளைத்து அவர்கள்மேல் கொடிய அம்புகளை வர்ஷித்தான். அவனுடைய அம்புகளால் கௌரவசேனையிலுள்ள பல அரசர்கள் தோற்றோடினார்கள்.

தம்பி அர்ச்சுனனின் மகனாகிய அரவான் இறந்த செய்தியை பீமனும் அறிந்தான். அவ்வளவுதான். அவன் பகைவரால் தந்தம் பறிக்கப்பட்ட மதயானை போல, உள்ளத்திலே கோபாக்கினி பொங்கவும் உடம்பு சோகத்தால் தகிக்கவும் பகைவர்மேல் போருக்குப் போனான்.

பீமன் கோபித்து போருக்கு வருவதைக் கண்டதும், துரியோதனன் தனது தம்பிமார்களோடும் துணை அரசர்களோடும் தனது கூட்டத்தோடு வந்த பன்றி போல பீமனோடு போர் செய்ய வந்தான். அவனும் அவன் துணைவர்களும் தேரேறி வந்து சக்கரவாளகிரி போல் பீமனைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரித்தார்கள். அப்போது அவனும் மற்றவர்களும் ஆளுக்கொரு அம்பைப் பிரயோகித்து பீமனுடைய உடம்பைத் துளைத்து உற்சாகத்தோடு போர் புரிந்தார்கள்.

துரியோதனன் துணைவர்களோடு தன்னை எதிர்த்து வந்து யுத்தம் செய்த அந்தக் கணத்தில், பீமன் ஒரு நொடிப் பொழுதுக்குள் தனது வில்லை வளைத்து அம்பு தொடுத்து அவர்களையெல்லாம் நிலைகுலையச் செய்தான். மேலும், அவன் தொடுத்துவிட்ட அம்புகளால் துரியோதனனுடைய தம்பிமார்களான குண்டலபோசன், அனாதியக்கன், தீர்க்கநயனன், திம்மவாகு, குண்டலன், குண்டலதாரன், கநகத்வஜன் ஆகிய ஏழுபேர்கள் மாண்டார்கள்!

பீமனால் தலை துண்டிக்கப்பட்ட அந்த ஏழுபேர்களின் உடம்புகளும் ஆகாயத்தில் எழும்பிக் குதித்தன. ஆகாயத்தில் இருந்தபடி போரைப் பார்த்துக் கொண்டிருந்த தேவேந்திரன் அதுகண்டு தேவர்களை நோக்கி, ''இந்த முண்டங்கள் எழும்பிக் குதித்து ஆடுவதற்கு உவமையாக எதைச் சொல்லலாம்?'' என்று கேட்டான்.

உடனே அத்தேவர்கள் அவனுக்குப் பதில் சொல்லத் தொடங்கி, ''தேவராஜனே! துர்க்கை தனது அழகிய கைகளால் எடுத்து ஆடுகின்ற அம்மானைக்காய்கள் இந்த முண்டங்களுக்கு உவமையாகும்!'' என்றார்கள்.

அப்போது பீமன் துரியோதனனைப் பார்த்து, ''பலருக்குத் தீங்கு செய்த உனது உயிர் வாழ்க்கையை நான் முடிக்கப் போகின்றேன். அதனால் இப்போது நீயும் வீரசொர்க்கத்துக்குப் போய்ச் சேர்!'' என்று கூறி, கோபத்துடன் அவனை எதிர்த்துக் கொடிய யுத்தம் செய்தான்.

பீமனுடைய கொடிய யுத்தத்துக்கு துரியோதனனால் எதிர் யுத்தம் செய்ய முடியவில்லை. அதனால் அவன் தோற்றுத் திரும்பிச் சென்றான்.

பீமனுடைய அம்புகளால் தோற்ற துரியோதனாதியர் சேனை போல, மந்தேகர் என்னும் அரக்கர் எல்லோரும் தோற்று அழியும்படியான தேரையுடைய சூரியன், மேற்குத் திசைக்குப் போய்ச் சேர்ந்தான்!

அப்போது தருமர் பகைவரை ஜெயித்து பூமாதேவியை மணந்து கொள்வதற்காக விருப்பத்தோடு அவளுக்குக் கொடுத்த ஆபரணங்கள் போல, சேனாவீரர்களின் ஆபரணங்கள் போர்க்களம் எங்கும் சிதறிக் கிடந்தன. தருமர் பூமாதேவியை மணப்பதற்காக அவளுக்குப் பரிசாகக் கொடுத்த முத்துப்பெட்டிகள் போல, தலை துண்டிக்கப்பட்ட யானைகளின் நெற்றிமுத்துப் பட்டயங்கள் போர்க்களத்திலே கிடந்தன. பூமாதேவியை மணந்து கொள்வதற்காக அவளுக்கு மனம் விரும்பியளித்த நெற்றிச்சுட்டியைப் போல, போர்க்களத்தில் வில்லின் நாணோடு சுற்றிக் கொண்டு கிடந்த வீரர்களின் ஈரல்கள் காணப்பட்டன. மேலும், தருமர் அவளை,. மணப்பதற்காக

அவளுக்குச் சூட்டிய மணமாலை போல, போர்க்களத்தில் விழுந்து கிடந்த வீரர்களின் குடல்கள் காட்சி தந்தன. பூமாதேவி தருமரை மணப்பதற்காக கல்யாணச் சேலையாக சிவப்புக் கரையிட்ட நீலநிறச் சேலையை அணிந்தது போல, அரசர்களின் உடம்பிலிருந்து வழிந்தோடிய ரத்த ஆறுகள் கடலில் சேர்ந்த காட்சி விளங்கியது!

பீமனுக்குத் தோற்றோடிய துரியோதனன் தனது பாசறையை அடைந்தான். தருமர் பீமனோடு தமது பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார். அன்றையப் போரில் இறந்த அரசர்கள் தெற்கிலுள்ள யமபுரத்துக்குச் சென்று சேர்ந்தார்கள். வந்த இரவும் நன்றாகக் குடிபுகுந்தது!

பாசறைக்கு வந்து சேர்ந்த பாண்டவர்கள் அரவான் இறந்ததை எண்ணி மிகவும் மனம் வருந்தினார்கள். அது கண்டு கண்ணபிரான் அவர்களைப் பார்த்து, "பாண்டுகுமாரர்களே! முன்பு ஒருநாள் போர்க்களத்தில் காளிக்குத் தன்னைப் பலியாக நிவேதனம் செய்து கொண்ட மாவீரன் அரவான். அவன் உண்மையாக இன்றுதான் இறந்தான். ஆகையால், நீங்கள் இதற்காகச் சிந்தித்து வருந்த வேண்டாம்!" என்று அவர்களுக்குத் தேறுதல் சொன்னான்.

பீமனிடம் தோற்று பாசறைக்குச் சென்ற துரியோதனன், சகுனியோடும் துச்சாதனனோடும் மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளைப் பற்றிக் கலந்து ஆலோசித்தான். பின்பு, அவன் துச்சாதனனிடம் கர்ணனை அழைத்து வரும்படிக் கட்டளையிட்டு அனுப்பினான். அதன்படி துச்சாதனன் கர்ணனை அவனிடம் அழைத்து வந்தான்.

கர்ணன் துரியோதனனிடம் அவனுடைய தம்பிமார்கள் இறந்தது பற்றி விசாரித்தான்.

அதற்குத் துரியோதனன், "கர்ணா! எனது தம்பிமார்களில் இருபது பேர்கள் பீமனை எதிர்த்துப் போரிட்டு, சிவபெருமானால் மன்மதன் அழிந்தது போல வெகு சுலபமாக இறந்து போனார்கள். அதைப் பற்றிச் சொல்வதற்கே முடியவில்லை. எனது சேனைத் தலைவராகிய பீஷ்மர், வில்லெடுத்துப் போர் செய்வதால் ஒரு பயனும் இல்லை. நான்கு வேதங்களிலும் வல்ல

குருசிரேஷ்டரான துரோணாசாரியார் வில்லெடுத்துப் போர் செய்தும் ஒரு பயனும் இல்லை! இனிமேல் நீ வில்லெடுத்துப் போர் செய்தால்தான், நாங்கள் எல்லோரும் பிழைப்போம். பகைவர்களும் வெற்றிமாலை சூடமாட்டார்கள்!'' என்றான்.

கர்ணன் அதுகேட்டு மிகவும் ஆத்திரமடைந்தான். தன் மனத்தில் கோபாக்கினி கொந்தளிக்க அவன் துரியோதனனைப் பார்த்துக் கடுமையாக, ''ராஜராஜனே! முன்பு சேனையை அணி வகுத்தபோது, உனது பிதாமகராகிய பீஷ்மர் என்னை அர்த்தரதச் சேனாதிபதியாக நியமித்த ஆணவத்தை நீ அறிவாய் இல்லையா? அந்தப் பீஷ்மரிடத்தில் தேரும், வில்லும், அம்புகளும் இருக்கின்றன. இனிமேல் நடக்கின்ற யுத்தத்தில் அவரே பாண்டவர்களை அழித்து, உன்னையே உலகத்தை ஆளும்படி சக்கரவர்த்தியாக்கி வைப்பார். பாண்டவர்களுக்குப் பயந்து பீஷ்மர் தோற்றால், நான் இரவு முடிந்து விடிவதற்கு முன்பே உன் பக்கத்தில் போர் செய்வதற்காக வந்து சேர்வேன். இந்த என் வார்த்தை பொய்யில்லை. இனிமேல் உனது சில கவலைகளும் நீங்கும்படி பாண்டவர்களையும், அவர்களுக்குத் துணையாக நிற்கும் கண்ணனையும் கொன்று வீர சொர்க்கத்தில் சேர்ப்பேன்!'' என்றான்.

துரியோதனன் கர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டபின் துச்சாதனனிடம், ''தம்பி, துச்சாதனா! கர்ணனுடைய இந்த வார்த்தைகளை நீ போய் பிதாமகருக்குச் சொல்!'' என்று கூறினான்.

அக்கணமே துச்சாதனன் விரைந்து சென்று பீஷ்மருக்குக் கர்ணனுடைய வார்த்தைகளைத் தெரிவித்தான்.

பீஷ்மர் அதுகேட்டு மெல்லப் புன்னகைத்தார். பின்பு துச்சாதனனை நோக்கி, ''இப்போது நான் உங்களுக்கு வீரவார்த்தைகளைச் சொல்வதால் ஒரு பயனும் இல்லை. அர்ச்சுனனை எப்போதும் யாராலும் கொல்ல முடியாது. முன்பு ராஜசபையிலே எல்லோர் முன்பாகவும் நீங்கள் திரௌபதியைத் துகிலுரிந்தபோது, பீமன் உங்கள் நூறு பேரையும் தலையறுத்துக் கொல்வேன் என்று சபதமிட்டான். அவனுடைய சபத வார்த்தைகளும் இனி அதிசீக்கிரத்திலே யுத்தத்தில் தவறாமல் நிறைவேறும்! இந்த

எட்டு நாளும் பொறுத்திருந்தீர்கள். இன்னும் ஒருநாள் மாத்திரம் நீங்கள் பொறுத்துக் கொண்டிருங்கள். பத்தாம் நாள் போரில் நான் இறப்பேன். அதன்பின் உங்களைக் காப்பவர்கள் காக்கட்டும். அவர்கள் பகைவரை அழிக்கட்டும். நீங்கள் குருதேசத்தையும் மற்ற தேசங்களையும் அடைந்து, பந்துமித்திரர்களோடு அரசாண்டு வெகுகாலம் க்ஷேமமாக வாழுங்கள்!'' என்று சொல்லி, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

துச்சாதனன் சென்ற பிறகு பீஷ்மர் உறங்கினார்.

9. ஒன்பதாம் நாள் போர்

முதல் நாள் போர்க்களத்தில் இறந்த அரவானுடைய கிரீடத்திலுள்ள மாணிக்கத்தின் ஒளியைத் தான் எடுத்துக் கொண்டு, சூரியன் அதிகப் பிரகாசத்துடன் கிழக்குத்திசையிலே வந்து உதித்தான்!

பீஷ்மர் விழித்தெழுந்து மன அமைதியோடு சந்தியா வந்தனம் முதலிய உதய கால கடமைகளைச் செய்து முடித்தார்.

பின்பு, பீஷ்மர் கௌரவசேனையோடு குருக்ஷேத்திரப் போர்க்களத்தை அடைந்தார். அவருடைய பெருஞ்சேனையால் பூமி நடுங்கியது. மலைகள் குலுங்கின. சேனையால் எழுந்த புழுதிப்படலம் திக்குகளையும் ஆகாயத்தையும் மூடியது.

போர்க்களத்தை வந்தடைந்ததும் பீஷ்மர் கௌரவப் படையை ஸர்வதோபத்ர வியூகமாக அணிவகுத்தார். அந்த வியூகத்தின் நடுவிலே துரியோதனன் நின்றான். சேனையின் எல்லாப் பக்கங்களிலும் ஒருகோடி அரசர்களைப் பகதத்தனோடு நிற்கச் செய்தார் பீஷ்மர். அலம்புசன் தனது அரக்கர் சேனையோடு வியூகத்தின் முன்னே நின்றான். ஸர்வதோபத்ர வியூகமாக தம் சேனையை அணிவகுத்து விட்டு பீஷ்மர் போருக்குத் தயாரானார்.

அப்போது பாண்டவர்கள், மன்னர்கள் புடைசூழப் போர்க்களத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்களுக்கு

முன்னே கிருஷ்ணபகவான் சென்றான். பிரதம சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் தனது சேனையோடு படைவகுப்பின் முன்சென்றான். அவனுக்கு முன் குதிரைப் படை குதித்துக் கொண்டு சென்றது.

அவ்வாறு சென்ற பாண்டவர் சேனையால் எழுந்த புழுதிப்படலம் எங்கும் பரவியது. அந்தச் சேனையில் யுத்த பேரிகைகள் பேரோசை எழுப்பின. சேனாவீரர்கள் தம் உள்ளத்திலே கோபாக்கினி பொங்கப் போர்க்களத்தைச் சேர்ந்தார்கள்.

போர்க்களத்துக்கு வந்து சேர்ந்த பாண்டவர் சேனையை கண்ணன் பத்ம வியூகமாக அணிவகுத்தான்.

ஒன்பதாம் நாள் போர் தொடங்கியது!

அப்போது அலம்புசன் தேவேந்திரன் முதலிய தேவர்கள் நடுங்கவும், மேலுலகமும் எட்டுத் திக்குகளும் அதிகமாக அதிர்ச்சியடைய்யவும் கர்ச்சனை செய்து கொண்டு பீமனை எதிர்த்துப் போர் புரிய வந்தான்.

வாளாயுதம் ஏந்தித் தன்னோடு போர் செய்ய அலம்புசன் வந்ததைக் கண்டதும், பீமன் தனது தேரைவிட்டு இறங்கி அவனை நோக்கி இடி போல வேகமாக ஓடினான்.

அவர்கள் இருவரும் இரண்டு யாளிகள் போல, ஒருவரையொருவர் மிகக் கடுமையாக எதிர்த்து வாள்யுத்தம் செய்தார்கள். அந்த யுத்தத்திலே அலம்புசனின் வாளை தனது வாளால் பீமன் துண்டாக்கி எறிந்தான். மேலும், பீமன் அலம்புசனுடைய ஒரு தோளை தனது வாளால் வெட்டித் தள்ளினான். அலம்புசனுடைய அந்தத் தோள் தரையிலே சென்று விழுந்தது!

பீமனால் தனது ஒரு தோள் துண்டிக்கப்பட்டதைக் கண்டான் அலம்புசன். ஆனால், அவன் அதனால் கொஞ்சமும் அஞ்சவில்லை. அதற்கு மாறாகக் கொடிய பாம்பு போல் சீற்றம் கொண்டான். அந்தச் சீற்றத்தோடு மற்றொரு தோளால் தொடையைத் தட்டி, ''இனி மற்போர் செய்வோம் வா!'' என்று பீமனை அழைத்தான் அலம்புசன்.

அத்துடன் அலம்புசன் நிற்கவில்லை. தானே பீமனை நோக்கி நெருங்கினான்.

மல்யுத்தம் அவர்களுக்குள் தொடங்கியது!

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கையால் குத்திக் கொண்டார்கள். ஒருவரையொருவர் தூக்கிச் சுற்றினார்கள். மலைபோன்ற தோளால் ஒருவரையொருவர் மோதினார்கள். புலிகள் போல ஓடி வந்து மார்போடு மார்பு தாக்கப் பாய்ந்தார்கள். கோபத்தோடு அடித்துக் கொண்டார்கள். ஆட்டுக்கிடாக்கள் போலத் தலையால் தலையை மோதித் தாக்கினார்கள்.

பீமனுடைய கடுமையான தாக்குதலால் அலம்புசன் வலிமை இழந்தான். உடனே அவன், ''பீமா! இனி, நாம் விற்போர் புரியலாம்!'' என்று சொல்லி, வில்லை எடுத்துக் கொண்டான்.

அதே வினாடியில் பீமனும் கோபித்து வில்லை எடுத்துக் கொண்டான்.

அலம்புசன் பற்களால் வில்லில் அம்புகளைத் தொடுத்து பீமன்மேல் பிரயோகித்தான். பீமன் அலம்புசன் மேல் அம்புகளைத் தொடுத்துவிட்டான்.

இரண்டு பேரும் பிரயோகித்த அம்புகள் ஒன்றையொன்று தாக்கி அழிந்து தரையிலே பொடிப் பொடியாகி விழுந்தன. அதுகண்டு தேவேந்திரனும் தேவர்களும் மதிமயக்கம் அடைந்தார்கள். அவர்கள் தங்களுக்குள், ''இந்த இருவருக்கும் வேறு உவமையில்லை. இரண்டு சேனைகளுக்கும் போர்க்கடலைக் கடக்கத் தெப்பமாகவுள்ளவர்களும் இவர்களே!'' என்று கூறி, அவர்களைக் கொண்டாடினார்கள்.

பகாசுரனைக் கொன்ற பீமன், மேருவாகிய வில்லும் வாசுவாகிய நாணியும் போன்ற அலம்புசனுடைய வில்லையும் நாணியையும் தனது ஓரம்பினால் அழித்தான். இரண்டு மந்தர மலைகள் ஒன்றோடொன்று போர் செய்வது போல பீமனோடு போர்புரிந்த அலம்புசன், அது கண்டு திகைத்தான். உடனே அவன் பீமனோடு வில்யுத்தம் செய்வதால், தான் ஜெயிக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டான். அதனால் அவன் ஒரு மலையைத் தனது ஒற்றைக் கையால் தூக்கி பீமனுடைய தோள்மீது வீசி எறிந்தான்.

பீமனுக்குத் துணையாகப் போருக்கு வந்த அபிமந்யு அதனைக் கண்டான். அந்தக்கணமே அவன் அலம்புசன் வீசிய மலையை தனது அம்புகளால் பொடிப்பொடியாக்கினான்.

அபிமந்யுவின் வீரத்தைக் கண்டு பீமன் மகிழ்ந்தான். அதேசமயத்தில் அவன், 'இனி, இந்த அரக்கனைக் கொன்றுவிட வேண்டும்!' என்று எண்ணினான். அவ்வளவு தான். ஒரு கொடிய வேலாயுதத்தை பீமன், அலம்புசன் மார்பின் மேல் பயங்கரமாக வீசினான்.

பீமன் வீசிய வேலாயுதம் அலம்புசனுடைய மார்பைத் துளைத்துக் கொண்டு அப்பால் சென்றது. அந்த வினாடியில் அலம்புசன் இறந்து கீழே விழுந்தான்!

மேலும், பீமன் தனது அம்புகளால் அலம்புசனுக்குத் துணைவந்த அரக்கர்களையெல்லாம் அழித்தான். அதனால் அவர்கள் சிறகு அறுபட்ட பறவைகளைப் போல இறந்து தரையிலே விழுந்தார்கள்.

பீமன் அத்துடன் நிற்கவில்லை. அப்போது தன்னை எதிர்த்த ஆறுலட்சம் அரக்கர்களையும், பல்வேறு பாஷை பேசுகின்ற ஒருகோடி வடதேசத்து அரசர்களையும் தனது கொடிய கதாயுதத்தால் தாக்கிக் கொன்றான். அவனுடைய கதாயுதத்தால் தாக்கப்பட்டுத் தலையறுந்து வெளியே சிதறிய மூளைகள் போர்க்களத்தைச் சேறாக்கின.

வானத்தில் போர் காண வந்திருந்த தேவர்கள் பீமனுடைய வீரச்செயல்களைக் கண்டு சந்தோஷித்தார்கள். அவர்கள் தங்களுக்குள், "நேற்று அரவானை அலம்புசன் கொன்றான். அதனால் வெகுண்ட பீமன் இன்று அந்த அலம்புசனைக் கூரிய வேலாயுதத்தால் கொன்று பழிதீர்த்துக் கொண்டான்!" என்று புகழ்ந்து, பீமனுடைய பழிக்குப் பழிவாங்கும் வீரத்தைக் கொண்டாடினார்கள்.

அப்போது அர்ச்சுனனுடைய அம்புகளால் காசிதேசத்து அரசர்களும், சேதிதேசத்து அரசர்களும், மாளவதேசத்து அரசர்களும், கலிங்கதேசத்து அரசர்களும் ஆகிய எழுபதினாயிரம் அரசர்கள் போரில் இறந்தார்கள்.

பீமனுடைய கதாயுதத்தால் ஒரு பக்கத்தில் தமது சேனாவீரர்கள் புயற்காற்றில் உதிர்ந்த சருகுபோல்

ஆவதையும், அர்ச்சுனனுடைய அம்புகளால் மறுபக்கத்தில் தமது பெருஞ்சேனை அழிவதையும் பார்த்ததும் பீஷ்மர் கொடிய கோபம் கொண்டார். அதனால் அவர் கண்கள் சிவந்தன. முகம் கறுத்தது. அவர் மனம் கொதிக்க பாண்டவர் சேனைமேல் போருக்குச் சென்றார்.

தம்மோடு போர் செய்ய பீஷ்மர் துரியோதனாதியர்களோடும் மற்ற அரசர்களோடும் வருவதைக் கண்டு, பாஞ்சால தேசத்து ராஜாக்களாகிய திருஷ்டத்யும்நன் முதலியவர்கள் சிகண்டியோடு அவர் எதிரே யுத்தத்துக்கு வந்தார்கள்.

பாஞ்சாலதேசத்தாருடன் போருக்கு வந்த பீஷ்மர், வில்லை வளைத்து அவர்கள்மேல் அம்பு தொடுத்தார். அவருடைய பாணங்களால் பகைவர்களில் சிலர் அழிவது தெரியாமல் தேர்களும் தாங்களுமாக அழிந்தார்கள். சிலர் யானைகளும் தாங்களுமாக அழிந்தார்கள். சிலர் குதிரைகளும் தாங்களுமாக அழிந்தார்கள். பீஷ்மருடைய கணையால் பங்கப்படாத பாஞ்சால தேசத்தவர்கள் யாருமே இல்லை.

பீஷ்மர் அப்படி யுத்தம் செய்து கொண்டிருக்கும் போது, பலபராக்கிரமத்தால் முருகக் கடவுளும் தனக்கு ஒப்பாகாத சிகண்டி அவரை நோக்கி, ''நீ சுவர்க்கத்துக்குப் போகும்படி உனது உடம்பு இறந்து தரையிலே விழுமாறு, உன்னைப் போர் செய்து அழிப்பதற்காக இதோ நான் வந்து நின்றேன்!'' என்று அதிகமான வீரவாதங்களைச் சொன்னான். அப்படிச் சொல்லிக் கொண்டே அம்புகளை பீஷ்மர்மேல் அவன் பிரயோகித்தான்.

சிகண்டி பிரயோகித்த அம்புகளுக்கு மன்மதன் பாணத்துக்கும் அஞ்சாத பீஷ்மர் குறியானார்!

தம்மேல் சிகண்டியின் அம்புகள் பாய்ந்ததைக் கண்டு பீஷ்மர் கொஞ்சமும் கோபிக்கவில்லை. அவனுக்கு எதிராக தமது வில்லை வளைக்கவுமில்லை. அதற்குப் பதிலாக பீஷ்மர் சிகண்டியின் போரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு நின்றார்.

துச்சாதனன் பீஷ்மருடைய செய்கையைக் கண்டான். அவனுக்கு சிகண்டியின்மேல் அளவற்ற ஆத்திரம் ஏற்பட்டது. உடனே அவன் சிகண்டியோடு யுத்தம்

பண்ணினான். காண்பவர் பலரும் அதிசயிக்கும்படி நெருப்பைக் கக்கும் தனது அம்புகளால் துச்சாதனன் சிகண்டியின் தேரையும், கொடியையும், வில்லையும் அழித்தான்.

அதுகண்டு அர்ச்சுனன், 'தங்கள் குலத்தில் மூத்தவராகிய பீஷ்மர் தமது அம்புகளுக்கு ஆண்மையில்லாத சிகண்டி ஏற்றவன் இல்லை என்றெண்ணி, தமது வில்லைக் கீழே போட்டுவிட்டார். பின்பு, சிகண்டியும் துச்சாதனனுக்குத் தோற்று சூரியனால் உதய காலத்து இருள் அழிவது போல தனது வலிமையை இழந்துவிட்டான்!' என்பதைப் புரிந்து கொண்டான். உடனே தனது தேரை எதிரிகளின் சேனையின் நடுவே செலுத்தினான். அர்ச்சுனன் அஞ்சாது பகைவர்கள் மத்தியிலே யுத்தத்துக்குப் போனதும், அவர்கள் அஞ்சிப் பின்வாங்கி ஓடினார்கள்.

அந்தச் சமயத்தில் அர்ச்சுனனுடைய அம்புகளால் இறந்த பகைவர்களைக் கணக்கிட்டுச் சொல்ல, நமக்கு பிரமதேவன் அநேக கோடி நாக்குகளைக் கொடுக்க வில்லையே! ஒரு நாக்குடைய நாம் அவர்களை எண்ணிச் சொல்வதற்கு முடியாதவரானோம்! அர்ச்சுனனுடைய அம்புகளால் அதிகமாக வெட்டுப்பட்டு இறந்த குதிரைகள், யானைகள் ஆகியவற்றின் உடம்பிலிருந்து பெருகிய ரத்த வெள்ளம் கடலில் சென்று கலந்தது. அதனால் கருங்கடல் படபாமுகாக்கினி போலச் செந்நிறம் அடைந்தது!

பீஷ்மர் அர்ச்சுனனால் தமது மாபெரும் சேனை பலவாறும் அழிந்ததைக் கண்டார். அந்தக் கணத்தில் திரும்பவும் அவர் தமது வில்லை எடுத்து வளைத்து பகைவர்கள் மேல் பாணப் பிரயோகம் செய்தார். அப்போது லக்ஷ்மணனுக்கு ஒப்பான சதாநீகன் ரதாதிபதிகளான அரசர்களின் துணையோடு பீஷ்மருக்கு எதிரே போருக்கு வந்தான்.

தம்மை எதிர்த்து சதாநீகன் போருக்கு வந்ததைக் கண்டதும் கோபமும் உற்சாகமும் கொண்டு பீஷ்மர், எட்டுத் திக்குகளில் உள்ளவர்களும் பூலோகத்தவர்களும் பார்த்து பிரமிக்கும்படி உக்கிரமாகப் போர் செய்தார். அந்தப் போரில் பீஷ்மர் சதாநீகனை தலைவேறு உடம்புவேறாக ஒரு பாணத்தால் துண்டித்துக் கொன்றார். அதுகண்டு பகைவர்கள் பயந்து பின்வாங்கி ஓடினார்கள்.

அப்போது தலை துண்டிக்கப்பட்டு விழுகையில் கழன்று சிதறி விழுந்த சதாநீகனுடைய கிரீடம் போல, சூரியன் மேற்குக் கடலிலே போய் விழுந்தான்!

பீஷ்மருடைய வீரத்தைக் கண்டு இரண்டு பக்கத்து வீரர்களும், "முதல் நாள் போரில் பீஷ்மர் சுவேதனைக் கொன்று தீர்த்தார். இன்றையப் போரில் சதாநீகனுடைய உயிரை ஒரே பாணத்தால் அழித்தார். ஆகையால், மத்ஸ்ய தேசத்து ராஜாக்களின் குலத்துக்கு இந்தப் பீஷ்மரே யமன்!'' என்று சொன்னார்கள்.

திருஷ்டத்யும்நன் பாண்டவ சைன்யத்தோடும் பாண்டவர்களோடும் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தான். பீஷ்மரும் அச்சமயத்தில் துரியோதனனோடும் அரசர்களோடும் தமது பாசறைக்குப் போனார்.

முந்தினநாள் அஸ்தமித்த சூரியன் இரவு கழிந்ததும் கீழ்திசையில் வந்து உதித்தான்!

10. பத்தாம் நாள் போர்

சூரியன் உதித்ததும் தருமர் உறக்கம் கலைந்து எழுந்தார். உதயகாலத்துக் கடமைகளான சந்தியாவந்தனம் முதலியவற்றைக் குறைவின்றிச் செய்தார். பின்பு, அன்றையப் போருக்கான காரியங்களைச் செய்வது பற்றி கண்ணபிரானிடம் சென்று கலந்து பேசினார்.

அதன்பின் தருமர் அரசர்களும் தம்பிமார்களும் தம்மைச் சூழ, தமது சேனையோடு போர்க்களத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பாண்டவர் சேனையில் அப்போது அநேக வாத்தியங்கள் முழங்கின. அப்பேரோசை தேவர்களுடைய காதுகளை அடைத்தது. சேனையால் எழுந்த புழுதிப்படலம் தேவர்களுடைய கண்களை மறைத்தது. உடம்பு பதற போருக்கு வெறியோடு அச்சேனையிலுள்ள வீரர்கள் சென்றார்கள்.

போருக்குத் தயாராக குருக்ஷேத்திரப் போர்க்களத்துக்குப் பாண்டவர் சேனை வந்து சேர்ந்தது!

முந்தினநாள் போலவே பாண்டவர் சேனை இன்றும் பத்மவியூகமாக அணிவகுத்து நின்றது.

பீஷ்மர் விழித்தெழுந்து சூரியநமஸ்காரத்தை முடித்தார். பின்பு, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்து இருந்தபோது, துரியோதனனும் மற்ற அரசர்களும் அவருடைய பாசறையின் வாயிலுக்கு இருபக்கத்திலும் பணிவோடு வந்து நின்றார்கள்.

அதுகண்டு பீஷ்மர் போருக்குத் தயாரானார். வீரக்கழலும், முத்தாரங்களும், தோள்வளைகளும், பொற்கிரீடமும் அணிந்து கொண்டு பீஷ்மர், 'இன்றைக்கு நாம் உக்கிரமாகப் போர் செய்து பகையை முடித்து விடுவோம்!' என்று எண்ணிக் கொண்டே, பனைக்கொடி பறக்கும் தமது தேரில் ஏறினார்.

பீஷ்மர் வாகைப் பூமாலை சூடிய வாளாயுதமும், வில்லும், அம்பறாத்தூணியும், வேலாயுதமும், மற்றும் பல ஆயுதங்களும் எடுத்துக் கொண்டு, அரசர்களோடு பேரிகைகள் முழங்க போர்க்களத்தை வந்தடைந்தார்.

முந்தினநாள் போலவே பீஷ்மரும் தமது சேனையை ஸர்வதோபத்ரவியூகமாக அணிவகுத்துவிட்டு, சேனைக்கு முன்னே போருக்கு ஆயத்தமாக நின்றார்.

அப்போது கண்ணபிரான் பீஷ்மருடைய நிலையைக் கண்டு அர்ச்சுனனிடம், "விஜயா! ஆகாயத்திலிருந்து இறங்கிய கங்கா நதியின் குமாரனாகிய பீஷ்மருக்கு, இன்றையத் தினத்தில் மேலுலகத்துக்குச் செல்லும் விமானத்தைக் கொடு!" என்றான்.

உடனே அதுகேட்டு அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து, "கோபாலா! எனது காண்டீப வில்லும், அநுமக் கொடியும், வெள்ளைக்குதிரைகளும், சிறந்த தேரும் பெருமைக்குரிய அக்கினிதேவனால் எனக்குக் கொடுத்தருளப்பட்டவை. எனக்குத் தேர்ப்பாகனாக என்னைப் பாதுகாத்தருள்வதற்கு நீயும் திருவுள்ளத்தோடு எழுந்தருளியுள்ளாய். ஆகையால், பூலோகத்து அரசர்கள் மட்டுமில்லை; தேவர்களும் அசுரர்களும் ஒன்றாகக் கூடி வந்து என்னை எதிர்த்தாலும் சரி. அவர்களில் ஒருவர் கூட தப்பிப் போகாதபடி எல்லோரையும் கொன்று முடிப்பேன்! பழமையான வேதங்களுக்கெல்லாம்

முடிவாகிய உபநிஷத்துகளில் பொருந்திய அர்த்தத்தை, எனது மனம் ஏற்கும்படி முற்றும் உபதேசித்து எனது கருமத்தை ஒழித்தச் செம்மலே! என் தந்தையானாலும் சரி. எனது சகோதரர்களானாலும் சரி. எனது பிள்ளைகளானாலும் சரி. எனது பாட்டனானாலும் சரி. வந்து எதிர்ப்பவர்கள் எல்லோரையும் நீ அழிக்கச் சொன்னால், நான் அழித்து விடுவேன்!'' என்று சொன்னான்.

கண்ணனிடம் அர்ச்சுனன் அப்படிச் சொன்ன சமயத்தில், அவனுக்குத் துணை வந்த அரசர்கள் எல்லோரும் பீஷ்மர் முன் சென்று போரிட்டார்கள். அவர்கள் பயங்கரமான அம்புகளைப் பீஷ்மர்மேல் வர்ஷித்தார்கள்.

பாண்டவர் சைன்யத்து அரசர்கள் தொடுத்த அம்புகள், தம்மேல் வலிமையோடு தைத்ததனால் பீஷ்மர் வருந்தினார். அந்தத் துன்பத்தால் அவருடைய நாக்கு உலர்ந்தது. மேலும், அவர் பனியால் நிறம்கெட்ட தாமரைமலர் போல உடம்பு மெலிந்து மனம் பதைத்தார்.

அச்சமயத்தில் அநேக துர்ச்சகுனங்கள் தொடர்ச்சியாக உண்டாயின. அவற்றைக் கண்டு பீஷ்மர் அவைகள் நல்ல சகுனங்கள் என்றெண்ணி மனம் தெளிந்தார். அத்தெளிவோடு உடனே அவர் தம்மேல் அரசர்கள் பிரயோகித்த பாணங்களையெல்லாம் தமது எதிர் அம்புகளால் விலக்கினார்.

பீஷ்மர் அத்துடன் நிற்கவில்லை. தருமருடைய சேனையிலிருந்த துருபததேசத்து அரசர்களும், மகததேசத்து அரசர்களும், குலிங்கதேசத்து அரசர்களும், சோனகதேசத்து அரசர்களும், கர்னாடகதேசத்து அரசர்களும், சிங்கள தேசத்து அரசர்களும், கடாரதேசத்து அரசர்களும், கோசலதேசத்து அரசர்களும் பின்வாங்கும்படி ஒருத்தரைப் போலவே எல்லோர் மேலும் அம்புகள் சென்று ஊடுருவுமாறு வில்லை வளைத்து பாணப்பிரயோகம் செய்து கோபித்தார் பீஷ்மர்.

பீஷ்மர் முன்னே சென்று போரிட்ட பாண்டவ சேனாவீரர்கள் அவருடைய அம்புகளால் தலைதுண்டிக்கப் பட்டு இறந்தார்கள். கால்கள் துண்டிக்கப்பட்டு இறந்தார்கள். அவருக்கு எதிரில் வில்லை வளைத்தவர்களுடைய துவஜங்களும், வில்லும், அம்பைத் தொடுத்த கையும்

அவருடைய அம்புகளால் துண்டிக்கப்பட்டு, அவர்கள் இரத்த ஆற்றிலே தளர்ந்து விழுந்தார்கள்.

தொடர்ந்து பீஷ்மர் செய்த கொடிய யுத்தத்தால் பாண்டவ சேனாவீரர்கள் காற்றால் வீசியெறியப்பட்ட புழுதி போல வந்த வழியே திரும்பி ஓடினார்கள். உக்கிரமாக இடித்த இடியால் வருந்திய பாம்புகள் போல அஞ்சி ஒடுங்கினார்கள். ஒருவர் பின் ஒருவராக, 'இது என்ன அபாயம்!' என்றெண்ணி பயந்து ஓடினார்கள். வயோதிகராகிய பீஷ்மர் அப்போது செய்த பயங்கரமான வில்யுத்தத்துக்கு எதிரான வில்யுத்தம் வில்லாளியாகிய அர்ச்சுனனுக்கும் கைகூடாது என்பது சத்தியம்!

பாண்டவர் படையை பீஷ்மர் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் அந்தச் சமயத்தில் சோழ மன்னனும், கிருபாசாரியரும், துரோணாசாரியாரும், அசுவத்தாமனும், ஜயத்ரதனும், துரியோதனனுடைய தம்பிமார்களும், சகுனியும், சிந்து தேசத்து ராஜாக்களும், பகதத்தனும், சல்லியனும் மழை பொழியும் மேகத்துக்கு உதவியாக ஓடி வரும் காற்று போல, அவருக்கு உதவியாக வந்து சேர்ந்தார்கள்.

பீஷ்மருக்குத் துணையாக சதுரங்க சேனையோடு வந்து சேர்ந்த அவர்கள் எல்லோரும் அர்ச்சுனன் எதிரே நின்று வில்லை வளைத்து, அவன்மேல் பாணங்களைத் தொடுத்து போர் புரிந்தார்கள். அர்ச்சுனன் அக்கணமே காண்டீபத்தை வளைத்து நூறு நூறு அம்புகளாக அவர்கள் ஒவ்வொருவர் மேலும் தனித் தனியாகப் பிரயோகித்து, அவர்கள் தொடுத்த அம்புகளையெல்லாம் தடுத்து அழித்தான்.

சூரியனால் மூடுபனி இருந்த இடம் தெரியாமல் அழிவது போல, அர்ச்சுனன் தனது அம்புகளால் அப்பகையரசர்களை இருக்கும் இடம் தெரியாமல் துரத்தினான். அப்படி அவன் ஒரு பக்கத்தில் யுத்தம் பண்ணிக் கொண்டிருக்க, பீமன் தனது கதாயுதத்தை எடுத்துக் கொண்டு தனியாகவே தேரிலிருந்து இறங்கி பகைவர்கள் நடுவே அக்கினி போலவும் காற்று போலவும் யுத்தம் பண்ணிக் கொண்டே வேகமாக வந்தான்.

அப்போது குதிரை மேல் ஏறி தன்னை எதிர்த்து வந்த அரசர்களை பீமன் குதிரையோடு தூக்கி எறிந்தான். தேரில் ஏறி

எதிர்த்து வந்தவர்களைத் தேரோடு தூக்கி எறிந்தான். யானையின் மேல் வந்த பகைவர்களை யானையோடு தூக்கி எறிந்தான்.

சத்துருக்காதினி கதாயுதம் ஏந்திய பீமனுக்குப் பகைவர்கள் மிகவும் வருந்தி புறமுதுகிட்டு ஓடினார்கள். அதுகண்டு துரியோதனன் மிகவும் கோபமடைந்தான். உடனே பீமனையும் அர்ச்சுனனையும் எதிர்த்துப் போரிடும்படி தனது சேனைக்குக் கட்டளையிட்டான்.

துரியோதனனுடைய கட்டளைக்குப் பணிந்து ஐந்து லக்ஷம் பேர்கள் கொண்ட சேனை, அர்ச்சுனனையும் பீமனையும் விரைந்து வந்து எதிர்த்துப் போரிட்டது. அர்ச்சுனன் போல் வில்லாளிகளான அவர்கள் ஏழு மேகங்களும் கல்பாந்த காலத்தில் ஒன்று கூடி வந்து மழை பொழிவது போல, அவன் மேல் அம்புமழைப் பொழிந்தார்கள்.

அவ்வளவுதான். கண்ணபிரான் சாரத்தியம் செய்ய அர்ச்சுனன் காண்டீபத்தோடு அந்தப் பகைவர்கள் முன் சென்றான். பகைவர்கள் தனித்தனியே தங்கள் விற்களில் பிரயோகித்த அம்புகளையெல்லாம், அவர்கள் தொடுத்த முறைப்படியே எதிரம்பு தொடுத்து விலக்கினான். மேலும், அவர்கள் மேல் அம்புகளைப் பிரயோகித்து அவர்களுடைய விற்களை அழித்தான். வில்லை ஏந்தும் கைகளை அழித்தான். அவர்களையே முடிவில் கொன்றான்.

பீமனும் அர்ச்சுனனும் உக்கிரமாகக் கோபித்துச் செய்த யுத்தத்தால், பீஷ்மருக்குத் துணையாக பாண்டவர்களை வெல்வோம் என்று கூறி எதிர்த்து வந்த துரியோதனனுடைய ஐந்து தம்பிமார்களும், துச்சாதனனும், மற்றவர்களும் அஞ்சித் தங்கள் தேர்களின் மேல் ஏறி ஓடிப் போனார்கள்.

அப்போது பீஷ்மர், வானத்தில் போர்க் காண வந்திருந்த ஏழு வசுக்களும் தமது போர்த் திறமையைக் கண்டு வியக்கும்படி, கண்களில் தீப்பொறி பறக்க கோபத்தோடு எதிரிகளை நோக்கினார். இனிமேல் நமக்கும் போர் முடிப்பதற்கான காலம் இதுவே என்று நினைத்து, அவர் வில்லை வளைத்து தருமருடைய துணைவர்களான தேர் வீரர்களின் மேல் ஒருவரையும் விடாமல் கணப்பொழுதில் அம்புகளைச் செலுத்தி எதிர்த்தார்.

பீஷ்மர் அப்படிப் பிரயோகித்த அம்புகளால் போர்க்களத்திலே துணிபட்டு விழுந்த கிரீடத்தையுடைய தலைகள்தான் எத்தனை! மலை போன்ற தோள்கள்தான் எத்தனை! தாமரை மலர் போன்ற கைகள்தான் எத்தனை! இன்னும் பருத்த உடம்புகள்தான் எத்தனை! உடம்பிலுள்ள கொழுப்புகள்தான் எத்தனை! கொடி போலச் சுற்றிய குடல்கள்தான் எத்தனை! கொழுத்துள்ள தசைத் திரள்கள்தான் எத்தனை! நரம்புகளின் வகைகள்தான் எத்தனை! எலும்புகளின் வரிசைகள்தான் எத்தனை! இன்னும் அழகிய துடைகள்தான் எத்தனை! தாமரைமலர் போன்ற கால்கள்தான் எத்தனை!

மற்றும் பீஷ்மருடைய அம்புகளால் பல வீரர்களுடைய மார்புகளும் பிளந்தன; மனங்களும் கோபங் கொண்டன; புதிய ரத்தப் பெருக்குகள் கீழே பாய்ந்தன; எலும்புகள் நொறுங்கின; கொழுத்த சதைகள் அழிந்தன; நரம்புகளின் கட்டுகளும் நெக்குவிட்டன; பெரிய குடல்கள் சரிந்தன; தலைகள் அறுபட்டன; நீண்ட புருவங்களும் நுனி நெறித்தன; முகங்களும் தீய்ந்து போயின; தலைகளும் உடம்பிலிருந்து வெட்டுண்டு மேலெழுந்தன; இவ்வாறு போரில் பீஷ்மருடைய அம்புகளால் பயங்கரமான கண்களையுடைய கணக்கற்ற வீரர்கள் இறந்தார்கள்!

மேலும் சோமககுலத்தவர்களிலும், மத்ஸ்ய தேசத்தவர்களிலும், பாண்டிய நாட்டவர்களிலும், துளுவ தேசத்தவர்களிலும், துருபத தேசத்தவர்களிலும், சோழ நாட்டவர்களிலும், குலிங்க தேசத்தவர்களிலும், சேர நாட்டவர்களிலும், சிஞ்சி நாட்டவர்களிலும் உள்ள பெரிய மகுடவர்த்தனர்களும், மண்டலீகர்களும், பட்டவர்த்தனர் களுமாகிய வீரர்களில் ஒருவருமே பீஷ்மருடைய அம்புக்குத் தப்பவில்லை!

கங்காபுத்திரனாகிய பீஷ்மர் செய்த சிறப்பான போரைக் கண்டு கண்ணபிரான் அவருக்காக மனமிரங்கினான். பின்னர், பிரளய காலத்தில் உலகங்களை உண்ட சிவந்த பவழம் போன்ற தனது திருவாய் மலரைத் திறந்து, அவன், "இச்சிகண்டியை எதிரே நிறுத்தி நாம் போரைத் தொடங்குவதற்கு இதுவே சமயம்!" என்றான்.

அடுத்தகணம் கண்ணபிரான் தேரை வேகமாகச் செலுத்திச் சென்று பீஷ்மர் முன் நிறுத்தினான். அர்ச்சுனனும்

அழகிய கொடிய அம்புகளை முறையே ஆராய்ந்து எடுத்து போர் செய்ய வில்லை வளைத்தான்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் அப்போது பாஞ்சசன்னியம் என்னும் சங்கை எடுத்து வாயில் வைத்து ஊதினான். கடல்கள் பொங்கி வந்தது போல் சங்கின் பேரொலி எழுந்தது. மேகங்களின் இடிமுழக்கம் போல் அவ்வொலி கேட்டது. கல்பாந்த காலம் மாறியது போல் அச்சங்கநாதம் ஒலித்தது. அந்தச் சங்கொலியால் எல்லாத் திசையில் உள்ளவர்களும் செவிடானார்கள். எல்லாவுலகங்களும் தடுமாறின. அண்டகோளத்தின் மேல்முகடும் அதிர்ச்சியால் வெடித்தது.

அந்தச் சமயத்தில் வாத்தியங்கள் முழங்கவும், அரசர்களும் சேனைகளும் தொடரவும் அர்ச்சுனன் சிகண்டியை தனது சேனைக்குத் தலைவனாக முன்னே நிறுத்தி பீஷ்மர் எதிரே சென்றான்.

பீஷ்மர் எதிரே போர்க்களத்தை நோக்கினார். தம்மை எதிர்த்துப் போரிட வந்த அர்ச்சுனனின் படைக்கு சிகண்டி தலைமை தாங்கி நிற்பதைக் கண்டார். மகாவீரனாகிய பீஷ்மர் சிகண்டியின் முகத்தைப் பார்த்ததுமே, இயற்கையிலேயே ஆண்மையில்லாத அவனோடு போர் செய்ய வெட்கப்பட்டுத் தலை குனிந்தார். பிறகு, 'முன்பு அம்பையால் உண்டான பகை இப்போது பலிக்க வந்தது!' என்றெண்ணிச் சிரித்தார். அச்சிரிப்போடு அவர் தமது ஆயுதங்களை யெல்லாம் கீழே போட்டுவிட்டுத் தன்னந்தனியாக நிராயுதபாணியாய் தம்முடைய தேரில் நின்றார்!

அதுகண்டு அருகேயிருந்த துச்சாதனன், பீஷ்மருக்காகப் பரிவு கொண்டு சிகண்டியின் மேல் போருக்குச் சென்றான். சிகண்டியின் வில் அறுபட்டுவிழ அநேக பாணங்களைப் பிரயோகித்தான்.

துச்சாதனன் செய்த கொடிய போரால் சிகண்டியின் வில் துணிபட்டுப் போயிற்று. தேர் அழிந்தது. அதனால் சிகண்டி இறப்பதற்குப் பயந்து வந்த வழியே திரும்பி ஓடினான்.

பிறகு, பீஷ்மர் வில்லேந்தி கொடிய கணைகளை பாண்டவசேனை மேல் செலுத்தினார். அவருடைய கணைகளால் பாண்டவசேனை சின்னாபின்னப்பட்டது.

அர்ச்சுனன் மேல் பீஷ்மருடைய அம்புகள் பாய்ந்து அவன் மேனியில் குருதிப்பெருக்கை ஏற்படுத்தின. கண்ணனையும் அவை தாக்கி, நீலநிற மேனியனாகிய அவனைச் செந்நிறத்தவனாக ஆக்கின!

அப்போது அர்ச்சுனன் சிகண்டியைத் திரும்பவும் போர்க்களத்துக்கு அழைத்து வந்தான். அவனை நோக்கி அர்ச்சுனன், "சிகண்டி! நீ பயப்படாதே. பயங்கரமாகப் போர் செய்வதற்குத் தேரின்மேல் தைரியத்தோடு எதிர்த்து நில். பிதாமகரை நோக்கி உனது அம்புகளையும் தொடுத்து விடு!" என்று சொல்லி, தனது படைக்கு முன்னே நிறுத்தினான்.

அதேசமயம் அர்ச்சுனன் தானும் பீஷ்மரை எதிர்த்துப் போய் காண்டீபத்தை வளைத்து, சிகண்டிவிடும் அம்புகளோடு தனது பல அம்புகளும் ஒன்றாகச் சேர தொடுத்து விட்டான். முன்பு ஒரு பொழுதும் மன்மதனுடைய



பாணங்கள் தைக்கப் பெறாத பீஷ்மருடைய உடம்பு முழுவதும், தனது அம்புகள் கொடுமையாகத் தைத்து அழுந்தும்படி அர்ச்சுனன் அவர் மேல் மிகுந்த கோபத்தோடு பாணங்களை ஏவினான்.

தமது மேனியைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துக் கொண்டு வலிமையோடு அப்பால் செல்லும் அம்புகளை பீஷ்மர் கைகளால் பிடித்தார். அந்த அம்புகளில் பொறிக்கப் பட்டிருந்த அர்ச்சுனனுடைய பெயரைப் பார்த்தார். உடனே அவர், 'நாம் முன்பு சொன்ன பத்தாம்நாள் போரையறிந்து, நம்மை எதிர்த்துப் போர் செய்பவனும் நமது வம்ச புத்திரனாகிய அர்ச்சுனனே! இவன் கையால் நாம் அழிவது நல்லதே. ஆனால், படைக்குத் தலைவனாக ஒப்புக்குச் சிகண்டி எதிரே நிற்கின்றான். அவன் தொடுக்கின்ற ஓர் அம்புகூட இங்கு வந்து நம்மைச் சேராது. இப்படி எனது உடம்பில் துளைத்துச் செல்லும்படி அம்புகளைப் பிரயோகிப்பது அர்ச்சுனனுக்கு மட்டுமே முடியும். அதுவே அர்ச்சுனன் எனக்குச் செய்யும் பெரும் சிறப்பாகும்!' என்று அறிந்து மகிழ்ந்தார்.

அப்போது பீஷ்மர் தமக்குத் துணையாக நின்றிருந்த துரியோதனனுடைய தம்பிமார்களைப் பார்த்து, "வீரர்களே! பகைவர்களின் கொடிய அம்புகளால் நாமும் வருந்தினோம். பகைவர்கள் நமக்கு அபாயத்தை விளைவிக்கின்ற தினமும் இன்றுதான். இனிமேல் நீங்கள் எல்லோரும் வேகமாகத் திரும்பிச் செல்லுங்கள். உங்கள் தமையனாகிய துரியோதனனுடைய இருப்பிடத்தைச் சேருங்கள். அவனிடம் இனி செய்ய வேண்டிய போரைத் தெரிந்து கொண்டு, அதன்பின் போர் புரியுங்கள். அதுவே இப்போதைக்குச் செய்ய தகுந்த காரியம். அதைவிட்டு நீங்கள் என்ன முயற்சி செய்தாலும், அர்ச்சுனனுடைய கொடிய அம்புப் பிரயோகத்திலிருந்து என்னைக் காப்பாற்ற தக்கவழி ஒன்றும் இல்லை. ஆகையால், வீணாக தனித்து உங்கள் பராக்கிரமம் அழிய வேண்டாம்!" என்றார்.

பீஷ்மர் அப்படிச் சொன்னபோது, ஸ்ரீகண்ணபிரான் ஊதிய பாஞ்சசன்னிய சங்கத்தின் சங்கநாதம் அவர் காதுகளில் வந்து மோதி ஒலித்தது. அது கேட்டு பீஷ்மர் தம்மெதிரே அர்ச்சுனனுடைய தேரின்முன் கண்ணன் எழுந்தருளியிருக்கும் நிலையை நெஞ்சிலே கொண்டு

தியானித்தார். மனமுருகி கண்ணனின் திருநாமங்களைப் பக்தியோடு நாக்கு தழுதழுக்க ஜபித்தார். தமது உடம்பில் ஊடுருவிச் சென்ற அம்புகள் போக, ஒருமுனை மாத்திரமே தைத்து நின்ற அம்புகளையே படுக்கையாகக் கொண்டு, அதன்மேல் படுத்தார் பீஷ்மர்.

அம்புப் படுக்கையில் பீஷ்மர் கிடந்த நிலையைக் கண்டு தேவர்கள், அவர் வீரத்தை எண்ணி மகிழ்ந்தார்கள். அந்த ஆனந்தத்தோடு அவர்மேல் அவர்கள் கற்பகமலர்களைச் சொரிந்தார்கள். அப்பூக்கள் பீஷ்மர்மேல் விழுந்து அவரை அலங்கரித்தன.

குருகுலத் தலைவனாகிய பீஷ்மர் யுத்தத்தில் அழிந்தார் என்பதைக் கண்டு அர்ச்சுனனும் கண்ணனும் தேரைவிட்டு இறங்கி அவரருகே ஓடினார்கள். அவருடைய நிலையைப் பார்த்து அவர்கள், பெரும் துக்கத்தால் தமது இரண்டு கண்களிலிருந்து விழுகின்ற நீரில் மூழ்கினார்கள்!



இரண்டு பக்கத்துச் சேனைகளும் பீஷ்மர் அடைந்த நிலையைக் கேள்விப்பட்டு, உடனே அவரை நெருங்கி வந்தன. அவரைக் கண்டு ஒன்றாகக் கூடி அழுது கதறின. இரண்டு பக்கத்துச் சேனையில் உள்ளவர்களும் பீஷ்மரின் நிலையால் மனம் அழிந்தார்கள்; வருந்தி மெலிந்தார்கள்; திகைத்து நின்று விசனமுற்றார்கள்.

அம்புப் படுக்கையில் கிடந்த பீஷ்மர், 'உத்தராயணம் வரும் வரையிலும் நான் மேலுலகத்தை அடைய மாட்டேன்!' என்றெண்ணி, தம் உயிரை உடம்பைவிட்டு நீங்காதபடி யோக வலிமையால் நிறுத்தி நல்லறிவோடு இருந்தார்.

யுகாந்த காலத்தில் பிராணிகள் வருந்துவது போல இந்தப் பக்கத்தில் தருமர் முதலிய அரசர்களும், அந்தப் பக்கத்தில் துரியோதனன் முதலிய ராஜாக்களும் பீஷ்மரின் திருவடிகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு புலம்பினார்கள். அப்படி அவர்கள் புலம்பும் பொழுதே, "தலைவனே! பராக்கிரமமும், தோள் வலிமையும், ஆயுத வல்லமையும், அழகும், மதிக்கின்ற வாழ்க்கையும், சிறப்பும், தரும சாஸ்திரங்களின்படி வாழும் ஒழுக்கமும், பெருமையும், தத்துவ ஞானமும், நீதிவழியும், கீர்த்தியும், சிறந்த தருமமும் ஆகிய யாவும் இனி உலகத்தில் உம்முடனே அழிந்து போகும். அந்தோ!" என்று பாராட்டி அழுதார்கள்.

மேலும் அவர்கள் அவரை நோக்கி, "இல்லற இன்பத்தை பிதா அனுபவிக்க துறவற ஒழுக்கத்தையே உலக இன்பமாக நினைத்து, மனம் தெளிந்த தத்துவ ஞானமாகிய செல்வத்தையுடையவனே! நீதி தவறாத வீரனே! பழமையான குரு குலத்தில் பிறந்த எங்கள் எல்லோருக்கும் மூத்தவனே! எங்கள் வம்சத்துப் பிதாவே! அரசே! பூமி முழுவதையும் நாங்கள் அரசாளும்படி முடிசூட்டி வைப்பவர்கள் இனி வேறு யார் இருக்கின்றார்கள்?" என்று கூறியழுதார்கள்.

அப்போது பீஷ்மர், அழுகின்ற குரு குல குமாரர்களைப் பார்த்து, "பயப்படாதீர்கள்!" என்று பலமுறை சொல்லி, அவர்களின் துயரத்தைத் தணித்தார். மீண்டும் அவர்களிடம் அவர், "கருமப் பயனைத் தடுக்க வல்லவர்கள் யாருமேயில்லை! உடம்பில் அம்புகள் தைத்து ஊடுருவ,

நான் உங்கள் எதிரே அழிந்து விழுந்தேன். ஆகையால், எனக்கு ஒரு தீங்கும் இல்லை. இதுவே நான் எனது அரசப் பிறப்பினால் பெற்ற பலன்!'' என்று சொன்னார்.

பின்பு பீஷ்மர் அர்ச்சுனனை நோக்கி, ''அர்ச்சுனா! உனது அம்புகளாலாகிய படுக்கை, பஞ்சசயன மெத்தைகளை விட எனக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. ஆனால், எனது தலையோ இப்போது தலையணையில்லாமல் கீழே தொங்குகிறது. ஆகவே, என் தலை தாழ்ந்திருப்பதை நீக்கு!'' என்றார்.

உடனே அர்ச்சுனன் பீஷ்மர் மகிழும்படி தனது அம்புகளாலாகிய தலையணை கொண்டு, அவர் தலையைத் தூக்கி வைத்தான்.

அதற்குப் பின் பீஷ்மர் துரியோதனனுடைய கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைத்து, அவனைச் சமாதானப்படுத்தினார். அவனைப் பார்த்து பீஷ்மர், ''துரியோதனா! பகைவர்களைத் தவறாமல் கொல்பவன் கர்ணன். அவன் காலம் தெரிந்து காரியம் செய்யக் கூடிய புத்தி கூர்மையானவன். இனி, நீங்கள் அந்தக் கர்ணனைச் சேனாதிபதியாக வைத்துக் கொண்டு, செய்ய வேண்டிய யுத்தத்தையும் நாளைமுதல் செய்யுங்கள்!'' என்றார்.

தருமர் அப்போது பீஷ்மருக்கு தங்கும் இடம் அமைத்தார். அந்த இடத்தில் அஸ்திரப்படுக்கையில் பீஷ்மர் நோயில்லாமலேயே உடம்பில் தளர்ச்சி தோன்றக் கிடந்தார். அவர் தக்ஷிணாயநமாகிய இப்போது இறந்தால் முக்தி கிடைக்காது என்று நினைத்து, உத்தராயண காலத்தை எதிர்பார்த்துப் பிழைத்திருந்தார்.

அச்சமயத்தில் வருணனுக்கு அன்றையப் போரில் அவன் மகனாகிய பீஷ்மர் அழிந்தார் என்னும் செய்தியைக் கூறச் செல்வது போல, சூரியபகவான் மேற்குத் திக்கின் எல்லையை அடைந்தான். அந்த மேற்குத்திக்கில் காணப்பட்ட செவ்வானம், வருணதேவன் மகனிடம் கொண்ட அன்பினால் அழுத சிவந்த கண்ணீர் ஆறாகி எங்கும் பரவியது போலத் தோன்றியது!

சூரியன் அஸ்தமித்ததும் பாண்டவ சேனையும் கௌரவசேனையும் தங்கள் தங்கள் படைவீட்டை

யடைந்தன. அப்போது துரியோதனன் சஞ்சய முனிவரை யழைத்து, ''முனிவரே! நீர் என் தந்தையிடம் சென்று, இப்போது எங்கள் குலத்துப் பெரியவராகிய பீஷ்மர் அழிந்த செய்தியைச் சொல்லும்!'' என்று கூறி, அவரை அனுப்பினான்.

துரியோதனனுடைய கட்டளைப்படி சஞ்சயமுனிவர் அஸ்தினாபுரத்துக்குச் சென்று, திருதராஷ்டிரனிடம் செய்தியைச் சொன்னார். அது கேட்டவுடனே திருதராஷ்டிரன் பீஷ்மரிடம் கொண்ட நெஞ்சுருகிய அன்பினால் மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் விட்டான். ''இனி மேல் என் பிள்ளைகளுக்கு வலிமை யில்லை!'' என்று பலமுறை சொல்லி விசனப்பட்டான். அப்படியெல்லாம் விசனப்பட்டு திருதராஷ்டிரன் சந்திரனைப் பார்த்த தாமரை மலர் போல வாடி மெலிந்தான்.

மேலும், திருதராஷ்டிரன் பீஷ்மரின் நிலையால் துக்கித்து தரையிலே விழுந்தான்; எழுந்தான். ''எனது பெருமை அழிந்தது!'' என்றான். தன் கண்களைக் கைகளால் மோதிக் கொண்டான். ''இன்றுதான் நானும் உண்மையாக என் கண்களை இழந்தேன்!'' என்று சொன்னான். பின்னும் அவன், ''இனி பீஷ்மர் அனுபவிப்பதால் தேவலோகத்தில் உள்ளவர்களுடைய ஐஸ்வரியம் சிறப்புப் பெற்றது!'' என்றும் கூறினான். இப்படி அவன் புண்ணின் மேல் நெருப்புப்பட்டது போல மிகவும் வருந்தினான்.

அதேசமயத்தில் துரியோதனன் போர்க்களத்துப் பாசறையில், 'இனி, நாளை முதல் நடக்கின்ற போரில் நமது படைக்குச் சேனாதிபதியாவது யார்?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கதேசத்து அரசனாகிய கர்ணன் துரியோதனனிடம், ''நானே பகைவர்கள் சொர்க்கத்துக்குப் போகும்படி பீஷ்மர் கூறியவாறு சேனைத் தலைவனாகி நம் சேனையைக் காப்பேன்!'' என்றான்.

அரவக் கொடியுடைய துரியோதனன் அதுகேட்டு அவனை நோக்கி, ''ஈகையால் மேம்பட்டவனே! நீ கொடிய யுத்தத்தில் சேனாதிபதியாகிவிட்டால், என்னுடன் பிரதான அரசனாய் நிற்பவர்கள் வேறு யாரும் இல்லை. ஆகவே, நீ சேனாதிபதியாக வேண்டாம்!'' என்று சொல்லி, அவனைத் தடுத்தான்.

பிறகு துரோணரைப் பார்த்து அவன், ‘‘காமம் முதலிய குற்றங்களை ஒழித்தவரே! மன்மதனை வென்ற சிவபெருமானை ஒத்தவரே! வேதக் கொடியுடைய நாயகரே! நீரே இனி எமது சேனைக்குத் தலைவனாகுக!’’ என்று பிரார்த்தித்தான்.

வில்லாசிரியராகிய துரோணர் துரியோதனனுடைய வேண்டுதலுக்கு இணங்கி, கௌரவசேனைக்குச் சேனாதிபதியானார். அவரை கௌரவ சேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும் வந்து சூழ்ந்து வணங்கினார்கள். துரோணாசாரியரும் பாணவருஷத்தைப் பகைவர்களின் மார்பிலெல்லாம் தொடுத்து நீங்காத கொடிய போரைச் செய்து முடிக்க நிச்சயித்தார்.

அதன் பிறகு அந்த இரவில் எல்லோரும் உறங்கினார்கள்!

வருணனுக்கு பீஷ்மரின் அழிவைச் சொல்லிவிட்டு, இன்றையப் போரில் அர்ச்சுனனின் வெற்றியை இந்திரனுக்குச் சொல்ல வேண்டி, மீண்டும் சூரியன் இருள் முன்னே ஓட தனது அழகிய தேரை அருணன் செலுத்த கீழ்திசையைச் சேர்ந்தான்!



துரோண பருவம்



1. பதினோராம் நாள் போர்

கங்காபுத்திரனாகிய பீஷ்மர் குருக்ஷேத்திரப் போரில் பத்து நாட்களும் கௌரவ சேனாதிபதியாக இருந்து போர் செய்த விதத்தையெல்லாம் பீஷ்ம பருவத்தில் அறிந்தோம். இனிமேல் குற்றமற்ற தத்துவஞானமும் யாகச்சிறப்பும் கொண்ட துரோணாசாரியார் கௌரவ சேனாதிபதியாகிச் செய்த ஐந்து நாள் போரைப் பற்றியும் இப்பருவத்தில் தெரிந்து கொள்வோம்.

கண்ணபிரான் பாண்டவர்களை நோக்கி, ‘‘பாண்டு குமாரர்களே! பீஷ்மர் வலிமையடங்கிப் போய்விட்டார்.

சூரியபுத்திரனாகிய கர்ணனோ இறந்து செல்பவனாக நிற்கின்றான். துரோணாசாரியார் மகனான அசுவத்தாமனும் பெரிய போரை உக்கிரங்கொண்டு செய்ய மாட்டான். ஆகையால், இனி நாம் பகைவரை ஜெயித்துவிட்டோம்!'' என்று சொன்னான்.

அதுகேட்டுப் பாண்டவர்கள் சந்தோஷத்துடன் போர்க்களத்தை அடைந்தார்கள்.

அளகாபுரிக்கு அரசனாகிய குபேரன் என்றும், தேவலோகத்துக்கு அரசனாகிய இந்திரன் என்றும் சொல்லத்தக்க சிறப்புள்ள பூலோகத்து ராஜனாகிய துரியோதனன் ஆயுதவீரர்களோடும், சேனாதிபதியாகிய துரோணாசாரியாரோடும் கொடிய போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தான்!

அப்போது பீஷ்மர் இல்லாத கௌரவசேனை சந்திரன் இல்லாத ஆகாயத்தைப் போலவும், நல்ல வாசனையில்லாத மலரைப் போலவும், ஆறு இல்லாத தேசத்தைப் போலவும், நரம்பின் அமைதியில்லாத வீணையைப் போலவும், செல்வம் இல்லாத குடிவாழ்க்கையைப் போலவும், தகுந்த நல்லெண்ணம் இல்லாத மனத்தைப் போலவும், வேதங்களில் சொன்ன விதிமுறை ஒழுக்கம் இல்லாத யாகத்தைப் போலவும் பொலிவிழந்து தோன்றியது!

கௌரவர்களின் சதுரங்கச்சேனையை, அதன் சேனாதிபதியாகிய துரோணாசாரியார் பெரிய சகட வியூகமாக அணிவகுத்து நிறுத்தினார். பாண்டவர்களுடைய சதுரங்கச் சேனையை திருஷ்டத்யும்நன் கிரௌஞ்ச வியூகமாக அணிவகுத்து முன்னே நின்றான்.

துரோணாசாரியாரும் திருஷ்டத்யும்நனும் தத்தமது சேனையிலுள்ள அரசர்கள் பக்கத்திலே சூழ்ந்து வரவும், சேனைகள் தொடர்ந்து வரவும் தங்கள் தேரைச் செலுத்தி வந்து ஒருவரையொருவர் நெருங்கினார்கள். ஆகாயத்திலே போரைக் காண வந்திருந்த தேவர்களும் அஞ்சி நடுங்கும்படி அவர்கள் கொடிய அம்பு மழையை மேகங்கள் போல ஒருவர் மேல் ஒருவர் இடைவிடாமல் சொரிந்தார்கள்.

அப்போது சகாதேவன் சகுனியை எதிர்த்துப் போரிட்டான். அவர்கள் இருவரும் சமமாக உக்கிரங்

கொண்டு வில்லை வளைத்துப் போர் செய்தார்கள். அப்படிப் போர் செய்கையில், சகாதேவன் ஓரம்பைப் பிரயோகித்து சகுனியின் தேர்ச்சாரதியைக் கொன்றான். மேலும், தனது இரண்டு அம்புகளால் சகுனியின் தேர்க்கொடியை அறுத்துத் தள்ளினான். நான்கு அம்புகளைத் தொடுத்துவிட்டு, சகுனியின் தேரில் பூட்டப்பட்டிருந்த நான்குக் குதிரைகளையும் கொன்றான். தொடர்ந்து சகாதேவன் வஞ்சகனான சகுனியின் மார்பிலே ஒன்றன்பின் ஒன்றாக ஆறு அம்புகளைப் பிரயோகித்து வெற்றிமாலை சூடினான்.

சகாதேவனின் கொடிய விற்போரால் சகுனி தனது தேரிலிருந்து இறங்கி கையில் கதாயுதத்தை எடுத்துக் கொண்டு அவனை எதிர்த்தான். உடனே சகாதேவனும் தேரிலிருந்து இறங்கி கதாயுதம் ஏந்தி சகுனியைத் தாக்கிக் கொடிய போர் செய்தான். அவனுடைய தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சகுனி தோற்றோடினான். சகுனி தோற்று புறமுதுகிட்டு ஓடியதும், சகாதேவன் திரும்பவும் தேரில் ஏறிக் கொண்டான்.

அச்சமயத்தில் நால்வகைச் சேனைகளும் எல்லாப் பக்கங்களிலும் தன்னைச் சூழ்ந்து வரவும், பட்டத்து ராஜாக்கள் எல்லோரும் தன்னை நிழல்போல் தொடர்ந்து வரவும் போர்க்களத்துக்கு வந்த துரியோதனன், பீஷ்மர் அழிந்ததால் ஏற்பட்ட மயக்கத்தோடு பீமனை எதிர்த்துப் போரிட்டான்.

உடனே சிங்கக்கொடியுடைய பீமன் அம்புகளைத் தொடுத்து துரியோதனனுடைய கைவில்லையும், அரவக்கொடியையும் துண்டித்து அவன் எதிரே விழச் செய்தான். அதன்பின்பு துரியோதனனைச் சுற்றி நின்ற அரசர்களும், தன்னை எதிர்த்த அந்த அரசர்களின் யானைக் கூட்டங்களும், குதிரைகளும், வலிய தேர்களும் அழியும்படி கொடிய அம்புகளைப் பிரயோகித்தான்.

ஆரவாரத்தோடு போருக்கு வந்த துரியோதனன் பீமனுடைய கடுமையான தாக்குதலுக்குப் பயந்து புறமுதுகிட்டான். அதுகண்டு சல்லியன் உக்கிரங்கொண்டு பீமனை எதிர்த்து, வலிய அம்புகளை அவன் மேல் தொடுத்தான்.

அப்போது நகுலன் சல்லியனைத் தடுத்து நிறுத்தி, ''எம்மை எதிர்த்துப் போரிடும் வலிமையிருந்தால், நீ ஒரு மாத்திரைப் பொழுது எம்மோடு போர் செய்!'' என்று வீரவாதம் சொல்லி, போர்க்களத்தில் முண்டங்கள் கூத்தாடும் படி அவனுடன் போர் செய்தான்.

நகுலன் வீராவேசத்துடன் முதலில் ஒரம்பைத் தொடுத்து சல்லியனுடைய தேர்ச்சாரதியைக் கொன்றான். பின்பு, இரண்டு அம்புகளால் வில்லை முறித்துப் போட்டான். மூன்று அம்புகளால் தேர்க் கொடியை அறுத்துத் தள்ளினான். நான்கு அம்புகளால் நான்கு குதிரைகளையும் மாய்த்தான். கடைசியில் சல்லியனுடைய மார்பை ஊடுருவிச் செல்லும்படி ஐந்து அம்புகளை ஏவினான். அதனால் மத்திரதேசத்து அரசனான சல்லியன் தோற்று ஓடினான்!

அச்சமயத்தில் தத்தம் தேரைச் செலுத்தி நெருங்கி வந்த கர்ணனும் விராடராஜனும் இரண்டு மலைகள் தமக்குள் எதிர்த்துப் போர் செய்வது போல, ஒருவரையொருவர் எதிர்த்துப் பயங்கரமாகப் போரிட்டார்கள். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் பூமி நடுங்கியது. பூமியைத் தாங்கி நின்ற ஆதிசேஷன் இப்படியும் அப்படியும் அசைந்தான். அவர்கள் இருவரும் தொடுத்துவிட்ட அம்புகளால் ஆகாயம் முழுவதும் மறைந்தது.

யாகசேனன் என்னும் பாஞ்சால தேசத்து துருபதராஜனும் பகதத்தனும் அன்றையப் போரில் பகற்பொழுது முழுவதும் ஒருவரையொருவர் கடுமையாக எதிர்த்து யானைப்போர் புரிந்தார்கள். அப்போது அவர்கள் தங்களுடைய யுத்த உற்சாகத்தையும், தேக வலிமையையும், பராக்கிரமத்தையும், ஆயுத பலத்தையும் பலரும் அறியும்படி வெளியிட்டு யுத்தம் செய்தார்கள்.

பத்தாம்நாள் போரில் பீஷ்மரைத் தோற்கச் செய்த சிகண்டி, இந்தப் பதினோராம் நாள் போரில் சோம தத்தனையும், அவனுக்குத் துணையாக வந்த அரசர்களையும் வாட்போரில் ஜெயித்த விதத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது!

நால்வகைச் சேனைகளும் எல்லாப் பக்கங்களிலும் தன்னைச் சூழ்ந்து வரவும், துவஜங்களும் குடைகளும்

உடன் வரவும் துரியோதனனுடைய குமாரனாகிய லக்ஷணகுமாரன் போருக்கு வந்தான். அவனை அர்ச்சுன குமாரனாகிய அபிமந்யு போரில் எதிர்த்தான். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பயங்கரமாக எதிர்த்து, தாம் தாம் பிரயோகித்த அம்புகளால் பரந்த ஆகாயம் முழுவதையும் மறைத்தார்கள்.

மேலும், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் நோக்கி வலிமையாக அம்புகளை ஏவினார்கள். அவ்வாறு தங்களைக் குறிவைத்து வந்த அம்புகளை அவர்கள் எதிரம்புகளால் அழித்தார்கள். ஒருவர் உடம்பில் ஒருவர் அம்பு தைக்கும்படியும் செய்து போரிட்டார்கள். அவர்களுடைய விற்போர் பார்க்க அதிபயங்கரமாக இருந்தது.

சற்று நேரம் இருவரும் சமமாகப் போரிட்டபின், லக்ஷணகுமாரன் கொடிய அம்புகளைச் செலுத்தி அபிமந்யுவின் வில்லின் நாணியை அறுத்தான். அதனால் அபிமந்யு வெகுண்டெழுந்து, துண்டான வில்லால் லக்ஷணகுமாரனுடைய தேர்க்குதிரைகளையும் சாரதியையும் அடித்து அழித்தான். தனது தேரை உக்கிரமாகச் செலுத்தி அவனது தேரைத் தாக்கிச் சிதைத்தான். பிறகு, லக்ஷணகுமாரனை அபிமந்யு உயிரோடு சிறை பிடித்துக் கொண்டான். சிவசிந்தையுடைய அபிமந்யு லக்ஷண குமாரனின் தலைமயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தேரில் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

லக்ஷணகுமாரனின் சிகையைப் பிடித்துக் கொண்டு அபிமந்யு வேகமாகத் திரும்பித் தேரில் சென்றபோது, ஒரு பக்கத்திலிருந்து சிந்துதேசத்து அரசனான ஜயத்ரதன் கடுங்கோபத்துடன் அவன் எதிரே வந்தான். அவன் தனது வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்து அபிமந்யுவை தடுத்து நிறுத்திப் போர் புரிந்தான்.

சிலந்திவலை போலத் தன்னை ஜயத்ரதன் வளைத்துக் கொண்டதும், அபிமந்யு அவனுடைய தோள் வலிமையை அம்புகளால் அழித்தான். அதன் பின்பு, கர்ணன் முதலிய ரதாதிபதிகளான அரசர்கள் அபிமந்யுவைச் சூழ்ந்து கொண்டு கொடிய யுத்தம் செய்தார்கள்.

அப்படி தன்னை வளைத்துக் கொண்ட அரசர்களின் நெற்றியில் சிந்தூரப் பொட்டு வைப்பது போல, தனது

அம்புகளின் முனையால் ரத்தத்திலகமிட்டான் அபிமந்யு. அத்துடன் அவன் விடவில்லை. அவர்களையெல்லாம் தன்னுடைய கொடிய விற்போரால் தோற்று ஓடச் செய்தான்.

கர்ணன் முதலியவர்கள் தோற்றோடிய பின், தனது அந்த ஒரு தேரிலேயே லக்ஷணகுமாரனோடு அபிமந்யு திரும்பவும் தன் வழியே சென்றான். அப்போது மீண்டும் வந்து சல்லியன் அபிமந்யுவை வளைத்துக் கொண்டான்.

பழையபடியே தன்மீது கோபித்து போருக்கு வந்த சல்லியனைக் கண்டதும் அபிமந்யு அவனைப் பார்த்து, "நீ வருவாயாக! வருவாயாக!" என்று ஆவேசத்துடன் அழைத்து, அவன் மீது எட்டு அம்புகளைப் பிரயோகித்தான். மேலும், சல்லியனின் இரண்டு தோள்களிலும் துவாரம் ஏற்படும்படி இரண்டு அம்புகளைத் தொடுத்தான். பின்பு, சல்லியனுடைய தேர்ச்சாரதியின் மேல் பராக்கிரமத்துடன் பயங்கரமான வேலாயுதத்தை எறிந்தான். அதனால் அந்தத் தேர்ப்பாகன் மாண்டான்.

தேர்ப்பாகன் இறந்ததும் தேரைச் செலுத்துவதற்கு ஆள் இல்லாததால் சல்லியன், மலையிலிருந்து யாளி இறங்குவது போல கொடிய கதாயுதம் ஒன்றை எடுத்துக் கொண்டு தேரிலிருந்து இறங்கினான். நேரே கடுங்கோபத்துடன் கதாயுதத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவன் அபிமந்யுவை எதிர்த்துப் போருக்கு வந்தான்.

அந்தக் கணத்தில் அக்காட்சியை பீமன் கண்டான். அவன் அபிமந்யுவிடம் பேரன்பு கொண்டு, சல்லியனை எதிர்த்துப் போருக்குச் சென்றான். பீமன் சல்லியனுடைய எலும்போடு தோள்களும் நொறுங்கி, மணிமுடியும் சரியும்படி தனது கதாயுதத்தால் அவனைக் கொடூரமாகத் தாக்கினான்.

பீமனுடைய தாக்குதலால் சல்லியன் தரையிலே விழுந்தான். அதுகண்டு அபிமந்யு தன்னை எதிர்த்து வந்த சல்லியனைத் தான் வெல்லுமுன் தனது பெரியப்பா இடையில் வந்து அவனை வென்றதற்கு மிகவும் வருத்தமடைந்தான். அதனால் தன் பெரிய தந்தையாகிய பீமனோடு அவன், "தந்தையே! தாங்கள் இப்படிச் செய்தால் எனது பராக்கிரமம் எதற்குப் பயன்படும்?" என்று பேசி, சிறிது சோர்ந்து நின்றான்.

அப்போது லக்ஷணகுமாரன் அதுவே தக்க சமயம் என்று நினைத்து, அபிமந்யுவின் பிடியிலிருந்து தப்பியோடி தனது தேரில் ஏறிக் கொண்டான்.

பீமனும் அபிமந்யுவும் அப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், கிருதவர்மா தரையில் விழுந்த சல்லியனைத் தன் தேரின்மேல் ஏற்றிக் கொண்டு, லக்ஷணகுமாரனையும் அழைத்துக் கொண்டு அவர்களைக் காப்பாற்றுவதற்காக அப்பால் சென்றான்.

இவ்வாறு பதினோராம் நாள் போரில் குருக்ஷேத்திரத்தில் திரும்பிய பக்கமெல்லாம் பாண்டவ சேனையே ஜயஸ்தம்பம் நாட்டியது. அதனால் துரியோதனன் அன்றையப் போர் அத்துடன் போகட்டும் என்று எண்ணி, தானும் தனது சேனையுமாக திரும்பிப் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தான்!

பீமன் என்னும் கொடுங் காற்றால் தேர் முதலியவை போர்க்களத்தில் அழிந்ததைக் கண்ட சூரியன், தனது ஒற்றைச் சக்கர தேருக்கும் ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி ஒளிந்தது போல, தேரும் குதிரைகளும் உடன் கொண்டு அச்சமயத்தில் மேற்குக் கடலில் முழுகி மறைந்தான்!

சூரியன் அஸ்தமித்ததும் பலமும் பராக்கிரமமும் கொண்ட அபிமந்யு முதலிய அரசர்கள் துணையரசர்களோடும் கண்ணபிரானோடும் கூடி, தங்கள் பாசறைக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் வெற்றிப் பெருமிதத்தில் மகிழ்ச்சியுடன் கண்மூடி நன்றாகத் தூங்கினார்கள்.

ஆனால், பாசறைக்குச் சென்று சேர்ந்த துரியோதனன் தூங்கவில்லை. அவன் பாதி ராத்திரி வரைக்கும் தனது பிராண சிநேகிதர்களையும், துணைக்கு வந்த அரசர்களையும், மந்திரிமார்களையும், தனது தம்பிமார்களையும், துரோணாசாரியார் முதலிய சேனாதிபதிகளையும் அழைத்து வைத்துக் கொண்டு, லக்ஷணகுமாரன் அன்றையப் போரில் சிறைபட்ட அவமானத்துக்கு வருந்தினான். அவர்களும் அந்த அவமானத்துக்குப் பச்சாதாபப்பட்டு மனம் வருந்தினார்கள்.

அப்போது துரியோதனன் துரோணரை நோக்கி, ‘‘வில்லாசிரியரே! வேதயாக நாயகரே! இப்போது நான் சொல்லும் காரியத்தை உம்மைத் தவிர செய்து முடிக்கக் கூடிய திறமைசாலிகள் வேறு யாருமேயில்லை. ஆமாம்.

நாளை நடக்கும் போரில் லக்ஷணகுமாரனை அபிமந்யு சிறை படுத்திய அவமானத்துக்குப் பதிலாக, நீர் தருமபுத்திரனை உயிரோடு சிறைபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய இந்தப் பகைமை தணியாது!'' என்றான்.

துரோணாசாரியார் அதற்கு, ''ராஜராஜனே! தந்தையாகிய வாயுவைவிட நூறு மடங்கு அதிகமான வலிமையுள்ள பீமன், தருமனின் பின்னே அவனுக்குப் பாதுகாப்பாக யுத்தகளத்தில் நிற்கின்றான். அது போல் தருமனைப் பாதுகாத்துக் கொண்டு அவனுக்கு முன்னே அர்ச்சுனன் நிற்கின்றான். ஆகையால், உதவியற்றுப் போர்க்களத்தில் நிற்பவரைச் சிறைபிடிப்பது போல, தருமனைச் சிறைபிடிப்பது என்பது மற்றொரு ஜன்மத்தில் என்னால் முடியுமோ முடியாதோ அது தெரியாது. ஆனால், இந்த ஜன்மத்தில் அது என்னால் முடியாத காரியம்! தருமனைச் சிறைபிடிப்பதற்கான வலிமை எனக்கில்லை! ஆனால், யுத்தகளத்தில் தருமன் அணிவகுத்து நிற்கின்ற இடத்துக்குப் பக்கத்தில் ஒரு மாத்திரை பொழுதாவது அர்ச்சுனன் வராமல் தடுக்க வேண்டும். அப்படி அர்ச்சுனனைத் தடுத்து நிறுத்துபவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால், போர்க்களத்தில் நாளைக்கு தருமனை நான் சிறைபிடித்துக் கொடுக்க முடியும்!'' என்றார்.

அச்சமயத்தில் திரிகர்த்தராஜன் முதலிய சில அரசர்கள் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு, துரியோதனனிடம், ''தருமனுக்கு அர்ச்சுனன் யுத்தத்தில் உதவி செய்யாதபடி, நாங்கள் அவனை நாளைக்கு யுத்தகளத்தில் மகநட்சத்திரத்துச் சனி போலத் தடுத்துச் சூழ்ந்து கொள்வோம்!'' என்று சொன்னார்கள். மேலும், அவர்கள் அதற்கு ஏற்ப பல சபதங்களையும் செய்தார்கள்.

மீண்டும் அவர்கள் துரியோதனனைப் பார்த்து, ''யுத்தகளத்தில் எதிர்பக்கத்திலே கருணையே ஒரு புருஷ வடிவங் கொண்டு நிற்பது போல நிற்கும் தருமனின் பக்கத்திலே அர்ச்சுனன் நாளை ஒருநாள் முழுவதும் வராதபடி அவனை நாங்கள் தடுத்து நிறுத்துவோம். அப்படி நாங்கள் செய்யாவிட்டால், தங்கள் நாட்டு ஜனங்கள் இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்து வருந்தவும், மனுதர்மம் குறைபட்டு அழியவும் அரசாளும் கொடுங்கோல்

மன்னர்களைப் போல நாங்கள் நரகத்துக்குப் போவோம்! எப்போதும் தருமனுக்குப் பாதுகாப்பாக அவனுக்குப் பின்னே நிற்கும் பீமனை, தமையனுக்கு உதவியாகப் போரில் ஈடுபடாதபடி நாங்கள் எங்கள் தோள் வலிமையால் மலை போலத் தடுத்துவிடுவோம். அப்படி நாங்கள் செய்யாவிட்டால், மனைவியிருக்க மாற்றான் மனைவியை விரும்பும் பாவிகள் மறுமையில் பெறும் நரகதியை நாங்களும் அடைவோம்! குருவம்சத்து ராஜராஜனே! ஒரு கன்றைக் கொண்டு விளாமரத்தின் பழத்தை உதிரச் செய்த கண்ணனைத் தேர்ச்சாரதியாகக் கொண்ட அர்ச்சுனனே யானாலும் சரி. இல்லை,பீமனேயானாலும் சரி. நாளை நடக்கும் போரில் அவர்கள் வந்து கோபித்து எதிர்த்தாலும் சரி. நாளைக்கு நாங்கள் தருமன் அருகில் அவனுக்கு உதவியாக அவர்கள் வராதபடித் தடுத்து நிற்போம். அது எங்களால் முடியாவிட்டால், நன்றி கொன்ற பாவிகளின் நண்பர்களாக நாங்களும் சேர்ந்தவர்களாவோம்!'' என்று அவர்கள் சபதம் செய்தார்கள்.

துரியோதனன் அப்படி வீரசபதம் செய்த அரசர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியுடன் தக்க சன்மானம் அளித்து அனுப்பி வைத்தான். பின்பு, துரியோதனன் துரோணாசாரியாரை நமஸ்கரித்து, ''ஆசாரியரே! நீரும் செல்வீராக!'' என்று கூறி, அவரையும் அனுப்பிவிட்டு, தன் இருப்பிடத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

இரவுப் பொழுது துரியோதனனின் கட்டளைப்படி துரோணாசாரியார் கருணை நெஞ்சுடைய தருமரைச் சிறைபிடித்து விடுவாரே என்று எண்ணி இரங்கி அங்கிருந்து நீங்கிச் சென்றது. அப்படி ராத்திரி மறைய, சூரியன் இரண்டு பக்கத்துப் பாசறைகளிலும் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரையும், தனது சங்கொலியால் தூக்கம் விழிக்கச் செய்து கொண்டு தங்கக் கதிர்கள் பளபளக்கக் கிழக்குத்திசையில் உதித்தான்!

2. பன்னிரண்டாம் நாள் போர்

முதல்நாள் இரவு துரியோதனன், தனது பாசறையில் துரோணாசாரியாருடனும் மற்றவர்களோடும் ஆலோசித்துப் பேசிய வார்த்தைகளையெல்லாம் அந்த க்ஷணத்திலேயே

தருமர், தமது ஒற்றர்கள் மூலமாக அறிந்தார். உடனே அவர் அச்செய்தியை கண்ணபிரானுக்கும் அர்ச்சுனனுக்கும் தெரிவித்தார். பின்பு, சூரியன் உதித்ததும் தருமர் இன்றைக்கு யுத்தகளத்தில் உக்கிரத்தோடுப் போரிட எண்ணி, தும்பைப்பூமாலை சூடினார்.

ஸ்ரீகண்ணபிரான் அரசர்களோடும் பாண்டவ சேனையோடும் போர்க்களத்தை அடைந்தான். பிறகு, அவன் பகைவர்கள் கண்டு பயப்படும்படியாகப் பாண்டவசேனையை மண்டல வியூகமாக அணிவகுத்தான்.

அணிவகுப்பின் நடுவே தருமர் நின்றார். அவருக்குப் பின்பக்கத்தில் பீமன் நின்றான். பரவலாக ஆங்காங்கு அணிவகுப்பில் அரசர்கள் பலரும் நின்றார்கள். தருமருக்கு இரண்டு பக்கத்திலும் நகுலசகாதேவர்கள் நின்றார்கள். அர்ச்சுனனும் அபிமந்யுவும் தருமரின் முன்பக்கம் நின்றார்கள்.

அப்போது கௌரவசேனை போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தது. இரவு சொன்ன வார்த்தைகளின்படியே திரிகர்த்தராஜனும், ஸம்சப்தகர்களும், துரோணாசாரியர் முதலிய வீரர்களும் போர் செய்யக் கருதித் தங்கள் சேனையைக் கருட வியூகமாக அணிவகுத்து நின்றார்கள்.

பிறகு, கௌரவர்களின் சதுரங்கச் சேனையிலுள்ள வீரர்களும், திரிகர்த்தராஜனும், நாராயண கோபாலர் என்னும் அரசர்களும் தங்களை எதிர்த்துப் போர் செய்யும்படி அர்ச்சுனனுக்கு அழைப்புவிடுத்து, கொடுமையான தங்கள் வில்லை அவனுக்கு எதிராக வளைத்தார்கள்!

தன்னைப் போருக்கு அழைத்து ஆரவாரிக்கின்ற பகைவர்களின் மனஉறுதியைக் கண்டு அர்ச்சுனன் கடுங்கோபம் கொண்டான். உடனே அவன் தன் பக்கத்து அரசர்களிடம், "நண்பர்களே! எனது தமையனாரை நீங்கள் ஒரு மாத்திரைப் பொழுது பாதுகாத்திருங்கள்!" என்றான்.

அதன்பின் தருமரின் கட்டளையைப் பெற்றுக் கொண்டு, அர்ச்சுனன் தனது காண்டீபத்தை நன்றாக வளைத்து பகைவர்கள் எதிரே போய் அநேக அம்பு மழையைப் பொழிந்தான்.

முதலில் அர்ச்சுனனும் திரிகர்த்தன் முதலிய அரசர்களும் விற்போர் புரிந்தார்கள். அப்போது அவர்களுடைய தேரோட்டத்தால் புழுதிப்படலம் எழுந்து வானத்தை நிறைத்தது. பின்னர், அவர்கள் பிரயோகித்த அம்புகளால் வானம் மறைந்தது. அப்படி அவர்கள் கடுமையாக யுத்தம் புரிந்த போது, துரோணர் போருக்கு எழுந்தார். அவரைத் தொடர்ந்து அவருக்குத் துணையாக ஜயத்ரதன், சகுனி, குண்டலன் ஆகிய முப்பதினாயிரம் ராஜாக்கள் கொடிய ஆயுதங்களை ஏந்திப் போருக்கு வந்தார்கள். நால்வகைச் சேனைகளும் பேரிகைகள் முழங்க அந்த ராஜாக்களுக்கும் துரோணருக்கும் துணையாகப் போருக்கு வந்தன. அப்படித் தேரேறி போருக்கு வந்த துரோணாசாரியார், தருமரை யுத்தத்தில் எதிர்க்க அவர்முன் வந்தார்.

தருமரைப் போரில் துரோணர் எதிர்க்கு முன்பு, பாண்டவ சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் பதினாயிரக் கணக்கான பாஞ்சாலதேசத்து வீரர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும், அநேக வாத்தியங்கள் முன்னே முழங்கவும், ஆரவாரிக்கின்ற சமுத்திரம் போல் கோபம் பொங்க அவர் எதிரே யுத்தத்துக்கு வந்தான்.

துரோணாசாரியார் சேனையும் திருஷ்டத்யும்நன் சேனையும் ஒன்றுக்கொன்று எதிர்த்து உக்கிரமாகப் போரிட்டன. அவை ஒன்றையொன்று ஜெயிக்க முயன்று முடியாமல் சமமாகப் போரிட்டன. அப்போது திருஷ்டத்யும்நன் கோபித்து வில்லை வளைத்து கொடிய அம்புகளைப் பகைவர்கள்மேல் வர்ஷித்தான். அதனால் போர் செய்கின்ற பகையரசர்கள் அநேகம்பேர் இறந்தார்கள்.

முதலில் திருஷ்டத்யும்நன் துர்முகனைத் தோற்றோடச் செய்தான். பிறகு, துர்மர்ஷணனை வலியொடுங்கச் செய்தான். அதுபோல் காந்தாரதேசத்து வீரர்களையும், கலிங்கதேசத்து வீரர்களையும், கோசலதேசத்து வீரர்களையும், நிஷததேசத்து வீரர்களையும் வாடிய முகத்துடன் மெலிந்து தோற்று ஓடும்படிப் போர் புரிந்து சிதைத்தான். அப்படி திருஷ்டத்யும்நனால் தோற்கடிக்கப்பட்ட கொடிய பெரிய சேனைகள் துரோணாசாரியரிடம் போய்ச் சேர்ந்தன.

தமது சேனைத் தோற்றுத் திரும்பி வந்ததைக் கண்டதும் துரோணாசாரியார் மிகவும் கோபம் அடைந்தார்.

அக்கோபத்துடன் அவர் திருஷ்டத்யும்நன்மேல் உக்கிரமாகப் போருக்கு எழுந்தார். வில்லை வளைத்து பயங்கரமான அர்த்தசந்திர பாணத்தைத் தொடுத்து, திருஷ்டத்யும்நனின் வில்லைத் துண்டாடினார். மேலும், துரோணர் சிவபெருமான் போலக் கோபம் அக்கினி ஜுவாலையாக வீச, பாஞ்சாலதேசத்து ராஜாவாகிய சத்தியகேதுவின் வில்லை ஓரம்பால் துண்டித்தார். அதுபோல் சிகண்டியின் வில்லையும் துண்டித்துத் தள்ளினார். மற்றும் உத்தமோசா முதலிய அரசர்களையும், திருஷ்டத்யும்நனின் சேனையையும் புறமுதுகிட்டு ஓடும்படி அழித்தார்.

பின்னும் துரோணாசாரியருடைய அஸ்திரங்களுக்கு நகுல சகாதேவர்களும், பாண்டிய மன்னனும், பாஞ்சாலத்து ராஜாக்களும் தோற்றோடிப் போனார்கள். தோற்றவர்கள் தவிர, யுத்தபூமியில் துரோணாசாரியார் பாணங்களால் பல்லாயிரம் அரசர்கள் மாண்டார்கள்!

இப்படியாக, தேவர்களும் கண்டு அஞ்சி நடுங்கும் படியான போர்க்களத்தில் துரோணரும் தருமரும் நேருக்குநேர் போர் செய்ய சந்தித்துக் கொண்டார்கள். அவர்கள் மனத்தில் கொடுங் கோபத்துடன், உடம்பில் ரணக்களத்தை உண்டாக்கும் அம்புகளையும் வில்லையும் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு மாத்திரைப் பொழுதிலே ஒருவரையொருவர் போருக்கு நெருங்கினார்கள்.

அப்போது இருபக்கத்துச் சேனைகளிலும் இருந்து எழுந்த யுத்த வாத்தியங்களின் முழக்கம் உலகம் முழுவதிலும் சப்தித்து, நக்ஷத்திரக் கூட்டங்கள் முழுவதையும் உதிரச் செய்தன. வீரர்களின் சிவந்த கைகள் வாளையும் வேலையும் வேகமாக வீசின. அந்த வீரர்களின் கண்கள் நெருப்பைச் சொரியும்படிக் கோபத்துடன் அகலத் திறந்து உற்று நோக்கின. இப்படி ஒருவர்க்கொருவர் எதிர்ப்பட்ட வீரர்கள் யுத்தம் புரிய, அவர்களுடைய யானை முதலிய சேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்து யுத்தம் பண்ணின.

இரு பக்கத்துச் சேனைகளிலும் உள்ள யானைகள் ஏழுவகை மதங்களாலும் கொழுத்து கறுத்த உடம்பினால், பார்ப்பதற்கு அழகுமிக்க காளமேகத்தைப் போல் காட்சி யளித்தன. நீண்ட துதிக்கையை மேலே வீசி அந்த யானைகள், நக்ஷத்திரக் கூட்டத்தை அதிகமாக வாரி எடுத்தன.

கீழேயிருந்த பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய படங்களிலுள்ள மாணிக்கங்களைத் தங்களுடைய கால் வலிமையால் அந்த யானைகள் துவைத்தன. கோபம் தோன்ற கண் விழித்து எங்கும் அவைகள் சஞ்சரித்தன. மேலும், அவைகள் இருகண்களாலும் தீயை உமிழ்ந்தன.

அப்போர்க்களத்தில் சஞ்சரித்த தேர்களை மலைகளின் கூட்டம் என்று உவமை சொல்லலாம் என்றால், அம்மலைகளுக்குச் சக்கரங்கள் இல்லை; வரிசையாக நாட்டப் பட்ட நீண்ட கொடிகள் இல்லை; நல்ல நிறமுள்ள கொடிஞ்சி முதலிய உறுப்புகள் இல்லை; புகழ்பெற ஓட்டுகின்ற சாரதிகள் இல்லை; இழுத்துச் செல்கின்ற குதிரைகள் இல்லை; ஆரவாரத்துடன் வேகமாகச் செல்லும் தொழில்கள் இல்லை! இப்படி உவமை சொல்ல முடியாத சிறப்புள்ள தேர்கள் அப்போர்க்களத்திலே அநேகம் இருந்தன.

அப்போர்க்களத்தில் சஞ்சரித்த குதிரைகள் யுகமுடிவில் ஆரவாரித்துப் பொங்கும் கடல் போலவும், அப்போது தேவலோகமும் வெடிக்கும்படி கனலைக் கக்குகின்ற காலாக்கினி போலவும், மற்றும் அச்சமயம் மலைச் சிகரங்களைச் சரித்து எதிர்செல்லும் கொடிய காற்றுக்கள் போலவும் போரைச் செய்தன. அப்படிப் போரிடும் போதே அவைகள் சிவந்த புழுதிகளைக் கால்களால் மேலே கிளப்பின.

இன்னும் அந்த யுத்தகளத்தில் காலாள் வீரர்கள் இரண்டிரண்டு பேராக ஒருவரையொருவர் பகைத்துக் கொடூரமாகச் சண்டை செய்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் பராக்கிரமத்தோடு மோதிக் கொண்டார்கள். சிங்கக்குட்டிகள் போலக் கர்ச்சித்தார்கள். எதிர்த்துப் போய் மோதி அதட்டினார்கள். தாங்கள் பிடித்த நீண்ட விற்களை வளைத்தார்கள். அம்புகளால் பகைவர்களின் உடம்பைப் பிளந்து மகிழ்ந்தார்கள்.

அன்றைக்கு நடந்த போரில் தருமரும் துரோணரும் எதிர்த்துச் சண்டை செய்தார்கள். போருக்குரிய தும்பைப்பூ மாலையைத் தங்கள் தலையில் சூடினார்கள். இன்றைக்கு இப்போர் நல்லது என்று சிரித்தார்கள். தங்கள் தங்கள் தேரை ஒருவர்க்கொருவர் எதிரில் செலுத்தினார்கள். கொடிய வேகத்தோடு பகைமை பாராட்டினார்கள். உடம்பின் எல்லா உறுப்புகளிலும் கொடிய விஷ பாணங்களைத் தைக்கும்படி ஒருவர்க்கொருவர் பிரயோகித்தார்கள்!

அப்போது தருமர் ஒரே வகையான ஐந்து பாணங்களை துரோணாசாரியரின் தேர்க்கொடி, குதிரைகள், சாரதி, தேர்ச் சக்கரங்கள், தேர் ஆகியவை மீது தனித்தனியே ஒன்றன்பின் ஒன்றாக வர்ஷித்தார். முதலாவது அம்பு துரோணரின் வேதக்கொடியை அறுத்தது. இரண்டாவது அம்பு மனத்தைவிட வேகமாகச் செல்லும் தேர்க்குதிரைகளைக் கொன்றது. மூன்றாவது அம்பு தேர்ப்பாகனைத் தீர்த்துக் கட்டியது. நான்காவது அம்பு தேர்ச் சக்கரங்களைச் சிதைத்தது. ஐந்தாவது அம்பு தேரை அழித்தது. இப்படிக் கண் மூடி கண் திறப்பதற்குள் தருமரின் பாணங்கள் ஐந்தும் குறிதவறாமல் சென்று, அவற்றின் குறிக்கு ஆளானவற்றை அழித்தன.

வேறு ஒருவரின் குறுக்கீடும் இல்லாமல் நேருக்குநேர் தருமரும் துரோணரும் தனித்துச் செய்த யுத்தத்தில், தருமரால் பிரயோகிக்கப்பட்ட அம்புகளால் ஆசாரியருக்குத் தீங்கு உண்டாகி, அவருடைய வில்லும் இரண்டாக ஒடிந்தது. அச்சமயத்தில் தருமர் வில்லாசிரியரைப் பார்த்து, "ஆசாரியரே! நீர் பிறந்த சாதியோ பிராமணசாதி. அதிலும் வேதம் வல்ல சிறந்த ஆசிரியர். அத்துடன் உம்மிடம் எனக்கு கௌரவப்புத்தி இருக்கிறது. இதனால் அம்பொன்றையும் நான் உம்மேல் செலுத்த மாட்டேன். பயப்படாதீர். நீர் களைப்பாறச் செல்லும்!" என்றார்.

தருமரை வென்று சிறைபிடித்துப் போக வந்த துரோணாசாரியார், தம்மை அவருடைய அம்புகள் வென்றதைக் கண்டு வெட்கப்பட்டார். அதனால் துரோணர் சோர்ந்த மனத்துடன் தமது உடம்பாகிய பாரத்தைச் சுமந்து கொண்டு வாட்டத்தோடு திரும்பிச் சென்றார்.

தருமரிடம் தோற்றோடிய துரோணாசாரியார், திரும்பவும் அவரிடம் தோற்கவோ ஜெயிக்கவோ எண்ணி வேறு ஒரு தேரில் கோபத்துடன் ஏறிக் கொண்டார்.

தருமருக்கு உதவியாக அவர் பக்கத்தில் நின்று போரிட்ட வீரர்கள் துரோணாசாரியாரின் தோல்வியையும், தங்கள் ராஜாவின் வில்லாற்றலையும் கண்டு மகிழ்ந்தார்கள். அதே சமயம் வில்லாசிரியர் மனம் கொதித்துப் போருக்காக திரும்பவும் மற்றொரு தேரில் ஏறியதைக் கண்டதும், அவர்கள் கோபித்து துரோணர்மீது யுத்தத்தைத் தொடங்கினார்கள்.

மத்ஸ்யதேசத்து விராடராஜனும், திருஷ்டத்யும்நனும், குந்திபோஜதேசத்து ராஜாக்களும் ஒருவரையொருவர் முந்திச் சென்று, ஒரு யானையைப் பல சிங்கங்கள் வளைத்துக் கொள்வது போல துரோணாசாரியாரைச் சூழ்ந்து கொண்டு போரிட்டார்கள்.

கர்ணன், சகுனி, சோமதத்தன், துரியோதனன் முதலியவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் துரோணாசாரியார் சேனையிலிருந்து யுத்தம் பண்ணினார்கள். அதேபோல் பாண்டியன், நகுலன், திருஷ்டத்யும்நன், அபிமந்யு முதலியவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தருமரின் சேனையிலிருந்து யுத்தம் செய்தார்கள். இவர்கள் எல்லோரும் அந்த க்ஷணத்தில் யுத்தபூமியில் எங்கெங்கு நின்று எவரெவரோடு போரிட்டார்கள் என்று சொல்ல முடியாதபடி ஒரு பயங்கர யுத்தம் நடந்தது. அதனால் கோடிக்கணக்கான வீரர்களின் உடம்பு ஒவ்வொன்றும் நூறு துண்டுகளாகச் சிதைந்தது.

துரோணாசாரியாரின் சேனையிலுள்ள பல்லாயிரக் கணக்கான சதுரங்க வீரர்களும் அரசர்களும், தருமர் பக்கத்து வீரர்களும் அரசர்களும் எறிந்த அம்புகளாலும், வாள்களாலும், வேல்களாலும், விற்களாலும் தலை துண்டிக்கப்பட்டு மாண்டார்கள்.

மேலும், தருமர் பக்கத்து வீரர்கள் எதிரிகளை ஆயுதங்களினால் குத்தினார்கள். மல்யுத்தம் செய்து வெறுங்கையால் அடித்தார்கள். பகைவர்களின் தேரை தங்கள் தேரால் மோதியழித்து, தங்கள் தேருக்கு ஆபத்து ஏற்படாதவாறு விலகினார்கள். ஒரு யானையிலிருந்து மற்றொரு யானைமேல் பாய்ந்து எதிரியைக் கொன்றார்கள். தங்கள் வாளால் வெட்டுண்ட பகைவரின் முண்டங்கள், தலை போன பின்பும் கொஞ்ச நேரம் போரிடும் பாவனைச் செய்வதைக் கண்டு கொண்டாடினார்கள். பகைவரால் ஆயுதம் இழந்த வீரர்கள், இறந்து துண்டிக்கப்பட்டுக் கிடக்கும் பகைவர்களின் கால்களையும் கைகளையுமே ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு, அவற்றால் பகைவர்களைத் தாக்கினார்கள். மற்றும் தருமர் பக்கத்து வீரர்கள் பண்ணிய கொடூர யுத்தத்தால், கௌரவ சேனையிலுள்ள ஜாதிக் குதிரைகள் துண்டங்கள் பட்டு மாண்டன. யானைக் கூட்டங்கள் இறந்து கீழே விழுந்தன. தேர்கள் பல துண்டுகளாகிச் சிதைந்தன.

காலாள் வீரர்கள் இப்படித்தான் அழிந்தார்கள் என்று சொல்ல முடியாதபடிச் செத்தார்கள்.

அப்போது பாண்டவ சேனாவீரர்கள், பூர்ண சந்திரனைப் போன்ற கௌரவ சேனாவீரர்களைப் பார்த்து, "உங்கள் சேனை தோற்றது!" என்று கூறி நிந்தித்தார்கள்.

அதற்கு அவர்கள், "உங்கள் அரசராகிய தருமருடைய வில்லாற்றலால் எங்கள் சேனை அழிந்தது!" என்று ஒப்புக் கொண்டார்கள். மேலும், அவர்கள் தங்கள் சேனாதிபதியாகிய துரோணரின் தோல்விக்கு மனம் வருந்தினார்கள்.

பின்பு, இறந்தவர்கள் போக இரண்டு பக்கத்திலும் உயிரோடிருந்த அரசர்கள் பகைமை கொண்டு ஒருவரை யொருவர் எதிர்த்து, ஒருசேனை அரசர்கள் போல நெருங்கி நின்று போரிட்டார்கள். அச்சமயத்தில் பெருஞ்சேனையுடன் பீமப்புத்திரனாகிய கடோத்கஜன் பாண்டவசேனைக்கு உதவியாகப் போரிட வந்தான்.

கடோத்கஜனும், அபிமந்யுவும், மற்றும் பல அரசர்களும் மிகவும் கோபித்து துரோணரை எதிர்த்துப் போருக்குச் சென்றார்கள். அவ்வளவுதான். கௌரவசேனை சூரியனைக் கண்ட பனி போல, இருந்தவிடம் தெரியாமல் உடனே விரைந்தோடி மறைந்தது.

மற்றும் பாண்டவ சேனாவீரர்களால், விதுரன் துரியோதனனுடைய ராஜசபையிலே ஒடித்த வில் போல, கௌரவ சேனாவீரர்கள் பலர் தலைவேறு முண்டம் வேறாகி இறந்தார்கள். அப்படி இறந்தவர்கள் போக உயிரோடு எஞ்சியிருந்த அரசர்களும், கர்ணனும் தோற்று வேகமாக ஓடிப்போய் துரியோதனனை அடைந்தார்கள்!

துரியோதனனிடம் போய்ச் சேர்ந்த அரசர்கள் எல்லோரும் அவனிடம், "ராஜராஜனே! வேதக்கொடியுடைய வில்லாசிரியனை தருமன் போரிட்டுத் தோற்கச் செய்தான்!" என்றார்கள்.

அதுகேட்டு துரியோதனன் சினத்தால் மனம் பொங்கினான். வினைப் பயனைச் சிறிதும் நினைத்துப் பார்க்காத துரியோதனன், 'இப்போதே பாண்டவர்க்கு பூலோக அரசாட்சி நிலைபெற்றதாகி விட்டது!'

என்றெண்ணி, கோபத்துடன் வாயுவேகமாகப் போருக்குப் புறப்பட்டான்.

தன்பக்கத்து சதுரங்கச் சேனா வீரர்களும் அரசர்களும் மாண்டு கிடக்கும் நிலையைப் பார்ப்பதற்கோ என்னவோ, துரியோதனன் அவ்வளவு வேகமாக பாண்டவர் மேல் யுத்தத்துக்குச் சென்றான். அப்படிப் போகும்போதே தன் பக்கத்தவர்களிடம், "மிக நெருங்கி வேகமாகச் செல்லுங்கள்!" என்று கூறிக் கொண்டே, அவர்களுக்கு முன்னே போனான்.

மீண்டும் போருக்கு வந்த துரியோதனனும், அவனுக்குத் துணையாக வந்த அரசர்களும், சேனாவீரர்களும் ஒழுங்காக அணிவகுத்துப் போர் செய்தார்கள். அப்போது அபிமந்யு அங்கு வந்து தனது அம்புகளால் துரியோதன சேனாவீரர்களின் உடம்பையெல்லாம் பிளந்து தள்ளினான். அபிமந்யு தானொருவனாகவே போர்க்களம் எங்கும் தேரைச் செலுத்தினான். எதிர்த்த அத்தனை வீரர்களையும் வில்லை வளைத்து அம்பு மழைப் பொழிந்து கொன்றான். அவனுடைய கணைகளால் பகைவர்களின் தேர்களும், யானைகளும், குதிரைகளும் அழிந்தன. அப்படித் துண்டாகி அழிந்த மிருகங்களின் ரத்த வெள்ளம் போர்க்களம் எங்கும் பரவியது. அதனால் அந்த யுத்தபூமி பார்ப்பதற்கு மாலைப் பொழுதில் காணப்படும் செவ்வானம் போல் தோன்றியது.

முன்பு ஒரு தடவை தருமரிடம் தோற்றுப் பின்வாங்கிய துரோணாசாரியார், திரும்பவும் மற்றொரு தேரில் ஏறியவர் அவரிடமே வந்து யுத்தம் புரிந்தார். பழையபடியே தருமர் தமது அம்புகளால் ஆசாரியாரின் தேரைச் சிதைத்தார்; வில்லை முறித்தார். அதனால் தோற்ற துரோணர் மீண்டும் ஏறிப் போர் செய்வதற்கு வேறு ஒரு தேர் இல்லாமல் சோர்ந்து நின்றார். அப்போது பலநூறு ரதாதிபதிகள் அவரைப் பாதுகாத்து, போர்க்களத்தைவிட்டு அப்பால் அழைத்துச் சென்றார்கள்.

அபிமந்யுவை எதிர்த்த துரியோதனன் முதலிய அரசர்களும், சதுரங்கச் சேனா வீரர்களும் அவனால் தோற்கடிக்கப்பட்டுத் திரும்பி ஓடினார்கள். அதுகண்டு இந்திரனுக்கு நண்பனாகிய பகதத்தன், தனது போர் வலிமையைக் காட்டுவதற்கு அதுவே சரியான நேரம் என்று நினைத்து, கோபத்துடன் பாண்டவசேனையை எதிர்த்து வந்தான்.

பகதத்தனுடைய யானை ஐராவதம் போல் இருந்தது. அவனும் தேவேந்திரன் போல் இருந்தான். அவனுடைய வில்லும், தன்னைப் பகைவர்கள் எதிர்க்கையில் அந்த இந்திரன் கையில் எடுக்கும் வில்லாக இருந்தது. அவனை எதிர்த்துப் போர் செய்ய நினைக்கவும் எந்த வீரர்களுக்கும் தகுதியில்லை என்று துதிபாடகர்கள் பிருதாவளிகளைப் பாடுவார்கள். அப்படிப்பட்ட பகதத்தனுடைய சேனையில் இருபதினாயிரம் யானைகள் இருந்தன. அவற்றை அவனைக் காட்டிலும் பகைமை கொண்ட வீரர்கள் செலுத்தினார்கள். மேலும், பகதத்தன் பதினாயிரம் இளைய யானைகளுக்குச் சமமான புஜபராக்கிரமம் கொண்டவன். அவன் முருகக் கடவுள் போலவும் திருமால் போலவும் அசுரர்களையழித்து, தேவேந்திரனுக்குத் தேவலோகத்தை மீட்டுக் கொடுத்த சிநேகிதன்.

போருக்கு வந்த பகதத்தன், தான் ஏறிவந்த மகாமேருமலை போன்ற யானையின் தலையிலே கோபத்தோடு அடித்தான். இடியோசை போல வீரவாதம் பேசி ஆரவாரித்தான். நெஞ்சிலே கோபத்தீ எழச் சினந்தான். அதனால் அவன் நெற்றியிலே வியர்வை வழிந்தது. கண்கள் தீப்பொறிகளைச் சிந்தின. அவன் காற்றாய் வேகத்துடன் யுத்தகளத்துக்கு வந்தான்.

அப்போது போரில் தோற்றுத் திரும்பிய துரியோதனனுடைய சேனைகள், தங்களுக்கு உதவியாக பகதத்தன் போருக்கு வந்ததைக் கண்டதும், உற்சாகம் பெற்று மீண்டும் போரிடத் தொடங்கின. அதுபோல அரவக் கொடியுடைய துரியோதனனும், அவன் தம்பிமார்களும், அவனுக்குத் துணையாக வந்த மற்ற அரசர்களும் மறுபடியும் திரும்பி வந்து போருக்கு ஆயத்தமானார்கள். அப்படித் திரும்பவும் போருக்கு வந்தவர்களைக் கண்டு முரசக்கொடியுடைய தருமரும் அபிமந்யுவும் உற்சாகம் கொண்டார்கள். அவர்கள் தாமரைமலர் போன்ற தங்கள் கைகளைத் தட்டிக் கூத்தாடினார்கள். பகைவர்களைச் சந்தோஷத்தோடு வரவேற்றார்கள். அச்சமயத்தில் இரண்டு பக்கத்தவர்களுக்கும் நடுவே கடும்போர் மூண்டது.

கயிலாசகிரியும் ஒப்பாகாத வெள்ளையானை மேல் ஏறி வந்த பகதத்தன், "பீமன் எங்கே இருக்கின்றான்? அவன் வலிய தலையைத் துண்டிப்பேன். பின்பே நான்

யுத்தபூமியிலிருந்து திரும்புவேன்!'' என்று பலவாறு நிந்தித்துக் கொண்டே வந்தான்.

பகதத்தனுடைய ஆணவத்தைக் கண்டதும் பீமன் ஆத்திரம் அடைந்தான். உடனே பீமன் பகதத்தனுடைய மலை போன்ற கைகளை ஒடியும்படி தன் கைகளால் பிடித்து மடக்கிவிட்டு, அவன் மார்பு குழிபடும்படி தன்னுடைய ஒரு கையால் குத்தினான். பகதத்தனுடைய யானையின் நெற்றி, முகப்பட்டயத்தோடு குழிவிழும்படி தனது கதாயுதத்தால் ஓங்கி அடித்தான். பின்பு, வேகத்தோடு பீமன் தனது தேரில் பாய்ந்து ஏறிக் கொண்டான்.

அதனால் பகதத்தனுடைய நெஞ்சிலே கோபம் பீறிட்டு எழுந்தது. அவன் வில்லை வளைத்து பீமன் மேல் அம்புக் கூட்டங்களைப் படுபயங்கரமாகத் தொடுத்து விட்டான். அப்படி பகதத்தன் பிரயோகித்த அம்புகள் விரைந்து சென்று பீமனுடைய கதாயுதத்தைத் தாக்கி விழுந்தன.

பீமன் அதனால் கோபம் கொண்டான். உடனே வில்லை வளைத்து உக்கிரத்தோடு அம்புகளைப் பிரயோகித்தான். பகதத்தனும் பீமன்மேல் அதே சமயம் அம்புகளை வர்ஷித்தான். அவர்கள் இரண்டு பேரும் ஒருவர் தொடுத்துவிட்ட அம்புகள் மற்றொருவர்மேல் படாதபடி ஊக்கத்தோடு எதிர் பாணங்களைப் பிரயோகித்துப் போரிட்டார்கள். அதனால் இருவருடைய அம்புகளும் நடுவிலேயே ஒன்றையொன்று தாக்கிக் கீழே விழுந்து அழிந்தன.

பகதத்தன் ஏறி வந்த யானைக்குப் பூண்போட்ட நான்கு தந்தங்களும் இருந்தால், ஐராவதமும் அதற்குச் சமமாகாது. பகதத்தனின் யானைக்குப் பெயர் இன்னது என்று சொன்னால், சுப்ரதீகமும் அதற்குச் சமமாகாது. அதன் வலிமையைக் கண்டால், அஷ்டத்திக்கஜங்களும் தங்களுக்கு அப்படிப்பட்ட பலம் இல்லையே என்று வெட்கப்படும். ஆயுதங்களைத் தரமறிந்து எதிரிமேல் பிரயோகிக்கின்ற யுத்தகளத்திலே செம்புள்ளிகள் கொண்ட முகமும், துதிக்கையும், கன்னங்களிலிருந்து வழிகின்ற மதஜலமும் உடைய பகதத்தனுடைய அந்த யானை செய்யும் போரை, யாராலும் விவரித்துச் சொல்வதற்கு முடியாது!

அப்படிப்பட்ட அந்த யானை யுத்தகளத்தில் தனக்கு எதிர்பட்ட யானைகளைத் தனது துதிக்கையின் முனையால் உயரத் தூக்கி ஆகாயத்திலெல்லாம் வீசி எறிந்தது. இளஞ்சந்திரனைப் போன்ற தனது பருத்த தந்தங்களால் ரதாதிபதிகளின் ரதங்களையெல்லாம், அவர்களின் கண்முன்னாலேயே உடைத்தது. பலமுள்ள தனது அழகிய வாலால் குதிரைகளையெல்லாம் ஓசையோடு ஒருவிதமாக அடித்து வீழ்த்தியது. பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் பாரம் அதிகமாவதால் தாங்க முடியாமல் அபயம் வேண்டி கீழே விழும்படி நடக்கின்ற தனது கால்களால், காலாள் வீரர்களின் கூட்டத்தை மிதித்துத் துவைத்தது!

இவ்வாறு பகதத்தனாலும், அவனுடைய யானையாலும் பாண்டவசேனை பெரிதும் சோர்வடைந்தது. அதுகண்டு தருமர் நல்லுபாயம் வேண்டி ஆலோசித்தார். கடைசியாக அவர் மற்றொரு பக்கத்தில் ஆரவாரத்துடன் போரிடும் சஞ்சத்தகரோடு சண்டை செய்யும் தமது தம்பி அர்ச்சுனனின் தேர்ச்சாரதியும் குற்றமற்றவனுமான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை மனதாரத் தியானித்தார்!

அதேசமயம் சஞ்சத்தகரை வென்று நின்ற அர்ச்சுனனிடம், கண்ணபிரான் தருமரின் தியானத்தை உணர்ந்து, "மைத்துனா! பெரியோரால் அறிவிக்கப்பட்ட அம்புகளால் நீ எண்பதினாயிரம் வீரர்களின் உயிரை இப்போது மாய்த்து, பலத்தோடு வில்வித்தையில் ஜயம் உண்டாகும்படி யுத்தம் பண்ணினாய். ஆகையால், இங்கே உனக்குப் பகை ஒழிந்தது. இனிமேல் நீ துரிதமாகப் போர்க்களத்தின் உள்ளே பிரவேசித்து, உனது உயிர் போன்ற தமையனாகிய தருமனுடன் சேர்ந்து கொள். அங்கே போரிடும் பகதத்தனுடைய உயிரை, அவன் உடம்பிலிருந்து பறிப்பதற்காக இந்த வினாடியே என்னோடு வா!" என்றான்.

அதே வினாடியில் வாயுவைப் போன்ற குதிரைகள் பூட்டிய மனத்துக்குச் சமமான தேரின்மீது அர்ச்சுனனுடன் கண்ணபிரான் சென்றான். அவன் அப்படி நெருப்போடு தொடர்ந்து செல்லும் காற்று போல போகும் போதே, ஜயத்துக்கு அடையாளமான சங்கை வாயில் வைத்து ஜயசங்கம் முழங்கிக் கொண்டு சென்றான். மலைகளின் சிறகையறுக்கும் வச்சிராயுதம் உடைய இந்திரன் போலவும் சூரியன் போலவும் யானைகள் சூழப் போருக்கு வந்த

பகதத்தனை, ஒரே வினாடியில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனோடு நெருங்கினான்.

தன் எதிரே யுத்தத்துக்கு வந்த அர்ச்சுனனைக் கண்டதும் பகதத்தன் பீமனோடு செய்த போரைக் கைவிட்டான். அர்ச்சுனனைப் பார்த்து ஏளனப் புன்னகை செய்தான். 'இன்றையப் போரில் சுலபமாகச் சபதம் செய்து, அதன்படி எதிர்த்துப் போர் செய்தல் அருமையானது!' என்று எண்ணினான். பின்பு, அவன் மனம் முழுவதும் கோபத்தீப் பற்றவும், இடிபோல வீரவாதம் பேசிக் கொண்டும் அர்ச்சுனனுக்கு நேராக தனது வலிமையான வில்லை வளைத்தான். மின்னலைப் போன்ற அநேக அம்புகளை அவன் கொடூரமாக் அர்ச்சுனன்மேல் பிரயோகித்தான்.

பகதத்தனுடைய பகையழிக்க வல்ல அம்புகள் கணத்தில் விரைந்து சென்று அர்ச்சுனனுடைய துவஜத்தை அறுத்துத் தள்ளின. அர்ச்சுனனுடைய தேர்க்குதிரைகளின் உடம்பிலே தைத்து, அவற்றைத் துன்பப்படுத்தின. சிவனாலும் பிரம்மாவாலும் அறிய முடியாத பார்த்தசாரதியாகிய கண்ணனையும் அந்த அம்புகள் இம்சித்தன. அர்ச்சுனனும் அந்த அம்புப் பிரயோகத்துக்குத் தாக்குண்டு தன்வசம் இழக்கும் நிலைக்கு ஆளானான்.

ஆனால், அர்ச்சுனன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். மிக்கப் பலத்துடன் பலம் பொருந்திய தனது வில்லை வளைத்து, பகதத்தன் மேல் கொடிய பாணங்களைத் தொடுத்துவிட்டான். தான் பிரயோகித்த அர்த்தசந்திர பாணங்களால் அர்ச்சுனன் பகதத்தனுடைய கைவில்லையும், உடம்புக் கவசத்தையும் துண்டித்து அழித்தான். மேலும், பகதத்தன் விடுகின்ற அம்புகளையெல்லாம் தனது எதிரம்புகளால் துண்டாக்கிச் சிதைத்தான்.

அர்ச்சுனனால் தனது அம்புப் பிரயோகம் வீணானதைப் பார்த்ததும், பகதத்தன் அம்பு தொடுப்பதைக் கைவிட்டு, கண்ணன் மேல் ஒரு வேலாயுதத்தை ஆரவாரத்துடன் வீசினான்.

உடனே, முன்பு அசுரர்களையழித்த வேலாயுதம் இப்போது கண்ணனைத் தாக்க வருவதைக் கண்டதும்,

அர்ச்சுனன் எதிர்பாணங்கள் தொடுத்து அதனைத் துண்டாக்கி அழித்தான். பிறகு, சிவபெருமான் போல் வெகுண்டுச் சிரித்தான். அடுத்தகணம் அவன் பகதத்தனுடைய யானைக் கூட்டங்கள் அழியும்படி, மேகக் கூட்டங்கள் போல அம்புகளைச் சரமாரியாக விட்டான்.

பார்த்தன் அப்படி வர்ஷித்த அம்புகள் விரைந்து சென்று பகதத்தனுடைய மதயானைகளின் துதிக்கையை அறுத்தன; தலையை அறுத்தன; குடலை அறுத்தன; காதுகளை அறுத்தன; கால்களை அறுத்தன; வயிற்றை அறுத்தன; தொடையை அறுத்தன; உடம்பு முழுவதையும் துண்டாக்கின. அவ்வாறு பார்த்தனின் அம்புகள் அந்த யானைகளையழித்தன!

அர்ச்சுனனால் தனது யானைகளும், யானைவீரர்களும் மாண்டதைக் கண்டு, பகதத்தன் அளவற்றச் சினம் கொண்டான். அந்தக் கோபத்துடன், தான் முன்பு திருமாலை பூஜித்தபோது அப்பெருமானால் கொடுக்கப்பட்ட தீப்போல் கொடுமையான வேலாயுதத்தை பகதத்தன் அர்ச்சுனன்மேல் உக்கிரத்தோடு எறிந்தான்.

மைத்துனனை நோக்கி வந்த தனது அந்த வேலாயுதத்தை, மோக்ஷத்துக்கு அதிபதியான பகவான் ஸ்ரீகிருஷ்ணன் தன் மார்பிலே ஏற்று, மனக்கவற்சியில் உதவிய அறிவின் நற்பயன் என்று சொல்லும்படி அர்ச்சுனனுக்கு உதவியருளினான்!

பகதத்தன் எறிந்த வேலாயுதத்தைக் கண்ணபிரான் தன் மார்பிலே ஏற்றதும், அவனுடைய எண்ணப்படி அது அவன் மலை போன்ற தோள்களில் ரத்தினாரமாய் விளங்கியது. அந்த அற்புதத்தைப் பார்த்து வானத்தில் போர்க் காண வந்திருந்த தேவர்கள் சந்தோஷித்தார்கள். அவர்கள் ஒப்பற்ற திருவருளின் மூர்த்தியானவனும், அவரவர் செய்த வினைகளுக்கெல்லாம் காரணமானவனும் ஆகிய கண்ணனை மனக்கருத்தோடு வணங்கி, அளவில்லாத அவனது புகழை எடுத்துச் சொல்லித் துதித்தார்கள்.

அப்போது கண்ணன் அர்ச்சுனனிடம், ''பார்த்தா! இதுவே பகதத்தனுடைய உயிரைப் பலிவாங்குவதற்குத் தக்க சமயம்!'' என்று சொல்லி, தனது நாராயணாஸ்திரத்தை அவனுக்குக் கொடுத்தான்.

கண்ணனை வணங்கி தனது இரண்டு கைகளாலும் அந்த அம்பைப் பெற்றுக் கொண்டான் அர்ச்சுனன். பின்பு, ஒரு மாத்திரைப் பொழுதுக்குள், தன் எதிரே யானையோடு வந்த பகதத்தனின் மார்பில் ஊடுருவிச் செல்லும்படி அவன் அந்த அஸ்திரத்தை ஏவினான்.

அவ்வளவுதான். க்ஷணத்தில் விரைந்து சென்ற நாராயணாஸ்திரம் பகதத்தனுடைய மார்பிலே பாய்ந்தது. பிறகு, அவனுடைய முதுகின் வழியாக வெளிப்பட்டு அவனுடைய யானையையும் கொன்றது. நாராயண அஸ்திரத்தால் பகதத்தனின் உடம்பிலிருந்து ரத்தவெள்ளம் வெளியே பாய்ந்து யுத்தபூமியெங்கும் பரவி ஓடியது. அவனுடைய கைகளும், கால்களும், தலையும் தனித்தனியே அந்த அஸ்திரத்தால் அறுபட்டுச் சிதறின. கடைசியாக அவன் இறந்தான்!

நாராயணாஸ்திரம் பகதத்தனுடைய யானைக் கூட்டங்களையும் விடவில்லை. அவற்றையும் கொன்று முடித்தது.

அர்ச்சுனனால் உண்டான அந்தக் காட்சியைக் கண்டு பூலோகத்து ராஜாக்கள் எல்லோரும் அவனையும் கிருஷ்ணனையும் போற்றிக் கொண்டாடினார்கள்,

பின்பு பிருதாவளிகளும், சங்க நாதமும், அநேக வாத்தியங்களும் முழங்க போருக்கு வந்த காந்தார தேசத்து ராஜாக்கள், ''இன்றைக்கு விற்போர் செய்து இந்த அர்ச்சுனனைக் கொல்லாமல், நாங்கள் யுத்தகளத்தைவிட்டுப் போகமாட்டோம்!'' என்று வீரவாதம் பேசிக் கொண்டே, அர்ச்சுனன்மேல் போருக்கு வந்தார்கள். அப்படி வந்த காந்தாரத்து அரசர்கள் அர்ச்சுனனை நான்கு பக்கமும் நன்றாக வளைத்துச் சூழ்ந்து கொண்டார்கள்.

அச்சமயத்தில் காந்தாரதேசத்து மன்னனாகிய சகுனியின் புத்திரர்களான வ்ருஷஜயன் ஜயன் ஆகிய இருவரும் கோபத்தால் கண்கள் சிவக்க, சேனையின் முன்னே நின்று அர்ச்சுனன்மேல் மேகக் கூட்டம் போல் பாணப் பிரயோகம் செய்தார்கள். அர்ச்சுனன் அவர்களுக்கு எதிராக அம்பு தொடுத்தான். அவன் தொடுத்த அம்புகளால் அந்த இரு புதல்வர்களும் இறந்தார்கள்!

பன்னிரண்டாம்நாள் போராகிய அன்று, அர்ச்சுனன் தான் ஒருவனாகவே தனித்து நின்று அநேக ஸம்சப்தகர்களை வீரசொர்க்கம் சேரும்படிக் கூர்மையான அம்புகளால் கொன்றான். குபேரனுடைய கைலாசத்தைப் போன்ற வெள்ளை யானையுடன் போருக்கு வந்த பகதத்தனை, அந்த யானையுடன் போர் செய்து மாய்த்தான். மேலும், சகுனியின் குமாரர்களையும் சாகடித்தான். ஆகையால், தருமர் முதலிய அரசர்கள் அழிப்பதற்குத் தகுதியானவர்கள் அப்போது எதிர்பக்கத்திலே யாரும் இல்லை!

யுத்தகளத்தின் ஒரு பகுதியில் அர்ச்சுனன் இப்படிப் போரிட்டு ஜெயிக்க, மற்றொரு பக்கத்திலே புலி போன்ற சகுனி, அர்ச்சுனனுடைய கணைகளால் அழியாத அரசர்கள் தொடரச் சென்று, தேர்மீது இருக்கும் ஆண்சிங்கம் போன்ற தருமரை விற்போரில் எதிர்த்தான்.

அதுகண்டு தருமர் சகுனியை நோக்கி, “நீ வஞ்சகமாகப் போரிட்டு வென்ற சூதுப் போரில்லை இது. நான் தொடுக்கும் இந்த அம்புகளும் சூதாட்ட பகடைக்காய்கள் இல்லை. முன்பு என்னைப் பகடைக்காய்களால் வென்ற உன்னை, நான் இப்போது அம்புகளால் ஜெயித்திடுவேன்!” என்று வீரவாதம் பேசி, வில்லை வளைத்து அவன்மேல் அநேக அஸ்திரங்களை வர்ஷித்தார்.

உடனே சகுனி தருமருடைய அம்புகளுக்குப் பலியாகாமல் இருப்பதற்காக, புறமுதுகிட்டு ஓடியவர்களுக் கெல்லாம் முன்னால் தனது தேரைச் செலுத்திக் கொண்டு அதிவேகமாக ஓடிப் போனான்.

சகுனியோடு வந்து தருமரை எதிர்த்து யுத்தம் செய்த அரசர்களில் அதிகமான பேர்கள், அவருடைய விஷ அம்புகளால் தாக்குண்டு இறந்தார்கள். அப்படி இறந்தவர்கள் போக மிஞ்சியிருந்தவர்கள், தோற்று ஓடுவது தங்களுக்குத் தகுதியே என்று எண்ணியவர்களாகத் திரும்பி ஓடி தங்கள் ஊரை யடைந்தார்கள். அப்போது தருமருடைய பாணங்களால் இறந்த அரசர்களின் குருதி வெள்ளம் பரவியதால், யுத்தபூமி செந்தாமரைத் தடாகம் போல் காட்சி தந்தது!

யுத்தகளத்தில் வேறொரு பக்கத்தில் துரோணாசாரியாரும், அவர் குமாரன் அசுவத்தாமனும், அங்கபூபதி கர்ணனும்,

அரவக்கொடியுடைய துரியோதனனும், அவன் தம்பிமார்களும் கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் பீமனை எதிர்த்துப் போரிட்டு, தாங்கள் தொடுத்த அம்புகளால் ஆகாயத்தை நிறைந்தார்கள்.

நாகராஜனுக்கு கருடன் அழிவதில்லை! கொடிய சரபத்தை சிங்கங்கள் கொல்வதில்லை! அசுரர்கள் யுத்தத்தில் திருமாலை ஜெயிப்பதில்லை! அதுபோல முச்சிகரங்களை ஒடித்த வாயுவின் குமாரனாகிய பீமனுடைய உடம்பில் பகைவரின் பாணங்கள் தைக்கவில்லை! பகைவர்கள் பிரயோகித்த அம்புகளெல்லாம் கல்மலையில் விழுந்த மழைத் துளிகள் போல, பீமனுடைய உடம்பிலே பட்டுத் தெறித்து விழுந்தன!

அப்போது, தீய அசுரர்கள் வாழும் மூன்று பட்டணங்களையும் அழிக்க சிவபெருமான் வளைத்த மேருமலையாகிய வில் போன்ற தனது ஒரு வில்லை பீமன் எடுத்தான். அதேகணத்தில் அவன் பகை மன்னர்களின் ரதங்களெல்லாம் வல்லவன் சுற்றியெறிந்த பம்பரம் போல் சுற்றும்படி வில்லின் இரண்டு கோடியையும் வளைத்தான்.

முதலில் பீமன் ஒன்று முதல் அநேக அம்புகளைப் பிரயோகித்து, பகை அரசர்களில் பலரை இனிப் போரைப் பற்றியே நினைக்க மாட்டோம் என்று உறுதி கொள்ளும்படி அழித்தான். பின்பு, தனது வில்லாற்றலால் துரியோதனனின் மனத்தைக் கோபத்தால் கொதிக்கச் செய்தான்.

துரியோதனனுடைய கோபத்தையறிந்ததும், அவனுடைய தம்பிமார்கள் பீமனை நோக்கி தங்கள் வில்லை வளைத்தார்கள். அதுகண்டு பீமன் ஆரவாரித்தான். தனது அம்புகளால் அவர்களுடைய வில்லையும் நாணியையும் அறுத்துத் தள்ளினான்.

துரியோதனனுடைய தம்பிமார்கள் தங்கள் வில்லையும் நாணியையும் பீமன் அறுத்ததைக் கண்டதும், உலகத்தைப் படைத்த பிரமனாலும் பீமனை எதிர்த்து யுத்தம் பண்ணி ஜெயிக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

மேலும், பீமன் தனது பாணங்களால் துரியோதனனும், அவன் தம்பிமார்களும், துரோணாசாரியரும், அசுவத்தாமனும்,

கர்ணனும், அவர்களுக்குத் துணையாக வந்த அரசர்களும் திகைத்து நிற்க, அவர்களுக்கு மரண வேதனையைக் கொடுத்தான்.

பிறகு, அந்த யுத்தகளத்தில் இறவாமல் இருந்த அரசர்கள், 'நமது பெரிய சேனை முழுவதும் சோர்வடைந்து விட்டது. இனிமேல் நாம் ஒரு காரியமும் செய்வதற்குப் பலம் இல்லாதவர்களானோம். நமக்கு எதிரே, வளைத்த வில்லோடு பீமன் நிற்கின்றான். கண்ணபிரான் சாரத்தியம் செய்ய அர்ச்சுனன் நிற்கின்றான். அம்புகளால் துரோணாசாரியரின் பலத்தையழித்த தருமர் நிற்கின்றார். இவர்களை எதிர்த்து நெருங்குவது யாருக்கும் முடியாது!' என்று எண்ணி, புறமுதுகிட்டுப் பாசறைக்குப் போனார்கள்.

தருமரை உயிரோடு சிறைபிடிப்பதற்காக பல அரசர்களுடன் வந்து போரிட்ட துரோணாசாரியாரும், முடிவில் அவரிடமே தோற்றுப் போய் பாசறைக்குத் திரும்பிச் சென்றார். துரியோதனன் போரில் தோற்று மிகவும் அவமானம் அடைந்ததால் தம் பக்கத்து வேந்தர்கள் மகிழ்ச்சிக் கூத்தாட, அவர்களோடு பாண்டவர்களும் தங்கள் பாசறைக்கு வெற்றிப் பெருமிதத்தோடு போய்ச் சேர்ந்தார்கள்!

மழையால் காடு பூப்பூத்தது போல அழகிய நிறம் கொண்ட சிறந்த குதிரைகள் யுத்தத்தில் பாண்டவர்களால் மாண்டதைக் கண்டு சூரியனும், தன் தேர்க்குதிரைகளுக்கும் அவர்களால் அழிவு ஏற்படுமோ என்று பயந்தவன் போல, அப்போது அக்குதிரைகளோடு வேகமாக மேற்குப் பக்கத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

முரசக் கொடியுடைய தருமராலும், பீமனாலும், அர்ச்சுனனாலும், அபிமந்யுவாலும் இறந்த தங்கள் பக்கத்து ராஜாக்களுக்காக துரியோதனனுடன் கூடி, அவன் பக்கத்து அரசர்கள் எல்லோரும் மனமிரங்கிப் புலம்பினார்கள். அதேசமயம் அவர்கள், தனது யானையோடு இறந்த பகதத்தனுடைய பராக்கிரமத்தையும் பாராட்டி எடுத்துக் கூறினார்கள்.

அப்போது ராஜராஜனாகிய துரியோதனனுக்கு முன்னால் உட்கார்ந்திருந்த துரோணரைப் பார்த்து, பகைவர்களுக்குப் பேரிடி போல் அழிவு செய்யும் கர்ணன்,

''ஆசாரியரே! நேற்று நீர் ஆலோசிக்காமல் தருமனைச் சிறை பிடிப்பேன் என்று உறுதியாகச் சபதமிட்டீர். உம்முடைய அந்தச் சபத வார்த்தைகள் இன்று உண்மையாக நடந்து விட்டதே! வேதம் ஓதுவதே தொழிலாகக் கொண்ட பிராமணர்க்கு என்ன உறுதியான வீரம் இருக்கிறது?'' என்று நிந்தை பேசி, பரிகாசமாகச் சிரித்தான்.

கர்ணன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு துரோணாசாரியார் ஒருகணம் மனம் கலங்கினார். பின்பு, அவர் கண்கள் சிவக்க, இடியும் அஞ்சித் திடுக்கிடும்படி கர்ணனைக் கோபித்தார். அக்கோபத்துடன், ''தவறாது விற்போர் புரியும் கர்ணன் மாத்திரம் இல்லை. நம் பக்கத்தில் உள்ள அரசர்களில் தருமனை எதிர்த்துப் போர் செய்யும் வலிமையுள்ளவர்கள் யார்தான் இருக்கின்றார்கள்?'' என்றார்.

மேலும் அவர் துரியோதனனிடம், ''ராஜராஜனே! இன்றைக்கு இல்லாவிட்டால் போகட்டும். நாளைக்காவது



தருமனை எதிர்த்துப் போரிட்டு, விற்போரில் அவனுக்குத் துன்பம் கொடுத்து சிறைபிடித்து வரும் அரசர்க்கோ அல்லது அவனால் மாண்டு போகும் வீரர்க்கோ நீ அனுமதி கொடு. பராக்கிரம விஷயத்தில் ஒருவரையொருவர் பக்ஷபாதமாக நிந்தித்துப் பேசுவது நல்லது இல்லை!'' என்றார்.

துரோணாசாரியார் மீண்டும் பேசத் தொடங்கி எல்லோரையும் பார்த்து, ''வீரர்களே! என்னைப் போல் நானே வில்லாளி என்று சபதமிட்டுக் கூறாமலேயே, பலசாலிகளாய் இருப்பவர்கள் தங்கள் புஜபராக்கிரமத்தால் போர் செய்து நாளையோ மறுநாளோ தருமனைச் சிறைபிடித்துக் கொண்டு வாருங்கள். அப்படி தருமனைச் சிறைபிடித்து வரும் வீரனே, பூலோகத்துக்கு மட்டுமில்லாமல் மற்ற உலகங்களுக்கும் எட்டுத் திக்குகளுக்கும் சிறந்த வீரனாவான்! என்னைப் போல் வில்லேந்தி அம்பு தொடுப்பவர்கள் எவருமில்லை என்னும் வீரர்க்கும், கொடிய யுத்தத்தில் தோல்வி ஏற்படுவது சகஜமே. ஆகையால், வீண் வார்த்தை பேசுவதால் பயன் ஒன்றுமில்லை. பராக்கிரமம் உடைய வில்வீரனாகிய தருமனின் அம்புகளுக்கு, ஸ்ரீராமபிரானுடைய அம்புகளை உவமையாகக் கூறினாலும் மிக்கத் தீவினையாகும்! நான் தொடுத்த பலவகையான அம்புகளையும் அந்தந்த வகையான அம்புகளைப் பிரயோகித்து தருமன் அழித்தான். தருமனோடு நான் செய்த யுத்தத்தில் பிரயோகித்த அம்பு விதையைப் போன்றது. அவன் எனக்கு எதிராகத் தொடுத்த அம்போ விளைச்சலைப் போன்றது. பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் போரில் சமமானவர்கள் ஒருவரும் இல்லை என்று துர்க்கையை சாட்சி வைத்து எல்லா அரசர்களும் சொல்வார்கள். அந்தப் பீமார்ச்சுனர்களுக்கும் தனித்தனியே சமமானவர்கள் உலகத்தில் அதிகமாக இருப்பதாகக் கணக்கிட்டு விடலாம். ஆனால், தருமனின் வில்லாற்றலுக்கும் பலத்துக்கும் சமமானவர்கள் என்று தனியே குறித்துக் கணக்கிட உலகத்தில் ஒருவரும் இல்லை! ஆகையால், வீணாக ஆரவாரம் செய்பவர்கள் செய்யுங்கள். தருமனை எதிர்க்கும் பலம் உள்ளவர்கள் இருந்தால், நாளை முதல் அவர்களுடைய வலிமையைப் பார்க்கலாம். வரம்பற்ற வாய்ப்பேச்சு மாத்திரத்தால் பயன் ஒன்றுமில்லை!'' என்று சொல்லிவிட்டு, தம் இடத்துக்குச் சென்றார்.

பின்பு துரியோதனன், கர்ணன் முதலிய அரசர்களுக் கெல்லாம் விடை கொடுத்து அனுப்பிவிட்டுத் தூங்கினான்.

மகததேசத்து வீரர்களையும், ஸஞ்சப்தகர்களையும், பகதத்தனையும், பூலோகத்தரசர்களையும், சகுனியின் புத்திரர்களையும் கொன்று முடித்து, துரோணரையும் தோற்று ஓடச் செய்த பாண்டவர்களும் நித்திரை செய்தார்கள்.

இறந்த வீரர்கள் தேவர்களானதைப் பார்த்துக் கொண்டே சந்திரன் அஸ்தமித்தான். சந்திரன் மறைந்ததும், கருங்கடலாகிய உறையிலிருந்து புறப்பட்டு மாணிக்க ரத்தினமயமான சக்கரம் போல, சூரியன் உதித்தான்!

3. பதின்மூன்றாம் நாள் போர்

அரவக்கொடியுடைய துரியோதனனின் கட்டளையால் அர்ச்சுனனை யுத்தத்தில் வெல்வதற்காக சேனையரசர்கள் பலர் ஒன்று கூடினார்கள். அந்த ராஜாக்களால் மனம் வருந்திய துரோணாசாரியார் தருமரை ஆயுதங்களால் யுத்தம் பண்ணி ஜெயிக்க நினைத்து, நேற்றைவிட துரிதமாகப் போருக்குக் கிளம்பினார்.

லக்ஷணகுமாரன், துரியோதனனுடைய தம்பிமார்கள், கலிங்கநாட்டு வீரர்கள், மற்றும் பல அரசர்கள் ஆகியோர் கௌரவசேனையில் கூடி போருக்குப் புறப்பட்டார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்கி ஜயத்ரதன் முன்னே சென்றான். அவர்களுடைய சேனைகளால் எழுந்த புழுதிப்படலம் ஆகாயத்தை மறைத்தது.

அன்றையப் போரில் கௌரவசேனைக்குச் சேனாதிபதியாக நின்ற துரோணாசாரியார், அசுரசேனைக்குச் சேனாதிபதியாகிய சுக்கிராச்சாரியார் போல சேனை பகுப்பு அறிந்து, தமது சேனையை சக்கர வியூகமாக அணிவகுத்து நிறுத்தி, தாம் ஒரு தேரின்மீது ஜெயமுண்டாக நின்றார்.

தருமர், அன்றையப் போரில் பகைவர்கள் செய்யப் போகும் யுத்தத்தைப் பற்றி ஒற்றர்களால் அறிந்ததை யெல்லாம் அர்ச்சுனனுக்குக் கூறினார். பின்பு, அவர் கோடைகாலத்துச் சூரியன் போல் உக்கிரங் கொண்டு, தமது சேனைகளோடும் துணையரசர்களோடும் போருக்குச் சென்றார்.

நால்வகைத் தேர்வீரர்களும், மூன்றுவகை யானைவீரர்களும், கணக்கற்ற குதிரை வீரர்களும், பதினெட்டுத் தேசத்து காலாள் வீரர்களும் ஆகிய பாண்டவ சேனை அஷ்டத்திக்குகளிலும் ஆயுதங்களோடு பரவி நின்றது. பிரசித்திப் பெற்றதும் பெரிதும் மானத்தைக் காப்பதுமான பாண்டவசேனையின் அளவு, இவ்வளவுதான் என்று அளவிட்டுச் சொல்வதற்கு ஏற்ற அளவுடையதா என்ன?

பாண்டவசேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் யுத்தத்துக்கு வருகின்ற தன் சேனையை ஒழுங்காக நிற்க வைத்து மகரவியூகமாக அணிவகுத்தான். தான் அப்போது படையை அணிவகுத்த மகரவியூகத்துக்கு வேறு ஒரு நாளை வியூகமும் ஒப்பாகாது என்று தருமரும், கண்ணனும், மற்றவர்களும் நினைத்து மதிக்கும்படி அவ்வளவு திறமையாக அந்த வியூகத்தை திருஷ்டத்யும்நன் வகுத்தான். பின்பு, அவன் அந்த வியூகத்துக்கு முன்னால், ஆகாயத்தில் தேவர்கள் கொண்டாடி துந்துபி முழங்க சேனைக்குத் தலைமை தாங்கி ஆண்சிங்கம் போல நின்றான்.

இருபக்கத்துச் சேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்வதற்குத் தயாராக அணிவகுத்து நின்றன. அப்போது துரியோதனனுடைய கட்டளைப்படி முந்தின நாள் போலவே ஸஞ்சத்தகர்கள் சதுரங்கச் சேனைகளோடு அர்ச்சுனன் எதிரே வந்து நின்று, அவனை வலுக்கட்டாயமாகப் போருக்கு அழைத்தார்கள். அர்ச்சுனன் அது கண்டு கோபித்து அவர்களை எதிர்த்துப் போர் செய்யச் சென்றான்.

யுத்தம் பண்ணத் தொடங்கிய அர்ச்சுனன், வில்லை வளைத்து அம்புகளைச் சரமாரியாக எதிரிகள் மேல் தூவினான்.அப்படி அவன் செய்த போர் காளமேகத்தின் அதிசயத்தன்மை என்று சொல்லும்படி இருந்தது. அர்ச்சுனன் பிரயோகித்த அம்புகளால் அவனை எதிர்த்த யானைகளும், குதிரைகளும், தேர்களும் பலவாறு துண்டிக்கப்பட்டு காற்றின் வேகத்தால் மேலே பறக்கின்ற சருகுகள் போலச் செயலற்றுத் தோற்று அழிந்தன. காலாள் வீரர்களும் மாண்டார்கள்.

மேலும், அப்போது அர்ச்சுனனின் பாணங்களால் பல ஆயிரம் பகைவீரர்கள் இறந்தார்கள். பல ஆயிரம் வீரர்கள்

புறமுதுகிட்டு ஓடினார்கள். தன்னைக் கண்டு அஞ்சி நின்ற பல ஆயிரம் வீரர்களை அர்ச்சுனனே அப்பால் போய் தப்பித்துக் கொள்ளும்படிக் கூறி அனுப்பினான். மற்றும் பல ஆயிரம் வீரர்கள் தங்கள் குலத்தின் பெருமையும் கொடிய வலிமையும் இழந்து அழிந்தார்கள்.

கருங்குவளை மலர் போன்ற அர்ச்சுனனுடைய அம்புகள் பல ஆயிரம் வீரர்களின் உடம்பில் தைத்து, அவர்கள் உடம்பிலிருந்து குருதிவெள்ளத்தைப் பீறிட்டுப் பாயச் செய்தன. அதனால் அந்த வீரர்கள் இடைவிடாது மழை பொழியும் மேகத்தைப் போல் காட்சி தந்தார்கள். அந்த யுத்தபூமியும் சிவபெருமானுடைய திருமேனி போல, பகைவரின் ரத்த வெள்ளம் பரவியதால் ஒரு பாதி செந்நிறமாக மாறியது.

சோர்வடையாத அர்ச்சுனன் ஸஞ்சத்தகரோடு யுத்தம் புரிந்து கொண்டிருந்தான். எல்லா பக்கங்களிலும் சூரிய மண்டலமும் சந்திரமண்டலமும் ஒன்றையொன்று எதிர்த்து யுத்தம் புரிவது போல, இரண்டு பக்கத்துச் சேனைகளும் உக்கிரமாகப் போர் செய்தன. அப்போது திருஷ்டத்யும்நன் துரோணாசாரியாரை எதிர்த்து வில்லை வளைத்து யுத்தம் பண்ணினான்.

தம்மை எதிர்த்த திருஷ்டத்யும்நனின் அம்புகளைத் துரோணாசாரியார், தமது பாணப் பிரயோகத்தால் அழித்தார். பின்னும் அவனது வில்லை ஒடித்துத் தள்ளினார். சேல்மீனோடு சேல்மீன் போர் செய்யும் ஒழுங்கு போல தமது தேரும் திருஷ்டத்யும்நன் தேரும் சக்கரங்களோடு சக்கரங்கள் தாக்க, வில்லாசிரியர் அவனுடைய வலிய தேர்க் கொடியையும் உடம்புகவசத்தையும் அழித்தார்.

முன்பு வசிஷ்டரும், விசுவாமித்திரரும், பரசுராமரும் மகாகோபங் கொண்டு செய்த யுத்தம் போன்ற ஒரு யுத்தத்தை அவர்களுக்குப் பின்பு செய்தவர்கள் யாருமே இல்லை. அகஸ்திய மகாமுனிவர் தாம் ஒருவராகவே ஏழுசமுத்திரத்தையும் தமது ஒரு கையில் ஒடுங்கச் செய்தார். இப்போது ராஜனாகிய திருஷ்டத்யும்நனை முனிவராகிய துரோணாசாரியர் ஜெயித்தார். ஆகையால், முனிவர்களோடு போர் செய்யும் வல்லவர்கள் பூலோகத்தில் யாருமே இல்லை!

அப்படி துரோணர் வந்து எதிரில் தாக்கியவுடன், திருஷ்டத்யும்நன் எண்ணத்தையும் மானத்தையும் பராக்கிரமத்தையும் இழந்து, தனது தேரைப் பின்னால் திருப்பிக் கொண்டு செயலற்று புறமுதுகிட்டுச் சென்றான்.

துரோணரிடம் பாண்டவசேனாதிபதி தோற்றான் என்பதை இரண்டு பக்கத்துச் சேனாவீரர்களும் அரசர்களும் அறிந்தார்கள். அவர்கள் திருஷ்டத்யும்நனைத் தோற்கடித்த வில்லாசிரியரின் பராக்கிரமத்தையும், பலத்தையும், வில்லாற்றலையும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

துரோணர் பிரயோகித்த அம்புகளால் வருந்தி பயந்து ஓடி வந்த திருஷ்டத்யும்நனை, பூமாலைகள் அணிந்த தமது மார்போடு தழுவிக் கொண்டு, அவனுக்குத் தைரியம் கூறினார் தருமர். மேலும் அவர் சேனாதிபதியை நோக்கி, ''ராஜாக்களின் முடியில் அணியும் ரத்தினம் போன்றவனே! வில்லாசிரியர் முன்னால் நின்று போரிட அஞ்சி நீயே பின்வாங்கினால், வேறு யார் உறுதியாக நின்று போர் செய்வார்கள்? ஆனாலும் நீ இப்போது போர் புரிந்து களைத்துவிட்டாய். உன் களைப்புத் தீர இளைப்பாறு!'' என்று அநேக உபசார வார்த்தைகளைச் சொன்னார்.

பிறகு, தருமர் முருகக்கடவுள் போன்ற அபிமந்யுவை அருகே கூப்பிட்டு, ''குமாரனே! உனக்கு எதிராக யுத்தத்தில் நிற்க வல்லவர்கள் யாரும் இல்லை. இனிமேல் நீ முந்திச் சென்று யுத்தம் செய். அப்படி நீ செய்யாமல் பகைவரின் சக்கரவியூகமும் அழியாது! நேற்று என்னை வலுக்கட்டாயமாகப் போருக்கு அழைத்து என்னோடு யுத்தம் பண்ணித் தோற்றோடினார் துரோணாசாரியார். இன்று அவர் வைராக்கியம் கொண்டு நமக்கு எதிராக தம் சேனையோடு போருக்கு வந்து கொடிய சக்கரவியூகம் அமைத்து நிற்கின்றார். அர்ச்சுனனையும் உன்னையும் தவிர விற்போர் புரிந்து அந்த வியூகத்தைச் சிதைக்க வல்லவர்கள் யாரும் இல்லை!'', என்று சொல்லி, அவனை மார்போடு தழுவிக் கொண்டார்.

அதன்பின் அபிமந்யுவைப் பார்த்து தருமர், ''புத்திரனே! வேகமாகச் செல். கொடிய யுத்தத்தில் பகைவர்களை அதிகமாகக் கொல். உனது தோள்களில் வாழும் துர்க்கையின் அருளால் பகையை வெல்!'' என்று கூறி விடை கொடுத்தார்.

தனது பெரிய தந்தையின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அபிமந்யு, அவருடைய பாதங்களை வணங்கிவிட்டு, அநேகவிதமான ஆயுதங்களோடு தேர்மீது சூரியன் போல ஏறினான். அப்போது அபிமந்யுவின் பாதங்களில் வீரத்துக்கு அடையாளமான கழல்கள் பிரகாசித்தன. மார்பில் சந்திர காந்தம் வீசும் முத்துமாலை அசைந்தாடியது. பாம்பு போன்ற வளையங்கள் தோள்களில் சுற்றிக் கிடந்தன. சூரியன் போல் ஒளிவீசும் ரத்தினகுண்டலங்கள் காதுகளிலே ஊசலாடின.

அபிமந்யு திருஷ்டத்யும்நனோடும், கோடிக்கணக்கான அரசர்களோடும் யுத்த வாத்தியங்கள் முழங்க, கோபித்து வீசும் புயற்காற்று போல யுத்தத்துக்காக தனது தேரைத் துரிதமாகச் செலுத்திக் கொண்டு போனான்.



யுத்தத்துக்குச் சென்ற அபிமந்யு, ஸ்ரீராமபிரானும் தன் தந்தையும் தனக்கு ஒப்பாகாதவர்கள் என்று சொல்லும்படி, க்ஷணத்தில் சக்கரவியூகத்துக்குள் புகுந்து எதிரிகள்மேல் கடுமையாகப் பாணப் பிரயோகம் செய்தான். ஆரவாரித்து அவன் தொடுத்த அம்புகள் பகைவர்களின் மார்பிலே பாய்ந்து மறைந்தன. மேலும், தன் மாமனாகிய கண்ணபிரான்

தனக்கு உபதேசித்துள்ள மந்திரத்தைப் பக்தியோடு உச்சரித்து, பகைவர்கள் மேல் பெருங்கோபத்தோடு அநேக பாணங்களை வர்ஷித்தான். அவைகள் பகைவர்களின் தலைகளையும் தோள்களையும் துண்டித்துத் தள்ளின. அவ்வாறு செய்து இந்திரன் உபதேசித்த சக்கரவியூகம் முழுவதையும் சீர்குலைத்தன.

துரோணாசாரியார் கண்ணபிரான் போல், அபிமந்யுவின் அம்புகளைத் தமது எதிரம்புகளால் தடுத்து அழித்துக் கொண்டே வந்து அவன்முன் போர் செய்தார்.

தன் முன் வந்து யுத்தம் பண்ணும் வில்லாசிரியரை நோக்கி வில்லை வளைத்து அபிமந்யு பாணங்களை ஏவினான். அபிமந்யுவின் அம்புகளால், அவனை ஜெயிக்க வந்த துரோணாசாரியாரின் பராக்கிரமம் அழிந்தது; ஆசிரியர் என்னும் புகழ் அழிந்தது; வில் அழிந்தது; தேர் அழிந்தது!

அபிமந்யுவால் யாவும் அழிந்து துரோணாசாரியார் புறமுதுகிட்டபோது, அவருடைய குமாரனாகிய அசுவத்தாமன் அபிமந்யுவை எதிர்த்து வந்து, அவன் மேல் கொடூரமாக அம்புகளை மழையாகப் பொழிந்தான். உடனே அபிமந்யு அசுவத்தாமன் மேல் பதிலுக்குப் பாணங்களை ஏவினான். அவனுடைய பாணங்களால் வலிமையழிந்து அசுவத்தாமன் பின்வாங்கினான்.

பின்பு, அபிமந்யுவை கர்ணன் எதிர்த்து வந்து, அவன் உடம்பில் தைக்கும்படி அம்புகளைத் தொடுத்துவிட்டான். ஆயினும் கர்ணன் அபிமந்யுவின் பாணங்கள் கொடூரமாய் தன்னைத் தாக்குவதைக் கண்டு, அவனோடு தனக்கு யுத்தம் செய்வதற்கு வலிமையில்லை என்று எண்ணி, தான் ஏறி வந்த தேரோடு பின்வாங்கிச் சென்றான்.

கர்ணனுக்குப் பின்பு, கிருபாசாரியாரும் யதுகுலத்து அரசன் கிருதவர்மாவும் ஒன்றாகச் சேர்ந்து, தங்கள் வலிமை நிலைத்து நிற்கும்படி வில்லை வளைத்து அபிமந்யுவின் மேல் பாணங்களை வர்ஷித்தார்கள். அப்போதும் அபிமந்யு, தான் ஒருவனாகவே அவர்களை எதிர்த்துப் போரிட்டான். தனது ஒரு வில்லாலேயே யுத்தம் புரிந்தான். அப்படி இருந்தும் அவனுடைய அம்புகளாலே அந்த இரண்டு பேருடைய விற்களும் ஒடிந்தன. அவர்கள் அதனால் ஆயுதமில்லாதவர்களாக அஞ்சி ஒடிப் போனார்கள்.

அப்போது சகுனியும், அவனது மகனும், மற்றுமுள்ள உறவினர்களும் பெரிய சேனையோடு கூடி, பகைவனை ஜெயித்துச் சிறைபிடிப்போம் என்றெண்ணி அபிமந்யுவை யுத்தத்தில் எதிர்த்து நெருங்கினார்கள். அவ்வளவுதான். அபிமந்யுவின் ஓரம்பால் சகுனியின் புத்திரன் மாண்டு விழுந்தான். மற்றும் யுத்தத்துக்கு விரும்பி வந்த பல அரசர்கள் அவனுடைய கணைகளால் இறந்தார்கள். சாகாமல் தப்பித்துக் கொண்டவர்கள் பயத் தால் மிகவும் உள்ளம் நடுங்கி வலிமையிழந்து ஓடிப் போனார்கள்.

பிறகு விகர்ணனும், துர்முகனும், மற்றுமுள்ள துரியோதனன் தம்பிமார்களும் அபிமந்யுவை எதிர்த்துப் போரிட்டார்கள். உடனே அபிமந்யு அவர்களைப் பார்த்து, "நான் உங்களைவிட பலசாலி. ஆதலால் புறமுதுகிட்டு ஓடிப் பிழைத்து வாழுங்கள்!" என்றான்.

அபிமந்யுவின் வார்த்தைப்படியே அவர்கள் ஓடிப் போனார்கள்.

மேலும், சதுரங்கச் சேனையோடு வந்த அபிமந்யுவை எதிர்த்த அரசர்கள் எல்லோரும், அவனுடைய அம்புகளால் தங்கள் சேனையழிய தப்பித்தோம் பிழைத்தோம் என்று பெரும் புண்களோடு ஓடிப் போனார்கள்.

அபிமந்யு பகைவரின் சக்கரவியூகத்துக்குள் புகுந்து, தான் ஒருவனாகவே போர் செய்வதைக் கண்டான் பீமன். பகைவரோடு தனியே அப்படி உக்கிரமாகப் போர் செய்தால், அவனுக்குக் களைப்பு உண்டாகுமே என்று பீமன் எண்ணினான். அதனால் அவன் உடனே தருமரிடம் சென்றான். அவர் பாதங்களை நமஸ்கரித்தான். பிறகு தருமரை நோக்கி அவன், "அண்ணா! பல யானைகளும், பல ரதங்களும், பல புரவிகளும், நீண்ட பல வேல்களும், பல வாள்களும், வலிய பல விற்களும் கொண்டு பல திசைக் காற்றும் கிளர்ந்து வீசுவது போல் யுத்தம் புரியும் போர்க்களம் இது! இந்த யுத்தகளத்திலே அபிமந்யு, தான் ஒருவனாகவே துரிதமாகப் போய்க் கொடிய போரைச் செய்கின்றான். இப்படி அவனைத் தனியே பகைவர் சேனாசமுத்திரத்தின் நடுவே போர் செய்யும்படி விட்டுப் பார்த்துக் கொண்டிருப்பது, ஒப்பற்ற பெரிய பாவமாகும்! ஆகையால், அபிமந்யுவுக்குத் துணையாகப் போய் போர் பரிவகற்கு

எனக்குத் தாங்கள் அனுமதி கொடுங்கள்!'' என்று சொல்லிப் பிரார்த்தித்தான்.

தருமர் பீமனின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவனுக்கு அனுமதி கொடுத்து அனுப்பினார்.

பீமன் தமையரின் அனுமதி கிடைத்தவுடனே அவருடைய பாதங்களை வணங்கிவிட்டு, அநேக சிற்றரசர்களும் அரசர்களும் சேனைகளும் தன்னைத் தொடர்ந்து வர, சத்துருக்காதினி கதாயுதத்துடன் தேரில் ஏறிப் போருக்குப் போனான். அப்படி அவன் சென்று பகைவரின் சக்கரவியூகத்துக்குள் நுழைந்ததும், அந்த வியூகம் ஈக்கூட்டம் போலச் சிதறியது. அழிவில்லாத ஆண்சிங்கத்தைப் போன்ற பீமனும் கருடன் போல் எதிரற்று விளங்கினான்.

அதுகண்டு கௌரவர்களுக்குத் துணையாக வந்த கலிங்கம், சோனகம், மகதம், கன்னடம், கங்கம், கொங்கணம், கௌசலம், தெலுங்கம், ஆரியம், துளுவம், பப்பரம், சீனம், சாவகம், சிங்களம், குலிங்கம், மாளவம், களமம், ஒட்டியம், குகுரம், கொப்பளம், கூபகம் ஆகிய தேசத்து வீரர்கள் தீப்பொறிகளின் கூட்டம் போல வந்து பீமனைச் சூழ்ந்து கொண்டு யுத்தம் பண்ணினார்கள்.

பற்பல பாஷை பேசும் வீரர்கள் பீமனைச் சூழ்ந்தபோது, அவனுடன் வந்த பற்பல பாஷை பேசும் வீரர்கள் அவர்களை வெட்டித் தள்ளிச் சொர்க்கத்தில் குடியேற்றினார்கள்.அதனால் ஸ்ரீராமபிரானுடைய குரங்கு வீரர்களால் ராவணனின் அரக்கவீரர்கள் அடைந்த துன்பத்தை அடைந்து அவர்கள் இறந்தார்கள்.

பீமன் சக்கரவியூகத்துக்குள் மேலும் நுழைந்து காளமேகம் போல ஆரவாரித்தான்: கோபித்து தனது கதாயுதத்தால் அந்தச் சக்கரவியூகத்தை உடைத்தான்.

துரியோதனன் அந்தக் காட்சியைக் கண்டான். வாயுபுத்திரனாகிய அநுமானே திரும்பவும் போருக்கு வந்துவிட்டான் போலும் என்று அவன் நினைத்தான். உடனே அவன் தன் பக்கத்து ராஜாக்களை நோக்கி, ''வேந்தர்களே! மேகம் ஆரவாரித்து இடிக்கின்ற இடிக்கு நடுநடுங்கி ஒடும் பாம்புக்கூட்டங்கள் போலவும், சிங்கத்தின் பாய்ச்சலுக்குப் பயந்து ஓடும் யானைக் கூட்டங்கள்

போலவும், தான் ஒருவனாக நின்று தொடுக்கும் அபிமந்யுவின் அம்புகளுக்குப் பயந்து நமது பெருஞ்சேனையோ அஞ்சி வருந்தி ஓடுகிறது. இப்போது பீமனும் அவனுக்குத் துணையாக யுத்தம் செய்ய வருகின்றான். இது காட்டை பஸ்பம் செய்யும் நெருப்போடு காற்றும் கலந்தது போலாகும்! ஆகையால், அரசர்கள் எல்லோரும் சகுனியுடன்சென்று, பீமனை அபிமந்யுவுக்கு உதவாதபடி தனியாக வளைத்துக் கொண்டு போர் செய்யுங்கள். விகர்ணனும், எனது மற்ற தம்பிமார்களும், மற்றும் அநேக ராஜாக்களும், அசுவத்தாமனும் சென்று அபிமந்யுவை எதிர்த்து யுத்தம் பண்ணுங்கள். இப்படிச் செய்தால் இந்த ஒரு க்ஷணத்திலேயே பீமனையும் அபிமந்யுவையும் ஜயிப்பதும் கொல்வதும் நமக்குச் சுலபமாகிவிடும்!'' என்று கூறினான்.

ராஜராஜனாகிய துரியோதனனின் வார்த்தைப்படி அரசர்கள் எல்லோரும் இரண்டு சேனைகளாகப் பிரிந்து சென்று, பீமனையும் அபிமந்யுவையும் நான்குப் பக்கமுமாக வளைத்துக் கொண்டு போர் புரிந்தார்கள்.

எதிரிகளைக் கண்டதும் பீமனின் தாமரைப்பூ போன்ற கண்கள் கோபத்தால் சிவந்தன. அவனுடைய சந்திரன் போன்ற நெற்றியிலே கோபாவேசத்தால் வியர்வை அழிந்தது. அவனுடைய இரண்டு தோள்களும் மாறி மாறிப் பூரித்தன. அவன் அவர்களைப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்தான். அவனுடைய காதுகளில் மகர குண்டலங்கள் விளங்கி சூரியகாந்தி போல் ஒளிவீசின. பீமன் யுத்த வாத்தியங்கள் முழங்க சிங்கம்போல் கர்ச்சித்து அவர்கள் மேல் அம்புகளைப் பிரயோகித்தான்.

வேகமாக பகைவரின் எதிரில் போய் பீமன் தாக்கிய தாக்குதலில் அவர்கள் நிலைகுலைந்தார்கள். பீமனுடைய அம்புகள் குறிதவறாது சென்று அவர்களின் உடம்பை ஊடுருவிச் சென்றன. மேலும், அவனுடைய அம்புகளால் எதிரிகளின் தலைகள் ரத்தினகிரீடத்தோடு துணிபட்டுச் சிதறின. புஜங்கள் வளைகளோடு அறுபட்டு விழுந்தன. கால்கள் வீரக்கழல்களுடன் அறுபட்டன. கைகள் ஏந்திய வில்லோடு அறுபட்டன.

பீமனின் அருகே வந்த பகைவரின் ரதங்களும் குதிரைகளும் அவனுடைய பாணங்களால் சின்னா

பின்னமாயின. மற்றும் அவனைத் தாக்க வந்த பலவிதமான ஆயுதங்களும் அவனுடைய எதிரம்புகளால் துண்டிக்கப்பட்டு அழிந்தன. அப்படி பீமன் புரிந்த உக்கிரமான யுத்தத்தால், துரியோதனனுடைய சேனையிலுள்ள அரசர்கள் பயந்து போய் பின்வாங்கி ஓடிப் போனார்கள்.

அபிமந்யுவும் தன்னை எதிர்த்த வீரர்களைத் தனது அம்புகளால் தாக்கினான். அவனுடைய அம்புகளால் எதிரிகளின் உடம்புகள் கண்டதுண்டமாகி ரத்தம் பீறிட்டுத் தரையிலே பாய அழிந்தன. அவர்களும் மாண்டார்கள். பின்னும் அபிமந்யு பகைவர்கள் இருக்கும் இடமெல்லாம் வேகமாகச் சென்று, கோபித்துப் போர் செய்து அவர்களைக் கொன்று குவித்தான். அதனால் அவன் சென்ற இடமெல்லாம் எதிரிகளின் கூட்டங்கள் சூரியன்முன் மறையும் இருள் கூட்டங்கள் போலாயின.

இரண்டு பிரிவாகப் பிரிந்து சென்ற தனது சேனைகள், பீமனாலும் அபிமந்யுவாலும் அம்புகளால் தாக்கப்பட்டு வருந்திப் புறமுதுகிட்டு ஓடி வந்ததைக் கண்டு, துரியோதனன் மிகவும் ஆத்திரப்பட்டான். பகைவரிடம் கொண்ட அச்சத்தோடு சோர்ந்து ஓடிவரும் அரசர்களை நிந்தித்தான். பின்பு, அவர்களைப் பார்த்து ஏளனச் சிரிப்புச் சிரித்தான். கடைசியில் நெஞ்சில் கனன்ற கோபாக்கினியால் முகம் கறுக்கவும், கண்கள் சிவக்கவும் ஜயத்ரதனைப் பார்த்து பல உபசார வார்த்தைகளைப் பேசினான்.

பின்னும் துரியோதனன் அவனிடம், ''ஜயத்ரதா! நீ பராக்கிரமசாலி. சிவந்த பொன்மயமான மகாமேருமலையைப் போல் பலம் பொருந்தியவன். வெற்றிமிக்க அரசாட்சியும் தருமமும் கொண்டவன். பஞ்சபாணமுடைய மன்மதனைப் போல அழகிய உடம்பை உடையவன். எனது சேனையில் உள்ள அரசர்கள் எல்லோர்ரையும் விட நீ சிறப்பானவன். பரமசிவனின் மகிமையை உடைய பரிமளத் தாமரைப் பாதங்களைத் தத்துவஞானத்துக்கு உரிய தெளிவோடு வணங்கிய சிரத்தையுடையவன். அபிமந்யுவோடு பீமனும் யுத்தத்தில் கூடிவிட்டால், அந்த இரண்டு போர் வீரர்களையும் நாம் இப்போது எதிர்த்துப் போர் செய்ய முடியாது. அந்த இரண்டு பேரும் தனித்தனியே விலகிச் சென்று யுத்தம் பண்ணினால், அவர்களோடு நமக்கு யுத்தம் செய்ய மிகவும் சுலபமாகும். அவர்கள் இப்படி ஒன்றுகூடிப் போர் புரியாமல்

தடுப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. சிவபெருமான் உனக்குக் கொடுத்தருளிய கொன்றைப்பூ மாலையை அந்த இரண்டு பேர்களுக்கும் மத்தியிலே நீ போட்டு விட்டால் போதும். அவர்கள் அதனைத் தாண்டி ஒருவரோடு ஒருவர் சேர மாட்டார்கள். தனித்தனியே இரண்டு பக்கமாகப் பிரிந்து போய்விடுவார்கள். ஆமாம். சிவபிரான் திருமுடியில் தரித்த மாலையை பீமனும் அபிமந்யுவும் தமது கால்களால் தாண்டிச் செல்ல அஞ்சுவார்கள். அந்தச் சமயத்தில் நீ அநேக அரசர்களோடு போய் அபிமந்யுவை வளைத்துக் கொள். உனக்குச் சிவபெருமான் கருணையோடு மனமகிழ்ந்து தந்தருளிய கதாயுதத்தால் யுத்தத்தில் அவனைக் கொன்றுவிடு. இதுவே இப்போதைக்கு மிகவும் நன்மை தரும் உபாயமாகும்!'' என்றான்.

துரியோதனனுடைய வார்த்தைகளைக் கேட்டதும், ஜயத்ரதன் மனமகிழ்ந்து அவனுடைய பாதங்களை வணங்கினான். பின்பு துரியோதனனை நோக்கி ஜயத்ரதன், ''இனி வேறு காரியம் எதுவும் வேண்டாம். வேறாக ஒன்றும் நினைக்கவும் வேண்டாம். இப்போதே உன் எண்ணத்துக்குப் பங்கம் வராதபடி, நான் அபிமந்யுவைப் போரிட்டு என் கதாயுதத்தால் கொல்வேன்!'' என்று கூறி, அவனுடைய மனத்தைத் தேற்றினான்.

அதன் பிறகு, ஜயத்ரதன் சிவபெருமானை மனத்தால் நன்குத் தியானித்துவிட்டு, மந்திர உச்சாடனத்துடன் சிவபெருமானின் கொன்றைப்பூ மாலையை அபிமந்யுவின் தேரைச் சூழ்ந்துவிழும்படி வீசி எறிந்தான்.

அபிமந்யு தன்னை எதிர்த்தவர்களை ஜெயித்ததும், பீமனுடன் இணைந்து யுத்தம் புரிவதற்காகத் திரும்பி வந்தான். அப்போது சக்கரவாளமலை போலத் தனக்கு எதிரே கிடந்த சிவபெருமானின் கொன்றைப்பூ மாலையைக் கண்டான். அந்த மாலை சிவபெருமானுடையது என்பதைப் புரிந்து கொண்டான். உடனே அந்த மாலையை அறிவோடு வணங்கினான். அதேசமயம், 'முழுமுதற் கடவுளான சிவபெருமானுடைய அழகிய திருமுடியில் தரித்த மாலை இது. இதனைத் தாண்டிச் செல்வது முறையில்லை. ஆகையால், இனி யுத்தத்தில் பகைவரைக் கொன்று நாமும் இறப்போம்!' என்று எண்ணினான். அதனால் அபிமந்யு இந்த மாலையைத் தாண்டிச் செல்லாமல், தான் முன்பு இருந்த

இடத்துக்கே திரும்பி வந்து தனியாகவே யுத்தம் செய்யத் தொடங்கினான்.

பீமன் பகைவர்களைத் தனது பாணங்களால் கொன்று ஜெயித்ததும், அபிமந்யுவுக்கு உதவ எண்ணி அவன் இருக்கும் இடத்துக்கு விரைந்தான். அபிமந்யுவை அவன் நெருங்கிய போது, கொன்றைப்பூ மாலை வழியில் குறுக்கிட்டுக் கிடப்பதைக் கண்டான். அதுகண்டு பீமன், 'இன்றையப் போரில் நம்பக்கத்து வீரர்கள் எல்லோரும் செத்துப் போனாலும் சரி. நான் சிவபெருமான் தரித்த இந்தக் கொன்றைப்பூ மாலையைத் தாண்டிச் செல்ல மாட்டேன்!' என்று எண்ணினான். அந்த எண்ணத்தோடு அப்பூமாலைக்கு அப்பாலேயே நின்றுவிட்டான்.

ஆனாலும் பீமனுடைய மனம், தான் தன் குமாரனாகிய அபிமந்யுவுக்கு யுத்தத்தில் உதவ முடியவில்லையே என்று நினைத்து நொந்தது. 'ஆயுதங்களைக் கொண்டு செய்யும் போரில், பகைவரை எதிர்த்து வந்து குமாரனாகிய அபிமந்யு யுத்தம் செய்கின்றான். அவனுக்கு நான் உதவாமல் இங்கே இப்படி நிற்கின்றேன். இப்படி எனக்கு ஏற்பட்ட நிலை பழிப்புக்குக் காரணமாகி விட்டதே!' என்றும் நினைத்து மனம் வருந்தினான்.

அதனால் பீமன் கோபித்து, "சிந்து தேசத்து ராஜன் ஜயத்ரதன் தரும யுத்தம் செய்யவில்லை. அதருமமாக சூழ்ச்சி செய்து கடவுள் மாலையை அபிமந்யுவுக்கும் எனக்கும் குறுக்காகப் போட்டு யுத்தம் புரிய எண்ணிவிட்டான். அவன் கொன்றைப்பூ மாலையை நடுவிலே போட்டு அபிமந்யுவைத் தனியாகப் பிரித்து விட்டான். ஆயினும் இப்படிச் செய்துவிட்டால், அபிமந்யுவின் அருமையான உயிரை எளிதில் அவனால் போக்கிவிட முடியுமோ? ஜயத்ரதனின் வீரம் கேவலமானது! எப்போதும் சூதாகப் போர் செய்யும் வலிமை, துரியோதனனைத் தவிர வேறு எந்த அரசர்க்கு உண்டு? பல அரசர்கள் யுத்தத்தில் கூட்டம் கூடி அபிமந்யுவை எதிர்த்துப் போர் செய்தாலும் சரி. என் புத்திரனாகிய அபிமந்யு அந்த துரியோதனனுடைய குமாரனாகிய லக்ஷணகுமாரனைப் போரில் தனது வலிமையால் கொல்லாமல் சாவானோ?" என்றெல்லாம் சொல்லி, கொன்றைப்பூ மாலையைப் பக்தியோடு எழுந்து நமஸ்கரித்து, பின் திரும்பிச் சென்றான்.

கொன்றைப்பூ மாலையைத் தாண்டிச் செல்லாமல் திரும்பி வந்து பகையரசர்களின் மத்தியிலே யுத்தத்துக்கு நின்ற அபிமந்யு, கடலின் மத்தியில் படபாமுகாக்கினி போல தேககாந்தி சுடர்விட உறுதியாக நின்றான்.

யாளி போல் நின்ற அபிமந்யுவை பகையரசர்கள் சூழ்ந்து கொண்டு, பேய்கள் கூத்தாட அவன்மேல் அநேக பாணங்களைப் பொழிந்தார்கள். பல்லாயிரக்கணக்கான அர்த்தரத வீரர்கள் தங்கள் விற்களை வளைத்து அபிமந்யுவின்மீது சிற்சில வலிய அம்புகளைப் பிரயோகித்தார்கள்.

அவர்கள் தொடுத்துவிட்ட பாணங்களையெல்லாம், தான் தொடுத்த எதிரம்புகளால் அபிமந்யு அழித்தான். பின்பு, அவன் தனது அம்புகளை அந்த அர்த்தரதவீரர்களின் உடம்புகள் வருந்தும்படிச் செலுத்தினான்.

அதன்பின்பு கர்ணனும் அபிமந்யுவும் கோபித்து, தங்கள் தங்கள் தேரைச் செலுத்தி நெருங்கி நின்று கொடூரமான யுத்தத்தை ஆரம்பித்தார்கள். அப்போது அபிமந்யு கர்ணனுடைய தேர்மீது நான்கு கொடிய அம்புகளைப் பிரயோகித்தான். அதனால் கர்ணனுடைய நான்குத் தேர்க் குதிரைகளும் இறந்து, மேகங்கள் போல் கீழே விழுந்தன. மேலும், தான் எய்த அம்புகளால் அபிமந்யு, கர்ணனுடைய வில்லையும் சுச்சைக் கொடியையும் துண்டித்துத் தள்ளி, அவன் செய்த யுத்தத்தையும் முறியடித்தான்.

கர்ணன் தோற்றுச் சென்றதும், துரியோதனனுடைய தம்பிமார்கள் வந்து அபிமந்யுவை வளைத்துக் கொண்டு போரிட்டார்கள். அபிமந்யு அம்புகளைப் பிரயோகித்து அவர்களின் தேரையும் ஆயுதங்களையும் அழித்தான். மற்றும் தனது அம்புகளால் அவர்களை வருத்தினான். அதனால் தோற்ற துரியோதனனின் தம்பிமார்கள் புறமுதுகிட்டு ஓடிப் போனார்கள்.

துரியோதனனுடைய தம்பிமார்களும் தோற்றுப் போன பின்பு, துரோணாசாரியாரும் அசுவத்தாமனும் அபிமந்யுவை எதிர்த்து வந்து யுத்தம் பண்ணினார்கள். அவர்கள் இருவரும் அபிமந்யுவின் முன்பு சிவபெருமான் போல் போரிட்டார்கள். அபிமந்யுவின் எதிரில் உறுதியாக நிலைத்து நின்று, கட்டமைந்த விற்களை வளைத்து அனற்

கொள்ளிகள் போன்ற பல நூற்றுக்கணக்கான அழகிய அம்புகளைப் பிரயோகித்தார்கள். அப்போதும் அபிமந்யு தான் ஒருவனாகவே நின்று, தன் மேல் அவர்கள் தொடுத்து விட்ட அம்புகளையெல்லாம் தனது எதிரம்புகளால் அழித்தான். அவர்களையும் ஒரு வினாடி நேரத்துக்குள் தனது பாணங்களால் வென்றான்.

அபிமந்யுவின் அம்புகளால் அந்த இரண்டு பேரும் தங்கள் ரதங்களை இழந்தார்கள். தங்கள் விற்களை இழந்தார்கள். தங்கள் போர் வலிமையையும் இழந்தார்கள். கடைசியில் அவன்முன் நின்று போரிட முடியாமல் தோற்றுத் திரும்பிச் சென்றார்கள்.

அப்போது துர்முகன் யுத்தகளத்தில் எல்லோருக்கும் முன்பாக விரைந்து வந்து அபிமந்யுவைப் போரில் எதிர்த்தான். தன்னை எதிர்த்த அவனை அபிமந்யு பாணங்கள் தொடுத்து எதிர்த்தான். அபிமந்யுவின் கணைகளால் புற்றுச்சரிந்தது போல துர்முகனுடை ய அழகிய கிரீடம் அழிந்தது. அவனும் தோற்றுச் சென்றான்.

பிறகு சல்லியனும், அவனுடைய மூத்த புதல்வனாகிய உருமித்திரனும் வந்து அபிமந்யுவை எதிர்த்துப் போரிட்டார்கள். தாங்கள் அபிமந்யுவோடு செய்த போரில் பிரயோகித்த அம்புகளால் அவர்கள் ஆகாயத்தை மறையும்படிச் செய்தார்கள்.

உடனே அபிமந்யு, தனது கணைகளால் அந்த இரண்டு பேருடைய விற்களையும் இரண்டு துண்டுகளாக்கித் தள்ளினான். மேலும், அவர்களுடைய உயிரை வாங்க வல்ல அம்புகளை அவர்கள்மேல் பொழிந்தான். அந்தக் கணத்தில் அபிமந்யுவின் ஒரு பாணத்தால் உருமித்திரன் இறந்து வீரசொர்க்கம் அடைந்தான். அது கண்டு சல்லியன் புத்திரசோகத்தால் வருந்தி, தன்மேல் தைத்த அநேக பாணங்களுடன் புறமுதுகிட்டுப் போய்ச் சேர்ந்தான்.

அப்படி அபிமந்யு ஆயுதப் போர் புரிந்து பகைவரை ஜெயித்ததைக் கண்டு, அந்த வினாடியே கௌரவ சேனையிலுள்ள பல மகாரதவீரர்கள் ஒன்றாக அழிந்து போனார்கள்.

அன்றையப் போரில் அபிமந்யு தொடுத்த அம்புகளால் அநேகம்பேர் இறந்து போனார்கள். இறவாமல் தோற்று ஓடியவர்கள் எத்தனைப் பேர் என்று முழுதும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது!

துரியோதனனுடைய சக்கரவியூகத்தைப் பிளந்து கொண்டு மத்திய பகுதிக்குச் சென்று, அபிமந்யு பகைவர்களை ஜெயித்து வெற்றி வீரனாக நின்றான். அப்போது தேரின்மேல் நின்றிருந்த அபிமந்யுவின் கைவில் வட்டமாக வளைந்திருந்தது. அவன் கழுத்தில் பொற்சக்கரம் போல வெற்றிமாலை திகழ்ந்தது. அவனும் சக்கரவியூகத்தின் நடுவிலே, சக்கரவாளமலையின் மத்தியில் ஆகாயத்தில் செல்லும் சூரியனைப் போல் விளங்கினான்! மேலும், பகையரசர்கள் சக்கரவியூகத்தின் நான்குப் பக்கங்களிலுமாக வந்து தன்னை எதிர்த்த போதும், அவன் திரிபுரம் எரித்த சிவபெருமான் போலத் தோன்றினான்!

தனது சேனையிலுள்ள வீரர்களும் ராஜாக்களும் அபிமந்யுவிடம் தோற்றுப் போனதைக் கண்டு, துரியோதனன் மிகவும் வெட்கம் அடைந்தான். அதனால் அபிமந்யுவை எதிர்த்துப் போரிட்டுக் கொல்ல, தனது மகனாகிய லக்ஷணகுமாரனை பதினாயிரக்கணக்கான ராஜகுமாரர்களுடன் யுத்தத்துக்கு அவன் அனுப்பினான்.

பிரளயகாலத்துப் பெருங்காற்று கடலைக் கலக்குவது போல, பகைவரின் சேனாசமுத்திரத்தைத் தனது அம்புகளால் கலக்கும் அபிமந்யுவை, தனது சேனைகளோடு வந்து லக்ஷணகுமாரன் போரில் எதிர்த்தான். கோவர்த்தனகிரி போன்ற அபிமந்யுவை அவனும், மற்றும் பல அரசர்களும் எதிரில் வந்து வளைத்துக் கொண்டு யுத்தம் செய்தார்கள்.

லக்ஷணகுமாரனுடன் வந்த அநேக வீரர்கள் அபிமந்யுவின் மேல் பல்லாயிரக்கணக்கான பாணங்களைப் பிரயோகித்தார்கள். அந்த அம்புகளெல்லாம் தூவிய பூக்கள் போல் அபிமந்யுவுடைய இரண்டு பாதங்களிலும் வந்து விழுந்தன. அப்போது அவன் தனது ஒரு வில்லை வளைத்துப் பிரயோகித்த அம்புகளால், அநேக கோடிக் கணக்கான பகைவர் சேனைகள் முன்னும் பின்னுமாகத் தோற்றோடி அழிந்தன.

தன்னை எதிர்த்து வந்த ராஜகுமாரர்கள் எல்லோரும் சூரியனைக் கண்ட இருள் போல ஓடி மறைந்த பின்பு, யுத்தகளம் தன்னால் அழகு பெறும்படி அபிமந்யு புலி போல லக்ஷணகுமாரனை எதிர்த்து வந்து யுத்தம் செய்தான். அச்சமயம் அவன் அண்டகோளத்தின் மேல்முகடு அதிர்ச்சியால் உடையும்படியான ஒரு பெரும் சிரிப்பை லக்ஷணகுமாரனை நோக்கிச் சிரித்தான். பின்பு, தனது தேரைச் செலுத்தி அவனுடைய தேரைத் தாக்கினான்.

லக்ஷ்மணனும் இந்திரசித்தும் போல அபிமந்யுவும் லக்ஷணகுமாரனும் கோபத்தால் கண்களின் நுனி விழிக்க ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டார்கள். மேலும் அவர்கள் புருவங்கள் முரிபடவும், மேகங்கள் இடிப்பது போலவும், ஏழு சமுத்திரங்களும் ஒலிப்பது போலவும், யுகாந்த காலத்தில் காற்றும் நெருப்பும் உலகத்தை அழிக்க எழுந்தது போலவும் ஒருவரோடு ஒருவர் மாறிமாறி அநேக வீரவாதங்களைப் பேசத் தொடங்கினார்கள்.

அபிமந்யு லக்ஷணகுமாரனைப் பார்த்து, "லக்ஷணகுமாரா! உன்னோடு வந்து என்னை எதிர்த்த அரசர்கள் புறமுதுகிட்டு ஓடிப் போனார்கள். அவர்களுடைய சதுரங்கச் சேனைகள் எனது பாணங்களால் அழிந்தன. நீ ஒருவன் மட்டும் தனித்து, உனது வலிமையையும் நன்கு மதித்து தேரைச் செலுத்திக் கொண்டு என் எதிரே வந்தாய்! இப்படி நீ ஆரவாரித்துக் கொண்டு எனது எதிரே வந்தால், விட்டிற்பூச்சியைப் போல இறப்பாய்!" என்றான்.

உடனே லக்ஷணகுமாரன் அபிமந்யுவை நோக்கி, "அபிமந்யு! நான் யுத்தம் செய்து ஒரே நொடியில் அரசர்கள் எதிரில் உன் உயிரை வாங்கிவிடுவேன்!" என்று பதிலுக்கு வீரம் பேசிக் கொண்டு, அவன் முன்னே நெருங்கினான்.

பிறகு, அந்த இரண்டு பேரும் மகாமேருமலையைப் போன்ற தங்கள் விற்களை வளைத்துக் கொடூரமாகப் போரிட்டார்கள். அவர்கள் தொடுத்த அம்புகளால் படபாமுகாக்கினியைச் சினந்து எழும் காற்று போலப் பெருங்காற்று எழுந்து வீசியது!

இருவரும் ஒருவர்மேல் ஒருவர் எதிர்த்து எய்த அம்புகளுள் சில அம்புகள் எதிரியின் தேர்க்குதிரைகளின்

உடம்பில் தைத்தன. சில அம்புகள் கொடிகளை அறுத்துக் கலந்தன. சில அம்புகள் இருவருடைய நெற்றியிலும் பதிந்தன. சில அம்புகள் இருவருடைய தோள்களிலும் தைத்தன. சில அம்புகள் அரணிகட்டை போன்று தீயை உண்டாக்கின. சில அம்புகள் ஆகாயத்தின் மேல்முகட்டையும் ஊடுருவிச் சென்றன. அபிமந்யுவும் லக்ஷணகுமாரனும் அப்படி மும்முரமாக முனைந்து கொடூரமாகப் போர் செய்தார்கள்.

கடைசியாக, கண்ணபிரானின் மருமகனாகிய அபிமந்யு படுபயங்கரமாக லக்ஷணகுமாரன்மேல் அம்புகளைப் பிரயோகித்தான். அபிமந்யுவின் அம்புகள் அந்தக் கணத்திலேயே விரைந்து சென்று குறிதவறாமல் லக்ஷண குமாரனைத் தாக்கின. அபிமந்யுவின் அம்புகளால் அவனுடைய கால்கள் அறுபட்டன. இரண்டு தொடைகளும் துணிபட்டுக் கீழே விழுந்தன. உடற் கவசம் அறுபட்டது. தாமரைமலர் போன்ற கைகள் தோள்களோடு முழுதும் துணிபட்டன. ஒளிவீசும் நவரத்தினங்களைப் பதித்த கிரீடம் புன்சிரிப்புடைய முகத்தோடு அறுபட்டது!

ஆமாம். அபிமந்யு தொடுத்த அம்புகளால் தன் உடம்பு சின்னாபின்னமாக லக்ஷணகுமாரன் இறந்தான்!

அபிமந்யுவின் கணைகளால் லக்ஷணகுமாரன் இறந்ததைக் கேள்விப்பட்டதும், துரியோதனன் புத்திர சோகத்தால் மிகவும் மனம் வருந்திக் கண்ணீர்விட்டான். உடனே அவன் துரோணாசாரியாரையும், கிருபாசாரியாரையும், அரசர்களையும் நோக்கி, "பல ராஜகுமாரர்களுடன் என் மகன் லக்ஷணகுமாரனையும் அபிமந்யு கொன்றுவிட்டான். அப்படிச் செய்தவனைக் கண்ணிமைப்பதற்குள் நீங்கள் சென்று போரிட்டுக் கொல்ல வேண்டும். இல்லையேல், பிறகு நான் இந்த அரசாட்சியையும் விரும்ப மாட்டேன்! பெருந்தன்மையுடைய இன்பவாழ்க்கையையும் விரும்ப மாட்டேன்! எனது உயிரையும் விரும்ப மாட்டேன்!" என்றான்.

துரியோதனன் கூறியதைக் கேட்டதும், மன்னர்கள் எல்லோரும் அவனுடைய பாதங்களை வணங்கி, "ராஜராஜனே! உடம்பு நடுங்க உயிர்நீங்கி கீழே விழும்படி அபிமந்யுவை, இப்போதே வளைத்த வில் வளைவு மாறாமல் கொடிய போரில் கொல்வோம். நாங்கள் அப்படிச்

செய்யாவிட்டால், பின்பு யுத்தத்தில் வில்லைக் கையால் தொடவும் மாட்டோம்!'' என்றார்கள்.

பின்னர் அசுவத்தாமனும், துரோணாசாரியாரும், அரசர்களும் சென்று லக்ஷணகுமாரனைக் கொன்ற அபிமந்யுவைப் புலிகள் சூழ்ந்து கொண்டது போலச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது மேகங்கள் சப்தசமுத்திரங்களின் நீரையெல்லாம் மொண்டு வந்து ஒரே மலையின்மீது மழையாகப் பொழிந்தது போல, யுத்தத்தில் அபிமந்யுவை எதிர்த்து வந்த பகைவர்கள் எல்லோரும் அவன்மேல் தங்கள் தங்கள் விற்களை வளைத்துத் தனித்தனியே கோடிக்கணக்கான அம்புகளைப் பெருங்கோபத்தோடு பிரயோகித்தார்கள்.

பகைவர்க்கு வணங்காத அபிமந்யு தன்மேல் அரசர்கள் எல்லோரும் தொடுத்த அம்புகளையெல்லாம், தான் தொடுத்த எதிரம்புகளால் அழித்தான். மேலும், அவர்கள் கால் முதல் தலை வரையில் உடம்பும், உறுப்புகளும் மனமும் கலங்கித் தங்களுக்கு அழிவு வந்து விட்டது என்று எண்ணித் தவிக்கும்படி, அந்த க்ஷணத்திலேயே அவர்களைக் கொடூரமாக எதிர்த்து அபிமந்யு தனது வில்லை வளைத்துப் போரிட்டான்.

அப்போது அபிமந்யுவின் அம்புகளால் யுத்தத்தில் முதலில் மனுச்சக்கரவர்த்தியின் குலத்தில் பிறந்த அரசன் இறந்தான். பிறகு, கேகய தேசத்து ராஜனின் குமாரன் மாண்டான். தமது வில் ஒடிந்து போக கிருபாசாரியார் தோற்று ஓடிப் போனார். மகததேசத்து அரசனோடு அநேக மகுடவர்த்தன ராஜாக்கள் வீரசொர்க்கம் அடைந்தார்கள். கோடிக்கணக்கான இளவரசர்கள் இறந்து விழுந்தார்கள்.

மற்றும் அபிமந்யு தொடுத்துவிட்ட கணைகளால் அநேகம்பேர் தங்களுடைய விற்கள் அழியப் பெற்றார்கள். அநேகம் பேர் தங்களுடைய தேர்கள் அழியப் பெற்றார்கள். அநேகம்பேர் தங்களுடைய தலைகள் அழியப் பெற்றார்கள். அநேகம்பேர் தங்களுடைய கால்கள் அழியப் பெற்றார்கள். அநேகம்பேர் தங்களுடைய நெஞ்சம் அழியப் பெற்றார்கள். அநேகம்பேர் தங்களுடைய பலம் அழியப் பெற்றார்கள். அநேகம்பேர் தங்களுடைய தோள்கள் அழியப் பெற்றார்கள்.

மேலும் சகுனியின் ஏழு புத்திரர்களும், அவனுடைய உடன்பிறந்தவர்களும் அபிமந்யுவின் அம்புகளால் இறந்தார்கள். சகுனியும் அபிமந்யுவை எதிர்த்துச் செய்த போரில் அவனால் தோற்றுத் திரும்பிச் சென்றான்.

கடைசியில் துச்சாதனன் தனது தம்பிமார்களுடன் அபிமந்யுவுக்கு எதிரே வந்த அந்த வினாடியே, அவனுடைய போருக்கு அஞ்சித் திரும்பி ஓடிப் போனான்!

தான் அனுப்பிய பெருஞ்சேனை அபிமந்யுவால் அழிந்ததைப் பார்த்ததும், துரியோதனன் கர்ணனை நோக்கி, ''கர்ணா! அர்ச்சுனன் வந்து அபிமந்யுவோடு கூடிவிட்டால், பிறகு இந்தப் போரில் நாம் ஜெயிப்பது சுலபமில்லை. ஆகையால் நீ வல்லவன் என்றால், துரிதமாகப் போய் அபிமந்யுவோடு போரிட்டு அவனைக் கொல்!'' என்றான்.

துரியோதனன் கட்டளைப்படி உடனே கர்ணன் யுத்தத்துக்கு அபிமந்யுவின் எதிரே சென்றான். அபிமந்யுவை எதிர்த்துக் கடும்போர் புரிந்தான். அப்போது அபிமந்யுவின் அம்புகளால் தனது தேரும் கைவில்லும் அழிந்துபோக, கர்ணன் மனம் கலங்கித் தோற்றுத் திரும்பிச் சென்றான்.

அஞ்சித் தோற்றோடிய கர்ணன் மனம் தைரியப்பட்டு, துச்சாதனன் கொடுத்த தேரில் ஏறிக் கொண்டு மீண்டும் அநேக பாணங்களுடன் வந்து அபிமந்யுவை எதிர்த்தான். அவன்மேல் கொடிய பாணங்களைத் தூவினான்.

அபிமந்யு முன்போலவே தனது அம்புகளால் கர்ணனுடைய முகத்தையும், தேரையும், வில்லையும் சிதைத்தான். அதனால் கர்ணன் பழையபடியே அபிமந்யுவின் எதிரில் நிற்கப் பயந்து ஓடிப் போனான்.

தேரிழந்து கால்நடையாகச் சென்ற கர்ணன் மீண்டும் துணிவு கொண்டான். மூன்றாவது முறையாக ஆக்ரோஷத்துடன் வந்து அபிமந்யுவை எதிர்த்து யுத்தம் பண்ணினான். கர்ணன் அப்போது பிரயோகித்த அம்புகள் அபிமந்யுவின் தேர்க்குதிரைகளைக் கொன்றன; சாரதியைக் கொன்றன; கைவில்லை அழித்தன; தேர்ச்சக்கரங்களைச் சிதைத்தன.

தனது பிள்ளையாகிய அபிமந்யு தனக்கு முன்பு தந்த தோல்வியை, இப்போது கர்ணன் அவனுக்குக் கொடுத்தான்.

அதனால் நெஞ்சில் மகிழ்ச்சிப் பொங்க யுத்தத்தில் அபிமந்யுவின் முன் உறுதியோடு நின்றான்.

அச்சமயத்தில் அபிமந்யு சிதைந்த தேரிலிருந்து இடக்கையில் கேடயமும் வலக்கையில் வாளும் எடுத்துக் கொண்டு தரையில் குதித்தான். மறுகணம் கேதுவோடு சூரியன் மேருமலையைச் சுற்றுவது போல, கேடயத்தையும் வாளையும் சுழற்றிக் கொண்டு யுத்தத்தில் பிரவேசித்தான்.

முன்பு அபிமந்யுவிடம் தோற்றோடிய அரசர்கள் எல்லோரும் அதுகண்டு, 'சிறுபிள்ளையான அபிமந்யுவின் தேரும், தேர்க்குதிரைகளும், வில்லும், யுத்தமும் கர்ணனால் அழிந்தன. இனிமேல் நாம் தைரியமாகப் போய் அபிமந்யுவை எதிர்த்துப் போர் செய்யலாம்!' என்று நினைத்து, திரும்பிப் போருக்கு வந்தார்கள். அப்படி வரும்போதே அவர்கள் பெரும் ஆரவாரம் செய்தார்கள். அவர்கள் கோபத்தால் உதட்டைக் கடித்துக் கொண்டு, ஆறுகள் ஒன்றாகக் கடலில் வந்து விழுவது போல அபிமந்யுவை ஒரே சமயத்தில் வந்து கூட்டமாக வளைத்துக் கொண்டார்கள்.

அப்போது அவர்களோடு வந்த துச்சாதன புத்திரனாகிய துச்சனி, எல்லோருக்கும் முன்பாகச் சென்று, "இப்போது நான் ஒருவனே இந்த ஓரம்பினால் அபிமந்யுவைக் கொல்லும் பழியை ஏற்றுக் கொள்வேன்!" என்று வீரம் பேசிவிட்டு, அபிமந்யுவின் மேல் ஓரம்பைப் பிரயோகித்தான்.

உடனே தன்னை எதிர்த்து வந்த அந்த அம்பையும் துச்சனியின் தலையையும், அபிமந்யு தனது கூர்மையான வாளால் வெட்டித் தள்ளினான்!

துரோணாசாரியார் அதுகண்டு கோபித்து அபிமந்யுவைப் போரிட்டு எதிர்த்தார். ஹரிஓம் என்று வேத மந்திரம் உச்சரித்து வில்லாசிரியர், அபிமந்யுவின் மேல் ஆயிரம் பாணங்களைத் தொடுத்தார்.

அபிமந்யு அந்த அம்புகளையெல்லாம் வாளால் துண்டித்தான்! மேலும், அபிமந்யு துரோணாசாரியாரின் தேர்க்குதிரைகளையும், தேரையும், சாரதியையும் கண்டதுண்டமாக தனது வாளால் வெட்டித் தள்ளி,

உக்கிரமாகப் போர் செய்து சூரியனைப் போல் விளங்கி நின்றான்.

மீண்டும் மீண்டும் மூன்று தடவை புதுப்புதுத் தேரில் ஏறி வந்து துரோணாசாரியார் அபிமந்யுவை எதிர்த்துப் போரிட்டார். அந்த மூன்று தடவையும் அபிமந்யு முதல் தடவை போலவே துரோணாசாரியாரைத் தோற்கடித்தான். அதனால் உள்ளத்தில் எழுந்த வீரசந்தோஷத்தால் அபிமந்யு, வில்லாசிரியரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான்!

தம்மை அபிமந்யு பரிகசித்ததைக் கண்டதும், வேதம் வல்ல துரோணாசாரியார் அவன்மேல் பெரிதும் கோபம் அடைந்தார். அந்த மகாகோபத்துடன் வில்லாசிரியர் இமயமலை போன்ற வேறு ஒரு தேரில் ஏறிவந்து அபிமந்யுவின் முன் நெருங்கினார். தமது வில்லை வளைத்து அபிமந்யுவின் வாளுடன் வலக்கையும் துண்டித்து விழும்படி அர்த்தசந்திர பாணத்தைக் கொடூரமாகப் பிரயோகித்தார். மறுகணமே அந்தப் பாணம் விரைந்து சென்று, தேவர்களும் ஆச்சர்யப்படும்படி அபிமந்யுவின் வாளோடு வலக்கையையும் துண்டித்துத் தள்ளியது!

வில்லாசிரியரால் தனது வாளையும் வலக்கையையும் இழந்த பின்பும் அபிமந்யு தைரியத்தை இழக்கவில்லை. அவன் முன்னைக் காட்டிலும் பெரும் துணிச்சலுடன் போரில் துரோணாசாரியாரை எதிர்த்து நின்றான்.

துரோணர் அபிமந்யுவின் கொடிய போருக்கு ஈடு கொடுக்க முடியாமல் முன் போலவே தோற்றுத் திரும்பிச் சென்றார்.

பின்பு அபிமந்யு, கண்ணபிரான் தனக்கு உபதேசித்த ஒரு மந்திரத்தால் தனது தேரின் ஒரு சக்கரத்தையே சக்கராயுதமாக எடுத்துக் கொண்டு போரிட்டான். இந்திரனால் பெய்த கல்மழையைத் தடுத்த கோவர்த்தனகிரி போல, அந்தச் சக்கராயுதத்தால் அபிமந்யு தன்னை எதிர்த்து வந்த பகைவரின் அம்பு மழையைத் தடுத்து எல்லோரையும் அழித்தான்!

ஒரு கையாலேயே தேர்ச்சக்கரத்தை எடுத்து எல்லாத்திசைகளிலும் சுழற்றிப் பகைவரையழித்த அபிமந்யு, அப்போது திருமாலைப் போல் விளங்கினான்.

யாரையுமே கைகூப்பி வணங்காத துரியோதனன், தன்னை எவரும் எதிர்த்துப் போர் செய்ய முடியாதபடி யுத்தம் புரியும் அபிமந்யுவின் போர்த் திறமையைக் கண்டான். அதனால் அவன் மிகவும் மனம் புழுங்கினான். அந்த மனக் கொதிப்போடு அவன் துரோணாசாரியாரை நோக்கி, "தான் ஒருவனாகவே இந்த அபிமந்யு, நமது சேனையிலுள்ள சிறந்த வீரர்கள் எல்லோரையும் சின்னாபின்னமாகி விழும்படி தன் ஒரு கையாலேயே வலிய சக்கரத்தை எடுத்துச் சுழற்றிப் போர் செய்கின்றான்! இது என்ன சாமர்த்தியம்! இந்தச் சிறுபிள்ளை ஒருத்தனுடனேயே இன்று ஒரு நாளைப் பொழுது முழுவதும் பெரும்பாலும் கழிந்துவிட்டது. இனி எப்போது போர் முடியும்? நம்பக்கத்திலுள்ள அரசர்களுள் இந்த அபிமந்யுவை ஜெயிக்கக் கூடியவர்கள் யாரும் இல்லை. ஆகையால், இனி கருணையோடு ஜயத்ரதனைக் கூப்பிடுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

அப்படியே துரோணாசாரியார் ஜயத்ரதனை அழைத்தார். ஜயத்ரதன் அந்த வினாடியே துரியோதனனிடம் வந்தான்.

தன்முன் வந்த ஜயத்ரதனிடம் துரியோதனன், "ஜயத்ரதா! தன்னைச் சமீபத்தில் எதிர்த்து நின்ற அரசர்களையும், அவர்களுடைய குமாரர்களையும், உனது மருமகனான லக்ஷணகுமாரனையும் அபிமந்யு யுத்தத்தில் கொன்றான். இந்திரனுடைய பௌத்திரனாகிய அபிமந்யுவின் உயிரை, சிவபெருமான் உனக்குக் கொடுத்த கதாயுதத்தால் வாங்கிவிடு!" என்று ஆஜ்ஞையிட்டான்.

அதுகேட்டு ஜயத்ரதன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன் அந்த மகிழ்ச்சியுடன் தனது இரண்டு கைகளையும் கூப்பி துரியோதனனை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

துரியோதனனுடைய மனம் மகிழும்படி யுத்தத்துக்குப் புறப்பட்ட ஜயத்ரதன் தேர்ப்பாகனைப் பார்த்து, "குதிரைகளைப் பூட்டி, தேரின் மேல் கொடியையும் நாட்டித் தேரை வேகமாகச் செலுத்து!" என்று கட்டளையிட்டான்.

தனது கட்டளைப்படி தேர்ப்பாகன் செய்ய, அந்தத் தேரில் ஜயத்ரதன் ஏறிக் கொண்டான். பின்பு, அபிமந்யுவிடம்

கொண்ட கோபத்தால் கண் சிவக்க, ஜயத்ரதன் சிவபெருமானின் திருவடிகளை மனப்பூர்வமாகத் தியானித்து, பெருமான் கொடுத்தருளிய கதாயுதத்தையும் எடுத்துக் கொண்டான்.

பரமசிவனின் கதாயுதத்தோடு தன்முன் போருக்கு வந்த ஜயத்ரதனை அபிமந்யு கண்டான். அக்கணமே சக்கராயுதத்தை வீசி எறிந்துவிட்டு, அழகிய ஒப்பற்ற ஒரு கதாயுதத்தைத் தானும் எடுத்துக் கொண்டான். தான் எடுத்த கதாயுதத்தை வேகமாகச் சுழற்றிக் கொண்டே அபிமந்யு, ''ஜயத்ரதா! உனது கதாயுதத்துக்குச் சமமான கதாயுதம் இது!'' என்று பெரிதாக வீரவாதம் பேசினான்.



பிறகு, அபிமந்யு அந்தப் போர்க்களம் முழுவதும் இடியிடித்தது போல உற்சாகத்தோடு கர்ச்சித்தான்.

அதன்பின் ஜயத்ரதனும் அபிமந்யுவும் இரண்டு சிங்கங்கள் போல மாறி மாறிக் கொடிய கதாயுதத்தைச் சுழற்றிப் பயங்கர யுத்தம் செய்தார்கள். அதனால் எழுந்த பேரோசை காலாக்கினியால் சூழ்ந்து எரிக்கப்பட்டுக் காற்றும் வீசப் பெற்ற சமுத்திரம் அதிர்ந்தது போலவும், மேகங்கள் இடித்தது போலவும் ஒலித்தது. மேலும், அந்த ஓசை மின்னல் பரவ எட்டுத் திக்குகளின் எல்லைகளையும் மோதி, அண்ட கோளத்தின் சுவர்களும் உடையும்படி அதிகமாக ஒலித்தது. அபிமந்யுவும் ஜயத்ரதனும் கொஞ்சமும் சோர்வு இல்லாமல், தங்களின் தோள் வலிமையால் ஜெயம் தரும் பெரும் போரைச் செய்தார்கள்.

அப்போது அபிமந்யு ஜயத்ரதனின் புஜங்களும், எலும்புகளும், உடம்பும், குடலும், தொடைகளும், மணிமுடியும் சிதையும்படியாகத் தனது இடக்கை கதாயுதத்தால் அவனைக் கோபத்துடன் தாக்கினான். பதிலுக்கு ஜயத்ரதன் தனது கதாயுதத்தைத் தூக்கி இரண்டு கைகளாலும் பிடித்து அபிமந்யுவைப் பலத்தோடு தாக்கினான்.

உடனே அபிமந்யு பெரும் கோபம் அடைந்தான். அவன் தனது ஒருகை கதாயுதத்தால் ஜயத்ரதனின் தேரை உடைத்தான். தேர்க்குதிரைகளைச் சின்னாபின்னமாக்கிக் கொன்றான். தேர்ப்பாகனையும் எமலோகத்துக்கு அனுப்பினான். தேர்க்கொடியையும் ஒடித்தான். அப்படி ஜயத்ரதன் தோற்றோடும்படி அவனை எதிர்த்து அபிமந்யு யுத்தம் பண்ணினான்.

ஜயத்ரதன் அந்தக் கணத்தில் சிங்கத்தைக் கொல்ல வல்ல சரபம் போல, சிவபிரான் கொடுத்த கதாயுதத்துடன் தேரிலிருந்து குதித்து, பூமியில் நின்று யுத்தம் புரிந்தான்.

கண்ணபிரானின் மருமகனாகிய அபிமந்யுவும், சிந்துதேசத்து அதிபனாகிய ஜயத்ரதனும் பூமியில் வலிமையோடு கால்களை ஊன்றிநின்று செய்த யுத்தம் மிக பயங்கரமானது. அவர்களின் கால் வலிமையால் பூமியைத் தாங்குகின்ற நாகர்களின் தலைகளெல்லாம் நொறுங்கின. அவர்களின் கதாயுதங்கள் மோதி ஒலித்த ஓசையால் அஷ்டத்திக்கஜங்களும் தங்கள் தங்கள் பெண்யானைகளோடு நிலைகுலைந்து ஓடின. அப்படி அவர்கள் இருவரும் பகற்பொழுது வரையிலும் மாறி மாறி ஒருவரையொருவர்

பற்றிச் சுழன்று வந்து, காண்பவர்களுக்கு வியப்பு ஏற்படும்படி எதிரெதிரே நின்று கதாயுதப் போர் செய்தார்கள்.

கதாயுதப் போரில் பீமனும், விற்போரில் அர்ச்சுனனும் தனக்குச் சமமானவர்கள் இல்லை என்று பார்ப்பவர்கள் எல்லோரும் சொல்லும்படி, அபிமந்யு அன்றையப் போரில் உக்கிரமாக யுத்தம் புரிந்தான். அவனுடைய யுத்தத்தையும் வலிய தோள்களின் பலத்தையும் கண்டு, எல்லா அரசர்களும் தேவர்களும் அவனை உரத்தகுரலில் தோத்திரம் செய்தார்கள். அதனால் எழுந்த ஆரவாரம் அண்டகோளத்தின் மேல் முகட்டையும் அதிர்ச்சியடையச் செய்தது!

அப்போது பிணங்களைத் தின்பதற்காக கழுகுகள் போர்க்களத்தின் ஆகாயத்தில் பந்தல் போட்டது போல வேகத்தோடு இடைவிடாது பறந்தன. பலவிதமான பேய்கள் அநேகவிதமான கரணங்களைப் போட்டன. துண்டுபட்டு எழுந்த உடலுறுப்புகள் அநேகவகைப் பௌரிக் கூத்தை யாடின. எதிரே அழிந்த சேனைகள் இரண்டு பக்கங்களிலும் விழுந்தன. ரத்தவெள்ளத்தால் தோன்றிய ஆறுகள் சமுத்திரத்தையும் செந்நிறமாக்கும்படிப் பெருகி ஓடின. மேகம் போல் பயங்கரமான முழக்கத்தையுடைய யானை, தேர், குதிரைகள் யாவும் அந்த ரத்த வெள்ளத்தில் மூழ்கின. பின் அதில் உண்டான சுழல்களிலெல்லாம் மறைந்து அழிந்தன!

எல்லா ராஜாக்களும் ஒருவர் பின் ஒருவர் என்று முறையில்லாமல் தன் ஒருவனையே எதிர்த்து வந்து போரிட்டபோதும் அபிமந்யு கலங்கவில்லை; சோரவில்லை. அவன் அவர்களை எதிர்த்து தனது பலத்தால் போரிட்டு, அவர்களுக்குத் துன்பமும் தந்து தோற்றோடச் செய்தான். அப்படிப் போர் செய்த பின்பு, வெகுநேரம் ஜயத்ரதனை எதிர்த்து வலிய யுத்தம் புரிந்தான். கடைசியில் அபிமந்யு ஜயத்ரதனின் கடும்யுத்தத்தால் சோர்ந்து போனான்.

தனது யுத்தத்தால் அபிமந்யு மயங்கிச் சோர்ந்த நிலையில் நிற்பதை ஜயத்ரதன் கண்டான். அவ்வளவுதான். ஜயத்ரதன், 'இதுவே இவனைக் கொல்வதற்குச் சரியான சமயம்' என்று நினைத்தான். அந்நினைவோடு பராக்கிரமத்தால் பூமி முழுவதையும் தனதாக்கிக் கொள்ளும் திறமை படைத்த அபிமந்யுவை அவன் நெருங்கி வந்தான்.

பின்பு, ஜயத்ரதன் சிவபெருமானை ஸ்ரீபஞ்சாக்ஷரமகா மந்திரத்தை உச்சரித்து வணங்கி, அபிமந்யுவை தனது தோள்வலிமை கொண்டு கதாயுதத்தால் படுபயங்கரமாகத் தாக்கினான்.

அந்த க்ஷணத்தில் ஆதிசேஷனைப் பகைத்த மேருமலையின் கொடிமுடியை வாயுதேவன் தாக்கி ஒடித்தது போல, அபிமந்யுவின் ரத்தினகிரீடம் ஜயத்ரதனின் கதாயுதத்தால் தாக்குண்டு வேகமாகக் கீழே விழுந்தது.

மறுகணம் அபிமந்யு கோபித்து ஜயத்ரதனைத் தனது கதாயுதத்தால் பலமாகத் தாக்கினான். அதனால் ஜயத்ரதனின் மார்பு முதலிய உயிர்நிலைகள் மிகவும் நொறுங்கின.

ஜயத்ரதன் அபிமந்யுவின் தாக்குதலால் அதுவரை யில்லாத ஆத்திரத்தையடைந்தான். உடனே அவன் சிவபெருமானின் கதாயுதத்தால் மேலும் பலமாக அபிமந்யுவைத் தாக்கினான். ஐயோ! மறுவினாடி அபிமந்யுவின் தலையும் உடம்பும் தனித்தனித் துண்டாகி மலை சாய்ந்தது போலத் தரையிலே சாய்ந்தன. அதனால் சமுத்திரம் கரை புரள்வது போல, போர்க்களம் எங்கும் பெரும் ஆரவாரம் எழுந்தது!

அபிமந்யுவுக்குச் சிறந்த மாமன் கண்ணனாம்! சிறந்த தந்தை அர்ச்சுனனாம்! பாட்டன் தேவர்களுக்கெல்லாம் தலைவனான இந்திரனாம்! மேலும், சிநேகமும் உறவுமாக உள்ளவர்கள் ஒரு கோடிக்கணக்கான அரசர்களாம்! அப்படியிருக்க, இளங்குமரனாகிய அபிமந்யு ஜயத்ரதனின் கையால் இறந்தானாம்! ஊழ்வினையின் செய்கைகள் வேறு வேறு விதமாகச் சம்பவித்த காலத்தில், உலகத்தில் அந்த ஊழ்வினையை ஜெயிக்க வல்லவர்கள் யார் இருக்கின்றார்கள்?

கீழிருந்து பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய தலை, அதிகமான பாரத்தைத் தாங்க முடியாமல் வளையும் படி வருகின்ற அபிமந்யுவின் சிவந்த பொன்மயமான தேர் அழிவதோ? ஐயோ! ஐயோ!! கேடயத்தையும் வாளையும் ஏந்திய அழகிய வளையணிந்த தோள்களுடைய அபிமந்யுவின் கைகள் துண்டாவதோ? ஐயோ! ஐயோ!! கொடியதொரு கதாயுதத்தால் சிந்துதேசத்து அதிபதி

அபிமந்யுவைக் கொல்வதோ? ஐயோ! ஐயோ!! செய்கின்ற யுத்தத்தில் அபிமந்யுவின் சமீபத்தில் ஒருவரும் உதவிக்கு வராமல் இருப்பதோ? ஐயோ! ஐயோ!!

அபிமந்யு கர்ணனையும் தேர் அழியச் செய்தான். அவன் முருகக்கடவுளைக் காட்டிலும் பலசாலியாவான். ஐயோ! ஐயோ!! பாண்டவர்கள் ஐந்துபேரும் உயிரோடிருக்க, அவர்களின் குமாரனாகிய அபிமந்யு இறப்பதோ? ஐயோ! ஐயோ!! தேவர்கள் அபிமந்யுவின் பராக்கிரமத்தைக் கண்டு அதிசயித்து மனமுருகி நல்லறிவோடு அவன்மேல் பூமாரி பொழிந்தார்கள். ஐயோ! ஐயோ!! அன்னக் கொடியுடைய பிரம்மா அபிமந்யுவுக்கு அதிக ஆயுளைக் கொடுக்கவில்லையே. ஐயோ! ஐயோ!!

முதலில் அபிமந்யுவோடு கோபித்துப் போர் செய்த கர்ணன், அவனுடைய அம்பைத் துண்டித்தான்; வில்லை ஒடித்தான்; தேரையழித்தான்; கொடியைச் சிதைத்தான். பின்பு, போர் செய்த துரோணாசாரியார் அபிமந்யுவின் வலக்கையைத் துண்டித்தார். கடைசியாகப் போர் புரிந்த ஜயத்ரதன் அபிமந்யுவின் தலையைத் துண்டித்தான். அப்படி ஒருவரால் வெல்ல முடியாமல் பலர் கூடிக் கொன்ற அபிமந்யுவின் பராக்கிரமத்தைச் சொல்ல முடியுமோ?

முன்பு அபிமந்யுவிடம் தோற்றோடிய அரசர்கள் எல்லோரும், அவன் இறந்த செய்தி கேட்டு மகிழ்ந்தார்கள். அதனால் அவர்கள் திரும்பவும் பெரும் தைரியத்தோடு போரிட போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

துரியோதனன் தனது மகனான லக்ஷணகுமாரன் இறந்த துக்கத்தையும் மறந்து, அபிமந்யுவின் இறப்பால் பெரிதும் சந்தோஷம் அடைந்தான். இனி பாண்டவரை ஜெயித்து விட்டோம் என்று அவன் எண்ணினான்.

எல்லோரும் அபிமந்யுவின் மரணத்தால், 'தனித்தனியே இருவர் ஒருவரையொருவர் பிரயத்தனப் பட்டு எதிர்த்துப் போர் செய்வது உலக இயல்பு. அதைவிட்டு ஒரு கோடி அரசர்கள் இரண்டு பக்கத்திலும் எதிர்த்துச் சூழ்ந்து அபிமந்யுவைக் கொன்றுவிட்டார்கள்! கர்ணனால் தேரிழந்த அபிமந்யு தனக்கு வேறு ஒரு தேர் கிடைக்காத குறையால் தானே போர்க்களத்தில் இறந்தான்!' என்றெல்லாம் நினைத்து, புலம்பிச் சோகித்துப் படாத பாடு பட்டார்கள்.

ஆனால் துரியோதனன், ஜயத்ரதன், சகுனி, துச்சாதனன் ஆகிய நால்வர் மட்டும் அபிமந்யுவின் மரணத்துக்கு அளவுகடந்து சந்தோஷப்பட்டார்கள்!

யாகங்களாலும், சத்தியத்தாலும், பராக்கிரமத்தாலும், கருணையாலும், வெற்றியாலும், சாஸ்திரக் கேள்வி ஞானத்தாலும் சிறந்து எல்லோருக்கும் சிநேகிதராகிய தருமபுத்திரரும், 'தேவர்களும் மகிழும்படி அபிமந்யு தனது முயற்சியால் வெற்றி கொள்ளும்படிப் போரிட்டு, சக்கரவியூகத்தை உடைத்துத், தான் மட்டுமே தனித்து நின்று கடைசியில் மாண்டான்!' என்ற செய்தியைக் கேள்விப்பட்டார்.

மகன் அபிமந்யுவின் மரண செய்தி கேட்டதும், தருமர் உலகத்துத் துன்பத்தையெல்லாம் ஒரே சமயத்தில் அடைந்தது போல் வருந்தினார். ராஜராஜனாகிய தருமர், "என் கண்ணே! என் உயிரே! அபிமந்யு! நீ பிறந்த நாள் முதலாக உன் தந்தை அர்ச்சுனனைவிடப் பெருமையும் தேஜஸும் உடையவனாக விளங்கினாய்! அதனால் உன்னைக் கொண்டே பகைவர்களை வென்று, நான் உலகத்தை அரசாள எண்ணியிருந்தேனே! உனது அன்புள்ள தந்தையர்களான எங்களையும் நீ மறந்து விட்டாயோ? இல்லை, மறக்காமல் சிவபெருமானின் கொன்றைப் பூமாலையால் சூழ்ந்து கொண்டு பகைவர்கள் செய்த யுத்தத்தில் இறந்தாயோ? இன்றைக்கு என்ன செய்து விட்டாய்! அர்ச்சுனனும் பீமனும் நகுலசகாதேவர்களும் வாழ்ந்திருக்கவும், கண்ணபிரானும் உறவினனாகக் கூடியிருக்கவும், நான் பகைவென்று அரசாண்டு வாழ நினைத்திருக்கவும், செய்தொழிலை முற்றும் அறியாத சிங்கக்குட்டி போன்ற நீ இறப்பதோ? இது என்ன அநீதி! என்ன அநீதி! ராஜகுமாரர்களுள் சிங்கம் போன்றவனே! நீ இதுவரையிலும் போரில் என்னைப் பாதுகாத்து நின்றாயே! பகைவரின் சக்கர வியூகத்தைப் பிளப்பதற்கு உன்னைச் செல்லும்படி நான் சொல்ல, பெரிய தேரைச் செலுத்திக் கொண்டு போனாயே! கண்ணிமைக்கும் பொழுதிலே சக்கரவியூகத்தையும் உடைத்தாயே! பின்பு, பகைவர்கள் ஓட ஜெயித்தாயே! விஷ பாணங்களால் லக்ஷ்மண குமாரனையும், கோடிக்கணக்கான ராஜகுமாரர்களையும் கொன்றாயே! இப்படிப்பட்ட உனது பராக்கிரமத்தைத் திரும்பி வந்து எனக்குச் சொல்ல வெட்கப்பட்டுக்

கொண்டுதான் நீ வராமல் சென்றாயோ? உதவிக்கு யாருமில்லாமல் தனியாகச் சென்று நீ சக்கரவியூகத்தைப் பிளந்து, யுத்தத்தில் மாண்ட செய்தியைக் கேள்விப்பட்டால் அர்ச்சுனனும் உயிரோடு இருப்பானோ? மகனே! நீ எனக்கு ராஜ்ஜியத்தைக் கொடுக்க இருந்தது இவ்வளவுதானோ?'' என்றெல்லாம் கூறியழுது, மனக்கவலையால் கடைசியில் மூர்ச்சித்துத் தேரில் விழுந்தார்.

பீமனும் அபிமந்யுவின் இறப்புச் செய்தியை அறிந்தான். அந்தக் கணத்தில் அவன் பெரிதும் வருந்தி, ''குமாரனே! பகைவர்கள் வகுத்த சக்கர வியூகத்தின் நடுவிலே தனியாக நீ போரிட்டுக் கொண்டிருந்தாய். உனக்கு உதவி செய்ய நானும் தனியாக சக்கரவியூகத்தை உடைத்துக் கொண்டு உன் சமீபம் வந்தேன். ஆயினும் சிவபெருமானின் கொன்றைப் பூமாலை கொண்டு, உன்னைக் கொன்ற வஞ்சனையை நான் அறியவில்லையே!'' என்று கூறி, 'கோ' வெனக் கதறினான்.

பீமன் போல் புத்திரசோகத்தால் நகுலன், ''மின்னல் இல்லாமலேயே இடியிடித்தது போல, எதிர்பாராமல் கொண்டு வந்து நடுவே போட்ட கொன்றைப்பூ மாலையாலும், சிவபெருமானின் கதாயுதத்தாலும் தவிர, யுத்தத்தில் அபிமந்யுவைத் தங்கள் வலிமையால் அழிக்கக் கூடியவர்கள் யார் இருக்கின்றார்கள்? தனது பராக்கிரமத்தால் யுத்தம் புரிந்து வெற்றிச் சங்கம் ஊதிய சிங்கக்குட்டி போன்ற என் குமாரனே! அபிமந்யு! நீ யுத்தத்தில் இறந்த பின்பும், நான் சாகாமல் என் உயிரை வைத்துக் கொண்டிருக்கின்றேனே!'' என்றெல்லாம் சொல்லிப் புலம்பினான்.

சகாதேவனும் புத்திரசோகத்தால் நெஞ்சம் வருந்தி, ''ஐயா! எவருக்கும் இல்லாத யுத்தக்கல்வியும் ஞானக்கல்வியும் ஒன்றாக உன்னிடம் அமைந்திருப்பதைக் கண்டு நான், உனது அருமையான உயிரின் பொருட்டு மிகவும் மனமுருகி முன்பே சந்தேகித்திருந்தேன். அதற்கேற்ப போருக்கு உன்னையனுப்பி பெரிய தந்தையின் கண்கள் மகிழும்படிப் பகைவர்களை வென்று திரும்பாமல் இறந்து, என்னை அழித்துவிட்டாயே! இனி நீ பிழைத்துவிட்டாய் என்று யாராவது ஒருவர் வந்து சொல்ல, நான் கேட்க மாட்டேனோ?'' என்றெல்லாம் கண்ணீர்விட்டுக் கதறித் துடித்தான்.

பாண்டவர்களுள் அந்த நால்வரும் அபிமந்யுவின் மரணத்தால் அப்படியெல்லாம் வருந்திப் பலவாறு சொல்லிப் புலம்பினார்கள். இரண்டு பக்கத்துச் சேனையிலும் உள்ள அரசர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி அபிமந்யுவைப் புகழ்ந்து பேசினார்கள். அவற்றையெல்லாம் கேட்டு மனமயங்கி சூரியன், அபிமந்யுவால் துண்டிக்கப்பட்ட தலைகளாகிய மலையை அஸ்தகிரி என்று நினைத்துப் போய்ச் சேர்ந்தான். பின்பே அஸ்தகிரி அது இல்லை என்று உணர்ந்து, அப்பால் விலகிச் சென்று தனக்கு உரிய பெரிய அஸ்தகிரியை அடைந்தான்!

மன்னர்கள் எல்லோரும் அபிமந்யுவின் சாவுக்குக் கலங்கிச் சோகமடைந்து புலம்பிக் கொண்டிருந்ததை, பூமியிலெங்கும் தனது பராக்கிரமத்துக்கு எதிரில்லாத அர்ச்சுனன் அறியவில்லை. அவன் தென்திசையில் தன்னை எதிர்த்து வந்த ஸஞ்சப்தகர்களைக் கொன்று, வெற்றி விஜயனாக அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பி வந்தான்.

முக்காலத்தையும் முழுவதுமாக அறிந்த மதுராபுரி மன்னனாகிய கண்ணபிரான், ஜயத்ரதன் கொன்றைப்பூ மாலை போட்டு அதனால் அபிமந்யுவைக் கொன்றதைத் தனது திருவுள்ளத்தால் அறிந்தான். அக்கணமே அவன் தேவேந்திரனை நினைத்தான்.

ஸ்ரீகிருஷ்ணன் நினைத்தவுடனே இந்திரன் அவன் மனத்தில் வந்து தோன்றினான். தன் மனத்தில் தோன்றிய இந்திரனிடம் மனக்குறிப்பால், ''உனது புதல்வனாகிய அர்ச்சுனனுடைய உயிரை, புத்திர சோகத்தல் இறவாதபடி நீ பாதுகாப்பாய்!'' என்று தெரிவித்தான் கண்ணன்.

இந்திரன் அதற்கு இணங்கி கண்ணனைத் தோத்திரம் செய்து நமஸ்கரித்துவிட்டுச் சென்றான். சிறிது நேரம் கழித்து இந்திரன் மாயத்தால் தவசிரேஷ்டனாக வடிவங் கொண்டு அர்ச்சுனனின் தேர்முன்பு வந்தான். அப்போது அவன், ''ஐயோ! விதிவசத்தால் என் அன்பு மகன் இறந்துவிட்டானே! அவன் இல்லாமல் நான் மட்டும் உயிர் வாழ்வதோ? இறந்த எனது அன்பு மகனுடன் நானும் நெருப்பில் விழுந்து இறப்பேன்!'' என்று சொல்லிக் கதறினான்.

பின்பு, இந்திரன் அர்ச்சுனனும் கண்ணனும் பார்க்கும் படித் தீமூட்டி அதில் விழப் போனான்.

உடனே கண்ணன் அர்ச்சுனனை நோக்கி, "வில்வீரனே! இந்த முனிவன், புத்திரன் இறந்த சோகத்தால் தானும் இறக்க நிச்சயித்துத் தீமூட்டி அதில் விழப் போகிறான். இக்கணமே நீ இங்கே இவனைத் தடுத்துக் காப்பாற்று!" என்று கட்டளையிட்டான்.



அர்ச்சுனன் அந்த வினாடியே கண்ணனின் ஆணைக்குட்பட்டு முனிவன் அருகே சென்றான். முனிவனைப் பார்த்து அர்ச்சுனன், "சுவாமி! நீர் வீணாய் நெருப்பில் விழுந்து இறக்காதீர்! பிழைத்திருந்தால், இன்னமும் புதல்வரைப் பெறுதலும் கூடும். தவத்திற் சிறந்தவரே! சிறந்த உமது உயிரை நீரே போக்கிக் கொள்வது நல்லதில்லை!" என்று உபசாரங்கள் சொல்லி, மலையினும் வலிமையுடைய தன் கைகளால் அவனை அணைத்துக் கொண்டான்.

மீண்டும் முனிவனிடம், "ஓர் உயிர் இறப்பதும் பிழைத்திருப்பதும் விதி வழிதான் நடக்கும். அப்படியிருக்க, நம்மால் ஓர் உயிரை உண்டாக்குவதும் அழிப்பதும் முடியுமோ? முனிவரே! உம்மைவிட அறிவுள்ளவர்கள் வேறு இருக்கின்றார்களா? உலகத்தில் யார்தான் புத்திரரோடு இறந்தவர்? ஐயனே! இப்போது நீர் இறந்தால், உலக

இயல்புக்கு அது மாறுபட்டதில்லையா?'' என்று கூறி அர்ச்சுனன், முனிவனைச் சாகாமல் தடுத்தான்.

அதுகேட்டு முனிவன் கோபம் அடைந்தான். சினத்தோடு அர்ச்சுனனைப் பார்த்து அவன், ''நான் சொல்வதை நீ கேள்! என் புத்திரன் இறந்துவிட்டான். இறந்த மகனுடன் நானும் இறக்க முடியாதபடி நீ தடுக்கின்றாய். உன் வார்த்தைப்படி நான் நடக்க வேண்டுமானால், நீ என் வார்த்தைப்படி நடக்க வேண்டும். இறந்த என் மகனோடு நான் சாகாமல் இருப்பது போல், உன் மகன் இறந்தால் அப்போது நீயும் அவனுடன் இறக்காமல் இருக்க வேண்டும்!'' என்றான்.

முனிவனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அர்ச்சுனன், அவனை வணங்கி விடைபெற்று தேரேறி கண்ணனுடன் வேகமாகச் சென்றான். அப்போது கடலோசையைக் காட்டிலும் பெரிதான ஓசை அவர்களின் காதுகளை வந்து தாக்கியது.

அதுகேட்டு கண்ணன், ரதம் பாசறைக்குப் போய்ச் சேர்வதற்குள் அர்ச்சுனனிடமிருந்த ஆயுதங்கள் எல்லாவற்றையும் தான் எடுத்து வைத்துக் கொண்டான்.

பாசறையில் உள்ளவர்கள் எல்லோரும் கைகளால் அடித்துக் கொண்டு கதறுகின்ற பேராரவாரத்தை அர்ச்சுனன் கேட்டான். உடனே அர்ச்சுனன் கண்ணனை வணங்கி நோக்கி, ''நமக்குச் சமீபத்தில் ஆரவாரம் கேட்கின்றதே! இது என்ன?'' என்று கேட்டான்.

கண்ணன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவன், தாமரைமலர் போன்ற தன் கண்கள் செந்நிறமடைய, முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளை அதிகமாகச் சிந்தினான்!

ஸ்ரீகண்ணபிரானின் கண்ணீரைக் கண்டதும் அர்ச்சுனன் மனம் நொந்தான். மைத்துனனின் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து எழுந்தான். பின்பு அவனைப் பார்த்து அர்ச்சுனன், ''எனது கண்களும், தோள்களும், மார்பும் அதிகமாக இடப்பக்கம் துடிக்கின்றன. நீயும் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் வழிய நிற்கின்றாய்! இன்றைக்கு யுத்தத்தில் துன்பம் அடைந்தவர்கள் எனது சகோதரர்களோ? இல்லை, எனது புத்திரர்களோ? கண்ணா! உனது சிறந்த

மனத்தில் அறியப்படாதது எதுவும் இல்லை. ஆகையால், நிகழ்ந்த உண்மையைச் சொல்!'' என்று கேட்டான்.

தளர்ந்து போய் நின்ற அர்ச்சுனனைக் கண்ணன் அணைத்துக் கொண்டு, அவனுக்குப் பதில் சொல்லத் தொடங்கி, ''சந்திரவம்சத்துச் செல்வனே! அஞ்சும்படி பகைவர்களை ஜெயித்த பராக்கிரமசாலியே! இன்று போரில் எனது மருமகனாகிய அபிமந்யு இறந்து விட்டான்!'' என்று கூறி, அபிமந்யு இறந்த விதத்தையும் விபரமாக எடுத்துச் சொன்னான்.

மைத்துனன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், கொள்ளிக்கட்டைகளை இரண்டு காதுகளிலும் நுழைத்தது போல் அர்ச்சுனன் துடித்தான். புத்திரன் இறந்த சோகத்தால் நெஞ்சம் வருந்தினான். அதனால் ஏற்பட்ட விசனம் என்னும் விஷத்தால் மாண்டவன் போல, அர்ச்சுனன் மூர்ச்சித்து தேரிலிருந்து அப்படியே தரையில் விழுந்தான்!

மூர்ச்சித்து கீழே விழுந்த அர்ச்சுனனைக் கண்ணபிரான் பரிவோடு தாங்கிக் கைகளால் அணைத்து எடுத்தான். பிறகு, அர்ச்சுனன் மேல் குளிர்ந்த வாசனைப் பன்னீரைத் தெளித்து கண்ணன் அவனுடைய மயக்கத்தைத் தெளிவித்தான்.

கூடபாகலம் என்னும் தீராப்பெருநோய் குறைய யானை மெல்லத் தெளிவுற்றது போல, அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனின் சைத்தியோபசாரத்தால் மெல்ல மயக்கம் தெளிந்து கண்விழித்து எழுந்தான்.

ஆயினும் அர்ச்சுனன் புத்திரசோகத்தால் பெரிதும் மனம் வருந்தி, ''உனக்குச் சமமாக யாரும் இல்லாதவனே! எங்கள் ஐந்து பேருக்கும் உரிய ராஜனே! யுத்தத்தில் தம்பிமார்களோடு சென்று துரியோதனனை நீயே ஜெயித்து, எனக்கு ராஜ்ஜியத்தைக் கொடுப்பாய் என்று நினைத்து, மனத்தில் மிகவும் அதிகமாக ஆசை கொண்டிருந்தேன். நீ போர்க்களத்தில் இறந்தாயானால், இனிமேல் பகைவர்களை அழிக்க வல்லவர்கள் யார் இருக்கின்றார்கள்? மகனே! சக்கரவியூகம் உன்னால் உடைந்த விதத்தையும், அதில் பகைவர்கள் அழிந்த விதத்தையும், தெய்வத்தன்மையுள்ள கொன்றைப்பூ மாலையால் ஜயத்ரதன் உன்னைச் சூழ்ந்த விதத்தையும், உன் உடம்பில் துரோணரால் ஒரு கை

துணிபட்ட விதத்தையும், அதன் பின்பும் நீ கோபித்துப் போர் செய்த விதத்தையும் வீரத்தோடு என் முன்னே நீ வேகமாக வந்து சொல்ல மாட்டாயோ? நாகராஜன் மகள் உலூபியின் சிறந்த குமாரனாகிய அரவானை முதலில் போரில் இழந்தேன். இன்றைக்கு உன்னையும் இழந்து விட்டேன். ஐயா! நீ இறந்த பின்பும் உன்னுடன் கூட வராமல் என் உயிர் என் உடம்பில் இருக்கின்றது! என்னுயிருக்கும் அழிவு உண்டோ? மூர்க்கனாகிய நான் முடிக்காததொரு காரியமும் உண்டோ? சூரியோதயத்துக்கு முன்பே என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, போர்க் கோலம் கொள்ளும்படித் தெரிந்து சொல்லுவதில் வல்லவனே! இத்தனை நேரம் பெரும்போர் செய்து திரும்பி வந்தேன். வழக்கம் போல் என் எதிரில் நீ வர, இன்றைக்கு நான் காணவில்லை! நீ இங்கு இல்லையோ? என்ன செய்தாயோ? சேனைகளின் துணையில்லாமல் தனியாகப் போரிட்டு, சுவர்க்கலோகமே உன் சிறப்புக்குத் தகுதியான இடம் என்று நினைத்து பூமியைவிட்டுப் போன ஐயனே! சந்தோஷத்துடன் நம்மைப் பார்ப்பதற்கு நமது பேரப்பிள்ளை வருகின்றான் என்றெண்ணி, இந்திரன் தேவர்களையனுப்ப, அவர்கள் உன்னை வரவேற்று அழைத்துப் போனார்களோ? தேர் அழிந்து, கையில் பிடித்த வில்லும் வாளும் இல்லாமல், மற்றவர்களின் உதவியுமின்றி மாண்ட என் மகனே! நீ சிறந்த போரைப் புரிந்து, பின்பு அமராவதிப்பட்டணத்தை அடைந்தபோது, உன் பாட்டனாகிய தேவேந்திரன் உனது பெரும் போர் வல்லமையைக் கேட்டறிந்து, உன்னைப் பற்றி என்ன சொன்னானோ? அற்புதமான ஆயுதங்களில் வல்லவனே! அபிமந்யு! மலை போன்ற தோள்களில் ஒன்று வாளாயுதத்தால் துணிந்து விழுந்த பின்பும் அழகாகப் போர் செய்தாய்! அப்படிப்பட்ட நீ தேவலோகத்தைச் சேர்ந்த போது, அங்குள்ள தேவர்கள் தங்களுடைய அமராவதி நகரத்தையும், கற்பக விருட்சங்களுள்ள நந்தவனத்தையும், ஆகாயகங்கா நதியையும் உன்னை அழைத்துப் போய்க் காட்டினார்களோ? வளைத்த வில் நிமிராதபடி பாணப் பிரயோகம் செய்து முதலில் துரோணருடைய தேரையும் குதிரைகளையும் அழித்து, அவரைக் கால்நடையாகவே தோற்றோடச் செய்த வீரனே! அர்ச்சுனனின் மகனாகிய அபிமந்யுவின் உடம்பு இடைவிடாது செய்த கொடிய போரால் மிகவும் சிரமப்பட்டு மெலிந்துவிட்டது என்றெண்ணி, இந்திராணி தனது பேரப்பிள்ளையாகிய

உனக்கு தேவாமிருதத்தை ஊட்டினாளோ?'' என்றெல்லாம் கண்ணீர்விட்டுக் கதறினான்.

அர்ச்சுனனும் மற்ற பாண்டவர்களும் அபிமந்யுவின் மரணத்துக்கு வருந்தி மாறி மாறி அழுதார்கள். மற்றவர்கள் எல்லோரும் தலைமேல் கைகளை வைத்துக் கொண்டு, துக்கம் தாங்காமல் கண்ணீரை வெள்ளமாகப் பொழிந்தார்கள். அப்போது வேதங்களை அருளிய வியாசமாமுனிவர் அங்கே எழுந்தருளினார்!

அங்கு முனிவர்களோடு எழுந்தருளிய வியாசபகவான், பாண்டவர்களின் கண்ணீரைத் துடைத்தார். பின்பு அவர்களை நோக்கி, ''பாண்டவர்களே! தாய்மார்களும், தகப்பன்மார்களும், மனைவிமார்களும், புதல்வர்களும், சகோதரர்களும், பந்துக்களும் ஆகிய எல்லோரும், மாயை என்னும் பகவானுடைய சக்தி; மனத்தை மயங்கச் செய்கின்ற மாயையினால் உண்டான சம்பந்தமே! சத்தியமாகச் சொன்னால், அவர்களுக்கும் நமக்கும் யாதொரு உறவுமில்லை! ஓர் உயிர் உடம்பெடுத்து வந்து பிறக்காத வீடுகள் இல்லை. அந்த உயிருக்கு முலைப் பாலை மாறி மாறிக் கொடுத்துக் காப்பாற்றாத தாய்மார்களும் இல்லை. ஆகையால் அவ்வுயிர் போனபோது, மனத்தில் தத்துவஞானம் இல்லாதவர்களே அழுவார்கள். மற்றபடி இந்த உலகத்தில் அறிஞர்கள் எந்தவிதச் சங்கடம் ஏற்பட்டாலும் கலங்க மாட்டார்கள். முடிந்த பிறப்பிலும் நமக்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் யார் என்று நாம் அறிந்தோமில்லை. இனி வரப் போகின்ற மறுபிறப்பிலும் நமக்கு யார் சொந்தக்காரர்கள் ஆவார்கள் என்று நாம் அறிய மாட்டோம். அப்படியிருக்க, இப்பிறப்பில் மாத்திரமுள்ள சுற்றமாகிய இவ்வளவுக்கு வருந்துவது, முக்காலத்தையும் அறிகின்ற அறிவுக்குத் தகாது! ஆகையால், துக்கத்தை நீக்குங்கள். அந்தத் துக்கத்தால் உங்கள் பராக்கிரமம் சிதையாதபடி மனவுறுதியோடு இருங்கள்!'' என்று அநேக உபதேச வார்த்தைகளைச் சொன்னார்.

மேலும் வியாசமுனிவர் வேத வாக்கியங்களைச் சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

பாண்டவர்கள் தங்களுக்கு ஆறுதல் சொன்ன வியாசமுனிவரின் பாதங்களை நமஸ்கரித்தார்கள்.

பின்பு, வியாசமுனிவர் அவர்களைத் துக்கம் நீங்கியவர்களாக்கிவிட்டு, அப்பால் சென்றார்.

வியாசர் அத்தனை ஆறுதல் வார்த்தைகள் சொல்லிச் சென்ற பிறகும், அர்ச்சுனன் மட்டும் ஆறுதல் அடையவில்லை. அவன் புத்திரசோகத்தால் அதிகமாக வருந்தி வாய்விட்டுப் புலம்பினான். மேலும் நகுலனை அழைத்து, "தம்பி! எனது அக்கினிப்பிரவேசத்துக்காகப் பெரும் தீயை வளரச் செய்வாய்!" என்று, என்ன செய்வதென்று அறியாமல் அர்ச்சுனன் உடனே சொன்னான்.

எவ்வளவு தேறுதல் செய்தாலும் புத்திரசோகத்தைச் சமாதானப்படுத்த முடியாது அல்லவா?

தமையனின் கட்டளையை மீற முடியாமல் நகுலன் அக்கணமே தீமூட்டி வளரச் செய்தான்.

அதுகண்டு நண்பர்களும், சகோதரர்களும், உறவினர்களும் அர்ச்சுனன் அக்கினிப் பிரவேசம் செய்யாத படித் தடுத்தார்கள். ஆனால், அர்ச்சுனனோ அவர்களின் தடையைப் பொருட்படுத்தவில்லை. அவன் அவர்களை யெல்லாம் விலக்கிவிட்டு, "அக்கினியிலே என் உயிரை நானே மாய்த்துக் கொள்வேன்!" என்று கூறி, அக்கினிப் பிரவேசத்துக்குத் தயாராக நின்றான்.

ஆமாம், புத்திரரை நீங்கிய சோகம் பொறுத்துக் கொள்வதற்கு முடியுமோ?

அப்போது ஸ்ரீகிருஷ்ணன் இந்திரனை மனக்குறிப்பால் அழைத்தான். அவனும் முன்போலவே முனிவனாய் வேடம் கொண்டு அக்கணமே அர்ச்சுனன் முன்பு வந்து, "என் புத்திரனோடு நான் இறக்க இருந்ததைத் தடுத்தவனே! இப்போது உனது புத்திரனோடு நீ அக்கினிப்பிரவேசம் செய்வது நீதியாகுமோ? ஆகையால், ஒழுங்காக நீ நீதிவழிப்படி நடப்பாயாக!" என்றான்.

முனிவனின் வார்த்தைகளைக் கேட்டதும், அர்ச்சுனன் தனது துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு அக்கினிப் பிரவேசத்தைக் கைவிட்டான். ஆயினும் அவன் புத்திரசோகத்தால் கண்ணீரில் மூழ்கி, மனம் தவித்து, உடல்

தளர்ந்தான். மேலும், அப்போது அவன் பாலைவனத்துப் பட்டமரம் போலானான்!

பின்பு, அர்ச்சுனன் சகோதரர்களை நோக்கி, "அழகிய பிறைச்சந்திரனைப் போன்ற இளங்குமாரனாகிய அபிமந்யுவை, வீணாக உற்சாக மிக்க கொடிய போருக்கு அனுப்பினீர்களே!" என்று கூறிக் கோபித்தான்.

அதன்பின் அர்ச்சுனன், "பேரிடி போலக் கொடிய யுத்தம் செய்து, நாளையதினம் சாயந்திரப் பொழுதில் சிந்துதேசத்து ராஜனாகிய ஜயத்ரதனின் உயிரை நான் பறிப்பேன். அப்படி நான் செய்யாவிட்டால், அக்கினியில் குதித்து இறப்பேன்! இது வேத வாக்கியம் போலத் தவறாத சபத வார்த்தை! இன்றையப் பயங்கரப் போரில் அபிமந்யுவை வதைத்துச் சாகடித்தான் ஜயத்ரதன். நாளைக்கு நான் அவன் உயிரை வதைத்துப் போக்குவேன். அப்படிச் செய்யாவிட்டால், நீதிமன்றத்தில் வாதிப்பிரதிவாதிகளுள் ஒருவர் பக்கம் பக்ஷபாதமாக நீதிதவறி தீர்ப்புச் சொன்னவர்கள் போய்ச் சேரும் நரகத்தில் நான் விழுந்து வருந்துவேன்! போரில் எனது குமாரனின் தலையைத் துண்டித்த பாவி ஜயத்ரதனைப் பழிக்குப் பழிவாங்கப் போர் செய்து கொல்வேன். நான் அப்படிச் செய்யாமல் போனால், தந்தையை எதிர்த்துத் தகுதியில்லாத வார்த்தைகளைப் பேசும் மூடப்புத்திரன் மறுமையில் அடையும் நரகத்தை அடைவேன்! முருகக் கடவுளைப் போன்ற எனது புத்திரன் இறக்கும்படிப் போர் செய்த ஜயத்ரதன் எதிரே நின்று, யுத்தம் புரிந்து வெற்றிமாலை சூடுவேன். அவ்வாறு செய்யவில்லையென்றால், தாய் பசித்திருப்பதைப் பார்த்தும் தன் பசியை அறுசுவை உணவால் போக்கிக் கொள்ளும் அற்ப குணமுடையோர் மறுமையில் போகும் நரகத்துக்கு நான் போவேன்! வஞ்சகமாக எனது புத்திரன் சாகும்படி முன்பு போர் புரிந்த ஜயத்ரதன் மனம் எரிந்து துடிக்க, போர்க்களத்தில் நான் அவனுக்கு நேராகப் போர் செய்வேன். அப்படிச் செய்யாவிட்டால், தஞ்சம் புகுந்தவர்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கின்ற விஷம் போன்ற பாவமுடையவர்கள் மறுமையில் அடையும் நரகத்தை நான் அடைவேன்! தனது வஞ்சகச் செயலால் என் மகனைச் சாகடித்த ஜயத்ரதனை, நாளைக்கு வளைத்த என்வில்லைக் கொண்டு போர் செய்து கொல்வேன். அப்படிச்

செய்யாவிட்டால், தன் மனைவி இறக்க மகனின் மனைவியோடு கூடி வாழ்ந்தவன் அடையும் பாவத்தை நான் பெற்றவனாவேன்!'' என்று ராஜசபையிலே உள்ளவர்கள் எல்லோரும் கேட்டு அதிகமாக அஞ்சி நடுங்கும்படி, அப்போது அநேக சபத வார்த்தைகளைக் கூறினான்.

அர்ச்சுனன் கூறிய சபத வார்த்தைகளைக் கேட்டு, காதில் தீ நுழைத்தது போல தருமர் மிகவும் வருந்தினார். அந்த வருத்தத்துடன் கண்ணபிரானை நோக்கி தருமர், ''கண்ணா! அர்ச்சுனன் தனது சபத வார்த்தைகளின்படி ஜயத்ரதனைக் கொல்ல முடியுமோ? ஒருகால் அப்படி முடியாவிட்டால், அர்ச்சுனன் தனது சபதப்படி அக்கினிப்பிரவேசம் செய்துவிடுவான். பிறகு, நாங்களும் அவனோடு தீயில் விழுந்து இடியால் அழியும் பாம்பு போல மரிப்பது நிச்சயம்! நாளைப் பகல் முப்பது நாழிகைக்குள்ளே தவறாமல் ஜயத்ரதனைக் கொல்வேன் என்று அர்ச்சுனன் இப்போது சபதம் கூறுகிறான். அந்தப் பெரிய கௌரவசேனையில் அந்த ஜயத்ரதனை நடுவே நிற்க வைத்து பலம் பொருந்திய எதிரிகளை அவனுக்குத் துணையாக அணிவகுப்பில் நிறுத்தி விட்டால் அவனை நெருங்க முடியுமோ? அப்படியானால், அர்ச்சுனன் அவனைக் கொன்று தன் சபதத்தை நிறைவேற்றுவது எப்படி? அர்ச்சுனன் அழிந்தால் நான் வேறு என்ன செய்வேன்?'' என்றார்.

கண்ணன் தருமரின் வார்த்தைகளைக் கேட்டு, ''மைத்துனா! பயப்படாதே!'' என்று அபயம் கூறி, அவருடைய கவலையைத் தணித்தான்.

மேலும் ஸ்ரீகிருஷ்ணன் தருமரிடம், ''ஜயத்ரதனை தேவேந்திரன் வந்து பாதுகாத்தாலும் சரி. சிவபெருமானே வந்து பாதுகாத்தாலும் சரி. முருகக்கடவுளை விட மேம்பட்ட உனது தம்பியாகிய அர்ச்சுனன், நாளைக்குக் கொடிய யுத்தம் செய்து அவனுடைய தலையைத் துண்டிப்பான். நாளை சூரியோதயத்துக்குமுன் நான் அர்ச்சுனனோடு சென்று சிவபெருமானைத் தரிசித்துவிட்டு, பொழுது விடிவதற்குள் உன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்ப இங்கு வந்து சேர்ந்துவிடுவேன்!'' என்றான்.

அப்போது சூரியோதயத்துக்குச் சில பொழுது இருந்தது. எனவே, கண்ணபிரான் அர்ச்சுனனை அழைத்துக்

கொண்டு கயிலைக்குப் புறப்பட்டுச் சென்றான். அப்படிப் போகும்போது வழியில் அர்ச்சுனன் களைத்து உடம்பு சோர்ந்து கீழே விழுந்தான். உடனே கண்ணன் தனது அழகிய திருக்கைகளால் அர்ச்சுனனைத் தழுவி எடுத்து, அவனுடைய களைப்பைப் போக்கினான். பின்பு, கண்ணன் அர்ச்சுனனைப் பார்த்து, ''வலிய வேலாயுதத்தையுடையவனே! புத்திர சோகத்தால் நீ சோறும் சாப்பிடவில்லை; தண்ணீரும் குடிக்கவில்லை. அதனால் உண்டான பசிக்களைப்பால் மயங்கித் தரையிலே விழுந்தாய். யாக்கை நிலையாமையாகிய உலகத்து இயல்பை முனிவர்கள் உனக்கு நன்றாக எடுத்துக் கூறிய பின்பும், நீ புத்திர வாஞ்சையால் அதனை அறியவில்லை! இங்கே மாம்பழங்களும், வாழைப் பழங்களும், பலாப்பழங்களும் நிறைய உள்ளன. கரும்புச்சாற்றைவிட ருசிமிக்க தண்ணீரும் இங்கே இருக்கின்றது. பெருமையில் சிறந்தவனே! பழங்களை உண்டு, நீரைக் குடித்து உனது பசியையும், அதனால் உண்டான களைப்பையும் போக்கிக் கொள்!'' என்றான்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் அன்போடு சொன்ன அந்த வார்த்தைகளைக் கேட்டதும், வில்வீரனாகிய அர்ச்சுனன் அவனிடம், ''இன்றைக்கு இன்னும் நான் சிவபூஜை செய்யவில்லையே!'' என்றான்.

உடனே கண்ணன் மைத்துனனை நோக்கி, ''அர்ச்சுனா! நீ பரிமளமிக்க இந்தக் காட்டுப் பூக்களால் எம்மை ஒப்பற்ற பூஜை செய்! பின்பு, கைலாசகிரிக்குச் சென்று சிவபெருமானுடைய திருவடிகளை நமஸ்கரிக்கும் போது, அப்பரமசிவனும் நானும் ஆகிய இரண்டு மூர்த்திகளும் ஒரு மூர்த்தியே என்பதை இன்றைக்கு நீ பிரதியக்ஷமாகக் காண்பாய்!'' என்றான்.

கண்ணன் கூறியபடி அர்ச்சுனன் அக்கணமே காட்டுப் பூக்களையும் கனிகளையும் பறித்து வந்து, அவனையே சிவனாக மனமாற பாவித்து, சைவாகமங்களில் கூறப்பட்ட வேதவாக்கியங்களின்படிப் பூஜை செய்தான்! பிறகு, கண்ணனுக்குப் படைத்த கனிகளை உண்டான். நைவேத்தியம் செய்த தீர்த்தத்தைக் குடித்தான்.

பசிக்களைப்பு நீங்கியதும் அர்ச்சுனனுடைய உடம்பு தெம்புற்றது. அவனுடைய மனமும் அதனால் தெளிந்தது.

ஆமாம், அர்ச்சுனன் முன்பு செய்த தவத்தின் பலன் இப்படிச் சித்தித்தது!

அதன்பின்பு, கண்ணன் அர்ச்சுனனையழைத்துக் கொண்டு கைலாசகிரியை நோக்கி நடந்தான். சிறிது தூரம் போனபின், கண்ணன் தனது திருவுள்ளத்தில் கருடனை நினைத்தான். அக்கணமே அந்தப் பக்ஷிராஜன் அங்கே வந்து கண்ணனைத் தனது தோள்களிலும், அர்ச்சுனனைத் தனது கைகளிலும் சுமந்து கொண்டு பறந்தான்.

பொன்மலை இரண்டு நீலமலைகளைச் சுமந்து கொண்டு பறப்பது போல, கருடாழ்வான் கிருஷ்ணார்ச்சுனரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வேகமாகப் போய், சிவபெருமானின் கைலாசபருவதத்தை அடைந்தான்!

அப்போது கருடனுடைய சிறகுகளினால் எழுந்த காற்றால், கைலாசமலையிலுள்ள ஏழு மேகங்களும் வேகமாக விலகிச் சென்றன. அம்மலையின் சிகரங்கள் பல அடியோடு பெயர்ந்தன. மலைச்சாரலிலுள்ள எல்லா மரங்களும் தலை சாய்ந்தன. மயில் முதலிய பறவைக் கூட்டங்கள் கருடனுடைய திவ்விய பாதங்களை வணங்கின. கருடனுடைய சிறகுகளின் ஓசையைக் கேட்டு, சிவபெருமானுக்கு ஆபரணமாக விளங்கிய நாகங்கள் யாவும் அச்சத்தால் கீழே விழுந்து புரண்டன!

கைலாசமலையில் வாழும் தேவமாதர்கள் ஆகாயத்தில் பறந்து வரும் கருடனைப் பார்த்து, 'தேவேந்திரன் தனது வச்சிராயுதத்தால் இன்னும் இந்தக் கைலாசமலையின் சிறகுகளை அறுக்கவில்லையோ?' என்று சந்தேகம் கொண்டார்கள்.

பூரணச்சந்திரன் போன்ற வெண்மையான கைலாசமலை எல்லாத் திசைகளிலும் சிந்துகின்ற வெள்ளொளி, சிவபெருமானுடைய திருமுடியிலே விளங்கும் பிறைச்சந்திரனின் நிலவொளியைக் காட்டிலும் அதிகமாக எங்கும் பரவி நின்றது!

ஈரம் வற்றிய மரங்களும் செழிக்கும்படி சிவபெருமான் முன்னே நின்று நாரதர் முதலியவர்கள் வீணை வாசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வீணாகானம் கிருஷ்ணார்ச்சுனர்களின் சமீபம் வந்து, அவர்களின் பிரயாணக் களைப்பைப் போக்கியது!

கைலாசகிரியின் பக்கங்களிலே வீசுகின்ற மந்தமாருதம், சிவபெருமானுடைய திருவேணியில் தரித்த கொன்றைப் பூவின் வாசனையையும் கங்கா நதியின் நீர்த்திவலைகளையும் சுமந்து சென்று எங்கும் வீசியது. கைலாசமலையின் வெடிப்புகளிலெல்லாம் பல ஆயிரக்கணக்கான மாணிக்கங்கள் கிடந்து, எங்கும் இருள் நீங்கும்படி வீசிய ஒளிக்கற்றைகள் அந்த இராப்பொழுதிலும் சூரியனுடைய கிரணங்கள் போல் தோன்றின.

கருடாழ்வான் கிருஷ்ணார்ச்சுனரை கைலாசபருவதத்தில் கொண்டு போய் இறக்கினான்.

சிவபெருமான் அக்கணமே அவர்களின் வருகையை ஞானதிருஷ்டியால் அறிந்தார். ஆயினும் அவர் அவர்களின் வருகையை, நந்திதேவர் தம் திருமுன் வந்து கூறிய பின்பே உணர்ந்தவர் போல், 'நன்று! நன்று!' என்றார். பிறகு, சிவபெருமான் மனத்தில் சந்தோஷித்து, அவர்களின் எதிர் சென்று வரவேற்று கிருஷ்ணனைத் தழுவிக் கொண்டார்.

பின்னர் பவழநிறத்துச் சிவபெருமான் நீலநிறத்து ஸ்ரீகிருஷ்ணனை ஒராசனத்தில் அமரச் செய்தார். தாமும் அவனுக்கு எதிராசனத்தில் அமர்ந்து கொண்டார். அதன்பின் திருமாலின் கிருஷ்ணாவதாரம் பற்றியும், பூமாதேவியின் சுமையைப் போக்க துஷ்டநிக்கிரகம் செய்து வரும் அவன் செய்கை பற்றியும் சிவபெருமான் கிருஷ்ணனிடம் ஆர்வத்தோடு விவரமாகக் கேட்டார்.

கிரீசன் என்னும் நாமம் பூண்ட சிவபெருமானின் விருப்பப்படி, கேசி என்னும் அசுரனைக் கொன்ற கிருஷ்ணன் தான் செய்த செயல்களையெல்லாம் விபரமாகத் தெரிவித்தான்.

அதுகேட்டு மகிழ்ந்த சிவபெருமான், பிறகு அர்ச்சுனனைப் பார்த்து, "வருவாயாக!" என்று வரவேற்றார்.

உடனே அர்ச்சுனன் மனத்தைக் கட்டும் பக்தியோடு சிவபெருமானுடைய திருவடிகளை நமஸ்கரித்துப் போற்றினான். அப்போது வழியில் கிருஷ்ணனின் திருவடிகளில் தான் சார்த்திய பூக்களெல்லாம் சிவபெருமானுடைய திருப்பாதங்களில் விளங்குவதைக் கண்டு அர்ச்சுனன் மகிழ்ச்சியடைந்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான்

சொன்னபடி சிவனும் அவனும் ஒரு மூர்த்தியே என்பதைத் தெளிவாக உணர்ந்தான். அதனால் உண்டான பெரும் சந்தோஷத்தால் தன் உடம்பு முழுதும் அவன் மயிர்க் கூச்செறியப் பெற்றான். அந்தப் புளகாங்கிதத்துடன் அர்ச்சுனன் சிவபெருமானை நோக்கி, ''மாணிக்கம் கக்கும் நாகாபரணம் பூண்டவனே! வெண்ணீற்று மேனியனே! சங்கரா! மேருமலையாகிய கொடிய வில்லை வளைத்த சிவந்த திருக்கையை உடையவனே! சிவசிவ! தேவ தேவனே! அந்தரத்திலே திரிபுரமும் சாம்பலாய் எரியும்படி சிவந்த நெருப்பைக் கக்கும் புன்சிரிப்பை உடையவனே! காமனைக் கொளுத்திய நெற்றிக்கண்ணுடைய கடவுளே! கால காலனே! உனது பராக்கிரமத்தைக் கண்டு நான் சந்தேகிக்கும்படி, முன்பு வேடவடிவம் தாங்கி வந்து என்னோடு உண்மையாகப் போர் புரிந்த வினோத செயலையுடையவனே! நீலகண்டனே! ஒரு நாளும் நான் உன்னை மறப்பது இல்லை! உமாபதியே! சங்காரமூர்த்தியே! மேருமலையை வில்லாகக் கொண்ட வீரனே!'' என்று மனஅமைதி தோன்ற தோத்திரம் செய்தான்.

சிவபெருமான் அச்சமயம் அர்ச்சுனனுடைய சாந்தமான மனநிலையைக் கண்டு மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியோடு கிருஷ்ணனைப் பார்த்து சிவபெருமான், ''புத்திரசோகத்தால் இந்த அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட மயக்கத்தையெல்லாம் இப்போது நீ தீர்த்துவிட்டாய். கீதோபதேசத்தால் இவனுடைய மனத்தில் சத்தியத் தெளிவை ஏற்படுத்தி விட்டாய். மூன்று முறை உன்னுடனேயே பிறந்து வந்து உனது அம்சத்தைப் பெற்றிருப்பதால், இனி இவனுக்குப் பிறவித்துன்பம் இல்லை! நீ இவனுக்குப் பிறவி ஏற்படாதபடி இவனை மாற்றிவிட்டாய்! இனி வேண்டுவது என்ன?'' என்றார்.

அதுகேட்டு அர்ச்சுனன் சிவபெருமானிடம், ''எம்பெருமானே! நான் மேற்கொண்ட போரில் ஜெயித்து வெற்றிப் பறை முழங்காமல், போரைவிட்டு விலகமாட்டேன். முன்பு நான் உன்னைக் குறித்து தவம் புரிந்த போது நீ கருணையோடு கொடுத்த ஆயுதங்களினால் நிவாதகவசர் முதலிய அசுரர்களைக் கொன்றேன். இப்போது செய்யும் போரில் நான் வெற்றியை அடையும் வகையை அருள்புரிவாய்!'' என்று வேண்டினான்.

அர்ச்சுனன் அப்படி வேண்டியதும் கிருஷ்ணன் சிவபெருமானை நோக்கி, "தோன்றலே! அசுரர்களைக் கொல்வதற்கு உரிய ஆயுதங்களைக் கொண்டு பூமியிலுள்ள மனிதர்களைப் போர் செய்து கொல்வது முறையில்லை. ஆகையால், வில்லில் பூட்டுவதற்கு உரிய அம்புகளையும், எடுக்க எடுக்க கணைகள் குறையாத பொய்கையையும் கொடுப்பாய்!" என்றான்.

கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டு சிவபெருமான் 'கலகல' வெனச் சிரித்தார். அந்தச் சிரிப்போடு கண்ணனை நோக்கி அவர், "நமக்குள் நான் வேறு நீ வேறு என்பதில்லை. இப்போது நீ சொன்ன வில் முதலிய ஆயுதங்கள் எல்லாவற்றையும் அர்ச்சுனனுக்குக் கொடுப்பதற்கு உன்னையன்றி வல்லவர்கள் யாருமில்லை. இரணியனைச் சங்கரிக்க ஒரு தூணிலே நரசிங்கரூபியாகத் திருவவதாரம் செய்தாய். ஆதிமூலமே என்று அழைத்த யானைக்கு முன்னே, அதனைப் பாதுகாத்தருள வந்து நின்றாய். கம்ஸனைக் கொன்றாய். ராஜசபையிலே திரௌபதியின் துயரம் நீங்க, அவளுக்குப் பல ஆடைகளைக் கொடுத்து அருள்செய்தாய்! எம்பெருமானே! முன்பு உலகத்தை யெல்லாம் படைக்க நீ திருவுள்ளம் கொண்டாய். அதனால் அருவ ஸ்வரூபியாகிய நீ உருவமுள்ளவனாக ஆனாய்! அப்போது உன்னுடைய திருவுந்தியிலே நான்முகனுடைய உருவத்தையுடையவனாகயிருந்து, பலலோகங்களையும் தன்னிடம் கொண்ட அண்டங்களையெல்லாம் நீ சிருஷ்டித்தாய். நித்திய விபூதியாக ஸ்ரீவைகுண்டத்தில் உன்னுடைய உருவத்தையே கொண்டு விஷ்ணு ரூபத்துடனிருந்து பாதுகாத்தல் தொழிலைச் செய்கின்றாய். எனது உருவமாகிய சிவரூபத்தையும் அடைந்து அழிப்பதற்கும் நின்றருளினாய்!" என்றார்.

ஸ்ரீகண்ணபிரானுடைய உண்மை நிலையைக் கூறியபின், சிவபெருமான் எதிரே நிற்கும் அர்ச்சுனனைப் பார்த்து, "அர்ச்சுனா! அதோ இருக்கும் பொய்கையில் நீ சென்று நீராடு!" என்றார்.

சிவபெருமானின் கட்டளைப்படி அர்ச்சுனன் போய் அந்தப் பொய்கையில் ஸ்நானம் செய்தான். அப்போது அந்தத் தடாகத்திலிருந்து ஒரு நாகம் வெளிப்பட்டு தண்ணீருக்கு மேலே வந்தது. உடனே அந்தப் பாம்பின்

வாயிலிருந்து பிரம்மச்சரிய வடிவமாய் ஒரு சிறந்த முனிவர் தோன்றினார். அவர் பொய்கை நீரிலிருந்து வேறொரு வில்லையும் அம்பையும் எடுத்தார்.

பிறகு அந்த முனிவர், சிவபெருமான் திரிபுர சங்கார காலத்தில் வில் பிடித்த விதத்தையும், அம்பு தொடுத்த விதத்தையும் அர்ச்சுனனுக்குக் கற்றுக் கொடுத்தார். மற்றும் அர்ச்சுனனிடம் அவர் பேரன்பு கொண்டு உருத்திர மந்திரத்தையும் உபதேசித்தார்.

அர்ச்சுனன் ஜயத்ரதனை ஜெயித்து அழிக்கும் பொருட்டு அவற்றைப் பெற்றுக் கொண்டான்!

கைலாசவாசன் அப்போது அர்ச்சுனனைப் பார்த்து, ''எந்தச் சமயத்தில் நீ இவற்றை நினைக்கின்றாயோ, அந்தச் சமயத்தில் அந்த இடத்தில் உன்னிடம் இந்த வில்லும் அம்பும் வந்து சேரும்!'' என்றார்.

மேலும், சிவபெருமான் அநேக வரங்களை அர்ச்சுனனுக்குக் கொடுத்தார்.

கடைசியாக சிவபெருமான் கண்ணனை நோக்கி, ''ஸ்ரீதரா! பூமாதேவியின் துன்பம் நீங்கும்படிச் செய்வதற்கு அருமையான யுத்தத்தைச் செய்து முடித்த பின்பு, உனது இடத்தை அடைவாயாக!'' என்று கருணையோடு சொல்லி, அவனையும் அர்ச்சுனனையும் விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

தங்களுக்காக கைலாசகிரியிலேயே காத்திருந்த கருடனின் தோள்களிலும் கைகளிலும், பஞ்சாயுதங்களை உடைய ஸ்ரீகிருஷ்ணனும் அர்ச்சுனனும் ஏறிக் கொண்டார்கள். அப்போது கிழக்குத் திசையில் சுக்கிரன் உதித்தான்.

அது அப்படியிருக்க, பாசறையிலுள்ள தருமர் செய்த காரியத்தைச் சொன்னால் ஆச்சர்யப்படாதவர்கள் பூலோகத்தில் யாருமில்லை! தருமரின் அந்தக் காரியத்தைச் சொல்வோம்.

அந்தப் பதின்மூன்றாம் நாள் ராத்திரியில் தருமர் கடோத்கஜனைக் கூப்பிட்டு, ''மகனே! நீ உடனே துரியோதனாதியர்களிடம் செல். நாளை அஸ்தமனத்திற்குள்

ஜயத்ரதனைத் தான் கொல்லாவிட்டால், அக்கினிப்பிரவேசம் செய்வதாக அர்ச்சுனன் எடுத்துள்ள சபதத்தை அவர்களுக்குத் தெரிவி. அத்துடன் தனது சபதத்தை முடிப்பதற்கான ஆயுதங்களைப் பெறுவதற்காக கண்ணனோடு அர்ச்சுனன் சிவபெருமானிடம் சென்றிருப்பதையும் அவர்களிடம் சொல்!'' என்று கட்டளையிட்டார்.

கடோத்கஜன் அதுகேட்டு பெரிய தந்தையின் அருகே வந்து, அவரை நமஸ்கரித்து, ''பெரிய தந்தையே! முன்பு வஞ்சகமாக அபிமந்யுவைக் கொன்றவர்கள் அந்தப் பகைவர்கள். இப்போது அவர்களிடம் போய் இங்கு நடந்த உண்மையைக் கூறுவது பராக்கிரமம் இல்லை. அப்படிச் செய்வது நல்லறிவின் பயனுமில்லை! வலிமையோடு மிகுந்த பராக்கிரமமும், அதற்கு ஏற்ற காரியமும் இல்லாதவர்கள் போல இப்படித் தாங்கள் சொல்வதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டு, மனம் கொதித்தான்.

தருமர் மகனின் வார்த்தைகளுக்கு உடனே பதில் சொல்லத் தொடங்கி, ''நீ பீமனுடைய புத்திரன் என்பதற்கு ஏற்ப தகுதியை அறியாமல் கூறுகின்றாய். கொடுமையான வழியில் கொடிய பகைவரைக் கொல்வது வஞ்சகமாகும். தருமமார்க்கமாகப் போர் செய்து ஜெயிப்பதே நமக்கு வீரமாகும். அதுவே நல்லது. பொய்மையில்லாததே வெற்றியின் சிறந்த வழி!'' என்றார்.

பெரிய தந்தையின் வார்த்தைகளைக் கேட்டவுடன் ராக்ஷஸனாகிய கடோத்கஜன் பேரிடி போல் சிரித்தான். பின்பு, தருமரை வணங்கிவிட்டு கடோத்கஜன் அவருடைய கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டான். அவன் ஒரு க்ஷணத்திற்குள் கையில் ஏந்திய வேலாயுதத்துடன் பகைவரின் பாசறையை அடைந்தான். நேரே துரியோதனனுடைய பாசறையின் முன் சென்று நின்றான்.

பாசறையின் வாசலில் காவல் புரிந்த வீரர்கள் அவனை நெருங்கி வந்து, ''நீ யார்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு கடோத்கஜன், ''தருமசக்கரவர்த்தி துரியோதனனுக்குச் சொல்லும்படிக் கூறிய ஒரு வார்த்தை உண்டு. அந்த வார்த்தையை துரியோதனனுக்குச் சொல்லவே நான் வந்தேன். நான் பீமனுடைய புத்திரன்!'' என்றான்.

கடோத்கஜன் அப்படிச் சொன்ன வார்த்தைகள் பேரிடிபோல், பாசறையினுள் பெரிய சபையிலுள்ள அரசர்களின் காதுகளில் சென்று விழுந்தன. துரியோதனனும் அதுகேட்டு, கடோத்கஜனை உள்ளே அனுப்பும்படி காவலர்களுக்குக் கட்டளையிட்டான்.

அந்த வினாடியே காவலர்கள் கடோத்கஜனை உள்ளே செல்லும்படிக் கூறி அனுமதியளித்தார்கள்.

பீமபுத்திரன் வேகமாகப் பாசறையின் உள்ளே சென்றான். அங்கே உள்ளவர்கள் ஒருவரையும் அவன் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. நேரே துரியோதனனின் முன் சென்று நின்ற கடோத்கஜன், "உங்கள் பேச்சை நிறுத்திவிட்டு, நான் சொல்லும் சத்தியமான ஒரு வார்த்தையைக் கேள்!'' என்றான்.

உடனே துரியோதனன் கடோத்கஜனை நோக்கி, "கடுமையான சொல்லையுடைய தூதனே! உன் பெரிய தந்தையின் உண்மையான வார்த்தை என்ன?'' என்று கேட்டான்.

கடோத்கஜன் அதற்கு, "தனது சிறந்த புத்திரனாகிய அபிமந்யுவின் தலையை வஞ்சகமாக வெட்டித் தள்ளிய ஜயத்ரதனை, நாளை சூரியன் அஸ்தமிப்பதற்குள் எத்தனை அரசர்கள் வந்து தடுத்தாலும் கொன்று முடிப்பேன் என்று எனது சிறிய தந்தை சபதம் செய்துள்ளார். அப்படி ஜயத்ரதனைத் தாம் கொல்லாவிட்டால், அக்கினிப்பிரவேசம் செய்வேன் என்றும் தெரிவித்துள்ளார். தமது சபதத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆயுதங்களைப் பெற்று வருவதற்காக அவர் கைலாசகிரிக்குப் போயிருக்கின்றார். வஞ்சமாகப் போரில் பகைவனையழிப்பது பாதகம் என்று எண்ணிப் பயந்ததால், நீ இந்த உண்மையை அறியும்படி எனது பெரிய தந்தை என்னைத் தூது அனுப்பினார். நாளை உனது மைத்துனனாகிய ஜயத்ரதன் இறந்துவிடுவான் என்பதை நிச்சயம் செய்து கொள்!'' என்று தெரிவித்தான்.

துரியோதனன் அப்போது கடோத்கஜனைப் பார்த்து, "ராஜகுமாரர்கள் பலரோடு சென்ற என் மகன் லக்ஷணகுமாரனைப் போரில் எதிர்த்து அபிமந்யு கொன்றான். என் மகனோடு யுத்தத்துக்குப் போன ராஜகுமாரர்களையும்

ஒருவர் பாக்கியில்லாமல் அவன் கொன்றான். அதுகண்டும் ராஜராஜனாகிய நான் கோபமும் சோகமும் கொண்டு எந்த ஒரு சபதத்தையும் சொல்லாமல் இருக்கின்றேன். அப்படியிருக்க, தன் மகனாகிய அபிமந்யு இறந்து விட்டானாம். அதற்காக அர்ச்சுனன் அக்கினியில் பிரவேசிப்பானாம். வில் வலிமையில் மிக்க வீரர்கள் போரில் இறந்ததற்காகப் புலம்பி விசனமுற்று சபத வார்த்தைச் சொல்லிக் கதறுவது வீரமோ? அர்ச்சுனன் தனது சபதம் நிறைவேறுமோ நிறைவேறாதோ என்று மிகவும் பயந்து போய்விட்டான். அதனால்தான் இந்த ராத்திரி வேளையில் சிவபெருமானிடம் ஆயுதம் பெறச் சென்றிருக்கிறான். நாளைப் போரில் கிருஷ்ணன் சாரத்தியம் செய்ய அவன் மட்டும் சிவபெருமான் கொடுத்த ஆயுதங்களோடு எதிர்த்து வந்து நின்றால், அபிமந்யுவைப் போலவே ஜயத்ரதனின் கொடிய அம்பால் இறப்பான்! இது நிச்சயம்! ஜயத்ரதன் உலகத்தை அரசாளும் திறத்தில் ராஜராஜனாகிய என்னைக் காட்டிலும் வல்லமையுடையவன். வில்யுத்தத்தில் வில்லாசிரியராகிய துரோணாசாரியாரைக் காட்டிலும் மிகவும் வலிமையுடையவன். கதாயுதப் போரில் உன் தந்தை பீமனைக் காட்டிலும் வலிமையுடையவன். தோள் வலிமையில் ராக்ஷஸனாகிய உன்னைக் காட்டிலும் சிறந்தவன். இப்படியிருக்க, அவனை லட்சியம் செய்யாமல் நீ இப்படிச் சொல்லலாமோ? அர்ச்சுனனைக் காட்டிலும் யுத்தத்தில் ஜயத்ரதன் தாழ்ந்தவன் இல்லை. நீ சென்று இதனை அர்ச்சுனனுக்குச் சொல்! ஒரு மனிதனை மற்றொரு மனிதன் எதிரே நிற்கும் அவனுடைய உருவத்தை மட்டுமே பார்த்து உணர முடியும். அதைத் தவிர எதிரே நிற்கும் மனிதனின் குணாதிசயங்களையும் பராக்கிரமத்தையும் அறியக் கூடியவர்கள் எவருமில்லை. ஆகையால், அணிவகுத்துச் செய்யும் யுத்தத்தில் நாளை யார் ஜெயிப்பார்கள் என்று இன்றைக்குச் சொல்ல முடியுமோ?'' என்று கூறிப் பரிகாசமாகச் சிரித்தான்.

அடுத்து கர்ணன் கடோத்கஜனை நோக்கி, ''போரில் லக்ஷணகுமாரன் இறந்தான். துச்சாதனன் மகன் துச்சனி இறந்தான். சல்லியன் மைந்தன் இறந்தான். சகுனியின் புத்திரன் இறந்தான். இப்படி எத்தனையோபேர் இறந்தாலும் அதுவெல்லாம் பெரிதில்லை. பூமி முழுவதையும் இனி அரசாள இருந்த அர்ச்சுனன் மகனாகிய அபிமந்யு ஒருத்தன்

இறந்ததால், இனி பாண்டவர் பரம்பரையில் அரசாட்சிக்கு உரியவர் யார்? ஐயோ, பாவம்!'' என்று பரிகசித்தான்.

பிறகு கர்ணன் துரியோதனனைப் பார்த்து, ''ராஜராஜனே! ஜயத்ரதனைக் கொல்வேன் என்று வீரசபதம் செய்து, அதற்காக ஆயுதம் பெற்று வர அர்ச்சுனன் சிவபெருமானிடம் போயிருக்கிறான் என்றால், உன் பக்கத்தில் யுத்தத்துக்குத் திரண்டிருக்கும் எளியவராகிய நாங்கள் அவனைக் கொல்லாமல் வேறு என்ன செய்யப் போகின்றோம்?'' என்றான்.

கர்ணன் கூறிய நிந்தை வார்த்தைகளைக் கேட்டதும், கடோத்கஜன் அளவுகடந்து கோபம் கொண்டான். அந்தப் பெருங்கோபத்துடன், ''பூலோகம் முழுவதையும் இனி அரசாட்சி செய்ய எண்ணியிருந்தவர்களான முட்டாள்களே! நீங்கள் எதைச் சொன்னாலும் நான் லட்சியம் செய்யாமல் உங்கள் பாசறையைக் கொளுத்தி, பீமபுத்திரன் என்பதற்கு ஏற்ப உங்கள் பெருமையை நாசம் செய்வேன்! எதிர்த்துப் போர் செய்தவர்களைத் தனித்தனியே சதையும் இரத்தமும் வழியும்படி தலைகளைச் சிதறடிப்பதற்கு அர்ச்சுனன்தான் போருக்கு வரவேண்டும் என்பது அவசியமில்லை! பீமன் முதலிய வீரர்கள் ஒன்றாகச் சேர்ந்து வர வேண்டும் என்பதும் அவசியமில்லை. இந்த இரவு முடிவதற்குள் நான் ஒருவனே போர் செய்து உங்களையெல்லாம் பொடியாக்கிவிடுவேன். ஆனால், எங்கள் ராஜாவாகிய தருமர் கூறிய பிழையில்லாத வார்த்தையை விலக்கி இப்போது போர் செய்வது முறையில்லை! இந்தக் காரணத்தாலேயே நான் சும்மா இருக்கின்றேன். இதனை நீங்கள் அறிய மாட்டீர்களோ? இரண்டுபேர் எதிரெதிரே நின்று தமக்குள் ஒருவரை யொருவர் எதிர்த்து யுத்தம் செய்வது உலக இயற்கை. அப்படியிருக்க, நீங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வந்து, தக்கபிராயம் நிரம்பாத மழலைச் சொற்களையுடைய அபிமந்யுவை எதிர்த்துப் போரிட்டீர்கள். அப்போது அபிமந்யு செய்த கொடிய யுத்தத்தால் அவன் முன் நிற்க முடியாமல் முதலில் நீங்கள் எல்லோரும் தோற்று வேகமாக ஓடிப் போனீர்கள். அப்படிப்பட்ட உங்களில் பின்பு, கர்ணன் திரும்பி வந்து அபிமந்யுவின் பெரிய தேரை யுத்தத்தில் சிதைத்தான். துரோணாசாரியன் வந்து அபிமந்யுவின் ஒரு கையைத் துண்டித்தான். அதன்பின் ஜயத்ரதன் வலுக்கட்டாயமாக

அபிமந்யுவைப் போருக்கு அழைத்துக் கொன்றான். இந்தப் பராக்கிரமத்தால்தானோ நீங்கள் இப்படி ஆணவத்தோடு பேசுகின்றீர்கள்?'' என்று எல்லோரையும் பார்த்துக் கடோத்கஜன் சொன்னான்.

உடனே அதுகேட்டுத் துரியோதனன் கோபத்துடன் தன் எதிரேயுள்ள அரசர்களை நோக்கி, ''நாம் எல்லோரும் வீற்றிருக்கும் இந்த ராஜசபைக்குத் தக்கபடி பேசாமல், தனது கொழுப்பால் இந்த ராக்ஷஸி மகன் பேசுகின்றான். ஆகையால், நீங்கள் யாரும் இவனோடு எந்த ஒரு வார்த்தையும் பேசாதீர்கள்!'' என்று கட்டளையிட்டான்.

துரியோதனன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும், கடோத்கஜன் அவனைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தான். பின்பு, அந்தப் பரிகசிப்புடனே அவனை நோக்கி, ''ஐயா! எனது ஜாதியார் ராக்ஷஸர்கள்தான். ஆனாலும் அவர்கள் உம்மைப் போல் உடன் பிறந்தவர்களுக்கு மனத்தில் வஞ்சனை நினைக்க மாட்டார்கள். போர்க்களத்தில் வஞ்சனை செய்யவும் மாட்டார்கள். விஷத்தைச் சாப்பிட வைக்க மாட்டார்கள். வரிசையான கழுமுனையிலே விழும்படிச் செய்ய மாட்டார்கள். பாய்ந்தோடும் ஆற்றுவெள்ளத்தில் அழுத்த மாட்டார்கள். தாம் இருக்கின்ற ஊரைவிட்டு அவர்களைத் துரத்த மாட்டார்கள். சொன்ன வார்த்தையும் தவற மாட்டார்கள். உடன் பிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டுக்குத் தீவைக்க மாட்டார்கள். தமக்குப் பிறர் செய்த நன்றியைச் சிதைத்து அறிய மாட்டார்கள். கீழ்ப்பட்ட தங்கள் மனத்திலே பொறாமை கொள்ள மாட்டார்கள். பழிபாவங்களுக்குப் பயப்படாது கருணையில்லாமல் உடன் பிறந்தவர்களோடு வஞ்சனைக்கு இடமான சூதாட்டத்தை ஆடமாட்டார்கள். உடன் பிறந்தவர் மனைவியின் இடுப்புச் சேலையை அவிழ்க்க மாட்டார்கள். உடன் பிறந்தவர்களைக் கொடிய காட்டுக்கு அனுப்பி வைத்து, பின்பு அவர்களைக் கொலை செய்ய நினைக்க மாட்டார்கள். முதலில் போருக்குப் புறப்பட்டு வந்து, அந்தப் போரில் புறமுதுகிட்டு ஓடவும் மாட்டார்கள். இங்கு நான் சொன்ன எல்லாத் தீய ஒழுக்கங்களும் தேவரீர் தங்களுக்கே அமைந்துள்ளன!'' என்றான்.

மேலும் கடோத்கஜன் துரியோதனனிடம், ''அர்ச்சுனனைப் போரில் எதிர்த்து ஜெயிக்கக் கூடியவர்கள்

மனிதர்களில் ஒருவரும் இல்லை! தேவர்களுள் அர்ச்சுனனோடு யுத்தம் புரிய வல்லமை படைத்தவர்கள் யார் இருக்கின்றார்கள் என்பதும் தெரியாது! ஜயத்ரதனை உன்பக்கத்து அரசர்கள் எல்லோரும் நாளையப் போரில் பாதுகாத்தாலும் சரி. நாளை சூரிய அஸ்தமனத்திற்குள் அர்ச்சுனனால் அவன் துன்பமடைந்து இறப்பது தவறாது!'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து திரும்பிச் சென்றான்.

கடோத்கஜன் போனபின்பு, துரியோதனன் துரோணாசாரியாரைப் பார்த்து, ''வில்லாசிரியரே! நீர் நமது பெரிய சேனையை ஒழுங்காக அணிவகுத்து, நாளைப் பகல் முப்பது நாழிகை வரையிலும் ஜயத்ரதனை வெகு ஜாக்கிரதையோடு பாதுகாக்க வேண்டும். அப்படி யுத்தத்தில் நீர் ஜயத்ரதனைப் பாதுகாத்தால், அவனும் உயிர் பிழைப்பான்; அர்ச்சுனனும் தீக்குளிப்பான்!'' என்றான்.

பிறகு, மற்ற போர்வீரர்களை நோக்கி துரியோதனன், ''நாளை ஒருதினம் பகல் பொழுது மட்டும் நமக்குக் கொடிய போர் உண்டு. ஆகையால், நீங்கள் எல்லோரும் யுத்தத்தில் ஜயத்ரதனைப் பாதுகாத்திடுங்கள்; பாதுகாத்திடுங்கள்!'' என்று, ஆபத்துக் காலத்தில் தஞ்சம் அடைந்தவர்களைக் காட்டிலும் அதிகமாக அவர்களை வணங்கிப் பிரார்த்தித்தான்.

அப்போது துரோணாசாரியார் துரியோதனனைப் பார்த்து,''போருக்குரிய தும்பைப்பூ மாலையையுடையவனே! நிலையான நமது சேனையை மதிலாகிய அரண்போல இடைவெளியில்லாமல் நிற்கச் செய்து, என்னால் முடிந்த வரையிலும் ஜயத்ரதனைப் பாதுகாப்பேன்! நாம் என்ன செய்தாலும் அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகள் நிறைவேறும் வகைகளை முன்னேயே நம்மால் நிச்சயமாக அறிய முடியாது. அர்ச்சுனனின் சபதம் நாளைப்பகல் முப்பது நாழிகைக்குள் தவறாமல் நிறைவேறிவிடுமானால், பின்பு அவனுடைய வில்லுக்குச் சமமாவது எதுவுமேயில்லை. ஏனென்றால் சொன்னபடிச் செய்வது அந்தப் பிரமதேவனுக்குமே முடியும் என்பதில்லை!'' என்றார்.

மீண்டும் அவர் துரியோதனனை நோக்கி, ''மல்யுத்தத்தால் மல்யுத்த வீரரையழித்த கண்ணபிரான் எதிர் பக்கம் சேர்ந்திருந்தாலும், ஜயத்ரதனை விற்போரில் யாரும் வெல்வது அரிது!'' என்றார்.

அடுத்து கர்ணன் பேசத் தொடங்கி, ''ராஜராஜனே! நீ அநேக அரசர்களிடம் ஜயத்ரதனைப் பாதுகாக்கும்படி அநேக வார்த்தைகளைச் சொன்னாய். அவர்களும் ஜயத்ரதனைப் பாதுகாப்பதாக உனக்கு உத்தரவாதம் தந்தார்கள். எது எப்படியானாலும், நாளைப் பகலில் ஜயத்ரதனுடைய உயிரை நான் பாதுகாப்பேன்!'' என்று உறுதிமொழி புகன்றான்.

துரியோதனன் தம்பியாகிய துர்மர்ஷணன், ''நாளை சூரியாஸ்தமனம் வரையிலும், காண்பவர்கள் அஞ்சுவதற்குக் காரணமான சக்கரவாள மலைபோல் ஜயத்ரதனை வளைத்துக் கொண்டு நான் பாதுகாப்பேன்!'' என்றான்.

அசுவத்தாமன், ''மதகஜம் போன்றவனே! வில்வீரர்கள் உரத்தகுரலில் தங்கள் பராக்கிரமத்தை எடுத்துச் சொல்வார்களோ? சரத்கால மேகம் இடிமுழக்கம் செய்யுமோ? ராஜராஜனே! போரை ஒழுங்காகச் செய்யும் போது ஒருவரையொருவர் எதிர்க்கும் இரண்டு வீரர்களும் ஒரே சமயத்தில் ஜெயிக்க முடியுமோ? ஜயத்ரதன் போர் செய்யும் வில்லின் திறமையையும், பகைவனான அர்ச்சுனனுடைய வில்லின் திறமையையும் நாளைக்கு நீ பார்ப்பாய்!'' என்றான்.

பிறகு, அரசர்கள் எல்லோரும் துரியோதனனிடம், ''நாளை உதயப் பொழுதில் எதிர்த்துப் போய்ப் போர் செய்து, உன் பகைவர்கள் எல்லோரையும் ஜெயித்து நாங்கள் திரும்புவோம்!'' என்று தைரியம் கூறி, விடை பெற்றுச் சென்றார்கள்.

கைலைக்குச் சென்ற கிருஷ்ணார்ச்சுனரும், துரியோதனன் பாசறைக்குத் தூது சென்ற கடோத்கஜனும் திரும்பி வந்து பாண்டவர் பாசறையை அடைந்தார்கள். அப்போது சூரியன் உதித்தான். அதேசமயம் ஆஜ்ஞாசக்கரத்தையுடைய தருமராஜா தூக்கத்திலிருந்து எழுந்தார்.

கண்ணபிரான் தருமரிடம், 'தாம் கைலாயத்தைச் சேர்ந்ததையும், அங்கே வில்லும் அம்பும் கணைவிற்களை உடைய தடாகமும் ஆகியவற்றை அர்ச்சுனனுக்குக் கொடுத்ததையும்' முறையே சொன்னான்.

அடுத்து கடோத்கஜன் தருமரிடம், 'தான் துரியோதனனிடம் சென்றதையும், அங்கு தான் பேசியதையும், அங்கிருந்த மன்னர்கள் கொடுமையாகச் சொன்னதையும், தான் திரும்பி வந்ததையும்' கூறினான்.

4. பதினான்காம் நாள் போர்

பதினான்காம்நாள் சூரியோதயத்தில் எழுந்த தருமர் சூரிய நமஸ்காரம் செய்து, காலைக் கடன்களைச் செய்து முடித்தார். பின்பு, அவர் பிராமணர்களுக்கு அளவற்ற தானதருமங்களைச் செய்தார்.

அன்றைய தினம் அர்ச்சுனனுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காக தருமர், அநேக வாத்தியங்கள் ஒலிக்க தமது கொடிய மாபெரும் சேனையோடு போருக்குப் புறப்பட்டார்.

கண்ணபிரான் சாரத்தியம் செய்ய, அர்ச்சுனன் தனது தமையன் பீமனோடும், தம்பிமார்களான நகுலசகா தேவர்களோடும், மற்றும் பல அரசர்களோடும் போருக்குப் புறப்பட்டுச் சென்று யுத்தபூமியை அடைந்தான்.

பாண்டவசேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் தேவர்களும் மற்றவர்களும் கண்டு அதிசயிக்கும்படி சதுரங்கச் சேனையை அவயவங்களாகவும், அரசர்களை அந்த அவயவங்களின் முகமாகவும் நிறுத்தித் தனது சேனையை அணிவகுத்தான். தானும் அச்சேனையின் முகத்திற்கு ஒரு பெரிய அலங்காரமாக முன்னே நின்றான்.

துரியோதனனுடைய கட்டளைப்படி துரோணாசாரியார் இருபது யோஜனை விசாலமுள்ள இடத்திலே, நெருப்பின் நடுவில் நிற்பது போல ஜயத்ரதனைக் கொடிய பெரிய சேனையின் மத்தியிலே நிற்க வைத்தார். இடைவிடாமல் ஒன்றோடொன்று தொடர்ச்சியாக அமையும்படி நால்வகைச் சேனைகளையும் ஜயத்ரதனைச் சுற்றி ஒழுங்காக நிற்க வைத்தார். மேலும், அவனுக்குக் காவலாக எட்டுத் திசைகளிலும் அரசர்கள் பலரையும் நிறுத்தினார். துரோணாசாரியார் ஜயத்ரதனைப் பகல் பொழுது முழுவதும் நேற்றுக் காப்பதாகச் சபதமிட்ட துர்மர்ஷணனை சேனையின் முன்னணியில் நிற்கச் செய்தார். சிறிய ஊசியும் இடையில்

நுழைய முடியாதபடி வில்லில் வல்ல காலாள்வீரர்களை அவனுக்கு உதவியாக அவனோடு நிற்கச் செய்தார். யானை, தேர், குதிரை ஆகியவற்றின் மேல் ஏறியுள்ள அரசர்களை எல்லாம், சேனையின் இரண்டு பக்கங்களிலும் நிற்க வைத்தார். ஜயத்ரதனைப் பாதுகாப்பதாகப் பிரதிக்ஞை கூறிய கர்ணன், சகுனி, சல்லியன் ஆகியோரை சேனையின் மத்தியில் நிறுத்தினார். பின்பு, துரோணாசாரியார் தமது பெருஞ்சேனையை தனித் தனியே ஐந்தைந்து பகுதிகளாகப் பிரித்து, அவற்றை ஐந்து வியூகமாக அமைத்து, அவற்றிற் கெல்லாம் ஒரு மகுடம் வைத்தது போல் அலங்காரமாக அமையும்படி துரியோதனனைத் தலைமையாக நிறுத்திவிட்டு, தாம் அந்த ஐந்து வியூகங்களுக்கும் பிரதானமானதும் மற்ற நான்கு வியூகங்களையும் தனக்குள்ளே கொண்ட மகாவியூகமுமான சகடவியூகத்தின் முன்னே நின்றார்! அப்போது தம்மை வணங்குகின்ற அசுரர்களுடைய சேனையை அணிவகுத்த சுக்கிராசாரியாரைப் போல் துரோணாசாரியார் கௌரவசேனையை அணிவகுத்து, சேனையின் முன் போருக்குத் தயாராக தாமே நின்றார்!

முதல்நாள் துரியோதனனிடம் சொன்னபடியே அர்ச்சுனன் அன்றையப் போரில் ஜயத்ரதனைக் கொல்ல முடியாதபடி, துரோணாசாரியார் கௌரவசேனையை மிகத்திறமையாக அணிவகுத்திருந்தார்.

ஆகாயத்தில் விமானத்திலிருந்து கொண்டு போர் காண்கின்ற தேவர்கள், துரோணாசாரியார் கௌரவ சேனையை அணிவகுத்த தந்திரத்தைக் கண்டு, 'அர்ச்சுனன் போர் செய்து இன்று ஒரு பகற்பொழுதிற்குள் ஜயத்ரதனைக் கொல்வதோ அருமையானது!' என்றெண்ணி, ஆச்சர்யப் பட்டு அவரைக் கொண்டாடிப் பேசினார்கள்.

போருக்குத் தயாராக நின்ற அர்ச்சுனன், கையில் அடங்கிய பொருளைப் பாதுகாப்பது போல அரசர்கள் ஜயத்ரதனைப் பாதுகாத்து நிற்கும் எதிர்பக்கத்துப் படைவகுப்பைக் கண்டான். அதுகண்டு அர்ச்சுனன் கிருஷ்ணபகவான் சாரத்தியம் செய்ய எதிர்பக்கத்து வீரர்கள் மேல் போருக்குப் போனான். அப்போது அர்ச்சுனனின் இரண்டு பக்கங்களிலும் அவனுக்குத் துணையாக உத்தமௌஜஸ் யுதாமந்யு ஆகிய வீரர்கள் சென்றார்கள்.

அர்ச்சுனன் போர் செய்யத் தொடங்கிப் பகைவர்கள் மேல் பாணப்பிரயோகம் செய்தான். மேகம் சொரிந்த நீர்த்தாரைகள் போல் அர்ச்சுனனுடைய அம்புகள் கோடிக் கணக்கில் பகைவரை நோக்கிச் சென்றதும், சேனையின் முன்னணியில் யுத்தத்துக்கு நின்ற துச்சாதனனும், அவனது சேனாவீரர்களும் நிலை கலங்கினார்கள். அக்கணமே அவர்கள் பயந்து வெள்ளத்துக்கு உடைந்த கரை போல, சிதைந்து ஓடித் துரோணாசாரியாரை அடைந்தார்கள்.

அப்போது முப்பதினாயிரம் குதிரை வீரர்களோடு போருக்கு வந்த கிருதவர்மாவையும், லக்ஷம் யானை வீரர்களோடு யுத்தத்துக்கு வந்த துச்சாதனனையும் தனது வலிமையான போரால் சூரியனைக் கண்ட மின்மினிப்பூச்சி போலத் தோற்றோடச் செய்தான் அர்ச்சுனன். அவ்வாறு எங்கும் போர் செய்து, பலவிதமான அம்புகளால் ஆகாயத்தை நிறைத்துக் கொண்டே அர்ச்சுனன், துரோணாசாரியார் போர் செய்யும் இடத்தை அடைந்தான்.

மறுகணம் அர்ச்சுனனுடைய தேரும் துரோணருடைய தேரும் ஒன்றையொன்று நெருங்கி நின்றன. அவர்கள் இருவரின் தேர்க்குதிரைகளும் போருக்குச் சந்தோஷித்துப் பயங்கரமாகக் கனைத்தன. அவர்கள் இருவருக்கும் பெரும் போர் ஏற்பட்டது!

துரோணாசாரியாரும் அர்ச்சுனனும் ஒருவரையொருவர் நெருங்கி, ஒருவர் மேல் ஒருவர் தொடர்ச்சியாக அம்புகளைப் பிரயோகித்தார்கள். அந்தந்த அம்புகளும் அந்தந்த எதிரம்புகளால் அழிந்தன. அதைவிட்டு ஒருவர் தொடுத்த அம்பு ஒருவர்மேல் படவேயில்லை!

அவர்களுடைய தேர்கள் இரண்டும் இடது சாரியாகவும், வலதுசாரியாகவும், மண்டலமாகவும் சுற்றி வந்தன. அதேசமயம் அவர்களுடைய விற்கள் ஒவ்வொன்றிலிருந்தும், ஒவ்வொரு கோடிக்கணக்கான அம்புகள் விடுபட்டு வேகமாகச் சென்றன. இரண்டு மேகங்கள் தமக்குள் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்யும் விதம் போல, அந்த இரண்டு வீரர்களும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமமாக யுத்தம் செய்தார்கள்.

அப்போது கண்ணபிரான் வீணாகக் காலதாமதம் ஆவதைக் கண்டு பொறுக்காமல் அர்ச்சுனனை நோக்கி,

''வில்வீரனே! உன் பகைவன் ஜயத்ரதன் நிற்கும் அந்த இடத்துக்கும் நாம் நிற்கும் இந்த இடத்துக்கும் நடுவே இருபது யோஜனை தூரம் இருக்கின்றது. மேலும், கணக்கிட்டுச் சொல்லப்படும் காலம் கழிந்துவிட்டது!'' என்று சொல்லிவிட்டு, ரதத்தைத் துரோணருடைய வியூகத்தின் உள்ளே பாய்ந்து செல்லும்படி ஓட்டினான்.

கண்ணபிரானின் சாரத்தியத்தாலும், தேர்க்குதிரைகளின் வேகத்தாலும் அர்ச்சுனனுடைய தேர் கண் மூடித் திறப்பதற்குள் மாயைப் போல, பகைவரின் வியூகத்தினுள்ளே கண்ணுக்கு எட்டாமல் மறைந்து நெடுந்தூரம் போய்விட்டது.

துரோணாசாரியார் அதுகண்டு ஆரவாரம் செய்து கொண்டே, விடாமல் அர்ச்சுனனுடைய தேரைப் பின் தொடர்ந்து தமது தேரைச் செலுத்தினார்.

அப்படிப் போய் துரோணாசாரியார் தமது தேரை அர்ச்சுனனுடைய தேரின் அருகே செலுத்தி நின்றபோது, கோபமாக வந்த வில்லாசிரியரை நோக்கி அர்ச்சுனன், ''ஐயனே! உம்மோடு போர் செய்வது தேவர்களுக்கும் அருமையானது. நானோ உமது திருவடிகளைத் தலைமேல் கொண்டு வணங்குகின்ற சிறியவனாவேன். அப்படிப்பட்ட எனது கொடுமையான சபதம் தவறாமல் நிறைவேறும்படி நீர் அநுக்கிரகிக்க வேண்டும்!'' என்று மிக்கப் பணிவுடன் சொன்னான்.

வில்லாசிரியர் அதுகேட்டு, அர்ச்சுனன்மேல் அம்பு தொடுப்பதற்கு வந்த தமது கோபம் தணிந்தார். அவர் அர்ச்சுனனைப் புன்னகையோடு நோக்கி, ''நீ செல்!'' என்றார்.

பின்பு, அர்ச்சுனன் காம்போஜ தேசத்து அரசன் முதலாகக் கணக்கில்லாத அரசர்கள் தன்னோடு போர் செய்து வலிமையழிந்து அஞ்சி மனம் திடுக்கிடும்படி, நான்கு பக்கங்களிலும் அதிகமாக நின்று கொண்டிருந்த பகைவரின் சேனைகளைக் கொன்று கொண்டே சென்றான். அதன்பின் அவன் பகைவரின் பாசவியூகத்திலுள்ள வீரர்களை எதிர்த்துப் போரைத் தொடர்ந்தான்.

அப்படிப் போரிட்டுக் கொண்டே அந்த வியூகத்திலுள்ள அரசர்களையெல்லாம் தனது அம்புகளால்

கொன்றபடிச் சென்ற அர்ச்சுனன், வழியில் கர்ணன் பெருமிதத்தோடு நிற்கின்ற வலிமையைப் பார்த்தான்.

உடனே அர்ச்சுனன் கண்ணனிடம், ''மைத்துனா! விடதனும், சுதட்சிணனும், அவந்தி நகரத்து வேந்தனும், அவ்ள மகனும் தங்கள் சேனைகளோடு கர்ணனுக்கு உதவியாக அவனைச் சூழ்ந்து நிற்கின்றார்கள். அவனும் நம்மைக் குறுக்கிட்டுத் தொடர்ந்து போர் செய்ய நிற்கின்றான். அப்படி நிற்கும் கர்ணனை எதிர்த்துப் போரிட்டு அவனுடைய உறுதிநிலையைக் கலங்கும்படிச் செய்ய வேண்டும். பின்பே நாம் அப்பால் போக வேண்டும்!'' என்று தெரிவித்தான்.

மைத்துனன் அப்படிச் சொன்னவுடனே கண்ணபிரான் அவனுக்குத் தனது ஒப்புதலைத் தெரிவித்தான். ரதத்தையும் கர்ணனின் அருகே பார்த்தசாரதி செலுத்தினான்.

அர்ச்சுனனுடைய ரதம் கர்ணனை நெருங்கியதுதான் தாமதம். கர்ணனுடைய சேனாவீரர்கள் ஒன்றாகக் கூடி வந்து அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டு, அவன்மேல் பாணங்களைத் தொடுத்து விட்டார்கள்.

தன்மேல் பாணப்பிரயோகம் செய்த கர்ணனுடைய வீரர்களை நோக்கி அர்ச்சுனன், அந்த வினாடியே கொடிய அம்புகளைத் தொடுத்து விட்டான். அவனுடைய அம்புகள் இமைப்பதற்குள் சென்று பகைவர்களின் தலைகளைத் துண்டித்தன; கால்களைத் துண்டித்தன; கைகளைத் துண்டித்தன; வாய்களைத் துளைத்து அழித்தன; மார்பைத் துளைத்து அப்பால் சென்றன. அவ்விதம் அர்ச்சுனன் தனது அம்புகளால் அந்தப் பகைவர்களைத் தனித்தனியே கலங்கச் செய்தான்!

மற்றும் அந்தப் பகைவீரர்களில் பலர் அர்ச்சுனனுடைய அம்புகளால் தங்களுடைய தேர்களை இழந்தார்கள்; குதிரைகளையிழந்தார்கள்; யானைகளை இழந்தார்கள்; விற்களையிழந்தார்கள். அவற்றையெல்லாம் இழந்து அவர்கள் தோற்றோடிப் போனார்கள். அப்படி எதிர்ப்பக்கத்து வீரர்களையெல்லாம் அழித்துக் கொண்டே அர்ச்சுனன் தேர்மீது வேகமாகப் போகின்ற வல்லமையைப் பார்த்து தேவர்கள் திகைத்து நின்றார்கள். அவனை வணங்கித் தோத்திரம் செய்தார்கள்.

தனது சேனாவீரர்களை அர்ச்சுனன் அழித்ததைக் கண்டு கர்ணன் மிகவும் ஆத்திரமடைந்தான். அத்துடன் நில்லாமல் தன்மீது அவன் போருக்கு வருவதைப் பார்த்து கர்ணன், தனது தேரை வேகமாகச் செலுத்திச் சென்று அவனுடைய தேரை நெருங்கினான். பிறகு, இருவரும் கொடிய விற்போரைத் தொடங்கினார்கள்.

பலத்தாலும், மன்மதனைக் காட்டிலும் அதிகமான உடம்பின் அழகாலும், விற்போர்த் திறத்தாலும் தமக்குத் தாமே சமமான அர்ச்சுனனும் கர்ணனும் போர் செய்யத் தொடங்கினார்கள். அப்போது அவர்கள் வில்லின் நாணி இடியோசை போலக் கேட்கவும், அம்புகளாகிய மின்னல்களைப் பரப்பவும், யுகாந்தகாலத்து மேகங்கள் போலத் தங்கள் விற்கள் இரண்டையும் நன்றாக வளைத்தார்கள். பின் ஒருவரை நோக்கி ஒருவர் அம்புகளைத் தொடுத்தார்கள். தங்கள் மேல் பாய்ந்து வந்த அம்புகளை எதிரம்புகளால் தடுத்து அழித்தார்கள்.

அப்படி அவர்கள் இருவரும் சமபலத்துடன் இரண்டு நாழிகை நேரம் போரிட்டார்கள். அப்போது நேரம் இரண்டு நாழிகை கடந்து விட்டதை உணர்ந்த அர்ச்சுனன், மிகவும் கோபித்து கர்ணன்மேல் கொடூரமாகப் பாணப் பிரயோகம் செய்தான். அவனுடைய அம்புகளால் கர்ணனுடைய தேர் அழிந்தது; வில் அழிந்தது; உடற்கவசம் அழிந்தது; மார்பும் நொறுங்கியது.

கொடை வள்ளலான கர்ணன் அர்ச்சுனனுடைய அம்புகளால் வருந்தி மயக்கமடைந்து, மனம் சோர்ந்து, மெலிந்தான்! அதனால் அவன் தொடர்ந்து அர்ச்சுனனை எதிர்த்து யுத்தம் புரிய முடியாமல் தோற்றுத் திரும்பிச் சென்றான்.

வருணபகவானுடைய குமாரனாகிய சுதாயு கர்ணனுடைய தோல்வியைக் கண்டான். அதுகண்டு அவன் மிகவும் அர்ச்சுனன்மேல் ஆத்திரம் கொண்டான். உடனே அவன் பெருங்கோபத்துடன் தனது சேனையோடு வந்து அர்ச்சுனனை எதிர்த்துப் போரிட்டான். அர்ச்சுனன்மேல் தொடர்ச்சியாக அம்புகளை வர்ஷித்தான்.

அர்ச்சுனன் அந்த வினாடியே அழியா வரம் பெற்ற சுதாயுவின் மேல் மந்திர பலத்தைக் கொண்ட அம்புகளை

ஏவினான். விரைந்து சென்ற அந்த அம்புகளெல்லாம் சேறு இல்லாத வயலிலே விதைத்த செந்நெல் விதைகளைப் போல, சுதாயுவின் உடம்பினுள்ளே சென்று பாயவில்லை! மாறாக சுதாயுவின் உடம்பில் பட்ட மாத்திரத்தில் அந்த அம்புகள் யாவும் நுனி முழுதும் ஒடிந்து கீழே விழுந்தன.

தனது அம்புகள் சுதாயுவின் உடம்பில் தைக்காமல் பயனற்றுக் கீழே விழுந்ததைக் கண்டு அர்ச்சுனன், அவனுடைய உடம்பில் பதியும்படி ஆயிரக்கணக்கான அம்புகளை வலிமையோடு செலுத்தினான். அர்ச்சுனனால் செலுத்தப்பட்டுத் தன்மேல் உக்கிரமாக வந்த அம்புகளைச் சுதாயு, தனது எதிரம்புகளால் தடுத்து அழித்தான்.

பின்பு, அர்ச்சுனன் கொடிய பாணங்களைப் பிரயோகித்து சுதாயுவின் கையிலுள்ள வலிய வில்லை யழித்தான்! உடனே சுதாயு தனது வில்லையழித்த அர்ச்சுனன்மேல் பயங்கரமான கதாயுதத்தை வீசினான். மலை சிதையும்படி மேலே விழும் கொடிய பெரிய இடி போல அர்ச்சுனனைத் தாக்க வந்த அந்தத் தண்டாயுதத்தை, அக்கணமே தேவர்களுக்குத் தலைவனான கண்ணபிரான் உலகம் கண்டு திடுக்கிட தனது உடம்பில் ஏற்றுக் கொண்டான்!

சுதாயுவின் கதாயுதத்தால் அர்ச்சுனன் இறக்காதபடி அதனைத் தனது மார்பில் கண்ணபிரான் ஏற்றுக் கொண்டவுடனே, சுதாயு தலை சாய்ந்து துன்பம் மிகுந்து தரையிலே விழுந்து இறந்தான்! அதுகண்டு தேவர்கள், கண்ணன்மேல் கற்பகப்பூமழைச் சொரிந்து, “பார்த்தசாரதி வாழ்க! பூமாதேவியின் பாரத்தைப் போக்கத் திருவவதாரம் புரிந்த தலைவன் வாழ்க! காளமேக வண்ணன் வாழ்க! வாசுதேவகுமாரன் வாழ்க!” என்று வாழ்த்தினார்கள்.

கண்ணபிரான் சுதாயுவின் கதாயுதத்தை ஏற்ற மாத்திரத்திலேயே, சுதாயு இறந்ததைக் கண்டு அர்ச்சுனன் ஆச்சர்யப்பட்டான். உடனே கண்ணனை நோக்கி அவன், “சுதாயு வீசி எறிந்த கொடிய கதாயுதம் உனது உடம்பில் பட்டவுடனேயே, அவன் இறந்துவிட்டானே! இது என்ன ஆச்சர்யம்! இதற்கு என்ன காரணம்? உனது அடியவனாகிய நான் மனம் தெளியும்படி எனக்கு அதனைக் கூறி அருள்வாய்!” என்றான்.

அர்ச்சுனனின் விருப்பப்படி சுதாயுவின் மரணத்துக்கான காரணத்தை கண்ணன் அவனுக்குச் சொல்லத் தொடங்கி, ''மைத்துனா! பன்னவாதை என்பவள் சுதாயுவின் தாய். கடலுக்குத் தலைவனாகிய வருணன் அவனது தந்தை. வருணன் அநேக ஆயுதங்களை அவற்றுக்குரிய மந்திரத்தோடு தேகபலத்தையும் அதிகமாக அவனுக்குக் கொடுத்தருளினான். அவனுக்கு இடப்பட்ட பெயரும் சுதாயு என்பதாகும். மற்றும் வேறு யாராலும் தோல்வியோ இறப்போ அவனுக்கு ஏற்படாது! முன்பு கையில் ஆயுதம் இல்லாத நிராயுதபாணியின்மேல் தனது ஆயுதத்தை எறிந்தால் மாத்திரமே தான் இறக்கும்படியான வரத்தை அவன் பெற்றான். ஆதலால் அவன் பிரயோகித்த கொடிய கதாயுதம், கையில் ஆயுதம் ஏந்தியிருப்பவர்களின் உடம்பில் பட்டால் தவறாமல் அவர்களைக் கொன்றுவிடும். இந்த உண்மையை நான் முன்பே அறிவேன். ஆகையாலேயே நிராயுதபாணியாக இருந்த நான், அவன் வீசிய கதாயுதத்தை என் உடம்பிலே ஏற்றுக் கொண்டேன். அதனால் அவனும் மாண்டான்!'' என்று கூறியருளினான்.

சுதாயு இறந்தபின்பு,அர்ச்சுனன் தன்னை எதிர்த்து வந்த அவனுடைய சேனாவீரர்களையும் தனது அம்புகளால் கொன்று வீரசொர்க்கத்துக்கு அனுப்பி வைத்தான். அதன்பின் சுதாயுவின் தம்பியாகிய சதாயு அர்ச்சுனனோடு போரிட்டு மாய்ந்தான்! யாரும் அர்ச்சுனனை எதிர்த்து யுத்தம் புரிந்து உயிரோடு திரும்பிப் பிழைப்பார்களோ?

பிறகு, அர்ச்சுனனை எதிர்த்துப் போர் செய்ய ஸஹஸ்ரபாஹு வந்தான். அவனுக்குத் துணையாக பதினாயிரம் தேர்வீரர்களும், முப்பதினாயிரம் யானைவீரர்களும், நூறாயிரம் குதிரைவீரர்களும், மூன்று லக்ஷம் காலாள்வீரர்களும் ஆகிய சேனை அணிவகுத்து வந்தது.

அந்த ஸஹஸ்ரபாஹு ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் தனக்குச் சமம் என்று சொல்லும் படியானவன். கண்ணபிரானுடைய சக்கராயுதத்தால் மாண்ட ஆயிரம் தோள்களையுடைய வாணாசுரனுக்கு ஒப்பானவன். அப்படிப்பட்ட ஸஹஸ்ர பாஹு வீரத்தோடு வந்து அர்ச்சுனனை எதிர்த்தான்!

அநேக வரங்களையும் அஸ்திரங்களுக்கு உரிய மந்திரங்களையும் பெற்றுள்ள ஸஹஸ்ர பாஹு, தனது

ஆயிரம் கைகளுள் ஐநூறு இடக்கைகளில் மகாமேருகிரி போன்ற விற்களைப் பிடித்துக் கொண்டு, ஐநூறு வலக்கைகளால் அர்த்தசந்திர பாணங்களைத் தொடுத்து அர்ச்சுனன் மேல் பிரயோகித்தான். அர்ச்சுனன் மேல் அம்புகளைத் தொடுக்கின்ற ஒவ்வொரு தடவையும் ஆயிரக் கணக்கான அம்புகளை வர்ஷித்தான்.

பார்த்தன் அதுகண்டு உடனே கையில் எடுக்கும் போது ஓர் அம்பாகவும், வில்லின் நாணியில் பொருத்திய போது பத்து அம்புகளாகவும், வில்லால் தொடுத்தபோது நூறு அம்புகளாகவும், எதிரியின்மேல் செல்லும் போது ஆயிரம் அம்புகளாகவும் ஆகும்படியான அம்புகளை ஸஹஸ்ரபாஹுவின் மேல் பிரயோகித்தான். அர்ச்சுனன் ஏவிய அம்புகள் ஸஹஸ்ர பாஹுவின் பல்லாயிரக் கணக்கான அம்புகளை யெல்லாம் நடுவிலேயே தடுத்து அழித்தன. அப்படி அர்ச்சுனனுடைய ஒரு வில் ஸஹஸ்ரபாஹுவின் ஐநூறு விற்களை எதிர்த்து நின்றது!



கண்ணபிரான் அப்போது முன்பு தான் வாணாசுரனுடைய ஆயிரம் தோள்களையும் துண்டிப்பதற்கு உபயோகித்த சிறந்ததொரு மந்திரத்தை, அநுமக் கொடியுடைய அர்ச்சுனனின் காதிலே உபதேசித்து அருளினான். உடனே அர்ச்சுனன் தனது காண்டீபத்தை வளைத்து அந்த மந்திரத்தை உச்சரித்து அம்புகளை ஸஹஸ்ர பாஹுவின் மேல் தொடுத்து விட்டான். அவ்வளவுதான். அக்கணமே அர்ச்சுனனுடைய

அம்புகள் விரைந்து சென்று ஸஹஸ்ரபாஹுவின் மலைச்சிகரம் போல் உயர்ந்த வலிமையான ஆயிரம் தோள்களையும் ஒன்றாகத் துண்டித்தன. இந்திரனுடைய வச்சிராயுதத்தால் மலைகளின் அழகிய சிறகுகள் அறுபட்டு பூமி யில் விழுவன போல, பார்த்தனுடைய அம்புகளால் துண்டிக்கப்பட்ட ஸஹஸ்ரபாஹுவின் ஆயிரம் தோள்களும் தரையிலே விழுந்தன.

வானத்தில் போர்க்காண கூடியிருந்த தேவர்கள், அர்ச்சுனனுடைய அந்த வீரச்செயலைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள், ‘‘முற்காலத்தில் கார்த்த வீரியார்ச்சுனனுடைய ஆயிரம் தோள்களையும் மகாவீர ரான பரசுராமர் தமது கோடாலிப்படையினால் வெட்டித் தள்ளினார். அதுபோல இன்று இந்த அர்ச்சுனன் தனது அம்புகளால் இந்த ஸஹஸ்ரபாஹுவின் ஆயிரம் தோள்களையும் அறுத்துத் தள்ளிவிட்டான்!’’ என்று சொல்லி, அர்ச்சுனனைப் புகழ்ந்தார்கள்.

ஸஹஸ்ரபாஹு தோள்கள் இழந்து மாண்டதும் கண்ணன் சாரத்தியம் செய்ய, அர்ச்சுனன் அவனோடு யுத்தகளத்தில் மேலும் முன்னேறிச் சென்றான். அவ்வாறு அர்ச்சுனன் செல்கையில், பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களுமாகிய அரசர்கள் எல்லோரும் ஜயத்ரதனை அன்றையப் போரில் பகல் முழுவதும் பாதுகாப்பதற்கு நிச்சயித்து, வாத்தியங்கள் ஒலிக்க தங்கள் சேனைகளோடு ஆரவாரித்துக் கொண்டே வந்து அவனை யுத்தத்தில் எதிர்த்தார்கள். அந்த அரசர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் ஒன்றாகக் கூடி ஒரே நோக்கமாகப் போரிட வந்ததால், பூமி நடுங்கியது! பூபாரத்தைச் சுமக்கின்ற நாகங்கள் பாரம் தாங்காமல் தலையை அசைத்தன!

மண்டலத்தால் சூழப்பட்ட சூரியன் போல் மிகப்பல அரசர்கள் தன்னைச் சூழ்ந்து கொண்டதும் அர்ச்சுனன், தான் ஒருவனாகவே அவ்வளவு பேரையும் யுத்தத்தில் எதிர்த்தான். தனது வில்லை வளைத்து ஒவ்வொருத்தருக்குமாக ஆயிரம் பாணங்களைப் பிரயோகித்தான். அப்படிச் செய்து அர்ச்சுனன் அவர்களுடைய குதிரைகளையும், தேர்களையும், யானைகளையும், சேனைகளையும், கொடி முதலிய ராஜசின்னங்களையும், தலை முதலிய உறுப்புக்களையும்

சின்னாபின்னமாக ஒரு நாழிகைப் பொழுதில் அழித்து முடித்தான்!

அந்தப் போர்க்களத்திலே அர்ச்சுனனுக்குத் தோற்று ஓடிய வீரர்கள், யுத்தத்தில் தங்களுக்கு உண்டான களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக ரத்தவெள்ளத்திலே குளித்தார்கள். அங்குப் பிணம் தின்ன வந்த கழுகுகள் வானத்தில் இடைவிடாமல் பறந்ததால் ஏற்பட்ட கழுகுப் பந்தலின் கீழே அவர்கள் எல்லோரும் இளைப்பாறிச் சென்றார்கள். தேர்களின் மேலும், குதிரைகளின் மேலும், யானைகளின் மேலும் ஏறிவந்த வீரர்களில் அர்ச்சுனனால் தாக்குண்டு தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு, பாதங்கள் கொப்பளித்துச் சிவக்கும்படித் தோற்று ஓடிப் போகாதவர்கள் அப்போது யாருமேயில்லை!

மேலும், அர்ச்சுனனை எதிர்த்துப் போர் செய்த அரசர்கள் தனித்தனியே எதிர்த்து நின்ற நிலையிலேயே இறந்தார்கள். சேனைகளோடு கூடிய மண்டலீகர்கள் என்னும் சிற்றரசர்கள் வெகுசீக்கிரத்தில் அர்ச்சுனனுக்குப் புறமுதுகிட்டு ஓடிப்போய்த் தோற்றார்கள். அர்ச்சுனனால் மலைகளைப் போன்ற யானைகள் அழிந்தன; குதிரைகள் அழிந்தன. இதற்குமுன் பதின்மூன்று நாள் போரில் அழிந்தவர்களின் தொகை, இந்தப் பதினான்காம்நாள் போரில் அர்ச்சுனனால் மாண்டவர்களின் தொகைக்கு உறைபோடுவதற்கும் காணாது!

இந்திரபுத்திரனாகிய அர்ச்சுனனுடைய விற்போரில் பல ஆயிரம் பேர் இறக்க, ஒரு கவந்தம் எழுந்து நின்று கூத்தாடும். அத்தன்மையான கவந்தங்கள் பல ஆயிரம் எழுந்து கூத்தாட, பயங்கரமான வில்லில் கட்டியுள்ள மணி அசைந்து ஒருமுறை ஒலிக்கும். அத்தன்மையுள்ள அர்ச்சுனனுடைய காண்டீபவில்லின் மணி அப்போது பல நாழிகைப் பொழுது ஒலித்தது என்றால், அந்தப் போர்க்களத்தில் அன்று இறந்த பல்லாயிரக்கணக்கான வீரர்களின் எண்ணிக்கையை யாரால்தான் கணக்கிட்டுச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்லக் கூடியவர்கள்தான் யார் இருக்கின்றார்கள்?

வேகமாகப் பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய பெரிய தேரின் மீது நின்று கொண்டு அப்படி அர்ச்சுனன் போர் செய்த போது, பகைவரின் உடம்பிலிருந்து பெருகிய

ரத்தத்தால் ஏற்பட்ட வெள்ளம் யுத்தபூமி முழுவதும் பரவி நின்று, அந்தப் பூமியைச் செவ்வானம் போல் மிக அதிகமாகச் சிவக்க வைத்தது!

பிராமணர்கள் ஒருமுறை காயத்ரிஜபம் செய்கின்ற நேரத்தில், வண்டுகள் தாமரைப் பொய்கையைவிட்டு நீங்கி சோலைமலர்களை அடையும்படி சூரியன் ஆகாயத்தின் உச்சியை அடைந்தான்!

அந்த மத்தியான நேரத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனை நோக்கி, ''மைத்துனா! பகைவரின் போரை அழிக்க வல்ல நமது தேரின் நுகத்தடியில் பூட்டப்பட்டிருக்கும் வேகமாகச் செல்லத்தக்க குதிரைகள், தண்ணீர் குடித்து இளைப்பாறாவிட்டால் இனிமேல் ஓடாது!'' என்றான்.

உடனே அர்ச்சுனன் தனக்குச் சிவபெருமான் உபதேசித்த உருத்திர மந்திரத்தை ஜபித்து வருணாஸ்திரத்தைப் பூமியிலே பிரயோகித்தான். அந்தக் கணத்தில் அந்த அஸ்திரத்தால் அங்கே ஓர் அழகிய தடாகம் உண்டாயிற்று!

வருணாஸ்திரத்தால் ஏற்பட்ட அந்தக் குளம் கடலைவிட அதிக ஆழமானது; கடலைவிட அதிக அகலம் கொண்டது. அந்தக் குளத்தின் சுற்றிலுமுள்ள எங்கும் செழிப்பான தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன. அக்குளத்தின் துறைகளிலெல்லாம் கருங்குவளைகள் பூத்திருந்தன. குளத்து நீரில் நீண்ட வாளைமீன்களும், வரால் மீன்களும், கயல் மீன்களும், கெண்டை மீன்களும் அதிகமாகக் காணப் பட்டன. குளத்தின் கரைகளில் கின்னரமிதுனம் என்னும் பறவைகள் வந்து தங்கியிருந்தன. மற்றும் அந்தக் குளத்தின் கரைகளில் ஒரு பக்கத்தில் பெரிய நாரைகளின் கூட்டமும், ஒரு பக்கத்தில் கறுப்பு நாரைகளும், ஒரு பக்கத்தில் சக்கரவாகப் பறவைகளும், ஒரு பக்கத்தில் கிரௌஞ்சப் பறவைகளின் கூட்டமும், ஒரு பக்கத்தில் இளம் அன்னப் பறவைகளும், ஒரு பக்கத்தில் நீரில் வாழும் தேவமகளிரும், ஒரு பக்கத்தில் இரண்டு பக்கங்களிலும் ஒளிசிந்தும் சங்குகள் தங்கியுள்ள மணல்மேடுகளும் இருந்தன.

பூமாதேவியின் திருவுந்திக்குச் சமமான அந்தக் குளத்தைப் பார்த்து அர்ச்சுனன் கண்ணனிடம், ''மைத்துனா! குதிரைகளுக்கு இந்தக் குளத்தில் நீர்க்காட்டு!'' என்றான்.

கண்ணன் அதன்படி தேரிலிருந்து முன்னே குதித்தான். குதிரைகளின் தோல் கயிற்றுக் கட்டுக்களை அவிழ்த்தான். பிறகு, அவற்றை ஓட்டிப் போய் நீலோற்பலமலரின் வாசமுள்ள அந்தக் குளத்துத் தண்ணீரைக் குடிக்கச் செய்து அவற்றின் களைப்பைப் போக்கிய கண்ணன், தானும் தனது இரண்டு திருவடிகளையும் இரண்டு திருக்கைகளையும் அலம்பிக் கொண்டான்.

இனி, நாம் பாண்டவர் பக்கத்துச் செய்தியை இத்துடன் நிறுத்திக் கொண்டு, துரியோதனாதியர் பக்கத்துச் செய்தியை விபரமாக எடுத்துச் சொல்வோம்!

அர்ச்சுனனை எதிர்த்துப் போர்செய்து காற்றில் அகப்பட்ட சருகுகள் போலத் தோற்றுப் புறமுதுகிட்டு ஓடிய கௌரவ சேனாவீரர்கள், நேரே துரியோதனனிடம் சென்றார்கள். அவனை நோக்கி அவர்கள், "ராஜராஜனே! பகைவரையழிக்கும் இந்தப் போரில் அர்ச்சுனன் பிரயோகித்த அம்புகளின் தாக்குதலால், அவனை எதிர்த்தவர்களுள் ஒருவரும் உயிர் பிழைக்கவில்லை!" என்றார்கள்.

துரியோதனன் அதுகேட்டு மிகவும் வருந்தினான். கொடிய தீப் பற்றிய நகரம் போல அவன் மிகவும் மனம் சோர்ந்து போனான். உடனே அவன் துரோணாசாரியாரிடம் சென்றான். வில்லாசிரியரின் பாதங்களை வணங்கி துரியோதனன், "ஐயனே! பல பராக்கிரமங்களையுடைய அர்ச்சுனனின் அம்புகளுக்கு எதிரம்புகள் தொடுத்துக் கொண்டு போய், அவனை எதிர்த்துப் போர் செய்த வலிமை மிக்க அரசர்களில் ஒருவருமே உயிர்தப்பிப் பிழைக்க வில்லை! ஆகையால், நிச்சயம் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பு எனது தங்கை துச்சளையின் கணவனான ஜயத்ரதனின் தலை,வெகுசீக்கிரம் அர்ச்சுனன் செய்த சபதப்படி அவனால் சிதறிப் பொடியாகிவிடும். அப்படியாகாமல் தடுக்க வல்லவர்கள் யாருமில்லை! நமது சேனாவீரர்கள் அர்ச்சுனனைக் காணாத இடத்திலே, அவனைத் தாங்கள் ஜெயிப்பதாகப் பராக்கிரம வார்த்தைகளை அதிகமாகச் சொல்வார்கள். ஆனால், அர்ச்சுனனை எதிரே பார்த்துவிட்டாலோ, யுத்தகளத்தில் ஒரு மாத்திரைப் பொழுது கூட அவனை எதிர்த்து நிற்க மாட்டார்கள்! ஆமாம். நமது சேனை முழுதும்

வெட்கமில்லாமல் அவன் முன்னே புறமுதுகிட்டு ஓடுகின்றது. ஆகையால், ஜயத்ரதன் இன்றைக்கே அர்ச்சுனனால் கொல்லப்பட்டுச் சுவர்க்கலோகம் சேர்வான். சுவாமி! இதற்குப் பரிகாரமாக ஒரு செயலையும் நாம் காணவில்லையே! எனவே காண்டீபனாகிய அர்ச்சுனனை நான் தனியே சென்று போரில் எதிர்த்து, அவனைக் கொல்ல வேண்டும். இல்லையேல் அவனால் நான் யுத்தத்தில் சாக வேண்டும்! இந்த இரண்டைத் தவிர இப்போது செய்யக் கூடிய உபாயம் வேறு ஒன்றும் இல்லை. ஆகையால், உமது கண் முன்பாகவே இனி நான் தனித்துப் போய் அர்ச்சுனனை எதிர்த்துச் செய்கின்ற போரை நீர் விரைவில் பார்ப்பீர்!'' என்றான்.

அரவக் கொடியுடைய துரியோதனன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, துரோணாசாரியார் அவனைப் பார்த்து, ''மன்னாதிமன்னா! முன்பே நீ பகைவர்க்கு அஞ்சாத துணிவுடையவனாக இருந்தாய். இப்போது பகைவருக்குப் பயந்து, நீ இப்படி இளைத்துப் போய்ச் சிந்திப்பது முறையில்லை! ஆகையால், நான் சொல்வதைக் கேள். உனது சேனைகள் அழிவடைந்தாலும், உனது பராக்கிரமத்துக்கு அழிவு உண்டாகக் கூடாது. வலிமையோடு வருகின்ற ஒரே தேரிலே ஏறிக் கொண்டு வரும் கிருஷ்ணார்ச்சுனரை, தத்துவஞானத்தால் சிறந்த பெரியோர்கள் நரனும் நாராயணனுமே அவர்கள் என்று சொல்வார்கள். மற்றும் அந்த இருவரைப் போலவும் சிவபெருமானுடைய சிறந்த கருணையினால் யுத்தத்தில் பகைவரை அழிக்கின்ற அதிகமான அஸ்திரங்களையும், வரமாகச் சிறந்த மந்திரங்களையும் அதிகமாகப் பெற்றவர்கள் வேறு யாருமேயில்லை! அந்த அர்ச்சுனன் காண்டீபவில்லுடன் எதிரே நின்றால், பிரமனுக்கும் அவனை எதிர்த்து யுத்தம் புரியும் தகுதியில்லாது போய்விடும்! மலையைத் தாக்கிப் போர் செய்து தமது இரண்டு தோள்களின் வலிமையையும் அழியாமல் காத்துக் கொண்டவர்கள் யாருமில்லை. மேலும், அர்ச்சுனனுடைய தேர்ச்சாரதியாக இருப்பவன் சாட்சாத் ஸ்ரீவைகுண்டத்து திருமால். ஆகையால், அந்த இருவரையும் யுத்தத்தில் ஜெயிப்பது என்பது யாருக்காயினும் அருமையானதாகும். முன்பு உனது ராஜசபையிலே 'நெருங்கிய உறவினர்களோடு கொடும் பகைக் கொள்ளக் கூடாது' என்று விதுரன் உனக்கு

நீதி போதித்தான். அப்போது ராஜசபையிலிருந்த அரசர்கள் எல்லோரின் முன்பாகவும், நீ அவனை நோக்கி மிகவும் பழித்துப் பேசினாய். அதனால் அந்த விதுரன் மிகவும் மனம் வருந்தி, பலம் பொருந்திய தனது வில்லைத் தானே முறித்துப் போட்டான். நல்லறிவின் வகைகளையறிந்த பெரியோர்கள் சொன்ன வழியிலே நீ நடக்கவில்லை. ஆயினும் பெரும் போரை ஒரு பொருட்டாக மதிக்காத பராக்கிரமத்தையுடைய வீரனாகிய ஜயத்ரதனை, அர்ச்சுனனால் இந்த ஒரு பகற்பொழுதுக்குள் கொல்வது என்பது முடியாது. அப்படி அர்ச்சுனனால் ஜயத்ரதன் இறப்பதோ, இறவாமல் உயிர்ப் பிழைப்பதோ நம் கையில் இல்லை. விதிவசம்தான் அது இருக்கிறது!'' என்றார்.

பின்பு, துரோணாசாரியார் துரியோதனனுடைய உடம்பில் அருமையான ஒரு கவசத்தைப் பூட்டினார். அதன்பின் துரியோதனனைப் பார்த்து வில்லாசிரியர், "எல்லா வீரர்களும் வணங்கத் தக்க வீரக்கழலையணிந்த பாதத்தை உடையவனே! வெற்றிமாலை தரிப்பதற்கு உரியதும், சிறந்த ரத்தினங்கள் பதித்ததுமான இந்தக் கவசம் முன்னாளில் பிரமதேவன் தேவேந்திரனுக்குக் கொடுத்தருளியதாகும். பின்பு, இந்திரன் இடைவிடாமல் செய்யும் யுத்தத்தின் முடிவில் இதனை அங்கிரசுக்குக் கொடுத்தான். அதற்குப்பின் அங்கிரசு இந்தக் கவசத்தை எனக்குக் கொடுத்தான். கூரிய அம்புகளாலும் சரி, மற்ற ஆயுதங்களாலும் சரி, வேறு ஒன்றாலும் சரி, இந்தக் கவசம் அழியாது!'' என்று, தாம் கொடுத்த கவசத்தின் வரலாற்றையும் வலிமைச் சிறப்பையும் அவனுக்குக் கூறினார்.

துரோணாசாரியார் பூட்டிய கவசத்தோடு துரியோதன மகாராஜன் போருக்குப் புறப்பட்டான். அப்போது அஷ்டத் திக்கஜங்களின் காதுகளும் செவிடாகும்படி வாத்தியங்கள் முழங்க பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களுமாகிய அரசர்களும், மற்றும் பல சேனாவீரர்களும் தங்கள் மன்னனோடு யுத்தத்துக்குச் சென்றார்கள். அப்படிச் சென்ற எல்லோரும் அர்ச்சுனன் நிற்கும் யுத்தபூமியை நோக்கித் தங்கள் வாகனங்களைச் செலுத்திக் கொண்டு போனார்கள்.

அர்ச்சுனன்மேல் போருக்குச் சென்ற துரியோதனனுடைய சேனாவீரர்கள், அவனால்

வருணாஸ்திரத்தின் மூலம் உண்டாக்கப்பட்ட குளத்தில் தண்ணீர் குடித்துத் தாகம் தீர்ந்து களைப்பாறினார்கள். அவர்கள் அந்தக் குளத்தின் வளமையைப் பார்த்து, ''இந்தக் குளத்தின் நீர் இத்தனைகாலமாக நாள்தோறும் நாம் குடித்து வந்த நீர் போன்றதில்லை. சிறந்த இனிய அமிர்தம் போன்றது இக்குளத்தின் தண்ணீர்!'' என்று வியந்து சொன்னார்கள்.

மற்றும் துரியோதனனுடைய சேனா வீரர்கள் அந்தத் தடாகத்தின் கரைகளிலுள்ள தென்றல் தவழும் பெரிய சோலைகளில் தங்கித் தங்கள் தாபம் தீர்ந்தார்கள். தங்களுடைய மதயானைகளால் அந்தக் குளத்திலுள்ள செந்தாமரைப் பூக்களின் கூட்டத்தைக் கலைத்தார்கள். குதிரைகளுக்கு அந்தத் தடாகத்தில் நீர் காட்டினார்கள். தாங்களும் குளத்தில் நீராடி மகிழ்ந்தார்கள். தடாகத்துப் பூக்களில் மொய்க்கின்ற வண்டுகளைக் கைகளால் ஓட்டிவிட்டு, அன்று மலர்ந்த நீலோற்பலப் பூக்களைப் பறித்தார்கள். 'இந்தப் பூக்களுக்கு உள்ள அவ்வளவு நறுமணம், இவ்வுலகத்தில் வேறு எதற்கும் இல்லை!' என்று கொண்டாடி, அந்தக் கருங்குவளை மலர்களைச் சூடிக் கொண்டார்கள்.

அப்படி துரியோதனனுடைய சேனாவீரர்கள் தாகம் தீர்ந்தபின், தங்களுடைய தேர் யானை குதிரைகளோடு சமுத்திரத்தைச் சூழ்ந்துள்ள பெரிய சக்கரவாளமலை போல அந்தக் குளத்தைச் சூழ்ந்து கொண்டார்கள்.

தனது தேர்க்குதிரைகளுக்கு நீர் காட்டும்படி கண்ணனிடம் சொல்லிவிட்டுத் தேரிலிருந்து இறங்கி நின்றிருந்த அர்ச்சுனன், துரியோதன சேனாவீரர்கள் குளத்தைச் சூழ்ந்து கொண்டதைக் கண்டான். துரியோதனனுடைய அந்தச் சேனாசமுத்திரத்தைப் பார்த்ததும் அர்ச்சுனன் கண்ணனை நோக்கி, ''திருத்துழாய் மாலையுடையவனே! தெய்வத்தன்மையுள்ள இந்தக் குளத்தில் நல்ல நீரைக் குடித்த நமது குதிரைகளை நீ தேரிலே பூட்டு. நான் தரையிலே நின்றபடியே வில்லை வளைத்து, இப்போது நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சேனையை ஒரு மாத்திரைப் பொழுதிலே வீரசொர்க்கத்துக்கு அனுப்புகிறேன். பின்பே உன்னோடு நான் தேரில் ஏறும்படிக் கருணை செய்!'' என்று வேண்டினான்.

ஸ்ரீகண்ணபிரான் அர்ச்சுனனுடைய வேண்டுகோளை அங்கீகரித்தான்.

பின்பு, தரையில் நின்றபடியே அர்ச்சுனன் தன்னையும் குளத்தையும் சூழ்ந்துள்ள வீரர்களை எதிர்த்துப் போரிட்டான். யானைகளின் மேலும், குதிரைகளின் மேலும், தேர்களின் மேலும் வரிசை வரிசையாக அலைகள் போல மேன்மேலும் வந்த வீரர்களை நோக்கி, வில்லை வளைத்துத் தனித்தனியே பாணப்பிரயோகம் செய்து, அவர்களை யெல்லாம் கொன்று குவித்தான். அப்படி அர்ச்சுனன் கொன்று குவித்த பகைவீரர்களின் உடம்புகள் மலைகள் போலாயின. சுற்றிலும் கிடந்த அந்தப் பிணமலைகளின் நடுவே அர்ச்சுனன், நீலரத்தினமலை ஒன்று நிற்பது போல அப்போது நின்றான்!

அச்சமயத்தில் கிருபாசாரியாரும், கிருதவர்மாவும், அசுவத்தாமனும் தங்கள் சேனாவீரர்களுடன் அலை அலையாக அர்ச்சுனன் எதிரே தேரின்மீது வந்து நின்று, அவன்மேல் அம்புகள் படும்படி தத்தம் வில்லை வளைத்துத் தங்கள் தோள்களின் வலிமை முழுவதையும் காட்டினார்கள்.

தன்மேல் அவர்கள் அம்புகள் தொடுத்ததைக் கண்டவுடனே, அர்ச்சுனன் தனது வில்லை வளைத்தான். பகைவர்கள் தொடுத்த அம்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றாக எதிரம்புகள் தொடுத்து, தன்மேல் படாதபடி நடுவிலேயே அவற்றைத் தடுத்து நிறுத்தி அழித்தான். மேலும், தனது சிற்சில அம்புகளால் அவர்களுடைய தேர்களையும், குதிரைகளையும், யானைகளையும் சின்னாபின்னமாக்கிக் கொன்றான். அப்படிப் போரிட்டுக் கொண்டே அர்ச்சுனன் பலமுறை சுழன்று சுழன்று வந்தான்.

அப்போது அர்ச்சுனன் பிரயோகித்த அம்புகள் கிருபாசாரியர் முதலியவர்களின் மேல், காளமேகத்திலிருந்து பாதாளலோகத்து நாகங்களின்மேல் விழுகின்ற இடிகளைப் போல் பட்டுத் தாக்கின. அதேபோல் அவர்கள் வர்ஷித்த அம்புகள் இடியை விழுங்கிவிடும்படி பாதாளலோகத்தில் இருந்து மேலே எழுந்த நாகங்கள் போல அர்ச்சுனனைத் தாக்கின.

கடைசியாக அர்ச்சுனனுடைய அம்புகளால் ரதங்களின்மேல் நின்று போரிட்ட பகைவர்களின் தேர்கள்

முறிந்தன; நீண்ட கொடிகள் ஒடிந்தன; விற்களின் நாணிகள் அறுபட்டன; பெரிய விற்களும் துண்டுபட்டன. பகைவர்களில் இறந்து வீரசுவர்க்கம் போனவர்கள் போக எஞ்சி நின்றவர்கள் அஞ்சி ஓடிப் போனார்கள்.

பகைவர்கள் அப்படியானதும் அர்ச்சுனன் கண்ணனோடு தனது தேரில் ஏறிக் கொண்டான். மீண்டும் கண்ணபிரான் அர்ச்சுனனுடைய தேரை ஓட்டிக் கொண்டு யுத்தகளத்தில் முன்னேறிச் சென்றான்.

அச்சமயத்தில் வாத்தியங்கள் முழங்கவும், முன்பு அர்ச்சுனனிடம் தோற்றோடியவர்கள் தைரியத்துடன் திரும்பிப் போருக்கு வரவும், தன்னோடு கர்ணனும் சகுனியும் சேனைகளும் சூழ்ந்து வரவும், நந்தியாவட்டைமாலை தரித்த துரியோதனன் உக்கிரங்கொண்டு அர்ச்சுனன்மேல் போருக்கு வந்தான்.

சித்திராங்கதையின் கணவனாகிய அர்ச்சுனன், தன்மேல் உக்கிரத்தோடு துரியோதனன் போருக்கு வருவதைக் கண்டான். அது கண்டு, 'இன்று வரையிலும் இந்தத் துரியோதனன் யுத்தத்தில் என் கண்ணுக்கு முன்னால் ஒரு யோஜனை தூரத்துக்குள் நிற்கவேயில்லை. அப்படிப்பட்டவன் இப்போது என்னை எதிர்த்து மிகவும் வீராவேசத்துடன் வருகின்றான். இவன் இப்படி வருவதற்குக் காரணம் என்ன? என்னை எதிர்த்து உக்கிரமாகத் தாக்கிப் போரிடப் போகின்றானோ? இல்லை, வேறு எதற்காகவோ இப்படி வருகின்றானோ? தெரியவில்லையே! ஒருவேளை சிறந்த வில், கொடிய அம்புகள், அழிவில்லாத கவசம், அழியாத தேர் ஆகிய இவற்றில் எதையாவது இவன் இப்போது பெற்றிருக்கின்றானோ?' என்று எண்ணினான் அர்ச்சுனன். உடனே அவன் கண்ணபிரானைத் தொழுது, "கிருஷ்ணா! துரியோதனன் என்மீது உக்கிரங் கொண்டு வருகின்றான் பார்த்தாயா? இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

அர்ச்சுனனுடைய கேள்வியைக் கேட்டதும் கண்ணபிரான், தனது ஞானதிருஷ்டியால் நடந்த செய்திகளை யறிந்து, அவனை நோக்கி, "முன்பு பிரமதேவன் தேவேந்திரனுக்குக் கொடுத்த கவசத்தை, இப்போது துரோணாசாரியார் துரியோதனனுக்குக் கொடுத்தார். அந்தக்

கவசம் அம்புகளாலும், மற்றுமுள்ள சிறந்த ஆயுதங்களாலும் அழிவதில்லை. ஆனால், இப்போது நீ அதை அழிப்பாய்!'' என்று சொல்லி, தேரைத் துரியோதனன் முன் செலுத்தினான்.

கண்ணபிரானுடைய கட்டளைப்படி அர்ச்சுனன் அக்கணமே தனது காண்டீப வில்லை வளைத்து பகைவர்களின் கிரீடங்களும், தோள்களும், நாபியும், முகமும், மார்பும் அழியும்படி அம்புகளைத் தொடுத்துவிட்டான். அப்படி அர்ச்சுனன் பிரயோகித்த அம்புகளால் பகைவர்களுடைய குதிரைகள் நாக்குத் தெறித்து விழுந்தன; நீண்ட விற்களின் நாணிகள் அறுந்தன; பெரிய தேர்ச்சக்கரங்கள் உடைந்தன; யானைகளின் கால்கள் துண்டித்து விழுந்தன; யானைவீரர்களும் தேர்வீரர்களும் இறந்தார்கள்; நீண்ட கொடிகள் முறிந்து விழுந்தன; எதிர்த்து வந்த பகைவர்களின் தலைகள் உடைந்து மூளைகள் யுத்தபூமியெங்கும் சிதறின; அவர்களுடைய வெண்கொற்றக் குடைகளும் சின்னாபின்னமாயின. அப்போது அர்ச்சுனனோடு போரில் எதிர்த்து அம்பு தொடுப்பவர்கள் யாருமில்லை!

அர்ச்சுனனை எதிர்த்து வந்து போரிட்ட கர்ணன், அந்த யுத்தத்தில் மிகவும் வருந்தி மிக்க மனக்கலக்கத்துடன் தோற்று ஓடிப் போனான். சகுனியும், அவனுடைய தம்பிமார்களும் புறமுதுகிட்டுத் தோற்றோடிச் சென்றார்கள். கலிங்க தேசத்து அநேக ராஜாக்களும் தோற்றுத் திரும்பிச் சென்றார்கள். கிருதவர்மாவும், கிருபாசாரியாரும், சேதிதேசத்து மன்னனும் அஞ்சி ஓடிப் போனார்கள். பூரிசிரவசு உயிர் மட்டுமே கொண்டு தப்பிச் சென்றான். அர்ச்சுனனை எதிர்த்துப் போரிட்ட அரசர்களில் இறந்தவர்கள் போக, மற்றவர்கள் எல்லோரும் பயந்து நடுங்கி ஓடிப் போனார்கள்!

அப்போது துரியோதனன் மேஷராசி போன்ற தேர்மீது ஏறிக் கொண்டு வந்து அர்ச்சுனனை யுத்தத்தில் எதிர்த்து, அவன்மேல் அர்த்தசந்திர பாணங்களை மிகவும் அதிகமாகப் பிரயோகித்து உக்கிரமாகப் போர் செய்தான்.

தன்னை நோக்கி வந்த துரியோதனனுடைய அம்புகளையெல்லாம் தனது எதிரம்புகளால் அர்ச்சுனன் அழித்தான். மேலும், அநேகக் கொடிய அம்புகளை துரியோதனன்மேல் அவன் வர்ஷித்தான். அந்த அம்புகள் யாவும் விரைந்து சென்று துரியோதனனுடைய கவசத்தை

வலிமையோடு தாக்கின. ஆனால், பயன் ஒன்றுமில்லை. அந்த அம்புகள் வீணாகக் கூரழிந்து, மலையின் மேல் நீர்த்திவலைகள் விழுந்தது போல அந்தக் கவசத்தைத் தாக்கித் தரையிலே விழுந்தன. அப்படி அர்ச்சுனன் பிரயோகித்த அம்புகளில் ஒன்றுகூட துரியோதனனுடைய உடம்பில் படவில்லை. அதனால் எதற்கும் சளைக்காத துரியோதனன் அர்ச்சுனனுடைய அம்புகளால் கொஞ்சமும் சலிப்புக் கொள்ளவில்லை.

இந்திரகுமாரனாகிய அர்ச்சுனன் தனது அம்புகள் பயனற்றுப் போனதை அந்த வினாடியிலேயே உணர்ந்து கொண்டான். உடனே அர்ச்சுனன் முருகக்கடவுளின் வேலாயுதத்தைப் போன்ற ஒரு கொடிய வேலாயுதத்தை, வலிமையோடு தேரில் நின்று கொண்டு துரியோதனன் மேல் மிகவும் கோபித்து வீசினான். அசுவத்தாமன் அது கண்டு அக்கணமே தனது அம்புகளால் அர்ச்சுனனுடைய வேலாயுதத்தைத் துண்டாக்கித் தள்ளினான்.

அர்ச்சுனனுடைய வேலாயுதத்தை அசுவத்தாமன் அம்புகளால் துண்டாக்கியதுதான் தாமதம். முன்பு அர்ச்சுனனிடம் தோற்றோடிய கௌரவசேனாவீரர்களும் அரசர்களும் தைரியம் பெற்றார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் தங்கள் சதுரங்கச் சேனைகளோடு ஒன்றாகக் கூடி துரியோதனனுக்குத் துணையாக, அர்ச்சுனனை எதிர்த்து உக்கிரமாகப் போருக்கு வந்தார்கள்.

பார்த்தன் அதைப் பார்த்து மிகவும் வருத்தம் அடைந்தான். அதனால் போர் செய்வதற்கும் மறந்து கண்ணனுடைய திருவடிகளை நமஸ்கரித்துச் சோர்ந்து நின்றான்!

கண்ணபிரான் தனது அன்பான மைத்துனன் போரில் சோர்ந்து போனதைப் பார்த்தான். உடனே அவன் பகைவரை அழிப்பதற்காகவும், அவனுடைய சோர்வைப் போக்குவதற்காகவும், தனது திவ்விய சங்கத்தைத் தனது திருவாயிலே வைத்து ஊதிச் சங்கநாதம் செய்தான்!

ஸ்ரீகண்ணபிரான் முழங்கிய சங்கநாதம் இடியோசை போலவும், சமுத்திர ஆரவாரம் போலவும் எல்லா இடங்களிலும் சென்று பரவியது. போர் செய்கின்ற அரசர்கள்

எல்லோரும் அந்தச் சங்கநாதம் கேட்டு உடம்பு முழுதும் மயிர்க் கூச்சம் அடைந்தார்கள். அவர்கள் யுத்தத்தால் உண்டான கொடிய கோபமும் தணிந்தார்கள். அப்போது சங்கநாதத்தால் அண்டகோளத்தின் மேல்முகடும் வெடித்ததுபோல் அதிர்ச்சியடைந்தது!

பார்த்தசாரதி பகைவர்களின் அந்த நிலையைக் கண்டதும், முன்னொரு காலத்தில் பூமாதேவியின் குமாரனாகிய நரகாசுரனுடைய உயிரைக் கொன்ற ஒரு வேலாயுதத்தை அர்ச்சுனனுக்குக் கொடுத்தான். பின்பு, அர்ச்சுனனை நோக்கி கண்ணன், ''மைத்துனா! இந்த வேலாயுதத்தால் துரியோதனனை ஜெயித்திடுவாய்!'' என்று சொல்லியருளினான்.

அர்ச்சுனன் அதற்குச் சந்தோஷித்து, 'பெரிய செல்வ வாழ்க்கையைப் பெற்றேன்!' என்று எண்ணினான். உடனே தனது தத்துவஞானத்தோடும் பக்தியோடும் எழுந்து கண்ணபிரானைப் பிரதட்சிணம் செய்து, பெருமானின் திருவடித் தாமரைகளை நமஸ்கரித்து அந்த வேலாயுதத்தைப் பெற்றுக் கொண்டான்.

கண்ணனால் வேலாயுதம் பெற்ற அர்ச்சுனன், 'இத்துரியோதனனை எதிர்த்து இப்போது கொன்றுவிட்டால், சிறந்த வாயுதேவனுடைய குமாரனாகிய என் தமையன் பீமனின் சபதம் தவறிப் போய்விடும். ஆகையால், இவனைக் கொல்லக் கூடாது. ஆயினும் இவன் விரணப்பட்டு அஞ்சும்படி இந்த வேலாயுதத்தை இவன்மேல் வீச வேண்டும். அதனால் இவனைப் போரில் தோற்றோடும்படிச் செய்ய வேண்டும். இதுவே இப்போதைக்குச் செய்ய தகுந்த சிறந்த காரியம்!' என்று நினைத்தான். மறுகணமே தனது அந்த எண்ணத்தோடு அர்ச்சுனன், துரியோதனனுடைய மனம் மிகவும் வருந்தும்படி வேலாயுதத்தை வேகமாக அவன்மேல் எறிந்தான். அவ்வளவுதான். அர்ச்சுனன் வீசிய வேலாயுதம் க்ஷணத்தில் சென்று துரியோதனனுடைய உடம்புக் கவசத்தைப் பொடிப் பொடியாக்கியது. மேலும் அர்ச்சுனன் அறுபதும், இருபதும், ஐம்பதுமாக அம்புகளைப் பிரயோகித்து துரியோதனனுடைய வில்லையும் குதிரைகளையும், அரவக் கொடியையும், ரதத்தையும் சின்னாபின்னமாக்கினான்.

உடனே துரியோதனன், தான் வந்த வழியே நேராகத் திரும்பிப் போய்விட்டான்! ஆமாம். அவன் போரில் அர்ச்சுனனைக் கொஞ்சமும் எதிர்த்து நிற்கவில்லை!

துரியோதனன் தோற்றோடிய பின்பு, தன்னை வந்து எதிர்த்த அசுவத்தாமனையும், கர்ணனையும், சகுனியையும், மற்றும் பல அரசர்களையும் அர்ச்சுனன் எதிர்த்துப் போரிட்டான். அர்ச்சுனன் தனது அம்புகளால் அந்தப் பகைவர்களுடைய பராக்கிரமத்தை முதலில் அழித்தான். பின்னர் அவர்களுடைய தேர்களை அழித்தான். அதனால் அவர்கள் எல்லோரும் தோற்றுக் கால்நடையாகவே வேகமாக ஓடிப் போனார்கள்.

அர்ச்சுனன் கோபம் கொண்டு எதிர்த்து ஜெயித்த போர்க்களத்தில், ஆரவாரம்செய்துகொண்டு அவன் எதிரே வந்தவர்களில் யாரும் பிழைக்கவில்லை. பதினெட்டுத் தேசத்திலுமுள்ள ராஜாக்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அர்ச்சுனனுடைய அம்புகளுக்குப் பலியாகி மாண்டார்கள். துச்சாதனன் முதலிய துரியோதனனுடைய தம்பிமார்கள் எப்படியோ தப்பித்து ஓடிப்போய் உயிர்ப் பிழைத்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் முன்னாளில் திருமால் ஸ்ரீராமாவதாரம் செய்தபோது பிரயோகித்த ஆக்நேயாஸ்திரத்தால் சமுத்திரம் பட்டபாட்டையடைந்தார்கள்.

மேலும், அப்போது அர்ச்சுனனால் அழிக்கப்பட்டு மகாரதவீரர்கள் இறந்து கீழே விழுந்தார்கள்; அதிரதவீரர்கள் இறந்தார்கள்; தோப்பாகர்களும் தங்களுடைய வலிமையுள்ள தலைகளையிழந்தார்கள். அதுகண்டு வானத்தில் நின்று யுத்தவிநோதங்களைப் பார்த்துக் கொண்டிருந்த நாரதர் முதலிய தேவர்கள் பலரும், ''பாரதப் போர் இன்றே முடிந்துவிடும்!'' என்று சொல்லத் தொடங்கினார்கள்.

அப்படிப் பகைவரைக் கொன்றும், தோற்றோடச் செய்தும் போரில் வெற்றிப் பெற்ற அர்ச்சுனனும் கண்ணபிரானும், ஜயத்ரதனைத் தேடிக் கொண்டு தங்கள் தேரை ஓட்டிச் சென்றார்கள். அந்தச் சமயத்தில் நடந்த வேறு ஒரு செய்தியை இனி நாம் சொல்வோம்!

பாரத யுத்தகளத்தில் ஸ்ரீகண்ணபிரான் ஊதிய சங்கநாதத்தைக் கேட்டவுடனே, தருமர் மிகவும்

மனக்கலக்கம் அடைந்தார். உடனே தருமர் தமக்குத் துணையாக நின்றிருந்த சாத்தகியை அருகே அழைத்து, அவனை நோக்கி, "ஜெயிப்பதற்குரிய யுத்தகளத்திலே அர்ச்சுனன் களைப்படையாமல், கண்ணபிரான் அதிர்ச்சி உண்டாக்க வல்ல சங்கநாதத்தை முழங்க மாட்டான். ஆகையால், நீ உடனே அவர்கள் இருக்கும் இடத்துக்குப் போய், அங்கு நடந்த செய்தியை அறிவாய்!" என்று சொன்னார்.

சாத்தகி தருமர் கூறியதைக் கேட்டு, 'வலிமையும் வலிய தோள்களும் உள்ள அரசர்கள் பலர் தன் அருகே காத்துக் கொண்டிருந்த போதிலும், தருமர் அவர்களில் ஒருவருக்கும் இந்தக் கட்டளையை இடவில்லை. மாறாக இந்த இனிய கட்டளையை எனக்கே இட்டார்!' என்று எண்ணி மகிழ்ந்தான். தனது தமையனாகிய கண்ணபிரானுக்கு ஒப்பான பராக்கிரமத்தையுடைய சாத்தகி, அந்த மகிழ்ச்சியுடன் தருமருடைய தாமரைப் பாதங்களை நமஸ்கரித்தான்.

தருமரை நோக்கி சாத்தகி, "குளிர்ந்த கருணையுள்ள மனமும், அறச்செய்கையும் மிகுந்த ராஜனே! அர்ச்சுனன் கோபம் கொண்டால், தேவர்கள் முதலிய வானுலகத்தவர்களேயானாலும் அவன் கண்ணுக்கு எதிராக நிற்கவும் மாட்டார்கள்! அப்படியிருக்க, இப்பூலோகத்தில் அவனை எதிர்க்கவல்ல அரசர்கள் யார் இருக்கின்றார்கள்? நிச்சயமாக அவனை எதிர்க்கும் வலிமை படைத்த அரசர்கள் பூலோகத்தில் ஒருவர் கூட இல்லை!" என்று அவருக்குத் தைரியம் சொன்னான்.

பின்பு, சாத்தகி தருமருடைய கட்டளைப்படி தேரில் ஏறிக் கொண்டு பல அதிரத வீரர்களுடன் சென்றான். அப்படிப் போன சாத்தகி, தனது ஆயுதங்களினால் பகைவரின் சேனா சமுத்திரத்தைப் பிளந்து கொண்டு உள்ளே வேகமாக முன்னேறிச் சென்றான்!

ஆதிவராகமூர்த்திக்குச் சமமான சாத்தகி அப்படிச் செல்லும்போது, பிருதாவளிகளோடு வந்த கிருதவர்மா அவனைப் போரில் எதிர்த்தான். சாத்தகி உடனே கண்ணிமைக்கும் பொழுதுக்குள் போரிட்டு கிருதவர்மாவின் குதிரைகளையும், தேரையும், வில்லையும் அழித்தான். அதனால் கிருதவர்மா தோற்று ஓடிப்போனான்!

மேலும், அச்சமயத்தில் சாத்தகியை வந்து போரில் எதிர்த்த கர்ணனுடைய புதல்வர்களும், லக்ஷக்கணக்கான மற்ற வீரர்களும் அவனால் சிதைந்தார்கள். சாத்தகி அதன்பின் பகைவரின் சேனாசமுத்திரத்துக்குள் முன்னேறிப் போகும் போது, சலசந்தன் என்னும் அரசன் தனது மதயானையின் மேல் ஏறி வந்து, அவனை எதிர்த்துப் போரிட்டான்.

தன்னை எதிர்த்த சலசந்தனை சாத்தகியும் உக்கிரமாக எதிர்த்து அவன் மேல் கொடிய பாணங்களைப் பிரயோகித்தான். சாத்தகியின் பாணவர்ஷத்தால் சலசந்தன் தனது யானையோடு மிகவும் கலக்கம் அடைந்தான். அதனால் அவன் கொடிய நெருப்புப் போன்றவனானான்! அந்த வெங்கனலை சாத்தகியின் பாணங்களாகிய மழைநீர் அவித்தது!

பிறகு, துரியோதனனுடைய தம்பிமார்களில் நால்வர் ஒன்றாகக் கூடி வந்து, சாத்தகியைப் போரில் எதிர்த்து அவன் மேல் அம்புகளைத் தொடுத்துவிட்டார்கள். அவ்வாறாக துரியோதனாதியர்கள் ஒன்றாக வந்து எதிர்த்து செய்த போரை, வேட்டையாடச் சென்ற கொடிய ஆண் யானையைப் போன்றவனாகிய சாத்தகி ஜெயித்தான்.

அப்படி தன்னை எதிர்த்தவர்கள் தோற்றோடும்படிப் போரிட்டுக் கொண்டே, வில்லோடு தேரில் விரைந்து சென்று கொண்டிருந்த சாத்தகியை வில்லாசிரியராகிய துரோணாசாரியார் பார்த்தார். அதுகண்டு துரோணாசாரியார் அவன் எதிரே பெரும் ஆரவாரத்துடன் வந்து, ‘‘போகாதே! போகாதே! இப்போது என்னோடு யுத்தம் செய். பிறகு நீ அப்பால் போ!’’ என்று கூறி அவனைத் தடுத்தார்.

துரோணாசாரியார் சொன்னதைக் கேட்டு, சாத்தகி அவரைப் பார்த்து,‘‘ஐயனே! பிராமணர்களை எதிர்த்துக் கொடுமையாகப் போர் செய்வது எனக்குத் தகுதியில்லை!’’ என்றான்.

ஆனால், துரோணாசாரியார் சாத்தகியை விடவில்லை. மீண்டும் அவனைப் போருக்கு வலுக்கட்டாயமாக அழைக்கவே அவனும் ஒப்புக் கொண்டான்.

அதன்பின் அவர்கள் இருவரும் தங்கள் விற்களை ஒருவரையொருவர் நோக்கி எதிரிட்டு வளைத்தார்கள்.

கொடிய அம்புகளையும் ஒருவர் மேல் ஒருவர் மாறி மாறிப் பிரயோகித்தார்கள். இருவரும் தங்களுடைய தேரையும், வில்லையும், மற்றவைகளையும் அந்த யுத்தத்தில் எதிரம்புகளால் இழந்தார்கள். கடைசியாக அவர்கள் வெகுநேரம் இடைவிடாது போர் செய்து களைத்துப் போனார்கள்!

முனிவராகிய துரோணாசாரியார் அப்படிச் சோர்ந்து நிற்கையில், அரசனாகிய சாத்தகி தனது களைப்புத் தீர்ந்து துரோணாசாரியாரை விட்டுவிலகி வேறொரு வில்லை எடுத்துக் கொண்டு, வேறொரு தேரிலேறி பகைவர் சேனையைக் கலக்கிக் கொண்டே மேலும் முன்னேறிச் சென்றான். ஆமாம். கிரகணம் பிடிக்கப்பட்ட சூரியன் அதிலிருந்து விடுபட்ட பின்பு, முன்னைவிட அதிக ஒளியுடன் இருளைக் கிழித்துக் கொண்டு மேலே செல்வது போல, களைத்துப் போன சாத்தகி அந்தக் களைப்புத் தீர்ந்தவுடன், பகைவர் சேனையைக் கலக்கிக் கொண்டே விசேஷகாந்தி உடம்பில் ஜொலிக்க மேலே சென்றான்!

அப்போது துச்சாதனன், பதினெட்டுத் தேசங்களிலிருந்தும் உதவிக்கு வந்த சதுரங்கச் சேனையோடு சாத்தகியின் எதிரே வந்து தடுத்துப் போரிட்டான். அதுகண்டு உக்கிரமடைந்த சாத்தகி தொடுத்துவிட்ட அம்புமழையால் துச்சாதனன் உறுதிநிலை கலங்கித் தோற்று, தனது இரண்டு பாதங்களும் சிவக்க பூனைபோல் ஒடுங்கித் தந்திரமாகத் தப்பியோடிச் சென்றான்!

சாத்தகி அப்படி தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் வென்றபடி, தனது சேனை நிழல் போல விடாமல் தன்னைத் தொடர்ந்து வர அர்ச்சுனன் இருக்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

சாத்தகியை அனுப்பிய பின்பும் தருமர், அர்ச்சுனன் விஷயத்தில் உண்டான சந்தேகத்தால் மிகவும் மனம் வருந்தினார். அந்த வருத்தத்தோடு எதிரே நின்றிருந்த பீமனின் முகத்தை அன்போடு பார்த்து தருமர், "பகை அரசர்களின் சேனாசமுத்திரத்தின் நடுவிலே உன் தம்பி அர்ச்சுனனும், என் தலைவன் கண்ணபிரானும் என்ன ஆனார்களோ தெரியவில்லை. சாத்தகியை அவர்களிடம் அனுப்பினேன். அவனும் இதுவரைத் திரும்பி வரவில்லை. சூரியனும்

அஸ்தமிக்கத் தொடங்கிவிட்டான். கண்ணபிரானுடைய சங்கமும் யுத்தகளத்திலே அதிர்ச்சியுண்டாக்குகின்ற பேரொலியை அதிகமாக ஒலிக்கின்றது. ஆகையால், போரில் வெற்றி கிடைக்க நீயும் அங்கே செல்!'' என்று கட்டளையிட்டார்.

தமையனாரின் கட்டளைப்படி பீமன் அவரிடம் விடைபெற்று அக்கணமே வேகமாகச் சென்றான். அவனைத் தொடர்ந்து முன்னும் பின்னும் அநேக அரசர்களும், சதுரங்கச் சேனாவீரர்களும் சென்றார்கள்.



பீமன் அப்படிச் செல்கையில் தன்னை வந்து எதிர்த்த கலிங்கம், மகதம், மாளவம், கோசலம், கடாரம், தெலுங்கம், கன்னடம், யவனம், சோனகம், சீனம், குலிங்கம், ஆரியம், பப்பரம், கொப்பளம் ஆகிய தேசத்து வீரர்களையெல்லாம் கொன்று வீரசொர்க்கம் அனுப்பிவிட்டு, பகைவரின் வியூகத்துக்குள் விரைவாக முன்னேறிச் சென்றான்.

மேலும், அப்போது துரியோதனனுடைய தம்பிமார்கள் நடுநடுவே வந்து பீமனை எதிர்த்துப் போரிட்டார்கள். அவர்கள் பீமன்மேல் அம்புகளையும், பல்லம் என்னும் அம்புவிசேடங்களையும், வாள்களையும், வேல்களையும், சூலங்களையும் மற்றும் பலவிதமான ஆயுதங்களையும் அளவில்லாமல் பிரயோகித்து யுத்தம் புரிந்தார்கள். அப்படிச் செய்த போரில் மிகவும் உக்கிரமாகப் போர் செய்த விந்தன் விந்தரன் ஆகிய துரியோதனனுடைய இரண்டு தம்பிமார்களும் பீமனால் தங்களுடைய தேர்களையும், குதிரைகளையும், தேர்ப்பாகர்களையும் இழந்தார்கள். கடைசியாக அவர்கள் இருவரும் பீமனால் தங்கள் தலைகள் துண்டித்து மேகங்களைச் சிதறடிக்கவும், உடம்பிலிருந்து பீறிட்ட ரத்த வெள்ளம் கடலில் கலக்கவும் மாண்டார்கள்.

பின்னும் பீமனை எதிர்த்து உக்கிரமாக குண்டலபோசி, தீர்க்கலோசனன், சித்தரசேனன் ஆகிய துரியோதனனுடைய தம்பிமார்கள் மூவர் போரிட்டார்கள். அவர்கள் தங்களை எமனே வந்து தடுத்துப் போரிட்டாலும் தோல்வியடையாத வீரர்கள். ஆனால், அந்த மூவரும் பீமனை எதிர்த்து யுத்தத்தில் தங்கள் உயிரையிழந்தார்கள்!

அந்த மூவரும் இறந்த பின்பு, திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளுள் முப்பதுபேர் பீமனை எதிரிட்டுத் தடுத்துப் போரிட்டார்கள். அவர்களும் முடிவில் தங்கள் ஒவ்வொருவருக்கும் பீமன் தனித்தனியே பிரயோகித்த ஒவ்வொரு அம்பால் இறந்தார்கள்.

வாயுகுமாரனாகிய பீமனுடைய விற்போர் வல்லமையைத் தேர்ந்தவர்கள் வேறு யார் இருக்கின்றார்கள்?

அவ்வாறு துரியோதனனுடைய முப்பத்தைந்து தம்பிமார்கள் தனது பாணங்களால் இறந்து போக, பீமன் எதிரியின் படை வகுப்புக்குள் அக்கினி போலக் கொடுமையாக மேலும் முன்னேறிச் சென்றான். அதனால் அப்போது நெருப்பின் முன்பட்ட இருள்போல துரியோதனனுடைய சேனாசமுத்திரம் சிதைந்து விரைவாக அழிந்தது!

பீமன் அப்படி கௌரவசேனையை அழித்துக் கொண்டே அர்ச்சுனன் இருக்கும் இடத்துக்குப் போவதைக்

கண்டதும் துரோணாசாரியார், 'ஏழு கடல்களின் நீரையும் முகந்து ஆரவாரித்துக் கொண்டு வானத்தில் எழுகின்ற மேகம் பெய்யும் மழை போல, இந்தப் பீமன் நமது படையின் எல்லா இடங்களிலும் வலிமையாகப் பாணப் பிரயோகம் செய்து, நமது சேனாவீரர்களை அழித்துக் கொண்டே போகின்றான். இவன் விஜயனோடு சேர்ந்துவிட்டால், பிறகு இவர்களை வெல்வது முடியாது. நமது சேனையும் இந்த இருவராலும் பெரிதும் கலக்கம் அடைந்துவிடும்!' என்று எண்ணினார்.

உடனே துரோணாசாரியார் பீமனை எதிரிட்டுத் தடுத்து யுத்தம் செய்ய முனைந்தார். அதுகண்டு பீமன் சாந்தமாக வில்லாசிரியரை நோக்கி, "ஆசாரியரே! உம்மோடு நான் போர் செய்வது நன்மை தருவதில்லை. அது நியாயமும் இல்லை. ஏனென்றால் நீர் எனக்குச் சிறந்த ஆசாரியர்! ஆகவே, உமது திருவடிகளை எனது தலைமேல் கொண்டேன்!" என்று சொல்லி, அவரை நமஸ்கரித்தான்.

ஆனால், துரோணாசாரியார் பீமனுடைய பேச்சைப் பொருட்படுத்தவில்லை. அவனுடைய வணக்கத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பீமன்மேல் தொடுப்பதற்காகப் பாணங்களை ஆராய்ந்தார். கைவில்லையும் வளைத்தார்!

அதுகண்டு பீமன் ஒன்றும் பேசவில்லை. அப்போது தன்மேல் வில்லாசிரியர் பிரயோகித்த அம்புகளுக்கு இலக்காகாமல் அவன் தந்திரமாக விலகினான். பின்பு, பீமன் தேரைவிட்டு இறங்கிச் சென்று துரோணாசாரியாரின் தேரைத் தனது இரண்டு கைகளாலும் தூக்கி, வானத்திலே போர்க்காண வந்து நிற்கும் தேவர்களும் அஞ்சி விலகும்படி மேல் நோக்கி வீசியெறிந்தான்!

தேவர்கள் அதனைப் பார்த்து, 'விந்தியமலை வளர்ச்சியடைந்து மேலெழுந்து தேவலோகத்துக்கு வந்துவிட்டது!' என்று எண்ணி, மிகவும் அஞ்சி நடுங்கினார்கள். மேக வரிசைகளும் வானத்தில் பறந்து வந்த துரோணருடைய ரதத்தால் நிலைகுலைந்தன. அப்போது ஆகாயத்தில் சென்ற துரோணாசாரியாரின் தேர் வேகமாக இறங்கித் தரையிலே வந்து விழுந்தது. அதனால் அந்தத் தேரின் பாகனுடைய உடம்பு நொறுங்கியது. பூமியும்

வலிமை குலைந்தது. அந்த வலிமை மிக்கத் தேரின் சக்கரங்கள் துளைபிளந்தன. தேர்க்குதிரைகளும் தலைசிதறின. அதுமட்டுமில்லை. துரோணாசாரியாரின் எலும்பும் முறிந்தது!

துரோணாசாரியாரை அப்படி ஜெயித்து பீமன் அப்பால் சென்றபோது, யமதூதர்களைக் காட்டிலும் வலிமைமிக்க வஞ்சகமான அநேகவீரர்கள் பீமனை வந்து வளைத்துக் கொண்டார்கள். அவர்கள் உலகம் முழுதும் அழுந்தும்படி சமுத்திரத்தால் யுகமாற்றம் ஏற்பட்டுவிட்டதோ என்று சொல்லும்படி அதிகமான ஆரவாரம் செய்தார்கள். மிகவும் கோபத்துடன் எட்டுத்திக்குகளிலும் தன் சேனைகள் சூழ வந்த அந்த வீரர்கள் எல்லோரும் பீமனை வளைத்துக் கொண்டு போரிட முனைந்தார்கள்.

அப்போது மேகங்களைவிட ஐந்து மடங்கு அதிகமாக எக்காளங்கள் ஒலித்தன. உட்சுழிந்த சங்கவாத்தியங்கள் ஒலித்தன. பேரிகைகள் ஒலித்தன. ஊதுகொம்புகள் ஒலித்தன. மற்றும் அநேக பெரிய வாத்தியங்கள் கிளர்ந்து ஒலித்தன. அந்தப் பேரோசைகளுடன் வந்து பூரி என்னும் அரசனும், அவந்தி தேசத்து ராஜனும், முன்னே வந்த வீரர்களுடன் சேர்ந்து கொண்டு பீமனை எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள்.

பீமன் அதுகண்டு அடங்காச்சினம் கொண்டான். தனது கடுங்கோபத்துடன் அவன் கொடிய கணைகளை மழையாக அவர்கள் மேல் பிரயோகித்து, அவர்களை வலிமையோடு எதிர்த்து நின்று போர் புரிந்தான். பீமனின் அந்தக் கடுமையான பாண வர்ஷத்தால் அவர்கள் எல்லோரும் பயந்து, இறந்தவர்கள் போக மிஞ்சியவர்கள் தோற்றோடிப் போனார்கள்.

அந்தச் சமயத்தில் கர்ணன் பீமனை எதிர்த்து யுத்தம் செய்ய வந்தான். பீமனை எதிர்த்துத் தோற்றோடியவர்கள், அதுகண்டு அவனோடு மீண்டும் போர் செய்ய எண்ணி வந்து சேர்ந்தார்கள். அவர்களின் அதிக பாரத்தால் பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷன் முதலிய பெரும்பாம்புகள் தலைவருந்திச் சுழன்றன. திக்குகள் இது என்ன என்று திகைத்து கலக்கம் அடைந்தன. சமுத்திரங்கள் அவர்களின் உக்கிரத் தன்மையைப் பார்த்துத் தாபம் கொண்டன. அண்டகோளத்தின் மேலிடங்களும் அவர்களுடைய

ஆரவாரத்தால் உண்டான அதிர்ச்சியால் வெடிபட்டுப் பிளந்தன!

கர்ணனும் பீமனும் ஒருவர் மேல் ஒருவர் கடுங்கோபம் கொண்டார்கள். அவர்கள் மந்திரபலத்தோடு வரமாகப் பெற்ற கூரிய அம்புகளை ஆராய்ந்து எடுத்து வில்லிலே பூட்டிக் கொண்டு, தங்கள் தேர்களை ஒருவர் முன் ஒருவர் செலுத்தி நெருங்கினார்கள். பின் ஒருவர் மேல் ஒருவர் பாணப் பிரயோகம் செய்தார்கள். செங்கடம்ப மரங்கள் எல்லா இடங்களிலும் மலர்ந்தது போல, ரத்தவெள்ளம் தம் உடம்பில் எங்கும் பரவ அந்த இருவரும் யுத்தம் புரிந்தார்கள். அதனால் அவர்கள் தங்கள் உடம்பும் செந்நிறம் அடையப் பெற்றார்கள். அவர்கள் உடம்பிலிருந்தும் கொடூரமான யுத்தத்தால் பெருகிய ரத்தப் பெருக்குகள் யுத்தபூமியின் எல்லா இடங்களிலும் அலைவீசிக் கொண்டு வழிந்தோடின!

அப்படிப் போர் செய்யும் போது, பீமன் பிரயோகித்த பாணங்களால் கர்ணனுடைய தேர்க்குதிரைகள் நான்கும் இறந்து விழுந்தன; தேர்க்கொடி முறிந்தது; தேர்ப்பாகன் தலை துண்டிக்கப்பட்டு மாண்டான்; ரதமும், ரதத்தின் சக்கரங்களும் பொடிப்பொடியாயின; வலிய கவசமும் அதிகமாகத் துளைப்புண்டது; பூர்ணசந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையும் அழிந்து பிறைச் சந்திரன் போலாகியது; அதனால் கர்ணனுடைய எதற்கும் சலிக்காத மனமும் கலக்கமடைந்து சோர்ந்தது.

தனது தேர் அழிந்ததும் கர்ணன் பீமனுடைய அம்புகளுக்குத் தப்பித் தோற்றோடத் தொடங்கினான். அதுகண்டு கர்ணனுடைய மகனாகிய விருஷசேனன் அக்கணமே தனது தேரை தந்தையின் முன் கொண்டு வந்து நிறுத்தி, அவனை ஏற்றிக் கொண்டான். மகனின் தேரில் ஏறிக் கொண்ட கர்ணன், மறுகணம் வெள்ளத்தைத் தடுப்பதற்கு அணைகட்ட முயல்பவன் போல பீமனுடைய கண்களுக்கு எதிராக மீண்டும் யுத்தத்துக்குப் போனான்.

மீண்டும் போரிட வந்த கர்ணனை எதிர்த்து பீமன் கொடிய பாணங்களை அவன் மேலும், அவனுடைய தேரின் மேலும் வர்ஷித்தான். அதனால் கர்ணனுடைய தேர் அழிந்தது. கர்ணனும், அவன் மகன் விருஷசேனனும் உயிருக்குப் பயந்து தப்பியோடிப் போனார்கள்.

துரியோதனன் கர்ணனுடைய தோல்வியைக் கண்டான். அதனால் அவன் பெரிதும் கோபித்து, தனது கண்களைப் போன்ற இரண்டு தம்பிமார்களை நோக்கி, "நீங்கள் வேகமாகச் சென்று கர்ணனுக்குத் துணை செய்யுங்கள்!" என்று கூறி, ஒரு க்ஷணத்திற்குள் அனுப்பி வைத்தான்.

உடனே அவர்கள் கர்ணனுக்கு உதவி புரிவதற்காக பீமனை வந்து எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள். பீமனை எதிர்த்து அவர்கள் வில்யுத்தம் புரிந்தார்கள். கடைசியில் அவர்கள் பீமனுடைய அம்புகளால் தங்களுடைய உடம்பு அழிபட்டு வீரசொர்க்கத்துக்குப் போனார்கள்.

தனது கண்களுக்கு முன்னாலேயே தனக்குத் துணையாக வந்த துரியோதனனுடைய தம்பிமார்கள் இருவரும் பீமனால் அழிந்ததைக் கண்டதும், கர்ணன் துரியோதனனிடம் போய் அவன் முகம் நோக்கி, "மன்னாதி மன்னா! உனது தம்பிமார்கள் இருவரைப் பீமன் என் கண்ணெதிரேயே கொன்றுவிட்டான். அப்படிச் செய்த பீமனுடைய கிரீடம் தரித்த தலையை நான் இப்போதே துண்டிப்பேன். நான் அப்படிச் செய்யாமல் போனால், எனது அற்பமான தலையை அந்தப் பீமனுடைய கையால் இழப்பேன்!" என்று சபதமிட்டு, ஒரு தேர்மேல் ஏறினான்.

வேறொரு தேர்மீது ஏறிக் கொண்ட கர்ணன் உக்கிரமாகப் புறப்படுகின்ற சூரியன் போல, வளைத்த வில்லும் தொடுக்கும் அம்புகளும் எடுத்துக் கொண்டு பீமனை எதிர்த்துப் போரிட விரைந்து வந்தான். அப்போது அவன் மனத்தில் கோபம் கொப்பளித்தது. புருவங்கள் கோபத்தால் நெறிந்தன. கண்களிலே தீப்பொறிகள் பறந்தன. மிகவும் கோபாவேசத்துடன் போருக்கு வந்த கர்ணன், பீமனை நெருங்கி வந்து, "இனி மேல் இந்தப் பூலோகம் அரவக்கொடியுடைய துரியோதனனுக்கே சாசுவதமாகி விடும் என்று எல்லோரும் சொல்லும்படி யுத்தத்தில் உன்னைக் கொல்வேன்!" என்று வீரவாதம் பேசினான்.

பின்பு, கர்ணனும் பீமனும் ஒருவரையொருவர் எதிர்க்கத் துணிந்தார்கள். அப்போது பீமன் தேகபலத்தால் காற்றைப் போல் விளங்கினான். சூரிய மைந்தனாகிய கர்ணன் கோபத்தால் யமனைப் போல் தோன்றினான். பிறப்பிலேயே சம்பந்தமுள்ளவர்கள் அச்சம்பந்தம்

உடையவர்களுக்கு உண்டான குணங்களையும் கொள்வார்கள் என்பதை அவர்கள் இருவரும் அப்போது நிருபணம் செய்தார்கள்!

கர்ணனைப் போலவே சிங்கக்கொடியுடைய பீமனும் அவன் முகத்தை நோக்கி, ''நீ என்னோடு நியாய வழியில்லாத கொடிய யுத்தத்திலே வீராவேசம் கொண்டாய். அப்படி நீ போர்த் தொடங்கினாய் என்றாலும், உன்னை ஜெயிப்பது மட்டுமே எனது கடமை. ராஜசபையிலே முன்பு சொன்ன சபத வார்த்தைப்படி உன்னைக் கொல்வது என் தம்பி அர்ச்சுனனின் கடமை!'' என்று சொல்லி, தனது கட்டமைந்த வில்லை வளைத்தான்.

பீமனும் கர்ணனும் எண்ணிக்கையில்லாத கொடிய அம்புகளைப் பிரயோகித்து, ஒருவரையொருவர் எதிர்த்துக் கடும்போர் புரிந்தார்கள். அதனால் அவர்கள் இருவரும் சோர்ந்து போனார்கள். அந்த நேரத்தில் கர்ணன் தனது சோர்வையும் பொருட்படுத்தாமல், பீமன்மேல் அதிக கோபத்துடன் பாணங்களை வர்ஷித்தான். பீமனும் அதனால் சோர்வை மறந்து எதிரம்புகளை அவன்மேல் தொடுத்தான். தன்மீது வந்த பீமனுடைய அம்புகளைக் கர்ணன் தனது அம்புகளால் அழித்தான். மீண்டும் கர்ணன் உக்கிரமாகப் பாணங்களை பீமன்மேல், வர்ஷித்தான். அப்படி வர்ஷித்த கர்ணனுடைய அம்புகள் பீமனை மிகவும் துன்புறுத்தின. மேலும், கர்ணன் தனது கொடிய அம்புகளால் பீமனுடைய தேரையும், தேர்க்குதிரைகளையும், சிங்கக் கொடியையும் சின்னாபின்னமாக்கிப் பிளந்து தள்ளினான்.

தேரழிந்ததால் பீமன் தரையில் நின்று கொண்டு கர்ணனோடு யுத்தம் பண்ணினான். கர்ணன் அச்சமயம் அவன்மேல் பயங்கரமான வேலாயுதத்தை வீசினான். தன்னை நோக்கி வந்த அந்த வேலாயுதத்தை பீமன் தனது அம்புகளால் இரண்டு துண்டாக்கி அழித்தான். பின்பு, தீப்போல் அழிப்பதாகிய பதினாறு முழமுள்ள ஒரு பெரிய கதாயுதத்தை பீமன், கர்ணன் மேல் பிரயோகித்துச் சிரித்தான்.

பீமன் எறிந்த கதாயுதத்தால் கர்ணனுடைய தேரும், தேர்க்குதிரைகளும் அழிந்தன. கர்ணனுடைய தேர்ப்பாகனும் தலைபிளந்து மாண்டான். அதனால் தோற்ற கர்ணன் மீண்டும் ஓடத் தொடங்கினான்.

கர்ணன் தன்னிடம் தோற்றோடியதும், பீமன் வேறொரு தேரை வரவழைத்து அதில் ஏறிக் கொண்டான்.

வெகுதூரத்திலிருந்து கொண்டு கர்ணனும் பீமனும் செய்த போரைப் பார்த்துக் கொண்டிருந்த துரியோதனன், அந்தப் போரில் கர்ணன் தோற்றோடுவதைக் கண்டான். உடனே தனது தம்பியாகிய துர்முகனை, பீமனை எதிர்த்து யுத்தம் புரியும்படிக் கட்டளையிட்டு அனுப்பினான்.

துர்முகன் அக்கணமே விட்டில் பூச்சி விளக்கின் சுடரை வளைத்துக் கொண்டது போல, பீமனை வந்து வளைத்துக் கொண்டு கொடிய விற்போர் புரிந்தான். காளமேகம் மழை பொழிவது போல, பீமன் மேல் அவன் பாணங்களைத் தூவினான். ஆனால், பீமன் கையால் தொடுத்த அம்புகளுக்குப் பலியாகி கண்ணிமைக்கும் பொழுதுக்குள் இறந்து வீரசுவர்க்கம் சேர்ந்தான்!

துரியோதனனுடைய தம்பி துர்முகன் பீமனால் இறந்ததும், திரும்பவும் கர்ணன் விரைந்து வந்து பீமனை எதிர்த்து யுத்தம் செய்தான். அப்போது அவன் ஒரு தோமராயுதத்தைப் பீமன்மேல் வீசினான். உடனே பீமன் அந்தத் தோமராயுதத்தை நோக்கிக் கொடிய அம்பைப் பிரயோகித்தான். ராகுபோல் பயங்கரமாக விரைந்து சென்ற பீமனுடைய அந்த அம்பு தோமராயுதத்தைத் துண்டாக்கி அழித்தது.

அதுகண்டு துரியோதனன் மேலும் தனது தம்பிமார்கள் இருவரை பீமனை எதிர்த்துப் போர் செய்யும்படி அனுப்பினான். அவர்கள் வந்து பீமனோடு போரிட்டு, வெகுசீக்கிரம் அவனது அம்புகளால் இறந்தார்கள். பிறகு துரியோதனன், விகர்ணன் முதலிய தனது ஐந்து தம்பிமார்களை பீமனை எதிர்த்துப் போர் புரிய அனுப்பினான். அவர்களும் அக்கணமே விரைந்து வந்து பீமனோடு யுத்தம் செய்தார்கள். அச்சமயம் பீமன் தனது அர்த்தசந்திர பாணங்களால் விகர்ணனைத் தவிர மற்ற நால்வரையும் உடம்புச் சிதைத்துக் கொன்றான்!

தன்னுடன் பீமனை எதிர்த்துப் போர் புரிய வந்த தனது நான்கு தம்பிமார்களும், அவனால் அழிந்தது கண்டதும் விகர்ணன் ஆத்திரம் அடைந்தான். அவன் கொடுங்

கோபத்துடன் பீமனை நோக்கித் த்னது வில்லை வளைத்தான்.

உடனே பீமன் அவனைப் பார்த்து, ''தம்பி! நான் சொன்ன சபதம் தவறுவதானாலும், உன்னோடு போர் செய்ய மாட்டேன். நீ அப்பால் போ!'' என்றான்.

மீண்டும் பீமன் விகர்ணனை நோக்கி, ''தீப்போல் கொடுஞ்சொற்களையுடைய துச்சாதனன், முன்பு ராஜசபையிலே நிந்தனையாக அநேக வார்த்தைகளைப் பேசினான். அப்போது அங்கு நீ நடுநிலைமையாகப் பேசினாய்! அத்தனைச் சிறந்த நாக்கையுடையவனே! கொடிய சாப வார்த்தைப் போலத் தவறாமல் அழிக்கவல்ல அம்புகளை நான் உன்மேல் பிரயோகித்தாலும், அவை உன்னைக் கொல்லுமோ? உலகத்தவர்கள் அறிந்த குற்றத்துக்கு உள்ளாகாத உனது நீதிநெறியைத் தெரிந்திருந்தும், எனது மனம் உன்னோடு போர் செய்யச் சம்மதிக்குமோ? ஆகையால், வேறு யாருடனாவது நீ ஆராய்ந்து போர் செய்!'' என்று கூறினான்.

ஆமாம். சிறந்த நல்லொழுக்க முறையை உணர்ந்தவர்கள், தமக்குப் பிறர் செய்த நன்மையை மறந்து அவர்க்குத் தீங்கு செய்வார்களோ?

பீமன் சொன்ன வார்த்தைகளை விகர்ணன் பொருட்படுத்தவில்லை. அவன் தனது வில்லை வளைத்து பீமன் மேல் சில கொடிய பாணங்களைப் பிரயோகித்தான்.

தன்மேல் விகர்ணன் அம்பு தொடுத்த பின்பும் பீமன், அவனை எதிர்த்து யுத்தம் செய்யவில்லை. அவன் பேசாமலேயே இருந்தான். அதனால் விகர்ணன் அவனைப் பார்த்து, ''எமது தமையன்மார்கள் எல்லோரும் உமது கையினால் பிரயோகிக்கப்பட்ட அம்புகளால் இறந்து போனார்கள். அப்படியிருக்க, உமது முன்னே நான் ஒருவன் மட்டும் பிழைத்திருப்பேனோ? எனவே போருக்கு வருவீராக! நீண்ட வில்லை வளைப்பீராக!'' என்றான்.

திரிபுரம் எரித்த சிவபெருமான் போல் பல பராக்கிரமங்களில் சிறந்த பீமன், அது கேட்டு மிகவும் சிரித்தான். பிறகு, வெறுப்போடு விகர்ணனின் எதிரே

சென்று, அவன்மேல் வலிமையான அம்புகளைத் தொடுத்துவிட்டான்.

தங்களுக்குத் தாங்களே சமமாக விளங்குகின்ற விகர்ணனும் பீமனும் அம்புகளைக் கொண்டு கொடிய போரைச் செய்தார்கள். அப்போது அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் பிரயோகித்த அம்புகளை எதிரம்புகளால் தடுத்தார்கள். வீராவேசத்தால் ஆரவாரம் செய்தார்கள். வீரவாதம் கூறிப் போர் செய்து, அதனால் களைப்படைந்து சற்றுநேரம் பேசாமல் சோர்ந்து நின்றார்கள்.

மீண்டும் அவர்கள் விற்போரைத் தொடங்கினார்கள். விகர்ணன் பீமன் மேல் சுடுசரங்களை ஏவினான். அவன் தொடுத்த அம்புகள் பீமனுடைய உடம்பில் தரித்த ரத்தினகவசத்தைப் பிளந்து தள்ளின; பீமனுடைய தேரில் பறந்த சிங்கக் கொடியை அறுத்தன; பீமனின் தேரையும் கைவில்லையும் அழித்தன.

அதனால் பீமன் மிகவும் கோபித்தான். உடனே நீண்ட அர்த்தசந்திர பாணத்தை விகர்ணன்மேல் அவன் வர்ஷித்தான். அக்கணமே பீமனுடைய பாணம் சென்று, காந்தாரியின் மனம் வேதனைப்படும்படி விகர்ணனின் கிரீடம் தரித்த தலையைத் துண்டித்தது! விகர்ணன் மாண்டான்!

விகர்ணன் மாண்ட பின்பு, பீமனை வந்து எதிர்த்த பல. வீரர்களும் அவனால் இறந்தார்கள். அப்போது மீண்டும் வந்து எதிர்த்த கர்ணனையும் தனது அம்புகளால் ஜெயித்து, பீமன் பகைவர் சேனைக்குள் மேலும் முன்னேறிச் சென்றான்.

வேகமாக பகைவரைக் கண்டவிடத்திலெல்லாம் ஜெயித்துக் கொண்டே சென்ற பீமன், பேய்க் கூட்டங்கள் கூத்தாட சாத்தகியிடம் போய்ச் சேர்ந்தான். அதன்பின்பு நெருப்பும் காற்றும் கலந்தது போல, பீமனும் சாத்தகியும் ஒன்றாகச் சேர்ந்து, ரத்தச் சேற்றில் முழுகிய கொடிய யுத்தபூமியில் நின்ற அர்ச்சுனனை அடைந்தார்கள்.

அவ்வாறு சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று சுடர்களும் கூடியெழுந்தது போல, பீமனும் சாத்தகியும் அர்ச்சுனனும் ஒன்றாக யுத்தபூமியில் கூடியபோது, முன்பு

தோற்றோடிய பகை அரசர்கள் எல்லோரும் திரும்பி வந்து போரிட அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அப்போது சாத்தகியும் பூரிச்ரவசுவும் ஒருவரை யொருவர் பகைத்துக் கொடிய வில்லை வளைத்து அம்பு தொடுத்தார்கள். அச்சமயத்தில் அந்த இரண்டு பேருடைய தேர்களும் எதிர்த்துப் போய் நெருங்கின. தேரை அருகே செலுத்தி அவர்கள் செய்த போரில், ஒருவர்க்கொருவர் தொடுத்த அம்புகளால் அவர்களுடைய இரண்டு விற்களும் துண்டித்து விழுந்தன. அதனால் அவர்கள் தேரைவிட்டு இறங்கி, அதுவரை அம்பு தொடுத்த தங்களுடைய பெரிய கைகளைத் தட்டிக் கொண்டு மற்போர் செய்வதற்கு முயன்று நின்றார்கள்.

பூரிச்ரவசு சாத்தகியை மல்யுத்தத்தில் வலிமையாகத் தாக்கி, அவனைக் கீழே தள்ளிக் கொல்ல முனைந்தான். கண்ணபிரான் அதைக் கண்டதும் அர்ச்சுனனைப் பார்த்து, "மைத்துனா! இந்தப் பகையரசன் பூரிச்ரவசுவின் தலையை இக்கணமே துண்டித்துவிடு!" என்று கட்டளையிட்டான்.

கண்ணபிரான் சொன்னதைக் கேட்டு, அர்ச்சுனன் அவனை நோக்கி, "இரண்டு பேரும் தனியாக எதிர்த்து செய்யும் யுத்தத்தில், இளைத்தவனுக்கு உதவியாக வேறொருவன் போர் செய்வது நீதியில்லை!" என்று மறுத்துச் சொல்லிவிட்டு, அவனை நமஸ்கரித்தான்.

அர்ச்சுனனுடைய வார்த்தைகளால் கண்ணபிரான் மிகவும் சீற்றமடைந்தான். தனது சீற்றத்தால் அர்ச்சுனன் மனம் நடுங்கும்படி தான் சொன்னதைத் திரும்பவும் கண்ணன் அவனிடம் சொன்னான்.

அதனால் இந்திரகுமாரன் கண்ணபிரானுடைய மனக்கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டு, பூரிச்ரவசுவின் வலிய தோள்கள் அறுபட்டு விழும்படி பாணம் பிரயோகித்தான்.

தேவேந்திர மைந்தன் பிரயோகித்த அம்பினால் பூரிச்ரவசு அக்கணமே தனது இரண்டு தோள்களும் துண்டிக்கப்பட்டு வலிமையிழந்தான். உடனே சாத்தகி சந்தோஷித்து, அவனைக் கீழே தள்ளித் தனது உடைவாளால் அவனுடைய தலையை வெட்டித் தள்ளினான்.

பூரிச்ரவசு வஞ்சகமாக சாத்தகியால் கொல்லப்பட்டதைக் கண்டதும் துரியோதனன், "இது ராஜ தருமமில்லை!" என்று சொன்னான்.

அதற்கு கண்ணபிரான் துரியோதனனை நோக்கி, "நேற்றையப் போரில் அபிமந்யுவை நீங்கள் ஜெயித்ததும், முதல்நாள் போரில் சுவேதனை பீஷ்மர் கொன்றதும் ராஜதரும முறையில் தவறாமல் செய்தீர்கள், இல்லையா?" என்று கேட்டுச் சிரித்தான்.

பிறகும் அர்ச்சுனன் யுத்தத்தில் வலிமையோடு நின்றான். அதனால் பகைவர்கள் அவனுக்குப் பயந்து ஓடிப் போனார்கள். அப்படி அஞ்சியோடாமல் எதிர்த்தவர்களை அர்ச்சுனன் தனது பாணங்களால் கொன்றான். அர்ச்சுனன் மேலும் பகைவர்களைக் கொன்று சொர்க்கத்துக்கு அனுப்பியபடியே, பீமனோடும் சாத்தகியோடும் கண்ணனோடும் பகைவரின் சேனைக்குள் புகுந்து காற்றெனச் சென்றான்.

அப்போது கௌரவசேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும், "இனி வெகு சீக்கிரத்தில் சூரியன் அஸ்தமித்துவிடுவான். அதுவரை ஜயத்ரதனை நாம் பாதுகாத்துவிட்டால், அர்ச்சுனன் இன்றைக்கே அக்கினிப் பிரவேசம் செய்து இறப்பது நிச்சயம். ஆகையால், ஜயத்ரதன் இருக்கும் இடத்துக்கு அர்ச்சுனன் போக முடியாதபடி, நீங்கள் எல்லோரும் அந்த இடத்தை இடைவிடாமல் நெருக்கிக் கொண்டு நில்லுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே, ஜயத்ரதனை அவர்கள் நிலவறையினுள் மறைத்து வைத்தார்கள்.

துச்சளையின் கணவனாகிய ஜயத்ரதன் வளையினுள் பதுங்கிய விஷசர்ப்பம் போல நிலவறையினுள் அதிக பயத்துடன் பதுங்கிக் கொண்டதனால், கண்ணபிரான் அவனைக் காணவில்லை. பூமாதேவியின் பாரத்தைப் போக்குவதற்காகவும், பாண்டவர்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்காகவும், அர்ச்சுனன் அழியாது வாழ்வதற்காகவும், திருப்பாற்கடலிலே ஆதிசேக்ஷ சயனத்திலே யோகநித்திரைச் செய்வதைவிட்டு கண்ணனாக அவதரித்த திருமால், ஜயத்ரதன் கண்களுக்குப் புலப்படாத காரணத்தை அந்தக் கணத்திலேயே தனது ஞான திருஷ்டியால் அறிந்து

கொண்டான். உடனே அவன் சூரியனை வஞ்சனையாக மறைக்க நினைத்து, தனது சக்கராயுதத்துக்குக் கட்டளையிட்டான். அவ்வளவுதான். கண்ணனின் சக்கராயுதம் சென்று கரியதொரு வடிவு கொண்டு சூரிய மண்டலத்தை மறைத்தது. அதனால் இயற்கையாகவே சூரியன் அஸ்தமித்தது போல, மேற்குத் திக்கெல்லாம் செவ்வானம் பரவியது.

இரும்பிலே ரசவாதத்துக்குரிய மகாமூலிகையின் சாற்றைப் பிழிவதால் அது பசும்பொன்னாவது போல, சாமான்ய ஞானத்தோடு கூடியிருந்த அர்ச்சுனன் வெகுசுலபமாக நிறைந்த தத்துவ ஞானமுள்ளவனாக ஆகும்படி அவனுக்குக் கீதோபதேசம் செய்தருளியவன் ஸ்ரீகண்ணபிரான். அப்படிப்பட்டவன் ஜயத்ரதனை அர்ச்சுனன் கொல்வதற்காகச் செய்த மாயத்தை அறிந்து கொள்ளாமல், பகைவர்கள் உண்மையாகவே சூரியன் அஸ்தமித்து விட்டதாக நினைத்தார்கள். அதனால் அந்த மன்னர்கள் யாவரும் ஜயத்ரதனை நிலவறையிலிருந்து வெளியே அழைத்து வந்தார்கள். பிறகு, அவர்கள் அவனை அர்ச்சுனன் முன்னே அழைத்துச் சென்று நிறுத்தினார்கள்.

உடனே கண்ணன் அர்ச்சுனனைப் பார்த்து, "மைத்துனா! சிந்துதேசத்து அரசனாகிய இந்த ஜயத்ரதனுடைய தந்தை வ்ருத்தக்ஷத்ரன். அவன் இவனைப் பெற்றபோது தன் மகனின் தலையைத் தரையிலே விழச் செய்தவனுடைய தலைப் பொடிப் பொடியாகும்படி வேண்டித் தவமிருந்தான். அப்படியே ஆகாசவாணி வரம் கொடுக்கவும், பின்பு மகனுக்கு அவன் பட்டாபிஷேகம் செய்தான். அதன் பிறகு காட்டுக்குப் போய் ஸ்மந்தபஞ்சகம் என்னும் மடுவின் கரையிலே தன் மகனின் நல்வாழ்வுக்காக அரிய தவத்தைச் செய்து கொண்டிருக்கின்றான். ஆதலால் நீ இந்த ஜயத்ரதனின் தலையைத் துண்டித்து நேரே தரையில் தள்ளாதே. தக்க அம்புகளை ஒன்றன் மேல் ஒன்றாகத் தொடுத்து, அவற்றால் ஜயத்ரதனின் தலையை உடம்பிலிருந்து வேறாகத் துண்டித்து அப்பால் தள்ளி, சூரியன் அஸ்தமித்துவிட்டதாக நினைத்து தற்போது சந்தியாவந்தனத்துக்காக நீரைக் கையால் அள்ளிவிட்டுக் கொண்டிருக்கும் வ்ருத்தக்ஷத்ரன் கையில் விழச் செய். அப்படிச் செய்தால் தன் கையில் வந்து விழுந்த மகனின் தலையை அவன் தானே தரையில் எறிவான். அதனால்

அவன் தலைச் சுக்குநூறாக வெடித்துப் பொடியாகும். உன் தலைக்கு அபாயமும் நேராது. ஆகையால், உடனே நான் சொன்னதைச் செய்!'' என்று கூறிக் கட்டளையிட்டான்.

கண்ணபிரானுடைய வார்த்தைகளைக் கேட்டதும், தான் அப்படிச் செய்வது தருமமில்லை என்று அர்ச்சுனன் எண்ணினான். அதனால் அவன் கண்ணனிடம், "நான் இனி காண்டீபத்தை எடுத்து அம்பும் தொடுக்க மாட்டேன். சூரியாஸ்தமனத்திற்குள் ஜயத்ரதனைக் கொல்லாவிட்டால், அக்கினிப் பிரவேசம் செய்வேன் என்று சொன்ன சபதமும் தவற மாட்டேன்!'' என்று சொல்லிவிட்டு, தேரிலிருந்து இறங்கி அக்கினியுள்ள இடத்துக்குச் சென்றான்.

நெருப்பின் அருகே சென்ற அர்ச்சுனன், "நான் இனி அக்கினிப் பிரவேசம் செய்வேன்!'' என்று சொல்லி, அக்கினியை வலம் வரத் தொடங்கினான்.

அர்ச்சுனனுடைய செய்கையைக் கண்டதும் கண்ணபிரான் அளவற்ற கோபம் அடைந்தான். அக்கணமே அவன் அர்ச்சுனனிடம் போய்த் தன் கோபத்தைக் காட்டி, "நான் சொன்னதைச் செய்!'' என்றான்.

அர்ச்சுனனால் அதற்குமேல் கிருஷ்ணனுடைய சொல்லைத் தட்ட முடியவில்லை. அவன் கிருஷ்ணனோடு வந்து தேரில் ஏறிக் கொண்டான். மறுவினாடியே அவன் ஜயத்ரதன்மேல் அம்பு தொடுப்பதற்கு மனம் கொண்டான்.

உடனே முன்பு சிவபெருமானிடம் வரமாகப் பெற்ற வில்லை எடுத்து வளைத்து, அர்ச்சுனன் ஜயத்ரதன் மேல் ஓரம்பைப் பிரயோகித்தான். அந்த அம்பு விரைந்து போய் ஜயத்ரதனின் தலையை அறுத்தது. அந்த வினாடியே அர்ச்சுனன் தொடர்ச்சியாகப் பாணப் பிரயோகம் செய்தான் அப்படித் தொடர்ந்து பிரயோகித்த அம்புகளால் அர்ச்சுனன் ஜயத்ரதனுடைய தலையைப் பூமியில் விழாதவாறு கொண்டு போய், வ்ருத்தக்ஷத்ரனுடைய கையிலே விழும்படிச் செய்தான். அக்கணமே தன் கையில் வந்து விழுந்த தனயனின் தலையைக் கீழே போட்ட வ்ருத்தக்ஷத்ரன் இறந்தான்!

அர்ச்சுனன் எப்படியும் அக்கினிப் பிரவேசம் செய்வான் என்றெண்ணி மகிழ்ந்திருந்த துரியோதனன், அர்ச்சுனனுடைய அம்புபட்டு ஜயத்ரதன் இறந்ததைக்

கண்டான். அதனால் அவன் மிகவும் வருந்தி, 'சூரியன் அஸ்தமித்ததால் ஜயத்ரதன் நிலவறையிலிருந்து வெளியே வந்தான். அப்படி வெளிவந்து கடைசியில் அர்ச்சுனனால் இறந்தான். கண்ணனுடைய தந்திரம் இது என்று உணராமல் மகன் இறந்த பின்பு வ்ருத்தக்ஷத்ரனும் இறந்தான். இனி இவர்களே இறந்த பின்பு, நம் பக்கத்தில் உயிரோடு இருப்பவர்களும் இறந்தவர்களேதான்!' என்று எண்ணினான்.

பின்பு கர்ணனும், சகுனியும், துரியோதனனும், மற்ற அரசர்களும், "சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு ஜயத்ரதனை அர்ச்சுனன் கொன்றான். அதனால் நேற்று சொன்ன சபதத்தை அவன் தவறிவிட்டான்!" என்று கூறிக் குதித்து ஆரவாரம் செய்தார்கள்.

அப்போது கண்ணபிரான் தனது சக்கராயுதத்தைச் சூரியனைவிட்டு விலகச் செய்தான். அச்சமயம் சூரியன் அஸ்தமிப்பதற்கு இன்னும் ஒரு பனைமரத்தளவு இடங்கொண்ட பொழுது இருந்தது!

சேனையில் உள்ளவர்கள் எல்லோரும் அதுகண்டு, "அஸ்தமிப்பதற்கு முன்னே சூரியனை ராகு அல்லது கேது விரைவாக வந்து விழுங்கிப் பின்பு உமிழ்ந்தானோ? இல்லை, தன்மகன் அர்ச்சுனனைக் காப்பதற்காக தேவேந்திரன், சூரியனை மறைப்பதற்கு மேகங்களை அனுப்பினானோ? அல்லது கிருஷ்ணன் தன் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்தானோ? உண்மையாக அஸ்தமிப்பதற்கு முன்பு அஸ்தமித்ததுபோல் சூரியன் ஆனதற்குக் காரணம் என்ன? பெரியோர்களுடைய சிறந்த மனம் மாறினால் எந்தப் பொருள்தான் மாறுபடாது?" என்றார்கள்.

மீண்டும் அவர்கள், "பார்த்தசாரதியாகிய கண்ணபிரான் ஒரு தந்திரத்தால் வருணபகவானுடைய குமாரனான சுதாயுவின் உயிரைப் போக்கினான். பின்பு ஒரு மந்திரத்தை அர்ச்சுனனுக்கு உபதேசித்து, அதனால் அர்ச்சுனன் ஸஹஸ்ரபாஹுவைக் கொல்லும்படிச் செய்தான். அதன்பிறகு பகைவர் சேனை உடம்பு தெரியாமல் மயங்கி விழும்படி தனது பாஞ்சசன்னியத்தை முழங்கினான். இவை தவிர சூரியன் அஸ்தமிக்கும்படி பெரும் மாயத்தையும் செய்தான். ஆகையால், கண்ணபிரானுடைய உதவியை

பலவகையிலும் பெற்றுள்ள அர்ச்சுனன் ஜெயிக்காமல், யுத்தத்தில் ஜெயிக்கக் கூடியவர்கள் வேறு யார் இருக்கின்றார்கள்?'' என்று சொன்னார்கள்.

துரியோதனன் பின்னர், ''போரில் ஆயுதம் ஏந்த மாட்டேன் என்று முன்பு எனக்கு கண்ணபிரான் வாக்கு தத்தம் செய்தான். ஆனால், இன்றோ அவன் தனது சக்கராயுதத்தால் சூரியனை யுத்தகளத்தில் மறையச் செய்தான். இன்னும் இப்படி இந்தக் கண்ணன் எந்த அநீதிதான் செய்ய மாட்டான்? இனி, உண்மையாக சூரியன் அஸ்தமிப்பதற்குள் நான் பாண்டவர்கள் ஐவரையும் ஒன்றாகத் தாக்கிப் போரிட்டுக் கொல்வேன். இல்லையேல் அவர்களால் மாய்வேன். இந்த இரண்டில் ஒன்று நிச்சயம்!'' என்று வீரவாதம் செய்து கொண்டே, தனது சேனையோடு போய்ப் பாண்டவரைச் சூழ்ந்து கொண்டான்.

தங்களின் மகாராஜா கூறிய வார்த்தைகளைக் கேட்டு கௌரவசேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும், தாங்களும் தனித் தனியே வீரவாதம் பேசிக் கொண்டு போய், எதிர்ப்பக்கத்து வீரர்களோடு தனித்தனியாக நின்று யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள்.

துருபதராஜனும், சாத்தகியும், திரௌபதியின் ஐந்து குமாரர்களான விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், ஜயசேனன் ஆகியவர்களும் துரோணாசாரியாரோடு போரிட்டார்கள். துரியோதனனும், அவன் தம்பிமார்களும், பதினாயிரம் துணையரசர்களும் பீமனை எதிர்த்துப் போரிட்டு, அவனுடைய தேரையும் வில்லையும் அழித்தார்கள்.

தேரும் வில்லும் அழிந்த பின்பு பீமன், ஆயுதமில்லாமல் வெறுங்கையாலேயே கடும்யுத்தம் செய்தான். பீமன் எதிரிகளின் குதிரைகளை அவர்களுடைய குதிரைகளாலேயே தாக்கிக் கொன்றான். எதிரிகளின் தேர்களை அவர்களுடைய தேர்களாலேயே தாக்கி அழித்தான். அதுபோல் யானைகளை யானைகளாலேயே தாக்கிக் கொன்றான். பகைவீரர்களைப் பகைவீரர்களாலேயே தாக்கிச் சாகடித்தான்! அவ்வாறு திருமால் போல பீமன் தனது தோள்களின் வலிமையால் கௌரவ சேனா சமுத்திரத்தைக் கலக்கி வெற்றி தோன்றச் சிங்கநாதம் செய்தான்!

அப்போது தன்னை வந்து எதிர்த்து வெகுநேரம் கடும்போர் புரிந்த துரியோதனனுடைய தம்பிமார்களான பிருகனையும் சூசியையும் பீமன் கொன்று, ஒருவர் மற்றொருவரை அறியாதபடி அவர்கள் இருவரையும் வீரசொர்க்கத்துக்கு அனுப்பினான்.



கடோத்கஜனும், அவனுடைய குமாரனாகிய அஞ்சநபத்மனும் அசுவத்தாமனை எதிர்த்து தேவர்களுடன் அசுரர்கள் போர் செய்வது போல, யுத்தம் புரிந்தார்கள். சூரியனோடு காரிருள் பகைமை கொண்டால், அது பயன்படுமோ? அதுபோல அசுரர்களாகிய அவர்கள் பூதேவனாகிய அசுவத்தாமனை எதிர்த்து வெற்றி பெற முடியுமோ? அசுவத்தாமன் ஓரம்பினால் அஞ்சநபத்மனைக் கொன்று, அவனை வீரசொர்க்கத்தில் சேர்த்தான்!

தன் மகனை அசுவத்தாமன் கொன்றதைக் கண்டதும் கடோத்கஜன் கடும்கோபம் கொண்டான். அவன் மலைகளை எடுத்து அசுவத்தாமன்மேல் எறிந்து கொடூரமாக ஆரவாரித்தான்.

உடனே முருகக் கடவுளைப் போன்ற அசுவத்தாமன், பீமனின் கையில் பகாசுரன் பட்ட பாடெல்லாம் கடோத்கஜன் படும்படிச் செய்து, ஒரு கதாயுதத்தால் அவனை அடித்துத் தரையிலே தள்ளினான்.

அசுவத்தாமனுடைய கதாயுதத்தால் மூர்ச்சித்துத் தரையிலே விழுந்த கடோத்கஜன், மறுகணமே மயக்கம் தெளிந்து எழுந்தான். முன்னைவிட அதிகமாகக் கோபித்து ஆரவாரம் செய்தான். அதுகண்டு துரியோதனன் கர்ணனைப் பார்த்து, "இந்தக் கடோத்கஜனுடைய உயிரை இப்போதே ஒழித்துவிடு!" என்று கட்டளையிட்டான்.

அதற்கு கர்ணன், "அசுவத்தாமனுடைய கதாயுதத்தால் வருந்தித் தளர்ச்சியுற்றிருக்கும் இவன்மேல், இப்போது நான் அம்பு தொடுக்க . மாட்டேன். எனது அம்போ அர்ச்சுனனுடைய உயிரை வாங்குவதற்கு மிகவும் வேட்கை கொண்டுள்ளது. ஆகையால், இப்போதே அர்ச்சுனனைக் கொன்று, இந்தப் பூலோகம் முழுவதையும் தனியே நீ உரிமையோடு அரசாளும்படி நான் உனக்குத் தருவேன்!" என்று சொன்னான்.

அவர்களின் பக்கத்தில் நின்றிருந்த கிருபாசாரியார், கர்ணன் சொன்னதைக் கேட்டு அதிகமாகச் சிரித்தார். பிறகு கர்ணனை நோக்கி, "கர்ணா! அர்ச்சுனன் எதிரே வந்தால், அவனுக்குப் பயந்து புறமுதுகிட்டு ஓடுவாய். அவன் எதிரே வராதபோது, அவனை உனது அம்புக்கு இரையாக்குவதாக வீரவாதம் பேசுவாய். யுத்தத்தில் வல்லமையுள்ளவர்கள் தமது பெருமைக்கு மாசு ஏற்படும்படி தம் வலிமையைப் பற்றித் தாமே எடுத்துச் சொல்வார்களோ?" என்று கிருபாசாரியார் கூறினார்.

கிருபாசாரியார் கூறிய வார்த்தைகள் தனது காதுகளை மிகவும் வருத்தியதால் கர்ணன், அந்த க்ஷணத்திலேயே அர்ச்சுனனை எதிர்த்துப் போருக்குச் சென்றான். கர்ணன் அர்ச்சுனனால் யுத்தத்தில் தேரழிந்து அப்போது பலமுறைத் தோற்றோடினான். அச்சமயத்தில் அர்ச்சுனனால் பலகோடி அரசர்கள் இறந்தார்கள். அப்படிப்பட்ட அர்ச்சுனனுடைய வீரத்தைப் பற்றி முழுவதும் சொல்வதற்கு அரிது!

பின்பும் அந்தப் போர்க்களத்தில் அசுவத்தாமன் குந்திபோஜனின் மைந்தர்கள் இரண்டு பேரைத் தனது அம்புகளால் கொன்றான். அப்போது கண்ணனின் சக்கராயுதத்துக்கு மறைந்த தனது ஒளியின் எளிமையை எண்ணி, சூரியன் மிகவும் வெட்கப்பட்டு மேற்குக் கடலிலே போய் மறைந்தான்!

சூரியன் அஸ்தமித்ததும் துரியோதனனுடைய பழிச் செயலைக் காட்டிலும் கருமையான இருள் எங்கும் பரவியது. அப்போது துரியோதனன் விளக்குகளின் உதவியால் ராத்திரியிலும் யுத்தம் செய்ய நிச்சயித்து, பகைவர்களின் முன்னே எதிர்த்துச் சென்றான்.

இரவில் யுத்தம் செய்வதற்கு வசதியாக வெளிச்சம் வேண்டி துரியோதனன், தனது ஏவலாளர்களுக்கு விளக்குகளை ஏற்றும்படிக் கட்டளையிட்டான். கண்ணன் பகலில் தனது சக்கராயுதத்தால் சூரியனை மறைத்து இரவாக்கினான். அதற்கு மாறாக இப்போது துரியோதனன் விளக்குகளைக் கொண்டு இரவைப் பகலாக்கினான்.

தருமர் துரியோதனனுடைய எண்ணத்தை அறிந்தார். உடனே அவர் தமது சேனையிலும் விளக்குகளை ஏற்றச் செய்து, சங்குகளும் தாரைகளும் முழங்கப் போருக்குச் சித்தமாக நின்றார்.

அப்போது கர்ணன் வேகமாக வந்து அர்ச்சுனனை எதிர்த்துப் போரைத் தொடங்கினான். கிருதவர்மா தருமரோடு யுத்தம் செய்ய அவரைச் சமீபித்தான். துரோணாசாரியாரும் திருஷ்டத்யும்நனும் எதிர்த்துப் போரிட ஒருவரையொருவர் நெருங்கினார்கள். போர் செய்து இறப்பதற்குத் துணிந்து பீமனோடு துரியோதனன் கொடிய யுத்தம் செய்தான். சல்லியன் அம்பு தொடுத்து சதாநீகனுடன் போர் செய்தான். கடோத்கஜனோடு அசுவத்தாமன் போர் புரிந்தான்.

சூரியனுடைய ஒளியைக் காட்டிலும் ஏழுபங்கு அதிகமான வெளிச்சத்தை விளக்குகள் கொடுத்தன. யுத்த வாத்தியங்கள் யாவும் பேரோசை எழுப்பின. இருபக்கத்து அரசர்களும் அப்படி மாறுபட்டு கொடூர மனத்தோடு யுத்தம் பண்ணினார்கள்.

தன்னை வந்து யுத்தத்தில் எதிர்த்த கர்ணனைப் பார்த்து அர்ச்சுனன், "சூரியனோ மறைந்து விட்டான். இப்போது எனக்கு நான்கு வெள்ளைக் குதிரைகளும், அநுமக்கொடியும், உயர்ந்த தேரும் ஆகியவற்றை முன்பு கொடுத்த அக்கினியின் ஒளி தோன்றி விளங்குகிறது!" என்று வீரவாதம் கூறி, அவனுடைய உறுதிநிலைக் குலையும்படி அவன் மேல் பாணப் பிரயோகம் செய்தான்.

அவ்வாறு அர்ச்சுனன் பாணங்களைத் தொடுத்துவிட்டு கர்ணனுடைய தேரை அழித்தான்; தேர்க்கொடியை அறுத்தான்; தேர்க் குதிரைகளைக் கொன்றான். மேலும், தனது அம்புகளால் கர்ணனுடைய உடம்பைத் துன்புறுத்தினான். அதனால் கர்ணன் முன் போலவே தோற்றுப் புறமுதுகிட்டு ஓடினான்.

தருமர் தம்மை எதிர்த்த கிருதவர்மாவோடு வில்யுத்தம் செய்து, அவனுடைய தேரையும் குதிரைகளையும் மற்றவற்றையும் அழித்தார். கடைசியில் எல்லாவற்றையும் இழந்து ஸ்ரீராமபிரானுக்குப் புறங்கொடுத்து ஓடிய ராவணன் போல், கிருதவர்மா தருமருக்குப் புறமுதுகிட்டு ஓடிப் போனான்!

மீண்டும் மீண்டும் கர்ணன் பல தடவை வந்து அர்ச்சுனனை எதிர்த்து யுத்தம் செய்து தோற்றோடினான். அப்படியிருந்தும், கர்ணன் திரும்பவும் வந்து யுத்தம் செய்து அர்ச்சுனன்மேல் ஒரு வேலாயுதத்தை வீசினான். அக்கணமே அர்ச்சுனன் அந்த வேலாயுதத்தைத் தனது அம்புகளால் பொடியாக்கி, கர்ணனைத் துரத்தினான். கர்ணன் பழையபடியே உயிருக்குப் பயந்து ஓடிவிட்டான்!

முற்காலத்தில் வாயுதேவன் வேகமாகத் தாக்கியதால் மகாமேருகிரி சிகரம் முறிந்தது போல, சதாநீகனின் கொடிய அம்புப் பிரயோகத்தால் சல்லியன் இதயம் சிதைந்து கடைசியில் தோற்றோடிப் போய்விட்டான். அசுவத்தாமன் மூர்ச்சித்துத் தேரில் விழும்படி கடோத்கஜன் அவன்மேல் வலிமையோடு ஒரு வேலாயுதத்தைப் பிரயோகித்தான்.

பாண்டவ சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் கௌரவ சேனாதிபதியாகிய துரோணாசாரியாரைத் தோற்று வேகமாக ஓடும்படி தெய்வத்தன்மையுள்ள ஓர் அஸ்திரத்தால் கோபித்து எதிர்த்தான். அவ்வாறு சதுரங்கச் சேனைகளோடு வந்த கௌரவர் பக்கத்து அரசர்கள் எல்லோரும் பாண்டவர் பக்கத்து அரசர்களால் தோற்றோடி துரியோதனராஜனின் அருகில் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது கர்ணனுக்கும் சகுனிக்கும் சிநேகிதனும், கரிய இரவு ஒரு புருஷ வடிவம் கொண்டது போன்றவனுமாகிய ஹலாயுதன் என்னும் அரக்கன், அரசர்கள் எல்லோரும்

அஞ்சும்படி லக்ஷக்கணக்கான ராக்ஷஸர்களோடு போர்க் களத்துக்கு வந்து துரியோதனனை வணங்கி நின்றான்.

துரியோதனனை நோக்கி ஹலாயுதன், ''மகாராஜனே! நாளைச் சூரியோதயத்துக்குள் பாண்டவர்கள் ஐவரையும் யுத்தத்தில் கொன்று, பூவுலகம் முழுதும் உன்னுடையதாகும் படி அவர்களுக்குத் தேவர்களின் சுவர்க்கலோகத்தைக் கொடுப்பேன்!'' என்று மிகப் பல சபத வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, தனது உடம்பு கருமையால் விளக்குகளின் வெளிச்சமும் மங்கும்படிச் சென்றான். அப்படிச் சென்றவன் தனது தேரும் பீமனின் தேரும் ஒன்றோடொன்று தாக்கும்படி அவனை நெருங்கினான்.

பீமனை நெருங்கியதும் யுத்தாவேசத்தால் ஹலாயுதனுடைய மலை போன்ற இரண்டு தோள்களும் புடை பருத்துப் பூரித்தன. அவன் மனத்தில் கோபத்தீ பொங்கி வழிந்தது. நாக்கிலும் கண்களிலும் தீப்பொறிகள் கிளம்பின. அவனுடைய கடைவாயில் விளங்கிய இரண்டு இளஞ்சந்திரன் போன்ற கோரத்தந்தங்களின் வெள்ளொளியால் அடர்ந்த இருள் பிளவுபட்டது. அவன் பகைவர்கள் அச்சமடையவும், கௌரவர்கள் தன்னால் உதவி பெறவும் பீமனை எதிர்த்துப் போய் யுத்தத்தைத் தொடங்கினான்.

ஹலாயுதனோடு வந்த ராக்ஷஸர்கள் எல்லோரும் அவனைப் போலவே அதிகமாக ஆரவாரம் செய்து கொண்டு, போரை நோக்கி எதிர்த்துச் சென்றார்கள்.

அந்த அரக்கர்கள் எல்லோரும் இருள்மலை போல் கருநிறமுள்ள வடிவத்தோடு விளங்கினார்கள். அவர்களின் உடம்பில் பிணவாடை வீசியது. அவர்களுடைய கண்கள் முருகம்பூவும் வெளுக்கும்படிச் சிவந்திருந்தன. இடியோசையும் மங்கும்படி அவர்கள் உரக்கப் பேசினார்கள். மயக்கம் பொருந்திய அவர்களின் மனத்திலே கொடூரமாகக் கோபம் மூண்டெழுந்து நின்றது. அவர்கள் வலிமையுள்ள மதயானை போல் மிகவும் அதிகமான கொழுப்புடையவர்கள். அப்படிப்பட்ட அந்த வலிய அரக்கர்கள் பாண்டவ சேனாவீரர்களை நெருங்கி நின்று, போரில் உற்சாகம் கொண்டவர்களாய் விற்களை வளைத்து, அவர்களின் மேல் கூரிய அம்புகளைப் பிரயோகித்தார்கள்.

கண்ணபிரான் செலுத்தும் தேரிலுள்ள அர்ச்சுனன் முதலிய பல தம்பிமார்களும், சாத்தகியும், திருஷ்டத்யும்நன் முதலிய தனது மைத்துனன்மார்களும், தனது புத்திரர்களான உபபாண்டவர்களாகிய கடோத்கஜன் முதலியவர்களும் பாதுகாத்து வருகின்ற யுத்த பூமியை, ஹலாயுதன் பல அரக்கர்களோடு வந்து வளைத்துக் கொண்டவுடனே, பீமன் தனது ஒரே வில்லை வளைத்து சில அம்புகளை அந்த அரக்கன்மேல் வர்ஷித்தான். அக்கணமே ராத்திரியில் உல்லாசமாகத் திரிகின்ற வஞ்சகனாகிய ஹலாயுதன் தனது நீண்ட வில்லை வளைத்து, எண்ணிக்கையில்லாத அம்புகளை பீமன்மேல் பிரயோகித்தான்.

பீமனுடைய கூரிய அம்புகள் தேவர்களுக்குப் பகைவனான அந்த அரக்கனின் கொடிய அம்புகளை நடுவிலேயே தடுத்து அழித்தன. மேலும், பீம பாணங்கள் ஹலாயுதனின் தேரையழித்தன; கொடியை அறுத்தன; குதிரைகளை வெட்டித் தள்ளிக் கொன்றன; தேர்ச்சாரதியின் தலையைத் துண்டித்துத் தரையிலே தள்ளின; வில்லை ஒடித்தன; அவனுடைய கரிய உடம்பில் அநேக துளைகள் போட்டன. அவ்வாறு செய்து பீமபாணங்கள் ஒரு மாத்திரைப் பொழுதுக்குள் ஹலாயுதனுடைய வலிமையெல்லாம் அழித்தன.

அதன்பின் ஹலாயுதன் பெருமூச்சோடு தேரிலிருந்து கீழே குதித்தான். படபாமுகாக்கினி போலப் பெரு நெருப்புக் கண்களிலிருந்து வெளிப்படும்படி பீமனைக் கோபத்தோடு உறுத்துப் பார்த்தான். அப்படிக் கோபித்து ஹலாயுதன் மலைக் கூட்டங்களைக் கைகளால் எடுத்து வேகமாக பீமன்மேல் எறிந்தான்.

உடனே பீமன் தனது கதாயுதத்தால் ஹலாயுதன் தன் மேல் எறிந்த மலைகளையெல்லாம் அடித்துத் தூள்தூளாக்கினான்.

அப்போது அசுவத்தாமனை வேலாயுதத்தால் தாக்கி மயங்கி விழச் செய்த கடோத்கஜன், தனது தந்தை ஹலாயுதனோடு எதிர்த்துச் சமமாகப் போரிடுவதைக் கண்டான். அக்கணமே கடோத்கஜன், "இந்த அரக்கனோடு சமமாக நின்று போர் செய்வது என் தந்தைக்கு இழுக்காகும். ஆகையால் என் தந்தையை விலக்கிவிட்டு, நான் போர்

செய்து இவன் உயிரை மாய்ப்பேன்!'' என்று சொல்லி, பீமனை விலக்கினான்.

பின்பு, கடோத்கஜன் தனது பேருக்கம் புலப்படும்படி ஹலாயுதனை எதிர்த்துக் கொடூரமாக யுத்தம் பண்ணினான்.

ராக்ஷஸர்களாகிய ஹலாயுதனும் கடோத்கஜனும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டு ஆரவாரம் செய்தார்கள். அவர்கள் செய்த ஆரவாரத்தைக் கேட்டுப் பாதாளலோகத்து சர்ப்பஜாதியார்கள் இடியோசை என்றெண்ணி, அஞ்சி ஒடுங்கித் தமது முடிசாய்த்து மூர்ச்சித்தார்கள். குல பருவதங்கள் அந்த ஆரவார ஒலிக்கு எதிரொலியை உண்டாக்கின. அந்தப் பேரோசையால் அண்டகோளத்தின் மேலிடம் பிளவுபட்டது. மேலும், அந்த இரண்டு ராக்ஷஸர்களின் ஆரவாரம் கேட்டு அஷ்டத்திக்கஜங்களின் கூட்டம் ஏதோ ஆபத்து நேரப்போகிறது என்று நினைத்து மிகவும் அச்சமடைந்தன. யக்ஷர்களும், தேவர்களும், அசுரர்களும் திடுக்கிட்டு உள்ளமும் உடலும் பதைத்தார்கள். திக்குபாலர்கள் அச்சத்தால் தமது இமையாக்கண்களை இமைத்தார்கள். பூமியிலுள்ள புழுதிகள் அடிக்கடி ஏற்பட்ட அதிகமான அதிர்ச்சியால் நிலத்திலிருந்து எழுந்து பறந்து கடலில் படிந்து, அதனை நிறைத்தன.

கடோத்கஜனும் ஹலாயுதனும் வீரத்தால் எழுந்த கோபத்தால் சிரித்தார்கள். பெருஞ்சினம் கொண்டார்கள். தமது பெரிய உடம்பு அணுப் போலச் சிறுக்கும்படிக் குழைந்து காட்டினார்கள். உடனே பெரிய வடிவங் கொண்டு தோன்றினார்கள். ஆணவத்தோடு விழித்துப் பார்த்தார்கள். தீ யெழுப்பினார்கள். அச்சமுண்டாக்கினார்கள். ஆகாயத்தில் படும்படி ஆயுதங்களை உயர எடுத்தார்கள். தரையைப் பள்ளமாகும்படி அந்த ஆயுதங்களால் மோதினார்கள். ஒடித்த மலைகளின் சிகரங்களாலும் முறித்த மரங்களின் கிளைகளாலும் ஒருவரையொருவர் அடித்து, சீக்கிரம் உடம்புத் தோலை உரித்து, பிறகு மார்பு நொறுங்க விலா எலும்புகளை ஒடித்தார்கள். பின்பு, சற்று நேரம் உடம்பு வேர்த்துக் கொட்ட சோர்ந்து நின்றார்கள்!

அப்போது கடோத்கஜன் வில்லாயுதமும், வேலாயுதமும், வாளாயுதமும், மற்றும் பல ஆயுதங்களும்

கொண்டு ஹலாயுதனுடைய அரக்க சேனையை அழித்தான். மேலும், மற்போர் செய்தும் தன்னோடு போராடிய ராக்ஷஸர்களை, ஒருத்தரை எதிர்த்ததுப் போலவே பலரையும் எதிர்த்துப் போர் செய்து அழித்தான். பின்பு, கடோத்கஜன் தனது தொடைகளால் ஹலாயுதனுடைய தொடைகளை நெருக்கி, அவனைக் கீழே தள்ளி, அவனுடைய உயிரைப் பறித்தான்!

அதுகண்டு தேவர்கள், ''திரிபுரம் எரித்த சிவபெருமானுடைய கையலங்கிரியைத் தனது கைகளால் அடியோடு பெயர்த்தெடுத்த கீர்த்தி பெற்ற பராக்கிரமசாலி ராவணன். அவன் பல வரங்களைப் பெற்றிருந்தும் காட்டில் சஞ்சரித்த இரண்டு மனிதர்களை எதிர்ப்பதற்கு வீரமுள்ளவனாகயில்லை! ராக்ஷஸராஜனாகிய ராவணனைப் போல் இல்லாமல் பீமனுடைய குமாரனாகிய கடோத்கஜன், தன்னை வந்து எதிர்த்த ஹலாயுதனையும் அவனது ராக்ஷஸ சேனாவீரர்களையும் தான் ஒருவனாகவே நின்று போரிட்டுக் கொன்றான்!'' என்று கடோத்கஜனைப் புகழ்ந்து ஆசீர்வதித்து வியந்தார்கள்.

கடோத்கஜன் அந்த ராத்திரியில் லக்ஷக்கணக்கான ராக்ஷஸர்களோடு ஹலாயுதனையும் கொன்று, துரியோதனனுடைய சேனையை குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையைப் போல நிலைகலங்கச் செய்த பிறகு, அவன் கோடிக்கணக்கான உருவங்கள் எடுத்தான். தான் எடுத்த அந்த உருவங்களோடு போய் பகைவர்களையும், அவர்களுடைய சேனாவீரர்களையும் ஒரு மாத்திரைப் பொழுதில் கொன்று யமலோகத்துக்கு அனுப்பி வைத்தான்.

மற்றும் கடோத்கஜன் தன்னை எதிர்த்த பகைவர்கள் மேல் ஒருசமயம் சண்டமாருதமாகிச் சாடினான். ஒருசமயம் சமுத்திரமாகிப் பொங்கினான். ஒருசமயம் காளமேகமாகி மழை பொழிந்தான். ஒருசமயம் பகைவர்களின் கண்ணுக்கு மலையாகி உயர்ந்து காணப்பட்டான். ஒருசமயம் மூண்டெழுகின்ற நெருப்பாகி எரிந்து தோன்றினான். ஒருசமயம் அழிப்பதற்கு முடியாத வலிய இருளாய்ப் பகைவர்மேல் அடர்ந்து வந்தான். அப்படி கடோத்கஜன், தான் மூன்பு கற்றுத்தேர்ந்த பலவகையான மாயங்களையும் செய்து போரிட்டான்!

கடோத்கஜன் யுத்தகளத்தில் தான் கொன்ற மிருகங்களையும் வீரர்களையும் தானே புசித்து ரத்தத்தையும் குடிக்காவிட்டால், இறந்த உடம்பிலிருந்து அப்போது பெருகிய ரத்தவெள்ளம் சமுத்திரங்களிலும் அண்டகோளம் முழுவதிலும் அடங்குமோ? ஆமாம். அந்த ரத்தவெள்ளம் அடங்காமல் அண்டகோளத்தையும் உடைத்துக் கொண்டு, சமுத்திரங்களிலும் நிரம்பி வழிந்து கலங்கச் செய்யுமே!

துரியோதனன் கடோத்கஜனுடைய வீரச்செயலை யெல்லாம் கண்டதும், கர்ணனை அவன் அன்புடன் பார்த்து, ‘‘நண்பனே! முன்பொருசமயம் தேவேந்திரன் உனக்குக் கொடுத்தருளிய வேலாயுதத்தால் இந்தக் கடோத்கஜனைக் கொன்றுவிடு!’’ என்று நாக்குப் புகை கொண்டு தீப்பொறி எழும்படிக் கூறினான்.

அதற்கு கர்ணன் துரியோதனனை நோக்கி, ‘‘கடோத்கஜன் இப்போது மாயப்போர் செய்கின்றான். அரக்கர்களுக்கு ராத்திரி வேளையில் வலிமை அதிகமாகும். வெகுசீக்கிரம் இந்த இரவு முடிந்துவிடும். பின்பு, வேறோர் அம்பால் இந்த அரக்கனை வெகுசுலபமாகக் கொன்றுவிடலாம். ஆகவே, அந்த வேலாயுதத்தால் நான் நாளை அர்ச்சுனனைக் கொன்று, இந்தப் பூலோகம் முழுவதையும் உனது கீர்த்தி மிக்க அரசாட்சியின் கீழ்த் தடையில்லாமல் வைப்பேன்!’’ என்றான்.

கர்ணன் அப்படிச் சொன்னவுடனே, துரியோதனன் அவனைப் பார்த்து, ‘‘கர்ணா! நாமும் நமது சேனையும் இந்த இரவில் தப்பிப் பிழைக்கும்படி நீ அந்த வேலாயுதத்தால் இந்த அரக்கனை இப்போதே கொல்! பிறகு, போர் செய்து அர்ச்சுனனை வேறோர் ஆயுதத்தால் கொல்!’’ என்று மிகவும் மனம் வெதும்பிச் சொன்னான்.

துரியோதனனுடைய கட்டளையை மறுக்க முடியாமல், கர்ணன் அந்த க்ஷணத்திலே தேவேந்திரன் தந்த வேலாயுதத்தை யமனது கொடிய சூலாயுதத்தை எறிந்தது போல கடோத்கஜன் மேல் எறிந்தான்!

அக்கணமே கர்ணன் வீசிய வேலாயுதம் கடோத்கஜனின் மார்பைத் துளைத்துக் கொண்டு அப்பால் போய் தேவேந்திரனிடம் திரும்பவும் சேர்ந்தது! வேலாயுதம்

மார்பைத் துளைத்ததால் கவிழ்ந்து விட்ட பெரிய மலைபோல கடோத்கஜன், தரையிலே தன் முகம்படும்படிக் கவிழ்ந்து விழுந்து இறந்தான்.

கடோத்கஜன் இறந்ததைக் கண்டதும் பாண்டவர்சேனை செயலற்று நின்றுவிட்டது! பாண்டவர்கள் மனம் வருந்தித் திகைத்து நின்றார்கள்!

புத்திரசோகத்தால் வருந்தும் பாண்டவர்களின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு அவர்களை நோக்கி, தத்துவ ஞானமுடையவர்களைத் தவிர மற்றவர்களால் அறிய முடியாத கடவுளான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, "இந்திரன் கர்ணனுடைய கவசகுண்டலங்களை யாசித்துப் பெற்றபோது, அவனுக்குக் கொடுத்த வேலாயுதம் இது. இந்த வேலாயுதத்தை யார்மேல் பிரயோகித்தாலும், இது இந்திரனுடைய வரத்தால் அவர்களைத் தவறாமல் கொல்லும். யமனைக் காட்டிலும் கொடிய வலிமை படைத்த கர்ணன், இனி யுத்தத்தில் அர்ச்சுனன் மேல் நாகாஸ்திரத்தைப் பிரயோகிப்பான். அந்தச் சமயத்தில் அர்ச்சுனன் உயிர்பிழைத்தால், அவன்மேல் இந்த வேலாயுதத்தை கர்ணன் பிரயோகிக்க எண்ணியிருந்தான். ஹலாயுதனையும் மற்றும் பல ஆயிரக்கணக்கான பெரிய ராக்ஷஸர்களையும் கடோத்கஜன் கொன்றான். அப்படிப்பட்ட கடோத்கஜன் சாகும்படியும், தான் பிழைத்திடும்படியும் துரியோதனன் சொன்னதால், கர்ணன் அந்த வேலாயுதத்தை அவன்மேல் வீசி எறிந்தான். அப்படிச் செய்து கர்ணன் தானே இன்று உங்களுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுத்தவனானான்!" என்றான்.

காளிங்கன் என்னும் பாம்பின் மேலும், கோபிகாஸ்திரீகளோடும் கூத்தாடிய கண்ணபிரான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும், பாண்டவர்கள் கௌரவத்தையும் வலிமையையும் புண்ணியப் பயனாகப் பெற்றோம் என்று எண்ணினார்கள். அந்த எண்ணத்துடன் இந்திர குமாரனாகிய அர்ச்சுனனை நன்றாகத் தழுவிக் கொண்டார்கள். கடோத்கஜனுடைய மரணத்தால் ஏற்பட்ட விசனத்தையும் மறந்து பாண்டவர்கள் மகிழ்ந்தார்கள் ஆமாம். வினைப்பயனையும் உலக நடத்தையின் தன்மையையும் அறிந்தவர்கள் கலங்க மாட்டார்கள்!

அப்போது துரியோதனனுடைய கட்டளைப்படி துரோணாசாரியார் பெருஞ்சேனையோடு போய் துருபதராஜனையும், விராடராஜனையும், மற்றும் பல அரசர்களையும் எதிர்த்து யுத்தம் செய்தார். துரோணாசாரியார் அந்த யுத்தத்தில் தமது அம்புகளால் துருபதனையும் விராடனையும் தலைகளைத் துண்டித்துக் கொன்றார்.

துருபதராஜன் இறந்ததைக் கண்டதும், அவன் மகனாகிய திருஷ்டத்யும்நன் பெரிதும் கோபம் அடைந்து மனம் தவித்தான். அக்கோபத்துடன் துரோணாசாரியார் முன் போய் திருஷ்டத்யும்நன், "வில்லாசிரியனே! பகைவர்கள் முன்னிலையில் எனது தந்தையை என் கண் முன்னாலேயே யுத்தத்தில் கொன்றாய்! ஆகையால், நாளைக்கு நான் அரசர்கள் முன்னிலையில் உன் மகன் பார்க்கும்படி உன்னைக் கொல்வேன்!" என்று சபதமிட்டான்.

தனது மாமனாரை துரோணாசாரியார் கொன்றதால், அர்ச்சுனன் அவர்மேல் மிகவும் ஆத்திரம் கொண்டான். அவன் கொடுங்கோபம் கொண்டு துரோணாசாரியாரை எதிர்த்துப் போய்ப் போர்செய்தான் அந்தப் போரில் தனது அர்த்தசந்திர பாணங்களால் அர்ச்சுனன் வில்லாசிரியாரைத் தோற்றோடச் செய்தான்!

அரசநீதி கடந்த துரியோதனன் சாத்தகியை எதிர்த்துச் சென்று யுத்தம் செய்தான். தன்னை எதிர்த்த துரியோதனனிடம் சாத்தகி கடும்போர் செய்தான். சாத்தகியின் உக்கிரமான போருக்கு ஈடு கொடுக்க முடியாமல், சிங்கத்தை எதிர்த்த யானைபோல துரியோதனன் மிகவும் சோர்ந்து தோற்றுத் திரும்பினான்!

பாண்டவர் பக்கத்து வீரர்கள் எல்லோரும் ஒருத்தர்போலவே மிகுந்த பராக்கிரமத்துடன் தனித்தனியே நின்று உக்கிரமாகச் செய்த யுத்தத்தால், கௌரவர்பக்கத்து வீரர்கள் யாவரும் ஒருத்தர் போலவே யானைகளும் குதிரைகளும் தேர்களும் ஆகிய எல்லாச் சிறப்புகளையும் இழந்து, பாதங்கள் கொப்பளிக்கத் தோற்றோடி தங்கள் பாசறையை அடைந்தார்கள்!

சூரியன் அப்போது புறப்பட்டு தேவர்களுக்குத் தங்குமிடமான மகாமேரு கிரியைப் பிரதட்சிணம் செய்து கொண்டு வந்து, உதயகிரியில் உதித்து விளங்கினான்!

5. பதினைந்தாம் நாள் போர்

இரவு ஏற்றிய விளக்குகளின் வெளிச்சமும், அதற்கு மாறான இருளும் நீங்கிச் செல்லும்படி சூரியன் உதயகிரியில் எழுந்தான்! அதுகண்டு இரண்டு பக்கத்துச் சேனாவீரர்களும் அரசர்களும் சூரிய நமஸ்காரம் செய்தார்கள். உதய காலத்தில் தாங்கள் கடமையாகச் செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் வெகு சீக்கிரத்தில் செய்து முடித்தார்கள். பிறகு, தம் உள்ளத்திலே கோபத்தீ மூண்டெழ, அதனால் கொடிய கண்கள் சிவந்து போக அவர்கள் போருக்கு விரைந்து சென்றார்கள்.

நான்கு வேதங்களின் தேர்ந்த கொள்கைகளுக் கெல்லாம் விஷயமான முதற்கடவுளாகிய திருமாலின் திருவவதாரமான கண்ணபிரான், பாண்டவர் பக்கத்துச் சேனையை நான்காகப் பிரித்தான். அந்த நான்குப் பிரிவுக்கும் அர்ச்சுனன், பீமன், நகுலன், திருஷ்டத்யும்நன் ஆகிய நால்வரையும் சேனாதிபதியாக்கினான். பின்பு, பாண்டவர் சேனையை அர்ச்சுனனோடு தானும் போருக்குச் சித்தம் செய்து அழைத்துச் சென்றான்.

பூலோகத்தாரால் மதிக்கக் கூடிய பராக்கிரமசாலியான வாலவீமன் என்னும் அரசனும், சூலபாணியாகிய யமனுக்குச் சமமான சோமதத்தன் என்னும் அரசனும் ஆலாகல விஷம் போலக் கோபித்து; அர்ச்சுனனை வந்து எதிர்த்துப் போரிட்டார்கள். அர்ச்சுனன் அக்கணமே அவர்கள் மேல்



அம்புகளைச் செலுத்தினான். அந்த விஜயபாணங்களால் அவர்கள் இருவரும் யமபட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்!

தங்களின் முன்னே நின்று போர் செய்யும்படிச் சொன்ன அரசர்கள் ஒவ்வொருவரின் முன்பும், அர்ச்சுனன் தனித்து நின்று வில்யுத்தம் செய்து, அவர்களையெல்லாம் கொன்றான்.

பதினான்கு வகைப் போர்வித்தைகளில் தேர்ந்துள்ள துரோணாசாரியார், தம்மை நான்குப் பக்கமும் வந்து சூழ்ந்து கொண்ட பாண்டவர்களின் நான்கு சேனைகளையும் தாம் ஒருவராகவே எதிர்த்து நின்று போரிட்டார். அப்போது பாண்டவர்களின் நான்கு சேனைகளும் புறமுதுகிட்டு ஓடும்படி, அச்சேனைகளின்மீது ஒவ்வொரு தடவையும் அவர் நான்கு நான்கு அம்புகளைப் பிரயோகித்து யுத்தம் புரிந்தார்.

துரோணாசாரியாருடைய கொடிய போரால் பாண்டவர் சேனைகள் புறமுதுகிட்டு ஓடின. அச்சமயம் குந்திபோஜன் பல்லாயிரக்கணக்கான தேர்வீரர்களுடன் வந்து துரோணாசாரியாரை எதிர்த்து யுத்தம் செய்தான். அதனால் யுத்தபூமி அப்போது ரத்தவெள்ளம் பாய்ந்து மாலைக் காலத்துச் செவ்வானம் போல் விளங்கியது!

சல்லியன் தனது உடன்பிறந்தவள் மகனான நகுலனை எதிர்த்து வந்து வேகமாகப் போரிட்டான். நெஞ்சில் கோப்பாக்கினி பற்றியெழ விரைவாக மாளவநாட்டரசனான இந்திரவர்மா சாத்தகியை எதிர்த்துக் கடும்யுத்தம் பண்ணினான்.

உலகம் முழுவதையும் அழிக்கின்ற கற்பாந்தகாலம் இப்போது வந்துவிட்டது என்று எல்லோரும் எண்ணும்படி அசுவத்தாமன் அர்ச்சுனனை எதிர்த்துப் போரிட்டான். கர்ணன் பீமனோடு கோபித்துப் போர் செய்தான். சித்திரவாகனப்பாண்டியனை எதிர்த்து சகுனி யுத்தம் புரிந்தான்.

இப்படியாகப் போரிட்ட கௌரவ வீரர்கள் எல்லோரும் ஜெயித்தார்கள். இதுவரை ஜெயித்து வந்த பாண்டவ வீரர்கள் எல்லோரும் தோற்றார்கள். அதனால் பாண்டவசேனை

தோற்றுத் திரும்பிச் சென்றது. கௌரவசேனை வெற்றி கொண்டு நின்றது!

ஆமாம். துரோணாசாரியார் ஆக்நேயாஸ்திரமும், வருணாஸ்திரமும், வாய்வ்யாஸ்திரமும், மற்றும் பல தேவர்களின் அஸ்திரமும் ஆகிய எல்லா அஸ்திரங்களாலும் போர் செய்தார். அதனாலேயே தருமருடைய சேனை தோற்று நிலை குலைந்தது!

துரோணாசாரியாரும், கௌரவ சேனாவீரர்களும் போரில் ஜெயித்து யுத்தபூமியில் வாகைப்பூமாலை தரித்து நின்றார்கள். அப்போது துருவாச முனிவருக்கும் மேலான பல முனிவர்கள் துரோணாசாரியாரிடம் வந்தார்கள்.

மரீசி முதலிய ஸப்தரிஷிகளும், அகஸ்தியர் முதலிய எல்லா முனிவர்களும் தம்மிடம் வருவதை துரோணாசாரியார் கண்டார். உடனே அவர் அவர்களை எதிர்கொண்டு சென்று துதித்து, தலைதாழ்த்தி வணங்கி நின்றார்.

பேச்சில் வல்லவர்களும் பிறப்பு இல்லாதவர்களுமான அந்த முனிவர்கள், தம்மை வணங்கிய துரோணாசாரியரை நோக்கி, ''சாஸ்திரங்களில் வல்லவனே! வேதங்களும், சாஸ்திரங்களும், பிரமதேஜசும், குற்றமில்லாத தபசும், ஞான நூல்களால் உண்டாகும் மெய்யறிவும் ஆகிய இவற்றைத் தவிர, சிறந்த முனிவர்களுக்கு நன்மை தருவது வேறு ஏதேனும் உண்டோ? பகைவர்களையழிக்கின்ற போரும், நிறைந்த பலமும், செல்வ வாழ்க்கையும் அரசர்களுக்கே உரிய இயல்பு அல்லவா? தொடுக்கின்ற அம்புகளையுடைய வில்லையும், வாளையும், குதிரையையும், யானையையும், தேரையும், கொடிய கோபத்தையும் நீ விட்டுவிடுவாயாக! அவை உனக்கு வேண்டாம். இனி நீ மேலுலகத்தை அடைதல் வேண்டும். ஆகவே, நீ வெகுசீக்கிரம் உனது மனத்திலுள்ள சஞ்சலம் நீங்கி, ஒப்பற்ற பரதத்துவ ஞானத்தில் ஒன்றுபட்டு நிற்பாயாக!'' என்று, தங்களுக்கு அவரிடமுள்ள அன்பு வெளிப்படும்படிச் சொன்னார்கள்.

முனிவர்கள் அப்படி உபதேசித்ததும் துரோணாசாரியார் தம் மனத்திலே, அறிவதற்கு அரிய வேதாந்தத்தில் அமைந்துள்ள தத்துவ ஞானத்தை உணர்ந்தார். அதனால் அவர் போர் செய்வதில் விருப்பம் இல்லாதவரானார்.

மேலும், அரசர்க்குரிய தேரின்மேல் ஏறி நிற்பதை ஒரு சிறப்பாகக் கொள்ளாமல், புண்ணியப் பயனால் விமானம் வந்து தோன்ற அதன்மேல் ஏறி விண்ணுலகம் சேர்வதிலேயே கருத்தைச் செலுத்தினார்.

துரோணாசாரியார் நிற்கும் அந்த நிலையைக் கண்டதும் கண்ணபிரான், முன்பு அவரைக் கொல்வதற்கு அவர் சொன்ன சமயம் இதுதான் என்பதைப் புரிந்து கொண்டான். உடனே கண்ணன் பாண்டியனிடம் சொல்லி, திருஷ்டத்யும்நனை துரோணாசாரியாருடன் போர் செய்ய கட்டளையிட்டான். பின்பு, தருமரை நோக்கி கிருஷ்ணன், "ஐயனே! இந்திரவர்மாவோடு செய்த போரில் பீமன் பிரயோகித்த அம்புகளால், அந்தப் பகைவனுடைய அசுவத்தாமா என்னும் பட்டத்துயானை இறந்தது! அதற்கு அஷ்டத்திக்கஜங்களும் உவமையாகாது. அதற்கு அதுவேதான் சமமானது! துரோணாசாரியன் மகனாகிய அசுவத்தாமா என்ற பேரை எடுத்துக் கூறி, போரில் இறந்ததாகச் சொன்ன வினாடியே வில்லாசிரியன் மனக்கலக்கம் அடைவான். அதனால் அவன் வில்லை எடுத்துப் போர் செய்யாமல் இறப்பது நிச்சயம். முதல்நாள் போரில் துரோணாசாரியன் சொன்ன வார்த்தையும் இதுவேதான். இதனை நீ மனத்தில் எண்ணிப் பார். ஆகையால், நீயே விரைவில் துரோணாசாரியன் முன் போய் அப்படிச் சொல்வாய்!" என்று கூறினான்.

கண்ணபிரான் கூறியதைக் கேட்டு சத்தியசந்தனான தருமர், "இந்தப் பூமியைப் பொய்கூறி, அதனால் பெற்று அரசாளுவதோ?" என்று சொல்லிச் சிரித்தார்.

மீண்டும் அவர் கண்ணனை நோக்கி, "கண்ணா! பொய் சொல்வதால் மனைவியும், பிள்ளைகளும், சுற்றத்தவரும், அன்பும், புகழும், செல்வமும், பலமும், சிறப்பும், மற்றப் பொருள்களும், செய்த தவமும், மற்றப் புண்ணியங்களும் ஆகிய எல்லாம் ஒன்றாக அழிந்துவிடும் இல்லையா?" என்றார்.

அதற்குக் கண்ணபிரான், "கழிந்த பிறப்பிலும் வரும்பிறப்பிலும் பொருந்திய வினைப்பயன்கள் இரண்டும் ஆராய்ந்து பார்த்தால், இப்பிறப்பில் காணப்படுகின்ற அவரவர்களுடைய தன்மைகளாலேயே எல்லோருக்கும்

விளங்கும். ஒருவர்க்கு நேர்ந்த ஆபத்தைப் பொய்யும் உண்மையாகப் போக்குமானால், அது உண்மையைப் போலவே நல்வினைப் பயனைத் தரும்! பெரியோர்கள் அனந்த கோடிக்கணக்கான வேதவாக்கியங்களில் கூறியபடியே ஆராய்ந்து சொன்ன தருமங்கள் யாவும் உன்னிடம் கூடியிருக்கின்றன. ஆகையால், இப்போது நீ சொல்லப் போகும் ஒரு பொய், உனக்கு என்ன தீங்கைத் தந்துவிடப் போகிறது? கொழுந்துவிட்டெரியும் அதிகமான நெருப்புக்கு ஈரத்தாலாகும் அபாயம் இல்லை. ஆகவே, நீ ஏதையும் சிந்திக்காமல் இந்த ஒரு பொய்யை மாத்திரம் சொல்வாய்!'' என்றான்.

உடனே கண்ணனின் விருப்பப்படி தருமர் தமது தேரை வேகமாகச் செலுத்திக் கொண்டு போய் துரோணாசாரியார் முன் நின்றார். பின்பு, அவரைப் பார்த்து தருமர், ''தலைவனே! அசுவத்தாமா என்னும் மதங்கொண்ட யானைக்கு பீமன் சிங்கம் போலானான். ஐயோ! எத்தனைக் கோடிக்கணக்கனான சேனை இந்த யுத்தகளத்தில் அசுவத்தாமனால் இறந்திட்டது. பீமன் அசுவத்தாமாவைப் போரிட்டு அழித்த தந்திரத்தை எண்ணவென்று சொல்வது!'' என்றார்.

குற்றமற்றவரான தருமர் சொன்ன வார்த்தைகள் காதில் பட்டவுடனே, மனத்தில் குற்றமில்லாதவரான துரோணாசாரியார் தமது கையில் ஏந்திய வில்லையும் அம்புகளையும் கீழே போட்டார். தமது மகன் அசுவத்தாமன் இறந்துவிட்டான் போலும் என்றெண்ணி அவர் வருந்தவில்லை. எவரிடத்தும் ஆசை பந்தம் பாசம் எதுவும் இல்லாமல் நின்ற துரோணாசாரியார், அப்போது அயலான் போல நின்றார்.

அப்படி துரோணாசாரியார் செயலற்று நின்றபோது, திருஷ்டத்யும்நன் தனது வில்லை வளைத்து அவர் மேல் அம்பு தொடுத்தான். ஐயோ! அந்த அக்கணமே விரைந்து சென்று அந்த அம்பு துரோணாசாரியாருடைய தலையைத் துண்டித்துக் கீழே தள்ளியது!

பிருகஸ்பதி போன்ற துரோணாசாரியார் இறந்ததை அறிந்தவுடனே துரியோதனனுடைய பராக்கிரமம் மிகுந்த சேனை நிலைகுலைந்தது. உடனே அசுவத்தாமன் முன்னே

ஓடிச் சென்று, தனது தந்தை இறந்து கிடந்த போர்க்களத்தைப் பார்த்தான்.

அசுவத்தாமன் தந்தை இறந்து கிடப்பதைப் பார்த்தான். தரையிலே விழுந்தான். தந்தையின் பாதங்களைத் தனது தலைமேல் வைத்துக் கொண்டான். தன்னைத் தானே தாங்கிக் கொண்டு, கண்களிலிருந்து வெள்ளமாகப் பெருக்கெடுக்கும் கண்ணீரிலே முழுகினான். தனது மார்பிலே தரித்த போர்மாலை கீழே சரியவும், உடம்பிலே அதிகமாகப் புழுதிப் படியவும் தரையிலே விழுந்த அசுவத்தாமன், பித்ரு சோகத்தால் கொடிய விஷத்தை உண்டவன் போல நினைவற்று உள்ளம் நொந்தான்!

அளவுக்கு மீறிய பித்ருசோகத்துடன் அசுவத்தாமன், ''தந்தையே! பலமிக்க பீஷ்மர் உம்மை அரசனாக்கி, அன்போடு இந்த உலகத்தை அரசாளும்படி அக்காலத்தில் கருணை செய்தார். முன்னும் பின்னும் உம்மோடு சமமாக வைத்து நினைப்பதற்கு ஒப்புமையில்லாதவர் நீர்! அப்படிப்பட்ட நீர் இறந்திடுவீரோ? உமக்குப் பின் பிறந்தவனாகிய நான் உம்மையிழந்த பின்பும் உயிர் வாழ்வேனோ? வில்லாற்றல் உடையவர் நீர்! கொடிய போர்க் களத்தில் பகைவெல்லும் திறமுடையவர் நீர்! சொல்லாற்றல் உடையவர் நீர்! பழமையான அந்தணர்களும் அஞ்சும் படியான வைதிகத் தொழில் உடையவர் நீர்! ஒவ்வொரு சாஸ்திரத்திலும் தேர்ந்துள்ள பலர் கரைகண்ட சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே தனியே தேர்ந்தவரே! எனது தந்தையே! சாஸ்திரங்களும், வைதிகத் தொழிலும், போராற்றலும் ஆகிய யாவும் இன்றே உம்மோடு அழிந்து விட்டன! கண்ணனின் கட்டளைப்படி சத்தியசந்தரான தருமர் தமது உண்மை பேசும் விரதம் தவறி, வெளிப்படையாகவே எல்லோரும் கேட்கும்படி இன்று பொய் சொன்னார். அதுகேட்டு உண்மையென்று நினைத்து என் தந்தை புத்திரசோகத்தால் நிராயுதபாணியாகிச் செயலற்று நின்றார். அப்போது குருத்துரோகியாகிய திருஷ்டத்யும்நன் அவரைக் கொன்றான். இப்படியில்லாமல் என் தந்தை கையில் வில்லெடுத்து யுத்தம் செய்ய நினைத்தால், இந்தத் திருஷ்டத்யும்நன் இல்லை. தேவர்களுக்கும் என் தந்தையை வெல்வது முடியுமோ?'' என்றெல்லாம் கூறிப் புலம்பினான்.

தந்தையின் மரணத்தால் மிகவும் சோகித்து வருந்திய அசுவத்தாமனை துரியோதனன் தூக்கி நிறுத்தி, அவனுக்கு ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்தினான். மேலும், துரியோதனன் குருபுத்திரனின் கண்ணீரைத் துடைத்து அன்பு காட்டினான்.

அப்போது அசுவத்தாமன், ''ராஜகுமாரர்களோடு குந்திபுத்திரர்கள் எல்லோரையும் தலையறுத்து, துருபதனுடைய சிறந்த புத்திரனாகிய திருஷ்டத்யும்நனையும் உயிர் நீங்கக் கொல்வேன்!'' என்று சபதம் செய்து, தனது வில்லையெடுத்து வளைத்தான்.

கண்ணபிரான் அதுகண்டு உடனே ஓர் ஆண்யானை மேல் ஏறிச் சென்று, தன் பக்கத்து அரசர்களை நோக்கி, ''ராஜாக்களே! நீங்கள் எல்லோரும் இந்த க்ஷணமே வில் முதலிய ஆயுதங்களையும், வாகனம் முதலியவற்றையும் நீக்கிவிட்டு நில்லுங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சொன்னதைக் கேட்டு பீமனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும், யோகப் பயிற்சியால் பெறுவதற்குரிய தத்துவஞானத்தைக் கொண்டவர்களைப் போல், ஒருத்தரைப் போலவே நிராயுதபாணிகளாய் வாகனங்களிலிருந்து இறங்கி வெறுந்தரையிலே போர் செய்யாது ஒடுங்கி நின்றார்கள்.

அப்போது அசுவத்தாமன் மந்திரம் சொல்லி நாராயணாஸ்திரத்தைப் பகைவர்கள் மேல் ஏவினான். அந்த அஸ்திரம் அந்த வினாடியில் கற்பாந்த காலத்துப் பெருங்காற்று நெருப்போடு கிளர்ந்து வீசியது போலவும், சமுத்திர ஜலத்தை நிரம்ப எடுத்துப் பருகி சப்த மேகங்களும் இடிமுழக்கம் செய்தது போலவும் உக்கிரத்தோடு பகைவர்கள் மேல் விரைந்தது. தங்களை நோக்கி நாராயணாஸ்திரம் உக்கிரத்துடன் வருவதைக் கண்டதும் பாண்டவ சேனா வீரர்கள் எல்லோரும், மன ஒருமைப் பாட்டுடன் தத்துவ ஞானமுடையவர்களாய் நின்று, அந்த அஸ்திரத்தைத் தன் மேல் கைவைத்துப் பயபக்தியுடன் வணங்கினார்கள்.

துரோணகுமாரன் பிரயோகித்த நாராயணாஸ்திரம் பூமியைத் துளைத்தது; திக்குகளைத் துளைத்தது;

பாதளலோகத்தோடு அண்டகோளத்தின் முகட்டையும் துளைத்தது. அப்படி துளைத்தவாறு அந்த அஸ்திரம் கோபம் கொண்டு, ஒவ்வொரு பாண்டவசேனாவீரர்களின் உடம்பிலுள்ள மயிர்க்கால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அம்பாகப் பெருகி வேகமாகச் சென்றது. அந்த அஸ்திரம் பாண்டவ வீரர்களை நெருங்கியபோது, அவர்கள் எல்லோரும் ஒருவர் போலவே நிராயுதபாணியாகிப் போர் செய்யாமல் தன்னை வணங்கி நிற்பதைக் கண்டு, அப்போது போர்க் கோலத்துடன் நின்ற பீமனை நோக்கிப் பாய்ந்தது.

பீமனை நோக்கிச் சென்ற நாராயணாஸ்திரம் பற்பல தேவாஸ்திரங்களாக மாறிச் சென்றது. அதுகண்டு பீமன் கொஞ்சமும் கலங்கவில்லை. அவன் உடனே தனது தேரைச் செலுத்திக் கொண்டு, யமனைப் போல அந்த அஸ்திரங்களின் முன்னே சென்றான். போகும் போதே எதிர்த்து வந்த அந்தத் தேவாஸ்திரங்களை அததற்குரிய எதிர் அஸ்திரங்களைப் பிரயோகித்து அழித்துக் கொண்டு சென்றான்.

மேலும், அந்த நாராயணாஸ்திரம் பற்பல அஸ்திரங்களாகி பீமனை நெருங்கிய போது, அவனது மூச்சுக்காற்றால் சில அம்புகள் அடிபட்டன. பயங்கரமான அவன் கண்களிலிருந்து வெளிப்பட்ட முதிர்ந்த கோபாக்கினியால் சில அம்புகள் எரிபட்டன. அவனுடைய கூரிய அம்பின் பிரயோகத்தால் சில அம்புகள் ஒடிபட்டன. சில அம்புகள் அவனுடைய வளைந்த விற்கழுத்தில் மோதித் தாக்கப்பட்டன. அவனுடைய வில்லின் நீண்ட நாணியின் ஓசை வேகத்தால் சில அம்புகள் அடிபட்டன. சில அம்புகள் பீமனுடைய கடகம் அணிந்த தோள்களாகிய மலைகளால் இடிக்கப்பட்டன. மேலும், சில அம்புகள் பீமனுடைய கோபமிக்க வீரவார்த்தையால் அச்சம் கொண்டன. அப்படி வாயுபுத்திரனாகிய பீமனால் அந்த நாராயணாஸ்திரம் படாதபாடு பட்டது!

முயற்சியின் வலிமையால் எத்தனைத் தந்திரம் செய்தாலும் ஊழ்வினையை வெல்ல முடியுமோ? பீமன் எத்தனைத் தடுத்த போதும் நாராயணாஸ்திரம், அவன் மார்பில் பாய்ந்தது! அதேசமயம் கண்ணபிரான் தனது மாயத்தால் பீமனின் கையிலுள்ள வில்லையும் அம்பையும், அவன் ஏறியுள்ள தேரையும் கணத்தில் மறையச் செய்தான்.

அவ்வளவுதான். நிராயுதபாணியான பீமனை அழிப்பதற்கு வெட்கப்பட்டு, நாராயணாஸ்திரம் திரும்பி அசுவத்தாமனிடமே போய்ச் சேர்ந்தது! ஆயுள்பலம் உள்ளவர்களை யாராலாவது கொல்ல முடியுமோ?

தான் பிரயோகித்த நாராயணாஸ்திரம் பகைவர்களில் ஒருவரையும் கொல்லாமல் திரும்பியவுடனே, அசுவத்தாமன் பகைவர்கள் மேல் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகிக்க நினைத்தான். அப்போது வியாசமுனிவர் கையில் ஏந்திய பிரமதண்டமும் பாதத்தில் அணிந்த பாதரட்சையும் உடையவராக, வேதவாக்கியங்களை உச்சரித்துக் கொண்டு அசுவத்தாமன் முன் எழுந்தருளினார்.

தன்முன் வந்த வியாசமுனிவரை கடவுளுக்குச் சமமாக எண்ணி அசுவத்தாமன், முனிவரின் எதிரே சென்று கைகூப்பி வணங்கித் துதித்தான்.

வியாசர் தம்மை வணங்கிய அசுவத்தாமனுடைய துன்பத்தைப் போக்கும் எண்ணத்துடன், அவனைப் பார்த்து, ''வலிமையால் பராக்கிரமமுள்ளவனான மயில் வாகனமுடைய சுப்பிரமணியக் கடவுளைப் போன்ற வீரனே! உனது பிதாவாகிய துரோணன், துருபதன் பெற்ற வரத்தாலேயே யுத்தத்தில் மாண்டான். அப்படியில்லாமல் துரோணனை ஜெயிக்க வல்லமையுடையவர்கள் ஒரு வீரரும் இந்த நிலவுலகத்தில் இல்லை. இனி, நீ மனப்பூர்வமாக சிவபெருமானுடைய திருவடிகளில் தலைவைத்துத் தொழுது, பிறவித்துன்பம் நீங்கும்படி மிகவும் தியானிப்பாய்! பிறப்பு ஒழியும்படி ஐம்பொறிகளின் ஆசையையும் ஒன்றாக அடக்கி உரிய ஒழுக்கத்தோடு கடும்தவம் செய்வாயாக!'' என்று அன்போடு உபதேசித்துவிட்டுச் சென்றார்.

அப்போது சூரியன் அஸ்தமித்தான்!

சூரியன் அஸ்தமிக்கவே தருமர், 'எங்கும் இருள் பரவிவிட்டது. இன்றைக்குப் போர் இத்துடன் போதும்' என்று நிச்சயித்து, தமது சேனையுடன் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்.

துரோணருடைய மரணத்தால் வருந்தி தனித்த மனமுடையவனாய் நின்ற துரியோதனனும், பிறகு தனது சதுரங்கச் சேனையோடு வேகமாகப் போர்க்களத்தைவிட்டுப் பாசறைக்கு ஓடிப் போனான்!

பாசறைக்கு வந்த பின்பு துரியோதனன் சஞ்சய முனிவரை வரவழைத்து நமஸ்கரித்தான். முனிவரை நோக்கி துரியோதனன், ''தவசிரேஷ்டரே! நீர் இந்த இரவிலேயே உமது பிராண சிநேகிதராகிய என் தந்தையிடம் போய், கண்ணனுடைய தந்திரத்தால் தருமன் பொய்ப் பேசியதையும், துரோணாசாரியார் இறந்ததையும், இனி எனது சேனைக்குக் கர்ணன் சேனாதிபதியாவதையும் சொல்லும். பிறகு, இனி நடக்க வேண்டியவற்றையும் ஆலோசித்துக் கொண்டு பொழுது விடிவதற்குள் திரும்பி வந்துவிடும்!'' என்றான்.

துரியோதனனுடைய ஆணைப்படி சஞ்சயமுனிவர் அக்கணமே புறப்பட்டு திருதராஷ்டிரனிடம் போய்ச் சேர்ந்தார். அவனிடம் துரியோதனன் கூறியவற்றைத் தெளிவாக எடுத்துச் சொன்னார். அதுகேட்டு திருதராஷ்டிரன் முதலில் பெரிதும் மனம் வருந்திப் புலம்பிச் சோகித்தான். பிறகு, அவன் அப்படி வருந்துவது தவறு என்று மனம் தேறி, இனி செய்ய வேண்டியது பற்றி ஆலோசித்து சஞ்சயமுனிவரிடம் சொன்னான்.

திருதராஷ்டிரன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டு, அவனிடம் விடை பெற்று சஞ்சயமுனிவர் அந்த இரவிலேயே துரியோதனனிடம் திரும்பி வந்து சேர்ந்தார். பின்பு, சஞ்சயமுனிவர் துரியோதனனிடம் திருதராஷ்டிரன் சொன்ன வார்த்தைகளைக் கூறினார்.

அப்பொழுது பொழுது விடிந்தது. சூரியன் தனது மகனாகிய கர்ணன் கௌரவசேனைக்குத் தளபதியாவதை எண்ணி மகிழ்ச்சியோடு, ஆதிசேஷனுடைய மாணிக்கங்கள் யாவும் உதயகிரியில் வந்துவிட்டதோ என்று நிலவுலகத்தவர்கள் எல்லோரும் சொல்லும்படி தனது தேரை ஓட்டிக் கொண்டு தோன்றினான்!



கர்ண பருவம்



1. பதினாறாம் நாள் போர்

அரவக் கொடியுடைய துரியோதனன், 'கங்கா புத்திரராகிய பீஷ்மரும், வில்லாசிரியராகிய துரோணரும் தம்மால் ஆனமட்டும் பகைவர்களைக் கொன்று போரில் மாண்டார்கள். இனிமேல் இப்போரில் பகைவர்களை ஜெயிக்க வல்லவர்கள் என் உயிர் நண்பனாகிய கர்ணனைத் தவிர வேறு யாரும் இல்லை!' என்று துணிந்தான். உடனே அவன் கர்ணனை சேனைக்குத் தலைவனாக்கினான். பின்பு, அவனோடும் சேனையோடும் துரியோதனன் கொடிய போர்க்களத்தை அடைந்தான்.

சபதப்படி துரோணாசாரியாரின் தலையைத் துண்டித்த திருஷ்டத்யும்நனும், பஞ்சபாண்டவர்களும், மற்றுமுள்ள அரசர்களும், ஸ்ரீகிருஷ்ணபகவானும் தங்களுடைய சதுரங்கச் சேனையோடு போர்க்களத்துக்குப் போனார்கள். அவர்கள், 'இன்றையப் போரில் பகைவரை ஜெயிப்பது நமது கடமை' என்றெண்ணி, பகைவர் சேனையை எதிர்த்தார்கள்.

சூரிய குமாரனாகிய கர்ணன் குதிரைகளும், ரதங்களும், யானைகளும், பதாதிகளும், துவஜங்களும், குடைகளும் உடைய அரசர்கள் தாம்தாம் நிற்பதற்குரிய இடங்களிலெல்லாம் நின்று நின்று யுத்தம் செய்யும்படி, கௌரவசேனையை பெரிய மகரவியூகமாக அணிவகுத்தான்.

கொடிய குதிரைகளின் மேலும், தேர்களின் மேலும், யானைகளின் மேலும் ஏறி வந்த துரியோதன சேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும், 'சூரியபுத்திரனாகிய கர்ணன் மிகவும் முயன்று இன்றைக்கு திருதராஷ்டிர குமாரனாகிய துரியோதனனுடைய சேனைக்குத் தலைவனானான். இத்தனை நாளாய்க் கழிந்த அரிய போர் போகட்டும். இனி, தனித்தனியே போர் செய்து பகைவரை வெல்வோம்!' என்று துணிந்தார்கள். பிறகு, அவர்களில் குதிரைவீரர்கள் குதிரைவீரர்களோடும், யானைவீரர்கள் யானைவீரர்களோடும், தேர்வீரர்கள் தேர்வீரர்களோடும் எதிர்த்துப் போய் யுத்தம் தொடங்கினார்கள்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் சொற்படி பாண்டவ சேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நன் தனது சேனையை, பகைவர்கள் கண்டு அஞ்சும்படி கொடிய சக்கரவியூகமாக அணிவகுத்தான். வியூகத்தின் நடுவில் நின்ற பீமன் தேரைவிட்டு இறங்கி, கொடிய போரைச் செய்யவல்ல ஒரு யானையின் மேல் ஏறிக் கொண்டான்.

பீமன் ஏறிக் கொண்ட அந்த யானை, கையின் அடி பருத்து நுனிக்கை வரையிலும் செம்புள்ளிகளால் பொலிவு பெற்று, மடக்கினாலும் தரை வரையில் தாழ்ந்து தொங்குகின்ற துதிக்கையையுடையது. சிவந்த நிறமுள்ள வாயையுடையது. பூர்ணசந்திரனை இரண்டு துண்டாக்கி இரண்டு பக்கங்களிலும் வைத்தது போலப் பூண்பொருந்தி பகைவரின் உடம்பைத் தாக்கிக் குத்துகின்ற தந்தங்களை உடையது. இரண்டு கண்களும் புன்னை மரத்தின் புதிய பூவென்று உவமை சொல்லப்படும் தன்மையையுடையது. சிந்தூரத்திலகமும் பட்டமும் விளங்கப் பெற்ற நெற்றியை உடையது. பெரு விசிறி போன்ற காதுகளால் காற்றைப் பல திக்குகளிலும் வீசுவது. உத்தம இலக்கணமாகிய சிவந்த புள்ளிகள் செம்பட்டினால் செய்த சித்திரவேலை போலப் பொருந்தப் பெற்றது. மூன்று உலகங்களையும் அரசாளுகின்ற தேவேந்திரனுடைய ஐராவதயானை போல் மதக்களிப்புப் பொருந்தியது. உத்தம கஜலக்ஷணத்தின்படி அங்குலங்கள் அமைந்து விளங்குகின்ற தலையானது, அதற்குத் தக்க கழுத்தில் அழகிய பொன் மயமான மேருமலையின் சிகரம் போல் உயர்ந்திருக்கப் பெற்றது. மார்பில் உத்தம லக்ஷணமாகிய மூன்று சுழிகளைக் கொண்டது. கால்கள் வலிமையினால் கற்கம்பத்துக்குச் சமமானவை என்று சொல்லத்தக்க தன்மையுடையது. வெண்ணெய் போன்ற வெண்ணிறமான நகங்களைக் கொண்டது. திருமாலின் மேனிவண்ணம் போல் கருநிற முடையது. ஆமைகள் போன்ற புறக்கால்களையுடையது. உடம்பு திண்ணென்று வலிமையையுடையது. அழகிய வயிற்றையுடையது. இளமையான பாக்குமரம் போன்ற வாலையுடையது. கட்டுத்தறியை ஒடித்து, அதில் கட்டியுள்ள இரும்புச் சங்கிலியை அறுத்துவிடக் கூடியது. பாகனையும், அங்குசம் முதலிய எல்லாவற்றையும் வெகுதூரத்தில் கண்டாலும் அஞ்சாமல் மனம் வெதும்பும் தன்மையுடையது. தனது நிழலைப் பார்த்து வேறொரு

யானை என்று நினைத்துக் கோபிக்கின்ற எண்ணமுடையது. நாட்டியம் முதலிய நான்கு தொழில்களும் நிரம்பப் பெற்றது. மகாமேருமலைக்குச் சமம் என்னும்படி மிகவும் உயர்ந்த ஏழுமுழம் உயரமுடையது. ஆமாம். பகைவர்கள் கண்டு அஞ்சும்படியான அந்த யானை இத்தனைத் தன்மைகளையும் கொண்டது.

பீமனைப் போலவே அப்போது காசி நகரத்து ராஜனாகிய கேமதூர்த்தியும் அதே போன்ற ஒரு யானையின்மேல் ஏறினான். பிறகு, அவர்கள் இருவரும் தத்தம் யானையின்மேல் இருந்தபடியே ஒருவரையொருவர் போரிட்டு ஜெயிக்க நினைத்து நெருங்கினார்கள். யானைகள் இரண்டும் நெருங்கியதும் தம்மில் ஒன்றையொன்று கோபித்து யுத்தம் செய்தன. இரண்டு இந்திரர்கள் மேகவாகனத்தில் ஏறி யுத்தம் புரிவது போல, கேமதூர்த்தியும் பீமனும் தங்களுடைய யானைமேல் இருந்தபடி ஒருவரோடொருவர் மிகவும் கோபம் கொண்டு போர் செய்யத் தொடங்கினார்கள்.

யுத்தம் செய்கையில் அவர்கள் இருவரும் அங்குசத்தாலும், அதட்டலாலும், கால் எந்தியும் தங்கள் யானைகளைத் துரிதநடையில் ஓட்டினார்கள்; மந்தநடையில் ஓட்டினார்கள்; ஓட்டமாக ஓட்டினார்கள்; வலச்சாரி இடச்சாரியாக ஓட்டினார்கள்.

மேலும், அவர்கள் இருவரும் ஆதிசேஷனும் தேவேந்திரனும் அஞ்சும்படி கணக்கற்ற பாணவர்ஷங்களைச் சொரிந்து போரிட்டார்கள்.அப்போது பீமனுடைய கொடிய பாணப் பிரயோகத்தைத் தாங்க முடியாமல், கேமதூர்த்தி பகைவரைக் கொல்லவல்ல ஒரு வேலாயுதத்தை அவன் மேல் எறிந்தான். தன்னை நோக்கி வேகமாக வந்த அந்த வேலாயுதத்தையும், கேமதூர்த்தியின் யானையையும் பீமன் ஒரு பாணத்தால் துண்டித்துத் தள்ளினான்.

உடனே கேமதூர்த்தி மலையிலிருந்து இறங்கிய சிங்கம் போல, இறந்த யானை மேலிருந்து தரையிலே இறங்கி நின்றான். பின்பு, ஒரு கதாயுதத்தை எடுத்து பீமனுடைய யானையை அடித்துக் கீழே தள்ளிக் கொன்றான்.அதனால் பீமனும் தரையிலே குதித்து நின்றான்.

யானையையிழந்து தரையிலே நின்ற பீமனும் கேமதூர்த்தியும் மன்னர்கள் எல்லோரும் வியப்புடன் பார்க்கும்படி கதாயுதப்போர் புரிந்தார்கள். மலையும் மலையும் போரிட்டதுபோல் அவர்கள் வேறு ஓர் எண்ணமும் இல்லாமல் யுத்தம் செய்தார்கள். அவர்கள் செய்தபோர் இப்படிப்பட்டது என்று யாரால்தான் சொல்ல முடியும்?

பீமனும் கேமதூர்த்தியும் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு, வலதுசாரி இடதுசாரியாக மாறிமாறிப் போரிட்டார்கள். சமுத்திர ஓசை போல் பெருமுழக்கம் ஏற்படும்படி கதாயுதத்தால் தாக்கி யுத்தம் புரிந்தார்கள். கடைசியில் பீமன் கேமதூர்த்தியைக் கதாயுதத்தால் உக்கிரமாகத் தாக்கிக் கொன்றான்.

கேமதூர்த்தி பீமனால் இறந்ததும், துரியோதனனுடைய சேனை வலிமையிழந்து நிலைகுலைந்தது. கர்ணன் அதைக் கண்டான். உடனே கர்ணன் சிதறியோடிய சேனைக்கு முன்னே போய் தைரியப்படுத்தித் திரும்பவும் அதனை ஒழுங்காக அணிவகுத்து யுத்தத்துக்குச் சித்தம் செய்தான்.

யுத்தத்துக்குத் தயாராக நின்ற துரியோதனனுடைய சேனையைக் கண்டதும், தருமருடைய சேனை அதன்மீது கோபித்துப் போருக்குச் சென்றது!

இரண்டு பக்கத்துச் சேனைகளிலுமுள்ள யானைகளின் தந்தங்களில் பூண்கள் அணியப்பட்டிருந்தன. அவற்றின் பரந்த நெற்றியில் பட்டம் முதலிய ஆபரணங்கள் விளங்கி மின்னல் போல ஒளிவீசின. வண்டுகள் மொய்க்கும் இரண்டு கன்னங்களிலிருந்தும் மதநீர் வெள்ளமாகப் பீறிட்டுத் தரையிலே இறங்கியது. முதுகின் இரண்டு பக்கங்களிலும் அணியப்பட்டுள்ள மணிகள் 'கணகண' என்று ஒலித்தன. இடிமுழங்கும் வானத்தில் செல்லும் மேகங்கள் போல உயர்ந்த உருவத்தைக் கொண்ட அந்த யானைகள், பலவகை நடை வித்தியாசங்களுடன் வேகமாகச் சென்றன.

இரண்டு பக்கத்துச் சேனைகளிலுமுள்ள தேர்களின் மலைச்சிகரம் போல் உயர்ந்த மகுடம் ஒன்பதுவகை ரத்தினங்களால் செய்யப்பட்டிருந்தது. மலையருவி போல அவற்றின் சவரம் விளங்கியது. மலையிலுள்ள வனம் போல

அவற்றின் கொடி அசைந்தாடியது. மலையிலுள்ள மலர்களைப் போல அவற்றில் தொங்கவிடப்பட்டுள்ள மாலையின் மலர்கள் விளங்கின. அவற்றில் மறைவாகவுள்ள உள்ளிடங்கள் சில மலைக் குகைகளைப் போல் காட்சியளித்தன. இந்திரனால் வெட்டப்படுவதற்கு முன்பு தத்தமக்கு உள்ள சிறகுகளால் சஞ்சரித்த பலமலைகள் போல, அந்தத் தேர்கள் யாவும் மிகவும் நெருங்கிப் பெரும் சப்தத்துடன் ஓடின.

இரண்டு பக்கத்துச் சேனைகளிலுமுள்ள குதிரைகள் சண்டை செய்வதிலும், பலத்திலும், வேகத்திலும் சிறந்தவை. எல்லாவுலகங்களையும் ஒரு மாத்திரைப் பொழுதுக்குள் சுற்றி வந்துவிடக் கூடியவை. கடலிலே அலைகின்ற அலைவரிசைகளோடு ஒத்திருப்பவை. மரம் போல் அடர்ந்திருக்கின்ற சேனை அழியும்படி கம்பீரமாகச் செல்பவை. பூக்களின் வாசனை போன்ற நல்வாசனை வீசும் சுவாசத்தையுடையவை. பூமியில் பலவகையாக நடக்கின்ற அந்தக் குதிரைகள் யாவும் ஒன்றாகக் காற்றுப் போல மிகுதியாகப் பரந்து சென்றன.

இரண்டு பக்கத்துச் சேனையிலுமுள்ள காலாள்வீரர்கள் அணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் கிடைப்பதற்கரிய நவரத்தினங்கள் போல் ஜொலித்தன. அவர்கள் ஏந்தியிருந்த ஆயுதங்களெல்லாம் உடம்பில் படர்ந்த நீர்ப்பாம்புக் கூட்டம் போல் விளங்கின. அவர்கள் அணிவகுத்து நின்ற காட்சி கடலலைபோல் வரிசை வரிசையாக இருந்தது. அப்படிப் பட்ட அந்த வீரர்கள் எல்லோரும் சமுத்திரம் பொங்கி எழுந்து பரவியது போலக் கோபமிக்க ஓசையோடு வேகமாகச் சென்றார்கள்.

இரண்டு பக்கத்துச் சேனைகளும் போருக்கு அப்படிப் புறப்பட்டதும் பேரிகை, கரடிகை, கிணை, துடி, பெருமரம், படுபறை முதலிய தோற்கருவிகளும்; சங்கு, ஊதுகொம்பு, வேய்ங்குழல், சின்னம் முதலிய ஊதுகருவிகளும் முழங்கின. அந்த யுத்தகருவிகள் யாவும் சேர்ந்து ஏழுஉலகங்களும் அழியும்படி பிரளயகாலத்தில் மேலே பொங்கி வருகின்ற சமுத்திரத்தைப் போலவும், புயற்காற்று போலவும், ஆகாயத்தின்மேல் படர்ந்து இடியிடிக்கின்ற மேகம் போலவும் பேரொலி எழுப்பின.



போருக்கு ஆயத்தமாகி நெருங்கிய அந்த இரண்டு சேனைகளும் ஒன்றையொன்று பயங்கரமாக எதிர்த்துப் போரிட்டன. இரண்டு சேனைகளிலுமுள்ள யானைகளும் யானைகளும், தேர்களும் தேர்களும், குதிரைகளும் குதிரைகளும் எதிர்த்துப் போரிட்டன. அது போல் காலாள் வீரர்களும் காலாள் வீரர்களும், போரிட்டார்கள். கிரீடாதிபதிகளும் கிரீடாதிபதிகளும் போரிட்டார்கள்!

அப்போது கர்ணனும் நகுலனும் குதிரைமேல் ஏறிக் கொண்டு, அதனை வேகமாக வலதுசாரி இடதுசாரியாகச் செலுத்தி, ஒருவரையொருவர் கோபித்துப் போர் செய்தார்கள். அவர்கள் செலுத்திய குதிரைகளின் பலவகை நடையால் பூமியிலிருந்து பெரும்புழுதிப் படலம் எழுந்து ஆகாயத்துச் சூரியனை மறைத்தது.அதனால் பூமியில் இருள் பரவியது. அதேசமயம் பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய உச்சிக் கொண்டையிலுள்ள மாணிக்கங்கள் பூமியில் புழுதி நீங்கியதால் வெளிப்பட்டு ஒளி சிந்திப் பகலைக் கொடுத்தன.

அவர்கள் இருவரும் ஏறியிருந்த அந்தக் குதிரைகள் தம்மேல் ஏறியவரின் தொடைகளின் அடிகளாலும், சவுக்கின் அடிகளாலும், கடிவாளத்தையிழுக்கும் வலிமையாலும் அவர்களுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்கின்ற

நல்லறிவு பொருந்தியவை; வளர்ச்சியையும் உடையவை; குற்றமில்லாத சுழிகளையுடையவை; நிறமும், கனைக்கின்ற ஒலியும், மனத்தின் ஊக்கமும் சிறந்துள்ளவை; வலிமை கொண்ட பலவகை நடைகளிலும் வேகம் பொருந்துபவை; தேவேந்திரன் ஏறிச் செலுத்தும் உச்சைச்சிரவம் என்னும் வெள்ளைக் குதிரையை ஒத்திருப்பவை.

துரியோதனனுடைய நண்பனாகிய கர்ணனும், தருமருடைய தம்பியாகிய நகுலனும் இடியோசையைக் காட்டிலும் ஏழுமடங்கு அதிகமாக ஆரவாரித்தபடி, தமது கொடிய வில்லை வளைத்துச் சரமாரியாக ஒருவர்மேல் ஒருவர் அம்பு தொடுத்துப் போரிட்டார்கள்.

நகுலன் தான் தொடுத்த கணைகளால் கர்ணனுடைய தேரையும், குதிரையையும், துவஜத்தையும், வில்லையும், மார்பில் அணிந்த ஆரங்களையும், கவசத்தையும் சிதைத்துத் தள்ளினான். பின்னும் நகுலனுடைய பாணங்கள் கர்ணனுடைய இரண்டு தோள்களிலும் பதிந்தன; மார்பில் தைத்தன; நெற்றியில் சிந்தூரத்திலகம் போல் ரத்தப்பொட்டை ஏற்படுத்தின. அதனால் கர்ணன் கோபமும் மகிழ்ச்சியும் ஒருங்கே ஏற்பட்டு மனஞ்சுழலத் தரையிலே வலிமையோடு குதித்து நின்றான்.

உடனே கர்ணனுடைய தேர்ச்சாரதி அவன்முன்பு ஒரு தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான். கர்ணன் அதில் ஏறிக் கொண்டான். நகுலன் அதைப் பார்த்து குதிரையைவிட்டு இறங்கி, தானும் ஒரு தேரில் ஏறிக் கொண்டான். பிறகு, அவர்களுடைய தேர்ச்சாரதிகள் தங்களுடைய தேரை ஒன்றையொன்று நோக்கிச் செலுத்தி நெருங்கினார்கள்.

தங்களுடைய தேர்கள் சமீபித்ததும், கர்ணனும் நகுலனும் விற்களை வளைத்து அம்புகளை ஒருவர்மேல் ஒருவர் சிந்தினார்கள். அவர்கள் பிரயோகித்த பாணவர்ஷங்கள் பூமியிலே நிறையும்படி ஏழுமேகங்களின் மழைபோல விழுந்தன. அதனால் அப்போது நகுலனுக்கு உதவி செய்வதற்காக அருகில் வந்த அரசர்கள் கர்ணனுடைய அம்புமழையாலும், கர்ணனுக்கு உதவி செய்வதற்காக அருகில் வந்த மன்னர்கள் நகுலனுடைய அம்புமழையாலும் புண்பட்டுக் குருதியில் நனைந்து தரையிலே விழுந்து புரண்டார்கள்.

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் நோக்கிப் பிரயோகித்த அம்புகள், இருவருடைய தேர்க்குதிரைகளின் உடம்பிலும் பலமாகச் செருகின; தேர்ப்பாகர்கள் இறந்துவிழும்படி அவர்களுடைய உடம்பிலே நெருப்புப் போலப் பற்றின; இருவர் தேரும் அழியும்படி விரைந்து ஊடுருவின; இருவர் கொடிகளும் அறும்படி வேகமாகச் சென்றன; இருவர் விற்களும் நடுவிலே துண்டாகும்படிப் பொருந்தின; இருவர் கவசங்களிலும் இடையிடையே தைத்தன; இருவர் குடைகளும் சாயும்படித் தடவின; இருவர் உடம்பிலும் கிளறின.

மீண்டும் தேரிழந்து கர்ணனும் நகுலனும் தரையிலே நின்றார்கள். அதுகண்டு அவர்களுடைய வேறு தேர்ப்பாகர்கள் தேர்களைக் கொண்டு வந்து அவர்கள் எதிரே நிறுத்தினார்கள். உடனே அவர்கள் இருவரும் தங்களுடைய தேரில் ஏறிக் கொண்டார்கள். பின்பு, மற்ற அரசர்கள் எல்லோரும் நன்கு மதிக்கும்படி முன்னைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக வில்யுத்தம் தொடங்கினார்கள்.

அப்போது சூரிய குமாரனாகிய கர்ணன், 'தேவ வைத்தியர்களான அசுவினிதேவருடைய மைந்தனாகிய நகுலனை யுத்தத்தில் இப்போது நான் கொன்றால், முன்பு எனது தாயுக்குக் கொடுத்த வாக்கைத் தவறியவனாவேன்!' என்றெண்ணினான். அதனால் கர்ணன் ஓர் அம்பைக் கொண்டு தனது அழியாத வில்லால் நகுலனைத் தோற்கடித்தான். பிறகு, அவனை நோக்கி கர்ணன், "நீ உயிருடன் திரும்பிப் போ!" என்று தனது பெருமிதம் தோன்றச் சொல்லி, அவனை அனுப்பினான்.

நகுலனுக்குத் துணையாக வந்து தன்னை எதிர்த்துப் போரிட்ட மகததேசத்தரசனையும், விடதரனையும், நகுலன் தோற்றுச் சென்றபின் கர்ணன் தனது அம்புகளால் கொன்றான். அதன்பின் காலப்ருஷ்டம் என்னும் வில்லையுடைய கர்ணன், அர்ச்சுனனோடு யுத்தம் புரிய அவன் சமீபம் சென்றான்.

அர்ச்சுனன் முன்னே சென்ற கர்ணன் தனது வில்லை வளைத்து, அவன்மேல் அம்பு தொடுக்க முனைந்தான். ஆனால், அதற்குள் அர்ச்சுனன் தனது காண்டீப வில்லை

வளைத்து கர்ணனுடைய மார்பைக் குறிவைத்து, இரண்டு பாணங்களைத் தேர்ந்தெடுத்துப் பிரயோகித்தான்.

உடனே கர்ணன் கிருஷ்ணார்ச்சுனர்களின்மேல் சில கொடிய பாணங்களைப் பிரயோகித்தான். ஆனால், அந்தப் பாணங்கள் அவர்களை ஒன்றுமே செய்யவில்லை. அதுகண்டு கர்ணன் கிருஷ்ணார்ச்சுனர்களை நன்குப் புரிந்து கொண்டான். அந்தக் கணத்தில் கர்ணன் சிரித்து, ''இவர்கள் இருவரும் நிறத்தாலும் பேராலும் தனித் தனியானவர்கள் இல்லை. அது மட்டுமல்ல. இந்த இருவருடைய மனமும் ஒன்றே!'' என்று சொல்லிக் கொண்டே அப்பால் செல்லத் தொடங்கினான்.

ஸ்ரீராமன் முதல்நாள் போரில் ராவணனை 'இன்று போய் நாளை உனது சேனையுடன் வா' என்று கூறி யனுப்பியது போல, அப்போது அர்ச்சுனன் களைத்துச் செல்லும் கர்ணனைப் பார்த்து, ''இன்று போய் நாளை வா!'' என்று கூறியனுப்பினான்.

அச்சமயத்தில் ஒரு பக்கத்தில் சாத்தகி சல்லியனை எதிர்த்து யுத்தம் செய்தான். மற்றொரு பக்கத்தில் சேரனும் சாலுவனும் சண்டை செய்தார்கள். வேறொரு பக்கத்தில் தமிழ் வளர்க்கும் பாண்டியனும் சகுனியும் கோபித்துப் போர் புரிந்தார்கள். இன்னொரு பக்கத்தில் துச்சாதனனும் சகாதேவனும் சமர் புரிந்தார்கள்.

இது இவ்வாறிருக்க, பல கோடி வாத்தியங்கள் முழங்க அசுவத்தாமனும் பீமனும் கடுங்கோபத்துடன் ஒருவரையொருவர் எதிர்த்து மற்போர் புரிந்தார்கள். பிறகு, அவர்கள் வில்யுத்தம் செய்தார்கள். அசுவத்தாமன் பீமனைப் பார்த்துக் கோபித்து, அவன் மேல் எட்டுப் பாணங்களைப் பிரயோகித்து அவனுடைய தேர்ச் சக்கரங்களையும், பாகனையும், குதிரைகளையும் அழித்துக் கர்ஜித்தான்!

தனது தேரை அசுவத்தாமனால் இழந்ததும் பீமன் அவன்மேல் கடுங்கோபம் கொண்டான். அவன் நெஞ்சிலே அந்தக் கோபம் மேலும் மேலும் அதிகமாகியது. அந்தக் கோபாவேசத்தால் அவனுடைய தோள்கள் பூரித்தன. உடனே அவன் ஒரு பெரிய வில்லை எடுத்தான். சக்கரவாளகிரிக்குச் சமமாக அந்த வில்லை வட்டமாக நன்கு

வளைத்து, பீமன் அசுவத்தாமன்மேல் அம்புகளைத் தொடுத்தான். தான் தொடுத்த அந்த அம்புகளால் அவன் அசுவத்தாமனுடைய தேரையும், கொடியையும், சாரதியையும், குதிரைகளையும் பொடிப்பொடியாக ஆக்கினான். மேலும், பீமன் அசுவத்தாமனைத் தனது கொடிய பாணப் பிரயோகத்தால் தோற்றோடச் செய்தான்.

அப்போது கேகயநாட்டரசனும் சுருதகீர்த்தியும், ஒருவரோடொருவர் எதிர்த்து ஒரு பக்கத்தில் போர் தொடங்கினார்கள். மற்றொரு பக்கத்தில் கிருதவர்மாவுடன் போரிட்டு சிகண்டி, அவனால் தனது தேர்க்கொடி அறுந்துவிழத் தோற்றுச் சென்றான். அதுபோலவே திருஷ்டத்யும்நன் வில்லாசிரியராகிய கிருபாசாரியாரோடு யுத்தம் செய்து, அவரால் தனது தேரும் குதிரைகளும் சாரதியும் வில்லும் அழிந்து போக, அச்சமயம் அருமையாகத் தப்பிப் பிழைத்து உயிரோடு போனான்.



சந்திர குலத்தில் தோன்றி பாண்டவர்களும் கௌரவர்களும் தமக்குள் ஒருவர்க்கொருவர் பகையாகி, தேவாசுரர்களுக்குச் சமமாக, 'ஏழு தீவுகளாக இருக்கின்ற இந்தப் பூலோகம் முழுவதும் எங்களுக்கே சொந்தம்' என்று தனித்தனியே சொல்லிக் கொண்டு போரிட்டார்கள். அப்படி அவர்கள் போரிட்ட அந்த யுத்தகளத்தின் தன்மையை வர்ணிப்பது இயலாது.

துண்டித்த கால்களும் கைகளும் மலைபோல் குவிந்து கிடக்கின்ற அந்தப் போர்க்களம் முழுவதும், அவற்றைத் தின்ன வந்த கழுகுகள் ஆகாயத்தில் இடைவிடாமல் நெருக்கமாகப் பறந்து பந்தல் போட்டன. துண்டித்துக் கிடக்கும் அந்தக் கைகால்களை எடுத்துக் கொள்கின்ற பேய்க் கூட்டம் சொல்லுக்கு அடங்காதபடி பயங்கரமான அப்போர்க்களத்தை அடைந்தது. யுத்தபூமியில் பிணமாகக் கிடக்கின்ற அரசர்களின் முறிந்து தரையிலே விழுந்த குடைகளிலே சாமரங்கள் பரவலாக விழுந்து கிடந்தன. வெற்றிக்கு அறிகுறியான பேரிகைகள் தோலும் வாரும் இற்று பட்டமரம் போல் அழிந்து கிடந்தன.

யானைகளின் விசாலமான நெற்றியிலே கட்டப் பட்டிருந்த பட்டங்கள் மின்னலைப் போல் விளங்கின. அவற்றின் எலும்புகளிலிருந்து வெள்ளமாகப் பெருகுகின்ற மதஜலப் பெருக்கால் நீரோடைகள் உண்டாயின. செம்புள்ளிகள் கொண்ட யானைகளின் முகத்தில் தைத்த அம்பு, ஊடுருவிச் சென்று அவற்றின் வாலைத் துணித்தது. பெரிய மலைகள் விழுந்து கிடப்பது போல, போர்க்களம் எங்கும் யானைகள் இறந்து விழுந்து கிடந்தன.

யானைகளின் நெற்றியின் நடுவிலே மதநீரை உண்பதற்காக மிக அதிகமான வண்டுகள் வந்து மொய்த்துக் கிடந்தன. போர் செய்கின்ற யுத்தகளத்தில் கோபித்து நின்ற யானைகள் அம்பாரியோடு இறந்து விழுந்தன.

தருமருடைய சேனைகள் துரியோதனனுடைய சேனைகளையழித்து வெற்றி கொண்டு மகிழ்ச்சியால் கூத்தாடின. பேய்கள் வயிறு நிறைந்து தெவிட்டிப் போக, பிணம் அதிகம்தான் என்று ஆனந்தத் தாண்டவம் செய்தன

யுத்தபூமியில் இறந்து கிடக்கின்ற அரசர்களின் உடம்பிலே மிக அதிகமான அம்புகள் தைத்திருந்தன. இரத்த

வெள்ளத்தில் முழுகிக் கிடக்கின்ற வீரர்களின் உடம்புகள் புலால்நாற்றம் வீசின. கோபாவேசத்தால் தீப்பொறிச் சிந்துகின்ற கண்களையுடைய யானைமேல் வந்த வீரர்களின் கிரீடம் தரித்த தலைகளைச் சக்கராயுதங்கள் அறுத்தன. அந்த வீரர்களுடைய தாமரைமலர் போன்ற கைகள் தலைத்துண்டித்து விழுந்த பின்பும், நெருப்புப் பொறிச் சிந்தும் வாள்களைச் சுழற்றின. ஆ, என்ன ஆச்சர்யம்!

கூட்டமாகப் போருக்குத் திரண்டு வந்த வீரர்களுடைய முகத்தில் தைத்த பாணங்கள் கணக்கில்லாதவையாகும். வீரர்களுடைய கண்களிலிருந்து கோபத்தால் தீப்பொறிகள் பறந்தன. அவர்களுடைய புன்சிரிப்புக்கள் வெள்ளிநிலாப் போன்று ஒளியை மிக அதிகமாக வெளியில் வீசின. திக்குகளிலெல்லாம் மழை போல விழுகின்ற அநேக ஆயுதங்கள் எல்லாவிடத்திலும் கொடிய வெய்யில் போல் ஒளியை வீசின. அழிவற்ற சேனைகள் இட்ட மதிலுக்கு எந்த மதில்தான் ஒப்பாகும்?

பாணவர்ஷங்கள் அரசர்களின் ஹிருதயகமலம் ஒடுங்கும்படியாகப் பொருந்தின. அங்குப் பிணம் தின்ன வந்த நரிகளும் கழுகுகளும் மனம் கலந்த சிநேகமாயின. இந்திரனால் இறகு அறுக்கப்பட்டு விழுந்து கிடக்கின்ற மலைகள் போல யானைகள் விழுந்து கிடந்தன. எல்லாப் பக்கங்களிலும் கூத்தாடுகின்ற பேய்கள் யாமளவேதத்தைப் பாடின.

வீரர்களுடைய உடம்பிலிருந்து பெருகிய ரத்த வெள்ளத்தால் யுத்தபூமி சிவந்தது. பூதகணங்கள் தம் வயிறுகள் பெரிய ரத்தம் நிரம்பிய சுனையை ஒத்திருக்க, வயிறு நிரம்ப ரத்தத்தைக் குடித்து வளர்ந்தன. பாறு என்னும் பறவைகளும், பருந்துகளும், பல வகைப்பட்ட கழுகுகளும் பறந்து ஆகாயத்தை முழுதும் மறைந்தன. பற்களையுடைய அம்புகள் துண்டித்ததால் அந்த யுத்தகளத்தில் விழுந்து கிடந்த கழுத்துக்கள்தான் எத்தனை!

பல ஆண்யானைகள் இளமையான பெண்யானைகள் போல தந்தங்கள் ஒடியப் பெற்றன. சிவந்த ரத்தவெள்ளமாகிய நதிக்கு இரண்டு பக்கங்களிலும் துண்டித்து விழுந்து கிடக்கின்ற உடற்குறைகள் கரைகள் அமைத்தது போலிருந்தன. அரசர்களுடைய பல நினைவுகள்

நினைக்கின்ற இதயகமலம் யானைகளால் அழிக்கப்பட்டன. அவர்களுடைய பெரிய மலைகள் போன்ற அழகிய தோள்கள் கொடிய பளபளப்புள்ள வாள்களால் அழிந்தன.

முயற்சியும் வலிமையும் உடைய வீரர்களின் தலைகள் தரையிலே விழுந்து உருளும்படி அம்புகள் தைத்தன. அந்தந்த வீரர்களின் அந்தந்த உடம்புகள் விழுந்து கிடக்கின்ற இடங்கள், ஆழமான ரத்தக்குளம் போல் விளங்கின. ஏழு மேகங்களையுடைய ஆகாயமெல்லாம் இருளடையும்படி எல்லாவிடத்திலும் அதிகமான புழுதிகள் கிளம்பின. பெரும் பசியால் வருந்தும் பேய்களும் பூதங்களும் அங்குள்ள இறைச்சியைத் தின்று, ரத்தத்தைக் குடித்துப் பசிதீரும்படி விருந்தாளிகளாக மிகுதியாக வந்து கூடின.

செந்நிறமான ரத்தம் சிவந்ததொரு கடல் போலப் பெருகி அலைவீசின. தலையற்ற உடம்புகள் கோபித்து தமக்குள்ளே கைகளாலும் கால்களாலும் யுத்தம் புரிந்தன. குதிரைகள் ஐந்து வகையான நடைகளையுடைய நான்கு குளம்புகளும் அழியப் பெற்றன. இவையாவும் உண்மையாக கூரிய அம்புகளைத் தொடுக்கின்ற வீரர்களின் கைத்திறமையாகும்!

தாரைகளும், ஊதுகொம்புகளும், வேய்ங்குழல்களும், சங்கங்களும் ஆகிய யுத்த வாத்தியங்கள் மிகவும் அதிகமாக முழங்கின. ஓர் இமைப்பொழுதுக்குள் சில யானைகள் குதிரைக் கூட்டங்களைக் கலக்கின. வளைத்துப் பிடித்த ஒவ்வொரு வில்லும் ஒரு கோடி பாணங்களை ஒரே சமயத்தில் வர்ஷித்தன. வீரர்களுடைய உயிர் உடம்பை விட்டு நீங்கி மேலுலகை அடைந்தன.

அலைமோதும் கடல்களைப் போன்ற பெரிய ரத்த வெள்ளங்கள் மிகவும் ஆரவாரித்தன. போரைக் காண்பதற்காக தேவர்கள் ஏறி வந்த விமானங்கள் ஆகாயமார்க்கத்தில் விரைந்து வந்தன. இறந்த வீரர்களின் கண்களிலிருந்து தோன்றும் கோபத்தீ வெளிவிடும் புகைகள் கரிய மேகங்களை அளாவிப் பரந்தன. பெண்களின் அதிகமான ஊடலைத் தீர்ப்பதற்காக அவர்களை வணங்கிக் கூப்புகின்ற கைகள் உடைவாளோடு துண்டித்து விழுந்தன.

பூர்ணசந்திரன் போன்ற நகங்களையுடைய மதயானைகள் பகைவர்கள் தொடுத்த அம்புகளால் துதிக்கை

அறுந்துவிழப் பன்றிகளோடு ஒத்திருந்தன. காக்கைகள் இறந்துபோன வேல் வீரர்களுடைய கண்களின் கருவிழிகளைப் போய்க் குத்தியெடுத்தன. ஆயுதங்கள் பகைவரைக் கொல்லுகின்ற பருத்த யானையின் கொடிய குடலைப் போய்ப் பிடுங்கின.

வீரர்கள் அணிந்துள்ள மலர்மாலைகள் வண்டுகளின் கூட்டம் குடிக்கும்படி அதிகமாகத் தேனை உண்டாக்கின. கீழிருந்து பூமியைத் தாங்குகின்ற நாகங்கள் யாவும் மாணிக்கத்தையுடைய தம் தலைகளின்மேல் சுமை அதிகமாவதால் வருந்தி இளைத்தன. பல கணைகள் வீரர்களின் முகத்திலும், தோள்களிலும், கண்களிலும், மார்பிலும் பாய்ந்திருந்தன. பூதகணங்களின் கூட்டம் கொழுப்பையும், மூளையையும், நீண்ட குடல்களையும் உண்டன.

வீரர்களின் இதயக் கமலங்கள் பகைவர்கள் தொடுத்த அம்புகள் மிகுதியாக உட்புறம் தைத்திருந்ததால் அம்பறாத் தூணிகளோடு ஒத்திருந்தன. யானைகள் பூமியில் உடம்பும் வானத்தில் உயிரும் போகப் பெற்றன. யானைகளின் அறுந்து விழுந்த தலைகள் நரிகள் விரும்பிச் சாப்பிடுகின்ற உணவாயின.

கிருபாசாரியாருடன் போரிட்டு திருஷ்டத்யும்நன் தோற்றுச் செல்லும் முன்பு, சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் விரைந்து சென்று அர்ச்சுனனை யுத்தத்தில் எதிர்த்தார்கள். கண்ணனுடைய மனம் கலங்கும்படியும், அவன் கையில் பிடித்துள்ள குதிரை ஓட்டும் முட்கோலும் வார்க்கயிறும் அழியும்படியாகவும் சத்தியசேனன் பகைவரை யழிக்க வல்ல தோமராயுதத்தால் கண்ணனைத் தாக்கினான்.

மேகவண்ணக் கண்ணன் அடிபட்டு, அதனால் எழுந்த கோபத்தால் சிரித்தான். பிறகு, கண்ணபிரான் எதிர்த்த வீரர்கள் எல்லோரும் கரையுடைபட்டதொரு கடல்போல ஓடும்படி, அவர்கள்மேல் கீழே சிறிது தடைப்பட்ட தனது பெரிய தேரை வேகமாகச் செலுத்தினான்.

அநுமக்கொடியுடைய அர்ச்சுனன் அப்போது தன்னை வந்து எதிர்த்த சேனையோடு சித்திரசேனனையும் மந்திரபாலனையும், தனது தந்தையாகிய இந்திரன் கொடுத்தருளிய பல அம்புகளால் கொன்றான்.

மேலும், ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு உயிர் போன்றவனாகிய அர்ச்சுனன், போர் தொடங்கிய இந்தப் பதினாறு நாட்களில் தன்னால் கொல்லப்படாதிருந்த சஞ்சத்தகரையும் நாராயணகோபாலர்களையும் தனது வில்லை வளைத்து அம்பு தொடுத்துக் கொன்று, அவர்களை வீரசொர்க்கத்துக்கு அனுப்பி வைத்தான்.

தேவேந்திர குமாரனாகிய அர்ச்சுனன் சஞ்சத்தகரையும் கிருஷ்ணனுடைய பிள்ளைகளாகிய நாராயண கோபாலர்களையும் ஒரே சமயத்தில் இறக்கும்படிப் போர் செய்த காரணத்தால், துரியோதனனுடைய சேனாவீரர்கள் அச்சமுற்றார்கள். அதனால் அவர்கள் யுத்தகளம் முழுவதும் பேய்கள் கூத்தாடவும், உடற்குறைகள் கூத்தாடவும் குஞ்சங்களையும் குடைகளையும் கீழே போட்டுவிட்டுப் புறமுதுகிட்டு ஓடிப் போனார்கள்.

அர்ச்சுனனிடம் தோற்றோடிய வீரர்கள் துரியோதனன் முன் சென்று விழுந்தார்கள். அதுகண்டு துரியோதனன் ஐயாயிரம் குதிரைகளும், நாலாயிரம் யானைகளும், ஆயிரம் தேர்களும் கொண்ட பெரும் சேனையுடன் பகைவர்களை எதிர்த்துப் போருக்கு வந்தான்.

மனுநீதிக்கு இருப்பிடமான தருமர் துரியோதனன் போருக்கு வருவதைக் கண்டார். 'துரியோதனன் ஆரவாரித்துப் போருக்கு வருகின்றான். ஆகையால், இவனோடு மேகத்தால் தோன்றும் கொடிய இடிபோலப் போர் செய்வோம்' என்று எண்ணி, உள்ளத்தில் உற்சாகம் கொண்டார். உடனே தருமத்துக்கு உயிர் போன்ற தருமர் தமது சேனையைத் தயார் செய்து, துரியோதனனை எதிர்த்துப் போரிட முன்னே சென்றார்.

அளவற்ற மதயானைகளும், குதிரைகளும், காலாள்களும், தேர்களும் கொண்டுள்ள அந்த இரண்டு சேனைகளும் ஒன்றையொன்று பகைத்துப் போரிட வேகமாக நெருங்கின. இரண்டு சேனைகளிலும் வில்லும், வாளும், வேலும் ஆகிய ஆயுதங்கள் பகைமை கொண்டு முன்னே சென்றன. அப்போது வேய்ங்குழல்களும், வளைந்த சங்குகளும், தாரைகளும், ஊதுகொம்புகளும், பறைகளும் இடி முழக்கத்தைக் கொண்ட மேகம் போலவும், அலைகள் மோதுகின்ற ஆரவாரத்தைக் கொண்ட கடல் போலவும் மிகவும் அதிகமாக ஒலித்தன.

இரண்டு சேனைகளும் நடந்ததால் பூமியிலிருந்து எழுந்து கிளம்பிய புழுதி ஆகாயமார்க்கத்தில் சுழன்று, காற்றின் வேகத்தைப் பொருந்தியது. அதனால் ஆகாயத்துச் சூரியனது கிரணங்கள் இருண்டன. மேகம் ஐம்பூதங்களின் வடிவத்தை அடைந்தது. ஆகாச கங்காநதி சேறாகியது. அமராவதிப் பட்டணத்துப் பொன்மயமான தெருக்களில் மண்தூளி யெழும்பப் பெற்றது. பூர்ணசந்திரனின் உடம்பிலுள்ள களங்கம் அதிகமாகியது. அடுக்கடுக்காக மேன்மேலும் வளர்ந்திருக்கின்ற உருண்டை வடிவமான அண்டத்தின் மேல்முகடும் அதிர்ச்சியடைந்தது.

இரண்டு பக்கத்துச் சேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடத் தொடங்கின. குதிக்கின்ற குதிரைகளின் மேலேறிய பல வீரர்கள், குதிரைகளின் மேலேறிய வீரர்களை எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள். கொடிய துதிக்கையை யானைகளின் மேலேறிய பலவீரர்கள், யானைகளின் மேலேறிய வீரர்களைக் கோபித்துப் போர் புரிந்தார்கள். ஒலியோடு மிக வேகமாகச் செல்லும் தேர்களின் மேலேறிய அநேக வீரர்கள், தேர்களின் மேலேறிய வீரர்களை எதிர்த்துப் போர் செய்தார்கள். வலிமை மிகுந்த கொடிய காலாள் வீரர்கள் பலர், காலாள் வீரர்களோடு போரிட்டார்கள்!

தருமத் துரியோதனர்களின் பொற்சக்கரத் தேர்களை, அவர்களுடைய தேர்ச்சாரதிகள் மிக வேகமாக இரண்டு மலைகள் போர் செய்கின்ற வலிமை போல ஒன்றையொன்று நோக்கிச் செலுத்தி நெருங்கினார்கள். அப்போது அரவக்கொடியுடைய துரியோதனனும் முரசக்கொடியுடைய தருமரும் தங்கள் விற்களை வளைத்துத் தொடுத்த அம்புகளால் வானத்தை மறைத்தார்கள்.

தருமர் துரியோதனனுடைய அம்புகளைத் தமது எதிரம்புகளால் தடுத்து அழித்தார். அது போலவே தருமர் தொடுத்த அம்புகளை துரியோதனன் தனது எதிரம்புகளால் சிதைத்தான். அவர்கள் இருவரும் வெகுநேரம் அடங்காத கோபமும், பராக்கிரமமும், இரண்டு தோள்களின் பலமும் அழியாமல் அருமையாகப் போர் செய்தார்கள். பின்பு, தருமர் தொடுத்த ஏழு அம்புகள் துரியோதனனுடைய மார்பைத் துளைத்தன. அதனால் நீலகிரியில் இளஞ்சூரிய கிரணம் விழுகின்ற தாரை போல, துரியோதனனுடைய

மார்பிலிருந்து இரத்தம் பெருகி வழிந்தது. துரியோதனன் சற்றே உடல் சோர்ந்தான்.

ஆனால், மறுகணமே துரியோதனன் திரும்பவும் பழைய பராக்கிரமத்தைப் பெற்றான். உடனே அவன் நெறித்த புருவம் போல் தனது வில்லை வளைத்து, தருமர்மேல் ஆராய்ந்தெடுத்த அம்புகளை வேகமாகத் தொடுத்துவிட்டான். அவனுடைய அம்புகள் தவறாமல் சென்று தருமருடைய மார்பை பதிலுக்குத் துளைத்தன. அதனால் தருமருடைய மார்பிலிருந்து குருதிப் பெருகி வழிந்தது.

தங்களுடைய மார்பிலிருந்து ரத்தம் சொட்ட இருவரும் போரிட்ட போது, தருமர் பராக்கிரமத்தோடு நின்று யுத்தம் புரிந்து கோபத்தால் சிரித்தார். அச்சிரிப்போடு அவர் தனித்தனியே நான்கு பாணங்களைப் பிரயோகித்து துரியோதனனுடைய தேரையும், சாரதியையும், கொடியையும், குதிரைகளையும் அழித்தார்.

முரசுக் கொடியுடைய தருமருடைய பாணங்களால் தேரிழந்து தரையிலே இறங்கி நின்ற துரியோதனன், உடனே இமயமலை போன்ற வேறொரு தேரில் ஏறிக் கொண்டு தருமர்முன் யுத்தம் செய்ய வந்தான். அப்படி வந்தவன் பகைவரின் மார்பை அழித்துத் திரும்பிப் பிரயோகித்தவரிடமே வந்து சேர்கின்ற ஒரு கூரிய வேலாயுதத்தைக் கையில் எடுத்து, தருமருடைய மார்பைக் குறிவைத்து வேகமாக வீசினான். அக்கணத்தில் தருமருடைய வில் பிரயோகித்த ஓர் அம்பு துரியோதனன் ஏவிய வேலாயுதத்தின் முனையை ஒடித்தது. மேலும், அந்த வேலாயுதத்தை அந்த அம்பு இரண்டு துண்டாக்கி நடுவழியிலேயே விழச் செய்தது.

பின்னும் துரியோதனன் மனம் வருந்தி வெட்கப்படும்படி, தருமர் அவனுடைய தேரையழித்து வெற்றி கொண்டார். அப்போது அவர், ஆகாயத்தில் போர்க்காண வந்து நிற்கும் தேவர்களெல்லோரும் கேட்டு மனம் மகிழும்படி, துரியோதனனை நோக்கிச் சில மெய்வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கி, ''துரியோதனா! ராஜசபையிலே உனது மாமனாகிய வஞ்சக சகுனி, எங்கள் ராஜ்ஜியத்தைப் பறித்துக் கொள்ளும்படி கேவலமான

சூதாட்டத்தை ஆடிய தந்திரம் செய்வதற்கு அருமையானது! ஆனால், இப்போது போர் செய்வதோ செய்வதற்குச் சுலபமானது என்று எண்ணி நீ என்முன் போருக்கு வந்து நின்றாய் போலும்! உனது ஒளிமிக்க ரதமும் ஆயுதங்களும் அழிந்து போக, நீயும் மனவலிமை இழந்தாய்! உன் மனம் தெளிவான அறிவென்பதைச் சிறிதும் கொண்டதில்லை! பயங்கரமான யுத்தத்தில் நீ பகைவரை ஜெயித்த வீரத்தன்மை போதும்! போதும்! வாயுபுத்திரனும், பகைமன்னர்களுக்கு இடிபோன்றவனும், எனது தம்பியுமாகிய பீமன் முன்பு சபதம்செய்த வார்த்தை, உன்னை நான் கொன்றால் தவறிப் போகும். இதை எண்ணியே உன்னை இன்று கொல்லாமல் பிழைத்துப் போக விடுகின்றேன். இல்லையென்றால் உனது வலிமை என் அம்புகளுக்கு முன் என்னவாகும்? ஆகையால், உனது மார்பில் அணிந்த தும்பைப்பூ மாலை சருகாக உலர்ந்து போகும்படி, கால்களின் வேகத்தால் அதிகமாகப் புழுதி எழ, நீ என் கண்ணெதிரே நிற்காமல் ஓடிச் சென்று மறைந்து போ! இனி, எங்கள் ஆண்மை பற்றிச் சொல்லி என்ன பயன்? நாளைக்கு வலிமையுடன் சேனைகளை அணிவகுத்துப் போருக்கு வா!'' என்று கூறினார்.

அதுகேட்டு துரியோதனன் அதிகமாகச் சிரித்து சிங்கநாதம் செய்தான். பிறகு, அவன் தருமருடைய மார்பை நோக்கி ஒரு பெரிய கதாயுதத்தை வேகமாக எறிந்தான். உடனே தருமர் அந்தக் கதாயுதம் பிளவுபடும்படியாகவும், துரியோதனன் நடுக்கமடைந்து தரையிலே விழும் படியாகவும் ஒரு வேலாயுதத்தை எடுத்து அவனை நோக்கி வீசினார். அவ்வளவுதான். தருமருடைய வேலாயுதம் துரியோதனனுடைய கதாயுதத்தைத் தாக்கி அழித்தது. துரியோதனனையும் தாக்கித் தரையிலே வீழ்த்தியது!

அங்கதேசத்து ராஜாவாகிய கர்ணன் துரியோதனனுடைய நிலையைக் கண்டான். அக்கணத்தில் கர்ணன், 'ராஜராஜனாகிய துரியோதனனுடைய தேரும் குதிரைகளும் சாரதியும் முன்பே சத்தியம் தவறாத தருமரால் அழிய, பிறகு அவர் பிரயோகித்த வேலால் துரியோதனன் தாக்குண்டு தரையிலே விழுந்தான். ஊழ்வினை அவனைக் கொல்வதற்குச் சுற்றிக் கொண்டதோ? ஆமாம். நமது வெற்றி தாழ்வடைந்தது!' என்றெண்ணி, மனம் கலங்கிய துரியோதனன் அருகில் அவனுக்கு உதவியாக வந்து சேர்ந்தான்.

துரியோதனனுடைய நிலையை அசுவத்தாமனும் கண்டான். அவன், 'கல்பட்ட புண்ணில் மீண்டும் தடியடிபட்டது போல, முந்தினநாள் யுத்தத்தில் என் தந்தையாகிய துரோணர் இறந்ததால் ஏற்பட்ட மனவருத்தத்தோடு இன்று மன்னாதிமன்னனும் தரையிலே விழுந்தானே!' என்று எண்ணி வருந்தி, உக்கிரமாகப் பகலில் தோன்றும் சூரியனைப் போல துரியோதனனிடம் வந்தான்.

வேட்டையாடும் கொடிய ஆண்யானை போன்ற ராஜாதிராஜனாகிய துரியோதனன் விற்போரில் தேரிழந்து அறிவு கலங்கி, தருமருடைய வேலாயுதத்தால் தாக்குண்டு தரையிலே விழுந்தான் என்பதை கிருபாசாரியார் பிறர் சொல்லக் கேட்டறிந்தார். அக்கணமே அவர் கர்ணனுக்கும் அசுவத்தாமனுக்கும் முன்னே துரியோதனனிடம் ஓடி வந்தார்.

துரியோதனனுடைய நஞ்சாவட்டை பூமாலை யணிந்த மார்பிலே சத்திய சந்தனான தருமருடைய கையால் எறியப்பட்ட வேலாயுதம் தைத்து அவன் கீழே விழும் முன்பே, சல்லியனும் கோபிக்கின்ற மனத்தோடு வலிய புலி பாய்ந்தது போலத் தனது சக்கரவர்த்தியின் முன்னால் விரைந்து வந்தான்.

துரியோதனனுக்கு உதவியாக வந்து சேர்ந்த அரசர்கள் எல்லோரும், தங்களுடைய பெரிய சேனைகளோடு விரைந்து வந்து தருமரை வளைத்துக் கொண்டார்கள். அதேசமயம் தருமருக்கு உதவியாக அர்ச்சுனன் முதலிய அரசர்கள் யாவரும் அவர் அருகே வந்து சேர்ந்தார்கள்.

பின்பு, கௌரவர்களும் பாண்டவர்களும் தங்களுடைய சதுரங்கச் சேனைகளோடு எதிர்த்துக் கடுமையாக யுத்தம் புரிந்தார்கள். அந்தப் போரில் கௌரவசேனாவீரர்கள் தோற்று, தங்களுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும் போட்டுவிட்டு துரியோதனனோடு ஓடிப் போனார்கள்.

கொங்குநாட்டு மன்னன் வக்கபாகை வரபதியாட் கொண்டான் தந்த வெகுமானத்தைப் பெற்ற புலவர்களின் நெஞ்சம் மகிழ்ச்சியால் களிப்பது போல, போரில் கௌரவ சேனையை வெற்றி கொண்ட பாண்டவ சேனாவீரர்கள் மிகவும் மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்து, தங்கள் பாசறைக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது தருமருடைய ஆண்மையையும், போர்த்தன்மையையும் கண்டு அச்சம் கொள்ளும் அரசர்கள் ஓடி ஒளிந்தது போல, சூரியனும் மேற்குக் கடலில் முழுகி மறைந்தான்!

சூரியன் அஸ்தமிக்கவே வந்து சூழ்ந்த இருளும் கழிந்தது!

அதன்பின் தன் குமாரனாகிய கர்ணனிடம் உண்டான அதிகமான அன்பால் அவனைப் பார்ப்பதற்கு வந்தவன் போல, சூரியன் மீண்டும் கிழக்குக் கடலில் உதித்தான்!

2. பதினேழாம் நாள் போர்

பதினாறாம் நாள் கொடிய யுத்தத்தில் போர் செய்து பாண்டவசேனையிடம் தோற்றுச் சென்ற அரசர்கள் எல்லோரும், பதினேழாம்நாள் போராகிய இன்றைய தினமே அளவற்ற பூமி முழுவதும் அழிந்து போய்விடும் என்று எல்லோரும் பிரமிக்கும்படி போருக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் சங்கங்களும் பறைகளும் அலைகடல் போல் ஒலிக்கவும், வெண்சாமரங்கள் காற்றை வீசவும், பொற்காம்பிட்ட குடைகளின் நிழலிலே வந்து போர்க்களத்தை அடைந்தார்கள்.

பதினாறு நாளும் நடந்த போரில் அழிந்த பலசேனைகளும் திரும்பவும் பிழைத்து இங்கே வந்துவிட்டன என்று சொல்லும்படியான அளவற்ற குதிரைகளும், ரதங்களும், யானைகளும், காலாள்களும் ஆகிய தனது சதுரங்கச்சேனைகள் போர்க்களம் முழுவதும் நெருங்க, கொடை வள்ளலாகிய கர்ணன் துரியோதனனோடு போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தான்!

கர்ணன் தனது தலையில் தரித்துள்ள கிரீடத்தில் பதித்த ரத்தினங்கள் சூரியகாந்தி போல் ஒளி வீசின. காதுகளில் அணிந்துள்ள அழகிய குண்டலத்தில் இழைத்த மணிகள் சூரிய கிரணங்களை உமிழ்ந்தன. மற்ற அவயவங்களில் அணிந்துள்ள பொன்னாபரணங்களில் இழைத்த மணிகள் வெய்யில் போல் ஒளிசிந்தின. காலில் அணிந்துள்ள வீரத்தண்டையில் இழைத்த மணிகள் சூரியனின்

பொன்னொளியை வீசின. சூரியனைக் காட்டிலும் கர்ணனின் உடம்பில் விளங்கும் சிவந்த ஒளி வெய்யிலாய் எறித்தது. அப்போது கர்ணன் இருந்த அழகைக் கண்டு கண்கள் களிப்படையாமல் போனவர்கள் யாருமேயில்லை!

தனித்தனிப் பகுதியாக அளவிடலாமே தவிர ஒரு சேர மொத்தமாக அளவிட முடியாத பெரும்சேனைக் கூட்டத்தோடும், உயிரினும் சிறந்த தம்பிமார்கள் நால்வரோடும், கண்ணபிரானோடும் தருமர் அழகாகப் போருக்குப் புறப்பட்டுப் போய் யுத்தகளத்தை அடைந்தார். யுத்தகளத்தைச் சேர்ந்த தருமர், பூலோகத்தவர்கள் பிழைக்கும்படி நஞ்சுண்டு கறுத்த நீலகண்டத்தையுடைய உருத்திரமூர்த்தியை பூமியாகிய தேரின்மேல் கண்டது போல, தம்மைக் காணும்படி ஒரு தேரின்மேல் நின்றார்.

அப்படி நின்ற தருமர் அர்ச்சுனனின் தேர்ச்சாரதியும், நீலநிற மேனியனும், லக்ஷ்மியின் கணவனும், தன்னை வணங்கும் அடியார்களுக்குச் சிறந்த துணைவனுமாகிய கண்ணனைப் பார்த்துத், தமது பெரிய கண்களும் மனமும் ஆனந்தக் கண்ணீர்விட்டுப் புளகாங்கிதம் அடையும்படி, அவனது உபயதிருவடிகளைத் தம் தலைமேல் வைத்து வணங்கினார். பிறகு, கண்ணனை நோக்கி தருமர், ''மைத்துனா! இன்றைக்குச் செய்யும் கொடிய யுத்தத்தில் சூரியகுமாரனாகிய கர்ணன் சுவர்க்கத்தை அடைவானோ? சொல்வாய்!'' என்று வினவினார்.

அதற்கு எல்லாப் பொருள்களும் தானாகி ஞானசொரூபியாய் நிற்பவனும், சிவந்த திருக்கண்களையும் திருவருளையும் அழகையும் உடைய இலக்குமிக்கு நாயகனுமான ஸ்ரீகண்ணபிரான், ''தருமபுத்திரா! இன்றைக்கு சூரிய குமாரனான கர்ணனும் அர்ச்சுனனுடைய பாணங்களால் இறப்பான். நாளைக்கு பாய்கின்ற குதிரைகளைப் பூட்டிய தேரையுடைய துரியோதனனும் வாயுபுத்திரனாகிய பீமனால் இறப்பான். பிறகு அஸ்தினாபுரியும், நான்கு திக்குகளிலுள்ள கடல்களால் சூழப்பட்ட பூமி முழுவதும் உன்னுடையதாக ஆகிவிடும்!'' என்று தருமருக்கு உத்தரம் சொன்னான்.

கண்ணபிரான் சொல்லியருளிய இனிய சொல்லாகிய அரிய அமிர்தம் தமது காதுகளில் பட்ட மாத்திரத்தில் தருமர்

மனம் தெளிந்தார். உடனே தருமர் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்து, ''கண்ணா! எங்கள் மானத்தையும், தொன்று தொட்டு வந்துள்ள ஆண்மையையும், புகழையும் உன்னைத் தவிர நிலைநிறுத்துபவர்கள் வேறு யார் இருக்கின்றார்கள்? அரவக்கொடியுடைய துரியோதனனது வஞ்சனைக் கடலிலே விழுந்து அமிழ்ந்து போகாதபடி எங்களைக் காத்து, இப்போது நீ அழகிய இடத்தையும் பெரிய ராஜ்ஜியத்தையும் தந்தாய்! காக்கும் நாயகனே! கோபத்தீ பொங்கும் மனமுடைய துரியோதனன் கங்காநதியின் நீரில் விளையாடும் இடத்தில் நாட்டி வைத்த கொடிய கழுமரத்தின் நுனியில் பீமன் விழுந்து இறவாமல், வண்டின் வடிவாகி அவனுடைய அரிய உயிரைக் காத்தருளினாய்! ராஜசபையிலே கணவர்களாகிய நாங்கள் ஐந்து பேரும் என்ன செய்வதென்று தெரியாமல் மனம் கலங்கிப் பார்த்துக் கொண்டிருக்க, எல்லாவற்றையும் விழுங்கும் அக்கினி போன்ற திரௌபதியினுடைய வெட்கமும் ஆடையும் போகாதபடி கடாட்சித்தருளினாய்! துரியோதனனுடைய கட்டளையால் அதிகப்பசியுடன் காட்டுக்கு எங்களிடம் வந்த துருவாசமுனிவரின் பசித்துன்பமும் சாபமும் எங்களைப் பாதிக்காதபடிப் போக்கினாய்! பொருளில்லாத என்னை ஒரு பொருளாக மதித்து எங்களுக்காகத் துரியோதனனிடம் தூது போயருளினாய்! ஒப்பற்ற விதுரனுடைய கொடிய வில்லையும், சூரிய குமாரனாகிய கர்ணனின் கவசத்தையும் ஒழித்தாய்! எங்களுக்காக இப்படி மனமிரங்கி இன்னும் பல காரியங்களையும் செய்தாய்! நாககன்னிகையாகிய உலூபியின் புத்திரனான அரவான் தன்னைப் பகைவனாகிய துரியோதனனுக்குப் போர்க்களத்தில் பலி கொடுப்பதற்குச் சம்மதித்திருக்கவும், மாற்றுவதற்கு அருமையான திதியை நீ மாற்றி ஆகாயத்தில் சந்திரன் சூரியனைச் சேரச் செய்தாய். அதனால் ஒருநாள் முன்பாகவே அமாவாசையை வரவழைத்து, எங்களுக்கே அரவான் தன்னைப் பலி கொடுக்கும்படி அவனுக்கு அறிவூட்டினாய்! பின்பு, மனமகிழ்ச்சியோடு அர்ச்சுனனுக்குச் சாரதியாகி அவனுடைய தேரை ஓட்டினாய்! பகைவர்களுக்குப் பயந்ததாலோ, இல்லை உயிர்களிடம் கொண்ட கருணையாலோ எதுவென்று நிச்சயமாகத் தெரியவில்லை. போர்க்களத்தில் அர்ச்சுனன் போர் செய்வதைக் கைவிட்டு நின்றபோது,

அவனுக்குத் தத்துவங்களை உபதேசித்து மீண்டும் போர் செய்யும்படி நியமித்தாய். முன்பு கொடுத்த வாக்குறுதியை மறந்து சக்கராயுதத்தையும் எடுத்து, சங்கநாதமும் செய்து, யுத்தத்தில் பெரிய பாட்டனாராகிய பீஷ்மர் இறக்கும்படியாக, சிகண்டி முற்பிறப்பில் செய்த தவத்தின் பயன் இப்பிறப்பில் நேருவது தவறாதபடி நடத்தினாய்! யானை மேலேறிப் போருக்கு வந்த பகதத்தன் ஒருநாள் அர்ச்சுனனுடைய மார்பைத் துளைக்கும்படி வீசிய வேலாயுதத்தை, திருத்துழாய் மாலையணிந்த உனது மார்பிலே ஏற்றுக் கொண்டாய்! பகையரசர்களைக் கொன்று அபிமந்யு இறந்தபோது, தீயில் விழப் போன அர்ச்சுனனை முனிவரைக் கொண்டு தடுத்துக் காப்பாற்றினாய்! பின்பு, அன்றைய ராத்திரியில் அவனோடு கைலாசத்தையும் போய்ப் பார்த்து வந்தாய்! வருண குமாரனாகிய சுதாயு இந்திர குமாரனாகிய அர்ச்சுனன் மார்பை நோக்கி வீசிய கொடிய கதாயுதத்தைத் தன் மார்பில் அழுந்தும்படி அருளினால் ஏற்றுக் கொண்டு, அந்த வீரன் இறக்கும்படிச் செய்தாய்! ஆயுதங்களையுடைய வாலிப அரசர்கள் மயங்கி விழும்படி சங்கநாதம் செய்து, சக்கராயுதத்தால் சூரியனை மறைத்து இரவை வரவழைத்து, அப்போது அபிமந்யுவைக் கொன்ற அரிய பழிக்குப் பழிவாங்கினாய்! துரோணபுத்திரனாகிய அசுவத்தாமன் பிரயோகித்த நாராயணாஸ்திரத்தால் நாங்கள் இறந்து போவோம் என்பதையறிந்து எங்கள் வாகனங்களையும், வெற்றியைத் தருகின்ற ஆயுதங்களையும் விட்டிருக்கச் செய்தாய்! மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாகி நின்றருளுகின்ற வடிவத்தையுடையவனே! மன்னர்கள் பலரும் தேவர்களும் உனது திருவிளையாட்டை அறியமாட்டார்கள்!'' என்று சொல்லித் துதித்து, அவனுடைய சிவந்த திருவடிகளில் தம் தலையை வைத்து வணங்கினார்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அருள் சுரக்கும் கண்களையுடைய தருமரை வணங்கி, கைகளால் அன்போடு தழுவிக் கொண்டு, "நீங்கள் ஐந்து பேரும் எண்ணுவதற்கும் அரிய போரில் இறக்க மாட்டீர்கள். ஆகவே, அஞ்ச வேண்டாம்!'' என்று உபசாரம் சொன்னான்.

பிறகு, கண்ணன் பாண்டவசேனாதிபதியாகிய திருஷ்டத்யும்நனிடம் சேனையை அணிவகுக்கும்படிக் கட்டளையிட்டான்.

உடனே திருஷ்டத்யும்நன் கண்ணனின் கட்டளைப்படி பகைவர்கள் கண்டு அஞ்சும்படியாகப் பாண்டவர்சேனையை அணிவகுத்தான்.

பாண்டவர்சேனை அணிவகுத்து நின்ற விதத்தைப் பார்த்துக் கர்ணன், அரசர்கள் எல்லோருக்கும் கேட்கும்படி துரியோதனனை நோக்கி, ''கைதேர்ந்த பல ஆயுதங்களையும், யாருக்கும் சமமாகாத உறுதியான பலத்தையும் உடைய அரசனே! இந்தப் போர்க்களத்தில் இன்றைக்கே கவந்தங்கள் குதிக்கும்படி பகைவர்களுடைய தலைகளையெல்லாம் அறுப்பேன்! இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனுக்கு வஞ்சகக் கண்ணன் தேர்ப்பாகனாய் நின்றான். அவனுக்குச் சமமான தேவர்கள் ஒருவரும் உலகத்தில் இல்லை! ஆனால், குதிரைகளின் மனத்தை அறிந்தவனும், போரில் சமயத்துக்கு ஏற்ற உபாயங்களைச் சொல்பவனும், போருக்கு உரிய சாரதியாய் தேர்ச் செலுத்துவதில் வல்லவனுமாகிய சல்லியன் ஒருவனேதான் இந்த உலகத்தில் அவனுக்குச் சமமாவான்! அந்தச் சல்லியன் இன்றைக்கு எனக்குச் சாரதியாகி தேரைச் செலுத்துவானானால், திருமாலேயல்லாமல் சிவபெருமானே வந்து அவனுக்குத் தேரோட்டினாலும் அத்தேரில் நின்ற கிருஷ்ண அர்ச்சுனர் இரண்டு பேர்களையும் கொல்வேன்! செங்கோல் வேந்தனே! மற்ற பீமன் முதலிய அர்ச்சுனனுடைய சகோதரர்கள் ஒவ்வொரு அம்பின் நுனிக்கேனும் போதமாட்டார்கள். கடலைச் சேலையாகவுடைய புவனங்கள் முழுவதையும் உனது அரசாட்சியின் கீழ்ப்படுத்தி, அப்படிச் செய்த வல்லமையைக் குறிக்கின்ற வெற்றிமாலையையும் நான் உனக்கே சூட்டுவேன்! தேவர்கள் அமிர்தம் உண்பது போல, நான் உன்னிடம் இனிய பால்சோற்றை விரும்பி உண்டு வாழ்ந்தேன். நீ எனக்கு அன்போடு போட்டு வந்த சோற்றுக்குப் பிரதியுபகாரமாகச் செய்ய வேண்டும் கடமையை இன்றைக்கே செய்து, சோற்றுக் கடனைக் கழிப்பேன். அப்படி நான் செய்யாமல் போவேனானால், வலிய தோள்களை வளர்த்ததாலே வேறு பயன் உண்டோ? ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லாத என்னை உங்கள் குலத்தவரில் ஒருவனாய்ப் பாவித்தாய். தேரோட்டி வீட்டிலே வளர்ந்த என்னை, நவரத்தினம் இழைத்த செம்பொற் கிரீடம் சூட்டி அரசர்கள் யாவரும் புகழும்படி உன்னைவிட

அதிகமாகச் சிறப்புப் பெறுமாறு வைத்தாய்! இத்தனை உபசாரங்களும் செய்த உனக்கேயல்லாமல் நடக்கும் யுத்தத்தில் இனி யாருக்கு என் உயிரைக் கொடுப்பேன்?'' என்றான்.

கர்ணன் இவ்வாறு சொல்லவும், காந்தாரக் குலப்பெண் காந்தாரி பெற்ற அரசர்க்கரசனான துரியோதனன் அது கேட்டு மிகவும் மகிழ்ந்து, இமைப்பொழுதில் ஒரு குறைவுமற்ற மத்திரதேசத்து ராஜாவாகிய சல்லியனை அடைந்தான். சல்லியனைப் பார்த்து துரியோதனன், ''வண்டுக் கூட்டம் இசைபாடும் அழகிய மாலையணிந்த அழகிய தோள்களையுடையவனே! நான் ஒரு வார்த்தைச் சொன்னால், அவ்வினிய வார்த்தையைக் காது கொடுத்துக் கேட்டு, நீ எனக்கு ஒரு வரத்தைக் கொடுக்க வேண்டும். இது என்மேல் ஆணை!'' என்று சொல்லி, அவனைக் கைகளால் தொழுதான்.

அதுகேட்டுச் சல்லியன் துரியோதனனை நோக்கி, ''பகைத்தவர்களின் பெருவாழ்க்கையையும் உயிரையும் அழித்தவனே! தன்னை அடைந்தவர்கள் செய்த பெரிய தீங்குகள் முழுவதையும் பொறுத்தவனே! உலகம் முழுவதையும் அரசாளுகின்ற ஆஞ்ஞாசக்கரத்தை யுடையவனே! பொருளில்லாத என்னை ஒரு பொருளாக மதித்து ஒரு வரம் கேட்பாயானால், அதை நான் மறுத்துச் சொல்ல மாட்டேன். ஆகையால், அவ்வரம் என்னவென்று சொல்லியருள்வாய்!'' என்றான்.

உடனே துரியோதனன் சல்லியனைப் பார்த்து, ''பகைவர்களாகிய பாண்டவர்களைக் கிருஷ்ணன் காப்பது போல, எங்களை நீ காப்பாய்!'' என்று கூறினான்.

அதற்குச் சல்லியன், ''ஒப்பில்லாதவனே! தாவுகின்ற குதிரைகள் பூட்டிய, மணிகள் கட்டிய, பெரிய தேரையுடைய அரசர்களுக்கெல்லாம் காவலன் நீ! என்னையும் நீயே பாதுகாக்கின்றாய். நீ ஏவிய குற்றேவல் புரிந்து உன் ஆளுகையின் கீழ்த் தங்குகின்ற என்னைப் போன்றவர்கள், உன்னைக் காப்பது முடியக் கூடிய ஒரு காரியமோ? மேலும், தேவரும் மானிடரும் அண்டசராசரங்களுமாகி விளையாடும் ஆதிமூர்த்தியாகிய யதுகுலத்தில் தோன்றிய கண்ணபிரானுக்கு நான் சமமாவேனோ? இருந்தாலும் கேட்கின்றேன். செங்கோல் மன்னா! உன் எண்ணம் என்ன?'' என்று கேட்டான்.

சல்லியன் முகம் பார்த்துத் துரியோதனன், "அர்ச்சுனனுக்குத் தேரோட்டும் கிருஷ்ணனைப் போல, இன்று கர்ணனுக்கு நீ தேர் ஓட்ட வேண்டும். இல்லாவிட்டால் யுத்தத்தை நடத்தி பஞ்ச பாண்டவரையும் ஜெயித்து, வெற்றிமாலையைச் சூடுவது நமக்கு அருமையானது!" என்று புகழ்ந்து சொன்னான். அது கேட்டுச் சல்லியன் மனத்தில் மிகவும் கோபம் கொண்டு, புருவத்தை நெறித்து, துரியோதனனை நோக்கி, "நீ சிறிதும் ஆலோசிக்காமல் என்னைப் பார்த்து அற்பத்தனமான சொற்களைச் சொன்னாய்! மான் இட்ட கட்டளையைப் புலி செய்தால் அல்லவோ, மத்திர நாட்டரசனான சல்லியன் கர்ணனுக்குச் சாரதியாவான்! உன்னைத்தவிர வேறு ஒருவன் இந்த வார்த்தையைச் சொல்வானானால், சொன்ன அந்த நாக்கு என்ன பாடுபடும்? சொன்னவன் துரியோதனன் என்பதால், சொன்னது பொறுத்தேன்!" என்று சொல்லி, பெரிய கண்களும் கோபத்தால் மிகவும் சிவக்கப் பெற்றான்.

மீண்டும் சல்லியன் துரியோதனனைப் பார்த்து, "தேனுள்ள நஞ்சாவட்டை மாலையுடையவனே! தேரோட்டி மகனுக்கு நான் தேரோட்டுதல் எனக்கு அவமானம் தருவதல்லவா? நமக்கு முன் போரிடும் பகைவர் சேனையை எனக்கும் கர்ணனுக்கும் இப்போது இரண்டு பாகமாகப் பிரித்துக் கொண்டு போர் செய்தால், எனக்குக் கொடுத்த பாகத்தை ஜெயித்து கர்ணனுடைய பாகத்தையும் அவனுக்கு முன் ஜெயிப்பேன். அப்படிச் செய்யாமல் நான் போவேனானால், அவனுக்குத் தேர் ஓட்டுவேன்!" என்று கோபித்துச் சொன்னான்.

துரியோதனன் அதுகேட்டு சல்லியனிடம், "பிரமன் பரமசிவனுக்கு வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட பூமியாகிய தேரைச் செலுத்தும் ஒப்பற்ற சாரதியானான். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் இவனென்று யாவராலும் சொல்லப்படுகின்ற வாசுதேவ குமாரனாகிய கண்ணன், கொடிய கோபத்தையுடைய அர்ச்சுனனுக்குச் சாரதியானான். அந்த அர்ச்சுனனும் அன்று உத்தரகுமாரனுடைய தேரை வேகமாகச் செலுத்தினான். பூலோகத்தவர்கள் எல்லோராலும் மதிக்கப்பட்ட பராக்கிரமத்தையுடைய போரில் வல்ல அரசனே! உன்னைப் போல் புகழுள்ள அரசர்கள் போர்க்களத்திலே, மிகச் சிறந்த

வீரர்களுக்கு இப்படித் தேர் ஓட்டுவது ஒரு பெருமையல்லவா? எல்லாக் கல்விகளிலும் வல்லவர்களைத் தவிர, மற்றவர்களுக்குக் குதிரைகள் பூட்டிய பெரிய தேரை ஓட்டத் தெரியுமோ?'' என்று பலவாறு சொல்லி, கர்ணனுக்குச் சாரதியாகும்படி வேண்டி வணங்கினான்.

கடைசியில் சல்லியன் கர்ணனுக்குத் தேரோட்டச் சம்மதித்தான். ஆமாம். ராஜராஜனாகிய துரியோதனன் இவ்வளவு சொன்ன பிறகு, கர்ணனுக்குத் தேரோட்டச் சம்மதிக்காமல் சல்லியன் வேறு என்ன செய்வான்?

சல்லியன் கர்ணனுக்குத் தேர்ச் சாரதியானான் என்பதைக் கேட்டறிந்ததும், கௌரவசேனாவீரர்கள் மகிழ்ச்சி கொண்டு, "அர்ச்சுனனுக்குக் கண்ணன் தேர்ச்சாரதியானது போல, கர்ணனுக்குச் சல்லியன் சாரதியானான். இந்த க்ஷணத்திலே துரியோதனன் தான் அணிந்துள்ள தும்பைப்பூ மாலையோடு, வெற்றிக்கு அடையாளமான வாகைப்பூ மாலையையும் சூடுவான்! பூமி முழுவதும் இனி அவனுடையதேயாகும்!'' என்று சொல்லி, ஆரவாரித்தார்கள்.

தனக்குச் சல்லியன் தேரோட்டச் சம்மதித்ததும், இந்திரனுக்குத் தானம் செய்த தனது கவச குண்டலங்களைத் திரும்பவும் பெற்றவன் போலக் கர்ணன் பெரிதும் மகிழ்ந்தான். அம்மகிழ்ச்சியோடு கர்ணன் சல்லியனைக் கட்டிக் கொண்டு, அவனைத் தனது தேரில் ஏறச் செய்தான்.

கர்ணனுக்குப் பாகனாக அவனுடைய தேரில் சூரியச்சாரதி அருணன் போல் ஏறிக் கொண்டதும், சல்லியன் சாரதிக்குரிய வேஷம் பூண்டான். பின்பு, அவன் போருக்குப் பொருத்தமான குதிரைகளைத் தேரில் பூட்டி, குதிரையின் கடிவாளக் கயிற்றையும், குதிரையோட்டும் கோலையும் கைகளில் பிடித்துக் கொண்டு தேரைச் செலுத்தினான்.

கொடை வள்ளலாகிய கர்ணன் அசுரசேனாதிபதியாகிய சுக்கிராச்சாரியார் போல, துரியோதனனையும் பதினாறு நாட்களும் நடந்த போரில் இறவாமல் இருந்த துரியோதனனின் தம்பிமார்களையும் படைவகுப்பில் ஒழுங்காக நிற்க வைத்தான். படை வகுப்பின் இரண்டு பக்கங்களிலும் கிருபாசாரியாரையும், மற்ற அரசர்களையும் வரிசையாக நிற்கச் செய்தான். சகுனி முதலிய சில வீரர்களைப்

படையின் நுனியில் நிற்க வைத்தான். இருபத்தேழு நட்சத்திரங்களும் தாரகைகளும் கிரகங்களும் ஆகிய இவற்றின் மத்தியில் ஆகாயத்தில் ரத்தினம் போல் விளங்குகின்ற சூரியனை நிறுத்தி வைத்தது போல, சேனையின் முகப்பில் பெரியதொரு பவழமலை போல் கர்ணன் விளக்கமாகவும் கம்பீரமாகவும் தேர்மேல் நின்றான்!

போருக்குத் தயாராகப் போர்க்களத்தில் நின்ற கர்ணன், அப்போது பகைவர் நண்பர் என்று பாரபட்சம் பாராமல் யாவர்க்கும் தானதருமங்களை மிக அதிகமாகச் செய்தான். ஆமாம். திருக்கோவலூரைச் சூழ்ந்த பெண்ணையாறு பாய்கின்ற திருமுனைப்பாடி நாட்டையுடையவனும், கொங்குநாட்டவர்க்குத் தலைவனும், வக்கபாகை நகரத்துக்கு மன்னனும், கவிகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுத்து அவர்கள் மானத்தை அழியாமல் காப்பவனுமாகிய வரபதியாட்கொண்டானின் செங்கமலம் போல் சிவந்த கைபோல, கொடிய போர்க்களத்தில் நின்ற கர்ணனின் கையும் பேதமின்றி எல்லோருக்கும் ஒரே தன்மையாகப் பொன்மழையைப் பொழிந்தது!

தேவசேனாதிபதியாகிய ஆறுமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுள் ஒரு முகமுடையவனாகிப் பிறந்தது போன்ற கர்ணன் பிராமணர்களும், வெகுமதி பெறுவதற்குரிய மற்ற மனிதர்களும், அரசர்களும் முதலிய எல்லோருக்கும் மனங்கள் களிக்கும்படி முறையே தானங்களையும் தியாகங்களையும் வரிசையாகக் கொடுத்த பிறகு, சந்தனம் பூசிய திரண்டதோள்களையுடைய சல்லியனை நோக்கி, ''பருத்த குரலையுடைய யானைச் சேனையையுடையவனே! இந்திரன் தனக்கு விசுவகர்மா செய்தளித்த விஜயம் என்னும் வில்லை சூரியனுக்குத் தந்தான். சூரியன் அதனை ஜமதக்னிமுனிவருக்குத் தந்தான். பின்பு, அம்முனிவர் அந்த அரிய பெரிய வில்லை பரசுராமருக்குக் கொடுத்தார். கடைசியில் பரசுராமரிடமிருந்து நான் அதனை அடைந்தேன். கொடிய நாகாஸ்திரத்தைப் பெற்றேன். கண்ணனுக்குச் சமமான உன்னைச் சாரதியாகவும் அடைந்தேன். எனது பாக்கியம் பலித்தவிதம் அதிசயமானதே! எனக்குச் சமானம் அர்ச்சுனனே தவிர, வேறு யாரும் இல்லை. அந்த அர்ச்சுனனுக்கு என்னைத் தவிர பூமியை அரசாளுகின்ற அரசர்கள் எவரும் சமானம் இல்லை.

மனத்திற்கு ஒத்த நண்பனாகிய துரியோதனன் பூமி முழுவதையும் அடையும்படி, நான் இன்றைக்கு எனது ஆண்மை முழுவதையும் காட்டுவேன். நீ அதனைப் பார்!'' என்று சொன்னான்.

கர்ணன் அப்படிச் சொன்னதைக் கேட்டுச் சல்லியன் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து, ''செல்வம் பொருந்திய தவத்தையுடையவனே! நீ உனது வெற்றியையும், வலிமையையும், கற்ற வில்வித்தையையும் எனக்குச் சொல்ல வேண்டாம். உனது தேரும் அர்ச்சுனன் தேரும் சக்கரங்களோடு சக்கரங்கள் நெருங்கப் பெற்று, எதிரில் போய் யுத்தம் செய்தபோது உனது வீரம் விளங்கும். ஒருவரையொருவர் ஒத்திராத வலிமையுடைய வீரர்களாகிய நீங்கள் இருவரும் போர் செய்யும் பொழுதெல்லாம் நாங்கள் பக்கத்தில் நின்றிருந்தோம். மறந்தும் பயப்படாத அர்ச்சுனனை அப்போது ஒரு பொழுதும் நீ ஜெயித்ததை நாங்கள் பார்க்கவில்லை. நீங்கள் இருவரும் சொன்ன சபதத்தை நிறைவேற்றும்படிக் கோபித்துச் செய்யப் போகின்ற இன்றைய போரின் முடிவு இப்பொழுதே தெரியுமோ? அது தெரியக் கூடியதும் இல்லை. ஆகவே சந்தேகித்தோம்!'' என்றான்.

அதுகேட்டுக் கர்ணன் கோபத்தால் மிகவும் பெருமூச்சுவிட்டான். மீண்டும் கர்ணன் மத்திரதேசத்து ராஜனை நோக்கி,''சல்லியனே! அர்ச்சுனனுக்கு நான் சமமானவன் இல்லையென்று சுற்றிலும் நிற்கும் சேனைத் தலைவர்களின் எதிரில் என்னைப் பரிகசிக்க வேண்டாம். நீ வல்லவனானால் தேரை ஓட்டு. அதைத் தவிர கொடிய பலத்தால் செய்யும் பயங்கரமானப் போரைப் பற்றிப் பேசுவதற்கு நீ யார்?'' என்று கடிந்து சொன்னான்.

சூரியகுமாரன் அப்படிச் சொன்னதுதான் தாமதம். சல்லியன் உடனே தேரைவிட்டுக் கீழே இறங்கித் தரையிலே நின்றான். இடுப்பில் கட்டிய கைவாளை எடுத்துச் சுழற்றிக் கொண்டே சல்லியன் கர்ணனைப் பார்த்து, ''இனி நான் உனக்குத் தேர் ஓட்டுவேனோ? எலியின் ஆரவாரம் பூனைக்கு எதிரே வந்தால் என்ன பாடுபடாதோ?'' என்று சொல்லி, அச்சம் தரும் இடிபோலக் கோபித்து அவனைப் பகைத்தான்.

கர்ணன் அதே வினாடியில் தன் வாளை ஏந்திக் கொண்டு தரையிலே குதித்தான்!

அப்படி இருவரும் பகைமை கொண்டு இரண்டு தழும்பு உடம்பில் படும்படிப் போர் செய்வதற்கு முன்பு, அவர்களின் செயலைக் கண்ட துரியோதனன் பயந்த மனத்தோடு வேகமாக ஓடி வந்து தங்களுக்குள் போர்ச் செய்யாதபடி அவர்களைத் தடுத்து நிறுத்தினான்.

பின்பு, ஒரு வழியாக துரியோதனன் கர்ணனையும் சல்லியனையும் சமாதானப்படுத்தி, தேரில் ஏறச் செய்து, ''பாண்டவசேனையோடு கொடிய யுத்தத்தைச் செய்யுங்கள்!'' என்று கூறினான்.

அப்போது துரியோதனனுடைய கட்டளைப்படி கிருதவர்மாவும், கிருபாசாரியாரும், சகுனியும், அசுவத்தாமனும், சாலுவனும், திரிகர்த்ததேசத்து அரசனும் ஆகிய தேர்வேந்தர்கள் எல்லோரும், தங்களுடைய சேனையாகிய கடலோடு கர்ணனுக்குத் துணையாக அவனைச் சுற்றிக் கொண்டு காத்து நின்றார்கள்.

துரியோதனன், 'இன்றைக்கே போரில் பகைவரை ஜெயித்தோம். அர்ச்சுனனும் இறந்து தன் தந்தையாகிய இந்திரனிடம் போய்விடுவான்' என்று நிச்சயித்தான். அதனால் உண்டான மனமகிழ்ச்சியுடன் எதிரே நின்ற கர்ணனைப் பார்த்து முகமன் கூறத் தொடங்கி, ''நண்பா! தேவேந்திர மைந்தனாகிய அர்ச்சுனனுடைய தேர்ச்சாரதியான கண்ணனிடம் கொண்ட அதிகமான நேசத்தால் விதுரனும் தனது கொடிய வில்லை முறித்துப் போட்டான். பின்பு, யதுகுலத்துத் தலைவனாகிய பலராமனும் அந்த விதுரனோடு பூமியிலுள்ள நதிகள் முதலிய புண்ணிய தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் நீராடுவதற்காக விரும்பி யாத்திரை போய்விட்டான்! பீஷ்மர் கங்கையின் வயிற்றில் பிறந்து, தம் தந்தையின் ஆசையை முடிப்பதற்காக எங்களுக்கு ராஜ்ஜியத்தையும், செல்வ வாழ்க்கையையும், பெரிய பூமி முழுவதையும் கொடுத்து, சூரியன் பூமியைச் சிவக்கச் செய்வது போல யுத்தத்தில் போர்க்களம் முழுவதையும் சிவக்கச் செய்தார். பின்பு, அவரும் தேவர்களுள் ஒருவரானார்! யானைமுகக்கடவுளான விநாயகர் போன்ற அசுவத்தாமன் என்னும் சிங்கக்குட்டியைப் பெற்ற

தந்தையும், அரிய வேதங்களுக்குப் பிரமனைப் போன்றவரும், வலிய வில்வித்தைக்குச் சிவபெருமானைப் போன்றவரும், மேலான கருணைக்கு விஷ்ணுவைப் போன்றவருமான துரோணாசாரியார் மேன்மை பொருந்திய முத்தியுலகத்தை அடைந்தார். சூரியனைப் போன்றவனே! மயில்வாகனனாகிய சுப்பிரமணியக் கடவுளைத் தவிர, தேவர்களின் வாழ்க்கையைத் தேவர்களுக்குக் கொடுத்தவர்கள் யார் இருக்கின்றார்கள்? அதுபோல் போரில் என்னை நிலைபெறச் செய்வதற்கு உன்னைத் தவிர உரியவர்கள் வேறு யாராவது இருக்கின்றார்களோ? மத்திரநாட்டு அரசகுமாரனாகிய சல்லியன் என்னோடு உண்டான சிநேகிதத்தால், தனக்குப் பாண்டவர்கள் உறவினர்கள் என்பதையும் பார்க்காமல் எனக்கு வந்து உதவி செய்கின்றான். இவன் வஞ்சகன் இல்லை. நல்லொழுக்க முடையவன். மந்திரங்களால் சிறந்த அஸ்திரங்களோடு கூடிய வில்வித்தையில் சமர்த்தன். இவனோடு போர் செய்வதில் வல்லவர்கள் யார் இருக்கின்றார்கள்? இன்னும் அவன் என் வார்த்தையை மறுக்காமல் இன்று உனக்குத் தேர்ச்சாரதியானான். நல்ல வார்த்தைகளைத் தவிர, அவற்றுக்கு மாறான கெட்ட வார்த்தைகளைச் சொல்வதற்கு அறியமாட்டான். அவன் வார்த்தை நன்மைகளையெல்லாம் கொடுக்கும் என்று எண்ணி அங்கீகரிக்காமல், இழிவான பேச்சுக்களைப் பேசிக் கொண்டு உங்களுக்குள் விரோதப்படுவது கேவலமானது இல்லையா? மற்றும் குதிரைகளின் மனத்தையும், வலிமையையும், அவை பிறந்த நாடுகளின் தன்மையையும், அவற்றுக்குத் தகுந்த தொழில்களையும் அறிந்து பூட்டுவதற்குரிய விரைந்தோடும் குதிரைகளை ஆராய்ந்து தேரில் கட்டுபவர்கள் தேர்ச்சாரதிகள். மேலும், பகைவனுடைய விசேஷ ஜெயத்தைச் சொல்வதும், சொல்ல வேண்டிய நன்மைகளை நெருங்கிச் சொல்கின்ற நண்பனாவதும், கொடிய போருக்கான சிறந்த இடத்தையும் காலத்தையும் சிந்திப்பதும் ஆகிய யாவும் சாரதிகளுக்குக் கடமையாகும். இதனை நீ அறிவாய்!'' என்று நல்ல வார்த்தைகளைச் சொன்னான் துரியோதனன்.

அப்போது திருஷ்டத்யும்நனும், சோமககுலத்து வீரர்களும் கர்ணன் நின்ற போர்க்களத்தை நோக்கி, மனோவேகத்தைக் காட்டிலும் விரைந்து செல்கின்ற தங்களுடைய தேர்களை மிகவும் வேகமாகச் செலுத்தினார்கள்.

திருஷ்டத்யும்நனின் சேனாவீரர்களுக்கும் கர்ணனுடைய சேனாவீரர்களுக்கும் சண்டை மூண்டது!

சோமகவீரர்கள் தங்களுடைய விற்களை வளைத்து வலிய அம்புகளை ஒருசேர எய்தார்கள். அவர்கள் எதிரே நின்ற கிருதவர்மா முதலிய வீரர்களும் தங்களுடைய விற்களை வளைத்து அவர்களின்மேல் பெரிய அம்புகளை நெருங்கும்படிப் பிரயோகித்தார்கள். அதுகண்டு பெரிய பூமி முழுவதும் ஒருசேர அழியும்படி கடல்வெள்ளம் மேலே பொங்கிவரும் பிரளயகாலத்தில் போல தேவர்கள் பயந்தார்கள். அன்றைக்கு யுத்தகளத்தில் நடந்த போரில் யார் யாரை என்று வியந்து புகழ்வது?

அப்போது போர் செய்த கணக்கற்ற ரதாதிபர்கள் பகைவரின் பலப்பல பாணங்கள் வந்து தைத்ததனால் தாங்கள் ஏறிய தேர்கள் அழியப் பெற்றார்கள்; தங்களுடைய தேர்களில் பூட்டிய குதிரைகள் அழியப் பெற்றார்கள்; தங்களின் தேர்ச்சாரதி அழியப் பெற்றார்கள்; கடைசியில் தங்கள் உடம்பு முழுவதும் வருந்தி இறந்தார்கள்!

வெவ்வேறு பலகோடி சூரர்கள் மகாமேருகிரியைப் போன்றதொரு பெரிய வலிய வில்லைத் தனித்தனியே வளைத்து கர்ணனை எதிர்த்துப் போரிட்டார்கள். சூரிய குமாரனாகிய கர்ணன் ஏறிய தேர் அச்சமயம் பெரிய சுழல் காற்றுப் போலச் சுற்றிச் சுற்றி வந்தது.

கர்ணன் அந்த வீரர்களை அழித்து முடித்தபோது, திருஷ்டத்யும்நன் வந்து அவனைப் போரில் எதிர்த்தான். பிறகு, அவர்கள் இருவரும் முதுகைக் கொடுக்காமல் அம்புகளுக்கு இலக்காகத் தங்களுடைய மார்பைக் கொடுத்துக் கொண்டு, கூரிய அம்புகளால் ஜெயம் உண்டாகும்படி மேன்மேலும் போர் புரிந்தார்கள். ஒருவர்மேல் ஒருவர் விட்ட அம்புகள் வந்து இருவர் உடம்பு முழுவதையும் தைத்து மறைத்தன. அப்படி நடந்த போரில் திருஷ்டத்யும்நன் கர்ணனுக்குத் தோற்று, தானேறிய தேரோடு உயிர் தப்பி ஓடிப் போனான்!

கர்ணனின் பாணங்களுக்குத் தோற்று, இறந்தவர்கள் போக மிஞ்சிய சோமககுல வீரர்களோடு திருஷ்டத்யும்நன் ஓடிப்போன பின்பு, தன் தமையர் தருமருடைய

கட்டளையால் பீமன் கர்ணன்மேல் உக்கிரமாகப் போருக்கு வந்தான்.

பீமனும் கர்ணனும் வேல்வீசிக் கொண்டும், வாள்வீசிக் கொண்டும், வில்லை வளைத்து அம்புகளைப் பிரயோகித்துத் துளைக்கும்படித் தாக்கிக் கொண்டும் யுத்தகளத்தை அடைந்தார்கள். அவர்கள் தங்களுடன் வந்த வீரர்களின் போர் விதங்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார்கள். அவர்களுடைய இரண்டு தேர்களும் அவர்களின் மனோரதம் போன்று உலாவின. மேலும், அவர்கள் இருவரும் வானத்துத் தேவர்களெல்லாம் அஞ்சியோடும்படி பாணவருஷம் ஆகாயத்தை மறைத்துச் சிந்தவும், அண்ட கோளம் முழுவதில் உள்ளவர்களும் மிகுந்த நாணொலியால் செவிடுபடும்படியாகவும் தங்களது வில்லை வளைத்தார்கள்.

இந்திரதனுசுகளைப் போலத் தத்தம் வில்லை வளைத்து அவர்கள் இருவரும் போர் புரிகின்ற கொடிய யுத்தத்தில், மேருமலையை வில்லாக வளைத்து முப்புரங்களை எரித்த நெற்றிக்கண்ணுடைய சிவபெருமானின் வலக்கண்ணான சூரியனுடைய குமாரனாகிய கர்ணன் பீமனின் மார்பிலும், மல்யுத்தம் கற்ற அவனது தோள்களிலும் ஒழுங்காக எதிரில்லாத அம்புகளைப் பிரயோகித்தான்.

உடனே சூரியன் தனது இடக்கண்ணும் இடத்தோளும் துடிக்கக் கவலையோடு அதிகக் கண்ணீரைச் சொரிந்து வருந்தும் அந்த நேரத்தில் பீமன், உதாரகுணமுள்ள கர்ணனின் ஆபரணங்கள் மிகுந்த தோள்களிலும் உடம்பு முழுவதிலும் ரணமுண்டாகும்படி நான்கும் எட்டும் பதினாறுமாகிய அம்புகளால் எய்தான்!

வேதங்களின் சொரூபியாகிய சிவனோடு வில்யுத்தம் செய்த அர்ச்சுனனுக்கு முன்னவனாகிய பீமன், சல்லியனைப் பார்த்து இகழ்ச்சியாக, "நான் இவனைக் கொன்றால் எனது தம்பியாகிய அர்ச்சுனனின் சபதம் தவறுமே என்று எண்ணி, இக்கர்ணனுக்கு இப்போது உயிரைக் கொடுத்தேன். நீ சாரதியாக வந்து தேரோட்டுவதால்தான் கர்ணனுக்கு இந்த வலிமையாவது இருக்கின்றது. இல்லையேல் இவனுடைய வலிமையைக் குறித்து என்ன கூறலாம்? இவனுக்கு வில்யுத்தத் திறமைதான் ஏது?'' என்று சொல்லிவிட்டு, இமைப் பொழுதில் அப்பால் சென்றான்.

கர்ணனும் அவனுடைய வீரர்களும் பலமிழக்கும்படி யுகாந்தகாலத்துப் பெருமழை போலப் பல அம்புகளைத் தொடுக்கின்ற பீமனும், வீரர்கள் எல்லோரும் பகைவர்களை அழித்தார்கள். அச்சமயத்தில் கோபத்தால் சிவந்த கண்களையுடைய விருஷசேனன், வசுதேவகுமாரனாகிய கண்ணனின் தம்பி சாத்தகியோடு எதிர்த்து வந்து யுத்தம் புரியத் தொடங்கினான். அவன் தனது கட்டமைந்த வில்லின் கோடிகளை நன்றாக வளைத்து சாத்தகியின் அழகான தோள்களிலும், அகன்ற மார்பிலும் துளைக்கும்படி வலிமை பெற்ற பல பாணங்களைப் பிரயோகித்தான். உடனே விருஷசேனனுக்குச் சமமான சாத்தகி அவனுடைய தேரும், கொடியும், சிறந்த குதிரைகளும், குடையும், பாகனும் ஆகிய யாவும் அழியும்படியாக அவனது தோள்களிலும் மார்பிலும் ஒன்பது பாணங்களைப் பதிலுக்குப் பிரயோகித்தான்.

காவிரிநாட்டுச் சோழனும், மகதநாட்டு வேந்தன் சாதேவனும் ஒருவரையொருவர் பகைத்து, மலையருவி போலக் கபாலங்களிலிருந்து மதநீர் பெருக்குகின்ற யானையின் மேலே இரண்டு சூரியர்கள் போல அமர்ந்து சில பாணங்களைத் தொடுத்துவிட்டார்கள்.

கப்பல்களையுடைய கடல் அலைகளால் சூழப்பட்ட ஏழுதீவுகளையும் தடையின்றிப் பிரதட்சிணமாக வந்த மநுகுலத்துச் சோழராஜனை, சாதேவன் எதிர்த்துத் தனது கொடிய கண்கள் நெருப்புப் பொறி சிந்தும்படிச் சீறி கர்ஜித்தான். பின்னும் பெண்களின் இளைய பருத்த தனங்களைத் தழுவிய சோழனுடைய தோள்கள் அந்திவானத்துச் செம்மை போன்ற ரத்தநீரிலே மூழ்கும்படி சாதேவன், அவன்மேல் மின்னலோ என்னும்படியான இரண்டு அம்புகளை ஏவினான்.

வஞ்சியும், புகாரும், மதுரையும் ஆகிய மூன்று ராஜதானிகளையும் உடைய தமிழ்நாட்டை ஆளும் சோழன், முன்பு தேவேந்திரனுக்காக வாளேந்திய அசுரர்களை விற்களால் கொன்று ஜெயித்தான். அதனால் தேவேந்திரன் மகிழ்ந்து சோழனுக்கு ஒரு விஷபாணத்தைப் பரிசாகத் தந்தருளினான். வட தேசத்து மன்னர்கள் கொடுக்கும் வரிகளையெல்லாம் பெற்றுக் கொள்ளுகின்ற சோழராஜன், அப்போது அந்த விஷபாணத்தை ஏவி மேருமலை போன்ற

சாதேவனின் யானையையும், அவனையும் கொன்று அங்கிருந்து திரும்பிச் சென்றான்.

தேவாதிதேவனும் விடைவாகனனுமான சிவபெருமானின் அழகிய பொன் போன்ற அரிய திருவடித்தாமரை மலர்கள் மணக்கப் பெற்ற திருமுடியை உடையவன் சோழராஜன். அவன் எட்டுத்திக்குகளிலும் மநுதரும சாஸ்திர நீதியின்படி நடத்துகின்ற செங்கோலை உடையவன். எங்கும் ஒற்றைக்குடை தரும் நிழலையுடையவன். மிகவும் ஒளியுள்ள முடியில் அணியும் மணியை அணிந்த தலையையுடையவன். வண்டுகள் தேன்குடிக்கும் ஆத்திப்பூமாலையையுடையவன். வலிமை மிகுந்த பெரிய புலிச் சின்னம் பொறித்த கொடியையுடையவன். அப்படிப்பட்ட வெற்றியையுடைய சோழனுக்குச் சமமான வீரர்கள் யார்?

பலதேசத்து அரசர்களும் தனக்குக் குற்றேவல் செய்யும்படி இந்தப் பூமியில் ஆணை செலுத்துகின்ற வெற்றி பொருந்திய சோழமன்னன், தனது கையில் பிடித்த வில்லின் வலிமையால் பிரயோகிக்கப்பட்ட அம்பு தைத்ததால் சாதேவன் தலைதுண்டிக்கப்பட்டுத் தரையிலே விழுந்து மாண்டான். சாதேவன் இறந்ததும் துரியோதனாதியரின் சேனைக் கூட்டம் புறமுதுகிட்டது!

தனது சேனை புறுமுதுகிட்டு ஓடுவதைக் கண்டதும் அசுவத்தாமன் மிகவும் மனம் வெதும்பினான். உடனே பகைவரை எதிர்த்து வலிமை பொருந்திய பல அம்புகளைப் பிரயோகித்துக் கொண்டே வந்தான்.

அர்ச்சுனன் அதைக் கண்டதும், 'இன்றைக்கே யுத்தத்தை முடிப்பேன்' என்றெண்ணி, ஆரவாரத்துடன் அசுவத்தாமன் எதிரே போய் நின்றான். அக்கணமே அர்ச்சுனன் தான் பிரயோகித்த அம்புகளால் அசுவத்தாமனுடைய தேரையழித்து, அவனைத் தோற்கடித்து வெறுங்கால்களால் திரும்பிப் போகும்படி உயிரோடு அனுப்பி வைத்தான்.

துரியோதனனுடைய தம்பிமார்களுள் சுதக்கணனும் ஒருவன். அவன் மகாவீரன். தமது பெரிய சேனைக்குப் பின்னே நின்றவன், சேனை புறமுதுகிட்டதைப் பார்த்த

வினாடியில் தனது சதுரங்கச் சேனையோடு யுகாந்த காலத்து அக்கினி போலக் கோபித்துப் போருக்கு வந்தான்.

மேகத்தில் தோன்றும் இந்திரவில்லைப் போலத் தனது வில்லை வளைத்து கூரிய அம்புகளை அதிகமாகப் பிரயோகித்து வரும் அந்தச் சுதக்கணனை, நகுலன் போர் விருப்பத்துடன் பார்த்தான். அப்படிப் பார்த்து நகுலன் அவனை நோக்கிப் புன்னகை புரிந்து, அவனது அம்புகளைத் தனது எதிரம்புகளால் அழித்து, அப்பொழுதே அவனையும் பயந்து ஓடச் செய்தான்.

கர்ணன் அவற்றையெல்லாம் கண்டான். அதுகண்டு அவன், 'அளவில்லாமல் வருகின்ற பகைவர்கள் இப்படிப் போர் செய்தால் எங்களின் சேனை இன்றைக்குப் போதாது' என்று நினைத்தான். அந்நினைவோடு இதுவரை யுத்தத்தில் இறக்காத அரசர்கள் தன்னைச் சுற்றிலும் வரும்படி, தடையில்லாத வலிமை கொண்ட கர்ணன் பகைவர்கள்மேல் விரைந்து போருக்குச் சென்றான்.

சூரியகுமாரன் அப்படிப் போருக்கு வருவதை தருமர் பார்த்தார். அவர் கர்ணனின் எண்ணத்தை அறிந்தார். அவனுடைய சேனாபலத்தையும் புரிந்து கொண்டார். அந்தக் கணத்தில் தருமர் பாஞ்சாலம், கேகயம் ஆகிய நாட்டுப் பலபாஷை பேசும் அரசர்களுள் இறந்தவர்கள் போக மிஞ்சிய மன்னர்கள் தம்மைச் சுற்றிலும் வரும்படி, பெரும் சேனையுடன் கர்ணனை வந்து எதிர்த்தார்.

பிறகு, தங்களுக்குத் தாங்களேயன்றி வேறு உவமையில்லாத தருமரும் கர்ணனும், அழகிய பொன்மயமான இரண்டு மேருமலைகள் போலக் கொஞ்சமும் சலனமில்லாமல் கொடூரமாகப் போர் செய்தார்கள்.

அப்போது தருமர் தொடுத்த அம்புகளால் கர்ணனுடைய சேனாவீரர்கள் எத்தனைப் பேர்கள் இறந்தார்கள் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அதுபோல் கர்ணன் தொடுத்த அம்புகளால் தருமருடைய சேனாவீரர்கள் எத்தனைப்பேர்கள் இறந்தார்கள் என்றும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது!

அவர்கள் இருவரின் சேனைகளும் தோற்றுச் சென்றும், திரும்பி வந்தும் போர் செய்தன. ஆயினும் வில்வீரர்களான

அந்த இருவரும் விரைந்து விடப்படுகின்ற ஆரவாரத்தையுடைய அம்புகளால், அண்டகோளத்தின் மேல்முகடும் பிளவுபட்டு வெடிக்கும்படி தமக்குள் பொருந்தி விற்போர் செய்தார்கள்.

வானத்தில் யுத்தம் காண வந்து நின்ற தேவர்கள், அந்த இரண்டு வீரர்களின் பகைவரைக் கொல்லும் அம்புகள் நிறைந்த அம்பறாத்தூணியையும், சிவந்த கையில் பிடித்த விற்களையும், இரண்டு மலைகள் போல் திரண்ட வலிய தோள்களையும், போருக்கு நின்ற நிலையையும், அம்புத் தொடுப்பதற்குக் குறி பார்ப்பதையும், சிறிய நாணியின் ஓசை பொருந்திய விதத்தையும், போர் புரியும் வன்மையையும் பார்த்தார்கள். அதனால் உண்டான மகிழ்ச்சியோடு அந்தத் தேவர்கள் கர்ணனையும் தருமரையும் துதித்து வாழ்த்தினார்கள்.

அப்போது கர்ணன் தருமருடைய இரண்டு தோள்களிலும் எட்டு அம்புகளையும், மார்பிலே ஏழு அம்புகளையும் பிரயோகித்தான். அதனால் கோபித்த தருமர் உடனே இரண்டு பாணங்களைச் செலுத்தி கர்ணனுடைய தோள்களைப் பிளந்து, வில்லையும் துண்டித்துத் தள்ளினார்.

சூரியமைந்தன் அந்தக் கணத்தில் வேறொரு கட்டமைந்த வில்லை எடுத்து வளைத்து பலநூறு பாணங்களைத் தொடுத்தான். தான் தொடுத்த கூர்மையான அம்புகளால் அவன், உடல்வேறு உயிர்வேறாகப் பலரைக் கொன்றான். அதனால் பகைவரின் உடம்பிலிருந்து பெருகிய ரத்தம் ஆறாக ஓடியது!

மற்றும் கர்ணன் அப்போது பிரயோகித்த அம்புகளால் திருஷ்டத்யும்நன், தன் தம்பிமார்களான சாதேவன், தண்டதரன், தண்டகன், சித்ரதேவன், சாத்தகி, சித்ரகீர்த்தி ஆகியோருடன் தனது தேரும் பிளந்து போக வில்லும் துண்டிக்கப்பட்டான்.

திருஷ்டத்யும்நன் கர்ணனின் பாணங்களால் சோர்வடைந்ததைக் கண்டதும், தருமர் தமது சதுரங்கச் சேனையோடு கர்ணனை நோக்கி விரைந்தார். மேக வாகனத்தில் ஏறி இந்திரவில்லோடு பூமிக்கு வந்து போரிடும் தேவேந்திரனைப் போலப் போகும்போதே தருமர் கிருபாசாரியாரும், கிருதவர்மாவும், சகுனியும், மற்ற

பகையரசர்களும் ஆகியோரின் உடம்புகளிலெல்லாம் வரிசையாகத் துளைத்துச் செல்லும்படி, ஐம்பதும் அறுபதுமாக நீண்ட அம்புகளை வேகமாகப் பிரயோகித்துக் கொண்டே சென்றார். அவ்வாறு சென்ற முரசக் கொடியுடைய தருமர் ரதத்தின் மேலிருந்தபடியே கர்ணனைச் சமீபித்தார்.

கர்ணனை நெருங்கிய தருமர் அவனுடைய கைவில்லை இரண்டு அம்புகளால் துண்டித்தார். அவனுடைய தேர்க்கொடியை இரண்டு அம்புகளால் அறுத்தார். ரதத்தின் கொடிஞ்சியை இரண்டு அம்புகளால் தள்ளினார். ஓர் அம்பைத் தேர்ச் சாரதியான சல்லியனுடைய உடம்பில் நன்றாகத் தைக்க வைத்தார். ஓர் அம்பைக் குதிரைகளின் மார்பில் செலுத்தினார். மேலும், தமது உயர்ந்த வில்லை வளைத்து தருமர் சில கூரிய அம்புகளால் கர்ணனுடைய இரண்டு தோள்களையும் கிளறினார்.

பின்பு, தருமர் கலிங்கதேசத்து அரசர்களும், குகுரதேசத்து அரசர்களும், மகததேசத்து அரசர்களும், ஒட்டிய தேசத்து அரசர்களும், மற்றும் பல கிரீடாதிபதிகளும் ஆகிய இவர்களுள் புறமுதுகிட்டும், கைகூப்பித் தொழுதும் சென்றவர்கள் போக, மற்றவர்களையெல்லாம் இறந்து சொர்க்கம் அடையும்படிப் போர் செய்தார்.

அப்படிப் போரிட்டபின், தருமர் தமது பவழம் போல் சிவந்த வாயில் அழகிய சங்கை வைத்து ஊதினார். அப்போது அண்டகோளம் வெடிக்கும்; திசைகள் செவிடுபடும்; தேவலோகம் அழியும்; நாகலோகம் முழுதும் இடிபடும்; பூமி மனிதர்களோடு மடியும் என்னும்படி அச்சங்கின் பேரொலி எழுந்தது. அப்பேரோசை எல்லாக் கடல்களும் பொங்குகின்ற யுகாந்தகாலத்தில் காணப்படும் படபா என்னும் பெண் குதிரையின் முகத்திலே எரிகின்ற நெருப்புப் பற்றும்படி மண்டும் காற்றின் ஓசையைக் காட்டிலும் அதிகமாக ஒலித்தது!

அதேகணத்தில் சல்லியன் சாரத்தியம் செய்யத் தேரிலிருந்து கொண்டு போர் புரியும் கொடைவள்ளல் கர்ணன், தருமரின் சங்கநாதத்துக்குப் பதில் சங்கநாதம் செய்தான். கவசகுண்டலங்களைத் தேவேந்திரனுக்குக் கொடுத்த பெருமையில் சிறந்த கர்ணன், காற்றின் ஓசையைக் காட்டிலும் ஏழுமடங்கு அதிகமாகப் பேரொலி

உண்டாகவும், எல்லா இடமும் திகைக்கவும் உக்கிரமாகச் சங்கநாதம் செய்த பின்பு, தருமருக்கு முன் சென்று அவரை நெருங்கினான்.

தருமரைச் சமீபித்த கர்ணன் அவருடைய மார்பிலும், வலிய தோள்களிலும் அநேக கூரிய பாணங்களைச் செலுத்தினான். தருமரின் தேர் உறுப்புக்களான அச்சுக்களையும் சக்கரங்களையும் தனது பாணங்களால் அவன் சிதைத்தான். மற்றும் கர்ணன் அம்புகளைப் பிரயோகித்து தருமருடைய வில்லையும் கொடியையும் துண்டித்துத் தள்ளினான். தருமருடைய தேர்ச்சாரதியின் உடம்பில் கர்ணன் பிரயோகித்த அம்புகள் மார்பில் பாய்ந்து முதுகு வழியே வெளிப்பட்டு அவனைக் கொன்றன.

கர்ணன் அப்படிப் போரிட்டதும் தருமர், தமது போர்த்திறமையால் தம்மை, அவன் படுத்திய பாட்டையெல்லாம் அவனும் படும்படிச் செய்தார்.

அதுகண்டு அசுவத்தாமன் முதலியவர்கள் தருமரும் கர்ணனும் பெற்றுள்ள வலிமையையும், அவர்கள் பயின்ற வில்வித்தையின் உறுதியையும் சிறப்பித்துச் சொன்னார்கள்.

பிறகு, கர்ணனும் தருமரும் வேறு தேர்களில் ஏறிக் கொண்டார்கள். தருமர் வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு மீண்டும் கர்ணனை எதிர்த்துப் போரிடத் தொடங்கினார். அவர் கர்ணன்மேல் கூரிய அம்புகளைப் பிரயோகித்தார். அந்த அம்புகளையெல்லாம் கர்ணன் தனது எதிரம்புகளால் பொடியாக்கினான். மேலும், அவன் தொடுத்த அம்புகள் தருமருடைய மார்பு முழுவதையும் துளைத்தன. அதனால் தருமர் மிகவும் சோர்ந்து போய், தேர்மேல் ஆயுதங்களைப் போட்டுவிட்டுப் புறமுதுகிட்டுச் செல்லத் தொடங்கினார்.

அப்போது கர்ணன் தருமரை நோக்கி, "நீ புகழை உடையவன்! படிக்கத்தக்க நூல்களைப் படித்ததால் உண்டான நல்லறிவை உடையவன்! தகுந்த இயற்கை அறிவோடு கூடிய மனத்தை உடையவன்! மிகுந்த சிநேகிதர்களையும் உறவினர்களையும் உடையவன்! உண்மைக் குணத்தின் அளவை உடையவன்! தருமநெறி தவறாத தம்பிமார்கள் பணிந்து நடக்கின்ற மதிப்பை

உடையவன்! பூமி முழுவதும் தான் ஒருவனாகவே நன்றாக அரசாளுகின்ற உயர்ந்த அதிகாரத்தைப் பெறவிருக்கின்றாய். இப்படிப்பட்ட நீ பகைவர்கள் எல்லையில்லாதபடி வந்து நெருங்கியபோது, மானத்தைக் காத்துக் கொள்ளா ல் உயிரைக் காத்துக் கொண்டு புறமுதுகிட்டு ஓடாதே. அது உனக்குத் தகுதியில்லை! முறையில்லை! ஆகையால், உறுதியோடு சேனையுடன் போரில் நிலைத்து நில்!'' என்றான்.

மிகவும் கருணையுள்ள தருமர், கர்ணன் உறுதியாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அவனை நன்கு மதித்து புறமுதுகிட்டுச் செல்லாமல் போரில் உறுதியாக நின்றார். அச்சமயத்தில் தனது கதாயுதத்தால் தன்னை எதிர்த்த காலாள் வீரர்களின் தலைகளைத் துண்டித்துக் கொண்டும், யானைகளின் தலைகளைத் துண்டித்து உருட்டிக் கொண்டும், தேர்களைச் சிதைத்துக் கொண்டும், குதிரைகளின் உடம்பை அழித்துக் கொண்டும் ஒரு இமைப்பொழுதில் பீமன் தருமரைச் சமீபித்து வந்து சேர்ந்தான். ஆமாம். தருமர் புறமுதுகிட்டதைக் கண்டதும், கிரீடாதிபதிகளோடு பீமன் அவனுக்கு அருகே வந்து சேர்ந்தான்.

உடனே கர்ணனைப் பார்த்துச் சல்லியன், ''வாயுபுத்திரனாகிய பீமனைப் போர் செய்து வெல்வது அரிது!'' என்று பகையின் வலிமை தோன்றும்படிச் சொன்னான்.

மன்மதனைப் போல் நின்ற கர்ணன் அதுகேட்டு, வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு சல்லியனை நோக்கி, ''வெற்றியுடைய பூமாலை கொண்டவனே! பீமனாக இருக்கட்டும். வெற்றியையுடைய அர்ச்சுனனாக இருக்கட்டும். நெருப்புப் பொறி பறக்கும் எனது ஒரு பாணத்துக்கு முன் நிற்க மாட்டார்கள். அதனை இன்றையப் போரில் பார்ப்பாய். நீ தேரைச் செலுத்துவாய்!'' என்றான்.

கர்ணன் அப்படிச் சொல்வதற்கு முன் பீமன் ரதத்தின் மேல் அவன் எதிரே வந்து, தனது ஓர் அம்பால் ஒரு க்ஷணத்தில் அவனுடைய பேச்சையும் வில்லையும் அழித்தான். அந்த வினாடியில் கர்ணன் வேறு ஒரு வில்லால் பன்னிரண்டு அம்புகளைப் பீமனுடைய மார்பிலே பரப்பினான்.

பீமன் தன் மார்பில் பாய்ந்த அந்தப் பன்னிரண்டு பாணங்களையும் தனது கையால் பொடியாக்கினான். பின்பு, வாள் போன்ற வேகமாகச் செல்லும் ஒரு கொடிய பாணத்தைப் பீமன் கர்ணனுடைய மார்பிலே செலுத்தினான். அதனால் கர்ணன் மூர்ச்சித்துத் தேர்மேல் விழுந்தான்.

சூரியபுத்திரன் கர்ணன் பீமபாணத்தால் மூர்ச்சித்து விழுந்ததும், ராஜராஜனாகிய துரியோதனனுடைய கொடிய சேனை புறமுதுகிட்டு ஓடிவிட்டது.

அப்போது சல்லியன் கர்ணனுடைய மூர்ச்சைத் தெளிவித்தான். கர்ணன் அதனால் தெளிந்து எழுந்திருந்து வில்லை வளைத்து, தன்னைச் சூழ்ந்த பகைவர்களை யெல்லாம் அம்புகளால் பிளந்து சாகடித்தான்.

கர்ணனுடைய வில் பொழிந்த அம்புகளால் எத்தனை அரசர்கள் இறந்தார்கள்? இறந்தவர்களைக் கணக்கிட வல்லவர்கள் யார்? கர்ணனின் பாணத்தால் சதுரங்கச் சேனையுடைய பாஞ்சால தேசத்து அரசர்களான சாதேவன், தண்டதரன், தண்டகன், சித்ரதேவன், சாத்தகி, சித்ரகீர்த்தி, ஸிம்ஹசேனன் ஆகிய ஏழுபேர்களும் செத்தார்கள்.

தனது பெரும் சேனையழிந்ததனால் பீமன் புறமுதுகிட்டு ஓடினான்!

ஸ்ரீகண்ணபிரான் அதுகண்டு தனது தேரை ஓட்ட, தேவேந்திர குமாரனாகிய அர்ச்சுனன் யானைமேல் சிங்கம் செல்வது போலக் கர்ணன் மேல் போருக்கு வந்து சேர்ந்தான்.

அர்ச்சுனன் கர்ணனை நெருங்கியதும், அவனுடைய சேனையிலுள்ள அரசர்களும் கர்ணனுடைய சேனையிலுள்ள அரசர்களும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டார்கள். அதே சமயம் சூரியமைந்தனும் இந்திர குமாரனும் தங்கள் வில்லை வளைத்து அம்புகளைப் பிரயோகித்தார்கள். அந்த அம்புகளும் தமக்குள் நெருங்கி ஆகாயத்தை மறைத்தன.

அச்சமயம் பிராமணனாகிய அசுவத்தாமன் கர்ணனுக்கு உதவியாக தேர் மேலேறி மூடிய கண் திறப்பதற்குள் அங்கு வந்து சேர்ந்தான். அவன் ஆதிசேஷனைப் படுக்கையாகவுடைய எல்லாச் செல்வங்களுக்கும் தலைவனான கண்ணனுடைய உடம்பும்,

அர்ச்சுனனுடைய உடம்பும் செம்மேகங்கள் சூழ்ந்த கரிய ஆகாயம் போல் ஆகும்படி கொடிய அம்புகளை அவர்கள்மேல் தைக்கச் செய்தான்.

தேவேந்திரமைந்தன் அதனால் வெகுவாகக் கோபித்தான். அவன் மிக உக்கிரத்தோடு பாணம் எய்தி அசுவத்தாமன் தேரையும் வில்லையும் அழித்தான். அசுவத்தாமனும் வேறு ஒரு தேரும் வில்லும் பெற்று, சூரியன் இருளை அழிப்பது போல அர்ச்சுனனுடைய உறுதிநிலையைத் தளரச் செய்தான்.

கிருஷ்ணன் அர்ச்சுனனுடைய தளர்ச்சியைக் கண்டதும், அவனைத் தைரியப்படுத்தி, "ஐயனே! கொடிய போர் செய்யும் அசுவத்தாமன் அலட்சியமாக வெல்லத் தக்கவன் இல்லை. இப்போது இவனை மார்பில் அம்பெய்துப் பிளந்திடு!" என்றான்.

கண்ணனுடைய அந்த வார்த்தை முடிவதற்கு முன் அர்ச்சுனன் அர்த்த சந்திரபாணம் ஒன்றை அசுவத்தாமனின் மார்பில் செலுத்தினான். அதனால் பரமசிவனது சிறந்த குமாரனாகிய அசுவத்தாமன் மயங்கி வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு தேர்மேல் விழுந்தான்.

துச்சாதனன் அசுவத்தாமனின் நிலையைக் கண்டான். உடனே துச்சாதனன் முற்பிறப்பில் செய்த நல்வினைப் பலன் பிற்பிறப்பில் வந்து உதவுவது போல, அசுவத்தாமனுக்கு உதவியாக ஓடிவந்து அவனைத் தேரோடு அப்பால் கொண்டு சென்றான்.

அசுவத்தாமன் திரும்பவும் வந்து யுத்தம் செய்தான். அப்போது மீன் கொடியுடைய சித்திரவாகனப் பாண்டியன் அசுவத்தாமனை வந்து எதிர்த்துப் போரிட்டான். தனது பாணங்களால் அவன் அசுவத்தாமனின் தேரையும், சாரதியையும், குதிரைகளையும், வில்லையும் அழித்தான். அன்று பாண்டியன் செய்த வீரத்தன்மையை அரசர்களுள் வேறு யார் செய்திருக்கின்றார்கள்?

பாண்டியனின் கொடிய தாக்குதலால் அசுவத்தாமன் மிகவும் சினம் கொண்டான். அவன் வேறு ஒரு தேரிலேறி, நூறு கொடிய அம்புகளை ஆராய்ந்து எடுத்து ஒரு வில்லையும் வளைத்து, தேவார ஏடு எதிர்த்து வந்த வைகை

பாயும் பாண்டியநாட்டு வேந்தன் சித்திரவாகனன் மேல் பிரயோகித்தான்.

பிராமணனாகிய அசுவத்தாமன் பிரயோகித்த அந்த அம்புகளையெல்லாம், க்ஷத்திரியனாகிய சித்திரவாகனன் எதிரம்புகளைப் பிரயோகித்து அழித்தான். பின்பு, தாங்கள் வளர்த்த முத்தமிழைப் போல, அசுவத்தாமனின் மனத்தில் நன்றாகப் பதியும்படி மூன்று அம்புகளை அவன் தொடுத்துவிட்டான்! தகப்பனாகிய துரோணாசாரியாரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த பாண்டியன், அவர் பிள்ளையாகிய அசுவத்தாமனுக்கு இளைப்பானோ?

முற்காலத்தில் வடிவலம்பப் பாண்டியன் வேலெறிந்து சமுத்திரத்தை வற்றச் செய்தது போல, மதமயக்கத்தோடு போர் செய்யும் துதிக்கையையுடைய யானைகளும், குதிரைகளும், தேர்களும், காலாள்வீரர்களும் அழியும்படி, சித்திரவாகனன் தனது அம்பினால் பகைவர்களுடைய சேனாசமுத்திரத்தை வற்றச் செய்தான்.

மீண்டும் எதிரிட்டு வந்த அசுவத்தாமன் அக்கினிபோல், பயங்கரமாக வில்லை வளைத்து பாண்டியன் மேல் பாணங்களை வர்ஷித்தான். அதனால் பாண்டியனின் தேர் அழிந்தது.

உடனே சித்திரவாகனன் தேரிலிருந்து தரையிலே இறங்கி, பொதிகை மலையில் தமிழ்ப்பரப்பிய அகத்திய முனிவர் கடலைக் குடித்தது போல, ஏழு கடல்களையும் ஒரே சமயத்தில் குடிக்கின்ற ஒரு மதயான்னயின்மேல் ஏறிக் கொண்டான். அப்படி யானைமேல் ஏறிக் கொண்ட சித்திரவாகனன், குருபுத்திரனாகிய அசுவத்தாமனுடைய தேரோடு போர் செய்தான்.

சித்திரவாகனன் அவ்வாறு போர் செய்தபோது, அவனுடைய யானையின் காதுகள் அசைந்ததால் உண்டான பெருங்காற்றால் அசுவத்தாமனுடைய தேர்க்கொடி பின்னால் ஒதுங்கியது. யமன் போலவும், நீர் கொண்ட மேகம் போலவும், ஒலிக்கின்ற கடல் போலவும், பெரிய சுழல்காற்று போலவும் கொடூரத்தன்மையும் அடங்காத சினமும் கொண்ட அந்த யானையின் பெரிய கன்னங்களிலிருந்து பெருகிய மதஜலத்தால் ஏற்பட்ட சேற்றில் அசுவத்தாமனுடைய தேர் புதைந்தது.

சந்திரகுலத்துப் பாண்டியன் அசுவத்தாமனுடைய தேரைச் சூழ்ந்து, தனது யானையை மண்டலகதிகளாகச் செலுத்தி, அர்த்தசந்திர பாணங்களை அவன்மேல் தொடுத்தான். உடனே அசுவத்தாமன் தனது எதிரம்புகளால் அந்தப் பாணங்களையழித்து, மேலும் தான் தொடுத்த ஒரு பாணத்தால் பாண்டியனின் யானையைக் கொன்று கீழே தள்ளினான்.

தனது யானையை இழந்த பாண்டியன் கையில் பிடித்த வில்லோடு பூமியிலே நின்று, அசுவத்தாமனுடைய இரண்டு பெரிய தோள்களிலும் மார்பிலும் வேண்டியமட்டும் அம்புகளைப் பிரயோகித்து யுத்தம் பண்ணினான். கடைசியில் அசுவத்தாமன் பிரயோகித்த ஓர் அம்பினால் தானும் இறந்து விழுந்தான்!

அசுவத்தாமனுடைய கையால் பாண்டியன் இறந்ததைப் பார்த்ததும், முரசக் கொடியுடைய தருமரின் சேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும் வலிமை இழந்தார்கள். துரியோதனனின் சேனையிலுள்ள அரசர்கள் எல்லோரும் பாண்டியனுடைய மரணத்தால் மகிழ்ச்சி அடைந்து, கட்டமைந்த வில்லை எடுத்து மேலே மேலே பகைவர்களை நெருங்கிப் பாணங்களைத் தொடுத்து விட்டார்கள்.

ஆகாயத்திலிருந்து விழுகின்ற எரிநட்சத்திரம் போல அசுவத்தாமன் விட்ட ஒளி கொண்ட அம்பினால் கொற்கை வேந்தனாகிய சித்திரவாகனப் பாண்டியன் இறந்த பின்பு, மநுகுலத்துச் சோழமன்னன் அவன்முன் போருக்கு வந்து தோன்றினான்.

துரோணபுத்திரனாகிய அசுவத்தாமன் முன் போருக்கு வந்து நின்ற சோழராஜன், அவனை நோக்கி, "நீர்மேல் எழுதிய எழுத்துப் போலக் கொஞ்சமும் நிலைத்து நிற்காத பராக்கிரமத்தையுடையவனே! நீ தேர்மேல் இருந்து கொண்டு சிறிய கண்களையும், செம்புள்ளிகளையுமுடைய மேகம் போன்ற யானையின் மேலிருந்த வீரனாகிய பாண்டியனை அம்பினால் கொல்வது நீதியோ? பூமியில் உன்னைத் தவிர இந்தப் பாதகத்தை வேறு யார் செய்வார்கள்? வேதமந்திரங்களைச் சொல்லி எல்லோருடைய தீவினைகளையும் ஒழிக்கின்ற யாகங்களைச் செய்வதே

பிராமணர்களின் தொழில்! அதைவிட்டுப் பூமியில் பிராமணர்களும் கூரிய பல ஆயுதங்களால் போர் செய்வதற்கு வலிமையுள்ளவர்களோ? உன் தந்தையாகிய துரோணனைக் கொன்ற திருஷ்டத்யும்நனை அம்புகளால் கொல்ல முடியாத நீ, புயற்காற்றின் முன்பட்ட சருகு போல் ஓடிப் போவதைத் தவிரத் தாக்குவதற்கு உரிய கூரிய ஆயுதங்களால் போர் செய்ய வல்லவனோ?'' என்று சில வார்த்தைகளை இழிவாகப் பேசி, அவன்மேல் தனது வலிய வில்லை வளைத்தான்.

அந்த க்ஷணத்தில் மலையோடு மலை போர் தொடங்கும் விதம் போல, அவர்கள் இருவரின் இரண்டு தேர்களும் விரைந்து போய் ஒன்றையொன்று போருக்குத் தயாராக நெருங்கின.

சோழனும் அசுவத்தாமனும் தங்களுடைய சிவந்த கைகளால் நாணோசை அதிகமாக எழும்படி வேகமாக விற்களை வளைத்தார்கள். பின்பு அசுவத்தாமன், சிவபெருமான் முதலிய தேவர்கள் கொடுத்த அஸ்திரங்களைப் பிரயோகித்தான். சோழன் அவற்றுக்கு எதிரம்புகளைத் தொடுத்துவிட்டான். அந்த இருவருடைய அம்புகளும் மிகுதியாகப் பரவி பரந்த ஆகாயவெளியை மறைத்தன.

ஆத்திப்பூ மாலையணிந்த சோழன், தனது இரண்டு அம்புகளால் துரோணபுத்திரனாகிய அசுவத்தாமனின் தோள்களைச் சிதைத்தான். இரண்டு அம்புகளால் அவனுடைய மார்பில் துளைத்தான். ஓரம்பால் நெற்றியில் துளைத்தான்.

பதிலுக்கு அசுவத்தாமன், புறாவுக்குச் சதையை அறுத்துக் கொடுத்த காலத்தில் போல, தனது அம்புகளால் புலிக்கொடியுடைய சோழமன்னனின் உடம்பு முழுவதும் சிவக்கச் செய்தான்.

உடனே துள்ளுகின்ற கன்றை வீசி விளாமரத்தை கண்ணபிரான் வேரோடு சாய்த்தது போல, சோழனும் அப்போது கோபித்து மயில் வாகனனாகிய முருகக்கடவுளின் தம்பியான அசுவத்தாமனை வேலால் தாக்கி வீழ்த்தினான்!

சோழனின் வேலாயுதத்தால் தாக்குண்டு அசுவத்தாமன் மயங்கி விழுந்ததும், சகுனியும் மற்றும் சிலசில அரசர்களும் மனவருத்தத்தோடு ஓடி வந்து அவனை

எடுத்து வைத்துக் கொண்டு, அவனுடைய வருத்தத்தைப் போக்கினார்கள்.

பிறகு, துரியோதனாதியர் சேனையிலுள்ள அரசர்கள் அசுவத்தாமனுடன் திரும்பவும் வந்து, சிவனோடு போர் செய்யும் அசுரர்கள் போல முரசவாத்திய முழக்கத்தோடு சோழனை எதிர்த்துக் கொடிய யுத்தம் பண்ணினார்கள்.

அப்போது பொன்னி வளநாட்டுச் சோழமன்னன் பிரயோகித்த கொடிய அம்புகளால் பகைவர்களாகிய துன்மருடணனின் புத்திரனாகிய சுவாகுவும், துன்முகனுடைய குமாரனாகிய சுவாதுவும், கர்ணமைந்தனாகிய சங்கனும், மற்றும் பல ராஜகுமாரர்களும், பல வீரர்களும் மடிந்து வீரசொர்க்கம் அடைந்தார்கள்.

அதுகண்டு தனுர்வேதத்தை யறிந்த துரோணகுமாரனாகிய அசுவத்தாமனும், சூதாட்டத்தில் தனக்கு நிகரில்லாத வெற்றியையுடைய சகுனி முதலிய அரசர்களும் சோழராஜனைப் பார்த்து, "வளவனே! பழைய போருக்கு நீ தலைமையாவாய்!" என்று அவனுடைய புகழைச் சொல்லிவிட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள்.

இது இவ்வாறிருக்க, துச்சாதனனும் அவன் தம்பிமார்கள் ஒன்பது பேரும், விடாப்பெருமழையை மேகம் பொழிவது போலக் கொடிய வலிய வில்லால் நீங்காத பாணவருஷத்தைச் சொரிந்து கொண்டே, பீமனுக்கு எதிரில் வீரசொர்க்கம் அடைவதற்கு வழியைத் தேடி வருபவர்கள் போல வந்து சேர்ந்தார்கள். ஆமாம்.துச்சாதனன் திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் சொன்ன சபதத்தை முடிக்கும் பொருட்டு யுத்தகளத்தில் நின்ற பீமனின் முன்பு, அவர்கள் வெகுவேகமாக வந்து நின்றார்கள்!

பஞ்சபாண்டவர்களையும் இன்றைக்கே வெகு சீக்கிரத்தில் கொல்வேன் என்று நினைத்துத், தேரேறிப் போருக்குத் தன் முன் வந்து நின்ற துச்சாதனனை நோக்கி பீமன், "துச்சாதனா! கேட்பாயாக! உனக்குச் சமமான வீரர்கள் வேறு உண்டோ? முன்பு ராஜசபையில் நீ செய்த வெற்றியோடு கூடிய பராக்கிரமத்தை, வீரர்கள் எல்லோரும் இப்போதும் கொண்டாடுகிறார்கள். இரிசுகள் பொருந்திய தேர்மேல் ஏறிச் செய்கின்ற யுத்தத்திலும் உனக்குச்

சமமானவர்கள் வேறே யார் இருக்கின்றார்கள்? சீக்கிரமாக விருப்பத்தோடு உண்ணும்படி யமனுக்கு உன்னை நான் விருந்துணவாகக் கொடுக்கின்ற நாள் இன்றைக்குத் தானோ? உன் தலையைத் துண்டித்து, அதிலிருந்து வழிகின்ற ரத்தத்தில் நான் குளிக்கின்ற நாள் இன்றைக்குத் தானோ? அக்கினியில் பிறந்த திரௌபதி இருளைப் போன்ற தனது கூந்தலை எடுத்து முடிக்கின்ற நாள் இன்றைக்குத் தானோ? நாவுக்கு இசைந்த தண்ணீரை நான் கையால் அள்ளி எடுத்துக் குடிக்கின்ற நாள் இன்றைக்குத் தானோ? நாங்கள் சொன்ன சபதங்களெல்லாம் நிறைவேறும் நாள் இன்றைக்குத் தானோ? நினைக்கத் தகாத நினைப்பை நினைத்து ராஜசபையிலே அன்று சூதுப்போரை உண்டாக்கி, எந்நாளும் அழியாத எங்கள் அரசாட்சியை அழியச் செய்தவனே! வெற்றியோடு பூமி முழுவதையும் அரசாளுகின்ற வீரத்தோற்றமுள்ள உனது தமையனாகிய துரியோதனனையும் நாளைக்கே யுத்தத்தில் கொல்வேன். அப்படி அவனைக் கொன்று, தேவர்கள் எதிர்கொண்டு அழைத்துப் போக வரும்படி விரைவில் அனுப்புவேன். ஆகையால், நீ இன்றைக்கே சென்று அவனுக்காகச் சுவர்க்கத்தில் இடம் பிடித்து வைப்பாயாக!" என்று ஆவேசத்தோடு பேசினான்.

துச்சாதனன் அதுகேட்டு எதிர்த்து ஒன்றும் பேசாமல் ஊமையனைப் போல் நின்றான்.

உடனே துச்சாதனனின் தம்பிமார்கள் தங்கள் பெயர் பொறித்த அம்புகளை ஒவ்வொருவரும் நான்கு நான்காக மிக உக்கிரத்தோடு ஒரு க்ஷணத்தில் தொடுத்துக் கொண்டு, பீமனின் எதிரில் வந்து அவனை நெருங்கினார்கள்.

துச்சாதனனின் தம்பிமார்கள் ஒன்பது பேரும் பீமன்மேல் அம்பு தொடுத்தார்கள். அவர்கள் தொடுத்த அம்புகளையெல்லாம் பீமன் தனது அம்புகளால் விலக்கினான். மீண்டும் பீமன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அம்பாக வில்லை வளைத்து ஒன்பது அம்புகளைப் பிரயோகித்தான். பீமனின் அம்புகளால் அந்த ஒன்பது பேரும் தேர்மேல் இறந்து விழுந்தார்கள். அப்படி விழுந்த வீரர்களை, பரந்த தேவலோகத்திலுள்ள அழகும் விருப்பமுமுடைய அரம்பையர்கள் விரைந்து வந்து கூடினார்கள்!

தனது உயிருக்கும் அரிய உயிரான தம்பிமார்கள் ஒன்பது பேரும் பீமபாணங்களால் தலையறுபட்டுத் தேரில் விழுந்து மாண்டதனால், துரியோதனன் தம்பியாகிய துச்சாதனன் பெரிதும் கோபம் அடைந்தான். அந்த மகாகோபத்துடன் துச்சாதனன், பயிர் செழிக்கும்படி மழை பொழிந்து வருகின்ற கார் காலத்து மேகம் போல, பீமனின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் அம்புக் கூட்டங்களைச் செலுத்திப் பயங்கரமாகப் போரிட்டான்.

கல்மேல் விழுந்த மழைத்துளிகள் போலத் தன்மேல் துச்சாதனன் தொடுத்த அம்புகளையெல்லாம் பீமன், சிதறிப் போகும்படி விரைவாக உதறிவிட்டான். மறுகணம் அவன் வில்லை வளைத்துக் கொடிய போருக்கு உரிய பல அம்புகளை மேன்மேல் தொடுத்தான். பகைவன் தன் எதிரே வந்து அகப்பட்டபின்பு பீமன் விடுவானோ?

பீமன் தொடுத்த அம்புகளையெல்லாம், உடனுக்குடன் துச்சாதனன் தனது எதிரம்புகளால் தடுத்து விலக்கினான். பின்னும் அவன் பீமன்மேல் ஏழு அம்புகளை வர்ஷித்தான். அந்த ஏழு அம்புகளும் அக்கணமே வேகமாகப் போய் பீமனின் நான்கு தேர்க்குதிரைகளையும், சிங்கக் கொடியையும், தேரையும், வில்லையும் துண்டித்துத் தள்ளின.

உடனே பீமன் வேறு ஒரு தேரில் ஏறிக் கொண்டான். வேறு ஒரு வில்லை எடுத்து அவன் பத்து அம்புகளைத் தொடுத்துவிட்டு துச்சாதனனின் தேரையும், கொடியையும், சாரதியையும், குதிரைகளையும் அழித்தான். மேலும், அவன் அப்போதே இரண்டு அம்புகளைப் பிரயோகித்து துச்சாதனனுடைய இரண்டு தோள்களிலும் ரணம் ஏற்படுத்தினான்.

மேகம் போல் கறுத்த திரௌபதியின் கூந்தலைத் தொட்டுப் பிடித்து இழுத்துக் கொண்டு ராஜசபைக்கு வந்த அக்காலத்தில், அவள் சேலையை அவிழ்த்த வீரனாகிய துச்சாதனன், தேர் அழிந்ததால் தரையிலே குதித்து நின்றான். பிறகு, அவன் ஒரு கனமுள்ள பொற்கதாயுதத்தால் வாயுகுமாரனாகிய பீமனின் தேர்மேல் அடித்தான். அதனால் அத்தேர் அழிந்து சிதறியது.

பீமன் வில்லை விட்டுவிட்டு, தனது சத்துருக்காதினி கதாயுதத்தை எடுத்துக் கொண்டு அழிந்த தேரிலிருந்து கீழே குதித்தான்.

பின்னர் பீமனும் துச்சாதனனும் தோள்களில் கதாயுதத்தால் நன்றாகத் தட்டினார்கள். பராக்கிரமத்தை மேற்கொண்டு கதாயுதத்தை அழுத்தமாகப் பிடித்தார்கள். கதாயுதங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து நெருப்புப் பொறி சிந்தும்படித் தாக்கினார்கள். வலதுசாரியும் இடதுசாரியுமாக மண்டலகதியை முன்னே பழக்கினார்கள். கிட்டே போய்ப் போய் கால்களை வைத்துக் கொண்டு நெருங்கினார்கள். தூரத்திலே நின்று நின்று ஒரு நொடிப் பொழுதுக்குள்ளே நெருங்கினார்கள். மாறுபடும் கொடிய கோபத்தால் இடிபோல அதட்டினார்கள். அந்த அதிர்ச்சியால் எட்டுத் திக்குகளிலும் உள்ள மலை போன்ற எட்டுத்திசை யானைகளும் சப்தமிட்டன.

மேலும், பார்த்த பார்த்த அரசர்கள் எல்லோரும் மனம் திடுக்கிடும்படி, இரண்டு மலைகள் கொடிய போரைச் செய்வது போல அவர்கள் இருவரும் கோபம் கொண்டு கொண்டு எதிரே நின்று கொக்கரித்தார்கள். வேகத்தோடு மேலே எழும்பிக் குதித்தார்கள். மகிழ்ச்சி பொங்க கொடிய கதாயுதத்தைச் சுழற்றி உயர்ந்த வானத்தில் வீசி எறிந்து, மீண்டும் அதனை ஒரு கையால் ஏந்திப் பிடித்தார்கள். முகமலர்ச்சியுடன் அதிரும்படிச் சிரித்தார்கள். அதிகமான பல சபதங்களை உறுதியாகச் சொன்னார்கள்.

அவர்கள் இருவரும் பகைத்து மிகவும் கொடிய கதாயுதத்தால் ஒத்துத் தாக்குவதால் உண்டாகின்ற ஓசை, மிகவும் கொடிய இடியின் முழக்கத்தைப் போன்று ஒலித்தன. அதனால் பூமி பிளவுபட்டது. பாதாளத்திலுள்ள சர்ப்ப வர்க்கங்களும் அச்சத்தால் வயிறு வெதும்பி நஞ்சுகளை வெளியில் கக்கின. அழகிய பெரிய சக்கரவாளமலை பிளவுபட்டுச் சிதைந்தது. திக்கஜங்களின் கூட்டம் செவிடாகிக் களைத்தது. இந்த அண்டத்துக்கு அப்பால் உள்ள அண்டங்களும் உட்பட மேல்முகடு பிளந்தது. மேகங்களும் அஞ்சிப் பெரிய மலைக்குகைகளில் போய் ஒளிந்தன.

மற்றும் போரிடுகையில் அவர்கள் இருவரின் கண்களும் கோபத்தால் சிவந்தன. சிப்பியிலிருந்து

தோன்றுகின்ற முத்துக்கள் போல நெற்றியிலே வேர்வைத் துளிகள் வந்து அரும்பின. பெரிய இடிபோல வீரவாதச் சொற்களும் வாயிலிருந்து உண்டாயின. அழகிய விற்போன்ற இரண்டு புருவங்களும் மிகவும் நெறிப்புற்றன. இமயமலையோடும் மந்தரமலையோடும் சமமான அழகிய தோள்கள் எழிலுடன் பரந்து நன்றாகப் பருத்தன. யுத்தத்தில் அப்போது அரிய கதாயுதத்தால் தாக்கப்படுவதால் உடம்பு அழியும் என்று அவர்களில் ஒருவரும் கொஞ்சம் கூட இளைக்கவில்லை!

பீமனும் துச்சாதனனும் நிலைகெடாமல் வலிமையோடு அப்படித் தாக்கிப் போர் செய்த போதும், அந்த யுத்தத்தில் அவர்களின் வயிறும், நெஞ்சும், மார்பும், தோள்களும், கழுத்தும் ஆகிய உடம்பின் உறுப்புகள் ஒன்றிலும் கதாயுதங்கள் போய்ப் படவில்லை. கதாயுதங்களும் பிளவுபட்டு ஒடிந்தன. அந்தக் கதாயுதங்களை எடுத்த கைகளும் கன்றிச் சிவந்துவிட்டன. மிகவும் அதிகமான கோபம் நெஞ்சிலே மூண்டதால், அவர்கள் அப்போது ஆயுதங்களையெல்லாம் விட்டு விட்டு முட்டியால் செய்கின்ற மல்யுத்தத்தை வலிமையோடு தொடங்கினார்கள்.

பீமனும் துச்சாதனனும் ஒருவரோடு ஒருவர் கைகலந்து, ஐந்து விரல்களுள் கட்டைவிரலை நன்றாக வைத்து மற்ற விரல்களை மடக்கி இடிபோல் இடிக்கும்படி பகைவரைக் குத்தினார்கள். அந்த மல்யுத்தத்தில் பீமன் துச்சாதனனுடைய தலையிலே நெருப்புப் பொறி சிந்தும்படியும் அதிர்ச்சியடையும்படியும் குத்தினான். அவனுடைய இரண்டு கன்னங்களும் நொறுங்கி அழகிய காதுகள் உள்ளே மறையும்படிக் குத்தினான். நுனி ஒடிந்து பற்கள் சிதையக் குத்தினான். மின்னலைக் காட்டிலும் சிவந்து ஒளி பெற்ற அற்புதக் கண்கள் இரண்டும் பிதுங்கும்படிக் குத்தினான். இரண்டு கால்களும் விரல்களும் தொடங்கி உள்ள பல அவயவங்களும் எலும்போடு சதைக்கு உள்ள சம்பந்தம் நீங்கி அழியக் குத்தினான். நரம்புகள் அறுபடக் குத்தினான். அழகிய வலிய மலை போன்ற தோள்கள் துண்டுபடக் குத்தினான். கைகளோடு கூடிய கழுத்தும் அறுபடக் குத்தினான். அவ்வாறெல்லாம் துச்சாதனனைக் குத்தி அவனைத் துன்புறுத்திய பின்பு பீமன், அவனுடைய

முகத்தை முதுகுப் பக்கம் திருப்பினான். அதிகமான கோபத்தோடு மயிரை வலிய கைகளால் உறுதியாகப் பிடித்திழுத்து, அவனைத் தரையிலே தள்ளினான். புழுதி உடம்பில் படும்படி தரையில் விழுந்த துச்சாதனனை நன்றாகக் கால்களால் மிதித்துக் கொண்டு, கோபாவேசத்தோடு அவனுடைய பெரிய தொடைகளைப் பிடித்திழுத்துத் துண்டித்தான். அத்துடன் துச்சாதனனின் மார்பையும் பிளந்து தள்ளி பீமன், இரணியனின் உயிரைக் கொள்ளை கொண்ட நரசிங்கமூர்த்தியோடு சமமாகும்படிச் சிறப்புற்று விளங்கினான்!

நகம் என்னும் ஆயுதங்களால் துச்சாதனனின் மார்பைப் பிளந்து கொடிய குடலை உருவிக் கிழித்த பின்பு பீமன், பகீரதனால் பூமிக்குக் கொண்டு வரப்பட்ட ஆகாசகங்காநதித் துறையில் தேவர்கள் நீராடும் தன்மை போல, அந்தத் துச்சாதனனுடைய உடம்பிலிருந்து பெருகிய ரத்தவெள்ளத்திலே கொஞ்சமும் அருவருப்பில்லாமல் மனமகிழ்ச்சியோடு விரும்பிக் குளித்தான்!

பீமனால் துச்சாதனன் இறந்ததைக் கண்டதும் துரியோதனாதியர் சேனை, கர்ணனும் மற்ற அரசர்களும் தடுத்தும் தடைபட்டு நிற்காமல் புறமுதுகிட்டு ஓடியது!

ஸ்ரீகண்ணபிரானும், அர்ச்சுனனும், மற்றுமுள்ள அரசர்களும் பீமன் துச்சாதனனைக் கொன்றதைப் பார்த்து உடனே ஒன்றாகக் கூடினார்கள். அதனால் பாண்டவசேனை நின்ற அந்தப் போர்க்களம் அப்போது வெண்ணிற நட்சத்திரங்கள் பரவிய வானத்தைப் போல் விளங்கியது.

பீமன் பிறகும் சும்மாயிருக்கவில்லை. அவன், 'இந்தப் பத்துவிரல்களும் தீயில் பிறந்த திரௌபதியின் கூந்தலையும் சேலையையும் ஒன்றாகத் தொட்ட குற்றம் உடையவைகளாகும்!' என்று எண்ணி, துச்சாதனனின் பத்துவிரல்களையும் தனித்தனியே துண்டித்துத் தள்ளினான்.

மேலும், பீமன் துச்சாதனனுடைய ரத்தத்தைக் குடிக்கத் தொடங்கினான். அப்போது எல்லோருடைய கண்களும் இரக்கத்தால் கண்ணீர்ப் பெருக்குவதைக் கண்டதும், கண்ணபிரான் பீமனை துச்சாதனனுடைய ரத்தத்தைக் குடிக்க வேண்டாம் என்று தடுத்தான்.

கண்ணனின் வார்த்தையால் தன் வாயில் கொண்ட ரத்தத்தைப் பருகாமல் கீழே உமிழ்ந்துவிட்டு, பீமன் வெற்றி மாலையைச் சூடினான். அரசர்களிடமெல்லாம், ''எனது எண்ணம் நிறைவேறிவிட்டது!'' என்று கூறி, பீமன் தன் கொடியிலுள்ள சிங்கம் போலக் கூத்தாடிக் கொண்டு ஆரவாரித்து நின்றான்.

அப்போது பீமன், ''பிறருக்குத் துன்பத்தைத் தருகின்ற கெட்ட நியாயங்களையுடைய துச்சாதனன் போர்செய்து, தனது ஒன்பது தம்பிமார்களோடு தேவலோகத்தை அடைந்தான்!'' என்று சொல்லி, அன்புள்ள தமையனாராகிய தருமரின் திருவடிகளில் சென்று விழுந்து வணங்கி, அகங்காரத்தோடு எழுந்து நின்றான்.

துச்சாதனனைப் பீமன் கொன்ற வெறியோடு பாண்டவசேனை பூர்ணசந்திரனைப் பார்த்த கடல் போலவும், அன்று காண்டவ வனத்தை உணவாகக் கொண்ட அக்கினி போலவும் செருக்கடைந்தது. அந்த அகங்காரத்துடன் பாண்டவசேனை படுபயங்கரமாகப் பகைவர்மேல் போருக்குச் சென்றது.

பாண்டவசேனை செருக்கிப் போருக்கு வருவதைக் கண்டதும் கௌரவசேனை புறமுதுகிட்டு ஓடியது. அவற்றையெல்லாம் பார்த்தும் கர்ணன் திரும்பவும் தன்சேனையோடு சென்று, பாண்டவர்சேனையை எதிர்த்துப் போர் செய்யாமல் சும்மாயிருந்தான்.

அதுகண்டு சல்லியன் கர்ணனை நோக்கி, ''கொடிய பாண்டவர்சேனை நம்மை எதிர்த்துப் போருக்கு வந்து சூழ்ந்து கொண்டது. ஆனால் நீயோ, அதனை எதிர்த்துப் போரிடாமல் மயக்கம் கொண்டவர்கள் போல வலிமை அழிந்தாய்!'' என்று இடித்துப் பேசி, தேரைப் பாண்டவர்சேனை நோக்கிச் செலுத்தினான்.

கர்ணன் அதற்கு, ''வலிமை மிக்க மத்தரநாட்டு அரசனே! துரியோதனனைப் போன்ற வலிமையையுடைய அவன் தம்பியாகிய துச்சாதனன், பீமன் கையால் இறந்ததைப் பார்த்து நான் மனம் தளர்ந்தேன். அதைத் தவிர பக்ஷிராஜனாகிய கருடன் பாம்புக்கு எதிரே போவதற்குப் பயப்படுமோ?'' என்று உத்திரம் சொன்னான்.

பிறகு, கர்ணன் முன்னே போரில் புறமுதுகிட்ட அரசர்களையும், மன்னாதி மன்னன் துரியோதனனையும் வலிய பெரிய படையாக வகுத்து பகைவர்களை எதிர்த்து யுத்தத்துக்குப் போனான்.

அப்போது திருஷ்டத்யும்நனும் ஆகாயத்தில் விளங்குகின்ற நட்சத்திரங்கள் போலப் பரவிய அரசர்களோடு, பராக்கிரமத்தில் தனக்குத் தானே உவமையாகிய தருமரையும் சேனையையும் ஒன்றாகத் திரட்டி, உலகத்தைத் தாங்குகின்ற மகாசர்ப்பங்களும் பாரமிகுதியால் அஞ்சும்படி படைவகுத்து எதிரிகள் மேல் போருக்குச் சென்றான்.

இரண்டு பக்கத்துச் சேனைகளும் போருக்கு எழுந்தபோது, முரசங்கள் முதலிய போருக்குரிய கொடிய வாத்தியங்கள் செய்த பேரோசையாலும், விற்களின் நாணோசையாலும் தேவர்களும் செவிடானார்கள். வீரர்கள் ஏந்திய பலவகை ஆயுதங்களின் ஒளியாலும், அணிந்துள்ள பலவகை ஆபரணங்களின் ஒளியாலும் தேவர்களின் கண்களும் திகைப்படைந்துவிட்டன!

கர்ணனுடைய மூத்த மகனாகிய விருஷசேனன் தேர் மேலேறிச் சென்று நகுலன்மேல் ஒளியும் கூர்மையும் உடைய சில அம்புகளை நெருப்புப்பொறி போல இறைத்தான். நகுலன் உடனே வில்லின் நாணியைத் தெறித்து ஓசை எழுப்பிவிட்டு, பின்பு விருஷசேனனுடைய அம்புகளையெல்லாம் தான் தொடுத்த அம்புகளால் துண்டித்துத் தள்ளினான்.

விருஷசேனன் அதுகண்டு கோபித்து அம்புகளைப் பிரயோகித்து நகுலனுடைய பெரிய தேரின் சக்கரங்களை அழித்தான். அசுவனிதேவர்களுக்குப் புத்திரனாகிய நகுலன் அக்கணமே வேறொரு தேரில் ஏறிக் கொண்டான். மறுகணம் அவன் விருஷசேனனின் கொடியையும், கொடிய வில்லையும் தனது கணைகளால் அறுத்துத் தள்ளினான். ஆமாம்.

மீண்டும் விருஷசேனன் மற்றொரு வில்லை மேருமலையைப் போல எடுத்து வளைத்து அம்பெய்து, நகுலனை மூர்ச்சித்துக் கீழே விழச் செய்தான். அப்படி விழுந்த நகுலனை, கோபத்தால் சிவந்த கண்களையும்

வலிமையையும் உடைய பீமன் தூக்கிக் கொண்டு அப்பால் சென்றான்.

அப்போது காண்டவ வனத்தைச் சாம்பலாக்கிய அர்ச்சுனன் விருஷசேனனுடைய கொடிய போரைப் பார்த்தான். விருஷசேனனின் ஆண்மையைக் கண்டதும் அவனைக் கொல்ல நினைத்து அர்ச்சுனன் உடனே அவன்மேல் போருக்குச் சென்றான்.

தன்மேல் அர்ச்சுனன் போருக்கு வருவதை விருஷசேனன் பார்த்தான். அதுகண்டு வலிய ஆண்சிங்கம் போன்ற விருஷசேனன், 'தம்பியாகிய நகுலன் அடைந்த துன்பத்தைத் தமையனாகிய அர்ச்சுனனையும் அடையும்படிச் செய்வேன்!' என்று எண்ணிக் கோபித்தான். அந்தக் கோபத்துடன் கர்ணபுத்திரன் அநுமக்கொடியுடைய அர்ச்சுனன் எதிரே போய் வில்லை வளைத்து, அவனையும் அவன் சாரதியாகிய கண்ணனையும் அம்புகளால் மறைத்தான்.

அக்கணத்தில் கொடிய யுத்தத்தில் பகைவரின் போரை அழித்தவனாகிய அர்ச்சுனன், தன் எதிரே போருக்கு வந்த விருஷசேனனின் அர்த்தசந்திர பாணங்களையும், வில்லின் நாணியையும், வில்லைப் பிடித்த கொடிய விரலையும், வில்லின் நடுவிடத்தையும், கிரீடத்தையுடைய தலையையும் ஓர் அம்பினால் துண்டித்துத் தள்ளினான்.

விருஷசேனன் இறந்து விழுந்தான். அதனால் கௌரவசேனாவீரர்கள் எல்லோரும் கொடிய போரில் தோற்றுப் புறமுதுகிட்டுப் போய், தங்களுடைய சேனாதிபதியாகிய கர்ணனுடைய பெரிய தேரின் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டார்கள். சில வீரர்கள் தோற்காமல் அர்ச்சுனன் முன் சென்று யுத்தம் பண்ணி, தேவர்களாய்த் தேவலோகத்துப் பெண்களின் உடம்பைத் தழுவி வீரசொர்க்கத்தில் வாழ்ந்தார்கள்.

தன் மகனாகிய விருஷசேனன் அர்ச்சுனனுடைய பாணங்களால் யுத்தபூமியில் இறந்து விழுந்தான் என்பதைக் கேள்விப்பட்டதும், கர்ணன் மனம் கலங்கித் தனது தேரில் மூர்ச்சித்து விழுந்தான். அதுகண்டு அவனுடைய அழகிய தேரை ஓட்டுகின்ற சல்லியன் மயக்கம் தெளிவித்துப் பற்பல

வார்த்தைகளால் அவனைச் சமாதானப் படுத்தினான். அச்சமயத்தில் அசுவத்தாமன் துரியோதனனிடம் சென்றான்.

துரியோதனனிடம் சென்ற அசுவத்தாமன், அவன் முகம் பார்த்து, ''ராஜராஜனே! நீயும் தருமனும் ஒழியாதப் போரைச் செய்யத் தொடங்கினீர்கள். அதனாலேயே உண்மையான பெரும் புகழுள்ள குருவம்சத்தில் தோன்றிய பீஷ்மர் முதலாக வலிமை மிக்க எல்லாப் பெரியோர்களும், சுற்றத்தார்களும், மற்ற அரசர்களும், எல்லோரும் உவமையற்ற பெரிய சதுரங்கச்சேனையோடும் போர் செய்து உயிர் நீங்கினார்கள்! சங்கொலி இல்லாத மங்கலச் சடங்குகளும், நல்லொழுக்கம் இல்லாத குலமும், தொன்று தொட்டுவரும் விளைச்சல் இல்லாத வயலும், மூன்று அக்கினி இல்லாத பிராமணர்களின் இல்வாழ்க்கையும், துவாரம் இல்லாத அழகிய முத்தும், அழகிய குளிர்ந்த நீர்த்துறை இல்லாத அழகிய தேசமும், சுற்றத்தவர்கள் இல்லாத அரசாட்சியின் தன்மையும் தனித்தனியே நல்லது என்று கேட்டு அறிவது உண்டோ? அழிந்தவைப் போக மிஞ்சியுள்ள யானைகளும் குதிரைகளும் உள்ளன. தேர்கள் உள்ளன. இனி உயிரோடுள்ள உனது தம்பிமார்களோடும், தருமனுடைய தம்பிமார்களோடும், உங்கள் தமையனாகிய தருமனோடும் சேர்ந்து சமாதானமாகி, நீ பெரிய பூமியைக் காப்பதுவே முறையாகும்!'' என்றான்.

அதுகேட்டு துரியோதனன் அசுவத்தாமனைப் பார்த்து, ''நீ சொல்லும் காரியம் பூமியை அரசாள வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அல்லவோ செய்ய வேண்டியதாகும்? வாத்தியங்கள் முழங்குகின்ற யுத்தகளத்தில் உடம்பு விழவும், உயிர் தேவலோகத்தை அடையவுமான வீரத்தனத்தையே நான் பெற வேண்டும். அதுவே எனக்கு இனிமேல் அடையும் பயனாகும்!'' என்றான்.

பின்பு, அசுவத்தாமனுக்கு மேலும் சமாதானமாக இனிய சில வார்த்தைகளைத் துரியோதனன் சொன்னான். அது முடிந்ததும் துரியோதனன் கர்ணனைத் தழுவிக் கொண்டு, புத்திர சோகத்தால் அவன் கண்களிலிருந்து பெருகுகின்ற கண்ணீரைத் துடைத்து, அர்ச்சுனனுடைய உயிரைக் கொல்லும்படி அவனுக்கு ஆணையிட்டான்!

உடனே கர்ணன், "மலை கலங்கினாலும், திக்குக்கள் கலங்கினாலும், திக்குக்களிலுள்ள தேவர்கள் தாம் தாம் நிற்கும் நிலை கலங்கினாலும், பெரிய கடல் கலங்கினாலும், பூமி கலங்கினாலும், பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய தலை கலங்கினாலும், பெரிய மூன்று வகைச் சபைகளிலும் உள்ள அச்சமற்ற புலவர்கள் படித்த கல்வி கலங்கினாலும் என் மனம் யுத்தகளத்தில் கலங்குமோ? கலங்காதே! என் மகனுடைய தலை என் எதிரே துண்டிக்கும் படிப் பாணம்விட்ட இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனின் தலையை ஓர் அம்பினால் இந்த க்ஷணத்தில்தானே அறுப்பேன்!" என்று திருதராஷ்டிர ராஜகுமாரனான துரியோதனனுக்கும், மத்திரதேசத்து இளவரசனாகிய சல்லியனுக்கும், சிறந்த யாகங்களுக்குரிய வில்வித்தையில் வல்ல அசுவத்தாமனுக்கும் மனஉறுதியோடு சொன்னான்.

அப்போது சங்கங்களிலிருந்தும் முரசங்களிலிருந்தும் உண்டாகிய பேரோசையால் வெளியிலுள்ள அண்டங்களெல்லாம் அதிர்ந்து நொறுங்கும் என்றும் சேனைகளின் நெருக்கத்தால் ஏற்பட்ட பாரத்தால் இருக்கின்ற மலைகளெல்லாம் சாய்ந்துவிடும் என்றும் புழுதியால் அலைகின்ற கடல்களெல்லாம் வற்றிப் போகும் என்றும் எண்ணிக் கலங்கினர் மேலுலக தேவர்கள்.

போருக்கு எழுந்த இரண்டு பக்கத்துச் சேனைகளும் ஒன்றையொன்று நெருங்கின. அவற்றில் குதிரைகளோடு குதிரைகள் நெருங்கின. காலாள் சேனையோடு காலாள்சேனை நெருங்கின. மதம் பிடித்த யானைகளோடு யானைகள் நெருங்கின. தேர்களோடு தேர்கள் நெருங்கின. பரந்த நீண்ட குடைகளோடு குடைகள் நெருங்கின. காற்றுவீசுவதால் கொடிகளும் கொடிகளும் அசைந்து ஒன்றோடு ஒன்று நெருங்கின.

இரண்டு படையும் நெருங்கியதும், குதிரைவீரர்கள் குதிரைவீரர்களின் மேல் வெற்றியைத் தருகின்ற ஆயுதங்களை எறிந்தார்கள். வெற்றியையுடைய யானைவீரர்கள் யானைவீரர்களின்மேல் போருக்கு விரைந்தார்கள். தேர்வீரர்கள் தேர்வீரர்கள் முன்னே சமீபித்தார்கள். காலாள்வீரர்களும் காலாள்வீரர்களும் ஒருவரோடொருவர் போர் செய்தார்கள்.

வீரர்கள் தங்கள் கையில் எடுத்த வேல்களும் வேல்களும் போரிட்டன. குறிவைத்துக் கொடிய அம்புகளைத் தொடுத்த விற்களும் விற்களும் வளைந்தன. வாள்களும் வாள்களும் மோதி யுத்தம் செய்தன. வீரர்களால் சுழற்றிவிட்ட சக்கரங்களும் சக்கரங்களும் வீரர்களின் தலைகளை யறுத்துக் கீழே தள்ளின.

ஒருவருக்கு ஒருவர் தோள் வலிமையிலும் வீரத்திலும் துரியோதனனுடைய சேனையிலுள்ள அரசர்களும் தருமருடைய சேனையிலுள்ள அரசர்களும் ஒத்தவர்கள். அவர்கள் பல சபதங்களைச் சொல்லிக் கொண்டு, வலிமைமிக்க தங்கள் சேனைகளோடு ஒருவர்க்கொருவர் எதிரே எதிரே போய்ப் போய் யுத்தபூமியின் இடங்களிலெல்லாம் நன்றாகப் போர் புரிந்தார்கள்.

அச்சமயத்தில் தம்பிமார்களான நகுல சகாதேவர்களும் பெரிய சேனையும் தனது இரண்டு பக்கங்களிலும் வரவும், உறவினர்கள் எல்லோரும் அழகிய சக்கரவாளகிரி போலத் தன்னைச் சுற்றிலும் வரவும், மேன்மேலும் பொங்குகின்ற கொடிய கோபத்தையுடைய பீமன் முன்னே போகவும், அர்ச்சுனன் வளைந்த நீண்ட வில்லால் அம்புமழையைச் சொரிந்து கொண்டே போருக்கு வந்தான்.

அதேசமயம் அசுவத்தாமனும், கிருபாசாரியாரும், கிருதவர்மாவும், சகுனியும் முதலிய வீரர்கள் எரிகின்ற கொடிய நெருப்புப் போலக் கோபத்தால் சிவந்த கண்களையுடையவர்களாய் மதில் போலத் தன்னைச் சுற்றிலும் வர, அம்புகளை ஆராய்ந்து தொடுக்கின்ற வலிய வில்லையுடைய கர்ணனும் அர்ச்சுனனுக்கு எதிரே சென்றான்.

பிறகு, அர்ச்சுனனும் கர்ணனும் பலம் பொருந்த தத்தமது வில்லை வளைத்தார்கள். அவர்கள் சொல்லொன்றும் சொல்லாமல், சக்கரவாளமலையால் சூழப்பட்டுள்ள பூமி முழுவதுக்கும் மேலே போட்ட பந்தலாகும்படி அம்புகளை வேகத்தோடு தொடுத்தார்கள். அப்போது அவர்கள் இருவரும் பயில்வதற்கு அருமையான தனுர்வேதத்தில் சொல்லப்படுகின்ற ஆலீடம் முதலிய நால்வகை நிலைகளும் தவறாமல் நின்று வில்லை வளைத்ததையும், பாணம் தொடுத்த பக்குவத்தையும்



ஒருவர்கூடச் சிறிதும் உணரவில்லை. அவர்களின் கொடிய போரால் வித்தியாதரர்களும் யுகமுடிவு காலம் என்று நினைத்து அதிகமாகப் பயந்து நடுங்கினார்கள்.

அந்த வீரர்கள் தொடுத்த அம்புகள் ஒன்றோடு ஒன்று நுனியோடு நுனி பொருந்தி அழிந்து விழுந்தன; ஒன்றோடு ஒன்று உடையும்படி வேகத்தோடு தாக்கின; ஒன்றோடு ஒன்று துண்டுபட்டு ஒடிந்தன; உடனே விரைவாக ஒன்றோடு ஒன்று அம்புகளின் இறகுகளைப் பறித்தன.

போர்செய்து அதிர்ச்சியுண்டாக்கும்படி ஒன்றை யொன்று தாக்குகின்ற அவ்வீரர்களின் இரண்டு தோள்களும், எண்ணிப் பார்த்தால் முறையே ஒன்று இடப்பக்கமாக வந்தால் மற்றொன்று வலப்பக்கமாக வரும். அது வலப்பக்கத்திலே வந்தால் இது இடப்பக்கமாக வரும். அதுதவிர இரண்டு தோள்களும் சுற்றிச் சுற்றி வருவதுமாகி, கூத்தாடிக் கொண்டு தானே சுற்றி வருவதாகிய பவுரி என்னும் கதியை நடத்திக் காட்டும்.

அப்போது யுத்தத்தில் தங்களுடைய தேரை ஒருவர்க்கு ஒருவர் முந்திக் கொண்டு செலுத்துவதால் வசுதேவ புத்திரனாகிய கண்ணனையும், மத்திரநாட்டு ராஜாவான சல்லியனையும் ஒருவரையொருவர் சாரத்தியத்தில் மிஞ்சியவர்களாகத் தேவர்களாலும் காண முடியவில்லை ஆமாம். அவர்கள் இருவரும் சமமான தேரோட்டிகளே என்பதை தேவர்கள் கண்டார்கள்!

அர்ச்சுனனுடைய தேரிலும் கர்ணனுடைய தேரிலும் பூட்டியிருந்த குதிரைகளெல்லாம் வலிமையிலும் ஒன்றோடொன்று ஒத்திருந்தன; குற்றமற்ற நல்ல இலக்ஷணமாகிய சுழிகளிலும் ஒத்திருந்தன; வலிமை மிகுந்த முதுகும் ஒத்திருந்தன; பலவகைப்பட்ட நடைகளிலும் ஒத்திருந்தன; புகழ்ந்து பேசும் அழகிய நிறத்திலும் ஒத்திருந்தன; உயரமும், பருமனும், நீளமும் ஆகிய உடம்பின் தன்மைகளிலும் ஒத்திருந்தன.

இரண்டு நிலைமைகளில் ஒருசேர நின்ற குற்றமற்ற சிவபெருமானுக்குச் சமமானவர்களும், இரண்டு கடல்கள் போல ஆரவாரித்துப் போர் செய்கின்றவர்களுமான அந்த அர்ச்சுனனும் கர்ணனும், இரண்டு மலைகளை வில்லாக வளைத்துக் கொண்டு எதிரில் போர் செய்தது போலவே, கையில் பிடித்த இரண்டு விற்களும் வளைவு நிமிராமல் அம்புகளைப் பொழிந்தார்கள்.

அர்ச்சுனன் பிறகு, தேவதத்தம் என்னும் தனது சங்கை எடுத்து ஊதிவிட்டு, அநேக தேவாஸ்திரங்களைக் கர்ணன்மேல் பிரயோகித்தான்.

பதிலுக்கு கர்ணன், சூரியன் தனக்குக் கொடுத்தருளிய பராபரம் என்னும் பெரிய வலம்புரிச் சங்கை ஊதிவிட்டு, அர்ச்சுனன் தன்மேல் தொடுத்த அம்புகளையெல்லாம் சூரியாஸ்திரங்களைப் பிரயோகித்து அழித்தான். பின்பு கர்ணன், கண்ணன் செலுத்தும் அர்ச்சுனனுடைய தேர், மேலே செல்லாதபடிச் சரகூடம் உண்டாக்கினான்.

ஸ்ரீகண்ணபிரான் அதுகண்டு அக்கணமே தனது மாயையால் கர்ணனுடைய தேரும் மேற்கொண்டு செல்லாதவாறு சரகூடம் ஏற்படுத்தினான்.

கண்ணனின் மாயையால் ஏற்பட்ட சரகூடம் தனது தேரை மேற்கொண்டு செல்ல முடியாதபடித் தடுத்து விட்டதால், கர்ணன் வலையில் அகப்பட்டுக் கொண்ட சிங்கம் போல ஒன்றும் செய்ய முடியாமல் சும்மாயிருந்தான். அதுபோலவே கர்ணன் உண்டாக்கிய சரகூடம் தனது தேரைத் தடுத்து நிறுத்திவிட்டதால், அர்ச்சுனனும் ஒன்றும் செய்ய முடியாமல் உடம்பு சோர்ந்து நின்றான்.

அதைப் பார்த்து கண்ணன் அர்ச்சுனனை நோக்கி, "மைத்துனா! போர் செய்யாமல் என்ன இப்படி நிற்கின்றாய்? வேகமாகப் போரிடாமல் எழுதிய சித்திரம் போல அசைவற்று நீ நின்றுவிட்டாயே!'' என்றான்.

மனதை ஒருமுகப்படுத்திய அர்ச்சுனன், அக்கினி பகவான் தனக்குக் கொடுத்தருளிய காண்டீபத்தின் நாணியை, நாகாஸ்திரம் இடியோசையோ என்று மிகவும் சந்தேகித்து பயப்படும்படி கைவிரலால் தெறித்தான். பின்னர் அர்ச்சுனன் வலிய ஒப்பற்ற ஆக்கினேயாஸ்திரத்தைக் கர்ணன் மேல் பிரயோகித்தான். அக்கணத்தில் அந்தத் தெய்வாஸ்திரம் சூரியமைந்தனை நோக்கிக் கடுவேகத்தில் சென்றது. அப்படிச் செல்லும் போது அதிலிருந்து வெளிப்பட்டு எரிகின்ற நெருப்பு, பிரளயகாலத்து படபா முகாக்கினி போலப் பொங்கி எழுந்து, புகையுண்டாகும்படி மேலே சென்று பரந்த ஆகாசகங்கையின் கரையில் நட்சத்திரங்களின் கூட்டத்தைப் போலச் சிதறியது!

அர்ச்சுனன் பிரயோகித்த ஆக்கினேயாஸ்திரத்தால் தனது சேனையிலுள்ள தேர்களும், வேல் முதலிய எல்லா ஆயுதங்களும், அம்புகளும், விற்களும், குதிரைகளும், யானைகளும் எரிந்து கரியாகிவிட்டதைக் கர்ணன் கண்டான். அதுகண்டு யமனுக்குத் தம்பியான கர்ணன் வீராவேசம் கொண்டான். அதனால் ஒன்றோடு ஒன்று ஒத்த அவனுடைய இரண்டு தோள்களும் பூரித்தன. நீண்ட இரண்டு புருவங்களும் துடித்தன. அவன் பருத்த கொடிய சிங்கம் போலச் சினந்து கர்ஜித்தான். அந்தக் கோபாவேசத்தோடு வருணன் தனக்குக் கொடுத்தருளிய வருணாஸ்திரத்தைக் கர்ணன் எடுத்தான். மறுகணம் அதனை அர்ச்சுனன் மேல் தொடுத்துவிட்டான்.

பிரளயகாலத்தில் சப்தமேகங்களும் கடல்நீர் வற்றும்படி மொண்டு வந்து மழை பொழிவது போல, கர்ணன் பிரயோகித்த வருணாஸ்திரம் மழை பொழிந்து அர்ச்சுனனின் ஆக்கினேயாஸ்திரத்தை அவித்து அழித்தது!

பிறகு, தேவராஜகுமாரனாகிய அர்ச்சுனன் வாய்வ்யாஸ்திரத்தைத் தொடுத்தான். ஆகாயத்து ரத்தினம் போன்ற சூரியனுடைய புத்திரனாகிய கர்ணன், உடனே ஆதிசேஷன் அருளிய கொடிய ஒப்பற்ற சர்ப்பாஸ்திரத்தைத்

தொடுத்தான். அக்கணத்தில் வாய்வ்யாஸ்திரம் எதிர்த்து வரும் முன்னே சர்ப்பாஸ்திரம் சென்று அதனை அழித்தது. உடனே அர்ச்சுனன் அந்தகாராஸ்திரத்தை ஏவினான். அதற்குப் பிரதியாகக் கர்ணன் பூர்ணசந்திராஸ்திரத்தைப் பிரயோகித்துக் கோபித்தான். பூர்ணசந்திராஸ்திரம் அந்தகாராஸ்திரத்தைச் சடுதியில் போய் அழிக்க, அந்த அஸ்திரம் பாதாளத்துள்ளே மறைந்தது போல மறைந்துவிட்டது! அடுத்து அர்ச்சுனன், இந்திரன் அருளிய ஐந்திராஸ்திரத்தைத் தொடுத்தான். கர்ணன் உடனே சூரியன் கொடுத்த சூரியாஸ்திரத்தை எதிராக எய்தான். அந்த இரண்டு அஸ்திரங்களும் தகுதியாக ஒன்றோடொன்று பொருந்தி, ஒன்று தாழ்வடையாமலும் ஒன்று உயர்வடையாமலும் சமமாக முனைகள் ஒடிந்தன. மற்றும் அவர்கள் தொடுத்த பலவேறு கூரிய அஸ்திரங்களும் அவ்வாறே ஒன்றோடொன்று எதிர்தடுத்து அழிந்தன!

அதனால் மனத்தில் கொடிய கோபம் கொண்ட அர்ச்சுனன் பிரமாஸ்திரத்தைக் கர்ணன்மேல் பிரயோகித்தான். அதற்கு எதிராக கர்ணன் ருத்திராஸ்திரத்தைப் பிரயோகித்தான். அக்கணமே ருத்திராஸ்திரம் விரைந்து போய் பிரமாஸ்திரத்தைச் சாம்பலாக்கியது. அப்போது அந்த இருவரும் வேறு அம்புகளைத் தொடுக்கவில்லை. கையிலுள்ள வில்லையும் வளைக்கவில்லை. அவர்கள் சிறிது நேரம் ஓய்வு கொண்டார்கள்!

இப்படியாக கர்ணனும் அர்ச்சுனனும் பிரயோகித்த கொடிய தேவாஸ்திரங்களால் அவர்களுடைய கொடிய இரண்டு சேனைகளும் முழுவதும் அழிந்தன. அப்போது எழுந்த ரத்தவெள்ளம் பூமாதேவியின் ஆகாயமாகிய கறுத்த கூந்தலையும், திக்குகளாகிய ஒளிவீசும் முகத்தையும், மலைகளாகிய தனங்களையும், கடலாகிய அழகிய ஆடையையும் நனைத்தது. அதனால் பூமாதேவியின் அழகிய உடம்பு செந்நிறமுள்ள அலங்காரத்தைச் செய்து கொண்டது போல விளங்கியது!

கடைசியில் கர்ணன் பெருங்கோபம் கொண்டு, நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் பிரயோகித்து அவனைக் கொல்ல நினைத்தான். அந்த நாகாஸ்திரம் காண்டவவனத்தை அர்ச்சுனன் எரித்த காலத்தில் அவனைக் கொல்வதற்காகவே கர்ணனிடம் வந்து சேர்ந்ததாகும். அழகையும் கொடிய ஐந்து திறந்த வாய்களையும் கொண்டது அந்த அஸ்திரம்!

சூரியபுத்திரனாகிய கர்ணன் சந்தனத்தையும், விளக்கையும், தூபத்தையும், பூக்களையும் கொண்டு அந்த நாகாஸ்திரத்துக்குப் பூஜை செய்தான். பின்பு, அவன் நாகாஸ்திரத்தை அன்போடு வணங்கி, அர்ச்சுனனுடைய கழுத்துக்குக் குறிவைத்துப் பிரயோகிக்கத் தொடங்கினான்.

அப்போது சல்லியன் பரிவோடு கர்ணனை நோக்கி, "கண்ணன் வஞ்சனை குணமுள்ளவன். ஆகையால், அர்ச்சுனனின் பரந்த பெரிய மார்புக்குக் குறிவைத்து நாகாஸ்திரத்தைப் பிரயோகிப்பாயாக!" என்றான்.

ஆனால், கர்ணன் அதைக் கேட்கவில்லை. சல்லியன் கூறிய வார்த்தையில் உள்ள நன்மையையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவன் பரசுராமர் தனக்குக் கொடுத்த வில்லை கையில் பிடித்து, வில்லின்நாண் தனது காதோடு பொருந்தவும், அந்த வில் வட்டவடிவமாய் வளையவும் நாகாஸ்திரத்தைப் பூட்டி அர்ச்சுனனின் கழுத்துக்குக் குறி வைத்துப் பிரயோகித்தான்.

ஸ்ரீகண்ணபிரான் அக்கணமே நாகாஸ்திரத்தின் வருகையை அறிந்து, தனது தேரின் வலிய சக்கரங்கள் பூமியிலே பன்னிரண்டு அங்குலம் நன்றாகப் புதையும்படி அழுத்தி நின்றான். அதனால் வெகுவேகமாக வந்த நாகாஸ்திரம் அர்ச்சுனனின் கழுத்தையும் மார்பையும் விட்டுவிட்டு, தேவேந்திரன் காண்டவதகனத்தின் போது கொடுத்தருளிய அவனுடைய கிரீடத்தை மட்டுமே தள்ளிவிட்டு அப்பால் சென்றது.

உடனே அர்ச்சுனன் காண்டவதகனத்தில் வால்மட்டுமே அறுபட்டுப் போன அந்த மகாநாகத்தின் உடம்பை ஒரு கணை தொடுத்து இரண்டு துண்டாக்கி வீழ்த்தினான்!

அர்ச்சுனனுடைய அர்த்தசந்திர பாணத்தால் அழிகின்ற அந்த மகாநாகம், வலிமையோடும் துண்டுபட்ட ஐந்து தலைகளோடும் திரும்பவும் கர்ணனிடம் வந்து, "என்னை இன்னும் ஒரு தடவை அர்ச்சுனன்மேல் ஏவுவாயாக!" என்று சொல்லிக் கதறியது.

கர்ணன் அதற்கு, "மகாநாகமே! முன்பு குந்திதேவி, தாய் என்ற முறையோடு என்னிடம் வந்து தவறக் கூடாத வரத்தைப் பெற்றாள். அதனால் உன்னை மீண்டும்

அர்ச்சுனன்மேல் பிரயோகித்தால், எனது வார்த்தைப் பொய்க்கும். ஆகையால், அதிக வருத்தத்தைக் கொடுத்தாலும், இனிமேல் கோபித்து மற்றொருதரம் நாகாஸ்திரமான உன்னை நான் தொடுக்க மாட்டேன்!'' என்று தெரிவித்தான்.

மகாநாகம் அதுகேட்டு மனம் நொந்து கர்ணனைப் பார்த்து, ''அர்ச்சுனன் காண்டவவனத்தைத் தகனம் செய்தான். அப்போது நெருப்பிலே உடம்பு எரிந்து, அர்ச்சுனன் கணையால் எனது வாலும் அறுபட்டது. அதனால் ஏற்பட்ட துன்பம் நீங்கி நான் பிழைத்திருப்பதற்காக உன்னையே பெரிய புகலிடம் என்று நினைத்து, வேகமாக உன்னிடம் வந்து சேர்ந்தேன். நான் உன்னிடம் வந்ததும் என்னை அஸ்திரமாகக் கொள்ளும்படிச் சொன்னேன். நீயும் என்னை ஏற்றுக் கொண்டாய். இப்போது அர்ச்சுனனை ஜெயிப்பதற்காக நீ என்னை மனத்தில் நினைக்கவும், நான் அஸ்திரமாகி உன்னிடம் வந்தேன். அப்படி வந்து என்ன பிரயோஜனம்? அர்ச்சுனனைக் குறிவைத்து என்னை ஒருமுறை தொடுத்தாய். அதுவும் தவறிப் போய்விட்டது!'' என்று சொல்லிவிட்டு மறைந்தது.

நாகாஸ்திரத்துக்குத் தப்பி அர்ச்சுனன் பிழைத்ததைக் கண்டதும், துரியோதனாதியர் சேனையிலுள்ள அரசர்களும் அவனுடைய சேனையிலுள்ள அரசர்களும் பதினோராம் இடத்தில் எல்லாக் கிரகங்களும் ஒத்திருப்பது போல, மாறுபாடு இல்லாமல் மகிழ்ச்சியும் பரிவும் அடைந்தார்கள்.

தான் சொன்னதையும், நாகம் கூறியதையும் கேட்காமல், போர் செய்யும் நினைப்பே இல்லாமல் நிற்கும் கர்ணனைக் கண்டு, சல்லியன் மிகவும் மனம் வருந்தினான். அந்த வருத்தத்தோடு கர்ணனைப் பார்த்து சல்லியன், ''இனி இந்தப் பெரிய தேரை வேகமாகச் செலுத்துவது என்னாலும் செய்வதற்கு அருமையானது! இனிமேல் எப்போதும் முயன்று செய்கின்ற போரில் அந்த அர்ச்சுனனைக் கொல்வது உன்னாலும் செய்வதற்கு அருமையானது! அரவக் கொடியுடைய துரியோதனனுக்கும் உன்னைத் துணையாக வைத்துக் கொண்டு பூமியை அரசாள்வதும் செய்வதற்கு அருமையானது!'' என்று சொல்லிவிட்டு, அவனுடைய தேரிலிருந்து இறங்கினான்.

கர்ணனுடைய தேரிலிருந்து இறங்கிய சல்லியன், உடனே தனது தேரில் ஏறிக் கொண்டான். திரும்பவும் அவன் போருக்குத் தயாராகி ஒப்பற்ற தனது வில்லை கையில் பிடித்தான்!

பிறகும் கர்ணன் தொடுத்த பாணங்களெல்லாம் பயனற்றுப் போயின. அவனுடைய தேரின் சக்கரங்களும் பூமியில் புதைந்துவிட்டன. அதனால் அந்தத் தேர் அப்பால் செல்ல முடியாதபடி நின்றுவிட்டது. கர்ணனின் தேகபலமும் குன்றிவிட்டது. அப்போது கர்ணன், 'அஸ்திரங்களெல்லாம் சமயத்துக்குப் பயன்படாமல் போகட்டும்' என்று பரசுராமர் தனக்குக் கொடுத்த சாபத்தை நினைத்துப் பார்த்தான்.

பரசுராமரின் அச்சாபம் மட்டும் இல்லாவிட்டால், கர்ணன் எப்போதும் வலிய போருக்கு அஞ்சுவானோ?

தனது நிலையை எண்ணிப் பார்த்ததும் கர்ணன் மிகுந்த ஆத்திரமும் கோபமும் அடைந்தான். அதனால் அவனுடைய நெற்றியிலே வியர்வைத் துளித்தது; கண்கள் சிவந்தன; நெஞ்சு கொதித்தது. அவன் அந்தத் தேரிலிருந்து பூமியில் இறங்கி நின்றான். தனக்கு யாவையும் மறக்கும்படிச் சபித்த பரசுராமரை அவரிருந்த திசை நோக்கி வணங்கினான். பிறகு, வேறொரு வலிய தேரில் கர்ணன் ஏறிக் கொண்டான்.

அவ்வாறு வேறொரு தேரில் ஏறிக் கொண்டதும் கர்ணன், கையில் பிடித்த வில்லோடு கோபித்து அதனை வேகமாகச் செலுத்தி அர்ச்சுனனை நெருங்கினான். தனது வில்லை வளைத்து அவன்மேல் கர்ணன் கொடிய கோடி பாணங்களைப் பிரயோகித்தான்.

அப்போது கர்ணனின் பலம் குறைந்து வருவதைக் கண்ணபிரான் கண்டான். உடனே அவன் அதனை அர்ச்சுனனுக்குச் சொல்லிக் கொடுத்தான்.

இந்திரபுத்திரன் அதுகேட்டு மகிழ்ந்து, சிறகு அறுபட்ட பறவைபோல வலிமை குறைந்து நின்ற கர்ணனுடைய உடம்பு மறையும்படி, அவனுடைய மயிர்க்கால்கள்தோறும் உயிர்மூச்சை யழிக்கும்பொருட்டு அம்புகளைத் தொடுத்தான்.

உரோமங்களிலெல்லாம் அர்ச்சுனனின் அம்புகள் பாய்ந்ததால் தனது உடம்பிலிருந்து ரத்தவெள்ளம் பெருகி

வழிந்தபோதும் கர்ணனுடைய கைகள் வில்லை வளைப்பதையும், கொடிய அம்புகளைத் தொடுப்பதையும் மறக்கவில்லை!

அப்போது சூரியன் அஸ்தகிரியை அடைவதற்கு இன்னும் இரண்டு விரற்கிடை தூரத்தில் இருந்தான். அதுகண்டு கண்ணன் விஜயனை நோக்கி, ''அர்ச்சுனா! நீ சற்றே போரை நிறுத்து!'' என்று சொல்லி, அவனைத் தேர் மீதே நிற்க வைத்துவிட்டு, தான் மட்டுமே பிராமண வடிவோடு கர்ணனை அடைந்தான்.

பிராமண வடிவோடு வந்த கண்ணன் கர்ணனைப் பார்த்து, ''சூரியபுத்திரனே! மகாமேருமலையில் தவம் செய்து கொண்டிருந்தவன் நான். இப்போது மிகவும் தரித்திரத்தில் அதிகத் துன்பத்தை அனுபவிப்பவன் நான்! இந்த மண்ணுலகில் வறியவர்களுக்கு நீ அவர்கள் வேண்டிய பொருள்களையெல்லாம் கொடுக்கின்றாய் என்று கேள்விப்பட்டேன். ஆகையால், உன்னிடம் வந்தேன். எனக்குக் கொடுக்கக் கூடிய ஒரு பொருளை இப்போதே கொடுப்பாயாக!'' என்றான்.

கண்ணனுடைய அந்த வார்த்தைகளை இரண்டு காதுகளுக்கும் அமிர்தம் என்னும்படி கர்ணன், விஜயபாணங்களால் உயிரும் உடலும் தளர்ந்த அந்த நேரத்திலும் கேட்டு மகிழ்ந்து, ''நல்லது!'' என்று சொல்லிச் சிரித்தான். பிறகு அவன், ''வேதியனே! உனக்குக் கொடுக்கத் தக்கப் பொருளை நீயே சொல்வாயாக!'' என்றான்.

உடனே கண்ணன், ''நீ செய்துள்ள புண்ணியம் அனைத்தும் உள்ளபடியே எனக்குக் கொடுப்பாயாக!'' என்றான்.

அக்கணமே கர்ணன் அதுகேட்டு மனம் களித்தான். அவன் வேதியனாகிய கிருஷ்ணனை நோக்கி, ''பிராமணனே! எனது உயிரோ என்றால், தான் நிற்கும் இடத்திலிருந்தும் எழுந்தது. அந்த உயிர் இப்போது உடம்பின் உள்ளே இருக்கின்றதோ? இல்லை, உடம்புக்கு வெளியே சென்று விட்டதோ? நான் அறியவில்லை. பாவி நான் வேண்டுவோர் வேண்டும் பொருள்களையெல்லாம் விரும்பிக் கொடுக்கின்ற சமயத்தில் நீ வரவில்லை. நான் செய்த புண்ணியம் யாவும்

இப்போது எனக்கென்று ஒன்றுமில்லாதபடி உனக்குக் கொடுத்தேன். நீ பெற்றுக் கொள். உனக்குப் பிரமனும் சமமாக மாட்டான். அப்படியிருக்க என் புண்ணியம், உனக்குத் தானம் செய்வதைவிட எனக்குச் சிறந்ததோ?'' என்று கூறி, கைகளைக் கூப்பி வணங்கினான்.

கண்ணன் கர்ணனின் வார்த்தைகளால் மிகவும் மகிழ்ந்து, அவனைப் பார்த்து, ''உன் புண்ணியம் யாவும் தாரை வார்த்துக் கொடு!'' என்றான்.

சூரியமைந்தன் உடனே தனது நெஞ்சில் தைத்த அம்பின் வழியே வெளிவரும் ரத்தத்தால், தனது புண்ணியங்களையெல்லாம் முழுவதுமாக கண்ணபிரானுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான்! கர்ணன் அப்படி புண்ணியங்களைத் தாரை வார்த்துக் கொடுக்கவும், வாமனாவதாரத்தில் மாபலிச்சக்கரவர்த்தியின் கையால் தத்தம் செய்யப்பட்ட ஜலத்தைக் கையில் பெற்று மூவுலகங்களையும் ஒன்றாகக் கவர்ந்த கண்ணபிரான், தன் அகங்கையினால் இப்போது அந்நீரை ஏற்றுக் கொண்டான்!

அதனால் கண்ணன் பெரிதும் களித்து, சூரியபுத்திரனை நோக்கி, ''கர்ணராஜனே! நீ விரும்பிய வரத்தைச் சொல்வாயாக! உனக்குக் கொடுப்போம்!'' என்றான்.

அதற்கு கர்ணன், ''பிறவித் துன்பங்களுக்குக் காரணமான கொடிய கருமத்தால் இன்னும் எனக்குப் பிறப்பு உண்டானாலும், ஏழேழு ஜென்மங்களிலும் வந்து என்னிடம் வறுமையால் யாசிப்பவர்களுக்கு , அவர்கள் யாசிக்கும் பொருளை வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்லாத நல்ல இதயத்தை நீ எனக்கு அளித்தருள்வாயாக!'' என்று வேண்டினான்.

மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியான வடிவுடைய கண்ணபிரான், தனது அத்தைப்பிள்ளையாகிய கர்ணன் கூறிய அந்த உண்மையான வார்த்தைகளைக் கேட்டு மிகவும் மனம் மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியுடன் கண்ணன் கர்ணனைத் தனது கைகளால் மார்பிலே அழுந்தும்படி அணைத்துக் கொண்டு, செந்தாமரைமலர் போன்ற தனது கண்களிலிருந்து பெருகிய கருணைவெள்ளத்தால் குளிப்பாட்டினான். பிறகு, அவனை நோக்கி ஸ்ரீகிருஷ்ணபகவான், ''கர்ணா! நீ எத்தனை ஜென்மம்

எடுத்துப் பிறந்தாலும் அப்பிறப்புகளுள் தானம் செய்வதையும் செல்வத்தையும் பெற்று, அப்பிறப்புகளின் முடிவிலே மோக்ஷத்தையும் அடைவாயாக!'' என்று வரம் கொடுத்தருளினான்.

அதன்பின் இறத்தலும் பிறத்தலும் இல்லாத நித்திய வடிவாகிய கண்ணன், தன்னை வணங்கிய கர்ணன் கண்டு கண்கள் களிப்படையும்படி கஜேந்திராழ்வானுக்குக் காட்சியளித்த விதம் போல திருமேனியும் ஐம்படைகளுமாகச் சேவை கொடுத்தான்!

தேவர்களும்; தேவஜாதியார்களான சித்தர், கருடர், கின்னரர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், உரகர் முதலியவர்களும்; தேவராஜனான இந்திரனும்; தாமரைமலரில் தோன்றிய நான்கு முகங்களையுடைய பிரமனும்; முனிவர்களும் கண்ணனுடைய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியாகிய அக்காட்சியைக் கண்டு, அவனைக் கற்பகமலர்களைக் கொண்டு வணங்கி அர்ச்சித்தார்கள்.

கர்ணன் திருமாலின் திருமேனியைக் கண்டு, 'பெரிய போர்க்களத்தில் மகாவீரனாகிய அர்ச்சுனனின் அம்புகளால் உடம்பு கீழேவிழுந்து உயிர் நீங்கவும், சிவந்த திருகண்களையுடைய குற்றமில்லாத ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிக்கவும் பெற்றேன்' என்று எண்ணித் தன் மனம் மிகவும் களித்தான்.

அந்த அளவற்ற மகிழ்ச்சியோடு கர்ணன் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை நோக்கி, ''அருமையான அக்கினியில் சிறந்த யாகங்களைச் செய்தும், தெய்வத்தன்மையுள்ள கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும், பஞ்சாக்கினி மத்தியில் நின்று செய்கின்ற அஷ்டாங்கயோகானுஷ்டான நிலைமையில் பொருந்தியும், அழகிய பூக்களையிட்டு அருச்சித்துப் பூஜை செய்தும், எல்லாவிடத்திலும் அந்தர்யாமியாகவுள்ள உன்னைத் தம் இதயத்துள்ளே திருத்தமாக வந்து நிலைபெற்று வீற்றிருக்க தரிசித்தும், இன்பம் எல்லாம் குறைந்து எல்லாவுயிர்களுக்கும் செய்வதற்கு அருமையான பெரிய தவங்களை அதிகமாகச் செய்தும் பெறுவதற்குக் கிடைக்காத பெரிய மோட்சமாகிய பிரயோஜனத்தை, உனது திருவருளால் இனி அடையப் பெற்றேன்! நீலகிரியும், காளமேகமும், கடல்நீரும்,

சல்லியன் அவர்கள் மூவரும் ஒன்றாக வந்து வில்யுத்தத்தில் தன்னை எதிர்ப்பதைக் கண்டு கொஞ்சமும் அஞ்சவில்லை. அவன் நூற்றுக்கணக்கான பாணங்களைப் பிரயோகித்து அவர்கள் ஒவ்வொருவருடைய உடம்பையும் துளைத்தான். அதனால் அவர்கள் மூவரும் தளர்ந்தார்கள். அதுகண்டு சல்லியன் அவர்களைப் பார்த்து இகழ்ந்து சிரித்தான்!

சாத்தகியும், நகுலசகாதேவர்களும் சல்லிய பாணங்களால் தளர்ந்ததைப் பீமன் கண்டான். அதனால் அவன் மிகவும் சீற்றம் அடைந்தான். அக்கோபத்துடன் பீமன் போருக்குரிய தும்பைப்பூமாலையைத் தரித்து, அம்புகளை வலிமையோடு பிரயோகித்து சல்லியனுடைய கொடியையும், பாகனையும், குதிரைகளையும் போர்க்களத்தில் சிதறி விழும்படி துண்டித்துத் தள்ளினான். மேலும், பீமன் சிறந்த அம்புகளைத் தொடுத்து சல்லியனுக்குக் காவலாக அவனைச் சுற்றி நின்ற அரசர்களையும் கொன்றான். அத்துடன் அவன் விடவில்லை. தொடர்ந்து தனது பாணங்களால் சல்லியனின் கொடியையும், வெண்கொற்றகுடையையும், சாமரத்தையும், சதுரங்கச்சேனையையும் சிதைத்து அழித்தான்.

அவ்வாறு துருபதராஜன் முதலிய அரசர்களும், சோமககுலத்து அரசர்களும், 'மற்றும் பல அரசகுலத்துத் தோன்றிய அரசர்களும், தருமரும், பீமன் முதலிய அவன் தம்பிமார்களும் ஒன்றாகக் கூடி பகைவரைக் கடுமையாக எதிர்த்து யுத்தம் புரிந்தார்கள்.

அப்போது கண்ணபிரான் தனக்குச் சாரத்தியம் செய்ய அர்ச்சுனன், அசுவத்தாமனுடன் எதிர்த்துப் போர் செய்வதற்காக, அவன் நின்ற படைவகுப்பின் சமீபம் சென்றான். மறுகணம் அந்தணனாகிய அசுவத்தாமனோடு அவன் கொடிய யுத்தத்தைத் தொடங்கினான்.

உடனே சுப்பிரமணியக்கடவுள் போன்ற அசுவத்தாமன், ஒரே மாதிரியான கொடிய பத்து அர்த்தசந்திர பாணங்களை அர்ச்சுனனின் மார்புக்குக் குறிவைத்துப் பிரயோகித்தான். அந்த அம்புகள் கணத்தில் விரைந்து போய் அவனுடைய மார்பில் தைத்து குருதி வழியச் செய்தன. அதனால் அர்ச்சுனனின் நீலமலை போன்ற மார்பு பவழமலை போலாகியது!

மேலும், அசுவத்தாமன் தொடுத்த அம்புகளை அர்ச்சுனன் தனது எதிரம்புகளால் வானத்திலேயே தடுத்துத் துண்டித்து அழித்தான். பின்பு , தான் தொடுத்த அம்புகளால் அர்ச்சுனன் அசுவத்தாமனுடைய சாரதியையும், தேர்க் குதிரைகளையும், வில்லையும் துண்டித்துத் தள்ளினான். பின்னும் தேவேந்திரமைந்தன் அசுவத்தாமனுடைய தோள்களிலும் மார்பிலும் எட்டு அம்புகளைப் பிரயோகித்தான்.

தனது வில் முறிந்தவுடனே, அசுவத்தாமன், தான் ஏறியிருந்த தேரைவிட்டுக் கீழே இறங்கினான். பிறகு, அவன் ஒரு வில்லை எடுத்து, அர்ச்சுனன் மேல் நெருப்பும் புகையும் உக்கிரமாகச் சிந்துகின்ற கணக்கற்ற அம்புகளைத் தொடுத்தான்.

அக்கணத்தில் அர்ச்சுனன் தன்னை நோக்கி வந்த அந்த அம்புகள் அனைத்தையும் தனது எதிரம்புகளால் பொடியாக்கினான்.

அதுகண்டு பாண்டவர் சேனை, “துரோணபுத்திரனாகிய அசுவத்தாமன் அணைகடந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முயல்பவன் போல வந்து, அர்ச்சுனனை எதிர்த்து தனது வில் வலிமை இழந்தான்!” என்று சொல்லி, உற்சாகம் கொண்டு ஆரவாரித்தது.

அச்சமயத்தில் வீரர்களாகிய தினைக்கதிர்களைப் போர்க்களத்தின் அணிவகுப்பாகிய உரலிலே இட்டு தந்தங்களாகிய உலக்கைகளால் இடிக்கின்ற மதயானை போன்றவனாகிய அசுவத்தாமன், மலைகளின் சிறகுகளை அறுத்து அழித்த தேவேந்திரனுடைய குமாரனாகிய அர்ச்சுனன்மேல் கனமான ஓர் இரும்புலக்கையை எடுத்து வீசினான். அப்படி தன்னை நோக்கி வந்த அந்த இரும்புலக்கையை அர்ச்சுனன் தனது பாணத்தால் எட்டுத் துண்டாக்கி அழித்தான். அதுகண்டு கோபித்த அசுவத்தாமன் ஒரு கதாயுதத்தை எடுத்து அர்ச்சுனனின் தோளுக்குக் குறிவைத்து எறிந்தான். அதையும் அர்ச்சுனன் தன்னுடைய அம்புகளால் அநேக துண்டுகளாக்கித் தள்ளினான்.

தான் பிரயோகித்த இரும்புலக்கையையும், கதாயுதத்தையும், அம்புகளையும் அர்ச்சுனன் வெகுசுலபமாக

அழித்ததைக் கண்ட அசுவத்தாமன், 'பூங்கொடி போல் பல ஆபரணங்களை யணிந்த கோபிகாஸ்திரீகளின் தனங்களிலே தோய்ந்த கண்ணபிரான் இந்த அர்ச்சுனனுக்குச் சாரத்தியம் செய்யும் வரையில், இவனை அம்புகளாலும் பலவிதமான ஆயுதங்களாலும் போரிட்டு வெல்ல முடியாது!' என்று தீர்மானித்தான். அதனால் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் உள்ளவர்கள் எல்லோராலும் புகழப் பெற்ற அசுவத்தாமன், அர்ச்சுனன் எதிரே நின்று போர் செய்யாமல் புறமுதுகிட்டுச் சென்றான்!

பின்னர் தன்னை வந்து போரில் எதிர்த்த கிருபாசாரியாரையும், மற்றுமுள்ள உயர்குலத்து வில் வீரர்களையும் புறமுதுகிட்டோட ஜெயித்த அர்ச்சுனன், தன்னிடம் அன்புள்ள தமையனும் சல்லியனை வென்றவனுமான பீமனிடம் பகைவர்கள் அழியும்படிப் போய்ச் சேர்ந்தான்.

சல்லியன் பீமனிடம் தோற்றதைக் கண்ட அரவக்கொடியுடைய துரியோதனன், அப்போது கண்ணை இமை காப்பது போல அவனைக் காப்பதற்காக தனது சேனையுடன் அவனுக்கு உதவியாக வந்து சேர்ந்தான்.

அதேசமயம் சல்லியன் சாத்தகியும், பீமனும், நகுலனும், சகாதேவனும், அர்ச்சுனனும், திருஷ்டத்யும்நனும் ஆரவாரித்துக் கொண்டு தன்மேல் போருக்கு வருவதைக் கண்டு தனது பெரிய சேனைகளோடும், துரியோதனனோடும் திரும்பி வந்து அவர்களைப் போரில் எதிர்த்தான்.

திரும்பவும் போருக்கு வந்த சல்லியன் கண்ணனுடைய தம்பியாகிய சாத்தகியை நோக்கி அநேக பாணங்களைச் செலுத்தி, அவனுடைய தேர் முதலிய எல்லாவற்றையும் அழித்து, அவனையும் உடம்பு நடுங்கும்படித் தாக்கி ஓட்டினான். அதுபோலவே நகுலனையும் தனது அன்புக்குரிய மருகன் என்று நினைக்காமல், நெருப்பு மயமான இடிபோல் கூரிய சிற்சில அம்புகளைப் பிரயோகித்து வென்றான்! பின்னும் சல்லியன் ஒரு கொடிய அம்பைத் தொடுத்தவுடனே சகாதேவன் புறமுதுகிட்டுத் தோற்றோடிப் போனான்.

சாத்தகியும் நகுலசகாதேவர்களும் தோற்றுச் சென்றதும், பீமனுடைய இரண்டு தோள்களையும் சல்லியன்

தனது இரண்டு அம்புகளுக்குக் குறியாக்கினான். அத்துடன் அவன் நிற்கவில்லை. தனது கொடிய மூன்று பாணங்களால் அர்ச்சுனனின் மார்பையும், இரண்டு தோள்களையும் புண்ணாக்கினான். மேலும், அருகிலிருந்த தருமரைத் தனது நான்கு அம்புகளால் நெற்றியில் தாக்கி, அவரையும் ஒடுங்கச் செய்தான்.

சல்லிய பாணங்களால் தங்களின் தமையனாராகிய தருமருடைய நெற்றியிலே குருதி பீறிட்டு, அவர் முகம் சிவந்த விதத்தைப் பார்த்ததும் பீமன் அளவற்ற ஆத்திரம் அடைந்தான். உடனே அவன் தனது கதாயுதத்தால் சல்லியனைத் தாக்கி, அவனுடைய ரத்தினகிரீடத்தைக் கீழே தள்ளி மகுடபங்கம் செய்தான். அரவக்கொடியுடைய துரியோதனன் அந்த அவமானத்தைப் பார்த்தான்.

இழிவான சிருஷ்டிவர்க்கத்திலே பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அரசனான துரியோதனன் அதுகண்டு, தனது சேனாதிபதியாகிய சல்லியனைக் கதாயுதத்தால் தாக்கிய பீமன்மேல் மின்னல்போல் ஒளிசிந்தும் ஓரம்பை வேகமாகப் பிரயோகித்தான்.

வாயுபுத்திரன் அதனால் பெரிதும் கோபமடைந்தான். உடனே அவன் மன்மதனை சம்பராசுரன் கோபித்து எதிர்த்துச் செய்த போர் போலத் தன்னை எதிர்த்துப் போரிட்டு வெல்ல நினைத்த கொடிய எண்ணமுடைய துரியோதனனை, தனது அம்புகளால் தாக்கிக் கொடிய யுத்தத்துக்கு உள்ளாக்கினான்!

இரண்டு சிங்கங்கள் ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போர் செய்வது போல, பலசாலிகளான பீமனும் துரியோதனனும் போரிட்டார்கள். அவர்கள் தங்கள் வளைத்த விற்களிலிருந்து தொடுத்துவிட்ட அம்புகள், அவர்களுடைய உடம்புகளில் பாய்வதற்கு முன்பே ஆகாயத்தில் தானே துணிபட்டுப் பொடியாய்ச் சிதறின. மற்றும் அவர்கள் கால் முதல் தலைவரையிலும் ஒருவர் மேல் ஒருவர் அம்புகளைச் செலுத்திப் போரிட்டார்கள். வாள் முதலிய ஆயுதங்களாலும் கொடிய யுத்தத்தைச் செய்தார்கள். அந்த ஆயுதங்களின் தாக்குதலால் அப்போது அவர்களுடைய உடம்பு முழுவதும் ரத்தம் வழிந்தது. அதனால் அந்த இரண்டு பேரும்

பார்ப்பதற்கு நீண்டதழல் உள்ள விளக்குபோல் காணப்பட்டார்கள்!

அப்படிப் போரிடுகையில், பீமன் துரியோதனனுடைய நான்கு தேர்க்குதிரைகளையும், சாரதியையும், தேரையும், குடையையும், வில்லையும், கொடியையும் ஆகிய ஒன்பதையும் ஒன்பது விதமாக தனது அம்புகளால் துண்டித்தான். மேலும், பீமன் துரியோதனன் மேல் ஒரு வேலாயுதத்தைக் கொடூரமாக வீசித் தாக்கினான். அதனால் துரியோதனன் தோற்றுப் புறமுதுகிட்டுச் சென்றான்.

துரியோதனன் தோற்றுச் சென்றபின், சல்லியன் மரணம் அப்போதே என்னும்படிப் போருக்கு வந்தான். அப்போது அவனுக்குத் துணையாக கிருபாசாரியாரும், சாலுவ மன்னனும், சகுனியும், கிருதவர்மாவும், மற்றும் சேனை வீரர்களுள் சிறந்தவராக உள்ள யானைவீரர்களும், குதிரைவீரர்களும், தேர்வீரர்களும் கூட்டமாகத் திரண்டு வந்து அவனோடு சேர்ந்து கொண்டார்கள்.

அதுபோல பீமனும், அவனுடைய தம்பியும் முருகக்கடவுள் போல் தேவர்களின் பகைவர்களான அசுரர்களை யழித்தவனுமாகிய அர்ச்சுனனும், ஏமகூடமலை போன்ற நல்லிலக்கணம் உள்ள வலிய குதிரை மேல் ஏறிவரும் வீரனாகிய நகுலனும், அவனுக்கு இளையவனும் தத்துவ ஞானம் உள்ளவனுமான சகாதேவனும், ஆயிரம் திருநாமங்கள் உள்ள ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தம்பியான சாத்தகியும் தருமருக்குப் போரில் உதவியாக வந்து அவரைச் சூழ்ந்து நின்றார்கள்.

இரண்டு பக்கத்துச் சேனைகளிலும் உள்ள யானைவீரர்களும், குதிரைவீரர்களும், தேர்வீரர்களும், காலாள்வீரர்களும் நான்கு பக்கங்களிலும் திரண்டு எதிர்த்துப் போர் செய்தார்கள். ஒவ்வொருவரும் கூட்டமாக ஓடிவந்து எதிர்த்த வீரர்களின் கிரீடம் தரித்த தலைகளை வெட்டி ரத்தவெள்ளத்திலே தள்ளினார்கள். அப்போது இரண்டு பக்கத்துச் சேனைகளிலும் பல கோடிக்கணக்கான பறைகள் முழங்கின; சங்குகள் ஒலித்தன.

அவ்வாறு பலமும் பராக்கிரமமும் பொருந்திய இரண்டு பக்கத்துச் சேனாவீரர்களும் மானமே கவசமாகக் கொண்டு

வில்லும், வாளும், வேலும் ஆகிய ஆயுதங்களால் ஒருவரையொருவர் தாக்கிப் போர் செய்வதற்கு உவமையாக எதையுமே சொல்வதற்கு வகையில்லை! இருப்பினும் தேவர்களும் அசுரர்களும் எப்படிப் போரிட்டார்களோ, அப்படியே அவர்கள் போரிட்டார்கள். அரக்கர்களோடு முன்பு வானரசேனை போரிட்டது போல் அவர்கள் யுத்தம் பண்ணினார்கள்!

அப்போது தமக்குத் துணையாகப் போருக்கு வந்த பீமனையும், அர்ச்சுனனையும், நகுலனையும், சகாதேவனையும், சாத்தகியையும், திருஷ்டத்யும்நனையும், மற்றுமுள்ள வீரர்களையும் முழுதுமாக விலக்கிவிட்டு தருமர், தங்களுக்கு மாமனாக இருந்தும் செஞ்சோற்றுக் கடனால் எதிர்ப்படையில் சேர்ந்து கோபித்து வருகின்ற சல்லியனை நோக்கி, "வா!" என்று உற்சாகத்துடன் கூறி, அவனோடு போரைத் தொடங்கினார்.

தருமர் தமது வலிய வில்லை ஒரு நொடிப்பொழுதில் வளைத்து, மன்மத பாணம் போன்ற பல அம்புகளை சல்லியனுடைய தோள்களிலும், மார்பிலும் பிரயோகித்தார். அந்த அம்புகள் கொஞ்சமும் குறிதவறாமல் வேகமாகச் சென்று பாய்ந்தன. அதனால் சல்லியனுடைய தோள்களும் மார்பும் புண்ணாயின. மற்றும் தருமபாணங்கள் சல்லியனின் மேனி முழுதும் நிறைந்தன. அவற்றால் அவனுடைய உடம்பிலிருந்து குருதிவெள்ளம் வழிந்து நதியாகப் பெருகிப் போர்க்களத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஓடியது.

அப்படித் தருமர் தன்னைத் தாக்கியவுடனே இருளை அழிக்கின்ற சூரியனைப் போன்ற சல்லியன், அவர் மேல் கொடிய பாணங்களைத் தூவினான். சல்லியனுடைய பாணங்கள் தருமரின் முரசக்கொடியையும், ரத்தின கவசத்தையும், தேரின் அச்சாணியையும், தேர்க் குதிரைகளையும், சாரதியையும், வில்லையும் ஒரு நொடிப் பொழுதில் அழித்தன.

தமது தேர் அழிந்ததால் தருமர் வேறொரு தேரின் மேல் பாய்ந்து ஏறிக் கொண்டார். பின்பு, முப்புரம் எரித்த சிவபெருமான் போன்ற தருமர், இமயமலையில் ஏறிய சிங்கம் போல் மனத்தில் கோபாக்கினி வெளிப்பட ஒப்பில்லாத ஒரு வேலாயுதத்தை எடுத்துக் காற்றினும்

வேகமாகச் சல்லியன்மேல் வீசினார். அவ்வளவுதான். வாயுவால் மேருமலையின் மூன்று சிகரங்களும் ஒடிந்தது போல, தருமர் பிரயோகித்த அந்த வேலாயுதத்தால் சல்லியனுடைய கிரீடம் தரித்த தலை துண்டிக்கப்பட்டு குருதிச் சேற்றிலே விழுந்தது!

முருகக்கடவுள் போன்ற தருமருடைய வேலாயுதத்தால் மத்திரநாட்டு அரசனான சல்லியன் இறந்ததைக் கண்டதும், அந்த வினாடியே துரியோதனனுடைய சேனை சிதறித் தோற்றோடி படாதபாடுபட்டது!

பூர்ணசந்திரனைக் கண்ட பெரிய கடல் பொங்குவது போல, பாண்டவர்களுடைய பெரிய வலிய சேனை தருமருடைய வெற்றியைக் கண்டு மகிழ்ந்து ஆரவாரித்தது. ஸ்ரீராமனுடைய கூரிய சுடுசரங்கள் தொடுக்கப் பெற்ற கடல் போல, துரியோதனனுடைய சேனை சல்லியன் இறந்த சோகத்தால் வருந்தியது.

அவற்றையெல்லாம் பார்த்து சல்லியனுடைய கண்போன்ற எழுநூறு தேர்வீரர்கள் கோபம் கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் பிரமாஸ்திரம் போன்ற கொடிய ஆயுதங்களைப் பிரயோகித்துக் கொண்டு, பயங்கரமான முரசக்கொடியுடைய தருமர்மேல் போருக்கு வந்தார்கள்.

அந்த எழுநூறு பேர்கள் மட்டும் தருமரோடு யுத்தத்துக்கு வரவில்லை. துரியோதனனும் வருத்தத்தோடு ஆண் சிங்கம் போல தருமரை எதிர்த்து நெருங்கினான். அப்போது அவனுக்குத் துணையாக அவனது உயிர் போன்ற தம்பிமார்களும், மாமன் சகுனியும் அவனைச் சூழ்ந்து வந்தார்கள். தொடர்ந்து அவனுடைய கடல் போன்ற சேனையும் வந்தது. அப்படி துரியோதனன் போருக்கு வருகையில், அவனுடைய இரண்டு பக்கங்களிலும் சாமரங்கள் வீசப்பட்டன. அவனுக்கு வெண்கொற்றகுடை பிடிக்கப்பட்டது.

அதுகண்டு பீமன் முதலிய தருமருடைய தம்பிமார்களும், சேனாதிபதியான திருஷ்டத்யும்நன் முதலியவர்களும், சோமககுலத்து வீரர்களும் தருமருக்குப் போரில் துணையானார்கள். அவர்கள் பகைவர்களைப் பயங்கரமாக எதிர்த்துப் போரிட்டார்கள். பகைவர்களின்

மார்பையும், தோள்களையும் அம்புகளால் சிதைத்தார்கள். அதனால் பகைவர்களின் உடம்புகள் இரத்த அருவியைப் பெருக்கின. அவ்வாறு அவர்கள் போர் செய்த வீரத்தன்மை சிறப்பான ஞானமுள்ள தேவர்களும் போற்றிக் கூறக் கூடியதோ?

பீமன் தனது தமையனாராகிய தருமரை எதிர்த்துப் போர் செய்து ஜெயிப்பதற்கு வந்த பகைவரின் சேனையையெல்லாம் பொடிபடுத்தினான். பூமியை அரசாள்கின்ற அற்பக்குணம் படைத்த தமையனாகிய துரியோதனனின் கண்முன்பாகவே, தன்னை வந்து எதிர்த்த அவனுடைய ஏழு தம்பிமார்களையும் கொன்று தரையிலே வீழ்த்தினான். 'இன்றோடு போர் போதும். இனியும் இப்படிப்பட்ட கொடிய போரைப் பார்த்தால் பாவம்' என்று தேவர்கள் அதிசயிக்க, இமயமலைபோல் பீமன் அப்படிச் சலியாது போர் செய்தான். வாயுபுத்திரன் செய்த அந்தப் பயங்கரப் போரைக் கண்டு, பெருமை குணமுள்ள திருமாலின் அவதாரமான கண்ணபிரான் அதிகமாக ஆனந்தம் அடைந்தான்!

துரியோதனன் தனது தம்பிமார்களான ஜயகந்தன், ஜய்வர்மா, ஜயஸேநன், ஸேநாவிந்து, ஜயத்ரதன், ஜயவிந்து, ஜயவிக்கிரமன் ஆகிய ஏழு பேர்களும் பீமனால் இறந்து வீரசொர்க்கம் அடைந்ததைக் கண்டான். தான் பெற்ற வெற்றியைக் கொண்டாடி பீமன் சங்கநாதம் செய்வதையும் கண்டான். அதனால் நந்தியாவட்டைமாலை தரித்த துரியோதனன் மனம் தளர்ந்தான். தம்பிமார்களிடம் உள்ள அன்பை யாரால்தான் அடக்க முடியும்?

துரியோதனன் அப்போது அடைந்த மனவேதனையைக் கண்டு கிருதவர்மா பெரும் சேனையோடும், அத்துரியோதனனுடைய மற்ற ஐந்து தம்பிமார்களோடும், கோபத்தையும் வேலாயுதத்தையும் உடைய பீமனின் உயிரைப் போக்க நினைத்து வந்து போர் செய்தான். பீமன் அதனால் வெகுண்டு போர் செய்யவே, கிருதவர்மா தனது சேனையோடு புறமுதுகிட்டு ஓடினான். அப்போது பீமன் தனக்கு துரியோதனனுடைய தம்பிமார்கள் ஐவர் மட்டுமே போதும் என்று எண்ணி, அவர்கள்மேல் கொடிய அம்புகளைச் செலுத்தினான்.

உடனே துரியோதனனுடைய தம்பிமார்களான அந்த சித்திரவாகு, பலசேநன், ஜயசூரன், சித்திரன், உத்தமவிந்து ஆகிய ஐந்துபேரும் பீமனோடு வெகுநேரம் எல்லோரையும் அழிக்க வந்து போர் செய்தார்கள். பின்பு வில்வீரர்களும், ஐம்புலன்கள் போல் அடக்க முடியாதவர்களுமான அந்த ஐவரும் பீமனால், முன்னே சென்ற ஏழு சகோதரர்களோடு தாங்களும் இறந்து பொன்மயமான வீரசொர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அரவக்கொடியுடைய துரியோதனன் முன்பு இறந்த ஏழு தம்பிமார்களோடு பின்னும் ஐந்து தம்பிமார்கள் பீமனால் இறந்தது கண்டு, ஆயுதம் பாய்ந்த புண்ணிலே கொடிய நெருப்பு நுழைந்தது போலப் பெரும் துன்பம் அடைந்தான். அதனால் அவன் பெரும் சீற்றம் கொண்டான். உடனே அவன் முடிவேந்தர்கள் பலரும் தன்னைச் சூழ்ந்து வர, நான்கு திசைகளிலும் ஒரே சமயத்தில் கிளம்பிப் பெரும்கடலைத் தாக்கி அதன் நடுவில் உள்ள படபாமுகாக்கினியைத் தணித்து மேலே செல்லும் பிரளயகாற்றுப் போல அதிக உக்கிரத்தோடு போருக்கு வந்து, பகைவர்களின் உடம்புகளிலெல்லாம் அம்புகள் பாய்ந்து ஊடுருவும்படி தனது விற்போர்த் திறமையைக் காட்டினான்!

அதுகண்டு சகாதேவன் துரியோதனனை வந்து போரில் எதிர்த்தான். அப்போது துரியோதனன் தொடுத்த அம்பால் அவனுடைய வில் ஒடிந்தது. பின்பு, அவன் வேறு ஒரு வில்லைக் கொண்டு துரியோதனனுடைய வலிய கைகளிலும், மார்பிலும், முகத்திலும் கூரிய அம்புகளை மூழ்கச் செய்தான். அத்துடன் பாண்டவசேனாவீரர்களும் மேலும் மேலும் உக்கிரத்தோடு போரிட்டு, தங்களை எதிர்த்த கௌரவசேனாவீரர்களைக் கொன்று இரத்த வெள்ளத்தால் சமுத்திரத்தை ஏற்படுத்தி, அவர்களின் இறந்த உடம்புகளால் மலைகளையும் உண்டாக்கினார்கள்.

பிறகு, பீமனோடு போரிட்டு காந்தாரதேசத்து ராஜனாகிய சகுனி தனது தம்பியும், துரியோதனனும், மற்றும் பல அரசர்களும், யானைவீரர்களும் தன்னைத் தொடர்ந்து வரத் தோற்றோடினான். அச்சமயத்தில் துரியோதனனுடைய மற்ற தம்பிமார்களுள் ஒன்பது பேர் பீமனை வந்து எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள்.

வாயுகுமாரன் தன்னை எதிர்த்த உத்தமன், உதயபானு, கீர்த்தி, பலவர்மா, பலபீமன், பிரபலதாநன், விக்கிரமபாகு, சுசீலன், சீலன் ஆகிய துரியோதனனுடைய ஒன்பது தம்பிமார்களையும், வில்லை வளைத்து காற்றாடி போலச் சுழன்று வந்து போர்செய்து கொன்றான். மேலும், அப்போது தன்னை எதிர்த்த யானை தேர் குதிரை காலாட்கள் என்னும் கோடிக்கணக்கானவைகளையும் ஒன்றாக ஒரு க்ஷணத்தில் பீமன் அழித்து நின்றான். சிந்தித்துப் பார்க்கையில், பீமனுடைய அதிபலபராக்கிரமத்துக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டோ?

பின்னும் எஞ்சியுள்ள துரியோதனனுடைய தம்பிமார்கள் அவன் கண்ணெதிரேயே பீமனால் தலைகள் துண்டிக்கப்பட்டு தேரிலே விழுந்து மாண்டார்கள். அப்படி இறந்தவர்கள் பின்பு, தேவமாதர்களுடன் வீரசொர்க்கத்துக்குட் போய்ச் சேர்ந்தார்கள்.

தனது தம்பிமார்கள் தொண்ணூற்றொன்பது பேரும் தன் கண் எதிராகவே பீமனுடைய அம்புகளாலும், கதாயுதத்தாலும் இறந்து வீரசொர்க்கத்தை அடைந்ததைப் பார்த்துப் பார்த்து துரியோதனன் கண் கலங்கினான். அதனால் அவனுடைய கைகள் சோர்ந்தன; கண்களிலிருந்து கண்ணீர்வெள்ளம் பீறிட்டு வழிந்தது; உடம்பு சோர்ந்தது. 'எனக்கு நல்வார்த்தைக் கூறியவர்களின் வார்த்தையைக் கேட்டு, அதன்படி நடக்காமல் என்ன காரியம் செய்து விட்டேன்? எல்லாப் பொருள்களையும் இழந்து விட்டேனே!' என்று, அவன் தனக்குத் தானே இரக்கம் கொண்டான். அப்படியெல்லாம் துரியோதனன் சகோதரசோகத்தால் பெரிதும் மனக்கவலை அடைந்தான்.

துரியோதனனுடைய மனக்கவலையை அறிந்து, அவனுடைய மாமனாகிய சகுனி அவனுக்கு ஒருகோடி வார்த்தைகளால் தேறுதல் சொன்னான். மீண்டும் அவன் துரியோதனனுடைய முகம் பார்த்து, "மருமகனே! கூரிய வேலாயுதத்தையுடையவனே! நீ வாழ்வாயாக! நான் சொல்லும் வார்த்தையைக் கேட்டு நடப்பாயாக! உனது அருகிலே நிழல்போலப் பிரியாது வாழ்ந்திருந்த தம்பிமார்கள் எல்லோரும் வீரசொர்க்கத்துக்குப் போய்விட்டார்கள். அதனால் நீ மனம் உருகி மயங்கி கவலைப்பட்டாலும், இறந்த அவர்கள் மீண்டும் திரும்பி வரமாட்டார்கள்.

யுத்தத்தில் இறந்தவர்கள் போக இறவாமல் உள்ள அரசர்கள் எல்லோரும் பலபராக்கிரமங்களிலும் குமரக்கடவுளைப் போன்றவர்கள்! திரும்பவும் நாம் கிருதவர்மாவோடும், கிருபாசாரியரோடும், மற்றும் அரசர்களோடும், சேனைகளோடும் விரைந்து சென்று, கோபம் கொண்டு பிறரைத் தாக்குகின்ற ஆண்புலி போன்ற பகைவர்களைத் தருமனோடு ஓடிப்போகும்படி வலிமையாகப் போர் செய்வோமே!'' என்று, அவனுடைய வாட்டம் நீங்கும்படி இனிமையாகச் சொன்னான்.

மறுகணம் சகுனி சேனைகளோடு போய் போர்க்களத்தில் பீமனைத் தாக்கினான். அதனால் பீமன் உக்கிரங் கொண்டான். சந்திரகாந்தி போல் ஒளிவீசப் புன்னகை புரிந்தான். உடனே அவன், மனம் போல் வேகமாகப் போகின்ற தேரைவிட்டு வலிய தரையிலே இறங்கினான்.

தன்னை எதிர்த்து வந்த பெரிய யானைகளும், தேர்களும், குதிரைகளும், காலாள்களுமாகிய பகைவர் சேனையை, பீமன் தீக்கடைகோல் போல் தாக்கித் தினைக்காடாக்கினான்.

பீமனால் தனது சேனை மேலும் அழிந்ததைக் கண்டதும், துரியோதனன் மீண்டும் சோகம் கொண்டான். உடனே சகுனி அவனை நோக்கி, ''தலைவனே! நான் சொல்வதைக் கேள். எதிர்ப்பக்கத்து வீரர்கள் அளவற்ற கடல் போன்ற நமது சேனைக்குத் தலைவனாக இருந்த சல்லியனை உக்கிரமாகத் தாக்கிக் கொன்றார்கள். ஆதலால் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அவர்கள் சாகும்படி அவர்களின்மேல் வேலாயுதத்தையும், வாளாயுதத்தையும், சக்கரத்தையும் பிரயோகிப்போமாக!'' என்று, மீண்டும் அவனுக்குத் துணிவு கூறினான்.

அப்போது வஞ்சகனும் சூதாட்ட வீரனுமாகிய சகுனியின்முன் சகாதேவன் தன் தேரைச் செலுத்தி வந்து, அவன் மார்பில் ஓர் அம்பைத் தொடுத்தான். அதேசமயம் துரியோதனன் தன் மாமனாகிய சகுனிக்குச் சகாயமாக வந்து, சகாதேவனுடைய மார்பை ஊடுருவிச் செல்லும்படி அவன் மேல் கூரியதொரு வேலாயுதத்தை எறிந்தான். அதனால் சகாதேவன் தாக்குண்டு தேர்மேல் மயங்கி விழுந்தான்.

பீமன் அதுகண்டு கோபித்து துரியோதனன்மேல் நூறு அம்புகளை வர்ஷித்தான். பீமனின் அந்தப் பாணங்களால் தாக்குண்டு துரியோதனன் தரையிலே விழுந்தான். துரோணாசாரியாரின் புத்திரனாகிய அசுவத்தாமன் அதனைப் பார்த்தான். உடனே அவன் பீமன்மேல் ஒரு வேலாயுதத்தை வீசினான். சோழமன்னன் அது கண்டான். கண்டதும், "எங்களுக்கெல்லாம் உயிர் போன்றவன் துரியோதனன். ஆகையால், அவனோடு போர் செய்யாமல் சிவமைந்தனாகிய அசுவத்தாமனோடு போர் செய்வோம். அந்தப் பிராமணனுடைய உயிர்நீங்கும்படி நாம் அவனை அம்புகளால் துளைப்போம்!" என்று சொல்லி, சோழமன்னன் தனது வில்லை வளைத்து அசுவத்தாமன் மேல் கொடிய ஏழு அம்புகளைப் பிரயோகித்தான்.

சோழமன்னன் பின்பும் பலவகையாக அசுவத்தாமனை எதிர்த்துப் போரிட்டான். அப்படிப் போரிட்ட மனுகுலத்து வேந்தன் சோழனுடைய நீண்ட வில்லின் வலிமையை யார்க்கும் சொல்ல முடியாது!

அசுவத்தாமனும் சோழனும் எதிர்த்துச் செய்த போரில், சோழன் எய்த அம்புகளால் அசுவத்தாமன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். அதுகண்டு அசுவத்தாமனின் மாமனும் வேதங்களில் வல்லவருமான கிருபாசாரியார், ஆத்திப்பூ மாலையணிந்த சோழனை வந்து எதிர்த்துப் போரிட்டார். பின்பு அவரும் தோற்றோடினார். அதனால் அருகில் சூழ்ந்து நின்ற சிறந்த துரியோதனசேனாவீரர்கள் எல்லோரும் மீண்டும் அஞ்சி ஓடிப் போனார்கள்.

ஆனால், சகுனி மட்டும் அஞ்சவில்லை. அவன் போருக்கு மீண்டும் வந்தான்.

உடனே சகாதேவன் முன்பு கூறிய தனது சபதத்தை நிறைவேற்றுவதற்காக, துரியோதனன் தன்மேல் எறிந்த வேலாயுதம் போல் குறி தவறாததும் தனக்கு கண்ணன் கொடுத்ததுமாகிய ஒரு கூரிய நீண்ட வேலாயுதத்தை எடுத்து சகுனியின்மேல் ஆவேசமாக வீசினான்!

சகாதேவனுடைய வேலாயுதம் அக்கணமே விரைந்து சென்று தாக்கிய வினாடியில் சகுனி இறந்து தேரில் விழுந்தான்! அதனால் போர்க்களம் எங்கும் போர் நின்றது!

பூமி முழுவதையும் தனதாகக் கொண்டு ஆளுகின்ற துரியோதனனும் உயிர் நீங்கிய உடல்போல் பலம் இழந்தான்!

இத்தனைநாள் போரைக் காட்டிலும் அன்றையப் போரில் அதிகமாகத் தன் சேனை அழிந்ததையும், தம்பிமார்கள் எல்லோரும் மாண்டதையும், சகுனி இறந்ததையும், சுற்றத்தவர்கள் எல்லோரும் செத்து மடிந்ததையும் பார்த்து துரியோதனன் நெஞ்சம் கலங்கினான். அவன் கப்பலையிழந்த பெரிய கடல்பிரயாணி போல் மிக வருந்தினான்!

அப்படி வருந்திக் கொண்டிருந்த துரியோதனனுடைய மனத்திலே ஓர் எண்ணம் உதித்தது. அதனால் அவன் மனம் தேறினான். மேலும் அதைப் பற்றிச் சிந்தித்தான். 'பிரமனிடமிருந்து அசுரகுருவான சுக்கிராசாரியார் இறந்தவரை உயிர்ப்பிக்கக் கூடிய சஞ்சீவிநி என்னும் ஒரு மந்திரத்தைப் பெற்றான். அந்த மந்திரத்தை சுக்கிரனிடமிருந்து பிறகு கசன் என்னும் முனிவன் பெற்றார். அதன்பின் அவனிடமிருந்து தேவகுருவாகிய பிருகஸ்பதி கற்றான். தான் கற்ற மந்திரத்தை பிருகஸ்பதி மற்ற முனிவர்களுக்கும் சொல்லிக் கொடுத்தார். கடைசியாக அந்த மந்திரத்தை நானும் ஒரு முனிவரிடமிருந்து கற்றேன்! அந்தச் சிறந்த மகாமந்திரத்தின் வலிமையால் போரில் அழிந்த எனது சேனைகள் யாவற்றையும் உயிர்ப்பித்து எழுப்பிக் கொண்டு வந்து மீண்டும் போர் செய்வேன்!' என்று எண்ணினான். அந்த எண்ணத்துடனே துரியோதனன் ராஜசின்னங்கள் யாவற்றையும் நீங்கி, யாரிடமும் கூறாமல் தனது கொடிய கதாயுதத்துடன் கால் நடையாகவே தனித்துச் சென்றான்.

போகும்போதே துரியோதனன், 'தூய்மையானதும் எல்லா நன்மைகளையும் தருகின்றதுமான கங்காநதி போன்ற, தேவர்கள் பலரும் வந்து நீராடப் பெற்ற பரந்த ஒரு தடாகத்தில் மூழ்கி அந்த மந்திரத்தை ஜபிப்பேன்' என்று எண்ணிக் கொண்டு சென்றான். அதன்படியே அவன் போய் ஒரு தடாகத்திலே மூழ்கித் தண்ணீருக்குள் மறைந்தான்!

இத்தனை நாளாய்ப் பல விஷயங்களிலும் சலனமடைந்து வந்த தனது ஐம்பொறிகளையும் துரியோதனன், அப்போது ஒருமுகப்படுத்தினான். தனது

மனத்தில் படிந்த பிரபஞ்ச மயக்கத்தையும் நீக்கினான். பின்பு, அவன் தனது பிராணவாயுவையும் அசையாமல் அடக்கிக் கொண்டு ஞானமாகிய பெரிய விளக்கை ஏற்றினான்! அதன்பின் அவன் பல நாட்களாக யோகப் பியாசம் செய்து பழகியவர்களைவிட பத்துமடங்கு அதிகமாக தனது உடம்பு முழுதும் இளைக்காதபடிக்கு, நல்ல நாளத்தோடு கூடிய எல்லாவற்றுக்கும் மூலாதாரமான தனது இதயத் தாமரையை மலரச் செய்தான். கடைசியில் அந்தரங்கமாக ஜபிக்கின்ற மந்திரத்தை அந்த முறைப்படியே துரியோதனன் ஜபித்தான்!

எப்படிப்பட்ட ஆபத்திலும் கொஞ்சமும் மனம் கலங்காத துரியோதனன், அப்படி நீரிலே மூழ்கி மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கும் அதேசமயத்தில், அவனுடைய சேனாவீரர்களும் துணைஅரசர்களும் சோழனிடம் புலியைக் கண்டு அஞ்சியோடும் மான் போலத் தோற்றோடிப் போனார்கள்.

அப்போது பகைவர்களுக்கு அக்கினி போன்றவனாகிய அசுவத்தாமனும், கிருபாசாரியாரும், கிருதவர்மாவும் அதுவரை ஒரு பக்கத்தில் ஒதுங்கி தங்கியிருந்த சேனைகளும் தாங்களுமாகப் போரிடுவதற்காகத் திரும்பி. வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்தவர்கள் பாரதயுத்தத்தை மூட்டிவிட்ட சகுனி இறந்து கிடப்பதைப் பார்த்தார்கள்.

சகுனி இறந்ததைக் கண்டதும், அவர்கள் எல்லோரும் அதிகக் கலக்கமும் கவலையும் அடைந்தார்கள். அந்த மனநிலையோடு அவர்கள் அதிகக் கோபமும் கொண்டு, ‘‘குளிர்ந்த ஒளியுடைய நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தைப் போன்ற யுத்தபூமியை, முரசக்கொடியுடைய தருமன் வென்று ஆக்கிரமித்துக் கொண்டான்!’’ என்று ஒருவர்க்கொருவர் வாய்விட்டுச் சொல்லிய வண்ணம், பாண்டவர்களின் வீரத்தை மிகவும் வியந்து கொண்டாடினார்கள்.

பிறகு, அவர்கள் எல்லோரும் துரியோதனனைத் தேடினார்கள். போர்க்களத்தில் எங்கும் அவன் இல்லாததைக் கண்டதும், அவர்கள் பெரிதும் மனம் தவித்து சூரியன் இல்லாத வானம் போல் பொலிவு இழந்தார்கள். அச்சமயத்தில் சஞ்சயமுனிவர் அவர்கள் எதிரே வந்தார். உடனே அசுவத்தாமன் முதலியவர்கள் அவருடைய

இரண்டு பாதங்களிலும் தங்கள் தலைகளை வைத்து வணங்கி, அவரை நோக்கி, ''உள்ளங்கை நெல்லிக்கனியைக் காண்பது போல, எல்லாப் பொருள்களையும் கண்டறிந்த மகாமுனிவரே! சேனைக்கூட்டங்களோடு அதிகமாகப் போர்புரியும் துரியோதனராஜனை நாங்கள் எங்கே பார்த்து அறிவோம்? அவன் உள்ள இடத்தை எங்களுக்குக் காட்டுக!'' என்று சொன்னார்கள்.

அதற்கு சஞ்சயமுனிவர் அவர்களைப் பார்த்து, ''துரியோதனனுடைய உயிருக்கு இப்போது ஆபத்து இல்லை! தனது சேனாவீரர்களும் துணையரசர்களும் இறந்து போக, துரியோதனன் மீண்டும் பாண்டவர்களோடு போர் செய்ய ஆலோசித்தான். ஆகையால், அவன் இந்தக் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இறந்த தன்பக்கத்தவர்களை எல்லாம் உயிர்ப்பித்து, மீண்டும் பாண்டவர்களோடு போர் செய்வதற்கு உதவியாக ஒரு மந்திரத்தைக் கொண்டு விசாலமான ஒரு தடாகத்தில் மூழ்கி நிற்கின்றான்! என்னைத் துருபத ராஜகுமாரனாகிய திருஷ்டத்யும்நன் முதலியோர் கொல்வதற்கு எண்ணம் கொண்டார்கள். ஆனால், நப்பின்னைப் பிராட்டிக்கு வாய்த்த மணாளனாகிய கண்ணபிரான் என்னை உயிர் தப்புவித்தான். அதனால் நானும் பிழைத்து வந்தேன். துரியோதனனுக்கு இப்போது ஏற்பட்டுள்ள தடாகம் மூழ்கும் நிலைமையைப் பற்றி, அவனுடைய தந்தை திருதராஷ்டிரனுக்கும் தாய் காந்தாரிக்கும் உடனே நான் சென்று சொல்வேன்!'' என்று கூறிவிட்டு, அவர் விரைந்து அங்கிருந்து சென்றார்.

சஞ்சயமுனிவர் கூறியதைக் கேட்ட அசுவத்தாமனும் மற்றவர்களும் துரியோதனன் மூழ்கியிருக்கும் அந்தத் தடாகத்தை நோக்கி விரைந்தார்கள். நேரே அவர்கள் சென்று, மிக்கத் துன்பத்தை நீக்கும்படியான உபதேசத்தைக் கேட்டதனால் ஞான லாபத்தைப் பெற்றது போல ஒடுங்கியிருந்த தடாகத்தைப் பார்த்தார்கள். அவர்கள் அந்தத் தடாகத்திலே சப்தமிடும் பறவைகளைக் காணவில்லை; ஒன்றோடு ஒன்று மோதி வீசுகின்ற அலைகளைக் காணவில்லை; துள்ளுகின்ற மீன்களைக் காணவில்லை; சுற்றி வீசுகின்ற காற்றைக் காணவில்லை; நீர்ப்பூக்கள் எல்லாம் மலர்ந்து கிடக்க, அப்பூவிதழ்களிலெல்லாம் தேனுண்ணும் வண்டுகளைக் காணவில்லை.

ஆனால், அவர்கள் குளக்கரையில் துரியோதனனுடைய காலடிகளைக் கண்டார்கள்! கருப்பஞ்சாற்றைப் போன்ற இனியநீர் கொண்ட அத்தடாகத்தின் நீர் அடங்கி இருப்பதைக் கண்டார்கள்! அது கண்டு அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

பின்பு, அவர்கள் துரியோதனனைக் கூவியழைக்கத் தொடங்கி, "இவ்வுலகத்தில் உனக்கு உறவினரான அரசர்களும், நண்பர்கள் எல்லோரும், அளவற்ற சதுரங்கச் சேனைகளும், எல்லா ஆயுதங்களும் துன்பத்துக்கிடமான போர்க்களத்தில் ஒருசேர அழிந்துவிட்டன அல்லவோ? ஐயனே! இதனால் நீ என்ன நினைத்தாயோ? என்ன காரியம் செய்தாய்!" என்றார்கள்.

அப்போது அசுவத்தாமன், "தனது பராக்கிரமத்தைத் தானே எடுத்துச் சொல்வது யாருக்கும் தகுதியில்லை. ஆயினும் சொல்கின்றேன். யுத்தகளத்தில் அர்ச்சுனனுடன் மற்ற நான்கு பாண்டவர்களும் என்முன் போருக்கு வந்தால், எனது கையால் தொடுக்கப்படும் வலிய கொடிய அம்புகளாலே கிரீடம்தரித்த தங்கள் தலை துண்டிக்கப்படுவார்கள்! இன்று சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னே பகைவர்கள் எல்லோரையும் ஒழிப்பேன். கடல்சூழ்ந்த பழமையான நிலவுலகம் முழுவதையும் உனக்குக் கொடுப்பேன். அப்படிச் செய்யாவிட்டால், நான் துரோணருடைய சிறந்த புத்திரன் இல்லை. அதுதவிர வில்லையும் தொடமாட்டேன். மேலும், ரிஷபவாகனனாகிய சிவபெருமான் முதலிய தேவர்கள் எனக்குக் கொடுத்துள்ள வலிய அம்புகளும் வீணாகிவிடும். எனக்குரிய வேதங்களும் பொய்யாகிவிடும்!" என்று துரியோதனனை நோக்கிச் சபதமிட்டு அழைத்தான்.

மற்றவர்களும், "ஒன்று கொடூரமான போரில் பகைவரை வென்று அழிப்போமோ? இல்லை, போரில் அப்பகைவரால் தாக்குண்டு இறப்போமோ? இவ்விரண்டைத் தவிர அரசர்களுக்குத் துணியத்தக்க விதம் வேறு உண்டோ? இவையிரண்டில் எதையாவது ஒன்றைத் தீர்மானிப்பாய். உன்னைப் போலச் சிறப்புள்ளவர்களுக்கு இப்படி ஓடிப் பதுங்கிக் கொள்வது தகுமோ? நீ இதுவரையிலும் பெற்ற புகழெல்லாம் போய்விடாதோ? முதலில் நாங்கள் பாண்டவர்களைக் கொன்று இந்தப் பூமி

முழுவதையும் உனக்கே கொடுக்கின்றோம். பிறகு, நீ போரில் உன் பக்கத்தில் இறந்தவர்களையெல்லாம் வேதமந்திரத்தால் உயிர்ப்பித்து எழுப்பு. அதன்பின் அவர்களோடும் உன் தம்பிமார்களோடும் கூடி, ஒரு பகையும் இல்லாதபடி உலகத்தை அரசாண்டவர்கள் இவர்களே என்று கண்டவர்கள் கொண்டாடும்படி நீ அரசாட்சி செய்யலாமே!'' என்றெல்லாம் கூறி , துரியோதனனை அழைத்தார்கள்.

அவர்கள் எல்லோரும் அப்படி பலநூறு வார்த்தைகள் சொல்லி அழைத்தபோதும், துரியோதனன் தடாகத்திலிருந்து வெளிப்பட்டு வரவில்லை. அவன் வருணனுடைய அம்சம் உள்ளவனாக மனத்தை ஒருமைப்படுத்திக் கொண்டு, நீரினுள்ளே ஒடுங்கியிருந்தான்!

தாங்கள் எத்தனைச் சொல்லியும் துரியோதனன் மறுமொழி கூறாததைக் கண்டதும், அவர்கள் எல்லோரும் அவனுடைய மனவுறுதியை நன்கு உணர்ந்தார்கள். அதனால் அசுவத்தாமன் கிருதவர்மாவோடும், கிருபாசாரியாரோடும், மற்றவர்களோடும் திரும்பிச் சென்றான்.

பாண்டவர்கள் போர்க்களத்தில் தங்களை எதிர்த்த வீரர்களையெல்லாம் கொன்று முடித்தார்கள். பின்பு, அவர்கள் துரியோதனனுடன் போரிட நினைத்துப் பாசறையிலும், போர்க்களத்திலும், சுற்றிலும் உள்ள இடங்களிலும், மற்றும் பல இடங்களிலும் அவனைத் தேடிப் பார்த்தார்கள். எங்கும் அவனைக் காணாததால் அவர்கள் கவலைப்பட்டு, மிகவும் பெருமூச்சுவிட்டு நின்றார்கள்.

அப்போது துரியோதனன் சென்ற காட்டிலிருந்து வந்த வேடர்கள் சிலர் பீமனிடம், ''சத்துவகுணம் மிக்க முனிவர்களும் தேவர்களும் நீராடப் பெற்ற புண்ணிய தீர்த்தமுள்ள தவம் செய்வதற்கு உரிய தடாகத்தில், பூமி முழுவதையும் அரசாண்ட துரியோதனராஜன் கதாயுதத்தோடு மூழ்கினான். அதனை நாங்கள் பார்த்தோம்!'' என்று சொன்னார்கள்.

உடனே பீமன் விரைந்து போய் கிருஷ்ணனிடமும், தருமரிடமும், மற்றவர்களிடமும், ''அரவக்கொடியுடைய துரியோதனன் இப்போது ஒரு தடாகத்தினுள்ளே மூழ்கி யிருக்கின்றான். இதனை வேடர்கள் சிலர் எனக்குத்

தெரிவித்தார்கள்!'' என்று, துரியோதனன் இருக்கும் இடத்தைக் கூறினான்.

கண்ணபிரான் அதுகேட்டு எல்லோருக்கும் கேட்கும் படி, "முற்காலத்தில் பிரமன் மூலமாகப் பெறப்பட்டு, சிறந்த பல முனிவர்களிடம் தங்கிய மந்திரம் ஒன்று உண்டு. அதற்குச் சமமானது அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. கொடிய போரில் இறந்தவர்கள் யாவரும் அந்த மந்திர பலத்தால் மீண்டும் உயிர் பெறுவார்கள். முன்பு அந்த ரகசிய மந்திரத்தைத் துரியோதனனும் பெற்றான். இப்போது அவன் நீரினுள்ளே மூழ்கி மறைந்து நின்று, அந்த மந்திரத்தை ஜபித்து, இறந்தவர்களைப் பிழைப்பித்து, நீங்கள் இறக்கும்படி இன்னும் போர் செய்வதற்குத் தீர்மானித்துவிட்டான் போலும்!'' என்று சொன்னான்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் அப்படிக் கூறியதுதான் தாமதம். அக்கணமே பீமன் தனது தந்தை வாயுபகவானைப் போல, வெகுசீக்கிரம் அந்தப் பெரிய தடாகத்தை அடைந்தான். அவனைத் தொடர்ந்து கண்ணனும் மற்ற பாண்டவர்களும் சென்று தடாகக் கரையிலே நின்றார்கள். அவர்களின் நடுவே நின்ற பீமன், தீப்போல் கொடிய மனமுடைய துரியோதனனின் காதுகள் வருந்தும்படி அவனை நோக்கி, "ராஜராஜனே! பீஷ்மர் முதலாக சகுனி வரையில் போர்க்களத்தில் இறந்து விழுந்த அரசர்கள் இன்னின்னார் என்று சொல்ல முடியாது. இத்தனைப்பேர் என்றும் கணக்கிட முடியாது! அதனால் யானை, குதிரை, தேர் ஆகியவற்றின் மேல் ஏறுவதைவிட்டு, விழுவதற்கு உரிய தடாகத்தில் பாய்ந்து விட்டாயோ? எப்போதும் அழியாமல் நிலைத்து நிற்கும் பழி உண்டாகும்படி நீ எங்களுக்கு வெகுநாளாகச் செய்து வந்த வஞ்சனையையும், கூறிய பொய் வார்த்தைகளையும், மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நீதியிலிருந்து வழுவியதையும் மறந்துவிட்டாயோ? இன்றைய கொடிய போரை முடித்த பின்பு அல்லவோ, இறந்த உனது சேனைகள் யாவும் உயிர் பெற்று வரும்படி நீ அந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்? அப்படியிருக்க, நீ செய்யும் இந்தச் செயல் சுத்த வீரருக்கு உரிய வீரமாகுமோ? குருவம்சத்து வேந்தர் வேந்தனே! அடிகளை மாற்றி வைத்து நீரினுள்ளே புகுந்து, அருமையான மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கின்றாய். நீ என்ன செய்தாலும் சரி. உனது

கொடியும், பேரும், தலையும், ராஜ்ஜியமும் உன்னைவிட்டு நீங்காத வரையில் நான் உன்னைவிட மாட்டேன்! ஆகையால், இந்தப் பகல்பொழுது மறைவதற்குள் நீ வெளிப்பட்டு வா! கடல் சூழ்ந்த பூமியை ஆளும் ராஜாக்கள் பயங்கரப் போருக்கு அஞ்சித் தண்ணீரில் விழுவார்களோ? உன்னைப் போன்ற அரசர்கள் கேள்விப்பட்டாலும், இது அவமானம் அல்லவோ? சிறந்த தேவமாதரின் கையை நீ பிடிக்கும்படியாகவும், தேவேந்திரனும் தேவர்களும் காததூரத்தில் உன்னை எதிர் கொண்டு வந்து அழைத்து உபசரிக்கும்படியாகவும் உன்னைக் கற்பகவிருக்ஷங்களின் நிழலிலே வைப்பேன். நீ கலங்காதே! கொற்றவனே! போர்க்களத்தில் எத்தனை கவந்தங்களை நீ கண்களிக்கப் பார்த்தாய்! இந்தக் குளத்திலுள்ள நீரையும் பார்த்துச் செல்வதற்கு, நீ கையிலுள்ள கதாயுதத்தோடு இதன் உள்ளே புகுந்தாயோ? அதிகமான இந்த எனது கோபமும், எனது சபதமும் வீண்போகாது. தீவினைக்கு இடமான உனது மனத்தில் உள்ள இந்தக் கவலையைவிட்டு, நீ வெளிப்பட்டு வந்து போர் செய். அதைத் தவிர உனக்கு வேறொரு நன்மை எதுவும் இல்லை! நடந்த பதினேழுநாள் போரிலும் நீ ஒருத்தருடனும் தனியே எதிர்த்து உக்கிரமாகப் போர் செய்யவில்லை. செல்வத்தின் நடுவே நின்று மனமகிழ்கின்ற நீசரைப் போல, நீ கூட்டத்தின் மத்தியில் நின்று கொழுப்போடு போரிட்டு வாழ்ந்து வந்தாய். பூமி முழுவதையும் தனித்து அரசாளுகின்ற அரசர்கள் அதிகக் கோபத்தால் கண்கள் சிவக்க வலிமை கொண்டு போர் செய்யாமல், இப்படி நீருக்குள்ளே போய் ஒளிந்து கொள்வார்களோ? இந்தப் பரந்த நீரிலே நீ மறைந்து கொண்டதால், மூவுலகங்களையும் ஒன்றாக ஆண்ட உனது புகழ் மிகவும் பழிப்பாகிவிடாதோ? இப்படி நீ பயப்படலாமோ? ஸ்ரீராமபிரான் சமுத்திரத்தின் மேல் பிரயோகித்த ஆக்கினேயாஸ்திரம் அக்கடலின் நீரை உறிஞ்சத் தொடங்கியது போல், இந்தத் தடாகமும் எனது அஸ்திரத்தால் புகைந்து எரிந்து போவதற்கு முன்னால் நீ வெளிப்பட்டு வா!'' என்று நிந்தித்துப் பேசினான்.

துரியோதனன் தனக்கு நன்மை தருபவை இவை என்பதை அறியாதவன். தனக்குத் தீமை செய்பவை இவை என்பதையும் அறியாதவன். தன்னைச் சேர்ந்தவர்களின் உயிர் அழிந்துவிடும் என்பதை அறியாதவன். மனத்திலே

நினைக்கின்ற தீயசிந்தனைகளுக்கு வேறு யாருமே தனக்கு நிகரில்லாதவன் அவன்! அப்படிப்பட்ட அத்துரியோதனன் பீமன் கூறிய நிந்தனைச் சொற்கள் தன் காதில் பட்டவுடனே, மந்திர ஜபத்தோடு நீரையும் விட்டு வெளிவரத் தொடங்கினான்! சீவனம் முழுவதையும் விட்டு நீங்குகின்றவன், அச்சீவனத்தின் உள்ளே இருப்பானோ?

பீமனுடைய நிந்தனைப் பேச்சால் துரியோதனன், கடலிலிருந்து நீர் மொண்டு மேலெழுகின்ற காளமேகம் போலத் தடாகத்திலிருந்து வெளிப்பட்டுத் தோன்றினான். அவன் நேரே கரையேறி வந்து, கண்ணனையும் பாண்டவர்களையும் பார்த்து, "நீங்கள் சேனைகளோடும் வாகனங்களோடும் நிற்கின்றீர்கள். நானோ வேறு ஒருவர் துணையுமின்றி எனது கையில் கொண்ட கதாயுதத்துடன் தனித்து நிற்கின்றேன். ஆகையால், இப்போது நாம் எந்தவிதமாகப் போர் செய்யலாம்? பாண்டவர்கள் ஐவருள்ளும் இப்போது என்னுடன் போர் செய்பவர் யார்? வீரர்களே! சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

அதற்கு கண்ணபிரான் துரியோதனனை நோக்கி, "குருநாட்டு வேந்தனே! உன்னோடு போர் செய்வதற்கு உரியவன் சத்தியம் பேசுவதில் தவறாத இந்தப் பீமனைத் தவிர வேறு ஒருவன் உண்டோ? ஆலோசித்துப் பார்க்கையில், இளமை முதல் திரௌபதியை மானபங்கம் செய்தநாள் வரை உனக்கும் இவனுக்கும் உள்ள பகைச் செயல்களைக் கணக்கிட முடியாது. அதைத் தவிர பீமன் முன்பு ராஜசபையில் பற்பல சபதங்களையும் கூறியுள்ளான். மேலும், போர்க்களத்துக்கு வந்த உன்னைத் தவிர உனது தம்பிமார்கள் எல்லோரையும் தனது பெரிய கையினால் கொன்றுவிட்டான். ஆகையால், இவனைத் தவிர வேறு ஒருவர் உன்னோடு போர் செய்வதற்கு உரியவரோ? இதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? வில், வாள், வேல், யானை, குதிரை, தேர் ஆகியவற்றைக் கொண்டு வீரம் தவறாமல் போர் செய்த வீரர்கள் சாட்சியாக இப்போது சுற்றிலும் நிற்கட்டும். நீங்கள் இரண்டு பேரும் போர்செய்து, உங்களுள் வல்லவர் வெற்றியடைவீர்களாக! அப்படி ஜெயிப்பவரே பூமியைப் பெறுவதும் நீதியாகும்!" என்றான்.

கண்ணன் கூறியதைக் கேட்டு துரியோதனன் உற்சாகம் அடைந்தான். அவன் பீமனைப் பார்த்து, "இப்போது நாம்

இருவரும் வில் முதலிய ஆயுதங்களால் போரிடலாமா? இல்லை, உனக்குரிய கதாயுதத்தால் யுத்தம் பண்ணலாமா? சொல்!'' என்று கேட்டான்.

உடனே பீமன் துரியோதனனிடம், ''இப்போது உன் கையில் இருப்பது கதாயுதமே. ஆதலால் எனது கையிலுள்ள கதாயுதத்தைக் கொண்டே நானும் போர் செய்வேன்!'' என்று பதில் சொன்னான்.

அப்போது துரியோதனன் கண்ணனைப் பார்த்து, ''பீமனும் நானும் போர் செய்வதற்கு உரிய இடம் எது?'' என்று வினவினான்.

ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் இருவரும் போர் செய்வதற்குரிய இடம் இது என்று சொல்லத் தொடங்கினான். அச்சமயத்தில் தீர்த்தயாத்திரை சென்றிருந்த விதுரனும் பலராமனும் அங்கே வந்தார்கள். அவர்களைக் கண்டு கண்ணனும், பாண்டவர்களும், மற்றவர்களும் கண்கள் களிக்க மனமகிழ்ந்து எதிர்சென்று அழைத்து உபசரித்தார்கள்.

மதுராபுரிக்கு அரசனாகிய ஸ்ரீகண்ணபிரான், தனது தமையனாகிய பலராமனை வணங்கினான். பின்பு, அவன் விதுரனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அரசர்கள் எல்லோரும் சூரியனையும் சந்திரனையும் ஒன்றாகக் கண்டது போல், அவர்கள் இருவரையும் பார்த்து மகிழ்ந்தார்கள். அம்மகிழ்ச்சியோடு அரசர்கள் அவர்களின் எதிரே சென்று கைகூப்பி வணங்கினார்கள்.

விதுரனும் பலராமனும் அவர்கள் எல்லோருக்கும் தாங்கள் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்று திரும்பி வந்தது வரையிலும் நடந்த வரலாற்றை ஒன்றுவிடாமல் கூறினார்கள்.

பின்பு, கண்ணபிரான் அவர்கள் இருவருக்கும், துரியோதனனும் தருமரும் செய்த பதினெட்டுநாள் போரைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னான்.

கண்ணபிரான் கூறிய போர் வரலாற்றைக் கேட்டுப் பனைக்கொடியுடைய பலராமன் மனம் தளர்ந்தான். உடனே அவன் கண்ணனைப் பார்த்து, ''அரவக்கொடியுடைய

துரியோதனனுக்கோ யுத்தத்தில் அழிவு உண்டாவது! இனி என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான்.

அதற்கு கண்ணன், ''பீமனுக்கும் துரியோதனனுக்கும் போர் செய்ய தக்க இடம் எது என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். அதைப் பற்றி உன் மனக்கருத்தைச் சொல்!'' என்றான்.

பலராமன் அதுகேட்டு தம்பியை நோக்கி, ''நீயே உனது எண்ணத்தைச் சொல்!'' என்றான்.

தமையன் அப்படிச் சொல்லவும் கண்ணபிரான் தனது கருத்தைச் சொல்லத் தொடங்கி, ''சூரியனைப் போன்றவனும் கோடாலிப்படை கொண்டவனுமான பரசுராமன் இருபத்தொரு தலைமுறை அரசர்கள் எல்லோரையும் கொன்று, அக்கினிதேவன் மகிழும்படி நரமேதம் பண்ணிய இடம் ஒன்று உண்டு. அது ஏழு தீவுகளுள்ளும் சிறந்தது. சுவர்க்கலோகத்துக்குச் சமமானது! பரசுராமன் நரமேதம் செய்த அந்த இடமே இந்த இரண்டு பேருக்கும் போர் செய்வதற்குத்தக்க இடமாகும். பரசுராமனால் கொல்லப்பட்ட அரசர்களுடைய உடம்பின் இரத்தம் பெருகியதால், ஸ்யமந்தபஞ்சகம் என்று பிரசித்தமாக நிலைபெற்றுள்ள ஐந்து தடாகங்களும் அந்த இடத்தில் பக்கத்தில் பக்கத்தில் உள்ளன. ஆலோசித்துப் பார்த்தால் ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த நிலவுலகத்தில், அந்த இடத்துக்கு ஒப்பான இடம் வேறில்லை!'' என்று கூறினான்.

உடனே அந்த இடமுள்ள திக்கை நோக்கி பாண்டவர்களும், அவர்கள் பக்கத்து அரசர்களும் வெண்கொற்றக்குடை நிழலில் வாகனங்களில் ஏறிக் கொண்டு, தங்கள் சேனைகளுடன் கூட்டமாக விரைந்து சென்றார்கள். துரியோதனனும் கையும் கதாயுதமுமாகக் கால்களால் வேகமாக நடந்து சென்றான்.

தம்பிமார்கள் நால்வரும் தம்மைச் சுற்றிலும் வரவும், பலவகைப்பட்ட வாத்தியங்களும் நெருங்கி அதிகமாக ஒலிக்கவும் தருமர் சிறப்பாகச் செல்லும் விதத்தைத் துரியோதனன் கண்டான். அதுகண்டு அவன் ஊழ்வினைக்கு ஓர் ஊழ்வினைப் போல் ஆனான். அதனால் அவன், 'எமது தம்பிமார்களும் சுற்றத்தவர்களும் இறந்து போக, நாம்

மட்டும் தனித்து நின்றோம்!' என்று எண்ணி, மிகவும் மனம் தவித்துத் தளர்ச்சியடைந்தான்.

துரியோதனன் கால்நடையாக வருவது கண்டு தருமர் இரக்கம் கொண்டார். அவர் தமது தேரைவிட்டு இறங்கி துரியோதனனிடம் சென்றார். தருமர் துரியோதனனைப் பார்த்துக் கம்பீரமான குரலுடன், "நல்ல தம்பியே! எனது தம்பிமார்களோடு நானும் நீ சொல்கின்ற குற்றேவல்களைச் செய்கின்றோம். உனக்கு நாங்கள் அப்படி ஊழியம் செய்ய, நீ சிங்காசனத்தில் அமர்ந்து குருவம்சத்து அரசர்கள் ஒற்றுமையானார்கள் என்னும் புகழ் எல்லாத் திசைகளிலும் போய்ப் பரவும்படி, ஒற்றை வெண்கொற்றக்குடையின் கீழ் பூலோகம் முழுவதும் ஆளுகின்றாயா? நான் சொன்ன இந்த வார்த்தைத் தவறாது!" என்று கண்ணபிரானை சாட்சி வைத்து, இதுவரையில் எவரும் என்றும் சொல்லியிருக்காத இந்த உறுதியான வார்த்தைகளைச் சொன்னார்.

அதுகேட்டு துரியோதனன் தருமரை நோக்கி, "எமது சுற்றத்தவர்களும் தம்பிமார்களும் எனக்காகப் போரில் மாண்டார்கள். அப்படியிருக்க , நான் உங்கள் கருணையைப் பெற்று உயிர் வாழ்வதோ? அதைவிடப் போரிட்டு என் உடம்பு சிதையட்டும். குருதி வெள்ளம் பெருகும் புண்வாயில் கழுகுகளும் காக்கைகளும் மூக்கினால் குத்திக் கிளறட்டும்! அப்படி நான் போர்க்களத்தில் இறந்தேன் என்று பேர்பெறுவதே இனியது அல்லவா?" என்று கூறி, அவரது வார்த்தையை மறுத்துவிட்டு மேலே விரைந்து நடந்தான்.

தங்கள் எல்லாச் சேனைகளோடும் பஞ்சபாண்டவர்களும் விரைந்து சென்றார்கள். கண்ணனும் பலராமனும் விதுரனுடன் துரிதமாக அந்த இடத்துக்குச் சென்றார்கள்.

அவ்வாறு சென்றவர்கள் மரக்கலங்களின் வழியாக யமுனாநதியைக் கடந்து, அதன் கரையில் ஏறினார்கள். பிறகு, அவர்கள் எல்லோரும் புண்ணிய ஸ்தலங்களுள் சிறந்த தலமான ஸ்யமந்தபஞ்சகத்தை அடைந்தார்கள். அதன்பின் அங்கே வலிமை கொண்ட சேனைத்தலைவர்கள் எல்லோரும் பூமியைச் சூழ்ந்துள்ள கடல் போலவும், அக்கடலைச் சூழ்ந்துள்ள சக்கரவாளமலை போலவும் சுற்றிலும் நிற்க, துரியோதனனும் பீமனும் கொடிய போரைச் செய்ய ஆரம்பித்தார்கள்!

அங்கே இருந்த ஒரு பூஞ்சோலையின் உள்ளே அவர்கள் இருவரும் சென்றார்கள். தத்தமது ஆபரணங்களை யெல்லாம் ஒழுங்காக அமைத்துக் கொண்டார்கள். அழகிய மலைகள் இரண்டு உயிர்பெற்றுப் போர் செய்வது போல, அவர்கள் இருவரும் கை கொண்ட கதாயுதமும் தோள்களும் கைகளும் வலிமை மிக அப்போது உலகம் செவிடுபடும்படி ஆண்மைக்குரிய சிங்கநாதத்தைச் செய்தார்கள்.

அப்போது துரியோதனனை நோக்கி பீமன், "முன்பொருநாள் சித்திரசேனன் முதலிய கந்தர்வர்கள் கயிற்றால் உனது தோள்களைக் கட்டினார்கள். அந்தத் தோள்களின் வலிமையைக் கொண்டோ, இல்லை மனத்தில் உள்ள துணிவைக் கொண்டோ நீ என்னோடு போர் செய்யத் தொடங்கினாய்? நம் இருவரின் கையிலுள்ள கதாயுதங்கள் இரண்டு. அவைகள் தாக்குவதும் இன்றைக்கே. எனது கதாயுதத்தால் தாக்குண்டு உனது உயிர் வீரசொர்க்கத்தில் குடியேறுவதும், உனது உடம்பு துடிப்பதும் இன்றைக்கே. யாகாக்கினியிலிருந்து தோன்றிய திரௌபதி மேகம் போன்ற தனது கரிய கூந்தலை முடிப்பதும் இன்றைக்கே. ஒப்பற்றவனாகிய நான் உனது இரத்தப் பெருக்கைக் குடித்த பின்பே, மேகம் பொழிகின்ற தண்ணீரைக் குடிப்பதும் இன்றைக்கே!" என்று வீரவாதம் பேசினான்.

துரியோதனன் அதுகேட்டு பீமனைப் பார்த்து, "பீமனே! இனிமேல் அதிகமாகச் சொல்லும் வீரவாதங்களை விட்டுவிடு இன்றைக்கு என்னை நீ கொல்வதோ, இல்லை உன்னை நான் கொன்றுவிட்டு எனது வெண்கொற்றக் குடையின் கீழ் பூலோகம் முழுவதையும் வைப்பதோ ஆகிய இரண்டில் ஒன்று நடப்பது நிச்சயம்! சரி. உனது சேனையும், கண்ணன் செலுத்தும் தேரையுடைய அர்ச்சுனனும், ஆயுதத்தேர்ச்சியில்லாத உனது மற்ற சகோதரர்களும் யார் ஜெயிப்பார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்க, வச்சிராயுதம் போன்ற கதாயுதத்தை நீ போர் புரிவதற்கு எடுத்துக் கொள்!" என்றான்.

பீமனும் துரியோதனனும் வலிமையோடு கார்காலத்து மேகம் இடியிடிக்கும் விதம் போல, அதிர்ச்சியுண்டாக விரைந்து வந்து ஒருவரையொருவர் நெருங்கினார்கள். அவர்கள் மதயானைகள் போலவும், காளைமாடுகள் போலவும், ஆண்சிங்கங்கள் போலவும் வலிமையும்

வெற்றியும் அதிகமாகக் கொண்டு, கற்பாந்தகாலத்து ஊழிப் பெருங்காற்றைப் போல மிகவும் உக்கிரத்தோடு கதாயுதப்போரை விரும்பித் தொடங்கினார்கள்.

ஒரு பொன்மலையின் எதிரே ஒரு நீலமலை நின்று போரைச் செய்வது போல, அவர்கள் கதாயுதப்போரைச் செய்தார்கள். அவர்கள் மேலுலகத்தைத் தாக்கும்படியாகவும், அங்குள்ள தேவர்கள் சிதறும்படியாகவும், எட்டுத் திக்குகளிலும் உள்ள திக்குபாலர்களாகிய தேவர்களும் பயப்படும்படியாகவும், பாதாளலோகத்தவர்களும் அஞ்சும் படியாகவும் தங்கள் கதாயுதங்களை வேகமாகச் சுற்றினார்கள்.

மேலும், அவர்கள் இருவரும் போர் புரிவதில் உள்ள உற்சாகத்தால் சிரித்தார்கள். அதிகக் கோபத்தால் தங்கள் உதடுகளை மடித்தார்கள். கண்களில் தீப்பொறி பறக்க உக்கிரமாக விழித்துப் பார்த்தார்கள். போர் சாஸ்திரப்படி வலது சாரியாகவும் இடது சாரியாகவும் சஞ்சரித்தார்கள். மண்டலமாகச் சுழன்று வந்தார்கள். ஆகாயமுகட்டையளாவ மேலே எழுந்தார்கள். பூமாதேவியின் முதுகு வருந்தும்படி மீண்டும் நேராகவே குதித்தார்கள். தங்கள் கதாயுதங்களை ஒரு கையால் சுற்றி அண்டகோளத்தின் மேல்முகடு உடையும்படி வீசி எறிந்தார்கள். ஆகாயத்தில் சென்ற கதாயுதங்கள் பூமியில் விழுவதற்குமுன் மீண்டும் தங்கள் இரண்டு கைகளாலும் ஆதாரமாக ஏந்திக் கொண்டார்கள். வேகத்தோடு அடைவு போட்டுக் கொண்டு விலகி ஓடினார்கள். மீண்டும் விரைந்து தங்களை ஒடுங்க வைத்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். பரிவேஷங்களைப் போலக் கதாயுதங்களை வேகமாகச் சுழற்றிக் கொண்டு நின்றார்கள்.

பின்னும் அவர்கள் தங்கள் தாமரைமலர் போன்ற பாதங்களும், கால்களும், வட்டமாக அமைந்த தனப்பிரதேசமும், வயிறும், நாபிகமலமும், மார்பும், குல பருவதங்களை ஒத்த தோள்களும், கழுத்தும், நீண்ட கீழ் வாயும், புன்சிரிப்பு மிக்க வாயும், கன்னமும், குண்டலம் தொங்குகின்ற காதுகளும், புருவமும், நெற்றியும், முகமும் சிதையவும்; மூளைநிணமும், இரத்தமும் இடைவிடாமல் சிந்தவும் கதாயுதத்தால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு போரிட்டார்கள்!

அவர்கள் இருவரும் அப்படி கதாயுதப்போர் செய்கையில், வானுலகில் வாழ்கின்ற தேவர்களின் காதுகள்

செவிடுபடும்படி ஆரவாரிக்கின்ற ஓசை கேட்டது. அந்தப் பேரோசை அவர்களின் ஒரு கதாயுதம் மற்றொரு கதாயுதத்தைத் தாக்குவதால் எழுந்த ஓசையோ? அவர்கள் சிரிப்பதால் உண்டாகின்ற ஓசையோ? இடைவிடாமல் அவர்கள் ஒருவர்முன் ஒருவர் பேசும் வீரவார்த்தைகளால் ஏற்படுகின்ற ஓசையோ? அவர்களின் மார்பில் கதாயுதம் தாக்குவதால் எழுகின்ற ஓசையோ? தங்கள் இரண்டு கால்களையும் அவர்கள் ஒன்று மாற்றி ஒன்று அடைவுபட வைப்பதால் உண்டாகின்ற ஓசையோ? பலவகை யுத்தவாத்தியங்கள் சுற்றிலும் அடிக்கப்படுவதால் ஏற்படுகின்ற ஓசையோ?

சிங்கக் கொடியுடைய பீமனும் அரவக் கொடியுடைய துரியோதனனும், வாலியும் சுக்கிரீவனும் போலக் கொடுமையாகத் தாக்கிப் போர் செய்தார்கள். கடைசியில் அவர்கள் சோர்ந்து போய் நின்றார்கள். அச்சமயத்தில் ஏழுதீவுகளாகவுள்ள பூமி முழுவதுக்கும் அரசனான துரியோதனன் பேச்சு தடுமாறப் பெருமூச்சுவிட்டு, முன்பொரு காலத்தில் மேருமலையின் சிகரத்தை முறித்து எறிந்த வீரனான வாயுவின் குமாரனாகிய பீமனைப் பார்த்து, "பீமனே! உனது உயிர் பிரதானமாக நிற்கும் இடமாகிய மர்மஸ்தானத்தை நீ எனக்குச் சொல்!" என்று கேட்டான்.

சத்தியம் தவறாத தருமரின் தம்பியும், பிரமதேவனுக்குச் சமமான அறிவுடையவனும், வாய்மை தவறாதவனும் ஆகிய பீமன், துரியோதனன் கேட்ட கேள்விக்கு உண்மையைச் சொல்லாமல் மறைப்பானோ? மறைக்கமாட்டான் அல்லவா? ஆகையால், பீமன் துரியோதனனுக்கு உண்மையைக் கூறத் தொடங்கி, "உடன்பிறந்தவனே! நான் சொல்வதைக் கேள். எனது உயிர்நிலை எனது தலையே ஆகும்!" என்று கூறி முடித்தான்.

அவ்வளவுதான். அக்கணமே துரியோதனன் பீமனுடைய தலைமேல் கதாயுதத்தால் ஓங்கி அடித்தான். அதனால் இடி விழுந்த மகாமேருமலை போல, பீமன் சொற்குழறிச் சுழன்று விழுந்தான்!

சற்று நேரத்துக்கெல்லாம் பீமன் களைப்புத் தீர்ந்து மீண்டும் போர் செய்ய எழுந்து நின்றான். அவன்

துரியோதனனை நோக்கி, ''உனது உயிர்நிலை இருக்கும் இடத்தை நீ சொல்!'' என்று கேட்டான்.

ஆனால், அரவக்கொடியுடைய துரியோதனன் அந்தக் கேள்விக்கு உண்மையைச் சொல்லவில்லை. அவன், ''எனது உயிர்நிலை நெற்றியிலே உள்ளது!'' என்று பொய் சொன்னான்.

பீமன் அதனை உண்மை என்று கருதி, சிந்துகின்ற ரத்தம் எங்கும் பரவும்படி உக்கிரங்கொண்டு தனது கதாயுதத்தால் துரியோதனனுடைய தலைமேல் தாக்கினான். மறுகணம் துரியோதனனுடைய உச்சந்தலை பிளவுபட்டது. அதனால் தலையிலிருந்து பெருகி வழிந்த குருதி வெள்ளம் எட்டுத் திசைகளிலும் பாய்ந்தது. அவன் துடிதுடித்துத் தரையிலே விழுந்தான். அது கண்டு பீமன் அவனைக் கொல்ல மனம் வராமல், ''நீ இப்போது வெகு சீக்கிரம் இளைப்பாறு! இளைப்பாறு!'' என்று கூறினான்.

சத்துருகாதினி கதாயுதத்தால் தாக்குண்டு மூர்ச்சித்த துரியோதனன் மயக்கம் தெளிந்தான். கண்களைத் திறந்து பார்த்தான். நாவிலும் நீர் சுரக்கப் பெற்றான். தலையிலிருந்து வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டான். பின்பு, அவன் இடியிடிக்கின்ற கரிய காளமேகத்தை ஒத்த தனது உடம்பை உதறிக் கொண்டு கொடிய வேகத்துடன் எழுந்து நின்றான். மீண்டும் அவன் தன் அருகில் ஒரு பக்கத்தில் நின்றிருந்த பீமனை நோக்கி வேகமாகச் சென்று, கொல்வதற்குரிய தனது கதாயுதத்தால் அவனைத் தாக்கினான்.

நெருப்பும் காற்றும் கொடிய போரைச் செய்வது போலவும், அலட்சியமாக ஆச்சாமரங்களைக் கொண்டு அரக்கர்கள் போர் செய்வது போலவும் பீமனும் துரியோதனனும் மிகவும் உக்கிரங் கொண்டு, பார்க்கின்ற வீரர்கள் பார்க்க முடியாமல் கூசித் தங்கள் கண்களை மூடிக் கொள்ளும்படி பகையழிக்கின்றவையும் காவலாக உள்ளவையுமான வலிய தங்கள் கதாயுதங்களால் யுத்தம் பண்ணினார்கள்!

பீமனும் துரியோதனனும் போரிடுகையில் எழுந்த கதாயுதங்களின் அதிகமான ஓசையால், சூரியனும் தடுமாற்றம் அடைந்தான். தேவர்களும் அசுரர்களும் பேச்சு

ஒடுங்கினார்கள். சிறந்த முனிவர்களும் பாதாளலோகத்தவர்களும் பயப்பட்டார்கள். பிரமன் முதலிய மும்மூர்த்திகள் செய்ய வேண்டியது என்ன என்று சிந்தித்தார்கள். உலகத்தைக் கவிந்து மூடியுள்ள அண்ட கோளம் ஒரு பக்கத்தில் வெடிப்புற்றது.

தேவர்களின் உலகத்தைப் பாதுகாத்தவனாகிய அர்ச்சுனன் பீமனும் துரியோதனனும் செய்யும் போரில், பீமன் வலிமை குறைந்த சிறுமையைப் பார்த்தான். உடனே அவன் தனது சாரதியான ஸ்ரீகிருஷ்ணபகவானின் திருவடிகளில் தன் கிரீடம்படும்படி சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து, "வாயுமைந்தனாகிய பீமன் துரியோதனனின் எதிரே நிற்க முடியாமல் தளர்ந்தான். இனி இப்போது செய்ய வேண்டியது என்ன? நீ சொல்லியருள்!" என்றான்.

கண்ணபிரான் அன்போடு அர்ச்சுனனை நோக்கி, "தேவேந்திரன் தந்த ஆரமாகிய ஆபரணத்தை அணிந்த மார்பையுடையவனே! நான் சொல்வதை நீ விரும்பிக் கேள். நம் எதிரே நடக்கின்ற யுத்தத்தில் எதிர்த்து நின்று போர் செய்யும் இரண்டு வீரர்க்ளுள்ளும் வாயுபுத்திரனாகிய பீமனே பலசாலி! திருதராஷ்டிரன் பெற்ற மகனாகிய துரியோதனன் பீமனைக் காட்டிலும் போர் செய்வதில் சிறந்தவன். ஆகையால், நான் ஒன்றையும் சொல்வது தகுதியில்லை. இந்த இரண்டு பேரும் ஆயிரம் நாள் போர் புரிந்தாலும், மரணமடைந்து சுவர்க்கலோகத்தைச் சேரமாட்டார்கள்! பீமனோடு இங்கே நான் ஒரு வார்த்தையும் பேசுவது இங்கிதம் ஆகாது. அப்படியில்லாமல் அவனிடம் ஒரு வார்த்தையைப் பேசினாலும், அது வஞ்சனைக்கு இடமாகும். பீமன் தனது பராக்கிரமத்தால் துரியோதனனுடைய தொடையில் ரணகளம் ஏற்படும்படி கதாயுதத்தால் எதிரே தாக்கினால் போதும். துரியோதனனுடைய உயிரை அழித்து விடலாம்!" என்றான்.

துரியோதனனைக் கொல்லும் வழியைக் கண்ணன் கூறியவுடனே, அதுகேட்டு அர்ச்சுனன் மகிழ்ந்தான். செய்யும் முயற்சி வீணாகாது என்பதால் அதனை நாம் செய்வோம் என்று அவன் துணிந்தான். அத்துணிவுடன் அர்ச்சுனன் தனது தொடையில் கை வைத்துக் கொண்டு, தன்னைப் பீமன் காணும்படி நின்றான்.

ஞானபண்டிதனாகிய பீமன் கண்ணனுடைய சொற்படி தனது தம்பியாகிய அர்ச்சுனன் காட்டிய குறிப்பை

உணர்ந்து கொண்டான். உடனே பீமன் துரியோதனனுடைய உயிர்நிலை இடமான அவனது தொடையிலே தனது கதாயுதத்தால் எதிர்த்துத் தாக்கினான். அவ்வளவுதான். மானத்தையே கவசமாகக் கொண்ட துரியோதனன் ஆறு அல்லது ஏழடி தூரம் கால்கள் நிலைபெயர்ந்து பின்னிட நின்றான்!

அதுகண்டு தேவர்கள் அவன் அழிவதும் பாண்டவர்கள் வெல்வதும் இனி தவறாது என்று எண்ணி மகிழ்ந்தார்கள். அதனால் அவர்கள் துந்துபி வாத்தியங்களை முழக்கினார்கள். பீமன்மேல் தேவலோகத்துக் கற்பக மலர்களை மழைபோலப் பொழிந்தார்கள்!

அப்படி நிலைதடுமாறிய துரியோதனன் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, பீமனுடைய தோளும் மார்பும் பொடியாகும்படி கதாயுதத்தால் அவனைத் தாக்கினான். பீமன் அத்தாக்குதலை வலிமையோடு தாங்கிக் கொண்டான். பின்பு, பீமன் துரியோதனனுடைய வலிய தொடை பிளக்கும்படியும், அவன் தரையிலே விழுந்து புரளும்படியும் தனது கதாயுதத்தால் அவனைக் கொடூரமாகத் தாக்கினான்!

மேலும், பீமன் துரியோதனனை அதட்டினான். அவனை நெருங்கி மிகவும் கோபத்துடன், கண்டவர்கள் வியக்கும்படி அவனுடைய தொடையை முறித்தான். அதனால் துரியோதனன் பெருங்கோபம் கொண்டு மீண்டும் போர் செய்யத் தொடங்கினான்.

பீமன் அதுகண்டு கோபத்தால் கண்கள் சிவந்தான். அவனுடைய புருவங்கள் மேலேறி வளைந்தன. நான்கு தந்தங்கள் பொருந்திய மதம்பிடித்த ஐராவதயானை போல, பீமன் கோபாவேசத்துடன் துரியோதனனுடைய மார்பிலே குத்தினான். மற்றும் துரியோதனனுடைய கன்னமும் வாயும் நொறுங்கும்படி பீமன் கதாயுதத்தை ஏந்திய தன் கையால் அவனைத் தாக்கி மிகவும் கலங்கச் செய்தான். யானையை எதிர்த்து அழிக்கின்ற சிங்கம் போல பீமன் துரியோதனனுடைய பொற்கிரீடத்தைத் தரையிலே அழுத்தி, அவனைத் தனது கால்களால் உதைத்து, அவனுடைய மார்பையும் தோள்களையும் முறித்து, பின்னும் பல வகையாக அவனுடைய உடம்பை பீமன் உதறி, தரையிலே அவனை வீசி எறிந்தான்!

நீலரத்தினமலை போலத் தரையிலே விழுந்த துரியோதனன், பின்பு உறுதிபெற்று பெருமூச்சுவிட்டான். அதன்பின் அவன் கோபம் கொண்டு கண்ணபிரானை நோக்கி, ''நீ குறிப்பாக அர்ச்சுனனைக் கொண்டு எனது அரிய உயிரைக் குறிக்கும் சிறந்த அறிவை பீமனுக்கு உண்டாக்கினாய். தருமத்தோடு போர் செய்கின்ற பராக்கிரமத்தின் தன்மையை அறிவில்லாத இடையர்களும் அறிவார்களோ? எதிர்த்துச் செய்கின்ற போர்களிலெல்லாம் எனக்கு நீ செய்த துரோகங்களை பிறர் செய்ய நினைப்பார்களோ? இழி குலத்தில் பிறந்தவர்களுடைய இங்கிதக் குறிப்பு இல்லாமல், இப்படிப்பட்ட அக்கிரமச் செய்கைகள் உண்டாகுமோ? வஞ்சகம் புரிபவர்கள் முடிதரித்த மன்னர்களுக்குச் சமமாவார்களோ? இப்படி நீ பற்பல துரோகங்கள் செய்த பின்பு, இந்நிலவுலகத்தில் அரசு பெற்று வாழும் வாழ்க்கையை அந்தப் பாண்டவர்கள் பெறும்படி, கொடுத்துவிடு. நீ நினைத்த காரியங்களை முடித்துக் கொள்!'' என்று சிலவார்த்தைகளை வாய் குழறச் சொன்னான்.

பின்பு, துரியோதனன் பீமனோடு மீண்டும் போர் செய்ய எண்ணி எழுந்திருக்கத் தொடங்கினான்.

அதுகண்டு பீமன் துரியோதனனைப் பார்த்து, ''இனியும் உனக்கு வாழ்க்கை வேண்டுமோ?'' என்று கூறி, அவனைத் தனது கால்களால் உதைத்து, அவனுடைய தலையை உதைத்தான்.

அப்போது கோபகுணமுள்ள பலராமன், அதைப் பார்த்து மனம் பொறுக்காமல் கண்களில் தீப்பொறி பறக்கக் கண்ணனைக் கோபமாக நோக்கி, ''தம்பி! நான் சொல்வதைக் கேள். பாம்புடன் உள்ள விஷம் போன்ற அரசர்களுக்கு எதிரே உடம்பு துடித்து விழும்படி பீமன் துரியோதனனைத் தொடையிலே தாக்கினான். அதைப் பார்த்தபோது எனது அரிய உயிர் உடம்பைவிட்டு நீங்கும் நிலை அடைந்தது. கதாயுதம் ஏந்திப் போர் செய்கின்ற வீரர்கள் இடைக்குமேல் அடிக்க வேண்டும். அதைவிட்டுத் தொடையில் துடிப்பு ஏற்படும்படி அவர்கள் அடிப்பார்களோ? மற்றும் தலையில் கால்படும்படி உதைப்பார்களோ? அப்படியன்றி இப்போது தன் பகைவனான துரியோதனனை நீதிதவறி என் கண் முன்பாகவே பீமன் தொடையில் அடித்தான். தலையில்

உதைத்தான். இப்படி கொடூரம் புரிந்த பீமனைப் புறமுதுகிட்டு ஓடும்படி நான் தாக்குவேன்!'' என்று சொன்னான்.

மறுகணமே அவன் உலக்கை ஏந்திய கையுடன் பீமன்மேல் போருக்கு விரைந்து சென்றான்.

அச்சமயத்தில் கண்ணபிரான் வேகமாகச் சென்று பலராமனைத் தடுத்தான். பிறகு பலராமனைப் பார்த்து கண்ணன், "நீர் கோபம் கொள்வது சரியில்லை. பெரியோய்! நான் சொல்லும் இவற்றைக் கேள். பீமனும் துரியோதனனும் ஒருவரோடு ஒருவர் முடிவில்லாத அதிகமான பகையை உடையவர்கள் அல்லவோ? மேலும், அரசர்கள் கூடியுள்ள ராஜசபையிலே சொல்வதற்கு அரிய தவறாதவையான சபத வார்த்தைகளைப் பீமன் அதிகமாகக் கூறியுள்ளான். அதனால் இவர்கள் இருவரும் மாறுபட்டே போர் செய்வார்கள். மற்றும் வில்லாசிரியர் மைத்திரேயர் துரியோதனனுக்கு இட்ட சாபமும் உண்டு. அதைத்தவிர திரௌபதிதேவி கூறியுள்ள சாபமும் உண்டு. ஆகையால், பீமனின் கொடிய கதாயுதத்தால், துரியோதனன் அவன் எதிரே இறந்தே தீர்வான்! விதுரனும் நீரும் புண்ணிய தீர்த்தங்களிலே நீராடி வருவதற்குச் சென்றீர்கள். இங்கே துரியோதனன் பஞ்சபாண்டவர்களோடு போரைத் தொடங்கினான். அவன் பாண்டவர்களோடு செய்த இந்தப் பதினெட்டுநாள் யுத்தத்திலும் யுத்தகளத்தில் வஞ்சனையாகவே போரிட்டான். இங்கு உடனிருந்து பார்த்துக் கொண்டிருந்த நானே இதனை அறிவேன். இன்று இப்பொழுது பீமனின் உயிர்நிலை உண்மையை அவனிடமிருந்தே அறிந்து கொண்ட துரியோதனன், பதிலுக்கு தன் உயிர் நிலையைப்பற்றி பொய்யுரைத்துள்ளான். ஆகையால், இத்தனை நாளாய் அவன் செய்த அக்கிரமங்கள் பலவற்றையும் பார்க்கையில், இத்தனை நாளாய்த் தருமயுத்தமே செய்து வந்த பாண்டவர்களுள் பீமன் இன்று ஒருபொழுது கொஞ்சம் முறைதவறி போரிடுவது பெரும்பிழை என்று பாராட்டக் கூடாது!'' என்றான்.

கண்ணன் கூறியதைக் கேட்டு பலராமன் சாந்தமடைந்தான். அவன் தனது தம்பி சாத்தகியுடன் போர்க்களமாகிய அந்த ஸ்யமந்தபஞ்சகத்தைப் பிரதக்ஷிணம் செய்வதற்காக ஒரு மாத்திரைப் பொழுதில் அங்கிருந்து சென்றான்.

அப்போது துரியோதனன், தன் உடம்பிலிருந்து பெருகும் ரத்தத்தில் மூழ்கிக் களிப்பதற்காக அங்கு வந்து சூழ்ந்த கழுகுகளின் நிழலிலே குற்றுயிரோடு கிடந்தான்!

பீமனால் துரியோதனன் மண்டை உடைந்து கிடப்பதைக் கண்டு, நீண்ட திக்குகள்தோறும் நின்று காவல் செய்கின்ற திக்குபாலர்கள் மகிழ்ந்து ஆரவாரித்தார்கள். தேவர்கள் பீமன்மேல் பூமழைப் பொழிந்து வாழ்த்தினார்கள்.

அச்சமயத்தில் சூரியன் விரைந்து செல்லும் தேரோடு மேற்குக் கடலில் மூழ்கினான்!

அந்த அந்திமாலைப் பொழுதில் பாண்டவர்கள் ஐவரும் தங்கள் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்! அப்போது கண்ணபிரான் அசுவத்தாமனின் சபதத்தை மனத்தில் எண்ணி, மற்ற சேனைகள் பாசறையிலே தங்கியிருக்க பாண்டவர்களை மட்டும் தன்னோடு பக்கத்திலுள்ள ஒரு காட்டுக்கு அழைத்துச் சென்றான்.

யானையை அழித்த சிங்கம் போல பீமன் துரியோதனனை அழித்தான் என்று பிறர் சொல்லக் கேட்கும் முன்பே, அசுவத்தாமன் துரியோதனன் கிடந்த போர்க்களத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அரவக் கொடியுடைய துரியோதனன் குற்றுயிரோடும் கொஞ்சமான அறிவோடும் உறங்குவதைக் கண்டு அவன் மனம் பதைத்தான். கண்களில் நீர் பெருக அசுவத்தாமன் அவனைத் தனது கைகளால் தூக்கித் தழுவிக் கொண்டான். போரில் தனது தந்தையாகிய துரோணர் மாண்ட பொழுதுகூட அவன் அத்தனைக் கலங்கவில்லை. இப்போது துரியோதனனின் நிலைக்கு அவனிடம் கொண்ட சிநேகத்தால் மனம் வருந்தி, வானில் யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் தேவர்களும் உயிர் கரையும்படி அழுதான்!

துரோணபுத்திரன் துரியோதனனை அணைத்தபடி, அவன் முகம் நோக்கி மிக்க அன்போடு,“உன் எண்ணப்படி கொடிய போரைச் செய்து பூமி முழுவதையும் உனக்குக் கொடுக்கும்படி நான் நினைத்தாலும், முன்பு கண்ணன் செய்த மாயையால் நீ என்னை நம்பவில்லையே! குருகுலத்துக்கு ஒரு திலகமாக விளங்கும் மூர்த்தியே! கருணை பொருந்திய ராஜநீதி, சத்தியம், தருமத்தோடு கூடிய

பொறாமையற்ற உயர்வு, யாவர்க்கும் இனிமையாகச் செங்கோல் செலுத்துவது ஆகிய அரசர்களுக்குரிய இயற்கை ஒழுங்குகளை நீ சிறிதும் நோக்கவில்லை. என் தந்தை துரோணாசாரியாரும், கங்கா புத்திரனாகிய பீஷ்மரும், ஒடித்தெடுத்த வில்லையுடைய விதுரனும், மற்றும் பல பெரியவர்களும் சொன்ன உறுதி மொழிகளைக் கேட்டு, நீ அவற்றின்படி நடக்கவில்லை. சரி போகட்டும். இடி விழுந்த மலைகள் போலக் கதாயுதத்தால் தாக்கும் பீமன் முதலிய பகைவரின் தலைகள் பதைபதைத்து விழவும், அந்தந்தப் பகைவர்களுடைய சேனைகள் துண்டுபடவும், ஏழு தீவுகளாகவுள்ள பூமி முழுவதையும் நீ பெறவும் இந்த இரவு கழிவதற்குமுன் நான் போர் செய்து திரும்பி வருகின்றேன்!'' என்று கூறினான்.

அசுவத்தாமனின் சபதம் கேட்டு அரவக்கொடியுடைய துரியோதனன் மகிழ்ந்தான். அம்மகிழ்ச்சியோடு தனது கிரீடத்தின்மேல் அணிகின்ற சிகாமணியை அவனுக்குக் கொடுத்து துரியோதனன், அவனைப் போய் வெற்றியோடு திரும்பி வரும்படி விடை தந்து அனுப்பி வைத்தான்.

உடனே பாரதயுத்தம் முடிந்த அந்தப் பதினெட்டாம் நாளின் இரவில் சதுரங்கச் சேனைகளோடும் மும்மூர்த்திகள் கொடுத்த ஆயுதங்களோடும் அசுவத்தாமனும், கிருபாசாரியாரும், கிருதவர்மாவும் போருக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் பீமனையும், அவன் சகோதரர்களையும் தலைதுண்டித்துக் கொல்ல எண்ணி, பாண்டவர்களுடைய பாசறையை விரைந்து சென்று சேர்ந்தார்கள்!



சௌப்திக பருவம்

பதினெட்டாம் நாள் போர் (பிற்பகுதி)

அசுவத்தாமனும் மற்றவர்களும் பாண்டவர்களின் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தபோது, அந்தப் பாசறைக்கு வெளியே இருந்த ஓர் ஆலமரத்தின் கிளையில் கோட்டான் ஒன்று பல காக்கைகளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது! அதனைப் பார்த்து அவர்கள் தங்களுக்குள்ளாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அச்சமயத்தில் 'காலமும் இடமும் அறிந்து போரில் பகையழிப்பது கடமை' என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

பாண்டவர்களின் பாசறையை அடைந்த அசுவத்தாமனும், கிருபாசாரியாரும், கிருதவர்மாவும் அதன் உள்ளே நுழைந்தார்கள். அப்போது ஒரு பூதம் எதிர்பட்டு அவர்களுடைய விற்களையும், அம்புகளையும் முறித்துப் போட்டது. அவர்களின் தேரையும் சிதைத்தது. மேலும், முதலில் பாசறையில் நுழைந்த அசுவத்தாமனுடன் போர்செய்து, அவனுடைய தோள்களும் மார்பும் எலும்பையும் சதைகளையும் வெளிச்சிந்தும்படி கரிய சிறுத்த குள்ளமான தனது இரண்டு கைகளாலும் உக்கிரமாகத் தாக்கியது. அதனால் அசுவத்தாமன் வலிமையிழந்தான். பின்னும் கிருபாசாரியாரையும் கிருதவர்மாவையும் பலம் இழக்கச் செய்தது. கடைசியில் அவர்கள் மூவரையும் பாசறைக்குள் நுழையாதபடித் துரத்திவிட்டது! ஆகா, அந்தப் பூதத்தின் மகிமை நாம் சொல்லக் கூடிய தன்மையுடையதோ?

கண்ணபிரானுடைய கட்டளையால் பாண்டவர் பாசறையைக் காத்து வந்த பூதம் தங்களைப் போர் செய்து துரத்திவிட்ட பின்பு, அவர்கள் மூவரும் திரும்பிச் சென்று எதிரேயிருந்த ஆலமரத்தின் நிழலிலே தங்கினார்கள். அவர்கள் பூதத்தின் யுத்தத்தால் மனக்கலக்கம் உண்டாக அச்சத்தோடு அங்கே இருந்தார்கள். அப்போது அசுவத்தாமன், 'இனி என்ன செய்வது?' என்று தீவிரமாகச் சிந்தித்தான்.

மேலும், அசுவத்தாமன் அந்த இரவில் கண்ணுறக்கமின்றி, 'பொழுது விடிவதற்குள் பகையழித்துத் திரும்புவதாகத்

துரியோதனனுக்குப் பல சபதங்களைச் சொன்னோம். அதனால் அவனுக்கு ஆசைமுட்டி அரிதில் உயிர் பிழைத்திருக்கவும் செய்துவிட்டு வந்தோம். ஆகையால், நாம் இப்போது இப்படி சும்மா இருப்பது கொஞ்சமும் சரியில்லை. மீண்டும் சென்று பாசறைக்குள் நுழைய முயல்வோம். அங்கு அந்தப் பூதத்தால் முன்போலவே தாக்கப்பட்டு, பின்பு திரும்பாமல் இனி இறக்க நேர்ந்தாலும் சரியே!' என்று மனத்தில் நிச்சயித்தான்.

கடைசியாக அசுவத்தாமன், 'நினைத்த காரியம் நினைத்தபடி முடிந்தாலும் சரி. இல்லை, முடியாவிட்டாலும் சரி. நாம் சிவபெருமானைப் பூஜிப்பது புண்ணியமே!' என்று எண்ணினான். அந்த எண்ணத்துடன் அவன் அங்கிருந்த ஒரு குளிர்ந்த தடாகத்தில் நீராடிக் கரையேறினான். பின்பு, சிவபெருமானை மனத்திலே இருத்தி, அர்ச்சுனனைப் பொருளாக்கிப் பலவகை மலர்களைக் கொண்டு பஞ்சாக்ஷர மகாமந்திரத்தைச் சொல்லிப் பூஜித்து, சைவாகமப்படி இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

சிவபெருமான் அசுவத்தாமனின் பூஜையை ஏற்று மகிழ்ந்தார். அதனால் சிவபெருமான் கருணை கொண்டு, அசுவத்தாமனின் மனமும் கண்களும் மகிழும்படி அவனுக்குத் தரிசனம் தந்து நின்றார்!

சிவதரிசனம் கண்டு அசுவத்தாமன் மனக்கலக்கம் நீங்கினான். அவன் சிவபெருமானிடம், "பகைவர்களைத் தவறாது அழிக்கின்ற ஆயுதம் ஒன்றை எனக்குக் கொடுத்தருள்வாய்!" என்று வேண்டினான்.

அசுவத்தாமனின் வேண்டுதலுக்கு இசைந்து சிவபெருமான், அவன் கேட்டபடியே அவனுக்கு ஓராயுதத்தைக் கொடுத்தருளினார்!

சிவாயுதம் பெற்று கொண்ட அசுவத்தாமன் ஒரு மாத்திரைப் பொழுதில் கிருபாசாரியாரையும் கிருதவர்மாவையும் அழைத்துக் கொண்டு, மீண்டும் சென்று பாண்டவர் பாசறைக்குள் நுழைந்தான். அப்போது அங்கு காவலாய் நின்ற பூதம் மீண்டும் வந்து அவனை எதிர்த்துப் போரிட்டது. துரோணபுத்திரன் அச்சமயத்தில் சிவாயுதத்தைக் கையில் ஏந்தினான். அதுகண்டு பூதம் ஆவி கொண்டு அரிதில் உயிர் பிழைத்து ஓடிப் போய்விட்டது.

பூதம் ஓடிப்போன பின்பு, அசுவத்தாமன் கிருபாசாரியாரையும் கிருதவர்மாவையும் பாசறையின் வாசலிலே நிற்க வைத்துவிட்டு, தான் மட்டுமே உற்சாகத்தோடு அதன் உள்ளே சென்றான். அவ்வாறு சென்றவன் அங்கே தூங்கிக் கொண்டிருந்த திருஷ்டத்யும்நனைக் கண்டான். தனது தந்தையைக் கொன்ற அவனைப் பழிவாங்க வேண்டும் என்ற வஞ்சம் அசுவத்தாமனின் மனத்திலே பீறிட்டது. அதனால் அவன் முதலில் திருஷ்டத்யும்நனின் தலையை வெட்டிப் பழிதீர்த்துக் கொண்டான்!

அப்போது இயல்பாகக் கண்விழித்துக் கொண்ட சிலர், அசுவத்தாமன் திருஷ்டத்யும்நனின் தலையை வெட்டியதைக் கண்டார்கள். அதனால் அவர்கள் பெரிதும் மனம் கலங்கி அஞ்சிக் கதறினார்கள். அக்கதறல் ஒலிகேட்டு திருஷ்டத்யும்நனின் உடன்பிறந்தவனான சிகண்டி முதலிய பாஞ்சாலதேசத்து அரசர்கள் தூக்கம் விழித்தார்கள். அவர்கள் எழுந்து பார்த்தபோது, அசுவத்தாமனால் திருஷ்டத்யும்நன் தலைதுண்டித்து இறந்திருப்பதைக் கண்டார்கள். அதனால் பெரும் கோபம் மனத்தில் பொங்க, அவர்கள் அசுவத்தாமனை எதிர்த்துப் போருக்கு வந்தார்கள்.

தன்னை வந்து எதிர்த்த உத்தமௌஜஸ், யுதாமந்யு முதலிய பாஞ்சாலத்து வீரர்களையும், மற்றும் பல வீரர்களையும் அசுவத்தாமன் தலைவெட்டிக் கொன்றான். அப்படி வெட்டப்பட்ட தலைகளாலேயே அவன் அநேக மலைகளை உண்டாக்கினான். பின்பு, மிகவும் வீராவேசம் கொண்டு பாரதப்போரை முடித்த வீரர்களான பாண்டவர்களைக் கொடும் கோபத்துடன் அந்தப் பாசறை முழுவதும் தேடி அலைந்தான். அப்போது அங்கே ஒரு பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், ஜயசேனன் ஆகிய பஞ்ச உபபாண்டவர்களைக் கண்டான். உடனே அவர்களின் அருகே சென்றான்.

பூமி முழுவதையும் கைப்பற்றிக் கொண்ட தங்கள் தந்தைமார்கள் கண்ணபிரானோடு பாசறையைவிட்டுச் சென்றதையும், தூங்கிக் கொண்டிருந்த தங்கள் மாமனாகிய திருஷ்டத்யும்நனை அசுவத்தாமன் தலைவெட்டிக் கொன்றதையும் அறியாமல் உபபாண்டவர்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தங்கள் அருகே அசுவத்தாமன்

வந்ததை திரௌபதியின் புதல்வர்களான அந்த உபபாண்டவர்கள், கனவு கண்டது போலத் தூக்கத்திலிருந்து சற்றே விழித்துப் பார்த்தார்கள்.

ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய மற்றொரு விளக்குப் போல விளங்கிய அவர்களைப் பாண்டவர்கள் என்று தவறாக நினைத்து அசுவத்தாமன் கோபம் கொண்டான். அதனால் அவன் கலக்கமடைந்தான். எனினும் பழங்கள்ளைக் குடித்தவர் போல் களிப்பு மயக்கம் கொண்டு, அவன் ஒரு கைந்நொடிப்பொழுதிலே அந்த உபபாண்டவர்கள் போர் செய்வதற்குத் தத்தமது ஆயுதங்களை எடுத்துக் கொள்ளும் முன்னால், அவர்களின் தலைகளை வீணாக வெட்டித் தள்ளினான்!

அச்சமயத்தில் கண்விழித்து எழுந்தவர்கள் அசுவத்தாமனின் செயலைக் கண்டு, "துருபதராஜ குமாரர்களையும், பாண்டவர்கள் ஐவருக்கும் திரௌபதி பெற்ற புத்திரர்களையும் தூங்கும் பொழுதே அசுவத்தாமன் தலைவெட்டிக் கொன்றான்!" என்று சொல்லிக் கதறிப் புலம்பினார்கள்.

அதுகேட்டு கண்விழித்து எழுந்த சூரிய குலத்துச் சோழமன்னன், "ராத்திரியில் போர் என்னடா?" என்று அதட்டிக் கொண்டே, அசுவத்தாமன் மேல் போருக்குச் சென்றான். அவனோடு அவனது சேனாவீரர்களும், மண்டலாதிபர்களும் போனார்கள். அப்படிச் சென்றவர்கள் எல்லோரும் அசுவத்தாமனை எதிர்த்துப் போரிட்டு, அவன் தாக்கிய ஆயுதத்தால் இறந்தார்கள். திரிபுரசங்காரகனாகிய சிவபெருமான் கொடுத்த அந்த ஆயுதத்தின் முன், போரில் முன்பு பிழைத்தவர்கள் யார்தான் இப்போது தப்பிப் பிழைத்தார்கள்?

அழித்தற்கடவுளான சிவபெருமானுடைய குமாரனாதலால், அசுவத்தாமன் தான் ஒருவனாகவே தனித்து நின்று பதினெட்டுதேசத்து ராஜாக்களையும், அவர்களுடைய சதுரங்கச் சேனைகள் எல்லாவற்றையும் அந்தப் பதினெட்டாம்நாள் பகல்பொழுதில் நடந்த போரைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக அந்த இரவில் ஒருசேர அழித்து வெற்றி பெற்றான்!

பின்பு அவன், தான் நினைத்த காரியம் முடிந்ததால் காளை போல் மகிழ்ந்து, பாசறையின் வாசலில் காவல் நின்ற கிருபாசாரியாரையும் கிருதவர்மாவையும் அழைத்துக் கொண்டு சென்றான். அப்படிப் போகும்போதே அவன் தேவர்களும் கண்டு அதிசயிக்கும்படி உபபாண்டவர்களின் தலைகளைத் தூக்கிக் கொண்டு, அந்த நடுஇரவிலேயே துரியோதனனை அடைந்தான்.

துரியோதனனை நோக்கி அசுவத்தாமன், "ஐயனே! கண்ணனுடைய கட்டளையால் முந்திப் போருக்கு வந்த பூதத்தைத் துரத்தினேன். பின்பு, பாசறையிலிருந்த அனைவரையும் தலைதுண்டித்துக் கொன்றேன். பஞ்ச பாண்டவர்களின் உயிர்களையும் கவர்ந்து கொண்டு, நான் இதோ வந்துவிட்டேன்! எல்லோராலும் புகழ்ந்து பேசப்பட்ட சிங்கக்கொடியுடைய பீமன் முதலாகவுள்ள பாண்டவமன்னர்கள் ஐவரும் இறந்தார்கள்! இவை அவர்களுடைய தலைகளாகும்!" என்று கூறி, உபபாண்டவர்களின் தலைகளை அவன் எதிரே வைத்தான்.

அரவக்கொடியுடைய துரியோதனன் அசுவத்தாமனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே சற்றே மனம் தேறினான். அதனால் கொஞ்சம் நிம்மதியோடு தன்முன் அசுவத்தாமன் வைத்த தலைகளைப் பார்த்தான். உடனே துரியோதனன் அசுவத்தாமனைப் பார்த்து, "இவை பாண்டவர்களின் புத்திரர்களுடைய முகங்களே! தத்தமது அன்புள்ள தந்தைமார்களின் முகத்தை ஒத்துள்ளன. இது உண்மை!" என்றான்.

அந்த உண்மையைக் கேட்டதும் அசுவத்தாமன் அதிர்ச்சியடைந்தான். அதனால் அவன் ஒன்றும் பேசாமல் மௌனமாக நின்றான்.

துரியோதனன் அப்போது அசுவத்தாமனை நோக்கி, "பாதகம் செய்வது பிராமணர்களுக்கு மிகவும் குற்றம்! அப்படியிருக்க, நீ இதனை எப்படிச் செய்தாய்? பாரதயுத்தம் தொடங்கிய நாள் முதலாகவுள்ள இந்தப் பதினெட்டு நாட்களிலும், பலவகை அரசர்கள் தோற்று ஓடும்படி அம்புகளால் போர் செய்தாய். அப்படிப்பட்ட நீ இன்று பாண்டவர்களின் குமாரர்களுடைய தலைகளைத் துண்டித்தாய். இது என்ன வீரம்? நீ செய்த இந்தக்

காரியத்தால், திருதராஷ்டிரகுமாரர்கள் பாண்டுகுமாரர்கள் என்னும் இரண்டு பரம்பரைகளிலும் திருதராஷ்டிர குமாரர்களாகிய எங்களுக்கும், பாண்டுகுமாரர்களாகிய அவர்களுக்கும் ஒரு வம்சத்திலும் இந்தவுலகத்தில் அடையாளம் உண்டு என்று சொல்லும்படி சந்ததி இல்லாமல் போய்விட்டது! பிறந்து வளர்ந்த குலத்திலே ஒரு குற்றமும் இல்லாத மைந்தனே! குருகுலத்தின் கொழுந்தைக் கிள்ளிவிட்டாயே! ஐயனே! கங்காநதியின் நீரிலே விளையாடிய நாள் முதற்கொண்டு வாயுபுத்திரனாகிய பீமனோடு எத்தனைப் பகைமை கொண்டேன்! சிந்தித்துப் பார்க்கையில், நான் செய்த தீவினையே என்னை வருத்த யமனுடைய வாயில் நுழைந்துவிட்ட எனக்கு, இனி சொல்லக் கூடிய வார்த்தை என்ன இருக்கிறது? நான் உறவினர்களெல்லோரையும் நண்பர்களெல்லோரையும் போரில் இழந்து நின்றேன்! எண்ணிப் பார்த்தால், பூமியில் இதுபோல் எனக்குச் சமமானவர்கள் யார் இருக்கின்றார்கள்?'' என்று பல வார்த்தைகளைச் சொன்னான்.

பிறகு, துரியோதனன் அசுவத்தாமனிடம், ''போர்களினால் உண்டான பாவம் நீங்கும்படி, நீ தவம் செய்து வாழ்வாய்!'' என்று கூறி, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

அதுவரை அங்கே நின்று கொண்டிருந்த கிருபாசாரியாரும் கிருதவர்மாவும் அசுவத்தாமனுடனே மனங் கலங்கி அங்கிருந்து சென்றார்கள்.

அவர்கள் போனபின், சஞ்சய முனிவரைப் பார்த்து துரியோதனன், ''எனது தாயும் தந்தையும் நாங்கள் இறந்ததால் மிகவும் விசனமுற்றுக் கலங்குவார்கள். ஆகையால், இனிய வார்த்தைகளால் அவர்களுடைய துன்பத்தைத் தணிப்பதற்காக, நீர் சென்றருள்வீர். ஆமாம். பேச்சாற்றலில் உமக்குள்ள திறமை தூய சிந்தையுள்ள தேவர்களுக்கும் இல்லை! நானும் எனது தம்பிமார்களும் இறந்ததால் உண்டான அவமானத்தை மறந்து, தனது மனத்துக்கு அன்பாக இருந்த தம்பியாகிய பாண்டுவின் குமாரர்களுடன் செங்கோல் செலுத்தி ராஜ்ஜியத்தை ஆளும்படி என் தந்தைக்கு நீர் கூறியருள்வீர்!'' என்று கூறினான்.

பின்பு, துரியோதனன் தனது தலை சஞ்சயமுனிவரின் பாதங்களில்படும்படி சாஷ்டாங்கமாக விழுந்து அவரை நமஸ்கரித்தான். அவருடைய பாதங்களையும் தனது கண்களில் ஒற்றிக் கொண்டான். அதன்பின் துரியோதனன் இறந்து நல்லறிவோடு பொன்மயமான வீரசுவர்க்கம் சென்றான்!

துரியோதனனுடைய வார்த்தைகளால் வருத்தப்பட்டுக் கொண்டு சென்ற அசுவத்தாமனும், கிருபாசாரியாரும், கிருதவர்மாவும் நேரே வியாசமுனிவரிடம் சென்றார்கள். யாகத்துக்குரிய அரிய மூவகை அக்கினிகளும் ஒரு முனிவர் வடிவம் கொண்டு பிறந்தது போன்ற வேதவியாச முனிவருக்கு அவர்கள் பாண்டவர்களின் தோள் வலிமையையும், தங்கள் செய்கையையும், எவரையும் எக்காலத்தும் வணங்காத முடியுடைய மன்னனான துரியோதனன் இறந்ததையும் வணங்கிச் சொன்னார்கள்.

அதுகேட்டு வேதவியாச மகாமுனிவர், கிருபாசாரியாருக்கும் அசுவத்தாமனுக்கும் தவம் செய்வதற்கு ஏற்ற வனத்தை இன்னது என்று தெரிவித்து, "அங்கே சென்று நீங்கள் தவம் செய்து கொண்டு இருப்பீர்களாக!" என்று சொல்லியனுப்பினார்.

வேதவியாசர் அதன்பின், கிருதவர்மாவுக்குத் தன் ஊருக்குச் செல்லும்படி அனுமதி வழங்கி அனுப்பினார்.

துரோணபுத்திரனாகிய அசுவத்தாமனும் கிருபாசாரியாரும் வேதவியாசரின் கட்டளைப்படி, மலை சூழ்ந்த காட்டில் தேவர்களும் வியக்கும்படி சிவபெருமானைத் தியானித்துத் தவம் செய்பவர்களானார்கள்!

அஸ்தமித்த சூரியன் மீண்டும் உதயமாவதற்குமுன், அந்த நடுராத்திரியிலேயே சஞ்சயமுனிவர் விரைந்து சென்று, கண்களில் நீர் பெருக திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் நடந்தவற்றையெல்லாம் கூறினார்.

சேனாவிந்து முதலிய தனது புத்திரர்கள் ஐவர் இறந்தநாள் முதற் கொண்டு புத்திரசோகத்தால், அடங்காமல் மேன்மேலும் கண்ணீர்ப் பெருக்குப் பெரிய கடல்வெள்ளம் போல் ஆகும்படி புலம்பித் தளர்ந்து வந்தாள் காந்தாரி. அவள்

அந்தப் பாதிராத்திரியில் வந்தருளிய சஞ்சயமுனிவர் கூறிய வார்த்தைகளாகிய விஷம் காதில் பட்டவுடனே, நல்லபாம்பு இடியோசையைக் கேட்டுத் தளர்வது போல கீழே விழுந்து புலம்பினாள்!

துரியோதனன் பீமனுடைய கதாயுதத்தால் மாண்டான் என்பதைக் கேட்டவுடனே திருதராஷ்டிரன் வருத்தம் அடைந்தான். அதனால் அவன் மூர்ச்சித்துத் தரையிலே விழுந்தான். பின்பு, அவன் மயக்கம் தெளிந்து, பகைமை கொண்ட மனத்தோடு புலம்பி மிகவும் கண்ணீர்ப் பெருக்கிக் கலங்கினான்!

இங்கே இப்படி திருதராஷ்டிரனும் காந்தாரியும் வருத்தமடைந்த போது, சூரியன் உதயகிரியில் பவழ மயமான தனது சிவந்த கிரணங்களைப் பரப்பி உதித்தான்!

இனி, கண்ணபிரான் பாண்டவர்களுடன் செய்த செயலைக் கூறுவோம்!

இரவு முழுதும் பாண்டவர்களோடு காட்டில் தங்கிய கண்ணபிரான், பொழுது விடிந்ததும் அவர்களோடு பாசறைக்கு வந்தான். அங்கே தேவேந்திரனைப் போன்ற சிறந்த அரசர்களுடைய கிரீடமணிந்த தலைகள் துண்டிக்கப் பட்டு எங்கும் சிதறிக் கிடப்பதைக் கண்டான். பாண்டவர்கள் தங்களுடைய புத்திரர்களின் தலையற்ற உடல்களைத் தழுவிக் கொண்டு திரௌபதி கதறித் துடிப்பதைக் கண்டார்கள்.

திரௌபதியின் நிலையைப் பார்த்தவுடனே பாண்டவர்கள் மனம் தளர்ந்தார்கள். கண்ணனிடம் அந்த நிலை எதனால் ஏற்பட்டது என்று கேட்டார்கள். அதற்கு கண்ணன் அசுவத்தாமனுடைய செயல்களையெல்லாம் அவர்களுக்குக் கூறினான். அதுகேட்டு அர்ச்சுனனும் பீமனும் அண்டகோளத்தின் மேல்முகடும் அதிர்ச்சியடையும் படி அசுவத்தாமன் மேல் கோபம் கொண்டார்கள். அவர்கள், "அசுவத்தாமனுடைய உயிரைப் பலிவாங்காமல் விடமாட்டோம்!" என்று வீரவாதம் கூறி விரைந்து சென்றார்கள்.

உடனே ஸ்ரீகண்ணபிரான் அவர்களைத் தடுத்து நிறுத்தி, "ஒரு பூதத்திடம் பாசறையைக் காக்கும்படிக் கட்டளையிட்டு விருப்பத்தோடு நாம் வேறு இடத்துக்குச் சென்றோம். பின்பு, அசுவத்தாமன் துரியோதனனிடம், அவனுக்குப் பூமி முழுவதையும் கொடுப்பதற்காகப் பாண்டவர்களாகிய உங்களின் தலைகளைத் துண்டித்து வருவதாகச் சபதமிட்டு இங்கு வந்தான். அப்படி வந்தவன் பாசறையில் நுழைந்தபோது, பூதம் அவனைத் தாக்கித் துன்புறுத்தியது. அதனால் அவன் புறமுதுகிட்டுப் போனான். பிறகு, அவன் சிவபெருமானைப் பூஜித்து, அப்பெருமானின் கருணையால் ஆயுதம் ஒன்று பெற்றான். அந்தச் சிவாயுதத்தின் உதவியால் அசுவத்தாமன் இப்படி எல்லோரையும் அழித்துவிட்டான்! கிரௌஞ்சமலையை வேல் கொண்டு பிளந்த முருகக்கடவுளைப் போன்ற அசுவத்தாமனின் வலிமையை யாராலும் இப்படிப்பட்டது என்று சொல்ல முடியுமோ?" என்றான்.

மீண்டும் தந்திரங்களில் வல்லவனான கண்ணன் பாண்டவர்களைப் பார்த்து, "அபாண்டவம் என்னும் அஸ்திரத்தையும் அசுவத்தாமன் பிரயோகிப்பானானால், அதிலிருந்து உங்களைக் காப்பாற்றுபவர்கள் யார்? அன்று உங்கள் ஐந்து பேருடைய உயிரையும் பாதுகாப்பதாக வாக்கு தத்தம் செய்திருந்தேன்.அந்தச் சத்தியத்தால் உங்களைப் பாதுகாப்பதற்காக உங்கள் ஐவரையும் நேற்றிரவு நான் வேறு ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றேன்! இன்னமும் வெற்றி உங்களைச் சேரவில்லை. இதனை நான் நம்பிக்கையாகச் சொல்வேன். ஆகையால், அசுவத்தாமனைத் தொடர்வதை விட்டுவிடுங்கள்!" என்றான்.

பின்னர் கண்ணபிரான், புத்திரசோகத்தால் வருந்தித் தரையிலே புரளும் திரௌபதியை நோக்கி, "விதியை வெல்பவர்கள் யார் இருக்கின்றார்கள்?" என்று கூறி, கருணையோடு அவளைத் தூக்கி நிறுத்தினான்.

மேலும், கண்ணபிரான் பாஞ்சாலியை நோக்கி, "பூக்களைச் சூடிய கூந்தலையுடையவளே! உனது புத்திரர்களின் உயிர் அழிந்ததற்காக நீ கவலைப்படுவது என்ன? உனது கணவர்கள் சாகாமல் உயிர் வாழ்வதற்காக



நான் செய்த தந்திரங்களோ மிக அதிகமாகும்! அவை சொல்லுக்கும் அடங்காது!'' என்று கூறி, அவளைத் தேற்றினான்.

அதன்பின் தருமரின் முகம் பார்த்து கண்ணன், ''கர்ணன் முதலிய எல்லோருக்கும் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளைச் செய்!'' என்று கட்டளையிட்டான்.

கண்ணனின் கட்டளைப்படியே தருமர், உலூகமுனிவர் கூறிய முறைப்படி நின்று அந்த ஈமக்கடன்களையெல்லாம் செய்து முடித்தார்.

எல்லாம் முடிந்த பிறகு, கண்ணபிரான் பஞ்சபாண்டவர்களோடு அஸ்தினாபுரிக்குச் சென்று, திருதராஷ்டிரனைப் பக்தியோடு வணங்கினான். அப்போது திருதராஷ்டிரன் தன்னை வணங்குபவர்கள் யார் என்று கேட்டான். அதற்கு கண்ணன், தருமன் முதலியவர்கள் வணங்குவதாக அவனுக்குக் கூறினான். அதுகேட்டு திருதராஷ்டிரன் அவர்களை ஆசீர்வதித்து, ''வாயுபுத்திரனாகிய பீமனை நான் கட்டிக் கொள்ள வேண்டும்!'' என்றான்.

யாவர்க்கும் தலைவனாகிய ஸ்ரீகண்ணபிரான் அக்கணமே திருதராஷ்டிரனுடைய கைகளில் பெரியதோர் இரும்புத்தூணைக் கொண்டு வந்து கொடுத்தான்.

உடனே திருதராஷ்டிரன் அத்தூணைப் பீமன் என்று எண்ணி அணைத்து நொறுக்கினான். என்ன ஆச்சர்யம்! அது தூளாய்விட்டது!

தன்னைச் சார்ந்தவர்களின் தீவினைகளைப் போக்குகின்ற கண்ணபிரான், பின்பு பாண்டவர்களைப் பார்த்து, "இனி நீங்கள், நெடுங்காலம் அரசாண்டு வாழ்வீர்களாக! நான் ஊருக்குச் செல்கிறேன்!" என்று சொல்லி, தருமரைப் பீமன் முதலிய அவனுடைய தம்பிமார்களோடு அஸ்தினாபுரியில் தங்கச் செய்துவிட்டு, சாத்தகியும் பலராமனும் தன்னைத் தொடர்ந்து வர, துவாரகாபுரியின் எல்லையை நோக்கி மீண்டும் வந்தருளினான்.

அதுமுதல் பாண்டவர்களும் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட பூமியைப் பாதுகாத்து, அறவழியையே நாளும் சிந்தித்து அதிகப் புகழோடு அஸ்தினாபுரியில் வாழ்ந்தார்கள்!

–முற்றும்–



வம்சாவழி

புருரவஸ்
↓
ஆயு
↓
நஹுஷன்
↓
யயாதி
↓
பூரு
↓
பரதன்
↓
ஹஸ்தி

சந்தனு

கங்காதேவி

பீஷ்மர்

யோஜனகந்தி

சித்திராங்கதன்

விசித்திர வீரியன்

அம்பிகா

திருதராஷ்டரன்

துரியோதனாதியர்கள்

அம்பாலிகா

பாண்டு

குந்தி

தருமர்

பீமன்

அர்ச்சுனன்

மாத்திரி

நகுலன்

சகாதேவன்

பாண்டவர்களைச் சார்ந்தவர்கள்

அபிமந்யு	-	அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் புதல்வன்
அம்பாலிகா	-	பாண்டு மன்னனின் தாயார்
உத்தரை	-	விராட ராஜனின் மகள். அபிமந்யுவின் மனைவி.
கடோத்கஜன்	-	பீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தவன்.
கண்ணபிரான்	-	பாண்டவர்களின் மாமன் மகன்.
குந்தி	-	பாண்டுவின் மனைவி, பாண்டவர்களின் தாயார்
சாத்தகி	-	பாண்டவ படையில் மகாரதச் சேனாதிபதி. கண்ணபிரானின் தம்பி.
சிகண்டி	-	துருபதராஜனின் மகன் - ஆண் தன்மை இல்லா வரம் பெற்று பீஷ்மர் முடிவுக்கு காரணமானவன்.
சுபத்திரை	-	கண்ணபிரானின் சகோதரியும் அர்ச்சுனனின் மனைவியுமாவாள்.
திருஷ்டத்யும்நன்	-	துருபதராஜனின் மூத்த மகன் திரௌபதியின் சகோதரன்.
திரௌபதி	-	பாண்டவர்களின் மனைவி
துருபதராஜன்	-	பாஞ்சால நாட்டு அரசன்.

கௌரவர்களைச் சார்ந்தவர்கள்

அம்பிகா	-	திருதராஷ்டரனின் தாயார்.
அதிரதன்	-	கர்ணனின் வளர்ப்புத் தந்தை
அசுவத்தாமன்	-	துரோணாசாரியாரின் மகன்.
அசுவசேனன்	-	தஷகனின் மகன். அர்ச்சுனன் மீது கொண்ட பகையினால் கர்ணனின் நாகாஸ்திரமாக ஆனவர்.
கர்ணன்	-	சூரிய பகவான் அருளால் குந்தி பெற்ற மூத்த மகன்.
கிருபாசாரியார்	-	பெரும் வில்லாளி, கௌரவப் படையின் சேனாதிபதி.
கிருதவர்மன்	-	கௌரவப் படையில் சமரதச் சேனாதிபதி
காந்தாரி	-	திருதராஷ்டரின் மனைவி. கௌரவர்களின் தாயார்.
சகுனி	-	காந்தாரியின் சகோதரன்.
சல்லியன்	-	நகுலன் சகாதேவனின் தாய் மாமன்.
சஞ்சயன்	-	திருதராஷ்டரனின் மந்திரி.
சுசர்மன்	-	திரிகர்த்த அரசன்
துரோணாசாரியார்	-	குருவம்சத்து ராஜகுமாரர்களின் குரு
பகதத்தன்	-	கௌரவப் படையின் மகாரதச் சேனாதிபதி.
பீஷ்மர்	-	சந்துனுவின் மூத்த மகன். தந்தையாருக்காக அரசாட்சியை த்ன் இளைய சகோதரர்களுக்கு விட்டுக் கொடுத்தவர்.
புரோசனன்	-	பாண்டவர்களைக் கொல்வதற்காக அரக்குமாளிகை கட்டியவன்.
பூரிச்வரஸ்	-	கௌரவப்படையின் அதிரதச் சேனாதிபதி
விகர்ணன்	-	துரியோதனனின் தம்பி. சபையில் பாண்டவர்களுக்காக நீதியை எடுத்துரைத்தவன்.
விதுரன்	-	பாண்டுவுக்கும் திருதராஷ்டரனுக்கும் சகோதரன்.
ஜயத்ரதன்	-	கௌரவப்படையில் சமரதச் சேனாதிபதி.

பிரேமா பிரசுர வெளியீடுகள்

புராண நூல் வரிசை

	ரூ.	பை.
ஸ்ரீ விநாயகர் புராணம் *(டெம்மி சைஸ்-Bound)*	220	00
ஸ்ரீ விநாயகர் புராணம் *(Crown size-Paper Back)*	150	00
ஸ்ரீ கந்த புராணம் *இரண்டு பாகங்கள்*	260	00
ஸ்ரீ கந்த புராணம் *இரண்டு பாகங்கள் இணைந்த ஒரே நூல் (Hard Bound) =*	270	00
ஸ்ரீ தேவி பாகவதம் *மூன்று பாகங்கள்*	300	00
ஸ்ரீ தேவி பாகவதம் *மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல் (Hard Bound) =*	420	00
ஸ்ரீ சிவமஹா புராணம் *3 பாகங்கள்,3 நூல்கள்=*	340	00
ஸ்ரீ சிவமஹா புராணம் *மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல் (Hard Bound) =*	390	00
ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள் *(டெம்மி சைஸ்-Bound)*	200	00
ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள் *(Demmy size-Paper Back)*	140	00
ஸ்ரீ விஷ்ணு புராணம் *(Crown size-Paper Back)*	135	00
ஸ்ரீ விஷ்ணு புராணம் *(Dy size-Hard Bound)*	190	00
ஸ்ரீ கருட புராணம்	50	00
ஸ்ரீ குருவாயூரப்பன்	40	00
ஸ்ரீ வன்னிய புராணம்	50	00
ஸ்ரீ வசவ புராணம்	70	00
ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்	45	00
ஸ்ரீ ஆதிசங்கரா	25	00
ஸ்ரீ ராமானுஜர்	40	00
ஸ்ரீ சுவாமியே சரணம் ஐயப்பா	25	00
ஸ்ரீ நாரதர் புராணம்	65	00
ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம்	32	00
திருமலை திருப்பதி புராணம்	65	00
ஸ்ரீமத் பாண்டுரங்க பக்த விஜயம்	190	00
ஸ்ரீமத் பாண்டுரங்க பக்த விஜயம் *(Hard Bound) =*	250	00
சிவப்ருமானுக்கு உரிய அஷ்ட மஹா விரதங்கள்	150	00
ஸ்ரீ சிவ ஸஹஸ்ரநாமம்	50	00
கம்ப ராமாயணம் *(முழு உரைநடை H.Bound)*	340	00
மகாபாரதம் *(வசன வடிவில்-H.Bound)*	160	00
சாணக்கியரும் அர்த்த சாத்திரமும்	70	00
திருமந்திரம் (மூலம் மட்டும்)	160	00
ஸ்ரீமத் பகவத் கீதை	40	00
ஸ்ரீ ரமண மகரிஷி (சரிதமும் உபதேசமும்)	120	00
திருவசாகம் (மூலம் மட்டும்)	50	00
ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (மூலம் மட்டும்)	240	00
ஸ்ரீ ராமாநுஜ நூற்றந்தாதி	25	00
திருப்புகழ் (மூலம் மட்டும் முழுதும்)	230	00
பஞ்சபூதலிங்கத் தல புராணம்	45	00
பன்னிருஜோதிலிங்கத் தல புராணம்	50	00

